தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
[illegible]தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
[illegible]பட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"




# தமிழரசு

சுற்றுலாச் சிறப்பிதழ்

1—1—1977

மலர் : 7 இதழ் : 13


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| எழில்மிகு தமிழகம் காண வாரீர்! ... | 2 |
| மலை நகரங்களின் ராணி! ... | 5 |
| கலைமிளிரும் காஞ்சி காண வாரீர்! ... | 9 |
| திருச்சிராப்பள்ளி ... | 12 |
| இராமேஸ்வரம்-புனிதத் தீவு ... | 15 |
| வளம் கொழிக்கும் தஞ்சை ... | 17 |
| மகிழ்வு உலாச் செல்வோர் காணவேண்டிய மனோரா ... | 23 |
| மனங்கவர் மாமல்லபுரம் ... | 24 |
| கன்னியாகுமரி ... | 28 |
| எழில் கொஞ்சும் ஏர்க்காடு ... | 31 |
| ஒகேனக்கல் ... | 32 |
| மதுரை மாநகர் ... | 33 |
| தென்னாட்டின் இளவரசி! ... | 37 |
| கோவளம் கூறும் கதை! ... | 39 |
| கிழக்குக் கடற்கரையின் அரசி! ... | 41 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில்.. ... | 42 |
| மற்ற மாவட்டங்களில்.. ... | 43 |
| தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் (வரை படம்) ... | 44 |
| வனவிலங்கு ரசிகர்களுக்கு ... | 45 |



நன்றி: பொதுத் (சுற்றுலா) துறை,
சென்னை-600009.


அட்டைப்படம்

வெளிநாட்டவர்களை வியப்பிலாழ்த்தும்



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள இச்சிற்பம், தமிழ்நாட்டுச் சிற்பக்கலையின் சிறப்புக்கோர் எடுத்துக் காட்டாகும்



# எழில்மிகு தமிழகம் காண வாரீர்!

225311

இந்தியாவின் முக்கிய சுற்றுலா மண்டலங்களில் ஒன்றாகத் தமிழ் நாடு விளங்குகிறது. எல்லாச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களையும் கவரக் கூடிய சுற்றுலாக் கவர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. தமிழ் நாட்டின் சுற்றுலாக் கவர்ச்சிகளை (1) கோயில் கட்டடக் கலை, சிற்பம், நினைவுச் சின்னப் பகுதி, (2) மலை நகரங்கள், (3) வனவிலங்குகள், (4) கடற்கரை மகிழ்விடங்கள் என வகைப்படுத்தலாம். இச்சுற்றுலாக் கவர்ச்சிகள் ஒவ்வொன்றும் அதனதன் வகையில் தனிச் சிறப்பு வாய்ந்தவை. கோயில் கலை, சிற்பம், நினைவுச் சின்னப் பகுதி ஆகியவை பல்லவ, சோழ, பாண்டிய மண்டலங்களிலேயே முக்கியமாக அமையப் பெற்றுள்ளன.

### கோயில் கலை

பல்லவ மண்டலத்தில், உலகப் புகழ் பெற்ற மாமல்லபுரம் சிற்பங்களும், இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் ஒன்றான காஞ்சிபுரமும், நீர் வாழ் பறவைகளின் சரணாலயங்களில் ஒன்றான வேடந்தாங்கலும், தென் இந்தியாவின் பெரு நகரங்களில் ஒன்றான சென்னையும் அடங்கியுள்ளன. சென்னை நகரை மையமாகக் கொண்டு, அங்கிருந்து இவ்விடங்களைச் சென்று காணலாம்.



திருச்சிராப்பள்ளி, தன்னகத்தே மலைக்கோயிலைக் கொண்டுள்ளதால் மங்காப் புகழ் பெற்று விளங்குகிறது. அதன் அருகில், ரெங்கநாத சுவாமி வீற்றிருக்கும் மிகப் பெரிய திருக்கோயில்களில் ஒன்றான ஸ்ரீரங்கம் கோயில் அமைந்துள்ளது.

காவிரியாற்றின் கழிமுகப் பகுதியில் உள்ள சோழ மண்டலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பரம், பூம்புகார் முதலியன உள்ளன. சோழர்களின் தலைநகரமாக விளங்கிய தஞ்சாவூர், கோயில் கலையின் அற்புதமாக விளங்கும் பிரகதீசுவரர் ஆலயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், பெரும்புகழ் பெற்று விளங்குகிறது.

கங்கை கொண்ட சோழபுரம், சிவன் கோயில், கட்டடக் கலையின் சிறப்புக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாக இலங்குகிறது. காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ள பூம்புகார், சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைத்துள்ள புதியதோர் கவர்ச்சியாகும். அங்கு தமிழர்களின் தொன்மையான கலாச்சார பாரம்பரியத்திற்குப் புத்துயிர் ஊட்டப் பெற்றுள்ளது.

சோழ மண்டலத்தைக் கண்டு களிக்க, திருச்சிராப்பள்ளியிலிருந்து சுற்றுலாப் பயணத்தைத் துவக்கலாம்.

பாண்டிய மண்டலம், மதுரையிலுள்ள மீனாட்சிஅம்மன்கோயில், குற்றாலம் அருவி, உலகிலேயே மிக நீண்ட பிரகாரத்தைக் கொண்டு, இந்தியாவின் புகழ் பெற்ற புனித இடங்களில்ஒன்றாக விளங்கும் ராமேஸ்வரம், நிலப் பகுதியின் முடிவு எல்லையான கன்னியாகுமரி, மலைவாழ் இடங்களின் இளவரசி எனத் திகழும் கொடைக்கானல் ஆகியவற்றைக் கொண்டு சுற்றுலாப் பயணிகளை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்கிறது. பாண்டிய மண்டலத்தைக் காண விரும்புவோர் மதுரையிலிருந்து பயணத்தைத் துவக்கலாம்.

இம்மூன்று மண்டலங்களும், ஒவ்வொரு வகையில் ஈடுஇணையற்ற சுற்றுலாக் கவர்ச்சிகளைக் கொண்டுள்ளன.

### மாமல்லையின் சிறப்பு

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், உலகில் பல்வேறு இடங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும், மகிழ்விக்கும் கடற்கரைகளும் உள்ளன. அவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் காண முடியாது. ஆனால் மாமல்லபுரத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் எழில்மிகு கடற்கரை மகிழ்விடமும் ஒரே இடத்தில் அருகருகே அமைந்துள்ளன. மாமல்லபுரம் சென்னைக்கு அருகிலும் அமைந்துள்ளது. இது மாமல்லையின் மற்றொரு சிறப்பாகும்.

தஞ்சாவூரில் உள்ள பிரகதீசுவரர் ஆலயத்தின் பிரம்மாண்டமான அமைப்புக்கும், சிறப்புக்கும், கட்டடக் கலைக்கும் இணையான தொன்று வேறெங்கும் இல்லை!

மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் ஆலயமோ இந்தியாவில் உள்ள ஆலயங்களில் மிகப் பெரியவற்றில் ஒன்றாகும். மேலும், விரிவான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய, எண்ணற்ற, மிகப் பெரிய சிற்பங்களும் அவ்வாலயத்தில் உள்ளன!

கன்னியாகுமரியிலேயே, வங்காள விரிகுடா, அரபிக் கடல், இந்து மகா சமுத்திரம் ஆகிய முப்பெருங்கடலும் சங்கமமாகின்றன. இங்குதான் சுவாமி விவேகானந்தர், கடல் நடுவே அமைந்த பாறை மேல் தியானத்தில் அமர்ந்து ஞான ஒளி பெற்றார். இந்து மதத்தின் புனிதத் தன்மையையும், இந்தியாவின் பெருமையையும் உலகமெங்கும் பரவச் செய்த விவேகானந்தருக்கு கன்னியாகுமரியில் அப்பாறையின்மேல் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது இந்நினைவுச் சின்னத்தை காண நாடெங்கிலும் இருந்து நாள்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் வருகின்றனர்.

மேலும், உலகில் சிறந்தவை என்று சொல்லத் தக்க கடற்கரை மகிழ்விடங்கள் தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரையில் ராமேஸ்வரம், தேவிபட்டணம், வாலிநோக்கம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளது.

### மலை மகிழ்வு இடங்கள்

தமிழ் நாட்டின் மூன்று முக்கிய மலை மகிழ்வு இடங்களாக ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவை விளங்குகின்றன. இமயமலையில்உள்ள மலை மகிழ்விடங்களைப் போலன்றி, தமிழ் நாட்டு மலை மகிழ்விடங்களில் ஆண்டு முழுவதும் தங்கி ஓய்வு எடுக்கலாம். பருவத்திற்குப் பருவம் மாறி மாறிக் காட்சி அளிக்கும் இயற்கையின் அழகைக் கண்டுகளிக்கலாம்!

### வனவிலங்குகள்

சென்னைக்குத் தெற்கே 70 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வேடந்தாங்கல், இந்தியாவின் முக்கிய நீர்ப்பறவைச் சரணாலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ஊட்டியிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் மைசூர் செல்லும் வழியில் உள்ள முதுமலை, இந்திய தேசியச் சரணாலயங்களில் ஒன்றாக இலங்குகிறது. சென்னைக்கு அருகே கிண்டியில் உள்ள மான்கள் பூங்கா, கோயம்புத்தூருக்கு அருகே உள்ள ஆனைமலை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளகோடிக்கரை, திருநெல்வேலி மாவட்டத்



தென்காசி கோயிலில் உள்ள சிற்பம்

தல உள்ள முண்டந்துறை ஆகியவை தமிழ் நாட்டின் இதர முக்கிய வன விலங்குச் சரணாலயங்களாகும். எண்ணற்ற தாவரங்களையும் கடல் வாழ் உயிரினங்களையும் கண்டு களிப்பதற்கு குருசடைத் தீவு ஏற்றது.

மேற்கூறிய மண்டலங்கள் ஒவ்வொன்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கு ஏற்ப ஒரு நாள் முதல் 5 நாள் வரையான சுற்றுலாப்பயணத்திற்குத் திட்டமிடுவதற்கு ஏற்றவையாகும். மாநிலம் முழுவதையும் பார்வையிடும் வகையில் ஒரு வாரம் முதல் 10 நாள் வரையான அல்லது 15 நாள் சுற்றுலாவையும் அமைத்திடமுடியும்.

### மேம்பாட்டுத் திட்டங்கள்

சுற்றுலாத் துறையும், தமிழ் நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகமும் ஏற்படுத்தப்பட்டவுடன், தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாடு புதிய கட்டத்தை அடைந்துள்ளது. சுற்றுலா இடங்களைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலாப்பயணிகளுக்குரியவிளக்கக் கையேடுகள், படச் சுருள்கள் முதலியவற்றையும்,மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பணிகளைச் செய்வது சுற்றுலாத் துறையின் பொறுப்பாகும். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உணவு மற்றும் தங்கும் வசதிகளைச் செய்தல், மாநிலமெங்கும் கட்டுக்கோப்பான சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்தல் போன்ற வாணிப அடிப்படையான பணிகளைத் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் கவனித்து வருகிறது.

யு. என். டி. பி.குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப மாமல்லபுரத்தை அயல்நாட்டினர் தங்குவதற்கேற்ற வசதிகளுடன் கூடிய கடற்கரை மகிழ்வு இடமாக மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. ராமேஸ்வரமும், கன்னியாகுமரியும் புனிதப் பயண இடங்களாக இருப்பதுடன், மேம்பாடு செய்ய வேண்டிய கடற்கரை மகிழ்விடங்களாகவும் உள்ளன.

தமிழ்நாட்டின் மலைமகிழ்வு இடங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவற்றை மேம்படுத்தவும், அழகுபடுத்தவும் திட்டங்கள் தீட்டப்பெற்று, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளுக்குரிய தங்குமிட வசதியைப் பொறுத்தவரையில், 1970-ஆம் ஆண்டில் இருந்த வசதியுடன் தற்பொழுதுள்ள வசதியை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடு இன்று நிறைவான நிலையில் உள்ளது. மத்திய, மாநில அரசுகளால் அளிக்கப்பட்ட உதவிகளைத் தனிப்பட்ட தொழில் ஆர்வலர்கள் பலர் பயன்படுத்திக் கொண்டனர். அதன் பயனாக இன்று சென்னையில் ஐந்து, நான்கு, மூன்று மற்றும் இதர நட்சத்திர ஹோட்டல்கள் பல உள்ளன. மாநாடு நடத்துவதற்கான வசதிகள்-அனைத்து நாட்டுத் தர அளவில்-சென்னை, மதுரை, ஊட்டி ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கொடைக்கானல், ஏர்க்காடு முதலிய இதர முக்கிய நகரங்களிலும் அநேக நட்சத்திர ஹோட்டல்கள் தோன்றியுள்ளன.

கடற்கரை ஓட்டல்கள் பல (Beach Resorts) மாமல்லபுரத்தில் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி, கொடைக்கானல், ஏர்க்காடு, ஊட்டி, திருச்செந்தூர், ராமேஸ்வரம், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது. அம் மாளிகைகளில், நடுத்தரமான கட்டணத்தில் தங்குமிட வசதி அளிக்கப்படுகிறது.

### போக்குவரத்து வசதிகள்

தமிழ்நாட்டில் தற்பொழுது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் விமான நிலையங்கள் உள்ளன. இவைகளில் சென்னை விமான நிலையம் அனைத்து நாட்டு விமான நிலையமாகும். இந்நிலையத்தில் 'ஏர் இந்தியா', 'இந்தியன் ஏர்லைன்ஸ்', 'சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்', 'மலேசியன் ஏர்லைன்ஸ்' 'ஏர்சிலோன்' ஆகியவற்றின் விமானங்கள் வந்திறங்குகின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவின் பிற மாநிலச் சுற்றுலாப் பயணிகளும் தமிழகத்திற்கு வருகை தர மேற்கூறிய 4 விமான நிலையங்களும் பயன்படும்.

தமிழ்நாட்டில் நல்ல சாலை வசதிகள் உள்ளன. எல்லா முக்கிய நகரங்களையும் இணைக்கும் வகையில் விரைவுப் பேருந்துகள் இரவும் பகலும் செல்கின்றன.

எனவே, தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு, காலத்தால் அழியாத கற்சிற்பங்களையும், கலைக் கோயில்களையும், வரலாற்றுச் சின்னங்களையும், உலகத்தில் வேறெங்கும் காண முடியாத எழில்குலுங்கும் மகிழ்வுக் கடற்கரைகளையும், கண்டவர் வியந்திடும் மலைமகிழ்வு இடங்களையும் கண்டு களித்திட வாரீர் என்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும், இந்தியாவின் பிற மாநிலச் சுற்றுலாப் பயணிகளையும் தமிழகத்திற்கே உரிய விருந்தோம்பும் பண்புடன் வருக, வருக என வரவேற்கின்றோம். அதேபோல், தமிழக மக்களையும் தமிழ்நாட்டில் உள்நாட்டுச் சுற்றுலா மேற்கொண்டு பெரும் பயன் அடையும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.



ஆளியாறு அணை

# மலைநகரங்களின் ராணி



இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் உள்ள மற்றெல்லா மலைநகரங்களையும் விட நீலகிரி மலையில் உள்ள உதகமண்டலம் இணையற்றதாகும். உதகமண்டலத்தைக் காண விரும்பும் ஒருவர், நீலகிரி மலையின் அடிவாரத்திலுள்ள மேட்டுப் பாளையத்திலிருந்து தம் சுற்றுலாப் பயணத்தைத் துவக்கினால், அவர் உதக மண்டலம் செல்வதற்குள்—பூமத்திய ரேகை நாடுகளில் தொடங்கி துந்திரப் பிரதேசம் வரையான நாடுகளில் பயணம் செய்யும் மற்றொருவர் காணக்கூடிய—அதே சீதோஷ்ண நிலையையும், எண்ணற்ற வண்ண வண்ணத் தாவர வகைகளையும் கண்டு களித்திடவும், அத்தாவரங்களின் காய்களையும் கனிகளையும் உண்டு களித்திடவும் முடியும்.

மேட்டுப்பாளையத்தை அடுத்து, கல்லார், பரளியாறு ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைத் துறையின் பழத் தோட்டங்கள் சுற்றுலாப் பயணிகளை வரவேற்று வெளிநாட்டுப் பழங்களை வழங்குகின்றன. மேலே செல்லச் செல்ல, வெப்பம் குறைந்து, குளிர்ச்சி அதிகமாகிக் கொண்டே செல்வதையும், தாவரங்களின் தோற்றத்தில் காணப்படும் மாற்றங்களையும் கண்டு களிக்கலாம். கூனூர்,

அடையும்போது மித சீதோஷ்ண நாடுகளில் உள்ளது போன்ற நிலையை உணர முடிகிறது. மித சீதோஷ்ண நாடுகளில் காணப்படும் தாவரங்களையும், காய்களையும், கனிகளையும் கூனூர் சிம்ஸ் பூங்காவின் அருகில் உள்ள வேளாண்மைத் துறையின் பழத் தோட்டங்களில் கண்டு களிப்

பதுடன் விலேக்கு வாங்கி உண்டு மகிழ்ந்திடவும் முடியும்.

அடுத்து. உதகமண்டலத்தை நோக்கிச் செல்லும் போது தூந்திரப் பிரதேசங்களில் பயணம் செய்வது போன்ற பிரமை ஏற்படுகிறது. ஊட்டியின் குளுமையும், அங்கு கிடைக்கும் 'ப்ளம்' பேரி, ஸ்ட்ராபெரி, 'பீச்சஸ்' போன்ற பழங்களும் நாம் இங்கிலாந்து போன்ற குளிர்ச்சியான நாடுகளில் உள்ளது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. உதகமண்டலத்திற்குச் சுற்றுலாப் பயணம் செல்வதானது, பூமத்திய ரேகையிலிருந்து தூந்திரப் பிரதேசத்திற்குச் சுற்றுலாச் செல்வது போன்றதாகும். எனவே தான், உதகமண்டலத்தின் சிறப்பை உணர்ந்த ஆங்கிலேயர், உதகமண்டலத்தை 'மலேநகரங்களின் ராணி' (The Queen of Hill Stations) என்று கூறினர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மலேநகன்ரப் பெற்றுள்ள நீலகிரி மலேயை ஆங்கிலத்திலே நீல்கிரி (The Nilgiri Hills) என்று அழைக்கப்படுகிறது.

நீலகிரி அல்லது நீலமலே (Blue mountain) என்றழைக்கப்படுவதே சரியானதாகும். ஒருங்கிணேந்த மேட்டு நிலப் பகுதியின் ஒரு பகுதியாக விளங்கிடும் நீலகிரி, 35 மைல்கள் அகலமும், 6,500 அடி உயரமும் கொண்டது. இது



ஊட்டியில் உள்ள ஏரி உல்லாசப் பயணிகளின் சொர்க்கம்!

ஊட்டி ஏரியின் அருகிலே உல்லாசக் குதிரைச் சவாரி!



கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலேகளின் சந்திப்பில் அமைந்து உள்ளது. ஏறத்தாழ 850 ஆண்டுகளாக 'நீலகிரி மலே' என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதி, முழுதும் நீல வண்ண ஆவியால் மூடப்பட்டுக் காணப்படுவதால் இப்பகுதி வாழ் மக்களால் இந்தப் பெயர் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

'மலே இருப்பிடங்களின் ராணி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்று விளங்குகின்ற உதகமண்டலமும் இங்கேதான் அமைந்துள்ளது. இதுவே தமிழகத்தின் முதன்மையான மலே இருப்பிடமாகத் திகழ்கிறது. தலேசிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கிடும் இதனேப் பொது மக்கள். 'ஊட்டி' என்று செல்லமாக அழைக்கின்றனர். வண்ண மலர்களின் புகலிடமாகவும் ஊட்டி திகழ்கிறது. இதற்கு மிக அருகில் கோத்தகிரி, கூனூர் ஆகிய இரு சிறிய மலே இருப்பிடங்களும் உள்ளன. இவைகளும் சிறந்த சுற்றுலாத் தலங்களாகவும் விளங்குகின்றன.



வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கும் தாவர இயல் பூங்கா

கண்ணுக்கு இனிய விருந்திண அளித்திடவும், மனத்துக்கு மெத்த மகிழ்ச்சியிண ஊட்டிடவும், சுற்றுலாப் பயணிகளுக்குச் சுகத்திண வழங்கிடவும் ஏற்ற வகையில் பல்வேறு இடங்கள் இப் பகுதியில் அமைந்துள்ளன. இவை அனேத்தும் சுற்றுலா வருவோரின் கவனத்தை ஈர்ப்பதாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**காணத்தக்க கவர்ச்சி இடங்கள்**

மலேச் சிகரங்களில் மிகவும் உயரமானதாகத் திகழ்கின்ற 'தொட்டபெட்டா' சிகரமும் இங்கே தான் உள்ளது. இதன் உயரம் 2,633 மீட்டர்களாகும். இது சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கத் தகுந்த இடமாகும்.

இது தவிர, இயற்கை எழில் சூழ்ந்த 'மிகப் பெரிய ஏரி' ஒன்றும் உள்ளது. 'படகுச் சவாரி' இந்த ஏரியின் சிறப்பு அம்சம் ஆகும்.

அழகு கொஞ்சம் அற்புத தாவரயியல் பூங்கா' (Botanical Garden) ஒன்றும் உள்ளது. மலர்கள் எத்தனே எத்தனே இங்கே...! ஆயிரக்கணக்கில் வண்ண மலர்களேக் காணலாம் இங்கே!

செழுமை கொஞ்சும் 'இந்திய-ஜெர்மானிய கூட்டுறவு வேளாண்மைத் திட்டப் பண்ணே', அனே வரையும் கவருகின்ற 'தேயிலே மற்றும் காப்பித் தோட்டங்கள் ஆகியவைகளும் காணத் தக்கவைகளாகத் திகழ்கின்றன. இவை அனேத்தும் ஊட்டியின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. நீலகிரி மாவட்டத்தின் முக்கிய வாணிபப் பயிராக விளங்குவது உருளேக் கிழங்கு.

ஊட்டியின் சுற்றுப் புறப் பகுதியில் அமைந்துள்ள கெய்ரன்மலே, முகர்த்தி சிகரம், பைக்காரா அணே போன்றவைகள் மகிழ்வுலாச் செல்வோரை வரவேற்கும் இடங்களாக அமைந்துள்ளன.

தமிழகத்தின் தலேசிறந்த வன விலங்கு உய்விடமான முதுமலேயும் இம்மாவட்டத்தில்தான் அமைந்துள்ளது. இந்தியாவிலேயே, மிகப் பெரிய காட்டெருமைக் கூட்டத்திண இந்த உய்விடத்தில்தான் நாம் காணலாம். ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் சாலேயில் 67 கிலோ மீட்டர் தொலேவில் முதுமலே அமைந்து உள்ளது.

'சிம்ஸ் பூங்கா', 'லாம்ஸ்' பாறை, கேன்னிங்ஸ் சீமாட்டி இருப்பிடம் (Lady Canning's Seat) 'டால்பின்ஸ் நோஸ்', 'ராலியா' அணே, 'லாஸ்' அருவி ஆகியவை கூனூரில் காணப்படும் கவர்ச்சியான இடங்களாகும். கொடநாடு காணும் இடம், தூய காதரின் அருவி, ரங்கசாமி தூண் மற்றும் பாறை ஆகியவை கோத்தகிரியில் காணப்படும் கவர்ச்சி மிகு இடங்களாகும்.

'இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம்' தொழிற்சாலேயும் உதகமண்டலத்தில்தான் நிறுவப்பெற்றுள்ளது. மிகப் பழைமை வாய்ந்த தோடர், கோதர், குறும்பர், பனியர் ஆகிய மலேவாழ் பழங்குடி இனத்தவர்களேக் கொண்ட பெருமைக்குரிய மாவட்டம் நீலகிரிதான். தோடர்களின் வசிப்பிடம் காண்பதற்குக் கவர்ச்சியான தோற்றம் உடையதாகும்.

இத்தகு சிறப்புக்களேப் பெற்று உள்ள கவர்ச்சி மிகு இடங்களுக்கெல்லாம் பயணிகள் செல்வதற்குச் சீரான போக்குவரத்து வசதிகள் அமைந்துள்ளன.

உதகமண்டலத்திற்கு அருகில் உள்ள விமான நிலேயம் கோயம்புத்தூர் ஆகும். கோவை, ஊட்டியிலிருந்து 89 கி.மீ. தொலேவில் உள்ளது. சென்னே, பெங்களூர், கொச்சி போன்ற விமான நிலேயங்களிலிருந்தும் இந்தியன் ஏர்லேன்ஸ் மூலம் கோயம்புத்தூருக்குச் செல்லலாம்.



உதகையின் குளுமையில் உல்லாசம் காணும் குழந்தைகள்!

ஊட்டி, கூனூர் போன்றவை மலைப்பாதை ரயில் பாதையில் இணைக்கப்பட்டுள்ளன. கோயம் புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வழியாகச் செல்லலாம். எல்லா முக்கிய நகரங்களையும் இந்த ரயில் பாதை இணைக்கிறது. மேட் டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு மலையினூடே ரயிலில் பயணம் செய்வது வாழ்க்கையில் மறக்க முடியாத ஓர் அனுபவம் ஆகும்.

ஊட்டி, கூனூர், கோத்தகிரி ஆகியவை முக்கிய நகரங்களின் சாலைப் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேட்டுப் பாளையம், கோயம்புத்தூர், சென்னை, பெங்களூர், கோழிக்கோடு போன்ற நகரங்களி லிருந்தும் பேருந்து வசதிகள் சிறப்பாக அமைந்துள்ளன. வாடகைக் கார்கள் வசதியும் உள்ளன.

இந்தச் சுற்றுலாத் தலங்களுக்கு வருகின்ற பயணிகள் வசதியுடன் தங்கித் தங்கள் பொழுதினை உல் லாசமாகக் கழித்திடுவதற்கும் ஏராளமான தங்குமிடங்களும் உள்ளன. தமிழ்நாடு அரசி னுடைய 'தமிழகம்' ஊட்டியின் சிறப்பு மிக்க தங்குமிடமாகும். தவிர, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 'சுற்றுலா மாளிகை', பொதுப் பணித்துறை யினுடைய 'பயணிகள் விடுதி' போன்றவைகளும் சிறப்பு மிக்க தங்குமிடங்களாகத் திகழ்கின் றன. தவிர, பல்வேறு தனியார் களின் தங்குமிடங்களும் இந்த இடங்களில் ஏற்படுத்தப் பெற்று உள்ளன.

'மலை இருப்பிடங்களின் ராணி'யான ஊட்டியையும், இங்குள்ள அழகு மிக்க இடங் களையும் ஒவ்வொருவரும் கண்டு களிக்க வேண்டியது இன்றியமை யாததாகும்.





# கலைமிளிரும் காஞ்சி காணவாரீர்!

காஞ்சிபுரம்—கோயில்கள் பல நிறைந்த ஒரு பொன்னகரமாகும். பல்லவ மன்னர்களின் எழில் வாய்ந்த தலைநகராகவும் காஞ்சி விளங்கியது. கி.பி. 6-ஆம் நூற் றுண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற் றுண்டு வரையில் பல்லவர்களின் ஆளுகையில் இது இருந்து வந் தது. பின்னர் சோழர், விஜய நகர மன்னர்கள், மொகலாயர் கள், ஆங்கிலேயர் போன்றோரின் ஆதிக்கத்திலும் இருந்தது. இங்கே தான் ஆதி சங்கராச்சாரியார் அவர்கள், 'காமகோடி பீடம்' எனப்படும் தமது சமய வட்ட இருக்கையினை நிறுவினார். பழைய காஞ்சி பல தரப்பட்ட பண்பாடு கள் கலந்துறவாடும் இடமாகவும் அமைந்திருந்தது.

சிற்பக் கலைத் துறையிலுங்கூட காஞ்சிபுரம் ஈடு இணையற்ற தன் மையினைப் பெற்று விளங்கியது. எழில் கொஞ்சும் சிற்பக் கலை களுடன் புகழ் வாய்ந்த கோயில் கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தென்னிந்தியா வில் கோயில் சிற்பக் கலை குறித்த விரிவான ஆராய்ச்சியினை நடத்த விரும்புகின்றவர்களுக்கு இந்த நகரம் சீரிய வாய்ப்புக்கள் பல வற்றையும் தந்துதவுகிறது.

இத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சியில் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்து .பயன்கள் பல பெற்றிட ஏராளமான இடங்கள் உள்ளன. இவைகளில் ஆலயங் கள் சிறந்த இடத்தைப் பெற்று உள்ளன. ஏராளமான கோயில் கள் இந்நகரில் உள்ளன. அவை களுள் மிகவும் முக்கியமானவை : வைகுண்டப் பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில், ஏகாம்ப ரேசுவரர் கோயில், வரதராசர் கோயில் ஆகியவைகளாகும்.

## வைகுண்டப் பெருமாள் கோயில்

இந்தியாவில், முக்கியத்துவம் வாய்ந்த 18 விஷ்ணு கோயில் களில் இதுவும் ஒன்று. காஞ்சி புரம் கிழக்கு ராஜ வீதியின் அருகே இது அமைந்துள்ளது. கி.பி. 7 -ஆம் நூற்றுண்டில் பல்லவ மன்னரான பரமேசுவர வர்மனால் இது கட்டப்பட்டது. இக்கோயிலில் ஏராளமான கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கலையழகு மிக்க கைலாசநாதர் கோயில்





ஏகாம்பரேசுவரர் கோயில்

## கைலாசநாதர் கோயில்

ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னனால் இது கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டது. இந்தக் கோயில் சிற்பக் கலை, கட்டடக் கலை ஆகியவைகளுக்கு மிகவும் புகழ் பெற்றதாகும்.

## ஏகாம்பரேசுவரர் கோயில்

மிகவும் பழமைவாய்ந்த கோயிலாகும். தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களால் சீரிய பராமரிப்பினைப் பெற்று வந்த பெருமை படைத்தது இக்கோயில். பார்வதி இங்கே தவம் புரிந்தபொழுது, சிவன், 'ஏகாம்பரா' என்னும் தனியான மாமரத்தின் அடியில் தோன்றி பார்வதியை ஆசீர்வதித்ததாகப் புராணம் கூறுகிறது.

கோயிலின் உட்புறத்திலே மா மரம் ஒன்று உள்ளது. இது ஏறத்தாழ 2,500 ஆண்டுகள் வயதுடையது எனச் சொல்லப் படுகின்றது. இங்கே ஐந்து பிரகாரங்கள் உள்ளன. அழகு வாய்ந்த ஆயிரங்கால் மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது. இக் கோயிலின் தெற்குக் கோபுரம் 188 அடி உயரமுடையது. தென்னிந்தியாவின் மிகப் பெரியதும், உயரமானதுமான கோபுரங்களில் இதுவும் ஒன்ருகும். விஜய நகர மன்னர்களால் 16-ஆம் நூற்ருண்டில் இந்தக் கோயில் கட்டப்பட்டது. 'பிருதிவி லிங்கம்' தான் இந்தக் கோயிலின் முதன்மைத் தெய்வமாகும். பிருதிவி லிங்கம் என்பதற்கு 'மண்' என்று பொருள். சிவ பெருமான், புவியிலுள்ள பஞ்ச பூதங்களின் மூலமாகவும் வழிபடப்படுகிருர். அதாவது மண், விண், நீர், நெருப்பு, காற்று ஆகிய பஞ்ச பூதங்கள் வாயிலாக வணங்கப்படுகிருர்.

## வரதராசர் கோயில்

மிகப் பெரியதாகவும், உளத்தைக் கவரக் கூடியதாகவும் விளங்கும் இது மிகப்பழமையான மற்ருெரு கோயிலாகும். இந்தக் கோயிலில் மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு கம்பீரமான கோபுரங்கள் உள்ளன. இங்குள்ள 100 தூண்கள் கொண்ட மண்டபம் முழுதும் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்களைக் கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டவைகளாகும்.

## காமாட்சி கோயில்

இந்தியாவில் சக்தியை வழிபடுகின்ற புண்ணியக் கோயில்கள் மூன்று உள்ளன. அவைகளில் காமாட்சி கோயிலும் ஒன்ருகத் திகழ்கின்றது. மற்ற இரண்டு புண்ணியக் கோயில்கள் மதுரையிலும், வாரணுசியிலும் உள்ளன. தற்போதுள்ள அமைப்பில் இந்தக் கோயிலை 14-ஆம் நூற்ருண்டில் சோழர்கள் கட்டினுர்கள்.

## சாக்கீஸ்வரர் கோயில்

புகழ் பெற்ற இந்தக் கோயிலும் சோழர்களால் கட்டப்பட்டதே. பல்லவர்களை வெற்றி கண்ட சோழர்கள், பல்லவர்களின் மரபினைத் தொடர்ந்ததோடு இக்கோயிலின் மதிப்பினையும் உயர்த்திக் காட்டினுர்கள். இது காமாட்சி அம்மன் கோயில் அருகிலேயே அமைந்துள்ளது.

வரதராஜப் பெருமாள் கோயில்







கண்ணைக் கவரும் வண்ண வண்ண பட்டுப் புடவைகள் காஞ்சிபுரத்தில் தயாராகின்றன!

## கைத்தறித் தொழில்

நெசவுத் தொழிலுக்குப்பெயர் பெற்றது 'காஞ்சி. இந்தியாவிலேயே சிறந்த ரகப் பட்டுப் புடவைகள் இங்கேதான் நெய்யப் படுகின்றன. எண்ணற்ற உயர் வண்ணங்களையும், தரமான சரிகைகளையும் கொண்ட உயர்ந்த ரகப் பட்டுப் புடவைகள் காஞ்சிபுரத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. இங்கே கால வரம்பற்ற கைத்தறித் தொழிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. காஞ்சிபுரத்தில் நேர்த்தியான இந்தப் பட்டுப் புடவைகள் மாறுபட்ட வண்ணங்களில் தூய 'மல்பெரி' பட்டினுல் நெய்யப்படுபவைகளாகும். பளபளப்பு, நீடித்த உழைப்பு, நெய்திறன் போன்றவைகளில் பொருமையுறத் தக்க மதிப்பினையும் பெற்றுள்ளன. செயற்கைமுறைத் துணிகள் உள்ளடங்கிய எந்த நெசவுத் துணிகளும் இவைகளுக்கு ஈடாகா. இங்கே ஏறத்தாழ 5,000 குடும்பத்தினர் நெசவுத் தொழிலை மேற்கொண்டு தங்களுடைய தறிகளின் மூலம் கண்கவர் வண்ணப் படைப்புக்களைத் தயாரிக்கின்றனர். இவைகள் இங்குள்ள ஏராளமான கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனையாகின்றன.

## போக்குவரத்து வசதிகள்

**விமான நிலையம்** : மீனம்பாக்கம், சென்னை.

**புகைவண்டி நிலையம்** : காஞ்சி உள்ளது. சென்னையிலிருந்து செங்கற்பட்டு வழியாகப் புகை வண்டியில் காஞ்சிபுரம் செல்லலாம்.

**சாலை** : எல்லா முக்கிய நகரங்களுடனும் சாலைகள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து 77 கிலோ மீட்டர், செங்கற்பட்டிலிருந்து 35 கிலோ மீட்டர், மாமல்லபுரத்திலிருந்து 65 கிலோ மீட்டர், வேலூரிலிருந்து 64 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள காஞ்சிபுரத்திற்குப் பேருந்துகள் அடிக்கடி உள்ளன. சென்னையிலிருந்து காஞ்சிபுரம், மாமல்லபுரம், வேடந்தாங்கல் ஆகிய இடங்களுக்குச் செல்ல ஒரு நாள் பயணம் மேற்கொள்வதற்கு வசதியாகச் சென்னையில் சுற்றுலா வாடகைக் கார்கள் மற்றும் வாடகைக் கார்கள் கிடைக்கின்றன.

## தங்கும் வசதிகள்

இந்திய சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் சுற்றுலா மாளிகை, காஞ்சிபுரம் புகை வண்டி நிலையத்திற்கு அருகில் 78: காஞ்சி அம்மன் கோயில் தெரு வில் அமைந்துள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் இச் சுற்றுலா மாளிகையில் தங்கலாம். இங்கு மேல்நாட்டு உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

ரி

கள் காஞ்சிபுரத்தில் ஏராளமாக உள்ளன. நகராட்சி ஓய்வு இல்லம் ஒன்றும் காஞ்சியில் உள்ளது. குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கு ஏற்ற சத்திரங்களும் உள்ளன.

## அருகிலுள்ள சுற்றுலாத் தலங்கள்

**திருப்பருத்திக்குன்றம்** : வேகவதி நதியின் தெற்குக் கரைப் பகுதியில் அமைந்துள்ள இது, காஞ்சிபுரத்தின் ஒரு புற நகராகும். சமண மதத்தின் சிறப்பு வாய்ந்த பெரிய தலமாகவும் விளங்குகிறது. இங்கேயுள்ள ஜினக்காஞ்சி கோயில் ஈடு இணையற்றதாக விளங்குவதோடு பல்வேறு கோபுரங்களையும் கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் பல்லவர், சோழர் மற்றும் விஜய நகர மன்னர்களின் கலை அம்சங்களோடு விளங்குகின்றன.

## வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்

காஞ்சிபுரத்திலிருந்து 62 கி.மீ. தொலைவில் மாமல்லபுரம் செல்லும் வழியில் உள்ளது. இந்தியாவிலுள்ள முக்கியமான தேசியப் பறவைகள் உய்விடங்களில் இதுவும் ஒன்ருகத் திகழ்கிறது. நவம்பர் திங்கள் முதல் பிப்ரவரி திங்கள் வரை பறவைகள் இங்கே காணப்படுகின்றன. வேடந்தாங்கல் சென்னையிலிருந்து தெற்கே 83 [illegible] தொலைவில் உள்ளது.



# திருச்சிராப்பள்ளி

சென்னையிலிருந்து 320 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருச்சி, பழங்கால காவிரி டெல்டாப் பகுதி நகராகும். 18-ஆம் நூற்றுண்டின் போது நடைபெற்ற கருநாடகப் போரில் திருச்சி ஒரு செயற்களமாகவே விளங்கியது. இந்தப் போர்களில் மலைக்கோட்டை குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்றிருந்தது. இதனுடைய வரலாற்றிலே முகம்மது அலி, சந்தா சாகிப், ராபர்ட் கிளைவ் போன்ற பெருமை படைத்தவர்கள் பங்கேற்றிருந்தார்கள். இதனுடைய வரலாற்றின் சிறப்புமிக்க அத்தியாயங்கள் மதுரை நாயக்கர்களால் எழுதப்பட்டவையாகும். திருச்சி நகரமும், மலைக்கோட்டையும் மதுரை நாயக்கர்களால் நிறுவப்பட்டவைகளே. இன்று திருச்சி, வரலாற்றிலே இணைக்கப்பட்டு, வழி வழி மரபான யாத்திரைத் தலமாகவும், வளமான வாணிக நகராகவும் விளங்குகிறது.

## காணத் தக்க இடங்கள்

**மலைக்கோட்டை** : அடித்தளத்திலிருந்து இம்மலை ஏறத்தாழ 83 மீட்டர் உயரமுள்ளது. வளமான பகுதி இந்நிலப்பரப்பினை அழகுபடுத்துகிறது. 344 படிகளைக் கொண்ட பாதை, விநாயகரைத் தொழச் செல்லுபவர்களை அழைத்துச் செல்கிறது. வழியில் அமைந்துள்ள நூறு கால் மண்டபம் இன்றும் விழா போன்றவைகளை நடத்துவதற்குப் பயன்பட்டு வருகின்றது. கி.பி. 6, 7-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இரண்டு குகைக் கோயில்கள், சிற்பங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. பாதி வழியில் தாயுமானவ சுவாமிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டு உள்ள சிவன் கோயில் ஒன்றும் உள்ளது. மலைக்கு அடியில்தான் கோயில் குளம் உள்ளது. இதற்கு அருகே உள்ள வீடு ஒன்றில்தான் ராபர்ட் கிளைவ் வசித்து வந்தார்.



சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக விளங்குகிறது கல்லணை

## ஸ்ரீரங்கம்

இது 15 கி.மீட்டர் அகலமும், 40 கி.மீட்டர் நீளமும் கொண்ட ஒரு சிறிய தீவாகும். ஏறத்தாழ 600 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட மிகப் பெரிய கோயிலாகத் திகழும் இதில் 21 கோபுரங்கள் உள்ளன. விஷ்ணுவுக்காகவே கி.பி. 13, 14-ஆம் நூற்றுண்டில் இக்கோயில் கட்டப்பட்டதாகும்.

நகரைச் சுற்றியே இக்கோயிலின் சுவர்கள் அமைந்துள்ளன. திருச்சியிலிருந்து 4 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இக்கோயில் சேரர், சோழர், பாண்டியர் மற்றும் மதுரை நாயக்கர் போன்றோரின் பராமரிப்பில் இருந்துள்ளது குறிப்பிடத் தக்கது. சிறந்த யாத்திரைத் தலமாக விளங்கும் இக்கோயிலின் ஆண்டுத் திருவிழா வைகுண்ட ஏகாதசியின் போது நடைபெறும். டிசம்பர் திங்கள் கடைசி வாரத்திலிருந்து ஜனவரித் திங்கள் இரண்டாம் வாரம் வரை, ஏறத்தாழ 20 நாட்கள் இவ்விழா நடைபெறும்.

## திருவானைக்காவல்

ஜம்புகேஸ்வரர் கோயில் என இங்குள்ள திருக்கோயில் வழங்கப்படுகிறது. ஜம்பு எனப்படுவது ஒரு புனிதமான மரமாகும். இந்த மரத்தின் கீழேதான் சிவபெருமான் இருந்துள்ளார். இம்மரத்தின் கீழே சிவனுடைய அடையாளமான சிவலிங்கம் காணப்படுகிறது. சிவலிங்கம் நீரில் மூழ்கிக் காணப்படும். புராண காலத்தில் யானை ஒன்று இக்கோயிலின் லிங்கத்தை வழிபட்டு வந்ததனுலேயே 'திரு ஆனைக் காவல்' என்றும் வழங்கப்பட்டு வந்தது. கண்ணுக்கு விருந்தளிக்கும் உயர்ந்த சிற்பங்கள் பலவற்றை இக்கோயிலில் காணலாம்.

## சுற்றுலாத் தலங்கள்

**கல்லணை** : இந்த அணைக்கட்டு சோழ மன்னர்களில் சிறப்புற்று விளங்கிய கரிகால் சோழனின் தொழில் நுட்பத் திறமையால் காவிரி நதியின் குறுக்கே கி.பி. 1-ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டது ஆகும். அழகும் அமைதியும் பெற்றுச் சுற்றுலாவுக்குச் சிறந்த இடமாக விளங்கும் இங்கே சுற்றுலாப் பயணிகள் ஒரு நாள் தங்கி, தங்களுடைய பொழுதினை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம். திருச்சி, தஞ்சைச் சாலையில், திருச்சியிலிருந்து 19 கி.மீட்டர் தொலைவில் இந்த அணைக்கட்டு உள்ளது.

## கங்கை கொண்ட சோழபுரம்

இங்கே ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரகதீசுவரர் ஆலயம் தஞ்சாவூரில் உள்ள கோயிலின் மறுபதிப்பாக, தரமுடன் திகழ்கிறது. இக்கோயில் தனக்கே உரிய அழகினையும், கவர்ச்சியையும் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலை நிர்மாணித்த ராஜேந்திர சோழனுக்கு சிவனும் பார்வதியும் மலர்க் கிரீடம் சூட்டுவது போல் அமைந்துள்ள சிற்பம் இங்கேயுள்ள சிற்பங்களிலே மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். நடராஜர் சிலையும், நடனமாடும் கணேசருடைய சிலையும் அழகு வாய்ந்ததாகத் திகழ்கின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தை அரியலூர், ஜெயங்கொண்டம் வழியாக அடையலாம். தஞ்சையிலிருந்து 71 கி.மீட்டர் தொலைவில் உள்ள இதனை கும்பகோணம் கீழ் அணைக்கட்டு வழியாகவும் அடையலாம்.



தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபதிப்பாக விளங்கும் கங்கைகொண்ட சோழபுரம் கோயில்












# இராமேஸ்வரம்—புனிதத்தீவு

தென் பகுதிக் காசி என இந்துக்களால் கருதப்படும் இராமேஸ்வரம் தீவு—இராமாயணமாம் இதிகாசத்திலேயே சிறப்பிடம் பெற்ற பகுதியாகும்.

இலங்கையில் செய்த யுத்தத்திற்குப் பின்னர், இராமபிரான் இந்த இடத்திற்கு வந்து சிவ பெருமானை வணங்கியதாகச் சொல்லப்படுகிறது. இதனால், சைவர்களும், வைணவர்களும் இதனைப் புனிதமான இடமாகக் கருதுகிறார்கள்.

ஓர் இலிங்கத்தைக் கொண்டு வருவதற்காக வானர சேனையைச் சேர்ந்த அனுமான், கைலாயத்திற்கு அனுப்பப்பட்டார் என்றும், பயணத்தின் போது அனுமார் தாமதித்துச் சென்று விட்டார் என்றும், சிவ பெருமானின் பூஜையை உரிய காலத்தில் செய்ய வேண்டியிருந்ததால், இராமபிரானின் மனைவி சீதை தனது பக்தி உணர்வினால் இலிங்கம் ஒன்றை உருவாக்கினாள் என்றும், (அந்த இலிங்கம் தான் இராமநாதர் என்று வழங்கப்படுகிறது) அனுமான் ஓர் இலிங்கத்துடன் திரும்பி வந்தபோது, ஏற்கெனவே ஓர் இலிங்கம் இருப்பதை அறிந்து, தனது பணி வீணாகிவிட்டதே என வருந்தி, மனம் தளர்வுற்றார் என்றும், அப்போது இராமபிரான் அனுமானுக்கு ஆறுதல் கூறியதுடன் அவரால் கொண்டு வரப்பட்ட இலிங்கத்தை இராமநாதருக்கு வடபுறத்தில் இடம் பெறச் செய்தார் என்றும், அனுமானால் கொண்டு வரப்பட்ட அந்த இலிங்கம் எல்லா வகையிலும் முன் மரியாதை செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார் என்றும் பழங் கதை ஒன்று கூறுகிறது.

இராமேஸ்வரம் தீவின் கிழக்குப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள இராமநாதசாமி கோயில், மிகப் பெரிய பிரகாரத்துக்கும், வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களுக்கும் பெயர் பெற்றது ஆகும். 1220 மீட்டர் (4000 அடி) நீளம் உள்ள இந்தப் பிரகாரம்தான் இந்தியாவிலேயே மிக நீளமான பிரகாரம் ஆகும். இங்குள்ள தூண்கள்—உன்னதமான வேலைப்பாடுகளுக்கும், பிரம்மாண்டமான அமைப்புக்கும், புகழ் பெற்ற பாணிக்கும் பெயர் பெற்றவை. இந்த ஆலயத்தின் கோபுரம் 38.4 மீட்டர் (176 அடி) கொண்டதாகும். இன்று நமக்குக் காட்சி தரும் கோயிலின் அமைப்பு—கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து, பல்வேறு காலங்களில் பல்வேறு மன்னர்களால் உருவாக்கப்பட்டதாகும். கோயில், கடற்கரையில் கட்டப்பட்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகள், கடலில்—அக்னி தீர்த்தம் என்று வழங்கப்படும் பகுதியில் குளிக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள கடல்—இரைச்சல் இன்றி மிகவும் அமைதியாகக் காட்சி தருகிறது.

இராமேஸ்வரம் தீவுக்குச் செல்வதற்கு, நீண்ட காலமாக ரயில் மார்க்கம்தான் இருந்து வருகிறது. புதிய தரை மார்க்கம் ஒன்றை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. தென் இந்தியாவிலிருந்து இராமேஸ்வரம் தீவை இணைக்கும் வகையில் பாலம் ஒன்றை அமைப்பதற்கு 1973-ஆம் ஆண்டு கால்கோள் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீவு மகாவிஷ்ணுவின் கையில் உள்ள சங்கைப் போன்ற வடிவுடையதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தீவு, தென் இந்தியாவின் மிகப் பெரும் கடல் உணவு மையமாகத் திகழ்கிறது. இங்கு பிடிக்கப்படும் மீன்களும், இறால்களும் வெளிநாடுகளுக்கு மிகுந்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த வட்டாரத்தில், மீன் பிடி தொழிலை, நவீன முறையில் வளர்ச்சி செய்வதற்கு, இந்தோ-நார்வே மீன் வளத் திட்டம் ஒன்று, மண்டபத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்தத் தீவைச் சுற்றிலும் உள்ள கடல்களில் அதிக அளவில்



இந்தியாவிலேயே மிக நீண்ட பிரகாரத்தைக் கொண்டுள்ள பெருமை ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலுக்கே உரியது!

மீன்கள் கிடைப்பதுடன், உலகப் புகழ் பெற்ற பவளப் பாறைகளும் கிடைக்கின்றன. பவளப் பாறைகளில் காணப்படும் தோட்டங்களும், அருகில் உள்ள சிறு சிறு தீவுகளின் தோற்றமும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களைக் கவரும் திறன் பெற்றவை. சுருக்கமாகச் சொன்னால், இது தென்னந் தோப்புகளும், புளிய மரங்களும், ஓடைகளுக்கு இடையேயுள்ள மரங்களும் நிறையப் பெற்று, பொன் மணல் மிகுந்த சுவர்க்கத் தீவுபோல் காட்சி தருகிறது.

### காண வேண்டிய இடங்கள்

கோயிலுக்கு வடபுறம் அமைந்துள்ள காந்த மதன பர்வதம் என்னும் சிறு மலை, இந்தத் தீவின் மிக உயர்ந்த இடமாகும். இங்கிருந்து பார்த்தால் தீவு மிக அழகாகக் காட்சி தரும். இங்கே, இரண்டடுக்கு மண்டபம் ஒன்றும், ஒரு சக்கரத்தில் அமைக்கப் பெற்றுள்ள இராமர் பாதமும் உள்ளன. வணக்கத்திற்குரிய இந்தப் பாதங்கள், சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கின்றன. இந்தத் தீவின் தென் பகுதி முனையான தனுஷ்கோடி 1964-ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலால் முழுதும் சேதமடைந்து விட்டது. ஆனால் இங்குள்ள கோதண்டராமசாமி கோயில் மட்டும் அழியாமல் நிலைத்து நிற்கிறது. இராமேஸ்வரம் செல்லும் பாதையில், கூப்பிடு தூரத்தில் உள்ளது இந்தக் கோயில். இந்த இடத்தில்தான் இராவணனின் தம்பி விபீஷணன், இராமபிரானிடம் சரணடைந்தான் என்று சொல்லப்படுகிறது. இங்கே, இராமர், சீதை, இலட்சுமணன், அனுமான், விபீஷணன் ஆகியோரின் படிவங்கள் உள்ளன.

### போக்குவரத்து வசதி

**விமான மார்க்கம்:** இராமேஸ்வரத்துக்குச் செல்ல, அருகில் உள்ள விமான நிலையம் மதுரைதான். இங்கிருந்து 170 கி.மீட்டர் (100 மைல்) தொலைவில் உள்ளது.

**ரயில் மார்க்கம்:** இராமேஸ்வரத்துக்குச் செல்ல ரயில் மார்க்கம் உண்டு.

**தரை மார்க்கம்:** அருகில் உள்ள இடம் மண்டபம்தான். மண்டபம் வரை பேருந்தில் செல்லலாம். அதன் பின்னர், மண்டபத்திலிருந்து இராமேஸ்வரத்திற்கு ரயில் மூலமாகத்தான் செல்ல வேண்டும். மண்டபத்திலிருந்து 19 கிலோ மீட்டர் (12 மைல்) தொலைவில் இராமேஸ்வரம் உள்ளது.

### தங்கும் வசதிகள்

தமிழ் நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சார்ந்த பயணிகள் விடுதியும், ரயில் நிலைய ஓய்வு விடுதியும், கோயிலைச் சார்ந்த விடுதிகளும், மற்றும் பல தனியார் விடுதிகளும் இங்கு உள்ளன.

தனுஷ்கோடியில் உள்ள கோதண்டராமசாமி கோயில்





# வளம் கொழிக்கும் தஞ்சை

நன்செய்க்குப் பஞ்சமில்லாத் தஞ்சை மாவட்டம் வளங்கொஞ்சும் பூமி! காவிரி ஆற்றினால் பயனுறும் இந்த மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்ற புகழ் பெற்றதாகும்.

வளங் கொழிக்கும் நிலத்தால் மட்டும் அல்லாது வரலாற்றின் புகழ் பூத்த பெருமையும் உடையது தஞ்சை மாவட்டம். அதனால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்கள் இங்கு ஏராளம்! ஏராளம்!

ஆண்ட நாள் ஆண்ட சோழ மாமன்னர்களின் பொற்காலத்தை நினைவூட்டும் இடங்கள் இங்கு பார்ப்பவர்களைப் பரவசப் படுத்தும்.

### தஞ்சாவூரில்...

பிற்காலச் சோழ மன்னர்களில் பெரும் புகழுக்கு உரியவராக விளங்கிய, முதல் இராஜராஜ சோழன் கி.பி. 985 முதல் கி.பி. 1014-ஆம் ஆண்டுவரை தஞ்சைத் திருநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர். இவர் எழுப்பியதே தஞ்சைப் பெரிய கோயில் என்றழைக்கப்படும் பிரகதீசுவரர் ஆலயம்.

216 அடி உயரமுள்ள நடுவிமானத்தோடு 793 அடி நீளமும் 397 அடி அகலமுள்ள இப்பெருங் கோயில் சோழர் காலக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கோயில் கோபுரத்தின் மேல் 89 டன் கனமுள்ள (விமானம்) ஒரே கல்லால் வட்ட வடிவில், கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டிருக்கும் நேர்த்தியும், கல்லெல்லாம் கலை வடிவாய் அமைந்துள்ள காட்சியும் காண்போரைக் கவரும்.

கோயில் சந்நிதியிலுள்ள நந்தி 6 மீட்டர் நீளமும், 2.6 மீட்டர் அகலமும் 3.7 மீட்டர் உயரமும் உள்ளதாகும். பிரம்மாண்டமான தோற்றமுடைய இந் நந்தி பார்ப்பவர்களை மயங்கச் செய்யும்.

தஞ்சைப் பெரிய கோயில் பண்டைய கட்டடக் கலையையும் கலை மலிந்த சோழ நாட்டின் கலைத் திறன் ஆகியவற்றின் உருவகமாக விளங்குகிறது. இக்கோயில் கோபுரத்தின் உட்புறத்தின் தோற்றம் அனைவரையும் வியக்கச் செய்யும். உட்புறம் கூடாக அமைந்துள்ள தோற்றம் பொறி இயல் வல்லுநர்களையும் வியப்பில் ஆழ்த்தும். கோபுர உட்புறச் சுவர்களில் பதினோராம் நூற்றாண்டில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களைக் காண்கின்றோம்.

### சரஸ்வதி மஹால்

சோழ மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னர் மகாராஷ்டிரர், நாயக்க மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பூமியாகவும் தஞ்சாவூர் விளங்கியது.

சரபோஜி மன்னர் காலத்தில் உருவாகியது சரஸ்வதி மஹால் நூலகம். இந்த நூலகம் இந்தியாவின் பழமையான நூலகங்களில் ஒன்றாகும். 30,000க்கு



தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள எழில்மிகு வெண்கலச் சிலை

மேற்பட்ட ஓலைச் சுவடிகளும், மூலப் பிரதிகளும் உள்ளன. இந்திய மொழிகளில் மட்டுமல்லாது ஐரோப்பிய மொழிகளிலும் இங்கு கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.

**கலைக்கூடம்**

தஞ்சை அரண்மனையில் உள்ள கலைக் கூடத்தில் கருங்கற் சிலைப் பகுதி, வெண்கலச் சிலைப் பகுதி என இருபகுதிகள் உள்ளன. கலை அழகு மிக்க கருங்கற் சிலைகள் 110 வைக்கப்பட்டுள்ளன. வெண்கலச் சிலைப் பகுதியில் பல நாட்டினரும் பார்த்துப் பாராட்டிய 165 சிலைகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரத்தக்க வகையில் உள்ள இக் கலைக் கூடத்தில் தஞ்சைத் தரணிக்கே உரிய கலை யழகு மிக்க பொருள்களும் உள்ளன. சுருக்கமாகக் கூறினல் தென்னிந்தியக் கலைகளின் காட்சியகமாக இக்கலைக் கூடம் திகழ்கிறது. இங்குள்ள தெய்வச் சிலைகள் அனைத்தும் ஒன்பதாம் நூற்றுண்டிற்கும் பதின்மூன்ரும் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சோழ அரசு பரவியிருந்த பல்வேறு இடங்களிலிருந்தும் 1951-ஆம் ஆண்டில் திரட்டப்பட்டவையாகும்.

**தஞ்சையின் கலைப்பொருட்கள்**

சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய தஞ்சாவூர்த் தட்டு, வெண்கலச் சாமான்கள், நெட்டியால் செய்யப்படும் பொருட்கள், தொன்று தொட்டுப் புகழுடன் விளங்கும் இசைக் கருவிகள் முதலியன தஞ்சாவூரில் கிடைக்கும்.

**மாவட்டம் முழுவதும்**

தஞ்சாவூர் நகரத்தைப் போன்று தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் பல உள்ளன.

**திருவையாறு**

தஞ்சாவூரிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருவையாற்றில் ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. ஐயாறு என்பதே திருவையாறு என்று வழங்குகிறது. இங்குள்ள பஞ்சநாதேஸ்வரர் திருக்கோயில் புகழ் வாய்ந்தது ஆகும்.

இவ்வூரில்தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜரின் சமாதி உள்ளது. ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சங்கீத விழாவான தியாகராஜ ஆராதனை உற்சவம் புகழ் வாய்ந்ததாகும்.



**கும்பகோணம்**

பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்களுக்குப் பெயர் பெற்ற ஊர் கும்பகோணம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 'மகாமகம்' திருவிழா இங்குதான் நடைபெறுகின்றது. மகா மகக்குளம் இங்கே உள்ளது. [illegible] மாதத்தில் 'மாசி மகம்' கொண்டாடப்படுகிறது. ஆதி கும்பேசுவரர் ஆலயம், சாரங்கபாணி திருக்கோயில், நாகேசுவரர் ஆலயம், இராமசாமி திருக்கோயில் முதலியன இவ்வூரிலுள்ள ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவை. பிரம்மாவுக்கு என்று ஒரு கோயிலும் இங்கு உண்டு.

இவை தவிர கும்பகோணம் சுற்று வட்டாரங்களில் மிகப் பெரிய ஆலயங்கள் உள்ளன. திருநாகேசுவரத்துக்கு அருகில் உள்ள ஒப்பிலியப்பன் திருக்கோயில், திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயில், சோழர் காலத்துச் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் தாராசுரம் கோயில் முதலியன குறிப்பிடத் தக்கவை.

முருகவேளின் ஆறு படை வீடுகளில் ஒன்ருகக் கருதப்படும் திருஏரகம் என்ற சுவாமிமலையும் கும்பகோணத்துக்கு அருகில்தான் உள்ளது.

பட்டு நெசவுத் தொழிலும் கும்பகோணத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சிறப்பான தொழிலாகும்.

**திருவாரூர் தேர்**

தெய்வ மணம் கமழும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலும், கமலாலயம் என்ற திருக்குளமும் புகழ் மிக்கவை. அளவிலும் பெரியவை.

தென்னட்டிலேயே மிகப்பெரிய தேராகும், திருவாரூர்த் தேர்! 'திருவாரூர் தேர் அழகே அழகு' என்ற மொழியால் இதை உணரலாம். இதன் எடை 200 டன்களாகும் — பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி இத்தேரினை இழுக்க வேண்டும்.

தற்பொழுது இத்தேரில் எஃகுச் சக்கரங்களும் 'ஐடிராலிக்' முறை நிறுத்தும் சாதனமும் பொருத்தப்பட்டுள்ளன. இத் தேர் எளிதாக இழுக்கப் படுவதற்காக, பின்னல் இருந்து புல்டோசரினுலும், டிராக்டர்களினுலும் தள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் சிற்ப வேலைகள் நிறைந்த இத்தேர், காண்பவர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்.



திருவாரூர் கமலாலயத்தின் தெப்பக் குளம்

திருவாரூர், சோழர் காலத்தில் தலைநகராக இருந்த ஊர். மனுநீதிச் சோழன் இங்கு ஆண்டான் என்பதற்கு அடையாளமாக கல் தேர் ஒன்றும் இங்குள்ளது. சங்கீத மும்மூர்த்திகளும் இவ்வூரில்தான் பிறந்துள்ளார்கள்.

திருவாரூரின் சுற்று வட்டாரத்தில் பத்துப் பதினைந்து மைல் தொலைவின் உள்ள ஊர்களான எண்கண், எட்டுக்குடி, சிக்கல் போன்ற ஊர்கள் முருகன் கோயில் கொண்ட ஊர்களாகும்.

**மறைக்காட்டுக் கோயிலும் கோடிக்கரைக் காடும்**

வேதாரண்யம் என்று அழைக்கப்படும் திருமறைக் காடு ஆலயம் புகழ் வாய்ந்ததாகும். விடுதலைப் போராட்டத்தின் போது உப்பு சத்யாக்கிரகம் நடைபெற்றது இவ்வூரில்தான். உப்பு இங்கு ஏராளமாக உற்பத்தியாகிறது.

வேதாரண்யத்தை அடுத்துள்ள கோடிக் கரைக் காடு, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகும். பரந்து விரிந்து கிடக்கும் இக் காட்டில் காட்டு மாடு, குதிரைகள் போன்ற விலங்குகள் இருந்தாலும் மான் கூட்டமே மிக அதிகமாக இருக்கும். இது ஒரு மான் வளர்ப்புப் பூங்காவாகத் திகழ்கிறது என்று சொல்லலாம்.

**எம்மதத்தினருக்கும்**

இந்து சமயத்தவர்கள் விரும்பும் ஆலயங்கள் ஏராளமாக தஞ்சையில் உண்டு. எனினும் எல்லாச் சமயத்தவர்களுக்கும் உரிய சிறப்பான தலங்களும் தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருக்கின்றன.

**வேளாங்கண்ணி**

இந்தியாவின் பல பாகங்களில் இருந்து கிறிஸ்தவ சமயத்தினர் விரும்பி வரும் இடம் வேளாங்கண்ணி. ரோமன் கத்தோலிக்கப் பிரிவினரின் புண்ணியத் தலமாகக் கருதி ஆண்டுதோறும் கூடுகின்றனர். இங்கு நடைபெறும் வேளாங்கண்ணித் திருவிழா புகழ் மிக்கதாகும்.

**நாகூர்**

முஸ்லிம் சமுதாயத்தினர் விரும்பி வரும் இடம் நாகூர். இங்குள்ள தர்க்காவில் எல்லாச் சமயத்தினரும் வழிபட வருகின்றனர். நாகூரில் நடைபெறும் கந்தூரி விழா சிறப்பான விழாவாகும். நாகூர், முஸ்லீம்



எல்லா மதத்தினரும் வணங்கும் அன்னை வேளாங்கண்ணி கோயில்

மக்கள் ஏராளமாக வாழும் ஊர் ஆகும்.

**பூம்புகார் :**

குடமலை பிறந்த காவிரி குண திசையில் கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த ஊரே பூம் புகார் எனப்படும் காவிரிப்பூம் பட்டினம். பண்டை நாளில் சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய இடம் பூம்புகார்.

பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு, முத் தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல் களில் காவிரிப்பூம்.பட்டினத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கின் றன.

தாலமி, பெரிப்ளஸ், ப்ளினி போன்ற அயல் நாட்டவரும் தங்கள் நூல்களில் பூம்புகார் பற்றி எழுதியுள்ளனர். பிரா கிருத நூல்களான மிளிந்தபண, ஜாதகக் கதைகள், அபிதம் மாவ தாரம், புத்தவம் சாத்த கதா முதலியவற்றிலும் பூம்புகாரைப் பற்றிய விவரங்களைக் காணலாம்.

பார்ஹூத் கல்வெட்டு, சாயா வனம் கல்வெட்டு மூலமாகவும் பூம்புகார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

பார்ஹூத் கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது. கிறிஸ்துவுக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பே காவிரிப்பூம் பட்டினம் சிறப்புடன் விளங்கியது என்பதற்கு இது சான்ருகும்.

இவ்வளவு பெருமையுடைய பூம்புகார், கடல் கோளால் மறைந்தது. இன்று சின்னஞ் சிறிய கிராமமாக விளங்கும் பூம் புகார் அந்நாளில் பெரும் நகர மாக விளங்கியது. தஞ்சை மா வட்டம் சீர்காழி வட்டத்தில் உள்ள கீழையூர், வாணகிரி, மேற்கிலுள்ள மணிகிராமம், மேலப் பெரும்பள்ளம், கீழப் பெரும் பள்ளம் மற்றும் மேலை யூர்ப் பகுதி இந்த இடங்களை உள்ளடக்கி, காவிரிப் பூம் பட்டினம் அமைந்திருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகிருர் கள்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பௌத்தப் பள்ளி ஒன்றின் கட்டட அமைப்பைக் கண்டுபிடித்துள்ளனர். கரிகாற் சோழன் காலத்து நாணயங்கள்,

இந்துக்களும் வணங்கும் நாகூர் தர்க்கா





பூம்புகார் கலைக்கூடம்

ரோமானிய நாணயங்கள் முதலி யனவும் இங்குக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இத்தனை பெருமைகள் அமைந் திருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையறியாது இருந்த பூம்புகார் புதிய பொலிவு பெற வும் அதன் இலக்கியப் பெருமை மீண்டும் உயிர்த்தெழவும் ஆன பணிகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டது. அதன் அடையாளம் தான் பூம்புகாரில் உருவாக்கி யுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம் முதலியன.

சிலப்பதிகாரக் காட்சிகள் அனைத்தும் இங்கே புடைப்புச் சிற் பங்களாக அமைக்கப்பட்டிருக் கின்றன.

கலைக்கூடத்தின் முன் நுழை வாயிலான தோரண வாயிலும் கலைக் கூடத்தின் சிற்ப வேலைப் பாடு மிக்க மரக் கதவும் எழுநிலை மாடமும் பண்டைத்தமிழகத்தின் கலைச் செல்வங்களை நம் கண்முன் காட்டுகின்றன.

இன்று தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் பூம்புகார்



சரபோஜி மன்னரால் கட்டப் பெற்ற அரண்மனையில் ஒரு பகுதி

தெய்வ மணங் கமழும் திருக்கோயில்கள் பலவற்றை தன் சுற்றுப்புறங்களில் கொண்டது தஞ்சாவூர் மாவட்டம். சீர்காழி, வைத்தீசுவரன் கோயில் போன்ற ஊர்களிலும் புகழுடைய கோயில்களைக் கொண்டது தஞ்சை மாவட்டம்.

வளங்கொழிக்கும் நிலம்

தெய்வ மணங் கமழ்ந்திடும் ஆலயங்கள்

கலை மலிந்த உள்ளங்கள்

கைத்திறன் காட்டும் கலைப் பொருட்கள் நிறைந்த தஞ்சை மாவட்டம் வரலாற்று நினைவுச் சின்னங்களையும் ஏராளமாகக் கொண்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

சாலைப் போக்குவரத்தும் ரயில் வண்டிப்போக்குவரத்தும் தஞ்சை மாவட்டத்தில் நிறைந்து காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகளுக்கு நல் வாய்ப்பாகத் திகழ்கிறது. மேலும் இம்மாவட்டத்தின் சிறிய நகரங்களிலும் தங்குவதற்கு நிறைய வசதியுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்குத் தொல்லைகள் இருப்பதில்லை.

எனவே, வளங் கொழிக்கும் தஞ்சையைச் சுற்றுலாப் பயணிகள் நாடிச் செல்வதில் வியப்பில்லை.





பூம்புகார் கலைக்கூடத்தில் உள்ள மாதவி சிலை



## மகிழ்வு உலா செல்வோர் காணவேண்டிய மனோரா !

உல்லாசப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது மனோரா என்னும் இந்த உப்பரிகை. பட்டுக்கோட்டையில் இருந்து 10 மைல் தெற்கேயுள்ள சரபேந்திர ராஜன் பட்டினத்தில் கடலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள மனோரா, தொலைவில இருந்து பாாபபதற்கு ஒரு கலங்கரை விளக்கம் போல் தோன்றுகிறது.

"இங்கிலீஷ் சாதியார் தங்கள் ஆயுதங்களினுல் அடைந்த ஜெய சந்தோஷங்களையும், போனபார்ட்டியின் தாழ்த்தப்படுதலையும் நினைவு கூர்வதற்காக இங்கிலீஷ் துரைத்தனத்தின் சினேகிதரும், படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீமை மகாராஜா சத்ரபதி சரபோஜி மகாராஜா அவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டி வைத்தார். சக வருஷம், ௲ 'க அ க ச' " என்று எழுதப்பட்ட கல்வெட்டு மனோராவில் உள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டும் காணப்படுகிறது. 1814-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மனோராவில் 9 மாடிகள் (அடுக்குகள்) உள்ளன. ஏறத்தாழ 140 அடிஉயரமுள்ள மனோராவின் உச்சியை அடைவதற்கு, வளைந்து வளைந்து செல்லக் கூடிய குறுகலான படிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாடியிலிருந்தும் வெளியே நோக்குவதற்கு பல கணிகள் உள்ளன.

கலைத்திறனோடு கட்டப்பட்டுள்ள மனோராவின் உள் சுவரைத் தொட்டுப் பார்த்தால் ,எவ்வளவு வழவழப்பாக அமைந்துள்ளது ? எழில் மிகு மனோரா ஒரு சிறு கோட்டையாகவும் அமைந்துள்ளது. மனோராவைச் சுற்றிலும் வட்டவடிவமாகக் கட்டுப்பட்டுள்ள மதிற்சுவர்களுடன் கூடிய "அகழி" உள்ளது. அகழிகளில் அக்காலத்தில் முதலைகள் வளர்க்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அகழியைத் தாண்டுவதற்கு முன்பு தொங்கும் பாலம் அமைக்கப்பட்டிருந்த அறிகுறிகள் காணப்படுகின்றன. தற்பொழுது மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அகழியை ஒட்டி இருபுறமும் குகைக் கட்டடங்கள் போன்ற வளைவு மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குதிரை லாயங்களும் காணப்படுகின்றன. மனோராவின் அருகிலுள்ள தென்னந்தோப்புக்கள் மனோராவிற்கு மேலும் எழில் சேர்க்கின்றன.

கோடைக் காலத்திலும் மனோராவில் குளிர்ச்சியாக இருக்கிறது. மனோராவின் கடைசி மாடம் திறந்தவெளியாக இருப்பதால் அதிலிருந்து கடலைப் பார்க்கும்போது எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. காலையில் எழும் உதய சூரியனையும், மாலையில் விழும் சூரியனையும் மனோராவில் இருந்து பார்ப்பது காணற்கரிய காட்சியாகும்!



# மனங்கவர் மாமல்லபுரம்



தென்னகச் சிற்பக் கலை எழிலுக்கு ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழ்வது மாமல்லபுரமாகும்.

பல்லவ மன்னர்களின் கை வண்ணம் மிளிரும் மாமல்லபுரம் நம் நாட்டவரை மட்டுமன்று, மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவர்கின்றது. தமிழ் நாட்டுச் சிற்பக் கலைஞர்களின் கைத்திறமையைக் கண்டு வியக்கும் வகையில் அந்தச் சிற்பங்கள் காலத்தால் அழியாதவையாய் கம்பீரமாய்க் காட்சி அளிக்கின்றன.

பல்லவ மன்னன் நரசிம்மவர்மனால் (கி.பி. 600-630) உருவாக்கப் பெற்ற சிற்பங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும்.

## குகைக்கோயில்கள் (Caves)

பாறையில் குடையப் பெற்ற ஒன்பது குகைக் கோயில்கள் இங்கே உள்ளன. இந்தக் குகை மண்டபங்கள் பல அற்புதக் கதைகளை நமக்குச் சொல்கின்றன. கிருஷ்ண மண்டபம், வராக மண்டபம், மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திரிவிக்கிரம மண்டபம், இராமாநுஜ மண்டபம் முதலியன இங்கே குறிப்பிடத் தக்கவை.

மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தில்—ஆயுதம் தாங்கிய தேவியின் சீற்றத்தையும் பாயும் சிங்கத்தையும் நாம் காண்கிருேம். எருதுத் தலையையுடைய அரக்கன் தோற்று வீழ்கிருன்.

மற்ெருரு மண்டபத்தில் திருமால், ஆதிசேஷன் என்னும் பாம்பின் மீது பள்ளி கொண்டிருப்பதைச் சித்திரிக்கிறது.

## செதுக்கோவியம் (Bas-relief)

உலகிலேயே மிகப் பெரிய கல்லால் செதுக்கிய ஓவியம் ஒன்று மாமல்லபுரத்திற்குப் பெருமையைத் தருகின்றது. இது 80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டது. திமிங்கிலத்தின் வால் போன்ற நீண்ட இந்தச் செதுக்கோவியத்தின் பாறை கடலை நோக்கி இருக்கிறது. இதன் நடுவில் ஒரு பிளவும் இருக்கிறது. இந்தச் செதுக்கோவியத்தைக் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன :

### (1) அர்ஜுனன் தவம்

எதிரிகளை வெல்வதற்காக பாசுபதாஸ்திரத்தை அடைய அர்ஜு

கல்லும் கதை சொல்லும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன ஐந்து ரதங்கள்!





உலகிலேயே மிகப் பெரிய செதுக்கோவியம!

னன் ஒரு காலில் நின்று கொண்டு சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்ததாகவும், சிவபெருமான் அர்ஜுனன் வேண்டிய வரத்தைக் கொடுத்தார் என்றும், அந்த நிகழ்ச்சியையே இச் சிற்பம் எடுத்

துரைக்கிறது என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

### (2) பகிரதன் தவம்.

இராமபிரானின் முன்ேனோரான பகீரதன், ஆகாயத்திலுள்ள கங்கையைத் தரைக்குக் கொண்டு வருவதற்காக கடவுளரை வேண்டித் தவம் புரிந்ததாகவும், ...கோரிக்கை

நிறைவேறியதாகவும், ஆனால் கங்கை மிகுந்த வேகத்துடன் பூமிக்கு வந்தபோது, அதன் வேகத்தைத் தணிக்குமாறு மீண்டும் சிவபெருமானிடம் வேண்டிய தாகவும், சிவபெருமான் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கங்கையை, தம் தலைமீது அமர்த்தி, அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தினர் என்றும், அந்த நிகழ்ச்சியைத்தான் செதுக்குச் சிற்பம் தெரிவிக்கிறது என்றும் மற்ெருரு சாரார்கருதுகின்றனர்.

## ஐந்து ரதங்கள்: (The Five Rathas)

மாமல்லபுரத்தின் தென்கோடியில் உள்ளது ஐந்து ரதங்கள் எனப் படும் பஞ்சபாண்டவர் ரதம். அவையாவன :

1. **தர்மராஜர் தேர் :** இது தென்புறத்தில் வலமிருந்து இடமாகக் காட்சி தருகிறது. இந்தக் கோயில் மூன்று மாடங்களைக் கொண்டுள்ளது. மேலே செல்லப் படிகளும் காணப்படுகின்றன. மாடங்களில் சிவபெருமானின் பல வகையான தோற்றங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

2. **பீமன் தேர் :** இது நீண்ட சதுர வடிவமாய்க் காட்சி அளிக்கிறது. இதன் நான்கு தூண்களின் கீழே சிங்கங்கள் காணப்



மாமல்லையில் கடலாடுவது வெளிநாட்டவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது!

படுகின்றன. இதன் நீளம் 45 அடி. அகலம் 25 அடி. உயரம் 26 அடி.

**3. அர்ச்சுனன் தேர் :** இராவதத்தில் தோன்றும் இந்திரனையும், கருடனோடு விளங்கும் திருமாலையும், காளையுடன் காட்சி தரும் கங்காதரனையும் இங்கே கண்டு மகிழலாம். இந்தத் தேருக்குப் பின்னே ஒரே கல்லில் வடித்தெடுத்த காளை ஒன்று காட்சி தருகிறது.

**4. திரௌபதி தேர் :** கோயிலின் கருவறையில் துர்க்கை காட்சி தருகிருள். கோயிலின் வடக்குத் திசையில் கர்ஜனை செய்யும் சிங்கம் ஒன்று காணப்படுகிறது. இந்தக் கோயிலின் அமைப்பு நம்மை வெகுவாகக் கவர்கின்றது.

**5. நகுல, சகாதேவர் ரதம் :** இது தெற்கே காட்சியளிப்பது. இக்கோயிலின் முகப்பில் இரு சிங்கத் தூண்கள் உள்ளன. இக் கோயில் அருகே யானை ஒன்றும் நின்று கொண்டிருக்கிறது.

## கடற்கரைக் கோயில் (The Shore Temple)

மிகப் பழமை வாய்ந்த சிவ-விஷ்ணு கோயில் இது. இக் கோயிலைக் கடலலைகள் முத்தம் இட்ட வண்ணமிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மேற்கு நோக்கியுள்ள கோயிலின் உள்ளே திருமால் பள்ளி கொண்டுள்ள காட்சியும், கிழக்குத் திசையிலுள்ள கருவறையில் லிங்கமும் காணப்படுகின்றன.

மாமல்லபுரத்தில் இன்னும் எத்தனையோ பழமை வாய்ந்த சின்னங்கள் நம்மை மகிழ்விக்கின்றன. பழைய கலங்கரை விளக்கம், திருமூர்த்தி குகை, புலிக் குகை முதலியன நாம் காணத்தக்கனவாகும். கடற்கரையை ஒட்டியுள்ள சாலிவன் குப்பம் கிராமத்தில் புலிக்குகை இருக்கிறது. இந்தக் குகைக்கு அருகே அதிரணசண்டன் மண்டபம் ஒன்று உள்ளது. இந்தப் பெயர், மன்னன் இராசசிம்மனைக் குறிக்கும்.

## போக்குவரத்து வசதிகள்

**அண்மையிலுள்ள விமான நிலையம் :** சென்னை மீனம்பாக்கம். மாமல்லபுரத்துக்கு அருகேயுள்ள இரயில் நிலையம், சென்னை-திருச்சி மார்க்கத்திலுள்ள செங்கற்பட்டு இரயில் நிலையமாகும். சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்கு வர நல்ல சாலை வசதிகள் உள்ளன. திருவான்மியூர்-கோவளம் வழியாகவும் இங்கு வரலாம்.

இங்கு வருவதற்கு மற்ற மார்க்கங்களாவன : (அ) சென்னை-நாவலூர்-கோவளம். (ஆ) சென்னை-நாவலூர்-திருப்போரூர். (இ) சென்னை - செங்கற்பட்டு - திருக்கழுக்குன்றம்.

சென்னையிலிருந்தும் செங்கற்பட்டிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் நாள்தோறும் சென்னையிலிருந்து சுற்றுலாப் பேருந்துகளை விடுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தினரால் விசிறி வடிவில் கட்டப்பட்டுள்ள கடற்கரை ஓய்வில்லம்





வெளிநாட்டவர்களை வியப்பிலாழ்த்தும் கடற்கரைக் கோயில்!

**இடவசதிகள் :** இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணிகள் விடுதியும், கடற்கரை ஓய்வில்லமும் (நீச்சல் குள வசதியுடன்) உள்ளன. இக்கழகத்தின் சிற்றுண்டி விடுதி ஒன்று கடற்கரைக் கோயில் அருகே உள்ளது.

இதுவன்றி, சில்வர் சாண்ட்ஸ் (Silver Sands), கோல்டன் சன் பீச் ஓய்வில்லமும் (Golden Sun Beach Rest hut), தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை ஓய்வில்லங்களும் உள்ளன.

இங்கு, தனியாரின் இந்திய முறை உணவு விடுதிகளும், தங்கும் விடுதிகளும் உள்ளன.

பூம்புகார் கைவினைப் பொருள் விற்பனை நிலையமும், அரசினர் சிற்பக் கலைக்கூடமும் இங்குக் காணத் தக்கனவாகும்.

## சுற்றுலாப் பயணிகளுக்கு

சுற்றுலாப் பயணிகள் கீழ்க் காணும் இடங்களையும் கண்டு களித்தல் நல்லது :

அழகிய கோவளம் கடற்கரை, கோயில்கள் சூழ்ந்த நகரமும், கைத்தறி மற்றும் பட்டுக்கும் பெயர் பெற்ற காஞ்சிபுரம், நீர்ப் பறவைகள் உய்விடமான வேடந்தாங்கல், பழம் பெருமை வாய்ந்த ஆலயமான திருக்கழுக் குன்றம், வரலாற்றுச் சிறப்பு மிக்க சதுரங்கப் பட்டினம்.



கன்னியாகுமரி கோயில்

# ன்னியாகுமரி

ிய நாட்டின் நிலப் பகுதி
ிடிவுப் பகுதி கன்னியா
ிது மட்டுமல்ல, காந்திஜி,
னந்தர் போன்ற மிகப்
சிந்தனையாளர்களின்
ளுக்கு முடிவுப் பகுதி
அமைந்தது இது.

கடல், இந்துமாக் கடல்,
கடல் ஆகிய முக்கடல்
ங்கமம் ஆகும் முக்கூடல்
ரிய உதயம், அஸ்தமனம்
ு எழும் நிலவுத் தோற்
ப இயற்கைக் காட்சிகள்,
ார் தம் கண்களுக்கு மிகச்
விருந்தாகும்.

ுதாலைகளால் செய்யப்
கவினைப் பொருள்களும்
ப்புப் பணியும் இங்கு, ஆண்டு முழுவதும் வருகை புரி வோரைக் கவர்கின்றன.

**பார்க்க வேண்டிய இடங்கள்**

கோயில் : தெய்வீக ஆற்றலால் நாட்டைக் காப்பாற்றி வரும் கன்னித் தெய்வமான கன்னியாகுமரியின் ஆலயம் இது. பார்வதி கன்னியாகுமரியாகப் பிறந்து, சிவபெருமானின் கைத்தலம் பற்றுவதற்குத் தவமிருந்ததாகப் புராணக் கதை கூறுகிறது.

புனித உணர்வுகளுக்கும் ஒற்றுமைக்கும் சின்னமாக இந்த இடம் விளங்குகிறது. ஆலயத்தில் உள்ள கன்னியா குமரியின் மூக்கில் உள்ள வைர மூக்குத்தி மிகவும் புகழ் பெற்றதாகும். கோயிலுக்கு வெளியே வெகு தூரத்திலிருந்து பார்த்தால்கூடத் தெரியும் வகையில் ஒளி வீசித் திகழ்கிறது.

அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபம்





ன்னியாகுமரியில் கடலாடுதல்

**காந்தி நினைவு மண்டபம்**

இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியின் நினைவாக இந்த மண்டபம் எழுப்பப்பட்டு உள்ளது. காந்தியின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னர், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த இடத்தில் இந்த மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், அஸ்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2-ல், சூரியன் ஒளி விழுமாறு இந்த மண்டபத்தின் கட்டட அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதே!

**விவேகானந்தர் நினைவு மண்டபம்**

கன்னியாகுமரி கோயிலுக்குத் தென் கிழக்கில் கடலில் இரண்டு பாறைகள் காணப்படுகின்றன. இந்தியாவின் நிலப் பகுதியின் முடிவுத் தோற்றத்தைக் காண விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தப் பாறைகள் பயன்படுகின்றன. இந்த இரு பாறைகளில் ஒன்றில்தான், சுவாமி விவேகானந்தர் நீண்ட காலம் கடுந் தவம் செய்தார். கன்னித் தெய்வத்தின் நல்லருளால்தான், சாதாரண துறவியான அவர், ஆற்றல் பெற்ற பெருந் துறவியானார். அவர் தவம் புரிந்த பாறை, 'விவேகானந்தர் பாறை' என்று வழங்கப்படுகிறது. இந்தப் பாறையில்தான், இந்தியாவின் பல்வேறு வகைக் கட்டடப் பாணிகள் இடம்பெற்ற 'விவேகானந்தர் நினைவாலயம்' 1970-ல் கட்டப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலை ஒன்றும் இந்த நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கன்னித் தெய்வத்தின் திருவடித் தடங்கள் இடம் பெற்றுள்ள ஸ்ரீபாத பாறையையும் இங்கே காணலாம். இந்த நினைவாலயத்திற்குச் செல்லப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

விவேகானந்தர் நினைவு மண்டபம்







# எழில் கொஞ்சும் ஏர்க்காடு

இயற்கை அன்னை களி நடம் புரியும் இடம்தான் ஏர்க்காடு. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற மரஞ்செடி கொடி வகைகள், கண்ணைக் கவரும் வண்ண மலர்க் கூட்டங்கள். விண்ணில் அலைஅலையாய் படர்ந்து செல்லும் மேகங்கள், கோடை போக்கும் குளிர் தென்றல் இத்தனையும் அனுபவிக்க—கண்டுகளிக்க நம்மை 'வா வா'வென அழைப்பது எழில் மிகு ஏர்க்காடு!

சேலம் நகரிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அழகிய மலைப் பகுதியே ஏர்க்காடு. சேர்வராயன் மலைத் தொடரில் உள்ள எழில் மிகு மலை வாழிடமாய் விளங்கிவரும் ஏர்க்காடு, கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

இங்கே ஒரு பெரிய ஏரி இயற்கையாய் அமைந்துள்ளது. அன்று ஏரிக்காடாய் இருந்த பகுதியே இன்று ஏர்க்காடு என்று அழைக்கப்படுகிறது.

ஏர்க்காட்டின் அமைப்பு, அதன் தட்ப வெப்ப நிலை ஆகியவை இயற்கையாகவே மக்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. வெப்பம் குறைந்தது 13 டிகிரி சென்டிகிரேடு, அதிகப்படி 29 டிகிரி சென்டிகிரேடுமாக இருப்பதால், இங்கு ஆண்டு முழுவதும் எந்தச் சமயத்திலும் போய் வரலாம். இம்மலையின் மொத்தப் பரப்பளவு 147.5 சதுர மைல்கள். சுமார் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஏர்க்காட்டில், ஏறத்தாழ பதினேழாயிரம் மக்கள் மலைவாழ் மக்களாவர். இவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து வந்து குடியேறியதாக ஆங்கில வரலாற்று ஆசிரியர் திரு. இ. டபிள்யூ. வில்கின்ஸ் அவர்கள் கூறுகிறார்.

ஏர்க்காடு 67 கிராமங்களைக் கொண்டது. இங்கே ஓர் ஊராட்சி ஒன்றியமும் உள்ளது.

இம்மலைத் தொடர் முதன் முதலில் கண்டறியப்படுவதற்கு முன்னர் இருண்ட காடுகளாய் இருந்தது. அப்பொழுது சேலம் மாவட்டஆட்சித்தலைவராயிருந்த திரு. எம். டி. காக்பர்ன் என்ற ஆங்கிலேயர், முதன் முதலாக (1820-29) இம்மலைத் தொடரில் 'தி கிரேஞ்ச்'("THE GRANGE") என்ற மாளிகையைக்கட்டி, அங்கு அரேபியாவிலிருந்து கொண்டு வந்த காபி, ஆப்பிள், பேரி முதலான பயிர் வகைகளைப் பயிரிட்டார். இங்கு உள்ள காபித் தோட்டத்தில் சுமார் 10,000 தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஏர்க்காடு மற்றும் சேர்வராயன் மலைப் பகுதிகளில் ஆரஞ்சு, எலுமிச்சை, வாழை, பேரி, பலா, கொய்யா, மா போன்ற கனி வகைகளும் பல்வகை மலர் வகைகளும் ராகி, வரகு, சாமை, கோதுமை போன்ற பயிர் வகைகளும் பயிரிடப் பெற்று வளங்கொழிக்கும் மலையாகத் திகழ்கிறது.

செல்வம் கொழிக்கும் ஏர்க்காட்டு [illegible] எக்களை எத்தனை காட்சிகள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன!

## எழில்மிகு ஏரி

தென்னகத்தின் அணிகலனாய் விளங்கும் ஏர்க்காட்டின் மையப் பகுதியில் அழகாய்க் காட்சியளிக்கிறது ஓர் ஏரி. இதனைச் சுற்றிலும் அமைந்துள்ள இயற்கைக் காட்சிகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன. இந்த ஏரியில் படகில் செல்வது மனத்துக்குத் தெம்பூட்டுவதாகும்.

## அண்ணா பூங்கா

ஏரியின் அருகே காட்சியளிப்பது அண்ணா பூங்கா. இங்கே பெரியவர்கள் மட்டுமல்ல, சிறுவர்களும் ஆடி மகிழ்வதற்கேற்ற, 'சிறுவர் பூங்கா' ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. இப்பூங்காவில் மலர்க் கண்காட்சியும் நடத்தப் பெறுகின்றது.

## பாவையின் பீடம் (Lady's Seat).

ஏர்க்காட்டில் இது ஒரு முக்கியமான இடம். இந்த இடத்திலிருந்து கீழே பார்த்தால் சேலம் சந்திப்பு, கஞ்சமலை, மேட்டூர் அணை முதலானவற்றைக் காணலாம். இரவு நேரத்தில் இங்கே நின்று கொண்டு சேலம் நகரைக் கண்டால், 'மேலே தான் வானம்—தாரகைகள், கீழேயுமா?' என்று எண்ணத் தோன்றும். ஆம். மின் விளக்குகள் இலட்சக் கணக்கான தாரகைகள்போல ஒளிவிடுவதைக் கண்டு மகிழலாம்.

### பகோடா முனை (Pagoda Point)

இதன் உச்சியில் நின்று கொண்டு நம்மைச் சுற்றி வட்டமிட்டால் தொலை தூரக் காட்சிகள் எல்லாம் கண்களுக்கு இனிமையாய்த் தோன்றும். மேகக் கூட்டங்கள் நம்மைத் தழுவிச் செல்வது போன்ற உணர்வு ஏற்படும்.

### கரடிக் குகை (Bears's Cave)

இப்போது கரடி இல்லாத குகைதான் கரடிக் குகை. முன் ஒரு கரடி இந்தக் குகையில் இருந்ததாம். இதனுள்ளே 15 அல்லது 20 அடி வரைதான் செல்ல முடிகிறது. அதற்கு மேல் ஒரே இருள். இதற்கு அருகில் ஒரு பங்களா இருக்கிறது. அதற்கு 'கரடிக் குகை பங்களா' அல்லது நார்ட்டன் பங்களா என்ற பெயர் உண்டு. இந்தப் பங்களாவின் வயது எத்தனை தெரியுமா? நூறு! இப்போது இதில் ஒரு தமிழர் வசித்து வருகிறார்.

### சேர்வராயன் கோயில்

சேர்வராயன் மலைத் தொடரின் உச்சிப் பகுதிதான், சேர்வராயன் கோயில். ஆண்டுதோறும் மே திங்களில் இங்கு கொண்டாடப்பெறும் திருவிழாவில் நூற்றுக் கணக்கான மலைவாசி மக்கள் கூடுவர். இக்கோயிலுக்குச் செல்லும் வழியில் அலுமினியச் சுரங்கம் ஒன்றும் இருக்கிறது. கரடிக் குகைக்குள் சென்றால் இக்கோயிலை அடையலாம் என்றும் கூறுகிறார்கள்.

### நெஞ்சில் நிற்கும் நல்ல இடங்கள்

அவசரமும் ஆரவாரமுமிக்க நகர வாழ்க்கையில் உழன்ற நமக்கு, அமைதியே உருவான ஏர்க்காடு நம்மை மலைக்க வைக்கிறது, மகிழ வைக்கிறது.

'லூப் ரோடு, கிளியூர் நீர் வீழ்ச்சி, மூலிகைப் பண்ணை முதலானவை நாம் பார்க்க வேண்டிய இடங்களாகும்.

மனத்துக்கு இன்பமூட்டும் மலைப் பகுதிக்கு—எழில் கொஞ்சும் ஏர்க்காட்டிற்குப் போகாத நாள் வீண் நாளே!



# ஒகேனக்கல்

"புகைப் பாறை என்று எதற்குப் பெயர்?"

இந்த வினவுக்கு விடை தெரிய வேண்டுமானால் ஒகேனக்கல்லுக்குச் சென்று பார்த்தால் தெரியும். ஆம், 'ஒகேனக்கல்' என்பதற்குப் 'புகைப்பாறை' என்று பொருள்! உயரமான மலையில் இருந்து பள்ளமான இடத்தில் தண்ணீர் வேகமாக வடியும்பொழுது, தண்ணீர் பனித் துளியெனச் சிதறி, புகைமண்டலம் போல் சூழ்ந்துள்ளதாலேயே இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

தருமபுரியிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலும், பெங்களூரிலிருந்து 130 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது ஒகேனக்கல்.

விடுமுறை நாட்களை இனிமையாகக் கழித்திட ஏற்ற இடம் ஒகேனக்கல். காவிரிக் கரையில் 'கல கல' வென இனிய ஒலியுடன் நம்மை மெய்மறக்கச் செய்கிறது ஒகேனக்கல்லின் ஒய்யாரமான அருவி.

இந்தப் புனித அருவியில் நீராடினால் நோயெல்லாம் நீங்கும் என்பார்கள்; இந்தச் சக்தி இந்த அருவிக்கு உண்டு.

மலைகள் சூழ்ந்த இந்த அருவியின் அழகிய காட்சியையும், பனி மேகங்கள் படர்ந்த எழிலையும் நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். இங்கே தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின், அழகிய சுற்றுலாப் பயணிகள் விடுதி ஒன்று உள்ளது.

சுற்றுலாப் பயணிகள் சுகம் பெற்றிட, அவர்கள் அகமும் முகமும் மலர்ந்திட ஓர் எழிலார்ந்த இயற்கைச் சூழ்நிலைத் தலம்தான் ஒகேனக்கல் என்றால் அது மிகையல்ல!

# மதுரை மாநகர்



இந்தியாவின் புராதன நகரங்களில் இதுவும் ஒன்று. மதுரையின் புகழ் பெற்ற ஆலயத்தில் உள்ள மீனாட்சி, பாண்டிய அரசனின் மகளாகப் பிறந்தவளென்றும், சிவ பெருமான் சுந்தரேஸ்வரர் என்ற பெயரில் வந்து அவளைத் திருமணம் செய்து கொண்டார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சிலப்பதிகார நூலின் நாயகியான கண்ணகி — தன் கணவன் கோவலனுக்காக நீதி வேண்டி நின்றதும் இந்த மதுரை நகரத்தில்தான். குலசேகரன் என்னும் பாண்டிய மன்னன் இந்தக் கோயிலுக்கு அடித்தளம் போட்டான் என்றும் இந்த நகரத்தை அமைத்தான் என்றும், இந்நகரத்துக்குப் பெயரிட விரும்பியபோது, சிவபெருமான் நேரில் தோன்றினார் என்றும் அவரது சடாமுடியிலிருந்து சிலதேன் துளிகள் (மதுரம்) அந்த நகரத்தில் விழுந்தன. என்றும் மதுரம் விழுந்தமையால் இந்நகரம் மதுரை எனப் பெயர் பெற்றதும் என்றும் ஒரு கதை வழக்கில் உள்ளது.

மூன்று தமிழ்ச் சங்கங்கள், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நகரத்தில் சிறப்புற்று விளங்கின. தமிழ் மொழி, கலை, சிற்பக் கலை ஆகியவற்றை மிகவும் ஆதரித்து வந்த பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னர் நாயக்க மன்னர்கள் இந்நகரத்தை ஆட்சி செய்துள்ளனர். பாண்டிய மன்னர்கள் செய்த திருப்பணிகளைக் காத்து வந்ததுடன், அப்பணியை விரிவடையச் செய்த பெருமை நாயக்க மன்னர்களுக்கு உண்டு.

மதுரை—ஒரு தாமரை மலரின் வடிவம் போல் அமைந்துள்ளது ; ஊரின் நடுவே மீனாட்சி-சுந்தரேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. வைகை நதியின் கரையில் அமைந்துள்ள இந்த நகரத்தைச் சுற்றிலும் பசுமை மிகுந்த வயல்களும், தென்னந் தோப்புகளும், பெரும் மரங்களும் காட்சி தந்து இது ஓர் அழகு நகரமாகத் திகழ்கிறது.

விண்வெளியிலிருந்து பார்க்கும் போது, யானை மலை, நாக மலை என்னும் இரண்டு மலைகளால் சூழப்பட்டுள்ள மதுரை நகரம், ஒரு கேடயம் போல் காட்சி தருகிறது. விமானம் மூலம், அல்லது பஸ்ஸின் மூலம் அல்லது ரயிலின் மூலம் சென்று இந்நகரத்தை அடைவோரை, ஒன்பது மாடங்கள் கொண்ட மீனாட்சி ஆலயம் வானவெளிக்கு எதிராக, கம்பீரமாக நின்று அமைதியுடன் வரவேற்பது போல—வாழ்த்துக் கூறுவது போலத் தோற்றமளிக்கிறது.

## சுற்றுலாப் பயணிகள் மதுரையில் பார்வையிட வேண்டிய இடங்கள்

### ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்

செவ்வக வடிவமுள்ள இந்த ஆலயம் 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டது. ஆலயத்தைச் சுற்றிலும் 5 கோபுரங்கள் உள்ளன. ஆலயத்தின் தென் புறத்தில் உள்ள கோபுரம் அனைத்திலும் உயரமானது ; இது தரை மட்டத்திலிருந்து 160 அடி உயரம் உள்ளது. இந்த ஆலயம், உண்மையில் இரட்டை ஆலயம் ஆகும். தென் பகுதி ஆலயம் சுந்தரேஸ்வரரின் மனைவியான மீனாட்சிக்கும், மற்றொரு ஆலயம், சிவபெருமானுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தில் உள்ள ஆயிரம் கால்மண்டபத்தில் ஆலயத்தைச் சார்ந்த கலைப் பொருள் கண்காட்சி ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது

### திருமலை நாயக்கர் மஹால்

இது, மீனாட்சி ஆலயத்திற்குத் தென் மேற்குப் பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கட்டடம் முழுதும் இந்தோ-முகம்மதிய சிற்பப் பாணியில், நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது.



மதுரை மீனாட்சி— சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்

## மாரியம்மன் தெப்பக் குளம்

வண்டியூர் தெப்பக் குளம் என்றும் வழங்கப்படும் இது, நகரத்தின் கிழக்குக் கோடியில் உள்ளது. மீனாட்சி கோயிலைப் போலவே இது பரப்பளவு கொண்டது. இந்தக் குளத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

## கூடல் அழகர் கோயில்

மதுரை நகரின் வடமேற்குப் பகுதியில் உள்ள வைஷ்ணவக் கோயில் இது. அழகான சிற்ப வேலைப்பாடுகள் இந்த ஆலயத்தில் உள்ளன. இந்தக் கோயிலின் மூர்த்தி, அமர்ந்த நிலை—நின்ற நிலை—சயனித்த நிலை என்று மூன்று நிலைத் தோற்றத்தில் உள்ளார். இந்த ஆலயத்தைச் சுற்றிலும், திருமலை நாயக்கரின் மாளிகையின் அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. முருகனின் அறுபடை விடுகளுள் ஒன்றான பழமுதிர் சோலையும் இங்கே உள்ளது. அழகர் கோயிலிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இது.

## திருப்பரங்குன்றம்

மதுரை ரயில் நிலையத்திலிருந்து தெற்கில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வூர். இங்குள்ள ஆலயம் சுப்ரமணிய

காண்பவரை வியப்படையச் செய்யும் திருமலை நாயக்கர் மஹால்





மதுரை மீனாட்சி – சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள திருவுருவச்சிலை



சுற்றுலாப் பயணிகளின் மனத்தைக் கவரும் வைகை அணை

ருக்காக அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் அறுபடை வீடுகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள சுப்ரமணியர் ஆலயத்தின் கருவறை, மலையைக் குடைந்து செய்யப்பட்டதாகும்.

## கொடைக்கானல்

இது, மிகவும் புகழ் பெற்ற மலை வாழ் இருப்பிடம் ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையில், ஏறக்குறைய 2,350 மீட்டர் (7,000 அடி) உயரத்தில் இது அமைந்திருக்கிறது. மதுரை ரயில் நிலையத்திலிருந்து 121 கிலோ மீட்டரிலும், கொடை ரோடு ரயில் நிலையத்திலிருந்து 80 கிலோ மீட்டரிலும் இது இருக்கிறது.

## பெரியாறு வனவிலங்குச் சரணாலயம் (தேக்கடி)

கேரள மாநிலத்தில் அமைந்து இருந்தாலும், தமிழ்நாட்டின் எல்லையோரத்தில் உள்ளது இந்தச் சரணாலயம். மதுரையிலிருந்து 146 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்தச் சரணாலயத்தில் உள்ள யானைகள், காட்டெருமைகள், காட்டு மான்கள், காட்டுப் பன்றிகள் ஆகியவை காண்போர் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

## வைகை அணை

மனத்தைக் கவரும் இந்த அணை, மதுரையிலிருந்து பெரியாறு வன விலங்குச் சரணாலயத்திற்குச் செல்லும் வழியில், 69 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும் தன்மையுள்ளது.

## பழனி

தென்னிந்தியாவின் புகழ் பெற்ற யாத்திரை ஸ்தலம். இங்குள்ள மலையில் முருகனின் ஆலயம் உள்ளது. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று இது. அடிவாரத்திலிருந்து வின் இழுவை ரயிலின் மூலம் கோயிலுக்குச் செல்லலாம்.

## சுருளி அருவி

மதுரை நகரிலிருந்து 128 கி. மீட்டர் தொலைவில் தேக்கடி செல்லும் வழியில் உள்ளது.

## போக்குவரத்து வசதி :

**விமான மார்க்கம் :** மதுரையில் விமான நிலையம் உள்ளது. சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய பெரு நகரங்களை இணைக்கும் விமான மார்க்கத்துடன் மதுரை இணைக்கப்பட்டு உள்ளது. சென்னையிலிருந்து 80 நிமிடப் பயணத்தில் மதுரையை அடைய முடியும்.

**ரயில் மார்க்கம் :** சென்னை, திருவனந்தபுரம், திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம் மற்றும் பல முக்கிய நகரங்களுடன் ரயில் மார்க்கத்தில் மதுரை இணைக்கப்பட்டுள்ளது.

**தரை மார்க்கம் :** தரை மார்க்கத்தில் உள்ள எல்லா முக்கிய நகரங்களுடனும் மதுரை இணைக்கப்பெற்றுள்ளது.

## தங்கும் வசதிகள்

இந்திய சுற்றுலாக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள பயணிகள் விடுதி மற்றும் அழகர் கோயில் ரோடில் உள்ள பாண்டியன் ஓட்டல், முதலியன, மேல் நாட்டு முறையில் அமைந்து உள்ளன.

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த பயணிகள் விடுதியும், மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான பல விடுதிகளும், இந்திய முறையில் அமைந்துள்ளன.

ராணி மங்கம்மாள் சத்திரம், மாநகராட்சிப் பயணிகள் விடுதி, மீனாட்சி நிலையம், பொதுப் பணித் துறையின் பயணிகள் விடுதி மற்றும் ரயில் நிலைய ஓய்வு விடுதி முதலியவை அதிகச்செலவில்லாத தங்கும் இடங்களாகும்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
**11,116** பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# கொடைக்கானல்



# தென்னாட்டின் இளவரசி!

மதுரை மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் கவர்ச்சி மிகு கோடைக் கால வாழ்விடமாகும். உதகமண்டலத்தை போல இங்கே கண் கவர் காட்சிகள் உண்டு. மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்பான பழனி மலையின் உச்சியில் உள்ள இது, நவீன நாகரிகத்திஞல் தாக்கப்படாது இருக்கிறது. 'கோடை' எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இது, மதுரையிலிருந்து 120 கி.மீட்டர் (75 மைல்) தொலைவில் உள்ளது.

இயற்கை, கொடைக்கானலில் செழித்துக் கொழித்து நிற்கிறது. மரங்களடர்ந்த சரிவுகள், வலிமை மிகு பாறைகள், கண்கவர் அருவி, அழகு மிகும் ஏரி இவை யாவும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் மயக்குவது உறுதி. தினந்தோறும் மிதமான பருவ நிலையும், பன்னிரண்டு மணி நேரச் சூரிய ஒளியும் படைத்துத் திகழும் கொடைக்கானல், இந்தியாவில் உடல் நலம் காக்கும் புகழ் பெற்ற ஒரு சில இடங்களில் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

பச்சை வண்ண மரங்கள் நிறைந்த சரிவுகளின் நடுவில் பிரம்மாண்டமாகவும் நட்சத்திர வடிவிலும் அமைந்திருக்கும் ஏரி, மரகதக் கல்லிஞல் செய்த அணிகலன் போல் ஒளிவீசித் திகழ்கிறது. 'கோடை'யில் ஒரு படகுச் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தில் உல்லாசப் படகுகளும், பரிசில்களும், பந்தயப் படகுகளும் உள்ளன.

பிரயண்ட் பூங்கா, தூண் பாறைகள் (மரணப் பாறைகள்), வெள்ளி பெருமாள் சிகரம், அருவி, கரடி அருவி முதலியனவும் வானியல் தொலை நோக்கி நிலையமும் மற்றும் 'கல்ஃப்' விளையாட்டும் கொடைக்கானலின் புகழ் பெற்ற அம்சங்களாகும்.

கொடைக்கானலின் அருகில் இருக்கும் செண்பகனூரில் உள்ள புனித இதயக் கல்லூரியில் இடம் பெற்றுள்ள அரும்பொருட் காட்சியகத்தை ஒவ்வொரு பயணியும் கட்டாயம் பார்க்க வேண்டும். ஏறக்குறைய மூந்நூறு வகைச் செடிகளின் மாதிரிகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியாவிலேயே மிக நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வரும் அஞ்சல் நிலையம் கொடைக்கானலில்தான் உள்ளது.

'கோடை'—மலர்கள்—உயர் விளைச்சல் உள்ள மலைவாழைப் பழம், மற்றும் ப்ளம் ஆகிய பழ வகைக்குப் பெயர் போனது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலர், கொடைக்கானலுக்கே தனிப்பெருமையை அளிப்பது. 1969-ல் அது மலர்ந்தது. இனி அடுத்த மலர்ச்சி 1981-ல் தான் நடைபெறும்.

## போக்குவரத்து வசதி

கொடைக்கானல் எல்லா முக்கிய நகரங்களுடனும் இணைக்கப் பட்டுள்ளது. கொடைக்கானல் மலைக்கு, பேருந்தின் வாயிலாகத் தான் செல்ல முடியும். மதுரை,



'பில்லர் ராக்' எனப்படும் தூண் பாறைகள்

திருச்சி, கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், வைகை அணை, பழனி ஆகிய ஊர்களிலிருந்து கொடைக்கானல் மலைக்குப் பேருந்தில் செல்லலாம்.

கொடைக் கானல் மதுரையிலிருந்து 120 கி. மீட்டர் (75 மைல்), கொடை ரோட்டிலிருந்து 80 கி. மீட்டர் (50 மைல்), திருச்சியிலிருந்து 192கி. மீட்டர் (120 மைல்), சென்னையிலிருந்து 520 கி. மீட்டர் (325 மைல்) தொலைவு உள்ளது.

ரயில் மார்க்கமாகச் செல்ல விரும்பும் பயணிகள் கொடைக்கானல் ரோடு ரயில் நிலையத்தில் இறங்கி, பேருந்தின் மூலம் செல்ல வேண்டும். இந்தரயில் நிலையத்திலிருந்து 80 கி.மீட்டர் (50 மைல்) தொலைவில் கொடைக்கானல் உள்ளது. சென்னை, திருவனந்தபுரம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய ஊர்களுடன் இந்த ரயில்போக்குவரத்துப் பாதை இணைக்கப்பட்டுள்ளது.

விமான மார்க்கமாக வர விரும்புவோர், மதுரை விமான நிலையத்தில் இறங்க வேண்டும். பின்னர் வாடகைக் கார் அல்லது பேருந்தின் மூலம், மதுரையிலிருந்து கொடைக்கானல் போகலாம். இந்த விமான மார்க்கம் சென்னை, திருவனந்தபுரம், கொச்சி, திருச்சி, கொழும்பு ஆகிய ஊர்களுடன் இணைக்கப் பெற்றுள்ளது.

### கோயில்கள்

இங்குள்ள குறிஞ்சி ஆண்டவர் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில், ஆனந்தகிரியில் உள்ள முருகன் கோயில் ஆகியவை இந்து மதத்தவரின் வணக்கத்துக்குரிய ஆலயங்கள்

முஞ்சிக்கல்லில் உள்ள புனித இதய சர்ச், கோரபூரில் உள்ள பிரான்சிஸ் சேவியர் சர்ச், லா சலேட்டில் உள்ள புனித மேரி சர்ச், கார்மேல்புரத்தில் உள்ள புனித ஜோசப் சர்ச், தென்னிந்திய சர்ச், புனித பீட்டர் சர்ச், லூத்தரன் மிஷன் சர்ச் ஆகிய கிறிஸ்தவ சமயத்தினரின் ஆலயங்களும் இங்கு உள்ளன.

'எல்லிஸ் வில்லா' என்ற பகுதியில் முகம்மதியரின் ஆலயமான மசூதி உள்ளது.

### தங்கும் வசதிகள்

மேனாட்டு முறையில் அமைந்த 'கார்ல்டன்' ஹோட்டல் விடுதி உள்ளது.

தமிழ் நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த பயணிகள் விடுதியும் மற்றும் தனியார்களின் விடுதிகளும் இங்கு உள்ளன. இவை இந்திய முறையில் அமைந்



# கோவளம் கூறும் கதை!

சென்னைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக் கூடிய இடங்களில் ஒன்றாகக் கோவளம் கடற்கரை விளங்குகிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் சாலையில் 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவளம் ஒரு சின்னஞ் சிறு, எழில் மிகு கடற்கரைக் கிராமமாகும். தென்னந்தோப்புகளும், உப்பளங்களும் நிறைந்துள்ள இவ்வூர், மீனவர்கள் வசிக்கும் ஒரு சிறிய கிராமம் என்றாலும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும் அழகிய கடற்கரையையும், மகிழ்வு உலா (Picnic) செல்வதற்கான இடத்தையும் கொண்டு உள்ளது. ஆனால் கோவளம் கடற்கரையில் பல வரலாற்று உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. இவ்வழகிய இடத்தின் மங்கிய கடந்த கால உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வர ஈண்டு முயற்சிக்கப்பட்டுள்ளது.

முற்காலத்தில் தொண்டை நாட்டிலும், பிறகு பல்லவப் பேரரசிலும் அமைந்திருந்த இந்தக் கடற்கரைக் கிராமம், 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், கிழக்குக் கடற்கரையில் டச்சுக்காரர்கள் வியாபாரம் செய்வதற்கான காலனிகளை அமைத்த போது முக்கியத்துவம் பெற்றது. ஆஸ்டெண்ட் (OSTEND) கம்பெனி என்று பரவலாக வழங்கப்பட்ட டச்சுப் பேரரசின் கிழக்கு இந்தியக்கம்பெனி—டச்சுக்காரர்களுக்கு முன்பு, இந்தியாவிற்கு வியாபாரம் செய்வதற்காக வந்த போர்ச்சுகல் நாட்டினரைப் பின்பற்றி—தென் இந்தியக் கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினம் பழவேற்காடு, கோவளம், சதுரங்கப்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தங்கள் காலனிகளை அமைத்தது. இவைகளில் மசூலிப்பட்டனமும் நாகப்பட்டினமும் சிறு துறைமுக நகரங்களாகும். பழவேற்காடு என்பது சென்னைக்கு வடக்கேயுள்ள மீன் பிடிக்கும் இடமாகும். கோவளமும், சதுரங்கப்பட்டினமும் சென்னைக்குத் தெற்கே அமைந்து உள்ளன. கோவளம், உப்பு உற்பத்தி செய்யும் ஒரு மையமாக விளங்கியது. கோவளத்தின் தெற்கே அமைந்துள்ள சதுரங்கப் பட்டனம் ஒரு காலத்தில் நேர்த்தி மிகு மஸ்லின் துணி உற்பத்திக்குப் பெயர் பெற்றதாக விளங்கியது. கோவளம் கடற்கரை அருகில் டச்சுக்காரர்கள் ஒரு வியாபார நிலையத்தையும், ஒரு சிறிய கோட்டையையும், ஒரு கிறிஸ்துவ ஆலயத்தையும் கட்டினர். டச்சுக்காரர்களின் தாய் நாடு ஹாலந்து (Holland) என்று அழைக்கப்பட்டதால், உள்ளூர் மக்கள் டச்சுக்காரர்களை 'உலந்தக்காரர்கள்' என்று அழைப்பது வழக்கமாகியது. இந்த வியாபாரிகள் உள்ளூர் மக்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்கினார்கள். அவர்கள், தங்களுடைய வியாபாரத்தில் நாணயமாக நடந்து கொண்டதாகத் தெரிகிறது.

டச்சுக்காரர்களால் கோவளத்தில் நடைபெற்ற வியாபாரம் சில காலம் செழித்தோங்கி இருந்தது. ஆனால் அப்போது இந்தியாவில் வாணிபம் செய்து கொண்டிருந்த போர்ச்சுகல், பிரான்சு, பிரிட்டன் போன்ற இதர ஐரோப்பிய வியாபார நாடுகளால், டச்சுக்காரர்கள் வியாபாரத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

டச்சுக்காரர்களின் ஆர்வம் முழுவதும் தூரக் கிழக்கில் உள்ள வாசனைத் திரவியத் தீவுகளில் ( Spice Islands ) வியாபாரம் செய்வதிலேயே இருந்தது. ஆகவே, 18-ஆம் நூற்றாண்டின் நடுவில் இந்தியாவில் வாணிபம் செய்வதில் இருந்த ஆர்வத்தை டச்சுக்காரர்கள் இழந்தனர்.

இந்தக் கால அளவில் இந்திய அரசியல் அமைப்பிலும் குறிப்பாக தென் இந்திய அரசியல் அமைப்பிலும் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. உள் நாட்டுப் பேரரசுகள் நீண்ட காலத்திற்கு

முனம்ப மறைந்து விட்டன. தக்காணச் சுல்தான்களின் படையெடுப்பால் விஜயநகரப் பேரரசும் சிதறியது. அதனுல் தென் இந்தியாவிலும் மொகலாய அரசு அமைய வழி ஏற்பட்டது. தென் இந்தியாவில் தனக்குச் சேர வேண்டிய வரியை வசூலிப்பதற்காக மொகலாயப் பேரரசர், ஆர்க்காட்டில் ஓர் ஆளுநரை நியமித்து, அவருக்கு கர்நாடக நவாப் என்று பெயரிட்டார். இக்காலத்தில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் முறையே சென்னையிலும், பாண்டிச்சேரியிலும் வலிவான வியாபாரத் தளம் அமைத்துக் கொண்டனர்.

அன்வாருதீன் (கி.பி. 1744—1749) என்ற கர்நாடக நவாப், டச்சுக்காரர்கள் காலி செய்யப்பட்ட கோவளம் கோட்டை நகரில் தனி ஆர்வம் காட்டினுர். கடற்கரையை ஒட்டி, டச்சுக்காரர்களால் கட்டப் பெற்ற, பாழடைந்தபழையகோட்டைக்கு அருகிலேயே நவாப் ஒரு புதிய கோட்டையைக் கட்டினுர். நவாபின் புதிய கோட்டைக்கு 'சதாத் பந்தர்' என்று பெயரிடப்பட்டது. இக்கோட்டையின் உதவியால், ஐரோப்பிய கடல் வாணிபக்காரர்களின் கப்பல் நடமாட்டத்தை அப்பகுதியில் கட்டுப்பாட்டிற்குள் வைத்திட நவாப்பால் முடிந்துள்ளது.

பதினெட்டாம் நூற்ருண்டின் நடுவில், சென்னையில் இருந்த ஆங்கிலேயர்களுக்கும், பாண்டிச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட விரோதம் கடுமையாக உருவெடுத்தது. இரு நவாப்புகளுக்கும் இடையே இருந்த விரோதத்தின் காரணமாக ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆகிய இரு சக்திகளும் பங்கு எடுத்துக் கொண்டன. பிரெஞ்சுக்காரர்கள் செங்கற்பட்டுக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டதுடன், கோவளம் கோட்டையையும் கைப்பற்றிட முடிவு செய்தனர். நவாப்பிடம் இருந்து, தங்கள் வலிமையின் மூலமாக அக்கோட்டையைக் கைப்பற்றிட பிரெஞ்சுக்காரர்களால் இயலவில்லை. எனவே, அவர்கள் தந்திரமாக அக்கோட்டையைக் கைப்பற்றிட முடிவு செய்தனர்.

பாண்டிச்சேரியில் இருந்து வந்த பிரெஞ்சுக் கப்பல் ஒன்று கோவளம் கடற்கரையில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அக் கப்பலில் உள்ளவர்கள் பேராபத்தில் சிக்கியுள்ளனர் என்பதை அறிவிக்கும் அபாயக் கொடிகள் பறக்க விடப்பட்டன. அதைக் கண்டு மனமிரங்கி, உதவி செய்வதற்காக பிரெஞ்சுக் கப்பலுக்குள் சென்ற இந்தியர்களிடம், ''இக் கப்பலில் இருந்தவர்களில் பலர்' 'ஸ்கர்வி' நோயினுல் இறந்து விட்டனர்; நோயினுல் பாதிக்கப்பட்டு எஞ்சியுள்ள 30 பேர்களை கோட்டைக்குள் தங்க அனுமதியுங்கள்' என்று பிரெஞ்சுக் கப்பலில் இருந்தவர்கள் வேண்டினர். நோயாளிகளாக நடித்த 30 பேர்களும் ஆயுதங்களைத் தங்கள் உடைகளில் மறைத்து வைத்திருந்தனர். 30 பேர்களும் கோவளம் கோட்டையில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அன்று இரவு பிரெஞ்சுக்காரர்கள் தாங்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் கொண்டு, கோவளம் கோட்டையின் காவற்படையினரை வென்று, கோட்டையைக் கைப்பற்றினர். இவ்வாருக 1750-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்களின் கோட்டையாக மாறியது.

உடனே சென்னையில் இருந்த ஆங்கிலேய அலுவலர்கள், கோவளத்தைப் பிரெஞ்சுக்காரர்களின் கையில் விட்டு வைத்திருப்பதில் உள்ள பெரும் தீங்கை உணர்ந்தனர். எனவே, கோவளம் கோட்டையில் இருந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டிட கிழக்கு இந்தியக் கம்பெனி முடிவு செய்தது. 1752-ஆம் ஆண்டில் லார்டு கிளைவ் (அப்போதைய கேப்டன்), 200 ஐரோப்பியர்கள் மற்றும் 500 சிப்பாய்களுடனும், 24 பௌண்டு குண்டுகளை வெடிக்கும் 4 பீரங்கிப் படையுடன் கோவளம் நோக்கிப் புறப்பட்டார். கோவளத்தில் இருந்த கோட்டைக்கு அகழி கிடையாது. ஆனுல் 4 கோபுரங்களுடன் கூடிய வலுவான மதிற் சுவரைக் கொண்டிருந்தது. கோபுரங்களில் 30 துப்பாக்கிகள் இருந்தன. கோவளம் கோட்டைக்குள் இருந்த காவற்படையில் 50 பிரெஞ்சுக்காரர்களும், 300 சிப்பாய்களுமே இருந்தனர். கோவளத்தில் இருந்த பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியில் இருந்தும், செங்கற்பட்டில் இருந்த தங்கள் படையில் இருந்தும் உதவி எதிர்பார்த்தனர். ஆனுல் அவர்கள் எங்கிருந்தும் உதவி பெற முடியவில்லை. தனித்து நின்று போரிடவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, கிளைவ் அவர்களால் நடத்தி வரப்பெற்ற படையினரிடமிருந்து இரக்கத்தை எதிர்பார்க்கும் நிலையில் பிரெஞ்சுப்படையினர் இருந்தனர். ஆகவே, பிரெஞ்சுத் தளபதி, 1752-ல் ஒரு குண்டு கூட வெடிப்பதற்கு முன்பாக கிளைவிடம் சரணுகதி அடைந்தார். அதனுல் ஆங்கிலேயர்கள் பெரும் கொ...

## ஆசியாவிலேயே முதலாவது முதலைப் பண்ணை!

ஆசியாவிலேயே முதலாவது முதலைப்பண்ணை மாமல்லபுரம்—சென்னைச் சாலையில், மாமல்லபுரத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது

கடந்த டிசம்பர் 5-ஆம் தேதியன்று ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் இதனைத் திறந்து வைத்தார்.

பல்வேறு வகையான சுமார் 160 முதலைகள் உள்ள இந்தப் பண்ணையில் இனப்பெருக்கம் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக, சென்னை முதலைப் பண்ணையின் இயக்குநரான திரு விட்டேக்கர் கூறியிருக்கிருர்.

மாமல்லபுரம் வரும் உல்லாசப் பயணிகளின் வசதிக்காக முதன்முதலாக தமிழகச் சுற்றுலாத் துறை இரண்டு வழிகாட்டிகளை நியமித்திருக்கிறது. இங்கு, சுற்றுலாத் தகவல் நிலையம் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழகம் வருகை தந்த உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் மாமல்லபுரம் சென்று சிற்பங்களைப் பார்வையிட்டதுடன் புகழ் பெற்ற ஸ்ரீ ஸ்தல சயனப் பெருமாள் கோவிலுக்கும் சென்று வழிபட்டார்.



கோட்டைக்குள் சென்று, வெகு எளிதில் அதைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயர்கள் அக்கோட்டையின் உள்ளே 50 பிரிட்டிஷ் பீரங்கிகள் இருந்திடக் கண்டனர். அப்பீரங்கிகள் பிரெஞ்சுத் தளபதி லாபௌண்டனர்ஸ் என்பவரால் சென்னையில் முன்பு கைப்பற்றப்பட்டவைகளாகும். லார்டு கிளைவ் அப்பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். அதன் பின்னர் லார்டு கிளைவ் செங்கற்பட்டுக் கோட்டையைத் தாக்கி, அதைக் கைப்பற்றியதுடன், பிரெஞ்சுக்காரர்களைப் பாண்டிச்சேரிக்குத் துரத்தினுர்.

செங்கற்பட்டுக் கோட்டையின் காவற்படையைப் பலப்படுத்திய உடன், கோவளம் கோட்டையில் இருந்த பாதுகாப்புப் படையைக் கலைத்திடவும் கோவளம் கோட்டையை அழித்திடவும் லார்டு கிளைவ் ஆணையிட்டார். அவ்வாணைக்கு ஏற்ப, கோட்டையின் சுவர்கள் இடிக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டன. கோவளம் கடற்கரையில், முன்பிருந்த கோட்டையின் இடிந்த சுவர்களை இன்றும் காணலாம். ஒரு கிறிஸ்தவ ஆலயமும், சில பழைய கட்டடங்களும் இன்றும் அங்கு நிலைத்து நிற்கின்றன. கோட்டையில் இருந்த, பீரங்கிகளாலும் இடிக்கப்பட முடியாத பழைய கட்டடம் ஒன்றில் ஓர் அனுதை இல்லம் இயங்கி வருகிறது. கடந்த நூற்ருண்டின் இறுதியில் சென்னையில் புகழ் பெற்று விளங்கிய, 'டிமாண்டி அற்புத் நாட் அண்ட் கோ' என்ற வியாபாரக் கம்பெனியின் தலைவரான டிமாண்டி என்பவரின் நினைவாக இவ்வனுதை இல்லம் துவக்கப்பட்டுப் பல்லாண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது.

முன்பு கோட்டையாக இருந்த பகுதியில் தற்பொழுது எழில்மிகு சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல் ஒன்று மலர்ந்துள்ளது. இந்த நவீன ஹோட்டல் 'சதாத் பந்தர்' என்ற வரலாற்றுப் புகழ் மிக்க பழைய கோட்டையின் எஞ்சிய சுவர்களால் சூழப்பெற்று உள்ளது. அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப் பெற்று, பழைய 'கோட்டைச் சுவர்கள் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு விருந்தாக்கப்பட்டுள்ளது.

தென்கடல் தீவுகளில் காணப்படுவது போன்ற அழகிய வளைவான கடற்கரைமகிழ்விடத்தைக் கொண்டுள்ளதாலும், இத்தகைய வளைவுக் கடற்கரை மகிழ்விடம் தென் இந்தியாவில் மிகவும் அரிதாகவே காணப்படுவதாலும், கோவளம் கடற்கரை மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நகர்ப்புற நாகரிகத்தால் மாறிவிடாத ஓர் இந்தியக் கடற்கரைக் கிராமமாகவே கோவளம் இன்றும் திகழ்கிறது. இங்குள்ள ஹோட்டலில் மேல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விரும்பும் எல்லா வகையான வசதிகளும் அளிக்கப்படுவதுடன், கோவளம் கடற்கரையில் கடந்த கால வரலாற்று நினைவுகளுடன், மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத இடங்களில் அமர்ந்து இயற்கை எழிலை ரசிக்க முடிவதாலும், சாதாரண மக்களுடன் பழகி, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், தொழிலையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ள முடிவதாலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கோவளம் கடற்கரையைக் காணக் குதூகலத்துடன் வருகின்றனர்.



## கிழக்குக் கடற்கரையின் அரசி!

உடல் நலத்திற்கு உறுதுணையாக அமையும் பருவநிலைமை தொன்றுதொட்டே தரங்கம்பாடியில் நிலவி வருவதால், தரங்கம்பாடி 'கிழக்குக் கடற்கரையின் அரசி' (The Queen of the Coromandel Coast) என்று கூறப்படுகிறது. உடலுக்கு நலமும், உள்ளத்திற்கு வலிவும் அளித்து உள்ளத்திற்கு உவகையும் அளிக்கக்கூடிய 'ஓசோன்' (Ozone) என்னும் ஒரு வகைக் காற்று, தரங்கம்பாடியில் நிறைந்துள்ளது.

தரங்கம்பாடியில் உள்ள கோட்டை 1620-ஆம் ஆண்டில் டேனிஸ்நாட்டினரால் கட்டப்பட்டதாகும். இக் கோட்டை 1845ஆம் ஆண்டில் வெள்ளையரின் ஆட்சிக்குட்பட்டது வெள்ளையர் ஆட்சியில் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாக தரங்கம்பாடியே இருந்துள்ளது. அங்குதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மாவட்ட முன்சீப் நீதிமன்றமும் இருந்துள்ளது. இவ்வலுவலகங்களெல்லாம் 19-ஆம் நூற்ருண்டின் இறுதியில்தான் தஞ்சாவூருக்கும், இதர இடங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

தரங்கம்பாடியில் உள்ள ''டான்ஸ்பெர்க்'' (Donsberg) கோட்டையிலிருந்து கடலைப் பார்த்தால், கோட்டையின் முன் உள்ள கடல் பகுதிசிவப்பு நிறமாகக்காட்சியளிக்கிறது. இது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. விடுமுறை நாட்களில் கோட்டையின் முன்னுள்ள கடற்பகுதியில் ஏராளமான பேர் குளித்து மகிழ்கின்றனர்.

# தென்னார்க்காடு மாவட்டத்தில்...



வரலாற்றுப் புகழ்மிக்க செஞ்சிக்கோட்டை

புராதனப் பெருமைமிக்க ஒரு மிகப் பெரிய கோயில், புகழ் பெற்ற ஒரு பல்கலைக் கழகம், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கோட்டை, சாதி, மத, இன வேறுபாடற்ற—''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற கொள்கையுடைய--சிறப்பான சமுதாய, அரசியல் அமைப்புக் கொண்ட—ஒரு புதிய சமுதாயம் (Utopian Community), நாட்டின் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்று ஆகியவைகள் ஒருங்கிணைந்து உள்ளமை எந்த ஒரு சுற்றுலாப் பயணியையும் நிச்சயமாகக் கவரும் என்பது உறுதி. ஆயினும், இத்தகைய சுற்றுலாக் கவர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நவீன நாகரிக வளர்ச்சியால், சீர்குலைவு அடையாத-தென்னார்க்காடு மாவட்டம் தன்னிடம் உள்ள சுற்றுலாக் கவர்ச்சிகள் பார்வையாளர்களை எந்த அளவுக்குக் கவர்ந்துள்ளன என்பதை உணராமலேயே இருக்கிறது. ஆம்! சுற்றுலாவைப் பொறுத்தவரையில் தன்னிடம் உள்ள பெருமைகளை உணர்ந்திடாத—கிராமியச் சூழ்நிலையிலே எது மிகவும் அழகுமிக்கது என்பதை அறியாத—ஒரு மாவட்டமாகவே தென்னார்க்காடு மாவட்டம் இருந்து வந்துள்ளது. ஆனால் தற்பொழுது சுற்றுலாச் செல்வதற்கு ஏற்றதொரு மாவட்டமாக மாறி வருகிறது.

**சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள்**

**சிதம்பரம்**

நடராஜப் பெருமானின் மிகப் பெரிய கோயிலைக் கொண்டுள்ளது. இக்கோயிலில் தான் இந்திய நாட்டியக் கலையின் பரமரகசியம் அனைத்தும் அடங்கியுள்ளது என்று கருதப்படுகிறது. நடராஜப் பெருமானைத் தரிசிக்க இந்தியா வெங்கிலும் இருந்து பக்தர்கள் நாள்தோறும் வருகின்றனர். நாட்டியக்கலையின் ரகசியத்தையும், தோன்றிய காலம் தெரியாத கோயிலின் தொன்மையையும், சிறப்பையும் அறிந்து கொள்ள விரும்பும் வெளிநாட்டினர் சிதம்பரம் கோயிலைப் பார்வையிட வெகு ஆர்வத்துடன் விரும்பி வருகின்றனர். ஆனி, மார்கழி ஆகிய மாதங்களில் சிதம்பரத்தில் நடைபெறும் தரிசனத் திருவிழாவிற்கு நாடெங்கிலுமிருந்து இலட்சக் கணக்கானவர்கள் வருகை தருகின்றனர்.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

முதல் நவீன இந்தியப் பல்கலைக் கழகம் என்ற பெயரைப் பெற்றுள்ள இது, தமிழகத்தின் பெருமையையும், தமிழ்மொழியின் சிறப்பையும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும், கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்களுக்கும் இப்பல்கலைக் கழகம் நல்விருந்தாக அமைந்துள்ளது.

**செஞ்சிக்கோட்டை**

செஞ்சிக்கோட்டை என்றதுமே தேசிங்கு ராஜன் நம் நினைவுக்கு வருகின்றான். சோழ, விஜயநகர, மராட்டிய அரசர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் போர்க்களமாக விளங்கிய செஞ்சிக் கோட்டை வரலாற்று நினைவுச் சின்னங்கள் அடங்கிய சுற்றுலா இடமாக விளங்குகிறது.

**ஆரோவில்**

பாண்டிச்சேரிக்கு அருகே, ''யாதும் ஊரே, யாவரும் கேளீர்! என்ற பரந்தமனப்பான்மையுடன் வாழும் மக்களைக் கொண்ட அனைத்துலக அமைதி நகரம் இது. இங்கு அறவியலும், அறிவியலும் பின்னிப் பிணைந்து வளர்ந்து வருகிறது. அரவிந்தர் ஆசிரமத்தின் முயற்சியால் உருவாகி, உலக ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் இந்நகரை அனைவரும் காண வேண்டியது அவசியமாகும்.

**நெய்வேலி**

நிலக்கரிச் சுரங்கத்தையும், இந்தியாவின் மிகப் பெரிய அனல் மின் நிலையத்தையும், யூரியா இரசாயன உற்பத்தி நிலையத்தையும் பெற்றுள்ள இந்நகரம் கல்விச் சுற்றுலா செல்வோர் கண்டிப்பாகக் காண வேண்டிய இடமாகும்.

**திருவக்கரை**

இங்கு இயற்கையிலேயே அமைந்த கல்மரப் பூங்கா உள்ளது. இங்கு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரங்கள் காலவெள்ளத்தால் கல் மரங்களாக மாறியுள்ள காட்சி, சுற்றுலாப் பயணிகளைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

**பிச்சாவரம்**

கடல்சார்ந்த காடுகள் நிறைந்த பகுதியாக விளங்கும் பிச்சாவரம் காடு, சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் கவர்வதாக அமைந்துள்ளது. இக்காடு விரைவில் இந்தியாவின் 'டிஸ்னி லாண்டு' என்று சொல்லத்தக்க அளவில் கவர்ச்சிமிகு நல்லதோர் சுற்றுலா இடமாக வளர்ச்சியடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

# மற்ற மாவட்டங்களில்...

## புதுக்கோட்டை மாவட்டம்

தமிழ்நாட்டின் புதிய மாவட்டமாக விளங்கும் புதுக்கோட்டை மாவட்டமும் பல சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. புதுக்கோட்டையில் உள்ள அரண்மனை, அரும்பொருட்காட்சியகம் ஆகியவை சுற்றுலாப்பயணிகளைக் கவரத்தக்கவைகளாக உள்ளன.

திருக்கோகர்ணம், சித்தன்ன வாசல், குடுமியான்மலை ஆகிய இடங்களில் உள்ள மலைக்குகைகளில் காணப்படும் சிற்பங்களும், ஓவியங்களும் புகழ் வாய்ந்தவைகளாகும். திருமயம் மலைக்கோட்டையும் சுற்றுலாப் பயணிகள் காணத்தக்க இடமாகும். குடுமியான் மலையில் உள்ள வேளாண்மைப் பண்ணை, உழவர் சுற்றுலாவுக்கு ஏற்றதாகும்.

## திருநெல்வேலி மாவட்டம்

இயற்கை எழில் நிறைந்த மாவட்டமாகத் திருநெல்வேலி திகழ்கிறது. திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் ஆலயம் சிற்பக்கலைக்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர், முக்கிய புனிதத் தலமாகத் திகழ்கிறது. பொன் மணற் கடற்கரையில் அமைந்துள்ள முருகன் கோயிலின் சுவர்களில் கடலலைகள் வீசுவதாலேயே திருச்செந்தூருக்குச் 'திருச்சீரலைவாய்' என்ற பெயரும் உள்ளது. அடுத்தடுத்து வந்து வீசும் அலைகள் முருகனுக்கு இசைபாடுவதுபோல் இருக்கிறது. இவ்வரிய காட்சியைக் கண்டு களிக்கவும், கடலில் குளித்து மகிழவும், முருகனைத் தரிசிக்கவும், மக்கள் அலையெனத் திரண்டு, திருச்செந்தூருக்கு வருகின்றனர்.

ஆழ்வார் திருநகரி, நாங்குநேரி, ஆதிச்சநல்லூர், கொற்கை, கிருஷ்ணாபுரம், கழுகுமலை ஆகிய இடங்களில் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன.

மூன்றடைப்பு என்ற இடத்தில் உள்ள பறவைகள் சரணாலயமும், முண்டந் துறையில் உள்ள புலிகள் சரணாலயமும், பாபநாசம் அணையும் திருநெல்வேலி மாவட்டத்தின் இயற்கை அழகை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இவை அனைத்தையும் விட இயற்கையின் அற்புதமாக விளங்குவது குற்றாலம் அருவியே! குற்றாலம் அருவியிலே குளிப்பது போல், வேறு ஒரு சுகம் காண முடியாது!



## கோவை மாவட்டம்

கோவை நகருக்கு அருகேயுள்ள பேரூர், சிற்பங்கள் நிறைந்த புனிதத் தலமாக விளங்குகிறது. பவானி, அவினாசி ஆகியவையும் புனிதத் தலங்களாகும்.

கோவைக்கு அருகேயுள்ள மருதமலை முருகன் கோயில் அண்மைக் காலத்தில் கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலமாக உருவாகியுள்ளது.

பவானி சாகர் அணை, ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சிறுவாணி அணை ஆகியவைகள் மகிழ்வு உலாச் செல்வதற்கு ஏற்ற இடங்களாக உள்ளன.

## வடஆர்க்காடு மாவட்டம்

வடஆர்க்காடு மாவட்டம் புகழ்பெற்ற புனிதத் தலத்தையும், புகழ் பெற்ற கோட்டைகளையும் கொண்டுள்ளது போலவே, கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலங்களையும் கொண்டுள்ளது.

தென் இந்தியாவின் மிகப் பெரிய கோயில்களில் ஒன்றான அருணாசலலேஸ்வரர் கோயில் திருவண்ணாமலையில் உள்ளது. 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோயிலின் கோபுரம் 200 அடி உயரமும், 11 மாடிகளும் கொண்டது. இதன் அருகில் புனிதமலை ஒன்று உள்ளது. அம்மலையின் மீதுதான் கார்த்திகைத் தீபம் ஏற்றப்படுகிறது. இம்மலையடிவாரத்தில் ரமண ரிஷியின் ஆஸ்ரமம் உள்ளது. இது உலகப் புகழ்பெற்றதாகும்.

வேலூர்க் கோட்டை, சாத்தனூர் அணை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, அமிர்திக் காடு ஆகியவை சுற்றுலாச் செல்வதற்கு ஏற்ற இடங்களாகும்.

## சேலம் மாவட்டம்

கனிமங்கள் நிறைந்த சேலம் மாவட்டம். சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கவல்லதாகவும் உள்ளது. இம்மாவட்டத்தின் முக்கிய கவர்ச்சிமிகு சுற்றுலா இடமாக ஏர்க்காடு விளங்குகிறது.

இயற்கை எழில்களையும் இனிமை பயக்கும் காலநிலைமையையும் கொண்டதாக உள்ள கொல்லிமலை நல்லதோர் சுற்றுலா இடமாக உருவாகி வருகிறது.

மேட்டூர் அணை மகிழ்வு உலாவுக்கு ஏற்ற இடமாகும்.

நாமக்கல், திருச்செங்கோடு, தாரமங்மலம், சேலம் மாரியம்மன் கோயில் ஆகியவை புனிதத் தலங்களாகும்.

'சங்கரிதுர்க்' என்ற இடத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோரின் கோட்டையைக் கண்டு மகிழலாம்.

# தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள்




# வனவிலங்கு ரசிகர்களுக்கு....



காட்டு வளமே நாட்டு வளம் என்பதனை நாமறிவோம். இயற்கை எழில் கொஞ்சும் காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது தமிழக அரசு.

தொழில்களுக்கான மூலப் பொருள்களை வழங்கும் காடுகளையும், அங்கே வசித்து வரும் விலங்குகளையும் பாதுகாத்து வருவது அரசின் கடமை மட்டுமன்று, நம்முடைய கடமையும் ஆகும். தமிழ்நாட்டில் காடுகள் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,400 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,228 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட காடுகளும் 3,812 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்படாக் காடுகளும் ஆகும்.

தமிழ்நாட்டில் பல்வேறு வன விலங்குகளும், பன்னிறப் பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. செய்தித் தாள்களிலும், இதழ்களிலும் பார்த்து மகிழும் வனவிலங்குகளையும், அழகிய பறவைகளையும் நேரில் காண நமக்கெல்லாம் ஆர்வம் எழுவது இயல்புதானே?

அந்த ஆர்வத்தை—ஆசையை நிறைவேற்றி வைக்கிறது தமிழ்நாடு வனத் துறை. வனவிலங்கு

மிகப் பெரிய வனவிலங்கு உய்விடங்கள் உள்ளன. அவை :

1. முதுமலை வனவிலங்கு உய்விடம்.
2. வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம்.
3. கிண்டி மான் பூங்கா.
4. முண்டந்துறை புலி உய்விடம்.
5. கோடிக்கரை வனவிலங்கு உய்விடம்.
6. ஆனைமலை வனவிலங்கு உய்விடம்.
7. களக்காடு சிங்க வால் குரங்கு உய்விடம்.

**1. முதுமலை வனவிலங்கு உய்விடம்**

மிகப் பெரிய வனவிலங்கு உய்விடங்களில், நீலகிரியிலுள்ள முது

முதுமலைக் காட்டிலே, காட்டெருமைகள் கூட்டம்



மலை வனவிலங்கு உய்விடமும் ஒன்று. இதற்கு அடுத்தடுத்து கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பந்திப்பூர் வனவிலங்கு உய்விடமும், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயநாடு வனவிலங்கு உய்விடமும் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும். ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில்உள்ளது முதுமலை. ஆண்டுதோறும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த உய்விடத்தைக் கண்டு களிக்கத் தவறுவதில்லை.

320.68 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த உய்விடத்தில் அரிய விலங்குகள் காணக் கிடக்கின்றன. முதுமலைக் காட்டுக்குள் நுழைகிறோம்! அதோ! நானூற்றுக்கும் மேற்பட்ட மான்கள் ஓடி வருகின்றனவே! அந்தப் பக்கம் இருபது அல்லது முப்பது காட்டெருமைகள் திரிகின்றனவே! அங்கே வருவதென்ன, ஓ, ...யானைக் கூட்டமா?

இந்தக் கண்கொள்ளாக் காட்சியை நாம் ஒரே சமயத்தில் பார்க்க முடியும் இங்கே!

ஏப்ரல் மாதத்தின் இரவுகளில் இலட்சக் கணக்கான மின்மினிப் பூச்சிகள் தாரகைகள் போல் மின்னுவதைக் காணக் கண் கோடி வேண்டும்! அது மட்டுமா? வகை வகையான வண்ணத்துப் பூச்சிகள் இங்கும் அங்கும் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து திரிவதையும் நாம் காணத் தவறக்கூடாது. முதுமலை வனவிலங்கு உய்விடத்திலுள்ள காட்டெருமைகளின் (Indian Bison) பழக்க வழக்கங்கள் பற்றி வெளிநாட்டு உயிரியல் நிபுணர்கள் பலர் ஆராய்ந்து வருவது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

மிகத் தொன்மையான வன விலங்குகளில் ஒன்றான 'எறும்பு தின்னி'யையும் இங்கே காணலாம். இது இரவில் மட்டுமே



முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைமேல் அமர்ந்து சுற்றிப்பார்க்கலாம்.

நடமாடும் வழக்கமுடையதாம்! இங்கே காட்டு நாய்களைக் காண்பது அரிதல்ல. புலி, சிறுத்தைப் புலி, குள்ள நரி, கழுதைப் புலி (Hyaena), கீரிப்பிள்ளை, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, காட்டுப் பன்றி, கிளை மான், புள்ளி மான், உடும்புகள், மலைப் பாம்புகள் ஆகியவை முதுமலையில் காணப்படுகின்றன.

### போக்குவரத்து வசதிகள்

இந்த உய்விடத்திற்கு அண்மையிலுள்ள விமான நிலையம், கோயம்புத்தூர். இது முதுமலையிலிருந்து 160 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அண்மையிலுள்ள இரயில்வே நிலையங்கள் : 1. உதக மண்டலம்—64 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. 2. மைசூர்—95 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. உதகமண்டலத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் பஸ் வசதிகள் உள்ளன.

இவை தவிர முதுமலைக்குச் செல்ல வனத் துறையின் சார்பில் 20 பேர் உட்காரக் கூடிய 'வேன்' 20 பேர், 10 பேர் உட்காரக் கூடிய 'மினி' பஸ்கள், மற்றும் ஜீப்கள் உள்ளன.

இடவசதிகள் : (1) அபயாரண்யம் ஓய்வு இல்லம்—இரண்டு அறைகள் கொண்டது. (2) சில்வன் லாட்ஜ்—4 அறைகள் கொண்டது. (3) தெப்பக்காட்டிலுள்ள'லாக்அவுஸ்'—3 அறைகள் கொண்டது. (4) மசின குடியிலுள்ள'லாக் அவுஸ்'—3 அறைகள் கொண்டது. (5) கூடார வசதிகள்.

## 2. வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம்

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நீர்ப் பறவைகள் உய்விடங்களில் இதுவும் ஒன்று. சென்னை நகரிலிருந்து 83 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது வேடந்தாங்கல் என்னும் கிராமம். இது கருங்குழி இரயில் நிலையத்திற்கு 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது.

வேடந்தாங்கல் நீர்ப் பறவைகள் உய்விடம், அழகிய நீர்ப் பரப்புள்ள ஏரியாகும். இதன் பரப்பளவு 29.94 ஹெக்டேர் ஆகும். ஏரியின் நடுவே 500க்கும் மேற்பட்ட கடபப மரங்கள் அடங்கிய தோப்பு உள்ளது.

கி.பி. 1798-ஆம் ஆண்டில் இங்கே ஏரி நடுவில் ஒரு கடப்ப மரத் தோப்பு இருந்தது என்றும், அதில் நீர்ப் பறவைகள் வந்து தங்கிக் கூடு கட்டின என்றும், இப்பறவைகளை ஊர் மக்கள் பாதுகாத்து வந்தனர் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இங்கே வந்து கூடு கட்டி வாழும் பறவைகளின் பெயர்களைக் கேட்டால் விந்தையாக இருக்கும். நத்தைக் குத்தி நாரை, கங்கணம், நீர்க் காக்கை, வெண் கொக்கு, மத்தாளிக் கொக்கு, பாம்புத் தாரா, மஞ்சள் நிற அலகுள்ள உண்ணிக் கொக்கு, இளம் வக்கா, வயது வந்த வக்கா, துடுப்பு மூக்கு நாரை, நாமக் கோழி, முக்குளிப்பான், சிறவி—இப்படிப் பலப் பல பறவை இனங்கள் பலப் பகுதிகளிலே இருந்து இங்கே வந்து ஒன்று கூடுகின்றன. இப்படி ஆண்டுதோறும் ஏறத்தாழ 30 ஆயிரம் பறவைகள் இங்கே வந்து தங்கி, குஞ்சு பொரிக்கின்றன!

இந்தியா தவிர வெளிநாடுகளிலிருந்தும் பல்வேறு பறவைகள் வேடந் தாங்கலுக்கு வருவதாகக் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் அக்டோபர்—நவம்பர் முதல் மார்ச் வரை இங்குப் பறவை இனங்கள் பெருங்கூட்டமாய் வந்து கூடுவதும், அவை எழுப்பும் 'கல கல' ஒலியும் மனத்துக்குத் தெம்பூட்டுவன.

### போக்குவரத்து வசதிகள்

அண்மையிலுள்ள விமான நிலையம் : சென்னை மீனம்பாக்கம் — 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அண்மையிலுள்ள இரயில் நிலையம் : கருங்குழி—8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இங்கிருந்து பேருந்து வசதி இல்லை. சென்னையிலிருந்தும், செங்கற்பட்டிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

இட வசதி : வனத் துறையினரின் ஓய்வில்லம்—நான்கு அறைகள் கொண்டது.

## 3. கிண்டி மான்கள் பூங்கா

ஒரு பெரு நகரின் எல்லைக்குள் அமைந்துள்ள இத்தகைய பூங்கா, இந்தியாவிலேயே இது ஒன்று தான்!

இயற்கை அழகு மண்டிக் கிடக்கும் இந்தப் பூங்கா 231 ஹெக்டேர் பரப்பளவுள்ளது.

1959-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நாளில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது, மேலை நாட்டு வனத் துறை வல்லுநர்களால் பாராட்டப் பெற்ற இந்த 'இயற்கைக் காட்டில்' விலங்குக் காட்சிச்சாலையில் இல்லாத அரிய பிராணிகளும் உள்ளன. இந்தியாவைத் தவிர உலகில் எங்குமே இராத கறுப்பு மான்கள் எனப்படும் இந்திய மான் வகை இந்தப் பூங்காவில் உள்ளது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இமாலயக் காட்டுக் கோழிகள், சிறுத்தை, பறக்கும் அணில், சிங்க வால் குரங்கு, மலைப்பாம்பு ஆகியவை நம்மை மலைக்க வைக்கும்.

அழகிய பறவைகள், மயில், மைனா, வகை வகையான கறுப்பு, வெள்ளை புள்ளி மான்கள், காட்டு ஆடு முதலியனவும் பாம்புப் பண்ணை ஒன்றும் இங்கே உள்ளன.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கண்டு களித்திடும் வண்ணம் அமைந்துள்ள இந்த மான்கள் பூங்காவுக்கு அருகில் சிறுவர் பூங்கா, ராஜ பவனம், காந்திமண்டபம், ராஜாஜி நினைவு மண்டபம், காமராஜ் நினைவு மண்டபம் ஆகியவை உள்ளன.

### போக்குவரத்து வசதிகள்

அண்மையிலுள்ள விமான நிலையம் : சென்னை மீனம்பாக்கம். —12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அண்மையிலுள்ள இரயில் நிலையம் : கிண்டி. மற்றும் வட பகுதியிலிருந்து வருபவர்கள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலும், தென் பகுதியிலிருந்து வருபவர்கள் எழும்பூர் இரயில் நிலையத்திலும் இறங்க வேண்டும்.

சென்னை நகர எல்லைக்குட்பட்ட பேருந்துகள் பல, இப் பூங்காவிற்குச் செல்கின்றன.

## 4. கோடிக் கரை வனவிலங்கு உய்விடம்

கோடிக்கரை அல்லது கோடைக் காடு என்னும் இந்த உய்விடம், தஞ்சை மாவட்டத்திலுள்ளது. 17.29 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது. இங்கே பயணம் செய்வது இனிமையானது, ரம்மியமானது.

கறுப்பு மான்கள், புள்ளி மான்கள், காட்டுப் பன்றிகள் முதலியன இங்கே காணக்கிடக்கின்றன. இவையன்றிக் கூட்டங் கூட்டமாய்த் திரியும் நாரை போன்ற பெரிய சிவப்பு நீர்ப் பறவைகளை இங்கே முக்கியமாய்க் காணலாம். ஆண்டுதோறும் குளிர்காலத்தில் இந்தப் பறவைகள் ஆயிரக் கணக்காக இங்கே வந்து கூடும். இந்தக் காலங்களில் இந்த அழகிய பறவைக் கூட்டங்களை ஒரே சமயத்தில் நாம் கண்டு களிக்கலாம்.

வசந்த காலத்தில் மரஞ்செடி கொடிகள் கண்ணுக்குக் கவர்ச்சியாய்க் காட்சியளிக்கும்; மைனா போன்ற பறவைகளை இக்காலம் கவர்ந்திருக்கும்.

### போக்குவரத்து வசதிகள்

அண்மையில் திருச்சிராப்பள்ளி விமான நிலையம் உள்ளது.

தென்னிந்திய இரயில்வேயின் மாயவரம்—திருத்துறைப் பூண்டி பிரிவில் கோடிக்கரையில் இரயில் நிலையம் ஒன்றும் உள்ளது.

தஞ்சையிலிருந்தும், மாயவரத்திலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு.

இடவசதி : இரண்டு அறைகள் கொண்ட வனத் துறையின் ஓய்வு இல்லம் இங்கே உள்ளது.



வேடந்தாங்கலில் காணப்படும் நாராயணப் பட்சி

### 5. முண்டந்துறை புலிகள் உய்விடம்

முண்டந்துறை புலிகள் உய்விடம்தான், இந்தியாவிலேயே முதன் முதலாகப் புலிகளுக்கென உருவாக்கப் பெற்ற உய்விடமாகும்.

இந்த உய்விடம் திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறையில் அதாவது அம்பாசமுத்திரம் இரயில் நிலையத்திலிருந்து 10. கி.மீ. தூரத்தில் உள்ளது. இதன் பரப்பளவு 520 சதுர கிலோ மீட்டர்கள்.

இங்கே புலி தவிர சிறுத்தை ஓநாய், சாம்பூர் காட்டுப் பன்றி, கருங்குரங்கு ஆகிய விலங்குகளும் உள்ளன. திருநெல்வேலி வடக்கு, தெற்குக் கோட்டங்களைச் சார்ந்த சிங்கம்பட்டி மற்றும் பாபநாசம் போன்ற இடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள காடுகளில் சுமார் 200 சதுர மைல்கள் வரை இந்த உய்விடம் பரவியுள்ளது.

ஜனவரியிலிருந்து செப்டம்பர் வரை இங்கே கண்டு களிப்பதற்கான ஏற்ற பருவ காலமாகும்.

இந்த உய்விடத்தில், புலிகளுக்குக் கடுமையான பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

#### போக்குவரத்து வசதிகள்

**அண்மையிலுள்ள விமான நிலையங்கள் :** கேரளாவிலுள்ள திருவனந்தபுரம்—160 கிலோ மீட்டர், தமிழ்நாட்டிலுள்ள மதுரை—192 கிலோ மீட்டர். இங்கிருந்து 5 மணி நேரத்தில் இந்த உய்விடத்திற்குச் செல்லலாம்.

**அண்மையிலுள்ள இரயில் நிலையம் :** அம்பாசமுத்திரம்—10 கிலோ மீட்டர்.

அம்பாசமுத்திரத்திலிருந்து பேருந்து வசதிகளும் உண்டு.

இவையன்றி, இந்த உய்விடத்தை ஒரு முறை சுற்றிக் காண்பிக்க வனத் துறை தக்க ஏற்பாடு செய்துள்ளது.

**இட வசதி :** இரண்டு அறைகள் கொண்ட வனத் துறையின் ஓய்வில்லம் ஒன்றுள்ளது.

### 6. ஆனைமலை வனவிலங்கு உய்விடம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள இந்த உய்விடம் 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது. இந்த உய்விடத்தில் யானைகள், காட்டெருமைகள், புலிகள், சிறுத்தைகள், காட்டு நாய்கள், கறுப்பு வரிகளுள்ள முயல்கள், பறக்கும் அணில், இராட்சத அணில்கள், நீண்ட வால் குரங்குகள், நீண்ட கொம்புகளையுடைய மலை ஆடுகள் முதலான விலங்குகளை நாம் காணலாம்.

#### போக்குவரத்து வசதிகள்

**அண்மையிலுள்ள விமான நிலையம் :** கோயம்புத்தூர்—80 கிலோ மீட்டர்.

**அண்மையிலுள்ள இரயில் நிலையம் :** பொள்ளாச்சி—35 கிலோ மீட்டர். கோயம்புத்தூரிலிருந்தும், பொள்ளாச்சியிலிருந்தும் பரம்பிக் குளம் அணை வரை பேருந்துகள் செல்கின்றன.

இங்கே பயணிகள் தங்குவதற்கான இட வசதிகளும் உள்ளன. டாப் ஸ்லிப்பிலுள்ள வனத்துறை ஓய்வு இல்லம்—உணவு வசதிகள் கொண்ட 6 அறைகள் கொண்டது. வரகலியாறு ஓய்வு இல்லம்; காட்டின் உட்புறம் உள்ளது. இங்கே உணவு வசதி இல்லை. மவுண்ட் ஸ்டூவர்ட் ஓய்வு இல்லம்; உணவு வசதி உள்ள 2 அறைகள் கொண்டது.

### 7. களக்காடு வனவிலங்கு உய்விடம்

சிம்ம வால்களைக் கொண்ட கருங் குரங்குகளைப் பாதுகாப்பதே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு வனவிலங்குச் சரணாலயத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு உச்சிச் சரிவில் களக்காடு வனம் உள்ளது. இந்த இடத்தில் தான் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் சந்திக்கின்றன. இப்பகுதியில் கரடி, சிறுத்தை, கட மான்கள், மலைப் பாம்பு முதலியவை வசிக்கின்றன.

தென்னிந்தியாவில் வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரம் நிறைந்த பசுமையான காடுகளில் பண்டைக் காலம் இக்குரங்கு



சாதாரணமாகக் காணப்பட்டது. ஆனால், அண்மைக் காலத்தில் இது மிகவும் அரிதாகிப் போய் விட்டது. காரணம் இதன் இறைச்சி தாதுபுஷ்டி மருந்து தயாரிப்பதற்குச் சிறந்த ஒன்று என்பதற்காக இது வேட்டையாடப்பட்டது. இதன் கருமை நிற பளபளப்பான உரோமமும் இது கொல்லப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

இந்த அரிய வன விலங்கினத்தைப் பாதுகாக்கும் வகையில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளில் ஒரு உய்விடத்தை அமைப்பதில் மத்திய அரசும், தமிழ் நாடு அரசும் தீவிர அக்கறை எடுத்துக் கொண்டன.

சிம்மவால் கருங் குரங்கு இருண்ட நிறமும், வெட்கப்படும் தன்மையும் கொண்டது! வெளியே அதிகமாக வராது.

இக் குரங்குகள் வழக்கமாக 12 முதல் 20 பிராணிகள் கொண்ட கூட்டமாகத்தான் எங்கும் செல்கின்றன.

களக்காடு, பாபநாசம், வீரப் புலி 'ரிசர்வ்' காட்டுப் பகுதிகளில் இத்தகைய குரங்குகளின் எண்ணிக்கை தற்போது சுமார் 400 மட்டுமே உள்ளன.

இந்த வனத்தில் சிம்ம வால் கருங் குரங்கைத் தவிர புலி, வேங்கை, கருஞ் சிறுத்தை, குள்ள நரி, காட்டு நாய்கள், யானைகள், கட மான்கள், 'சீத்தல்' மான், எலி மான், குரைக்கும் மான், நீல மான் வகைகள் வசிக்கின்றன. இவை தவிர மலைப் பாம்பு, ராஜ நாகங்கள், உடும்பு வகைகளும் உள்ளன. இக்காட்டில் பல வகையான பறவைகளுக்கும் குறைவில்லை.

இந்த வகை விலங்கினத்தின் வாழ்க்கை வரலாறு, உடற்கூறு, உணவுப் பழக்கங்கள் மற்றும் இனப் பெருக்கத் தன்மைகள் குறித்து ஆய்வு நடத்தப்படவும் இருக்கின்றன.

எனவே, வன விலங்குகளை பறவைகளைக் கண்மூடித் தனமாவும், சட்டத்திற்குப் புறம்பாவும் சுடுதல், பொறி வைத்து பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்தல் முதலிய தீயச் செயல்க லிருந்து பாதுகாப்பதிலும், வளர் பதிலும் 'வனவிலங்கு உய்விட கள்' முக்கியமான பங்கை வகிகின்றன. அதோடு சுற்றுலா பயணிகளையும் இவை வெகுவாக கவர்கின்றன.



# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!

| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |

வேலை நேரம் : உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 86

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
29 சன 1977
EGMORE, MADRAS-8.



# தமிழரசு

மலர் : 7 • இதழ் : 14
16—1—1977

## இந்த இதழில்

| | பக்க எண் |
|---|---|
| பொங்கல் பரிசுகள் ! .. .. | 2 |
| தமிழ்நாட்டில் வீட்டுவசதித் திட்டம் | 4 |
| தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் திருவிழா !.. .. | 6 |
| சென்னை அழைக்கிறது ! .. .. | 9 |
| செயிண்ட் ஜார்ஜ் கோட்டை .. | 13 |
| நவரை நெல் சாகுபடியில் நன் மகசூல் பெற்றிட .. .. | 17 |
| படமும் செய்தியும் .. .. | 24 |
| கால்நடைகளின் நோய்களும் தடுப்பு முறைகளும் .. .. | 29 |
| தொண்டை மண்டலத்தில் தொல்பொருள் கண்டுபிடிப்புகள்! | 33 |
| கரும்பில் நோயில்லாக் கரணைகள் பெறும் வழி .. .. | 37 |
| குழந்தைச் செல்வம் .. .. | 38 |
| சென்னையில் புதிய கலங்கரை விளக்கம் | 41 |
| மீன் வளம் பெருக்குவோம் .. | 45 |
| பால்ய விவாகமும் சட்டமும் .. | 47 |

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.



# பொங்கல் பரிசுகள்!



## உழவர் பெருமக்களுக்கு...

பார் செழிக்கப் பாடுபடும் உழவர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை பின்கண்ட புதிய ரகங்களைப் பொங்கல் பரிசுகளாக வழங்கியுள்ளது.

'ஐ.ஈ.டீ. 1444' நெல் ரகம்

'ஐ.ஈ.டீ. 2222' நெல் ரகம்

'பி.ஏல்.எஸ். 364' உளுந்து ரகம்

'ஏ.எச். 6647' நிலக்கடலை ரகம்

'எஸ்.1. 3240' எள் ரகம்

'115.1' சூரியகாந்தி ரகம்

'எஸ்.எல்.பி. 2.1016—4' உருளைக்கிழங்கு ரகம்

'எஸ்.எல்.பி. 2.885/27' உருளைக் கிழங்கு ரகம்

இந்த ரகங்களுக்கு விரைவில் புதிய பெயர் இட்டு உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும்.

## ஏழை எளியவர்களுக்கு...

விவசாயிகள், மற்றும் இதரர்களிடம் இருந்து கடன் பாக்கிகளை வசூலிப்பதற்காக வழக்குகளைப் போடுவது, கடன்களைத் திரும்பச் செலுத்துமாறு அளிக்கப்பட்ட தீர்ப்புகளைச் செயல்படுத்தக் கோரி மனுக்களை தாக்கல் செய்வது முதலியவை 1976-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலத்திற்குத் தடை செய்யப்பட்டன.

அடகு பிடிப்போரிடம் அடகு வைக்கப் பட்டுள்ள பொருள்களை, அடகு பிடிப்போர் விற்பனை செய்வதும் 1977-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் தேதி வரையில் தடை செய்யப் பட்டது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வறட்சி நிலைமை தொடர்ந்து நீடிப்பதால் கடன்களை கடன் வழங்கியோர் வசூல் செய்வதை மேலும் ஆறு மாதங்களுக்கு (15-7-1977 வரை) நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடகு பிடிப்போரிடம் அடகு வைக்கப் பட்டுள்ள பொருள்களை அடகு பிடிப்போர் விற்பனை செய்வதற்கான தடையும் மேற்கொண்டு ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டு உள்ளது.

1977-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டங்கள் திருத்தச் சட்டத்தில் இவற்றுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அங்கீகாரம் அளித்திருக்கிறார்.

## குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு..

1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு குத்தகைச் சாகுபடியாளர் (வெளியேற்றத் தடுப்புப் பாதுகாப்பு) சட்டத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீடிப்பது என முடிவு செய்து அதற்கான ஆணையைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது. இதன்படி, 1978-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் தேதி வரை சாகுபடியாளர்களை குத்தகை பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது.

தனிப்பட்ட நிலச்சுவான்தாருக்கோ பொது அறக்கட்டளைக்கோ (டிரஸ்ட்) குத்தகைப் பணம் பாக்கி வைத்திருக்கிறார் என்பதற்காக, ஒரு குத்தகைச் சாகுபடியாளரைக் குத்தகை நிலத்திலிருந்து அல்லது குத்தகை நிலத்தின் ஒரு பகுதியிலிருந்து வெளியேற்றுவதைத் தடுத்து, அவருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது 1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு குத்தகைச் சாகுபடியாளர் (வெளியேற்றத் தடுப்புப் பாதுகாப்புச்) சட்டம். இச்சட்டம் மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீடிக்கப்படுவதால், 1976-ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதியுடன் முடியும் 1385-ஆம் பசலியிலும் அதற்கு முந்திய பசலியிலும் குத்தகைப் பாக்கி இருந்தால், அதைக் காரணம் காட்டி, குத்தகைச் சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது.

## அரசு ஊழியர்களுக்கு...

மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு இது வரை 13 முறை அகவிலைப் படியை உயர்த்தியுள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசோ

கட்டும் திட்டங்களுக்கு வங்கிகள் அளிக்கும் கடனுதவிகளுக்கான இக் குறைந்த பட்சத் திட்டத்துக் கான மதிப்பீட்டுச் செலவு ரூ 5 அன்று 59,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கலாகா...

தனது ஊழியர்களுக்கு அகவிலைப் படியை 14 முறை உயர்த்திக் கொடுத்துள்ளது. இந்த அகவிலைப் படி உயர்வுகள் அரசு ஊழியர்களுக் கும் மானிய உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் களல்லாத பிற பணியாளர்களுக்கும் பொருந் துவதாகும். ஒவ்வொரு முறையும் கொடுக்கும் அகவிலைப் படி உயர்வின் சதவீதம் மத்திய அரசு கொடுக்கும் அகவிலைப் படி உயர்வின் அதே சதவீதமாக இருந்தபோதிலும், இம் மாநில அரசின் நிதி இடர்ப்பாட்டினைக் கருத் திற்கொண்டு, அகவிலைப் படி உயர்வை இம் மாநில அரசு கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

### அகவிலைப் படி உயர்வு...

... இப்போது அரசுப் பணி யாளர்கள், முதலியவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் அகவிலைப் படி வீதங்களை இம்மாநில அரசு இப்போது மறு பரிசீலனை செய்துள்ளது. பல்வேறு பணியாளர் சங்கங்கள் கொடுத்த முறையீடுகளை ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர், அகவிலைப் படி உயர்வினை உயர்த்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாறு முடிவு செய்யும்போது வளர்ச்சிச் செலவுகளுக்கு இயன்ற வரை நிதி ஆதாரங்களை ஒதுக்கி வைக்க வேண்டியதன் அவசியத்தைக் கருதிப் பார்த்து, அந்த அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

திங்களுக்கு 199 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்களின் அகவிலைப் படி 10 ரூபாய் உயர்த்தப்படும். திங்களுக்கு 200 ரூபாய் முதல் 299 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வு 15 ரூபாயாக இருக்கும். 300 ரூபாய் முதல் 499 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு இந்த உயர்வு 20 ரூபாயாக இருக்கும். 500 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு இந்த உயர்வு 25 ரூபாயாக இருக்கும்.

இவ்வாறு உயர்த்தப்படும் அகவிலைப்படி 1-1-1977 முதல் அமலுக்கு வரும்.

### ஏழு இலட்சம் பேர்களுக்குப் பயன்!

இந்த அகவிலைப் படி உயர்வுகள்—அரசு ஊழியர்களுக்கும், மானிய உதவி பெறும் கல்விக் கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் பள்ளிக் கூடங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் பொருந்துவனவாகும். இதனால், மொத்தம் 7 இலட்சம் பேர் பயனடைவர்.

### ஓய்வூதியத்திலும் உயர்வு!

குடும்ப ஓய்வூதியம் உட்பட ஓய்வூதியங்கள் அனைத்தையும் 10 சதவீதம் உயர்த்துவது என அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், இந்த உயர்வு, திங்களுக்கு 15 ரூபாய் என்ற மேல் வரம்புக்கு உட்பட்டதாகும். இதனால், ஓய்வூதியம் பெறும் 63,000 பேர் பயனடைவர். இந்த ஓய்வூதிய உயர்வு அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், மானிய உதவி பெறும் கல்விக் கூடங்களில் பணியாற்றி ஓய்வூதியம் ... உள்ளாட்சி மன்றங்களில்

### கிராம அலுவலர்களின் மதிப்பூதியத்திலும் உயர்வு!

கிராம அதிகாரிகள் அனைவரின் மதிப்பு ஊதியத்தை 5 ரூபாய் உயர்த்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவின் காரணமாக கிராம அதிகாரிகள் 60,000 பேர் பயன் அடைவர்.

### நிரந்தரமற்ற பணியாளர்களுக்கும் நிம்மதி பிறந்தது!

சில்லறைச் செலவு நிதியிலிருந்தும், வேலை நிதியிலிருந்தும் ஊதியம் பெறுபவர்களாக ஆயிரக் கணக்கானவர்கள் தமிழ்நாடு அரசில் பல்லாண்டுகளாகப் பணி புரிகிறார்கள். முறையான அரசு ஊழியர்களுக்கு இருப்பது போல், சம்பள வீதம், ஓய்வூதியப் பலன்கள், விடுப்பு வசதிகள், பிற வசதிகள் ஆகியவை இவர்களுக்கு இல்லை. இச்சிக்கலுக்குச் சீரிய தீர்வு காண்பதற்காக, இம்மாநில அரசு கீழ்க் காணும் முடிவுகளை எடுத்துள்ளது:

1. சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களும் முறையான அரசுப் பணியில் இராமல் வேலை நிதி ஊதியம் பெறுபவர்களும், 5 ஆண்டுகள் தொடர்ந்து அரசுப் பணியை முடித்தவுடன், முறையான அரசுப் பணியாளர்களாக ஆக்கப்படுவர். வருங்காலத்தில் இத்தகைய பணியாளர் அமைப்பு முறை நீக்கப்படும். அரசுப் பணியில் அமர்த்தப்படும் அனைவருக்கும் முறையான சம்பள வீதம் இருக்கும்.

2. முறையான அரசுப் பணியில் சேர்க்கப் படும் வேலை நிதி ஊதியப் பணியாளர்கள் அனைவரும் முறையான அரசுப் பணியாளர்களில் இவர்களுக்கு நிகரானவர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதிய நலன்களும், விடுப்பு வசதிகளும் பிற வசதிகளும் பெறுவர்.

இந்த முடிவு காரணமாக, 47,000 பணியாளர் பயனடைவர். இது முக்கியமான நிர்வாகச் சீர்திருத்தமாகும்.

### ஓய்வுக் காலச் சேமிப்புத் திட்டம்!

அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக் கும் உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் ஓய்வுக் காலச் சேமிப்புத் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது. இவர்கள் தனிப்பட்ட முறையில் சேமிப்பதை ஊக்குவிக்கும் வகையில் இத்திட் டம் அமையும். பணியாளர்கள் குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றதும் நிதி வகையில் கணிசமான நன்மை அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் கிட்டும். தமிழ்நாடு குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் அளிக்கப் படும் ஆயுள் ஈட்டுறுதி அமைப்புக்கு இது உறு துணையாக இருக்கும்.

### கூடுதல் செலவு—ஆண்டிற்கு 18 கோடி!

இம்முடிவுகள் காரணமாக ஒரு முழு ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு 18 கோடி



# தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டம்

—ஆர். வி. சுப்பிரமணியன்
ஆளுநர் ஆலோசகர்.

"தமிழ் நாட்டில் வீட்டு வசதி வாரியத்தாலும், குடிசை மாற்று வாரியத்தாலும் கட்டப் பெற்ற வீடுகளில் 93 சதவிகிதம் ஏழை, எளிய மக்களுக்கும் குறைந்த வருமானமுடையவர்களுக்குமே அளிக்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டு வசதிக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 77 சதவிகிதம் இத்தகைய தரப்பினருக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற அபிவிருத்திக் கழகத்தின் தொழில் நுட்ப ஆலோசனையின் பேரில், குறைந்த செலவில் வீடு கட்டும் பணி நன்முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்த நல்ல பணியை மேற்கொண்டு நிறைவேற்றியமைக்காக மேற்படி கழகத்தை நான் பாராட்டுகிறேன்.

"நகர்ப்புற வீட்டு வசதிப் பணிகளின் முன்னேற்றம் பற்றி நான் குறிப்பிடுகையில், கிராமப் பகுதிகளில் வீட்டு வசதியளிக்கும் பணிகளை முனைப்பாக மேற்கொள்வதற்காக மத்திய அரசு, கிராமப் புற வீட்டு வசதிக் கழகம் ஒன்றினை நிறுவ வேண்டியதன் தேவையை வலியுறுத்த விரும்புகிறேன். பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்கள் பலவற்றுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் பெரு இடையீடின்றி, இக்குடும்பங்கள் தாங்கள் பெற்ற மனைகளில் வீடுகளைக் கட்டிக் கொள்ள உதவிகள் அளித்திட வேண்டும்.

"வீடு கட்டும் பணிகளுக்குத் தேவையான நிதி வசதி தளராமல் அளிக்கப் பெற வேண்டியது இன்றியமையாதது. இந்நிலையில் ஆய்வுக் குழுவொன்றினை ரிசர்வ் வங்கி நிறுவியதும், ஆய்வுக் குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி தேசீய மயமாக்கப் பெற்ற வங்கிகள் வீட்டு வசதித் திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதற்கான வழி முறைகளை வகுத்தமையும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

"ரிசர்வ் வங்கி நிறுவியுள்ள ஆய்வுக் குழு வரவேற்கத்தக்கதே எனினும், வீடுகள் கட்டுவதற்கான நிதி வசதிகள் அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட பல விஷயங்களை ஆராய விரிவான செயல் திட்டக் குழு ஒன்றினை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய குழுவில் ரிசர்வ் வங்கி, ஆயுள் இன்ஷூரன்ஸ் கழகம், மற்றும் மத்திய-மாநில அரசுகளின் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும். மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் வலியுறுத்திய இணைந்து செயலாற்றும் முறைக்கு இக்குழு பெரிதும் உதவியாக இருக்கும்.

வீட்டு வசதித் திட்டங்களுக்கு, சிறப்பாக அரிஜன வீட்டு வசதித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து உள்ளன. வங்கிகளின் பொருளாதார உதவி இவ்விதம் நல்ல முறையில் உருப்பெற்றுள்ளதைக் குறிப்பிடும் நேரத்தில், இது தொடர்பான மூன்று அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாக ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளின் கீழ் வங்கிகள் அளிக்கும் கடனுதவிகளுக்கான வட்டியின் மேல் விதிக்கப்படும் வரியினை விலக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம். இதனால், ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படும் கடனுதவிக்கான வட்டி விகிதம் 10 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாகக் குறையும். இரண்டாவதாக, கடனைத் திரும்பச் செலுத்த வேண்டிய காலவரையறை 10 ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். இதனால், கடனுதவி பெற்றோர் செலுத்த வேண்டிய மாதத் தவணைத் தொகை குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய சலுகையை உடனடியாக நகர்ப்புறப் பகுதிகளில் அமலுக்குக் கொண்டு வர இயலாவிடில், கிராமப் பகுதிகளிலாவது மேற்கொள்ளலாம்.

"மூன்றாவதாக, ஒவ்வொரு மாநிலத்திலும் வங்கிகளுக்கான பொதுவான பட்டுவாடா நிறுவனத்தை ஏற்படுத்தலாம். இது வங்கிகளுக்கும், கடன் தொகை

கட்டும் திட்டங்களுக்கு வங்கிகள் அளிக்கும் கடனுதவிகளுக்கான வட்டி விகிதத்துக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்திக் கழகம் அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதத்துக்கும் உள்ள வேறுபாடு தவிர்க்க முடியாதது என்றாலும், அதனை ஓரளவு குறைக்க முயற்சிக்கலாம். 1977-78-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு மாநிலத் திட்ட நிதிகளிலிருந்தும், வீட்டு வசதி வாரிய நிதிகளிலிருந்தும் ஏழை, எளிய மக்களும் குறைந்த வருமானமுள்ளவர்களும் வீடுகள் கட்டுவதற்குப் பெறும் கடன்களுக்கான வட்டியினைக் குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதென்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன வென்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிசைப் பகுதிகள் அபிவிருத்தி

"நமது பெருநகர்களில் குடிசைப் பகுதிகள் பெரும் சமுதாயப் பிரச்னையாக இருந்து வருகிறது. 1956-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் குடிசைகளை அப்புறப்படுத்தவும், சீரமைக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சென்னை மாநகரில் மட்டும் சுமார் 7.5 இலட்சம் மக்கள் கொண்ட 1,200 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. குடிசை மாற்று வாரியம் இதுவரை 87 குடிசைப் பகுதிகளை அகற்றி, அங்கு வாழ்ந்த மக்களுக்கு பல மாடிக் கட்டடங்களில் 19,000 வீடுகள் அமைத்துத் தந்துள்ளது. தவிர, 3,600 வீடுகள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. இத்தகைய வீடுகளுக்கு குடிநீர், சுகாதார வசதிகள், தெரு விளக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன.

"குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், தெரு விளக்கு வசதிகள் ஆகியவற்றைத் துரிதமாக அளிக்க மாநில அரசு முடிவு எடுத்துள்ளது. இது வரையில் பிரதம மந்திரி பிறந்த நாளான 1976 நவம்பர் 19-ஆம் தேதியன்று, சென்னை நகரிலுள்ள அனைத்துக் குடிசைப் பகுதிகளுக்கும், கோவை, மதுரை, திருச்சி போன்ற முக்கிய நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளை அளிக்கும் தீவிரத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்நகரங்களில் எந்தவொரு குடிசைப் பகுதியும் அடிப்படை வசதிகள் இன்றி இருக்கவே இருக்காது.

இக் குறைந்த பட்சத் திட்டத்துக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5 கோடியாகும்.

## நிலமற்ற ஏழைக் கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்

"பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டத்தின் கீழ், நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவது எல்லா மாநிலங்களிலும் சிறப்பாக நடந்தேறி வருகிறது. தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வீட்டு மனை வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இத் திட்டம் 1-4-'74 முதல் கைவிடப் பட்டது. மத்திய அரசின் திட்டத்தின் கீழ் 35,343 வீட்டு மனைகள் பக்குவப்படுத்தப் பெற்று—34,413 வீட்டு மனைப்பட்டாக்கள் வரை நிலமற்ற கிராம ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1-4-'74 முதற் கொண்டே இத் திட்டம் மாநில குறைந்த பட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ், அடியிற்கண்ட இரு வகைகளில் செயல்பட்டு வருகிறது.

(1) வீட்டு மனைக்கு அரசுக்கு சொந்தமான நிலங்களை ஒதுக்குவது.

(2) அரிஜன மக்கள் வீட்டு மனைகளுக்காக, நிலங்களை ஆர்ஜிதம் செய்து ஒதுக்குவது.

"தமிழ்நாட்டில் சுமார் 4 இலட்சம் நிலமற்ற குடும்பங்கள் உள்ளன. இவர்களுள் 2,51,000 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு மனைகளுக்கு வகை செய்யும் திட்டத்துடன் தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்தையும் தமிழ்நாடு அரசு அமலுக்குக் கொண்டு வந்துள்ளது. 1,75,000 குடித்தனக்காரர்களுக்கு சொந்த உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 15,000 கிராமக் கைவினைஞர்களும் இச்சட்டத்தின் கீழ் பயனடைவர்.

"பிரதம மந்திரியின் 59 வது பிறந்த நாளையொட்டி 19-11-'76 அன்று 59,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த தெனினும் 1,22,306 வீட்டு மனைப் பட்டாக்கள் அந்நாளில் அதற்கென ஏற்பாடு செய்யப் பெற்ற பல சிறப்பு நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்டன. பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்து அரிஜனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டமும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. நடப்பாண்டில், இதற்கென ரூ. 52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டினைக் கொண்டு சுமார் 20,000 வீட்டு மனைகள் இவ்வாண்டில் அளிக்கப்படும். 19-11-1976 முதல் இரண்டாண்டுக்குள், வீட்டு மனையில்லாத ஒவ்வொரு அரிஜனக் குடும்பத்துக்கும் வீட்டு மனை அளிக்கப்பட்டு விடும்.

"தமிழ்நாட்டில், நகர்ப் புற நிலங்களுக்கான உச்ச வரம்புச் சட்டத்தை அமல் படுத்துவதால் கிடைக்கும் உபரி நிலங்கள் ஏழை எளிய மக்களுக்கும் குறைந்த வருமானமுடைய மக்களுக்குமே பயன்படுத்தப்படுமென்று மத்திய அமைச்சருக்கு உறுதி அளிக்கிறேன்.

"கூட்டுறவு முறையில் வீடு கட்டும் பணிகளுக்கு ஆயுள் இன்ஷூரன்ஸ் கழகத்தின் மூலந்தான் நிதி உதவி பெற வேண்டியிருக்கிறது. இந்த நிதி உதவி குறைவாக இருப்பதால், கூட்டுறவு முறையிலான வீடு கட்டும் பணிகள் தேக்க நிலையை அடைந்து விட்டன. இப்பணிகள் மீண்டும் தொடங்குவதற்கு ஆயுள் இன்ஷூரன்ஸ் கழகம் அதிகப்படியான நிதியுதவி தந்திட முன் வர வேண்டியது அவசியமாகும்."

—17-12-1976 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற வீட்டுவசதித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.



# தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் திருவிழா!



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பமேளா என்ற பெயரில் நடைபெறும் திருவிழா எத்தனையோ நூற்றாண்டுகளாகச் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. புராதனமான சமய இலக்கியங்களிலும் புராண நூல்களிலும் பிரயாகை என்ற பெயரால் புகழ்பெற்றது இன்றைய அலஹாபாத். இந்த நகரம்தான் இந்தத் திருவிழாவுக்குரிய தலம். கங்கை, யமுனை, இப்போது மறைந்து விட்ட சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகளும் ஒன்று சேரும் இடம் சங்கமம் எனப்படும். புனிதம் நிறைந்த இந்தத் தீர்த்தக்கட்டத்தில் நீராடுவதற்கு நாடெங்கிலுமிருந்து இலட்சக்கணக்கான மக்கள் குவிந்த வண்ணமாக இருப்பார்கள். அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாத வசதிகளை எளிய முறையில் செய்து கொடுக்கத் தற்காலிகமாக ஒரு புது நகரத்தையே உருவாக்கியிருக்கின்றார்கள்.

இந்துக்களின் பஞ்சாங்கப்படி, பௌர்ணமி நாளான ஜனவரி மாதம் 5-ம் தேதி முதல், மக்கள் வெள்ளம் இந்தப் பகுதியைப் படையெடுத்து வருகிறது. மௌனி அமாவாசையான ஜனவரி மாதம் 19-ம் தேதிதான் இங்கு மிகப் பெரும் கூட்டம் இருக்கும்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறி மாறி நான்கு இடங்களில் கும்பமேளா நடைபெறுகிறது. ஹரித்துவார், பிரயாகை, உஜ்ஜெயினி, நாசிக் என்பன இந்த நான்கு இடங்கள். எந்த ஆண்டில் எங்கே நடைபெறும் என்பதைப் பஞ்சாங்கம் கணிப்பவர்கள் முடிவுசெய்கிறார்கள். வியாழன் கும்ப ராசியிலும், சூரியன் மீன-மேஷ ராசிகளிலும் இருக்கும் ஒன்றரை மாதங்களில் கும்ப விழா ஹரித்துவாரில் கொண்டாடப்படுகிறது.

பிரயாகையில் தை மாதத்தில் இந்த விழா நடைபெறுகிறது. 1977 ஜனவரி 19-ஆம் தேதி அமாவாசையன்று தீர்த்தம் ஆடுபவர்களுக்குத்தான் எல்லா நன்மைகளும் ஏற்படும் என்பது நம்பிக்கை. அப்போது வியாழன் மேஷ ராசியிலும், சூரியன், சந்திரன் மகர ராசியிலும் இருப்பார்கள்.

சிப்ர ஆற்றங்கரையிலுள்ள உஜ்ஜெயினியில் கார்த்திகை மாதத்தில் அதாவது இந்தக் கிரகங்கள் விருச்சிக ராசியில் இருக்கும்போது, கும்பமேளா நடைபெறும்.

கோதாவரிக் கரையிலுள்ள நாசிக் என்னும் புண்ணியத் தலம் கௌதம புத்தரால் கங்கைக்குச் சமானமானதாகக் கருதப்பட்டது. சூரியன், சந்திரன், வியாழன் ஆகிய மூன்று கிரகங்களும் கடக ராசியில் இருக்கும்போது நாசிக்கில் கும்பமேளா நிகழும்.



இவ்வாறு கும்பமேளா இந்த நான்கு இடங்களிலும் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஆனால் ஹரித்துவாரிலும் பிரயாகையிலும் முழுமையான கும்பமேளாக்களுக்கு இடையே அர்த்த கும்பமேளா (அரைக் கும்பமேளா) என்ற திருவிழாவும் உஜ்ஜெயினி அல்லது நாசிக்கில் பூரண கும்பமேளா (முழுக் கும்ப மேளா) வும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மக (தமிழ் தை மாதம்) மாதத்தில் பிரயாகையில் மகமேளா என்ற திருவிழா உண்டு. பல்லாயிரக் கணக்கான மக்கள் சங்கமத்தில் நீராடுவர். அந்தத் திருவிழா மகர சங்கராந்தியன்று தொடங்கும். இந்த மாதம் முழுவதும் புண்ணியமானதாகக் கருதப்படுவதால், முப்பது நாட்களிலும் சங்கமத்தில் நீராடுவதையே எத்தனையோ பேர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து நாட்கள் மற்ற நாட்களை விட இன்னும் சிறப்பாகக் கருதப்படுகின்றன. மகா சங்கராந்தி (ஜனவரி 14), மௌனி அமாவாசை (ஜனவரி 19), வசந்த பஞ்சமி (ஜனவரி 24), மகப் பௌர்ணமி (பிப்ரவரி 4), சிவராத்திரி (பிப்ரவரி 16) என்பன இந்த நாட்கள்.

வியாழன் கும்ப ராசியிலும் சூரியன் மேஷ ராசியிலும் இருக்கும்போது, அதாவது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக மேளாவுக்குப் பதிலாகக் கும்பமேளா கொண்டாடப்படுகிறது. வியாழன் கும்ப ராசியில் இருக்கும்போது கொண்டாடப்படுவதால் இதற்குக் 'கும்ப மேளா' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. பிரயாகையில் மூன்று ஆறுகள் சங்கமமாகிறது என்ற கருத்து, பல தலைமுறைகளாக நிலவி வருவதாலும், இந்தப் புனித யாத்திரைத் தலத்தின் ஆற்றுப்பகுதி இலட்சக்கணக்கான மக்களைக் கொள்ளக் கூடிய பரப்பளவை உடையதாக இருப்பதாலும், வேறு எந்தத் தலத்தையும்விட கூடுதலான மக்கள் பிரயாகை சங்கமத்தில் கூடுகிறார்கள்.

## வரலாறு

கும்பமேளா தோன்றியதைப் பற்றி இதிகாச புராண அடிப்படையில் பல கதைகள் வழங்குகின்றன. மத்சய புராணம் கூறும் கதை யாவது: உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோது, தேவர்கள் ஒரு முனிவரின் கோபத்துக்கு ஆளாகி இளைத்துப் போனார்கள். அமிர்தத்தை உண்டு, இழந்த பலத்தைப் பெற அவர்கள் விரும்பினார்கள். திருப்பாற் கடலைக் கடையும் படி பிரம்மா அவர்களுக்கு யோசனை கூறினார்.

உடல் வலுவில்லாத தேவர்கள், தாங்க ளாகவே, கடைய இயலாமல், தங்களுடைய பரம்பரை எதிரிகளான அசுரர்களின் உதவியை நாடினர். அமிர்தத்தின் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுக்கவும் இசைந்தனர்.



தேவர்களும் அசுரர்களுமாகச் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்தனர். கடையும் மத்தாக மந்தார மலையையும், மத்தினைச் சுற்றிக் கொள்ளும் கயிறாக நாகராஜனையும் பயன்படுத்திக் கொண்டனர். நாகராஜனின் வாலைத் தேவர்களும் தலையை அசுரர்களும் பிடித்துக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர். இவ்வாறு கடைந்ததால் முதலில் வெள்ளை யானையாகிய ஐராவதமும், பிறகு தெய்வக் குதிரையும், அதையடுத்து லெட்சுமியும், பின்னர் பவுர்ணமியும் அதன்பின்னர் 'கவுஸ்துமா மணி' என்ற விலைமதிக்க முடியாத அணிகலனும், ஆடும் பாடும் அழகிய தேவ கன்னியரும், ஆலாலம் என்னும் கொடிய நஞ்சும், காமதேனுவும் கல்பக விருட்சமும், விசுவகர்மனும் உண்டாயினர். கடைசியாக, தன்வந்திரி என்ற தெய்வீக மருத்துவன்



தோன்றி தன் கரங்களில் அமிர்த கும்பத்தை ஏந்திக் கொண்டு வந்தான். அவனுடைய உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில், தேவர்களும் அசுரர்களும் போட்டி போட்டுக்கொண்டு ஓடி, அமிர்தம் அடங்கிய புனித கும்பத்தைப் பறிக்க முயன்றனர். குழப்பமான அந்தச் சூழ்நிலையில் கும்பம் அசுரர்கள் கையில் சிக்கியது. அதற்கிடையே விண்ணுலகை ஆள்பவனும் இந்திரனின் மகனுமான ஜெயந்தன் உருமாறி ஒரு வேஷம் எடுத்து வந்து அசுரர் வசப்பட்டிருந்த கும்பத்தைத் தட்டிக் கொண்டு போய் விட்டான். விண்ணுலகுக்குச் செல்லும் வழியில் அவன் அந்தக் கும்பத்தைப் பிர



யாகை, ஹரித்துவார், நாசிக், உஜ்ஜெயினி ஆகிய நான்கு தலங்களில் வைத்ததாகச் சொல்லப்படுகிறது. விண்ணுலக யாத்திரை அவனுக்கு 12 நாள் பிடித்தது. தேவர்களுக்கு 12 நாள் என்பது பூமியில் வாழும் மனிதர்களுக்கு 12 ஆண்டுகளுக்குச் சமமானது. 12 ஆண்டு இடைவேளையில் பூரண கும்பமேளா கொண்டாடப்படுவதன் ஐதீகம் இதுவே.

கருட புராணத்திலும் இந்தக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. தன்வந்திரி தன் கையில் வைத்திருந்த கும்பத்தை அசுரர்களும் தேவர்களும் கைப்பற்ற முயன்றபோது, அந்தக் கும்பத்திலிருந்த அமிர்தம் சிறிது சிந்திச் சிதறி ஹரித்துவாரிலும், பிரயாகையிலும் உஜ்ஜெயினியிலும், நாசிக்கிலும் விழுந்தன.

கும்பமே வைக்கப்பட்டிருந்தால் அல்லது கும்பத்திலிருந்த அமிர்தம் சிந்தியதால் புனிதமடைந்த மேற்கண்ட இடங்கள் யாத்திரைத் தலங்கள் ஆயின. இலட்சக்கணக்கான சாதாரண மக்களும், மற்றும் ஞானிகளும், துறவிகளும் குறிப்பிட்ட நாட்களில் இந்தத் தலங்களிலுள்ள ஆறுகளில் புனித நீராடி வழிபடுகிறார்கள். ஹரித்துவாரில் கங்கையும், பிரயாகையில் கங்கை-யமுனை இப்போது நம் கண்களுக்கு அப்பாற்பட்டுள்ள சரசுவதி ஆகிய மூன்றும் சேர்ந்த திரிவேணியும் நாசிக்கில் கோதாவரியும், உஜ்ஜெயினியில் சிப்ராவும் இவ்வாறு புகழ் பெற்றுள்ள ஆறுகளாகும்.



இந்துக்களும், மகாத்மாக்களும் கூடுகின்ற கும்ப மேளாவுக்கு இன்றைய வடிவம் கொடுத்தவர் ஆதி சங்கராச்சாரியார் ஆவார். இந்துக்கள் வணங்கும் சந்நியாசிகளை அவர் 10 பகுதியினராகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியின் தலைவரும் கும்பமேளாவுக்குப் போக வேண்டும் என்று அவர் விதித்தார். இதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளவும் தங்களுடைய தெய்வீக அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தினார். பாமர மக்களும் ஆர்வத்துடன் இந்தத் திருவிழாவுக்குக் கூடுவோர் ஆயினர். புனிதமான தீர்த்த யாத்திரை பெற்றுப் பலன் அடைவதோடு புண்ணிய புருஷர்களான சந்நியாசிகளையும், மகா சந்நிதானங்களையும் வழிபட்டு அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறவும் முடிகிறது. இமயமலையின் மிக உயர்ந்த பகுதியிலுள்ள காடுகளிலும், குகைகளிலும் தவமிருந்து பிரார்த்தனையும், தியானமும் செய்யும் துறவிகள் பலர், சாதாரணமாக அந்த இடங்களை விட்டு அகலுவதில்லை. அத்தகைய புனிதர்களும்கூட கும்ப மேளாவில் கலந்து கொள்கின்றனர்.

## பிரயாகையின் பெருமை

கங்கையும், யமுனையும் இப்போது நம் கண்ணில் தென்படாத சரசுவதியும் ஒன்று கூடும் தலமான பிரயாகை, 'சங்கமம்' என்னும் பெயர்பெற்று, ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான மக்கள் தீர்த்தமாடும் பெருமையை உடையது.

பிரயாகையின் மிகப் பழமையான பெயர் 'பிரதிஷ்டானம்' என்றும் பிற்காலத்தில் அது 'கௌசாம்பி' என்று சொல்லப்பட்டதாகவும் சந்திர வம்சத்தின் வழிவந்த அரசர்கள் இங்கிருந்து ஆட்சி செய்ததாகவும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கமத்தில்தான் பிரம்மா, பல யாகங்கள் செய்தார். ராமபிரானின் வனவாசத்தில் ராமனும் சீதையும் இலட்சுமணனும் சங்கமம் வழியாகத்தான்



தெற்கே சென்றனர். கங்கையும், யமுனையும் சேருமிடத்தில் அப்போது பரத்வாஜ முனிவரின் ஆசிரமம் இருந்தது. அதில் அவர்கள் தங்கியிருந்தனர். அயோத்திக்குத் திரும்புமாறு ராமபிரானைக் கேட்டுக் கொள்ளச் சென்ற பரதனும் அதே வழியில் யாத்திரை சென்று அந்த இடங்களிலேயே தங்கினான்.



பிரயாகைக்கு யாத்திரை செல்லுவதால ஏற்படக்கூடிய ஏராளமான பலன்களைப்பற்றி மத்சய புராணமும், பத்ம புராணமும், மற்ற புராணங்களும் மிகவும் விரிவாகச் சொல்லுகின்றன. மத்சய புராணத்தின் ஒரு பகுதி பிரயாகை மஹாத்மியம் என்ற தலைப்பில் இந்தத் தலத்துக்கு யாத்திரையாக வருவதால் உண்டாகக் கூடிய நன்மைகளை அடுக்கடுக்காகச் சொல்லுகிறது. இந்த நூலில் ஆதாரத்துடன் சொல்லப்பட்டிருக்கிற முறையைப் பின்பற்றியே, பிரயாகைக்கு வருபவர்கள் பல சடங்குகளைச் செய்து வருகிறார்கள்.

கும்பமேளாவின்போது, புனித நீராடுவதற்கு மிக முக்கியமானவை என்று வரையறுக்கப்பட்ட நாட்களில், வெவ்வேறு மடங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சந்நியாசிகள் ஊர்வலமாகச் செல்லுவர். அப்போது பக்திப் பரவசத்துடன் ஊர்வலத்தின் இரு மருங்குகளிலும் நிற்கும் இலட்சக்கணக்கான மக்கள் அவர்களைத் தரிசனம் செய்தும் வழிபட்டும் திருப்தி அடைவார்கள். ஒவ்வொரு மடம் அல்லது சந்நியாசிகளின் பகுதிக்கும் தனித்தனியே தங்கும் இடங்கள் உண்டு. உரிமை உடைய சந்நியாசிகள் மட்டுமே ஊர்வலத்தில் இடம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இந்துக்கள் எல்லோரும் புனித நீராடியபிறகுதான் சாதாரண மக்கள், தீர்த்த கட்டத்திற்குச் செல்லுவது மரபு.

எண்ணி முடியாத அளவு மிகப் பெருங் கூட்டம் கூடுவதால் பூர்ண கும்ப மேளாவுக்கு மதக் கண்ணோட்டத்தில் மட்டுமின்றி சமுதாய அளவிலும் ஒரு முக்கியத்துவம் இருந்து வருகிறது. நாட்டின் நான்கு மூலைகளிலுமுள்ள அறிஞர்கள் கூடிப் பேசுகின்றனர். கும்பல் கும்பலாகத் திரியும் மக்களிடையே நாம் அனைவரும் ஒரு நாட்டினர் என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சி, பெருக்கெடுத்து ஓடுகிறது. நமது பழமையான பண்பாட்டில் நமக்கு இருந்து வரும் நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளவும் இது ஒரு சந்தர்ப்பம் ஆகும்.

இத்திருவிழா நடைபெறும் இடத்தின் பரப்பளவு 1040-ஹெக்டேர். வேறுபாடுகள் நிறைந்த இந்தியப் பெருநாட்டின் சிறு வடிவமாக இங்கு பலவேறு வண்ணங்களில் ஒரு புதிய நகர் உருவாகியுள்ளது. இங்கே கூடுகிற மக்களுக்கு, சுகாதார வசதிகள் முதலியன செய்வதற்கு மட்டும் ஆறு கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. யாத்திரை வாசிகளுக்காக ஒவ்வொரு நாளும் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இந்த ஈடு இணை இல்லாத திருவிழாவுக்குச் செல்லுபவர்களை ஏற்றிக்கொண்டு நூற்றுக் கணக்கான ரயில்களும், பஸ்களும் மற்ற வகை வாகனங்களும் அலஹாபாத்திற்கு நாள் தோறும் சென்று கொண்டிருக்கின்றன.

எனவே, கும்பமேளா விழா உண்மையிலேயே தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஏற்படுத்துகிறது என்றால் மிகையாகாது.



# சென்னை அழைக்கிறது!

சென்னை நகரம்—நவீன மயமாகத் திகழும் இந்த நாளிலும், இந்தக் காலத்திலும் அதன் பழைய காலக் கவர்ச்சியை இழக்காமல் நிலைத்து நிற்கிறது. சென்னைக்கு வருகை புரியும் பயணிகள்—அதன் இனிய வரவேற்பினாலும்—பல்வேறு விதமான நிகழ்ச்சிகளினாலும் கவரப் படுவது உறுதி.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு, சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இடங்கள், சமய சம்பந்தமான பகுதிகள், கலைத் தொடர்புள்ள நிலையங்கள், மற்றும் தொழில் துறையைச் சார்ந்த பகுதிகள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை, இந்தியாவிலே உள்ள [illegible] நகரங்களில் நான்காவதாக விளங்குகிறது. சுற்றுலாப் பயணிகளின் சுவர்க்கமாகவும்—பழைய நாகரிகத்தின் இருப்பிடமாகவும் காணப்படும் சென்னை—வெயில் நிறைந்த தென்னிந்தியாவிற்கு நுழைவாயிலாகத் திகழ்கிறது—பயணிகளை வரவேற்று — வாழ்த்துக் கூறுகிறது.

## காண வேண்டிய இடங்கள்

### மெரினா கடற்கரையும் மீன் கண் காட்சியும்

உலகத்திலுள்ள அழகிய கடற்கரைகளில் மெரீனாவும் ஒன்று. மெரீனாவில் உள்ள மீன் கண்காட்சி நிலையம் நாள்தோறும் பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 8 மணி வரையிலும், ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய அரசு விடுமுறை நாட்களில் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணிவரையிலும் திறந்து வைக்கப்படுகிறது. திங்கட்கிழமை விடுமுறை நாளாகும்.

### உயர்நீதி மன்றம்

இந்திய—முகம்மதிய பாணியில் கட்டப்பெற்றுள்ள கட்டடம் இது. இதையொட்டி, ஸ்மால் காஸ் நீதி மன்றம், சிடி சிவில் நீதி மன்றம், மற்றும் சட்டக் கல்லூரி ஆகியவை உள்ளன.

### கலங்கரை விளக்கம்

உயர் நீதிமன்ற எல்லைக்குள்ளேயே இது உள்ளது. எல்லா அலுவல் நாட்களிலும் இது காலை 7 மணியிலிருந்து 10 மணி வரை திறந்து வைக்கப்படுகிறது. சனி ஞாயிறு ஆகிய நாட்களிலும் அரசு விடுமுறை நாட்களிலு காலை 8 மணி முதல் 11 மண வரையிலும், பின்னர் பிற்பகல் 1 மணியிலிருந்து மாலை 5 மண வரையிலும் பொதுமக்களின் பார் வைக்குத் திறந்து வைக்கப் பெறு கிறது. காமராஜ் சாலையில் புதிதாக ஒரு கலங்கரை விளக்கப் உருவாக்கப்பட்டுள்ளது. இத ஜனவரி 10-ஆம் தேதி திறக்கப் பட்டது.

### புனித ஜார்ஜ் கோட்டை

கி.பி. 1653-ல் ஆங்கில கிழக் கிந்தியக் கம்பெனியால் கட்டப் பட்ட இந்தக் கட்டடத்தின் பெரும்பான்மையான பகுதி களில், தமிழ்நாடு அரசின் தலை மைச் செயலகமும், சட்டமன்ற மும் இயங்கி வருகின்றன. இங்கு உள்ள செயின்ட் மேரி கிறிஸ்துவ ஆலயம் கி.பி. 1680-ல் கட்டப் பட்டதாகும். இது கீழ் நாட்டில் கட்டப்பட்டு உள்ள கிறிஸ்துவ ஆலயங்களில் மிகவும் பழமை யானது என்று கருதப்படுகிறது.

### சாந்தோம் கிறிஸ்துவ ஆலயம்

ஏசுவின் சீடர்களில் ஒருவரான புனித தாமஸின் உடல் இங்கே புதைக்கப்பட்டுள்ளதாகச் சொல் லப்படுகிறது.

### காந்தி மண்டபம்

கிண்டியில் உள்ள ராஜபவனத் துக்கு அருகில், மகாத்மா காந்தி யின் நினைவாக எழுப்பட்டுள்ள மண்டபம் இது; இங்கு பிரார் த்தனைக் கூட்டங்கள் நடைபெறு கின்றன.

மெரினா கடற்கரை





## ராஜாஜி நினைவாலயம்

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும் தமிழ்நாட்டில் இரு முறை முதலமைச்சராகவும் இருந்த ராஜாஜி அவர்களின் நினைவாக எழுப்பட்டுள்ள ஆலயம் இது. காந்தி மண்டபத்தின் வலப் புறத்திலே உள்ளது.

## காமராஜர் நினைவு மண்டபம்

தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களின் நினைவாக எழுப்பப்பட்ட மண்டபம். இதுவும் ராஜபவனத்துக்கருகே, காந்தி மண்டபத்தின் இடது புறத்தில் உள்ளது. காமராஜர் அவர்களின் உடல் இங்கேதான் எரியூட்டப்பெற்றது.

## தியாஸாஃபிகல் சொஸைட்டி

தியாஸாஃபிகல் இயக்கத்தின் தலைமை நிலையம் இது. ஞாயிற்றுக் கிழமைகளிலும் அரசு விடுமுறை நாட்களிலும் தவிர, நாள்தோறும் காலை 8 மணியிலிருந்து 10 மணி வரையிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து 4 மணி வரையிலும் திறந்து வைக்கப்படுகிறது. இங்குள்ள ஆலமரம் நூறு வயதைத் தாண்டியது என்று சொல்லப்படுகிறது.

## கபாலீஸ்வரர் கோயில்

தமிழகக் கட்டடக் கலைப் பாணியில் அமைந்ததும், அழகான கோபுரம் படைத்ததுமான கபாலீஸ்வரர் ஆலயம் சிவபெருமானுக்காக அமைக்கப்பட்ட பழமையான ஆலயம் ஆகும். மயிலாப்பூரில் உள்ளது இது.



சாந்தோம் கிறிஸ்துவ ஆலயம்

## பார்த்தசாரதி கோயில்

பார்த்தனுக்குத் தேர்ச் சாரதியாக இருந்த பரந்தாமனுக்காக அமைக்கப்பட்ட ஆலயம் இது. திருவல்லிக்கேணியில் உள்ளது ; இதனைப் பல்லவ மன்னன் கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் கட்டினுன். அதன் பின்னர் விஜயநகர நாயக்க மன்னர்களால் கி.பி. 16-ஆம் நூற்றுண்டில் இவ்வாலயம் புதுப்பிக்கப் பெற்றது.



கிண்டியிலுள்ள காந்தி மண்டபம்



## தோட்டமும் பூங்காவும்

**சிறுவர் பூங்கா :** கிண்டியில் மான் பண்ணைக்கு அருகில் உள்ள இந்தப் பூங்காவில் பல்வகைப் பறவைகளும் விலங்குகளும் உள்ளன.

**பாம்புப் பண்ணை:** கிண்டியில் உள்ள இந்தப் பாம்புப் பண்ணையில், பலவகைப் பாம்புகள் உள்ளன.

**மான் பண்ணை :** புள்ளி மான்களும், கறுப்பு மான்களும் இங்கே உள்ளன.

**விலங்குக் காட்சிச்சாலை :** வட சென்னையில் பூங்கா நகரில் உள்ள இது, உயிர் காலேஜ் என்றும் அழைக்கப்படுகிறது. மாநகராட்சி ஸ்டேடியத்தினருகில் உள்ளது இது.

## அரும்பொருட் காட்சியகமும் — கலைக்கூடமும்

### அரசினர் அரும்பொருட்காட்சியகம்

எழும்பூரில் பாந்தியன் ரோட்டில் உள்ள இந்த அரும்பொருட் காட்சியகம் கி.பி. 1851-ல் நிறுவப்பட்டது. தொல்பொருள் இயலைச் சார்ந்த பல அரும் பொருள்களும், செப்புப் படிவங்களின் கூடமும் உள்ளன.

### கலைக்கூடம்

பழைய ஓவியங்கள் மற்றும் நவீன ஓவியங்கள் இந்தக் கலைக் கூடத்தில் சேகரிக்கப்பட்டு வைக்கப் பெற்றுள்ளன.

**கோவளம் :** மகாபலிபுரம் போகும் பாதையில்—சென்னையிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வூர். இங்குள்ள கடற்கரை மிக அழகாக உள்ளது. மீன் பிடிப்பும் இங்கு நல்ல முறையில் நடை



பெறுகிறது. உடல் ஓய்வு பெறுவதற்கும் மன அமைதி நாடுவதற்கும் பொருத்தமான இடம் இது.

## எலியட்ஸ் கடற்கரை

அடையாறு பகுதியில் உள்ள இந்தக் கடற்கரை வெளிநாட்டாரின் உள்ளத்தை மிகவும் கவர்ந்துள்ளது. மேல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள கடலில் குளித்து ஆனந்தம் பெறுகிருர்கள்.

## செங்குன்றம் (ரெட் ஹில்ஸ்)

இது சுற்றுலாப் பயணிகளின் மனம் கவர் இடம். இங்குள்ள ஏரியின் உதவியால்தான் சென்னை நகருக்கே தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

## பூண்டி நீர்த்தேக்கம் (சத்தியமூர்த்தி ஸாகர்)

சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள இந்த நீர்த் தேக்கம்-சென்னை நகரத் தண்ணீர் விநியோகத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. சுற்றுலாவிற்கு ஏற்ற இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடம் இது.

## வேடந்தாங்கல் நீர்ப்பறவைச் சரணுலயம்

சென்னையிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இது. இங்கு பலநாட்டுப் பறவைகளும் வருகின்றன. நவம்பர் மாதத்திலிருந்து பிப்ரவரி முடிய பறவைகள் வருகின்ற காலம் ஆகும்.

## போக்குவரத்து வசதி

**தரை மார்க்கம் :** இந்தியாவில் உள்ள எல்லா நகரங்களுடனும், சென்னை தரைமார்க்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

**ரயில் மார்க்கம் :** இந்தியாவில் உள்ள எல்லா நகரங்களுடனும் மாநகரங்களுடனும் ரயில் மார்க்கத்தில் சென்னை இணைக்கப்பட்டு உள்ளது.

**விமான மார்க்கம் :** இந்தியன் ஏர்லைன்ஸ் சர்வீஸ், சென்னையை ஏனைய இந்தியப் பெரு நகரங்களுடன் இணைக்கிறது. ஏர் இந்தியா நிறுவனமும் பணியாற்றுகிறது. மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், ஆகிய வெளிநாடுகளுக்கும் சென்னையிலிருந்து விமானங்கள் செல்கின்றன.




'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிகமாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.
தவிர, முழு ஆயுள் பாதுகாப்பும் கிடைக்கிறது.

'பணம் மற்றும் பாதுகாப்பு (கேஷ் அண்ட் கவர்) பாலிஸி'

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

'வளரும் பாதுகாப்புப் பாலிஸி'

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங்களில் கூடிக் கொண்டே போகிறது.

மாறிவரும் காலங்களுக்கும்...
மாறிவரும் தேவைகளுக்கும்.
லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன் ஆப் இந்தியா

JaCunha/LIC/38 TAM

# செயின்ட் ஜார்ஜ் கோட்டை

கி.பி. 1630-ஆம் ஆண்டில், ஆங்கிலக்கிழக்கிந்தியக்கம்பெனி, தனது வர்த்தகத்தை இந்தியாவின் இரு கடற்கரைகளிலும் துவக்கியபோது, தலைமை அலுவலகத்தை வைத்துக் கொள்வதற்குச் சரியான இடம் தேடிக் கொண்டிருந்தது. அப்போது 'பிரான்சிஸ் டே' என்பவர், சென்னையில், சிறிய மீன் பிடி கிராமமாக இருந்த மெட்ராஸ் பட்டணம் என்ற ஊரைக் கண்டார். அப்போது அதற்குப் பொறுப்பாளராக இருந்தவரிடம் மூன்று மைல் பரப்பளவு உள்ள இடத்தைப் பெற்ருர். இந்த ஒப்பந்தம், 1639 ஜுலை 22-ஆம் தேதி நடைபெற்றது.

பின்னர் இந்த இடத்தில் கோட்டை கட்டப்பட்டது. 1640 மார்ச் 1-ல், பிரான்சிஸ் டே தனது அலுவலை இந்தக் கோட்டையில் துவக்கிஞர். கட்டட வேலைகள் முழுவதும் செயிண்ட் ஜார்ஜ் பிறந்த நாளான ஏப்ரல் 23-ல் முடிவடைந்ததாகக் கருதப்படுகிறது. அதனுல்தான் அந்தக் கோட்டைக்கு ஜார்ஜின் பெயரை சூட்டியதாக, டே விளக்கம் சொல்லியிருக்கிருர். இவ்வாறு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை 1641 செப்டம்பர் 24-ஆம் தேதியிலிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி ஏஜென்சிகளின் இருப்பிடமாகியது. அன்று முதல் சென்னை நாள்தோறும் வளரத் தொடங்கியது—இன்றும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில், ஆங்கில அரசின் வரலாறே உருவாகியுள்ளது. ஏல், ராபர்ட் கிளைவ், வெல்லஸ்ஸி, மெக்கன்ஜி, மன்ரோ, வில்லியம் பெண்டிங்க், வாரன் ஹேஸ்டிங்க்ஸ், காரன் வாலிஸ், மற்றும் வெல்லிங்டன் ஆகிய ஆங்கில ஆட்சி அதிகாரிகள் எல்லாம் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்தே ஆண்டு வந்துள்ளனர்.

அநேகம் பேர், இங்கு தங்கியிருந்து வர்த்தகத்தைக் கற்றுக் கொண்டனர். மிகப் பலர் — இன்றும் நீடித்து நிற்கும்—இந்தக் கோட்டையின் நான்கு சுவர்களுக்குள் வாழ்ந்தவர்கள்.



தலைமைச் செயலகம்



புனித ஜார்ஜ் கோட்டை (1785)

### செயிண்ட் மேரீஸ் ஆலயம்

கோட்டையில் உள்ள இந்த ஆலயம், 1678ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப் பெற்று, 1680-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாளில் கட்டி முடிக்கப் பெற்றது. இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட முதல் ஆங்கிலேய ஆலயமான இது, ஆசியாவிலேயே மிகப் புராதனமான ஆலயங்களில் ஒன்ருகும். கோட்டையில் அப்போது வாழ்ந்து வந்தவர்களிடம் நிதி உதவி பெற்று உருவாக்கப்பட்டது இந்த ஆலயம். இந்த ஆலயத்தில்தான் சர் ராபர்ட் கிளைவுக்கும் 'மார்க்கரெட் மாஸ்கிலென்' என்பவளுக்கும் 1753-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் திருமணம் நடைபெற்றது.



கிளைவ்

### கிளைவ் இல்லம்

கிளைவ் அப்போது வாழ்ந்த இடம், முதன் முதலில் ஓர் ஆர்மீனிய வியாபாரியின் குடியிருப்பாக இருந்தது; அதன் பின் இது கடற்படை அலுவலகமாக-கப்பல் துறை நீதிமன்றமாக விளங்கியது. பின்னர், கவர்னர்கள் இதனை நகர இருப்பிடமாக ஆக்கிக் கொண்டனர். அதன் பின்னர் 1802...

இந்த இடம் கேளிக்கை நடைபெறும், இடமாக விளங்கியது. இன்று இந்த இடம் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகமாக உள்ளது. இந்தக் கட்டடத்துக்குள் 1975-ஆம் ஆண்டில் கிளைவுக்கு ஒரு நினைவுச் சின்னம் 'கிளைவ் முனை' நிறுவப்பட்டது.

### தலைமைச் செயலகம்

கிளைவ் வருவதற்கு முன்னுல், ஏல் என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியராக 1672-ஆம் ஆண்டிலிருந்து பணி புரிந்தார். 1687 முதல் 1692 வரை இவர் கவர்னராக இருந்தார். ஆரம்ப காலச் சென்னையின் வளர்ச்சிக்கு மாபெரும் பணிகளைச் செய்திருக்கிருர் ஏல். அவரது முயற்சியால் தான் சென்னை மாநகராட்சி உருவாகியது. கடலூரில் உள்ள டேவிட் கோட்டை உருவாகியது. பிரெஞ்சுக்காரர்கள் சென்னையிலுள்ள செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைப் பிடித்துக் கொண்ட போது, கடலூர் கோட்டைதான் ஆங்கிலேயர்களுக்குப் புகலிடமாக விளங்கியது.

ஏல், பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் சென்னையிலேயே வாழ்ந்து வந்தார். என்ருலும் அவர் கவர்னராக இருந்த போது, கோட்டையில் வாழ்ந்த நாட்கள்—கம்பெனியின் குழு அறையை உருவாக்கிய நாட்கள்—குறிப்பிடத் தக்கவை என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இல்லை. இந்த அலுவலகம் 1694-95-ல்

செயிண்ட் மேரீஸ் ஆலயம்





ஏல்

தகர்க்கப்பட்டு, அதன் இருப்பிடத்திற்குக் கிழக்கே மூன்று மாடிக் கட்டடம் எழுப்பப்பட்டது. அந்தப் புதிய இடம்தான் இன்றைய தலைமைச் செயலகம். அதன் முன் பகுதிகள் 1825-ல் இணைக்கப்பட்டன. சென்னையில் இன்று காணப்படும் நவீனபாணிக் கட்டடங்களில் இந்தக் கட்டடத்தின் உட்புறப் பகுதி இரண்டாவது பழமை பெற்றது. செயிண்ட் மேரீஸ் ஆலயத்தை விடப் பதினைந்து ஆண்டு வயதில் சிறியது இது.

இன்று, கோட்டையில் அழகாகக் காட்சி தரும் தலைமைச் செயலகக் கட்டடம்—செயிண்ட் மேரீஸ் ஆலயத்தை விட மேல் ஓங்கி நிற்கிறது. இதன் முன் பகுதியில் மாநிலச்சட்ட மன்றமும் சட்ட மேலவையும் இடம் பெற்று உள்ளன. இரண்டாவது மாடியில் தமிழ்நாடு அரசின் அலுவலகங்கள் இடம் பெற்றுள்ளன. மனத்தைக் கவரும் போர்டிகோவும் கவுன்சில்களுக்குச் செல்லப் பயன்படும் மாடிப்படிகளும் கொண்டது இது; இந்தக் கட்டடத்தின் தனி அழகு—அதன் சிரம்போலத் திகழும் தூண்களே!



"கடைசிச் சாப்பாடு" ஓவியம்

செயிண்ட் மேரி ஆலயத்தில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற பொருள்களில், மிகவும் குறிப்பிடத்தக்கது, "கடைசிச் சாப்பாடு, ஓவியமாகும். 16-ஆம் நூற்ருண்டில் வரையப்பட்ட இந்த ஓவியம் வழிபடும் இடத்தினருகில் சுவரில் தொங்கவிடப்பட்டுள்ளது.

### கோட்டையிலுள்ள அரும்பொருட் காட்சியகம்

தலைமைச் செயலகத்தின் வடபுறத்தில் உள்ளது கோட்டை அரும்பொருட் காட்சியகம். இந்தக் கட்டடத்தில் பல்லாண்டுகளுக்கு முன்பு கோட்டை அதிகாரிகளின் உணவுக் கூடம் இருந்தது. இந்த இடத்தில் முதன் முதலில் ஒரு வணிகரின் குடியிருப்பு இருந்தது. அது மாற்றம் செய்யப்பட்டு, தற்போது காணப்படும் தோற்றம், 1787 லிருந்து 1790க்குள் உருவாக்கப்பட்டது ஆகும்.

இந்த அரும்பொருட் காட்சியகம் 1948-ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. சென்னையை உருவாக்கிய புகழ்பெற்ற மனிதர்களின் கைப்பட எழுதிய கடிதங்கள் இங்கே சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. பழைய கால ஓவியங்களும் உருவப் படங்களும் இந்தக் காட்சியகத்தின் சுவர்களை அணி செய்கின்றன. பழங்கால ஆயுதங்கள், துப்பாக்கிகள், நாணயங்கள், வெள்ளியாலான பொருள்கள், பீங்கான் தட்டுகள், கையெழுத்துப் பிரதிகள், செதுக்குச் சிற்பப் பொருள்கள், சீருடைகள் ஆகியவை சேகரிக்கப்பட்டு, அழகுற வைக்கப்பட்டுள்ளன. ராபர்ட் கிளைவ் எழுதிய கடிதம் இங்கே வைக்கப் பெற்றுள்ளது.

கோட்டையிலுள்ள அரும்பொருட் காட்சியகம்



## சின்ன இங்கிலாந்து

தருமபுரி மாவட்டத்தின் வடமேற்குப் பகுதி, விடுமுறையை இனிமையாகக் கழிப்பதற்கும், இயற்கை எழில்களைக் கண்டு களிப்பதற்கும் ஏற்றதாகும். வசந்த காலத்தில் இங்கிலாந்தின் கிராமியப் பகுதிகளில் உள்ள பள்ளமான பகுதிகளும், கால நிலைமையும் எப்படியிருக்குமோ அதேபோல், தருமபுரி மாவட்டத்தில் தளி என்ற பகுதியில் காணப்படும் பள்ளங்களும், காலநிலையும் காணப்படுவதால் அப்பகுதி 'சின்ன இங்கிலாந்து' (Little ...

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் அருவி, கண்ணுக்குக் குளிர்ச்சியையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும், உடலுக்கு வலிமையையும் அளிக்கும் கவர்ச்சி மிகு சுற்றுலா இடமாகத் திகழ்கிறது.

கிருஷ்ணகிரி அணை, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மற்றுமோர் இடமாக விளங்குகிறது.

அதியமான் கோட்டையும், அங்கு எஞ்சியிருக்கும் தொல் ...

திருமலை மற்றும் அனுமான் தீர்த்தம் ஆகிய புனித யாத்திரைத் தலங்களும் சுற்றுலாப் பயணிகளை நன்கு கவர்ந்துள்ளன.

தருமபுரி மாவட்டத்தின் வட பகுதியில் 'பாராமகால்' என்று வழங்கப் பெறும் 12 பழமைமிகு மலைக்கோட்டைகளும் உள்ளன. இவை ஹைதர்அலி, திப்புசுல்தான் ஆகியோர்களின் போர்த் திறனுக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

## ஆடை நிறைந்த அதிகப்படியான பால் பெறுவதற்கு பத்திரமான, விஞ்ஞான ரீதியான வழி இதோ!

# புதிய, மேம்படுத்திய ஏபிஸ் பூன்-ஓ-மில்க்®

**ஹார்மோனற்ற ஆறு கெலெக்டோகாக்குகளினால் வலுவூட்டப்பட்டது**

புதிய, மேம்படுத்தப்பட்ட பூன்-ஓ-மில்க், பால் கறவையையும், பாலில் வெண்ணெய் சத்தையும் பத்திரமாக விஞ்ஞான ரீதியில் அதிகமாக்குவதற்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் அடங்கப்பெற்றது :

- பால் கறவையை 10% அதிகமாக்குவதற்கென ஆறு கெலெக்டோகாக்குகள்
- வெண்ணெய் சத்தைக் குறைந்த பட்சம் 15% அதிகமாக்குவதற்கென, விரைவில் ஆவியாகும் ஃபேட்டி ஆஸிட்கள்—அஸிடேட்டுகளும், பூடைரேட்டுகளும்.

இதில் தைரோபுரோட்டீன் எதுவும் கிடையாது.

பூன்-ஓ-மில்க் இன்னும் பல பயன்களைத் தருகிறது

- பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- சினைத் திறனை உயர்த்துகிறது.
- மாடுகள் முற்றிலும் ஆரோக்கியமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது அழகான, புதிய பிளாஸ்டிக் ஜாடிகளில 1 கிலோ மற்றும 450 கிராமில கிடைக்கிறது




நீங்கள் ஒவ்வொரு மாட்டிலிருந்தும் ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.834/- லாபம் பெறலாம். அதிகப்படி தீவனம் தேவையில்லை.



**பூன்-ஓ-மில்க்® பத்திரமாக விஞ்ஞானரீதியில் ஆடை நிறைந்த அதிகமான பாலைப் பெறுவதற்கு.**

ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்: ஏபிஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட். த.பெ. 9417 பம்பாய் 400 093

Grant.21.T16

விநியோகஸ்தர்கள் : நடராஜ் ஏஜென்சீஸ், 34, கடை வீதி, கோபிச்செட்டிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். இண்டோமாக் கார்ப்பரேஷன், 3, கொல்லன் பட்டறைத் தெரு, கீழவெளி வீதி, மதுரை-1. டீலர்கள் : சந்திரசேகரன் அண்ட் கோ, எண். 2, ஏ. கே. எம். செட்டியார் அங்காடி, வேலூர்-632004, வட ஆர்க்காடு மாவட்டம். லக்ஷ்மி எண்டர்பிரைசஸ், எண். 62, கீழ்க் கடை வீதி, உதக மண்டலம், நீலகிரி. ராக்போர்ட் ஏஜென்சீஸ், 87[ஏ, சுண்ணாம்புக்காரச் சந்து, திருச்சி-5. செந்தூரன் ஏஜென்சீஸ், இந்திரா காந்தி நகர், திருநகர், 3-வது தெரு, காரைக்குடி-1.

டீலர்கள் இல்லாத பகுதிகளுக்கு டீலர்கள் தேவை.


# நவரை நெல் சாகுபடியில் நன் மகசூல் பெற்றிட...



இன்றென நெல் மகசூல் குவித்திட, நவரைப் பருவமே (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) மிகமிகச் சிறந்தது என்பது ஆராய்ச்சி, அனுபவம் ஆகிய இரண்டின் அடிப்படையாகவும் தெரிய வருகிறது. மப்பும், மந்தாரமுமான வானமும், குறைவான சூரிய ஒளியும் கொண்ட முன்பருவத்தை ( Khariff season ) விட, தெளிவான வானமும், நிறைந்த சூரிய ஒளியும் கொண்ட பின்பருவத்திலேயே (Rabi Season) உயர் விளைச்சல் ரகங்கள், உயர்ந்த அளவு மகசூலைத் தருகின்றன. இதற்குக் காரணம் மூன்று. அவை:

(1) நவரைப் பருவ நெற்பயிரின் கடைசி 45 நாட்களில் துல்லியமான (பிரகாசமான) சூரிய ஒளி நிறையக் கிடைப்பதால், ஒளிச் சேர்க்கை நன்கு நடைபெற்று, நெல்லின் பூங் கொத்துக்களில் (Panicles) உள்ள பூ மொட்டுகள் ( Spikelets ) அனைத்திலும் மாவுப் பொருள்கள் நிரம்பி (பால் பிடித்து) தானியமணிகள் நன்கு திரண்டு முதிர்ச்சி அடைகின்றன.

(2) நவரைப் பருவத்தில் மழை இல்லாத காரணத்தால் பாசன நீரைக் கட்டுப்படுத்த முடிகிறது. இதனால் நெற்பயிரின் ஆரம்ப கால வளர்ச்சி, தூர் கிளைப்பு ஆகிய இரண்டும் துரிதமாகவும், துடிப்பாகவும் நடைபெற்று, மகசூலை உயர்த்துவதற்கு முதற்காரணமாக உள்ள பயன்தரு பூங்கொத்துகள் ஏராளமாகத் தோன்றுகின்றன.

(3) நவரைப் பருவத்தில் வானம், மப்பும் மந்தாரமும் இன்றித்தெளிவாக இருப்பதாலும் காற்றில் ஈரம் குறைவாக இருப்பதாலும், நவரைப் பருவ நெற்பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை.

இம்மூன்று காரணங்களாலேயே, நவரைப் பருவத்தில், 'அதிசய நெல்' எனப்படும் 'ஐ. ஆர். 8' ரக நெல் ஏக்கருக்கு 3 முதல் 3.28 மெட்ரிக் வரை (எக்டேருக்கு 7.5 முதல் 8.2 மெட்ரிக் டன் வரை) மகசூல் கொடுத்துள்ளது. சில முன்னேடி உழவர் பெருமக்கள் நவரைப் பருவத்தில் 'ஐ. ஆர். 8' பயிரிட்டு ஏக்கருக்கு 4 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான மகசூல் பெற்றுள்ளனர். எனவே, நெல் உற்பத்தியைப் பெருக்கிட நவரைப் பருவத்தில் நல்ல வாய்ப்புகள் உள்ளன என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 67 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடியாகிறது. அதில் 4.56 இலட்சம் ஏக்கரில் மட்டும் நவரைப் பருவத்தில் சாகுபடியாகிறது. இப்பரப்பளவு

முழுவதிலும், முறையாக உயர்விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டால், குறைந்தது 9.12 இலட்சம் மெட்ரிக் டன் (ஏக்கருக்குச் சராசரியாக 2 மெட்ரிக் டன் வீதம்) நெல் விளைவிக்க முடியும். இந்த அளவு நெல் விளைவித்தால் இந்த ஆண்டின் நவரைப் பருவ முடிவில் (ஏப்ரல் அல்லது மே மாதத்தில்) குறைந்தது 6 இலட்சம் டன் அரிசி தமிழ்நாட்டில் உற்பத்தியாகும்.

எனவே, தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நவரைப் பருவத்தில் உயர்விளைச்சல் தரும் ரகங்களைப் பயிரிட்டு, பயன்மிகப் பெற்று வளமோடு வாழுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்வதுடன், நவரைப் பருவத்தில் நெல் உற்பத்தி செய்யவிருக்கும் தமிழக உழவர் பெருமக்களுக்கு 'உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள்' 'நெல் உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்' ஆகிய இரண்டையும் ''தமிழரசு'' இதழின் காணிக்கையாக, ஈண்டு படைத்துள்ளோம்.



### உயர்ந்த நெல் மகசூல் பெறும் நுட்பங்கள்

நெல் சாகுபடியில், மிகமிக உயர்ந்த அளவு மகசூல் பெறுவதற்குப் பின்கண்டவை காரணங்களாக உள்ளன.

(1) குறிப்பிட்ட பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் (Panicles) எண்ணிக்கை.

(2) ஒவ்வொரு பூங்கொத்திலும் உள்ள பூமொட்டுக்களின் (Spikelets) எண்ணிக்கை.

(3) முதிர்ச்சி அடையும் மணிகளின் சதவீதம்.

(4) தனி ஒரு நெல்லின் சராசரி எடை (1,000 நெல்லின் எடை).

ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 400 பூங்கொத்துக்கள் தோன்றி, அவை ஒவ்வொன்றிலும் சராசரியாக 100 நெல் மணிகள் முதிர்ச்சி அடைந்து, 1,000 நெல் மணிகளின் எடை 20 முதல் 22 கிராம் எடை என்ற அளவில் இருந்தால், ஒரு ஏக்கரில் இருந்து சராசரியாக 3.25 மெட்ரிக் டன் முதல் 3.5 மெட்ரிக் டன் வரை மகசூல் பெறமுடியும் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வருகிறது. ஆனல் 1972-73-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ்நாட்டின் சராசரி ஏக்கர் நெல் உற்பத்தி 800 கிலோ (எக்டேருக்கு 1,999 கிலோ) என்ற அளவிலேயே உள்ளது. எனவே, சராசரி ஏக்கர் உற்பத்தியைப் பெருக்க, மேற்கூறிய நான்கையும் அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு அதிகப்படுத்தப் பின்கண்ட 4 முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1. ஒரு சதுர மீட்டர் பரப்பில் தோன்றும் பூங்கொத்துக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, போதிய அளவு இரசாயன உரத்தை அடியுரமாக இடுவதுடன், பயிரின் ஆரம்ப காலத்திலேயே போதிய அளவில் மேலுரமிட வேண்டும்.

2. பூங்கொத்தில் பூ மொட்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, பூங்கொத்து உருவாகும் தருணத்தில், தழைச்சத்தை அல்லது தழைச்சத்து, மணிச்சத்து ஆகிய இரண்டையும் சேர்த்து மேலுரமாக இடவேண்டும்.

3. பூங்கொத்தில் ஏராளமான பூ மொட்டுகள் நசித்துக் காணப்படுவதைத் தவிர்க்க, பூங்கொத்து வெளியே தோன்றுவதற்கு 15 நாட்கள் முன்பாக மேலுரமிட வேண்டும்.

4. முதிர்ச்சி அடைந்த மணிகளின் சதவீதம் குறைவாக இருப்பதற்கு, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தவருன சாகுபடி நிருவாகமே காரணமாகும். இதைத் தவிர்க்க, பூங்கொத்து உருவாகுதல் முதல் பூங்கொத்து வெளியே தோன்றுதல் வரையான காலத்தில் போதிய பாசன வசதி அளிக்க வேண்டும். தேவையாஞல் பூ நிறைந்த சமயத்தில், மேலுரமும் இடவேண்டும்.

உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும் மேற்கூறிய 4 அடிப்படைகளுள், ஒரு சதுரமீட்டரில் தோன்றும் பூங்கொத்துகளின் எண்ணிக்கையே குறிப்பிட்ட ரகத்தில் மகசூல் வேறுபாட்டிற்கு மூலகாரணமாக உள்ளது. எனவே, உயர்ந்த மகசூல் பெறுவதற்கு மூலகாரணமாக உள்ள பூங்கொத்துக்களின் எண்ணிக்கை, பூ மொட்டுகளின் எண்ணிக்கை, முற்றும் மணிகளின் சதவீதம், மணிகளின் எடை ஆகிய நான்கையும் அதிகப்படுத்த, பின்கண்ட 6 வழிகளையும் ஒருங்கிணைத்து நெல் சாகுபடி செய்யவேண்டும்.



## நெல் உற்பத்தியைப் பெருக்க 6 வழிகள்

### 1. நவரைப் பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களில், பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுதல்.

ஆராய்ச்சி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பின்கண்ட ரகங்களை நவரைப் பருவத்தில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்ருேம்.

| வரிசை எண். | ரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | பயிரிடுவதற்கு ஏற்ற மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | ஐ.ஆர். 8 | 135 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 2. | பவானி | 135 | கோவை, இராமநாதபுரம், தருமபுரி, மதுரை, சேலம் |
| 3. | வைகை | 115 | தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு. |
| 4. | ஜெயா | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |
| 5. | ஐ.ஆர். 20 | 125 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், கோவை, தருமபுரி. |
| 6. | ரத்ஞ | 120 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி. |
| 7. | காஞ்சி | 107 | ,, |
| 8. | காவேரி | 105 | ,, |
| 9. | அன்னபூர்ஞ | 105 | எல்லா மாவட்டங்களுக்கும் (நீலகிரி தவிர) |
| 10. | கண்ணகி | 103 | ,, |
| 11. | கரிகாலன் | 110 | தஞ்சாவூர். |
| 12. | ஆடுதுறை-27 | 105 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, சேலம், கோவை, தருமபுரி. |
| 13. | டி. கே எம்.-6 | 115 | ,, |
| 14. | கோ.-29 | 110 | ,, |
| 15. | டி. கே. எம்.-7 | 108 | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |

மேற்கூறிய விவரங்களில் இருந்து, உங்களுக்குப் பொருத்தமான ரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்ருேம்.



## 2. பயிர்களின் எண்ணிக்கையைப் போதிய அளவில் இருக்கச் செய்தல்

குறிப்பிட்ட பரப்பில், போதிய அளவு எண்ணிக்கையில் பயிர்களை இருக்கச் செய்ய பின்கண்டவாறு நாற்று விடுதல், நடவு வயல் தயாரித்தல், நடவு செய்தல் ஆகியவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

### அ. நாற்று தயாரித்தல்

1. ஜனவரி 1 முதல் 15 ஆம் தேதிக்குள் நாற்று விட்டால் நவரைப் பருவ நெல்லில் உயர்ந்த மகசூல் பெறலாம்.

2. இதுவரை மேற்கொள்ளப் பெற்ற பரிசோதனைகளில் இருந்து சேற்று நாற்றங்கால் (Wet-Nursery) அமைப்பதே சிறந்தது எனத் தெரிய வருகிறது. ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பில் நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

3. நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு இட வேண்டும்.

4. நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 250 கிலோ சூப்பர் பாஸ்பேட் வீதம் இடுவது சிறந்தது. இவ்வாறு செய்தால், குளிரின் காரணமாக நாற்றுகளின் வளர்ச்சி தடைபடுவதைத் தவிர்க்கலாம்.

5. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 2 கிலோ விதை வீதம், விதைப்பது சிறந்தது.

6. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'பிளிட் 406' மருந்து அல்லது அக்ரசான் மருந்து வீதம் கலக்க வேண்டும்.

7. நாற்றுவிட்ட ஒரு சில நாட்கள் வரை, நாற்றங்காலில் தண்ணீர் அதிகம் தேங்கி நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

8. ஒரு சில செண்டிமீட்டர் உயரம் வரை நாற்று வளர்ந்த பிறகு, நாற்றங்காலில் குறைந்த அளவு தண்ணீர் நிற்கச் செய்ய வேண்டும்.

9. நாற்று நன்கு வளராமல் இருந்தால் நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக, ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு அரை கிலோ அமோனியம் சல்பேட் வீதம் தூவ வேண்டும்.

10. நாற்றுவிட்ட 10-வது நாளிலும், 20-வது நாளிலும், ஒரு ஏக்கர் நாற்றங்காலுக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' மருந்தை 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

### ஆ. நடவு வயல் தயாரித்தல்

1. நடவு வயலை, நடுவதற்கு 15 நாட்கள் முன்பாகவே போதிய அளவில் உழுது சேருக்க வேண்டும்.

2. நிலத்தின் அடியில் தண்ணீர் வடிவதையும் ( Percolation ) களைகள் முளைப்பதையும் குறைத்திடுவதற்கு மீண்டும் மீண்டும் உழவேண்டும்.

3. நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு அல்லது 5 வண்டி தழை எரு வீதம், நடுவதற்கு 10 முதல் 15 நாள் முன்பாக இடவேண்டும்.

4. அடி உரமாக இரசாயன உரத்தை இடுவதற்கு முன்பாகவே, நிலத்தைச் சமப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வது, ஒரே மாதிரியாகப் பயிர்கள் வளரவும், பாசன நீரை முறையாகக் கட்டுப்படுத்தவும் உதவிடும். நடுவதற்கு முன்பாக நிலத்தைச் சமப்படுத்துவதற்குச் செய்யும் செலவை, சமப்படுத்துவதனால் கிடைக்கும் அதிக மகசூலில் இருந்து பெறமுடியும்.

5. கடைசி உழவு செய்வதற்கு முன்பாக அடியுரத்தை இட வேண்டும். ஆனால் அடியுரமிடுவது, நடுவதற்கு முன் 1 முதல் 3 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

6. அடியுரமிட்ட நாளிலிருந்து நடவு, செய்யும் நாள்வரை, வயலில் தண்ணீர் நிற்க வேண்டும்.

### இ. நடவு செய்தல்

1. அதிக மகசூல் பெற, நாற்றுக்களை 4 முதல் 5 இலையாக உள்ளபொழுது (விதைத்த 20 முதல் 25 நாளில்) நட்டுவிட வேண்டும். (வளர்ப்பு 7711-ன் நாற்றுகளை 18 முதல் 20 நாட்களில் நட்டுவிடுதல் சிறந்தது).

2. ஒரு பங்கு சூப்பர்பாஸ்பேட், ஒரு பங்கு மண், இருபங்கு தண்ணீர் ஆகிய மூன்றும் கலந்த கலவையில் நாற்றுகளின் வேர்ப் பகுதியை நனைத்து நடவு செய்ய வேண்டும்.

3. தூர் அதிகமாகக் கிளைக்க குறுகிய கால வயதுடையதும், குட்டையானதுமான ரகங்களை வயலில் 1.5 முதல் 2 செண்டி மீட்டர் ஆழத்தில் மேலோட்டமாக நடவேண்டும்.

4. நடும்பொழுது ஒவ்வொரு தூரிலும் 3 பயிர் இருக்குமாறு நடவேண்டும்.

5. உயர்ந்த மகசூல் பெறவும், எளிதில் களையெடுக்கவும் வரிசைக்கு வரிசை 15 செண்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் தூருக்குத் தூர் 10 செண்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி விட்டு நடுவது சிறந்தது.



6. மேலுரமிடுதல், மருந்து தெளித்தல் அல்லது தூவுதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு வசதியாக நடவு வயலில் 25 அடி இடைவெளியில் நடைபாதைக்காக 1 அடி அகல இடைவெளிவிட்டு நடவு செய்தல் நல்லது.

7. நடப்பட்ட பயிர்கள் இறப்பதைத் தடுக்க, நடவு செய்த வயலுக்கு நடவுசெய்த 3 முதல் 5 நாட்களுக்குள் இலேசாகத் தண்ணீர் பாய்ச்சுதல் சிறந்தது.

## 3. காலத்திலும், போதிய அளவிலும் நடவு வயலுக்கு இரசாயன உரமிடுதல்

இதுவரை மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சி மற்றும் அனுசரணை ஆராய்ச்சி ஆகியவைகளின் முடிவுகளையும், இரசாயன உரப்பற்றுக்குறை நிலைமையையும் கருத்திற் கொண்டு பின்கண்டவாறு இரசாயன உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

### அ. இரசாயன உர அளவு (ஏக்கருக்கு)

| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
|---|---|---|---|
| | (கிலோவில்) | | |
| 1. குட்டையான ரகங்கள் | | | |
| (1) ஐ.ஆர். 8, ஜெயா | 50 | 25 | 25 |
| (2) ஐ.ஆர். 20, ரத்னா, பவானி, காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி, வைகை, அன்னபூர்ணா, வளர்ப்பு 8946, வளர்ப்பு 1251...... | 40 | 20 | 20 |
| (3) வளர்ப்பு 7711 | 30 | 15 | 15 |
| 2. நெட்டையான ரகங்கள் | | | |
| ஆடுதுறை-27, கோ. 29, டி.கே.எம். 6, டி.கே.எம். 7 | 30 | 15 | 15 |

### ஆ. இரசாயன உரமிடும் காலம் :

#### அடியுரம்

பரிந்துரைக்கப்பட்ட அளவு தழைச்சத்தில் பாதியையும், மணிச்சத்து,சாம்பல், சத்துக்களின் முழு அளவையும் அடியுரமாக இட வேண்டும்.

#### மேல் உரம்

மீதியுள்ள பாதி தழைச்சத்தைப் பின்கண்டவாறு இட வேண்டும்.

(1) கெட்டியான களிமண் நிலங்களுக்கு ஒரே தடவையாக தூர்கிளைக்கும் உச்சக் கட்டத்தில் மேலுரமிடவேண்டும்.

(2) நடுத்தர மண் நிலங்களுக்கு 2 தடவைகளில் மேலுரமிட வேண்டும். தூர் கிளைக்கும் உச்சக்கட்டத்தில் முதல் முறையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் இரண்டாவது முறையும் மேலுரமிட வேண்டும்.

(3) இளகிய மண் நிலங்களுக்கு 3 தடவைகளில் மேலுரமிட வேண்டும். தூர் கிளைக்கும் உச்சக் கட்டத்தில் முதல் தடவையும், பூங்கொத்து உருவாகும் தருணத்தில் 2-வது தடவையும், பூங்கொத்து வெளியே தோன்றும் தருணத்தில் 3-வது தடவையும் மேலுரமிட வேண்டும்.

## 4. களைகளைக் கட்டுப்படுத்தல்

நடவு வயலுக்கு இட்ட இரசாயன உரத்தை இழுத்துக் கொள்வதில் நெற்பயிர்களுடன் களைகள் போட்டியிடுகின்றன. மேலும் பூச்சிகள் மற்றும் நோய்கள் வாழ்வதற்கு உதவும் மாற்றுப் பயிராகவும் களைகள் இருக்கின்றன. எனவே, காலத்தில் களையெடுக்க

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனல் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும்போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1163


**5. தகுந்த நீர்ப்பாசன நிருவாகத்தை மேற்கொள்ளல்**

முறையான பாசன நிருவாகத்தை மேற்கொண்டால் பின்கண்ட பயன்கள் ஏற்படுகின்றன.

*(1)* தூர்கள் கிளைக்கும்

*(2)* இடப்பட்ட தழைச்சத்து சேதமாகாமல், பயிர்களுக்குக் கிடைக்கும்.

*(3)* களைகள் கட்டுப்படுத்தபபடும்.

*(3)* மேலுரமிடுவதற்கு முதல் நாளே வயலில் இருந்து தண்ணீரை வடித்து விட வேண்டும். மேலுரமிட்ட 24 மணி நேரத்தில் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

*(4)* அறுவடை செய்வதற்கு ஒரு வாரம் முன்பாக வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும்.

**6. பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பாற்றுதல்**

நோய் வந்தபின் தடுப்பதை விட, நோய் வரும் முன்பே தடுப்புச் செய்வதே சிறந்தது.



*(4)* மொத்தம் தேவைப்படும் தண்ணீரின் அளவு குறையும். எனவே, பாசன நிருவாகத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நெல்லைப் பொறுத்தவரையில், உச்சக் கட்ட தூர் கிளைப்புக் காலத்திலிருந்து, நெல் மணிகள் உருவாகும் காலம் வரை (பால் பிடிக்கும் தருணம்) தண்ணீர்த் தட்டுப்பாடே இருக்கக்கூடாது. அப்பொழுது தண்ணீர்க் தட்டுப்பாடு இல்லாதிருந்தால்தான், எந்த ரகமும், மகசூல் தரும் தன்மையை முழு அளவில் வெளிப்படுத்தும்.

எனவே, பின்கண்ட பாசன நிருவாகத்தை மேற்கொள்வது சிறந்தது.

*(1)* நடவு செய்யும்போது வயலில் 1 முதல் 2 சென்டிமீட்டர் ஆழ தண்ணீர் நிற்க வேண்டும். பிறகு வயலில் 2.5 சென்டிமீட்டர் (1 அங்குலம்) தண்ணீர் நிற்க வேண்டும். நடவு செய்த 15-வது நாள் தண்ணீரை வடிக்கலாம். ஆனல் வயலை வெடிக்க விடக்கூடாது.

*(2)* பயிர், பச்சை கட்ட ஆரம்பித்த பிறகு, வயலில் 2 அங்குல ஆழத்திற்குத் தண்ணீர் நிற்கச் செய்வது அவசியம்.

துப்புரவான சாகுபடி, பருவத்தில் நடுதல், காலத்தில் களையெடுத்தல் ஆகியவை நல்ல திடமான பயிர்கள் அமையவும், மேலும் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவும் உதவும். பூச்சிகள் அல்லது நோய்கள் தோன்றிய உடன், காலத்தில் மருந்தடித்தால், அவைகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி விடலாம். காலங் கடந்து மருந்து தெளிப்பதையும், பொருத்தமற்ற மருந்தைத் தெளிப்பதையும், குறைவான அல்லது அதிகமான அடர்த்தியில் மருந்து தெளிப்பதையும் தவிர்க்கவேண்டும். வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதே, உயர்ந்த மகசூலுக்கு வழிகோலும்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய 6 முறைகளையும் ஒருங்கிணைத்து, நவரைப் பருவத்தில் நெல் பயிரிட்டால், குறைந்தது ஏக்கருக்கு 2 மெட்ரிக் டன் மகசூலும், உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3 மெட்ரிக் டன் வரை மகசூலும் பெற முடியுமாதலின், இந்த 6 முறைகளிலும் தீவிர கவனம் செலுத்தி, நவரைப் பருவத்தில் நெல் பயிரிட்டு, பயன்மிகப் பெற்று, வளமோடு வாழும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.



# படமும் செய்தியும்

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் 25-12-1976 அன்று ராஜாஜி நினைவாலயத்தில் உள்ள ராஜாஜி சிலைக்கு மாலையணிவித்தார்.

தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் 31-12-1976 அன்று, சென்னை ராஜாஜி அரங்கில் நடைபெற்ற விழாவில் உயர் செகண்டரி கல்வி வாரியத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.






தமிழகத்திற்கு 2-1-1977 அன்று வருகை தந்த நமது இந்தியக் குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமத் அவர்களையும், அவரது துணைவியார் திருமதி பேகம் அபிதா அகமத் அவர்களையும் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு கோவிந்தன் நாயர் அவர்களுக்கு, 3-1-1977 அன்று ராஜ்பவனத்தில், ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.





தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், தைப் பட்டக் காய்கறிச் சாகுபடி இயக்கத்தைத் துவக்கி வைக்கும் முகத்தான் தலைமைச் செயலகத்தில் காய்கறி விதை விற்பனையை 6-1-1977 அன்று துவக்கி வைத்தார்.



தமிழ்நாட்டிற்கு 4-1-1977 அன்று வருகை தந்த மலேசியா நாட்டுப் பிரதமர் திரு தாதுக் ஹுசைன் பின் ஆன் அவர்களை. தமிழ்நாடு அரசின் இரண்டாவது செய லாளர் திரு சி. வி. ஆர். பணிக்கர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வர வேற்றார்.



தாம்பரம், கொருக்குப்பேட்டை, சி. ஐ. டி. நகர் ஆகிய இடங்களில் வசிக்கும் கிளி ஜோதிடர்கள், வெள்ள நிவாரண நிதிக் காகத் தங்களுடைய ஒரு நாள் வருவாயான ரூபாய் 201-ஐ, தமிழ்நாடு அரசின் நிதித் துறைத் துணைச் செலாளர் திரு சீனிவாச கோபால்ன் அவர்களிடம் கொடுத்தனர்.



டான்சானியா நாட்டுத் தொழில் அமைச்சர் டாக்டர் சி. டி. 'ம்சுயா' அவர்கள் 12-1-1977 அன்று சென்னையில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தைப் பார்வையிட்டார்.



நமது இந்தியக் குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமத் அவர்களுக்கு, மதுரைப் பல்கலைக் கழகம் 3-1-1977 அன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில், உடல்நலம் குன்றியதன் காரண மாகக் குடியரசுத் தலைவர் அவர்களால் கலந்துகொள்ள இயலவில்லை. எனவே, கௌரவ டாக்டர் பட்டம் அடங்கிய அழகு மிகுபேழையையும் கேடயத்தையும் சென்னை ராஜ்பவனில் 7-1-1977 அன்று நடந்த விழாவில், மதுரைப் பல்கலைக் கழக வேந்த ரும், தமிழ்நாடு ஆளுநருமான திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள், நமது குடியரசுத் தலைவர் அவர்களிடம் வழங் கினார்.

ராஜ்பவன் விளையாட்டுச் சங்கத்தின் சார் பில் 14-1-1977 அன்று நடத்தப்பெற்ற பொங்கல் விழாவிற்குத் தமிழ்நாடு ஆளுந அவர்கள் தலைமை தாங்கினார். ஆளுந அவர்களின் துணைவியார் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்.





சென்னை, கொன்னூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 'பிஞ்சராபோல்' என்னும் வயது முதிர்ந்த கால்நடைகள் காப்பிடத்தில், 15-1-1977 அன்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில் மாட்டுப் பொங்கல் விழா நடைபெற்றது.



திருவள்ளுவர் நாள் 15-1-1977 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தமிழ் நாடு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கொண்டாடப்பெற்றது. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். திரு கே. வீரமணியின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.





# கால்நடைகளின் நோய்களும், தடுப்பு முறைகளும்



—டாக்டர் டி. ஜி. அப்துல்காதர்,
ரீடர், நோய்த்தடுப்பு மருத்துவ இயல்துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

நம் நாட்டிலுள்ள மாட்டினங்களை பல விதமான நோய்கள் பாதிக்கின்றன. அதன் மூலம் அவைகள் இறப்பதனுலும் அல்லது அவைகளின் உற்பத்தித் திறன் குறை வதினுலும் பெருத்த பொருளாதாரச் சேதம் ஏற்படுகிறது. இவ்விதமான நோய்கள் நுண் கிருமிகளாலும் ( Bacteria and Viruses ) ஒட் டுண்ணிகளாலும் (Parasites) உண்டாக்கப் படுகின்றன. மேலும் இந்நோய்களில் பல, மனிதர்களுக்கும் பரவக்கூடியது.

இவ்வாறு பரவக் கூடிய நோய்கள் சில வற்றின் காரணக் கிருமிகள் (Causative agents), நோய்க் குறிகள் (Symptoms) பர வும் விதம் ( mode of spread ) அவற்றின் தடுப்பு முறைகள் (Preventive and control measures ) ஆகியவற்றை இங்கு சுருக்கமாக விவரித்துள்ளோம்.

### காசநோய் : (Tuberculosis)

| | |
|---|---|
| காரணக் கிருமி: | 'மைக்கோ பாக்டிரியம் ட்யுபர்குளோசிஸ்' |
| நோய்க் குறிகள்: | துரித உடல் நலிவு, சுவாசக் கோளாறு, இருமல், குடல் பாதிப்பு, |
| பரவும் விதம்: | நுண்ணுயிர் உள்ளகாற்றை சுவாசிப்பதாலும், தீவனம் மூலமாகவும் நோய் பரவுகிறது. |
| தடுப்பு முறைகள்: | கால்நடை மருத்துவர்கள் குறிப்பிடும் நேரங்களில் மாட்டினங்களை அவர்கள் மூலம் சோதனை செய்து, நோயுள்ள மாடுகளை உட னடியாக அழித்திடுதல். தடுப்பு ஊசி மூலம் இந்த நோய் வராமல் தவிர்க்க முடியாது. |

பொதுமக்கள் உடல்நலத தொடர்பு

இந்த நோய் பாதிக்கப்பட்ட மிருகங் களின் மூலம் சுவாசிப்பதாலும் கிருமிகள் உள்ள பாலினுலும், பாலின் மூலம் செய்த மற்ற ஆகாரங்களினுலும் பொதுமக்களுக்குப் பரவுகிறது.

### கன்று வீசுதல் நோய்

| | |
|---|---|
| காரணக் கிருமி: | 'புருசெல்லா அபார்ட்ஸ்' |
| நோய்க் குறிகள்: | ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட கருச் சிதைவு.<br>சினைப்படுதல் ஒழுங்கின்மை உடல் நலக் குறைவு,<br>பலவீனமான கன்றுகள் பிறப்பு,<br>ஈன்றபின் உறுப்பு தங்குதல்,<br>காளைகளின் விதை வீங்குதல், |
| பரவும் முறை: | கிருமிகள் உள்ள தீவனம் மேலும் தண்ணீர் உட்கொள்ளுதல் மூலம், கர்பப் பையிலிருந்து வரும் கழிவு நீர் உட்கொள்ளுதல் மூலம், தோலில் ஏற்படும் காயங்கள் மூலமாகவும் புணர்ச்சியின் மூலமாகவும் பரவுகிறது. |
| தடுப்பு முறைகள்: | கன்றுகளுக்கு 4 முதல் 8 மாதத்திற்குள் தடுப்பு ஊசி போடுதல்<br>நோய்கண்ட மாடுகளை அழித்தல் மேலும் சுகாதாரமான முறையில் தொழுவத்தையும் மாடுகளையும் பாதுகாத்தல். |



தகுந்த தடுப்பு ஊசி போட்டுக் கால்நடைகளைக் காத்திடுவீர்!

### பொதுமக்கள் உடல்நலத் தொடர்பு

பொதுமக்களுக்கு இந்த நோய்க் கிருமி உள்ள பால் மூலம் பரவுகிறது. கால்நடை பராமரிப்பவர்கள், கால்நடை மருத்துவர்கள், இறைச்சித் தொழிலில் ஈடுபட்டவர்கள் மேலும் சோதனைக் கூடங்களில் இந்த நோய்க் கிருமிகளுடன் வேலை செய்பவர்களுக்கும் இந்த நோய் சுலபமாகப் பரவக் கூடும்.

## கோமாரி

காரணக் கிருமி
நுண்ணணுக்கள்

நோய்க்குறிகள்: உடல் வெப்பம் அதிகரித்தல், பசியின்மை, அதிக தாகம், வாயில் நீர் கொப்பளங்கள் ஏற்பட்டு அவை உடைந்து வலியுள்ள புண்கள் உண்டாகுதல் தீவனம் வழங்க இயலாமை

நீர்க்கொப்பளங்கள் குழம்புகளைச் சுற்றிலும் ஏற்பட்டு, உடைந்து, புண்களாகி நிற்பதற்கும் படுப்பதற்கும், நடப்பதற்கும் முடியாமல் மிகுந்த வலியைக் கொடுக்கிறது.

நீர்கொப்பளங்கள் மடியில் ஏற்பட்டு மடிவீக்கம் ஏற்படுகிறது.

நோயின் விளைவுகள் : குழம்புகள் கழன்று விடுதல் கன்றுகளில் உணவுக் குழல் பாதிப்பு, இனவிருத்தி பாதிப்பு, உடல் நலிவு.

பரவும் முறை: கிருமிகள் உள்ள காற்றை சுவாசிப்பதனாலும்தீவனம், தண்ணீர் ஆகியவற்றை உட்கொள்வதாலும், இந்த நோய் பரவுகிறது.

தடுப்பு முறைகள் தடுப்பு ஊசி போடுதல்

### பொது மக்கள் உடல் நலத் தொடர்பு

கிருமிகள் உள்ள பாலை உட்கொள்வதன் மூலம் நோய் கண்ட மாடுகளை பராமரிப்பதன் மூலம் இந்த நோய் மனிதர்களுக்குப் பரவுகிறது.

## வெக்கை

காரணக் கிருமி: நுண்ணணுக்கள்.

நோய்க் குறிகள்: உடல் வெப்பம் அதிகரிப்பு சாம்பல் நிறப் புண்கள் வாயில் உண்டாகுதல், அதிக உமிழ்நீர் சுரந்து ஒழுகுதல், துர்நாற்றமுடைய நீரான சாணம் வீச்சுதல்.

துர்நாற்றமுடைய நீர் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் வடிதல்.

உடல் நலிவு ஏற்பட்டு, 4-7 நாட்களில் இறந்து விடுகிறது.

பரவும் முறை: நோய் கண்ட மாடுகள் மூலம் கிருமிகள் உள்ள தண்ணீர், தீவனம் மூலமாகவும் நோய் பரவுகிறது

தடுப்பு முறை: தடுப்பு ஊசி போடுதல், நோய் கண்ட மாடுகளைப் பிரித்து தனியிடத்தில் வைத்துப் பராமரித்தல், மேலும்

நோயுற்ற மாடுகள் இருந்த தொழுவத்தை நன்கு சுத்தம் செய்து, சுகாதார முறையில் பராமரித்தல்

தடுப்பு ஊசி போட்டு விட்டால் மட்டும் போதாது! தகுந்த உணவும் தர வேண்டும்!



காற்றோட்டமாகவும், சுத்தமாகவும் தொழுவங்களை வைத்திருப்பது நோய்களைத் தடுக்க உதவும்.



### பொதுமக்கள் உடல் நலத் தொடர்பு

பொது மக்களுக்கு இந்த நோய் பரவுவதில்லை.

## வெறி நோய்

காரணக் கிருமி: நுண்ணணுக்கள்.

நோய்க் குறிகள்: காரணமின்றி மற்றப் பொருள்களின் மீதோ உயிரினங்கள் மீதோ தாக்குதல்.

வலிப்பு, அதிக உமிழ்நீர் சுரத்தல், அசை போடுதல் நின்று, வயிற்று மந்தம் ஏற்படுதல், வாதம் ஏற்பட்டு மாடு இறக்கிறது.

பரவும் விதம் வெறிநாய்க் கடி மூலமும் அல்லது வனவிலங்குகள் (நரி, ஓநாய்) கடிப்பதன் மூலமும் இந்த நோய் பரவு

தடுப்பு முறை: வெறிநாய் கடித்த மாடுகளை, கடிபட்ட இடத்தில் ஏற்பட்ட காயத்தை கார்பாளிக் அமிலத்தால் சுத்தப்படுத்த வேண்டும். பின்பு அவற்றிற்கு கிருமி பரவாமல் இருப்பதற்கு 14 நாட்கள் தொடர்ந்து ஊசிபோட வேண்டும்.

வீட்டில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு நோய் வராமல் இருக்க வருடம் ஒரு முறை தடுப்பு ஊசி போட வேண்டும்.

தெருவில் அலையும் நாய்களை அகற்ற வேண்டும்.

வெறிநோயால் பாதிக்கப்பட்ட நாய் என்று சந்தேகப்பட்டால், அவைகளை உடனே அகற்றி தனிப்படுத்தி, கவனித்து, உறுதிப்படுத்த வேண்டும்.

நோய் பரவும் விதம்: வெறிபிடித்த நாய்கள், நரி, ஓநாய் இவைகளினுல் கடிபடுவதன் மூலம் இந் நோய் பரவுகிறது.

### பொதுமக்கள் உடல் நலத் தொடர்பு

பாதிக்கப்பட்ட விலங்கினங்களின் உமிழ் நீர் மற்றும் கழிவுப் பொருட்கள் மூலமாக மனிதனுக்கு இந்நோய் பரவுகிறது.

## தொண்டை அடைப்பான்

காரணக் கிருமி 'பாசுரல்லா மல்டோசிடா'

கால்நடைகளுக்கு வரும் நோய், மனிதர்களையும் தாக்கக் கூடும்! எனவே கால்நடைகளுக்கு வரும் நோயைத் தடுப்பது நம் கடமையாகும்!





நோய்க்குறிகள்: தீவனம் தின்னாமை, காய்ச்சல், காதுகள் கீழ் நோக்கித் தொங்கியிருத்தல், நகருவதற்கு இயலாமை, சளிக் கட்டிக் கொள்ளுதல்—கழுத்துத் தாடை வீங்கிக் கொள்ளுதல்

பாதிக்கப்பட்ட மாடுகள் தகுந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், முடிவில் இறக்க நேரிடும்.

நோய் பரவும் விதம் : நோய்க் கிருமிகள் உள்ள தீவனம், தண்ணீர் மற்றும் பால் மூலம் இந்நோய் பரவுகிறது.

தடுப்பு முறைகள்: (அ) தடுப்பு ஊசி போடுதல்
(ஆ) பாதிக்கப்பட்ட மாடுகளுக்குத் தகுந்த சிகிச்சை அளித்தல்.

(இ) சுகாதாரமான முறையில் மாடுகளைப் பராமரித்தல்

(ஈ) நல்ல காற்றோட்டமான இடத்தில் தொழுவம் அமைத்தல்.

**பொது மக்கள் உடல்நலத் தொடர்பு**

இந்த நோய் மனிதர்களுக்குப் பரவக் கூடியது. இது சுவாச நோய்களை உண்டு பண்ணுகிறது.

**அடைப்பான்**

காரணக் கிருமி: ‘பேசில்லாஸ் ஆந்திராசிஸ்’

நோய்க்குறிகள்: (அ) நோய் முற்றிய நிலைமையிலுள்ள கால்நடைகள் தொழுவத்திலோ அல்லது மேய்ச்சல் தரையிலோ இறந்து கிடப்பதைக் காணலாம்.

(ஆ) ஆரம்ப காலத்தில் இந்நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் நாசித் துவாரம், ஆசனவாய் இவைகளில் இரத்தக்கசிவுகாணப்படும். இடுப்பு, பின் முதுகு, கழுத்து பாகங்களில், சூடான வீக்கம் தென்படும். நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் 10 முதல் 36 மணி நேரத்தில் இறந்து விட நேரிடும்.

நோய் பரவும் முறை: நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் கழிவுப் பொருள்கள் மூலமும், கொசுக்கள் மற்றும் மாமிசம் தின்னும் பறவைகள் மூலமும், நோய்வாய்ப்பட்ட மிருகங்களின் எலும்புத் தூள், ரத்தம் இவைகளினாலும் பரவுகிறது.

தடுப்பு முறை: (1) நோய் தோன்று முன்பே தடுப்பு ஊசி போடுதல்:

(2) நோய் வந்த மாடுகளுக்கு உடனடியாகச் சிகிச்சை அளித்தல்;

(3) இறந்த மாடுகளை அறுக்கவோ, தோலை எடுக்கவோ கூடாது. சுண்ணாம்புடன் கலந்து புதைத்துவிட வேண்டும். இரத்தக் கசிவுகளையும், கூழங்களையும் எடுத்துவிடுதல் நலம்.

**பொதுமக்கள் உடல்நலத் தொடர்பு**

இந்நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் இறைச்சி, தோல், உரோமம் இவைகளின் மூலம் இந்நோய் மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்நோயினால் ‘மேலிக்னட் கார்பங்கள்’ என்னும் நோய் மனிதர்களுக்கு உண்டாகிறது.



கால்நடைகளே உழவர்களின் செல்வங்கள் !

# தொண்டை மண்டலத்தில் தொல்பொருள் கண்டு பிடிப்புகள் !

—நடன காசிநாதன்

தமிழகத்திலேயே தொண்டை மண்டலத்தில் தான் ஆதி கால மனிதர்கள் வாழ்ந்த இடங்களும், அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவள்ளூர் வட்டத்திலுள்ள பூண்டி நீர்த் தேக்கத்துக்கு அண்மையில் அத்திரம்பாக்கம் என்னும் ஊருக்கருகில் கொற்றலையாற்றுப் பகுதியில் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாகப் பல கற்கருவிகளை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பேயே கண்டெடுத்திருக்கின்றனர். இம்மாதிரி பழங்காலக் கற்கருவிகள் இப்பகுதியில் கிடைக்கும் என்பதற்கான எண்ணத்தை ஏற்படுத்தியதற்குச் சென்னையை ஒட்டிய பல்லாவரத்தில் 1863-ல் ‘ராபர்ட் புரூஸ் புட்’ என்ற நில அமைப்பியல் அறிஞரால் கண்டு எடுக்கப்பட்ட கற்கருவியே காரணமாகும்.

சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்குச் செல்லும் பெருவழியில், சானூருக்கு அருகில், பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதே போன்று தொண்டை மண்டலத்தில்தான் பழைமையான குகைக் கோயில்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. உதாரணமாக பல்லாவரம், சிங்கப்பெருமாள் கோயில், வல்லம், மாமல்லபுரம், சாளுவன் குப்பம், திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களைக் கூறலாம்.

இங்குதான் முதன் முதலில் கட்டடக் கோயில்களும் உருவாகின. மாமல்லையிலுள்ள கடற்கரைக்கோயிலும், காஞ்சி கைலாசநாதர் கோயிலும் கட்டடக் கோயில்களின் முன்னோடிகள் ஆகும்.

இவ்வாறு பல பழம் பொருட்களுக்குத் தாயகமாக விளங்கும் தொண்டை மண்டலம் இன்றும் பல அரிய பழம் பொருட்களை ஆய்வாளர்கள் பார்வைக்கு வழங்கிக்கொண்டே உள்ளது.

**பல்லவர் காலத் துர்க்கைச் சிறப்பு**

சென்னை, தேனாம்பேட்டையில் காரனெட்' மூர்த்தி என்பவருக்குச் சொந்தமான சிற்பக்கிடங்கில் பல்லவர் காலத் துர்க்கைச் சிற்பம் இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கபட்டது.

இச்சிற்பம் ஆறடிக்கு மேல் உயரம் உடையதாய் பல்லவர் கால எல்லா அம்சங்களுடனும் காணப்படுகிறது. எருமைத் தலை மீது நின்ற நிலையில், எண் கரங்களைக் கொண்டு அன்னை காட்சி தருகிறாள். இடப் பக்கம் மான் உள்ளது. சிற்பத்தின் இருமருங்கிலும் வட்டெழுத்தில் கல்வெட்டு காணப்படுகிறது. இத்தேவிக்கு அமுது படைப்பதற்காக நெல் அளிக்கப் பெற்றதை இக் கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டின் எழுத்து அமைதியும் சிற்பத்தின் உருவ அமைதியும் இச் சிற்பம் சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்பதைப் புலப்படுத்துகின்றன. தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை, இச் சிலையைக் கைப்பற்றி அருங்காட்சி அகத்தில் காட்சியில் வைக்கத் திட்டமிட்டுள்ளது.

**நங்கநல்லூரில் விஷ்ணு சிற்பம்**

சென்னையை அடுத்துள்ள நங்கநல்லூரின் ஒரு பகுதியாக விளங்கும் சர்வமங்கள நகர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலின் அருகில் மண்ணுள் புதைந்து கிடந்த பல்லவர் கால விஷ்ணு சிற்பம் அண்மையில் கண்டெடுக்கப்பட்டது. இச்சிற்பம் 5.5 அடி உயரம் உள்ளதாக அமர்ந்த நிலையில் உள்ளது. இச் சிலைக்கும் பக்கத்திலேயே உடைந்த நிலையில் காணப்பட்ட பூதேவி சிலையும் கண்டுபிடிக்கப்பட்டது.



கன்னரத் தேவன் காலத்திய நடுகல் !

இப் பகுதியில் பல்லவர் கால விஷ்ணு கோயில் ஒன்று அமைந்திருக்க வேண்டும் என்பதை இச் சிலைகளைக் கொண்டு ஊகிக்க வேண்டியுள்ளது.

**ஒரத்தியில் பல்லவர் காலத்தூம்பு**

செங்கல்பட்டு மாவட்டம் தொழுப்பேட்டிலிருந்து மேற்கே



நடமாடும் காளி

செல்லும் சாலையில் அமைந்து உள்ள ஒரு விஜயநகர காலச் சிவன் கோயில் உள்ளது. அக்கோயிலின் எதிரில், ஒரு மேடையில்—பல்லவர் காலக் கல்வெட்டு பொறித்த கற்பலகை கவனிப்பாரற்றுக் கிடப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் காணப்பெறும் கல்வெட்டு பல்லவ மன்னன் நந்திவர்மனின் பதினன்காம் ஆட்சி ஆண்டில், ஈதுரக் கோட்டத்தைச் சேர்ந்த நெடுங்கல் நாட்டு ஆற்றூரில் வாழும் கொற்றய (ந)ந்தர் மகன் நக்கன் ஒரு தூம்பு செய்தமைத்தான் என்பதைத் தெரிவிக்கிறது. குவண தச்சன் என்பான் அக்கல்வெட்டைப் பொறித்தான் என்பதுவும் காணப்படுகிறது.

அங்கேயே மற்றொரு நடுகல் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்நடுகல்லில் தமிழிலும் கன்னடத்திலும் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளன. தமிழ்க் கல்வெட்டு, இராட்டிரகூட மன்னர் கன்னர தேவன் காலத்தில் அந்நடுகல் அமைக்கப்பெற்

கல்லில் வீரனது உருவமும், அவனது அவியை மேல் உலக

மகளிர் வரவேற்கின்ற காட்சியும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

## பல்லவர் கால வண்ண ஓவியம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரத்து கைலாசநாதர் கோயிலில் பல்லவர் கால வண்ண ஓவியங்கள் இவ்வாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப் பட்டன.

சிவபெருமான் யோக மூர்த்தியாகத் தீட்டப்பட்டிருக்கும் ஓவியமும், சிவன், உமா, ஸ்கந்தர் ஆகியோர் அடங்கிய சோமாஸ்கந்த மூர்த்தியின் ஓவியமும் காண்போர் மனத்தை விட்டு அகலா கவின் மிகுக் காட்சிகள் ஆகும்.

இவ்வோவியங்கள் கைலாசநாதர் ஆலயத்தின் திருச்சுற்றுலயங்களின் சுவர்களின் தீட்டப் பட்டுள்ளன. சிவப்பு, மஞ்சள் வெண்மை ஆகிய நிறங்களின் கலவையினுல் தீட்டப்பட்டிருக்கின்ற ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களின் வனப்பை ஒத்திருப்பதாகத் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர், டாக்டர் இரா. நாகசாமி கூறியுள்ளார். ஒரு இடத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் தீட்டப்பட்டு இருக்கும் தேவியின் ஓவியம் பனைமலை ஓவியத்தை நினைவூட்டும் வண்ணம் உள்ளது.

இவ்வோவியங்கள் இது வரையில் பிற்காலத்தில் பூசப்பட்ட சுண்ணும்புச் சாந்தினுல் மறைக்கப் பெற்றிருந்தன. இவைகளை இரசாயன முறையில் சுத்தம் செய்துப் பாதுகாக்கும் பணியில் இந்திய அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையின் தென் வட்டப் பிரிவினர் ஈடுபட்டிருக்கின்றனர்.

## வடிகாற் குழாய்கள்

கி.பி. 8, 9-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த வடிகாற் குழாய்களும் நங்கநல்லூருக்கு அருகில் சர்வ மங்களா நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் களிமண்ணுல் செய்யப்பட்டு சுடப்பெற்றுள்ளன. 20 செ.மீ. நீளமும், 10 செ.மீ. சுற்றளவும் உடையதாகவுள்ளன. இவை இப்பகுதியில் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

## புத்தர் சிலை

மைலாப்பூர் பகுதியில் புத்தர் உருவச் சிலைகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டோர் ஒருவர் வீடு கட்டுவகற்காக தம் மனையை அகழ்ந்த போது இச்சிலை இருப்பது காண வந்தது. இச்சிலைகளின் தலைப் பகுதிகள் உடைந்துள்ளன. மற்ற பகுதிககள் நல்ல நிலையில் இருக்கின்றன. இவைகளின் காலம் கி.பி. 8, 9-ஆம் நூற்ருண்டாக இருக்கலாம். மைலைப் பகுதியில் புத்தப் பள்ளி ஏதேனும் இருந்து இருக்கக் கூடுமோ என்றஐயத்தை உண்டாக்குகிறது.

## அனந்தமங்கலத்து சமணக் கல்வெட்டு

செங்கற்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் வட்டம் அனந்தமங்கலத்து மலையில் உச்சியில் சில தீர்த்தங்கரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் முன்பேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் இங்குள்ள சில சிற்பங்களின் கீழ் சில கல்வெட்டுகள் இருப்பது மூன்று மாதங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு கல்வெட்டு ''ரெட்டநேமி அடிகள்'' என்றும், மற்ருென்று ''அட்டராநநேமிகள்'' என்றும் எழுதப் பெற்றுள்ளன.

இக்கல்வெட்டுக்குப் பக்கத்தில் பராந்தகன் காலத்தியக் கல்வெட்டு ஒன்று முன்னர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எனவே இக்கல்வெட்டும், இச்சிற்பங்களும் கி.பி. 10-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவை என்று கருதலாம்.

## நடமாடும் காளியின் செப்புப் படிமம்

சீர் மிகு சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மைலாப்பூரில் உள்ள கோலமொழியம்மன் கோயிலிலிருந்து நடமாடும் காளியின் செப்புப் படிமம் ஒன்று சென்ற ஆண்டு தமிழ் நாடுதொல் பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படிமம் கி.பி. 10-ஆம் நூற்ருண்டைச்சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. காளி நடமாடும் நிலையில் காணப்படும் படிமம் இது வரையில் கிடைக்கப் பெருத ஒன்ருகும். மிகவும் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது.

இரு கால்களையும் மடக்கி சதுரமாக வைத்து, இடது மேல் கரத்தை கஜ ஹஸ்தமாகக் காட்டி ஆடும் பாங்கில் அமைந்திருக்கும் இத் திருமேனி மிக முக்கிய செப்புத் திருமேனிகளுள் ஒன்று ஆகும்.

## அச்சிரப்பாக்கத்துப் பார்வதி சிலை

செங்கற்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கத்திலிருந்து பார்வதி தேவியின் கற் சிலை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இச்சிலை மிகவும் அழகாகக் காணப்படுகிறது. இது அக்காலச் செப்புச் சிலையைப் பார்த்து அப்படியே செய்யப்பட்டது போன்று தோன்றுகிறது. செம்பில்தான் வார்க்க முடியும், கல்லிலும் இவ்வளவு நுணுக்கமான வேலைப்பாடுகளைச் செய்ய முடியுமா என்று ஆச்சரியப்படும் அளவுக்குச் சிறப்பாக அமைந்திருக்கிறது. காலம் கி.பி. 12-ஆம் நூற்ருண்டு. அச்சரப்பாக்கத்திலுள்ள ஆட்சீஸ்வரக் கோயிலில் வழிபாட்டில் இச்சிலை இருந்திருக்க வேண்டும் போன்று தோன்றுகிறது. இப்பொழுது தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் எடுத்து வரப் பெற்று மதுரை திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் காட்சியில் வைக்கப்பட உள்ளது.

## திருவள்ளுவர் சிலை

தமிழ் மறையாகிய திருக்குறளை உலகினுக்குத் தந்த வள்ளுவ நாயனர் வாழ்ந்த பகுதி மையிலாப்பூர் என்று ஒரு கருத்து உண்டு. இங்கு வள்ளுவர்கோயில் ஒன்றும் உண்டு. இக்கோயிலுக்கு அருகில் சென்ற ஆண்டில் வள்ளுவர் சிலை ஒன்றுபூமிக்கடியிலிருந்து கண்டுபிடிக்கப் பெற்றிருக்கிறது. இச்சிலை இரண்டாக உடைந்த நிலையில் காணப்பட்டாலும் முழுவதுமாக இருக்கிறது. இது கி.பி. 14-15-ஆம் நூற்ருண்டு அளவில் செய்யப்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. முன்னுளில் இக்கோயிலில் முக்கியக் கடவுளாக இருந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

## விட்டலாபுரம் கோயில்

செங்கற்பட்டு மாவட்டம், மாமல்லையிலிருந்து தெற்கே, 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விட்டலாபுரம்'' என்னும் ஊரில் விஜய நகர மன்னர் கிருஷ்ண தேவ மஹாராயர் காலத்தில் எழுப்பப்பட்ட விட்டலா கோயில் திருமதி வசுந்தரா பிலியோஸா என்பவரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. விட்டலர்க்காக எடுப்பிக்கப் பெற்றிருக்கும் தனிக் கோயில் தமிழ் நாட்டிலேயே இது ஒன்ருகத்தான் இருக்கும் என்று அவர் கருதுகிருர்.

## விஜயநகரக் கால ஓவியம்

காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயில், காஞ்சியிலுள்ள கோயில்கள் எல்லாவற்றையும் விட மிகப் பரந்த இடத்தில் அமைந்திருப்பதாகும். இக்கோயிலின் ஒரு பகுதியில் பல்லவர் காலக் கோயில் ஒன்று இன்றும் இருக்கிறது. பல்லவர் காலத்திய மண்டபம் ஒன்று இருந்து இடிபாடுற்று அழிந்து விட்டது. அம்மண்டபத் தூண்களில் ஒன்று இன்றும் சென்னை அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

ஏகாம்பரேசுவரர் கோயில் சைவ சமயக் குரவர்களால் பாடல் பெற்ற தலமாகும். சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க மன்னர்கள் இக்கோயிலுக்குப் பலவித கொடைகளை அளித்துப் பாராட்டி வந்திருக்கிருர்கள்.

சோழ மன்னர்களில் ஒருவனுன விக்கிரமசோழன் தன் ஆட்சிக் காலத்தில் இக்கோயிலின்தெற்குப் பகுதியில் 'விக்கிரம சோழன் நூற்றுக்கால் திருமண்டபம்' என்று ஒரு நூற்றுக்கால் மண்டபத்தை அமைத்திருக்கிருன். அம்மண்டபம் இன்றுஆயிரங்கால் மண்டபம் என்று வழங்கப்படுகிறது. அம்மண்டபத்தைத் தாங்கும் தூண்களில் ''ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம் சோழன் நூற்றுக்கால் திருமண்டபம்' என்றும், ''ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்கன் திருமண்டபம்'' என்றும் எழுதப் பட்டிருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கோயிலின் நடராஜர் சந்நிதியை அடுத்து வடக்கில், திருச்சுற்று மாளிகையின் ஒரு பகுதி கவனிப்பாரற்று இருந்து வந்தது. மரங்களும், முட் செடிகளும் வளர்ந்து மனிதர்கள் உள்ளே புக முடியாமல் மண்டிக் கிடந்தன.

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையும், தமிழ் நாடு அரசு 'என்.சி.சி.' படையைச் சேர்ந்த காஞ்சிபுரத்து பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும் ஒருங்கு சேர்ந்து இப்பகுதியைச்சுத்தம் செய்தனர். அவ்வாறு செய்கையில் இங்குள்ள திருச்சுற்று மாளிகையின் விதானத்தில் விஜய நகரர்காலத்து வண்ண ஓவியம் தீட்டப்பட்டிருப்பது காண முடிந்தது.

ஓவியத்தின் ஒரு பகுதியில் நாட்டியமாடுபவன் ஒருவன் கையில் கோட்டு வாத்தியம் ஏந்தி அதை மீட்டிக் கொண்டே ஆடும் நிலையில் தீட்டப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும். பல பூ வேலைப்பாடுகளும், பறவைக் கூட்டமும், சில விதமான கட்டங்களும் ஓவியத்தின் ஒரு அங்கமாக அமைந்து அழகூட்டுகின்றன.

இவ்வோவியங்கள் கிருஷ்ண தேவ ராயர் காலத்தில் தீட்டப் பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது.

## நாயக்கர் கால ஓவியம்

சென்னையிலிருந்து மாமல்லைக்கு செல்லும் சாலையில் அமைந்து உள்ள திருப்போரூர், கந்தசாமி ஆலயம் இடம் பெற்றுள்ளதால் சிறப்புப் பெற்ற தலமாகும்.

இவ்வூரின் மேற்கே அமைந்து உள்ள மலையில் ஒரு சிவன்கோயில்

சரபோஜி மன்னரின் செப்புத் திருமேனி



உள்ளது. இக்கோயில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் திருப்போரூர் சந்நிதி முறை பாடப் பெற்ற கந்தசாமி கோயிலின் கிழக்குக் கோபுரத்தை அடுத்துள்ள மண்டப விதானத்தில் நாயக்கர் கால ஓவியம் இருப்பது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வோவியம் கந்தபுராணத்தைச் சித்திரிப்பதாகக் காணப்படுகிறது.

ஆறுமுகப் பெருமான் கங்கையில் அவதரிப்பதும், கார்த்திகைப் பெண்கள் அவரை எடுத்துவளர்ப்பதும், முருகன் வளர்ச்சியடைந்த பின்னர் சூர சம்ஹாரம் செய்வதும், வள்ளி தெய்வயானை திருமணங்கள் ஆகியவைகளும் அழகுற தீட்டப்பட்டுள்ளன. ஓவியத்தின் ஒரு பகுதி பிற்காலத்தில் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

**சரபோஜி மன்னரின்**

**செப்புப் படிமம்**

சென்னை கீழ்ப்பாக்கத்தைச் சேர்ந்த திரு என். கே. விநாயகம் என்பவர் தம்மிடமுள்ள பழம் பொருட்களைப் பதிவு செய்வதற்காக வந்தபொழுது அவருடைய சேமிப்பில் கி.பி. 18-ஆம் நூற்றுண்டில் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரின் செப்புப் படிமம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மன்னர் பள்ளிக் கட்டிலில் சாய்ந்து அமர்ந்த வண்ணம் செய்யப்பட்டிருக்கிறது. மன்னரின் தலைப்பாகையும், உடையும், உருவ அமைப்பும் அவர் சரபோஜி மன்னர் என்பதைத் தெளிவாக்குகின்றன.

**நவாசிப்பேட்டையில் செங்கற்**

**கல்வெட்டு**

செங்கற்பட்டு மாவட்டம் வாலாஜாபேட்டையிலிருந்து காஞ்சிபுரத்துக்குச்செல்லும்சாலையில், ஏகனும்பேட்டையில் இறங்கி வடக்கே சிறிது தூரம் சென்றால் நவாசிப்பேட்டை காசி விசுவநாதர் கோயிலைக் காணலாம்.

கோயில் கவனிப்பாரற்று, வழிபாடு ஏதுமில்லாமல் இருக்கிறது. கோயிலைச் சுற்றி புதர் மண்டிக் கிடக்கிறது. கோயிலின் மடப்பள்ளி செங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. மடப்பள்ளியின் சுவரில் செங்கல்லில் ஒரு கல்வெட்டு எழுநப் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எழுத்து அமைதியைக் கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்டு இருக்கலாம் என்றுகொள்ளலாம்.

அக் கல்வெட்டு, நவாசிப் பேட்டை விசுவநாத சுவாமிக்கு முனியன் என்பவன் திருப்பணிகள் செய்வித்ததைத் தெரிவிக்கிறது.

செங்கல்லில் கல்வெட்டு காணப்படுவது தமிழ்நாட்டில் இதுவே முதல் முறையாகும்.

**கவி காளமேகத்தின் பாடல்**

**கல்வெட்டு**

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலிலிருந்து ஒரு பாடல் கல்வெட்டு அண்மையில் தொல்பொருள் ஆய்வுத் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களால் படியெடுக்கப்பட்டது. அது பாடலாக அமைந்திருக்கிறது. அக் கல்வெட்டு,

மண்ணில் இருவர் மணவாளர்
மண்ணளந்த
கண்ணநவ னிவந்பேர் காளமுகில்
—கண்ண
னவனுக்கூ ரெண்ணி லணியரங்க
மொன்றே
இவனுக்கூ ரெண்ணாயிரம்.

என்று எழுதப்பட்டுள்ளது. இப்பாடல் சிலேடையாக அமைந்து உள்ளது. காளமுகில் என்று குறிப்பிக்கப்படுபவர் காளமேகப் புலவர் ஆவார். அவருக்கு மணவாளர் என்ற ஒரு பெயர் இருந்ததென்பது இப்பாடலால் தெரிய வருகிறது. கவிஞர் தன்னை திருமாலோடு ஒப்பிட்டு கண்ணனுக்கு ஊர் எவ்வளவு என்றுஎண்ணினால் திருவரங்கம் ஒன்றுதான் தெரிகிறது. ஆனால் தனக்கோ ஊர் எண்ணாயிரம் என்று சிலேடையாகக் கூறுகிறார். அதன் மூலம் தம்மூர் எண்ணாயிரம் என்பதைப் புலப்படுத்துகிறார். கவி காளமேகம் கி.பி. 15-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

## நாம் பெற்ற சுதந்திரத்தின் பொருள் !

இந்தியா தனக்கென முன்னேற்றப்பாதை ஒன்றை வகுத்துக் கொண்டு அறிவுத்திறன், பொறுப்புணர்ச்சி, கூர்ந்த மதி ஆகியவை கொண்ட அறிவாளிகளை உருவாக்க வேண்டும். சமுதாயத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கி, ஆக்கப் பூர்வமான அலுவலில் காணப்படும் திறமையைக் கண்டு இந்திய மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். பரந்த உலகத்தோடு இந்தியாவை ஒப்பிட்டு மிகவும் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும். மேலும் இந்த உலகில் சமச் சீரான சூழ்நிலை எப்போதும் இருந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டும். இத்தகைய இந்தியாவை நாம் உருவாக்காவிட்டால் நாம் அடைந்த சுதந்திரத்திற்குப் பொருளே இருக்காது.

—இந்திரா காந்தி.

# கரும்பில் நோயில்லாக் கரணைகள் பெறும்வழி



கரும்புச் சாகுபடி செய்யும் விவசாயிகள் நோயில்லாக் கரணைகள் பெறப் புதிய வழி முறை உருவாக்கப்பட்டு உள்ளது. இதனால் நல்ல விளைச்சலும் அதிக சர்க்கரை அளவும் கிடைக்கும். கோவை, கரும்பு அபிவிருத்தி நிலையமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஒருங்கிணைந்து செய்த ஆராய்ச்சியால் இப் புதிய முறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதனால் கரும்பினுள்ளேயே இருக்கும் நோய்களான சிவப்பு அழுகல் நோய், கரிப்பூட்டை நோய், கட்டைப் பயிர் குட்டையாதல் போன்ற நோய்கள் தடுக்கப்படுகின்றன. இந்தக் காப்பு முறையால் கரும்புக் கரணைகள் நன்கு முளைக்கின்றன. இந்தக் காப்பு முறை ஏற்கெனவே இருக்கும் முறைகளை விடச் சிறந்தது. பழைய முறையான சூடான காற்று மூலம் காத்தலில் கரணைகள் வாடவும், கரும்பு முளைகள் காயவும் சாத்தியக் கூறுகள் உள்ளன. அதே போல் சுடுநீர் காப்புமுறையில் கரணைகள் வெந்து மிருதுவாக மாறுகின்றன. ஆதலால் கரணைகளைக் கையாளும் போது விதை முளைகளுக்குச் சேதம் உண்டாகும் சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நீராவிக் காற்று முறையில் இக் குறைபாடுகள் அறவே நீக்கப்படுகின்றன.

இவ்வாறு நீராவிக் காற்று செலுத்தப் பயன்படுத்தும் கருவி சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு வரப்பிரசாதம். ஏனெனில் சர்க்கரை ஆலைகளில் நீராவிக் கலன், காற்று உண்டாக்கும் கலன்களும் உள்ளன. இவ்விரண்டையும் ஒன்ருகச் செலுத்தி விதைக்கரணைகளைக் காப்புச் செய்யும் அறை ( Treatment Chamber ) ஒன்று மட்டும் இருந்தால் போதுமானது. அதோடு கூட வெப்பத்தை 50 சென்டிகிரேட் அளவில் வைக்கும் தடுப்பு வால்வுகளும் குழாய்களும் தேவைப்படுகின்றன. இதனை அமைக்கச் சர்க்கரை 5,000 தான் செலவு ஆகும். சர்க்கரை ஆலைகள் மட்டுமின்றிச் சான்றிதழ் பெற்ற கரணைகள் விநியோகம் செய்யும் அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இச்சாதனத்தை அமைத்துக் கொண்டால் நோயில்லா விதைக் கரணைகள் விநியோகம் செய்ய லாம். இம்முறையில் விதைக் கரணைகள் காப்புச் செய்யப்பட் டால் ஐந்து ஆண்டுகளுக்கு, மேற் கூறிய செவ்வழுகல் நோய் போன்ற நோய் வராமல் தடுக்க லாம். அது மட்டுமன்றி மகசூல் அதிகரிக்கும். கரும்பிலுள்ள சர்க்கரை அளவும் அதிகரிக்கும். அதே போல், செவ்வழுகல் நோய் கருங்கதிர் நோய் போன்ற நோய்கள் அதிகமாய் உள்ள இடங்களில் சில குறிப்பான ரகங்கள் மகசூல் குறைந்து விவசாயிகளுக்கு நட்டத்தை விளைவிக்கின்றன. இவ்வாறு இந்நோய் உள்ள இடங்களில் இத் திருந்திய நீராவிக் காற்று முறையால் காப்புச் செய்தால் இந்நோய்கள் அறவே ஒழிக்கப்பட்டு அப்பகுதிகளுக்கேற்ற குறிப்பான ரகங்களின் மகசூலைப் பெருக்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள கருவியில் ஒரே சமயத்தில் அரை டன் கரணைகளைச் (சுமார் 30,000 கரணைகள்) காப்புச் செய்யலாம். இக்கருவி தள்ளு வண்டியில் பொருத்தப்பட்டுள்ளது. ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குச் சுலபமாகக்கொண்டு செல்லலாம். இந்தக் கருவி நீராவி தயாரிக்கும் கலன், காற்று விசிறி, கரணைகளைக் காப்புச் செய்யும் கலன், காற்று நீராவிக் கலவையின் வெப்பத்தை அளக்கும் தெர்மா மீட்டர், வெப்ப அளவைக் கட்டுப்படுத்தும் தானியங்கிகள், ஆகியவை அடங்கியது. இக்கருவி மின்சாரத்தால் இயங்குவது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள வேளாண் பதனஞ்செய் துறையினரால் இக் கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அரை டன் கரணைகளைக் காப்புச் செய்ய இரண்டுமணி நேரமாகும். நீராவியும் காற்றும் 50 சென்டிகிரேட் வெப்பத்தில் இருக்குமாறு வெப்ப அளவைக் கட்டுப்படுத்துதும் தானியங்கிகள் பார்த்துக் கொள்கின்றன. காப்புக் கலனில் நீராவியையும் காற்றையும் செலுத்தக் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. காப்பு முறை நிறைவாகும் தருணத்தில் மின்சாரம் தானுகத் தடைப்பட்டு விடும்.

இந்த நீராவிக் காற்றினால் கரணைகளைக் காப்புச் செய்வது இந்திய சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு வரப்பிரசாதம். இந்த மாதிரிச் சாதனம், டாக்டர் எம். எஸ். சுவாமி நாதன், டைரக்டர் ஜெனரல், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு அவர்களால் நவம்பர், 7, 1976 அன்று கோவை, கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த அகில இந்திய ஒருங்கிணைந்த கரும்பு ஆராய்ச்சித் திட்டங்களின் ஐந்தாவது கருத்துப் பரிமாற்றக் கூட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

**தகவல் :** வேளாண் பதனிடும் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

**வெளியீடு :** தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.





# குழந்தைச் செல்வம்

பேராசிரியர் என். பி. அப்துல் ஜப்பார்

நம் தாயகத்தில் 15 வயதிற்குக் கீழ் உள்ள 236 மில்லியன் குழந்தைகளின் நலம் நாட சமீபத்தில் தேசிய குழந்தைகள் குழு உருவாக்கப்பட்டது. அதன் தலைவர் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆவார்கள்.

ஜவகர்லால் நேரு அவர்களும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் குழந்தைகளிடம் அளப்பரிய அன்பும், அவர்களின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் குன்றாத நாட்டமும் கொண்டவர்கள்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறுகின்றார் :

“உலக மக்கள் தொகை வெகு வேகமாக அதிகரிக்க—தொழில் மயம் அதிகமாக — பரவலாக அதிகமான நகரங்கள் வளர—மொத்தச் சுற்றுப்புறம் வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. அதனால் குழந்தைகளின் இசைவான முன்னேற்றத்திற்கு வேண்டியதை செய்ய வேண்டியது இப்பொழுது இன்னும் முக்கியமாகின்றது.

ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு. உடல் நலத்திற்கு, கல்விக்கு, விரும்பிய வேலை வாய்ப்பிற்கு; ஆனால் சூரிய ஒளியிலும் காற்றிலும் நீரிலும் உயிரூட்டும் உணவிலும் அக்குழந்தைக்குக் கிடைக்கும் அளவு அந்தக் குழந்தையின் பெற்றோரின் பொருளாதார நிலைமையைப் பொறுத்திருக்கிறது. (அதில் ஏற்றத் தாழ்வு இருக்கிறது) அந்த அநீதியைச் சரி செய்ய வேண்டியது அரசின் கடமை. எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியான இயற்கை ஆற்றலுடன் பிறந்துவிடுவதில்லை. ஆனால் குழந்தைகள் ஒவ்வொன்றும் முழுமையாக வளர—தங்களின் உள்ளார்ந்த சக்திகளை வெளிக்கொண்டு வந்து காட்ட எல்லா விதமான வாய்ப்புகளையும் சமமாகத் தந்திட வேண்டியது அரசின் கடமை.”

—பேச்சு, 27-9-1966.

அகிலத்தில் அமைதி அரும்பி மலர்ந்திட அரும்பாடுபட்டு வரும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் குழந்தைகள் நலத்தில் நாட்டங்கொண்டு 1959-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் நாளில் குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை நிறைவேற்றி இருக்கின்றது.

அந்தப் பிரகடனத்தின் படி, குழந்தைகள் ஆரோக்கியத்திலும் அறிவு ஆற்றலிலும் வளர்ந்து ஓங்க, சமுதாயம் வாய்ப்புக்களையும் வசதிகளையும் அவர்களுக்குச் சமமாக வழங்கிட வேண்டும். குழந்தைகளுக்குச் சிறந்ததை இயன்ற அளவிற்கு மனித சமுதாயம் தந்திட வேண்டும். குழந்தைகள் ஆரோக்கியத்துடன் வளர அனைத்தையும் செய்வோமாக.

குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கு இயன்ற அனைத்தையும் செய்திடச் சித்தம் கொண்டுள்ள நாம் அதே சமயம் குழந்தைகளினிடத்தில் வளர்ந்திட வேண்டிய நற்பண்புகள் குறித்தும் கவனம் செலுத்திட வேண்டும். நற்பண்புகள் மனித மாளிகைக்கு நிறுத்தும் நற்றூண்கள். நற்பண்புகள் மனித வாழ்க்கைக்கு நலங்காட்டும் நல்ல உடற்பயிற்சிகள். எனவே அவற்றை வளரும் பிள்ளைகளிடத்தில், வளர்த்திட வேண்டும். ஐந்தில் வளர்த்து விட்டால் ஐம்பதிலும் அவை பட்டுப்போகா; தொட்டிலில் காட்டி விட்டால் சுடுகாடு வரையிலும் அவை மறக்கப்படமாட்டா. பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் குழந்தைகளுக்குப் புகட்ட விரும்பும் நற்பண்புகள் :

“வீட்டையும் பள்ளியையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையுடன் வைத்திருக்க வேண்டும் ; துப்புரவு செய்ய வேண்டும்.

“வீணாக்குதலைத் தவிர்க்க வேண்டும்—உணவாகட்டும், நீராகட்டும், மின்சாரமாகட்டும்.

“பிய்த்துப் போட்ட தாள்களைப் பொறுக்கி எடுத்துத் திரும்ப முழுத்தாள் செய்ய உதவிட வேண்டும்.

“உடல் உரத்தை, விளையாடி மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

“சுற்றுப்புறத்தில் இருக்கும் மிருகங்கள், பறவைகள், செடிகொடிகள் இவற்றின் பெயர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் ; அவற்றிற்குச் செய்யும் கொடுமைகளை இனிமேல் செய்யாதிருக்க உறுதி கொள்ள வேண்டும். மரங்களையும் தோட்டங்களையும் கருணையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும்.

“பூச்சி புழுக்களினால் விளையும் நன்மை தீமைகளை அறிந்திட வேண்டும்.

“ஒழுக்கம், வணக்கம், அன்பாதரவு—இவையெல்லாம் பழைமைப் பண்பாடுகள் அல்ல; இவையெல்லாம் மக்களிடையே இதமான இணக்கத்தையும், இனிய உறவையும் உண்டாக்கும் அடிப்படைகள் என்பதை அவர்கள் உணர வேண்டும். இத்தகைய நற்பண்புகளைக் குழந்தைகளிடத்தில் புகட்டிட வேண்டுவது பெற்றோர், ஆசிரியர் கடமை. காரணம் குழந்தைகள் “பார்த்து” நடந்து கொள்ளத்தான் செய்வார்கள்.”



அருமையான அறிவுரைகள் ! வாழ்க்கையை எளிதாக்கி இனிதாக்கும் நற்பண்புகள்! இந்த நற்பண்பு விதைகளை, பெற்றோரும்—ஆசிரியரும் குழந்தைகளிடத்தில் விதைத்து வளர்த்து விட்டால், எதிர்காலம் இனிய காலமாகும். இதிலே பெற்றோர்—ஆசிரியர் கடமை குறித்துக் கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

குழந்தைகள் கற்கும் வழி பெரும்பாலும் கண்; காதல்ல. அறிவு நீர் பாயும் மடை கண்—காதல்ல. காண்பதில் காணும் அறிவு, கேட்பதில் கிடைக்கும் அறிவை விட ஆழமானது.

காண்பதை “காபி” அடிக்கும் பக்குவம் குழந்தைப் பருவத்தில் அதிகம்; உதாரணம் உணர்த்தும் பாடம் அதிகம்.

“நாக்கில்லாத” உதாரணம் கற்பிக்கும் பாடம் இணையற்ற சக்தி வாய்ந்தது; உதாரணம் இணையற்ற கற்பிப்பாளன். எனவே குழந்தைகள் “அழகிய மாதிரிகளை” நாடுகின்றார்கள். அந்த அழகிய மாதிரிகளாகப் பெற்றோர்—ஆசிரியர் இருந்திடல் வேண்டும்; நற்பண்புகளின் நாயகர்களாக இருந்திடல் வேண்டும்; அமைதியாக — பேசாமல் — தொடர்ந்து காட்டும் உதாரணங்களாக இருந்திடல் வேண்டும். ஆசிரியர்—பெற்றோர் எவ்வழி அவ்வழி குழந்தைகள். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம். நல்ல ஆசிரியர் நல்லொளி தரும் விளக்கு. தங்களின் கடமைகளை உணர்ந்து பெற்றோரும் ஆசிரியரும் நடந்து கொள்ளவேண்டும்.

ஆரோக்கியத்திலும் அறிவிலும், ஆற்றலிலும், நற்பண்புகளிலும் சிறந்து வளரும் குழந்தைகள் நமது அணையில்லாத செல்வம் ; வருங்கால வாழ்வுக்கும் வலிமைக்கும் வற்றாது சக்தி படைக்கும் வளம். எனவே குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்ப்போமாக. அத்தோடு இன்றியமையாத இன்னொன்றையும் நினைவில் கொண்டு செயலில் காட்ட வேண்டும். குழந்தை செல்வந்தான். அதற்காக எண்ணிக்கையில் குழந்தைகளை அதிகரிப்பது அறிவிலித்தனமாகும். எண்ணிக்கை கூடினால் ஒவ்வொன்றுக்கும் செலுத்தும் சீராட்டும் பாராட்டும் நிச்சயமாகக் குறையும் ; அதனால் குழந்தைகள் சிதையும்; சீரழியும். எண்ணிக்கையில் அதிகக் குழந்தைகள் நிறத்தில் மோர், சுவையில் நீராக இருக்கும்; அது கூடாது. செல்வத்தின் பெருமை அளவையும், தரத்தையும் பொறுத்தது. அளவு அதிகமானால் தரம் குறையும். பெருமை குறையும். எனவே அளவோடு பெற்று அருமையாக வளர்த்து வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான் அறிவுடைமை. இந்தக் கருத்திலேதான் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அறிவுறுத்துகின்றார் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்.

“உணவு அளிக்கவும், கவனம் அளிக்கவும், வசதிகள் செய்து கொடுக்கவும் சிறிய குடும்பமே மிக எளிதானது”—திருமதி இந்திரா காந்தி—மார்ச் 23; 1976.

குழந்தை—ஒரு செல்வம். எதிர்காலத்தில் அது வீட்டினருக்கு அன்பையும் ஆதரவையும், நாட்டினருக்கு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் சுரந்திடும்; நிகழ் காலத்தில் வீட்டினர் அதற்கு அன்பையும் ஆதரவையும், நாட்டினர் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் செலுத்திடல் வேண்டும். அப்பொழுதுதான் அது செல்வமாகும்—வளரும்.

**குழந்தைகளுக்கு நூல்கள் :**

கடந்த சில ஆண்டுகளாக நம்முடைய தாய்மொழியில் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்களை வெளியிடும் முயற்சியில் நாம் ஓரளவு முன்னேறியிருக்கிறோம். எனினும் குழந்தைகள் விரும்பத்தக்க சிறந்த புத்தகங்களையும் இதழ்களையும் மற்ற நாடுகள் வெளியிடுவதுபோல் வெளியிடாமல் மிகமிகப் பின் தங்கியிருக்கிறோம். இத்துறையில் விரைந்த முன்னேற்றம் வேண்டும்.

—ஜவஹர்லால் நேரு

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# சென்னையில் புதிய கலங்கரை விளக்கம்!

**செ**ன்னையின் புதிய கலங்கரை விளக்கத்தை மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் ஜி. எஸ். தில்லான் அவர்கள் 10-1-77 அன்று திறந்து வைத்தார். இந்தக் கலங்கரை விளக்கம் 28 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சென்னை கலங்கரை விளக்கம் நூற்றாண்டு காலத்துக்கும் மேற்பட்டது; பழமை வாய்ந்தது. இது முதலில் 1844-இல் அமைக்கப்பட்டது. 1894, 1927 ஆகிய ஆண்டுகளில் இதில் சில மேம்பாடுகள் செய்யப்பட்டன. துவக்கத்தில் இது கல்லினால் கட்டப்பட்ட தூண் போன்ற இடத்தில் இயங்கி வந்தது. பிறகு 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டி முடிக்கப்பட்ட உயர்நீதி மன்ற கட்டடத்தின் மைய மண்டபத்திற்கு இந்தக் கலங்கரை விளக்கம் மாற்றப்பட்டது.

கிழக்குக் கடற்கரையிலும், சென்னை துறைமுகத்திலும் கப்பல் நடமாட்டம் அதிகரித்ததினாலும், விரைவுக் கப்பல்கள் வருவது அதிகரித்ததினாலும், இன்னும் அதிகப் பிரகாசமான விளக்கின் அவசியம் உணரப்பட்டது. நகரத்தின் மிகவும் சுறுசுறுப்பான பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய விளக்கின் பின்னணியில் அமைந்துள்ள மின் அலங்காரங்கள் அதிகரித்ததினால், கடல் பகுதியில் தற்போதைய விளக்கின் ஒளி மங்கிக் காணப்பட்டது. வெளிச்சம் காட்டும் நவீன சாதனங்களை அமைப்பதற்கு தற்போதைய மண்டபம் தகுதியற்றது என்பதும் கண்டறியப்பட்டது. ஆகவே ஒரு நவீன கலங்கரை விளக்கக் கோபுரத்தைக் கட்டுவதற்கும், அதில் மின்சாரத்தால் இய[ங்கும்] அதிக சக்தி வாய்ந்த வெ[ளிச்சம்] காட்டும் சாதனத்தை [அமைப்ப]வதற்கும் தீர்மானிக்கப்பட்[டது].

இதற்குத்தேவையான நில[த்தை] மெரீனா கடற்கரையில் தமி[ழ்நாடு] அரசு அளித்தது. இந்த [...] சென்னை நகரத்தின் பிரதா[ன...] மாக அமைந்துள்ளதால் வ[...]

சென்னை காமராஜ் சாலையில் ரூபாய் 28 இலட்சம் செலவில் புதி[...] கட்டப்பட்டுள்ள கலங்கரை விளக்கத்தை, மத்திய கப்பல் ம[...] போக்குவரத்து அமைச்சர் டாக்டர் ஜீ. எஸ். தில்லான் அ[...] 10-1-1977 அன்று திறந்து வைத்தார்.



திலிருந்து மாறுபட்ட ஒரு வடிவமைப்புடனும், சீரிய கட்டடக் கலை அம்சங்களுடனும் இக்கலங்கரை விளக்கத்தை அமைக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

சிறந்த கட்டடக் கலை நிபுணர்களின் ஆலோசனையுடன் வடிவமைக்கப்பட்ட இந்தக் கலங்கரை விளக்கம், 45 மீட்டர் உயர கோபுரம், உட்புறத்தில் அமைந்த வழக்கமான சுற்றுப்படிகள் ஆகியவற்றுடன், மின்சாரத்தால் இயங்கும் 'லிப்ட்'டையும் பெற்றுள்ளது.

முக்கோண வடிவமும் மின்சார 'லிப்டு'ம் இக்கலங்கரை விளக்கத்தின் நவீன அம்சங்கள், கடல் மட்டத்திலிருந்து, இக்கலங்கரை விளக்கம் 190 அடி உயரம் உள்ளது.

இக்கலங்கரை விளக்கத்தில் 2.5 மீட்டர் விட்டம் கொண்ட விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. மைய விளக்கு வேலை செய்யத் தவறும்போது, மாற்று விளக்கு வேலை செய்யும். இச்சாதனம் உள்ளூர் மின்சார விநியோக உதவியுடன் வேலை செய்யும். உள்ளூர் மைய மின்சாரத் தொடர்பு இல்லாதபோது, 'டீஸலில்' இயங்கும் மின் உற்பத்தி சாதனம் தாமாகவே வேலை செய்யத் துவங்கும். மிகவும் அவசரத் தேவைக்குப் பயன்படுத்துவதற்காக மிகவும் பிரகாசமாக எரியும் எரிவாயு விளக்கும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விளக்கின் ஒளி 24 இலட்சத்து 40 ஆயிரம் மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தைக் கொண்டது. இது ஒவ்வொரு 10 வினாடிக்கும் ஒருமுறை வெள்ளை ஒளியை அளிக்கும். சாதாரண பருவகாலத்தில் 20 மைல் தொலைவிலிருந்து இவ்விளக்கைக் காணலாம். விளக்குச் சாதனங்கள் பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

கலங்கரை விளக்க கட்டடத்தின் இரண்டு வெவ்வேறு மட்டங்களில் விமானங்களுக்கான எச்சரிக்கை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு தலைமை விளக்குப் பாதுகாவலர், மூன்று உதவியாளர்கள் ஆகியோர் இக்கலங்கரை விளக்கின் பணிகளைக் கவனித்துக் கொள்வார்கள்.

மெரீனா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய கலங்கரை விளக்கம் வேலை செய்யத் துவங்கியுள்ளதால், உயர்நீதி மன்றக் கட்டடத்தில் தற்போது இயங்கி வரும் பழைய கலங்கரை விளக்கம் மூடப்படும்.

# மீண்டும் ஜமாபந்தி!

கிராமக் கணக்குகளையும், நிலவரியையும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் பரிசோதனை செய்யும் நடைமுறையாக ஜமாபந்தி முறை நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. ஜமாபந்தியின்போது கிராம அலுவலர்கள், வருவாய்த் துறையைச் சார்ந்த வட்ட அலுவலர்கள், கோட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட நாட்களில் கிராமக் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், கிராம மக்களின் குறைகளையும் சாத்தியமான அளவுக்கு அங்கேயே தீர்த்து வைத்து வந்தனர்.

1972-ஆம்ஆண்டிலிருந்து ஜமாபந்தி முறைக்கு மாற்று ஏற்பாடாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு வருவாய் கோட்டத்தில் கிராம, வட்ட கணக்குகளைத் தணிக்கை (ஆடிட்) செய்யும் பரீட்சார்த்த ஏற்பாடு அமலில் இருந்து வருகிறது. ஆனால் இந்தத் தணிக்கை முறையினால் கிராம கணக்குகளை உரிய நேரத்தில் தயார் செய்வதில் கிராம அலுவலர்கள் சுறுசுறுப்பாக இல்லாதிருப்பது, மிதமிஞ்சிய தண்ணீர்த் தீர்வை விகிதங்கள், ஆக்கிரமிப்பு அபராதங்கள், அதிகமாகக் கட்டிய தொகைகளைத் திருப்பித் தருதல், பட்டாக்களை வழங்குதல் முதலிய பிரச்சினைகள் சம்பந்தமாக விவசாயிகளுக்குப் பரிகாரம் காணும் வாய்ப்பு இல்லாதிருப்பது போன்ற குறைகள் இருப்பது ஒரு பரிசிலனையில் தெரியவந்தது.

இந்த நிலவரத்தில், ஜமாபந்தி முறைக்குப் பதிலாக பரீட்சார்த்த தணிக்கை ஏற்பாடு அமலில் உள்ள வருவாய் கோட்டங்களில் ஜமாபந்தி முறையை மீண்டும் செயல்படுத்துவதால் விவகாரங்கள் சீர்பெறுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து ஜமாபந்தி முறையை மேலும் பயனுள்ளதாக அமைய, அக்கறையுள்ள நபர்களிடமிருந்து, குறிப்பாக விவசாயிகளிடமிருந்து, ஜமாபந்தி முறையை அபிவிருத்தி செய்ய ஆக்கரீதியான கருத்துக்களை அரசு வரவேற்றது.

ஜமாபந்தி முறையை நடத்துவதற்குச் சார்பாகவும், எதிராகவும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்தது. ஜமாபந்தி முறை எல்லா கிராமக் கணக்குகளையும் முழுமையாகப் பரிசோதிக்க வகை செய்வதுடன், கிராமவாசிகள் அலுவலர்களைச் சந்திக்கவும், அதிகாரிகள் விவசாயிகளுக்கு விதிக்கப்படும் தீர்வைகள், கட்டணங்கள், அபராதங்கள் முதலியவற்றைப் பரிசீலித்து அவசியமானால் உடனடி அடிப்படையில் அவற்றைத் திருத்தியமைக்கவும் ஜமாபந்தி வாய்ப்பளிக்கிறது என்று கருதப்பட்டது.

பரீட்சார்த்த தணிக்கை முறையில் காலதாமதங்கள், ஜமாபந்தியின் சாதகமான அம்சங்கள் இல்லாமை, வேலை தேக்கம் ஆகிய குறைகள் ஏற்பட்டன.

எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பரீட்சார்த்த அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வந்த தணிக்கைமுறை பசலி 1386-லிருந்து கைவிடப்பட வேண்டும் என்றும், அந்த வருவாய் கோட்டங்கள் அனைத்திலும் ஜமாபந்தி முறை மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஊழல் புகார்களுக்கு இடமளிக்காத வகையில் ஜமாபந்தியை நடத்த வேண்டும் என்றும், ஊழல் விவகாரங்கள் கவனிக்கப்பட்டால் அவை குறித்து கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஜமாபந்தி முறை மீண்டும் அமலுக்கு வருவதால், பொதுவாகக் கிராம மக்களின் பிரச்சினைகளும், சிறப்பாக உழவர்களின் பிரச்சினைகளும் தீர வழி ஏற்பட்டுள்ளன.



## வாழைத்தாரின் காய்ந்த பூக்களை நீக்கி தரத்தை உயர்த்தலாம்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக தோட்டகலைத் துறையினர் 'ரொபஸ்டா' வாழையில் ஒர் ஆய்வு நடத்தினார்கள். வாழை பூ விட்ட 8-12 நாட்களில், பிஞ்சின் நூனியிலுள்ள காய்ந்த பூப்பாகம், கை விரல்களால் இலேசாகத் தடவினால் உதிர்ந்துவிடும் பக்குவத்தில் இருக்கும். அந்தச் சமயத்தில் வாழைப் பிஞ்சின் மேல் கைவிரல்களால் இலேசாகத் தடவிவிட்டதில் காய்கள் விரைவில் முதிர்ந்து அறுவடைக்குத் தயாராகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதால் பழங்கள் பார்க்க மிகவும் அழகாக இருப்பதால் வாங்குபவர்களும் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். மேலும் காய்களின் தோல்பாகம் வெடிப்பது கட்டுப்படுத்தப்படுவதோடு, காய்களின் நுனி அழுகல் நோயும் தவிர்க்கப்படுவதாக ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

## பலா சாகுபடி

தற்போது தமிழ்நாட்டில் பண்ணுருட்டி பலா, வேலி பலா, சிங்கப்பூர் பலா ஆகிய இரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றுள் சிங்கப்பூர் பலா இரகம், கல்லாறு பழ ஆராய்ச்சி நிலையத்தில் நன்கு பலன் தந்துள்ளது. இதன் இளஞ் செடியை நட்டு மூன்று ஆண்டுகளில் பலன் கொடுக்க ஆரம்பிக்கின்றது. பொதுவாக மற்ற இரகப் பலா மரங்கள் பலன் கொடுக்காத மாதங்களான செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான காலத்திலும் சிங்கப்பூர் பலா சிறிது பலன் கொடுக்கிறது.

பலாவை நாற்றுக்களாக வளர்த்து பிறகு பிடுங்கி நடுவதைவிட, விதையிலிருந்து ஒரே இடத்தில் வளர்ப்பது மிகவும் சிறந்தது. ஏனெனில் இந்நாற்றுக்களின் வேர்ப்பாகம் மிகவும் மென்மையாக இருப்பதனால் இவற்றைப் பிடுங்கி நடும் போது செடியின் வளர்ச்சி பாதிக்கப்படும். பலாவை 30 முதல் 40 அடி இடைவெளி விட்டு நடவேண்டும். இதைப் பருவகாலங்களில் நடுவது சிறந்தது. பலாவிற்கு என்று தனியாக உரமிடத் தேவையில்லை. வெப்பநிலை அதிகமாக உள்ள காலங்களில் மட்டும் சிறிது நீர் பாய்ச்சினால் போதுமானது. பொதுவாக பலா ஏழாவது வருடத்தில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். கோவையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின்படி கைகளினால் மகரந்தச் சேர்க்கை செய்யும்பொழுது பலாப்பழங்களின் எடை அதிகரிக்கும் எனத் தெரிய வருகிறது. தென் னாட்டில் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மார்ச் முதல் ஜூலை வரையும் தென்னிந்திய மலைச் சரிவுகளில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையும் பலா, கனி கொடுக்கின்றது. ஒரு பலா மரம் ஒரு ஆண்டில் சுமார் 100 முதல் 250 பழங்கள் கொடுக்கின்றது. ஒரு பழத்தின் எடை 5 முதல் 30 கிலோ வரை இருக்கும். பழுக்கும் தருணத்தில் உள்ள பலாப்பழங்களை அறுவடை செய்து தூர மார்க்கெட்டுகளுக்கு அனுப்பலாம்.

தகவல்: தோட்டக் கலைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



## கரும்பின் சர்க்கரை அளவை அதிகரிக்க இரசாயன தெளிப்பு முறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கரும்பு ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் கரும்பின் சர்க்கரை அளவைக் கூட்டுவதற்கும் ஆராய்ச்சி செய்யப்பட்டது. 'கோ. 6304' இரகமும், 'கோ. 853' இரகமும் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 'போலரிஸ் (POLARIS), 'சோடியம் மெடாசிலிகேட்' (SODIUM META SILICATE) மற்றும் 'சைகோசெல்' (CYCOCEL) ஆகிய இரசாயனப் பொருள்களை கரும்பு நட்ட 9-வது மாதம், தெளித்துச் சோதனை செய்து பார்த்ததில் 'சைகோசெல்' நல்ல பலனை அளித்துள்ளது. பத்தாவது மாதம் அறுவடை செய்ததில் 'சைகோசெல்' தெளிக்காத கரும்பைவிட, 'சைகோசெல்' தெளிக்கப்பட்ட 'கோ. 6304' இரகத்தில் 10.1 சதமும் 'கோ. 853' இரக்த்தில் 14.1 சதமும் சர்க்கரை அதிகமாக கிடைப்பது சோதனையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3.



## தானிய சேமிப்பில் ஒரு முக்கிய அம்சம்

சாதாரணமாக நெல், சோளம் போன்ற தானியங்கள் சாக்குப் பைகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. இம்மாதிரி சேமிப்பில் அந்துப்பூச்சி, செல், நெல் துளைப்பான் வண்டு, மூக்கு வண்டு போன்றவை பரவி சேதம் ஏற்படுத்த ஏதுவாகும். இப்பூச்சிகள் பழைய சாக்குப் பைகளை உபயோகிப்பதாலோ அல்லது சுத்தப்படுத்தாத கிடங்குகளில் சேமித்து வைப்பதாலோ எளிதில் பெருகி ஒரு மூட்டையிலிருந்து அடுத்து வைக்கப்பட்டிருக்கும் மற்ற மூட்டைகளுக்கும் பரவுகிறது.

இதனைத் தடுக்கும் விதம் பற்றி ஓராண்டுக் காலமாக தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தியுள்ள ''அறுவடை பின்செய் நேர்த்தித் திட்டத்தில்'' நெல் சேமிப்பு பற்றி ஆராய்ச்சி செய்து பயனுள்ள முடிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை:

1. தானியங்களை வெய்யிலில் காயவைத்து சுத்தம் செய்து நல்ல சாக்குப் பைகளில் சேமிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் விளைநிலத்திலிருந்து சேமிப்பிடத்திற்குப் பரவும் அந்துப்பூச்சி போன்றவற்றைத் தடுக்கலாம்.

2. மேலும் பூச்சிக் கொல்லி மருந்துகளை நேராக தானியத்தோடு கலக்காமல், சாக்குப் பைகளை மாத்திரம் மருந்துக் கலவைகளில் தோய்த்து, நன்றாக நிழலில் உலர வைத்து எடுத்து தானியங்களை நிரப்பி வைக்கலாம். இதற்கு சுமித்தியான், பாக்சிம் குவினைஸ்பாஸ், மாலத்தையான் போன்ற பல மருந்துகளை சாக்குப் பைகளில் தோய்ப்பதாலும் அதனால் ஏற்படும் பூச்சி சேதக் குறைவும் விரிவாக ஆராயப்பட்டன. இப்பூச்சி மருந்துகளில் மாலத்தையான் 1000 மி.கி. துரிதப் பொருள்/சதுர மீட்டர் (மாலத்தையான் 50 சதம் 3 மில்லி லிட்டருக்கு ஒரு லிட்டர் தண்ணீர்) என்ற அளவில் தோய்த்தெடுத்து உபயோகப்படுத்தலாம்.

3. மருந்து தோய்க்காத சாக்குப் பைகளில் வைகை (கோ. 37) நெல் ஒரு வருட சேமிப்பில் பூச்சி தாக்குதலில் 4 சதம் வரை சேதம் அடைந்தது. ஆனால் மாலத்தையான் மருந்து உபயோகித்த சாக்குப் பைகளில் மேற்கூறிய பூச்சி சேதத்திலிருந்து 75 சதம் குறைவாக இருந்தது. அதாவது ஒரு கிலோ நெல் மாத்திரமே பூச்சி தாக்குதலுக்கு உள்ளாயிற்று. (மருந்தடித்ததால் 3 கிலோ நெல் சேமிக்கப்பட்டது).

ஒரு சாக்குப் பைக்கு மருந்து தோய்க்க செலவு 20 பைசா ஆகும். இந்தச் செலவு நெல் மணியைப் பொறுத்த வரையில் 5 ரூபாய் வரை ஏற்படும் பூச்சி சேதத்தைக் குறைக்கும். எனவே உயர் ரக வித்துக்களை (பருத்தி, சோளம்) மருந்துக் கலவைகளில் தோய்த்த சாக்குகளில் சேமித்து வைப்பதன் மூலம் நூற்றுக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களை சேமித்து வைக்கலாமன்றோ?

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

## மீன் வளம் பெருக்குவோம்!



—ஆர். நாகராசன், ஐ.ஏ.எஸ்.,
மீன்துறை இயக்—,
தமிழ்நாடு.

தமிழ்நாடு இயற்—யாகவே ஆயிரம் கிலோ மட்டர் நீளம் உள்ள க—  பகுதியைக் கொண்டது. இப்பகுதியில் மீன்வளம் மிகச் சிறப்பு வாய்ந்ததென்று மீன்வள ஆராய்ச்சியாளர்களால் வெகுவாகப் புகழ்ந்து பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மீன்வளம் 95,200 டன்னிலிருந்து 3,25,000 டன்னுகப் பெருகியு—து. நாளுக்கு நாள் முன்னேறி, பல—களில் பெருகி வரும் அனைத்து —ங்களோடு மீன் வளமும் ஒன்றுகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மீன்வளத்தைப் பொறுத்த வரையில் மூன்று குறிக்கோள்களை வலியுறுத்துகின்றது. முதலாவதாக மொத்தத்தில் மீன் உற்பத்தியைப் பெருக்குவது; அதற்குத் தேவையான சாதனங்களை (Infrastructure) அமைத்துக் கொடுப்பது. இரண்டாவதாக மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு அடிப்படையான செயல் திட்டங்களை அமல் நடத்துவது; இதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்குதல் முக்கியமான குறிக்கோளாகும். மூன்றாவதாக நமக்குக் கிடைக்கும் மீன்களை உள்நாட்டு மக்களின் உபயோகத்திற்காக முடிந்த வரையில் தேவைப்படும் இடங்களில் எல்லாம் குறைந்த விலையில் கொடுக்க முயற்சிப்பது; சுருக்கமாகச் சொன்னால் விலையைக் குறைப்பது. இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டம் இதன் செயல் திறன்களைத் துரிதப்படுத்தியுள்ளது. குறிப்பாக 20 அம்சத் திட்டத்தின் குறிக்கோளாகிய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்துதல், இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தி, கொள்முதல், விநியோகம் —வைகளைச் சீரமைத்தல் ஆகிய அம்சங்களில் மீன்துறை செயல்படுத்த வேண்டிய முக்கிய குறிக்கோள்களாகும். மீன்வளத்தைக் கணக்கிட்டு அதனுடைய உற்பத்தியைப் பெருக்கி அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏழை மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு செயலாற்றி வருகின்றது.

தமிழகத்தினுடைய மீன் வளத்தை ''உள்நாட்டு மீன் வளம்'' (Inland Fisheries), 'கடலோர மீன்வளம்'' (Marine Fisheries) என்று இரு பகுதிகளாகப் பிரித்து அவற்றில் நாம் அடைந்துள்ள முன்னேற்றங்களை ஆய்தல் மிகவும் பொருத்தமான ஒன்று ஆகும். தமிழ்நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளில் ஆறுகளும், பெரிய குளங்களும், பாசனக் குளங்களும், கிராமங்களில் இருக்கக் கூடிய குட்டைகளும், ஓடைகளும் சேர்ந்து ஏறத்தாழ 81,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு உள்ளது. இவற்றில் 35,000 ஹெக்டேர் மீன்வளத்தைப் பெருக்க முடியும் என்பது நாம் ஆராய்ந்து கண்ட முடிவு. இந்த நீர்ப்பரப்பில் ஆண்டுதோறும் இயற்கையாக நதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரமான மீன் குஞ்சுகளைக் கொண்டு சேர்த்தும், மற்றும் செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்குஞ்சுகளைக்கொண்டு சேர்த்தும் அவற்றை வளர்த்து அதன் மூலம் தரமான மீன்களை உற்பத்தி செய்வது ஒரு முறையாக இருந்து வருகிறது. இந்த முறைகளின் மூலமாக நம்முடைய மீன் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு இப்போது 1.20 லட்சம் டன்களாகும். இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் 2.50 லட்சம் டன்களாக உயர்த்தப்படுவதற்கான செயல் திட்டங்களை மீன்துறை மேற்கொண்டுள்ளது. இந்தச் செயல் திட்டங்களில் மூலம் செயற்கை முறையில் மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் 12 இடங்களில் தூண்டுதல் முறையில் (Induced Carp Spawning) மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் நிலையங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் —ல இடங்களிலும் அமைக்கப்பட்டு—ள மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணைகளின் மொத்தப் பரப்பு சுமார் 4 ஹெக்—ர்களாகும். இவ்வாறு வளர்க்கப்பட— மீன் குஞ்சுகள் சாத்தனூர், —ளி சாகர், மேட்டூர் அணை ஆகி— நீர்த்தேக்கங்களில் விடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. வளர்ச்சியடைந்த மீன்கள் தினந்தோறும் கல்கத்தாவிலுள்ள ஹௌரா மார்க்கட்டிற்கு தமிழ்நாடு மீன் துறையின் சார்பாக மத்திய மீன் பிடிப்புக் கழகத்தின் மூலமாக இப்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உள்நாட்டு மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டு அவைகளுக்குத் தேவையான மீன் பிடிக்கும் சாதனங்கள் மற்றும் ஏனைய தேவைகளையும் இச்சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் மீன் வளர்ப்பினைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யும் வகையில் மீன்பண்ணை அபிவிருத்திக் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களில் மீன் வளர்ப்பில் ஆர்வம் கொண்டுள்ள மீனவர்களைக் கொண்டு மீன் வளர்ப்பினை மேற்கொண்டுள்ளது. இக்கழகம் விரைவில் வளரக் கூடிய பல்வேறு வகை மீன்களைக் குளங்களில் விட்டு வளர்க்க ஏற்பாடு செய்வதன் விளைவாகத் தஞ்சைமாவட்டத்தில் மீன் உற்பத்தி கணிசமாகப் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நீண்ட கடலோரத்தைக் கொண்ட தமிழகத்தில் உள்ள மீன்வளத்தை முழுமையாகப் பயன்படுத்—

அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் குறிக்கோளை அடைய அவற்றிற்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களை பெருக்குகின்ற முயற்சிகளிலும், கடல் மீன்வளத்தைப் பயன்படுத்தி நம்முடைய ஏற்றுமதிகளை ...சித்து வெளிநாட்டுச் செலவாணியைப் ...க்குவதிலும் சில செயல் திட்டங்கள் அ... ...த்தப்படுகின்றன. குறிப்பாகக் கடலோரங்களில் நல்ல மீன் பிடிப்பு இருக்கின்ற இடங்களில் விசைப் படகுகள் வந்து தங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது முக்கியமானதாகும்.

ஏறத்தாழ 7 கோடி ரூபாய் செலவில் விரைவாகச் செயல்பட்டு வரும் சென்னை மீன்பிடித் துறைமுகமும், 2½ கோடி ரூ...ய செலவில் அநேகமாக முடிவு பெற்றுள்ள தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் ...ன்பிடி விசைப் படகுகள் ...ன்களைக் கொண்டு வந்து ...ரை சேர்க்கவும், பிடிக்கப் ப...ட மீன்களை நவீன முறைப்படி பக்குவப்படுத்தி, பாதுகாப்பாகப் படகுகளில் போடவும், அவற்றை விரைவாக எடுத்துச் செல்வதற்குத் தேவையான சாதனங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் பெரும் உதவியாக இருக்கும். இது தவிர இராமேஸ்வரத்தில் மீன்பிடிக்கும் விசைப்படகுகள் வந்து தங்குவதற்காகக் கட்டப்பட்ட சிறிய ஜெட்டி இன்று ஏறத்தாழ 600 விசைப்படகுகள் வந்து தங்கி மீன் பிடிப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்துள்ளது. கோடிக்கரையிலும், மல்லிப் பட்டிணத்திலும் இதே முறையில் வி...சப்படகுகள் வந்து தங்குவதற்...ா ஜெட்டி கட்டிக் கொடுக்...ப்பட்டு ...ர்சி ...ரைந்து செயல் பட்டுக்கொ... ...ம் தமிழகத்தின் மு... ...ின் கடலோரப் பகுதிகளில் விசை... படகுகள் தங்குவதற்காக ஜெட்டிகள் கட்டிக் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு அதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பிடிக்கப்பட்ட மீன்கள் கெட்டு போகாமல் நல்ல நிலையில் விற்பனைக்கு வருவதற்கு இன்றியமையாத சாதனம் ஐஸ்கட்டிகளாகும். நீண்டகாலமாக இந்தச் சாதனத்தை நம்முடைய மீனவர்கள் பயன்படுத்தாமல் இருந்தார்கள். அவர்களை அந்த முயற்சியில் ஈடுபடுத்துவதற்காகத் தமிழக மீன் துறை கடலோரைப் பகுதிகளின் 38 இடங்களில் நாள் ஒன்றுக்கு 82 டன் ஐஸ் உற்பத்தி செய்யும் திறனும், மற்றும் 1?0 டன் மீன்களைப் பாதுகாப்பதற்கான குளிர் சாதன வசதிகளும் கொண்ட நிலையங்களை அமைத்துள்ளது. இந்த வசதிகளின் மூலம் மீன் பிடிக்கச் செல்வதற்கு முன்பே அவர்கள் ஐஸ்கட்டிகளை எடுத்துச் செல்கின்ற பழக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பிடிக்கப்பட்ட மீன்கள் கரை வருவதற்கு முன்பே கெட்டுவிடாமல், ஐஸ்கட்டிகளோடு, சேர்ந்து இருப்பதால் நல்ல தரமான நிலைமையில் சந்தைக்கு விற்பனைக்கு ...றெது. மீனவர்களுக்குக் கடலில் அதுக அளவில் மீன்கள் ...டைக்கும் இடங்களைக் கண்டு பிடித்து... தெரிவிப்பதற்காகத் தமிழ்நாட்டி... 5 இடங்களில் ( Inshore Fishing ...vey station ) என்ற ஒரு அ...ப்பு செயல்பட்டு வருகிறது. இந்த நிலையங்களில் உள்ள படகுகளின் மூலம் மீன்துறையைச் சேர்ந்தவர்கள் கடற்கரையிலிருந்து 240 அடி ஆழம் உள்ள கடல் பகுதி வரையிலுள்ள மீன்வளத்தை...ம கிடைக்கக் கூடிய ...களின் இனம், தரம் ...யவைகளையும் மற்றும் ...யாகப்படுத்தப்பட வேண்...ய வலைகளையும் முன்கூட்டியே ஆய்ந்து அந்தச் செய்திகளை மீனவர்களுக்கு வழங்கி வருகிறார்கள். இந்தச் செய்திகளின் மூலமாக ஏராளமாக மீனவர்கள் பயனடைந்து வருகின்றார்கள்.

# மீனின்
# இறகு அழுகல் நோயும் தடுப்பு முறைகளும்

தீவிர மீன் வளர்ப்பின்போது நிறைந்த பலன் கிடைக்க மீன்களுக்கு சரி விகிதத் தீனியும், சுகாதாரமான புறநிலையும் இன்றியமையாதவை. குறைந்த இடத்தில் அதிக உணவுகளை பயன்படுத்தும்போது உணவுப் பொருட்கள் நீரில் கரைவதாலும், மிஞ்சும் தீனி நீரில் அழுகுவதாலும், மீனின் கழிவுப் பொருட்களாலும் நீர் நச்சுத்தன்மை அடைந்து பிராணவாயுக்குறை ஏற்பட்டு, தனது இயற்கை நிலையை இழந்து விடுகிறது. மேற்குறிப்பிட்ட சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் மீன்கள் குறிப்பாக குஞ்சுகள் பலவித நோய் நொடிகளுக்கு ஆளாகி மடிந்து போகின்றன. அவைகளில் இறகு அழுகல் நோயும் ஒன்றாகும். இது பாக்டீரியாக்களால் உண்டாகும் நோயாகும். சில வேளைகளில் பூசணத் தாக்குதலும் இதனோடு இணைந்து நோயின் நிலையைக் கடுமையாக்கி வளர்ப்புக் குளங்களுக்கு மீனை அனுப்புவதற்கு முன்னர் அதிக குஞ்சுகளைக் குறைந்த இடத்தில் வைத்திருப்பதால் மீன்கள் பலகீனமுற்று, இரத்தச் சோகை ஏற்பட்டு செயலிழந்து இருக்கும் நிலைகளிலும், சுற்றுப்புறச் சுகாதாரம் குறைந்த நிலையிலும், குஞ்சுகளைப் புது இடத்தில் இருப்புச் செய்யும்போது இறகுகளில் காயம் ஏற்படும் நிலையிலும் இந்நோய் மீன்களைத் தாக்குகின்றன. நோய் கண்ட மீன்கள் சுறுசுறுப்பின்றி குளங்களின் அடியிலும் ஓரங்களிலும் செயலிழந்து நின்று கொண்டிருக்கும். இறகுகளின் நுனி வெள்ளை நிறமாக மாற ஆரம்பித்து, பின்னர் நுனிப் பகுதிகளில் அரிப்பு ஏற்பட்டு நோய்க்கிருமிகள் ஓரிருநாட்களில் இறகுகளை முற்றிலும் தின்றுவிடுகின்றன. நன்கு கவனிக்காதிருந்தால் அவை இறகுத் தண்டின் திசுக்களில் நுழைந்து அவற்றை அழுகச் செய்து விடுகின்றன. இதனால் மீன்கள் உருவிழந்து, தீனி உண்ணாமல் மடிந்து போவதோடன்றி இந்நோய் கண்ட குளத்தில் எல்லா மீன்களையும் தாக்கி பண்ணைக்கு பெருத்த நட்டம் ஏற்படுத்தும். உணவில் 'இனொசிட்டால்' என்ற 'பி.' உயிர்ச் சத்து குறை ஏற்படுமாயினும் மீன்கள் இந்நோய்க்கு ஆளாகலாம்.

### தடுப்பு முறைகள்

1. ஒருகிராம் 'பொட்டாசியம் டை குரோமேட்டை' 10 லிட்டர் நீரில் கரைத்து மீன்களை அதில் 30 நிமிடங்கள் வைத்திருந்த பின்னர் தொட்டிகளில் விடவேண்டும். அல்லது 2 லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கரைத்தமயில் துத்தக் கரைசலில் 3 நிமிடங்கள் வைத்திருக்கலாம். இவ்வாறு 5 நாட்கள் செய்ய நோய் மறையும்.

2. நோய் முற்றிய நிலையில் இருப்பின் 0.1 சதம் 'சில்வர் நைட்ரேட்' கரைசலைத் தாக்கப்பட்ட பகுதிகளில் தடவி 0.04 சதம் 'பொட்டாசியம் டை குரோமேட்' கரைசலில் நோய் தீரும்வரை வைத்திருக்கலாம்.

3. 80 மி. கிராம் 'குளோராம் பெனிகால்' மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து 10 கிராம் எடைக்குக் குறைவான மீன்களை 8 மணி நேரமும், பெரிய மீன்களை 24 மணி நேரமும் வைத்திருக்க வேண்டும்.




பால்ய விவாகம்-சமூகக் கேடு என்று கருதப்பட்ட இந்த விவாகத்தைத் தடுத்து நிறுத்த 19-வது நூற்றாண்டுக் காலத்திலும், சில பகுதிகளில் சீர்திருத்தவாதிகள் தீவிரமாகச் செயல்பட்டனர்.

சட்டத்தின் மூலம் இந்த விவாகத்துக்கு முட்டுக்கட்டை போட வேண்டும் என்பது அவர்கள் முயற்சி.

1862-ஆம் ஆண்டு கேஷாப் சந்திராசென் தலைமையில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவில் கலப்புத் திருமணங்கள் நடத்தப்பட்டு வந்தன. வைதீகம், சாஸ்திரீய பழக்கங்களில் ஊறிப்போய் இருந்த இந்துக்கள், இந்தத் திருமணங்கள் நடத்தப்படுவதன் நியாயம் குறித்து எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அதனைத் தொடர்ந்து 1872-ஆம் ஆண்டு 'உள்நாட்டு திருமணச் சட்டம்' (சிவில் திருமணச்சட்டம் என்பது அனைவரும் அறிந்ததே ) நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் கலப்புத் திருமணம், விவாகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதே நேரத்தில்-ஒரே சமயத்தில் பல பெண்களை மணக்கும் போக்குக்கும் தடை விதிக்கப்பட்டது. பெண்ணுக்கு, குறைந்தபட்ச திருமண வயது 14 ஆகவும், ஆணுக்கு 18 ஆகவும் வரையறுக்கப்பட்டது.

பால்ய விவாகம் நடத்தப்படுவதால்-இளம் மனைவிகள், அவர்களது குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு கேடு விளைகிறது என்பது சீர்திருத்தவாதிகள் கண்ட உண்மை. பால்ய விவாகத்தைத் தடுக்கும் வகையில் 1891-ஆம் ஆண்டு இசைவு வயது சட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்ணுக்கு 12 வயது ஆகும் முன்னே விவாகம் நடத்துவது இதன் மூலம் தடை செய்யப்பட்டது. போதிய விளம்பரமும், பிரச்சாரமும் இல்லாத காரணத்தால் இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களால் எந்தவித பலனும் ஏற்படாமல் போனது, 1925-ஆம் ஆண்டில் இசைவு வயது 13 ஆக உயர்த்தப்பட்டது. 1929-ஆம் ஆண்டின் 'சாரதா சட்டத்துக்கு' இது முன்னோடியாக அமைந்தது.

### பால்ய விவாகத் தடைச் சட்டம்

1929-ஆம் ஆண்டின் பால்ய விவாகத் தடைச் சட்டம் — 'சாரதா சட்டம்' என்று பிரபலமடைந்தது. இந்தச் சட்டத்தில் ஆண்களுக்கான குறைந்தபட்ச வயது 18 ஆகவும், பெண்களுக்கான குறைந்தபட்ச வயது 14 ஆகவும் வரையறுக்கப்பட்டது. 1949-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் பெண்களுக்கான குறைந்தபட்ச வயது 15 ஆக உயர்த்தப்பட்டது.

இதே போல மன்னர்களாண்ட மாநிலங்களான மைசூர் (1894) பரோடா (1904), இந்தூர் (1918) ஆகிய மாநிலங்களிலும்-சுதந்திரத்துக்கு நீண்டகாலம் முன்பாகவே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பால்ய விவாகம் நடத்தும் பெற்றோர்கள், விவாக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மட்டுமல்லாமல் வயதான மணமகன் ஆகியோரும் சாரதா சட்டத்தின் கீழ் பல்வேறு அளவிலான தண்டனைக்குட்பட்டவர்கள்.

திருத்தப்பட்ட சாரதா சட்டத்தில்-பெற்றோர்கள், பாதுகாவலர்கள், மணமகன் ஆகியோருக்கான ஜெயில் தண்டனை 1 மாதத்திலிருந்து 3 மாதமாக சற்று உயர்த்தப்பட்டது. 18 வயது முதல் 21 வயதுக்குட்பட்ட ஒரு ஆண்-ஒரு சிறுமியை மணந்தாலும், அவரும் சட்டப்படி தண்டனைக்குட்பட்டவர்.

சாரதா சட்டம் தவிர, மேலும் பல சட்டங்கள் திருமணத்துக்குக் குறைந்தபட்ச வயதை வரையறுத்தன.

1955-ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம்-மணமகனுக்கு 18 வயது நிரம்பியிருக்க வேண்டும், மணமகளுக்கு 15 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

1956-ஆம் ஆண்டு முதல், இந்து மணமகன் வயது 19 ஆகவும், மணமகள் வயது 16 ஆகவும் உயர்த்தப்பட்டது.

### பாரசீகர் திருமணச் சட்டம்

1936-ஆம் ஆண்டு பாரசீகர் திருமண, விவாகரத்துச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி திருமணமான ஒரு கணவன் 16 வயதையும், மனைவி 14 வயதையும் பூர்த்தி செய்யாவிட்டால்— (வழக்கு தொடரப்படும் தேதியில்), இரண்டு பாரசீகர்களுக்கு இடையில் ஒரு திருமணத்தை நடத்தி வைக்கக்கோரி எந்த ஒரு வழக்கும் கோர்ட்டில் தொடர முடியாது.

மணமகன் 16 வயதுக்கும், மணமகள் 13 வயதுக்கும் மேற்பட்டிருந்தால்தான் ஒரு திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும். இது 1972-ஆம் ஆண்டு, 'கிறிஸ்துவ திருமணச் சட்டம்' வரையறுத்த ஷரத்து.

திருமணம் செய்து கொள்ளும் மணமகன்-மணமகள் இருவரும் 'மைனர்களாக இருக்கக் கூடாது; வயதுக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் திருமணம் செல்லுபடியாகும் என்பது முஸ்லீம் சட்டம். பெண்கள் 15 வயதுடையவராகவும், ஆண்கள் 19 வயதுடையவராகவும் இருப்பதே அவர்கள் வயதுக்கு வந்தவர்களாகக் கருதப்படுவதற்கு நிருபணமாகும்.

சுதந்திரமடைந்த பிறகு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது—'1954 - ஆம் ஆண்டின் விசேஷ திருமணச்சட்டம்'. இந்தச் சட்டத்தின் மூலம் எந்தவித மத வேறுபாடுகளுமின்றி மதச்சார்பற்ற திருமணங்களுக்கு வழி காணப்பட்டது. வயது வந்தவர்களுக்கு இடையில் திருமணம் நடத்தப்பட வேண்டும் என்ற



இந்தச் சட்டத்தின் ஷரத்தில் ஆண்களுக்கு குறைந்தபட்ச வயது 21 ஆகவும், பெண்களுக்கு 18 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

ஆண்களை விடப் பெண்கள் குறைந்த வயதுடையவராக இருத்தல் வேண்டும் என்றே உலகம் முழுவதும் சட்டங்கள் வலியுறுத்தியுள்ளன. அமெரிக்க நாடுகளில் 11 மாநிலங்களில் மட்டும் ஆணுக்கும்-பெண்ணுக்கும் சம வயது நிர்ணயிக்கப்பட்டது. அதே நேரத்தில் மற்ற 39 மாநிலங்கள், ஆணைவிடப்பெண்கள் குறைந்த வயதுடையவர்களாக இருக்க அனுமதித்துள்ளன.

**தற்கொலைக்கு முக்கிய காரணம்!**

குஜராத் அரசாங்கம் 1964-ஆம் ஆண்டு 'தற்கொலை விசாரணைக்குழு' (புஷ்பாபென் குழு என்றும் அழைக்கப்பட்டது) ஒன்றை அமைத்தது. 'இந்தியாவில் உள்ள திருமணமான இளம் பெண்கள் மத்தியில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகம் இடம் பெற்றதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று இந்த 'பால்ய விவாகம்' என்று இந்தக் குழு தகவல் வெளியிட்டது.

1971, செப்டம்பர் 22-ஆம் தேதியன்று கல்வி, சமூக சேஷம நல அமைச்சகத் தீர்மானத்தின்படி 'இந்தியாவில் பெண்கள் நிலைமை குறித்து இந்தக்குழு அமைக்கப்பட்டது. சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து, அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு சம்பந்தமாக அரசியலமைப்பு, சட்ட, நிர்வாக ஷரத்துக்கள் குறித்து இந்தக் குழு பரிசீலித்தது. பின்னர் 1975, ஜனவரி 1-ந் தேதியன்று தன்னுடைய அறிக்கையைத் தாக்கல் செய்தது.

பால்ய விவாகம் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் இந்தக் குழு விவாதித்தது. மேலும் கீழ்க்காணும் பரிந்துரைகளையும் வெளியிட்டது. அவை வருமாறு: 1. பால்ய விவாகம், இரு தார மணத்தைக் கட்டுப்படுத்த-திருமணங்களுக்கு நம்பத்தகுந்த நிரூபணம் வழங்க, சட்டப் பூர்வமானதாக்க, குழந்தைகளுக்கு வாரிசு உரிமைகளை வழங்க—ஐக்கிய நாடுகள் சிபாரிசு செய்தபடி திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். 2. குறிப்பாக கிராமப் பகுதிகளில்பால்யவிவாகத்தடைச் சட்டம் அதிக அளவில் மீறப்படுகிறது. இதை-வழக்குத் தொடரக் கூடிய ஒரு குற்றமாக குஜராத் மாநிலம் அறிவித்துள்ளது. அத்துடன் பால்ய விவாகத்தடுப்பு அதிகாரியும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆகவே-பால்யவிவாகத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் அனைத்தும் கோர்ட்டுகளில் வழக்குத் தொடரக் கூடிய குற்றங்களாக்கப்படவேண்டும்; இந்தச் சட்டத்தை அமல் நடத்த விசேஷ அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

3. பெண்களைப் பொறுத்த மட்டில் பகுத்தறியும் திறன்பெறும் வயதுக்குக் கீழ் திருமணத்துக்கு, சட்டப்பூர்வமான வயது இருந்தால்-தன் வாழ்க்கைத் துணைவரைப் பற்றித் தெளிந்த, சிறந்த அறிவு பெறுவாள் என்று எதிர்பார்க்க முடியாது. உடல் வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் முதிர்ச்சி அடைவதற்கு முன்னாலேயே ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடக்க அனுமதிக்கும் சட்டத்தின் கொள்கை சற்று விவாதிக்கப்பட வேண்டியதொரு விஷயம். இந்தியாவில் திருமணமான இளம் பெண்களின் மத்தியில் தற்கொலைச் சம்பவங்களின் உயர்வுக்கு பால்ய விவாகம் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். ஆகவே-பெண்களின் திருமண வயதை 18 வயதாக உயர்த்து ...ரும்பத்தக்கது.

4. வயதுக்கு வந்த பிறகு, எல்லா சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் தங்கள் விருப்பம் போல் திருமணத்தை மறுக்கவோ, தள்ளிப [illegible] உரிமை வழங்கப்பட வேண்டும்.

5. ஆண்-பெண் இருவருக்கும் 18 வயது பூர்த்தியாகாத பட்சத்தில் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வயதை மீறி நடத்தப்படும் திருமணத்துக்கு எந்தவிதச் சலுகையையும் வழங்காமல் கோர்ட்டுக்குத் தடை விதிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும்



இவ்வாறு இந்தக் குழு பரிந்துரை செய்தது. திருமண விவகாரப் பிரச்சினையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இன்னொரு நடவடிக்கை திருமணத் தடை (திருத்த) மசோதா. இந்த மசோதாவில், ஆண்களின் திருமண வயதை 18-லிருந்து 21 ஆகவும், பெண்களின் வயதை 15லிருந்து 18 ஆகவும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பால்ய விவாகத்துக்கு எதிராக நடக்கும் போராட்டத்தில் ஒரு புரட்சிகரமான நடவடிக்கை இந்த மசோதா.

[நன்றி: பத்திரிகைத் தகவல்


உள்ளும் புறமும்
ஒளி மிளிரும்
வண்ணத்துப்பூச்சி
ஆடைகளை அணிந்து
கொண்டாடுங்கள். நாகரீகம்
படைக்கும் நவீன டிசைன்கள்.
உடுப்புகளுக்கான துணிகளைத்
தவிர, பல வகைகளில்,
அச்சிட்ட பட்டு மற்றும் நூல்
சேலைகள், எழில் மிக்க அலங்
காரத் துணிகள், டர்கிஷ் .
மற்றும் சாதாரணத் துவாலைகள்,
சிறப்பான படுக்கை
விரிப்புகள்...
இளமை வனப்புக்கு
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

 பதிவு எண்: M. 8878



10 FEB 1977





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"




# தமிழரசு

1—2—1977

மலர் : 7 இதழ் : 15


## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| இந்தியாவின் பெருமையைக் காக்க மக்களைச் சந்திப்போம்! .. | 2 |
| தமிழ்நாட்டின் 1977—78-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு .. | 5 |
| புனிதப் பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்வீர்! .. .. .. | 6 |
| இருபது அம்ச — ஐந்து அம்சத் திட்டங்கள் .. .. .. | 9 |
| தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி .. .. | 14 |
| இந்தியப் பொருளாதாரத்தில் தென்னை .. .. .. | 17 |
| படமும் செய்தியும் .. .. | 21 |
| உல்லாச உந்துகளில் செல்லலாம் சுற்றுலா! .. .. .. | 29 |
| வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்தவர்! .. | 33 |
| இந்தியாவை உணர்க! .. .. | 36 |
| கள்ளக் கடத்தல் தடுப்பு இயக்கம் .. | 41 |
| அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அனைத்துலகக் கருத்தரங்கு .. | 45 |


கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.



## அண்ணலின் நினைவு நாள்

அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி 30—1—'77 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் பிரார்த்தனையும், பஜனையும் நடைபெற்றன.

## அட்டைப்பட விளக்கம்

கடும் வறட்சி வாட்டிய போதிலும் மனந்தளராமல் தமிழக உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டு, நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டதன் பயனாக இந்த ஆண்டில் பொதுவாக நல்ல நெல் மகசூல் கிடைத்துள்ளது என்பதை அட்டைப் படம் சொல்கிறது!

# “இந்தியாவின் பெருமையைக் காக்க மக்களைச் சந்திப்போம்!”



“வானொலியில் உங்களுக்கு நான் உரை ஆற்றிச் சிலகாலம் ஆகிவிட்டது. ஆயினும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நான் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு வந்ததாலும் தில்லியிலும் மற்ற இடங்களிலும் ஏராளமான பேரைச் சந்தித்து வந்ததாலும் உங்கள் அனைவருடனும் நான் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன். உங்களுடைய ஆதரவும், அன்பும், நம்பிக்கையுமே இந்தியாவுக்கு மிகத் திறமையான வகையில் செயலாற்ற எனக்கு உதவியுள்ளன.

''நாடு முழுவதும் நான் மேற் கொண்ட பயணங்களில் நாட்டு மக்கள் தங்களிடமிருந்த தோல்வி மனப்பான்மைக்கும், விரக்தி நிலைமைக்கும் விடை கொடுத்து இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். இந்தியன் என்பதில் இப்போது ஒரு புதிய பெருமை ஏற்பட்டுள்ளது. உண்மையில் இப்போது முடிந்த ஆண்டில் தன்னுடைய நோக்க உணர்வையும், தன்னுடைய வலுவையும் நம் தேசம் திரும்பவும் கண்டுபிடித்துள்ளது என்று சொல்லலாம்.

''18 மாதங்களுக்கு முன்பு நம்முடைய நாடு துரதிர்ஷ்டத்தின் விளிம்பில் நின்றது. வன்முறை பகிரங்கமாக பிரச்சாரம் செய்யப்பட்டது. தொழிலாளர்கள் வேலை செய்யாமலும், மாணவர்கள் படிக்காமலும் இருக்கவும், அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய உறுதிமொழியைத் தகர்த்து எறியவும் தூண்டப்பட்டனர். புரட்சி என்ற பெயரில் தேசம் செயல்படாமலும் செயலற்று இருக்கும் ஒரு போக்குக்குப் பிரச்சாரம் செய்யப்பட்டது. விரைவில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு உழைத்திருந்தால் அது ஜனநாயக வழியாக அமைந்திருக்கும்.

''அரசாங்கம் செயல்பட வேண்டிய ஒரு சூழ்நிலையில் தன் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலட்சிய உணர்வு கொண்ட ஒரு அரசாங்கம் இல்லாமல், வளர்ச்சி அடையும் எந்த ஒரு நாடும் நீடித்திருக்க முடியாது. அந்த நேரத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தற்காலிகமானதே என்று நான் தெளிவுபடுத்தினேன். அவை மெதுவாகத் தளர்த்தப்பட்டு வந்துள்ளன. காவலில் வைக்கப்பட்ட தலைவர்களும், தொண்டர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கொஞ்சகாலத்திற்குக் கடந்த காலத்தில் பத்திரிகைத் தணிக்கைத் தளர்த்தப்பட்டிருந்தது. அந்த நிலையில் மக்களின் நடவடிக்கைகள், கட்சிகளின் நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வந்தன. வன்முறையும் நாசவேலையும் விட்டொழிக்கப்பட்டிருந்தால் வகுப்புவாதமற்ற கிளர்ச்சிகளுக்கு முயற்சிகள் இல்லாமல் இருந்திருக்குமானால்-முன்னமேயே இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்க முடியும்.

''அபிவிருத்தித் திட்டங்களினால் பெரிதும் பயனடையாமல் இருந்த மக்களுக்கு உதவுவதற்காக, பல கொள்கைகளைத் துவக்கிச் செயல்படுத்துவதற்கு இந்த ஒழுங்குக் கட்டுப்பாடும், நம்பிக்கை உணர்வும் உதவியிருக்கின்றன. மக்களுக்குப் பணியாற்றுவதற்கென்றே வகுக்கப்பட்ட கொள்கைகளுக்குத் தடையாக இருந்தவைகளை அகற்றுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நடுத்தர மக்களுக்கு ஒரு சுமையாக இருந்த வரதட்சிணை போன்ற சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். நல்ல ஆரோக்கியமான குழந்தைகளைப் பெறுவதற்கு, இலட்சியம் கொண்ட குடும்பக்கட்டுப்பாட்டுக்காகவும் நடவடிக்கைகள் எடுத்தோம். இந்த விஷயத்தில் நிர்ப்பந்தமோ தொந்தரவோ இருக்குமானால் அது கடுமையாக ஒடுக்கப்படும்.

''நாடு வழக்கமான மாமூல் நிலையிலிருந்து மாறுபட்டிருந்த காரணத்தினால்தான் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டது என்பதை உங்களுக்கு நினைவு கூர்கிறேன். நாடு இப்பொழுது ஆரோக்கியமான நிலைக்கு திரும்பிக் கொண்டிருப்பதால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படாதவாறு நாம் உதவி செய்ய வேண்டும்.

''மாமூல் நிலைமை என்றால் ஒழுங்கான முறையில் தொழில்கள் நடக்க வேண்டும். மக்கள் சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நடந்தால்தான் இது சாத்தியமாகு[illegible] நாயகத்து[illegible] சில விதிகள் இருக்கின்றன. அரசாங்க வேலைகளைத் தடுத்து நிறுத்த முடியாது. மக்களில் எந்தப் பிரிவினரின் நல்வாழ்வுக்கோ அல்லது நாட்டின் பாதுகாப்புக்கோ எவரும் ஊறு செய்யக் கூடாது. இந்தியா வாழ்ந்து சுபிட்சம் அடைய வேண்டுமாயின் பகைமை உணர்வைப் பரப்பக்கூடாது; வன்முறையைக் கடைப்பிடிக்கக்கூடாது; நாசவேலைகளுக்கு ஊக்கமளிக்க முடியாது; பொதுவாழ்வின் தரத்தைத் தாழ்த்த முடியாது.

''பொருளாதார நிலைமை பெரிதும் சீர்திருந்தி விட்டது. பணவீக்கத்திற்கு எதிராக நாம் எடுத்த முயற்சிகளை மற்ற நாடுகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய விவசாயிகளும், ஆலைத்தொழிலாளர்களும், விஞ்ஞானிகளும், நுட்ப ஊழியர்களும், நிர்வாகிகளும் கடமை உணர்வுடன் செயலாற்றியதன் காரணமாக உற்பத்தி அதிகரித்திருக்கிறது. சிரமங்கள் இருந்தபோதிலும் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியினாலும் அரசியல் கிளர்ச்சிகளினாலும் தடைப்பட்டிருந்த பல அபிவிருத்தித் திட்டங்களின் பணியை நாம் மீண்டும் துவக்கியிருக்கிறோம். 20 அம்சத் திட்டமும், 5 அம்சத் திட்டமும் நல்ல பலன்களை அளித்திருக்கின்றன. இன்னும் செய்ய வேண்டியவை எத்தனையோ இருந்தாலும் தன்னம்பிக்கை தோன்றியிருக்கிறது. இளைஞர்களும், பெரியவர்களும் புத்துணர்வு பெற்றிருக்கிறார்கள். குற்றச்சாட்டுகள் இருந்தாலும் வெளிநாடுகளில் நம் தேசத்துக்கு ஒரு புதிய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

''விவசாயிகளும், ஆலைத்தொழிலாளர்களும் நமது மக்களில் மற்ற சில பிரிவினர்களும் அனுபவித்து வரும் சிரமங்கள் பற்றி நான் அறிவேன். விரைவான தீர்வுகள் காணுவதற்காக ஒவ்வொரு பிரச்னையையும் ஆராய்ந்து வருகிறோம். புயல், வறட்சி, வெள்ளம் ஆகியவை சில பகுதிகளில் சிரமங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னுடைய அனுதாபங்கள். கடந்த சில மாதங்களில் ஒரு சில பண்டங்களின் விலைகள் சற்று அதிகரித்திருக்கின்றன. ஆனால் அதைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே துவக்கியிருக்கிறோம். அவற்றால் விரைவில் நல்ல பலன் கிட்டும்.

''சென்ற பல ஆண்டுகளிலேயே மிகப் பெரிய அளவிலான தானியச் சேமிப்பை நாம் உருவாக்கியிருக்கிறோம். பொருளாதாரத் துறையில் கஷ்டம் விளைவிக்க விரும்பும் சக்திகள், கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்குமாயின் நம்முடைய பொருளாதாரப் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்.

''நாடு நீண்ட காலமாக இருந்ததைக் காட்டிலும் அதிக ஆரோக்கியத்துடனும், திறமையுடனும், துடிப்புடனும் இன்று விளங்குகிறது. இப்பொழுது நம்முன் உள்ள பிரச்னை என்னவென்றால் சில தடைகளை விதிக்க நேர்ந்த அரசியல் செயல்முறைகளைக் கணிசமான அளவு மீட்பது எப்படி என்பது தான்.

''மாறுதல் என்பது வாழ்க்கையின் அடிப்படையாகும். உலகமே ஒரு தெளிவற்ற நிலையில் இருக்கின்ற காலம் இது. இன்றையச் சமுதாயம் பல ஆபத்துக்களை முன்நோக்கி இருக்கின்றது. இந்த ஆபத்துக்களினால் குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம். எனவேதான் எல்லா மாறுதல்களும் அமைதியான முறையில் ஏற்பட வேண்டும். இதுவே நமது சுதந்தரப் போராட்டமும், மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் விட்டுச் சென்ற சொத்தாகும்.

## பிரதமர் உரை

''நாட்டு மக்களிடமிருந்து தங்களுடைய அதிகாரங்களை அரசாங்கங்கள் பெறுகின்றன என்ற நம்பிக்கையில் அமைந்ததுதான் நம்முடைய முறை. ஒவ்வொரு குறிப்பிட்ட ஆண்டிலும் நாட்டு மக்கள் தங்களுடைய மேம்பட்ட உணர்வுக்கு—ஆசைக்கு வடிவம் கொடுக்கிறார்கள். கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதைக் குறிப்பிட்டு அவர்கள் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் அப்படித் தேர்ந்தெடுக்கும் அரசாங்கம் அந்தக் கொள்கைகளை நிறைவேற்றப் பூரண ஆயுட்காலம் உடையது.

''1971-ஆம் ஆண்டில் தற்போதைய மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மக்கள் தேர்ந்தெடுத்த, தெளிவான ஆட்சிக்குழு மூலம் பல கூட்டுச் சவால்களை ஒருங்கே நாடு சந்திக்க முடிந்தது. பங்களாதேஷ் சம்பவங்களால், சர்வதேசப் பொருளாதார நெருக்கடியால், 1972-73-ம் ஆண்டின் வறட்சியால், 1974-75-ம் ஆண்டின் அரசியல் சம்பவங்களால் உருவான பல சவால்களை, நாடு சந்தித்துள்ளது. சட்டப்பூர்வமாக மேலும் 15 மாதங்களுக்கு தற்போதைய மக்கள் சபை நீடிக்கலாம்.

''நாட்டின் வலிமைக்கும், நலத்துக்குமான நம்முடைய திட்டங்களையும் கொள்கைகளையும் பாராளுமன்றமும், அரசாங்கமும் நிறைவேற்ற, நாட்டு மக்களிடம் திரும்பச் சென்று, அவர்களின் அனுமதி கோர வேண்டும் என்பதில் நாங்களும் பலத்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

''நாட்டு மக்களின் சக்தியில் அசைக்க முடியாத இந்த நம்பிக்கையின் காரணமாக தற்போதைய மக்கள் அவையைக் கலைத்துவிடவும், புதிய தேர்தல்களுக்கு உத்தரவிடவும் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நான் யோசனை கூறினேன். அவரும் இதை ஏற்றுக் கொண்டார். மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

''அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அனைத்தும் சட்டப்படியான தங்களது நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறும் வகையில் நெருக்கடி நிலைமை விதிகள் மேலும் தளர்த்தப்பட்டு வந்துள்ளன. வன்முறையைக் கைவிடுமாறும், இழிவுபடுத்திக் கூறுவது, அவதூறு பேசுவது ஆகியவற்றை விட்டொழிக்குமாறும் அரசியல் கட்சிகள் அனைத்தையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வதந்திகளையோ, கிசு கிசுப்புகளையோ நம்பவேண்டாம். என்றும், அவற்றுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

''ஒவ்வொரு தேர்தலும் நம்பிக்கையின் செயல் ஆகும். குழப்பத்திலிருந்து பொது வாழ்க்கையை தெளிவுபடுத்துவதற்கு அது சந்தர்ப்பமாகும். ஆகவே இந்தியாவின் நல்ல பெயரைக் காக்கவும், ஒருமைப்பாடு, சமாதானம், முன்னேற்றம் ஆகியவற்றுக்கு நற்பேறு பெற்ற அதன் பெருமையைக் காக்கவும் உறுதியுடன் தேர்தலில் மக்களைச் சந்திப்போம்.

''உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள். இந்திய மக்களுக்கு 1977-ஆம் ஆண்டு கூடுதல் வலுவும், நிலைத்த தன்மையும், தொடர்ந்த சாதனையும் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன்.

(நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 18-1-1977 அன்று அனைத்து இந்திய வானொலியில் ஆற்றிய உரை......)

### பாரதி சாலை



சென்னை உட்ஸ்ரோடிலிருந்து காமராஜ் சாலை வரை செல்லும் பைக்கிராப்ட்ஸ் சாலையை 'பாரதியார் சாலை' என்று மாற்றியமைக்க மாநகராட்சி செய்துள்ள தீர்மானத்தைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, அனுமதியளித்துள்ளது.



அனைத்து இந்திய 'என்.சி.சி.' இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் தமிழ்நாடு 'என்.சி.சி.' இயக்ககம் வெற்றி பெற்று 1977-ஆம் ஆண்டிற்குரிய (சாம்பியன்) வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது. ஏழாவது முறையாக இவ்வெற்றிக் கொடியைத் தமிழ்நாடு பெற்றிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

புதுடெல்லியில் 27—1—1977 அன்று நடைபெற்ற 'என்.சி.சி.' பேரணியில் நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சாம்பியன் கொடியை, தமிழ்நாடு 'என்.சி,சி.' யைச் சேர்ந்த முதுநிலை அலுவலர் திரு. சங்கர் அவர்களிடம் அளித்தார்.

# தமிழ் நாட்டின் 1977-78-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு

திட்டக் குழுவின் துணைத் தலைவருக்கும் தமிழ்நாடு ஆளுநருக்கும் இடையே 24-1-'77 அன்று டெல்லியில் நடந்த பேச்சுவார்த்தையில், தமிழ்நாட்டிற்கு 1977-78-ம் ஆண்டுக்கான திட்ட முதலீடு ரூ. 260 கோடி என்று முடிவு செய்யப்பட்டது. இம்முதலீடு, நடப்பு ஆண்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட திட்ட முதலீடாகிய ரூ. 201 கோடியைவிட 30 சதவீதம் அதிகமாகும். தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாவதற்கு முன்பு, அதாவது 1975-76-ஆம் ஆண்டில் ஆண்டுத் திட்ட முதலீடு ரூ. 143 கோடிதான் என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டியதாகும். 1976-77-ஆம் ஆண்டில் இது 40 சதவீதம் அதிகமாக்கப்பட்டு அதாவது ரூ. 201 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்த வேகம் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## தனி நபர் முதலீடு

தனிநபருக்கான திட்ட முதலீடு 1975-76ல் ரூ. 35 ஆக இருந்தது. 1977-78ல் ரூ.63 ஆக உயரும்.

## இருபது அம்சத் திட்டத்திற்கு அதிக முதலீடு

20 அம்சத் திட்டத்தில் அடங்கிய பணிகளுக்கு இதற்கு முன் திட்ட முதலீட்டில் 44 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டது. தற்பொழுது அது 55 சதவீதமாக இருக்கும்.

## மின்சாரத்திற்கு முன்னுரிமை

மின்சாரம், பாசனம், விவசாயம், தொழில், போன்ற முக்கிய துறைகளுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறது. 1975-76-ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான முதலீடு ரூ. 40 கோடியாகும். குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பின்னர், அதாவது 1976-77-ஆம் ஆண்டில் அது ரூ. 70 கோடியாக உயர்ந்துள்ளது. மின்சாரத்திற்கான முதலீடு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 95 கோடியளவில் இருக்கும். தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை விரைவில் முடிக்கவும், பாண்டியாறு புன்னம்புழா நீர்ப்பாசன மின்திட்டத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் இதில் முழுமையாக வகை செய்யப்பட்டுள்ளது.

## பாசனத் திட்டங்கள்

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் அன்னியில், காவிரி கழிமுகப் பகுதிகளை நவீனப்படுத்தவும், பெரியாறு-வைகைத் திட்டத்தை நவீனப்படுத்தவும், பாசனத் திட்டங்களில் அதிக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. சிறு பாசனத் திட்டங்களுக்கும் அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சமூகநலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம்

சமூக சேவைத் துறையில் பல்வேறு திட்டங்களுக்காக முழு அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-ஆம் ஆண்டு நவம்பருக்குள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் உள்ள எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் கழிப்பிடங்கள், குடிநீர், தெருவிளக்கு மற்றும் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. அதே காலத்திற்குள் வீட்டு மனைகள் தேவைப்படும் தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். குடிசை வாசிகள், அரிஜனங்கள், மீனவர் ஆகியோருக்கு வீட்டுவசதி அளிப்பதற்காகத் தற்போது செலவிடும் அளவு, தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

## எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல குடிநீர்!

எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுத்தமாகவும், போதுமான அளவும் அளிப்பதற்காக விரிவான குடிநீர் வழங்கு திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நிறைவேறும். இதற்குப் போதிய நிதி ஆதாரங்கள் அளிக்கப்படுகின்றன.

## புதிய கல்வி முறை

கல்வித்துறையில், பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் மாணவ-மாணவியரைச் சேர்க்கும் முனைப்பு இயக்கம் தொடர்ந்து கடைப் பிடிக்கப்படும். 1978 மார்ச் மாதத்தில் 10+2+3 ஆண்டுக் கல்வி முறை அமலுக்கு வரும்.

## இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம்

வேளாண்மை முன்னேற்றத்தின் மேம்பாட்டுக்காக மின்சார உற்பத்தியின் அளவை அதிகமாக்கத் தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை ஆளுநர் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் மேலும் நீர் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பழுப்பு நிலக்கரி, நிலக்கரி ஆகியவற்றில் இருந்து கூடுதல் அனல் மின்சக்தி பெற அவசர அடிப்படையில் திட்டமிடவேண்டியுள்ளது. இதன் தொடர்பாக நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்டும் பணிக்காக, விரிவான பரிசோதனைக்கு உடனடியாக அனுமதி தர வேண்டும் என்று ஆளுநர் வற்புறுத்தினார்.

தேசிய, பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் மத்திய அரசு செல்லும் முன்னேற்றப்பாதையில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் வகையில் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதற்காக, மத்திய அரசின் முழுப் பரிவினையும் நல்ல எண்ணத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.



# புனிதப் பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்வீர்!

"குடியரசு நன்னாளில் தமிழக மக்களுக்கு
எனது மகிழ்ச்சியையும் நல்வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டின்
இப்பகுதியில் இது அறுவடைக் காலம்; நம்
முடைய விவசாயச் சகோதரர்கள் நல்ல மக
சூல் பெற்று வளம் சேர்த்திட வேண்டுமென
வாழ்த்துகிறேன். நாம் கடந்து வந்துள்ள
ஆண்டு, நமது குடியரசின் வரலாற்றில்,
நினைவுகூரத் தக்கதோர் முக்கியமான ஆண்டா
கும். சமதர்ம இலட்சியத்தைச் செயற்படுத்து
வதில், நமது முன்னேற்ற நடவடிக்கைகளை
மேலும் விரைவுபடுத்தும் குறிக்கோளுடன்
நமது அரசியலமைப்புச் சட்டம் திருத்தி
அமைக்கப்பட்டது. நமது இலட்சியத்தை வலி
யுறுத்திட, நமது நாடு ஓர் சர்வ சுதந்தர
முள்ள-சமதர்ம-சமயச் சார்பற்ற-ஜனநாயகக்
குடியரசு எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்
ளது.

''இந்திய அரசியலமைப்புச் சட்டத்
திருத்தம், காந்தியும், நேருவும் கொண்டிருந்த
கொள்கைகளையும் இலட்சியங்களையும் நிறை
வேற்றி நிலைநாட்டுவதற்காக நாடு கொண்
டுள்ள உறுதியைப் புதுப்பித்துக் காட்டுகிறது.

**சமதர்மக் குடியரசு**

''இந்தக் கொள்கைகளை நிலைநாட்ட,
கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கூறியபடி,
'கத்தியின்றி இரத்தமின்றி' நீண்டதோர்
போராட்டத்தை நம் நாட்டு மக்கள் நடத்தி
ஞர்கள். சமதர்மக் கோட்பாட்டில் அடங்
கிய இக்கொள்கைகள், சுரண்டலையும் வறுமை
யையும் ஒழிக்க...
உரிமை
களையும் சமவாய்ப்புகளையும் வழங்கும் பேத
மற்ற சமுதாயமொன்றை உருவாக்குவதையே
நோக்கமாகக் கொண்டவையாகும்.

''பல ஆண்டுகளுக்கு முன்பே ஜவஹர்
லால் நேரு அடியிற் கண்டவாறு குறிப்பிட்
டார்:

'தனி மனிதர்கள், மக்கள் தொகுதியினர்
நாட்டினங்கள் ஆகிய எல்லோருமே உலகில்
பெருமளவில் பொருள் சேர்க்கும் பேராசை
யைக் கொண்டுள்ளனர். இது தகராறுகளுக்
கும், போர்களுக்கும் காரணமாக அமைகின்
றது. நமது சமுதாயம் முழுவதுமே ஏறக்
குறைய இதே அடிப்படையில்தான் அமைந்
துள்ளது. இந்த அடிப்படை அகற்றப்பட
வேண்டும்; கூட்டுறவு மலர வேண்டும்'.

இன்று அரசியலமைப்புச் சட்டத்தில் இத்
திருத்தத்தைச் செய்து இந்தியாவை ஒரு சமதர்
மக்குடியரசாக ஆக்கியதன் மூலம், பணம் சேர்க்
கும் பேராசையையே நோக்கமாகக் கொண்ட
நெறிமுறைக் கோட்பாடுகளை எதிர்த்துத்
தீவிரமாகப் போராடி, சமூக நீதி, சமத்துவம்,
சகோதரத்துவம், பரஸ்பரக் கூட்டுறவு ஆகிய
வற்றின் அடிப்படையிலான நெறிமுறைகளை
நிலைநாட்ட விழைகின்றோம்.

**அடிப்படைக் கடமைகள்**

''அடிப்படைக் கடமைகள் பற்றிய புதிய
விதி ஒன்றில் மேற்கூறிய நோக்கங்கள் விவர
மாக வலியுறுத்தப்பட்டுள்ளன. பல்வேறு
கடமைகளில், கீழ்க்கண்டவையும் சேர்க்கப்
பட்டுள்ளன.

1. நமது தேசிய விடுதலைப் போராட்
டத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த உன்
னத குறிக்கோள்களை மனத்திற் கொண்டு
போற்றிப் பின்பற்றி வருதல்.

2. மத, மொழி, பிராந்தியப்பிரிவு
வேற்றுமைகளனைத்தையும் கடந்து இந்திய
மக்கள் அனைவரிடையேயும் பொதுவான
சகோதர மனப்பாங்கையும், சமாதான உற
வையும் வளர்த்தல்; பெண்டிர் பெருமைக்கு
ஊறு விளைவிக்கும் நடைமுறைகளை உதறித்
தள்ளுதல்.

3. விஞ்ஞான மனப்பாங்கையும், மனிதா
பிமானத்தையும், எதையும் தீர விசாரித்தறி
யும் உணர்வினையும், சீர்திருத்த நோக்கையும்
வளர்த்தல்.

4. முயற்சியிலும், சாதனையிலும் உயர்ந்த
கட்டத்தை நோக்கி நாடு தொடர்ந்து முன்
னேறிச் செல்லும் வகையில், தனிப்பட்ட
மற்றும் கூட்டு நடவடிக்கைத் துறைகள்
அனைத்திலும் சிறப்புக்கும் செம்மைக்கும் பாடு
படுதல்.

**புதிய மாற்றங்கள்**

''கடந்த காலத்திலிருந்து நிலவி வந்து
கொண்டிருக்கும் பாரம்பரிய, அதிகார வர்க்க,
அநீதி மிக்க சமுதாய நியதியை மாற்றி, தற்
காலத்துக்கேற்ற பேதமற்ற, தொழில்
நுணுக்க, மேம்பாடு மிக்க சமுதாயத்தை உரு
வாக்க, அரசியலமைப்புச் சட்டத்தில் குடி
மக்கள் கடமைகளென இப்போது சேர்க்கப்
பட்டுள்ளவை அடிப்படையானவையாகும்.
பிற்பட்ட வகுப்பினர், அரிஜனங்கள் ஆகிய
பெரும் பகுதியினராகிய மக்களை அடித்தளத்
தில் தேக்க நிலையில் வைத்துவிட்ட துரதி
ருஷ்ட வசமான பழைய நிலையை மாற்றி, வர
லாற்று வளர்ச்சியில் ஒதுக்கப்பட்ட இம்மக்கள்
பகுதியினரைச் சமூகத்தில் முன்னேறிய மக்கள்
பகுதியினருக்கு ஒப்பாக மேம்படுத்த
நாமெடுத்த முயற்சிகள் அண்மைக் காலங்
களில் விரைந்தோங்கி வருகின்றன. இருபது
அம்சத் திட்டத்தின் இரு முக்கிய அம்சங்
களாகிய நிலச் சீர்திருத்தங்கள் குறைந்த பட்ச
ஊதியச் சட்டம் ஆகியவை, நம் கிராமப்
பகுதிகளில் இத்தகைய மாற்றத்தை ஏற்
படுத்த உருவானவையேயாகும்.

**குடிமை உரிமைகள் பாதுகாப்பு**

''1976-ஆம் ஆண்டு நவம்பர் 19-ந்தேதி
அமலுக்கு வந்த குடிமை உரிமைகள் பாது
காப்புச் சட்டம் இதற்கு மேலும் வலுவூட்டுவ
தாக அமைந்துள்ளது. தீண்டாமையை அனு
சரிப்பது கைது செய்தற்குரிய குற்றமாகும்.
நீண்டகாலமாக இருந்து வரும் இந்தப் பாப
கரமான பழக்கத்துக்கு முடிவு கட்ட, கடுமை
யான தண்டனை முறைகளை விதிக்கிறது இச்
சட்டம்.

**ஒரு மனிதனின் உயர்வுக்கு உரைகல்லா
யிருப்பது அவனது பிறப்பல்ல; சமுதாய நன்மைக்கு
அவன் செய்ததென்ன என்பதை வைத்தே அவன்
மதிக்கப்பட வேண்டும்.**

''இதுபோலவே ஆடவருக்கும் பெண்டி
ருக்குமிடையே காலங்காலமாகக் கற்பிக்கப்
பட்டுவரும் உயர்வு-தாழ்வினை அகற்றவும் வழி
வகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலை
செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதி
யம் என்றாக்கப்பட்டு விட்டது.; பெண்ணி
னத்திற்கே ஒரு களங்கமாக இருந்த வரதட்
சிணை முறை எல்லோராலும் கண்டிக்கப்படு
கிறது.

**வறட்சித் துயர்துடைப்பு**

''நம் தேசிய வாழ்வில் இவை போன்ற
சிறப்புமிகு மாறுதல்கள் நேரிட்டுவரும் நேரத்
தில், தமிழ்நாட்டில் சிரமமிக்க ஆண்டைக்
கடந்து வந்திருக்கிறோம். மாநிலத்தைச்
சேர்ந்த அநேக மாவட்டங்கள் தொடர்ந்து
இரண்டாவது, மூன்றாவது ஆண்டாக கொடும்
வறட்சியைச் சகிக்க நேர்ந்தன. இவ்வாண்
டின் ஆரம்பத்தில் சில மாதங்கள் மிக்க கவலை
யளிக்கக் கூடியவையாக இருந்தன; வறட்சி
நிலைகளை நிவர்த்திப்பதிலும், வறட்சி நிவா
ரணப்பணிகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட
மக்களுக்கு நிலையான நன்மை புரிவதிலும்
முயற்சிகள் எடுக்கப்பட்டன. வடகிழக்குப்
பருவக்காற்று நலம் பயந்து, பெரும்பாலான
மாவட்டங்களுக்கு வறட்சி நிலையிலிருந்து
நிவாரணமளித்தது.

## ஆளுநர் உரை

**வெள்ளத் துயர்துடைப்பு**

''எனினும், அத்தகைய நலம் பயந்த
அதே பருவக்காற்று சென்னை நகரிலும்-செங்
கற்பட்டு மாவட்டச் சுற்றுப்பகுதிகளிலும்
கொடிய வெள்ளப்பாழை ஏற்படுத்தியது.
வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள்
வீடிழந்தனர்; தொழிற்சாலைகள் கடுமையாக
பாதிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலா
ளர்கள் தற்காலிகமாக வேலையின்றித் தவிக்க
நேரிட்டது. தீயணைப்புப் படையினர், காவல்
படையினர், கடற்படை மற்றும் இராணுவப்
படையினர், குறிப்பாக தீரமிக்க நமது மீன
வர்கள் மீட்புப் பணியில் பெருமளவில் ஈடு
பட்டனர். அவர்களுடைய தீர நடவடிக்கை
களும், கடமை யுணர்வுமே பொருட்சேதம்,
உயிர்ச்சேதம் அதிகமாகாமல் காத்தன;
தொடர்ந்து இதற்கு முன்பு முயன்றிராத
அளவுக்கு நிவாரணப் பணிகளும் மேற்கொள்
ளப்பட்டன. பல்வேறு தன்னியக்க நிறுவனங்
களும், தரும ஸ்தாபனங்களும், தனிப்பட்
டோரும், நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு
செய்வதிலும், அரசாங்க நிவாரண நிதிக்கு
நன்கொடை திரட்டுவதிலும் சிறப்பான
தொண்டாற்றியுள்ளனர். அத்தகைய சேவை
புரிந்த தனிப்பட்டோருக்கும், ஸ்தாபனங்
களுக்கும் நாம் நன்றிக் கடப்பாடுடையோம்.
கடந்த காலத் தவறுகளைத் தவிர்க்க அரசு
மிகுந்த கவனத்துடன் நிவாரணப் பணிகளைத்
தொடர்ந்து செய்து வருகிறது.

**உணவு முனையில் நெருக்கடி இல்லை!**

''தென்மேற்குப் பருவக்காற்று பொய்த்து
விட்டமையாலும், நம் நீர்த்தேக்கங்களில்
தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாலும்,
1976-77ல் நமது இலக்காகிய 84 இலட்சம்
டன் உணவு தானிய உற்பத்தியில் பற்றாக்
குறை நேரிட்டு 10 லட்சம் டன் வரை
குறைந்து விடுமென்று கருதப்படுகிறது. ஆயி
னும் போதுமான உணவு தானியம் கைவசம்
உள்ளதாலும் தெற்குப் பகுதிக்கென அரிசி
மண்டலம் வகுத்திருக்கிறோமாகையாலும்,
உணவு முனையைப் பொறுத்து நெருக்கடி
யேற்படுவதற்கில்லை.

## ஆண்டுத் திட்டத்திற்கு அதிக முதலீடு!

''இவ்வளவு கஷ்டங்கள் இருந்தும், நம் மாநிலம் 1976-77-ஆம் ஆண்டுத் திட்டத்துக்கென ரூ. 229 கோடி செலவிட்டு நிறைவேற்றி வருகிறது. 1975-76-ஆம் ஆண்டு முதலீட்டைவிட ரூ. 60 கோடி அதிகப்படியானதாகும் இது. 1977-78ஆம் ஆண்டுக்கான நமது திட்ட முதலீடு மேலும் அதிகமாக இருக்குமென்று நம்புகிறேன். ஐந்தாண்டுத் திட்ட முதலீட்டை எல்லா வகையிலும் சிறப்பாக நிறைவேற்றும் நிலையில் இன்று நம் மாநிலம் உள்ளது.

## மின் சக்தி உற்பத்தி

''நீர் மின்சக்தி உற்பத்தியில் பெரும் அளவுக்குப் பற்றாக்குறை நேரிட்டும், இவ்வாண்டு மின்சக்தி உற்பத்தி நிலைமை, கடந்த ஆண்டைக் காட்டிலும் மிகவும் ஆறுதலளிக்கத்தக்க வகையிலேயே இருந்தது. இதற்குக் காரணம் எண்ணூரிலும் நெய்வேலியிலுமுள்ள நமது அனல் மின்சக்தி நிலையங்கள் நன்முறையில் செயல்பட்டதேயாகும். அடுத்த ஆண்டு தூத்துக்குடி மின்சக்தி நிலையம் செயல்படத் துவங்குமென்று எதிர்பார்க்கிறேன்.

## முன்னணியில் தமிழ்நாடு

''20-அம்சத் திட்ட நிறைவேற்றத்திலும் குடும்ப நலத்திட்ட இலக்குகளை எய்துவதிலும் நம் மாநிலம் முன்னணியில் இருந்து வருகிறது. இம்மாநிலத்தில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 29-ஆகக் குறைந்து விட்டது. இப்போது இந்திய நாட்டில் இதுவே மிகவும் குறைவான பிறப்பு விகிதமாகும்.

## திருப்தியளிக்கும் சாதனைகள்

''நாம் எய்தியுள்ள இதர பெருஞ் சாதனைகள் குறித்தும் திருப்தி அடையலாம். அடகு பிடிப்போரின் அடிமைப் பிடியிலிருந்து இலட்சக் கணக்கான ஏழைமக்களை விடுவித்த கடன் நிவாரண முறை, வறுமையை அகற்ற நாம் மேற்கொண்ட முயற்சிகளில் மிகச் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். அதே நேரத்தில், பெருவாரியான மக்களைக் கூட்டுறவு முறையினுள் ஈர்க்க முனைப்பியக்கமொன்றும் துவக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 33 இலட்சம் குடும்பத்தினர் இதுவரை கூட்டுறவு முறையினை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

''கல்ராயன் மலையை வெளியுலகுடன் தொடர்புபடுத்தி, அங்கு வாழ்ந்து வரும் ஆயிரக் கணக்கான மலைவாசிகளுக்கு விடுதலையளித்து, அப்பகுதியில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஏற்பாடு செய்தது, நம் மாநில முழுவதையும் நவீன வளர்ச்சித் திட்டங்களோடு கூடிய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரும் நம் முயற்சிகளைக் குறிக்கும் முடிவான அத்தியாயமாகும்.

## சார்நிலை நீதி மன்றங்களில் தமிழ்!

1976 நவம்பர் 14-ஆம் தேதி முதல் தமிழே சார்நிலை நீதி மன்றங்களின் மொழியாக இருத்தல் வேண்டுமென ஆணை பிறப்பித்தது, நீதி வழங்கும் முறையினை சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நீண்டநாள் தேவையைப் பூர்த்தி செய்ததாகும்.

## நிர்வாகத்துறையின் வளர்ச்சி

''பொருளாதார-சமுதாய வளர்ச்சிக்கான முயற்சிகள் தீவிரமாக்கப் பெற்றுவரும் அதே நேரத்தில், நிர்வாகத் துறையின் அபிவிருத்திக்கான வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைகளை முறையாகவும் முழுமையாகவும் கண்டறிந்து நிறைவேற்றும் வகையிலும், இலஞ்ச ஊழல் முறைகளை ஒழித்துக் கட்டவும், மக்களை அச்சுறுத்தும் தன்மையை கீழ்மட்டங்களில் இல்லையென்றாக்கவும் நிர்வாக இயந்திரம் இயக்கப்படும். நிர்வாகத்துறையில் வளர்ச்சி காண வேண்டுமாயின், தொடர்ந்த முயற்சிகள் நீண்டநாட்களுக்குத் தேவை. நாம் இப்போது நல்லதொரு ஆரம்பக் கட்டத்தை மேற்கொண்டு விட்டோம்.

## சமுதாய மறுமலர்ச்சி

''தேசியத் திட்டங்களாகிய பொருளாதார வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம், விலைவாசியைக் கட்டுப்படுத்தல், மற்றும் சமுதாய மறு மலர்ச்சிக்கான இதரமுறைகள் ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் ஆண்டாகத் திகழ்ந்தது கடந்த ஆண்டு. அடுத்து வரும் இவ்வாண்டில், நமது இப்பெருநாடு மேலும் வளர்ச்சியுற்றோங்க கட்டுப்பாடான முயற்சியை மேற்கொள்ள இருக்கிறோம்.

## பிரதமர் வேண்டுகோளை அனுசரிப்பீர்!

''நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். அதையனுசரித்து, நியாயமான பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் செய்தி வெளியீட்டுச் சுதந்தரம், கருத்துச் சுதந்தரம் ஆகியவற்றுக்கு உத்தரவாதமளித்து, அவசியமான அனைத்து வகையிலும் விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. தேசிய உணர்வுக்கு மாறான பிரச்சாரம், தூஷணை, விரோத மனப்பான்மை ஆகியவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டுமெனப் பிரதம மந்திரி அவர்கள் விடுத்த வேண்டுகோள், முழுமையாக அனுசரிக்கப்பட வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளுக்காகவே விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன வென்பதை வலியுறுத்த விரும்புகிறேன். உற்பத்திப் பெருக்கத்திலோ, ஒழுங்கு-கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதிலோ நமது முயற்சிகளில் தளர்ச்சியெதுவும் இருத்தல் கூடாது. உற்பத்தியிலும், பொதுமக்கள் உபயோகத்துக்கான பொருள்கள் விஷயத்திலும், சமூக வாழ்விலும் சீர் குலைவு ஏற்படுவதையும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிலவும் அமைதிக்குப் பங்கம் விளைவதையும் அனுமதிக்க முடியாது.

## தமிழக மக்களுக்கு வாழ்த்து

தமிழ்நாட்டு மக்கள் புனித காரியங்களுக்குத் தங்களை மேலும் அர்ப்பணித்துக் கொண்டு, மிக்க பயன்தரத்தக்க முயற்சிகளில் ஈடுபட்டு, பெருஞ்சாதனைகள் புரியும் ஆண்டாக, இது திகழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

[குடியரசு நாள் விழாவன்று (26-1-1977) தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.]

# இருபது அம்ச—ஐந்து அம்சத் திட்டங்கள்

—சங்கர் கோஷ்
மத்திய திட்ட ராஜாங்க அமைச்சர்

நாட்டின் முன்னே இன்றைக்கு மூன்று அடிப்படைத் திட்டங்கள் உள்ளன. தேசீய அபிவிருத்தி கவுன்சில் இறுதி முடிவு செய்த 5-வது திட்டத்தில் காணப்படும் பல திட்டங்கள்-முதல் திட்டம்; இரண்டாவது 20 அம்சத் திட்டம்; மூன்றாவது-5 அம்சத் திட்டம்.

ஐந்தாவது திட்டத்துடன் செயல்படுத்தப்பட்டுவரும் 20 அம்சத் திட்டம், 5 அம்சத் திட்டம் இரண்டும் நாட்டு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கும் தேசீயக் கொள்கையாகும். 5 ஆண்டுக் காலத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்கு மேற்கொள்ளப்படும் திட்டங்களின் பட்டியலை உள்ளடக்கியது 5 ஆண்டுத் திட்டம். துரித பொருளாதார வளர்ச்சி-சமூக நீதியில் நம்முடைய முயற்சிகளைத் தீவிரமாக்கும் பல திட்டங்களைக் கொண்டது 20 அம்சப் பொருளாதாரத் திட்டம். மேற்கண்ட துறைகளில்-நாட்டு நிர்மாணப் பணிகளில் நாம் அவசரமாக அவசியமாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்களில் முக்கியத்துவம் பெற்றவை 5 அம்சத் திட்டங்கள்.

'புதிய பொருளாதாரத் திட்டமும், நெருக்கடி நிலையும்' பணவீக்கத்துக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற வைத்துள்ளன. நாட்டில் அவசரநிலை பிரகடனத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான தீவிர நடவடிக்கைகளும், கடுமையான கொள்கை நடவடிக்கைகளும், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க உயர்வுக்கும் விலைவாசி நிலைமையிலும் பெரிதும் உதவியுள்ளன. இவை தவிர, பணவீக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள், கள்ளச் சந்தைக்காரர்கள், கொள்ளைலாபக்காரர்கள்; கடத்தல்காரர்கள் ஆகிய பொருளாதாரத்துக்கு தீங்கிழைப்பவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.



இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி உயர்ந்துள்ளது!

விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டுள்ளது. 1974-75ம் ஆண்டில் 10.1 கோடி டன்னாக இருந்த உணவு உற்பத்தி கடந்த ஆண்டு 11.8 கோடி டன்னாக உயர்ந்து, இதுவரை இல்லாத சாதனை படைத்துள்ளது.

1974-75ம் ஆண்டில் 2.5 சதவீ[தமாக] மாக இருந்ததைக் காட்டிலும் 75-76ம் ஆண்டில் தொழில்துறை உற்பத்தி 5.7 சதவீதம் உயர்ந்துள்ளது. 1976, ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை சுமார் 12. சதவீதத் தொழில்துறை உற்பத்தி உயர்வு கடந்த ஆண்டில் இதே

காலததைவ்டக் கூடுதலாகும். 1974-75-ல் 0.2 சதவீதமே உயர்வு கண்ட மொத்த தேசிய வருமானம் 1975-76ம் ஆண்டில் 6.5 சதவீதமாக உயர்ந்தது.

நாட்டில் ஸ்திரத்தன்மைக்கு அபாயம் விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட அழிவு சக்திகள், சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கவே நெருக்கடி நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது. அரசியல் ஸ்திரத்தன்மைக்குப் பொருளாதார வளர்ச்சியே சிறந்த உத்தரவாதம் என்பதை உணர்ந்து, நெருக்கடி நிலைமைக்குப் பின்னர் உடனடியாக 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை பிரதமர் அறிவித்தார். இத்திட்டம் இலட்சோப இலட்சம் மக்களின் மத்தியில் புதிய நம்பிக்கைகளையும், நாட்டின் பொருளாதாரத்தில் புதிய ஆற்றலையும் மலரச் செய்துள்ளது.

நிலச் சீர்திருத்தம், கிராமக் கடன் ஒழிப்பு, கொத்தடிமை ஒழிப்பு, விவசாயத் தொழிலாளர்களின் நிலைமையைச் சீர்படுத்துதல் ஆகியவை இந்த இருபது அம்சத் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்.

சமநில வினியோகத்தின் மூலம் கிராமப் பொருளாதாரத்தில் தரமான மாற்றம் காணலாம் என்பது தெரிந்ததே. நிலமற்றவர்களுக்கு உபரி நிலங்கள் வினியோகத்திட்டம் 20 அம்சத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 10 இலட்சம் ஏக்கர் வினியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 6 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் ஏராளமான பேர் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்களும், மலையக மக்களும் ஆவர். சம நில வினியோகத்தின் மூலம் உற்பத்தித்திறன் உயர்வு பெறுகிறது. ஏழை விவசாயிகள் பலன் பெறுகிறார்கள்.

20 அம்சத் திட்டம் அமல் படுத்தப்பட்டதன் பலனாக நாட்டில் கால காலமாய் தொடர்ந்திருந்து வந்த கொத்தடிமை முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 1976 அக்டோபர் முடிவுக்குள்ளாக சுமார் 88,600 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தடிமையில் இல்லாவிட்டாலும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்படவில்லை. நிலமற்ற தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி 20 அம்சத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடகுக்கடைக்காரர்களிடம் கடன்பட்டு, துயர்பட்ட நிலமற்ற தொழிலாளர்கள், நடுத்தர, சிறிய விவசாயிகள், கிராமப்புற கைவினைஞர்கள் ஆகியோருக்கு 20 அம்சத் திட்டத்தின் மூலம் கடனிலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கடன்களைப் பல மாநிலங்களும் ஒழித்துள்ளன. மாற்று ஏற்பாடாக வர்த்தக பாங்குகள், கூட்டுறவுகள், புதிதாக அமைக்கப்பட்டுவரும் கிராமப்புற பாங்குகள் மூலம் அவர்களுக்குக் கடன் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன.

நிலமற்ற தொழிலாளர்களுக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவினர்களுக்கும் சுமார் 71 இலட்சம் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளை நிர்மாணிக்கும் திட்டங்களை சில மாநிலங்களும், வீட்டுமனைகள் அபிவிருத்திக்கான திட்டங்களைச் சில மாநிலங்களும் மேற்கொண்டிருக்கின்றன. 3 இலட்சத்து 29 ஆயிரம் வீடுகள் எற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கைத்தறித் தொழிலைப் பொறுத்த மட்டில் அதன் வளர்ச்சி, மேம்பாட்டுக்கென 17 தீவிர அபிவிருத்தித் திட்டங்களுக்கும், 19 ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

தரத்தில் சிறந்த மலிவு விலைத் துணி, முன்பைக் காட்டிலும் இப்போது தாராளமாகக் கிடைக்கிறது. இந்தத் துணிகள் வினியோகத்துக்கெனச் சில்லறை நிலையங்கள் திறப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது; இதனால் 1974-ல் 19,000 ஆக இருந்த சில்லறை நிலையங்களின் எண்ணிக்கை இப்போது 47,000 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 37,000 சில்லறை நிலையங்கள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன.

கிராமப்புற மக்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறது.



இந்தியாவில் 1976 அக்டோபர்வரை 88,600 பேர்கள் கொத்தடிமையில் இருந்து விடுதலை பெற்றுள்ளனர்!



அத்தியாவசியப் பொருட்கள் சீரான வினியோகத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் தீவிரமாக கவனம் செலுத்தி வந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ்-இளைஞர்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு கல்லூரி மூலமாக அத்தியாவசியப் பொருட்களைக் கட்டுப்பாடான விலையில் பெருமளவு வினியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பைக் காட்டிலும் தற்போது பாடப் புத்தகங்களும், பயிற்சிக்கான நோட்டுப் புத்தகங்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. சலுகைக் கட்டணங்களில் அச்சடிக்கப்பயன்படுத்தப்படும் வெள்ளைக் காகிதங்கள் வழங்கப்பட்டிருப்பதால் பாடப் புத்தகங்கள் விலையில் குறைவு காண்பது எளிதாக உள்ளது. ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக ஷெட்யூல்டு வகுப்பு, மலையக வகுப்பு, சமூகத்தின் இதர பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் புத்தக பாங்குகள் துவக்கப்பட்டுள்ளன.



இந்தியாவெங்கும் 71 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன!

1976-ம் வருடத்திய நகர்ப்புற நில (உச்சவரம்பு, கட்டுப்பாடு) சட்டம் 1976, பிப்ரவரி 17-ஆம் தேதி அமலுக்கு வந்தது. 20 அம்சத் திட்டத்தின் கீழ் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.. ஒரு நபருக்குச் சொந்தமாக இருக்கும் காலி நிலத்தைப் பொறுத்தமட்டில் ஒரு உச்ச வரம்பு இச்சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உபரியான காலிநிலம் மாநில அரசிடம் ஒப்படைக்கவும் வழி காணப்பட்டுள்ளது.

பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி, பூனு, ஆமதாபாத், ஹைதரபாத், கான்பூர், பெங்களூர், ஜெய்ப்பூர், நாக்பூர் ஆகிய நகரங்களில், சொகுசு-ஆடம்பர மாளிகைகளில் கணக்கில் காட்டப்படாத முதலீட்டுத் தொகையைக் கண்டுபிடிக்க விசேஷ படை அமைக்கப்பட்டது. இப்படை மூலம் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவில் ஏற்கெனவே மதிப்பிடப்பட்ட சொத்துக்களில் சுமார் 18 கோடி, கணக்கில் காட்டப்படாத முதலீடாகவும் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

அந்நியச் செலாவணி மோசடி-கடத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடத்தல்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடத்தல்காரர்கள், அந்நியச் செலாவணி தில்லுமுல்லுக்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய ஒரு சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் நாடெங்கும் சீராக வினியோகிக்கப்படுகின்றன!



20 அம்சத் திட்டத்தின் கீழ், வருமான வரி செலுத்தும் விதியிலிருந்து விலக்கு அளிக்கும் வரம்பு ரூ. 6000-லிருந்து ரூ. 8,000மாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலக்கால் சுமார் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பலனடைந்து உள்ளனர். மேலும், ரூ. 8,000 முதல் ரூ. 15,000 வரை வரி செலுத்தக்கூடிய வருமானம் பெறக்கூடிய நபர்களில் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் வருடம் ஒன்றுக்கு ரூ. 45 முதல் ரூ. 264 வரை பலனடைந்துள்ளனர்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு 20 அம்சத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம். உற்பத்தி, உற்பத்தித் திறன் அபிவிருத்தி செய்யும் ஓர் உணர்வு இதன் மூலம் தொழிலாளர்க்கு ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளிக்கும் திட்டத்தின் மூலம்-நாட்டில் தொழில் உறவு நிலைமையிலும், தொழிற்சாலை உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள் ஆகியவை மூலம் 1975-76ஆம் ஆண்டில் மேலும் 19.4 இலட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதிக்கு வழி காணப்பட்டுள்ளது. 1976-77ம் ஆண்டு திட்டத்தில் பாசனங்களுக்கென (சிறிய பாசனம் உட்பட) ரூ. 769.07 கோடியும், மின்சாரத்துறைக்கென ரூ. 1453.4 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்



கள்ளக் கடத்தல்கள் குறைந்தன! கணக்கில் காட்டாத முதலீடுகள் சிக்கின!

டுள்ளது. இது 1975-76ம் ஆண்டைக் காட்டிலும் பாசனத்துறையில் 43 சதவீதமும், மின்சாரத் துறையில் 31 சதவீதமும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில நீரை உபயோகத்துக்குக் கொண்டு வருவதற்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்ட காலத்தில் நாட்டில் உள்ள மேலும் 5 இலட்ச சதுர கிலோ மீட்டர் பரப்பில் முறைப்படி நீர் நில ஆய்வுகளை மேற்கொள்ளும் ஒரு திட்டத்தை மத்திய, நில, நீர் வாரியம் மும்முரமாகச் செயல்படுத்தி வருகிறது.

கச்சாப் பொருட்களை, சிறப்பாக-முழுமையாகப் பயன்படுத்துவதைப் போல, மனித சக்தி அபிவிருத்திக்கு வழிகாண்பது-நம்மைப்போல் உள்ள வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இன்றியமையாததாகும். இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்னால் மொத்தம் 1.1 இலட்சம் இடங்களில் சுமார் 69,236 அப்ரெண்டிஸ் இடங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. 1976, டிசம்பர் மத்தியில் 1,55,823 இடங்களில் 1,54,258 இடங்களுக்கு 'அப்ரெண்டிஸ்' பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இதில் 34,000க்கும் மேற்பட்ட 'அப்ரெண்டிஸ்கள்' ஷெட்யூல்டு வகுப்பு, மலையக வகுப்பு, சிறுபான்மை இனம், உடல் அங்கஹீனம், சமூகத்தில் நலிந்த பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்துக்கென தேசிய பர்மிட் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. 5,300 தேசிய பர்மிட்டுக்கள் வழங்க இத்திட்டம் வகை செய்துள்ளது.

பிரதமர் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தால் நாடு முழுவதும் ஊக்க உணர்வும், உற்சாகமும் காணப்படுகிறது. விடுதலைக்கும், மாற்றத்துக்கும் வித்திடும் ஓர் உயரிய திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உண்மையில் தேச வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கியுள்ளது இத் திட்டம். துரித வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் அடிகோலியுள்ளது.

திரு சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டமும் ஊக்கமூட்டும் ஒரு திட்டமாகும். குடும்பக் கட்டுப்பாடு, கல்வி அறிவு பரப்புதல், மரம் நடுதல், தூய்மை பராமரித்தல், ஜாதிக் கொடுமை-வரதட்சிணை எதிர்ப்பு ஆகிய 5 அம்சத் திட்டம் பிரதமர் திருமதி



தொழில் பழகுநர் திட்டத்தில் அரிசன, ஆதிவாசியினர்க்கே முதலிடம்!

இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தின் துணைத் திட்டமாகும். 1976, நவம்பரில் கௌஹாத்தியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசுகையில் 'மற்றத் திட்டங்களின் வெற்றிக்கு உண்மையிலேயே அடிப்படையானது '5 அம்சத் திட்டம்' என்று குறிப்பிட்டார்.'

வறுமையை ஒழிக்கும் பிரச்சினை-மக்கள்தொகைவளர்ச்சி பிரச்சினையுடன் இணைந்த ஒன்று. பெருகி வரும் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படாவிட்டால் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நம் திட்ட முயற்சிகள் வெற்றிபெற மாட்டா. நாடு சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் 25 கோடி மக்கள் பெருகி இருக்கிறார்கள். ஆண்டுக்கு 1.2 கோடி என்ற வீதத்தில் இந்திய மக்கள் தொகை பெருகி வருகிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நாம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 14.5 இலட்சம்; இப்போது 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 497 கோடியாக ஆகியிருப்பதிலிருந்து நாம் குடும்பக்கட்டுப்பாட்டுக்குக் காட்டிவரும் முக்கியத்துவத்தைத் தெளிவாக அறியலாம்.



நாடு செழிக்க மரம் நடுவீர்!

முழுக்க முழுக்க மக்கள் இயக்கமாக ஏற்கப்பட்டால்தான் உண்மையில் குடும்பக்கட்டுப்பாடு வெற்றி பெறும். ஆகவே குடும்பக்கட்டுப்பாட்டை மக்கள் இயக்கமாக மாற்ற 5 அம்சத் திட்டம் உதவி வருகிறது.

1975-76ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 70 ஆயிரம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 97 சதவீதம் உயர்வாகும். 1976-77 ஆம் ஆண்டுக்கு 43 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்படவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் ஆறு மாத காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஜாதிக்கொடுமையை எதிர்க்கும் போராட்டம் இன்னொரு அம்சம். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற சிறந்த தலைவர்கள் ஜாதிக்கொடுமையைக் களையவும், ஷெட்யூல்டு வகுப்பு, மலையக மக்களின் முன்னேற்றத்துக்கும் அரும்பாடுபட்டு வந்துள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 22 சதவீதம் உள்ள ஷெட்யூல்டு வகுப்பு, மலையக வகுப்பைச் சேர்ந்த 8 கோடி மக்கள், பின்தங்கிய பிரிவினர் ஆகியோர் சமூகத்தில் நலிந்த பிரிவினராவர். அவர்களின் சமூக, பொருளா[illegible]டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜாதிக்கொடுமையைக் களையவும் இந்தத் திட்டங்கள் பரவலான வெகுஜன ஈடுபாடின்றி அரசு முயற்சிகளால் மட்டுமே வெற்றி பெறுவது என்பது முடியாது. வெகுஜன இயக்கமாக-மாற்றும் பணி இளைஞர்கள் கையில் உள்ளது.

நம் சமூகத்தில் நிலவிவரும் இன்னொரு மோசமான சமூகக் கேடு, வரதட்சிணை. பெண்களுக்கு எதிரான வேற்றுமைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படா விட்டால் நாடு வளம் பெறும் என்பது முடியாத காரியம். வரதட்சிணைக் கொடுமையை எதிர்க்கும் போராட்டத்தில் இளைஞர்கள் இன்று முன்னணியில் நிற்கிறார்கள்.

நாட்டில் சமூக, பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்துவதற்கு வழிவகுக்கும் இன்னொரு அம்சம் நாட்டு மக்களிடையே கல்வி அறிவு பரப்புவது ஆகும். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு 10 பேரிலும் 3 பேரே கல்வி அறிவு பெற்றிருப்பதாக 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்மூலம் தெரிய வந்தது. பெண்கள், சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினர். கல்வி அறிவு பெற்றிருக்கும் விகிதம் மிகவும் குறைவு. இந்தச் சூழ்நிலையில் நாட்டு மக்களிடையே கல்வி அறிவூட்டும் பணியில் 5 அம்சத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டங்களுக்கு இடையில் மரம் நடுவதையும் இளைஞர்கள் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

நாம் வசிக்கும் நகரங்கள், பட்டினங்கள், கிராமப்புறங்களை சுத்தமாக வைத்திருக்க ஏராளமான பணம் செலவு ஆகப் போவதில்லை. சிறிதளவு முயற்சியும், சுற்றுப்புறச்சூழல் அழகாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வும்தான் தேவை.

இன்றைக்கு நம் முன்னே இருக்கும் இரு மகத்தான பணிகள்-ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுதல்; 20 அம்சத் திட்டத்தை அமல்படுத்துதல் ஆகும். சமூகமும்—பொருளாதாரமும் ஒன்றோடொன்று பிணைந்தவை. பொருளாதார முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால் -5 அம்சத் திட்டத்தில் இணைந்த சமூக, பொருளாதார நோக்கங்கள் செவ்வனே நிறைவேற்றப்படவேண்டும்.



வரதட்சணைக் கொடுமையை எதிர்ப்பதில் மாணவிகள் முன்னோடியாக உள்ளனர்!

இந்த இயக்கங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை மட்டுமல்ல, அத்தியாவசியமானவையாகும். இந்த இயக்கங்கள் அனைத்தும் தேச நிர்மாணப் பணியின் முழு முயற்சிகளில் ஒரு பகுதியே ஆகும்.

நன்றி: பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.



# தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி!

ஜி. எஸ். தில்லான்,
மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சர்.

தேசிய நெடுஞ்சாலை 47-ல் ...மந்துள்ள ஈரோடு நகருக்கு ...கில் காவேரி ஆற்றின் ...க்கே கட்டப்பட்டுள்ள இந்தப் ...ப பாலத்தின் திறப்பு விழா ... கலந்து கொள்வதில் பெரு ...ழ்ச்சியடைகிறேன்.

தற்போதுள்ள பழைமை ... பாலம் நலிந்தது. மிகவும் ...லானது. இதனால் வாகனப் ...க்குவரத்து சுலபமாக இயங்கு... இடையூறுகள் ஏற்பட்டன.

குமாரபாளையம் பாதையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் இந்த தேசிய நெடுஞ்சாலையில், சுலபமான துரிதவேக வாகனப் போக்குவரத்துக்கு வழி காணும்.

''நாட்டில் சாலை அமைக்கும் பணியில் தேசிய நெடுஞ்சாலைகள் துறை சீரிய கவனம் செலுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாட்டில் 1,744 கிலோ மீட்டர் நீளத்திற்கு 8 தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலம் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை 47-ம் இதில் அடங்கும்.

### தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி

''நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கென ரூபாய் 41 கோடி மொத்த செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் தற்போதுவரை ரூபாய் 35.66 கோடி மதிப்புள்ள 540 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை 366 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு ரூபாய் 29 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுவரை தேசிய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 1,744 கிலோ மீட்டர் நீள சாலையில் 1,044 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அகலப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள நீளச் சாலைகளையும் இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ப அகலப்படுத்தும் பணிகள் பல்வேறு முன்னேற்ற கட்டங்களில் உள்ளன. இந்த இலக்கை அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் எட்டிப் பிடிப்போம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''சாலைகளை அதிகப்படுத்தும் பணிகள் நீங்கலாக, நலிந்த நடைபாதைகளை வலுப்படுத்துதல், நெருக்கடி மிகுந்த நகர்ப் பகுதிகளில் பாதைகள் அமைத்தல், ரயில் பாதையைக் குறுக்கிடும் சாலைகளை மாற்றி அமைத்தல் ஆகிய பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### பாலங்கள்

''ஆறுகளின் குறுக்கே பாலங்களை அமைத்தலும் தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஒரு பணியாகும். நலிந்த குறுகிய பாலங்களை சீரமைத்தல், 'பாம்பன்" போன்ற பெரிய பாலங்களை அமைத்தல் ஆகிய பணிகள் இதில் உள்ளடங்கும். இந்தப் பாலம் திறக்கப்படுவதன் மூலம் சிறந்த தகவல் வசதிகளுக்கும் வழி காணப்படும்.

### 1976-77-ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

''தேசிய நெடுஞ்சாலைகளை பொறுத்த மட்டில் 1976-77-ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளுக்கென தமிழ்நாட்டுக்கு ரூபாய் 4 கோடியே 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 1975-76-ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கென ரூபாய் 3 கோடியே 75 இலட்சத்து 76 ஆயிரம் தமிழ்நாடு அரசால் செலவிடப்பட்டது. இதிலிருந்து தமிழ்நாட்டின் சாலைவசதித் தேவைகளில் மத்திய அரசுக்கு இருக்கும் அக்கறை தெளிவாகும்.

''தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கென நிதியுதவி அளிப்பது நீங்கலாக தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களுக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவியும் அளித்து வருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட சில மாநிலச் சாலைகள், மாநிலங்களுக்கு இடையிலான சாலைகள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் ஆகியவற்றுக்கென இந்த நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம் கிழக்கு கடற்கரை சாலை அபிவிருத்தியாகும். இதில் பாலம் அமைக்கும் வேலையும் உள்ளடங்கும். இந்தப் பணிக்கென நான்காவது திட்டத்தில் ரூபாய் 2.61 கோடி கடனுதவிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது முடிவடையும் கட்டத்தில் உள்ளது. மேலும் எண்ணற்ற பல வேலைகளும் மத்திய சாலை அமைப்பு நிதியிலிருந்து உதவித்தொகையைப் பெறுகின்றன. இப்படி நான்காவது திட்டக் காலத் துவக்கத்திலிருந்து இதுவரை 28 பணிகளுக்கு ரூபாய் 4.05 கோடி தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### மாநில அரசுத் திட்டம்

''இந்த மாநிலத்தின் சாலை அபிவிருத்தியில் மத்திய அரசாங்கத்தின் முயற்சிகளையே இதுவரை விளக்கினேன். மாநிலத் திட்டத்தின்கீழ் சாலை வசதிகள் மேம்பாட்டுக்கென மாநில அரசும் தீவிர கவனம் செலுத்தி வருவது



குமாரபாளையம் - பவானிக்கு இடையில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாகக்கட்டப்பட்டுள்ள பாலத்தை நமது இந்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், நமது இந்திய கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் ஜி. எஸ். தில்லான் அவர்கள் 9-1-1977 அன்று திறந்து வைத்து உரையாற்றினர்.



# இந்தியப் பொருளாதாரத்தில் தென்னை

—கே. வி. அஹமத் பவப்பா

இயக்குநர்,
மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சிக் கழகம்
காசர் கோடு.

இந்தியாவின் மொத்த விளை நிலத்தில் 0.8 சதவிகிதம்அல்லது 11.2 இலட்சம் ஹெக்டேரில் தான் தென்னை பயிரிடப்படு கிறது. எனினும் இந்தப் பயிரி லிருந்து கிடைக்கும் நேரடி வரு மானம், நாட்டின் மொத்த உற் பத்தி அளவில் ஒரு சதவிகிதம் ஆகவும், விவசாய வருமானத்தில் 2 சதவிகிதம் ஆகவும் இருக்கிறது. ஏதாவது ஒரு வகையில் தென்னை யால் பயனடைபவர்கள் எண் ணிக்கை ஒரு கோடியிருக்கும். புள்ளி விவரங்கள் ஒரு புறமிருக்க, தென்னை பயிரிடப்படும் பகுதி வாழ் மக்களின் அன்றாட வாழ்க் கையையும் இயல்புகளையும் தென்னை பலவாருக உருவாக்கு கிறது.

## பரப்பும் உற்பத்தியும்

கேரளம், தமிழ்நாடு, கர்நா டகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களிலும், இந்தி யாவில் தென்னை உற்பத்தி மிகுதி; நம் நாட்டில் தென்னை பயிராகும் பரப்பில் 93 சதவிகிதம், உற்பத் தியாகும் தேங்காயில் 95 சத விகிதம் இந்த மாநிலங்களில் உள்ளன. கோவா, மஹாராஷ் டிரம், ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களிலும் தென்னை பயிரிடப்படுகிறது. அந்தமான்—நிகோபார் தீவுகளிலும், இலட்சத் தீவுகளிலும், பயிர்களில் முதலி டம் வகிப்பது தென்னையே.

ஆண்டு தோறும் 600 கோடி தேங்காய் காய்க்கிறது. இதன் விலை மதிப்பு 600 கோடி ரூபாய் ஆகும். இதில் 60 சதவிகிதம் சமையலுக்குச் செலவாகிறது. எஞ்சியதை வைத்து 2 இலட்சம் டன் தேங்காய் எண்ணெய்யும் 1,05,000 டன் தேங்காய்ப் பிண் ணக்கும் உற்பத்தி செய்யப்படு கின்றன. தேங்காய் எண்ணெய் யில் ஒரு பாதி, தொழிற்சாலைக ளாலும் மற்றொரு பாதி சமையல் எண்ணெய்யாகவும் செலவிடப் படுகிறது. ஒரு கிலோ 10 ரூபாய் முதல் 12 ரூபாய் வரை விற்கிறது. எனவே மொத்தத்தில் தேங்காய் எண்ணெய்யின் மதிப்பு ரூபாய் 200 கோடி. நாடெங்கும் தேங் காய் எண்ணெய்மில்கள் உள்ளன. இவற்றின் தொகை 1661. இதில் 130 எக்ஸ்பெல்லர்கள். எஞ்சி யவை ரோட்டரி மில்கள்.

## கயிறும் கயிற்றுப் பொருள்களும்

உலகின் தென்னை—தேங்காய் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 20சதவிகிதம்தான். ஆனல் கயிறு, கயிற்றுப் பொருள்கள் உற்பத்தி யில் நம் நாட்டின் பங்கு 56 சத விகிதம். மொத்தம் 1,61,000 டன் உற்பத்தியில் 54,000 டன் கயிறு; கயிற்றுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்று 1975—76-ல் ரூபாய் 19.4 கோடி வெளி நாட்டுச் செலாவணி பெற்றேம்.

கயிறு பின்னுவது ஒரு குடிசைத் தொழில். இந்தியாவில் இத் தொழிலில் 90 சதவிகிதம் கேர ளத்தில்தான் நடைபெறுகிறது. அங்கு 5 இலட்சம் தொழிலாளர் கள் கயிறு பின்னிப் பிழைக்கின் ருர்கள். ஊற வைத்த நாரைப் பயன்படுத்தி 23,791 இடங்களி லும், ஊற வைக்காத நாரை உப யோகித்து 94 இடங்களிலும் கயிறு பின்னும் தொழில் நடை பெறுகிறது. கயிற்று நூல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1,05,000. கதிர்கள் மூலம் பின்னு வதும் உண்டு. கையால் பின்னு வதும் உண்டு.

நாட்டின் உற்பத்தியில் மூன் றில் ஒரு பங்கில் தேங்காய் மட் டையை உபயோகித்துத்தான் இவ்வளவு நன்மைகளும் ஏற்பட் டுள்ளன. இந்தத் தொழிலில் சிறப்பிடம் வகிக்கும் கேரளத்தில் கூட தேங்காய் மட்டையில் 50




சதவிகிதமே உபயோகப்படுத்தப்படுகிறது. நமக்குக் கிடைக்கும் மூலப்பொருளை இன்னும் கூடுதலாகப் பயன்படுத்தி, ஏற்றுமதி வருமானத்தைப் பெருக்குவது நம் கடமை.

**பிற பொருள்கள்**

தேங்காய் எண்ணெய்யும், தென்னை நாரும் வியாபார அடிப்படையில் முக்கியமானவைதான். ஆயினும் தென்னையில் பிற பகுதிகளும், மக்களுக்குப் பல வகைகளில் பயன்படுகின்றன.

தென்னை ஓலை, வீடு வேய்வதற்கும் சமையல் செய்ய விறகுக்குப் பதிலாகவும் உதவுகிறது. ஒரு தென்னையிலிருந்து ஓராண்டில் 8 முதல் 12 ஓலைகள் உண்டாகின்றன. 100 ஓலையின் விலை ரூபாய் 25 முதல் 30 வரை விற்கிறது.

தென்னையின் அடி மரம் வீடு கட்ட உதவுகிறது. இந்த அடி மரம் 40 அல்லது 50 ரூபாய்க்கு விற்கிறது. தென்னை சிப்போர்டு எனப்படும் சுராப் பலகைகள் செய்யவும், குடிசைத் தொழில்களில் பயன்படும் பொருள்கள் பலவற்றைச் செய்யவும் அடி மரம் உதவுகிறது.




## அஞ்சல் தலையிலே தென்னை !

இந்தியத் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரவிழாவை யொட்டி தபால்-தந்தித் துறை 1976, டிசம்பர் 27-ஆம் தேதியன்று சிறப்பு அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டது. அதன் படம் வெளியிடப்பட்டுள்ளது.

பல வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள இந்தத் தபால தலையில் ஓர் இளம் தென்னங்கன்றின் படம் இடம்பெறுகிறது. இதன் மதிப்பு 25 காசு.

இளநீர், சுவையானது. கிராமங்களில் மட்டுமின்றி நகரங்களில் வாழ்பவர்களும் இளநீரைக் குடிக்கிறார்கள். பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களில் இளநீர் வியாபாரம் அதிகமாக நடைபெறுகிறது. சிறு வியாபாரிகள் வாழ வழி வகுக்கிறது, தென்னை. தண்ணீரின் சுவைக்காக இளநீரைக் குடித்து தாகம் தணித்துக் கொள்பவர்கள் உள்ளனர். அதில் உள்ள சுவையும் சத்தும் நிறைந்த இளம் தேங்காய்க் கீற்றைக் கடித்துத் தின்பதற்காக இளநீர் வாங்குபவர்களும் உள்ளனர். சர்க்கரையும் உப்பும் அமினோ ஆசிடும் அடங்கிய இந்த பானம் கிருமிகளைப் போக்க வல்லது. ஊசி மருந்துகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. வயிற்றுக் கோளாறுகளுக்கு மருந்தும் ஆகும்.

**வீணாகும் பொருள்களுக்குப் புதிய உபயோகங்கள்**

தென்னை உற்பத்தியாகும் பெண்பால் பூக்கள் (மொக்குகள்) பெரும்பாலும் வீணாகின்றன. இந்த நஷ்டம் ஆண்டுதோறும் 70,000 டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தோல் பதனிட உதவும் ஒரு படிகப் பொருள் இதில் இருக்கிறது. தவிரவும், இந்த மொக்குகளைத் தண்ணீரின் அழுத்தத்தாலும் தேவையான சூடேற்றியும் பலகைச் சட்டங்களாக மாற்ற இயலும்.

தென்னை உமியில் பாதிப் பகுதி வரை தென்னை நெட்டியாகும். சுவர்களாகப் பயன்படுத்தப்படும் பலகைகள், கூரைப் பலகைகள், தளத்தில் பாவப்படும் கற்கள் ஆகியவற்றைச்செய்வதற்கு இந்த நெட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

தேங்காயின் மேல் ஓடு முழுவதும் எரி பொருளாக உபயோகிக்கப்படுகிறது. இன்றைய விலையில், நம் நாட்டில் கிடைக்கும் மேல் ஓடுகளின் விலை ஆண்டொன்றுக்கு 12 கோடி ரூபாய் ஆகும். இந்த மேல் ஓடுகளிலிருந்து



அடுப்புக் கரி 1,200 டன் மட்டும தயாரிக்கிறோம். இதன் மதிப்பு 6 இலட்சம் ரூபாய் ஆகும். மேல் ஓடுகளை 100 முதல் 300 வரை மெஷ் அளவுக்குப் பொடியாக்கினுல் பிளாஸ்டிக் பொருள்கள் செய்வதற்கு உதவும் சிறந்த தொரு மூலப்பொருளாக உதவும்.

கொப்பரையாகவும், எண்ணெய்யாகவும் மட்டும் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது. சத்துள்ள உணவுப் பொருளாகவும், சாக்லட் செய்வதற்குப் பயன்படக் கூடிய ஒரு பொருளாகவும் தேங்காயைப் பயன்படுத்தலாம். தேங்காய் எண்ணெய்யிலிருந்து உண்டாக்கக் கூடிய பொருள்களும் உள்ளன. இவ்வகைகளிலெல்லாம் நம் நாட்டில் இது வரை ஒருவரும் கவனம் செலுத்தவில்லை.

# கற்பக விருட்சம்




## சிறு விவசாயிகளுக்குக் கற்பக விருட்சம்

தென்னை பயிரிடுபவர்கள் சிறு விவசாயிகளே ஆவர். இந்தியாவில் தென்னை பயிராகும் பரப்பில் 67 சதவிகிதம் கேரளத்தில் இருக்கிறது. அந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 23 இலட்சம் பேர் தென்னை பயிரிடும் விவசாயிகள். இதில் 90 சதவிகிதத்தினர் ஒரு ஹெக்டேரில் தான் பயிரிடுகிருர்கள். அதில் 37 சதவிகிதம் பேர் 0.2 ஹெக்டேரில் மட்டும் தான் பயிர் செய்கிருர்கள். இந்த ஈவுக் கணக்கு தமிழ்நாட்டில் 95 சதவிகிதம், 69 சதவிகிதம் ஆகவும், கர்நாடகத்தில் 95 சதவிகிதம், 52 சதவிகிதம் ஆகவும், ஆந்திரப் பிரதேசத்தில் 98 சதவிகிதம், 56 சதவிகிதம் ஆகவும் இருக்கிறது. எனவே, தென்னை பயிரிடுபவர்கள் சிறு விவசாயிகள் என்பதும் தென்னை செழித்தால்தான் அவர்கள் நல்வாழ்வு வாழ இயலும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

## இப்போதைய உற்பத்தியும் எதிர்காலமும்

இந்தியாவில் ஒரு தென்னை மரத்தில், ஓர் ஆண்டில் சராசரி 35 காய்தான் காய்க்கின்றன. இது மிகவும் குறைவான உற்பத்தி. பயிரிடப்படும் தென்னைகளின் தரக் குறைவு இதற்கு ஒரு காரணம். தக்கவாறு உரம் இடாததாலும், நீர்ப்பாசன வசதி செய்யாததாலும், பூச்சித்தடுப்பு மருந்துகளை உபயோகிக்காததும் இந்தக் குறைவான விளைவுக்குக் காரணமாக உள்ளன. நாட்டுத் தென்னையைப் போல இரண்டு மடங்கு காய்க்கக் கூடிய புது வகைத் தென்னங் கன்றுகள் இப்போது ஆராய்ச்சியில் பயனுக உருவாகியிருக்கின்றன.

பாசன வசதி அளித்தும் தேவையான உரமும் பூச்சி மருந்தும் உபயோகித்தும், உற்பத்தி அளவைக் கூடுதலாக்கலாம். ஊடு பயிர்களைப் பயிரிட்டும், பாசன வசதி செய்து கொடுத்தும் ஒரு மரத்துக்கு ஆண்டொன்றுக்கு 74 காய்கள் என்பது பல இடங்களில் 190 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இப்போது தென்னை பயிரிடப்பட்டிருக்கும் பரப்பில் 10 சதவிகிதமே பாசன வசதி பெற்று இருக்கிறது. மேலும் 15 சதவிகிதம் பரப்பில் பாசன வசதி செய்ய இயலும். இதனுல் மட்டும் ஆண்டுதோறும் கூடுதலாக ஒரு கோடி 40 இலட்சம் தேங்காய் காய்க்கும், ஊடு பயிர்களாலும், உரம் போடுவதாலும் பூச்சிகளைத் தடுப்பதாலும் மேலும் 55 இலட்சம் தேங்காய் காய்க்கும்.

தென்னை விவசாயிகளின் பண்ணை, சராசரியாக 0.22 ஹெக்டேர் பரப்பு உள்ளதாகவே இருக்கிறது எனவே சிறந்த முறைகளைக் கையாண்டும் உப பொருள்களை உபயோகித்தும்தான் இந்தப் பொருளாதாரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். காசர்கோடிலுள்ள மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிலையங்களின் வைர விழா 1976 டிசம்பர் 27 முதல் ஜனவரி 8 வரை நடைபெற்றது. இந்த விழாவின் பயனுக, தென்னையின் பொருளாதார நிலை பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு, தென்னைத் தொழிலின் முன்னேற்றத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



# படமும் செய்தியும்



சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியை உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் 22—1—1977 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்.




குறைந்த செலவில் வீடுகள் கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கை, சென்னையில் 19—1—1977 அன்று தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், மத்திய பணிகள் மற்றும் வீட்டு வசதி அமைச்சர் திரு ஹித்தேந்திர தேசாய் அவர்கள் துவக்கி வைத்தார்.






சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையின் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியைச் சார்ந்த நடமாடும் ஊர்தியின் பணியினைத் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 22—1—1977 அன்று துவக்கி வைத்தார்.

# சென்னையில் குடியரசு நாள் விழா







இந்தியாவின் 28-வது குடியரசு விழாவை முன்னிட்டு, சென்னை ாஜ் சாலையில் உள்ள காந்தி சிலை க 26—1—1977 அன்று காலை, நாடு ஆளுநர் திரு மோஹன்லால் தியா அவர்கள், நமது தேசியக் டியை ஏற்றி வைத்தார். அதன்பின் முப்படைத்தளபதிகள் தலைமையில் முப்படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதையையும், குதிரைப்படை வீரர்கள், என். சி. சி. மாணவ-மாணவிகள், சாரணர் ஆகியோரின் அணிவகுப்பு மரியாதையையும் ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.











அணிவகுப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை விளக்கும் அலங்கார வண்டிகள் வந்தன! அவைகளைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்!















செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார வண்டி இரண்டாவது சிறந்த அலங்கார வண்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.




வேளாண்மைத்துறையின் அலங்கார வண்டி மூன்றாவது சிறந்த அலங்கார வண்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.






குடியரசு நாள் விழாவையொட்டி, சென்னையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில், 26-1-1977 அன்று, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் குழந்தைகள் பேரணியைத் துவக்கி வைத்தார்.





# உல்லாச உந்துகளில் செல்லலாம் சுற்றுலா

தமிழ்நாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும், புனிதத் தலங்களையும், வரலாற்றுப் புகழ் மிக்க நினைவுச் சின்னங்களையும் கண்டு களித்திடுவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 3 ஒருங்கிணைந்த சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இச்சுற்றுலாக்களில் தமிழ்நாட்டின் கவர்ச்சி மிகு சுற்றுலாத் தலங்களும், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள சில கவர்ச்சி மிகு இடங்களும் இடம் பெற்றுள்ளன. இக் கவர்ச்சி மிகு சுற்றுலாத் தலங்களை நவீன வசதிகள் கொண்ட உல்லாசப் பேருந்துகளின் மூலம் காணலாம். இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் இரவு நேரங்களில் தங்குவதற்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சுற்றுலா மாளிகைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளில் விரிப்புகள், துவாலைகள், சோப்புகள் முதலியன கொண்ட தற்காலிக தங்கும் வசதிகள் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும்.

இதற்கெனத் தனிக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை. தனியான தங்கும் வசதி வேண்டும் என்று கேட்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சுற்றுலா மாளிகைகளில் 50 சதச் சலுகை வாடகையில் தனி அறைகள் (குளிர் சாதன வசதியற்ற அறைகள் மட்டுமே) வழங்கப்படும். சாப்பாடு மற்றும் இதரச் செலவுகளைச் சுற்றுலா செல்லும் பயணிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**சுற்றுலா எண்: 1**

நாள்தோறும் காலை 7.00 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களைக்கண்டுகளித்துச் சென்னைக்குத் திரும்பும் வகையில் இச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சுற்றுலாவிற்கான கட்டணம் ரூபாய் 22.00. இச் சுற்றுலாவில் காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேசுவரர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் ஆகியவைகளைப் பார்வையிடுதல், காஞ்சிபுரம் கடைகளில் ஏதேனும் பொருள் வாங்குதல், திருக்கழுக்குன்றத்தில் கழுகுகளைக் காணுதல், மாமல்லபுரத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க நினைவுச் சின்னங்களைக் காணுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**சுற்றுலா எண்: 2**

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக் கிழமையன்று துவங்கி அடுத்த வெள்ளிக் கிழமையன்று முடிகிறது. ஏழு நாள் கொண்ட இச் சுற்றுலாவிற்கான கட்டணம் இருக்கைக்கு ரூபாய் 250 ஆகும். சென்னையிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை, ஏர்க்காடு, மேட்டூர் அணை, உதகை, முதுமலை வனவிலங்குச் சரணாலயம், மைசூர், ஸ்ரீ பிருந்தாவனம், பெங்களூர், ரங்கப்பட்டணம், ஒகேனக்கல், திருத்தணி, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களைக் கண்டு இன்புற்றுத் திரும்ப இச் சுற்றுலா உதவுகிறது. இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் ஏர்க்காடு, மைசூர், உதகை (இரு இரவுகள்), ஒகேனக்கல் (இரு இரவுகள்) ஆகிய இடங்களில் இரவு தங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதுமலையில் காட்டு யானைக் கூட்டங்களைக் காணவும், ஒகேனக்கல் அருவியில் குளித்து மகிழவும், படகு ஓட்டி மகிழவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





**'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'**

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிகமாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.

தவிர, முழு ஆயுள் பாதுகாப்பும் கிடைக்கிறது.

**'பணம் மற்றும் பாதுகாப்பு (கேஷ் அண்ட் கவர்) பாலிஸி'**

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

**வளரும் பாதுகாப்புப் பாலிஸி'**

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங்களில் கூடிக் கொண்டே போகிறது.

**மாறிவரும் காலங்களுக்கும்...**
**மாறிவரும் தேவைகளுக்கும்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ்**
**கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**




ஒகேனக்கல் அருகே பரிசலில் ஆற்றைக் கடப்பது இனிய பொழுது போக்காகும் !

**சுற்றுலா எண்: 3**

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று துவங்கி, அடுத்த சனிக்கிழமையன்று திரும்பும் வகையில் இச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. எட்டு நாள் கொண்ட இச் சுற்றுலாவிற்கான கட்டணம் இருக்கைக்கு ரூபாய் 250 ஆகும். சென்னையிலிருந்து புறப்பட்டு, பாண்டிச்சேரி, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, இராமேஸ்வரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், குற்றாலம், திருவில்லிபுத்தூர், கொடைக்கானல், பழனி, திருச்சி ஆகிய இடங்களைப் பார்த்து மகிழ்ந்து திரும்பும் வகையில் இச் சுற்றுலா அமைக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் திருச்சி (2 இரவுகள்) மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி (2 இரவுகள்), கொடைக்கானல் ஆகிய இடங்களில் இரவு தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திருச்செந்தூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடலில் குளித்து மகிழவும், கொடைக்கானலில் படகு ஓட்டவும், 'கால்ஃப்' விளையாடவும், வேடந்தாங்கலில் பறவைகளைக் கண்டு மகிழவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**பிற சுற்றுலாக்கள்**

இம் மூன்று ஒருங்கிணைந்த சுற்றுலாக்களைத் தவிர, நாள்தோறும் சென்னை நகரைச் சுற்றிப்பார்க்க ரூபாய் 10 கட்டணத்திலும், மாமல்லபுரத்தைமட்டும் பார்த்து வர ரூபாய் 15 கட்டணத்திலும், மாமல்லபுரம், சென்னை ஆகிய இரண்டையும் ஒரே நாளில் பார்த்து மகிழ ரூபாய் 22 கட்டணத்திலும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சுற்றுலாக்களில் கலந்து கொள்ள விரும்புவோர், ''தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 34, அண்ணா சாலை, சென்னை-600 002'' என்ற முகவரியிலும், ''விரைவுப் பேருந்து நிலையம், உயர்நீதி மன்ற வளைவு, சென்னை-600001'' என்ற முகவரியிலும் கட்டணம் செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

(குறிப்பு : சுற்றுலாக் கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டவையாகும்).

## தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் புதிய ரயில் !

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் ஒரு வழியாக, 1977 பிப்ரவரி 16-ந் தேதி முதல், கங்கை - காவிரி துரித ரயில் விடப்படும் என்று மத்திய ரெயில்வே அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள் 13-1-'77 அன்று திருச்சியில் அறிவித்துள்ளார்.

"வாரணசி (காசி) யில் இருந்து ராமேசுவரத்துக்கு துரித ரயில் விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

அந்தத் திட்டப்படி அடுத்த மாதம் (பிப்ரவரி) 16-ந் தேதி சிவராத்திரி முதல், வாரணசியில் இருந்து ராமேசுவரத்துக்கு துரித ரயில் விடப்படும்.

இந்த ரயிலுக்கு 'கங்கை-காவிரி எக்ஸ்பிரஸ்' என்று பெயரிடப்பட்டு உள்ளது.

வாரணசியில் இருந்து சென்னை சென்டிரல் வரை அகல ரயில் பாதையில் (பிராட்கேஜ்) வந்து, அங்கு இருந்து தனிப் பேருந்துகளில் எழும்பூர் ரயில் நிலையத்துக்குச் சென்று ரயில் ஏற வேண்டும். இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன.

மொத்தம் 36 மணி நேரத்தில் வாரணசியில் இருந்து ராமேசுவரத்தை அடைந்து விடலாம் !

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை
குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 | இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 | மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 | நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 | ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 | ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்தவர்!



வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்து மேதினி போற்ற வாழ்ந்து மேதை எனவே திகழ்ந்த முத்துசுவாமி ஐயர் அவர்களின் நினைவு நாளையொட்டி (ஜனவரி, 25) அவருடைய வரலாறு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

தென்னாட்டில் முத்துசுவாமி ஐயரை அறியாதவர் ஒருவருமில்லை. நல்வழியில் செல்லுமாறு குழந்தைகளுக்குப் புத்திமதி கூறும்பொழுது தாய், தந்தையர்கள் இன்னும் முத்துசுவாமி ஐயரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுகிறார்கள். அறிவுக் கூர்மை, பெருந்தன்மை, எளிமை, அறநெறி முதலியவற்றில் அவருக்கு ஈடானவர் தென்னாட்டில் மிகச் சிலரே. முத்துசுவாமி ஐயர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். தம்முடைய உழைப்பின் வாயிலாக அவர் வாழ்க்கையில் முன்னேறி, கடைசியில் மிக உன்னதப் பதவிக்கு வந்தார். எல்லா உயர் பதவிகளுக்கும் ஆங்கிலேயர்களையே நியமித்து வந்த அந்தக் காலத்தில் முத்துசுவாமி ஐயருக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றும் கௌரவம்கூடக் கிடைத்தது.

சென்னை, திருவள்ளூருக்கு அருகில் உள்ள உச்சவாடி என்னும் கிராமத்தில் 1832-ஆம் ஆண்டு முத்துசுவாமி ஐயர் பிறந்தார். அவருடைய தந்தை வேங்கடராம சாஸ்திரி, மிகவும் ஏழ்மை நிலையில் [illegible]

துடன, கஷ்டப்பட்டு உழைத்து அவரை வளர்த்தார். ஐயருக்குச் சிறிது எழுதப் படிக்கத் தெரிந்ததும் உள்ளூரிலிருந்த ஒரு குமாஸ்தாவிடம் ஒரு ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தார். அக்காலத்தில் ஒரு ரூபாய்க்குக்கூட மதிப்பு அதிகம். முத்துசுவாமி ஐயரின் வீட்டுக்கு அப்போது இந்த ஒரு ரூபாய் சம்பாத்தியம் கூட அவசியமானதாக இருந்தது. பன்னிரண்டாவது வயதுவரை அவர் இவ்வேலையைச் செய்து வந்தார்.

அச்சமயத்தில், தாசில்தார் அலுவலகத்தில் கணக்கு எழுதுவதில் சிக்கல் ஏற்பட்டது. அந்த வேலைக்கு ஒரு குமாஸ்தா தேவை என்று தெரிய வந்தது. வேறு ஆள் கிடைக்காமையால் முத்துசுவாமி ஐயர் அவ்வேலைக்கு அனுப்பப்பட்டார். அவர் மிகுந்த கவனத்துடன் வேலையைத் தொடங்கி நன்றாக உழைத்தார், அவருடைய உழைப்பைக் கண்டு தாசில்தார் மிக்க மகிழ்ச்சியடைந்தார். முத்துசுவாமி ஐயர் முன்னேறுவதற்கு இந்தத் தாசில்தார் பெரிதும் உதவினார். தொடர்ந்து உயர்தரக் கல்வி பயில்வதற்காக முத்துசுவாமி ஐயரை அவர் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

உழைப்பினாலும் எல்லா ஆசிரியர்களையும் வியப்பிலாழ்த்தினார். 'கௌன்சில் ஆப் எஜுகேஷன்' என்ற ஸ்தாபனம், உயர்தர ஆங்கிலக் கட்டுரைக்கு வழங்கி வந்த 50 ரூபாய்ப் பரிசை அவர் பெற்றார். முத்துசுவாமி ஐயருக்கு ஆங்கில எழுத்தாளர் 'ஆலிவர் கோல்டு ஸ்மித்'தின் கவிதைகள் பிடித்தமானவை. தமது மரணத் தறுவாயிலும் அந்த எழுத்தாளருடைய கவிதையைத் தொண்ணூற்றோராவது முறையாக அவர் படித்தார் என்று கூறுகிறார்கள். உயர்நிலைப்பள்ளிப் பரீட்சையில் தேறியபின் இருபத்து மூன்றாவது வயதில் உயர்நிலைப் பள்ளியில் அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. சிறிது காலத்திற்குப் பின் பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டராக அவர் நியமிக்கப்பட்டார். இவ்வேலையில் சிறிது காலம் இருப்பதற்குள்ளாகவே 'கௌன்சில் ஆஃப் எஜுகேஷன்' அங்கத்தினரான ஹோலாவே என்பவர் அவரை ஜில்லா ஜூனியர் அதிகாரியாக நியமித்தார். அந்த வேலையில் சேர்ந்த சிறிது காலத்திற்குள்ளாகவே டெப்டி கலெக்டராக, மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்துடன் அவர் நியமிக்கப்பட்டார். இச்சமயத்தில் தஞ்சாவூரில் [illegible]

னித்த 'ஜான் ப்ரூஸ் நார்ட்டன்' என்பவர் மிகவும் வியப்படைந்தார். அவர், சென்னை திரும்பியதும், நீதி நெறியில் சேர்ந்த ஒரு மனிதனை நிர்வாக இலாகாவில் நியமித்ததால் தேசம் நஷ்டப்படுவதாக ஹோலோவேயிடம் தெரிவித்தார்.

அதே சமயத்தில் தென் கர்நாடகத்திலிருந்து ஒரு உப நீதிபதியின் பதவிக்கு மூன்று பேர்களை சிபாரிசு செய்து அனுப்பும்படி ஹோலோவேக்கு கடிதம் வந்தது. இதற்குப் பதில் எழுதும்பொழுது மூன்று தனி மனிதர்களின் பெயர்களை எழுதுவதற்குப் பதிலாக முத்துசுவாமி ஐயருடைய பெயரையே மூன்று முறையும் எழுதி அனுப்பினார் ஹோலோவே. இதன் பலனாக முத்துசுவாமி ஐயர் உப நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவருடைய அறநெறியும் நீதி வழங்குவதில் அவர் காட்டிய நேர்மையும், அறிவும் உழைப்பும் சேர்ந்து இப்புதிய பதவியில் அவருக்கு வெற்றி அளித்தன.

சில காலத்துக்குப் பிறகு முத்துசுவாமி ஐயர் சென்னையில் போலீஸ் மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியிலிருந்து கொண்டே அவர் வக்கீல் பரீட்சைக்குப் படித்து முதல் வகுப்பில் தேறினார். அச்சமயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய பாரபட்சமற்ற தன்மையையும், பயமின்மையையும் வெளிப்படுத்துகிறது. ஒரு சமயம் இந்தியர் ஒருவர் உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த ஒரு ஆங்கிலேயருக்கு நீதி மன்றத்தில் ஆஜராகும்படி 'சம்மன் அனுப்பியிருந்தார். அந்த நீதிபதி நீதி மன்றத்திற்கு வரவில்லை; சட்டத்தை அவமதித்த குற்றத்திற்காக அந்த ஆங்கிலேய நீதிபதிக்கு முத்துசுவாமி ஐயர் மூன்று ரூபாய் அபராதம் விதித்துவிட்டார்.



முத்துசுவாமி ஐயருடைய ஞாபகசக்தி மிகவும் அபூர்வமானது. அவர் கடுமையான உழைப்பாளி. வெகு நுணுக்கமான விஷயங்களைக் கூடச் சுலபமாகத் தெரிந்து கொண்டு விடுவார். வாழ்க்கை, ஆட்சி நிர்வாகம் என்னும் இரண்டையும் நன்றாக அறிந்திருந்தார். சட்டத் துறையில் அவர் உயரிய ஆற்றல் பெற்றிருந்தார். தமது எண்ணங்களை எளிமையாக விளக்குவதில் அவருக்கு இணை இல்லை. இத்தகைய அருங்குணங்கள் அமைந்திருந்ததால் அவர் ஒரு மேதையாக விளங்கினார். அவரிடம் அகம்பாவமே கிடையாது. அவர் மனிதத் தன்மை நிறைந்தவர். தம்முடைய நண்பர்களிடத்தில் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். அவருடைய இளம்பிராயத்து நண்பர் ஒருவர்ஒரு கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று அவர்மீது வழக்கு ஐயர் முன்னால் விசாரணைக்கு வந்தது. நண்பனுக்கு 'வாரண்ட்' அனுப்பும் பொழுது கூடவே கடனை அடைக்கப் பணமும் அனுப்பி வைத்தார், முத்துசுவாமி ஐயர்.

ஐயருடைய எளிய வாழ்க்கையை எடுத்துக் காட்டும் கதை ஒன்று இன்னும் தென்னாட்டில் நிலவி வருகிறது. ஒருமுறை நவாப் ஸையத் அஹமதைப் பார்ப்பதற்காக அவர் சென்றார். முத்துசுவாமி ஐயர் மிகவும் எளிமையான உடைகளை அணிந்திருப்பார். அச்சமயத்திலும் எளிய உடையே அவர் அணிந்து சென்றார். நவாப்பின் காவற்காரன், குறிப்பிட்ட சமயத்திலே தான் நவாப்பைப் பார்க்க முடியும் என்று அவரிடம் கூறிவிட்டான். குறிப்பிட்ட நேரம் வரும் வரை முத்துசுவாமி ஐயர் வெளியிலேயே காத்திருந்தார். நவாப் வெளியில் வந்தவுடன் சாதாரண ஜனங்களுடன் சேர்ந்து நின்ற ஐயரைப் பார்த்து மிகவும் வருந்தினார். உயர்ந்த பதவியை அடைந்துங்கூட 'எளியவாழ்க்கை, உயரிய சிந்தனை' என்ற இலக்கணத்துக்கு விளக்கமாக ஐயர் விளங்கினார்.

வாழ்க்கையை அனுஷ்டான பூர்வமாய் நன்றாக அறிந்திருந்தார் முத்துசுவாமி ஐயர். அவர் புத்தகப் புழுவல்ல. சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்துச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம். ஏனென்றால், உலகத்தில் நன்னடத்தையுள்ள மனிதன்கூட, சூழ்நிலையின் விளைவாகக் கெட்ட காரியம் செய்யும்படி நேரிடுகிறது என்று அவர் கூறுவதுண்டு. இதனால் தானோ என்னவோ

முத்துசுவாமி ஐயர் தமது நீதிபதி பதவிக்காலத்தில் எவருக்கும் மரண தண்டனை விதிக்கவில்லை. இவ்விதம், அவரிடம் அறிவும் கருணையும் நிறைந்திருந்ததால் மக்கள் அவரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தனர்.

முத்துசுவாமி ஐயர் பாரதப் பண்பில் ஊறியிருந்தார். சமூக முன்னேற்றத்திற்காக அவர் அநேக காரியங்கள் செய்தார். பெண்களுக்கு மருத்துவமனை ஒன்று நிறுவுவதற்கு அவர் ஏற்பாடு செய்தார். சமூகம் முன்னேறுவதற்கும், நாடு சுதந்திரம் பெறுவதற்கும், இந்தியர்களுக்கு கல்வி மிகவும் அவசியம் என்று



அவர் எண்ணினார். ஆங்கிலப் படிப்பிலிருந்தும், மேலை நாட்டு நாகரிகத்திலிருந்தும் நல்ல அம்சங்களை நம் நாட்டில் பின்பற்றினால் பாரதம் முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும் என்று அவர் அடிக்கடி கூறுவார். ஆனால் பாரதவாசிகள் தங்கள் பழைய பண்புகளை மறந்து மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கிவிட வேண்டும் என்பது அவர் கருத்தல்ல. முழு அளவில் மேலைநாட்டு நாகரிகத்தைத் தழுவினால் இந்தியா முன்னேற்றமடைய முடியாது என்பதே அவர் எண்ணம். பாரதப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டியது தமது கடமை என்று ஐயர் நினைத்தார். பாரதப் பண்பாடு பழமையானது. ஒரு காலத்தில் அது உலக முழுவதன் கவனத்தையும் கவர்ந்திருந்தது. அதை இந்தியா தனது வழிகாட்டியாகக் கொண்டு மேலைநாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்களையும் சேர்த்துக் கொண்டால் பிரமாதமாக முன்னேற முடியும் என்று அவர் கருதினார்.

முத்துசுவாமி ஐயர் தம்முடைய சுற்றத்தார்களிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவர்களைப் பிரிந்து வெளிநாடு செல்ல அவர் விரும்பவில்லை; இதன் காரணமாகவே, ஐ. ஸி. எஸ். படிக்க மேல்நாடு செல்லும்படி அவரிடம் கூறியபொழுது அவர் மறுத்துவிட்டார்.

அவர் நிரம்பப் படித்தவர். நீதிபதியான பிறகும்கூட சட்டப் படிப்புடன் நின்றுவிடமல் அரசியலுடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். பொருளாதாரம் மற்றும் அரசியல் நோக்கிலிருந்து பார்த்தால் இன்னும் சில காலம் ஆங்கில அரசாட்சி பாரத தேசத்தில் இருப்பது நலமென அவர் கருதினார். ஆங்கிலேயர்களை மகிழ்வுறச் செய்வதற்காக அவர் இவ்வாறு கூறவில்லை. பிரத்தியட்ச நிலைமை காரணமாகவே அவர் இவ்வாறு கருதினார். அச்சமயம் இந்தியர்கள் படித்தவர்களாக இருக்கவில்லை; அவர்கள் முதலில் கல்வியறிவு பெற வேண்டும் என்று அவர் கருதினார். முத்துசுவாமி ஐயர் அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்ததனால் நேரடியாக அரசியலில் அவர் ஈடுபட முடியவில்லை. அதனால் நடைமுறை அரசியலில் அவர் அதிகமாகப் பங்கு பெறவில்லை.

இந்தியாவில் ஆங்கில அரசாட்சியின் ஆரம்பக்கட்டத்தில் ஆங்கிலேயர்களுக்கே உயர்ந்த பதவிகள் வழங்கப்பட்டு வந்தன. நாளாவட்டத்தில் ஆங்கிலேயர்களின் இவ்வழக்கம் மாறுதலடைந்தது. சில இந்தியர்களுக்கும் உயர்ந்த பதவிகள் கிடைக்கத் தொடங்கின. ரமேச சந்திர மித்ராவைக் கல்கத்தா உயர் நீதி மன்றத்தின் உயர் நீதிபதியாக நியமித்த பொழுதுதான் இந்தப் பதவியின் வாயிற்கதவு எல்லா இந்தியர்களுக்கும் திறந்து விடப்பட்டது. சென்னை உயர் நீதி மன்றத்தின் உயர் நீதிபதியாக முத்துசுவாமி ஐயர் நியமிக்கப்பட்டார். இந்தப்பதவியை அலங்கரித்த பிறகு அவருக்கு ''ஸர்'' பட்டம் வழங்கப்பட்டது. அவருடைய நியாய மனப்பான்மையே இவ்வளவு பெரிய பதவியை அவர் அடையும்படிச் செய்தது.

உயர்நீதிபதியான சில ஆண்டுகளுக்குள்ளாகவே ஐயருடைய ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. 1894-ஆம் ஆண்டு முடிவில் அவருடைய நிலை கவலைக்கிடமுள்ளதாக ஆயிற்று. அதன்பின், அவருக்கு, முந்தி இருந்த பலம் திரும்பி வரவே இல்லை. அதிக நாட்கள் வாழ்ந்திருக்கவும் முடியவில்லை. 1895-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதி, அவர் உயிர் நீத்தார். அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபொழுது ஒரு ஆங்கிலேயர் அவரைப் பற்றி எழுதுகையில், ''உயர்நீதி மன்றத்தின் கோபுரம் ஒன்று சரிந்து விட்டது. அந்த நஷ்டத்தை ஈடு செய்ய எவராலும் இயலாது'' என்று வருந்தினார். நாட்டு மக்கள் தங்களது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அவருடைய ஞாபகச் சின்னம் ஒன்றை நிறுவ மனமுவந்து நன்கொடை அளித்தனர். சலவைக் கல்லினாலான அவருடைய உருவம் சென்னை உயர் நீதி மன்றத்தில் நிறுவப்பட்டிருக்கிறது.

முத்துசுவாமி ஐயர் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவருடைய நன்னெறியும், எளிய வாழ்வும், புகழும் நின்று நிலவி வருகின்றன. நாம் மறக்க முடியாத பெரியோர்களில் முத்துசுவாமி ஐயரும் ஒருவராவார்.

[பாரதப் பெரியார்கள் (நான்காம் பாகம்) என்னும் நூலில் இருந்து..]

.[நன்றி: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு].



## நெல்லை மாவட்டத்தில் 1000 புதிய கிணறுகள்



தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை மாவட்ட விவசாய மக்களின் நலன் கருதி அம்மாவட்டத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ், பாசன வசதியைப் பெருக்கிட, யுத்தகாலச் சேவை போன்று 1000 கிணறுகள் தோண்டும் திட்டத்தைக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மிக வேகமாகச் செயல்படுத்தி வருகின்றன. இதுவரையில் இத்திட்டன் கீழ் 428 கிணறுகளுக்கு ரூ. 36 இலட்சம் நீண்டகாலக் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீரை விவசாயததுக்குப் பயன்படுத்தும் இந்தச் சிறப்புப் பணியால் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நாங்குனேரி, செங்கோட்டை, புதுக்கோட்டை, திருச்செந்தூர், வள்ளியூர் ஆகிய கூட்டுறவு நிலவள வங்கிகள் ஈடுபட்டுள்ளன. புதிய கிணறு வெட்ட, ஏற்கெனவே உள்ள கிணற்றை ஆழப்படுத்த, நீர் இறைக்கும் பொறி பொருத்த ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு இந்த வங்கிகள் தயங்காது வழங்கி வரும் கடன் உதவிகள் மூலம் விவசாயத் தொழிலை அவர்கள் மயங்காது செய்து பயன் கண்டு வருகிறார்கள். ரூ. 5,000 முதல் 15,000 வரை தேவையைப் பொறுத்து இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்குரூ. 3,000 வரையிலும் மானிய உதவியும் வழங்கப்படுகிறது. நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து, காடுகளைக் கழனியாக்கி, உற்பத்தியைப் பெருக்கிட 20 அம்சத் திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும் '1000 கிணறுகள் திட்டம்' இம்மாவட்ட மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.



# இந்தியாவை உணர்க!

"இந்தியாவை உணர்க!" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி தற்பொழுது சென்னையில் நடைபெற்று வருகிறது.

இந்திய ஒருமைப்பாட்டிற்குச் சுற்றுலா உதவுவதாலும், இந்தியாவின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக்காட்டுவதாலும், வேளாண்மை, தொழில், மற்றும் இதரத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் படம் பிடித்துக் காட்டுவது போலப் பாங்குற விளக்குவதாலும் இப்பொருட்காட்சிக்கு "இந்தியாவை உணர்க!" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழகச் சுற்றுலா வளர்ச்சி வாரியத்தினரால் 4-வது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி இது. சென்னை கோட்டை அருகே யுத்த நினைவுச் சின்னம் அருகில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் இப்பொருட்காட்சி 2-1-1977-ல் தொடங்கப் பெற்றது. இக் கண்காட்சி பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி வரை சுமார் 2 மாத காலம் நீடிக்கும்.

இப்பொருட்காட்சியை 2-1-1977 அன்று மாலை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைப்பதாக இருந்தது. எதிர்பாராத விதமாகக் குடியரசுத் தலைவர் அவர்களின் உடல நலம் குன்றியதன் காரணமாக, அவருக்குப் பதில் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சித் திறப்பு விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தமது வரவேற்புரையில், "தமிழ்நாடு சுற்றுலா வாரியமும், மத்திய அரசும், மாநில அரசுத் துறைகளும், பிற மாநில அரசுகளும் இப்பொருட் காட்சியை அமைப்பதற்கு மனமுவந்து அளித்த ஒத்துழைப்பு மனதைத் தொடுவதாக அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டார். மேலும் அவர், "அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு உதவும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு மட்டுமல்லாது, தேசிய ஒருமைப்பாடு செழித்தோங்கவும், உள்நாட்டுச் சுற்றுலாவை வளர்க்கவும் இது போன்ற சுற்றுலாப் பொருட்காட்சிகள் உதவும்" என்று கூறிச் சுற்றுலாப் பொருட்காட்சியின் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியைத் திறந்து வைத்த தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், தமது உரையில் சுற்றுலாவின் இன்றியமையாமையைப் பின்கண்டவாறு எடுத்துரைத்தார்.






"இந்தியாவை உணர்க!" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட 1977-ஆம் ஆண்டின் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன் லால் சுகாதியா அவர்கள் 2-1-1977 அன்று மாலை துவக்கி வைத்தார்.

"ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் சுற்றுலாத் துறை கடந்த சில ஆண்டுகள் வரை உதாசீனம் செய்யப்பட்ட ஒரு துறையாக. இருந்து வந்தது. ஆனால் சுற்றுலா வாரியங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவை எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு பிறகு அந்நியச் சுற்றுப் பயணிகளை ஈர்க்கும் நம் முயற்சி சீரிய முறையில் வெற்றி பெற்று வருகிறது.

"தென்னிந்தியாவைப் பார்க்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு, தமிழ்நாடு மிகக் கவர்ச்சியான தன்மைகளோடு விளங்குகிறது.

"இந்தியாவுக்கு வரும் அந்நியச் சுற்றுலாப் பயணிகளில் 25 சதவிகிதம் பேர்கள்தான் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். இந்த எண்ணிக்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 40 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்.

"மாநிலங்கள் மட்டத்தில் நடைபெறும் பொருட்காட்சிகள் அகில இந்திய மட்டத்தில் இப்போது உருவாகி வளர்ந்துள்ளது. சர்வதேச அளவில் நமது நாட்டுப் பொருட்காட்சிகள் விரிந்து, இந்திய நாட்டு சமூகம், அதன் கலைகள், தொன்று தொட்டு நாம் காப்பாற்றி வரும் நமது பண்பாடு ஆகியவைகளை உலகுக்கு எடுத்து இயம்பும் நாட்கள் எதிர்காலத்தில் வரும் என்று நம்புகின்றேன்"

இவ்வாறு ஆளுநர் அவர்கள் தமது திறப்பு விழா உரையில் குறிப்பிட்டார்.

மனத்திற்கு மகிழ்ச்சியும் அறிவுக்கு விருந்தும் அளிக்கும் அரங்குகளும், கைவினைப் பொருள் அங்காடிகளும், தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய ஒலி-ஒளி நிகழ்ச்சிகளும் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன. கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு நிறைய அரங்குகள் இடம் பெற்றுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட எழில்மிகு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் 20 அரங்குகளும், நாகாலாந்து, பாண்டிச்சேரி, அரியானா, கர்நாடகம், காஷ்மீர்,

கேரளம், கோவா, டையூ, டாமன் ஆகிய மாநில அரசுகளின் அரங்குகளும் பொருட்காட்சியில் அங்கம் வகிக்கின்றன. ஏராளமான தனியார் அரங்குகளும் உள்ளன.

வழக்கம் போல அரங்குகளை அமைக்காமல் எதனையும் கண்ணுற நேரில் பார்த்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த ஆண்டு பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரங்குகள் எல்லாம் வழக்கமான பாணியைத் தவிர்த்து நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கண்காட்சியின் ஒரு பக்கம், தஞ்சாவூர்க் கோயில் நந்தியைப் போல் ஒரு நந்தி 50 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு அது அனைவரின் கண்களையும் கவர்கிறது.

நந்தியின் வாயில் நுழைந்தால் அதன் வயிற்றுப் பகுதிக்குள்ளிருந்து ஒலி-ஒளி நிகழ்ச்சியைக் காணலாம். தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றி இந்த ஒலி-ஒளி நிகழ்ச்சியில் சித்தரிக்கப்படுகின்றது.

''மாதிரி கிராமம்'' ஒன்று இங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத விதத்தில் இந்த ஆண்டு பாம்புப் பூங்கா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதலைகளும் உள்ளது.

பலவிதப் பாம்புகளையும் மற்றும் ஊர்ந்து செல்லும் பிராணிகளையும், அவைகளின் புகைப்படங்களையும் காணலாம். அவைகள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. கண்காட்சிக்குள் செல்







ும் கூவத்தின் மீது இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்த ஒரு பாலமும், நெடுஞ்சாலைத்துறையினர் கட்டிக் கொடுத்த ஒரு பாலமும் உள்ளன. அவைகள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிச் சாலைக்கு வருகிற மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஜனவரி 2-ஆம் தேதியன்று ஆரம்பித்த இந்தப் பொருட்காட்சியை 12-1-1977 வரை ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர் பார்வையிட்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாடு சுற்றுலா வாரிய நிர்வாக இயக்குநர் திரு. சி. ராமச்சந்திரன் அவர்கள் 12-1-1977 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இப்பொருட்காட்சியை நாள் தோறும் 10 ஆயிரம் பேர் பார்



வையிட வருகிறார்கள் என்றும், ஞாயிறன்று பார்வையிட வருகிறவர்களின் எண்ணிக்கை சாதாரண நாட்களை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழக அரசின் செய்தி விளம்பரத் துறையினர் அமைத்துள்ள அரங்கில் தமிழ்நாட்டில் இருபது அம்சத் திட்டம் நிறைவேற்றப்படுவது சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இறந்தும் இறவாப் புகழ் பெற்ற அரசியல் தலைவர்களின் படங்களும், இந்த அரங்கின் அழகினை உயர்த்துகின்றன.





அளவான குடும்பத்தின் அவசியத்தை உணர்த்தும் குடும்ப நலத் துறையினரின் அரங்கில் குடும்ப நலத் திட்டம் எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்து விளக்குவதோடு, இலகுவானது என்பதையும் விளக்கிக் கூறுகிருர்கள்.

மினி ரயில், பாம்புப் பண்ணை ஆகியவை பொருட்காட்சியின், சிறப்பு அம்சங்களாகத் திகழ்கின்றன.

பொழுது போக்கு அம்சங்களான ராட்சத ராட்டினம், ரங்க ராட்டினம், அழகுப் போட்டி, நாய்க் கண்காட்சி, படகுப் போட்டி, குழந்தைகள் ரயில் வண்டி, ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் ஆகியவைகளும் உண்டு.

கண்காட்சி பார்க்க வருபவர்களின் வசதியை முன்னிட்டுப் பேருந்துப் போக்குவரத்து வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்லப்போனுல் இப்பொருட்காட்சி, பொழுது போக்கிற்கு ஏற்றதாக இருப்பதோடல்லாமல், மனத்திற்கு மகிழ்ச்சியும், அறிவிற்கு விருந்தும் அளிப்பதாகவும் இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.

எனவே, தற்பொழுது சென்னை நகரில் நடைபெற்று வரும் சுற்றுலாப் பொருட்காட்சியைக் காண வாரீர் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்.



# கள்ளக்கடத்தல் தடுப்பு இயக்கம்

நம் நாட்டிற்குள் தடை செய்யப்பட்டிருக்கிற பொருட்களை வெளிநாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் செய்து கொண்டு வருபவர்கள் மீதும் அந்நியச் செலாவணி வியாபாரத்தில்.. சட்ட விரோதமாக ஈடுபட்டிருப்பவர்கள் மீதும் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது. பிரதம மந்திரியின் 20-அம்சத் திட்டத்தில் இது முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. 1975 ஜூன் மாதத்திற்கு முன்னும் அரசாங்கம் இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துத்தான் வந்தது; ஆனுல் அப்போதெல்லாம் சட்டத்திலுள்ள ஓட்டைகளைக் காரணம் காட்டியும், நீதிமன்றத்தில் வழக்காடியும் சமூக விரோதிகள் தப்பித்து வந்தார்கள்.

ஆனுல் நிலைமை கட்டுக்கடங்காத அளவு பெரிதாக உருவெடுத்தது. வழக்கமான சட்டங்களின் மூலம், சமூக விரோதிகளைச் சமாளிக்க இயலாது என்பதை அரசாங்கம் உணர்ந்தது. ஆகையால் கள்ளக்கடத்தல்காரர்கள், அந்நியச் செலாவணியை மோசம் செய்பவர்கள், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் ஆகியோரை விசாரணையிலிருந்து தடுப்புக் காவலில் (சிறையில்) வைத்திருக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு வழங்கிக் கொண்டது. 'மிசா' என்னும் 1971-ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி, 1974, செப்டம்பரில் அரசாங்கம் இந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது. அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் அந்நியச் செலாவணியைப் பேணுவதற்கும் கடத்தல் நடவடிக்கையைத் தடுப்பதற்குமாக சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது.

அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டதிலிருந்து கடத்தல் பேர்வழிகள், அந்நியச் செலாவணி மோசடிக்காரர்கள், அவர்களுக்கு உறுதுணையாக ஒத்துழைப்பவர்கள் ஆகிய அனை

உயர் நீதிமன்றங்கள் சிலவற்றின் தீர்ப்புக்களால் ஏற்பட்ட சிக்கல்களும், பிரச்சினைகளும் மேலும் சில புதிய திருத்தங்கள் மூலம் சமாளிக்கப்பட்டன.

## கறுப்புப் பணம்

கடத்தல் என்பது சட்ட விரோதமாக நம்நாட்டுக்குள் தங்கம், வைரம், கைக்கடிகாரங்கள், செயற்கை இழைகளாலான துணிவகைகள், ஆடம்பர வாழ்க்கை வாழ்பவர் உபயோகிக்கும் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு வருவதாகும். இது



தவிர, இந்தியாவிலிருந்து, சட்ட விரோதமாக பழமையான கலைச் செல்வங்கள், வெள்ளி, அபின், புலித்தோல்கள், பாம்புத் தோல்கள் முதலியவற்றை வெளி நாடுகளுக்குக் கொண்டு போவதும் கள்ளக்கடத்தலே ஆகும்.

வெளிநாடுகளில் செய்யப்பட்ட பொருட்களைக் கடத்தி வந்து விற்பதால், இதைத் தொழிலாக உள்ளவர்கள் நிறைந்த இலாபம் சம்பாதிக்கிருர்கள். இந்த இலாபமே இவர்கள் இந்தத் தொழிலைச் செய்வதற்குக் காரணமாக இருக்கிறது. விலை கூடிய வெளிநாட்டு டெலிவிஷன் செட்டுகள், டேப் ரிகார்டுகள் எனப்படும் ஒலிப்பதிவுக் கருவிகள், ஒலிப்பதிவு செய்ததைக் கேட்க உதவும் கருவிகள், ஸ்னே, முகப் பவுடர் போன்ற வாசனைப்

வைத்திருப்பது அந்தஸ்தின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. பணக்காரர்கள் தங்களுடைய கறுப்புப் பணத்தைக் கொடுத்து இந்தப் பொருட்களை வாங்கிக் கள்ளக்கடத்தலை ஊக்குவிக்கிருர்கள். கொலை, திருட்டு, ஆகியன போலவே கள்ளக்கடத்தல் பொருட்களை வாங்குவதும், விற்பதும் கடுமையான குற்றமாகும்.



## சமூக விரோதக் குற்றங்கள்

கள்ளக்கடத்தல் செய்யப்படும் போது அந்தப் பொருட்களின் மீது செலுத்த வேண்டிய சுங்க வரியைச் செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றி விடுகிருர்கள். கள்ளக்கடத்தல்தான் கறுப்புப் பணத்தை உருவாக்குகிறது. காரணம், கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள்தான் அதைக் கொடுத்து, கடத்தல் பொருள்களை வாங்குகிருர்கள். கள்ளக் கடத்தலால் நமது அந்நியச் செலாவணி நிலைமை பாதிக்கப்படுகிறது. கள்ளக்கடத்தல்காரர்கள் அந்நியச் செலவாணியைக் கொண்டு, தேவையில்லாத பொருட்களை வெளிநாடுகளில் வாங்குவதும் நம் நாட்டின் முக்கியமான பொருட்களைத் திருட்டுத்தனமாக வெளியேற்றி அந்நியச் செலாவணியைப் பெறுவதுமாக இருக்கிருர்கள். இதனுல் நாட்டு மக்களுக்குத் தேவையான உணவையோ, விவசாய வளர்ச்சிக்குத் தேவையான உரங்களையோ, தொழிற் பெருக்கத்திற்குத் தேவைப்படும் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், கச்சா எண்ணெய் முதலியவற்றையோ வாங்குவதற்கு நமக்குப் பயன்பட வேண்டிய அந்நியச் செலாவணி கிடைக்காமல் போய் விடுகிறது.- சில சமயம் கடத்தல்காரர்கள் வனஸ்பதி, சமையல் எண்ணெய் ஆகியவற்றையும் வெளிநாடுகளுக்குக் கடத்தி, நம் நாட்டில் பற்றுக்குறையை உண்

கள்ளக்கடத்தல்காரர்கள் பேராசை உடையவர்கள். நம் நாட்டின் கலைச் செல்வத்துக்கு அவர்கள் இழைக்கும் கொடுமை சொல்லி முடியாது. கல்லில் செதுக்கப்பட்ட அழகான விக்கிரகங்கள், ஒப்புயர்வு இல்லாத செப்புத் திருமேனிகள், பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட வண்ண ஓவியங்கள் ஆகியவற்றையெல்லாம் கோயில்கள், மடங்கள் ஆதீனங்கள், கலைக்காட்சிக் கூடங்கள் ஆகியவற்றிலிருந்து திருடி வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்துகிருர்கள். அரசாங்கம் உரியகாலத்தில் எடுத்த நடவடிக்கைகளாலும், வழக்குகளாலும் உலகப் புகழ் பெற்ற சிவபுரம் நடராஜர் திருவுருவம் மீண்டும் நம்நாட்டுக்கு வர ஏற்பாடாகியிருக்கிறது. சம்பாவில் இருந்த மிக முக்கியமான விஷ்ணு விக்கிரகம் அரசாங்கத்தின் முயற்சிகளால் தான் கடத்தல்காரர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறது.

ஒரு திருடனே, கொலைகாரனே செய்யும் செயலால் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே பாதிக்கப்படுகிருர்கள். ஆனல் கடத்தல்காரர்களின் செயலால் ஒருநாடும் அதில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் நஷ்டமடைகிருர்கள். சில சமயம் கள்ளக்கடத்தல்காரர்கள் தங்கள் வசமுள்ள கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து, கிளர்ச்சிகளையும், மத அல்லது ஜாதி அடிப்படையில் உள்நாட்டுக் கலவரங்களையும், சமூக விரோத, தேச விரோத செயல்களையும் தூண்டி விடுகிருர்கள்.



## நாடு முழுவதும் நடவடிக்கை

கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு சுங்கவரித் துறையைச் சேர்ந்தது. கடத்தல்காரர்களிடம் ஏராளமான பணமும், ஆள்பலமும், சட்ட நுணுக்கங்களைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி ஆதரவும் தைரியமும் தரும் வழக்கறிஞர் கூட்டமும் இருக்கிறது. இதை எல்லாம் சமாளிக்க சம்பந்தப்பட்ட சட்டங்கள் யாவும் திருத்தப்பட்டு 1974 செப்டம்பர் முதல் சுங்கவரித்துறையால் நாடு முழுவதும் பெரிய அளவில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக சுங்கவரித் துறையில் கூடுதலான ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். கடத்தல்காரர்களும் அவர்களுடைய நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் மட்டுமின்றி அவர்களோடு சம்பந்தப்பட்ட பலவகையான பேர் வழிகளைப் பற்றியும் விவரங்கள் சேகரிக்கவும், விசாரிக்கவும் துப்பறியும்பகுதி விரிவாக்கப்பட்டது. வீடுகள் முதலியவற்றில் போய் ஏராளமான சோதனைகள் செய்யப்பட்டன. கடற்கரைகளில் கேந்திரமான இடங்களில் வேவு பார்க்கும் வேலை பெரிதும் மேற்கொள்ளப்பட்டது.



மேற்குக் கடற்கரை எங்கும் வேகமாகச் செல்லும் படகுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன. மேற்குக் கடற்கரையிலும், தமிழ்நாட்டுக் கடற்கரையிலும், இந்திய-பாகிஸ்தான் எல்லைகளிலும் 'வயர்லஸ்' தகவல் தொடர்பு வசதி மிக விரிவாகச் செய்யப்பட்டது. இதனல் நம் நாட்டு அதிகாரிகளுக்கு, கடத்தல்காரர்களைப் பற்றிய ரகசியங்கள் நம்பிக்கையான முறையில் உடனுக்குடன் கிடைக்க வழி செய்யப்பட்டது



கள்ளக்கடத்தல்காரர்கள் தாங்கள் கையாளும் முறைகளையும் உத்திகளையும் அடிக்கடி மாற்றுகிருர்கள். அவற்றை முறியடிக்க அரசாங்கமும் புதிய தந்திரங்களைக் கையாளுகிறது. விமானங்களிலும் கப்பல்களிலும் செல்லுபவர்களின் மூலமாகவும் கடத்தல்காரர்கள், பொருட்களை அனுப்புகிருர்கள். மேற்குக் கடற்கரையிலிருந்து செல்லும் சரக்குக் கப்பல்களிலும், பாரசீக வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களிலும் ஊடுருவித் தங்கள் பொருட்களை அனுப்பப் பார்க்கிருர்கள். இந்த முயற்சிகள் யாவும் இப்போது முறியடிக்கப்பட்டு விட்டன.

கள்ளக்கடத்தலிலும், அந்நியச் செலாவணி மோசடியிலும் ஈடுபட்டிருப்பவர்களும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்களும் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறையில் வைக்கப்பட்டிருப்பதால் கடத்தல் பொருட்கள் முன்போலச் சுலபமாகக் கிடைக்கவில்லை.

## கடும் நடவடிக்கைகள்

1976 டிசம்பர் 25 வரை 3,118பேர் அந்நியச் செலாவணிப் பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் தடுப்பு சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கிருர்கள். இதில் 2,111 பேர் அவசர கால நிலை பிரகடனமான பிறகு காவலில் வைக்கப்பட்டவர்கள். அதே தேதிக்கு உரிய கணக்குப்படி இன்னும் காவலில் வைக்கப்பட வேண்டியவர்களில், 443 பேர் தலைமறைவாக இருக்கிருர்கள். அவர்களில் 268 பேரைத் தேடிப் பிடிக்கவும், அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் ஆவன செய்யப்பட்டிருக்கிறது.

சுமார் ஒரு கோடி மூன்று இலட்சம் ரூபாய் சொத்தைப் பறிமுதல் செய்ய நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருக்கின்றன. தலைமறைவாக இருக்கும் கடத்தல்காரர்களின் போட்டோக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. அவர்களைப் பிடித்துக் கொடுக்க உதவுபவர்களுக்கும், துப்புக் கொடுப்பவர்களுக்கும் அரசாங்கம் பரிசு வழங்குகிறது. இப்படிப்பட்ட பலவகையான நடவடிக்கைகளால், ''கடத்தல் மன்னர்கள்'' என்று புகழும் செல்வாக்கும் பெற்றிருந்தவர்களெல்லாம் இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்!



## முறை தவறி ஈட்டிய சொத்து

கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதை அனுமதிக்கும் வகையில் ஒரு புதிய சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டப்படி 2,500 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் அடங்கியவர்களுடைய சொத்துக்களின் மதிப்பு 50 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகும்.



## கடத்தல் வியாபாரம் சரிகிறது

அரபு நாடுகளிலிருந்து படகுகளில் கடத்தல் செய்த காலம் மலையேறிவிட்டது. 1976-ல் நவம்பர் வரை 11 மாதங்களில் 32 கோடி ரூபாய் மதிப்புள்ள கடத்தல் பொருட்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டன. இதற்கு முந்திய ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் அளவை நோக்க, இப்போது அவர்கள் சோர்வடைந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

வெளிநாடுகளிலிருந்து 'ரேயான், 'நைலான்' துணிவகைகளைக் கடத்துவது மிகவும் குறைந்து விட்டது. இந்திய-நேபாள எல்லையிலும் கள்ளக்கடத்தலின் வேகம் முன்போல இல்லை.



## வீடுகளில் சோதனைகள்

ஏராளமான வீடுகளில் சோதனைகள் நடந்தவண்ணமாய் இருக்கின்றன. இதற்கு முந்திய ஆண்டுகளில் நடைபெற்ற சோதனைகளின் எண்ணிக்கை, குறைவு. அப்போது பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பை நோக்க 1976-ல் கூடுதலான சோதனைகளில் கிடைத்த பறிமுதல் பொருட்களின் மதிப்பு குறைவாக இருக்கிறது. அரசாங்கத்தின் முயற்சிகள் வெற்றியடைந்திருப்பதற்கு இது அறிகுறி.

## வந்து சேரும் அந்நியச் செலாவணி

வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வரக்கூடிய பணங்களை கள்ளக்கடத்தல்காரர்கள் பெற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக இந்தியாவில் இந்திய ரூபாயைக் கொடுத்து வந்தார்கள். இதனல் நம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி அரசாங்கத்திற்குக் கிடைக்காமல் போய்விட்டது. இந்த நிலை இப்போது மாறிவிட்டது. முறைப்படி பாங்குகள் மூலம் அனுப்பப்பட்ட தொகை 1974-ல் ரூபாய் 569.31 கோடியாக இருந்து, 1975-ல் ரூபாய் 1,053.76 கோடியாகப் பெருகி, 1976-இல் முதல் 11 மாதங்களில் மட்டும் ரூபாய் 1,376.58 கோடியாக உயர்ந்துள்ளது.

சர்வதேச மார்க்கெட்டில் இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. இந்திய ரூபாய்க்குப் பாங்குகள் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணிக்கும் கள்ள மார்க்கெட்டில் கிடைக்கும் அந்நியச் செலாவணிக்கும் இடையே இருந்து வந்த இடைவெளியும் மிகவும் குறைந்துவிட்டது.

கடத்தல்காரர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பண்டங்களைச் சேமித்து வைப்பதில் கறுப்புப் பணத்தை முடக்கி நடத்தும் சூதாட்டம் அடக்கப்பட்டுவிட்டது. பினமியாகச் சொத்துக்களை வாங்குவது, கறுப்புப் பணத்தை வைத்து வீடு கட்டுவது ஆகியவை எல்லாம் பழைய கதையாக, பகல் கனவுகளாக ஆகிவிட்டன.



## பொதுமக்களின் ஒத்துழைப்பு

பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றி பெருது. கள்ளக்கடத்தல் மீண்டும் தலை தூக்காதபடி செய்வது, பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தது. நம் நாட்டில் செய்யப்படும் பொருட்கள் வெளிநாட்டுப் பொருட்களுக்கு எந்த விதத்திலும் மட்டம் இல்லை. தரத்திலும் விலையிலும் நம் உற்பத்திகள் வெளிநாட்டுப் பொருட்களுடன் போட்டியிடக்கூடியவை.

''நான் இந்தியன், இந்தியாவில் செய்யப்பட்ட பொருட்களையே நான் வாங்குவேன்'' என்ற உறுதிமொழியை நம் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும். கடத்தல் பொருட்களை நாம் வாங்கக் கூடாது. அயல்நாட்டவர் ஆட்சி நடந்தபோதே 'வெளிநாட்டுப் பொருட்களை வாங்காதீர்' என்று மகாத்மா காந்தி, நமக்கு அறிவுறுத்தினர். சுதந்தரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகாவது நாம் சுதேசி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்

எழில் தவழும் அலங்காரத்
துணி வகைகளைக் கொண்ட
தனி அலங்காரத் துணிப் பகுதி

# வானவில்

## கோ-ஆப்டெக்ஸ் ஷோருமில்



உங்கள் இல்லத்துக்கு அல்லது அலுவலகத்திற்கு எழில் கூட்டும் வகைவகையான அலங்காரத் துணிகள், நவீன வடிவமைப்புகள், உள்ளங்கவர் டிசைன்கள் வண்ண வகைகள்.

அலங்காரத் துணிகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் போன்ற வசீகர அலங்காரத் துணி வகைகளை வாங்க ஏற்ற இடம்.



கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

## வானவில்

85 அண்ணாசாலை, சென்னை 600 018 தொலைபேசி: 444236
ஞாயிறு விற்பனை உண்டு. கார் நிறுத்த இடவசதி உண்டு

தமிழகத்திலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலை...


# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அனைத்துலகக் கருத்தரங்கு

தில்லையிலே உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செட்டி நாட்டரசர் குடும்பத்தின் கொடைத் திறத்திற்கு நிலைத்த சான்றாய் இருந்து புகழ்பரப்பி வருவதுடன், புதுமைகளை ஏற்றுச் செயல்படுத்தும் பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது. அதன் துணை வேந்தராய் இருப்பவர் உலகப் புகழ்பெற்ற மக்கள் தொகையியல் அறிஞர் சிலருள் ஒருவரும், இந்திய அரசின் முன்னாள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சருமான டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்களாவார். மக்கள் தொகையியல் கல்வி, மாணவர்களுக்கு அளிக்கப் பட வேண்டும் எனத் தேசிய மக்கள் தொகைக் கொள்கை கூறுவதற்கு ஏற்ப, டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான பின், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மக்கள் தொகையியல் கல்விக்கான நிலையம் ( Centre for Population Studies ) ஒன்றை அமைத்து ஆராய்ச்சித் துறை மாணவர்கள் பலர் அதில் ஆராய்ச்சியில் ஈடுபட வழிவகை செய்தார்.

இன்றைய உலகின் பெரும் பிரச்சினையாய் இருந்து வருவது மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையாகும். இந்தப் பிரச் சினை பற்றிய விவரங்களை இளைய சமுதாயத்திற்கு-மாணவ, மாணவிகளுக்கு விளக்கிக் கூறி அவர்களது வாழ்வில் சிறு குடும்ப நெறியை நீங்காது இடம் பெறச் செய்தால் எதிர்கால இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச் சினையாக இருக்காது எனலாம்.

"Population Education holds promise not only as a means of diffusing information about population problems more pervasively in a country than can be done by the channels ordinarily available to family planning programmes but as a means of bringing about desired changes in attitudes, behaviour and values in the next generation (which is almost here)" என்ற ஒரு கருத்திற்கிணங்க மக்கள் தொகையியல் கல்வி அடுத்த தலைமுறை சீராக வாழ வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் சிறப்பு வாய்ந்த மக்கள் தொகையியல் கல்வி நிலையம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஒருபிரிவாக இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக் கழக மான்யக்குழு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் உதவியோடு மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்த அனைத் துலகக் கருத்தரங்கம் ஒன்றை (International Seminar on Problems of Fertility Control) அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்

இந்திய அரசின் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 10.1.'77-ஆம் நாள், மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்த அனைத் துலகக் கருத்தரங்கைத் துவக்கிவைத்து உரையாற்றுகிறார். துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர், கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் ஆகியோர் படத்தில் உள்ளனர்.



கழகம் ஒரு வார காலம் நடத்தி முடித்துள்ளது.

இக்கருத்தரங்கை இந்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் தலைமையில் 10-1-77 அன்று காலை துவக்கி வைத்தார். அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியரும், புகழ்மிக்க சமூக விஞ்ஞானியுமான டாக்டர் 'ஆல்பர்ட் காட்ஸ்' அவர்கள் சிறப்புரையாற்றினுர்.

அனைத்துலகக் கருத்தரங்கினைத் துவக்கி வைத்து உரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், வறுமையும், கல்வியறிவின்மையும், தேவைக்குறைவான வளர்ச்சியும் பிறப்பு விகிதம் அதிகமாவதற்குரிய காரணங்களாகும் என்றும், அதிக அளவில் உள்ள பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமானுல் வறுமை, பசி, கல்வியறிவின்மை, வேலையில்லா நிலை, ஊட்டச்சத்துக் குறைவான நிலை நோய் ஆகியவற்றைக் கடுமை தணியாத தொடர்ந்த பணிகளால் போக்க வேண்டும் என்றூர். அதே நேரத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டிற்கான கொள்கைகளைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு அவசியமான சமுதாயத் தொண்டிற்கும் ஆவன செய்ய வேண்டுமென்றும் கூறினுர். வறுமை, அதிகமான பிறப்பு விகிதம் ஆகியவை இணைந்த நச்சு வட்டத்தை உடைக்க நாம் எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்றும் அவர் சொன்னுர்.

''கருத்தடை தனி மனிதனுக்கு எப்படி உதவுகிறது? வாழ்வின் தரத்தை உயர்த்துவதற்கு எந்த வகையில் அது உதவியாக இருக்கிறது? தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் எப்படிப்பட்ட நன்மைகளை அது நல்குகிறது?'' இப்படிப்பட்ட வினுக்கள் அடிக்கடி கேட்கப்படுவதும், அவற்றிற்கான பதில்கள் சொல்லப்படுவதும் யாவரும் அறிந்தது என்ருலும், திரும்பத் திரும்பச் சொல்லுவதற்கு ஏற்புடையவையல்ல.

எந்த ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திலும் இந்தியாவில் 2 கோடித் தாய்மார்கள் கர்ப்பமுற்றவர்களாக இருக்கிருர்கள். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்த சோகை நோய்க்காளானவர்களாகஇருக்கிருர்கள். உண்மையிலேயே மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே உடல்நலத்



அனைத்துலகக் கருத்தரங்கில் கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் சிறப்புரையாற்றுகிருர்.

தோடு உள்ளார்கள். நம் நாட்டில் தாய்மார்கள் இறப்பதற்கு, அவர்களிடையே உள்ள சத்துக் குறைவு மட்டும் காரணமல்ல. 10 முதல் 20 சதவிகித தாய்மார்கள் இறப்புக்குக் காரணம் அவர்களிடையே உள்ள சத்துணவுக் குறைவும், இரத்த சோகை நோயும் தான் !

தாய்மார்களிடையே உள்ள சத்துணவுக் குறைவு அல்லது பற்றுக்குறை காரணமாகவும், பொதுவான உடல்நலக் குறைபாடு காரணமாகவும் நமது தேசத்தில் பிறக்கும் குழந்தைகளில் 17 சதவிகிதத்தினர் குறை மாதக் குழந்தைகளாகப் பிறக்கின்றனர். நமது நாட்டில் இறக்கின்ற நான்கு வயதுக்குக் குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை அளவு 40 சதவிகிதமாக உள்ளது. வளர்ச்சி பெற்ற நாடுகளில் இந்நிலை 17 சதவிகிதமாகவே இருக்கிறது. பிறக்கும் குழந்தைகள் நிச்சயமாக உயிர்வாழா என்ற அவநம்பிக்கையே, அதிகக் குழந்தைகளைப் பெறக் காரணமாவதுடன், நச்சு வட்டத்தை உறுதிப்படுத்தவும் செய்கிறது.

நமது நாட்டு மொத்த மக்கள் தொகையில் ஆண்களின் எண்ணிக்கை அதிகம் என்பது. இந்திய மக்கள் தொகைக் கணிப்புக்கள் ( Census ) காட்டும் உண்மையாகும். பெண்கள் பிள்ளைப் பேற்றுல் இறப்பதும், குழந்தைப் பருவத்திலும், பெரியவர்களான பின்பும் 'பெண்கள்தானே' என அவர்களை ஒதுக்குவதும் இதற்குரிய காரணங்கள் ஆகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின்படி இந்தியாவில் 1,000 ஆண்களுக்கு 930 பெண்கள் என்ற நிலை உள்ளது. அதே நேரத்தில் இரஷ்யாவில் 1,000 ஆண்களுக்கு 1,171 பெண்கள், அமெரிக்காவில் 1,055 பெண்கள், இங்கிலாந்தில் 1,060 பெண்கள் என்ற நிலை இருக்கிறது.

பெண்களது எண்ணிக்கை விகிதம் குறைந்து வருகிறது என்பது தெளிவு. பிள்ளைபெறும் பருவத்திலிருக்கும் 80 பெண்களில் ஒரு பெண் பிள்ளைப்பேற்றுல் இறக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை எளிய சமுதாயத்தில் வாழும் பெண்கள், பிள்ளை பெறும் பருவம் முழுவதிலுமாக கருவுற்றவர்களாக அல்லது குழந்தைகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருப்பவர்களாக உள்ளார்கள்.





அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 10.1.77-ஆம் நாள் மாலை கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் தலைமையில் நடந்த விழாவில், மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் எழுதிய 'இந்தியாவில் மக்கள் தொகையும் சட்டமும்'', (Population and Law in India) என்ற நூலின் முதல்படியை திருமதி. சந்திரசேகர் அவர்களிடம் வழங்குகிருர்.

நமது நாட்டு மொத்த மக்கள் தொகையில் 20 முதல் 25 சதவிகிதப் பெண்கள் தேசிய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய பணிகளில் ஈடுபடும் தகுதி படைத்தவர்களாவார்கள், என்றுலும், சத்துணவுக் குறைவு, உடல் நலக் குறைவு இவை காரணமாக நாட்டு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடும் பெண்களின் அளவு மிகக் குறைவாக உள்ளது. நடைமுறையில் பெண்களின் சக்தியை இழப்பது நாட்டிற்கு நட்டமேயாகும். இந்தப் பின்னணியை வைத்து நோக்கும்போது, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுடன் சிறு குடும்பம் அமைத்து வாழும் குடும்பங்களின் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரிடையே சத்துணவுக் குறைவு ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டில் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 69 இலட்சம் பேர்கள் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்றுள்ளனர். கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளைவிட இது நான்கு மடங்குஅதிகமானதாகும். 1972-73-ஆம் ஆண்டு 31 இலட்சத்து 20 ஆயிரம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்யப்பட்டன என்பது ஒரே ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய சாதனையாகும். அதையும் மீறிய தொரு சாதனை இந்தியாவில் இவ்வாண்டு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு 1976-77-ஆம் ஆண்டில் 5 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென இலக்குத் தந்திருந்தது. 1977 ஜனவரி மாதம் 11-ஆம் நாள் முடிய தமிழ்நாட்டில் 5 இலட்சம் பேர்கள் நிரந்தரச் சிகிச்சை ஏற்றுவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்க, மகிழ்ச்சிகரமான செய்தியாகும். இவ்வாண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக தமிழ்நாட்டில் 6 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளை செய்து முடிக்க வேண்டுமெனத் தமிழ்நாடு அரசு தனக்குத்தானே வகுத்துக் கொண்ட இலக்கும் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வெற்றிக்கு இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் தன்னைத்தானே இதில் முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டிருப்பதும், சமுதாயத் தலைவர்களின், சிறப்பாக வெவ்வேறு மதப் பிரிவினரின் முழு ஒத்துழைப்பும் காரணங்களாகும்.

''அடுத்த ஆண்டு குடும்பநலத் திட்டப் பணிகளுக்கென 123 கோடி ரூபாய் ஒதுக்கப்படக் கூடும். இதில் 50 கோடி ரூபாய் சேவைப் பணிகளுக்காக ( Services and Supplies ) ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று இந்திய நிதியமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டு, கருத்தரங்கம் வெற்றிகரமாக நடந்தேறத் தம் வாழ்த்துக்களைக் கூறி உரையை முடித்தார்.

அடுத்துச் சிறப்புரையாற்றிய கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் 'ஆல்பிரட் காட்ஸ்' அவர்கள், வளர்ச்சியும்-கட்டுப்பாடும் இந்தியாவில் ஓங்க அவசரநிலை பெரிதும் உதவி இருப்பது கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும், உண்மையிலேயே இதற்கெல்லாம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் தலைமைதான் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் காட்ஸ் மேலும் பேசுகையில், குடும்பநலத் திட்டம், தொழில் நுணுக்க அணுகுமுறையால் மட்டுமோ அல்லது விளக்கத் திட்டப் பணிகளற்ற நிலையிலோ வெற்றிபெருது என்று கூறி, எந்த வகையான முறைகளில் விளக்கத் திட்டப் பணியாற்ற வேண்டும் என்று விளக்கமாக எடுத்துரைத்தார்.

இறுதியாகத் தலைமையுரையாற்றிய துணைவேந்தர் டாக்டர்



அனைத்துலகக் கருத்தரங்கைத் துவக்கி வைத்த மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம், 'குடும்பநலச் செய்திக்கதிர்' உள்ளிட்ட பல்வேறு குடும்ப நலத்துறை வெளியீடுகளை, செய்திக்கதிர் உதவி ஆசிரியர் திரு. எஸ். முத்துராமலிங்கம் சமர்ப்பித்தார்.

எஸ். சந்திரசேகர் அவர்கள், பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதற்கு 29 காரணங்கள் என்று தெளிவுபடுத்தி, அவைகளில் சிறப்பான நான்கு பற்றி விளக்கிக் கூறினர். தொடர்ந்து அவர் பேசுகையில் இந்தியப் பெண்கள் எழுச்சி பெற்று, புதுமைப் பெண்களாக மாறினல் அன்றி, நம் நாட்டில் மக்கள் தொகைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க இயலாது என்றும், பெண்களை ஊக்குவிப்பதற்காக நாட்டில் உள்ள வேலைவாய்ப்புகளில் 40 சதவிகித அளவு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், அதனல் அடுத்த பத்தாண்டுகளில் நமது நாட்டுப் பிறப்பு விகிதம் 50 விழுக்காடு குறையுமென்றும் கூறினர்.

அன்று மாலை அண்ணமலைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்தில் நடந்த விழாவில் மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் எழுதிய 'இந்தியாவில் மக்கள் தொகையும் சட்டமும்' (Population and Law in India) என்ற ஆங்கில நூலை வெளியிட்டு, அந்நூலின் முதல் 'படி'யைத் திருமதி சந்திரசேகர் அவர்களிடம் வழங்கினர்.

இக்கருத்தரங்கு 14-1-'77 வரை நடந்தேறியது. தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு-குடும்பநலத் துறையின் ஆணையரும், செயலாளருமான திரு பி. முராரி அவர்களும், பல்வேறு பல்கலைக் கழகங்கள், மக்கள் தொகையியல் அமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அறிஞர்களும் இந்த அனைத்துலகக் கருத்தரங்கில் கலந்துகொண்டு, எழுத்து வடிவில் தங்கள் எண்ணங்களை, அனுபவ உண்மைகளை வழங்கினர். சிறப்புற நடத்தப்பட்ட இந்த அனைத்துலகக் கருத்தரங்கைப் போல் விரிவான வகையில் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களிலும், பிற இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் மக்கள் தொகையியலின் வெவ்வேறு கூறுகள் குறித்துக் கருத்தரங்குகளும் பிறவும் நடத்தப்பட்டால்-அவற்றிற்குப் பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்-எதிர்காலச் சமுதாயம் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை!

—எஸ். முத்துராமலிங்கம்

## தேசீய குடும்பநல மாதம்

1977 பிப்ரவரி மாதத்தைத் தேசிய குடும்ப நல மாதமாக மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இது வரை குடும்பநலத் திட்டத்தில் பெறப்பட்ட நன்மைகளைச் சிறந்த முன்னேற்றத்திற்கு ஓர் உறுதியான அடிப்படையாக மாற்றுவதற்கான முயற்சிகள் இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும்.

மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சகத்தின் செயலாளர் திரு ஜயப்பிரகாஷ், மாநிலத் தலைமைச் செயலாளர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், "குடும்ப நல இயக்கத்தின் நன்மைகளின் அடிப்படையில் இத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான முக்கிய வழிமுறைகளை இந்த மாதத்தில் மாநிலங்கள் ஆராய வேண்டும்," என்று ஆலோசனை கூறியுள்ளார்.

"அறுவைச் சிகிச்சைக்கான குறியளவை நாம் ஏற்கெனவே தாண்டியிருப்பதால் அடுத்த மாதத்தில் இதர குடும்பநல முறைகளில் கவனம் செலுத்த வேண்டும். குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களை, குடும்பநலத் துறையின் எல்லா ஊழியர்களும், மற்றவர்களும் சந்தித்து, கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறியவேண்டும். அவர்களுக்கு அத்தகைய பிரச்சினைகள் ஏதேனும் இருந்தால் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும். இதன் மூலம் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களின் மனதில் ஒரு நம்பிக்கையையும், திருப்தியையும் ஏற்படுத்த முடியும். தேவைப்படும் இடங்களில் மாவட்ட அரசு மருத்துவ மனைகளில் அரசுச் செலவில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று திரு ஜயப்பிரகாஷ் குறிப்பிட்டுள்ளார்.



பதிவு எண். M. 8676

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம் ... சினர் தோட்டம், சென்னை-600002



# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

## தமிழரசு

## சந்தா விவரம்

தமிழரசு இதழில் பல பயனுள்ள செய்திகள் வெளியிடப்படுகின்றன. தமிழரசு தமிழ் இதழ் மாதம் இரு முறையும், ஆங்கில இதழ் மாதம் ஒரு முறையும் வெளி வருகின்றன.

சந்தா விவரம் பின்வருமாறு :

| தமிழ் இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 12.00 |
| 6 மாதச் சந்தா .... | 6.00 |

| ஆங்கில இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 6.00 |
| 6 மாதச் சந்தா | — |

சந்தாத் தொகையை மணி யார்டர் அல்லது டிராப்ட் மூலமாக

**Circulation Manager,**
**Tamil Arasu Office,**
**Govt. Estate,**
**Madras—600 002**

என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

[*குறிப்பு:* சிலர் தவறுதலாக செக் அல்லது டிராப்டில் **General Administrative Manager** என்று குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.]

<u>அட்டைப்பட விளக்கம்</u>

...கும், சிமெண்ட்டும் இல்லாமல் கட்டப் ...ட்டுள்ள மலிவு விலை வீடு.

விலை வீடுகளைப் பற்றிய விவரங்களை அறிய ...றந்த செலவில் வீடுகள் கட்டலாம்!'' கட்டுரையைத் தயவுசெய்து படியுங்கள்

# தமிழரசு


16—2—1977

மலர் : 7 இதழ் : 16


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| *சிறந்த இந்தியர்* ... | *2* |
| *நமது இலட்சியம்!* .. | *5* |
| *வறட்சியைத் துடைத்திட வகுத்த திட்டங்களும் சாதனைகளும்* ... | *8* |
| *ஏழை எளியவர்களுக்குப் புதிய திட்டங்கள்!* ... | *9* |
| *இந்தியாவில் கல்வி வளர்ச்சி!* ... | *15* |
| *வெற்றிக் கொடி பெற்றவர்களுக்கு வாழ்த்து!* ... | *17* |
| *தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் தன்னிகரற்ற பணிகள்!* ... | *19* |
| *படமும் செய்தியும்* ... | *24* |
| *குறைந்த செலவில் வீடுகள் கட்டலாம்!* | *26* |
| *தமிழ்நாட்டில் இரத்தினக் கற்கள்!...* | *32* |
| *இலவச உழைப்பு முகாம்!* ... | *33* |
| *கால்நடைகளை மேம்படுத்துவதற்கான இனச்சேர்க்கை வழிமுறைகள்* ... | *37* |
| *கண்கவர் தோல்பொருள் உற்பத்தியில் கணிசமான வெற்றி!* ... | *41* |
| *உழவர்களுக்கு வேளாண்மைத் துறை அளித்த பொங்கல் பரிசுகள்!* ... | *42* |
| *இதன் விலை ரூபாய் 5,830* ... | *45* |


**கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.**


5-MAR 19

# சிறந்த இந்தியர்

திரு பக்ருதின் அலி அகமது 1905-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதி தில்லியில் பிறந்தார். அவரது தந்தை மறைந்த கர்னல் இஸட். ஏ. அகமது, அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

### பள்ளிப்படிப்பு

உத்தரப் பிரதேசத்தில் கோண்டா என்னுமிடத்தில் உள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் திரு பக்ருதின் அலி அகமது ஆரம்பக் கல்வி பயின்றார். தில்லியிலுள்ள அரசாங்கப் பள்ளியில் 1921-ல் பஞ்சாப் பல்கலைக் கழக மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். தில்லியிலுள்ள புனித ஸ்டீபன் கல்லூரியில் சேர்ந்தார். பிறகு உடனே இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புனித காதரையின் கல்லூரியில் சேர்ந்து படித்தார். 1927-ல் ''வரலாற்றுப் பயணங்கள்'' படிப்பில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். அவர் சட்டப் படிப்பை முடித்த பிறகு 1928-ல் லண்டனில் வழக்கறிஞரானார்.

### வழக்கறிஞர்

திரு பக்ருதின் அலி அகமது இந்தியாவுக்குத் திரும்பியவுடன், பிரிக்கப்படாத இந்தியாவில் பஞ்சாப் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். 1928-ல் தனது தந்தையுடன் அவர் அஸ்ஸாமுக்குச் சென்றார். கல்கத்தாவில் சிறிது காலம் வழக்கறிஞர் தொழிலை நடத்தியது தவிர, வாழ்நாளில் பெரும் பகுதியை அவர் அஸ்ஸாமிலேயே கழித்தார்.

1938-39-ல் முதல் காங்கிரஸ் அமைச்சரவையில் (பர்தோலோய் அமைச்சரவை) நிதி, வருவாய்த் துறை அமைச்சரானார். பர்தோலோய் அமைச்சரவையில் அவரது பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தீவிர நடவடிக்கைகள் மறக்க முடியாதவை. 50 சதவிகித நில வருவாய் கழிவு, விவசாய வருமானத்திற்கு வரி விதிப்பு, மற்ற வருவாய்த் துறைகளையும் கண்டறிதல் ஆகியவை இந்தத் தீவிர நடவடிக்கைகளில் அடங்கும். இந்த நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தின் வருவாய் இருமடங்காகப் பெருகியது.

### தனிநபர் சத்தியாக்கிரகம்-சிறைவாசம்

1940-ல் மறைந்த திரு கோபிநாத் பர்தோலோயுடன் அவர் அரசாங்கத்திலிருந்து ராஜினாமா செய்துவிட்டு மகாத்மா காந்தியின் உத்தரவின்படி தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். இதற்காக அவர் ஓராண்டுச் சிறையிலடைக்கப்பட்டார்.

> ## குடியரசுத் தலைவரின் மறைவுக்கு அனுதாபங்கள்
>
> மிக உயர்ந்த தேசபக்தர்; தேசிய வாதி. இந்தியாவின் தலைசிறந்த புதல்வர்களில் அவர் முதன்மை வகிக்கிறார். தேச விடுதலைப் போரில் அவர் ஏற்றிருந்த பங்கு, குறிப்பிடத்தக்கது.
>
> —பி. டி. ஜட்டி
>
> ஜனாதிபதி பக்ருதின் அலி அகமது அவர்களின் மரணம் என்னைத் திடுக்கிடும்படி செய்துவிட்டது. என்னுடைய துயரத்தை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை. அவர் ஒரு சிறந்த இந்தியர், ஒரு சிறந்த கனவான், ஒரு சிறந்த முஸ்லிம்.
>
> விவேகமான ஆலோசகரையும் சிறந்த குணம், சேவை, கடமையுணர்வு படைத்தவரையும் நாடு இழந்து விட்டது. அவர் பல விஷயங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். விளையாட்டுகளை வளர்க்கப் பெருமுயற்சி செய்தார். எல்லா விஷயங்களிலும் நியாய உணர்வு கொண்டிருந்தார்.
>
> —பிரதமர் இந்திரா காந்தி

விடுதலை பெற்றவுடன் அவர் மறுபடியும் பாதுகாப்புக் கைதியாகத் தொடர்ந்து மூன்றரை ஆண்டுக்காலம் சிறையிலடைக்கப்பட்டார். 1945 ஏப்ரலில் அவர் விடுதலை செய்யப்பட்டார். 1945 இல் நடைபெற்ற தேர்தலில் மாநில சட்டசபைக்குப் போட்டியிட்டார். ஆனால், முஸ்லீம் லீக் தனது சக்திகள் அனைத்தையும் திரட்டி, முஸ்லீம் லீக் வேட்பாளரிடம் அவர் தோல்வியடையும்படி செய்தது.

1946-ல் அவர் அஸ்ஸாமின் அட்வகேட் ஜெனரலானார்.

1957-ல் இந்தியப் பிரதிநிதியாக அவர் ஐக்கிய நாடுகளுக்குச் சென்றார்.

1957-ல் இவர் மறுபடியும் அஸ்ஸாம் சட்டசபைக்கு மிகப் பெரும் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவர் மாநில அமைச்சரவையில் சேர்ந்தார். நிதி, சட்டம், சமுதாயம் அபிவிருத்தி, பஞ்சாயத்து, உள்ளூர் சுயஆட்சி ஆகிய பொறுப்புக்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

1962-ல் அவர் மறுமுறையாக மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து அமைச்சர் பதவியை வகித்து வந்தார். உள்ளூர், சுயஆட்சி இலாகாவைத் தவிர முன்பு அவர் வகித்து வந்த பொறுப்புகளைத் தொடர்ந்து வகித்து வந்தார். 1964-முதல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும், பார்லிமெண்ட் போர்டிலும் அவர் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வந்தார்.

### மத்திய அமைச்சர்

1966-ல் அவர் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1966 ஜனவரி 29-ந் தேதி அவர் மத்திய அமைச்சரவையில் மின்சாரம், பாசன வசதி அமைச்சராகப் பதவியேற்றார். 1966 நவம்பர் 14-ந் தேதி மத்தியக் கல்வி அமைச்சரானார்.



குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமது

தோற்றம்: 13.5.1905

மறைவு : 11.2.1977

1967-ல் பொதுத் தேர்தலில் அஸ்ஸாம் பார்பேட்டா தொகுதியிலிருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 மார்ச் 13-ந் தேதி தொழில் அபிவிருத்தி, கம்பெனி விவகாரங்கள் காபினெட் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தொழில் அபிவிருத்தி, கம்பெனி விவகாரங்கள் அமைச்சராக பணியாற்றுகையில் வேகமான தொழில் வளர்ச்சி, சிறுதொழில் மற்றும் துணைத்தொழில்களுக்கான பரந்த அடிப்படை, பின்தங்கிய பகுதிகளுக்கு விசேஷ கவனம், தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய தொழில் கொள்கையை திரு அகமது வகுத்தளித்தார். ''ஏகபோக ஒழிப்பு மசோதாவை'' முன்மொழிந்து வழிநடத்திஞர். 'புதிய கண்டுபிடிப்புடன்' மசோதாவை அவர் அறிமுகப் படுத்திஞர்.

> இந்தியக் குடியரசின் துணைத் தலைவரான திரு. பி. டி. ஜட்டி அவர்கள், 11-2-77 அன்று இந்தியக் குடியரசின் தாற்காலிகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பொறுப் பேற்றுள்ளார்.

1970 ஜூன் 27-ந் தேதி திரு அகமது விவசாய அமைச்சராகப் பதவியேற்ருர். 1971 பொதுத் தேர்தலில் அஸ்ஸாமில் அவரது பழைய தொகுதியிலிருந்து அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது முன்பு அவர் பார்த்து வந்த பழைய இலாகாப் பொறுப்புகளே அவருக்கு அளிக்கப்பட்டன.

### முதிர்ந்த உறுப்பினர்

அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டியில் திரு. அகமது மிகவும் முதிர்ந்த உறுப்பினராக (சீனியர் மெம்பர்) இருந்தார். அந்தத் தகுதியின் அடிப்படையில் அவர் அனைத்து அரசியல் முடிவுகளிலும் ஒத்துழைத்து வந்தார்.

### விளையாட்டு வீரர்

திரு. பக்ருதின் அலி அகமது ஒரு ஆர்வமுள்ள விளையாட்டு வீரர். அஸ்ஸாம் கால்பந்து சங்கம், அஸ்ஸாம் கிரிக்கெட் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் அஸ்ஸாம் விளையாட்டுக் கவுன்சிலின் துணைத் தலைவராகவும் அவர் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். அஸ்ஸாம் மாநிலத்தின் பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். அனைத்திந்திய டென்னிஸ் சங்கத்தின் தலைவராக அவர் மறுபடியும் சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

## நாம் சிந்திக்க வேண்டியது என்ன?

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் இயங்கி வந்த இந்த உலகம் தற்போது அச்சுறுத்தப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் நாம் எதைப் பெறலாம் என்ற கேள்வியை எழுப்புகிருர்கள். இந்த வழக்கம் நம் நாட்டிலும் உள்ளதைப் பார்க்கிருேம். ''அரசிடமிருந்து நாம் எதைப் பெறமுடியும்? ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை நமக்குச் சாதகமாக்கிக்கொள்வது எப்படி? நாடு நமக்காக என்ன செய்கிறது?'' என்ற கேள்விகளுக்குப்பதிலாக நாட்டிற்கு நாம் என்ன செய்ய முடியும் என்பது பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. திறமை, சேவை, அறிவுத்திறன் ஆகிய வடிவங்களில் நமது சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

—இந்திரா காந்தி.

### இந்திய ஜனதிபதி

இந்தியாவின் ஐந்தாவது ஜனதிபதியாக திரு பக்ருதின் அலி அகமது 1974 ஆகஸ்டு 20-ந் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பெற்ற வாக்குகளின் மதிப்பு 7,65,587. அவர் ஆகஸ்டு 24-ந் தேதி ஜனதிபதியாகப் பதவி ஏற்ருர்.

இந்திய ஜனதிபதியாக அவர் ஹங்கேரி, யூகோஸ்லாவியா, இந்தோனேஷியா, எகிப்து, ஈரான், ஐக்கிய எமிரேட்டிஸ் ஆகியவை உட்பட ஏராளமான நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். அவர் சென்ற நாடுகளுக்கும் நமது நாட்டிற்குமிடையே நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் உருவாக்கும் ஒரு கருவியாக அவர் பணியாற்றிஞர்.

மலேசியா, பிலிப்பைன்ஸ், பர்மா ஆகியநாடுகளில் நல்லெண்ணச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் பொருட்டு 1977 பிப்ரவரி 6-ந் தேதி அவர் தமது பயணத்தைத் துவக்கிஞர். ஆனல் அவர் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக தனது சுற்றுப்பயணத்தின் பிந்திய பகுதியை ரத்து செய்து விட்டு பிப்ரவரி 10 ஆம் தேதியன்று புதுதில்லி திரும்பிஞர்.

11-ஆம் தேதியன்று எதிர்பாராது மாரடைப்பிஞல் மரணம் எய்திஞர். 13-ஆம் தேதியன்று டெல்லியில் உள்ள ஜும்மா மசூதியில் நல்லடக்கம் செய்யப் பெற்ருர்.

நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மறுமலர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் மிக முக்கியமான காலத்தில் திரு அகமது நாட்டின் ஜனதிபதியாக விளங்கிஞர்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் அவர் நாட்டுக்கு ஆற்றிய பணி—நாடு விடுதலை பெற்றது முதல் ஒரு உண்மையான, வேகமான, தன்னையே அர்ப்பணிக்கும் பொது ஊழியராக அவர் ஆற்றிய பணி, ஆகியவை என்றும் அழியாமல் நினைவிலிருக்கும்.



# நமது இலட்சியம்!

"நம்முடைய நாட்டு மக்களின் பொருளாதார, சமூக வாழ்வின் முக்கியத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது 20 அம்சத் திட்டம். அதனல் மக்கள் மத்தியில், இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. ஆகவே இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் நிறைய எதிர்பார்க்கிருர்கள். இத்திட்டத்தை அமல் நடத்துவதில் முழு முயற்சிகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

''விலைவாசி உயர்வு சில இடங்களில் ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே. அதிக அக்கறை செலுத்த வேண்டிய விஷயம் இது. 1973-74-ல் இருந்ததைவிட இந்த நிலைமை மிகவும் மாறுபட்டதாகும் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்குப் பெரும்பான்மை பொருட்களின், உற்பத்தியும், அவை கிடைப்பதும் மிகவும் சிறப்பாக உள்ளன. சில பொருட்களில் ஓரளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தத் தட்டுப்பாடு ஹேஷ்யபேரச் சக்திகளால் ஏற்பட்டது. சில நேரங்களில் மழை பெய்வதில் ஏற்படும் காலதாமதம், விலைவாசி உயர்வுக்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆனல் இந்தத் தட்டுப்பாடு நிலையை முறியடிக்க உணவு இருப்பைப் பயன்படுத்தி வருவதுடன், இறக்குமதியைத் தாராளமாக்க அந்நியச் செலாவணி வளங்களையும் பயன்படுத்தி வருகிறோம். இந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

''சமையல் எண்ணெய் சம்பந்தமாக ஒரு முக்கிய கொள்கைக்கு முடிவு எடுத்திருப்பதைப் பத்திரிகையின் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த 20 ஆண்டுக் காலமாக அந்நியச் செலாவணிப் பற்ருக்குறையால் இடர்ப்பட்டு வந்த இறக்குமதிக் கொள்கை முழுதுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுக் காலமாகக் கள்ளக்கடத்தலைத் தடுக்கவும், ஏற்றுமதியை மேம்படுத்தவும் நாம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனய் நாம் பெற்ற அந்நியச் செலாவணியைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த இறக்குமதிக் கொள்கையில் மாற்றம் காணப்பட்டுள்ளது.



### தேசியக் கொள்கை

''தேச நலன்களுக்கு எதிராக, குறுகிய இலாபம் பெறும் பல்வேறு பிரிவினரின் போக்கைத் தொடர்ந்து எல்லா வகையிலும் பல்வேறு இன்னல்கள்நேர்ந்திருந்ததை 1974-ஆம் ஆண்டு நாம் உணர்ந்தோம். பற்ருக்குறை பற்றிய சிறு அறிகுறி காணப்பட்டதும் சில மாநில அரசுகள் பீதியுடன் செயல்படத் துவங்கின. ஹேஷ்ய பேரத்திற்கு எதிரான நடவடிக்கையில் இறங்காமல், உணவுப் பொருட்கள் நடமாட்டத்தில் முறையாகவோ, முறையில்லாமலோ சில கட்டுப்பாடுகளை விதிக்கும் நடவடிக்கைகளில் இறங்கின. இது வருத்தம் தருகிற ஒரு விஷயமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து தேசிய சந்தை மாற்றம் கண்டதும், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான தேசியக் கொள்கைகளை தொடர்வது இயலாமல் போயிற்று. இந்த விஷயங்களில் தேசியக்கொள்கையை ஒவ்வொரு மாநிலமும் பின்பற்ற வேண்டும். அதன் மூலமே விலைவாசி உயரும் போக்கை நாம் மாற்றியமைக்க முடியும்.

### நிலச்சீர்திருத்தம்

"இப்போது எல்லா விஷயங்களையும் குறிப்பிட நான் விரும்பவில்லை. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இன்னும் குறிப்பிடத்தக்கஅளவு நிறைவேற்றப்பட வேண்டும். இலக்கைப் பூர்த்தி செய்யும் காலவரையறை நீடிக்கப்பட்டு வருகிறது. இதற்கான காரணங்களை நாம் விரிவாகப் பரிசிலனை செய்வதுடன் அதற்கான நிவாரணப் பணிகளையும் முடிவு செய்ய வேண்டும். முதல் நடவடிக்கை நில விநி

# பிரதமர் உரை

யோகம் என்ருலும், சிறு விவசாயிகள் அந்த நிலத்தைக் கொண்டு என்ன செய்கிருர்கள் என்பதும் அதேபோல முக்கியமானது. அந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்படாவிட்டால் அந்த நிலத்தைத் திரும்ப ஒப்படைக்கும் போக்கே அவர்களிடம் ஏற்படும். காரணம் அவர்களிடம் நிலத்தைப் பயன்படுத்துவதற்கு சக்தியோ, வசதியோ இல்லாததே யாகும்.

''தண்ணீருக்கோ, மின்சார வசதிக்கோ வசதி ஏற்படுத்தித் தருவதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகச் சில மாநிலங்களிலிருந்து எனக்குத்தகவல் வந்தது. சம்பந்தப்பட்ட முதல் அமைச்சர்கள் இது சம்பந்தமாகப் பரிசீலித்து இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். காரணம், நுகர்வோருக்கு இது நியாயமானதல்ல.

''சில தெற்கு மாநிலங்களில், அரிசி சிறிது சேதம் அடைந்திருந்தாலும் உட்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனுல் உணவுக் கார்ப்பொரேஷன் அந்த அரிசியை வாங்குவதில்லை. ஆகவே தனியார் ஏஜென்சிகள் அவற்றைக்குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்பதாக மத்திய உணவு விவசாய அமைச்சகத்திடம் நாம் பேசியுள்ளோம். இதற்கு இப்பொழுது ஒரு வழி காணப்பட வேண்டும். உணவுக் கார்ப்பொரேஷன் இந்த அரிசியை வாங்க அனுமதிக்கப்பட்டால் எதிர்காலத்தில் ஒரு தரத்தைப் பராமரிக்க அதனுல் முடியாது என்று என்னிடம் கூறப்பட்டது. கஷ்டமான காலத்தில் தற்காலிகமாக நாம் ஓரளவு செய்ய இயலும். மக்களில் மிகவும் ஏழ்மையானவர்கள் பாதிக்கப்படாத வகையில்-இந்தப் பிரிவினர் அரிசி வாங்கிச் சாப்பிடுபவராக இருப்பதால் அவர்களுக்கென ஒரு மாற்று ஏற்பாடு காணப்படவேண்டும்.

### கிராமக் கடன்

''கடன் வழங்குவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளால் ஓரளவு விளைவுகளே ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகும். அளவில் வளர்ச்சியடைந்து வருவதாகவும் தெரிகிறது. கிராம பாங்குகள், கடன் உதவிச் சங்கங்கள், விவசாயிகள்சேவைக்கழகங்கள் ஆகிய இவையனைத்தும் வலுப்படுத்தப்படவேண்டும். இவைகளின் நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட வேண்டும். இந்த மகத்தான பணிக்குப் பலன் கிடைக்கவும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் குறிப்பாக சிறிய விவசாயிகள் ஆகியோரின் நலன்கள் காக்கப்படவும், இந்தியாவில் ஒரு உச்சக்கட்ட விவசாய அபிவிருத்தி பாங்கு தேவை. இந்தத் தேவை குறித்து மந்திரி சபைக் குழு பரிசீலித்து வருகிறது. பாங்கு அமைப்பது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

''தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் ஐவுளி, சணல், மற்றும் ஓரிரு தொழிற்சாலைகள் இன்னல்களை எதிர்நோக்கின. ஆனுல் தொழிற்சாலை உற்பத்தி பொதுவாக உயர்ந்தே வந்துள்ளது. குறிப்பாகஅரசுத்துறைத்தொழிற்சாலைகளில் உயர்வு காணப்பட்டு வந்துள்ளது. உற்பத்தித் திறன் பயன்படுத்துவது நிலையாக உயர்ந்து வந்துள்ளது. பிரமிக்கத்தக்க வகையில் தொழிலாளர்கள் ஒத்துழைத்து வந்துள்ளனர். நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களிப்பது சம்பந்தப்பட்ட நம்முடைய திட்டங்களைப் பின்பற்றுவது, அமல் நடத்துவது ஆகியவற்றுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படவேண்டும்.

''20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சம் மாணவர்கள்-இளைஞர்கள் சம்பந்தப்பட்டது. அவ்வப்போது மாணவர்களும், இளைஞர்களும் கோஷ்டி கோஷ்டியாக என்னைச் சந்தித்து சம்பந்தப்பட்ட திட்டம் தங்கள் பகுதிகளில் அமல் நடத்தப்படவில்லை என்று என்னிடம் சொல்லி வருகிருர்கள். ஒவ்வொரு மாநில முதல்வரும் இது விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தித் தத்தம் மாநிலத்தில் மாணவர்களின்-இளைஞர்களின் - திட்டத்தில் உள்ள இடைவெளிகள் குறித்து கவனிக்கவேண்டும். மிகவும் உணர்ச்சிகரமான பிரிவினர் இவர்கள். ஆதலால் எத்தகைய கோரிக்கைகளோ குறைகளோ காணப்படுமானுல் அவை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

### மக்கள் தொகை

''இப்போது நம்முடைய முக்கிய திட்டங்களில் தேசிய மக்கள் தொகை ஒன்று என்பதை நீங்கள் அனைவரும் உணர்வீர்கள். திட்டமிட்ட பிரச்சாரங்கள், தவருன பிரச்சாரங்கள் ஆக இப்படிப் பல போக்குகள் ஏற்பட்டு இருந்தாலும் மக்கள் தொகைத் திட்டத்தில் நாம் சிறந்த சாதனை படைத்துள்ளோம். நம்முடைய இலக்கை எட்டிப்பிடிப்பதற்கு எத்தனையோ முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு முதல் முன்னுரிமை அளிக்க நாம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும் எந்த வகையிலும் நிர்ப்பந்தம் கூடாதென்பது தெளிவான ஒன்ருகும். நிர்ப்பந்தத்தின் மூலம் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் மேம்பாடுகாணமுடியாது. மாருக அதனுல் இடையூறே விளையும்.

''தாய்-சேய் நல சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்தவும், விஸ்தரிக்கவும் மாநிலங்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் ஒரு அம்சம் போதுமானதாக வலியுறுத்தப்படவில்லை. குடும்பக்கட்டுப்பாடு மூலம் குறைந்த வருமானம் உள்ள நபர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சிறந்த வாய்ப்பையும், சந்தர்ப்பத்தையும் உருவாக்க வழி காண முடியும்.

''நான் சொல்ல வேண்டிய ஓரிரு விஷயங்களும் உண்டு. காரியங்கள் ஏன் செய்யப்படவில்லை என்று நாம் எதிர்நோக்கி இருக்கக்கூடாது; ஆனுல் விளைவுகளிலேயே கவனமாக இருக்க வேண்டும்' என்று என் தந்தை ஒரு முறை சொன்னதை இங்கே நான் கூற விரும்புகிறேன். சில நேரங்களில் ஆற்ற வேண்டிய செயல்களை அதிகாரிகள் வசம் ஒப்படைக்கும் போக்கு நமகக ஏற்படும். அதனுலேயே நமது திட்டங்கள், ஆற்ற வேண்டிய செயல்கள் தடைப்படும் நிலைமையும் ஏற்படக்கூடும். இந்தத் திட்டங்களை அமல் நடத்துவதில் கவலையில்லாத போக்குடையவராய் அதிகாரிகள் இருக்க அனுமதிக்கப்படக்கூடாது. ஆகவே, நாம் முன்பு சொன்னபடி திட்டங்கள் யாவும் நாம் திட்டமிட்டபடி, நாம் நினைத்தபடி அமல் படுத்தப்படுகின்றனவா, எந்த நோக்கிற்காக மேற்கொள்ளப்பட்டதோ அவை சரிவர நடத்தப்படுகின்றனவா என்பன போன்ற விஷயத்தில் உன்னிப்பாக கண்காணித்து வர வேண்டும்.



### காடு வளர்ப்பு

''மரம் வளர்த்து காடாக்குதல் முக்கியமான திட்டங்களில்ஒன்று. நான் இதைப்பற்றி தொடர்ந்து பேசி வருகிறேன். ஏனென்ருல் மரம் நடாமலிருப்பது அல்லது காடுகளை ஒழிப்பது ஆகியவற்ருல் ஏற்படும் அபாயங்கள், ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டுமின்றி ஒரு வேளை நூருண்டுக் காலத்துக்கும் கூட இந்த நாட்டைப் பாதிக்கக் கூடும். ஆகவே இது மிகவும் தீவிரமான பிரச்சினை. காடுகள் பல்வேறு காரணங்களுக்குப் பயன்படுகின்றன. அது வெள்ளத்தை தடுக்கிறது. வறட்சியை அதனுல் தடுக்க முடியும். உணவும், உடையும் அது அளிக்கிறது. ஆனுல், மக்கள் மரங்களை வெட்டாமலிருப்பார்களானுல் காடுகள் ஒரு விதத்தில் வேலை வாய்ப்பையும் அளிக்க முடியும். உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இது சம்பந்தமாக ஏராளமான பணி நடந்து வருகிறது. அதற்கே உரித்தான மிகப்பெரிய அளவில் காடுகள் அமைப்புப்பணி நடைபெற்று வருகிறது. மரங்களை வெட்டுவதைச் சிறிது நிறுத்தி வைப்பது பற்றி மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். காடு வளத்தை வலியுறுத்தும் சில மாநிலங்களில் கூட வேகமாக மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன என்று நான் கேள்விப்பட்டேன். ஆகவே. ஒரு வேளை, மரங்களை வெட்டுவதைச் சிறிது காலத்திற்கு நாம் நிறுத்தி வைக்க வேண்டும். இந்த இடைக்காலத்தில் காடுகளை வளர்த்து, பாதுகாத்து அதே நேரத்தில் காடுகளிலிருந்து வருவாய் ஈட்டுவதற்காக ஒரு முறையான திட்டத்தை வகுக்க வேண்டும்.

''சராசரி கிராமப்புற மனிதனுக்குத் தகுந்த தொழில் நுட்பம் மற்ருெரு பிரச்சினை. கிராமப்புற மக்களின் திறமையை வளர்ப்பதற்கு இது மிகவும் அவசியம். நகரங்களில்கூட இது பற்றி முயற்சிக்கலாம்.

''அநேக முதலமைச்சர்கள் பெரிய பாசன வசதித் திட்டங்கள் வேண்டுமென்று வலியுறுத்துகிருர்கள் என்று கேள்விப்பட்டேன். மிகவும் எளிதாகவும், குறைந்த செலவிலும், அமைக்கக் கூடிய—மக்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய சிறு பாசனவசதித் திட்டங்களில் அவர்கள் அக்கறை காட்டவில்லை என்று நான் கேள்விப்பட்டேன். ஆனுல் அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. நான் பெரிய திட்டங்களை எதிர்க்கவில்லை. நமக்குத் தேவைப்படும் போது அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனுல் அவைகள் இருக்கின்றன என்ற காரணத்தால் நாம் சிறு பாசன வசதித் திட்டங்களைப் புறக்கணிக்கக் கூடாது. குடிநீர் வசதி அளிப்பதன் அவசியத்தை முன்பு வலியுறுத்தி வந்ததை நாம் மறந்து விட்டது போல் தெரிகிறது. இதற்கான வசதி சரியாகச் செய்யப்படவில்லை என்று பல பகுதிகளிலிருந்து மக்கள் புகார் செய்கிருர்கள்.

''மற்ருெரு விஷயத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பெரிய தொழிலோ, சிறிய தொழிலோ எந்தத் தொழிலாக இருந்தாலும் அது சிறு விவசாயியையோ, கைவினைஞரையோ, மீனவரையோ அதுபோன்ற யாருக்கும் அதிருப்தி ஏற்படுத்தாதவாறு, செயல்படுத்தப்பட வேண்டும். இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துகையில் தங்களது ஜீவனத்திற்காக இத்துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர், பயிற்சியளிக்கப்பட்டோ அல்லது பயிற்சி பெருமலோ இத்தொழில்களில் ஈர்த்துக் கொள்ளப்படும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

''ஆகவே எந்தத் திட்டத்திலும், அத்திட்டம் சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்துமாறு முதலமைச்சர்கள் வலியுறுத்த வேண்டும்.

''வாசகங்கள், வார்த்தைக்கோவைகள், எண்கள் ஆகியவற்றுடன் இணைந்த நமது பழைய மனுேதத்துவம் மாற்றப்பட வேண்டும். நாம் ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும்தான் நினைக்க வேண்டும். நாம் என்ன செய்தாலும் என்ன பலன்கள் கிடைக்கின்றன, நாம் விஷயங்களை எவ்வளவு அழகாகப் பேசுகிருேம் என்பதோ அல்லது மக்கள் எவ்வளவு உணர்ச்சிகரமாக இருக்கிருர்கள் என்பதோ பெரிதல்ல. நாம் எதற்காகச் செயல்படுகிருேமோ அதை நாம் அடைய வேண்டும்.

[இருபது அம்சத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துப் பரிசீலிப்பதற்காக 18-1-1977 அன்று கூடிய முதலமைச்சர்களின் மாநாட்டில் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்]

## வறட்சித் துயர்துடைத்திட வகுத்த திட்டங்களும் சாதனைகளும் !

தமிழ்நாட்டின் 13 மாவட்டங்களைச் சார்ந்த 4,725 கிராமங்களில் உள்ள ஒரு கோடி மக்கள் பலன் பெறும் வகையில், 1976-ஆம் ஆண்டில் வறட்சித் துயர்துடைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

* திட்டத்தின் செலவுத் தொகை : ரூ. 27 கோடி.

* ரூ. 12 கோடி செலவுத் தொகையில், 10,000 சிறிய கிராமங்கள் பலன் பெறும் வகையில் குடிநீர் விநியோகத் திட்டங்கள்.

* ரூ. 15 கோடி செலவுத் தொகையில் ஒரு கோடியே 50 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1976 செப்டம்பர் மாதத்தில், நாள் ஒன்றுக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

### குடிநீர் விநியோகத் திட்டங்கள்

* 6,711 குழாய்க் கிணறுகள் 8 மாதங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமானதாகும்.

* 7,671 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.

* 518 குட்டைகள் (ஊருணிகள்) ஆழப்படுத்தப்பட்டன.

* சுமார் 300 கிராமங்கள் பலன் பெறும் வகையில் ரூ 3 கோடி செலவுத் தொகையில் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உப்புநீர்ப் பகுதிகளில் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* குடிநீர் விநியோகத்திற்கென 31 நகரசபைகளுக்கு ரூ. 71 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்புத் திட்டம்

* வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் 6 பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனப் பணிகளுக்கென ரூ. 3 கோடி.

* 2,992 சிறு பாசனப் பணிகளுக்கென ரூ 8.12 கோடி.

* 1,442 சாலைப்பணிகளுக்கென ரூ. 2.32 கோடி.

* 31,606 எக்டேரில் சம உயர வரப்பு அமைப்பதற்கும், 244 குட்டைகள் (ஊருணிகள்) உருவாக்கவும் ரூ. 1.35 கோடி.

* 6,355 எக்டேரில் காடு வளர்ப்பதற்கு ரூ. 41 இலட்சம்.

### சிறப்புத் திட்டங்கள்

* இராமநாதபுரம் (ராஜபாளையம்) மற்றும் திருநெல்வேலி (சிவகிரி) ஆகிய மாவட்டங்களில் பலத்த காற்றால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்படுத்துவதற்கு ரூ. 35 இலட்சம் செலவில் ஒரு திட்டம்.

* பனைமரக் கள் இறக்குவோர்களுக்கு ரூ. 33 இலட்சம் செலவுத் தொகையில் மறுவாழ்வுத் திட்டம். மற்றும் 4 இலட்சம் பனைமரக் கன்றுகள் நடும் திட்டம்.



# ஏழை எளியவர்களுக்குப் புதிய திட்டங்கள்!

—ஓம் மேத்தா,

மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர்



நமது சுதந்திரப் போராட்டத்தினால் ஏற்பட்ட பாரம்பரியமான ஒரு கடமை இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏழைகளின் வாழ்க்கை நிலையைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டும் என்பது அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ள கடமை. ஏனெனில் ஏழை எளியவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய முன்னேற்றத்துக்காகவே நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி, அவர்கள் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார்.

நம் நாட்டில் ஏழைகள் என்பவர்கள் யார்? அரிசனங்களும் பழங்குடியினரும், பிற்பட்ட வகுப்பினரும் தான்! அரிசனங்களும், பழங்குடியினரும் முறையே மக்கள் தொகையில் 8 கோடியினரும், 3.8 கோடியினரும் ஆவர். இவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 22.5 சதவிகிதத்தினர். இவர்கள் தலைமுறை தலைமுறையாக சொல்லி முடியாத இன்னல்களுக்கு ஆளாகி வந்திருக்கிறார்கள்! இவர்களுடைய ஏழ்மை நிலையை மாற்றவும், சமுதாயத்தில் இவர்களுக்கு உள்ள இழிநிலையைப் போக்கவும், அரசியலில் இவர்களுக்குச் செல்வாக்கு ஏற்படவும் அரசாங்கங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரின் முன்னேற்றத்தை வலியுறுத்துகிறது. அவர்களுக்கு அடிப்படையான பல பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ''நாடாளுமன்றத்திலும், மாநில சட்டசபைகளிலும் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். பீஹார், மத்தியப் பிரதேஷ், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பழங்குடியினர் நலத்துக்காக இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். கோயில்கள் இவர்களுக்குத் திறந்து விடப்பட வேண்டும். பள்ளிக்கூடங்கள் முதலியவற்றில் இவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். இவர்களுக்கு ஏற்படும் குறைகளை ஆராய ஆணையர் என்ற தலைமை அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். இவருடைய அறிக்கைகள் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இவை எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் பாதுகாப்புகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கருதப்படும் கோட்பாடுகள் 46-வது பிரிவில் சொல்லப்பட்டு, அரசாங்கத்திற்கு வழிகாட்டும் கொள்கைகளாக இருந்து வருகின்றன.



அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோருக்குப் பொதுவான பிரச்னைகள் இருந்தாலும் அவர்களுக்குள் வேறுபாடும் உண்டு. அரிசனங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் பரவலாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சமூக - பொருளாதார - கலாச்சார உறவுகள் மிகவும் குறைவு. அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் மோதல்களும்இருந்திருக்கின்றன. தீண்டாமை என்னும் கொடுமையாலும் அவர்கள் துன்பப்படுகிறார்கள்.

பழங்குடிப் பிரிவு மக்கள் தனித்து வாழ்ந்து வருகிறார்கள். பலவிதத்தில் அவர்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களும், காடுகளும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்றன. அளவு கடந்து கடன்பட்டிருப்பதும், நிலத்தை இழந்திருப்பதும், கடன்காரர்களுக்கும், தரகர்களுக்கும் அடிமைப்பட்டிருப்பதும் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் ஆகும்.



ஏழை எளியவர்களுக்கு உதவும் திட்டம்

அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோர் முன்னேற்றத்திற்கான அரசாங்க முயற்சிகளில், சமீப காலத்தில் ஒரு வேகம் காணப்படுகிறது. இந்த வேகத்திற்கு வித்திட்டது 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரதம மந்திரி அறிவித்த 20 அம்சத் திட்டமேயாகும்!

ஓராண்டு முழுவதும் 20 அம்சத் திட்டம் செயல்பட்டது. இந்த ஓராண்டுக் காலத்தில் ஏழை எளியவர்களின் வாழ்க்கைத்தரம் குறிபபிடத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது என்று தங்குதடையின்றிச் சொல்லலாம்.

''இருபது அம்சத் திட்டம் ஏழைகளை மேம்படுத்துவதற்கான முக்கியமான திட்டம்'' என்று வர்ணிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். நிலச்சீர் திருத்தங்கள், விவசாய வேலை பார்ப்பவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம், ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவது, கொத்தடிமை ஒழிப்பு, கிராமியக் கடன் ஒழிப்பு ஆகியவை 20 அம்சத் திட்டத்தில் முக்கியமானவை.

**1976 அக்டோபர் வரை 88,600 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்!**

**ஏழை எளியவர்களுக்கு 71 இலட்சம் வீட்டுமனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன! 3,29,000 வீடுகள் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன!**




### அரிசனங்களின் நலனுக்கு ரூபாய் 71.70 கோடி!

இவர்களுடைய முன்னேற்றத்துக்காக திட்டங்களில் கூடுதலான பணம் செலவிடப்படுகிறது. 4-வது திட்ட காலத்தில் மொத்தம் 5 ஆண்டுகளில் 67.57 கோடி ரூபாய் அரிசனங்களின் நன்மைக்காகச் செலவிடப்பட்டது. ஆனல் 1976-77-ஆம் ஆண்டில் மட்டும் அரிசனங்களின் நலனுக்காக 71.70 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**இதுபோலப் பழங்குடிகளின் முன்னேற்றத் திட்டங்களுக்கு நடப்பு ஆண்டில் மட்டும் 218 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முந்தின ஆண்டில் செலவிட்டதை நோக்க இது இரு மடங்குக்கும் அதிகமாகும்!**



### அரசாங்கம் செய்யும் முயற்சிகள்

அரிசனங்களுக்காக அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் மிகவும் விரிவானவை. அரசியல் மட்டத்தில் நாடாளுமன்றம், மாநில சட்டசபைகள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் அரிசனங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத்துறையில் குறிப்பிடத்தக்கவை:—

நிலச்சீர்திருத்தம், உபரி நிலம் வழங்குதல், சிறுவிவசாயி—மிகச் சிறிய விவசாயிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், குறைந்தபட்ச விவசாயக் கூலி, விவசாய வேலைக்குக் கடனுதவி, வீட்டுமனை வழங்குதல், வீடு கட்டும் மனை வழங்குதல், வீடு கட்டும் செலவில் பெரும் பகுதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்வது முதலியன.



### தீண்டாமை ஒழிப்பில் தீவிரம்!

இவர்களுக்குச் சமுதாயத்தில் நியாயமான இடம் கிடைக்க அரசாங்கம் எவ்வளவோ நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. உதாரணமாகத் தீண்டாமைப் பழக்கத்தை இன்னும் கடைப்பிடிப்பவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க 'குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்' சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கோவில்கள் முதலியனவும், அவற்றைச் சேர்ந்த நிலங்களும் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாக இருந்தாலும் கூட அவையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன சரித்திர, சாஸ்திர, புராண அடிப்படையில் தீண்டாமையை






நேரடியாகவோ, மறைமுகமாகவோ பிரச்சாரம் செய்வதும், தீண்டாமை நியாயமானது என்று சொல்லுவதும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டிருக்கின்றன. சாலைகளைப் பெருக்குவது, பிணங்களை அப்புறப்படுத்துவது, உயிரினங்களை வெட்டுவது போன்ற வேலைகளைச் செய்யும்படி யாரையும் கட்டாயப்படுத்துவது குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இவ்விதக் குற்றங்கள் நிகழும் பகுதியில் வாழும் மக்களுக்குக் கூட்டு அபராதம் விதிக்கவும் மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

தீண்டாமைக் குற்றங்கள் சிறைத் தண்டனைக்கு உரியன என்றும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும், யூனியன் பிரதேசத்திலும் முதிய போலீஸ் அலுவலர் ஒருவரின் பொறுப்பில் தனிப்பிரிவு ஏற்படுத்தி, அரிசனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய புகார்கள் கவனிக்கப்படுகின்றன. அரிசனங்களிடமிருந்து வரும் புகார்களைக் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டுமென்று நாடெங்கும் உள்ள போலீஸ் அலுவலர்களுக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது. **அரிசனங்களின் நலனை, கண்ணை இமை காப்பது போல் நிர்வாக இயந்திரம் பாதுகாத்து வருகிறது!**

### கல்வி வளர்ச்சி

மற்ற துறைகளை விட, கல்வி வளர்ச்சி பெற்றுத்தான் இவர்கள் முன்னேற்றமடைய முடியும். ஆகையால் எல்லாக் கட்டங்களிலும் கல்விவசதி பெற அரசாங்கம் ஆவன செய்கிறது. நாடு முழுவதும் அரிசனங்களுக்கு உயர்நிலைப்பள்ளிப் படிப்பு வரை இலவசமாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுக்கவும், பள்ளிக்கூடச் சம்பளம், தேர்வுக்கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கவும், அவர்களுக்கு உணவு விடுதிகள் கட்டவும், புத்தகங்கள், எழுதுபொருள்களும் வழங்கவும் மாநில அரசாங்கங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு மேலே படிப்பவர்களுக்கு உபகாரச் சம்பளம் உணவு விடுதி, பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கான பொறுப்புக்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.



### உயர்கல்வியே உயர்வுக்கு வழி!

உயர்கல்வி மூலம்தான் சமூக-பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். மத்திய அரசே இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. 1974-75-ல் உபகாரச் சம்பளத் தொகை அதிகரிக்கப்பட்டது. மருத்துவக் கல்வி, பொறியியல்






படிப்பு, விஞ்ஞானத் துறையில் பட்டமேற்படிப்புகள், தொழில் துறை 'டிப்ளமா' படிப்புகள், மேற்படி பட்டப்படிப்புகள் என்று ஒவ்வொரு வகையான படிப்புக்கும்-அந்தந்தப் படிப்பின் தேவைக்குத் தகுந்தபடி - உபகாரச் சம்பளத் தொகை கொடுக்கப்படுகிறது. நடப்பு 5 ஆண்டுத் திட்டத்தில் உபகாரச் சம்பளத் தொகையாக 100 கோடி ரூபாய் செலவிடப்படும். !இது தவிர மாநில அரசாங்கங்கள் தங்கள் பங்காக 77 கோடி ரூபாயை உயர்கல்வி உபகாரச் சம்பளமாக இவர்களுக்குக் கொடுக்கின்றன.. **இந்த ஆண்டில் 4 இலட்சம் பேர் இந்த உதவிதனைப் பெறுகிறார்கள். 25 ஆண்டுகளுக்கு முன் 1950-51—இல் 2,180 பேர்தான் இவ்வகைஉபகாரச்சம்பளம் பெற்றனர். எனவே இந்த வகையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்** ... மடங்காகும்!

அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும் தேசிய வெளிநாட்டு உபகாரச் சம்பளங்களும் கொடுக்கப்படுகின்றன. உயர்கல்வி பெற இந்த இனங்களைச் சேர்ந்த 218 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் மேலும் 28 பேர் செல்வார்கள்.



### வேலைவாய்ப்பில் ஒதுக்கீடும், பயிற்சியும்!

படிப்பு முடிந்ததும் வேலை வேண்டும்! காலியாக இருக்கும் வேலைகளில் அவர்களுக்கு என்று சிலவற்றை ஒதுக்கி வைத்தால் மட்டும் பிரச்சினை தீராது! இந்த சாதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தனிப்பயிற்சி கொடுக்கப்பட்டால்தான், ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள முடியும். ஆகையால் இவர்களுக்கு, தேர்வுக்கு முன்னதாக தனிப்பயிற்சி வகுப்புகளை அரசாங்கம் நடத்துகிறது. 'ஐ. ஏ. எஸ்.', 'ஐ.பி.எஸ் போன்ற பெரிய பதவிகளிலும், கீழ்மட்டத்திலுள்ள பதவிகளிலும் அவர்கள் ஏராளமான பேர் இடம் பெற வேண்டும் என்பதுதான் இந்த ஏற்பாட்டின் நோக்கம், இந்தத் தேர்வுகளுக்குப் போட்டியிடும் அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய மாணவர்கள் தேர்வில் அடையும் மதிப்பெண்களின் அடிப்படையிலேயே இப்போது ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு நியமனம் பெறுகிறார்கள். இவ்வாறு பயிற்சி கொடுக்கும் அகில இந்திய நிலையங்கள் தில்லியிலும், அலகாபாத்திலும், சென்னையிலும், பாட்டியலாவிலும், ஜெய்ப்பூரிலும், ஷில்லாங்கிலும் தொடங்கப்பட்டிருக்கின்றன. மத்திய பிரதேஷ், ஒரிசா மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடியினருக்காக ரெய்ப்பூரில் இன்னும் ஒரு நிலையம் தொடங்கப்பட இருக்கிறது. **இந்த நிலையங்களின் மூலம் பயிற்சி பெற்ற**

அரிசனங்கள், பழங்குடியினர் 450 பேர் 'ஐ. ஏ. எஸ்', 'ஐ.பி. எஸ்' மற்றும் மத்திய ஊழியங்கள் ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்,

இதுபோல மாநில அரசுப்பணிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மாநில அரசாங்கங்கள், 11 பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றில் வேலை பெற விரும்புபவர்களுக்கும் பயிற்சி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இணைக்கப்பட்ட பொறியியல் வேலைகளைப் பெற விரும்புவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிலையங்கள் ஹைதராபாத்திலும், திருச்சியிலும் தொடங்கபபட்டிருக்கின்றன.

பொதுத்துறையில் உள்ள எல்லா நிறுவனங்களும் வேலைகளில் குறிப்பிட்ட பங்கை இவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று சமீபத்தில் மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. தனியார் துறையில் இயங்கும் நிறுவனங்களிலும் இத்தகைய ஒதுக்கீட்டைக் கட்டாயப்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம்.

உயர்பதவிகளின் மூலமாக மட்டும் இந்த இனங்களைச்சேர்ந்த இளைஞர்களுக்குத் தேவையான வேலைகளைக் கொடுத்துவிட முடியாது. மூன்றும்நிலை வேலைகளைப் பெறவும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். இதற்காக சென்னை, ஜபல்பூர், கான்பூர், தில்லி ஆகிய நகரங்களில் பயிற்சி மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நேர்முகப் பேட்டிகளில் தைரியமாகப்பதில் சொல்லவும், மூன்றும் நிலைப்பதவிகளில் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்ற தைரியத்தை உண்டாக்கவும் இந்த நிலையங்களில் அரிசனங்கள், பழங்குடியினர் ஆகிய இனங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு உதவி செய்யப்படுகின்றது.

## தொழில் தொடங்க உதவி !

இந்த இனங்களைச் சேர்ந்த இளைஞர்கள் தாங்களாகவே தொழில் தொடங்கினால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய 11 மாநிலங்களில் தனி வாரியங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடை வைக்கவும், வியாபாரம் செய்யவும், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் ஆரம்பிக்கவும் இவை கடன் கொடுக்கின்றன. இந்த இனங்களைச் சேர்ந்த இளம் தொழில் முனைவர்களுக்கு இந்த வாரியங்கள் தக்க உதவி செய்வதற்கு வழிகாட்டும் குறிப்புக்களை மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அனுப்பியிருக்கிறது.



## வீடுகட்டிக் கொள்ள உதவி!

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் தனி வாரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. வீடு கட்டுவதற்கு மானியமாக ரூ. 1,200 கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பனி பெய்யும் மலைப் பகுதிகளில் ரூ. 3,000 கொடுக்கப்படுகிறது. ஐந்தாவது திட்டத்தில் அரிசனங்களின் வீட்டு வசதிக்காக 53.82 கோடி ரூபாய் செலவிடப்படும்.

## பழங்குடியினர் மேம்பாடு !

மாநில அரசுகள், தங்கள் வரவு செலவுத் திட்டங்களில் ஒரு பகுதியை அரிசனங்கள், மற்றும் பழங்குடியினர் ஆகியோர் மேம்பாட்டுக்கான திட்டங்களுக்காக ஒதுக்கி வருவது மிகவும் குறிப்பிடத் தகுந்த நிர்வாக முறை மாறுதல் ஆகும். ஆந்திரப் பிரதேச அரசு வரவு செலவுத் திட்டத்தொகையில் 15 சதவிகிதத்தை இவ்வாறு ஒதுக்கியிருக்கிறது. பீகார், அரியானா மாநிலங்கள் இந்தத் தலைப்பில் எவ்வளவு பணம் ஒதுக்கலாம் என்பதை முடிவு செய்ய குழுக்களை அமைத்துள்ளன. கர்நாடகத்தில் விவசாயம், கால்நடை, மீன், தொழில்துறைகளில் இந்த இனங்களுக்கு தனியே ஒதுக்கீடுகள்செய்யப்பட்டிருக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் சில திட்டங்களில் 20 சதம் அரிசனங்களுக்காகஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில், இது குறித்த பல திட்டங்கள் செயல்பட இருக்கின்றன.

மாநில அரசுகள் அமல்படுத்தும் சிறப்பான இந்தத் திட்டங்கள், பொதுவான பழைய திட்டங்களுக்கும், இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் பக்கபலமாக இருந்து, இந்த இனத்தவரின் முன்னேற்றத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பழங்குடியினரின் நலனுக்கான திட்டங்களைப் பார்ப்போம்.







1976-ஆம் ஆண்டில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. குறைந்த காலத்தில் பயனுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. குறித்த கால அளவுக்குள் கண்டிப்பாகத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்ருக்கிறது. பழங்குடி மக்கள் பெரிய அளவில் வாழ்கிற மாநிலங்களின் முதல் அமைச்சர்களை அழைத்து, இரண்டு முறை மாநாடுகள் கூட்டி, கலந்து பேசியிருக்கிறோம். புதிதாகக் கையாளப்படும் முறை இரண்டு கட்டமாகச் செயல்படுத்தப்படும்.

## கேடுகள் களையப்படும்!

முதல் கட்டத்தில் பழங்குடியினருக்குக் கேடு ஏற்பட்ட காரணங்கள் அகற்றப்படும். அவர்களுக்கு கள், சாராயம் முதலியவற்றை விற்று அவர்களைகொள்ளையடித்து வருவதைச் சிலர் தொழிலாகக்கொண்டிருந்தார்கள். இது தடுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியினருக்குத் தங்கள் சொந்த உபயோகத்துக்குத் தேவையான கள் உற்பத்தி செய்வதையோ, சாராயம் காய்ச்சுவதையோ அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அரசாங்கமே இலாப-நட்டமில்லாமல் இந்த வியாபாரத்தைச் செய்யும். இவர்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படுவதும் தடுக்கப்படும். 30 ஆண்டுகள் வரையில் நிலங்கள் கைமாறிய விதம் சரிபார்க்கப்பட்டு அநியாயமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மீண்டும் பழங்குடியினருக்கு வழங்கப்படும். மற்றொரு கொடுமை, காடுகளில் ஒப்பந்தக்காரர்களால் இழைக்கப்பட்டிருக்கிறது. பழங்குடியினர் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு வெட்டி சேர்த்த குச்சிகளையும், மரத்துண்டுகளையும் ஒப்பந்தக்காரர்கள் அவர்களைப் பயமுறுத்தி மிகச் சொற்ப விலை மட்டும் கொடுத்து கொள்ளையடிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின்படி பழங்குடியினரிடமிருந்து இந்தப் பொருள்களை நியாயமான விலைக்கு அரசாங்க அதிகாரிகள் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இடைத்தரகர்கள், நிலத்தைப் பறிப்பவர்கள், ஒப்பந்தக்காரர்கள், லேவாதேவிக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விடுதலை பெற்று, பழங்குடி மக்கள் விரைந்து முன்னேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## பொருளாதார முன்னேற்றம் அடைய ஊக்குவிப்போம்!

அடுத்த கட்டமாகப் பொருளாதார முன்னேற்றம் அடைய அவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் அவர்கள் அப்பாவிகள்! எனவே, கடன் கிடைத்தால்தான், தங்களுக்குத் தேவையான பொருள்களை அவர்களால் வாங்கிக் கொள்ள முடியும். அதற்காகப் பெரிய அளவில் பலநோக்குச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றின் மூலம் அவர்களுக்குத்தேவையான உணவு, உடை, மற்ற பொருள்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இத்தகைய சங்கங்கள் ஏற்படுவதற்கு காலக்கெடு குறிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதிகளிலாவது மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினர் 50 சதம் இருந்தால் இந்தப் பகுதிக்கு ஒரு துணைத் திட்டம் வகுக்க வேண்டுமென்று மாநில அரசாங்கங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இந்தத் துணைத் திட்டங்கள் பழங்குடியினருக்கு எல்லா வகையான உதவிகளும், நன்மை





களும் புரியக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த வகையில் 5-ம் திட்ட காலத்தில் மத்திய அரசின் உதவி 200 கோடி ரூபாயாக இருக்கும்.

**துணைத் திட்டப் பகுதிகள்:**

துணைத் திட்டப் பகுதிகள், நாட்டில் வாழும் பழங்குடியினரில் 70 சதப்பேர்களுக்குப் பயன்படும். 18 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் துணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு துணைத் திட்டத்திலும் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்கள் அடங்கியுள்ளன. இத்தகைய 104 திட்டங்கள் தயாரித்து முடிந்து, செயல்படுத்தப்பட இருக்கின்றன. மேலும் பல திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

மேற்கண்ட மாறுதல்களால் 1975-76-ல் 110 கோடி ரூபாயாக இருந்த திட்டச்செலவு இப்போது ரூபாய் 218 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் இதற்கு மேலும் 40 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டில் இன்னும் கூடுதலாக 55 கோடி ரூபாயும் தேவைப்படும்.

துணைத்திட்டம் அமல் செய்யப்படும் பகுதிகளை அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையின்கீழ், அட்டவணைப் பிரதேசமாக அறிவிக்கலாமா என்பது பற்றி அரசாங்கம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

கடந்த ஓரிரு ஆண்டுகளில் பழங்குடியினர் மிகப்பெரிய அளவில் முன்னேறியிருக்கிறார்கள். பிரதம மந்திரியின் அக்கறையும், 20 அம்சத் திட்டத்தின் செயல்முறையுமே இதற்குக் காரணமாகும்.







**வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனை!**

நம்நாட்டில் உள்ள ஏழை மக்களை முன்னேற்ற வேண்டுமென்று எவ்வளவோ காலமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். சுதந்திரத்துக்குப் பிறகு இதற்காகப் பல முயற்சிகளையும் செய்திருக்கிறோம். ஆனால் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற உறுதியான முன்னேற்றம் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதைப்பற்றி இந்த நாட்டின் நிர்வாகம் பெருமைப்படலாம். உலகத்திலேயே வேறு எந்த அரசாங்கத்தாலும் இவ்வளவு குறுகிய காலத்தில், ஏராளமான பேருக்கு இவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டதில்லை. கோடிக்கணக்கான மக்களிடம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வரும் ஏழ்மை என்னும் தீராத பிரச்சினையைத் துணிந்து தீர்க்க இந்தியா முயன்று வெற்றி காணத் தொடங்கியிருக்கிறது என்று நாம் தைரியமாகச் சொல்லாம்.

நன்றி :
பத்திரிகைத் தகவல்
அலுவலகம்,
சென்னை.



## தனுஷ்கோடிக்கு மீண்டும் ரயில்!

பாம்பன்பாலம், 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட புயலில் சேதம் அடைந்ததைத் தொடர்ந்து, தனுஷ்கோடிக்கும், பாம்பனுக்கும் இடையே ரயில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு இருந்தது. 15 மைல் தொலைவுள்ள இந்த ரெயில் பாதையைச் சீர்படுத்தி மீண்டும் ரயில் போக்குவரத்தை ஏற்படுத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது. இந்த தகவலை மதுரைக்கு வந்து இருந்த மத்திய ரயில்வே அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள் தெரிவித்தார்.

"ராமேசுவரத்துக்கு இந்தியா முழுவதிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் செல்கிறார்கள். தனுஷ்கோடி - பாம்பனுக்கும் இடையே ரயில் போக்குவரத்து இல்லாததால் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைப் பல்வேறு அமைப்புகள் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து, ரயில் பாதையைப் புதுப்பிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வேலை இந்த ஆண்டு (1977-78) மேற்கொள்ளப்படும்" என்று அவர் கூறினார்.
















## இந்தியாவில் கல்வி வளர்ச்சி!

நமது நாட்டின் சமூகப் பொருளாதார—
கலாச்சார மேம்பாட்டிற்கு முக்கியத் தடையாக
இருப்பது கல்லாமையே! எனவே, கல்லாமையை
அடியோடு களைவதற்கு, சுதந்திரம் பெற்ற
இந்திய அரசாங்கம் முதல் முன்னுரிமை வழங்கி
யுள்ளது.

இந்தியாவில் கல்வி அறிவூட்டும் திட்
டங்கள் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்
ளன. 1947-ஆம் ஆண்டில் 14 சதவிகித
மாக இருந்த கல்வி அறிவு பெற்றவர்கள்
விகிதம், தற்போது 33.85 சதவீதமாக இருப்ப
தாகக் கடைசியாக வெளியிடப்பட்ட தகவல்
மூலம் தெரிய வந்துள்ளது. 4 வயது வரை
உள்ள குழந்தைகள் இந்த எண்ணிக்கையில்
இடம் பெற மாட்டார்கள். இந்தக் காலத்தில்
5 கோடியே 33 இலட்சமாக இருந்த கல்வி
அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை, 15
கோடியே 81 இலட்சமாக உயர்ந்துள்ளது.

நாட்டில் கல்வியறிவு இல்லாமையைக்
களையும் வகையில் தேசிய சேவைத்
திட்டம், விவசாயிகள் தேசிய கல்வியறிவுத்
திட்டம், 15 வயது முதல் 25 வயதிலான பிரிவி
னருக்கு முறைசாரா கல்வித் திட்டம், முதிய
பெண்களுக்கான கல்வியறிவுத் திட்டம் ஆகிய
பல்வேறு திட்டங்களைக் கடந்த சில ஆண்டு
களாக அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு மாணவரும் 5 பேருக்கு கல்வி
யறிவு ஊட்டவேண்டும் என்ற தேசிய சேவைத்
திட்டத்தில், 2 இலட்சத்து 78 ஆயிரம் மாண
வர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளுக்கான கல்வி அறிவூட்டும்
திட்டத்தின்கீழ் 5 இலட்சம் விவசாயிகள் கல்வி
அறிவூட்டப்பட்டுள்ளனர்!

முறைசாரா கல்வித்திட்டத்தின்கீழ் 2
இலட்சத்து 59 ஆயிரம் முதியோர்கள் கல்வி
கற்று வருகிறார்கள்!

முதிய பெண்களுக்கான கல்வி அறிவுத்
திட்டத்தின்கீழ் 30 ஆயிரத்து 500 பெண்கள்
... பெற்று வருகின்றனர்!

## கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.






# வெற்றிக் கொடி பெற்றவர்களுக்கு வாழ்த்து!

## —ஆளுநர் உரை

"இந்த நல்ல விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு உண்மையிலே நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியா முழுதும் உள்ள 16 என். சி. சி. இயக்குநர் அகங்கள் பங்கெடுத்து டில்லியில் நடைபெற்ற போட்டியில், தமிழ்நாடு—பாண்டிச்சேரி என். சி. சி. அணியினர் வெற்றி பெற்று "வெற்றிக் கொடியை" அடைந்துள்ளதற்கு எனது மனப்பூர்வமான பாராட்டுதல்களை வழங்குகிறேன். அதிலும், இந்தப் பரிசு—வெற்றிக் கொடி நமது பெருமதிப்பிற்குரிய பிரதமர் அவர்களின் கரங்களினால் பெறப்பட்ட நிகழ்ச்சி, பரிசின் மதிப்பையே மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளது.

"தற்சமயம் தமிழ்நாடு-பாண்டிச்சேரி மண்டலத்தில் 19040 பேர், முதுநிலை என். சி.சி. அணியிலும், 70 ஆயிரம் பேர் இளநிலை என். சி. சி. அணியிலும் அங்கம் வகிக்கின்றனர் என்பதிலிருந்தே, இந்த என். சி. சி. அணியின் பெருமை தெளிவாகத் தெரிகிறது. உண்மையில் என். சி. சி. அணியினரை, நாட்டுப் பாதுகாப்புப் படையின் இரண்டாம் வரிசையாக நாம் கருதுகிறோம் என்பதை உங்களுக்கு நினைவுறுத்தத் தேவையில்லை என நினைக்கிறேன்.

"ஒழுங்குமுறையும், பயிற்சி முறையும் பெற்ற இந்த மனித சக்திப் படையை, நாட்டின் உறுதுணைக்காக நாம் அமைத்திருக்கிறோம். அதே நேரத்தில்-மாணவர்கள் தலைமைப் பொறுப்புகளுக்கு தங்களைத் தகுந்தவர்களாக ஆக்கிக் கொள்வதற்கும், நற்குணங்கள் உருவாக்கிக் கொள்வதற்கும், தோழமை உணர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும்—போட்டி விளையாட்டுகளில் பேராற்றல் பெற்றுக் கொள்வதற்கும்—சேவை செய்யும் மனப்பான்மையை அடைந்து கொள்வதற்கும் உரிய பயிற்சியை இந்தப் படையின் அமைப்பு ஏற்படுத்தித் தருகிறது. என். சி. சி. படையினராகிய நீங்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாவன:

"புன்னகையுடன் பணிந்து நட; காலம் தவறாதே! குழப்பமின்றியும் கடினமாகவும் உழை! பொய் சொல்லாதே! மன்னிப்பு கேட்கும் சூழ்நிலைக்கு வராதே!

"டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின என். சி. சி. முகாமிலும் பிரதமரின் ஊர்வலத்திலும் அனைத்து இயக்குநர் அகங்கள் கலந்து கொண்ட போட்டியில் நமது தமிழ்நாடு—பாண்டிச்சேரி அணி வெற்றிக் கொடியைப்



என். சி. சியைச் சேர்ந்த வீராங்கனைக்கு ஆளுநர் பரிசளித்தல்

பெற்றிருப்பதற்கு நாம் மிகவும் பெருமைப் படுகின்றோம். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இது, நாம் ஏழாவது முறையாகப்பெற்ற வெற்றியாகும்.

"சாலை அமைப்பதிலும், மரம்-செடி நடுவதிலும், குளங்களைச் சுத்தப்படுத்துவதிலும், இரத்ததானம் செய்வது, பண்டையப் பொருள்களைப் பாதுகாப்பது-சுத்தம் செய்வது, கிராமத்து மக்களுக்குக் கல்வியறிவு, சுகாதாரம், நல்வாழ்வு ஆகியவற்றை போதிப்பது போன்ற சமூகநலப் பணிகளில் என். சி. சி. அணியைச் சேர்ந்த படை வீரர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை நானே நேரடியாகப் பார்த்திருக்கிறேன். முக்கியமாக அண்மையில் சென்னையில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது, மிகவும் ஒத்துழைப்புடன் மீட்புப் பணியில் ஈடுபட்ட—என். சி. சி. வீரர்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுடைய தன்னலமற்ற மீட்புப் பணி, அநேக உயிர்களைக் காப்பாற்றும் வாய்ப்பை உங்களுக்கு வழங்கியது. எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் வந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்காக கிண்டியிலும், அண்ணாநகரிலும் மீட்பு மையங்களை அமைத்திருக்கின்றீர்கள் என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

"நாடெங்கிலுமுள்ள வீரர்களை—மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள வீரர்களை-முகாம்களில் ஒருங்கிணைத்து வருவதன் மூலம், தேசிய ஒற்றுமைக்கு மாபெரும் பணியை ஆற்றி வருகிறது என். சி. சி. படை. இது கடமையுணர்வையும், பொறுப்பு உணர்வையும், விடா முயற்சியையும் இளைய சமுதாயத்தினரிடையே ஏற்படுத்துகிறது. உங்களது தேசியப்பற்று மிக்க பணிகளாலும்-தன்னிகரற்ற தொண்டுகளினாலும், நாட்டை வலுவானதாக்க முடியும் என நான் நம்புகிறேன்.

"உங்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

[3-2-'77 அன்று தமிழ்நாடு-பாண்டிச்சேரி என். சி. சி. அணியினருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.]

### சரஸ்வதி மகால் தேசிய நூலகமாகும்!

தஞ்சையிலுள்ள புகழ் பெற்ற சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை ஒரு தேசிய நூல் நிலையமாக உயர்த்த,தமிழ்நாடு அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் மத்திய அரசு உதவி கொண்டு, மேற்கண்ட நூல் நிலையத்தின் கட்டடம் கட்டப்படும்.



# தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் தன்னிகரற்ற பணிகள்

வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் மிக நல்ல முறையில் வெற்றிகரமாகப் பணி ஆற்றி வருகிறது. 1975-76 நிதி ஆண்டில், அதனுடைய நிதிமுறைகள் வருமாறு:

| | ரூபாய் (இலட்சம்) |
|---|---|
| மொத்தப் பணத் தொகை | 1,318.03 |
| செலவுத் தொகை (தேய்மானம் மற்றும் வட்டி ஆகியவை மதிப்பிடப்படுவதற்கு முன்) | 1,207.87 |
| கழிவு நீக்காத இலாபம் | 110.16 |
| வட்டி | 33.74 |
| வட்டிக்குப் பின்னர் இலாபம் | 76.42 |
| தேய்மானம் | 51.67 |
| நிகர இலாபம | 24.75 |

1975-76 நிதியாண்டில், பால் வளர்ச்சிக் கழகம் பால் கொள்முதல் வகையில், தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில் உள்ள 5,090 கிராமங்களின் 2,42,293 விவசாயிகளுக்கு ரூ. 673.50 இலட்சம் வழங்கியுள்ளது. 31-12-76 வரை 1,532 கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பால் கொள்முதல் செய்யப்பட்டது. இவற்றில் 1,028 சங்கங்கள் குஜராத் பாணியில்-இயங்குகின்ற (அதாவது பாலில் உள்ள கொழுப்புச் சத்துக்கு ஏற்ப விலையைப் பெறுகின்ற) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். இதில், பால், கிராமத்து நிலையிலேயே சோதனை செய்யப்பட்டு விடுகிறது. பால் 24 நிலையங்களில் குளிர்பதனப்படுத்தப்பட்டு, ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள கிராமப்புற பால்பண்ணைகளில் சூடாக்கி துப்புரவு செய்யப்பட்டு, இறுதியாக, சென்னை மதுரை ஆகிய இடங்களில் உள்ள பெரிய பால் பண்ணைகளால் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சென்னை நகரில், 543 விற்பனை மையங்களின் மூலமாக நாள்தோறும் ஏறக்குறைய 2 இலட்சம் லிட்டர் பால் சில்லறையாக விற்பனை செய்யப்படுகிறது. பகல் முழுதும் விற்பனை செய்யப் பெறும் பால்கடைகள் 90-ம் இவற்றில் அடங்கும். பால்வள நிறுவனம் மதுரையில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் விற்பனையை ஏற்படுத்தியுள்ளது. விற்பனை செய்யப்பட்டது போக, உபரியாக உள்ள பால் அனைத்தையும், வெண்ணெய்யாகவும், பால் பவுடராகவும் மாற்றுகிறது. மதுரைப் பால்பண்ணையில் 80 ஆயிரம் லிட்டர் பாலை, பவுடராக்கும் ஆற்றல் பெற்ற இயந்திரம் உள்ளது. 1976 டிசம்பர் மாதத்திலிருந்து இந்த இயந்திரம் தன் முழு ஆற்றலுடன் பணியைச் செய்து வருகிறது.



நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில்
பால் விற்பனை நிலையத் தொடக்க விழா

1975-ஆம் ஆண்டிற்கும் 1976-ஆம் ஆண்டிற்கும் இடையேயுள்ள வளர்ச்சி பின்வருமாறு:

| | 1975 | 1976 |
|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | 786 | 1,532 |
| கிராமங்களின் எண்ணிக்கை | 3,145 | 5,090 |
| பால்வழங்கும் விவசாயிகள் | 1,83,552 | 2,42,293 |
| திரட்டப்பட்ட பாலின் அளவு | 341.03 (இலட்சம் லிட்டர்) | 512.78 (இலட்சம் லிட்டர்) |
| விற்பனை செய்யப் பெற்ற வெண்ணெய் மற்றும் நெய் | 231 (இலட்சம் கிலோ) | 6.11 (இலட்சம் கிலோ) |

சென்னை நகருக்கு 1977-ஆம் ஆண்டுக்குரிய திட்டங்கள்

நடப்பு நிதியாண்டில் சென்னையில் தற்போது நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டராக இருந்து வரும் பால் விற்பனையை 2.50 இலட்சம் லிட்டராகப் பெருக்குவதற்குத் திட்டமிட்டு வருகிறது. இதற்காக 50 புதிய பால் விற்பனை நிலையங்களும், 20 புதிய பால் விற்பனைக் கடைகளும் நிறுவப்பட இருக்கின்றன.

பால் கொள்முதல் விலையில் உயர்வுகள் ஏற்பட்டிருந்த போதிலும், கடந்த 2 ஆண்டுகளாக விற்பனை செய்யப்படும் பாலின் விலையில் எந்தவித உயர்வையும் ஏற்படுத்தாமல், ஒரே விலையில் விற்பனை செய்து வருகிறது பால்வள நிறுவனம். தரப்படுத்தப்பட்ட பாலின் விலை லிட்டர் ரூ. 2, வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலின் விலை லிட்டர் ரூ. 1.60, சுவையூட்டப்பட்ட பால் பாட்டல் 0.60 காசு, வெண்ணெய் கிலோ ரூ. 16, நெய் கிலோ ரூ. 20 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை நகர மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பாலிதின் பைகளில் பால் நிரப்பும் இயந்திரங்கள் இரண்டு பிரான்சு நாட்டிலிருந்து விமானம் மூலம் வரவழைக்கப்பட்டுள்ளன.

தற்போது, நகரத்தில் பெரும்பான்மையாக விரும்பப்படும் இனிப்புத் தயிர் (யோகர்ட்) விற்பனை நடப்பு ஆண்டில் இருமடங்காக அதிகரிக்கும். மார்ச் திங்கள் முதல், இந்நிறுவனம் தயிர் விற்பனையையும் துவக்க இருக்கிறது. ஏற்கெனவே உள்ள 4 தானாக இயங்கும் பால் விற்பனை இயந்திரங்கள் தவிர, மேலும் நான்கு தானாக இயங்கும் பால் விற்பனை இயந்திரங்கள் 1977 ஏப்ரல் மாதத்திற்குள் நிறுவப்படும். இதேபோன்று மேலும் 17 இயந்திரங்கள் இவ்வாண்டு மத்தியில் நிறுவப்பட உள்ளன.

அம்பத்தூர் பால்பண்ணை, சென்னை அறுவை மருத்துவக் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் நடமாடும் வண்டி மூலமாக, பால் விற்பனை முறையை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்குரிய ஆய்வுமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொடைக்கானல் பால் வளச் சங்கத்தினால் தயாரிக்கப்படும் உப்பிடப்பட்ட பாலடைக்கட்டிகளை, சென்னை நகரில், 6 பால் விற்பனைக் கூட கடைகளின் மூலமாக, பால்வள நிறுவனம், விற்பனை செய்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் நகரில் இதன் விற்பனையை இருமடங்காக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் பண்ணையில் மாடுகளின் தோற்றம்





பட்டதாரி ஒருவரால் நடத்தப்படும் பால் பண்ணை

அடையாறு பாலச்சாலை, கிண்டிச் சாலை, எலியட்ஸ் கடற்கரைச்சாலை ஆகிய மூன்று தெருக்களும் சந்திக்கும் முச்சந்திப்பில், பூங்கா விற்பனைக் கடை (Garden Milk Bar) உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் மாதம் 15-ஆம் தேதிக்குள் இது துவக்கப்படலாம். தமக்குக் கிடைத்து வரும் ஓய்வு நேரத்தை தமது குடும்பத்தினருடன் உல்லாசமாகப் போக்க விரும்பும் பொது மக்களுக்குப் பயன்தரும் வகையில் இந்தத் திட்டத்தை ஆய்வு முறையில் துவக்குகிறது பால்வள நிறுவனம். இந்தப் பூங்காப் பால் விற்பனைக் கடையில், பொது மக்கள் உல்லாசமாகப் பொழுது போக்குவதுடன், பால்வள நிறுவனத்தால் தயாரிக்கப் பெறும் எல்லா வகை உண்பொருள்களையும் அதே சமயத்தில் அதே இடத்தில் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது.

இந்நிறுவனம், முதன் முறையாக, பால் சம்பந்தப்பட்ட சமையற்கலைப் போட்டி ஒன்றை, தாய்மார்களுக்கு, பிப்ரவரி 20-ஆம் தேதியன்று நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பால் கூடாரத்தில்...

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் ஏற்கெனவே நெடுஞ்சாலைகளில் பால் விற்பனைக் கடைகளைப் பால்வள நிறுவனம் உருவாக்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இன்னும் சில நெடுஞ்சாலைகளில் பால் விற்பனைக் கடைகளைத் திறக்க முடிவு செய்துள்ளது. அவைகளில் ஒன்று, கிராண்ட் ட்ரங் சாலையில் மதுராந்தகத்தின் அருகே உள்ள அச்சிறுப்பாக்கத்தில் அமைக்கப்பட உள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அச்சிறுப்பாக்கத்திலும், தர்மபுரி நகரத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள தேனியிலும், ஒவ்வொன்றும் 10 ஆயிரம் லிட்டர் பாலை குளிர்பதனப்படுத்தும் ஆற்றலும் 20 ஆயிரம் லிட்டருக்கு அபிவிருத்தியாகும் வகையிலும் உள்ள குளிர்பதனப்படுத்தும் இயந்திரங்கள் 3 நிறுவப்பட்டு வருகின்றன. இந்த 3 இயந்திரங்களும் இன்னும் ஒரு மாதத்திற்குள் ... உள்ளன. இந்த விரிவாக்கம் எல் ...

ஆதாரங்களினால்தான் செய்யப்படுகின்றன. அம்பத்தூர் பால்பண்ணையை அமைப்பதற்கும் மதுரையில் பால்பவுடர் இயந்திரத்தை அமைப்பதற்கும் தவிர, வேறு எந்தப்பணிக்கும் எந்தவிதக் கடனையும் பால்வள நிறுவனம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

புதிய பால் பண்ணைகள்

ஈரோட்டில் புதிதாக துணை பால் பண்ணை ஒன்றை-ரூபாய் 231.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு, பால்வள நிறுவனத்தின் நிர்வாகக்குழு அனுமதியளித்துள்ளது. இது ஈரோடு பால் உற்பத்தியாளர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது. 32 இலட்சம் ரூபாய் செலவில் இரு குளிரூட்டும் நிலையங்களையும், 70 இலட்ச ரூபாய் செலவில் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையத்தையும் ஈரோடு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் அமைக்க, பால்வள நிறுவனம் அனுமதியளித்துள்ளது.

சேலத்திலும் ஜோலார்பேட்டையிலும் புதிய பண்ணைகளை அமைப்பதற்குப் பால்வள நிறுவனம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. ஆய்வுகள் நடைபெறுகின்றன. இது பற்றி ஒரு மாத காலத்தில் முடிவெடுக்கப்படும். இந்த இரு பால் பண்ணைகளும், பாலை பவுடராகவும், வெண்ணெய்யாகவும் மாற்றும் பணிகளை நிறைவேற்றும்.

புதிய பாலடைக்கட்டித் தொழிற்கூடம்

மேற்குத் தொடர்ச்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொடைக்கானலில், ரூபாய் 12.50 இலட்சம் செலவில் நவீன முறையில் பாலடைக் கட்டிகளைத் தயார் செய்யும் இயந்திரங்களை நிறுவுவதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது.

அரிசன நலத் திட்டம்

அரிசன மக்களுக்கு உதவப் புதிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு துவக்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் 15 அரிசன கூட்டுறவுப் பால் சங்கங்களும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 அரிசன கூட்டுறவுப் பால் சங்கங்களும் நிறுவப்படும். இதன் மூலம் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும், 10 மாத காலத்திற்குள், சுமார் 100 உறுப்பினர்கள், கால் நடைகள் வாங்குவதற்காகக் கடன் தொகை பெறுவர். ஒவ்வொருவருக்கும் இரண்டு மாடுகள் வாங்கக் கடனுதவி வழங்கப்படும். இதில் ரூ. 500 மானியமாகத் தரப்படும். இதன் மூலம் பயன் பெறும் உறுப்பினர்கள், கறவைமாடுகளை வாங்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள். இவை தவிர, 4,500 உறுப்பினர்கள் கொண்ட 104 அரிசன கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன.

கன்று வளர்ப்புத் திட்டம்

மத்திய அரசின் உதவியுடன், தமிழ்நாடு அரசால் வலியுறுத்தப்படும் திட்டமான, கன்று வளர்ப்புத் திட்டத்தைப் பால்வள நிறுவனம் நிறைவேற்றி வருகிறது. இந்நிறு



உயர்ந்த ரகக் கன்றுகள்

வனத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ. 455 இலட்சத்தினை மூன்று ஆண்டுகளுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், மூன்று மாதம் முதல் 28 மாதம் வரையில் உள்ள 25 ஆயிரம் கன்றுகள் வளர்க்கப்படும். இத்திட்டத்தின் முக்கியக் கொள்கை-விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை மக்களுக்கும் கலப்பினச் கன்றுகளை கன்று ஈனும் பருவம் எய்தும்வரை முறையாக வளர்ப்பதற்கு உதவி செய்வதே யாகும். இவைகளுக்குத் தேவையான தீவனங்களையும் இந்நிறுவனம் வழங்கும். இத்திட்டம் மதுரை, கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப் பெறும். கலப்பினக் கடேரி கன்று ஒவ்வொன்றுக்கும் 1,600 ரூபாய் விலையுள்ள, 16 குவிண்டால் அளவுள்ள கால்நடைத் தீவனம் 25 மாதங்களுக்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினரால் வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகள் விஷயத்தில் அரசின் மானியத் தொகை 50 சதவீதமாகவும், விவசாயத் தொழிலாளர்கள் விஷயத்தில் மானியம் 62-2/3 சதவீதமாகவும் இருக்கும். தீவனத்தின் மீதி விலை, பாங்கு நிதியினால் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகள் பல, அங்கம் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனடைய உள்ளோர், தேர்ந்தெடுப்பும், கன்றுகள் பதிவு முறையும் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் நடப்பு ஆண்டின் மத்தியில் நல்ல பலனைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப இடுபொருள்கள்

பால் உற்பத்திப்பணியில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பது பால்வள நிறுவனத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும். இதன்மூலம் உற்பத்தியாளர்களின் வீடுகளுக்குச் சென்று தொழில் நுட்ப இடுபொருள்கள் வழங்குவதன் மூலம் பால்வள நிறுவனத்திற்கு வருமானத்தையும் இந்தத் திட்டம் அளித்திருக்கிறது. ஏறக்குறைய 1,000 கிராமங்கள், தற்சமயம் இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளன. விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று, செயற்கை

மருத்துவரால் வாரம் ஒருமுறை சிகிச்சையளிக்கப்படுதல், 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ள நடமாடும் சிகிச்சை நிலையங்கள், நியாயவிலையில் கால்நடைத் தீவனம் வழங்கும், பருத்திவிதை, வைக்கோல் முதலியன வழங்குதல், ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

### கால்நடைத் தீவன இயந்திரம்

ஒரு மணி நேரத்தில் 4-லிருந்து 5 டன் வரை உற்பத்தி செய்யும் கால்நடைத் தீவன இயந்திரம், இந்நிறுவனத்தால், மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரம், மாதம் ஒன்றிற்கு 2 ஆயிரம் டன் வரை உற்பத்தி செய்கிறது. இதேமாதிரியான இயந்திரத்தை இந்நிறுவனம் சமீபத்தில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து எடுத்துக் கொண்டுள்ளது. 1975-76-ல் வருமானம் ரூ. 41 இலட்ச ரூபாயாக இருந்ததற்கு மாருக 1976-77-ல் வருவாய் 150 இலட்ச ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கால்நடைத் தீவனங்கள் சிலவற்றின் விலைகளில் ஏற்றம் ஏற்பட்ட போதிலும், பால்வள நிறுவனம் அவற்றை கிலோ ஒரு ரூபாய் என்றே தொடர்ந்து விற்பனை செய்து வருகிறது.

### புறநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள்

கொள்முதல் செய்வதிலும் பால் குளிரூட்டும் குறைகளிலும் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் பொருட்படுத்தாமல் சென்னை, மதுரை ஆகிய இடங்களைத் தவிர, வேறு புறநகர்ப்பகுதிகளிலும், தனது வாணிகத்தை மெதுவாக விரிவுபடுத்தி வருகின்றது பால்வள நிறுவனம். பழனி, திண்டுக்கல் உட்பட மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 23 சிறிய புறநகர் மையங்களிலும் பால் விற்பனை செய்யப்படுகின்றது. ஈரோடு, பவானி ஆகிய நகரங்களிலும் பால் வாணிகம் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த வாணிகம் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஏனைய முக்கிய நகரங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட இருக்கிறது. ஆம்பூரிலும் நல்ல முறையில் பால் வாணிகம் ...



உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பால் விற்பனை செய்யக் காத்திருக்கும் உற்பத்தியாளர்கள்

புரம், செங்கற்பட்டையும் சேர்த்து, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள புறநகர் மையங்களில் பால் வாணிகம் செய்வதற்குரிய வாய்ப்பு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல், தஞ்சாவூர், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும்-தனது செயல்முறைகளை விரிவாக்கம் செய்வதற்கு, பால்வள நிறுவனம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் புறநகர் மையங்களில் எல்லாம் பால் விற்பனை உள்ளூர் கூட்டுறவுச் சங்கங்களால்-குறிப்பாக-நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிறது.

### புதிய உற்பத்தியாளர் சங்கங்கள்

ஈரோட்டிலுள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பதிவு செய்யப்பட்டு, தனது பணியைத் துவக்கிய உடனேயே, இதேபோன்ற சங்கங்களை ஏனைய மாவட்டங்களிலும் அமைப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதிய பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பதிவு செய்யப் பெற்று தனது பணியைத் துவக்கியுள்ளது. கோவையில் முன்பே இருந்து வந்த பால் விநியோகச் சங்கம், கோவை நகரில் பால் விற்பனையைச் செய்து வருகிறது. புதிதாகத் துவக்கப் பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர் ஒன்றியம் பால் கொள்முதலையும், பால் குளிரூட்டும் பணிகளையும் கவனித்து வருகிறது. இதைப் போலவே, அயனாவரம் பால் விநியோக சங்கம், முழு பால் உற்பத்தியாளர் சங்கமாக மாற்றப்பட்டு வருகிறது. இது நடப்பு ஆண்டில் ஏப்ரல் முதல் தேதியன்று, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதையும் அடக்கும் எனத் தெரிகிறது. அந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் புதிய உற்பத்தியாளர் ஒன்றியம் ஒன்று அமைக்கப்படுகிறது. இதில் ஏற்கெனவே 118 உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன.

### கால்நடைகள் வாங்குவதற்குக் கடன் வசதி

தமிழ்நாட்டில் கால்நடைகள் வாங்குவதற்குரிய கடன் வகைகள்—தமிழ்நாடு பால்வள நிறுவனம் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கம்-வங்கிகள், மற்றும் விவசாயிகள் ஆகிய மும்முனைப் பிணைப்பின் மூலமாக வழங்கப்படுகின்றன. இந்த மும்முனைப் பிணைப்பு ஏற்பட்டவுடன் பால் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் ஒவ்வொரு சங்கத்தையும் ஆதாரப் படுத்துவார். .பாலைச் சேகரிப்பதும், பால் கணக்கிலுள்ள கடன் தவணைகளைக் கணக்கிடுவதும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அல்லது பால் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகை நடைமுறை கடந்த 3 ஆண்டுகளில் மிக நல்ல விதத்தில் பயன்பட்டுள்ளது. சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் ஆகியோருக்கு முறையே 1975-ல் ரூ. 1.87 கோடியும், 1976-ஆம் ஆண்டில் ரூ. 2.70 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்கு ரூ. 3.51 கோடி கடனாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய தேசியமயமாக்கப்பட்ட எல்லா வங்கிகளும் இந்தத் திட்டத்தில் பங்குபெறுகின்றன. இவை தவிர ஸ்டேட் பாங்க், 'குழு பொறுப்புத் திட்டம்' (Group Guarantee Scheme) என ஒன்றை உருவாக்கி, அதன் மூலம், விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் உதவி அளித்து வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம், கால்நடைகள் வாங்குவதற்கு நாளதுவரை ஏறக்குறைய ரூ. 1.20 கோடி கடனளிக்கப்பட்டிருக்கிறது.

1974 ஆகஸ்ட் முதல் 'குறிக்கோளுடன் கூடிய நிர்வாகம்' (Management by objectives) நவீனமுறைத் திட்டம் ஒன்றை பால்வள நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இது பெரும்பாலும் நடவடிக்கைகளைவிட முடிவுகளையும், உள்ளீடுகளை விட உற்பத்தியையுமே வலியுறுத்துகிறது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் தன்னிடம் உள்ள ஆள், பொருள்கள், பணம் மற்றும் காலம் போன்ற அரிய ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு இந்த வகை நிர்வாகம் உதவியுள்ளது. இந்த நிறுவனத்தின் 160 நிர்வாகிகள், இந்தச் செயல்முறைத் திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவ்வப்போது அவர்களது நிர்வாக முறைகளின் செயல் முறைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

# படமும் செய்தியும்



அண்ணல் காந்தியடிகள் நினைவு நாளையொட்டி, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் 30-1-1977 அன்று நடைபெற்ற சர்வோதய நாள் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் உரையாற்றினார்.



உப்புத் தண்ணீரில் மீன் பண்ணை நடத்துவது பற்றிய அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை இராஜாஜி அரங்கில் 31-1-1977 அன்று நடைபெற்ற இரண்டாவது செயல் முறைக் கூட்டத்தைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் துவக்கி வைத்தார்.



'மருத்துவக் கல்வியில் சீர்திருத்தம்' என்ற தலைப்பில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அரங்கில், 3-2-1977 அன்று ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார், துவக்க விழாவிற்கு மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் எம். நாராயணன் அவர்கள் தலைமை வகித்தார். அவ்விழாவில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் சிறப்புரையாற்றினார்.



அண்மையில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலையொட்டி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களின் மாநாடு, சென்னையில் உள்ள காவல்துறை ஆணையாளர் அலுவலக மாநாட்டு அரங்கில் 3-2-1977 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் அம்மாநாட்டில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்..

முன்னாள் கைதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், வேலூரில் 9-2-1977 அன்று வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். பரமசிவம் அவர்கள் தலைமையில், மாநில தலைமைக் காவல் துறை அலுவலர் திரு. எஸ். எல். ஸ்ட்ரேசி அவர்கள், முன்னாள் கைதிகளுக்கு வங்கிக் கடன்களை வழங்கினார்.



மேலும்....



# குறைந்த விலையில் வீடுகள் கட்டலாம்!

"சொந்தமாக ஒரு வீடு கட்டி, அதில் நிம்மதியாக வாழவேண்டும்!" என்ற ஆசை, ஆதிகாலம் தொட்டே மனிதர்களிடையே இருந்து வருகிறது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள மனிதர்கள் தங்களிடம் உள்ள வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்ற வகையில் முயற்சித்து வந்துள்ளார்கள். ஆனால் அம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருமே வெற்றி பெற்றார்கள் என்று கூற முடியாது. பலருடைய ஆசை, நிறைவேறாத ஆசையாகவும் ஆகியுள்ளது! ஆயினும் மனித இனம் சொந்த வீடு கட்டும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டே வருகிறது.

இன்றைய நிலையில் சென்னை போன்ற நகரங்களில் குறைந்தது ரூபாய் 20,000 இல்லாமல் வீடு கட்ட முடியாது என்றநிலை உள்ளது. "ரூபாய் 20,000 செலவு செய்து நம்மால் சொந்த வீடு கட்ட முடியாதே! என்ன செய்வது?" என்று பலர் ஏங்குகின்றார்கள். அந்த ஏக்கத்தின் காரணமாக, "குறைந்த செலவில் வீடுகட்ட வழி இல்லையா?" என்ற கேள்வி பலரின் உள்ளங்களிலே பிறக்கிறது!

"குறைந்த செலவில் வீடு கட்ட வழி இல்லையா?" என்ற கேள்வி, தனிப்பட்ட மனிதர்களின் உள்ளங்களில் பிறப்பது போலவே, வளர்ந்து வரும் நாடுகளின் அரசாங்கங்களை நடத்திடும் பொறுப்பிலுள்ளோர் உள்ளங்களிலும் பிறந்தது! இக்கேள்விக்கு விடை காணவே, குறைந்த செலவில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்குகள் உலகெங்கும் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

"குறைந்த செலவில் வீடு கட்ட வேண்டும்" என்ற தனிப்பட்டவர்களின் முயற்சிக்கும், அரசாங்கங்களின் முயற்சிக்கும் எதிராகச் சில முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை மூன்று. அவை:

(1) மக்கள் தொகைப் பெருக்கம்.

(2) வீடுகட்டும் பொருள்களின் பற்றாக்குறை.

(3) பற்றாக்குறை காரணமாக ஏற்படும் விலைவாசி ஏற்றம்.

இம்முட்டுக்கட்டைகளில் மிக மிக முக்கியமானது மக்கள் தொகைப் பெருக்கமே என்றால் மிகையாகாது.

**வளர்ந்து வரும் நாடுகளின் அச்சம்!**

மக்கள் தொகை அளவு கடந்து பெருகுவதால், குறிப்பாக நகரங்களில், வீட்டுவசதிப்பற்றாக்குறை கடுமையான அளவில் ஆண்டிற்காண்டு மிகவும் கடுமையாகிக் கொண்டே போகும் என்று அஞ்ச வேண்டிய நிலை இன்று உலகெங்கும் ஏற்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு வாக்கில், வளர்ந்து வரும் நாடுகளின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது ஏறத்தாழ 97.3 கோடி மக்கள்-நகரங்களில் தான் வாழ்வார்கள் என்று கணக்கிடப் பட்டுள்ளது. 2000-ஆம் ஆண்டில், மொத்த மக்கள் தொகையில் 5-ல் 2 பங்கு பேர்கள் நகரங்களில் வாழக்கூடும். அப்போது அந்த மக்களின் எண்ணிக்கை 210 கோடியாக உயர்ந்துவிடும். இம்மக்களில் பெரும் பகுதியினர், வேலைதேடியும், வசதியாக வாழ விரும்பியும் கிராமங்களில் இருந்து குடிபெயர்ந்து நகரங்களுக்கு வந்தவர்களாகவே இருப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2000-ஆம் ஆண்டு வாக்கில், வளர்ந்து வரும் நாடுகளின் நகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகமாகி, வாழ்க்கைத்தரம் மிகவும் குறைந்து விடும் என்ற அச்சம் ஏற்படுகிறது.

இந்த அச்சத்தின் காரணமாகவே இன்று வளர்ந்து வரும் நாடுகளின் அரசாங்கங்கள், தங்கள் நாட்டு மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையும் தங்களுடைய தலையாய கடமையாக ஏற்றுக் கொண்டு செயலாற்றி வருகின்றன. அந்தந்த நாடுகளில் உள்ள வசதிகள், கிடைக்கும் மூலப் பொருள்கள் ஆகியவற்றுக்குத் தக்கவாறு ஒவ்வொரு நாட்டிலும் விரிவான தேசிய வீட்டு வசதிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கொள்கையை வரையறுக்க இந்தியாவும் தற்பொழுது முயன்று வருகிறது.

**நகர மக்களின் நிலை**

வளர்ந்து வரும் நாடுகளில் அரசாங்கங்களே, நகர மக்களுக்குக் குறைந்த செலவில் வீடுகட்டிக் கொடுத்தால்கூட, அந்தச் செலவை நகரங்களில் வாழும் ஏழை மக்களால் தாங்க முடியாது என்றநிலை தற்பொழுது உள்ளது. உலகின் பல பகுதிகளில், 6 பெரிய நகரங்களில், உலக பாங்கு நடத்திய ஆராய்ச்சியின் முடிவாக, ஹாங்காங்கில் வாழும் 35 சதமக்களும், பகோடாவில் வாழும் 55 சத மக்களும், ஆமதாபாத்தில் வாழும் 63 சத மக்களும் சென்னையில் வாழும் 64 சத மக்களும், நைரோபியில் வாழும் 65 சத மக்களும் குறைந்த செலவில் கட்டப்படும் வீடுகளுக்கு ஆகும் செலவைத் தாங்க முடியா ஏழைகளாகவே உள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே, ஏழை எளியவர்களும் வாங்குவதற்கு ஏற்றவகையில், குறைந்த செலவில் வீடுகட்டும் வழிகாண, வளர்ந்து வரும் நாடுகள் முயற்சி செய்து வருகின்றன.



இது மலிவு விலை வீடல்ல! மலிவு விலை வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள அலுவலகம் !

**ஐ. நா.வின் மதிப்பீடு**

"ஏராளவே வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் 1000 பேருக்கு 2 முதல் 5 சிறு வீடுகளும், வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் 7 வீடுகளுமே கட்டப்படுகின்றன. அடுத்த 20 அல்லது 30 ஆண்டுகளுக்குள் 1000 பேர்களுக்கு 8 முதல் 10 வீடுகள் வரையாவது கட்டப்படாவிட்டால், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வீட்டு வசதி நிலைமை மோசமாகிவிடும்" என்று ஐ. நா. நிறுவனம் மதிப்பிட்டுள்ளது இக்குறியளவை எய்துவதற்கு வளர்ந்து வரும் நாடுகள் முயற்சித்து வருகின்றன.

**சென்னையில் அனைத்துலகக் கருத்தரங்கு**

அந்த முயற்சியின் விளைவாகவே குறைந்த செலவில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு ஒன்று சென்னை மாநகரில் கடந்த ஜனவரி மாதம் 19-ஆம் நாள் முதல் 22-ஆம் நாள் வரை நடைபெற்றது. அக்கருத்தரங்கு இந்தியாவிலேயே முதன் முறையாகச் சென்னையில்தான் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலிவுவிலை வீடுகளை அரசாங்கமே கட்டிக் கொடுத்தாலும், சென்னையில் வாழ்பவர்களில் 64 சதவிகிதத்தினர், அவைகளை விலைக்கு வாங்கிக் கொள்ள முடியாத ஏழைகளாய் இருப்பதால், சென்னையில் குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கை நடத்தியது சென்னை மாநகரின் எதிர்கால வளர்ச்சிக்குச் செய்த அரும்பணி என்று கூறுவதில் தவறில்லை.

சென்னை மாநகரில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் துவக்க

சென்னையில் உள்ள கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் கட்டியுள்ள இவ் வீட்டின் விலை ரூபாய் 5,243. இவ்வீடு முதற்பரிசு பெற்றுள்ளது.





எஃகும், சிமெண்டும் இல்லாமல், செங்கற்களையும் சுண்ணாம்பையும் கொண்டு என். ஜி. ஜார்ஜ் அசோசியேட் நிறுவனத்தால் ரூபாய் 5,762 செலவில் கட்டப் பட்டுள்ள இவ்வீடு மூன்றாம் பரிசு பெற்றுள்ளது.

விழா தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசுப் பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர் (கட்டடம் மற்றும் பொது), திரு பி. சிவலிங்கம் அவர்கள், அனைத்துலகக் கருத்தரங்கின் துவக்க விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.

ஏழை எளியவர்களுக்கு வீடு கட்ட உதவும் இக்கருத்தரங்கை மத்திய பொதுப்பணி மற்றும் வீட்டுவசதி அமைச்சர் திரு ஹிதேந்திர தேசாய் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.

அவர் தமது உரையில் வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையை வலியுறுத்தியதுடன், வீட்டு வசதிக்கான கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்ற வேண்டிய அரும்பணி குறித்துப் பின்கண்டவாறு குறிப்பிட்டார்.

**கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடு கட்டுவோம் !**

''சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை, உலகம் தோன்றிய நாள்தொட்டு மனிதர்களிடையே இருந்து வருகிற இந்த ஆசையைத் தூண்டிவிட்டு, கூடுமானவரை வீடு கட்டிக் கொள்ளுவதற்குத் தேவையான பணத்தின் பெரும் பகுதியைச் சம்பந்தப்பட்ட மக்களையே முதலீடு செய்ய வைப்பது என்பது மிகவும் சிறந்தது. இந்த ஏற்பாட்டில் வீட்டு வசதிக்காக கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல பணி புரிய வேண்டும். சில நாடுகளில் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறந்த நிர்வாகிகளின் தலைமையில் இயங்கி, சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் சொந்த வீட்டில் வாழ வேண்டுமென்று கண்ட கனவை நனவாக்கியுள்ளது. கூட்டுறவு முறையில் கட்டப்படும் வீட்டுக்கு, மனையிடம் வாங்குவது, கட்டிடப் பொருட்களை வாங்குவது முதலியன மொத்தமாக நடைபெறுவதால், அவர்கள் கட்டும் வீடு மலிவானதாகவும் இருக்கும். கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி வீடு கட்டும் பணி, அந்தத் துறையில் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமையும்'' என்று குறிப்பிட்டார்.

குறைந்த செலவில், உள்நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே வீடு கட்டிக்கொடுக்க வேண்டிய இன்றியமையாப் பிரச்சினையில் உலகில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும். நிதி உதவி செய்தல், ஆதாரம் மற்றும் மூலதனம் பற்றித் திட்டமிடுதல், அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல், நிருவாகித்தல், கைவினை நுட்பம், கட்டடக்கலை முதலியவை பற்றி விவாதிக்கவும் இக்கருத்தரங்கு வழிவகுத்தது. உருகுவே, கௌடிமலா, ஐக்கிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கென்யா, உகாண்டா, ஈராக், ஈரான், ஸ்ரீலங்கா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, மலேசியா, தாய்லாந்து, நியூசிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்தும் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்தும் வந்த பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் விவாதங்களில் கலந்து கொண்டனர்.



பரிசுபெறாவிட்டாலும், மிகமிகக் குறைந்த செலவில் கட்டப்பட்டுள்ள வீடு என்றபெயர் இவ்வீட்டிற்குக் கிடைத்துள்ளது ! இதைத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது.



விவாதங்கள் பயனுடையதாக இருக்க வேண்டுமென்பதற்காக, இக்கருத்தரங்கு ஒரு புதிய முறையில் ஏற்படுத்தப்பட்டது. இக்கருத்தரங்கு நடைபெற்ற 4 நாட்களிலும், இந்தியா மற்றும் அயல்நாடுகளைச் சேர்ந்த திறமைமிகு வல்லுநர்களால் 5 முக்கியச் சொற்பொழிவுகளும், 6 அழைப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் வழங்கப்படவில்லை. இம்முறையினால், விவாதிப்பதற்குப் போதிய நேரம் கிடைத்தது.

### கூட்டு முயற்சி

குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு பின்கண்ட நிறுவனங்களின் கூட்டு முயற்சியினால் நடைபெற்றது:

1. ஐக்கிய நாடுகள்.

2. வீடு கட்டும் அறிவியல் பற்றிய அனைத்துலகச் சங்கம், புளோரிடா.

3. கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையம், சென்னை.

4. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை.

5. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை.

6. தமிழ்நாடுஅரசின் பொதுப் பணித்துறை.

7. தேசிய கட்டட நிறுவனம்.

8. இந்திய அரசின் பணிகள் மற்றும் வீட்டுவசதி அமைச்சகம், புதுடில்லி.

9. இந்தியக் கட்டடம் கட்டுவோர் சங்கத்தின் தென் மையம், சென்னை.

10. மத்தியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம், ரூர்க்கி.

11. பொறியியல் கட்டுமான கார்ப்பரேஷன் ( E.C.C. )

12. பெங்களூர் மேம்பாட்டு ஆணையகம், பெங்களூர்.

### [illegible] விலையில் மாதிரி வீடுகள்!

இக்கருத்தரங்கையொட்டி சென்னை கே. கே. நகரில் வீட்டு வசதி வாரியப் பகுதியில் குறைந்த செலவில் 23 மாதிரி வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வீடுகளைப் பின்கண்ட துறையினரும் நிறுவனங்களும், தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கட்டியுள்ளனர்.

1. பொதுப்பணித் துறை, சென்னை.

2. கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம், சென்னை.

3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

4. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.

5. மத்தியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம், ரூர்க்கி.

6. டாடா இரும்பு மற்றும் எஃகு கம்பெனி லிமிடெட், ஜாம்ஷெட்பூர்.

7. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, சென்னை.

8. 'ஷிர்கி-ஷிபோரெக்ஸ் கன்சார்டியம்', பூனா.

9. எஸ். கிருஷ்ண அய்யர், சென்னை.

10. 'மைசூர் லைட் வெயிட்கான்கிரீட் ஒர்க்ஸ்' பத்ராவதி.

11. கேரள மாநில வீட்டு வசதி வாரியம்.

12. நகர மற்றும் தொழில் மேம்பாட்டுக் கார்ப்பரேஷன், பம்பாய்.

13. ஷெல் கான்ஸ், காளிகட்.

14. 'இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்.' சென்னை.

15. 'அட்லாகா அண்ட் அசோசியேட்', புதுடெல்லி.

16. 'என். ஜி. ஜார்ஜ் அண்ட் அசோசியேட்', சென்னை.

17. எம். ஆர். வெங்கட்ராம், சென்னை.

18. 'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் இன்ஜினியரிங் டிசைன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' பெங்களூர்.

19. ஜி. கே. ஷெட்டி அண்ட் எஸ். ஜம்புநாதன், சென்னை.

20. எம். மீரான், சென்னை.



கேரள மாநில வீட்டுவசதி வாரியம், ரூபாய் 6,300 செலவில் கட்டியுள்ள இவ்வீட்டிற்கும் மூன்றாம் பரிசு கிடைத்துள்ளது.

### குறைந்த செலவு வீட்டின் அமைப்பு

குறைந்த விலையில் வீடு ஒவ்வொன்றும் குறைந்தது 275 சதுர அடி (25 சதுர மீட்டர்) பரப்புடையதாக இருக்க வேண்டும். அதில் படுக்கை அறை, சமையல் அறை, குளிக்கும் அறை, கழிப்பிட அறை முதலியன இருக்க வேண்டும். குடிதண்ணீர்

வசதி, மின்சார வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி முதலிய எல்லா வசதிகளும் இருக்க வேண்டும். வீடு உறுதியாகவும், அழகாகவும், நவீன வசதிகளுடனும் இருக்க வேண்டும். ஆனுல் விலையோ ரூபாய் 7000-க்கு மேல் ஆகக் கூடாது. இவ்வாறு கட்டப்படும் வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருள்களிலும், கட்டுமான அமைப்பிலும் சிக்கனத்துக்கான புதுமைகள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு வரை முறைகளை வகுத்துக் கொண்டே மேற்கூறிய 20 நிறுவனங்களும் 23 மாதிரி வீடுகளைக் கட்டியுள்ளன.

## சிறப்பு அம்சம்

பல புதிய தொழில் நுட்பங்களையும், விலை மலிவான பொருள்களையும் ஒருங்கிணைத்துப் பல நிறுவனங்களும், தனிப்பட்ட கட்டடக் கலைஞர்களும் கட்டியுள்ள 23 மாதிரி வீடுகளின் கண்காட்சி, குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கின் சிறப்பு அம்சமாகும். தமிழ்நாடு வீட்டு வாரியத்தின் ஒத்துழைப்புடன் இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், குறைந்த செலவில் வீடுகள் கட்ட முடியும் என்பதை விளக்குவதற்கான மாதிரி வீடுகளை அமைப்பதற்குரிய நிலத்தைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அளித்துள்ளது.

மாதிரி வீடுகளின் கட்டடத் தரைமட்டப் பரப்பின் விலை விகிதம் ( Plinth area rate ) ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 190 முதல் ரூபாய் 356 வரை ஆகியுள்ளது.

## பரிசு பெற்ற வீடுகள்

உயர்மட்ட நடுவர் குழு 23 மாதிரி வீடுகளையும் ஆய்வு செய்து, பின்கண்ட நிறுவனங்களின் மாதிரி வீடுகளுக்குப் பரிசு அளித்துள்ளது:

கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் கட்டியுள்ள 2-வதுமாதிரி வீடு—முதற்பரிசு



தமிழ்நாடு பொதுப்பணித்துறை கட்டியுள்ள மாதிரி வீடு—இரண்டாவது பரிசு.

என்.ஜி. ஜார்ஜ் அசோசியேட் மற்றும் கேரள மாநில வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள மாதிரி வீடுகள் — மூன்ருவது பரிசு.

பரிசு பெற்ற மாதிரி வீடுகளில் பின்பற்றப்பட்டுள்ள அளவுக் குறிப்புகள் ( Specification ) பின்கண்ட அட்டவணையில் விவரிக்கப் பட்டுள்ளது.

## பரிசு பெற்ற வீடுகளின் அளவுக் குறிப்புகள்

| வரிசை எண் | விவரிப்பு | கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சிமையம் கட்டியுள்ள 2வது மாதிரிவீடு | தமிழ் நாடு பொதுப் பணித்துறையின் மாதிரி வீடு | என்.ஜி.ஜார்ஜ் & அசோசியேட்ஸின் மாதிரி வீடு | கேரள மாநில வீட்டு வசதிவாரிய மாதிரி வீடு |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டட தரைமட்டப் பரப்பு (சதுர மீட்டரில்) | 25.70 | 23.85 | 25.84 | 27.36 |
| 2. | தரைப் பரப்பு (தரை சதுர மீட்டரில்) | 21.80 | 19.46 | 21.80 | 22.50 |
| 3. | கடைக்கால் | துளை ஊசி நெடு முனை கடைக்கால் (*Auger Pile Foundation*) | 'அண்டர் ரீயாம்டு' நெடு முனைக் கடைக்கால். | செங்கல் ஜல்லி சுண்ணும்பு கான்கிரீட் அடிப் பகுதி. | மணல் நிரப்பி அதன் மேல் 10 செ. மீ. கனமுள்ள செங்கல் ஜல்லி கான்கிரீட். கட்டட விட்டம் தரை மட்ட அளவில் |
| 4. | சுவர் அமைப்பு | 20 செ. மீ. கனமுள்ள ''லாட்டோ பிளாக்'' சுவர். சிமெண்ட் கலவை 1:6 | 10 செ. மீ. செங்கல் சுவர் சுண்ணும்புக் கலவை. | 23 செ. மீ. செங்கல் தூண்கள்,செங்கல்லால் கட்டப்பட்ட வளைவுகள், 11 செ. மீ. அடைப்புப்பலகை, சுவர். | 20 செ. மீ.கனமுள்ள செங்கற் சுவர். |
| 5. | கூரை அமைப்பு | 7.5 செ. மீ. கனமுள்ள ''லாட்டோ பிளாக்'' ஓடு. சிமெண்ட் கலவை 1:5 | வலுவேற்றப் பட்ட சிமெண்ட் கான்கிரீட் செங்கல் நிரப் பப்பட்ட பாளம் | 23 செ. மீ. செங்கல் 2 வளைவின் மேலே, அரை வட்ட வளைவுகள் சிமெண்ட் கலவை [illegible] | முன் கூட்டியே செய்து வலுவூட்டப் பெற்ற செங்கல் அடைசுப் பலகை. |

கட்டுமானப் பொறியியல் ஆராய்ச்சி மையம் சரளைக் கற்களை அழுத்தி, கற்களாக அறுத்து, அக்கற்களைக்கொண்டே குறைந்த செலவில் மாதிரி வீடு கட்டியுள்ளது. இவ்வீடு கட்டுவதற்கு ஆகியுள்ள செலவு ரூபாய் 5,243, இவ்வீட்டிற்கே முதற்பரிசு கிடைத்துள்ளது.

குறைந்த செலவில் வீடு கட்டுவதில் மூன்ருவது பரிசு பெற்ற என். ஜி. ஜார்ஜ் அசோசியேட் நிறுவனம் எஃகு, சிமெண்ட் இல்லாமல் செங்கற்களையும் சுண்ணும்பையும் கொண்டே வளைவுகள் அமைத்து வீடு கட்டியுள்ளது. இவ்வீட்டின் விலை ரூபாய். 5,762.

மற்ருெரு மூன்ருவது பரிசு பெற்ற கேரள மாநில வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள குறைந்த விலை வீட்டின் விலை ரூபாய், 6,300.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ள வீடே, 23 வீடுகளில் மிகவும் குறைந்த செலவில் கட்டப்பட்டதாகும். இதன் விலை ரூபாய், 4,548 தான்.

குறைந்த செலவில் வீடு கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு, சென்னையில் நடைபெற்றதால், சென்னை நகரில் மட்டுமல்ல தமிழகமெங்கிலும் — பட்டி தொட்டிகளிலும் கூட — ஏறத்தாழ ரூ. 4,500 முதல் ரூ. 8,500க்குள் நல்ல தரமான வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும் என்பது தெளிவாகியுள்ளது. எனவே, ''குறைந்த செலவில் வீடு கட்டிக் கொண்டு அதில் நிம்மதியாக வாழ வேண்டும்! என்று, எண்ணியவர்களின் ஆசை நிறைவேறப்

## ஜனநாயகம்

ஜனநாயகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிரேம். எல்லா மக்களுக்கும், ஜனநாயகம் அர்த்தம் உள்ளதாக இருக்க அதை நாம் மாற்ற விரும்புகிரேம். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வாக்குப்பதிவு செய்வது மட்டுமே ஜனநாயகமாகிவிடாது. சாதாரண மனிதன் தனது பகுதி அபிவிருத்தி சம்பந்தமாக எழுப்பப்படும் விஷயங்கள் வெளிப்படவேண்டும் என நாம் கருதுகிரேம். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவே முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நமது நாடாளுமன்ற முறைதான் இந்தியாவுக்குச் சரியானது என நாம் கருதுகிரேம். அதில் சில திருத்தங்கள் தேவைப்படலாம். ஆனுல் மொத்தத்தில் அதுதான் சரியானது.

சித்தாந்த ரீதியில் ஒருவரிடம் அதிக அளவுக்கு அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை நடைமுறையில் சுலபமாகப் பயன்படுத்திவிட முடியாது. அவற்றைப் பயன்படுத்த முதலமைச்சர்களின் உதவி தேவைப்படுகின்றது. மாநில முதலமைச்சர்கள் தங்கள் மாநிலங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவர்களால் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது. மக்களின் ஆதரவு கிடைக்காவிட்டால் எனது கட்சிக்கு நான் தேவைப்பட மாட்டேன்.. கட்சிக்கு நான் தேவையில்லாவிட்டால், நான் கட்சியில் இருக்கமுடியாது. ஆகையால் ஒவ்வொரு செயலும் மற்ருெரு செயலைச் சார்ந்து இருக்கின்றது. ஆகையால் இந்தியா, ஜனநாயக முறையில்தான் வளமடைந்து சிறக்க முடியும்!

—இந்திரா காந்தி.

## தமிழ்நாட்டில் இரத்தினக்கற்கள்

தமிழ்நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாகத் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரத்தினக் கற்கள் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்தினக் கற்களில் அபூர்வமான விலை உயர்ந்த கற்களின் துண்டுச் சிதறல்கள் குறிப்பாக மழைக் காலத்திற்குப் பின்னர் - திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தின் சில பகுதிகள், கோயம்புத்தூர் மாவட்டம் காங்கேயம் வட்டத்தின் சில பகுதிகளில் இருந்து விவசாயிகளாலும், கிராம மக்களாலும் எடுக்கப்படுகின்றன. இவ்வகைக் கற்களில் சில பம்பாய், ஜெய்ப்பூர் மற்றும் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டு, அங்கு அவை பட்டை தீட்டப்பட்டு விற்கப்படுவதாகத் தெரிகிறது. இந்திய மண்வள அளவைத் துறையும், தொழில் துறையின் மண்வளப் பிரிவும் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து இவ்வகைக் கற்கள் அங்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு உறுதியாகிறது. ஆனால், கிடைக்கும் கற்களின் அளவும், கிடைக்கக்கூடிய கால இடைவெளியும் மிகக் குறைவாக இருப்பதால் வியாபார ரீதியாக பெரும் தொழில்கள் செய்ய ஏதுவாயில்லை.

திருச்சி மாவட்டத்தில் சக்கரக்கோட்டை, ஓடையபட்டி, தென்னிலை, மணவாடி, உட்பிடமங்கலம் ஆகிய இடங்களிலும், கோவை மாவட்டத்தில் பழைய கோட்டை, மல்லிபுரம், காவலகட்டுவலசு, பாப்பினி, வஞ்சிபாளையம், வேங்கைபாளையம், கவுண்டன்பாளையம், நெலாளி, தாயம்பாளையம் உடையார், அப்பிபாளையம் ஆகிய இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் அருகில் உள்ள கணியம்பட்டி, தாரமங்கலம் அருகில் உள்ள ஸ்ரீரங்கனூர், திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள பாமன்டபாளையம், சிட்டாம்பூண்டி ஆகிய இடங்களிலும் மரகதம், கடல்நீலம், கோமேதகம், சந்திரக்கல் மாணிக்கம் போன்ற ரத்தினக் கற்கள் கிடைக்கின்றன.

இந்த இரத்தினக் கற்களை இப்பகுதிகளில் இருந்து விஞ்ஞான முறையில் தோண்டி எடுக்கவும், இத்தொழிலை ஒழுங்குபடுத்தவும் அரசு விரும்புகிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் இத்தொழிலை நடத்தவிரும்பினால் சுரங்கம் தோண்டி எடுப்பதற்கான குத்தகை விடுவதற்கும், பட்டை தீட்டும் தொழில் அமைக்கவும், மற்றும் உதவிகள் செய்யவும் அரசு ஆவன செய்யும்.

விருப்பம் உள்ளவர்கள் சுரங்கக் குத்தகைக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகும்படி கேட்[illegible] கொள்ளப்படுகிறா[illegible]



# இலவச உழைப்பு முகாம்!

மதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் அவர்களும் மற்றும் தமிழக ஆளுநர் அவர்களும் அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் ஆகியோர் தங்கள் ஓய்வு நேரத்தில், தேசிய சமூக சேவா தொண்டர்கள், கிராமப்புற மக்கள் ஆகியோருடன், ஒருங்கிணைந்து. இலவச உழைப்புதானம் செய்து நாட்டிற்கு நலம் பயக்கும் பணிகளைச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசு ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், தேசிய சமூக சேவா தொண்டர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிராமப் பொது மக்கள் முதலிய 2,000 நபர்களின் ஒருங்கிணைந்த சக்தியினால் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசி கோட்டத்தில் ஓர் நற்பணி நடைபெற்றுள்ளது. ஆம். இலவச உழைப்பு முகாம் ஏற்படுத்தியதன் பயனாக சிவகாசி கோட்டம், செங்கமலப்பட்டி என்ற







குக்கிராமத்தில் கசிவுநீர்க் குட்டை (Percolation Pond) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



கசிவுநீர்க் குட்டை அமைப்பது பொதுவாக மண்ணின் ஈரத்தன்மையைப் பலப்படுத்தவே. இக்குட்டையின் மூலம் 3.000 மீட்டர் சுற்றளவுக்கு நீர்ப்பாசனக் கிணறுகளின் நீர்வளம் போதுமானதாக இருக்கும். கிணற்று நீரே முக்கிய பாசன ஆதாரமாக உள்ள இடங்களில், மறைமுகமாக நீர்ப்பாசன வளத்தைப் பெருக்குவதற்கு கசிவுநீர்க் குட்டை மிகவும் ஏற்றதாகும்.

கீழ்த்திருத்தங்கல் பெரிய கண்மாய்க்குத் தண்ணீர் செல்லும் தாவோடையின் குறுக்கே இக் குட்டை அமைக்கப்படுகிறது. கீழத்திருத்தங்கல் பெரிய கண்மாயின் அதிகப்படியான தண்ணீர் அர்ச்சுனா நதியில் விழுந்து வீணாகிறது. இக்குட்டையின் மொத்தம் கொள்ளளவு 11,000 கன மீட்டர். 29 நீர்ப்பாசனக் கிணறுகள் இக்குட்டையினால் பயன்பெறும். இதனால் பெரும்பான்மையான சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகள் பயனடைவார்கள். இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் ரூ. 20,000 வரை விவசாய உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இத் தேக்கத் தண்ணீர், கால்நடைகளுக்கும் மற்றும் இதர உபயோகத்திற்கும் பயன்படும். மேலும் கண்மாய்களில் மண் மேடிட்டுப் போவதைத் தடுக்க முடிவதோடு இக் குட்டையில் குவியும் வண்டல் மண்ணும் விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலும்.



2,000 மனித உழைப்பு நாட்களில் முடிவு பெறும் இவ்வேலையின் மதிப்பு ரூ. 11,500 ஆகும். இது இலவச உழைப்பு மூலமாகவே உண்டாக்கப்பட்ட நிரந்தர-பயன்தரத்தக்க ஒரு சொத்தாகும்.

இது போன்ற வேலைகள் நமது மாநிலத்தில் 1957-க்குப் பிறகு நடைபெறுவது இதுதான் முதலாவதாகும் என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்கதாகும். இது போன்ற இலவசப் பணி முகாம்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இனி தொடர்ந்து நடைபெறும் என நம்புவதற்கு இது முதற்படியாக அமைந்துள்ளது.







# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# கால்நடைகளை மேம்படுத்துவதற்கான இனச்சேர்க்கை வழி முறைகள்


—டாக்டர் பூவை. கோதண்டராமன்,
பேராசிரியர்,
கோழியின அறிவியல் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.


மனிதன் வன விலங்குகளைத்தன் சொந்தத்தேவைக்காக வீட்டினங்களாக மாற்றியமைத்த காலத்தினின்று, இனவிருத்திக்கான பழக்கங்களும், செயல்முறைகளும் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கின்றன. இம்முன்னேற்றம் சில சமயங்களில் பின் தங்கியதாகவும், நிச்சயமற்றதாகவும் இருந்து வந்தது. ஆனால் இன்றைய இன விருத்திக்கான தெளிவான முறைகள், தொடர்ச்சியாய்க் கண்டுபிடிக்கப் பட்டவைகளையும், படிப்பினைகளையும் சார்ந்ததாகும்.

**மரபுக்கூறும் சூழ்நிலையும்**

ஒரு பிராணியினுடைய நிறம், பருமன், தோற்றம் மற்றும் அதனுடைய உற்பத்தித் திறன் ஆகியவை இரண்டு முக்கிய காரணங்களினால் வரையறுக்கப்படுகிறது. முதலாவதாக இத்தன்மைகள் வழிமுறை உரிமையாகவும். இரண்டாவதாக சூழ்நிலையினால் உருப்பெருவதும், திணிக்கப்படுவதாகவும் உள்ளது. இனச்சேர்க்கையினால் சந்ததி இத்தகையதாக விருக்கும் என்பதை நிர்ணயிப்பதில் சூழ்நிலை பெரும்பங்கு கொள்கிறது. ஆனால் வழிமுறை உரிமையின் பங்கும் நிச்சயமாக இனச்சேர்க்கையின் பயனை பிரதிபலிக்கிறது.

**வேறுபாடு : (Variation)**

பேதங்கள் வெகுவாக இல்லையெனினும் எந்த ஒரு பிராணியும் மற்றதொரு பிராணியைப் போல் ஒருமிக்க இருப்பதில்லை. மரபியல் நிபுணர்கள் இந்த வேறுபாட்டை ''வேரியேஷன்'' எனக் கூறுவர். இவ்வேறுபாடே இனவிருத்திக்கு அடிப்படையாகும். தேர்ந்தெடுத்தல் என்பது அடுத்த சந்ததியின் கூற்றை நிர்ணயிக்கும், தாய் தந்தை வம்சத்தை அவற்றின் வேறுபாட்டின் அடிப்படையில் பிரித்தெடுத்து இனச்சேர்க்கை செய்தலேயாகும். திறம்படத் தேர்ந்தெடுத்தலே, இனவிருத்திக்கு அஸ்திவாரமாகவும், பயன்மிகு திருப்பமாகவும் அமைகின்றது. தொடர்ந்த உள் இனக்கலப்பினால் ஏற்படும் குண மாற்றம் அகன்று வேறுபாடு இல்லாத நிலையை அடைந்துவிட்டால் மேலும் இனவிருத்தி செய்ய முற்

படின, பிறிதொரு உறவு முறை அற்ற, நல்லதொரு பிராணியுடன் இனச் சேர்க்கையின் வாயிலாக மீண்டும் வேறுபாட்டை ஏற்படுத்தலாம்.

**பயன்மிகு தேர்ந்தெடுத்தல் (Effective Selection)**

பயன்மிகு தேர்ந்தெடுத்தல் என்பதாவது கீழே குறிப்பிட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் அமைவதாகும்.

*(1)* ஒரு பிராணியின் தனித் தன்மை, தோற்றம் மற்றும் உற்பத்தித் திறன்.

*(2)* மூதாதையரின் உற்பத்தித் திறன்.

*(3)* குடும்பச் சார்பான உற்பத்தித் திறன்.

*(4)* அப்பிராணியின் ஈனும் தன்மை.

*(5)* சந்ததியின் தன்மை.

கடைசியாக கூறியுள்ள இரண்டும் முக்கியத்துவம் பெற்றவை. ஆனால் இதற்கான ஆதாரம் உடனடியாக கிடைக்கக் கூடியதல்ல. தேர்ந் தெடுத்தல் தொடர்ந்தும் தொடர்ச்சியாகவும் இருத்தல் அவசியம். முதலாவதாக, ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய சான்றுகளைக் கொண்டு தேர்ந்தெடுத்தல் வேண்டும். நான்காவது சான்று கிட்டியவுடன் மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஐந்தாவது சான்றை பயன்படுத்தி முடிவான தேர்வை நிர்ணயித்தல் வேண்டும்

**மரபுரிமையாகப் பெறும் உற்பத்தித் திறன்: (Production inheritance)**

முட்டை, இறைச்சி, பால் முதலானவற்றிற்கான உற்பத்தித் தன்மைகள் சிக்கலுள்ளதாகவும் பற்பல மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களால் (Genes) கட்டுப்படுத்தப்படுகிறது. அதிகப்படியான முட்டையிடும் திறன் பல நூற்றுக்கணக்கான இரட்டிப்பான மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்கள் சேர்க்கைப் பாதிப்பால் ஏற்படுவதாகும். குறைந்த கால வரையறைக்குள் முட்டையிடும் பருவமெய்துதல், அடுத்தடுத்து முட்டையிடும் தன்மை, நீண்டகாலம் அடுத்தடுத்து முட்டையிடும் தன்மை, அவயம் காக்காத நிலை முதலான தன்மைகள் எவ்வாறுள்ளதோ, அதைப் பொறுத்தே ஒரு கோழியின் முட்டையிடும் திறன். கால்நடை அபிவிருத்திக்கு, உடனடியாக உள்ள கால்நடைகளைக் கொண்டே ஆரம்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பிராணியும் சில நன்மை பயக்கும் மற்றும் சில தீமைபயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை பெற்றிருக்கிறது. இன அபிவிருத்தியாளர் (1) நன்மை பயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை கூட்டியும், தீமை பயப்பவற்றை குறைத்தும் (2) நல்லதொரு பயனைத்தரும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களை ஒரு சேரச் செய்தலின் மூலமும் அபிவிருத்தியைக் காணலாம். பிராணிகளுடைய பாரம்பரியத்தை விருத்தி செய்ய, இனவிருத்தி செயல் முறைகளையும் மற்றும் தேர்வுமுறைகளையும் கருவிகளாக கொள்ளல் வேண்டும்.



சிந்திக் காளை

**பழக்கத்திலுள்ள இனவிருத்திக்கான செயல்முறைகள்**

*(1)* 'க்ரிஸ் க்ராஸிங்' *(Criss crossing)*

வருடா வருடம் பிறிதொரு இனத்தைச் சேர்ந்த ஆணை முந்தைய வருடங்களின் கலப்பினச் சேர்க்கையினால் ஏற்பட்ட பெண் இனத்துடன் சேர்த்தலாகும்.

*(2)* 'க்ராஸ் ப்ரிடிங்' *(Cross breeding)*

வெவ்வேறு இனங்களைக் கொண்டு ஒன்று சேர்த்து இனக் கலப்பு செய்யும் முறை.

*(3)* 'ஹைப்ரிட்' *(Hybrid)*

இரண்டு வேறு இனங்களை ஒன்று சேர்த்து புதியதாக வரும் சந்ததியினை 'ஹைப்ரிட்' அல்லது வீரிய இனம் என்பர். ஆனால் தற்பொழுதுள்ள இனக்கலப்பு வம்சங்கள் ஒன்று சேர்த்தலை வீரியகலப்பு எனக் கூறுகின்றனர்.

*(4)* 'இன்பிரிடிங்' *(Inbreeding)*

நெருங்கிய உறவு கொண்ட பிராணிகளை ஒன்று சேர்த்தல் உள் இனக்கலப்பு எனப்படும்.

தாயும் கன்றும்





தாயும் கன்றும்

*(5)* 'இன் க்ராஸிங்' *(In crossing)*

உள் இனக்கலப்பினால் ஏற்பட்ட இரண்டு வம்சங்களையோ அல்லது இனங்களையோ ஒன்று சேர்த்தலாகும்.

*(6)* 'லைன் ப்ரிடிங்' *(Line breeding)*

நெருங்கிய உறவில்லாத பிராணிகளை ஒன்று சேர்த்தல்.

*(7)* 'அவுட் பிரிடிங்': *( Out breeding )*

உறவு முறையற்ற ஒரே இனத்தைச் சார்ந்த பிராணிகளை ஒன்று சேர்த்தல்.

*(8)* 'ப்ராஜினி டெஸ்டிங்' : ( Progeny Testing )

சந்ததியின் திறனைக் கொண்டு கையாண்ட இனச்சேர்க்கையை மதிப்பிடுதல்.

*(9)* 'ரெஸிப்ரோக்கல் க்ராஸ்' : ( Reciprocal cross )

இரு இனங்களுக்குள்ளோ அல்லது வம்சங்களுக்குள்ளோ இனச்சேர்க்கைக்காக முதலில் ஒரு இன ஆணையும் அதற்கடுத்தாற்போல் மற்றொரு இன ஆணையும் உபயோகித்தல்.

*(10)* 'ரெஸிப்ரோக்கல் ரெக்கரண்ட் செலக்ஷன்' (Reciprocal Recurrent Selection)

இம்முறையில் இரண்டு இனத்தைக் கலந்து இனவிருத்தி செய்து அவ்வம்சத் திறனைக் கொண்டு முதலிரண்டு இனத்தின் தன்மையை நிர்ணயித்து, அவைகளைத் தனி வம்சமாக உற்பத்தி செய்தல்.

*(11)* 'அப்க்ரேடிங்' *(Up grading)* ஒரு வம்சத்தின் திறனை உயர்த்த மற்றொரு வம்சத்தை சேர்ந்த ஆணினக் கலப்பு 'அப்கிரேடிங்' எனப்படும்.

*(12)* 'குளோஸ்டு ப்ளாக்' : *(Closed flock)* ஒரு மந்தையிலுள்ள பிராணிகளை அவற்றிற்குள்ளேயே தொடர்ந்து இனச் சேர்க்கையைக் கையாண்டு பிறிதொரு பிராணிகளின் சேர்க்கையே இல்லாமல் தவிர்ப்பது 'குளோஸ்டு பிளாக்' எனப்படும்.

**பழக்கத்திலுள்ள தேர்வு முறைகள்:**

தனிப்பட்ட பிராணியின் வெளிப்படைத் தோற்றம், உற்பத்தித் திறன், இவை இரண்டும் கலந்தது மற்றும் மூதாதையர், சந்ததி முதலான திறன்களை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுத்தலை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

**இனச்சேர்க்கைக்கான இனத்தையோ இனங்களையோ தெரிந்து எடுத்தல்:**

எளிதில் கிடைக்கும் வாய்ப்பு, உற்பத்தியின் நோக்கம், தட்பவெப்ப நிலை மற்றும் நோய் நொடி நிலைமைகளைப் பொறுத்து இனமோ இனங்களையோ தெரிந்து எடுத்தல் அவசியம். அதற்குத் தகுந்தாற்போல் நாட்டு அல்லது அயல்நாட்டு இனங்களை, ஓரினச் சேர்க்கைக்காகவும் *(Pure breeding)* தரப்படுத்துதலுக்காகவும் ( Grading ), கலப்பினச் சேர்க்கைக்காகவும் *(Cross breeding)* இனங்களைத் தெரிந்து எடுக்கலாம். பால், விற்பனைப் பொருளாயின் இனச்சேர்க்கையைக் கையாளும்போது, ஹால்ஸ்டெய்ன் ( Holstein ) காளையையும், தயிர், வெண்ணெய், நெய் விற்பனைப் பொருளாயின் ஜெர்ஸி ( Jersy ) காளையையும் இனச் சேர்க்கைக்கு உபயோகப்படுத்தலாம். மேலும் தட்பவெப்ப மற்றும் பராமரிப்பு வித்தியாசங்களுக்கு உகந்தவாறு, வேறு அயல் நாட்டினங்களைப் பயன்படுத்தலாம். ஓரினச் சேர்க்கைக்கும், தரப்படுத்துதலுக்கும் இதே சிந்தனைகள் பயனளிக்கும்.

**பிராணிகளின் தரம் உயர்த்துவதற்கான இனச் சேர்க்கை முறைகள்**

பிராணிகளின் தரம் உயர்த்துவதற்கான இனச்சேர்க்கை முறைகள், பசு, எருமை, கோழி முதலானவற்றின் அடிப்படை அமைப்பும், சேர்மானமும் ( Structure and composition ) எவ்வாறு உள்ளது என்பதனை மிகப் பெருத்த அளவில் சார்ந்திருக்கின்றது.

**பசுக்கள்:** நாட்டிலுள்ள பசுக்களைப் பார்க்கும்போது நம் நாட்டினத்தைச் சேர்ந்த சாஹிவால், சிந்தி, தார்ப்பர்க்கர், கிர் எனப்படும் இனத்தைச் சார்ந்த ஆங்காங்கே உள்ள ஒரு சில மந்தைகளைத் தவிர, மிகப் பெருத்த அளவில் நம்முடைய கறவைப் பசுக்கள் எந்த ஒரு இனத்திற்கும்



...வும், நகரப புறங்களிலும், பால் உற்பத்தி வட்டாரங்களிலும் ஒரு சில கலப்பின பசுக்களும்தான் இருக்கிறது.

உயர்ரக நாட்டின அல்லது அயலின ஆண் வம்சத்தைக் கொண்டு நம் நாட்டுப் பசுக்களைத் தரப்படுத்துதல் மிகவும் பயன் தரக் கூடியதாக அமையும்.

நம் நாட்டின் பசுக்களை நம் நாட்டு அல்லது அயல் நாட்டு உயர்ரகக் காளைகளுடன் சேர்த்து உற்பத்தி திறனை பெருக்குவதுடன் அவற்றின் நோயைத் தவிர்க்கும் தன்மை மற்றும் தட்ப வெப்ப நிலையைச்சமாளிக்கும் தன்மையையும் கூட்ட வேண்டும். மேற்கண்ட நன்மைகளைப் பெற அயல் நாட்டின் இரத்த பங்கு (Blood level) போதிய அளவில் கலந்திருக்க வேண்டும். இந்தியாவிலும் மற்ற நாட்டிலுமுள்ள பாரம்பரிய நிபுணர்கள் ½ அல்லது 5/8 பாகம் அயல் நாட்டின் இரத்த அளவு இருத்தல் நலமென அறிவுரை கூறியுள்ளனர். இந்த இரத்த அளவைப் பெற, முதல் கலப்பினுல் (ஜெர்ஸி காளை × சிந்தி பசு) ஏற்படும். கிடேரிக் கன்றின் (½ + ½ பாகம்) இரத்த அளவு சரிபாதியாகவிருக்கும். இந்த முதல் வம்சக் கலப்பின கன்றுகளை ஜெர்ஸி காளையுடன் சேர்ப்பதனுல் 3/4 பங்கு அயல் நாட்டின இரத்தக் கலப்பு ஏற்படுகிறது. இந்த இரண்டாவது வம்ச கலப்பினக் கன்றுகளை ½ பங்கு ஜெர்ஸி சிந்தி இரத்தக் கலப்புள்ள காளையுடன் சேர்க்கும்போது 5/8 பங்கு இரத்தக் கலப்புடைய ஜெர் சிந்தி கிடேரி கன்று உற்பத்தியாகிறது.

ஜெர்ஸி காளை × சிந்தி பசு

↓

முதல்வம்ச கிடேரி கன்றுகள் × ஜெர்ஸி காளை

(½+½)

↓

இரண்டாம் வம்ச கிடேரி கன்றுகள் ×

ஜெர்சிந்திக் காளை

(¾+¼) ↓ (½+½)

மூன்றும் வம்ச கிடேரி கன்றுகள் (5/8+3/8)

ஓரினச் சேர்க்கையின் மூலம் சாகிவால், சிந்தி, தார்பார்க்கர், கிர் மந்தைகளை தனிப்பட்ட மந்தைகளாக அமைத்து, அவற்றினுள்ளேயே பொறுக்கி தேர்ந்தெடுத்தல் (Selective breeding) முறையில் நன்மை பயக்கும் மரபு உறுதிப்படுத்தும் நுண்ணிய அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, பால் உற்பத்தியைப் பெருக்கலாம்.



**எருமைகள் :**

இங்கொன்றும் அங்கொன்றுமாக அமைந்துள்ள முர்ரா, சுர்ட்டி, ஜபர்பாடி என்ற ஓரின மந்தைகளைத் தவிர, மிகப் பெருத்த அளவில் இந்த இனத்தை சார்ந்தது என்று கூற இயலாத எருமை வகை தான் அதிகமாக உள்ளது.

ஓரின மந்தைகளில் பொறுக்கி தேர்ந்தெடுத்தல் மூலமும் மற்றும் இனபாகுபாடற்ற மந்தைகளில், முர்ரா காளைகளைக் கொண்டு,தரப் படுத்துவதினுலும் எருமைகளின் பால் கறக்கும் தன்மையை உயர்த்தலாம்.

**கோழிகள் :** நம் நாட்டின் கோழிகள் மிகப் பெருத்த அளவில் நாட்டினங்களாகவும், இன்னதென பிரிக்க இயலாத கோழிகளுமே அதிகப்படியுள்ளன. இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் 8 வருடங்களாக நிகழ்ந்த ஆராய்ச்சியில், நாட்டினக் கோழியின் 116 முட்டை எண்ணிக்கையை 140 ஆகவும், 39 கிராம் முட்டை எடையை 48 கிராம் எடையாகவும் மாற்றியமைக்க பொறுக்குத் தேர்ந்தெடுத்தல் பயனளித்தது.



வெள்ளை 'லெக்ஹார்ன்' இனத்தைச் சேர்ந்த சேவல்களைக் கொண்டு நாட்டினக் கோழிகளின் தன்மையை வெகுவாக மாற்றியமைக்கலாம்.

நாட்டிலுள்ள ஒயிட்லெக்ஹார்ன், ரோட் ஐலெண்டு ரெட், ஆஸ்டர்லார்ப், ஒயிட் கார்னிஷ், ஒயிட் ராக், நியு ஹாம்ஷையர், ஓரினக் கோழி (Pure breed) மந்தைகளைத் தனிப்பட்ட முறையில் விருத்தி செய்து வம்சங்களை உண்டு பண்ணி (Strain) அவ்வம்சங்களின் மூலம் வீர்ய குஞ்சுகளையும் (Strain Crosses or Hybrids) உண்டாக்கி முட்டை மற்றும் இறைச்சி பெறுவதற்கான வாய்ப்புகளை மிகப் பெருத்த அளவில் மாற்றியமைக்கலாம்.

வேற்று நாட்டினர் வியாபாரத்திற்காக வீரியக் கலப்புக் குஞ்சுகளை நம் நாட்டில் விற்பனை செய்கிறார்கள். ஒவ்வொரு முறையும் முட்டை அல்லது இறைச்சி உற்பத்தி செய்வதற்கு இக்குஞ்சுகளை வாங்க வேண்டிய நிலை இன்று உள்ளது. இதற்காகும் செலாவணித் தொகையைக் கணிசமான அளவிற்குக் குறைப்பதற்கு திட்டமிட்ட இன அபிவிருத்தி மூலம் ஏற்கனவே நாட்டிலுள்ள் இனங்களை விருத்தி செய்தல் மெத்த அவசியம்.

மேலே கண்டுள்ளபடி கால்நடை அபிவிருத்தி, இன அபிவிருத்தியையும், மேலும் மந்தை அபிவிருத்தியையும் சார்ந்ததாகும். முன்னது நீண்டகாலத் திட்டமாகும். பிந்தியது குறுகிய காலத் திட்டமாகும். இரண்டும் ஒருங்கே செயல்படுத்துவதின் மூலம் இன அபிவிருத்திக்கான வழிமுறைகள் நல்லபடி அமைவதற்குச் சீரிய வாய்ப்பு ஏற்படுகிறது. நம்நாட்டிலுள்ள கால்நடைகள் "Stratification" எனப்படும் அடுக்கு நிலையாய் அமைந்துள்ள கால்நடை வளர்ச்சியைப் பின்பற்றியதாக இருத்தல் வேண்டும். இதன் மூலம் மிக நல்லது, நல்லது, சுமாரானது என்றபடிக்குப் பலதரப்பட்ட மந்தைகளைக் கொண்ட கால்நடைச் செல்வத்தைப் பெறலாம். இன்றுள்ள மிகச் சில நல்லவையை விட்டால் மற்றவை அதிகப்பயன்படாதது என்ற நிலைமை வெகுவாக மாறிவிடும். இப்பொழுதுள்ள உற்பத்தித்திறன் குறைவை மாற்றி, தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிட்ட கால்நடை இனவிருத்தியை ஏற்படுத்துதல் மெத்த அவசியமாகும்.

# கண்கவர் தோல்பொருள் உற்பத்தியில் கணிசமான வெற்றி!



நமது நாட்டில், தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியை அதிகரிக்கவும், விரிவுபடுத்தவும், அவற்றின் தரத்தை உயர்த்தவும் 52 ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**வேலைவாய்ப்பு**

இவற்றில் 39 திட்டங்களுக்கு 2 கோடியே 54 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வெளிச் செலாவணி 43 இலட்ச ரூபாயும் அடங்கும். மீதமுள்ள 13 திட்டங்கள் நிதியுதவி கோரவில்லை. இத்திட்டங்கள் மூலம் 5 ஆண்டுகளில் சுமார் 200 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

காலணிகள், தோல்பொருட்கள் இவை சராசரி மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களாகும். நமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தோல் பொருட்களின், குறிப்பாக ஓரளவு பதப்படுத்தப்பட்ட தோலின் ஏற்றுமதியின் பங்கு ஆண்டுக்கு 200 கோடி ரூபாயாகும். எனவே, தோல் பொருட்களின் தரம், நீடித்த தன்மை, உள்நாட்டு, ஏற்றுமதிக்கான நல்ல விலை இவற்றின் அவசியம் பற்றி நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தது.

**கணிசமான வெற்றி!**

நாட்டிலுள்ள ஆராய்ச்சி, வளர்ச்சி நடவடிக்கைகள், தோல் பொருள் தொழிலை வளரச் செய்வதில் கணிசமான வெற்றியடைந்துள்ளது. இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட தோல்பொருட்கள், காலணிகள், தோல் தயாரிப்புகள் இவற்றின் ஏற்றுமதி அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**முதலிடம் வகிக்கிறது!**

இப்பணியில், சென்னையிலுள்ள விஞ்ஞானத் தொழில்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. தோல் பொருட்கள் பற்றிய 52 ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

**மூவகைப் பிரிவுகள்**

தோல் தொழிலில் குறிப்பிடத்தக்க மூன்று துணைப்பிரிவுகள் உள்ளன அவை:

(1) தோலைப் பதப்படுத்துதல், பூர்த்தி செய்தல்.

(2) காலணிகள் தயாரித்தல்

(3) இதர தோல் பொருட்களைத் தயாரித்தல்.

கிராமப்புறங்களில் தோல்பதனிடுதல், விஞ்ஞான ரீதியில் இல்லாமலும் சிக்கனமின்றியும் செய்யப்படுவதால் பதப்படுத்தப்பட்ட தோலின் மதிப்பு குறைகிறது. தோல் காலணிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தோல் தரக்குறைவானதாகவும், ஒரே ரகமாகவும் உள்ளன. இதனுல் இவற்றின் விற்பனையளவும் கணிசமாகப் பாதிக்கப்படுகிறது.

**வருமானம் அதிகரிக்க!**

ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கிராமங்களில் தோல் பொருள்கள் தயாரிப்பில் பொருள் விரயமாவதைக் குறைக்கவும், அதன் மூலம் சம்பந்தப்பட்ட கைவினைஞர்கள் வருமானத்தையும் அதிகரிக்கவும் முடியும்.

தற்போது பரிசீலிக்கப்பட்டு வரும், தோல் பொருட்களின் தரத்தை அதிகரிப்பதற்கான ஒரு திட்டத்தில், தோல் பொருட்களின் தரத்தை அதிகரித்தல் பதப்படுத்தப்படாத தோலை சிறந்த முறையில் பயன்படுத்துதல், தோல் பதனிடுதல் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், தோல் தயாரிப்பு கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தோல் பதனிடுதல், பூர்த்தி செய்தல், காலணிகள் பற்றிய ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பற்றிய தேசிய கழகத்தின் திட்டக்குழு ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த-தோல் பொருட்கள் வளர்ச்சி உற்பத்தி நிலையங்கள், தொழில் நுட்பத் தகவல் நிலையங்கள் ஆகியவற்றை அமைக்க ஆலோசனை கூறியுள்ளது. மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிகளின் பயனுக தற்பொழுது தோல் பொருட்கள் தயாரிப்பும் பூர்த்தி செய்யப்பட்ட தோலின் தர வளர்ச்சியும் முன்னேறி வருகின்றன.



# உழவர்களுக்கு வேளாண்மைத்துறை அளித்த பொங்கல் பரிசுகள்

அ. வேங்கடராமன் ஐ.ஏ.எஸ்.,
வேளாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு

பார் செழிக்கப் பாடுபடும் உழவர் பெருமக்களுக்கு பொங்கல் புதுநாளில் தமிழக வேளாண் துறையின் பணியாளர்கள் சார்பில் முதற்கண் எங்களது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நன்னாளில் வேளாண்மைத் துறையின் விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும், வரும் ஆண்டிற்காக நாங்கள் தீட்டியுள்ள முக்கிய திட்டங்களையும் மக்கள் மத்தியில் வைக்க விழைகிறேன்.

நெல்லைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்கு உகந்தவை என்று இரண்டு இரகங்களை அறிமுகப்படுத்த உள்ளோம். அவற்றுள் ஒன்று ஐ. ஈ. டி. 1444 (I.E.T 1444). இந்நெல்லின் வயது 115 நாட்கள். 'டி. என். 1' நெல்லையும், கோ. 29 நெல்லையும் சேர்த்து ஒட்டு கட்டியதால் பிறந்தது இந்த இரகம். இந்த இரகம் ஆடுதுறை 31-விட வட ஆர்க்காடு, செங்கை மாவட்டங்களில் அதிக மகசூல் கொடுக்கிறது. இதன் மகசூல் திறன் ஏக்கருக்கு 2830 கிலோ. முன் சம்பா பட்டத்தில் நன்ருகப் பலன் தருகிறது. நெல் சன்ன இரகம்.

மற்றது ஐ. ஈ. டி. 2222 நெல். இந்த இரகம் செங்கை, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு மிகவும் உகந்ததாகத் தெரிகிறது. 105 நாள் வயதுடைய இந்நெல்லும் சன்னமாக உள்ளது. நவரைப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றது. ஏக்கருக்குச் சராசரி 2 டன் மகசூல் திறன் கொண்டது.

நடப்பில் உள்ள டி. 9 உளுந்தைவிட அதிக மகசூல் தரவல்லது பி.எல்.எஸ். 364 என்ற புதிய இரகம். 75 நாட்களில் பலன் தரும். இந்த இரகம் ஏக்கருக்கு சராசரியாக 224 கிலோ மகசூல் தருகிறது. புஞ்சைக்கும், இறவைக்கும் ஏற்றது. எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்றது. இதைப் போலவே பி.எல். 7 என்ற பச்சைப் பயறும் நல்ல மகசூல் தருகிறது. 65 நாட்களில் ஏக்கருக்கு 245 கிலோ மகசூல் தரும் இந்த இரகம் இறவைப் பயிருக்கு மிகவும் ஏற்றது.

திண்டிவனம் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஏ. எச். 6647 என்ற புதிய நிலக்கடலை இரகத்தை வெளியிட உள்ளோம். இக்கடலையின் வயது 100 நாட்கள். ஏக்கருக்கு சராசரி 430 கிலோ மகசூல் தருகிறது. மானாவாரிப் பயிராகவும் பயிர் செய்யலாம். கடலை வேளாண்மையில் இந்த இரகம் மேலும் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணும் என்று எண்ணுகிறேன்.

இதைப் போலவே எள்ளிலும் ஒரு மிகச் சிறந்த இரகத்தை



திண்டிவன நிலையத்திலிருந்து வெளியிடவிருக்கிரேம். எஸ். 1.3240 என்று அழைக்கப்படும் இந்த எள் இரகம் 85 நாள் வயதுடையது. டி. எம். வி. 3 இரகத்தை விட 10 சதம் அதிக மகசூல் தருகிறது. ஏக்கருக்கு சராசரியாக 266 கிலோ மகசூல் தருகிறது. மானாவாரிப் பட்டத்திற்கும் இறவைப் பட்டத்திற்கும் ஏற்றது.

புதிதாக மக்கள் மத்தியில் பரவி வரும் எண்ணெய்வித்து சூரியகாந்தி. கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையம் 115-1 என்ற ஒரு புதிய சூரியகாந்தி இரகத்தைத் தெரிந்தெடுத்துள்ளது. 65 நாளில் மகசூலுக்கு வரும் இந்த சூரியகாந்தி இரகம் ஏக்கருக்கு சராசரி 800 கிலோ மகசூல் தருகிறது. தென் மாவட்டங்களில் அதுவும் குறிப்பாக கரிசல் நிலத்திற்கு இது மிகவும் ஏற்ற இரகமாகத் தெரிகிறது.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது சாகுபடியிலுள்ள 'குப்ரி ஜோதி' உருளைக்கிழங்குஇரகத்தைவிட அதிக மகசூல் தரவல்லவை SI B1016, SLB885என்றரகங்கள்.

இவை இரண்டு இரகங்களும் இலைக்கருகல் நோயை தாங்க வல்லவை. குப்ரி ஜோதி (Kufri Jothi)யை விட 10 சதம் அதிக மகசூல் தருவதுடன் 25 நாட்களுக்கு முன்பாக அறுவடைக்கு வந்துவிடுகிறது.

இந்தப் புதிய ரகங்கள் அனைத்தையும் பல இடங்களிலும் பரப்பிட இவற்றின் விதைகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இவற்றின் தன்மையை ஆய்ந்த பின், அதிக அளவில் சாகுபடி செய்யும்படி வேளாண் [illegible]

ஆராய்ச்சி நிலையங்கள் சில புதிய வழிமுறைகளையும் கண்டு பிடித்துள்ளன. அவற்றுள் சில:

1. சென்ட் ஒன்றுக்கு 2.5 கிலோ அளவில் டை அமோனியம் பாஸ்பேட் நெல் நாற்றங்காலுக்கு இட்டால் அதிக மகசூல் கிடைக்கிறது. நாற்று பறிக்கும் பொழுதும் வேர்கள் சேதமடைவதில்லை. நடவு வயலில் இடும் மணிச்சத்து உரத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.

2. நெல் நாற்றங்காலுக்கு 20-வது நாளில் ஒரு தடவை ஒரு ஏக்கருக்கு 600 கிராம் சத்துப்பொருள் என்ற கணக்கில் குருணை வடிவில் உள்ள Carbofuran, Phorate, Ekalux, Cytrolane போன்ற பூச்சி மருந்துகளை இட்டால் நடவு வயலில் முதல் 25 நாட்களுக்கு பூச்சிகள், பயிரைத் தாக்குவதில்லை.

3. நிலக்கடலைப் பயிருக்கு ஏக்கருக்கு 5 கிலோ வீதம் வேளாண்மை இலாக்காவின் 'மைக்ரோ நியூட்ரியண்ட்' அல்லது நுண்பொருள் 2-ஐ போட்டால் சராசரியாக 17 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது. இந்த நுண்பொருள் கலவைஎல்லா வேளாண்மைக் கிடங்குகளிலும் கிடைக்க வழிவகை செய்துள்ளோம்.

4. எள் பயிருக்கு ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனிஸ் சல்பேட் இட்டால் 10 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

5. உருளைக்கிழங்குப் பயிருக்கு வேளாண்மைத் துறையின் நுண்பொருள் கலவை 3-ஐ ஏக்கருக்கு 3 கிலோ வீதம் இட்டால் குறைந்தது 15 சதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

இந்தப் பல்வேறு புதிய வழிமுறைகளையும் உங்கள் கழனிகளில் பரிசோதித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் 8 உழவர் பயிற்சி நிலையங்கள் செயலாற்றி வருகின்றன. வரும் ஆண்டில் புதிதாக மேலும் ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைக்கப்படும். இது தவிர குடுமியான்மலை பண்ணையில், இருக்கும் பணியாளர்களைக் கொண்டு உழவர் பயிற்சி நிலையப் பணிகளை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நிறைவேற்ற உள்ளோம்.

கம்பு வேளாண்மைக்குப் பெரிதும் இடையூறு விளைவிப்பது Green ear நோயாகும். இந்த நோயை எதிர்த்து நின்று நல்ல



மகசூல் தரும் சக்தி உள்ள இரகங்களை தெரிந்தெடுத்து கோவில்பட்டியில் புதிய ஆராய்ச்சிப் பிரிவைத் துவக்க உள்ளோம்.

வரலட்சுமி பருத்தி தற்பொழுது அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இதற்கு வேண்டிய விதையை தற்பொழுது பிற மாநிலங்களிலிருந்து பெற்று வருகிறோம். விலையும் அதிகமாக உள்ளது. இந்நிலையைப் போக்க, வரும் ஆண்டில் வேளாண் துறையில் நேரிடைப் பார்வையில் வேளாளர் கழனியில் வரலெட்சுமி விதை உற்பத்தி செய்யப் போகிறோம். இத்திட்டத்தின் பயனாக நிச்சயமாக, குறைந்த விலையில் தரமான விதையாகத் தர இயலும் என்று கூறிக் கொள்கிறேன்.

கோ. 6304 போன்ற புதிய கரும்பு இரகத்திற்கு அதிகத் தேவை உள்ளது. தூரமான இடங்களிலிருந்து விதைக்கரணை பெறுவதில் இடர்ப்பாடுகள் இருப்பதால் பல விவசாயிகள் இப்புதிய இரகங்களை வேளாண்மை செய்ய முடியவில்லை. இதைப் போக்க, தமிழகத்தில் 8 இடங்களில் கரும்பு விதைப் பண்ணைகள் அமைக்கப்படும்.

இதைப் போலவே வாழைக் கன்றுகள். அதுவும் குறிப்பாக Cavendish வாழைக்கன்றுகள் வழங்கிட 200 ஏக்கர் பரப்பில் வாழைக்கன்று பண்ணை அமைக்கவிருக்கிறோம். ஒட்டுத் தென்னைக் கன்றுகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்து ஆண்டுக்கு 20,000 கன்றுகள் வழங்கிட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

நெல், சிறுதானியங்கள், மக்காச்சோளம் இவற்றின் நல்ல விதைகள் தொடர்ந்து கிடைத்திட விதைப்பண்ணைகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, வேளாண் டெப்போக்கள் மூலம் சான்றிதழ் பெற்ற விதைகள் மட்டுமே வழங்கிட ஏற்பாடு செய்து வருகிறோம்.

தமிழகத்தின் வேளாண்மை மறுமலர்ச்சிக்கு அடித்தளம் நீரும் நிலமும். கிடைக்கும் நீரை மேலும் நல்ல முறையில் உபயோகப் படுத்திடவேண்டும். நீரை சிராகப் பயன்படுத்திடும் வழி முறைகளை மேலும் ஆராய்ந்திடவும், தெரிந்தவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறிடவும், மதுரை மாவட்டத்தில் மேலூரை அடுத்து 1,000 ஏக்கராவில் செயல்விளக்கப் பண்ணை அமைக்க உள்ளோம். தஞ்சை மாவட்டத்தில் 10,000 ஏக்கராவிலும், சாத்தனூர் பாசனப் பகுதியில் 250 ஏக்கராவிலும் செவ்வனே நீர் பாய்ச்சிடும் திட்டங்களைச் செயலாக்க உள்ளோம்.

எப்பொழுதும் செயலாற்றி வரும் மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்துடன், வரும் ஆண்டில் நெல்லை மாவட்டத்தில் காற்று அரிப்புத் தடுப்புத்திட்டத்தையும் 5,000 ஏக்கராவில் செயலாக்குவோம்.

இதைப் போன்ற பல்வேறு திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றிட வேளாண்மைத் துறையில் நிர்வாக அமைப்பையும் மாற்றி வருகிறோம். இப்பொழுது மண்டலங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு Deputy Director of Agriculture செயலாற்றி வருகிறார். எல்லாப் பயிர்களின் மேம்பாட்டுத் திட்டங்களையும் இவர் ஒருங்கிணைத்து அவற்றின் செயல் திட்டத்தைக் கண்காணிப்பார். இதனால் இலாக்காவின் பணித்திறன் மேலும் அதிகரிக்கும் என எண்ணுகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக வரும் ஆண்டிலும் குடியானவர்களின் நலனே எங்களது தலையாயப் பணி என்பதை மனதில் கொண்டு தொடர்ந்து சீரிய முறையில் வேளாண்மை இலாக்கா பணியாற்றும் என்று இந்நாளில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனல் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன: —

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# இதன் விலை ரூபாய் 5830

குறைந்த விலையில் வீடுகட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு, சென்னையில் நடைபெற்றதையொட்டி, தமிழ்நாடு பொதுப்பணித் துறையினரால் குறைந்த செலவில் கட்டப்பட்டுள்ள வீட்டில் 2750 × 4000 மில்லி மீட்டர் அளவுள்ள அறையும், 2200 × 2700 மில்லி மீட்டர் அளவுள்ள சமையற் கூடமும், 2950 × 1,200 மில்லி மீட்டர் அளவுள்ள தாழ்வாரமும் உள்ளன. மேலும் தண்ணீர் வசதியோடு கூடிய குளிக்கும் அறை ஒன்றும், கழிவிட அறை ஒன்றும் உள்ளன. அலமாரிகள், நிலையடுக்குகள் ( Shelves ), பரண்கள் ( Loft ) போன்ற தேவையான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளதால் தளப்பரப்பு முழுவதும் வசிப்பதற்குக் கிடைக்கின்றன. இவ்வீடு அமைக்கப்பட்டுள்ள பகுதியின் மண் விரிவடையும் தன்மையுள்ளதாகையால், 'Under-reamed pile foundation' முறையில் இவ்வீடு கட்டப்பட்டுள்ளது.

கடைக்கால் சுவரும், தளமும், சுண்ணும்பு சுர்க்கி கலவையைப் (1 : 2 : 6) பயன்படுத்தி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன.

தரைக்கு மேல் உள்ள சுவர் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. சுவர் எழுப்ப, சுண்ணும்பு, சுர்க்கி, மணல் கலந்தகலவையே பயன்படுத்தப்பட்டுள்ளது. உள்பகுதி சுவர்களுக்கு 1:2:8 என்ற கலவையும், வெளிப்பகுதி சுவர்களுக்கு 1:2:6 என்ற கலவையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கதவுகளுக்கும், பலகணிகளுக்கும், இரண்டாந்தர நாட்டு மரங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன. மரச்சட்டங்களுக்குப் பதிலாகச் செங்கல் தூண்களே (Brick piers) பயன்படுத்தப்பட்டுள்ளன.

வாயில், பலகணி ஆகியவற்றின் பகுதிகளுக்கு முன்பே செய்த 40 மில்லிமீட்டர் கனத்தில் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் காங்கிரீட் (1:2:4) பலகைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டுச் செங்கற்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட, வலிவூட்டப் பெற்ற சிமெண்ட் கான்கிரீட் பலகைகளைக் கொண்டு, சாய்வான கூரை அமைக்கப்பட்டுள்ளது.

சுண்ணும்புக் கலவையுடன் செங்கல் ஜல்லிகளைச் சேர்த்து (16:32:100) 10 சென்டிமீட்டர் கனத்திற்கு வீட்டின் தளம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேல் 12 மில்லி மீட்டர் கனத்திற்குச் சிமெண்ட் கலவைச் சாந்து (1:5) பூசப்பட்டுள்ளது.

சுவரின் : வெளிப்புறம் சுண்ணும்புக் கலவையால் (1:2:4 ) 12.5 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு, 2 தடவை சுண்ணும்பு அடிக்கப்பட்டுள்ளது. சுவற்றின் உட்புறம் சுண்ணும்பு, சுர்க்கி கலவையால் (1:2:6) 12 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு 2 தடவை சுண்ணும்பு அடிக்கப்பட்டுள்ளது.

கூரையின் மேற்பகுதி சுண்ணும்பு, சுர்க்கி, கலவையால் (1:2:6) 12 மில்லி மீட்டர் கனத்திற்குப் பூசப்பட்டு, சுண்ணும்பு அடிக்கப்பட்டுள்ளது. அடிப்பூச்சுப் பொருளைக் கொண்டு ஒரு தடவை பூசப்பட்ட பின், கடையில் விற்கும் தயார் நிலைப் பெயிண்ட் 2 தடவை பூசப்பட்டுள்ளது.

குளிக்கும் அறை, கழிப்பறை ஆகியவற்றில் 'பி.வி.சி' குழாயும் பித்தளை நீர்வடி சாதனமும் அமைக்கப்பட்டுள்ளன. கழிப்பறை இந்திய முறையிலே அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டின் இதர சிறப்பு அம்சங்களாவன.

## வீடற்றோர்க்கு வீட்டு மனை

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில், 1,56,526 வீட்டு மனைப் பட்டாக்கள் நிலமற்ற கிராமப்புற மக்கள் மற்றும் நலிந்த பிரிவினர்க்கு ஒப்படை செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்தநாளையொட்டி, 1976, நவம்பர்19-ஆம் நாள், 59,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாருக, 1,22,306 பட்டாக்கள் அந்த நாளில் வழங்கப்பட்டுள்ளன.

(1) நகர்ப்புறத்திற்கும், புற நகர்ப் பகுதிக்கும் ஏற்றது.

(2) இந்திய தட்ப வெப்ப நிலைக்கும், பனிக்கட்டி விழும் பகுதியற்ற மற்ற சாதாரண நிலப்பாகுபாடு உள்ள மண் நிலைமைக்கும் ஏற்றது.

(3) கட்டட தரை மட்டப் பரப்பு—23.85 சதுர மீட்டர்.

(4) தளப் பரப்பு : 19.46 சதுர மீட்டர்.

வீடு கட்டும்போது வழக்கமாகப் பின்பற்றப்படும் முறைகளில் இருந்து பின்கண்ட வகைகளில் புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன.

(1) நாட்டுச் செங்கற்களைப் பயன்படுத்தி நிரப்பப் பெற்ற, வலிவூட்டப் பெற்ற சிமெண்ட் கான்கிரீட் பலகைகளைக்கொண்டு கூரை அமைக்கப்பட்டுள்ளது.

(2) மாதிரி விதித் தொகுப்புகளுக்கு ஏற்றது.

**நன்மைகள் :**

மேற்கூறிய வகையில் வீடு கட்டினால் பின்கண்ட பயன்கள் ஏற்படுகின்றன.

(1) இம்மாதிரி கூரை அமைப்புக்கு நடைமுறையில் உள்ள வலுவூட்டப்பெற்ற சிமெண்ட் கான்கிரீட் கூரை அமைப்புமுறைக்குத் தேவைப்படுவதை விட குறைந்த அளவு எஃகும் சிமெண்டுமே தேவைப்படுகின்றது.

(2) இரண்டாந்தர வகை நாட்டு மரங்களே கதவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டங்கள் உபயோகப்படுத்தப்படவில்லை.

(3) சிமெண்ட் உபயோகிப்பதனால் ஏற்படும் செலவைக் குறைப்பதற்காக உள்ளூரில் கிடைக்கும் செங்கல் ஜல்லி, சுர்க்கி, சுண்ணும்பு ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

(4) கட்டட தரைமட்டப் பரப்பில் குறைந்த நீளச் சுவர்களே போதுமானது.

(5) சமையல் அறையைத் தூங்கும் அறையாகவும் பயன்படுத்தலாம்.

தமிழ்நாடு பொதுப்பணித் துறை கட்டியுள்ள வீட்டின் விலை ரூபாய் 5,830. இவ்வீட்டிற்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளது.

மேற்கூறிய வகையில் தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுள்ள மலிவு விலை வீடு ஏழை எளியவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் ஏற்றதாகும்.

## இவ்வீட்டின் பொருளியல் (ECONOMICS)

| | |
|---|---|
| (1) கட்டட தரைமட்டப் பரப்பின் செலவு மதிப்பீடு ... | ச. மீட்டருக்கு ரூ. 244.44 |
| (2) ஒரு சதுர மீட்டர் கட்டடத் தரைமட்டப் பரப்பிற்குக் கூரை அமைப்பதற்கான செலவு | ரூ. 54.60 |
| (3) சுவர் அமைப்பதற்கான செலவு | ரூ. 16.51 |
| (4) இவ்வீடு உபயோகப்படக்கூடும் என்று எதிர் பார்க்கப்படும் காலம் | 60 ஆண்டுகள் |
| (5) ஒரு சதுர மீட்டர் கட்டடத் தரைமட்டப் பரப்புக்குத் தேவைப்படும் பொருள்கள்:— | |

| | சிமெண்ட் (ச. மீட்டருக்குக் கிலோவில்) | எஃகு (ச. மீட்டருக்குக் கிலோவில்) |
|---|---|---|
| (1) கடைக்கால் ... | 22.00 | 5.57 |
| (2) சுவர்கள் ... | ... | ... |
| (3) கூரை ... | 26,03 | 4.00 |
| (4) வலுவூட்டப் பெற்ற சிமெண்ட் விட்டம் ... | 0.76 | 0.07 |
| (5) தளம் (பூசுவதற்கு) .... | 3,62 | ... |
| மொத்தம் .... | 52.41 | 9.64 |

**பல்வேறு பணிகளுக்கு ஆகும் செலவு**

| | ரூ. பை. |
|---|---|
| (1) வீட்டின் உட்புறத்தில் தண்ணீர் வசதிக்காக... | 25.00 |
| (2) உட்புற சுகாதார வசதிக்காக ... | 140.00 |
| (3) வீட்டினுள் மின்சார வசதி செய்வதற்காக | 450.00 |
| (4) வீட்டின் வெளிப்புறத்தில் தண்ணீர் வசதிக்காக | 120.00 |
| (5) வெளிப்புற சுகாதார வசதிக்காக ... | 102.00 |

## சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு !

தமிழ்நாட்டிலுள்ள கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த மாவட்டத்தில் சிறந்த ஒன்றியத்திற்கான (1975—76) சுழற்கேடயம் பெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது:

1. மணிகண்டம் (திருச்சி)
2. தஞ்சாவூர் (தஞ்சை)
3. அச்சரப்பாக்கம் (செங்கை)
4. வேம்பாக்கம் (வ. ஆ)
5. நெல்லிக்குப்பம் (தெ. ஆ)
6. காடயம்பட்டி (சேலம்)
7. பவானிசாகர் (கோவை)
8. அறந்தாங்கி (புதுக்கோட்டை)
9. பெரியகுளம் (மதுரை)
10. ஸ்ரீவில்லிபுத்தூர் (இராமநாதபுரம்)
11. தூத்துக்குடி (நெல்லை)
12. ஊத்தங்கரை (தர்மபுரி)
13. கிள்ளியூர் (குமரி)
14. கோத்தகிரி (நீலகிரி)

## ஆளுநரின் மூன்றாவது ஆலோசகர்



திரு. வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்.,

தமிழ்நாடு ஆளுநரின் மூன்றாவது ஆலோசகராகத் தமிழ்நாடு அரசு தலைமைச்செயலாளர் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் தாம்பரத்தை அடுத்த பொன்மார் என்னும் கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் 1924 அக்டோபர் 7-ந் தேதி பிறந்தார், தந்தை பெயர் வேதகிரி. அவர் கிராம முன்சீப்பாக வேலை பார்த்தார்.

இவர் முதலில் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் பயின்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., (ஆனர்ஸ்) தேறினார். 1948 மார்ச் 30-ந்தேதி ஐ.ஏ.எஸ்; அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நெல்லூர், கூடூர், விசாகப்பட்டினம், அருப்புக்கோட்டை, சிவகங்கை ஆகிய பகுதிகளில் 1954-ஆம் ஆண்டு வரை சப்-கலெக்டராகப் பணியாற்றினார். 1956-ல் தஞ்சைமாவட்டஆட்சித் தலைவராகப் பொறுப்பு ஏற்றார், சென்னையிலும், டில்லியிலும் துணைச் செயலாளராகவும் பல துறைகளில் பணியாற்றினார். 1965லிருந்து 1967 வரை, தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகப் பணியாற்றினார். அத்துறையின் முதல் இயக்குநர் இவரே.

1976 ஜனவரி மாதம் 31-ந் தேதி தமிழக அரசின் 2-வது செயலாளராகவும், அதே ஆண்டு மார்ச் மாதம் 11-ந் தேதி அன்று தலைமைச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

16-2-77 அன்று ஆளுநரின் ஆலோசகராகப் பதவி ஏற்றார்.

## புதிய தலைமைச்செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர், ஐ. ஏ. எஸ்.



கடந்த 1976-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசின் 2-வது செயலாளராகப் பதவியில் இருந்து வந்த திரு. சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்படடுள்ளார்.

திரு. சி.வி.ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 1926-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி பிறந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து, பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். 1950-ஆம் ஆண்டு இவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1950 முதல் 1952 வரை திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம், அருப்புக் கோட்டை ஆகிய இடங்களில் உதவி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு வருவாய்த் துறையில் முக்கியப் பொறுப்புகளில் இருந்தார். பின்னர் 1956-ல் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1958 முதல் 1964 வரை மத்திய அரசு நிதி அமைச்சகத்தில் துணைச் செயலாளராகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்திலுள்ள இந்தியத் தூதரகத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றினார்.

பிறகு சீரமைப்பு, வளர்ச்சி சர்வதேச வங்கியில் 8 ஆண்டுகள் பணி புரிந்தார். தமிழக அரசு பொதுத் துறையில் பின்னர் கூடுதல் தனிச் செயலாளராக 1 ஆண்டு பதவியில் இருந்தார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

16-2-77 அன்று தலைமைச் செயலாளராகப் பதவி ஏற்றார்.

# ஆளுநர் ஆலோசகர்கள் பொறுப்பேற்கும் துறைகள்

தமிழ்நாட்டில் ஆளுநர் அவர்களுக்கு ஏற்கெனவே ஆலோசகர்களாக இருந்து வரும் திரு பி. கே. தவே, திரு ஆர். வி. சுப்பிரமணியன் ஆகிய இருவருடன், தற்போது மூன்றுவது ஆலோசகராக திரு வி. கார்த்திகேயன் அவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். மூன்று ஆலோசகர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் பின்வருமாறு :

## திரு பி. கே. தவே

1 பொது நிர்வாகம் (சட்டம், ஒழுங்கு, அரசியல், அரசியல் பென்சன், வெளிநாட்டினர்)
2. நிதித்துறை (நிதி, திட்டம்)
3. விவசாயம்(உணவு உற்பத்தி விவசாயச் சீர்திருத்தம், வெள்ள நிவாரணம், பால்வள நிறுவனம்)
4. காடு, மீன் வளம்
5. சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு
6. வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம்
7. வர்த்தக வரி, இந்து அறநிலைய இலாகா (வர்த்தக வரி, பத்திரப் பதிவு, சீட்டுகள் பற்றிய சட்டம்)
8. மதுவிலக்கு

## திரு ஆர். வி. சுப்பிரமணியன்

1. கல்வி, தொழில் நுட்பக் கல்வி
2. சமூக நலம் (அரிஜன நலம், அனாதை இல்லங்கள்)
3. தொழில் துறை (காதி, கிராம கைத்தொழில், கைத்தறி, சுரங்கம், இரும்பு, உலோகக் கட்டுப்பாடு)
4. பொதுப்பணித் துறை (சிறிய நீர்ப் பாசனங்கள், நெடுஞ்சாலைகள்)
5. தொழிலாளர், வேலை வாய்ப்பு
6. கூட்டுறவு
7. வர்த்தக வரி, இந்து அறநிலையங்கள் (இந்து அறநிலைய நிதி, வக்ப் போர்டு)
8. பொது நிர்வாகம் (சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி வாரியம்)

## திரு வி. கார்த்திகேயன்

1. பொதுத்துறை (பொது நிர்வாகம், ஐகோர்ட்டு, மாவட்ட நீதிபதிகள், ஐ.சி.எஸ்., ஐ.-ஏ. எஸ்., மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் பற்றிய விஷயங்கள், தேர்தல், ஆட்சி மொழி, பழைய இராணுவத்தினர்)
2. ஊழியர்கள் நிர்வாக சீர்திருத்தத்துறை
3. உள்ளாட்சித் துறை(போலீஸ், கோர்ட்டுகள், சிறைச்சாலை, இடவசதிக் கட்டுப்பாடு, மோட்டார் வாகனங்கள், சினிமா சட்டம், அகதிகள் நலம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பாஸ்போர்ட்டு, செய்தித் துறை, மக்கள் தொடர்பு)
4. வருவாய்த் துறை (ரெவின்யூ போர்டு, உதவி கலெக்டர்கள், நிலச்சீர்திருத்தம்)
5. சட்டத் துறை.
6. கிராம அபிவிருத்தி, நகரசபை நிர்வாகம் (பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், நகர சபைகள், மாநகராட்சிகள், குடிநீர் வாரியம், பூமிதானம்)
7. போக்குவரத்துத்துறை (போக்குவரத்து, அரசு அச்சகம், எழுது பொருள் துறை, துறைமுகங்கள்.)
8. சட்டசபை.



திரு. கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு அரசின் 2-வது செயலாளர்




| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |

பதிவு எண். M. 8676

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"



"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"







# தமிழரசு

1—3—1977

மலர் : 7 இதழ் : 17


ARCHIVES ... ECMORE,

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| வரலாறு காணாத வறட்சியை வென்றோம்! —கே. வி. ராமநாதன்.. | 2 |
| வேளாண்மை வளர்ச்சியும் உணவு உற்பத்தியும் —கே. வெங்கடேசன்.. | 5 |
| நாட்டு மக்களின் நலன் காக்க கூட்டுறவு செய்த பணி —செல்வி எம். எஸ். ரமேஷ்.. | 10 |
| தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி —டீ. என். சேஷன்.. | 17 |
| அரிசன நலம் பெருக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள் —ஜி. திருமால்.. | 23 |
| அறிவார்ந்த உணவுக் கொள்கை அளித்த அரும் பயன்கள்! —கா. திரவியம்.. | 27 |
| குடிநீர்த் திட்டம்—சிறப்பு மிக்க சாதனைகள்! —டி. வி. அந்தோணி.. | |
| நல்வாழ்வு—குடும்ப நலத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் —பி. முராரி.. | 35 |
| இந்து சமய அறநிலைய நிர்வாகம் —ஜி. எஸ் சேஷாத்திரி.. | 40 |
| குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையில் முன்னேற்றம் —சி. என். ராகவன்.. | 44 |
| தொழிலாளர் நலப் பணிகள் —ஏ. பத்மநாபன்.. | 51 |
| ஈடு இணையற்ற நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுகிறது தமிழ்நாடு! —ரதி வினய் ஜா.. | 55 |
| தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் —சி. ராமதாஸ்.. | 61 |


கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.







# வரலாறு காணாத வறட்சியை வென்றோம்!

கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்.,
இரண்டாவது செயலாளர் மற்றும்
செயலாளர், வருவாய்த் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழகத்தின் பெரும்பகுதியில் 1976-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி நிலைமையை மாநில அரசு சமாளிக்க வேண்டியிருந்தது. 1975-ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை மிகவும் குறைவாக இருந்தது. ஏற்கனவே, 1974-ஆம் ஆண்டிலும் போதுமான மழை இல்லை; இவ்விரு ஆண்டுகளிலும் குறைந்த அளவே மழை பெய்த தன் விளைவாகத் தமிழகத்தின் பெரும் பகுதியில் கடுமையான வறட்சி நிலவியது. இம்மாநிலத்தில் தென்மேற்குப் பருவ மழை வழக்கமாகப் பெய்யும் அளவினைக் காட்டிலும் 1976-ஆம் ஆண்டில் மிகக் குறைவாகப் பெய்ததன் காரணமாக, வழக்கமாகத் தென்மேற்குப் பருவ மழையைப் பெறும் பகுதிகள், கொடும் வறட்சி நிலைமைக்கு உட்பட்டன. தமிழ்நாட்டின் பெரிய பாசனத் திட்டங்களுக்கு (காவிரி, பெரியாறு—வைகை, தாமிரபரணி) நீர் வழங்குகின்ற கேரள, கர்நாடக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையளவும் மிகக் குறைவாக இருந்தமையால் பாசன வசதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன; மாநிலத்தின் பாசனப் பகுதிகள் சிலவற்றில் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இம்மாநிலத்தில், சென்னை, செங்கற்பட்டு நீங்கலாக மற்ற 13 மாவட்டங்களிலும் உள்ள 4,725 கிராமங்களில் துயர்துடைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டி வந்தன. இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் கால் பகுதியினர், அதாவது, ஒரு கோடி மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டனர்.

## ரூபாய் 27 கோடியில் வறட்சி நிவாரணத் திட்டம்.

வரலாறு காணாத இவ்வறட்சியைச் சமாளிக்க, 27 கோடி ரூபாய் செலவிலான வறட்சி நிவாரணப் பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதும், அங்குள்ளோருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இத்திட்டம், போர்க் காலத்தில் செயல்படுவதுபோல, தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது: ஆட்சிப் பொறுப்பில் உள்ள உயரதிகாரிகள் இத்திட்டம் குறித்துத் தொடர்ந்தாற்போல் பெருங் கவனம் செலுத்தி வந்தனர். ஆளுநர் அவர்களும் அவரது ஆலோசகர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று, துயர் துடைப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு, அப்பணியினை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அங்கேயே, அப்போதே தீர்வு கண்டனர். 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்: அவரது பயணம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும் தெம்பூட்டுவதாகவும் அமைந்தது.

கொடிய வறட்சியால் கடுந்துயருற்ற பகுதியினருக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கப்பெற்றது. இதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தச் செலவு 12 கோடி ரூபாயாகும். குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காகக் கீழ்க் காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) துளைக் கிணறு இறக்கும் பெருந் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது; கையால் இயக்கும் குழாய்களுடன் கூடிய 6,711 துளைக் கிணறுகள் இறக்கப்பட்டன. இம்மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவு துளைக் கிணறுகள் இறக்கப்பட்டனவோ அவ்வளவு துளைக் கிணறுகள் சுமார் எட்டே மாதங்களில் இறக்கப்பட்டன; அவ்வகையில் இது பாராட்டுக்குரிய மகத்தான திட்டமாகும். நீர்ப் பற்றுக்குறைப் பிரச்சினையைத் திறம்படச் சமாளிக்க இத்திட்டம் பெரிதும் உதவியது.

(ஆ) இம்மாநிலத்தின் சில பகுதிகளில் நிலத்தடி நீர் உவர்ப்பாக இருக்கிறது. அப்பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, விளாத்திகுளம் பகுதிகளிலும், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் இத்திட்டங்களை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டங்களின் கீழ், கிராமங்களுக்குச் சிறிது தொலைவிலுள்ள நல்ல குடிநீர் நிலையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, குழாய்கள் மூலம் கிராமத்திற்குக் கொண்டுவரப் படும்.

(இ) தமிழ்நாட்டில், துளைக் கிணறு திட்டத்தை அடுத்து, குடிநீர்க் கிணறுகளையும், ஊருணிகளையும் (குளங்கள்) ஆழப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 7,671 கிணறுகளும் 518 ஊருணிகளும் ஆழப்படுத்தப்பட்டன.

வறட்சியின் காரணமாக, உழவுத் தொழிலாளர்கள் பெரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயினர். அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புத் தரும் வகையில் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, சீரான பருவ காலங்களில் பயன்படக் கூடிய சாலைகள் அமைத்தல் ஆகிய துறைகளில் 15 கோடி ரூபாய் செலவில் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன; பாசனம், சாலை அமைத்தல், கசிவு நீர்க்குட்டைகளை அமைத்தல் என்பனவாக 4,600 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றோடுகூட 35,000 எக்டேரில் சம உயர வரப்பு அமைக்கும் பணியும் காடு வளர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. பாசனம், மண்வளப்

35,000 எக்டேரில் சம உயர வரப்புகள் அமைக்கப்பட்டன.





வறட்சியின் காரணமாக உழவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடினர். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக சாலை அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு, காடு வளர்ப்பு முதலிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. சாலை அமைக்கும் பணிகளுக்குக் கடைசி இடம் கொடுக்கப்பட்டது.

வேலை வாய்ப்புக்கும் வழிவகுப்பதுடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி முழுவதிலும் இயன்ற அளவுக்கு நிலையான வளங்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் இத்திட்டமானது, 1976ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து டிசம்பர் திங்கள் வரை சுமார் 150 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்குரிய வேலை வாய்ப்பை அளித்தது. வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை அவ்வப்போது வேறுபட்டது; 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நாள்தோறும் உயரளவாக 1.75 இலட்சம் பேர் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டனர்.

பயிர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டு, அறுவடையின்றி, அவல நிலைமைக்கு உள்ளான உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு, வயல்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில், அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலவரி நிலுவைத் தொகைகள் முதலியவற்றை வசூல் செய்வதை ரத்துச் செய்யவும், ஒத்தி போடவும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த வகையில், 2.18 கோடி ரூபாய் நிலவரி நிலுவை தள்ளுபடி செய்யப்பட்டது; 6.62 கோடி ரூபாய் கடன் நிலுவை வசூல்கள் அடுத்த ஆண்டுக்கு ஒத்தி போடப்பட்டன.

வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு ஆகும் பெருஞ்செலவைச் சரிக்கட்ட மத்திய அரசின் உதவியை மாநில அரசு வேண்டியது. மத்திய அரசும் திட்ட நிதியுதவி முன்பணமாக 15.70 கோடி ரூபாய் வழங்கியது.

வறட்சி நிவாரணப் பெருந்திட்டத்தை மேற்கொண்டதன் பயனாக, வறட்சிக் கொடுமை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்தது. எவரும் பட்டினியால் வாடியதாகத் தகவல் இல்லை. பொறுமைக்குப் பெயர்பெற்ற தமிழக மக்கள் இந்த வறட்சி நிலைமையைத் துணிவுடன் எதிர்த்துப் போராடினர். பல தொண்டு நிறுவனங்களும் வறட்சி நிவாரணப் பணிகளில் பங்கு கொண்டன; அவை நியாய விலையில் கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கியும், லாரிகள் மூலமாக மக்களுக்குக் குடிநீர் வழங்கியும் தொண்டாற்றின. அரசுக்கு மக்கள் முழுமனத்துடன் அளித்த ஒத்துழைப்பின் பயனாக வறட்சி நிலைமையை அரசு திறமையுடன் சமாளித்து வெற்றி கண்டது.



# வேளாண்மை வளர்ச்சியும் உணவு உற்பத்தியும்



கே. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
வேளாண்மைத் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில், வேளாண்மை இன்றியமையாத இடம் பெற்றுள்ளது. இம்மாநிலத்தின் உற்பத்திப் பொருள்களில் 43 சத அளவை வேளாண்மையே அளிக்கிறது. எனவே, நமது பொருளாதார நிலைமை, வேளாண்மையின் அளவையும், அதன் வெற்றியையும் பொறுத்தே அமைகின்றது. ஆனால் வேளாண்மையோ பெரும்பாலும் பருவநிலைமையைப் பொறுத்தே அமைந்துள்ளது. தமிழகத்திலுள்ள பயிரிடத்தக்க 76.5 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் 48 சதம் மட்டுமே பாசன வசதியைப் பெற்றுள்ளது. புன்செய்ப் பயிர் விளையும் எஞ்சிய பகுதி பெருமளவுக்குப் பருவகால மழையை—குறிப்பாக வடகிழக்குப் பருவமழையை—நம்பியே உள்ளது. பாசன வசதியுள்ள நிலங்கள் என்பவை ஆற்றுப்பாசனம், ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவழிகளில் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த நிலங்கள் நல்ல விளைச்சல் காண்பது என்பது தக்க காலத்தில் போதுமான அளவு பெய்யும் பருவமழையைப் பொறுத்தே அமைகின்றது.

## முக்கியப் பயிர்களும், அவைகளின் பரப்பும்

மாநிலத்தில் விளையும் முக்கியமான பயிர்களும், அவை பயிரிடப்படும் பரப்பும் பின் வருமாறு உள்ளன.

| பயிரின் பெயர் | | பரப்பு எக்டேர் (இலட்சம்) |
|---|---|---|
| நெல் | ... | 26.41 |
| சிறுதானியங்கள் | ... | 19.89 |
| பயறு வகைகள் | ... | 7.07 |
| கரும்பு | ... | 1.55 |
| பருத்தி | ... | 2.99 |
| நிலக்கடலை | ... | 12.53 |

பருவகால நிலைமை 1975-76-ஆம் ஆண்டில் மிகவும் சாதகமாக இருந்தது. இச்சாதகமான நிலைமை 1975-76-ஆம் ஆண்டில் ஒளிமயமான பொருளாதார நிலைமை உருவாவதற்கு வழிகோலியது.

### வறட்சி வாட்டியது !

1975-76-ஆம் ஆண்டின் பிற்பாதியில் வேளாண்மைத்துறையின் மூலம் பெற்ற பயன்களை வைத்து மாநில பொருளாதார நிலை, வலிமை பெறத் தொடங்குவதற்கு முன்னதாக, முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு 1976-ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவமழை தவறிய காரணத்தால் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்பட்டது. செப்டம்பர் முதல், டிசம்பர் வரையுள்ள காலத்தில் பெய்கின்ற வடகிழக்குப் பருவமழையே மாநிலத்தின் முதன்மையான பருவமழையாகக் கருதப்படும். என்றாலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையுள்ள காலப் பகுதியில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையின் போது, மாநிலத்தின் நீர்த் தேக்கங்களுக்கு வந்து நிறையும் நீரே, ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வேளாண்மையின் வெற்றியைப் பெரிதும் நிர்ணயிக்கிறது. 1976-ஆம் ஆண்டின்போது, நீர்த்தேக்கங்களின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்திருக்கவேண்டிய தென்மேற்கு பருவமழை, முழுவதாகப் பொய்த்தது. மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளில் பெய்த மழையும் ஒழுங்கான அளவில் பெய்யவில்லை. எனவே, ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் நெற்பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டது. அன்றியும் புன்செய்ப் பயிர்கள் விதைப்பும் தாமதப்பட்டது. எனினும், வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்தமையால் மொத்தத்தில் நல்ல விளைச்சல் காண்பதற்கான வாய்ப்புகள் பெரிதும் ஏற்பட்டன.

### மாற்றிப் பயிரிடும் முறை

மாநிலத்தின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததாலும், வடகிழக்குப்


மாற்றிப் பயிரிடும் முறையினால் மகசூல் பெருகியது!




பருவமழை காலந்தவறிப் பெய்ததாலும், நிலையைச் சமாளிக்க சில உடனடித் திட்டங்களை வேளாண்மைத் துறை உருவாக்கியது. அத்திட்டங்கள் பல்வேறு பகுதிகளுக்குரிய மாற்றிப் பயிரிடும் முறையைக் குறிப்பவை. மாற்றிப் பயிரிடும் முறைத் திட்டம் வகுக்கப்பட்டதும், வேளாண்மைத்துறை அலுவலர்கள் இம்முறையைப் பற்றி நன்கு விளம்பரம் செய்ததும் இப்புதிய பயிரிடும் முறைகளை உழவர்கள் பரந்த அளவில் பின்பற்றியதும், தென்மேற்கு பருவமழை தவறியதால் ஏற்பட்ட இழப்பை பெருமளவு, குறைக்க உதவின. பாதிக்கப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் வழக்கமாகப் பயிரிடும் நெற்பயிருக்குப் பதிலாக குறைவான உழைப்பே தேவைப்படும் பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் முதலியவை பெருமளவு பயிரிடப்பட்டன. காவிரியாறு கடலோடு கலக்கும் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய்ப் பகுதியில் புன்செய்ப் பயிர் போல விதைக்கப்படும் புழுதிச் சம்பா நெல்லையும், புன்செய்ப் பயிர்களான மக்காச்சோளம், கேழ்வரகு, பயறு வகைகள் முதலியவற்றையும் பயிரிட்டதன் மூலம் பெரும்பகுதி நிலங்கள் தரிசாகக் கிடப்பது தவிர்க்கப்பட்டது. மாற்றிப் பயிரிடப்படும் முறைத் திட்டமானது, வறட்சி காரணமாக, பயிரிடப்படும் பரப்பளவு மிகவும் குறைந்து விடாமல் தடுப்பது, கிராமத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வது என்ற இரட்டைப் பயன்களை விளைவித்துள்ளது.

### புன்செய் நிலங்களில் ஆண்டுக்கு இருபோகம் பயிரிடுதல்

நமது மாநிலத்தில் புன்செய் நிலங்களே உள்ள சில பகுதிகளில் பொதுவாக ஆண்டுக்கு ஒரு பயிர் மட்டுமே பயிரிடப்படும்; அத்தகைய இடங்களில் குறுகிய காலத்தில் விளையும் பயிர்களைப் பயிரிட்டும், ஏற்ற வகையில் விதைப்புக் காலத்தை மாற்றியும் ஆண்டில் இருபோகம் பயிரிடும் முறை புகுத்தப்பட்டது. வழக்கமான புன்செய்ப் பயிர்களையே பயிரிட்டு- குறைந்த பலனே காணுகின்ற நிலங்களில்— குறிப்பாகத் தென் மாவட்டங்களின் நிலங் களில்—வீரிய ஒட்டு ரகங்களையும் உயர் விளைச்சல் சிறுதானிய ரகங்களையும் பயிரிடும் முறையை வேளாண்மைத் துறையைச் சேர்ந்த களப்பணியாளர்களால் வெற்றிகரமாக அறிமுகப்படுத்த முடிந்துள்ளது. புன்செய் நிலங்களில் ஆண்டுக்கு இருபயிர்களைப் பயிரிடுவதில் நாம் பெற்றுள்ள வெற்றி, 'புன்செய்ப் பயிர்த் தொழிலில் குறிப்பிடத்தக்கச் சாதனையாகும்.

### பின் பருவம் மற்றும் கோடைத் திட்டம்

நம் மாநிலத்தில் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின் பிற்பாதியில் மழை நன்கு பெய்தது. மிகுதியான நிலப்பரப்பில் பயிரிடுவதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு, வரப்போகும் பின்பருவம் கோடைக் காலத்தின் போது, பயிர் விளைச்சலைப் பெருக்க சிறப்புத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பின் பருவத்தில் வழக்கமாக 5 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்படும். இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ், நிலக்கடலை பயிரிடப்படும் பரப்பை 7 இலட்சம் ஏக்கராக உயர்த்துவதற்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் துன்பங்களைத் தவிர்ப்பதற்கும்—நீக்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமான ஒன்று இராஜபாளையம் வட்டத்தில் மணற்காற்று வீசியதால், மணல் குவிந்து மூடிய 2,572 ஏக்கர் நிலத்தை 45 நாட்களுக்குள் பண்படுத்தியதாகும். வறட்சி நிவாரணப் பணிகள் கிராமப் பகுதிகளிலுள்ள உழவுத் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்புகளை அளித்தன. அவற்றுடன் அப் பகுதிகளில் நீண்டகால வறட்சியினால் விளைந்த தீய விளைவுகளைக் களைவதற்கும் அவை உதவின.

புன்செய் நில உழவர்களுக்கு உதவும் வகையில் மேற்கொண்ட இன்னொரு பய


மிகுபயன் தரும் கே. எம். 1 கம்பு.



வேளாண்மைத் துறையினரின் அயராத முயற்சியால் மணல் குவிந்து மூடிய 2,572 ஏக்கர் நிலம் 45 நாட்களுக்குள் பண்படுத்தப்பட்டது!

னுள்ள பணி, விதைக்கும் கருவிகளைத் தயாரித்து அவற்றை இலவசமாக அவர்களுக்கு வழங்கியதாகும். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், இப்போதுதான் முதன் முதலாக கிராமங்களிலுள்ள கருமார்களையும், தச்சர்களையும் துணைக் கொண்டு விதைக்கும் கருவிகள் 1,000 தயாரிக்கப்பட்டுப் புன்செய் நில விதைப்புக்காகக் கொடுக்கப்பட்டன. இக்கருவிகளைக் கொண்டு புன்செய் நிலங்களில் மிகப் பெரும் பரப்பளவில் மிக விரைந்து விதைக்க முடிந்தது. இதனால், மழை பெய்த பின்னர் — நிலத்தில் ஈரம் உலரும் முன்பாக— விதைக்க முடிந்தால், ஈரத்தன்மையின் பயனை அதிக அளவில் அடைய முடிந்தது. அதற்குப் பெரிதும் உறுதுணையாக அமைந்ததால், இந்த கருவிகளின் பயனை அனைவரும் போற்றினர்.

### சாதனைகள்

இவ்வாண்டின் நிறைவேற்றப்பட்ட சில திட்டங்கள் பற்றிய முக்கிய விவரங்கள் பின் வருமாறு:

| பணி | சாதனைகள் (எண்ணிக்கை) | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| மண்வளப் பாது காப்பு | 78,515 ஏக்கர் | 60.61 |
| கசிவு நீரைத்தேக்கி வைக்கும் குட்டைகள் அமைத்தல் | 226 குட்டைகள் | 47.57 |
| மணல் மூடிய நிலங்களைப் பண்படுத்தல் | 2,572 ஏக்கர் | 11.48 |
| கிணறுகளில் தூர் வாருதல் | 120 கிணறுகள் | 0.43 |
| விதைக்கும் கருவிகளை வழங்குதல் | 1,012 விதைக்கும் கருவிகள். | |

### சிறுபாசனத் திட்டம்

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக ஏற்பட்ட முன்னேற்றங்களாவன:

| | (எண்ணிக்கை) |
|---|---|
| அமைக்கப்பட்ட தனியார் குழாய்க் கிணறுகள் | 2,631 |
| கிணறுகளில் துளை போடப் பட்டவை | 1,692 |
| அமைக்கப்பட்ட வடிமுனைக் குழாய்க் கிணறுகள் | 2,491 |
| ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் | 1,078 |

### இடுபொருள்கள் வழங்குதல்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவைப்படுகின்ற விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், பயிரிடு கடன்கள் ஆகியவை நாடெங்கிலுமுள்ள விவசாயக் கிடங்குகள் மூலம் நேரடியாகவும், ஏனைய முகவரமைப்புக்கள் மூலமாகவும் வழங்கப்பட்டன. நெல் பயிரிடப்படும் நிலப் பரப்பளவு குறைந்துள்ள போதிலும், நடப்பு ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரங்களின் அளவு, கடந்த ஆண்டில் இதே கால அளவில் விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரங்களின் அளவினை ஏறத்தாழ ஒத்ததாக இருந்தது.

### பூச்சிகளும், நோய்களும் கட்டுப்படுத்தப்பட்டன!

பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்குகின்றனவா என்பது பற்றித் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்துள்ளது. பூச்சிகளும், நோய்களும் தாக்கா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளும், அவை தாக்கிய இடங்களில் மருந்து தெளித்தல், முதலான கட்டுப்படுத்




தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மாநிலத்தின் மற்றெல்லா இடங்களிலும் பயிர்களைத் தாக்கி வழக்கமாகத்தொல்லை கொடுக்கிற பழுப்பு நிறத்துப் பூச்சிகள், இந்த ஆண்டில் காவிரி கழிமுகப் பகுதிகளில் உள்ள பயிர்களைச் சேதப்படுத்த முற்பட்டன. ஆனல் தக்க தருணத்தில் நாம் நடவடிக்கை எடுத்தன் விளைவாக அவற்றின் தொல்லை மிகுந்து விடாமல் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டது.

மாநிலத்தின் எப்பகுதியிலும் கடந்த 9 மாதங்களில் பயிருக்குக் கடுமையான தீங்கு விளைவிக்கும் பூச்சிகளோ, நோய்களோ தோன்றவில்லை.

### உற்பத்திப் பெருக்கம்

1975-76-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் அரிசி உற்பத்தி, முன்னெப்போதையும் விட (59.00 இலட்சம் டன்) மிகுதிய இருந்துள்ளது என்பது குறிப்பிடத்த வொன்றாகும். அன்றியும் ஒரு எக்டே உற்பத்தித் திறனும் அந்த ஆண்டில் மிக அ மாகும் (ஒரு எக்டேருக்கு 2,200 கிலே

நடப்பு ஆண்டில் பல்வேறு பயிர்களின் றும் எய்தத் திட்டமிட்டுள்ள பொருள்கள உற்பத்தி அளவுகள் பின்வருமாறு உள்ள

| பயிரின் பெயர் | இலட்சம் (ட |
|---|---|
| நெல் (அரிசி) ... | 63.0 |
| சிறு தானியங்கள் | 18.0 |
| பயறு வகைகள் | 2.7 |
| கரும்பு (வெல்லம்) | 13.9 |
| எண்ணெய் வித்துக்கள் | 13.4 |
| பருத்தி (பேல்கள்) | 3.5 |

பருவ நிலைகள் பாதகமாக இருந்தபோ லும், அரிசியைத் தவிர மற்ற இனங்களில் உ பத்திக் குறிக்கோள் அளவை அடைய முடியு என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுவை பயிரிடும் காலத்தில் கூடுதல் நிலப்பரப்பி நெல் பயிரிடுவதன் மூலம், அரிசி உற்பத் குறிக்கோள் அளவில் ஏற்பட்ட குறைவினை கூட ஓரளவு நாம் சரிக்கட்ட முடியும்.

நடப்பு ஆண்டில் வேளாண்மை உற்பத் யைப் பெருக்கப் பல்வேறு நடவடிக்கைக எடுக்கப்பட்டன. இதனுல் உணவுப் பொரு களின் விலைவாசி உயராமல் ஒரே அளவி இருந்தது. அதன் மூலம் மாநிலத்தின் பொ ளாதார நிலையும் சீரடைந்தது.



# நாட்டு மக்களின் நலன் காக்க கூட்டுறவு செய்த பணி

செல்வி எம். எஸ். ரமேஷ், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
கூட்டுறவுத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 1976-77-ஆம் ஆண்டில் இம்மாநில மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளைப் பெருக்குவதிலும் மேம்படுத்துவதிலும் ஈடுபட்டு, பலதுறைகளில் மிக வேகமான, விரிவான வளர்ச்சியைப் பெற்றது என்று கூறலாம்.

**உறுப்பினர்கள் சேர்ப்பதில் தீவிரம்!**

கூட்டுறவு என்று சொன்னாலே அதன்பொருள், கூட்டுறவுக் கடன் வழங்கு பணிதான் என்று யாவர் மனத்திலும் தோன்றும். தமிழ்நாட்டின் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் ஏறத்தாழ 54 இலட்சம் இருக்கலாம். 31-1-'76-ஆம் நாள் வரையில், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 27.98 இலட்சம் மட்டுமே. எனவே, கூட்டுறவுச் சங்கங்களில் மேலும் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்கும் இயக்கம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் பெருமளவிற்கு வெற்றி பெற்றது. அதன் வாயிலாக, 1976 நவம்பர் 30-ஆம் நாள்வரை கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகிய குடும்பங்களின் எண்ணிக்கை 35.84 இலட்சமாக உயர்ந்தது. கூடுதலாகச் சேர்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 7.86 இலட்சமாகும். இந்த எண்ணிக்கையில் 6.07 இலட்சம் குடும்பங்கள், சிறு உழவர்கள், ஆதாயம் பெறமுடியாத சிறு உழவர்கள், நிலமற்ற ஏழைக் குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.





வேளாண்மைக் கடன்கள் விரைந்து வழங்கப்படுகின்றன!

நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், சமுதாயத்தில் எளிய நலிந்த பிரிவினர்க்கு உதவுவதாகும். அந்த வகையில், இங்கே குறிப்பிட்டுள்ள, சமுதாயத்தின் எளிய, நலிந்த பிரிவினரைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து அதன் பயனடைய வகை செய்ததன் மூலம், அவர்களுக்கு உதவும் நோக்கினை உடைய தலையாய திட்டத்தை நாம் சிறப்பாகச் செயற்படுத்தியுள்ளோம்.

**வேளாண்மைக்குக் கடன்**

உழவர் குடும்பங்களுக்கு வழங்குகின்ற வேளாண்மைக் கடன்களின் அளவையும், கடன் வழங்கப்படுவோர் எண்ணிக்கையையும் உயர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. கடன் வழங்குவதால் விளைகின்ற நன்மைகளும் பெருக வேண்டும்.

1976-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 100 கோடி ரூபாய் மட்டுமே வேளாண்மைக் கடனாக வழங்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் விவசாயிகளுக்கு வேளாண்மைக் கடனாக 115 கோடி ரூபாய் வழங்குவது எனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் தொடங்கி நவம்பர் திங்களுக்குள்ளாக, மொத்தம் 81 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ஏறத்தாழ 46 சதவீதம் தொகை, சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைக் கடன்கள் வழங்கு பணியில் கூட்டுறவுகள் தமது தன்மைச் சிறப்பால் உயர்ந்து விளங்கின என்பதை ஒரு குறிப்பிட்ட பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவு, அந்தப்பயிருக்கு மொத்தக் கடனிலிருந்து ஒரு சங்கம் வழங்கியுள்ள கடன் அளவின் விழுக்காடு ஆகிய வற்றுக்குரிய தொடர்பைக் கொண்டு அறியலாம். எடுத்துக்காட்டாக, சேலம் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கியுள்ள கடன் அளவைப் பற்றிய புள்ளி விவரங்களை ஆய்ந்தால், மேற்சொன்ன தொடர்பின் மூலம் வேளாண்மைக் கடன்கள் வழங்கியதால் விளைந்த பயன்கள் பெருகியுள்ளன என்பதை நன்கு அறியலாம். சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, 1975-ஆம் ஆண்டில், நெல், வேர்க்கடலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கு வழங்கியதைக் காட்டிலும், மரவள்ளிக் கிழங்கு, வாழை, கரும்பு போன்ற பயிர்களுக்கு உயர்ந்த அளவில் கடன்களை வழங்கியுள்ளது. மற்றப் பயிர்க

இந்தப் பயிர்களுக்கே முதலிடம் கொடுத்துக் கடன் வழங்கியதானது, இவை பணப்பயிர்களாதலால் வழங்கிய கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உத்தரவாதம் உள்ளது என்னும் எண்ணத்தில் செய்யப்பட்ட செயல் என்று சிலர் குறைகூறினார்கள். ஆயினும் அக்குற்றச்சாட்டு முற்றிலும் உண்மையே. இக்காரணத்தால், நெல் பயிரிட்டிருந்தவர்கள் கூட, தாம் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளதாகக் கூறிக் கடன் பெற்றனர்.

ஆகவே, கிராம வருவாய்க் கணக்குகளில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு பயிரும் பயிரிடப்பட்டுள்ள சரியான பரப்பளவினைக் கருத்தில் கொண்டு முறையான ஆய்வு ஒன்று கூட்டுறவுத் துறையின் சிறப்பு அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது; ஒவ்வொரு பயிரும், பயிர் செய்யப்பட்டுள்ள சரியான பரப்பளவைச் சரிபார்த்து அந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு பயிருக்கும் கடன் வழங்கும் முறையும் அளவும் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் வகுத்துக் கொண்ட கடன் வழங்குமுறை, சிறப்பானதாகவும் சரியானதாகவும் அமைந்ததைக் கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து

| பயிர் | 1–4–76 முதல் 31–10–76 வரை வழங்கப்பட்ட கடன்கள். | | 1–4–75 முதல் 31–12–75 வரை வழங்கப்பட்ட கடன்கள். | |
|---|---|---|---|---|
| | பரப்பு (ஏக்கரில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) | பரப்பு (ஏக்கரில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) |
| மரவள்ளிக் கிழங்கு | 9,848 | 83.71 | 40,742 | 339.37 |
| கரும்பு | 6,351 | 76.58 | 8,087 | 98.98 |
| நெல் | 19,492 | 137.93 | 2,139 | 11.51 |
| நிலக்கடலை | 30,173 | 102.1[illegible] | [illegible],566 | 7.83 |
| வாழை | 880 | 21.06 | 5,039 | 62.[illegible] |



### செயல்படாத சங்கங்கள் கலைக்கப் பட்டன !

கூட்டுறவுத்துறையின் தன்மைச் சிறப்பு உயர்ந்து விளங்க எடுக்கப் பட்ட, நடவடிக்கைகளில் குறிப் பிடத்தக்கவொன்று, ஆதாய மின்றித் தனித்தியங்க முடியாம லும் எவ்வகையிலும் செயல் படாமலும் இருந்த கூட்டுறவுச் சங்கங்களைக் கலைப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட 'களை யெடுப்பு' நடவடிக்கை ஆகும். களையெடுப்பு நடவடிக்கையை, எடுத்துக்காட்டு ஒன்ருல் விளக்க லாம். இறைவைப் பாசனச் சங் கங்கள் என்ற பெயரில் 2,442 சங்கங்கள் இருந்தன. இவற்றில் மிகப் பெரும்பாலானவை செயல் படத் தொடங்கவே இல்லை. இவ்வளவு எண்ணிக்கையில் 123 சங்கங்கள் மட்டுமே ஆதாயத் துடன் செயல்படுவதற்கான சிறி தளவு வாய்ப்பினைப் பெற்றிருந் தன. இந்த 123 சங்கங்கள் நீங்க லாக எஞ்சிய 123 சங்கங்களையும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அண்மையில் தமிழ்நாடு கூட்டு றவுச் சங்கங்கள் சட்டத்தையும் அரசு திருத்தியுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் சிலவற்றை ஒன்ருக இணைப்பது, பொது மக்கள் நல னுக்குத் தேவையான ஒன்ருக இருப்பின், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் விரைவாக அச்சங்கங் களை இணைப்பதற்கு இச்சட்டத் திருத்தம் உதவுகிறது.

மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் பணியில், கூட்டுறவுச்சங்கங்கள் தொடர்ந்து முதன்மையான பங்கினை ஆற்றி வந்துள்ளது. இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் சில்லறை விற்பனைக் கடைகள் 9,000 உள் ளன. அவற்றில் 7,000 சில்லறை விற்பனைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின் றன. இன்றியமையாப் பண்டங் களை வழங்கும் பணியில் தொடக் கச் சங்கங்கள் மேலும் குறிப் பிடத்தக்க சிறப்பான பங்கினை ஆற்ற உதவுவதற்கு அரசு முன் வந்துள்ளது. இச்சங்கங்கள் பயன் கொள்வோர்க்கு இன்றியமை யாப் பண்டங்களை வழங்கும் வாணிகத்திற்கென, மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ஏழு கோடி ரூபாய் அளவிற்கு வாங்கியுள்ள கடன்களைத் திருப் பிக் கொடுக்க அரசு உத்தரவாத மளித்துள்ளது.

### நுகர்வோர் நலன் காக்கும் திட்டம்

'கிராமப்பகுதி வாழ் நுகர் வோர் திட்டம்' என்னும் ஒரு திட்டத்தை தேசியக் கூட்டுறவு வளர்ச்சி மன்றம் மேற்கொண் டுள்ளது. அரசு இத்திட்டத்தை யும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. மொத்த விற் பனைப் பண்டகசாலைகளின் பங்கு மூலதன அளவை உயர்த்த இத் திட்டம் வழி வகுக்கிறது. அன்றி






யும் அவை தமக்கென மேசை, நாற்காலி முதலிய சாமான்களை வாங்கிக் கொள்ளவும், சரக்கு களை விரைந்து எடுத்துச் செல் வதற்கு வண்டியொன்று வாங்க வும் நிதியுதவி அளிக்கிறது. இந்தத் திட்டங்களின் கீழ் மொத் தம் 10 செயல் திட்டங்கள் தொடர்பாக 13.88 இலட்சம் ரூபாய் செலவிட 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அனுமதி வழங்கப்பட்டது. இதன் மூலம், 232 தொடக்கச் சங்கங்கள் நுகர் வோர் மொத்த விற்பனைப் பண் டக சாலைகளுடன் இணைக்கப்பட் டன. இத்தகைய மேலும் 15 செயல் திட்டங்களில் மொத்தம் 18.86 இலட்சம் ரூபாய் நிதி யுதவி வழங்கிடவும் இதன் மூலம் 325 கிராமக் கடன் வழங்கு சங்கங் களையும் 12 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளையும் இணைக்க வும் அண்மையில் அனுமதி வழங் கப்பட்டுள்ளது. மேலும் 43 நுகர்வோர் கூட்டுறவுச் சங் கங்களுக்குத் தொடக்கச் செலவுப் பணமாக 29 இலட்ச ரூபாய் வழங்க இசைவளிக்கப்பட்டது; அச்சங்கங்கள் இன்றியமையாப் பண்டங்களை விற்பனை செய்யும் பொருட்டு, கடனுதவியளிக் கின்ற ஏனைய வங்கிகளிடமிருந்து பெருமளவில் வங்கிக்கடன் பெறு வதற்கு இந்தப் பணம் உதவும்.

நுகர் பொருள் விற்பனை-வாணிகத்தில் கூட்டுறவுச் சங் கங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பு டைய பங்கினை ஆற்றியுள்ளன என்பது தெளிவாகப் புலப்படு கிறது. எவ்வாறெனில், கூட்டு றவுப் பண்டகசாலைகள் மூலமாக 1974-'75-ஆம் ஆண்டில் விற்பனை யாகிய நுகர் பொருட்களின் மதிப்பு 120.93 கோடி ரூபாய் அளவுக்கே இருந்தது; பின்னர் 1975-'76ஆம் ஆண்டில், இந்த அளவு 144.65 கோடியாக உயர்ந் தது; 1976-ஆம் ஆண்டில், ஜூலைத் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரையிலான கால அள வில், இந்த அளவு 48.65 கோடி ரூபாயை எட்டியது. விற்பனை யளவு உயருகின்ற இந்த வேகம் நீடிக்குமானல், 1976-'77ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டு றவுச் சங்கங்களின் மொத்த வாணிகத் தொகை 200 கோடி ரூபாயை எட்டவும் கூடும்.

### மலிவு விலைத் துணி விற்பனை !

தமிழ்நாட்டில் விலைக்கட்டுப் பாடு குறிக்கப்பட்ட மலிவு விலைத் துணி, கூட்டுறவுச் சங்கங்கள் மூல மாக மட்டுமே விற்பனை செய்யப் படுகின்றன. இவ்வாறு கட்டுப் பாட்டு விலைத் துணியை விற்பனை [illegible] சில்லறை விற்பனைக் கடைகள் 1976-ஆம் ஆண்டில் தொடக்கத்தில் 4,276 இருந்தன இந்த எண்ணிக்கை 1976-ஆம் ஆண்டு இறுதியில் 4687 ஆக உயர்ந்தது. இவற்றில் 4,007 சில்லறை விற்பனைத் துணிக் கடைகள் கிராமப்பகுதிகளில் உள்ளன. 1976-ஆம் ஆண்டில், பிப்ரவரியில் தொடங்கி நவம்பர் முடிவிற்குள்ளாக, இக்கடைகள் மூலமாக 15,342 பேல் துணி, விற்பனை செய்யப்பெற்றது. விலைக்கட்டுப்பாட்டுத் துணியை விற்பனை செய்வதற்காகக் கூடுத லான நடைமுறை மூலதனத்தை திரட்டுவதற்காக, இந்திய அர சும் கூட, 35 கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தொடக்கச் செலவுப் பணமாக 9.28 இலட்சம் ரூபாய் வழங்க இசைவளித்துள்ளது.



மலிவு விலைத் துணிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே வழங்கப்படுகின்றன!

### மாணவர் பெற்ற பயன் !

ஆண்டின் தொடக்கத்தில், நுகர்வோர்க் கூட்டுறவுச் சங் கங்கள் மூலமாக 195 மாணவர் விடுதிகளுக்கு மட்டுமே இன்றி யமையாப் பண்டங்கள் வழங்கப் பட்டன. 1976-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் வாக்கில் இவ் வாறு பண்டங்கள் வழங்கப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை 24[illegible] ஆகவுயர்ந்தது. அதனுல் விடுதி மாணவர்கள் செலுத்த வேண்டிய உணவுக்கட்டணம் பெருமளவில் குறையலாயிற்று. அத்துடன் வாங்கப் பெற்ற பண்டங்கள் தர மானவையாக-கலப்படமற்றவை யாக இருந்தன என்பதால் மாண வர்களும் மன நிறைவடைந்தனர்.

மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் வசதி பெருமலும்

மாணவர் விடுதிகளில் உணவுக் கட்டணம் குறைந்ததற்கு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களே காரணமாகும்!



கட்டணத்தில் உணவு டியாமலும், உள்ள கல் மாணவர்களுக்கு உதவு ன, கல்லூரிகளிலுள்ள ார் கூட்டுறவுப் பண்ட களின் மூலமாக பொதுச் கூடங்களை அமைக்க ம் ஆண்டில் நடவடிக்கை கப்பட்டுள்ளது. அண் மதுரையிலுள்ள தியாக பொறியியற் கல்லூரியில் ய 'கல்லூரி மாணவர் சமையற் கூடம்' ஒன்றை ற்கு இந்திய அரசு அனு ங்கியுள்ளது. இதைப் ற, மேலும் பல பொதுச் கூடம் இம்மாநிலத்தி ல்லாக் கல்லூரிகளிலும் வாய்ப்பு உள்ளது.

**களை விற்பதில் கூட்டுறவின்**

நிலத்தின் கூட்டுறவு திற்குப் புகழ் சேர்க் கையில் அமைந்த குறிப் க முதன்மைச் சிறப்பு இன்னொரு நடவடிக்கை பாடநூல் நிறுவனம் பாடநூல்களைக் கூட்டு ங்கங்கள் வாயிலாக விற் ய்து வருதல் ஆகும். இது காறும் அரசுப் பாடநூல்களை விற்பனை செய்யும் பணியைத் தனிப்பட்ட வணிகர்களே செய்து வந்தனர். 'அவர்கள் உரியநேரத் திற்குள் பாடநூல் நிறுவனத்திடமிருந்து புத்தகங்களை எடுத்து வருவதில்லை-தாமதித்தே எடுத்து வருகின்றனர்' என்றும் 'அதனால் கல்வியாண்டு தொடங்கிய பின் உரிய காலத்திற்குள் புத்தகங்கள் கிடைக்கத் தவறின' என்றும் புகார்கள் இருந்ததால் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தச் சிரமமான பணியைத் தாமே மேற்கொள்ள முன்வந்தன.

கூட்டுறவுச் சங்கங்கள் இப் பணியை மேற்கொண்ட முதல் ஆண்டிலேயே 2.55 கோடி ரூபாய் மதிப்புள்ள 169 இலட்சம் புத்தகங்கள் கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக விற்பனையாயின.

புத்தகங்களைக் கிடங்கிலிருந்து எடுத்து வருவது, சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கொடுப்பது, அங்கு மாணவர்களுக்கு விற்பது ஆகிய இந்தப் பணிகள் யாவும் உரிய காலத்திற்குள், பள்ளிகள் கோடை விடுமுறைக்குப் பின் திறக்கப்படுவதற்குப் பல நாட்கள் முன்னதாகவே செய்து முடிக்கப்பட்டன.

இந்திய அரசிடமிருந்து சலுகை விலையில் 400 டன் பேப்பர் வாங்கப்பட்டு அவை பாடக் குறிப்பு ஏடுகளாக உருவாக்கப் பெற்று, சலுகை விலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

**ரொக்கக் கடன்**

தமிழ்நாட்டில் கடன் நிவாரணச் சட்டம், கடன்வசூல் ஒத்திவைப்புச் சட்டம் ஆகியவை செயல்படுத்தப் பட்டுள்ளன. அதன் விளைவாக, அடகுக்கடைக்காரர்கள் வட்டிக்குக் கடன் கொடுப்போர். ஆகியவர்களைப் போல, ரொக்கக் கடன் தரும் தொழிலை வழிவழியாகச் செய்து வருவோரிடமிருந்து ரொக்கக் கடன் வசதி கிடைக்கும் அளவு குறைந்து விட்டது. இதனால், ரொக்கக் கடன் வசதியைத் தருகின்ற பொறுப்பானதும், சங்கடங்கள் நிறைந்ததுமான பணியை ஏற்கின்ற பெரிய பொறுப்பு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டது.

கூட்டுறவு நகர வங்கிகள் 1-2-76இல் தொடங்கி 30-11-76 ஆம் நாள் வரையிலான கால அளவில், 3.45 இலட்சம் பேருக்கு

மாணவர்களுக்குரிய பாடநூல்களை விற்பனை செய்வதிலும்
கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றன!





சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகிறது.

20.12 கோடி ரூபாய், நகைகள் ஈட்டின் பேரில் கடனாக வழங்கியுள்ளன.

கிராமப்பகுதிகளில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது கிளைகள் மூலமாகவும் பெரிய, கூட்டுறவு வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாகவும் ரொக்கக்கடன்கள் வழங்கும் அளவை உயர்த்தியுள்ளன.

இச்சங்கங்கள் 1-2-76 முதல் 30-11-76 வரையிலான கால அளவில் 1.88 இலட்சம் பேருக்கு 11.22 கோடி ரூபாய் அளவிற்கு நகை ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன. இவ்வாறு பார்த்தால் 1976, பிப்ரவரி முதல் நாளுக்கு முன்னர், எல்லாக்கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கிய நகை ஈட்டுக் கடன்கள் மாதமொன்றுக்குச் சராசரியாக 1.82 கோடி ரூபாய் அளவிலேயே இருந்தது என்பதும் அந்நாளுக்குப் பின்னர் நவம்பர் திங்கள் வரையிலான கால அளவில், திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்ட நகை ஈட்டுக் கடன்களின் சராசரி அளவு 3.13 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதையும் அறியலாம்.

**நலிந்தவர்களுக்குச் செய்த நற்பணி!**

உழவர் சமுதாயத்தில் எளிய, நலிந்த பிரிவினருக்குக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாக நபர் ஜாமீன் பேரில் ரொக்கக் கடன்கள் வழங்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. உழவர் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரான சொந்தமாக பாசன வசதியுடைய 2.5 ஏக்கர் நிலம் அல்லது அதற்குக் குறைவான நிலம் உடைய உழவர்கள், அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உடைய உழவர்கள், நிலமற்ற குத்தகைதாரர்கள், விவசாயக் கூலிகள், கைத்தொழிலாளர்கள் ஆகியோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரொக்கக் கடன் வசதி பெறுகின்றனர். இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் ரூ. 75 முதல் ரூ. 250-க்குள் தான் வழங்கப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கடனும் திருமணங்கள், மருத்துவச் செலவு, ஈமச் சடங்குகள் போன்ற இன்றியமையாத நிகழ்ச்சிகளுக்காக மட்டுமே வழங்கப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் ரொக்கக் கடன் வசதிகளுக்கு இந்திய ரிசர்வு வங்கி மறு நிதியுதவி அளிப்பதில்லை.

ஆயினும், சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்க்கு ரொக்கக் கடன் வழங்குவது என்ற தேசிய பொறுப்புணர்ச்சியைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் இந்தச் சுமையான பொறுப்பைத் தயங்காமல் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. 1975-76-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் ரொக்கக் கடன் வசதி வகையில் 22 கோடி ரூபாய் மட்டுமே வழங்கின; 1976-77-ஆம் ஆண்டில் இவ்வகையில் இவை 40 கோடி ரூபாய் முதல் 45 கோடி ரூபாய் வரையில் வழங்கக் கூடும். இப்பணியில், தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது என்பது பெருமை தருவதாகும்.



நலிந்த பிரிவினரின் வாழ்வில் வளம் சேர்க்க, நடப்பு ஆண்டில் 40 முதல் 45 கோடி ரூபாய் கூட்டுறவு மூலம் வழங்கப்படவிருக்கிறது.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட
11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி!

டீ. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
தொழில் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு 1950-65-ஆம் ஆண்டுகளில் தொழில் துறையில் குறிப்பிடத்தக்கதொரு பெருமுன்னேற்றத்தைப் பெற்றிருந்தது. இவ்வாண்டுகளில் பல்வகைத் தொழில்கள் விரிவுபடுத்தப்பட்டன. ஒவ்வொரு தொழிலும் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்தது. புதிய பொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நவீன இயந்திரங்களும் உருவாக்கப்பட்டன. இந்த வளர்ச்சி, குறிப்பிட்ட துறைக்குள் நின்றுவிடாமல், பொதுத்துறை, தனியார்துறை என இரு துறைகளிலும் ஏற்பட்டது. அதுபோல், சிறுதொழில் துறையும் வளர்ச்சி அடைந்துள்ளது. தொழில் முனைவோர் திறம்படச் செயலாற்றவும், தொழில் புரியவும் ஊக்கமளிக்கப்பட்டனர். மாநில அரசும் அவர்கட்குப் பேராதரவு அளித்துத் தொழில் துறையை வளர்த்தது. அனைத்திந்தியாவிலும் தமிழகம் தொழில் துறையில் முக்கியமானதோர் இடத்தை வகித்து வந்துள்ளது. சிமிட்டித் தொழில், மோட்டார் வண்டிகளுக்குத் தேவைப்படும் துணைப்பொருட்கள் தயாரிப்பு, சிறு பொறியியல் தொழில்கள் ஆகிய தொழில்களில் தமிழகம் சிறந்து விளங்கியது.

### தொழில் வளர்ச்சியைத் தூண்டிடும் புதிய முயற்சிகள்

இருந்தபோதிலும், கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டின் அளவு குறைந்துள்ளது. பெருமளவில் மின்வெட்டுச் செய்ய நேரிட்டதும், பல தொழில் உற்பத்திப் பொருட்களுக்கும், நுகர்வோர் பொருட்களுக்கும் போதுமான அளவுக்குத் தேவை ஏற்படாதிருந்ததும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பின்னடையக் காரணமாய் அமைந்தன. இந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பின்னர், தொழிலைத் தொடங்க ஊக்கமளிப்பு



தும், புதிய துறைகளில் தொழில்கள் தொடங்குவதற்கு ஆராய்ந்து வழி காண்பதும் நம் முன் நிற்கும் பெரும் பணிகளாக அமைந்தன. தொழில் வளர்ச்சி வீதம், முன்பு போல் மீண்டும் உயர்ந்திடச் செய்யும் பொருட்டு சரியான நெறியில் முயற்சிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு துறையிலும் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவை எவையெவை எனக் கண்டறிய வேண்டியிருந்தது. இப்போது நம்மிடம் இருக்கின்ற ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி, மிக உயர்ந்த உற்பத்தித் திறன் அளவை அடைய வேண்டும் என்பதில் ஐயமில்லை. கனி வளத்தைப் பொறுத்த மட்டில், நாட்டின் மற்றப் பகுதிகளில் கனி வளம் மிகுதியாக இருப்பது போல் தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படுகிற உயர்ந்த பயிற்சியும் கட்டுப்பாடும் உடைய மனித ஆற்றல், மிகுந்த அளவில் இருக்கிறது. தொழில் முனைவோர் இங்குள்ள ஏராளமான மனித ஆற்றலைக் கொண்டு தொழிலைத் துணிந்து தொடங்கலாம். அதன் பின்னர் மேம்பட்ட தொழில் நுட்பத் திறனைப் பயன்படுத்துகிற அளவைப் படிப்படியாக உயர்த்தித் தொழிலைப் பெருக்கலாம்.

உயர்ந்த நுட்பத்திறம் கொண்ட பொறியியல் பொருட்கள், அணுவியல் பொருட்கள், அடிப்படையான நேர்த்தியான ரசாயனப் பொருட்கள், மேம்பட்ட தொழில் நுட்பத்திறம் வாய்ந்த நவீன இயந்திரங்கள், நிறைவு பெற்ற தோல், தோல் பொருள்கள் போன்ற உயர் மதிப்பு வாய்ந்த உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களில் நாம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதையும் இவற்றால் அறியலாம். மூலப்பொருட்களையும், ஓரளவு வேலை நிறைவு பெற்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்வதை விடுத்து, முழுமையாக வேலை நிறைவு பெற்ற பொருட்களையே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்கின்ற தேசியக் கொள்கையை நோக்கி மாநில அரசு நடைபோடுகின்றது.

### தோல் தொழில் வளர்ச்சி

அதற்கிணங்க, மாநில அரசுத் துறை நிறுவனங்கள் தமது நாட்டத்தைச் செலுத்தி முன்னேற்ற விழைந்துள்ள தொழில்களில் ஒன்று, தோல் தொழிலாகும். இந்தத் தொழில் நமக்கு மிக உயர்ந்த அளவில் அந்நியச்



முடிவு செய்யப்பட்ட தோல் தயாரிப்பதற்கான வசதிகள் தமிழ்நாட்டில் பெருமளவில் உருவாக்கப்படவிருக்கின்றன.

செலாவணியைப் பெற்றுத் தருகிறது. மேலும் சமூகத்தில் நலிந்த பிரிவினர்களைச் சேர்ந்த 5,00,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

நாட்டின் தோல் தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு தமிழ்நாட்டில் மட்டும் அமைந்துள்ளன. ஏற்றுமதியில் நமது மாநிலத்தின் பங்கு 85 சதவீதமாக உள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 600 கோடி ரூபாய் அளவுக்கு வேலை நிறைவு பெற்ற தோலை ஏற்றுமதி செய்வதெனத் தேசிய அளவில் ஏற்றுமதி இலக்கு குறிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய வேண்டுமெனில், தோலைப் பதனிட்டு வேலை நிறைவு செய்யும் வசதிகள் தமிழ்நாட்டில் பெரும் அளவில் உருவாக்கப்படவேண்டும். மத்திய அரசு 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்து, தமிழ்நாட்டில் பணி வசதி நிலையம் ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளன.

அதே நேரத்தில், அம்மாதிரியான பணி வசதி நிலையங்கள் தேவைப்படுகின்ற 10 இடங்களை மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மாநில அரசு ஐந்து பணிவசதி நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசின் உதவியை முதலீடாகப் பயன்படுத்திக் கொள்ளக் கருதியது. தொழில் கூட்டுறவு நிலையங்களாக நடைபெறுகின்ற முறையில் அவை நிறுவப்படும்.

### மின்னணுவியல் துறைக்கு ஊக்கம்

சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழில்வளம் காண அரசுத்துறை நிறுவனங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பிறிதொரு தொழில், மின் அணுவியல் தொழிலாகும். இத்தொழில் துறையில் முறையாகவும், விரைவாகவும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை வகுப்பது இன்றியமையாதது என அரசு உணர்ந்தது. அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் மின் அணுவியல் தொழில்களை நிறுவுவதற்கான திட்டங்களும் இத்திட்டத்தில் அடங்குவன. தவிரவும், தனிப்பட்ட தொழில் முனைவோருக்குப் பண வசதியளித்து ஆதரவு அளிக்கவும் வேண்டியிருக்கும். இன்னின்ன பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு இவ்வளவு மனித ஆற்றல் வேண்டும் என்பனவும் தேர்ந்து குறிப்பிடப்படும். இத்திட்டம் மின் அணுவியல் தொழிலுக்கு மட்டும் அல்லாமல், சாதனங்கள் தொழில் நுட்ப இயல் கருவிகள் சோதனை, உற்பத்தி வளர்ச்சி, தரக்கட்டுப்பாடு ஆகியன போன்ற மின்னணுவியல் தொழிலுடன் சார்புள்ள தொழில்களுக்கும் தற்போதுள்ள தொழிற்சாலை வசதிகளையும் கட்டிடங்கள்-தகவல்-போக்குவரத்துச் சாதன அமைப்பு வசதிகளையும் நாம் ஏற்படுத்தும் வகையில் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் குறிக்கோள்களுடன் அரசு 1976-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் குழு ஒன்றை அமைத்தது, இக்குழு இப்போது தனது அறிக்கையை அரசுக்குத் தந்துள்ளது. இந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. அரசு ஒப்புதல் அளிக்கின்ற பரிந்துரைகள் விரைவாக நிறைவேற்றப்படும்.

மின்னணுவியல் துறை தமிழ்நாட்டில் முன்னேறி வருகிறது.





ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் பெருமளவில் தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

### சிறுதொழில்கள் பெருகுகின்றன!

நிறுவன அமைப்பினையுடைய பெரிய, நடுத்தரத் தொழில்கள், அரசின் நாட்டத்தைப் பெற்றிருக்கும் அதே நேரத்தில், கூடவே சிறு தொழில்களின் விரைவான வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் ஏற்கெனவே ஏறக்குறைய 38,000 பதிவு செய்யப்பட்ட சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சில தொழிற்சாலைகள் இயங்காமல் இருக்கின்றன. அவை இயங்காமல் இருக்கின்ற நிலைமைக்குரிய

காரணங்களால், [illegible] வசதிகள் போதாமை, மூலப் பொருள் பற்றுக்குறை, நிதி, விற்பனை, நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவையும் அடங்கும். அவற்றில் ஒரு சில சிறு தொழிற்சாலைகள், பற்றுக்குறையாகவுள்ள மூலப் பொருள்களைப் பெறுவதற்கு வழி வகுக்கும் பொருட்டு, நிறுவன அமைப்புடைய பெருந்தொழில் அமைப்பில் கொண்டு வரப்பட்டன. சிறுதொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரூட்டுவதற்கான அவற்றின் ஆற்றலை மதிப்பிட்டறியவும், அப்பிரிவுகளில் இயங்காமல் கிடக்கும் சிலவற்றை இயங்கச் செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதற்காகவும் சிறுதொழில் பிரிவுகளைப் பற்றிய விரிவான ஆய்வு ஒன்று நடைபெற்று வருகின்றது. கடந்த ஒரு சில திங்களுக்கு முன் தொடங்கப்பட்ட இந்த ஆய்வு இப்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய சிறு தொழில் பிரிவுகளைத் தொடங்கும் விரைவு இயக்கும் அண்மையில் முடிவுற்றது. இவ்வியக்கத்தின்போது 8,000-க்கு மேற்பட்ட புதிய சிறு தொழிற் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன. இவை எல்லா



புத்தம் புதிய சிறு தொழில்கள் நித்தம் மலருகின்றன!

மாவட்டங்களிலும் பரவலாக அமைந்துள்ளன. புதிய சிறு தொழில்களைப் பதிவு செய்வது என்பது முதல் நடவடிக்கை மட்டுமே எனவும், இந்தச் சிறு தொழில் பிரிவுகள் யாவும் உற்பத்தி செய்யும் தகுதி வாய்ந்தவையாக மாற்ற, மிகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் எனவும், தொழில் துறை மிக நன்றாக அறியும். இந்த முயற்சிகள் சுறுசுறுப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடங்கள், சாலைகள், செய்திப் போக்குவரத்துத் தொடர்புக்குரிய இன்றியமையா அடிப்படை வசதிகள் போன்றவை இச் சிறு தொழில் பிரிவுகளுக்குச் செய்து தரப்படுகின்றன. மூலப்பொருட்களும் வழங்கப்படுகின்றன.

### கைத்தறித் தொழில்

இருபது அம்சத் திட்டத்தில் இன்றியமையாத அம்சமாகக் கருதப்படுகின்ற கைத்தறித்துறையின் வளர்ச்சிக்காகப் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் உள்ள நாலரை லட்சம் நெசவாளர்களில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டவர்கள். அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் மேலும் 30 சதவீதத்தினர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிடுவர். நெசவாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கைத்தறிக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்களான சாயங்கள், இரசாயனப் பொருட்கள், செய்முறை வசதி முதலியன கிடைப்பதற்கு வழி வகுக்கப்பட்டு வருகிறது. 'கோ-ஆப்டெக்ஸ்' எனப்படுகின்ற கூட்டுறவு கைத்தறி விற்பனை நிறுவனம் தனது ஆண்டு வணிகத் தொகையை 16 கோடி ரூபாயிலிருந்து 25 கோடி ரூபாயாக உயர்த்தும் வகையில் விற்பனையளவு பெருகுமாறு அதன் செயல்திறன் முடுக்கி விடப்பட்டுள்ளது. கரூர், ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் கைத்தறிகளுக்காகப் புதிய திட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திராத மற்ற நெசவாளர்களுக்குப் பயன் தரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



தமிழ்நாட்டின் கைத்தறிப் பட்டுப் புடவைகளை அயல்நாட்டு ஆரணங்குகளும் விரும்பி வாங்குகின்றனர்!

**கைத்தறி நெசவாளர்களின் தேவைகள் கூட்டுறவின் மூலம் நிறைவு செய்யப்படுவதால், கைத்தறித் தொழில் முன்னேறுகிறது.**



### பிரச்சினைகளைத் தீர்க்க......

பல்வேறுபட்ட புதிய துறைகளில் தொழில் வளர்ச்சியைப் பேணி வரும் தறுவாயில் தற்போதுள்ள தொழில்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மாநில அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. நலிந்த நெசவு ஆலைகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்யவும், மூடப்பட்ட ஆலைகளை திரும்பத் தொடங்கவும் அரசு மாநில அளவிலான குழு ஒன்றை அமைத்தது. இக்குழு 29 ஆலைகளின் வேலை நிலைமையை மதிப்பிட்டது. அதன் பின்னர், நிதி உதவி, அரசு உத்தரவாதம், நிலுவை ஒத்தி வைத்தல் நவீன இயந்திரங்களை நிறுவுதல், ஆலை அமைப்புச் செலவுகள், ஆலை நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றைக் குறைத்தல் முதலிய கருத்துக்களை இக்குழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த இது போன்ற குழு ஒன்று, தமிழ்நாட்டில் உள்ள மிகவும் நலிந்த 16 ஆலைகளை ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளது.

### கூட்டுத்துறை வளர்ச்சி

தொழில் துறைகளில் மற்றொரு பிரிவு கூட்டுத்துறையின் கீழ் வருவது. கூட்டுத்துறையில் புதிய சாதனைகளைச்' செய்யத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், திட்டங்களைத் தீட்டி வருகின்றது. ஏற்கனவே உற்பத்தியில் இறங்கிவிட்ட 'ஸ்பிக்', 'டைடு விஷன்', 'தமிழ்நாடு குரோமேட் அண்ட் கெமிகல்ஸ்' போன்ற 12 தொழிற்சாலைகளைத் தவிர, மேலும் 12 தொழிற்சாலைகளை நிறுவும் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு கெமிகல் பிராடக்ட்ஸ், அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட், தமிழ்நாடு ஃபுளோரின் அண்ட் அல்லைட் கெமிகல்ஸ் லிமிடெட் முதலியன அவற்றில் சிலவாகும். மரப்பிசின்கள், மருந்துகள், மகினீசிய உலோகம் ஆகியவற்றைத் தயாரிக்கும் மற்ற திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. பொதுத்துறையில் 'டிட்கோ' அரியலூரில் 20 கோடி ரூபாய்க்குப் புதிய சிமிட்டி உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவும் பணியை அண்மையில் தொடங்கியிருக்கிறது.

### சர்க்கரைத் தொழில்

தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் தற்போது இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுடன் பல புதிய ஆலைகள் தோன்றியுள்ளன. இதன் மூலம் சர்க்கரைத் தொழில் வளர்ச்சிக்குப் புதிய தூண்டுதல் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் கீழ் திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் இரண்டு சர்க்கரை ஆலைகளும், தஞ்சையில் ஒன்றும் மிகக் குறுகிய காலத்தில் நிறுவி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. பெரம்பலூரில் நிறுவப்பட்டுவரும் மற்றொரு ஆலை இந்த ஆண்டில் தயாராகி விடும். சங்கரன்கோயிலில் நிறுவப்பட்டுள்ள மற்றொரு ஆலையில் பணி தொடங்கும் நிலை உள்ளது. 1976-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான மற்ற இன்றியமையாப் பொருட்களை வழங்குவதற்கும், கரும்பு வளர்ச்சிக்கும் உரிய முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த முயற்சிகளின் விளைவால், 1975-76-ம் ஆண்டில் 20 இலட்சம் டன் கரும்பிலிருந்து சாறுபிழியும் திறன் கொண்டிருந்த ஆலைகள் 1976-77-ஆம் ஆண்டில் 35 இலட்சம் டன் கரும்பிலிருந்து சாறு பிழியும் திறனைப் பெற்றிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பயனாய், சர்க்கரை உற்பத்தி 1.69 இலட்சம் டன்னிலிருந்து 3 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

### தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

இருபது அம்சப் பொருளாதார திட்டத்தையொட்டி, தொழில் கூட்டுறவுகள் மூலம் மிகுதியான அளவில் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 1976-ம் ஆண்டில், 1,000-க்கும் மேற்பட்ட கைவினைஞர்களுக்கும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க 37 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வைரம் அறுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 210 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர். வடசேரி, திருப்பைஞ்ஞீலி ஆகிய இடங்களில் இரண்டு புதிய வைரம்



நலிவுற்று மூடப்பட்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன!







'சிப்காட்' நிறுவனத்தின் முயற்சியால் ராணிப்பேட்டைப் பகுதி தொழில்மயமாகி வருகிறது.

அறுக்கும் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு அளித்த 1.60 இலட்சம் ரூபாய் பங்கு மூல தனத்துடன் 17 தீப்பெட்டி தயாரிக்கும் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தோல் தொழிலுக்காக, வாணியம்பாடியில் 41.50 இலட்சம் ரூபாய் செலவில் தோல் பதனிட்டுப் பளபளப்பாக்கப் பணி வசதிகளுடைய பொது நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் புதிய கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இரண்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

### தொழில் உதவிப் பணிகள்

அரசு, தொழில் முனைவோருக்குச் சிறந்த பண வசதிகளை வழங்கும் பொருட்டு தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொழில் உதவிப் பணிகள் (Industrial Escort Services) ஏற்படுத்தப் பட்டுள்ளது: புதிய தொழில் முனைவர் ஒருவருக்கு உரிமம் வழங்குதல், மூலதனப் பொருள்களுக்கு இசைவு அளித்தல், வெளிநாட்டு ஒத்துழைப்புக்கு ஏற்பாடுகள் செய்து தருதல் போன்ற வகையில் பல்வேறுபட்ட அனுமதிகளை அரசிடமிருந்து பெறுவதில் உதவுவதற்கும், தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய இன்றியமையா அடிப்படை வசதிகளுக்குத் தேவைப்படுவனவற்றைப் பெற்றுத் தருவதில் உதவும் பொருட்டும், அவருக்குத் தேவைப்படும் உதவிகள் அனைத்தும் தொழில் துறையின் கீழ் அமைந்துள்ள மேற்சொன்ன தொழில் உதவிப் பணிகள் நிறுவனத்தால் ஒரே சமயத்தில் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. இந்த நிறுவனம் ஆதாயமுடைய நல்ல சாதனைகள் சிலவற்றைப் புரிந்து உள்ளது. 1976-ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் அமைக்கப்பட்ட குழு ஒன்றின் மூலமாகத் தற்போது இருக்கின்ற நிறுவனங்களைச் சீர்படுத்தும் ஆய்வை, அரசு மேற்கொண்டுள்ளது. பொதுத்துறையில் உள்ள தொழில் நிறுவனங்கள் எந்த அளவுக்குத் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்த முடியும் என்பதையும், தொழில் துறைக்கு எவ்வளவு உதவி செய்ய முடியும் என்பதையும் முடிவு செய்யும் வகையில், அவை செயல்படுதலைக் குறித்து ஆய்வதற்காகவே இக்குழு அமைக்கப்பட்டது.



அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை விரிவு பெற்று வருகிறது.

தமிழ்நாடு ஒரு காலத்தில் தொழில் வளர்ச்சியில் முதல் வரிசையில் இடம் பெற்றிருந்தது. மாநில அரசும் அரசின் பல்வேறு துறைகளும் நிறுவனங்களும் உறுதியுடனும், தியாக உணர்வுடனும் செயலாற்றுவதன் வாயிலாகவும், புதிதாகத் தொழில் முனைவோர்கள் தாங்கள் அருஞ் செயலைச் செய்கிறோம் என்ற எழுச்சியும் ஆர்வமும் கொண்டு செயல்படுவதன் வாயிலாகவும் முன்பு போலவே மீண்டும் நாம் தொழில் வளர்ச்சியில் முதல் வரிசையில் இடம் பெறுவோம் என்பது உறுதி.



# அரிசன நலம் பெருக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள்

— ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், சமூக நலத்துறை.



"வருணாசிரம தருமம்" என்னும் கருத்தின் அடிப்படையில் தோன்றியதுதான் சாதி முறை. அப்போதிருந்த நோக்கம் இந்துச் சமூகத்தைப் பல்வேறு சாதிகளாகப் பிரிக்க வேண்டும் என்பதல்ல. தொழில் முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் மக்கள் பிரிக்கப்பட்டனர்; ஆனால் பிற்காலத்தில் இதுவே வலுவான சாதிமுறையாக உருவெடுத்தது. பல்வேறு தொழில்கள் தொடர்பான வரிசை அடிப்படையில், தான் பிறப்பால் உயர்ந்தவன் என்ற கருத்து, பிற்காலத்தில் தான் உருவாகி இருக்கும்போல் தோன்றுகிறது. குறிப்பிட்ட சில வகைத் தொழில்களைச் செய்து, சமூகத்திற்கு உதவியாக இருந்தவர்கள் காலப்போக்கில் தீண்டத் தகாதவர்களாகி விட்டனர். தீண்டாமை என்பது இந்திய சமூக முறையில், ஆழ்ந்து வேரூன்றி விட்ட தீமையாகும். தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்திலிருந்து மக்களைத் திருத்த, சமூக சீர்திருத்தவாதிகளும், சமயத் தலைவர்களும், சிந்-

யாளர்களும் பல்வேறு முயற்
களையும் சீர்திருத்தப் பணிகளை
யும் செய்து வந்துள்ளனர். எ
னும், மகாத்மா காந்தி அவர்க
இந்திய விடுதலைப் போராட்ட
திற்குத் தலைமை ஏற்று நடத்து
வரை, தீண்டாமை ஒழிப்பு இய
கம் போதிய வலுப்பெறவில்லை
மகாத்மா காந்தி அவர்கள் தம
நிர்மாணத் திட்டங்களில் அரிச
முன்னேற்றத்திற்கு முக்கி
இடம் அளித்தார். இந்துச் ச
கத்தில் அரிசன சமுதாயத்தை
ஏற்றுக் கொள்ளவேண்டும் என்
தற்காகவும், அரிசனங்களு
கென்று தனித் தேர்தல் தொகு
என்ற பொறியில் அவர்கள் வீ
வதைத் தடுப்பதற்காகவும் இற
கும் வரை உண்ணாவிரதம் இரு
தார் என்பதும் நினைவு கூர
தக்கதாகும்.

தீண்டாமையை ஒழிப்பதற்
இந்திய அரசியலமைப்புச் ச
டத்தின் 17, மற்றும் 35-ஆவ
பிரிவுகளின் கீழ் வகை செய்ய
பட்டுள்ளது. இதையொட்
1955-ஆம் ஆண்டு தீண்டா

(குற்றங்கள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் தண்டனையளிக்கும் விதிகள் போதிய அளவுக்குக் கடுமையானவை அல்ல என்பதையும், அவை எதிர்பார்த்த அளவுக்குப் பலனளிக்கவில்லை என்பதையும் கடந்த இருபதாண்டு அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. 1955-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் திருத்தப்பட்டு ''குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' என்ற பெயரில் இயற்றப்பட்டுள்ள சட்டத்தில், மேலும் கடுமையான தண்டனைகள் அளிப்பதற்குரிய விதிகள் இடம் பெற்றுள்ளன.




குடி உரிமைகள் சட்டத்தினைச் செயல்படுத்தத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ், வழக்குகள் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர்கள் இருவர், காவலர்கள் இருவர் அடங்கிய படையாக 6 நடமாடும் காவல் படைகள், அரிசனங்கள் மிகுந்துள்ள 6 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நடமாடும் காவல்படை 1972-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. 1976 ஜூன் மாதம் வரை 5,046 வழக்குகளை இப்படையினர் பதிவு செய்துள்ளனர். அவற்றில் 3,206 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குடி உரிமைகள் சட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக, ஆளுநரின் ஆலோசகரைத் தலைவராகவும் பொது மக்களின் முக்கியமான சிலரை உறுப்பினர்களாகவும், கொண்ட மாநிலக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுவதற்காகக் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவரது தலைமையில் சிறப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் முக்கிய விதிகளைக் கோடிட்டுக் காட்டும் சுவரொட்டிகளையும் கைப்பிரதிகளையும் தமிழ்நாடு அரசு விளம்பரத் துறை விநியோகித்துள்ளது. 1976-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் முதல் 21-ஆம் நாள் வரை ''குடி உரிமைகள் பாதுகாப்பு வாரம்'' கொண்டாடப்பட்டது; குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றுவதற்கான காரணங்களையும் நோக்கங்களையும் மக்களுக்கு விளக்கிக் கூறி விளம்பரப்படுத்தப்பட்டது.



மக்கள் மனத்தில் மாற்றம் ஏற்பட்டு, சாதி இந்துக்களின் மனத்திலே நிலவி வரும் காலத்திற்கொவ்வாத வேற்றுமை உணர்ச்சி அறவே நீங்கினால்தான், சட்டம் பயனளிக்கும்; சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும். தங்களுக்கு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அரிசனங்களும் உணர வேண்டும்; தங்கள் உரிமைகளை மென்மேலும் வலியுறுத்த வேண்டும். தீண்டாமையைக் கடைப்பிடிப்பதால் மனித சக்தி எந்த அளவுக்கு வீணாகிறது என்பதையும், அது எப்படி ஒருவகையான 'இன ஒதுக்கல்' குற்றம் ஆகிறது என்பதையும் பொதுமக்கள் உணர வேண்டும். தீண்டாமையை அனுசரிப்பது, மனித உரிமைகளை மீறும் ஒரு செயலாகும்; தீண்டாமை இன்னும் நீங்கப்படாது இருப்பது, எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கும், ஒரு முழுச் சுதந்தரமான நாடல்ல நம் நாடு என்பதைத்தான் தொடர்ந்தாற் போல் நினைவுறுத்திக் கொண்டிருக்கும்.

அரிசனங்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்கவும், சமுதாயத்தில் மிகவும் மேம்பட்ட நிலையிலுள்ளவர்கள் மட்டத்திற்கு அம்மக்கள் முன்னேறி வரவும், தமிழ்நாடு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. பிரதமரின் 20 அம்சத் திட்டம் அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆகியோரின் நல்வாழ்வில் நேரடித் தொடர்புள்ள பல திட்டங்களைக் கொண்டதாகும். நிலமற்ற அரிசனங்களுக்கு நிலங்கள் வழங்குதல், மாணவர் இல்லங்களில் உள்ள அரிசன மாணவர்களுக்கு மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல், மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்களும் எழுது பொருள்களும் வழங்குதல் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும்.

அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ள இடங்களிலெல்லாம் அவை கையகப்படுத்தப்பட்டு, அரிசனங்கள் பயிர்த் தொழில் செய்யவும் வீடு கட்டிக் கொள்ளவும் அரிசனங்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் கிடைக்காத இடங்களிலெல்லாம் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அரிசனங்களுக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. 1-2-1976 முதல் 31-5-1976 வரை, அதாவது, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்த பிறகு, 39 லட்சம் ரூபாய் செலவில் கையகப்படுத்தப்பட்ட 771.72 ஏக்கர் பரப்புள்ள 15,457 வீட்டு மனைகள் அரிசனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1978-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களுக்கு முன்னர் எல்லா அரிசனங்களுக்கும் வீட்டு மனைகள் வழங்க வகை செய்யும் தீவிரத் திட்டமொன்றைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார். இதன் மூலம் 3 லட்சம் அரிசனங்கள் பயன் பெறுவர்.

அரிசனங்களுக்கென்று 681 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவைகளுக்கு உணவுப் பொருள் வழங்கு நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இம்மாநிலத்தில், அரிசன, பழங்குடி மக்களுக்கென்று 11[illegible] பள்ளிகள் உள்ளன. நடப்புக் கல்வியாண்டில், பள்ளிகள் தொடங்கிய 15 நாட்களுக்குள்ளாகவே, இப்பள்ளிகளில் கல்வி பயிலும் 1,47,125 மாணவர்களுக்கு மொத்தம் 11.50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் சிலேட்டுப் பலவகைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



மொத்த மக்கள் தொகையில் 0.76 சதவீதமுள்ள பழங்குடி மக்களுக்காக 794.65 லட்சம் ரூபாய் செலவிலான பழங்குடி மக்கள் துணைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் அதிகமாக வாழும் சேலம் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் 9 பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, காடு வளர்ப்பு, சாலைகள், சமூகப் பணிகள் முதலிய இனங்களின்கீழ் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் பணிகளை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது; பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் இப்பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் பொருட்டுத் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தை 1974-75 ஆம் ஆண்டில் அரசு நிறுவியது. சமவெளிகளில் 4,000 ரூபாய் செலவிலும் மலைப்பகுதிகளில் 6,000 ரூபாய் செலவிலும் இக்கழகம் வீடுகள் கட்டி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை 33,000 வீடுகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளன.

அரிசனங்கள் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு சிறு தொழில்களைத் தொடங்குவதற்



காக வட்டியில்லாக் கடன்கள் வழங்கும் திட்ட மொன்று செயல் படுத்தப்படுகிறது. தொழிலின் தன்மைக்கேற்ப, குறைந்தது 125 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரை கடன் கொடுக்கப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1975-76, ஆம் ஆண்டு இறுதி வரை 9,784 பேருக்கு 65.45 லட்சம் ரூபாய் வரை கடன் வழங் கப்பட்டுள்ளது.

அரிசனங்கள், பழங்குடி மக்கள் நன்மைக்காக வேலைவாய்ப்பு, பயிற்சி இயக்குநரால் தொழிற் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படு கின்றன. இந்நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு அரிசன நலத்துறை நிதியிலிருந்து பயிற்சி உதவித் தொகைகள் வழங்கப்படு கின்றன. இயன்றவிடங்களில் எல்லாம் அரிசனங்கள், பழங்குடி





மக்கள் நன்மைக்காகப் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தப்படுகின்றன. அரி சனங்கள், பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்க, ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு நடத்தும் தொகுதி நான்காவது பணித் தேர்வுகள், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசில் அரசிதழ் பதிவு பெற்ற, பதிவு பெறாத பதவிகளில் 18 சதவீதம் வரை அரிசனங்கள், பழங்குடி மக்க ளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 18 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டி ருக்கும் நிலையில், மொத்தம் உள்ள பதவிகளில் சுமார் 10 சத வீத பதவிகளில்தான் அரிசனங்கள் பழங்குடி மக்கள் அமர்த்தப்பட் டுள்ளனர். மருத்துவ, பொறி யியல் கல்லூரிகளில் 18 சதவீத இடங்கள் அரிசன, பழங்குடி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட் டுள்ளன. 1976-77ஆம் ஆண்டில்




மருத்துவ, பொறியியல் கல்லூரி களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை முறையே 178,180 ஆகும். அரிசன, பழங் குடி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி உதவித் தொகைகள் வழங்கப்படுவதால் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் களைச் சேர்த்துக் கொள்ளும் விஷ பத்தில்கூட இந்த இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது.

''சாதி வேற்றுமைகளைக் களைய வும், சமூகத்தில் பரந்த பொது நோக்கு உணர்வை வளர்க்கவும், அரிசனங்களுக்கும் ஏனைய வகுப் பாருக்கு இடையே கலப்பு மணம் நடைபெறுவதைத் தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கிறது. கலப்பு மணம் செய்து கொண்ட ஒவ் வொரு தம்பதிக்கும் 1.5 பவுன் வீதத்தில் 14 காரட் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. இது வரை, கலப்பு மணம் செய்து கொண்ட 417 தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட் டுள்ளன. அத்துடன், வீட்டுக்குத் தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு தம்பதிக்கும் ரொக்க மானியமாக 200 ரூபாய் வழங்கப்படுகிறது. இதுவரை 112 தம்பதிகளுக்கு ரொக்க மானியங்கள் வழங்கப் பட்டுள்ளன. கிராமப் பகுதி களில், கலப்பு மணத் தம்பதி களுக்கு 3 சென்ட் வீட்டு மனை களையும் அரசு வழங்குகிறது. சென்னை மாநகரில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டியுள்ள வீடுகளிலிருந்து 10 குடியிருப்புகளையும், அரிசனங் களுக்கும், பழங்குடி மக்களுக்கும் என வீட்டு வசதி வாரியம் ஒதுக் கீடு செய்துள்ள 10 சதவீத ஒதுக் கீட்டிலிருந்து, மனைகளை அல்லது வீடுகளை ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் குடியிருப்புகளை அல்லது வீடுகளை வாங்குவதற்காக ஒவ்வொரு தம் பதிக்கும் 1200 ரூபாய்க்கு மேற் படாத அளவில் உதவித் தொகை வழங்கப்படும். அரிசன மக்கள் கடந்த ஓராண்டுக் காலத்தில், இம்மாநிலத்தில் ஊக்கமும் உயர் வும் பெற்[illegible]கின்றனர்.






# அறிவார்ந்த உணவுக் கொள்கை அளித்த அரும் பயன்கள்!

— கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
உணவுத்துறை,
தமிழ்நாடு அரசு.

**பொ**து மக்களுக்கெனத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கத்துடன் செம்மையாக அமைந்த உணவுக் கொள்கை இருமுனை வெற்றியைத் தேடித்தந்துள்ளது.

கொள்முதலைப் பெருமளவுக்கு ஈட்டமுடிந்தது ஒன்று. பொது மக்களுக்குப் பங்கிட்டுத் தருவதில் நன்கு திட்டமிட்டுச் செயல் புரிய இயன்றது இரண்டு.

இந்த இருமுனை நடவடிக்கைகளின் மூலம், தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கொடிய வறட்சியினால் ஏற்பட்டுள்ள கடும் உணவுப் பிரச்சினையைக் குறிப்பிடத்தக்க முறையில் தீர்க்க முடிந்தது. 1976-ஆம் ஆண்டில், 5.5 இலட்சம் டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. வேளாண்மைப் பொருள்கள் விலை நிர்ணயக் குழு நமது மாநிலத்திற்காக முடிவு செய்த குறிக்கோளைவிடக் கூடுதலாகவே இந்த அளவு அமைந்தது. அரசுப் பொறுப்பேற்கும் முகவர் அமைப்புகள் நேரடியாகவே நெல் கொள்முதல் செய்தது இங்குக் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த முகவரமைப்புகள், மூலை முடுக்கில் உள்ள கிராமங்களில் கூட, கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால், தனிப்பட்ட இடைத்தரகர்களின் முறைகேடான செயல்கள் அறவே அகற்றப்பட்டதுடன் அரசளிக்கும் முழுப்பயனும் உற்பத்தியாளருக்குக் கிடைக்க வழி பிறந்தது!

மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் நிறுவனம் நெல் கொள்முதல் செய்வதற்குப் பொறுப்பாக உள்ளது. இப்பணியின் பெரும் பகுதியை அதுவே நிறைவேற்றுகிறது. கூட்டுறவுச் சங்கங்களும், இந்திய அரசு உணவுக் கழகமும் மாநில அரசின் சார்பில் நெல் கொள்முதல் செய்கின்றன. கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லும் பணியைக் கூடத் தனியார் ஆலை உரிமையாளர்களிடம் விடாமல் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் நிறுவனமே ஏற்று, தானே கொண்டு செல்கிறது. உணவுப் பொருள் வழங்கல் நிறுவனம் நடத்தும்

அரிசி ஆலைகளிலும் நெல் ்வ முகவரமைப்புகளாக கப்பட்ட தனியார் அரிசி ாரர்கள் மூலமாகவும் அரைத்த பின்னர், ம் எங்கணும் உள்ள பல் சேமிப்பு முனைகளுக்கு இந் ரம் பொருள்களை எடுத்துச் ஏற்பாடு செய்கிறது.

ழ்நாடு முழுவதிலும் ப் பங்கீட்டு அட்டைகள் ப்பட்டுள்ளன. பகுதிகள் ம்சட்டபூர்வமான உணவுப் இல்லாதிருக்கின்ற போதி கூட்டுறவுச் சங்கங்கள் மூல ம், உணவுப் பொருள் ல் நிறுவனத்தின் சில் விற்பனை நிலையங்கள் மூல ம் பொதுமக்களின் யை நிறைவு செய்ய, ்கோப்பான பொதுமக்கள் ப் பங்கீட்டு நடைமுறை ரிக்கப்பட்டு வருகிறது. பகுதி மாவட்டமான நீல ாவட்டத்தின் ஒரு பகுதி ாக, மாநிலம் முழுவதிலும் றவுகள், ஊராட்சிகள், ் பொறுப்பேற்கும் உணவுப் நள் வழங்கல் நிறுவனம் வைகளே உணவுப் பங் ப் பணியை மேற்கொண் ன என்பது தமிழ்நாட்டில் வுப் பங்கீடு ஏற்பாட்டின் பிடத்தக்க மற்றொரு ப்புக் கூறுகும். இந்த ப்புகள் ஏறத்தாழ 9,500 றை விற்பனை நிலையங்கள் திக் கொண்டிருக்க, 18 னை நிலையங்கள் மட்டுமே ாரம் பெற்ற தனியார் சில்



1976-ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்வதில் குறிப் பிடத்தக்க சாதனை செய்ததால், அரிசி இருப்பு ஏராளமாக உள்ளது.

லறை விற்பனையாளர்களாக, நிய மிக்கப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த நிலை. பொது மக்கள் உணவுப் பங்கீட்டு ஏற்பாட்டினைச் செவ்விய முறையில் வைத்திருக்க அரசுக்கு இது உதவியது; உணவுப் பொருள் இருப்புக் குறித்துப் பிரச்சினை எழும்போது அல்லது வெளி அங்காடியில் உணவுப் பொருளின் விலைகள் உயரக்கூடிய நிலவரம் இருக்கும்போது, உணவுப் பொருள் இருப்புகளைக் கொண்டுவந்து நிலைமை சீர்பட உதவுகிறது.

## தென் அரிசி மண்டலம்

மூன்று தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைக் கொண்ட பெரியதோர் அரிசி மண்டலத்தை ஏற்படுத்தியதன் மூலம் 1976-ஆம் ஆண்டில் முக்கிய சாதனையை எய்த முடிந்தது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாள் முதல், செயலுக்குக் கொண்டு வரப்பட்ட இந்தத் தென் அரிசி மண்டலம் மூன்று மாநிலங்களிடையே அரிசிப் போக்கு வரத்து தாராளமாக நடைபெற உதவியது.

இந்த அரிசி மண்டலம் ஏற் படுத்தப்பட்டதிலிருந்து சில மாதங்களில் ஏறத்தாழ 60,000 டன் அரிசி தமிழ்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதே நேரத்தில், விரிவான தென் மாநிலங்கள் மண்டலம் அமைக் கப்பட்டதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் ஒரு மாவட்டத்திலிருந்து இன் னொரு மாவட்டத்திற்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டன. இதனால் உபரியாக விளையும் மாவட்டங் களிலிருந்து பற்றாக்குறை மாவட் டங்களுக்கு அரிசியைத் தடை யின்றி எடுத்துச் செல்ல வழி ஏற்பட்டது. இது, இருப்பு நிலைமை குறைந்து விடாமலும், விலைவாசிகள் உயர்ந்து விடாம லும் சம நிலை மீண்டும் நிலவிடப் பெரிதும் உதவியது. உபரியாக விளையும் மாவட்டத்தைச் சேர்ந்த உற்பத்தியாளருக்குத் தற்போது நல்ல விலை கிடைப்பதுடன் அவ ரது உற்பத்திப் பொருட்களைப் பெருமளவில் விற்பதற்கான நல்ல வாய்ப்புகளும் உள்ளன. கட்டுப் பாடு நீக்கப்பட்டதன் பயனாகக் குறைவாக விளைந்த மாவட்டங் களைச் சேர்ந்தவர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக் கிறது.



## உபயோகிப்போர்களுக்கு நியாய விலை!

மாவட்டங்களுக்கு இடையி லான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட தனால், உபரி மாவட்டங்களில் அரிசி விலைகள் சற்றே அதிகரித் தன. அதே நேரத்தில், பற்றாக் குறை மாவட்டங்களில் கணிச மான அளவுக்குக் குறைந்தன. எனவே மாநிலத்தில் அரிசியின் பொதுவான விலைவாசிகள், தற் பொழுது, கிட்டத்தட்ட, நுகர் வோருக்கு நியாயமான அளவி லும் அதே நேரத்தில் உற்பத்தி யாளருக்கு ஆதாயம் தரக்கூடிய அளவிலும் உள்ளன. 1975-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் பெரும் பான்மையோரால், பயன்படுத்



தப்படுகின்ற நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை, பற்றாக்குறை மாவட்டங்களில் கிலோ ஒன் றுக்கு 4 ரூபாயை எட்டியது. ஆனால் 1977 ஜனவரியில் அதே வகை அரிசியின் விலை, கிலோ ஒன்றுக்கு ரூ. 1.60 முதல் 2.15 வரையில் இருந்தது. பருவக் காலச் சூழ்நிலையை ஒட்டி விலை வாசிகளில் ஏற்றத்தாழ்வுகள், ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஒரு குறிப்பிட்ட தரத்தைச் சிலர் நாடுவதாலும் ஒன்றுக்கொன்று விலை சற்றுக் கூடுவதும் குறைவ தும் இயல்பே. என்றாலும், விலை நிலவரங்களைச் சற்று உன்னிப் பாக ஆராய்வோமானால், 1974-1975 ஆகிய இரண்டு ஆண்டு களில் காணப்பட்ட அரிசியின் மிகக் குறைவான விலைக்கும் மிக உயர்ந்த விலைக்கும் இடையிலான வேறுபாடு, 1976-ல் குறைந்துள் ளதைக் காணலாம். தற்போ தைய நிலவரங்கள் ...ர்களுக்கு

துள்ளதாலும், மாநிலத்திற்குள் நெல், அரிசி எடுத்துச் செல்வது தொடர்பான மாநிலங்களுக் கிடையிலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாலும், மற்றும் அரிசியின் விலைவாசிகள் குறைந்து வருவதாலும், 1977-ல் உணவு நிலைமையைப் பொறுத்த வரை யில் தமிழ்நாட்டில் எந்தவிதப் பிரச்சினையும் எழாது என்று

நிறைவளிப்பதாய் இருப்பதுடன், அரிசியின் விலை ஏற்றம் இனிமேல் ஏற்படாத பழங்கதையாகிவிடும் என்றும் உறுதியாக எதிர்பார்க்க லாம்.

## 1977-ல் உணவுப் பிரச்னை எழாது

1977-ஆம் ஆண்டில் தொடக் கத்திலேயே தமிழ்நாட்டில், கணிசமான அரிசி இருப்பு உள் ளது. வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகவும், எளிதாகவும் கிடைப்பதாலும், உபரி மாநில மான ஆந்திரப் பிரதேசத்தி லிருந்து ஏராளமாக அரிசி வந்

உறுதியாக நம்பலாம். இந்திய அரசும் தேவையான நேரத்தில் தாராளமாக உதவுவதாக உறுதி யளித்துள்ளது. கடந்த சில மாதங்களில் பொது விநியோக அமைப்புகளில் விற்பனை அளவு குறைந்து வருவது, வெளிச் சந்தைகளில் அரிசி தாராளமாக வும் எளிதாகவும் கிடைப்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. விரிவான அரிசி மண்டலத்தை அமைப்பதில் இந்திய அரசு கடைப்பிடித்த அறிவார்ந்த உணவுக் கொள்கையின் வெற் றிக்கும் இதுவே நல்ல சான்றாக விளங்குகிறது. இருப்பினும், பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது என்று கூறும் வதந்திக்குப் பதில் சொல்லும் வகையிலும், விலை வாசி உயர்வுகளினால் வேண்டத் தகாத நிலைமைகள் உருவாவதைத் தடுக்கும் வகையிலும் முன் நட வடிக்கையாகப் பொது விநியோக அமைப்பைத் தொடர்ந்து செயல் படுத்த உத்தேசித்துள்ளது.

## கோதுமைப் பொருள்கள் நியாய மான விலையில் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில், தொன்று தொட்டு அரிசியே பெரும்பா லோர் உட்கொள்ளும் உணவாக இருந்து வந்துள்ளது. ஆனால் தற் போது, நகர மக்கள் மட்டும் அல் லாமல் கிராம மக்களும்



கோதுமை உணவை உண்டு வரு கின்றனர், என்பது மன நிறை வைத் தருகின்றது. மத்திய அரசின் பரிந்துரையைத் தொடர்ந்து, கோதுமையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கோது மைப் பொருட்களின் விலைகள் மீதும், அவ்வாறு உற்பத்தி செய் யப்பட வேண்டிய பொருள்களின் சதவீதம் எவ்வளவு இருக்கவேண்




கோவைப் பேருந்து நிலையத்தில் 26-5-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியினரால் நடத்தப்பெறும் ஜனதா உணவகத்தை, அவிநாசிலிங்கம் கல்வி நிலையங்களின் நிறுவனர் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். நரசிம்மன் விற்பனையைத் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே, ஒரு கல்லூரியினரால், அதன் ஆசிரியைகளாலும், மாணவிகளாலும் நடத்தப்படுகிற முதல் ஜனதா உணவகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

டும் என்பது பற்றியும் விதித்திருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் மாநில அரசு விலக்கி விட்டது. இந்தக் கொள்கையைச் செயற்படுத்தியதன் விளைவாகவும், தமிழ்நாட்டிலுள்ள 28 கோதுமை அரைவை ஆலைகளுக்கும் கோதுமையைத் தாராளமான அளவில் ஒதுக்கீடு செய்ததன் விளைவாகவும் தமிழ்நாட்டில் நியாயமான விலைகளில் கோதுமைப் பொருள்கள் எளிதாகக் கிடைக்கும் நிலைமை உருவாகியது.

### பற்றுக்குறையோ, பஞ்சமோ வராது!

அரிசி, கோதுமை, சர்க்கரை முதலியவை தொடர்பாகப் பொதுப் பங்கீட்டு முறையைப் பேணி வருவதில் அரசு ஒருமுகமாக எடுத்துக் கொண்ட முயற்சிகளும், ஏனைய இன்றியமையா உணவுப் பொருள்களின் விலைகள் உயராவண்ணம் ஒரே சீராக வைத்துக் கொள்வதில் இடைவிடாத விழிப்போடு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் சேர்ந்து மக்களிடையே உணவுப் பற்றுக்குறையோ பஞ்சமோ வராது என்ற நம்பிக்கையையும், நம்மிடம் ஏராளமான உணவுப் பொருள்கள் இருப்பில் உள்ளன என்ற தெம்பையும் தோற்றுவித்தன.

### கடலை எண்ணெய் கிடைக்க மேற்கொண்ட முயற்சிகள்!

கடந்த சில திங்களாக கடலை எண்ணெய்யின் விலை உயர்ந்துள்ளது. இந்தக் கடலையெண்ணெய் வாணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்காகப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை உறுதியாகச் செயல்படுத்தியதோடு மட்டும் அல்லாமல், மற்ற மாநிலங்களிலிருந்து கடலை எண்ணெய்யை வாங்க ஏற்பாடுகள் செய்தும், பெரிய நகரப் பகுதிகளில் நியாயமான விலைகளில் பொதுப்பங்கீட்டு முறை மூலம் விற்பனை செய்தும், கடலையெண்ணெய்ப் பற்றுக் குறையால் விளைந்த இடர்ப்பாடுகளை மாநில அரசு கட்டுப்படுத்தியுள்ளது. அரசு, கடலை எண்ணெய் வணிகர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவால், பொது மார்க்கட்டில் கடலையெண்ணெயின் விலையைக் குறைக்கத் தற்போது இந்த வணிகர்கள் முன் வந்துள்ளனர்.

### விலைகள் குறைந்தன!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு கிலோ ரூபாய் 29 ஆக இருந்த மிளகாயின் விலையானது, தற்போது அந்த விலையில் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்து கிலோ ரூ. 5.80 முதல் ரூ. 6.50 வரை விற்கப்படுகிறது. வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும் குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இருப்பினும், ஆண்டுதோறும் வழக்கமாக ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் உற்பத்தி குறைந்தும், பண்டங்கள் விலை சிறிது உயர்ந்தும் காணப்படும்; இந்த ஆண்டிலும் இதே காலத்தின்போது, பருவகால மாறுபாடுகளின் விளைவால், நுகர்வோர் விலைவாசிப் புள்ளிக் குறியீட்டெண் சற்று உயர்ந்தது. இந்த உயர்வு 1974-ஆம் ஆண்டில் இருந்ததைவிட மிகமிகக் குறைவானது. தமிழ்நாட்டில் நுகர்வோர் விலைவாசிப் புள்ளிக்குறியீட்டெண் அனைத்திந்திய சராசரியைவிடக் குறைவாக இருக்கிறது.

### ஜனதா சாப்பாடு

குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க முதன் முதலாக முயற்சியினை மேற்கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு ஜனதா சாப்பாடு விலை ஒரு ரூபாய் எனச் சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பிறப்பித்த உணவு நிறுவனங்கள் (உணவுப் பொருள்களின் விலைகளை வரையறுத்தல்-விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைத்தல்) ஆணையில், காப்பி, தேநீர் ஆகியவை உட்பட உணவகங்களில் பொதுவாக அதிக எண்ணிக்கையினரால் உட்கொள்ளப்படுகின்ற ஒன்பது பொருள்களின் அதிகபட்ச விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகளைத் தவிர, நியாயமான விலையில் சத்துணவு கிடைக்கச் செய்ய, சிற்றுண்டி விடுதிகளை நடத்தவும் முன்வருமாறு தனித்தொண்டு நிறுவனங்களைத் தூண்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்த விலையில் சிற்றுண்டிகளை வழங்க 'கில்டு ஆப் சர்வீஸ்' நடத்தும் சிற்றுண்டி விடுதிகள், அனைத்து இந்திய மகளிர் கூட்டமைப்பு மன்றம் நடத்தும் 'அன்னபூர்ணா சிற்றுண்டி விடுதி', கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி நடத்தும் 'அமுதம்' சிற்றுண்டி விடுதி முதலியன குறைந்த விலையில் சத்துணவை வழங்கிச் சிறந்த முறையில் பணி புரிந்து வருகின்றன. தமிழ்நாடு இன்றியமையாப் பண்டங்கள் (இருப்புகள் - விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைத்தல்-கணக்குகளைப் பேணி வருதல்) ஆணை, சிப்பம் கட்டப்பட்ட பொருள்கள் (ஒழுங்கு முறைப்படுத்தல்) ஆணை ஆகியவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தும் நடவடிக்கைகளைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இவ்வாணைகள் விலைவாசி உயர்ந்துவிடாமலும், இன்றியமையாப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்வதிலும் பெரும் பங்காற்றியுள்ளன.






அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலையில் 'அமுதம்' வழங்குகிறது.



உணவு தானிய உற்பத்தி பெருகுவதால் ஒளிமயமான எதிர்காலம் உருவாவது திண்ணமே!

### ஒளிமயமான எதிர்காலம்!

அரசு பின்பற்றிய தெளிவான உணவுக் கொள்கையும், பொது மக்களின் தேவையை உணர்ந்து நிர்வாகத்தினர் சுறுசுறுப்புடனும் விழிப்புணர்ச்சியுடனும் எடுத்த நடவடிக்கைகளும் வெளிச்சந்தையில் விலைவாசி உயர்ந்துவிடாமல் தொடர்ந்து விழிப்போடு கண்காணித்து வந்ததும், தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எதிர்நோக்கி நின்ற கடுமையான உணவு நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் பெரிதும் உதவின. மேலும், 1977-ஆம் ஆண்டின் உணவுத் துறையில் உறுதியும், உணவு உற்பத்திப் பெருக்கமும், குன்றாத வளமும் உடைய சூழ்நிலை காரணமாக ஒளி மயமான எதிர்காலம் தமிழ்நாட்டில் உருவாகுமென மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.



# குடிநீர்த் திட்டம்

## சிறப்புமிக்க சாதனைகள்!

டி. வி. அந்தோணி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சி நிருவாகத்துறை, தமிழ்நாடு அரசு.



தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 4.11 கோடியாகும். இவர்களில் 1.55 கோடி மக்கள், 2 மாநகராட்சிகள், 101 நகராட்சிகள், நகரியங்கள், 624 பேரூராட்சிகள் ஆகியவற்றில் வாழ்கின்றனர். கிராமப்புற மக்கள் தொகை 2.56 கோடியாகும்; இவர்கள் 12,347 ஊராட்சிகளில் அடங்கிய 58,595 கிராமங்களிலும் சிற்றூர்களிலும் வசிக்கின்றனர். மொத்தமுள்ள 103 நகராட்சி, நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் இன்னும் 7 நகராட்சிகளிலும், 3 நகரியங்களிலும் மட்டுமே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. 1972-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, சுமார் 18,960 கிராமங்களில் போதிய அளவு குடிநீர் வசதி கிடைக்காமலும், பற்றுக்குறை நிலைமையிலும் அல்லது நீரின் வழியாகப் பரவும் கொள்ளை நோய்கள் தோன்றுவதற்குரிய குடிநீரைக் கொண்டுள்ளதாகவும் இருந்தன என்பது தெரியவந்தது. இந்த நகராட்சிகளுக்கும், கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க, பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் சீரானமுறையில் மேற்கொண்டு வருகிறது. 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி, இப்போது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1,750 கிராமங்களில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1976-77-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் எதிர்பாராத வறட்சியினால் பாதிக்கப்பட்டன.



**குறுகிய காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க 'பவர் டிரில்'கள் இரவும் பகலும் இயங்கி, துளைக்கிணறுகள் அமைத்திட உதவின!**

ஆகவே, குடிநீர் பற்றுக் குறையால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான கிராமங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கும் பெருந்திட்டமொன்றை அரசு மேற்கொண்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களிலும் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் 6,700 குழாய்க் கிணறுகளைத் தோண்டும் திட்டமொன்று 3-4-1976-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக இம்மாநிலம் முழுவதிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் துளையிடும் கருவிகள் தருவிக்கப்பட்டன. துளைக் கிணறு ஒவ்வொன்றும் 120 முதல் 300 அடி ஆழம் வரை செல்லக்கூடியது. இவற்றில் பெரும்பாலானவை கையால் அடிக்கும் குழாய்களுடன் பொருத்தப்பட்டவையாகும். கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கிணறுகள் 250 முதல் 300 அடி ஆழம் வரை செல்லுகின்றன; அங்கு, பெரும்பாலான இடங்களில் விசைக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### ஐந்தாண்டுகளில் செய்த சாதனைகளுக்குச் சமமாக எட்டே மாதத்தில் செய்யப்பட்டன!

எட்டே மாதங்களில் புதிதாக 6,700 கிணறுகள் தோண்டப்பட்டு, திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம், முந்திய ஐந்து ஆண்டுகள் முழுவதும் எத்தனை குடிநீர் வழங்கும் குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டனவோ அதே எண்ணிக்கையில் குடிநீர் வழங்கும் குழாய்க் கிணறுகள் இந்த எட்டே மாதங்களில் இறக்கப்பட்டன. இது ஒரு பெரிய சாதனையாகும்.

இன்னும் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்பட்டு முடியாமலுள்ள, இடர்ப்பாடு நிரம்பிய ஒரு சில பகுதிகளில், பற்றுக்குறையைச் சமாளிக்க மேலும் 1000 ஆழ்துளைக் கிணறுகள் இறக்கப்படுகின்றன; அவை, ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவுடன் 1977-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்கு முன்னர் தோண்டி முடிக்கப்படும். இங்கே இணைக்கப்படவிருக்கும் கைக் குழாய்களையும் இதற்கு முன்னர் இறக்கப்பட்ட குழாய்க்கிணறுகளில் இணைக்கப்பட்டுள்ள கைக் குழாய்களையும் ஆண்டுதோறும் 25 இலட்சம் ரூபாய் செலவில் பேணி வருவதற்கு குடிநீர்க் குழாய்க்கிணறுகள் பேணுதல் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கியுள்ளது.

### இரண்டு இலட்சம் மக்களுக்கு முதன்முதலாக நிரந்தரக் குடிநீர் வசதி கிடைத்தது!

நம் மாநிலத்தில் சில கிராமங்களில் நிலத்தடி நீர் உவர்ப்பாக இருப்பதால் அல்லது நிலத்தடி நீர் கிடைப்பதே அரிதாக இருப்பதால் ஆழ் துளைக் கிணறு தோண்டும் திட்டம்





தானியங்கிக் குழாய் கிணறு (ஆர்ட்டீசியன் கிணறு)

இக்கிராமங்களுக்குப் பெரிதும் உதவியாக அமையவில்லை. இப்பகுதிகளிலுள்ள மக்கள் பல ஆண்டுகளாகவே தங்கள் குடிநீர் தேவைக்கு வானவாரிக் குளங்களையே நம்பியுள்ளனர். இதன் காரணமாக, நீர் மூலம் பரவக்கூடிய பல்வேறு நோய்கள் பரவ ஏதுவாயிற்று. வறட்சிக் காலத்தில் இக்குளங்களும் வற்றி விடுகின்றன. இப்பகுதிகளின் பிரச்சனையைத் தீர்க்க, 40 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அமைகின்ற 'பொது நிலத்தடி நீர் நிலைகளில்' இருந்து, குழாய்கள் மூலம் இக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் பல திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முதன் முதலாக மேற்கொண்டுள்ளது. மொத்தம் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு முதன் முதலாக நிரந்தர, குடிநீர் வசதி கிடைக்கும். இவ்வாண்டில், இத்திட்டங்களுக்கு மொத்தம் 3 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 51 கிராமங்களில், சுமார் 40,000 மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய 3 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணி விரைவாக நடந்து வருகிறது. நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களால் திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 44 கிராமங்களும், இராமேசுவரம் தீவிலுள்ள ஐந்து சிற்றூர்களும் குடிநீர் வசதி பெறுகின்றன.

துளைக் கிணறுகள் தோண்டுவதுடன், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள 3,200 கிணறுகளை [illegible] வழங்கு திட்டத்தை மேம்படுத்துவதற்கு ரூபாய் 97.5 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றின. இத்துடன், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் ஊருணிகளை ஆழப்படுத்தவும் 17.21 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**அடுத்த மூன்றாண்டிற்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி!**

கிராமப் பகுதிகளில் 'குடிநீர் நிலைமை குறித்து அரசுக்குக் கிடைத்த தகவல்களில் தவறுகள் இருந்தன என்பது, பின்னர் ஏற்பட்ட வறட்சியிலிருந்து தெரிய வந்தது. ஆகவேதான், சிற்றூர் தோறும் புதியதோர் ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில வாரங்களில் இந்த ஆய்வு முடிக்கப்பட்டு, எவ்வெவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதென்று பரிசீலனை செய்யப்படும். நீர் பற்றாக்குறையாலும், கொள்ளை நோயாலும் பாதிக்கப்பட்டுள்ள எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியுமென்ற நம்பிக்கை இப்போது உள்ளது.

நகராட்சிகளின் குடிநீர் வழங்கு திட்டங்களும் நடப்பாண்டில் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. நகர்ப் பகுதிக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக, கடந்த காலத்தில் ஆண்டுதோறும் சுமார் 5 கோடி ரூபாய் செலவிடப்பட்டது, ஆனால், 1976-77-ஆம் ஆண்டில் இச்செலவு 8.2 கோடி ரூபாய் ஆக உயரலாம்.

கோயம்புத்தூர் மாநகரில் நீண்ட காலமாகவே நீர்ப்பற்றாக்குறை இருந்து வருகிறது. கோயம்புத்தூர் மாநகருக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் தற்போது 70 இலட்சம் காலன் குடி நீர்தான் கிடைத்து வருகிறது; இவ்விடங்களுக்கெல்லாம் 1980-ஆம் ஆண்டில் 220 இலட்சம் காலன் நீர் கிடைக்கச் செய்வதற்காகத் தற்போது மேற்கொண்டுள்ள திட்டம் மிகவும் குறிப்பிடத்தக்க பணியாகும்.

திருச்சிராப்பள்ளி குடிநீர் வழங்கு திட்டம், இந்நகருக்கு அன்றாடம் வழங்கும் குடிநீர் அளவை 40 இலட்சம் காலனிலிருந்து 70 இலட்சம் காலனாக உயர்த்தும்.

வருகின்ற மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலுமென அரசு நம்புகிறது.

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் மூலமாக, கிராமப்புற, குடிநீர் வழங்கு திட்டத்திற்காக, 1971-72-ஆம் ஆண்டிலிருந்து 1975-76ஆம் ஆண்டு வரை, மொத்தம் சுமார் 13.6 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டின் (1976) திட்டத்திற்கு மட்டும் 12 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு கிராமங்கள் பயனடைந்தனவோ அவ்வளவு கிராமங்கள் இந்த ஓராண்டில் பயனடையும். இது பெருமை தரும் சாதனையாகும்.



# நல்வாழவு-குடும்பநலத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்


—பி. முராரி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
நல்வாழ்வு—குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.


நகர கிராமப் பகுதி மக்களுக்குத் தமிழ்நாடு அரசு எப்போதுமே முனைப்புடன் சுகாதாரப் பணிகளைச் செய்து கொடுக்கும் நன்கு மேம்பட்ட முறையொன்றைப் பின் பற்றி வந்துள்ளது; அது மட்டுமின்றி ஏழை எளிய மக்களுக்கென்றே தனிக் கவனத்துடன் சிறப்புத் திட்டங்களையும் மேற்கொண்டு வந்துள்ளது. அவ்வாறு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டாலும் நோய்வாய்ப்பட்ட மக்கள் மாநகர, மாவட்ட மருத்துவ மனைகளுக்கு எண்ணற்றோர் வருகின்ற காரணத்தால், கூட்ட நெருக்கடியால் சில இடர்ப்பாடுகளும் பிரச்சினைகளும் இருந்தன. தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகு, ஏழைகளுக்கும் மருத்துவ உதவி வேண்டுவோர்க்கும் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதில் பல புதிய வசதிகள் செய்யப்பட்டன. ஓராண்டுக்கால குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுகாதாரத் துறை முனைப்புடன், மற்ற துறையினரும் இதனை எடுத்துக்காட்டாய்க் கருதிப் பின்பற்றத்தக்க அளவுக்குச் செயலாற்றி வந்துள்ளது.

**வந்துபோகும் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பணிகள்**

முன்பெல்லாம் கடுமையான நோய்கள் மற்றும் அதிர்ச்சியால் உண்டாகும் நோய்களுக்கெல்லாம் புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவில்தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மருத்துவ மனை நிர்வாகத்தில் எந்த நோயாளியை எந்தப்பிரிவில் சேர்க்க வேண்டும், எந்த நோயாளிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் மிகவும் இன்றியமையாத, அடிப்படை அம்சங்களாகும், ஆனால் இத்தகைய ஒழுங்குமுறை இதற்கு முன்னர் பின்பற்றப்படவில்லை; எல்லா நோயாளிகளும் ஒரே மாதிரிதான் கவனிக்கப்பட்டு வந்தனர். அரசு இது குறித்துப் பல ஆய்வுகள் நடத்திய பிறகு இரண்டு ஆணைகளைப் பிறப்பித்தது. அந்த ஆணைகளின்படி நோய் சிகிச்சைப் பிரிவுகள் நோயின் தன்மைக்கேற்ப சாதாரண நோய், கடுமையான நோய், அதிர்ச்சி நோய் என வகைப்படுத்தப்பட்டன; இவ்வாணைகள் கடுமையான நோயினாலும், அதிர்ச்சி நோயினாலும் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காகத் தீவிர சிகிச்சைப் பிரிவுகளும், ஏனையோருக்காக 24 மணி நேரமும் பணியாற்றும் எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவும் மருத்துவமனையில் தொடங்குவதற்கு வகை செய்தன. அரசின் ஆணைகளை அண்மையில்தான் தீவிரமாகச் செயல்படுத்த முடிந்தது; நோய்களின் தன்மைக்கேற்ப அவற்றை வகைப்படுத்தும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது; புற நோயாளிகளுக்கும், கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதில் அவசியமான ஒழுங்குமுறை பின்பற்றப்பட்டது. இத்தகைய நன்முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேளையில் மருத்துவ[illegible] கல்வி இயக்குநர் முக்கிய வி[illegible] முறை ஒன்றை வகுத்தார். அ[illegible] நோய் சிகிச்சைப் பிரிவின் செய[illegible] முறை போன்றே, புறநோ[illegible] சிகிச்சைப் பிரிவிலும் ஒரு நோய[illegible]ளியை, குறிப்பிட்ட ஒரு மருத்[illegible]வர்தான் நாள்தோறும் கவனிக்[illegible] வேண்டும் என்பதுதான் அந்[illegible] விதிமுறை. இதனால், சிகிச்சையி[illegible] தரத்தில் வரவேற்கத்தக்க அ[illegible]வுக்குப் பெரும் முன்னேற்றம் ஏ[illegible]பட்டு வருகிறது. இதன் காரண[illegible]மாக, நோயாளிகளுக்குப் பெரு[illegible] மன நிறைவு ஏற்படுகிறது: மரு[illegible]துவர்கள் சிகிச்சைக்காக எடுத்து[illegible]கொள்ளும் கால அளவும் குறை[illegible]கிறது. மருந்துகளின் உபயோக[illegible] சோதனைக்கூட ஆய்வுகள் எ[illegible]லாம் கூடுமானவரை குறைகி[illegible]றன. ஏனைய மருத்துவ மனைக[illegible] எல்லாவற்றிலும் இந்த முறை[illegible] பின்பற்றப்படும்.

எட்டு மருத்துவக் கல்லூ[illegible]களில் 6 தீவிர சிகிச்சைப் பிரி[illegible]களும், 4 தீவிர இருதய நோ[illegible] சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்[illegible] அனுமதி வழங்கப்பட்டுள்ளது[illegible] அவை திறம்படச் செயல்பட்[illegible] வருகின்றன.

**நோயாளிகளின் வீடு தே[illegible] மருத்துவர்கள் செல்கின்றனர்**

சமுதாயத்தின் தேவைகளு[illegible]கேற்ப மருத்துவக் கல்[illegible] முறையை மாற்றியமைப்பது[illegible] மருத்துவர்களை கிராமங்களுக்[illegible] அனுப்புவது குறித்து ஸ்ரீவத்வச[illegible]

குழு ஓர் அறிக்கை [illegible] ளது; அந்த அறிக்கையின் மீது அண்மைக் காலத்தில் பெருமளவில் விவாதங்கள் நடந்துள்ளன. இத்தகைய மகத்தான குறிக்கோள் இருப்பினும், ஏழை மக்களின் இல்லங்களுக்கே சென்று இலவச சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவர்களை அல்லது தனியார் நிறுவனங்களை அனுப்புவது அரசுக்கு இயலவில்லை. பல மாநாடுகள் நடந்தன; பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையனைத்தும் பயனளிக்கவில்லை. மருத்துவக் கல்லூரித் துறைத்தலைவர்கள், முதல்வர்கள், கண்காணிப்பாளர்கள் கூட்டமொன்று சென்னையில் நடைபெற்றது. மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஒவ்வொருவருக்கும் 2,500 நோயாளிகள் என்ற விகிதாசாரத்தைப் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளின் சிகிச்சைப் பிரிவுத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது; அதன்படி, சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரியிலிருந்து நடைதூரத்திலுள்ள ஓரிடத்தில் அதாவது, ஒரு கிராமத்திலுள்ளதைப் போன்ற வாழ்க்கைச் சூழல்களுள்ள அல்லது அந்நிலைமைகளைக் காட்டிலும் மோசமான சூழல்களமைந்த ஓரிடத்தில் உள்ள 2,500 பேருக்குச் சிகிச்சை அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என விதிக்கப்பட்டது. ஆளுநர் அவர்களும் அவரது ஆலோசகரும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்தனர், மருத்துவக் கல்லூரி இயக்குநரின் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்து அரசு தற்போது ஆணைகள் பிறப்பித்துள்ளது; மாநகரிலுள்ள 102 மருத்துவப் பிரிவுகள், 2.5 லட்சம் மக்கள் கொண்ட குடிசைப் பகுதிகளில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டும், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள 8 மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 274 மருத்துவப் பிரிவுகள், அவற்றைச் சுற்றிலுமுள்ள குடிசைப் பகுதிகளில் சிகிச்சை அளிக்க ஒப்புதல் வழங்கியும் அந்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. இவ்வாறாக, மொத்தம் 6.85 இலட்சம் குடிசைவாசிகளை மருத்துவ சிகிச்சைப் பிரிவுத் தலைவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். அவர்கள் குடிசைவாசிகளின் வீடுகளுக்கே சென்று ஒருங்கிணைந்த சுகாதாரப் பாதுகாப்புப் பணி செய்கின்றனர்.

தங்களுக்கென்று தனி மருத்துவ ஆலோசனை அறைகள் பெற்றுள்ள முதுநிலை மருத்துவப் பேராசிரியர்களைச் சிகிச்சை சம்பந்தமாகச் சந்தித்து ஆலோசனை



சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியை உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் 22—1—1977 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பெற வேண்டுமானால் பதினைந்து நாட்கள் கூடக் காத்திருக்க வேண்டும்; அவர்களெல்லாம் தற்போது குடிசைவாசிகளின் வீடுகளுக்கே சென்று மருத்துவ சிகிச்சை அளிக்கின்றனர். இம்மாநிலத்தில் தொடங்கப்பட்ட "நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று சுகாதாரப் பாதுகாப்புச் சிகிச்சை" அளிக்கும் முறையில் இது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பெற்ற 15 நாட்களுக்குள்ளேயே எதிர்பாராத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நகரைத் துயரில் ஆழ்த்தியது. அந்த வகையில் உரிய நேரத்தில் உதவிக்கு வந்த ஒரு திட்டம் என்றே இதனைக் கூறலாம். 102 மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மாநகருக்குள் தொற்று நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணியில் ஈடுபட்டன. மொத்தமுள்ள 8 இலட்சம் குடிசைவாசிகளில் 6.11 இலட்சம் பேருக்கு இந்த நோய்த் தடுப்பு ஊசி 15 நாளில் குத்தப்பட்டது; 10 நாட்களிலேயே பெரும்பாலோருக்கு ஊசி குத்தி முடிக்கப்பட்டது. ஏனையோருக்குத் தொற்று நோய்த்தடுப்பு ஊசி குத்தும் பணியைப் பொதுச் சுகாதாரத் துறையினரும், மருத்துவத் துறையினரும் மேற்கொண்டு தொடர்ந்தனர். இதன் காரணமாக இம்மாநகரில் காலராவினால் ஏற்படும் பெரியதோர் அபாயம் தடுக்கப்பட்டது.

### தொற்று நோய்த் தடுப்பு

கொடிய தொற்றுநோயான பெரியம்மை நோய் கடந்த காலத்தில் எண்ணற்ற உயிர்களைக் குடித்து வந்தது. இம்மாநிலத்தில் அந்நோய் அறவே ஒழிக்கப் பட்டு விட்டது. இம்மாநிலத்தில்





சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையின் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியைச் சார்ந்த நடமாடும் ஊர்தியின் பணியினைத் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 22—1—1977 அன்று துவக்கி வைத்தார்.

எவரும் பெரியம்மை நோயால் பாதிக்கப்படவில்லை. இந்தியாவில் பெரியம்மை நோயை அறவே ஒழித்த முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றது. என்றாலும், இந்நோய் ஒழிப்புப் பணிக்கென நியமிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்ந்து விழிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

1976-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு உரிய நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள், நோயாளிகள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் காரணமாக மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டில் மாநில மலேரியா ஒழிப்புக்குழு அமைக்கப்பட்டது; அதன் பின்னர் அக்குழு கூடவே இல்லை; 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களைத் தலைவராகக் கொண்டு புதிய குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்நோயைத் தடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள அக்குழு மாதந்தோறும் கூடி வருகிறது. நோய் குறித்த இடையறாத கணக்கெடுப்புப்பணிகளும், மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளும் மேற்கொண்டதன் காரணமாக மலேரியா நோய் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது வகையில் தொண்டு நிறுவனங்கள், தேசிய மாணவர் சேவைப்படை முதலிய அமைப்புகள், அரசின் முயற்சிகளுக்குப் பெரிதளவில் உதவியும் ஆதரவும் அளித்து வருகின்றன.

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொழுநோய் பரவுதலைக் கட்டுப்படுத்தவும், தொழு நோயாளிகளுக்கு நவீன சிகிச்சையும் வசதிகளும் அளிக்கவும் 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களிலிருந்து தனி இயக்கம் ஒன்றை மாநில அரசு தொடங்கியுள்ளது. மொத்தம் 7.5 இலட்சம் தொழுநோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1976-77-ஆம் ஆண்டில் தொழு நோய்க் கட்டுப்பாட்டுச் சிகிச்சைப் பிரிவுகள், பழைய சிகிச்சைப் பிரிவுகளை எல்லா வசதிகளும் கொண்டவையாகத் தரமுயர்த்தல், நகர்ப்புறத்தில் தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களை அமைத்தல், தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ மனையில் படுக்கைகள் கொண்ட தற்காலிக வார்டுகள் ஏற்படுத்தல், தொழுநோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வர உதவும் சிகிச்சைப் பிரிவுகளை அமைத்தல் முதலியவை தொடர்பாக 60.53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1976-ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளிடையே தொழுநோய் பரவி

யுள்ளதா என்பதைக் கண்ட
வதற்காக மருத்துவ பரிசோதனை
மேற்கொள்வதற்கான புதி
தொரு திட்டமொன்றுக்கு அனு
மதி வழங்கப்பட்டது. ஆசிரிய
களும், மருத்துவத் துணைப்பணி
யாளர்களும் மருத்துவர் கு
வுடன் இணைந்து, பள்ளி மற்று
பள்ளிப் பருவம் வரா பால
பள்ளிச் சிறுவர்களைப் பரிசோதனை
செய்து, திறம்படச் சிகிச்சை
அளித்துப் பணியாற்றுவர்.

### ஊட்டச்சத்து மாத்திரை வழங்கு திட்டம்:

ஊட்டச்சத்து குறைவு, வைட்ட
மின் 'ஏ' பற்றுக்குறை காரண
மாக, தமிழ்நாட்டிலுள்ள சுமார்
2 இலட்சம் குழந்தைகள் படி
படியாகப் பார்வை இழந்து வரு
தாக ஆய்வு அறிக்கை ஒன்றி
கூறப்பட்டிருந்தது; இதைக் கண்
ணுற்றுப் பெரிதும் அதிர்ச்சியுற்
இந்தியப் பிரதமர் அவர்கள்
நிவாரண நடவடிக்கைகளின் ஒரு
பகுதியாக 1976 ஆம் ஆண்டு
மத்தியில் பிரதமர் நிவாரண
நிதியிலிருந்து 2 இலட்சப்
ரூபாய் வழங்கினார். தமிழ்
நாடு அரசு இந்த நன்கொடை
யைப் பயன்படுத்தி, ஊட்ட
சத்துணவுத் திட்டம் நடைமுறை
யில் இல்லாத மாவட்டம் ஒவ்
வொன்றிலும் உள்ள ஒரு வட்ட
ரத்தில் குழந்தைகளிடையே
தோன்றும் பார்வையின்மையைத்
தடுத்து, அதைக் கட்டுப்படுத்து
திட்டத்தைச் செயல்படுத்த
அனுமதி வழங்கியுள்ளது

மாவட்ட சுகாதார அலுவலரு
மக்கள் தொடர்பு அலுவலரு
இத்திட்டத்திற்குப் பொறுப்
பேற்றுள்ளனர். மருத்துவத்
துணைப் பணியாளர்களும், சமு
தாய நலப் பணியாளர்களும்
ஊட்டச்சத்து, சுகாதாரக் கல்வி



1976-ஆம் ஆண்டில்தான் கல்ராயன் மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கு முதன்முதலாக மருத்துவ வசதி கிடைத்தது!

பணிகளை மேற்கொள்வர்; பற்றுக் குறை நோய்களைக் கண்டறிவர்; தேவையானவர்களுக்கு வைட்டமின் 'ஏ' கலந்த மருந்துகள் வழங்குவர்; மக்கள் தங்கள் உணவில் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு எடுத்துக் கூறுவர்.

**பழங்குடி மக்களின் நலங்காக்கும் திட்டம்:**

பழங்குடி மக்களுக்கு மருத்துவப் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுப்பதில் மருத்துவப் பணிகள் துறை, அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. கடந்த ஓராண்டில் பழங்குடி மக்கள், கொத்தடிமை முறையிலிருந்து விடுதலை பெற்றவர்கள் ஆகியோரின் நன்மைக்காக, மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் தொடங்கும் சிறப்புத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதும் இத்தகைய சிறப்புத் திட்டங்களில் ஒன்ருகும். 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்ராயன் குன்றுகளில் கொத்தடிமைகளாக இருந்த பழங்குடி மக்கள் விடுவிக்கப்பட்டனர்; அவர்களின் நன்மைக்காக நடமாடும் மருத்துவப்பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது; கள்ளக்குறிச்சி, அரூர், ஆத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வட்ட மருத்துவ மனைகள் மூன்றில் ஆய்வுக் கூட வசதிகளைப் பெருக்கியுள்ளது. இப்பகுதிகளில் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி குத்தவும், சுகாதார சுற்றுப்புறத் தூய்மைப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்காகவும் மூன்று சுகாதார ஆய்வா

**குடும்பநலத் திட்டம்**

குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதுமே முன்னிலையில் இருந்து வந்திருக்கிறது. எனினும் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகு, இத்திட்டத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 25 அம்சத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்துவதற்காகக் கூடும் ஒவ்வொரு கூட்டத்திலும், குடும்ப நலத் திட்டப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் 1976-77-ஆம் ஆண்டில், 5 இலட்சம் ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும், 35,000 பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்த வேண்டும், 1,47,500 பேர் வழக்கமான கருத்தடை முறையைப் பின்பற்றச் செய்ய வேண்டும் என்று இந்திய அரசு இலக்கு வரையறுத்தது. இதுவரை இம்மாநிலம் குடும்பநலத்திட்டத்தில் எய்திய சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | பேர் |
|---|---|
| ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை | 5,15,678 |
| பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்துதல் | ௨௦,௪91 |
| வழக்கமான கருத்தடை முறையைப் பின்பற்றுதல் | 1,42,321 |

அரசு மருத்துவ நிலையங்களில் ஓரளவு வசதிகள்தான் இருக்கின்றன; ஆகவே, கருத்தடைச் சிகிச்சை முகாம் முறையை அரசு வலியுறுத்தி வருகிறது. இம்முறையினல் குறிப்பிடத்தக்க பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை வைத்து அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், வட்ட மேசை சேவா சங்கம் முதலிய அமைப்புகள் சென்னை மாநகரத்திலும், ஏனைய நகரங்களிலும் கருத்தடைச் சிகிச்சை முகாம்களை வெற்றியுடன் நடத்தி வருகின்றன. உள்ளாட்சி மன்றங்கள், கிராமத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்தகைய சிறப்பு முகாம்களை நடத்துமாறு இந்த அமைப்புகள் மாவட்டங்களிலுள்ள தங்கள் கிளைகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளன.







'பின்னி அண்டு கம்பெனி', மெட்ராஸ் சிமெண்ட்ஸ், 'போர்ட் டிரஸ்ட்', 'டாக் லேபர் போர்டு' முதலிய தொழில் துறையினர் சிறப்பு முகாம்கள் நடத்தினர். இந்த முகாம்கள் நம்பிக்கையூட்டும் பலன்களை அளித்தன. கருத்தடைச் சிகிச்சைக்குப் பிறகு, பிந்திய வசதிகள் செய்து கொடுப்பதில் பெரும் கவனம் செலுத்தப்படுகிறது என்பது இந்த முகாம்களில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்; இவ்வாறு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதால் இம்முறையை ஏனையோரும் ஊக்கத்துடன் பின்பற்றுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. தொண்டு நிறுவனங்கள், இளைஞர் சங்கம், மாதர் சங்கம் போன்ற அமைப்புகளும் இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ளன.



சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், கரும்பு பயிரிடுவோர், அவர்தம் பணியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக, 10-15 நாட்கள் கொண்ட குடும்பநலத் திட்டச்சிறப்புமுகாம்கள் நடத்துமாறு சர்க்கரை ஆலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில், இத்திட்டம் சம்பந்தமாகக் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்ருல், எல்லாச் சிறுபான்மை மதத்தினரும் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதுதான். அவர்களில் பலரும் இத்திட்டத்தைப் பின்பற்றி, அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன் வந்துள்ளனர்.

**புதிய சலுகைகள்**

அரசுப் பணியாளர்கள், பொது மக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் முதலியோர் இத்திட்டத்தைப் பின்பற்றினுல் கிடைக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன, பின்பற்ருவிடில் பெறவியலாதவை என்னென்ன, என்று வகுத்துக் கூறப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, பேறுகால விடுப்பு, பயணப்படி, மருத்துவச் சலுகைகள் முதலியன முதல் மூன்று குழந்தைகள் பெறும் வரைதான் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அரசிதழ்ப் பதிவு பெருத அரசுப் பணியாளர் அல்லது அவரது மனைவி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் அவருக்கு முன்கூட்டியே ஒரு சம்பள உயர்வு அளிக்கப்படும் என்று அரசு அண்மையில் அறிவித்துள்ளது. அரசுப் பணியாளர்கள் மூலம் இத்திட்டத்திற்கு மேலும் ஊக்கமளிக்கும் வேறுபல நடவடிக்கைகள் மேற்கொள்வது பரிசீலனையில் உள்ளன.

குடும்பநலத்திட்டத்தின் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாக இவ்வாண்டு பேறுகால - குழந்தை நலத் திட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் பேறுகால- குழந்தைகள் நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

1000 பேருக்கு 29 குழந்தைகள் என்ற குறைந்த அளவு பிறப்பு விகிதாசாரத்தைத் தமிழ்நாடு எட்டியுள்ளது.

ஐந்தாவதுஐந்தாண்டுத்திட்டக் கால இறுதியில் 1,000 பேருக்கு 25 குழந்தைகள் என்ற அளவுக்கு பிறப்பு விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலம், தேசிய மக்கள் தொகைக் கொள்கை இலக்கை எட்டுவதற்கான தருணம் வந்துள்ளது.



# இந்து சமய அறநிலைய நிர்வாகம்

— ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், வணிகவரி மற்றும் சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களும், மடங்களும் நமது நாட்டின் பண்பாட்டினையும், பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாப்பதற்குத் தமது சிறப்பான பங்கை ஆற்றியுள்ளன என்று பெருமையோடு கூறலாம். பன்னெடுங்காலமாகவே மாநில, அரசு, பொதுமக்களின் சமய அறக் கட்டளைகளைப் பாதுகாப்பதைத் தனது பணிகளில் ஒன்றாகக் கருதியதே இதற்குக் காரணமாகும். 1817-ஆம் ஆண்டைய சென்னை ஒழுங்குமுறை விதிகள் (7) முதல் தற்போது செயலில் உள்ள சட்டம் வரையில் (22/1959) உள்ள எண்ணற்ற ஒழுங்குமுறை விதிகள் இக்கொள்கையைச் செயல்படுத்த உதவின.

1959-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் இந்து சமய நிறுவனங்கள் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் என்றும், பட்டியலிடப்படாத நிறுவனங்கள் என்றும் வகைப் படுத்தப் பட்டுள்ளன. அறங்காவலர்களை நியமித்தல், திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், வரவு செலவுத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குதல், கணக்குகளைத் தணிக்கை செய்தல் முதலியவற்றிற்காக ஆணையாளருக்கும், அவரது சார்நிலை அதிகாரிகளுக்கும் அதிகாரங்களை வழங்கியதன் மூலம் மேற்பார்வைப் பணி செய்யப்பட்டு வருகின்றது. மாநில அரசு நிதிகளிலிருந்து அரசு ஆண்டொன்றுக்குக் கொடுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் அடையாளத் தொகை தவிர இத்துறையை நிர்வகிப்பதற்கான செலவு முழுவதும் இச்சமய நிறுவனங்கள் மீது விதித்து வாங்கப்படும் தொகையின் மூலம் சரிக்கட்டப்படுகிறது. அவற்றின் ஆண்டு வருமானத்தில் 2 முதல் 7 சதவீதம் வரை தொகை வசூலிக்கப்படுகிறது. தவிர, 1,000 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களிலிருந்து 1.5 சதவீதம் தணிக்கைக் கட்டணமாகவும் வாங்கப்படுகிறது. அதேபோல, திருக்கோயில்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்குச் சம்பளம், படிகள் கொடுப்பது குறித்து ஆகும் செலவுத் தொகை அக்கோயில்களிடமிருந்து முழுவதுமாக வசூலிக்கப்படுகிறது. எல்லா நிறுவனங்களும் அச்செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆதலால் எந்த நிறுவனங்கள் நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தையும், படிகளையும் கொடுக்கக் கூடிய நிலையில் உள்ளனவோ அவை மட்டும் அச்செலவினை ஏற்றுக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற நிறுவனங்களின் நிர்வாகத்தினை, தொகை எதுவும் வாங்காமல் மேற்பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 51,000 சமய நிறுவனங்கள் தங்களுக்கெனச் சொந்தமாக நிலங்களை உடையன என்று இந்து சமய-அறநிலையத் துறை அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றால் புலப்படுத்தியது.

முன்னாள் அறங்காவலர்கள் இச்சமய நிறுவனங்களை நிர்வகிப்பதில் முறைகேடான முறையில் நடந்து கொண்டனர் என்று குற்றம் சாட்டிப் பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களிடமிருந்து கணக்கற்ற மனுக்களும், புகார்களும் இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்ததும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதே முக்கியமான குற்றச் சாட்டாகும். கடவுள் மீது அல்லது சமயத்தின் மீது நம்பிக்கையில்லாமல் அல்லது இத் திருக்கோயில்களில் நடைபெறும் சமயச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை மதிக்காத அப்போதைய ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அக்கட்சியின் அனுதாபிகள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். தன் சொந்த உயர்வுக்கும், பயனுக்கும் இப்பதவிகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் ஆகியவற்றினைத் தவறான முறையில் பயன்படுத்தியது குறித்தும் பல்வேறு குற்றச் சாட்டுகள் வந்துள்ளன. இந்த நிலங்களைக் குத்தகைக்கு விடுதலில் அல்லது விற்பனை செய்வதில் முறைகேடுகள், தனிப்பட்ட சலுகைகள் காட்டுதல், மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் வழங்குவதில் முறைகேடுகள், அறநிலையங்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாத காரியங்களுக்குத் திருக்கோயில் நிதிகளைச் செலவிடுதல், குறிப்பிட்ட நபர்கள் வெளியிடும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் தனிப்பட்ட முறையில் பாரபட்சமாக வாங்குதல், கட்சிப் பத்திரிகைகளில் வகை தொகையற்ற விளம்பரங்கள் செய்தல் ஆகியவை முன்னாள் அறங்காவலர்கள் மீது கூறப்பட்ட ஒரு சில முக்கியமான குற்றச் சாட்டுகளாகும்.

எண்ணற்ற இப்புகார்களைக் கவனமாகப் பரிசீலித்த பின்னர் அரசு, தன்னிடம் வரப்பெற்ற பல்வேறு புகார்களை விசாரணை செய்வதற்கு முதுநிலை நிர்வாக அதிகாரி, கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட முதுநிலைத் தணிக்கை அதிகாரி, பொதுப் பணித்துறை நிர்வாகப் பொறியாளர் ஆகியோரடங்கிய சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது.

அதே சமயத்தில், அக்குழுவின் புலன் விசாரணை அறிக்கையும் முடிவுகளும் வரும்வரை, திருக்கோயில் நிலையிலும், துறை நிலையிலும் இப்பிரச்சினையைச் சமாளிக்க அரசு முடிவு செய்தது. துறை, முன்னர் நியமித்த பரம்பரை முறையில் வராத அறங்காவலர்கள் பதவிகள் அனைத்தும் குடியரசுத் தலைவர் சட்டத்தின் மூலம் (சட்டம் எண். 24/1976) 1-6-1976 முதல் நீக்கப்பட்டன. பரம்பரை அறங்காவலர்கள் எவரும் இல்லாத திருக்கோயில்களில், அறங்காவலர்களின் பணிகளைக் கவனிக்கக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை அரசு நியமித்தது. பெரிய அளவில் நிர்வாக அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். ஆண்டுக்கு 10,000 ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வருமானம் உள்ளதாகக் கணிக்கப் பெறும் திருக்கோயில்களின் நிர்வாகம் அவர்களின் பொறுப்பில் விடப்பட்டது. பல சூழல்களில் அறங்காவலர்களின் பணிகளை ஆற்ற [illegible] அதிகாரிகளுடன் பிற [illegible] அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் அவர்களுடைய இதர பணிகளுடன் இதனையும் கவனிக்கும் 'தகுதியுள்ள நபர்களாக' நியமிக்கப்பட்டனர்.

அறங்காவலர்களின் பதவியில் நியமிக்கப்பட்ட தகுதியுள்ள நபர்கள் தங்கள் கடமைகளை மன நிறைவளிக்கும் வகையில் நிறைவேற்றும் பொருட்டு நிர்வாக நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டன. தகுதியுள்ள, மேற்சொன்ன நபர்களுடன், திருக்கோயில்களில் உள்ள எல்லாத் திரு ஆபரணங்கள், விலை மதிப்புள்ள பொருள்கள் ஆகியவற்றையும், உண்டியல்களையும் கூட்டாகப் பாதுகாக்கப் பிற துறை அதிகாரிகள் இரண்டாவது காப்பாளர்களாக ( Second Look Officers ) நியமிக்கப்பட்டனர். திருக்கோயிலுக்கு வரப் பெறும் வரவுகள் அனைத்தும் I ஆம் கணக்கில்தான் வரவு வைக்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமான கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டன. விதிகளின்படி இக்கணக்கு அறங்காவலர்கள் குழுத் தலைவர் பெயரில் இருக்கிறது. நிர்வாக அதிகாரியின் பெயரில் உள்ள II ஆம் எண் கணக்கிற்கு I ஆம் எண் கணக்கிலிருந்து தொகை எதுவும் மாற்ற வேண்டுமானால், துணை ஆணையர்களின் முன் அனுமதியின் பேரில்தான் செய்ய வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட "திட்டம்", வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றையொட்டியே நிர்வாக அதிகாரிகள், தொகையைச் செலவிட வேண்டும். அறங்காவலர்கள் என்ற புதிய பதவிகளை ஏற்படுத்து வதற்கான அவர்களது அதிகா[illegible] [illegible] தடை செய்யப்பட்டுள்ளன. குற்றச் சாட்டுகளின்படி கணிசமான அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாகக் கருதப்படும் அர்ச்சனைச் சீட்டுகள் அச்சிடுதல் பணி, உதவி ஆணையர்கள்-துணை ஆணையர்கள் அளவில் செய்யப்படுகிறது. உரிய, முறையான கணக்குகள் வைத்த பின்னர் இவை அவர்களின் முத்திரையுடன் கொடுக்கப்படுகின்றன. மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு ஆனால் பணி இன்னும் தொடங்கப் பெறாத சிவில் பணிகள் அனைத்தும், அப்பணி தொடங்க வேண்டுவது அவசியமா என்பது பற்றியும், இடைக்கக் கூடிய நிதி வசதிகளைப் பற்றியும் இறுதியாக மீண்டும் ஆய்வு செய்வதற்காக நிறுத்தப்பட்டன. ஏற்கெனவே நிறைவேறிவரும் கட்டுமானப் பணிகள் குறித்து அதன் பணி அளவைப் பதிவு செய்யாமல் தொகை வழங்கப்படக் கூடாது என்று ஆணையிடப்பட்டது. பொறியாளர்கள் துறைப் 'அளவை-ஆய்வு' செய்யாமல் இறுதியான தொகை எதுவும் வழங்கப்படக்கூடாது [illegible] [illegible] ஏற்பாடு [illegible] நிகழ்ச்சிகள் குறித்துப் பொது மக்களுக்குத் தகவல் தெரிவிக்க மட்டுமே விளம்பரம் கொடுக்கப் படலாம் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

துறை அளவில், ஒரே இடத்தில் [illegible]





மாவட்டங்களில் அதிக நாட்கள் பணியாற்றிய அதிகாரிகள் அவை வரும் பிற இடங்களுக்கு அல்லது பிற மாவட்டங்களுக்கு மாற்றப் பட்டனர். பொது நல நிதியிலிருந்து தொகை எடுப்பது குறித்தும், அரசின் முன் அனுமதியின்றி நிறுவனங்களின் உபரி நிதியைப் பிற காரியங்களுக்குச் செலவிடுதல் குறித்தும் ஆணையாளருக்குள்ள அதிகாரங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. ஆணையாளருக்கு உதவ, பல்வேறு நிலையில் உள்ள தரமானவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. வட்டாரத் துணை ஆணையாளர்களிடம் நீண்ட காலமாக முடிவு பெறுமல் உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவாக முடிவு செய்யப் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று முடிவு செய்யும் அதிகாரங்களுடன் துணை ஆணையர்கள் என்ற தனிப் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான குடியிருப்புக் கட்டிடங்கள், குடியிருப்பல்லாத கட்டிடங்களுக்கான நியாய வாடகையை முடிவு செய்வதன் மூலம் சமய நிறுவனங்களுக்கு உதவ நிர்வாகப் பொறியாளர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அப்போதுதான் அந்த நிறுவனங்கள் தங்கள் நிதிவாயில்களைப் பெருக்கிக் கொள்ள இயலும். நன்கொடைத் தொகைப் பாக்கிகளை வசூலித்தல், தணிக்கைக் கட்டணங்களை வசூலித்தல், நிர்வாக அதிகாரிகளின் சம்பளங்களை வசூலித்தல் ஆகியவற்றிற்கான இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டு 1-2-76-க்கும் 30-11-1976-க்கும் இடைப்பட்ட கால அளவில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் தொகை வசூலிக்கப் பட்டது. இந்த இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. 15 பசலிக்கும் மேற்பட்டவை தொடர்பாக நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் குவிந்து விட்டதும், 18 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகை சம்பந்தப்பட்டதுமான தணிக்கை மறுப்புரைகள் கோட்ட வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு தணிக்கை அதிகாரிகளும், நிர்வாக அதிகாரிகளும் ஒருங்கு கூடும் ஆய்வுக் கூட்டங்கள் வாயிலாகத் தீவிரமாகச் சரி செய்யப்பட்டு வருகின்றன. தொகை கையாடல் அல்லது விதிகள் தவருகப் பயன்படுத்தல் ஆகியவை எங்கெல்லாம் நடைபெறுவதாக அறியப் படுகிறதோ அங்கெல்லாம் நிறுவனங்கள் அடைந்த இழப்பை ஈடுகட்ட அதிகப்படிக் கட்டணம் வசூலிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சரிபார்க்கும் பிரிவில் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில்



புராதன கோயில்களைப் பாதுகாக்கும் பணியில் கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளன. அப்போதுதான் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திரு ஆபரணங்கள், பிற விலை மதிப்புள்ள பொருள்கள் விரைவில் நாளது வரையில் சரி பார்க்கப்பட இயலும்.

திருக்கோயிலின் திருப்பணிக்காகப் பல்வேறு சமய நிறுவனங்களுக்கு உதவ, நடப்பாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15 இலட்சமும், அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 17 இலட்சமும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், திருப்பணிக் குழுக்கள் எங்கெல்லாம் அமைக்கப்படுகின்றனவோ அவை ஆணையாளரின் அனுமதியை முதலில் பெறவேண்டும் என்றும் திருக்கோயிலின் பொறுப்பாக உள்ள நிர்வாக அதிகாரியைச் செயலாளராக நியமிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் திருப்பணிக்காக வசூலிக்கப்படும், பெறப்படும் தொகைகளுக்குக் கணக்கு வைத்து வரும் பொறுப்பு, செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருப்பணிக் குழு, திருப்பணி குறித்த வரைபடங்களுக்குத் தொல்பொருள் ஆய்வு இயக்குநர் அலுவலகத்திடமிருந்து முதலில் அனுமதி பெற வேண்டும். அப்போதுதான் திருக்கோயிலின் உண்மையான கட்டிடக் கலை நுட்ப அமைப்பினையும், கோயிலில் உள்ள அரிய கல்வெட்டுகள் ஏதேனுமிருப்பின் அவற்றைப் பாதுகாக்கும் விஷயத்தில் தொல் பொருள் ஆய்வு இயக்குநர் திருப்பணிக் குழுவிற்கு வழி காட்ட இயலும். திருக்கோயிலில் காணப்படும் புராதன மதிப்புடைய சிலைகளைப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

அழிந்து வரும் நிலையில் உள்ள பழங்காலக் கோயில்களின் விவரங்களையும் துறை சேகரித்து வருகிறது. அப்போதுதான் அவைகளைப் படிப்படியாக, பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும். இத்துறையில் முதல் நடவடிக்கையாக, தஞ்சாவூரில் கடல் அரிப்பால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தரங்கம்பாடிக் கோயிலை மீண்டும் புதுப்பித்துக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதே போல, சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாத சுவாமி திருக்கோயில் போன்ற புகழ்பெற்ற திருக்கோயில்கள் உட்பட பல திருக்கோயில்களில் படிப்படியான நிலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்குரிய பெருந் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சமய நிறுவனங்களில் உபரியாக உள்ள நிதிகளைக் கொண்டு, சமூக நல நடவடிக்கைகளைத் துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அரசு மேற்கொண்ட பல்வேறு சமூக நலத் திட்ட களுக்குக் கடந்த ஆண்டில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன கோயில் நிதிகளைக் கொண்டு செவிடர், ஊமையர் பள்ளிகள் இரண்டு, கருணை இல்லங்கள் 2 மூன்று, 204 நூலகங்கள், ஒ சித்த மருத்துவ மனைகள், ஆங்கில முறை மருத்துவ மனை (மூவாயிரத்திற்கும் மேற்பட் சிறுவர்களுக்காக) பல அனு இல்லங்கள் ஆகியவை தொடர்ந் பராமரிக்கப்பட்டு வருகின்றன இம்மாநிலத்தில் உள்ள பல்வே சமய நிறுவனங்களின் ஆதரவி கீழ் ஏழு கல்லூரிகளும் 18 உய நிலைப்பள்ளிகளும் நடத்தப்பட் வருகின்றன. இக்கல்லூரிகள் பள்ளிகளின் நிர்வாகத்தைச் சீ மைக்கவும், அவைகளின் கல்வி தரத்தை உயர்த்துவதற்குமா நடவடிக்கைகளும் மேற்கொ ளப்பட்டுள்ளன. எண்ணற் சமய நிறுவனங்களை நிர்வகிக்கு மிகப் பெரிய பணி, அதிகாரிக டம் மட்டும் நெடு நாட்களுக் விட்டுவிடப்படக்கூடாது எ பதை மாநில அரசு நன்கு உணர் துள்ளது. தெய்வ வழிபாட் லும், கடவுள் நம்பிக்கையிலு ஈடுபாடுடைய, அதிகாரிகள லாத பிற நேர்மையாளர்களி யேயிருந்து அறங்காவலர்களை தேர்ந்தெடுப்பதற்கு எண்ண யுள்ளது.





# குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையில் முன்னேற்றம்

— சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
பொதுப்பணித் துறை, தமிழ்நாடு அரசு.

மின் திட்டங்களில் செய்யப்படும் முதலீடு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி வளத்தைப் பெருக்க உதவு கிறது. 1976-77-ல் மின் திட்டங்களுக் கான முதலீடு கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது. மின் திட்டங்களுக்காக, 1974-75-ல் 29.50 கோடி ரூபாயும், 1975-76-ல் 40 கோடி ரூபாயும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், நடப் பாண்டில் 70.18 கோடி ரூபாய் முதலீடு செய் யப்பட்டுள்ளது. இத்தொகை, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் முதலீடு செய்யப் பட்ட தொகைகளின் மொத்த அளவைக் காட்டிலும் அதிகமாகும். 1977-78-ஆம் ஆண்டில் மின் திட்டங்களுக்குரிய முத லீட்டை மேலும் உயர்த்தி, மொத்தம் 94.1 கோடி ரூபாய் ஒதுக்குவதென அரசு கருதி யுள்ளது. மொத்த ஒதுக்கீட்டில் மின் உற் பத்தித் திட்டங்களுக்கு மட்டும் ஆண்டுதோறும் சராசரியாக 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த ஆண்டில் செயற் படுத்தப்பட்டு வருகின்ற மின் உற்பத்தித் திட் டங்களில் அடங்கிய பணிகளுக்குப் போதிய ஆதரவு அளிக்க வேண்டி மின் உற்பத்தித் திட்டங்களுக்குரிய ஒதுக்கீடு 43.7 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1976-ஆம் ஆண்டில், சென்னைக்கருகே யுள்ள எண்ணூர் அனல் மின் நிலைய விரி வாக்கத் திட்டம் (110 மெ. வா), நீலகி[illegible] மாவட்டத்தில் நடுவட்டம் நீர்த் திசை திருப்புத் திட்டம் (69 மில்லியன் யூனிட்டுகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் குட்டியாறு







நீரேற்றுத் திட்டம்(40 மில்லியன் யூனிட்டுகள்) ஆகிய மூன்று திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

## நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள்

கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் திட்டங்களில், குந்தா 4-ஆம் நிலைத் திட்டம், சுருளியாறு நீர் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஆகியன 5-ஆம் திட்டக் காலத்தில் . (1978-79-க்கு முன்னதாக) உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குந்தா 4-ஆம் நிலைத் திட்டத்தின் கீழ், குந்தா 3-வது மின் நிலையத்தில் 60 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட மூன்றாவது பிரிவையும், குந்தா 4-வது மின் நிலையத்தில் 50 மெ. வா. உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது பிரிவையும் நிறுவத் திட்ட மிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 11.64 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள இத் திட்டத்தை 1977-78-ல் நிறைவேற்றி முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் சுருளியாறு, ஏர வங்கலாறு என்னும் ஆறுகள் பாய்கின்றன. இவை 39. ச. கி. மீ. பரப்புள்ள நீர்ப்பிடிப்பு பரப்புடையவை. சுருளியாற்றின் வெள்ளப் பெருக்கைப் பயன்படுத்தி சுருளியாறு மின் திட்டம் நிறுவப்படுகிறது. 19.41 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கக் கருதப்பட்டுள்ள இத்திட்டம், 1978-79-ல் நிறைவேற்றி முடிக்கப்படும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் கீழ், தொடக்கத்தில் 2×210 மெ. வா. உற் பத்தித் திறனும், இறுதியில் 630 மெ. வா. உற்பத்தித் திறனும் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை தூத்துக் குடியில் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 140.86 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவினைக் கொண்ட இத்திட் டத்தினை 1978-79-ல் (முதல் பிரிவு) முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுருளியாறு திட்டத்திற்கு 1975-76-ல் 2.43 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1976 -77 நிதியாண்டில் 1976-ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 3.74 கோடி ரூபாய் செலவிடப்பட் டுள்ளது. அதுபோலவே, பாண்டியாறு— புன்னப் புழா திட்டத்திற்கு 1975-76-ல் 24 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1976-77-ல் ஒன்பது மாத காலத்தில் 73 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் திட்டப்பணிக்கு மேலும் ஊக்க மளிக்கும் வகையில் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1975-76-ல் இத்திட் டத்திற்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்ததற்கு மாறாக, 1976-77-ல் 34.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் தொகை 1977-78-ல் 43 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தப்படவிருக்கிறது.

மின்சக்தியைக் கொண்டு செல்லுதல் மற்றும் விநியோகத்திற்கான ஒதுக்கீடு, ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் என்ற அளவில் மட்டுமே இருந்து வந்தது. 1976-77-ல் அதிகப் படியான திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படவிருப்பதைக் கருத்திற்கொண்டு, அக்கால அளவிற்கான நிதி ஒதுக்கீடு 15 கோடியாக உயர்த்தப்பட்டது. முந்திய மூன்று ஆண்டுக்கால அளவில், மொத்தம் 14

துணை மின் நிலையங்களும், மொத்தம் 196 கி.மீ. நீளமுள்ள 14 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளும் ( Extra High tension lines ) நிறுவப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 26 துணை மின் நிலையங்களையும் மொத்தம் 340 கி.மீ. நீளமுள்ள 15 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளையும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மின் அமைப்பின் மின் வழங்கு நிலைமைகள் மன நிறைவளிக்கின்ற வகையில் செம்மையாகவும் நிலையாகவும் அமைவதற்குப் போதிய வசதிகள் செய்து கொடுப்பது கூடுதல் பணிகளை மேற்கொள்வதன் குறிக்கோளாகும். நுகர்வோரின் தேவைகளைச் சமாளிக்க 1977-78-ஆம் ஆண்டுக்கான பேராவல் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 28 துணை மின் நிலையங்களை ஏற்படுத்தவும், மொத்தம் 408 கி.மீ. நீளத்திற்கு 20 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 28.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மின் அமைப்பின் மின் வழங்கல் நிலையில் காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வைக் களைவதில் மின் வாரியத்திற்கும் அரசுக்கும் உள்ள பேரார்வத்தை இந்த ஒதுக்கீடு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

**முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மின்சார உற்பத்தி பெருகியது !**

தற்போதைய மின் உற்பத்தி நிலையங்களின் ஆற்றல்களை முடிந்த அளவுக்கு மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசரத் தேவையைக் கருத்திற்கொண்டு, 1970-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகப் பல முறை இயந்திரக் கோளாறுகளுக்கு உட்பட்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தின் பழுதுபட்ட பிரிவுகளைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்கான திட்டவட்டமான, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கனரக மின் சாதனங்களை வழங்கும் நிறுவனமான பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் லிமிடெட்டின் நெருங்கிய ஒத்துழைப்புடனும், ஆதரவுடனும், மத்திய மின்சார அதிகார மன்றத்தின் மூலம் பெற்ற வல்லுநர்களின் உதவியைக் கொண்டும், அடிக்கடி பழுது ஏற்பட்ட பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுச் சரிசெய்யப்பட்டதால் எண்ணூர் அனல் மின் நிலையம் 1976-இல் முதன் முறையாக இயல்பான நிலைமைக்குத் திரும்பி, மின்சார உற்பத்தியைத் தொடங்கியது. இந்த மின் நிலையத்திலிருந்து பெருமளவு மின் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்டபோது, தக்க நேரத்தில் நிலைமை சீரடையத் தொடங்கிவிட்டது. எண்ணூர் அனல் மின் நிலையம் பழுது பார்க்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியதால் எதிர்பாராத வகையில் பருவ மழை பொய்த்து அதன் காரணமாக நீர் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட பற்றுக் குறையை ஓரளவுக்கு ஈடு செய்ய முடிந்தது.

எண்ணூர் அனல் மின் நிலையம் 1975-ஆம் ஆண்டில் 812 மில்லியன் யூனிட்டு மின் சக்தியை உற்பத்தி செய்தது. ஆனால் 1976-ஆம் ஆண்டில் அதே அனல் மின் நிலையம் 1840 மில்லியன் யூனிட் மின்சக்தியை உற்பத்தி செய்தது. இதனை எண்ணூர் அனல் மின் நிலையத்தின் அரிய சாதனை என்றே சொல்ல வேண்டும். இந்நிலையம், நாள் ஒன்றுக்கு உயர்ந்த அளவாக 400 மெ. வா. உற்பத்தியும், 913 மில்லியன் யூனிட் மின்சார உற்பத்தியையும் செய்யும் சாதனையளவு திறனை எய்தியுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவும் இயக்கப் பெற்று உற்பத்தி செய்யும் நிலை பெரிதும் சீரடைந்துள்ளது. அவை இயந்திரக் கோளாறுகளால் வேலையில்லாதிருக்கும் நேரமும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. எண்ணூரிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரம் உறுதியாகக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எண்ணூரைப் போலவே, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திலும், 'பேசின்பிரிட்ஜ் மின் உற்பத்திப் பெருக்கத் திட்டம்' என்று ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு நல்ல பலன் கிட்டியுள்ளது. இந்த மின் நிலையத்தின் நிறுவனத்திறன் 90 மெ. வாட்டாக இருந்தபோதிலும், நீரைக் குளிர வைப்பதில் சில இக்கட்டுகள் ஏற்பட்டதாலும் கொதிகலன்கள் யாவுமே மிகவும் பழையனவாக இருந்தபடியாலும் கடந்த பல ஆண்டுகளாக இந்நிலையம் 50 முதல் 55 மெ. வாட். மின்சாரத்தையே






உற்பத்தி செய்தது. சில சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டதனால், இந்த மின் நிலையத்தின் உற்பத்தி அளவு 1976-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து 60 மெ. வாட்டாக உயர்ந்தது. தற்போது இதன் உற்பத்தி அளவு 70 மெ. வாட். என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. இதன் சராசரி மின் உற்பத்தியளவு நாள் ஒன்றுக்கு 1.5 மில்லியன் யூனிட்டுகள். 1976-77-ல், ஒருநாளின் உயர்ந்த அளவு உற்பத்தித் திறன் 72.6 மெ. வாட். மற்றும் 1.675 மில்லியன் யூனிட்டுகள் என்று பதிவாகியுள்ளது.

சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் 'பார்க்கையில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறனும் இவ்வாண்டு சீரடைந்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் அமைப்பிற்கு 1987 மில்லியன் யூனிட்டுகள் கிடைத்தன. 1976-77-ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலத்திலேயே, நெய்வேலி அனல்மின் நிலையம் 194.1 மில்லியன் யூனிட்டுகளைத் தமிழ்நாடு மின் அமைப்பிற்கு வழங்க முடிந்தது.

**மின்வெட்டின் அளவு குறைந்தது!**

இதற்குமுன் இல்லாத அளவுக்கு தென் மேற்குப் பருவமழை பொயத்ததனால், 1976-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், தமிழ்நாட்டு நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் எப்போதுமில்லாத அளவுக்குக் குறைந்தது. எடுத்த எடுப்பிலேயே 50 சதவீத மின்சார வெட்டினைச் செயற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இருந்தாலும் கவனமாகவும் உறுதியாகவும் திட்டமிட்டு நிர்வகித்ததால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி 1975-ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாகக் கிடைக்கச் செய்ய முடிந்தது. வியக்கத்தக்க அளவில் மின் நிலையங்களின் மூலம் கிடைத்த மின் உற்பத்தியின் உதவியால், பெருமளவில் செயற்படுத்த வேண்டியிருந்த மின் வெட்டு தவிர்க்கப்பட்டது. அன்றியும், மின் விசையைப் பயன்படுத்தும் அளவில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் என்னும் குறைந்த அளவுக்கே அரசு மின் வெட்டைச் செயற்படுத்தியது. மொத்த மின் தேவையில் 20 சதவீதம் முதல் 40 சதவீதம் மட்டுமே வெட்டுச் செய்தது. அதே சமயம், ஏராளமான பல இன்றியமையாத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் மின் வெட்டைத் தளர்த்தியும் விதிவிலக்கு அளித்தும் சலுகைகள் வழங்கியது; இத்தகைய நடவடிக்கைகளால் அரசு மின்சார வெட்டை ஒருவாறு சமாளிக்க முடிந்தது.

**மின் இணைப்பு தருவதில் அரிய சாதனை**

நாடு முழுவதிலும் உள்ள கிராமங்களின் பொருளாதாரத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கைக்கும் மின்சாரம் புதிய பொலிவை ஊட்டியுள்ளது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்த நிலைமையைத் தெளிவாகக் காணலாம். நாடு விடுதலை பெற்ற பின்னர், திட்டமிட்டு மின் உற்பத்தியைப் பெருக்கியும் அவற்றை வழங்கியும் மேற்கொண்ட பணிகள் மூலமாக இந்த முப்பதாண்டுகளாக நாம் நல்ல முன்னேற்றம் எய்தி வந்துள்ளோம்; எய்திய முன்னேற்றத்தை நிலை நிறுத்தியும் உள்ளோம்; இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது தமிழ்நாட்டில் கிராமங்களை மின் மயமாக்கும் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது; புதிதாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டிய கிராமம் எதுவுமேயில்லை என்னும் நிலை வந்துள்ளது.

இருப்பினும் இனிமேல், மின் வசதியைப் பெருக்குவதை இருபது அம்சத் திட்டத்தின் ஒன்றாகக் கருதி அதன்படி, மின்விசை இணைப்பு




**'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'**

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிக மாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.

தவிர, முழு ஆயுள் பாது காப்பும் கிடைக்கிறது.

**'பணம் மற்றும் பாதுகாப்பு பாலிஸி'**

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

**'வளரும் பாதுகாப்புப் பாலிஸி'**

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங் களில் கூடிக் கொண்டே போகிறது.

**மாறிவரும் காலங்களுக்கும்...**
**மாறிவரும் தேவைகளுக்கும்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ்**
**கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

வழங்குவதன் மூலமாக மேலும் அதிக அளவு ஏக்கர்கள் பாசனவசதி பெறுவதை நமது குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். 1975-ஆம் ஆண்டில் மொத்தம் 29,280 விசையேற் றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த தற்கு மாறாக 1976-ஆம் ஆண்டில், மொத்தம் 36,093 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு ஏப்ரலில் மட்டும் 5,770 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டது என்பது ஓர் அரிய சாதனையாகும். இதே கால அளவில் குறைவழுத்த மின் சக்தியைப் பயன்படுத்து கின்ற 8,064 தொழில்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### நீண்டகாலத் திட்டங்கள்

சென்னை நகரில் மின்சார சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு உதவும் வகையில் நன்கு கவனம் செலுத்தும் பொருட்டு தற் போதைய, மின் அமைப்பு அண்மையில் இரு பிரிவாக்கப்பட்டது. 1976 நவம்பரில் சென்னை மாநகரமும், செங்கற்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகள் உட்பட மாநகரின் சுற்றுப்புறங் களும், எதிர்பாராத புயல், வெள்ளம் இவற் றால் மிகவும் பாதிக்கப்பட்டன. விபத்துக் களைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நட வடிக்கையாகப் பல இடங்களில் மின்சாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. வெள்ளம் வடிந்த உடனே மின்சாரத் தொடர்பு மீண் டும் கொடுக்கப்பட்டது. மின் வழங்கு அமைப் பில் பல இடங்களில் ஏற்பட்ட சேதங்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டு, உடனுக் குடன் பழுது பார்க்கப்பட்டு, மின் தொடர்பு கொடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. குறித்த கால வரையறைக்குள் செயல்படுத்தப் பட வேண்டிய, நிலையான சீர்திருத்தங்களுக் கான, நீண்டகாலத் திட்டங்களும் தீட்டப் பட்டன. இவற்றிற்காக மின்வாரியத்திற்கு நிதி உதவி வழங்க மாநில அரசும் உறுதி அளித்துள்ளது.

### குறை தீர்க்கும் குழு!

முக்கிய பிரச்சினைகளைப் பற்றிப் பொது மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளுவதற் காக மின்வாரியத்தில் 1976 டிசம்பரில் குறை





1976-ஆம் ஆண்டில் 36,093 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தீர்க்கும் குழு' ஒன்று நிறுவப்பட்டது. 'குறை தீர்க்கும் குழு, பயனீட்டாளர்களிடமிருந்து, நேரடியாக மனுக்களைப் பெற்றுக் கொள்ளும். அவற்றை வழக்கமான முறைப்படி உரிய பிரிவுகளுக்கு அனுப்பாமல் நடவடிக்கைக்காக தானே பரிசீலனை செய்து உடனுக்குடன் முடி வெடுக்கும்.

### திறமை உயர்ந்தது!

மின்வாரியம் அமைப்பிலும், நிர்வாகத்தி லும், திறமை உயரும் வகையில் செம்மைப் படுத்தப்பட்டுள்ளது. வேலை நிறுத்தங்கள், முற்றுகைப் போராட்டங்கள் ஆர்ப்பாட் டங்கள் முதலியன இன்று பழங்கதைகளே! நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கு மிடையே ஒற்றுமை பரவி, எல்லா நிலைகளி லும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது; இந்த அமைப்புடன் பொதுமக்கள் இதுகாறும் இல் லாத முறையில், அதிக அளவு உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடிகிறது; பொது மக்கள் பணியை உடனுக்குடன் கவனித்துப் பயன்தரத்தக்க விதத்தில் இது இயங்கி வரு கிறது.

நிர்வாகத்தில் பணியாளர் அமைப்பின் தரத்தை வளர்க்கவும், திறமையை மேம் படுத்தவும் புகழ்பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற அலுவலர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். மின்வாரியத்தில், திட்டங்களைச் செயலாக்குவதற்கும், மேற்பார்வையிடுவதற் கும் நவீன மேற்பார்வை உத்திகள் புகுத்தப் பட்டு பரவலாகக் கையாளப்பட்டு வருகின் றன. மின்சாரக் கருவிகளின் உபயோகத்தைச் சிக்கனப்படுத்தவும், பல இடங்களில் தேக்க முற்று நிற்கிற வேலைகளைச் செய்து முடிக்கவும் வெவ்வேறு மின்வழங்கு ஏற்பாடுகளுக்கி டையே நன்மை பயக்கும் போட்டியை ஊக்கு விக்கவும், மின் வழங்கு ஏற்பாடுகள் அளவில் அவை பணியாற்றுதல் பற்றிச் செவ்வனே கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### இழப்புகள் குறைந்தன!

மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கம்பி களில் கொண்டு செல்லுதல், மின் வழங்குதல், இயக்குதலும், பேணுதலும், நிர்வாகம் ஆகிய வற்றிற்குப் பிடிக்கும் செலவுகளைக் குறைக்கப் பற்பல சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்

டுள்ளன. தொழில் நுட்ப வகையிலும் வாணிக வகையிலும் ஏற்படும் மின்சக்தி இழப்புகளைத் தடுக்க, பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், கம்பிகளில் அனுப்பப்படும்போது ஏற்படும் மின்சக்தி இழப்புகளில் 40 மில்லியன் யூனிட்டுகள் குறைக்கப்பட்டு 80 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டது. மின்சக்தித் திருட்டையும், தவறான உபயோகத்தையும் கண்டு பிடிப்பதற்காகவே, திடீர்ச் சோதனைக் குழுக்கள், ஒவ்வொரு மின் வழங்கு ஏற்பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மின் இணைப்புகளைத் திடீர்ச் சோதனையிடும் அமைப்பானது பலப்படுத்தப்பட்டுள்ளது. திடீர்ச் சோதனைகள் மிகப் பரந்த அளவில், செவ்வனே திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

**சோதனைகள் பெருகின!**

1975-ல், 1.84 இலட்சம், மின் இணைப்புகள் வழக்கப்படி ஆய்வு செய்யப்பட்டன. 1976-ல் இவற்றின் எண்ணிக்கை 5.57 இலட்சமாக உயர்ந்தது. 1975-ல் திடீர்ச் சோதனை செய்யப்பட்ட மின் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 1.05 இலட்சமாகும். இவற்றில் 313 மின் இணைப்புகளில் மின்சக்தி களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. 1976-ல் 4.67 இலட்சம் மின் இணைப்புகள் திடீர்ச் சோதனையிடப்பட்டன. இவற்றில் 606 இணைப்புகளில் மின் சக்தி களவாடப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த திடீர்ச் சோதனைகள் மூலம் 1976-ல் பதினொரு மாதங்களில் கிடைத்த வருமானம் ரூ. 20.42 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 1975-ல் இவ்வருமானம் ரூ. 6.23 இலட்சமாகத்தான் இருந்தது. இந்த திடீர்ச் சோதனைகள், தவறு செய்யும் பயனீட்டாளர்கள் உள்ளத்தில் அச்சமூட்டித் தவறாக நடக்காவண்ணம் தடுப்பதற்கு வழி செய்தன.

பலதரப்பட்ட பயனீட்டாளர்களின் தேவைகளைப் போதுமான அளவு நிறைவு செய்வதற்காக மின்சக்தி உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கான திட்டங்கள் பலவற்றை மேற்கொள்ளும் வகையில் மின்வாரியம், சிறப்பாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. 1978-79, 1979-80-ஆம் ஆண்டுகளில் கல்பாக்கம் அணு மின் சக்தித் திட்டம் மின் உற்பத்தியைத் தொடங்கியதும் மின்சக்தி நிலைமை சீராகும். அதனால் வருங்காலத்தில், இம்மாநிலத்தில் மின்சக்தி வழங்கு நிலை சீராக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நல்லதொரு சூழ்நிலை உருவாகும்!**

இம்மாநிலத்தில் மின்சக்தித் தேவை, மின்சக்தி இருப்பைவிட எப்பொழுதுமே அதிகமாக உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதற்குப் பின்னரும், இம்மாநிலத்தின் மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய உயர் அனல்-மின்சக்தி நிலையம் ஒன்று (1000 மெ. வா.) அமைப்பது தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்ற சாதகமான முடிவு எடுக்கப்படின், அது தமிழ்நாட்டுப் பொது மக்களின் நம்பிக்கையையும், பேராவல்களையும் நிறைவு செய்து எதிர்கால வளர்ச்சியில் நம்பிக்கையுள்ள நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கும்.

**மின் இணைப்புப் பெறாத கிராமம் தமிழ்நாட்டில் இல்லை என்னும் நிலை ஏற்பட்டுள்ளது!**





# தொழிலாளர் நலப்பணிகள்!

ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

தொழில் துறைச் சமுதாயத்தில் தொழிலாளர் நல்லுறவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளைச் செய்து தருவது தொழிலதிபர்களின் தலையாய கடமையாகும் என்றபோதிலும், தமிழ்நாடு அரசு தானே முன்வந்து தொழிலாளர் நல நடவடிக்கைகளை முனைந்து மேற்கொண்டுள்ளது. மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம் போன்ற பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்க்கு நன்மைகள் செய்யும் கருத்துடன் இயற்றப்பட்டவையாகும்.

எனினும், தொழிலாளர் நலச் சட்டங்களில் வகுக்கப்பட்டுள்ள விதிகள் தொழிலாளர் சமூகத்தின் தேவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிச் செய்யப்பட்டன வல்ல. மேலும் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல நடவடிக்கைகள், தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் உரிமைகளையும் அளிப்பதாக இல்லை. எனவேதான் தொழிலாளர் நல நிதிச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் "தொழிலாளர் நல நிதி" என்னும் பெயரில் நிதியொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்குத் தொழிலதிபரும், தொழிலாளரும் ஆண்டுதோறும் முறையே ரூ. 2, ரூ. 1 என்ற





தொழிலாளர் நல நிலையங்கள் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

விகிதத்தில் கட்டணம் செலுத்தி வரவேண்டும். ஏறத்தாழ 20,000 தொழில் நிறுவனங்களும் அவற்றில் பணிபுரிகின்ற 6,83,464 தொழிலாளர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் வருவர்.

ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைவராக உள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால், தொழிலாளர் நல நிதி, நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் தலைவர் நீங்கலாக, 19 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வாரியத்தில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உரிய முறையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி இவ்விரு தரப்பினரையும் சேர்த்துள்ளதன் நோக்கம் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமை மேம்பட இவர்கள் பயனுள்ள திட்டங்களை அளிப்பர் என்பதே ஆகும். தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் காலாண்டுக்கு ஒரு முறை கூடி, என்னென்ன பயனுள்ள தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்பது பற்றி அப்போது முடிவு செய்கிறது.

## நலம் தரும் நிலையங்கள்

அம்பத்தூர் (சென்னை), செம்பியம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், கோவில்பட்டி, சோமனூர், குடியாத்தம், வாணியம்பாடி, சிவகாசி ஆகிய பத்து இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் உள்ளன. இந்த ஊர்கள் யாவும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள இடங்களாகும்.

இந்த நிலையங்களின் பெண் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களின் மனைவியருக்கும், தொழிலாளர்களைச் சார்ந்துள்ள பெண் மக்களுக்கும் தையல் கலை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இங்கே பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 30 பயிற்சி உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தையற் கலையில் பயிற்சியைப் பெறுகின்ற இவர்கள் தங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும், தாங்களாகவே வேலை செய்து சம்பாதிக்க முடியும். ஆதலால் இந்தப் பயிற்சி, தொழிலாளர்களின் குடும்பவூதியம் கணிசமான அளவிற்குக் கூடுதலாவதற்குத் துணை புரியும். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பயிற்சி பெற்ற தையற்கலை ஆசிரியை ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஓராண்டுக்காலப் பயிற்சியை முடித்தவர்கள், தையற்கலையில் டிப்ளமா பெறுவதற்குரிய அரசுத் தொழில் நுட்பத் தேர்வு எழுத வேண்டும்.

## தொழிலாளர் குழந்தைகளுக்குக் கல்வி வசதி

இந்த நல நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கிண்டர்கார்டன் முறைக் குழந்தைகள் பள்ளி ஒன்று நடைபெறுகிறது. தொழிலாளர்களின் குழந்தைகள் இவற்றில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பள்ளியில் பாலர் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இங்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள குழந்தைகளுக்கு நாள்தோறும் ஒருவேளை உணவும், பாலும் வழங்கப்படுகின்றன. உரிய கல்வித் தகுதி பெற்றுள்ள பால சேவிகைகள் இப்பள்ளிகளில் வகுப்புகளை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் விளையாடுவதற்காகப் பொம்மைகள் கொடுக்கப்படுகின்றன.





தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்காகக் கட்டப்படவிருக்கும் பலமாடிக் கட்டடத்தின் மாதிரி.

'கேர்' நிறுவனத்துடன் தொழிலாளர் நல வாரியம் செய்து கொண்டுள்ள ஒரு ஏற்பாட்டின்படி, அந்நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பாலர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகட்குக் குழந்தையுணவும், சத்துணவும் விரைவில் வழங்கப்படும். ''ஒருங்கிணைந்த உடல் நல முனைப்புத் திட்டம்'' என்னும் திட்டத்தின் கீழ், இக்குழந்தைகளும் பயன் பெற, வாரியம், விரைவில் ஏற்பாடு செய்யும்.



ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் தொழிலாளர் நலம் காக்கின்றன.

தொழிலாளர்களுக்காகப் படிப்பகங்கள் தொடங்கப்பட வேண்டும் என்றும் வாரியம் முடிவு செய்துள்ளது. சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக மொத்தம் நான்கு படிப்பகங்களை வாரியம் நடத்தி வருகின்றது. தொழிலாளர்கள் படிப்பதற்காக, புதிய நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் இந்தப் படிப்பகங்களுக்கு வழங்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தமது பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள இது உதவும்.

சென்னையில் உள்ள திரு.வி.க. நகரில் மகளிர் மன்றம் ஒன்று, முழுவதும் வாரியம் அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு நடைபெற்று வருகின்றது. இது, தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை உறுப்பினராகக் கொண்டுள்ள பதிவு பெற்ற சங்கம் ஆகும். இந்த மகளிர் மன்றத்தார் குழந்தைகள் நல நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகளுக்குப் பால் வழங்கப்படுகிறது. அவர்களுக்கென 'கிண்டர்கார்டன்' வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## புதிய அலுவலகக் கட்டடம்

தமிழ்நாடு அரசு சென்னை அண்ணாசாலைப் பகுதியில் 6.33 மனைப் பரப்புள்ள நிலத்தைத் தொழிலாளர் நல வாரியத்துக்கென நன்கொடையாக வழங்கியது. இந்த இடத்தில் 35 இலட்டம் ரூபாய் செலவில் வாரியத்துக்கெனப் பல மாடிகள்கொண்ட அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுவருகிறது. கட்டடம் கட்டி முடித்த பின்னர், வாரிய அலுவலகம் இங்கு அமையும். அலுவலகத்துக்குத் தேவையானது போக எஞ்சிய இடம் வாடகைக்கு விடப்படும். அதன் மூலம் வாரியத்துக்கு ஆண்டுதோறும் 4 இலட்சம் ரூபாய் வாடகை கிடைக்கக்கூடும். இந்த வாடகை வருவாய், தொழிலாளர் நல நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படும். தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அண்மையில் இக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தண்டையார்ப் பேட்டையில் தொழிலாளர்களுக்கென விளையாட்டரங்கம் ஒன்றைக் கட்டும் திட்டம் உள்ளது. இங்கு கேரம், டேபிள் டென்னிஸ் போன்ற கட்டடத்துக்குள் விளையாடும் விளையாட்டுக்களுக்கும், வெளியில் திடலில் விளையாடுவதற்குரிய விளையாட்டுக்களுக்கும் வசதிகள் செய்யப்படும்.



### மருத்துவ வசதி

சமுதாயத்தில், மற்ற பிரிவினரைக் காட்டிலும் தொழிலாளர்கள்தான் காசநோய்க்கு அதிக அளவில் ஆட்படுகின்றனர். தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடங்களில் உள்ள சுகாதாரக் கேடான நிலைமையே இதற்குக் காரணமாக இருக்கலாம். நமது தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. காச நோய்க்கு ஆளாகி விட்டோம் என்பதை அறிந்ததும் உடனடியாக மருத்துவக் கவனிப்பைப் பெறுவதற்குரிய பொருளாதார வசதிகள் அவர்களிடம் இல்லை. மேலும், நம் மாநிலத்தில் உள்ள காசநோய் மருத்துவ மனைகளில் சேர அனுமதி பெறுவதும் அவர்களுக்குக் கடினமாக உள்ளது. ஆகவே, தாம்பரத்தில் உள்ள காச நோய் மருத்துவ மனையில்



தொழிலாளியின் குழந்தை பரிசோதிக்கப்படுகிறது!

தொழிலாளர்களுக்கென்றே தனியாக, 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டு ஒன்றை 3.6 இலட்சம் ரூபாய் செலவில் வாரியம் கட்டுகிறது. தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தொழிலாளருக்கான காச நோய் வார்டு கட்டடத்திற்கு அண்மையில் அடிக்கல் நாட்டினர்.

### ஓய்வு இல்லங்கள்

தொழிலாளர்கள் விடுமுறை நாட்களிலும், விடுமுறைக் காலங்களிலும், பல இடங்களைச் சென்று பார்க்கவும், மனமகிழ்வுடன் பொழுது போக்கவும் விரும்புவது இயற்கையே. இவ்வாறு அவர்கள் சுற்றுலா முக்கியத்துவமுடைய இடங்களுக்கும், தங்கியிருந்து உடல் நலம் பெறுவதற்குரிய இடங்களுக்கும் செல்லும்பொழுது அவ்விடங்களில் அவர்களுக்கென விடுமுறைக் கால ஓய்வு இல்லங்கள் அமைக்கப்பட்டிருப்பின், அவர்களுக்குப் பெரிதும் நன்மையாக இருக்கும். ஆகவே, இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றுலம், கொடைக்கானல், உதகமண்டலம், ஏர்க்காடு போன்ற சுற்றுலாச் சிறப்புடைய, உடல் நலம் பேணுதலுக்குரிய இடங்களில் தொழிலாளர்களுக்கென விடுமுறைக்கால ஓய்வு இல்லங்களைக் கட்டுவதென முடிவு செய்துள்ளது. மாமல்லபுரத்தில் விடுமுறைக்கால ஓய்வு இல்லம் விரைவில் கட்டி முடிக்கப்படும். மற்ற இடங்களில் இந்த ஆண்டில் அவை கட்டி முடிக்கப்படும். ஆனல், உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும், கட்டடங்கள் கட்டும் பணியை மேற்கொள்வதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம். எனவே, அங்கு விடுமுறைக் கால ஓய்வு இல்லங்களைத் திறக்க, தற்காலிக ஏற்பாடாகத் தனியார் கட்டடங்கள் வாடகைக்குப் பெறப்பட விருக்கின்றன. தொழிலாளர்கள், தத்தம் குடும்பத்துடனே அல்லது சிலர் சேர்ந்து ஒரு குழுவாகவோ சென்று, இந்த இல்லங்களில் சிறிது காலம் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலும் தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழ்நிலைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்கும் வகையில், அந்நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்ற திரைப்படங்களை நமது தொழிலாளர்கள் ஆர்வத்துடன் பார்ப்பார்கள் என்று வாரியம் எண்ணியது. தொழிலாளர்களின் பயனுக்கென்று திரைப்படம் காட்டும் கருவியொன்றை வாங்க வாரியம் முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் நலன்களையும், அவர்தம் குடும்ப நலன்களையும் மேம்படுத்துவதற்குப் பேரார்வத்துடன் வகுக்கப்பட்ட விரிவான பல சீரிய திட்டங்கள் வாரியத்திடம் உள்ளன. தொழிலாளர் நல நிதிக்கென ஆண்டுக் கட்டணமாகத் தொழிலாளர்கள் அளிக்கின்ற ஒவ்வொரு காசும் அவர்களது கடுமையான உழைப்பால் ஈட்டியது அல்லவா? அப்படி அவர்கள் உழைத்துத் தரும் ஊதியத்திற்கு ஏற்ற வகையில் உயர்ந்த பலனை அவர்கள் பெற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் தொழிலாளர் நல வாரியம் மேலும் மேலும் பல நல நடவடிக்கைகளை எடுப்பதற்கென ஊக்கத்துடன், அயராமல் அரும்பணி



# ஈடு இணையற்ற நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுகிறது தமிழ்நாடு!

—திருமதி ரதி வினய் ஜா, ஐ.ஏ.எஸ்.,
இணைச் செயலாளர், பொதுத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டு ஓராண்டு நிறைவுற்றுள்ளது. கடந்த ஓர் ஆண்டில் எய்திய சாதனைகளை எண்ணிப் பார்க்கிறோம். அவசர நிலைமைச் சட்டத்தின் நோக்கங்களைச் செயற்படுத்தியதன் விளைவாக, நமது மக்களிடையே கட்டுப்பாட்டுணர்ச்சியும், ஆக்கப் பூர்வமான செயல் திறனும் வளர்ந்தன; இத்தகைய சிறந்த சூழ்நிலையால் நம் மாநிலம் பொருளாதார மேம்பாட்டினைப் பெற்றது என்று உறுதியாகக் கூறலாம். நமது நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட சவால்களைச் சமாளிப்பதற்காக நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்

சியை விரைவுபடுத்தப்பட
வேண்டியிருந்த ஒரு நேரத்தி
தான் இருபது அம்சப் பொருள
தாரத் திட்டம் அறிவிக்கப்ப
டது. இது, தமிழ்நாட்டில், கு
யரசுத் தலைவர் ஆட்சி செயல்
படுத்தப்பட்ட பின்னர்தா
செவ்விய முறையில் நடைமுறை
படுத்தப்பட்டது. அதன் பின்

இந்த ஓராண்டில் எல்லாத்துறைகளிலும், நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

### விலைவாசி குறைந்தது!

தமிழகத்தில் அவசர நிலைமை நோக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தபோது, எதிர் நோக்க வேண்டியிருந்த பெரும் பிரச்சினையாக, இன்றியமையாப் பண்டங்களின் விலை ஏற்றம் இருந்தது. அவற்றைக் கட்டுப்படுத்தப் போர்க்காலப் பணிகளைப்போன்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இதற்காக உணவு உற்பத்தியைப் பெருக்குதல், செம்மையான பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டினை அமைத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பதுக்கல்காரர்கள், கள்ள வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தல் ஆகியவழிகளில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றன. அதன் விளைவாக அரிசி விலையும் மற்ற இன்றியமையாத பொருள்களின் விலைகளும் உயராமல் கட்டுப்படுத்தப்பட்டு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

தமிழகத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி வருவதற்கு முன்னதாக முக்கிய உணவுப் பொருளான புழுங்கல் அரிசி(நடுத்தரம்) கிலோ ரூ. 2.50 வரை விற்கப்பட்டு வந்தது. இன்று அதே புழுங்கலரிசி கிலோ ரூ. 1.60 லிருந்து ரூ. 2.00 ஆக விற்கப்படுகிறது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும், மாணவர்களுக்கும் இன்றியமையாத பொருட்களை வழங்குவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலுமுள்ள மாணவர் விடுதிகளுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் அரிசி, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை ஆகியவை தொடர்ந்து வழங்கப் பெறறன. இதனால் இந்த ஆண்டில் மாணவர் விடுதிகளில் உணவு கட்டணங்கள், கடந்த ஆண்டைவிட சுமார் 15 முதல் 20 சதவீதம்வரை குறைந்திருக்கின்றன.

### உற்பத்தியைப் பெருக்க அயராத முயற்சிகள்!

மாநிலத்திற்கு மிக உயர்ந்த வருவாய் தேடித்தரும் ஒரே துறையாக வேளாண்மை விளங்குவதால், எந்த ஒரு உற்பத்தித் திட்டத்திலும், அதற்குச் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, உரங்களை முழு அளவிற்குப் பயன்படுத்துதல், வேளாண் பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்துதல், தண்ணீரைப் பயன்படுத்தும் நவீன தொழில் நுட்ப உத்திகளை பின்பற்றுதல், மிகு பயன்தரும் வித்து வகைகளைத் தொடர்ந்து பயன்படுத்துதல், புன்செய்ப் பகுதிகளில் பல பயிர்களைப் பயிரிடும் திட்டத்தைப் புகுத்துதல் ஆகிய வழிகளில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அயராத முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு வடகிழக்குப் பருவ மழை முன்னதாகவே தொடங்கி மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் பொதுவாக நன்கு பெய்துள்ளது. இதனால் நவரை போன்ற பின் பருவப் பயிர் விளைச்சலுக்குரிய வாய்ப்புகள் ஓங்கியுள்ளன.

ஒரு ஏக்கரில் காணுகின்ற நெல் விளைச்சலின் சராசரி அளவைப் பொறுத்த மட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. இச்சிறப்பினைத் தக்க வைத்துக் கொள்ள உரங்களை உரியவாறு பயன்படுத்துதல், அவசியமான ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைப் பின்பற்றி மிகுபயன் தரும் வித்துக்களை அதிகப் பரப்பளவில் தொடர்ந்து பயிரிடுதல், ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பாசன வசதிகள் பெருகின!

நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள் பல நடைபெற்று வருகின்றன. அவற்றை நிறைவேற்றி முடிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு கணிசமான அளவுக்குக் கூடுதலாக்கப்பட்டுள்ளது. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலமாக புதிதாக 18,000 எக்டேர்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட இருக்கின்றது. திட்டமிட்டபடி இதுவரை பணிகள் நடைபெற்று வந்துள்ளன. குறிக்கோள் அளவையும் மிஞ்சி, 21,383.6 எக்டேர்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை, 7.677 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது, மற்ற மாநிலத்தில் உள்ளதை விட மிகவுயர்ந்த எண்ணிக்கையாகும்.

1976-77ல் 35,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று குறிக்கோள் அளவு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக, கடந்த ஓராண்டில் 36,093 விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

### மின்சார உற்பத்தி பெருகியது!

தமிழ்நாடு அரசு 1976-ஆம் ஆண்டில் கவனமாகவும், உறுதியாகவும், கட்டுப்பாடாகவும் செயற்பட்டதன் விளைவாக, 1975-ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்த மின்சார அளவைக் காட்டிலும், இரண்டு மடங்கு அளவுக்கு மேல் மின் விசையை உற்



பத்தி செய்து, அனல் மின் நிலையங்களை இயக்குவதில் வெற்றி கண்டுள்ளது. அதிக அளவில் மின் வெட்டினைத் தவிர்க்க இது உதவியது; பெயரளவுக்கு, 20 முதல் 30 சதவீத மின் வெட்டுடன் மின் சக்திப் பற்றுக் குறையைத் தீர்க்க மாநில அரசால் முடிந்தது; அதே நேரத்தில், இன்றியமையாத பெருந் தொழில்கள், சிறு தொழில்கள் பலவற்றிற்கு மின் வெட்டிலிருந்து சில விதிகளைத் தளர்த்தியும், சில விதி விலக்குகளை அளித்தும் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

### எட்டே மாதங்களில் 6,700 துளைக் கிணறுகள்!

1975-76-ஆம் ஆண்டின் பின் பகுதியிலும், 1976-77-ஆம் ஆண்டிலும் தமிழ்நாட்டில் ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் வரலாறு காணாத கடும் வறட்சி நிலவியது. எனவே, அதிக அளவிலான கிராமங்களிலும், நகர்ப் பகுதிகளிலும் குடிநீர் வழங்குவதற்கான மிகப் பெருந் திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திலும் ஆழ் கிணறுகளைத் தோண்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்று 1976 ஏப்ரலில் தொடங்கப்பட்டது. தோராயமாக 7 கோடி ரூபாய் செலவில் 6,700 துளைக் கிணறுகளை இறக்குவது இத்திட்டத்தின் குறிக்கோள். இத்திட்டம் முழுவதும் 1976 நவம்பரில் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. இதன் மூலம், பெரும்பாலும் கடந்த 4 ஆண்டுகள் முழுவதிலும் எத்தனை குடிநீர் வழங்கு துளைக் கிணறுகள் இறக்கப்பட்டனவோ அத்தனை துளைக் கிணறுகள் இந்த ஓராண்டில் தோண்டப்பட்டன. குடிநீர்ப் பற்றுக்குறையை நீக்க வழி காணப்படாமல் இன்னமும் எஞ்சியுள்ள சில பகுதிகளில் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க மேலும் 1,000 ஆழ் துளைக் கிணறுகள் இறக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு, கூடுதலாக 1 கோடி ரூபாய் செலவிடப்படும். மார்ச் இறுதிக்குள் அவை இறக்கப்படும்.

### நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டா!

சமூக நீதி, செல்வத்தை நியாயமான முறையில் பங்கீடு செய்தல் ஆகிய குறிக்கோள்களை அடையும் பொருட்டு நில உச்ச வரம்புக்கும், உச்சவரம்பைச் செயற்படுத்தியதால் கிடைத்த உபரி நிலங்களை விரைவாகப் பங்கீடு செய்தலுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1976 பிப்ரவரி முதல் 13,580 ஏக்கர் நிலம் 9,709 பேர்களுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளது. அதில் 4,985 பேர் அரிசனங்கள், 13 பேர் பழங்குடி மக்கள் ஆவார்.

### குத்தகைக்காரர்களுக்குப் பாதுகாப்பு!

இம்மாநிலத்தில் தொடர்ந்து வறட்சி நிலவியது. எனவே குத்தகைக்காரர்களை குத்தகை நிலங்களிலிருந்து வெளியேற்றாமல் பாதுகாப்பதற்கான சட்டம் ஒன்று 1976 ஆகஸ்டில் குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டது. 1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் வரை குத்தகைப் பாக்கி உள்ளதற்காக, 1978 ஜனவரி 15-ஆம் நாள் வரை குத்தகைக்காரர் எவரையும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட இயலாது. பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு உடைமை உரிமை வழங்குவது குறித்தும் முனைப்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு!

மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் மிக அண்மைக்காலம் வரையிலும் கடந்த கால நிலப் பிரபுத்துவ முறையை நினைவூட்டும் கொத்தடிமை முறை நிலவி வந்தது. கொத்தடிமை முறை தமிழ்நாட்டில் எங்கெல்லாம் நிலவி வந்ததோ அந்த இடங்களைக் கண்டு பிடிக்க முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது பாராட்டத்தக்கதாகும். **1976 பிப்ரவரி முதல், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 2,251 குடும்பங்களில் உள்ள 2,870 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.** பயிரிடுவதற்கேற்ற நிலங்களை அவர்களுக்கு ஒப்படை செய்தும், தற்காலிக வேலை வாய்ப்பு அளித்தும் பண்ணைத்தொழிலைச் சார்ந்த தொழில்களைச் செய்ய உதவித் தொகை அளித்தும் பெரும்பாலானவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவர்களுக்கும் புதுவாழ்வு அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை முறையை ஒழிப்பதற்கான திட்டத்தின் கீழ் பல நோக்க வளர்ச்சித் திட்டம் ஒன்று கல்ராயன் குன்றுப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஜீப் செல்லுவதற்கேற்ற சாலைகளை அமைக்க ரூ. 54 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பழங்குடி மக்களுக்கான துணைத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, கதர்-கிராமத் தொழில்கள், கால் நடை வளர்ப்பு, சமூக நலத் துறைகள், ஆகியவற்றிற்கு ரூ. 195 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ், ஒன்பது பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை இப்பள்ளிகளில் 353 சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### வீடற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா!

ஏழை மக்களின் அடிப்படைத் தேவையான வீட்டு வசதி குறித்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி செயலுக்கு வந்த பின்னர் கிராமப் பகுதிகளில் வீடற்ற ஏழை மக்கள், அரசு நிலங்களில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளில் மறுப்புக்கிடமில்லாதவற்றை முறைப்படுத்தி அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை ஒப்படை செய்யும் பணியை குறித்த காலத்துள் முடிக்க





திட்டமிட்டும், முன்னுரிமை அளித்தும் செவ்விய முறையில், நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1976—பிப்ரவரி முதல் 1,69,992 வீட்டு மனைப் பட்டாக்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. 38,134 அரிசனங்களுக்கும், 2,009 பழங்குடி மக்களுக்கும் வீட்டு மனை ஒப்படை செய்ததும் இதில் அடங்கும். இந்த ஆண்டில் கிராமப் பகுதிகளில் வீடற்ற ஏழை மக்கள் அரசு நிலங்களில் செய்துள்ள ஆக்கிரமிப்புக்களில் மறுப்புக்கிடமில்லாத 57,000 வீட்டு மனைகளின் ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**நலிந்த பிரிவினர் பட்ட கடன் ரத்து செய்யப்பட்டது!**

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பட்டுள்ள கடன் தொல்லையினை நிவர்த்திக்க அரசு கருதியது. அதன்படி, உழவர்கள், உழவர்களல்லாதோரிடமிருந்து கடன் தொகைகளை வசூலிப்பதை ஒத்தி வைப்பதற்கான சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்தக் கடன் வசூல் ஒத்தி வைப்புச் சட்டம் 15—7—1977 வரை தொடர்ந்து செயலில் இருக்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் ஆண்டு வருமானம் 2,400 ரூபாய்க்கு மேற்படாத, நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் கிராமக் கைவினைஞர்கள், சிறு உழவர்கள் ஆகியோரது கடன்களை 'தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம்' மூலமாக தமிழ்நாடு அரசு முழுவதுமாக ரத்து செய்துவிட்டது. இதுவரை மொத்தம் ரூ. 19,40,612 மதிப்புக்குக் கடன் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால் 5,659 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 1,075 பேர் அரிசனங்கள்; பேர் பழங்குடினர்.

கடன் நிவாரண நடவடிக்கைகளை நீட்டித்தல், ஏனைய வகையினரின் கடன்களைக் குறைத்தல், கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் மூலமாக ரொக்கக் கடன்களைப் பெறுவதில் தற்சார்பு நிலையை அடைவதற்காகச் சமூகத்தில் திட்டவட்டமான இயக்கத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**வேளாண்மைத் தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டது!**

வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியங்கள் 1976 மார்ச்சில் உயர்த்தப்பட்டன. அப்போது பிறப்பித்த சட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்குப் போதிய அளவு ஊதியங்கள் கிடைக்க உறுதி செய்யப்பட்டது. இச்சட்டத்திற்குப் பின், 1976 நவம்பரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன் மூலம், அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியங்களைவிட, அதிகமான ஊதிய வீதங்களை முன்பே கொடுத்து வருகின்ற பண்ணையதிபர்கள் அந்த அதிக வீதங்களிலேயே ஊதியங்களைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாவட்டங்களில் இந்த ஊதிய வீதங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளரமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கூட்டுறவின்கீழ் கைத்தறிகள்!**

தமிழ்நாட்டில் கைத்தறித் துறை, இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து சிறப்பான இடத்தினை வகித்து வருகின்றது. 1976 பிப்ரவரி முதல் 117 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தனியார் துறையின் கீழ் பணியாற்றி வந்த 21,000 தறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

**மலிவுவிலைத் துணிகள்!**

கட்டுப்பாட்டு விலைத் துணியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யும் பணி சீராக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் பயனாக 75 சதவீதக் கட்டுப்பாட்டு விலைத் துணிகள் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்துணிகளை விற்பனை செய்ய 4,713 விற்பனை நிலையங்கள் உள்ளன.





வற்றில் 4,035 நிலையங்கள், ராமப் பகுதிகளில் அமைந்துள் ன. கட்டுப்பாட்டு விலைத் ணியை, குறிப்பாக சேலைகளை ம், வேட்டிகளையும், பொது க்கள் விரும்பி ஏற்றுக் கொள் த்தக்க வகையில் தயாரிக்கும் பாருட்டு, கைத்தறிகளின் மூலம் வற்றைத் தயாரிக்கும் பணி தாடங்கப்பட்டுள்ளது. ஒவ் வாரு மாதமும் 55,000 சேலை ளும், ஒரு இலட்சம் வேட்டி ளும் உற்பத்தி செய்து வழங்கப் பட வேண்டும் என்று இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

**புத்தக வங்கிகள்!**

பள்ளிகள் அனைத்திலும், புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை சுமார் 37,295 ஆகும். இதுபோல 245 தொழில் மற்றும் கலைக் கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 1,02.455 கல்லூரி மாணவர்களும், 8,19,162 பள்ளி மாணவர்களும் பயன் அடைந்துள்ளனர்.



**103 சதச் சாதனை!**

கைவினைத் தொழில்-பழகுவோர்க்கு வேலையளிக்கும் திட்டத்தின் கீழ், 9,057 இடங்களில் தொழில் பழகுவோரை அமர்த்துவதெனக் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 7,364 இடங்களில் தொழில் பழகுநர் அமர்த்தப்பட்டனர். இவ்வாறு அமர்த்தப்பட்ட 9,364 பேர்களில் 221 பேர் பெண்கள்; 1,512 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்; 5 பேர் மலைசாதியைச் சேர்ந்தவர்கள்; 4,132பேர் பின்தங்கிய வகுப்பினர்; 38 பேர் உடல் ஊனமுற்றோர் ஆவர். இவ்வாறு, தொழில் பழகுவோரைப் பயிற்சியிடங்களில் அமர்த்துவதில் நாம் 103 சதவீதம் சாதனை புரிந்துள்ளோம்.

**குடும்ப நலம் காத்தோம்!**

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இந்திய அரசு நிர்ணயித்த 5 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என்ற இலக்கைவிட, இம்மாநிலம் அதிகமாகவே அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளது. 1977 மார்ச் இறுதிக்குள் 6 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மகப்பேற்றுக்குப் பின் தாய்-சேய்நலம் பேணுதல், மகப்பேறு சிறுர் நலத் திட்டங்கள், ஆகிய வற்றின் மீது அடுத்து வரும் சில மாதங்களில் நாட்டம் செலுத்த அரசு கருதியுள்ளது.

### எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்!

முதியோர் கல்வி வசதிகளை விரிவுபடுத்துவதன் வாயிலாகவே நாட்டு மக்கள் அனைவரையும் எழுத்தறிவுடையவராகச் செய்திட வேண்டும் என்னும் குறிக்கோளையடைய முடியும் என்று தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. எனவே, 1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முதியோர் கல்விக்கென தனி இயக்குநர் அலுவலகம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. எழுத்தறிவின்மையைப் போக்க இந்த இயக்குநர் அலுவலகம் பல நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது.

### மரம் நடுவதில் மகத்தான முன்னேற்றம்!

கடந்த ஆண்டில் இம்மாநிலத்தின் பெரும் பகுதிகளில் கடும் வறட்சி நிலவியது. சில பகுதிகளில் தொடர்ந்தாற்போல இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக வறட்சி நீடித்தது. 1976-ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும் சராசரி அளவுக்கும் குறைவாகவே பெய்தது. இத்தனை இடர்ப்பாடுகள் இருந்தும் 1976-77-ல் மரம் நடும் இயக்கத்தின் கீழ் 40 இலட்சம் மரங்கள் நட வேண்டும் என்ற குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டது. 1976 டிசம்பர் இறுதி வரை 55.40 இலட்சம் மரங்கள் இம்மாநிலத்தில் நடப்பட்டுள்ளன. மரம் நடும் பணிக்காக தமிழ்நாடு ஆளுநரைத் தலைவராகக்கொண்ட மாநிலக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மரம் நடுவதற்குப் பல்வேறு வகையில் ஊக்கம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் மரம் நடும் திட்டத்தை ஒரு வெற்றிகரமான திட்டமாக நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வளமான நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுவோம்!

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்ட நாளிலிருந்து மாநிலப் பொருளாதாரம் எல்லா அம்சங்களிலும் ஒரே சீரான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1976-77-ல் மாநிலத்திற்கான ஆண்டு திட்டத்தில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 56 சதவீதம் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம், ஐந்து அம்சத் திட்டம் ஆகியவற்றை வெற்றிகரமாகவும் செவ்விய முறையிலும் செயல்படுத்தியதன் விளைவாக புதிய, நேர்மையான சமுதாயகம் உருவாகும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும். கடந்த ஓராண்டில் சமுதாயத்தின் எல்லா வகைப் பிரிவினரும் காட்டிய கடமையுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி, கட்டுப்பாடு வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து அமைந்தால், தமிழ்நாடு வளமான நல்வாழ்வை நோக்கிப் பீடு நடை போடும் என்பதில் ஐயமில்லை.





# தமிழ்நாட்டில் சர்க்கரைத்தொழில்

சி. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர், சர்க்கரைத் துறை,
தமிழ்நாடு அரசு.

முதலாவது ஐந்தாண்டுத்திட்ட ஆரம்ப காலத்தில் தமிழகத்தில் 4 சர்க்கரை ஆலைகளே இருந்தன. 1953-54-ஆம் ஆண்டில் தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தி 28,000 டன்களேயாகும். இது, 1953-54-ல், இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 2.69 சதவீதமாகும். அக்காலத்தில் இந்தியாவில் மொத்த சர்க்கரை உற்பத்தி 10.17 இலட்சம் டன்களாகும். ஆனல் இன்றைக்கு தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி, ஏறத்தாழ பதிமூன்று மடங்குக்கு மேல் உயர்ந்து, இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் ஒன்பது சதவீதத்தை எட்டிப் பிடித்திருக்கிறது.

இச்சீரான வளர்ச்சியின் காரணம் என்ன? பலப்பல; அவற்றில் சில:

சராசரி ஏக்கர் விளைச்சல் அதிகமாகியுள்ளது. இந்தியாவிலேயே ஏக்கர் கரும்பு விளைச்சலில் தமிழகம் முதலாவது இடத்தை வகிக்கிறது.

அது மட்டுமல்ல, ஒரு ஏக்கர் பரப்புக் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, இந்தியாவின் சராசரி சர்க்கரை கட்டுமானத்தைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகம்.

அதிக விளைச்சல், விவசாயிக்கும் அதிக வருவாய் ஈட்டித் தருகிறது. எனவே, கரும்பு பயிரிடப்படும் பரப்பளவும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

தமிழகத்தில் விளையும் சுமார் ஒன்றரைக்கோடி டன் கரும்பில், ஏறத்தாழ 31 சதவீதம் கரும்பு, சர்க்கரை ஆலைகளால் பயன்படுத்தப்படுகின்றது. மீதமுள்ள கரும்பு, வெல்லத் தயாரிப்புக்கும், விதைக்கரணை மற்றும் இதர உபயோகங்களுக்கும் பயனுகிறது. மேற்கண்ட சாதகமான சூழ்நிலைகள் தமிழகத்தில் மேலும் பல சர்க்கரை ஆலைகள் ஏற்பட ஏதுவாக இருக்கின்றன.

1975-76-ல் தமிழகத்தில் 16 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இவற்றில் 9 தனியார் சர்க்கரை ஆலைகள்; 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளாகும். தென்னார்க்காடு மாவட்டத்தில் நான்கு ஆலைகளும், திருச்சி மாவட்டத்தில் மூன்று ஆலைகளும், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு ஆலைகளும், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆலை வீதமும் உள்ளன. இவ்வாலைகள் நாளொன்றுக்கு 29,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டவை. இவைகளில் ரூபாய் 60 கோடிக்கு மேற்பட்ட தொகை நிரந்தர மூலதனமாக உள்ளது. ஏறத்தாழ 14,000 பேர்கள் நேரடியாக இத்தொழிலில் வேலை செய்கின்றனர். அது மட்டுமல்ல, கரும்பு பயிரிடல், போக்குவரத்து போன்ற சர்க்கரைத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட உப தொழில்களில் சுமார் 10 இலட்சம் பேர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனுலேயே கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக

இத்தொழில், விவசா ... அடிப்படையாகக் கொண்ட மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாக விளங்குகிறது.

1975-76-ம் ஆண்டில் 19.69 இலட்சம் டன் கரும்பு மட்டுமே அரைத்த தமிழக சர்க்கரை ஆலைகள் 1976-77ஆம் ஆண்டில் முடுக்கி விடப்பட்டன. உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எந்தெந்தத் துறைகளில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஆராய்ந்து ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, துரிதமாகச் செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1976-77-ஆம் ஆண்டில் தமிழகத்தில், சென்ற ஆண்டைவிட கரும்பு உற்பத்தி அதிகரித்திருப்பதோடு, சர்க்கரை ஆலைகள் 36 இலட்சம் டன்களுக்கும் அதிகமாகவே கரும்பு பிழியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1975-76-ம் ஆண்டு அரைவையினை ஒப்பிடுகையில் இது ஏறத்தாழ 83 சதம் கூடுதலாகும்.

இக்கூடுதல் விளைச்சலுக்குக் காரணம்-கரும்பு விவசாயிகளே. தமிழகக் கரும்பு விவசாயிகள் கரும்பு பயிரிடுவதில் முற்போக்கு முறைகளைக் கையாளுகின்றனர். சர்க்கரை ஆலையினர் பரிந்துரைக்கும் புதுரகக் கரும்புகளைப் பயிரிட்டு அதிக மகசூல் பெற அயராது உழைக்கின்றனர். சர்க்கரை ஆலைகளின் உயர்வு, கரும்பு பயிரிடுவோரின் சீரிய ஒத்துழைப்பால் தான்! அவர்களது பணி போற்றற்குரியது.

சராசரி ஏக்கர் கரும்பு விளைச்சலில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது!



## உற்பத்திப் பெருக்கத்திற்கான தொடர்பணிகள்

தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க-மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட இருக்கின்றன. அத்துடன் தற்போது உள்ள சர்க்கரை ஆலைகளின் அரைவைத் திறனும் உயர்த்தப்படுகின்றது.

இதன்படி வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்கருகிலும் வேலூருக்கருகிலும் தினசரி 1,250 டன்கள் கரும்பு பிழியும் ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆலைக்கும் மொத்த முதலீடு சுமார் ரூ. 650 இலட்சங்களாகும். திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனது சோதனை அரைவையைக் கடந்த 6-2-1977 அன்று வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. பாலாற்றின் கரையில் கேதாண்டப்பட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள இவ்வாலையை 2-3-77 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் திறந்து வைத்தார்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 1977 மார்ச்சு மாதம் அரைவையைத் தொடங்க இருக்கின்றது.

பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவ, தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டு உள்ளது. இந்த அமைப்பின் கீழ், முதலாவது பொதுத்துறை ஆலை, தஞ்சாவூருக்கருகில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆலை, கடந்த 7-2-77 ஆம் நாள் தனது சோதனை அரைவையைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வே. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் இவ்வாலையை 27-2-77 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் திறந்து வைத்தார்.



முதிர்ந்த கரும்புகளை அறுவடை செய்யும் நோக்குடன் கரும்பின் முதிர்ச்சி ஆராயப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கருகில் 1977 நவம்பர் மாதத்திற்குள் மற்றொரு ஆலை தொடங்கப்பட உள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் மொத்தம் 8 பொதுத்துறை ஆலைகள் நிறுவ ஏற்பாடு உள்ளது. தஞ்சாவூர் பெரம்பலூர் ஆலைகள் உட்பட மொத்தம் ஐந்து ஆலைகளுக்கு இதுவரை உரிமம் மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கையிலும் நிறுவப்பட இருக்கும் ஆலைகள் மற்ற மூன்றாகும். இவை தவிர மேலும் இரண்டு ஆலைகளுக்கு உரிமம் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் கோயம்புத்தூரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள ஆலையும், பொதுத்துறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.



திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். பரமசிவம் அவர்கள் தலைமையில், 2-3-1977 அன்று துவக்கி வைத்தார்.

மதுராந்தகம், சேலம், அமராவதி, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அவைகளது அரைவைத் திறனை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளன. இதற்கான மொத்த மூலதனச் செலவு சுமார் ரூ. 904 இலட்சமாகும். 1977-ஆம் ஆண்டில் முடிவடையும் விரிவாக்கப்பணியின் மூலம் இவ்வாலைகளின் தினசரி அரைவைத்திறன் மேலும் 3,000 டன்கள் உயரும். இதுபோன்று தனியார் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப்பணியின் மூலம் அவற்றின் தினசரி அரைவைத்திறன் 5,100 டன்கள் உயரும்.

மேற்கண்ட முயற்சியின் பலனாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் தினசரி அரைவைத்திறன் 45,850 டன்களாக இருக்கும். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இருந்த அரைவைத்திறனை ஒப்பிடுகையில் 70 சதவீதம் அதிகமாகும்.

## சர்க்கரைத் தொழிலைச் சார்ந்த உபதொழில்கள்

கழிவுப்பாகு — மொலாசஸ் (Molases) எனப்படுவது-சர்க்கரைத் தயாரிப்பில் கிடைக்கப் பெறும் உபபொருள்களில் ஒன்று. இதுவே --ஆல்கஹால்'' உற்பத்திக்கான மூலப்பொருளாகும். இதற்காகத் தமிழகத்தில் 7 வடிப்பகங்கள் ( distilleries ) தொடங்கப்பட்டுச் செயல்படுகின்றன. கழிவுப்பாகினை முறையாக சேமித்து வைக்க வேண்டும். திறந்த தொட்டிகளில் சேமித்து வைத்தால் மழைநீர் முதலியவைகளுடன் கலந்து அதன் தரம் குறைந்து, அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் ''ஆல்கஹால்'' அளவும் குறைந்துவிடும். உற்பத்திக்குறைவு தொழிற்சாலைக்கும் இழப்பு, நாட்டுக்கும் பாதிப்பு.

கழிவுப்பாகு, நல்லெண்ணெய், கோழி, கால்நடைத் தீவனத் தயாரிப்பு, தோல் பதனிடுதல் மற்றும் வார்ப்புத் தொழில்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கழிவுப்பாகினை மூடப்பட்ட எஃகுத் தொட்டிகளில் (Steel Tanks) சேமித்து வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1976-ஆம் ஆண்டு துவக்கத்தில் தமிழக சர்க்கரை ஆலைகளில் சுமார் 67,000 டன்கள் கழிவுப்பாகு முறையாகச் சேமித்து வைக்க வசதி இருந்தது. இப்போது மேலும் பல எஃகுத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஐந்தாறு மாதங்களுக்குள் 1977 செப்டம்பர் மாதத்திற்குள்-இந்தச் சேமிப்பு வசதியின் அளவு 97,000 டன்களாக உயரும்; இது 1976-ஆம் ஆண்டு துவக்கத்தில் இருந்த முறையான கழிவுப்பாகு சேமிப்பு வசதியோடு ஒப்பிடுகையில் 45 சதவீதம் அதிகமாகும்.

கரும்புச் சக்கை (Bagasse) கழிவு மண் (Press Mud) ஆகிய கரும்பு பிழிதலில் கிடைக்கும் இதர உபபொருள்களாகும். சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கை, காகித ஆலைகளில் காகிதம் உற்பத்தி செய்யப் பயனாகிறது. கழிவுமண்-பயிருக்கான ஊட்டச்சத்து கொண்டது-உரமாகப் பயன்படுத்தக்கூடியது. எனவே, சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கழிவு மண்ணை விலைக்குக் கொடுக்கின்றன.

## தொழிலாளர் நலன்

விவசாயிகள்-குறிப்பாக கரும்பு விவசாயிகளின்-வாழ்க்கைத்தரம் உயர, உறுதுணையாக உள்ள சர்க்கரை ஆலைகள், கழனியிலிருந்து வரப்பெறும் கரும்பிலிருந்து சர்க்கரையைப் பிரித்தெடுக்கும் பணியாளர்களின் நலம் பேணுவதிலும் முன் நிற்கின்றன. பணியாளர்களுக்கான வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி அனைத்தையும் அளிக்கின்றன. தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்கள் நிரந்தரப் பணியாளர்களில் சுமார் 40 சதவிகிதம் பேர்களுக்கு வீட்டு வசதி அளித்திருக்கின்றன. ''தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்'' இன்னும் இரண்டு ஆண்டிற்குள் 1,000 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நிரந்தரப் பணியாளர்களில் சுமார் 72 சதவீதம் பேர் பயன்பெறுவர். மற்றும் மருத்துவமனை, பள்ளிகள் ஆகியவைகளும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இயங்கி வருகின்றன.

## இருபது அம்சத் திட்டத்தில் ஆலைகளின் பங்கு

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெற, சர்க்கரை ஆலைகள் வழி வகுத்துள்ளன. ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் தொழிலாளர், நிர்வாகத்தினர் அடங்கிய '-ஷாப் கவுன்சில்'' மற்றும் '-ஜாயிண்ட் கவுன்சில்'' ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டு, செவ்வனே நடைபெறுகின்றன. இவைகளில் உற்பத்திப் பெருக்கத்திற்கான வழிவகைகள், சேதாரத்தைத் தவிர்த்தல் இன்னும் பல ஆக்கப்பணிகள் பற்றி உற்சாகத்தோடு விவாதிக்கப்படுகின்றன; அத்தோடு மட்டுமல்ல, அவைகள் விரைந்து செயலாக்கப்படுகின்றன.

வேலை வாய்ப்பு-பயிற்சியாளர் திட்டத்தின்கீழ் ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் 16 தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கிய வகுப்பினைச் சார்ந்தோர் உட்பட 128 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. இது, 100 சதவீதச் சாதனையாகும்.

பெருகி வரும் மக்கட் தொகையைக் கட்டுப்படுத்தும் பணியிலும், ஆலைகளின் சாதனை போற்றற்குரியது. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் பணியாளர்களுக்கு, அரசு அளிக்கும் பணம் மற்றும் இதர சலுகைகளுடன், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ரூ. 200 வரை ஊக்கத் தொகை வழங்குகின்றன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளத் தகுதியுடைய 1,985 பணியாளர்களில் இதுவரை 1,056 பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இது 53 சதவீத சாதனையாகும்.

சாதனை பெருக, சாலைகள் அவசியம். சாதனைக்கும் சாலைக்கும் என்ன உறவு? சர்க்கரை ஆலைகள் கிராமப் பகுதிகளிலேயே அமைக்கப்படுகின்றன—அது அவசியமும் கூட. அறுவடை செய்யப்பட்ட கரும்பு உடனடியாக ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அரைக்கப்பட வேண்டும். அறுவடை செய்யப்பட்டபின், ஒரு நாளுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டு கரும்பு அரைவை செய்யப்பட்டால், சர்க்கரை மீட்பில் சுமார் அரை சதவீதம் வரை குறைவு ஏற்படும். ஒரு ஆண்டில் தினசரி 1,250 டன் அரைவைத் திறனுள்ள ஒரு சர்க்கரை ஆலைக்கு இச்சர்க்கரை இழப்பின் மதிப்பு பல இலட்சக்கணக்கான ரூபாய்களாக இருக்கும். இக்கணக்கீடு ஒன்றே சர்க்கரை ஆலையைச் சுற்றியுள்ள கரும்பு பயிராகும் பகுதிகளில் போதிய அளவு சாலைகள் அமைத்தலின் அவசியத்தை வலியுறுத்தும். இம் முக்கியத்துவத்தைக் கருதி தமிழ்நாடு அரசு 1976-77-ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலையைச் சார்ந்த பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளில் தார் போடுதல் போன்ற பராமரிப்புப் பணிக்கெனவும் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ. 105 இலட்சம் 1977-78-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடாகும். இதன் மூலம் பல கிராமங்களுக்குச் சாலை வசதி கிடைப்பதுடன், கிராமப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் வழி கோலும்.


ஓம்

### அதிசய நீர் ஊற்று நிபுணர்

(1) குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும் (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கு திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கியும் சென்று கொண்டு இருக்கும் நீர் ஊற்றுகளை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அவைகளிலேயே மிக அதிகமான அளவு தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் இடம் கண்டு பிடித்து குறிக்கப்படும்.

(2) என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால், 2:3 என்ற விகிதப்படி 3 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கப்படும்.

(3) நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதில் எனக்கு உள்ள தொழில்நுட்பத் திறமையை விவரித்து (Ex. ஜனாதிபதி) மேதகு பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு நான் அனுப்பிய விண்ணப்பத்தின் கருத்துக்களை 40 பைசா ஸ்டாம்பு அனுப்புபவர்களுக்கு மட்டும் அனுப்பப்படும்.

முகவரி :

கே. கந்தசாமி,
நீர் ஊற்று நிபுணர்,
(Exmember of the British Society of Diviners London.)
கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்—6.

Advt.




பதிவு எண். M. 8676

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# அரசு-மிகவுயர்ந்த தரமான

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடு கணக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16





# தமிழரசு

மலர் : 7 | 16—3—1977 | இதழ் :18


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| தபால்நிலையச் சேமிப்பு பாங்கு—மக்களின் பாங்கு! .. .. .. | 1 |
| அணுசக்தித் துறையில் இந்தியாவின் தன்னம்பிக்கை .. .. .. | 5 |
| தருமபுரி மாவட்டத்தில் வனவளம் .. | 9 |
| அதிக மகசூல் தரும் புதிய இரகங்கள்! .. .. .. .. | 10 |
| ஆடு வளர்ப்பும் அபிவிருத்தியும்.. .. | 19 |
| சென்னை நகர்ப்புற மேம்பாட்டிற்கு 2.4 கோடி அமெரிக்க டாலர்கள்! .. | 22 |
| நகராட்சிகளின் பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாடு! .. | 24 |
| மெட்ரிக் எடை, அளவு முறைகள் .. | 29 |
| கால்நடைத் தீவனப் பயிர்கள்! .. .. | 33 |
| ரயில் பயணிகளுக்கு ரம்மியமான வசதிகள்! .. .. .. .. | 42 |
| நீரற்ற நிலமும், சேலம் மாவட்டமும்! .. .. .. | 45 |



கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

# தபால நிலையச் சேமிப்பு பாங்கு- மக்களின் பாங்கு





—எஸ். எம். மாதுர்,

இயக்குநர், தேசீய சேமிப்பு.


சிக்கனமாக வாழ்ந்து பணத்தைச் சேமித்து அவ்வாறு சேமித்த பணத்தைப் பத்திரப்படுத்தி வைப்பதற்காக நம் நாட்டிலுள்ள பாங்குகளில் தபால் நிலைய சேமிப்பு பாங்குதான் மிகவும் பழமையானது. 1834-ல் கல்கத்தாவில் முதல் தடவையாக அரசாங்க சேமிப்பு பாங்கு ஏற்படுத்தப்பட்டது. பிறகு சென்னையிலும் பம்பாயிலும் அது போன்ற பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. பொது மக்களுடைய சேமிப்புக்களைப் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் வைத்திருப்பதுதான் இந்த பாங்கு ஏற்படுத்தியதின் நோக்கம். எளிய முறையில் படாடோபமின்றி ஆரம்பிக்கப்பட்ட தபால் நிலைய சேமிப்பு பாங்கு, படிப்படியாக வளர்ந்து நம் நாடு சுதந்திரம் பெற்ற 1947-ஆம் ஆண்டில், நாடு முழுவதும் பரவிய பெரிய நிறுவனமாக விளங்கியது. கிராமங்களிலும், நகரங்களிலும் குறைந்த வருவாய் உடையவர்கள் இந்த பாங்குகளிலேயே கணக்கு வைத்துப் பழகி, தங்களுக்கு நன்கு அறிமுகமான சொந்த பாங்கு என்று இதைக் கருதி வந்தார்கள். முதலாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆரம்பத்தில் மொத்தம் 185 கோடியே 60 இலட்சம் ரூபாய் கொண்ட 40 இலட்சத்து 99 ஆயிரம் கணக்குகள் தபால் நிலைய சேமிப்பு பாங்குகளில் இருந்தன.

## தேசீய சேமிப்பு நிறுவனம் துவக்கம்

ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோது, மக்களுடைய சேமிப்பைத் தீவிரப்படுத்த தேசிய சேமிப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சேமிப்புப் பத்திரங்கள், மாதந்தோறும் பணம் கட்டும் பலவகையான டெபாசிட் கணக்குகள் போன்றவை அவரவர் வருமானத்திற்கும், வயதிற்கும், தேவைக்கும் தகுந்தவாறு தப்ால் நிலைய சேமிப்பு பாங்குகளில் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் 1975-76-ல் தபால் நிலைய சேமிப்பு பாங்குகளில் மட்டும் 854 கோடியே 94 இலட்சம் ரூபாய் இருந்தது. ஆண்டுதோறும் கணக்கு வைத்திருப்பவர்கள் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. இது பற்றிய சில புள்ளி விவரங்களைக் கீழே காணலாம்.

| ஆண்டு | மொத்த டெபாசிட் (கோடி ரூபாய்) | நிகர டெபாசிட் (கோடி ரூபாய்) |
|---|---|---|
| 1970—71 | 570.00 | 69.59 |
| 1971—72 | 610.00 | 54.30 |
| 1972—73 | 640.88 | 80.47 |
| 1973—74 | 801.40 | 163.21 |
| 1974—75 | 841.51 | 10.43 |
| 1975—76 | 864.94 | 78.41 |

இந்த ஏற்றம் ஒருபுறம் இருக்க தபால் நிலைய சேமிப்பிலும் காலத்திற்கு ஏற்ப புதிய முறைகள் கையாளப்படுகின்றன. 'செக்' மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் முறை நீண்ட காலத்திற்கு முன்பே அமலுக்கு வந்தது. 200 ரூபாய் வரை கணக்கிலிருந்து பணம் எடுப்பவர்களுக்கு அவர்களைக் காக்க வைக்காமல் உடனேயே அவர்களுக்குப் பணம் கொடுக்கும் முறையை சமீபத்தில் தபால் நிலையங்கள் கடைப்பிடித்து வருகின்றன. இந்தியா முழுவதும் தபால் நிலையங்கள் இருப்பதால் எந்த ஒரு அலுவலகத்திலிருந்தும் மற்ற எந்த அலுவலகத்துக்கும் கணக்கைச் சுலபமாக மாற்றிக் கொள்ள முடிகிறது. தபால் நிலையம் இல்லாத ஊரே அநேகமாக இல்லை. எனவே இடம் விட்டு இடம் மாறுபவர்களுக்கு வணிக பாங்கில் கணக்கு வைத்துக் கொள்வதைவிட, தபால் நிலைய சேமிப்பு பாங்கில் கணக்கு வைத்துக் கொள்வதே சாலச் சிறந்தது. மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களிலும் கிளை தபால் நிலைய அதிகாரி, சேமிப்புக் கணக்குகளை வைத்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருக்கிறார். தலைமைத் தபால் நிலையங்களிலும், இடைநிலைத் தபால் நிலையங்களிலும், கிளைத் தபால் நிலையங்களிலும் சேர்த்து மொத்தம் 1,20,000 சேமிப்பு பாங்குகள் உள்ளன. இது 5,000 பேருக்கு ஒரு சேமிப்பு பாங்கு என்ற கணக்கில் வரும். வியாபார முறையில் நடைபெறும் பாங்குகளைக் கணக்கிட்டால் 23 ஆயிரம் பேருக்கு ஒரு பாங்க் என்ற ஈவில்தான் கிளைகள் உள்ளன.

தபால் நிலைய சேமிப்பு பாங்குகள் தனி நபர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் அவர்களுடைய டெபாசிட்களை நம்பியும் செயல்படுகின்றன. இந்தக் கணக்குகளில் 70 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை தனிப்பட்டவர்களுடைய கணக்குகளே ஆகும். மற்ற பாங்குகள், தேசிய மயமான பாங்குகளாக இருந்தாலும் சரி, தேசீய மயமாக்கப்படாத பாங்குகளாக இருந்தாலும் சரி அப்பாங்குகளில் முதலிடப்படும் பணத்தை வட்டிக்குக் கடனாகக் கொடுத்து அதன் மூலம் இலாபம் சம்பாதிக்கின்றன. ஆனால் தபால் நிலைய சேமிப்பு பாங்குகள் தேசிய நலனுக்காகவும், இலாப நோக்கின்றியும் நடத்தப்படுகின்றன. மக்களிடம் சேமிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்பதே இந்த பாங்கின் முக்கியமானக் குறிக்கோள்.

## திட்டங்களுக்கு உதவும் சேமிப்பு

தபால் நிலைய சேமிப்பு பாங்குகளில் போடப்படும் 'டெபாசிட்' தொகைகளில் 3-ல் 2 பங்கு, அந்தந்த மாநிலத்தில் திட்டங்களை நிறைவேற்ற உதவுகின்றன.




தபால் நிலையங்களின் பணிகளைப் பற்றி, சரியாகத் தெரிந்து கொள்ளாமல் சிலர் தவறான செய்திகளைப் பரப்பி வருகிறார்கள். மக்கள், குறிப்பாக, குறைந்த வருவாயும் நடுத்தர வருவாயும் உள்ளவர்களும், தபால் நிலைய சேமிப்பு பாங்குகளை மக்கள் அனைவருக்கும் சொந்தமான பாங்குகளாக மதிக்கிறார்கள். கிளைத் தபால் நிலையங்களில் பணி புரியும் தபால் நிலைய அதிகாரி பெரும்பாலும் உள்ளூர்க்காரராக இருப்பதால் அனைவரும் அவருக்கு நன்றாகத் தெரிந்தவர்களாக இருப்பார்கள். சாட்சிக்காக யாரையும் அழைத்துக் கொண்டு வரவேண்டிய அவசியமும் இருக்காது. எழுதப் படிக்கத் தெரியாத டெபாசிட்காரர்கள் கணக்கு வைத்துக் கொள்வதற்கு வசதியாக விதி முறைகளில் தேவையான மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

## ஊக்குவிப்புப் பரிசுத் திட்டம்

தபால் நிலைய சேமிப்பு பாங்கில் கணக்கு வைத்துக் கொள்ளும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக 1973-74 முதல் ஒரு பரிசுத் திட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து ஆறு மாத காலத்துக்கு தங்களது கணக்கில் 200 ரூபாய்க்குக் குறையாமல் இருப்பு வைத்திருப்பவர்கள் ஒவ்வொரு ஆறு மாத முடிவிலும்– ஆண்டுக்கு இரு முறை நடைபெறும் பரிசு குலுக்கலில்– கலந்து கொள்ளத் தகுதி யுடையவர்களாவார்கள். முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. மொத்தம் 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 11,116 பரிசுகள் வழங்கப்படுகின்றன.




இவ்வாறு ஊக்கப் பரிசுகள் வழங்குவதன் நோக்கம், மக்கள் தங்களுடைய சேமிப்பை விரையம் செய்து விடாமல் தபால் நிலைய கணக்குகளில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பதே. சாதாரணமான வருமானம் உள்ளவர்கள் கட்டுப்பாடாக வாழவும், கணக்கில் இருந்து பணத்தைத் தேவையில்லாமல் எடுப்பதைத் தவிர்க்கவும் இது உதவுகிறது. வாழ்க்கைச் செலவு கூடிக் கொண்டே போவதால் வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டுவதும், சேமிப்பிலிருந்து பணத்தை எடுக்காமல் இருப்பதும் பெரிய பிரச்சினைகளாகி விட்டன. 221 இலட்சம் கணக்குகள் மூலம் தபால் நிலையச் சேமிப்பு பாங்குகள் தேசிய சேமிப்பு இயக்கத்துக்கு உதவுகின்றன.

## பெருகி வரும் மக்கள் ஆதரவு

தபால் நிலையச் சேமிப்பு பாங்குகள் இந்தியாவின் பொருளாதார அமைப்பில் முக்கியத்துவம் பெற்று, மக்களிடையே நல்ல ஆதரவைப் பெற்றிருக்கின்றன. கணக்கு வைத்திருப்பவர்களின் வருமானம் பெருகி வருவதற்குத் தக்கபடி இந்த பாங்குகள் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் பணிகளும் பலதரப்பட்டதாக இருக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


# அணுசக்தித் துறையில் இந்தியாவின் தன்னம்பிக்கை



**1956**-ல் 'அப்சாரா ரியாக்டர்' கட்டப்பட்டது முதல், 1974-ல் பூமிக்கடியில் அணு குண்டு சோதனை நடத்தப்பட்டது வரை அணு ஆராய்ச்சித் துறையில் இந்தியா எத்தனையோ கட்டங்களைத் தாண்டி, எவ்வளவோ முன்னேற்றங்களை அடைந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு அணு ஆற்றலைப் பயன்படுத்தவும் மாபெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அணு சக்தியைக் கொண்டு இயங்கும் மின்சார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எத்தனையோ வகையான 'ரேடியோ ஐஸோடோப்புகள்' செய்யப்பட்டு, அவை மருத்துவம், விவசாயம், தொழில் துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியா, உலக சமாதானத்தில் நம்பிக்கை உள்ள நாடு. மின்சார உற்பத்தியைப் பெருக்குவது, தொழில் திறனை அதிகரிப்பது, மருத்துவம்—சுகாதாரத்தொழில்களில் நாடு மேம்பாடு அடைவது, பூமியில் மறைந்து கிடக்கும் செல்வங்களை வெளிப்படுத்துவது ஆகிய செயல்களுக்காக அணுசக்தியை உபயோகிப்பதே இந்தியாவின் குறிக்கோளாக இருந்து வருகிறது.

**அணு ஆராய்ச்சிப் பணி துவக்கம்**

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன், 1945-ல் பம்பாயிலுள்ள 'டாட்டா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபண்ட



அப்ஸரா அணு உலை



ஜெர்லினா அணு உலை



மருத்துவத்துறையில் பயன்படும் கதிர் ஐஸோடோப்புகள் தயாரிப்பு



மெண்டல் ரிசர்ச்'' என்ற நிறுவனத்தில் இந்தியாவின் அணு ஆராய்ச்சிப் பணி ஆடம்பரம் இல்லாமல் அமைதியாகத் துவங்கியது. பிறகு 1954-ல் டிராம்பேயில் அணு ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டதும், அணு ஆராய்ச்சிப் பணிகள் யாவும் அங்கு மாற்றப்பட்டன. 1967 முதல் அந்த நிலையம் ''பாபா அணு ஆராய்ச்சி நிலையம்'' என்ற பெயரில் இயங்கி வருகிறது. ''அப்சாரா', 'ஜெரிலினா', 'சிரஸ்', 'பூர்ணிமா' என்ற பெயர்கள் கொண்ட நான்கு 'ரியாக்டர்கள்' இங்கு செயல்படுகின்றன.

### புற்றுநோய்க்குத் தீர்வு!

பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் 350 வகையான 'ரேடியோ ஐஸோடோப்புகள்' உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு புற்றுநோயை ஆராயவும், குணப்படுத்தவும் இயலுகிறது. மேலும், அழுகிப் போகக் கூடிய பழம், வெங்காயம், மீன், இறைச்சி முதலியவற்றின் ஆயுளை நீடிக்கவும் உணவுப் பொருட்களில் பூச்சி பரவுவதைத் தடுக்கவும் முடிகிறது.

'ரேடியோ ஐஸோடோப்பு' உற்பத்தியில் கடந்த ஆண்டுகளில் இந்தியா, பெரிதும் முன்னேறியிருக்கிறது. இப்போதைய உற்பத்தியின் அளவு 75 இலட்சம் ரூபாய். மருத்துவப் பொருட்களைப் பாதுகாப்பதற்கான ஒளிக் கதிர் கருவி டிராம்பேயில் 1974 ஜனவரியில் பொருத்தப்பட்டிருக்கிறது. இதனுடைய திறன் 3,300 கன மீட்டர் அளவு ஆகும். இதை இன்னும் 10 மடங்காக உயர்த்த இயலும்.



### பூமிக்கடியில் அணு சோதனை!

1974-ல் ராஜஸ்தானில் ஒரு இடத்தில் பூமிக்கு அடியில் அணு சோதனை செய்யப்பட்டது. இந்த அணுகுண்டு வெடிப்பு மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. ஏராளமான விஞ்ஞானிகளும், பிற அறிஞர்களும் இந்தச் சோதனையிலிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டு பல ஆராய்ச்சிகளைச் செய்த வண்ணமாக இருக்கிறார்கள்.



இராஜஸ்தானில் உள்ள 'பொகரான்' என்ற இடத்தில் அணுகுண்டு வெடிப்புச் சோதனை செய்த போது பூமியின் மேல் ஏற்பட்ட தோற்றம்.

குல்மார்க்கிலுள்ள உயர்மட்ட ஆராய்ச்சிக் கூடமும், பெங்களூருக்கு அருகேயுள்ள பூகம்ப ஆராய்ச்சி நிலையமும், அணு ஆராய்ச்சித் துறையில் ஆய்வு மேற்கொள்ள உதவி வருகின்றன.

பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் அரும் பணிகளால் இந்தியாவின் பல தொழிற்சாலைகளிலும் 300க்கு மேற்பட்ட புதிய பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டும் புதிய முறைகள், உத்திகள் கையாளப்பட்டும் வருகின்றன.

### மின்சார உற்பத்தி

அமெரிக்கர்களால் கட்டப்பட்ட தாராபூர் அணு மின்சார நிலையம் 1969 அக்டோபர் முதல் இயங்கி வருகிறது. இரண்டாவது அணு மின்சார நிலையம், 44 மெகா வாட் சக்தியுடன், கனடா நாட்டு வடிவமைப்புடன் இந்தியர்களாலேயே கட்டப்பட்டு வருகிறது.

சென்னைக்குத் தெற்கே 60 கி. மீ. தொலைவில், மாமல்லபுரத்திற்கு அருகே கல்பாக்கம் அணு மின்சார நிலையம் வெளிநாட்டார் உதவியின்றிக் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு ஆகும் செலவில் 20 சதவிகிதம் மட்டும் வெளிநாட்டுச் செலாவணியாகச் செலவிடப்படும். உத்தரப் பிரதேசத்திலுள்ள நரோரா என்ற இடத்



வெளிநாட்டார் உதவியின்றி விரைந்து உருவாகி வரும் கல்பாக்கம் அணுமின்சார நிலையம்

தில், நான்காவது அணு மின்சார நிலையம் ஏற்படுத்தும் வேலை தொடங்கப்பட்டு விட்டது.

தூத்துக்குடி முதலிய நான்கு இடங்களில் கனமான தண்ணீரை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களும் பொருத்தப்பட்டு வருகின்றன. பலவிதமான புதிய தொழில்களுக்கு இவ்வகையான தண்ணீர் தேவைப்படும்.

**அணுத் தொடர்பான எரிபொருள்கள்**

'யுரேனியம்டையாக்ஸைட்டை' பதப்படுத்திபலவகைஎரிபொருட்களை, ஹைதராபாத்தில் உள்ள நியூக்ளியர், பியூயல் காம்ப்ளக்ஸ் தொழிற்சாலை தயாரித்து வருகிறது.

இந்திய எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன், ஹைதராபாத்திலுள்ள மற்றொரு தொழிற்சாலை. இங்கு அணுசக்தி தொடர்பானதும் தொடர்பில்லாததுமான பலவகைக் கருவிகள், மற்றும் கம்ப்யூட்டர்கள், மருத்துவ எலக்ட்ரானிக் கருவிகள், டெலிவிஷன் செட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

பிகார் — ஜடுகுடாவிலுள்ள இந்திய யுரேனியம் கார்ப்பொரேஷன் யுரேனியத் தாதுக்களை சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுத்து, பயன்படும் பொருளாக அதை உருவாக்கி வருகிறது.



ஸைரஸ் அணு உலை

கேரளத்தில் இந்தியன் ரேஞ் எர்த்ஸ் லிமிடெட் என்றதொழிற்சாலையில் கடற்கரை மணலிருந்து, தோரியம் பிரித்து எடுக்கப்பட்டு வருகிறது.

இவை தவிர, அணு சக்தி தொடர்பான எரிபொருள் துறையினர் யுரேனியம், தோரியம் முதலிய கேந்திரமான புவியியல் பொருட்கள் இருக்கும் இடங்களை ஆராயவும் அவற்றை எடுக்கவும் ஆவன செய்து வருகின்றனர்.

மேலே குறிப்பிட்ட எல்லாப் பணிகளுக்கும் தேவையான பயிற்சிகளை வழங்க, பாபா அணு ஆராய்ச்சி நிலையம் பட்டம் பெற்ற 200 எஞ்ஜினியர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் சிறப்பான முறையில் பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது.

மின்சாரத் திட்டங்களுக்கான என்ஜினீயரிங் பகுதியினர், அணு மின்சார நிலையங்களை நடத்துவதற்கான பயிற்சியை 'கோட்டா' என்ற இடத்தில் ஒரு பயிற்சி நிலையத்தில் அளிக்கின்றனர்.

இந்தியாவின் அணு ஆராய்ச்சிப் பணிகள் யாவும் பிற நாட்டாரை எதிர்பாராமல் செய்யப்படுகின்றன. இது நமது தன்னம்பிக்கைக்கு எடுத்துக் காட்டாக மிளிர்கிறது. உலகத்திலேயே வளர்ச்சி பெற்று வருகிற வேறு எந்த நாட்டிலும் அணுத் துறையில் இத்தகைய சிறப்பான குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை.



எலக்ட்ரானியல் கருவிகள் தயாரிப்ப

# தருமபுரி மாவட்டத்தில் வனவளம்



தருமபுரி மாவட்டம் ஹரூர் எல்லையில் உள்ள சித்தேரி குன்றுப் பகுதிகளில் ஆண்டு ஒன்றுக்கு 30 முதல் 40 டன்கள் வரை இயற்கை சந்தனம் கிடைக்கிறது. இதனுடைய மதிப்பு ரூ. 20 இலட்சமாகும். இந்த வகையான சந்தனம் சிறந்த வகையாக கருதப்படுகிறது. ஏனெனில், இதில் அதிக சதவிகித அளவில் எண்ணெய் உள்ளது. பழைய மற்றும் பட்டுப்போன மரங்கள் மட்டுமே வெட்டப்படுகின்றன. மேலெழுந்தவாரியாகச் சுத்தம் செய்யப்பட்டப் பிறகு இந்த மரம் சத்தியமங்கலத்துக்குஅனுப்பப்படுகிறது.

அங்கு ஆண்டுக்கு இருமுறை ஏலம் விடப்படுகிறது. தரகர்களை நீக்கி நேரிடை ஏலத்தை மாவட்ட நிர்வாகமே ஏற்று நடத்துகிறது.

பெரும்பான்மை மரத்துண்டுகள் ஏற்றுமதி ரகத்தைச் சேர்ந்தவை. குன்றுப்பகுதிகளில் வாழும் மலையக மக்கள் பிரிவினருக்குச் சந்தன வர்த்தகம் வேலை வாய்ப்பை வழங்குகிறது. அன்றாட சராசரி கூலி 4 ரூபாயாகும். இந்தக் கூலி மொத்த வருமானத்தைப் பொறுத்ததாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள மரங்கள் நடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு முதல்முறையாக 1,200 எக்டேர் நிலத்தில் மூங்கில், புளியமரம், நீலகிரி தைல மரம், தேக்கு, சந்தனம் ஆகிய மரங்கள் நடப்பட்டுள்ளன. ரூ. 8 இலட்சம் செலவுத்தொகையில் 1976 ஆண்டில் மொத்தம் 10 இலட்சம் மரக்கன்றுகள் (எல்லா வகையையும் சார்ந்தது) நடப்பட்டுள்ளன.

செம்மறி ஆடுகளுக்குத் தேவையான புல்தரும் மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தும் வகையில் 1976-ஆம் ஆண்டில் சுமார் 100 எக்டேருக்கு மேல் மேய்ச்சல் நிலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலத்தில் கொழுக்கட்டை போன்ற தரமான புல் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. மேய்ச்சல் நிலங்கள் சிறப்பாக உள்ளன. இன்றைக்கு 500 செம்மறி ஆடுகளின் தேவைகளை அவை பூர்த்தி செய்கின்றன. செம்மறி ஆடுகள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சங்கத்தைச் சேர்ந்த செம்மறி ஆடுகள் இந்தப் பகுதியில் புல் மேய்வதற்கென அனுமதிக்கப்பட்டு வருகின்றன. ஹாதியாறு பல்கலைக் கழகத்தின் மூலம் இந்தச் சத்துமிக்க புல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை சுமார் 2 இலட்சம் ரூபாயாகும். தர்மபுரி மாவட்ட அனைத்து வனத்துறை நிலங்களும் வளம் கொழிக்கும் முயற்சியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

# அதிக மகசூல் தரும் புதிய இரகங்கள்!

## இராஜ இராஜன்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கி வெளியிட்ட ஓர் ஒப்பற்ற புதுவகை நெல் இரகம் 'கோ. 40' என்பதாகும்.

இதன் பெயர் இராஜ இராஜன் !

கடந்த முப்பது ஆண்டுகளாக தஞ்சையில் அரசாட்சி செய்து வந்த கோ. 25 என்ற இரப்பர் சம்பா இரகத்திற்கு மிகவும் வயதாகிவிட்டது. மிகவும் உயரமாக வளர்ந்து சாயும் தன்மை பெற்று விட்டது. அதனால் மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்'' காலமாற்றத்தால் ஏற்படுவது ஆகும். இருந்தாலும் மரபு தவறாமல், 'ஐ. ஆர். 8' நெல்லுடன் 'கோ. 25' இரகத்தை ஒட்டுச்சேர்த்து 'கோ. 40' என்ற இரகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரகத்தின் சிறப்புக் குணங்களாவன :

### சிறப்புக் குணங்கள்

* 'ஐ. ஆர். 8' இரகத்தைப் போல் குட்டையாக உள்ளது; சாயாத தன்மை கொண்டது.
* கோ. 25 நெல்லைப் போல் 170 நாட்கள் கொண்டது. கொலை நோயால் தாக்கப்படாதது.
* கோ. 25 நெல் இரகம் ஏக்கருக்குச் சராசரியாக 1,400 கிலோ மகசூலைத்தான் தரும். ஆனல் இராஜராஜன் ஏக்கருக்குச் சராசரியாக 2,700 கிலோ நெல் மகசூலைத் தரக்கூடியது. இதனல் சுமார் 75 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.



'கோ. 25 நெல் இரகம் அதிகபட்சம் ஏக்கருக்கு இரண்டரை டன் மகசூல் கொடுத்தது. ஆனல் இராஜராஜன் அதிகபட்சமாக ஏக்கருக்கு 3,340 கிலோ கொடுத்துள்ளது. இது எக்டேருக்குச் சுமார் எட்டேகால் டன் ஆகும்.

* இராஜ இராஜன் நாற்றுக்கு அதிக வயதாகி நட்டாலும் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படாதது.

எனவே, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ள காவிரி டெல்டாப் பிரதேசங்களில் சம்பா-தாளடிப் பட்டங்களில் 'இராஜ இராஜன்' நெல் இரகத்தை அதிக அளவில் பயிரிடுமாறு வேளாண் குடிப்பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறேம்.

இராஜ இராஜனைப் பயிரிடுவதற்கு உரிய கட்டுக்கோப்பான சாகுபடி முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### இராஜ இராஜன் (கோ. 40) நெல் சாகுபடி முறைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரம்பரியம் | ... | ஐ. ஆர். 8 × கோ. 25. |
| 2. | வயது | ... | 165-175 நாட்கள். |
| 3. | பயிரிடும் காலம் | ... | சம்பா (ஆகஸ்ட்-ஜனவரி). தாளடி (அக்டோபர்-பிப்ரவரி). |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. விதை அளவு ... | 15 கிலோ விதைகளை 10 சென்ட் நாற்றங்காலில் விதைத்து ஒரு ஏக்கரில் நடவு செய்யலாம். | | | |
| 5. நடவு செய்யும் நாற்றின் வயது ... | 25-35 நாட்கள் | | | |
| 6. நடவின் இடைவெளி | 20 × 10 செ. மீ. குத்துக்கு இரண்டு நாற்றுக்கள். | | | |
| 7. உர அளவு | தழைச் சத்து | மணிச்சத்து | சாம்பல்சத்து | |
| ஒரு ஏக்கருக்கு (கிலோ அளவில்) ... கடைசி உழவில் | 50 | 25 | 25 | |
| அடியுரம் ... | ... | 25 | 25 | |
| மேலுரம் (தழைச்சத்து) | | | | |
| 1. நடவின் போது ... | 15 | ... | ... | |
| 2. தூர் கட்டும்போது | 20 | ... | ... | |
| 3. கதிர் உருவாகும்போது | 15 | ... | ... | |




8. பயிர்ப்பாதுகாப்பு:—

விதை: விதைக்கும் முன், ஒரு கிலோ விதைக்கு 'அக்ரசான்' (அல்லது)'செரஸான்'மருந்தை 2 கிராம் வீதம் (அல்லது) 'டி.எம்.டி. டீ.' (திராம்) மருந்தை 4 கிராம் வீதம் கலக்கவும்.

நாற்றங்கால்: விதைத்து 15 நாட்களுக்குப் பிறகு, நாற்றங்காலில் 'பெந்தியான்' மருந்தை ஏக்கருக்கு 200 மி.லி. வீதம் தெளிக்கவும்.

நடவு வயலில்: நடவு செய்த 15 நாட்களுக்குப் பின், 'பெந்தியான்' என்ற மருந்தை ஏக்கருக்கு 250 மி.லி. வீதம், 15 நாட்களுக்கு ஒருமுறை, நான்கு தடவைகள் தெளிக்கவும்.

அல்லது

ஒரு ஏக்கருக்கு 'பியுரடான்' 7 கிலோ (அல்லது)
'போரேட்' 15 ,, (அல்லது)
'செவிடால்' 8 கிலோ

ஆகிய குருணை மருந்துகளில் ஏதாவது ஒன்றினை, நடவு செய்த 15-20 நாட்களில் ஒருமுறையும், 45-50 நாட்களில் மீண்டும் ஒரு முறையும் தூவவும். இம்மருந்தைத் தூவும்போது, வயலில் 5 செ. மீ. உயரத்திற்கு நீர்மட்டம் இருக்க வேண்டும். மேலும், மருந்து தூவிய பிறகு, மூன்று நாட்கள் வரை வயலுக்கு நீர் பாய்ச்சக் கூடாது. வயல் நீரையும் வடிக்கக்கூடாது. புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்த வயலிலுள்ள நீரைச் சுத்தமாக வடித்து விட வேண்டும். ஏக்கருக்கு 20 கிலோ வீதம் 'பி. எச். சி. 10' சதவிகிதம் மருந்தைப் பயிரின் அடிப்பாகத்தில் நன்றாகப்படும்படி தூவ வேண்டும்.

குலே நோய், இலைப்புள்ளி ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மி.லி. 'இனேசான்' (அல்லது) 400 கிராம் 'டைத்தேன்' எம். 45 மருந்தை மூன்று முதல் ஐந்துமுறை வரை தெளிக்க வேண்டும்.

நெல் மகசூல்:

எக்டேருக்கு 62 குவிண்டால்—அதாவது ஏக்கருக்கு 25 குவிண்டால்.

## தானியமும் தட்டும் தரும் புதிய சோள இரகம் 'கோ. 21'

தானிய மகசூலும், தட்டு மகசூலும் அதிகம் கொடுக்கக்கூடிய உயர் ரகம் வேண்டும் என விரும்பிய உழவர்களுக்கு எனக்கண்டு பிடிக்கப்பட்ட இரகம் 'கோ. 21' சோளம். இது தானியம் மட்டு

மல்லாமல், தட்டும் கொடுக்கக்கூடிய உயர்விளைச்சல் இரகமாகும். கோ.18 போல் அதிக உயரமில்லாமலும் 'சி. எஸ். வி. 5' போல் குட்டையாக இல்லாமலும் நடுத்தர உயரம் கொண்டது இந்த ரகம்.

### சிறப்புக் குணங்கள்

*'கோ. 21' சோளம் 'சி. எஸ். வி. 5'-ஐப் போன்றே தானிய மகசூல் கொடுக்கவல்லது.

*இறைவையில் எக்டேருக்கு 5,000 கிலோ சோளமும், மானாவாரியில் 2,000 கிலோ சோளமும் இது கொடுத்துள்ளது.

*தானியம் முத்துப்போல் வெண்மை நிறமுடையது.

*சோளத் தட்டு எக்டேருக்கு இறைவையில் 16 முதல் 18 டன்னும், மானாவாரியில் 12 டன்னும் கொடுத்துள்ளது.

*சோளத்தட்டில் 'சி. எஸ். வி. 5' சோளத்தைவிட 100 சதம் கூடுதல் மகசூல் கிடைத்துள்ளது.

*தட்டும் இனிப்புள்ளது.

*இலைகளும் நன்கு விரிந்து நீளமாகவுள்ளன. ஆதலால் விவசாயிகளுக்குக் கூடுதல் இலாபம் தட்டு மூலம் கிடைக்கிறது.

*'சி. எஸ். வி. 5' சோளத்தைப் போலவே குருத்து ஈ, தண்டு துளைப்பான், 'மிட்ஜ் ஈ' முதலிய பூச்சித் தாக்குதலுக்கு இது ஈடு கொடுக்கவல்லது.

*கூடிமல்லி எனப்படும் சாறுண்ணியின் தாக்குதலுக்கும் ஈடு கொடுக்கவல்லது.

*இந்த இரகம் வறட்சியைத் தாங்கக்கூடியது.

*இறைவைப் பயிராக கோடைக் காலமாகிய ஜனவரி-ஏப்ரல் வரையில் பயிரிடலாம். பருவ மழைக்காலங்களாகிய ஜூன்-ஜூலை மாதங்களிலும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் பயிரிடலாம். ஆனால் செப்டம்பர்—அக்டோபர் பருவத்தில் பயிர் குட்டையாக வளர்ந்து தட்டு மகசூல் குறைகிறது.

*சோளமும் தட்டும் தரக்கூடிய இவ்வுயர் விளைச்சல் இரகத்தை வருடா வருடம் விதை எடுத்தே பயிர் செய்யலாம். ஏனெனில் இது ஒட்டு இரகம் அல்ல. ஆதலால் விவசாயிகள் உயர்விளைச்சல் இரகங்கள் வருவதற்கு முன்பு 'கோ. 18' சோளம் பயிர் செய்த மாதிரியே இதனையும் பயிர் செய்யலாம்.

*இது நடுத்தர உயரம் கொண்டுள்ளதால் காற்றுக்கும் மழைக்கும் சாயாது.

வீரிய இரகங்கள் போலவே, தானிய மகசூலும் கொடுப்பதுடன் கூடவே தட்டும் கொடுக்கவல்ல கோ.21 சோளம், விவசாயிகளுக்கு இப்பல்கலைக் கழகம் தரும் அன்பளிப்பாகும்.

## கோ. 21 சோளம்—சாகுபடிக் குறிப்புகள்

பருவம்:
(1) மானாவாரி ... ஆடி-ஆவணி, புரட்டாசி.
(2) பாசனப் பயிர் ... 1. தைப்பட்டம். 2. மாசிப்பட்டம். 3. சித்திரைப் பட்டம்.

வயது ... 100-105 நாட்கள்.

விதையளவு ... எக்டேருக்கு 10 கிலோ விதையை கிலோவுக்கு 2.5 கிராம் 'கேப்டான்' அல்லது 4 கிராம் 'தைரம்' மருந்துடன் கலந்து விதைக்கவும்.

விதைப்பு: ... வரிசைக்கு வரிசை 45 செ. மீ. வரிசையில் பயிருக்குப் பயிர் 15 செ. மீ.

| உர அளவு (எக்டேருக்கு) | | பாசனப் பயிர் | மானாவாரிப் பயிர் |
|---|---|---|---|
| அடியுரம்: | தொழு உரம் | 25 டன் | 10 டன் |
| | தழைச்சத்து | 45 கிலோ | 40 கிலோ |
| | சாம்பல்சத்து | 45 கிலோ | 20 கிலோ |
| | மணிச்சத்து | 45 கிலோ | ... |
| மேலுரம்: | தழைச்சத்து | 45 கிலோ | ... |

பின்செய்நேர்த்தி: ... விதைத்த 20-ஆம் நாளில் செடிகளைக் கலைத்துக் களை எடுக்க வேண்டும். பாசனப் பயிருக்கு 30-ஆம் நாளில் மேலுரம் இட வேண்டும். 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியம்.

பயிர்ப்பாதுகாப்பு: ... சோளப் பயிரைத் தாக்கும் பல்வகைப் பூச்சிகளில் குருத்து ஈ, தண்டுப் புழு, 'மிட்ஜ் ஈ', நாவாய்ப் பூச்சி முதலியவை முக்கியமானவையாகும். சிற்சில சமயங்களில் அசுவணி, பயிர்ச் சிலந்தி முதலியனவும் அதிக சேதத்தை விளைவிக்கும். கீழ்க்காணும் முறைகளை மேற்கொள்வதின் மூலம் இப்பூச்சிகளினால் ஏற்படும் சேதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

### இறவைச் சோளம்

குருத்து ஈ. ... 'கார்போஃபூரான்' 3 சதம் அல்லது 'திமெட்' 10 சதம் குருணை மருந்துகளில் ஏதாவது ஒன்றை எக்டேருக்கு முறையே 30, 15 கிலோ அளவில் விதைக்கும் முன் சாலில் (மண்ணில்) இட வேண்டும்.

தண்டுப்புழு: ... 'கார்போஃபூரான்' 3 சதம் அல்லது 'செவிடால்' 4 சதம் குருணை மருந்துகளில் ஒன்றைப் பயிர் முளைத்த 25, 35-ம் நாளில் எக்டேருக்கு முறையே 5 மற்றும் 7.5 கிலோ அளவில் இலைக் குருத்தில் இடவேண்டும்.

கதிர் கொசு, நாவாய்ப்பூச்சி முதலியன: 50 சதம் கதிர் வெளித் தோன்றியவுடன் ஒருமுறையும், ஒரு வார இடைவெளியில் மறுமுறையும் கீழ்க் கூறிய பூச்சிக் கொல்லிகளில் ஏதாவது ஒன்றை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். நீரில் கரையும் செவின் தூள் 1 கிலோ (அல்லது) 'எண்டோசல்பான்' 500 மி.லி. (அல்லது) 'லெப்டோபாஸ்' 500 மி.லி.(அல்லது) 'மாலதியான்' 4 சதம் தூள் (அல்லது) 'செவின்' 10 சதம் தூள் (அல்லது) 'பி.எச்.சி. 10' சதத் தூள் (15 முதல் 20 கிலோ எக்டேருக்கு) தூவ வேண்டும்.

### மானாவாரிச் சோளம்

குருத்து ஈ, தண்டுப்புழு முதலியவற்றை இறவைச் சோளத்திற்குக் கூறிய குருணை மருந்துகளை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம். கதிரைத் தாக்கும் பூச்சிகளின் சேதத்தை, தூவும் மருந்துகளில் ஏதாவது ஒன்றினை மட்டும் தூவிக் கட்டுப்படுத்த வேண்டும்.

நோய்: ஜூன்-ஜூலை மாதத்தில் விதைத்த இறவைப் பயிரில் 'டைத்தேன் இஜட்' 78 என்ற மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் மருந்து என்ற அளவில் கலந்து பயிர் முளைத்த 30, 45-ஆம் நாட்களில் தெளிப்பதின் மூலம், சோளப் பயிரின் முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

## இறைவைக்கும், மானாவாரிக்கும் ஏற்ற துவரை 'கோ. 3'

இறைவைக்கு ஏற்ற துவரை இரகம், மானாவாரிக்கு ஏற்றதாய் இருப்பதில்லை. எனவே, இறைவைக்கும் மானாவாரிக்கும் ஏற்ற ஒரு துவரை ரகத்தைக் கண்டு பிடித்து உழவர்களுக்கு வெளியிட்டுள்ளது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். இறைவைக்கும், மானாவாரிக்கும் ஏற்ற இத்துவரை ரகத்தின் பெயர் 'கோ.3'. இந்த ரகம் மானாவாரியில் 'கோ. 2' துவரையைவிட 100 சதம் அதிக மகசூல் தரக்கூடியதாகும்.




இறைவையில் 130 நாட்களில் எக்டேருக்குச் சுமார் 1,330 கிலோ துவரை மகசூல் தரவல்லது கோ. 3 துவரை. அதே போல் மானாவாரியில் எக்டேருக்கு 1,200 கிலோ துவரை மகசூல் தரவல்லது.

ஏற்கெனவே வெளியிடப்பட்டுச் சாகுபடியில் உள்ள 'கோ. 2' துவரையை விட இறவையில் 460 கிலோ கூடுதல் மகசூலும், மானாவாரியில் 600 கிலோ கூடுதல் மகசூலும் இது தரவல்லது.

இந்த இரகத்தைப் பயிரிடுவதால் எக்டேருக்கு ரூ.800 கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

வேர் அழுகல் நோய், வாடல்நோய், காய் துளைப்பான்களுக்கு 'கோ. 2' துவரையைவிட அதிக ஈடு கொடுக்கக்கூடிய இரகம் இது.

இந்த இரகத்தின் காய்கள் கொத்துக் கொத்தாகக் கிளைகளின் நுனியில் தொங்கும். ஆதலால் எல்லாக் காய்களும் ஒரே நேரத்தில் முதிர்ந்து விடுகின்றன.

நாள் உற்பத்தி என்ற விகித அளவில் உற்பத்தியைக் கணக் கிட்டால், இறைவையில் எக்டேருக்கு 10.2 கிலோவும், மானாவாரியில் 9.4 கிலோவும் தரவல்லது. 'கோ. 2' துவரை எக்டேருக்கு இறை வையில் 7.2 கிலோவும், மானாவாரியில் 5.1 கிலோவும் தான் ஒரு நாளைக்குத் தந்தன.

**எனவே 'கோ. 3' துவரை, குறிப்பாக மானாவாரியில் துவரை பயிரிடும் உழவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.**

மற்றும் இதன் பருப்பு அரைமணி நேரத்தில் நன்கு வெந்து விடுகிறது. நல்ல ருசியும் மணமும் கொண்டுள்ளது. ஆதலால் உண்பவர்களும் விரும்பி ஏற்கக் கூடியதாக இது உள்ளது.

ஆதலால் இந்த இரகம் உழவர்களுக்கு அதிக இலாபத்தைத் தருவது மட்டுமின்றி, உண்பவர்களுக்கும் ஏற்ற இரகமாக விளங்கு கிறது.

## கோ. 3 துவரையின் சாகுபடிக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பருவம்: | ... | 1. ஜூன்-ஜூலை முதல் அக்டோபர் நவம்பர் வரை. |
| | | 2. பிப்ரவரி முதல் ஜூன் வரை. |
| வயது: | ... | 130 நாட்கள். |
| முன்செய நேர்த்தி | ... | விதைப்புக்கு ஏற்றபடி உழுது தயார் செய்யவும். |
| நுண்ணுயிர்க்கலவை | ... | விதைகளைத் தகுந்த நுண்ணுயிர் இராசியுடன் கலந்து விதைக்க வும். |
| உரமிடல் | ... | எக்டேருக்கு 25 டன் தொழு உரத் தைக் கடைசி உழவின்போது இட்டு, நன்கு கலந்து விடவும். எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்தும் 50 கிலோ மணிச்சத்தும் விதைப்பதற்கு முன்போட வேண்டும். (மானாவாரி விதைப்பிற்கு இந்த அளவில் பாதி உரம் போதுமானது) |
| விதையளவு: | ... | எக்டேருக்கு 20 கிலோ. |
| இடைவெளி | ... | வரிசைக்கு வரிசை 60 செ. மீ. செடிக்குச் செடி 30 செ. மீ. |
| பின்செய் நேர்த்தி: | ... | விதைத்து 25 நாட்களில் முதல் களை எடுக்க வேண்டும். பின்னர், தேவைக்கு ஏற்பக் களை எடுக்கவும். |
| பயிர்ப்பாதுகாப்பு: | ... | 'பி.எச்.சி.' 10 சதத்தூளையும், 'டி. டி. டி. 5' சதத் தூளையும் சம அளவில் கலந்து எக்டேருக்கு 25 கிலோ வீதம் 15 நாட்கள் இடைவெளியில் இரு முறை தூவவும். பூச்சிகள் அதிக மிருப்பின் மற்றொரு முறையும் தூவ லாம். |
| காய்ப்புழுக்கள்: | ... | 'எண்டோசல்பான்' 4 சதம் அல்லது 'டிரைகுளோர்பான்' ('டிப்டிரெக்ஸ்' 5 சதம்) மருந்தைக் காய் பிடிக்கும் நேரத்தில் 15 நாட்கள் இடைவெளி யில் இருமுறை தூவவும். |

## உயர் விளைச்சல் தரும் 'கோ-2' கீரை

சொந்த உபயோகத்திற்காக வீட்டுத் தோட்டங்களிலும், வியாபாரம் செய்வதற்காக பெரிய அளவிலும் பயிர் செய்வதற்கு ஏற்றது, "கோ. 2" முளைக்கீரை. இதனை ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம்.

இதன் விதைகள் சற்றுப் பெரியவையாக இருப்பதுடன் விரை வில் முளைக்கும் திறனும் பெற்றிருக்கின்றன. இக்கீரை வீரியத் துடன் வளர்வதால் 25 முதல் 30 நாட்களில் தரம் மிக்க கீரை விளைச்சலை அதிக அளவில் கொடுக்கிறது.

இதன் இலையும் தண்டும் கவர்ச்சிகரமான பசுமை நிறத்துடன் விளங்குகின்றன. இவற்றில் நார் இருப்பதில்லை. இதன் இலையும் தண்டும் 18:1 என்ற விகிதத்தில் உள்ளன. இவை அனைத்தும் இக் கீரை ரகத்தின் சிறப்புத் தன்மைகள்.




உண்ணுவதற்குத் தகுந்த 100 கிராம் பசுங்கீரையில் 3.5 கிராம் புரதச்சத்தும், 39.8 மி.கி. மணிச்சத்தும், 379 மி.கி. சாம்பல் சத்தும், 310 மி.கி. சுண்ணும்புச்சத்தும், 19 மி.கி. இரும்புச்சத்தும் உள்ளன. இந்தக் கீரை ரகம் விதைத்த 25 நாட் களில் எக்டேருக்கு 10,78! கிலோ கீரை கொடுக்கவல்லது. அதா வது 3 சதுர மீட்டருக்கு 3.234 கிலோ கீரை தரவல்லது.

### "கோ. 2" முளைக்கீரையின் சாகுபடிக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பருவம் | ... | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். |
| வயது: | ... | முளைக்கீரை—25 முதல் 30 நாட்கள். |
| | ... | தண்டுக்கீரை—35 முதல் 40 நாட்கள். விதை உற்பத்திக்கு 75 முதல் 80 நாட்கள். |
| நிலத் தயாரிப்பு முறை | ... | நிலத்தை 3 முதல் 4 முறை நன்கு உழுது 2 மீ. × 1.5 மீட்டர் அள வுள்ள பாத்திகள் அமைக்கவும். |
| விதை அளவு | ... | மூன்று சதுர மீட்டர் பாத்திக்கு 4.5 கிராம் விதை. |
| விதைக்கும் முறை | ... | விதையை, சம அளவு மணலுடன் கலந்து பாத்தி முழுவதும் தெளிக்க வும். விதைகளைத் தெளித்த பின் பாத்தியை இலேசாகக் கிளறி விட வும். |
| உரம் | ... | ஒரு எக்டேருக்கு: 20 டன் மக்கிய தொழு உரம் (40 வண்டி) 25 கிலோ தழைச்சத்து (125 கிலோ அம்மோனியம் சல்பேட்டு). 50 கிலோ மணிச்சத்து (300 கிலோ சூப்பர் பாஸ்பேட்டு) 20 கிலோ சாம்பல் சத்து (35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்). |

**மூன்று சதுர மீட்டர் பாத்திக்கு**

8 கிலோ மக்கிய தொழு உரம்.
40 கிராம் அம்மோனியம் சல்பேட்
100 கிராம் சூப்பர் பாஸ்பேட்
20 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ்

| | | |
|---|---|---|
| நீர்பாய்ச்சுதல் | ... | விதை போட்டவுடன் பூவாளி கொண்டு தண்ணீர் தெளித்தல் வேண்டும். பின்பு வாரத்திற்கு ஒரு முறை நீர்பாய்ச்சவும். |
| பயிர்ப்பாதுகாப்பு | ... | விதைத்து நீர் பாய்ச்சியவுடன் 'பி. எச். சி.' 10 சத தூளை ஒரு கையளவு எடுத்து பாத்தியின் நான்கு பக்கங் களிலும் போட்டு எறும்புத் தொல்லை |

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனல் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரு. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 80 ரு. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரு. 175க்கு அதிக வருவாய் ரு. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1163


யைத்தடுக்க வேண்டும். விதைத்த 20 நாட்களுக்குப் பின்னர் இலைப் புழுக்களால் சேதம் இருந்தால் மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீரில் 2 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். விதைத்த 20 நாட்களுக்குப் பின்னர் வெள்ளைத் தேமல் நோயின் அறிகுறி தென்பட்டால் 'டைத்தேன்' எம். 45' மருந்தை ஒரு லிட்டர் நீரில் இரண்டு கிராம் மருந்து என்ற அளவில் கலந்து தனியாகவோ அல்லது பூச்சி மருந்துடன் சேர்த்தோ தெளிக்கவேண்டும். எந்த மருந்து தெளித்தாலும் மருந்து தெளித்த ஒரு வாரத்திற்குள் கீரையை அறுவடை செய்து உபயோகிக்கக்கூடாது.

| | | |
|---|---|---|
| அறுவடை | .. | முளைக்கீரை 25 முதல் 30 நாட்கள் |
| | | தண்டுக்கீரை 35 முதல் 40 நாட்கள் |
| | | விதை 75 முதல் 80 நாட்கள் |

| மகசூல் | மூன்று சதுர மீட்டர் பாத்தி (கிலோ) | ஒரு எக்டேர் (கிலோ) |
|---|---|---|
| முளைக்கீரை | 3.234 | 10,780 |
| தண்டுக்கீரை | 4.875 | 16,250 |

## இறைவைக்கும், மானாவாரிக்கும் ஏற்ற அதிக மகசூல் தரும் அவரை 'கோ-9'!

ஏற்கெனவே வெளியிடப்பட்ட 'கோ. 8' இரகத்தைக் காட்டிலும் சராசரியாக ஏக்கருக்கு 800 கிலோ அதிக மகசூல் தரக் கூடிய ரகம் கோ. 9 அவரை. இந்தப் புதிய வீரிய ரகம் மற்ற இரகங்களையும் போலவே 120 நாட்கள் கொண்டது தான். இந்த இரகம் பச்சைக் காய்களுக்காகவும், விதைப்பருப்பிற்காகவும் சாகுபடி செய்ய ஏற்றது. அது மட்டுமல்லாமல் இறைவைக்கும், மானாவாரிக்கும் ஏற்றது. இறைவையில் அதிக அளவு மகசூல் ஏக்கருக்கு 3,340 கிலோ. குறைந்த அளவு மகசூல் ஏக்கருக்கு 2,800 கிலோ. மானாவாரியில் அதிக அளவு மகசூல் 3,000 கிலோ. நாள் ஒன்றுக்கு உற்பத்தி என்ற விகிதத்தில் கோ. 9 அவரை மகசூலைக் கணக்கிட்டால், எக்டேருக்கு நாள் ஒன்றுக்கு இறைவையில் 67.4 கிலோவும் மானாவாரியில் 62.5 கிலோவும் கொடுத்துள்ளது தெரிய வருகிறது. கோ. 8 அவரை, நாள் ஒன்றுக்கு எக்டேருக்கு இறைவையில் 55.6 கிலோவும் மானாவாரியில் 37.3 கிலோவும் தான் மகசூல் தந்தது.



கோ. 9 அவரையின் காய்கள் இளம் பச்சை நிறம் கொண்டவை. அகலமாகவும், சிறியதாகவும் உள்ளன. சமைப்புத் திறன், சுவை மணம் ஆகிய குணங்களில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட அவரை இரகங்களைப் போலவே உள்ளது. இதன் விதைகளை மொச்சை விதையைப் போல் பச்சையாகவும் அதே போல் காய்ந்த பருப்புகளாகவும் சமையலுக்கு உபயோகிக்கலாம். இந்தப் புதிய ரகத்தில் புரதச்சத்தும் அதிகம். கோ. 8 அவரையிலுள்ள புரதச்சத்தைக் காட்டிலும் சுமார் கால் மடங்கு அதிகப் புரதச்சத்து இதிலுள்ளது. விதைப்பருப்பாக மகசூலைக் கணக்கிட்டால் எக்டேருக்கு 1,400 கிலோ மகசூல் கிடைக்கிறது.

இந்த ரகம் ஏற்கெனவே வெளியிட்ட இரகங்களைப் போன்றே ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இதனைத் தனிப் பயிராகவும், ராகியுடன் கலந்து கலப்புப் பயிராகவும் இறைவையில் பயிரிடலாம். அதேபோல் மானாவாரியில் சோளத்தோடு கலப்புப் பயிராகவும் பயிரிடலாம்.

இது மற்ற வீரிய ஒட்டு ரகங்களைப் போல் ஒட்டுச் சேர்த்து கண்டுபிடிக்கப்படாததால் இதன் விதையை விவசாயிகளே எடுத்து மறு ஆண்டும் சாகுபடி செய்யலாம்.

'கோ. 8' அவரை ரகத்தைவிட சுமார் 800 கிலோ கூடுதல் மகசூல் தரக்கூடிய காய், பருப்பு இரண்டிற்கும் பயன்படக்கூடிய இந்த ரகம் உழவர்களின் இலாபத்தை அதிகரிக்கப் பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமேயில்லை.

## அவரை கோ. 9—சாகுபடிக் குறிப்புகள்

| | |
|---|---|
| பருவம் ... | எல்லாப் பருவங்களிலும் பயிர் செய்யலாம். ஆயினும் மழைப் பருவக் காலங்களில் மானாவாரிப் பயிராகப் பயிரிடலாம். |
| வயது ... | 120 நாட்கள். இளம் காய்களை விதைத்த 65 நாட்களிலிருந்து அறுவடை செய்யலாம். |
| முன் செய்நேர்த்தி ... | நிலத்தை விதைப்பதற்கு ஏற்றபடி நன்கு பண்படுத்தவும். |
| நுண்ணுயிர்க் கலவை... | விதைகளைத் தகுந்த நுண்ணுயிர் ராசியுடன் கலந்து விதைக்கவும். |
| உரமிடல் ... | எக்டேருக்கு 25 டன் தொழு உரம் கடைசி உழவின்போது இடவும். எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் விதைக்கும் முன்பு இடவேண்டும். |
| விதையளவு ... | எக்டேருக்கு 25 கிலோ. |
| இடைவெளி ... | 60 செ. மீ. × 30 செ. மீ. |
| பாசனம் ... | விதைத்தவுடன் நீர்பாய்ச்சவும். நான்கு நாட்களுக்குப் பின்னர் இரண்டாம் முறை நீர் பாய்ச்சவும். பின்னர் 10 நாட்களுக்கொருமுறை நீர்பாய்ச்ச வேண்டும். |
| பின்செய் நேர்த்தி ... | விதைத்த 15 நாட்களில் முதல் களை எடுக்கவும். இரண்டாம் களை விதைத்த 30 நாட்களில் எடுக்க வேண்டும். பின்னர் தேவைக்கு ஏற்பக் களை எடுக்கலாம். |
| பயிர்ப்பாதுகாப்பு (அசுவின், இலைப்புழு, வண்டுகள்). ... | 'பி.எச்.சி.' 10 சதத் தூளையும், டி.டி.டி. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து எக்டேருக்கு 25 கிலோ வீதம் தூவலாம். அல்லது மாலத்தியான் (50 சத. இ. சி.), 0.1 சதம் கரைசலைத் தெளிக்கலாம். 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை மருந்து தெளித்தல் நல்லது. |
| காய்ப்புழுக்கள் ... | 'எண்டோ சல்பான்' (35 சதம் இ.சி.) கரைசலை செடிகள் பூக்கும் காலத்திலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |

தகவல் :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை—3



# ஆடு வளர்ப்பும் அபிவிருத்தியும்

—டாக்டர் வி. மாரிமுத்து,
பி.வி.எஸ்.ஸி., என்.டி.பிஎச்.பி.

வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு நம் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. தம் உடம்பின் ஒவ்வொரு பகுதியையும் நமக்கு உபயோகமாகக் கொடுக்கும் ஆட்டினத்தை நாம் எவ்வாறு மறக்க இயலும்? ஆட்டின் இறைச்சி நமது உணவில் முக்கிய அங்கம். ஆட்டின் தோல், பதனிடப்பட்டு நமக்குப் பல்வேறு வகையில் உபயோகமாகிறது. ஆட்டின் உரோமம் கம்பளமாகவும், நாராகவும் உபயோகமாகிறது. ஆட்டின் குளம்பு, கொம்பு, தசை நார்கள் முதலியன கோந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் உற்பத்தியில் உபயோகமாகின்றன. கழிக்கப்பட்ட எலும்புகள் பல உணவு மற்றும் அமிலத் தயாரிப்புகளுக்கு உபயோகமாகிறது. ஆட்டின் உடம்பில் உள்ள பல்வேறு சுரப்பிகள் மருந்துகள் உற்பத்திக்குப் பயன்படுகின்றன. ஆட்டின் சாணமும் சிறுநீரும் கூட வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கப்பெரிதும் உதவுகின்றன. சுருங்கக் கூறினல் ஆட்டினத்தைப் போல, நமக்கு அனைத்தையும் அர்ப்பணிக்கும் இனம் வேறு ஏதும் இல்லை எனத் தெளிவாகக் கூறலாம்.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கால்நடை இனங்களின் மொத்த எண்ணிக்கை 2,39,79,071. இதில் வெள்ளாடுகள் 40,17,725. செம்மறி ஆடுகள் 56,25,296. மொத்தம் ஆட்டினம் 96,33,021. அதாவது தமிழ்நாட்டில் உள்ள கால்நடை இனங்களில் சுமார் 42 சதவிகிதம் வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும் ஆகும்.

ஆடு வளர்ப்பு, விவசாயம், கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றின் ஓர் முக்கிய துணைத் தொழிலாகும். ஆடு வளர்ப்பு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பரவலாக இருப்பினும் நஞ்சை விவசாயம் அதிகம் உள்ள தஞ்சை மாவட்டத்தை விட மழையை நம்பி இருக்கும் ராமநாதபுரம், சேலம் போன்ற மாவட்டங்களில் அதிகம். இதற்கு முக்கிய காரணம், ஆடு வளர்ப்புக்கு மேய்ச்சல் தரை முக்கியமாகத் தேவைப்படுவதாகும்.

முன்னுளில் ஆடு வளர்ப்பு "கிடைத்த வரை இலாபம்" என்ற அளவிலேயே இருந்தது. ஆனல் இப்போது அரசு மேற்கொண்ட பல்வேறு திட்டங்களின் காரணமாகவும், நவீன நோய்த் தடுப்புச் சிகிச்சை முறைகளினலும், இறப்பு விகிதம் குறைந்ததன் காரணமாய் ஆடு வளர்ப்பு நிச்சயமாக ஒரு இலாபகரமான தொழிலாக விளங்குகின்றது.

பல்வேறு வகையிலும் நம் கிராமப் புறப் பொருளாதாரத்தை மேம்படச் செய்யும் ஆடு வளர்ப்பு சம்பந்தமாக நமது அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டதில் ஆச்சரியம் இல்லை.

1. அரசுக் கால்நடைப் பண்ணைகளில் ஆட்டுப் பிரிவுகளை ஏற்படுத்திச் சிறந்த ஆட்டுக் கிடாக்களை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்குகிறது.

2. தனியாகச் செம்மறி ஆட்டுப் பண்ணைகளை அரசு ஏற்படுத்தித் தரமான ஆடுகளை விவசாயிகளுக்கு வழங்குகிறது.

3. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஆடுகள் கடனுகவும் அதில் ஒரு பகுதி மானியமாகவும் மக்களுக்கு வழங்கி ஆடு வளர்ப்பை ஊக்குவிக்கின்றது.

4. ஆடு வளர்ப்பு—கம்பளி நெசவுக் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து வருகிறது.

5. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஆடு வளர்ப்பிற்காக, குறைந்த வட்டிக் குக்கடன் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

6. இன்னும் பல திட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது.

மேற்கண்ட திட்டங்களின் மூலமாக விவசாயிகள் ஆடு வளர்ப்பை முக்கிய தொழிலாகவும், உப தொழிலாகவும் மேற்கொண்டு நல்ல லாபம் பெறுகிறுர்கள்.

ஆடு வளர்ப்பு சந்தேகத்திற்கு இடமில்லாத, நிச்சயம் லாபம் தரக்கூடிய தொழிலாக, அமைய





கீழ்க்கண்ட வளர்ப்பு முறைகளை கண்டிப்பாய் நடைமுறையில் கையாள வேண்டும்.

1. ஆட்டுப் பண்ணை துவக்குவதற்கு முன்பு, எந்த வகையான ஆட்டுப் பண்ணை அமைக்க விருப்பம் என்பதை முடிவு செய்ய வேண்டும். சம வெளிப் பகுதிகளில் ஆடு வளர்க்கவிரும்புவோர் இறைச்சி இனச் செம்மறி ஆடுகளான கீழ்க் கரிசல், மேச்சேரி போன்றவைகளையே வளர்க்க வேண்டும். சமவெளி சீதோஷ்ண நிலையில் இந்த இனங்கள் நல்ல பலனைத் தரும்.

மலைப் பிரதேசங்களான உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற இடங்களில் கம்பளி ரோமங்கள் தரக் கூடிய வகை வகையான 'ரோம்னி மார்ஷ்' இனச் செம்மறி ஆடுகள் வளர்த்தால் கூடுதலான இலாபத்தைப் பெறலாம். மலைப் பிரதேச சீதோஷ்ண நிலையில் கம்பளி இனச் செம்மறி ஆடு வளர்ப்பது சிறந்தது.

2. ஆட்டுப் பண்ணைக்கு ஆரம்ப இருப்பு ஆடுகளை வாங்கும்போது தரமான, சுய இன பெண் ஆடுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



நல்ல சதைப் பிடிப்பு மற்றும் வலுவான எலும்புகளைக்கொண்ட கால்கள் அமையப் பெற்றனவாகவும், உருண்டையான மாரல் போன்ற நெஞ்சு வயிறு உடையனவையாகவும், சிறிய தலையை உடையனவாகவும், அதன் உடல் அமைப்பும் இருக்க வேண்டும். அதிகக் குட்டிகள் போடக் கூடியனவாகவும், குட்டிகளை வளர்க்கத் தேவையான பால் சுரப்புத் தன்மையைப் பெற்றனவாகவும் இருக்க வேண்டும். அவைகளின் இனவிருத்தி உறுப்புகள் எவ்வித நோயினாலும் பாதிக்காதனவாயும் இருக்க வேண்டும். இனவிருத்திக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பொலிகிடா உறுதியான உடலமைப்பும், சிறப்பான பொலிவுத் தன்மை உடையதாகவும் இருத்தல் வேண்டும். இச்சிறு மந்தையைக் கொண்டு பெரும் பண்ணையை உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதால், இந்தப் பண்ணைத் துவக்க ஆடுகள் நல்ல வம்சா வழியில் வந்தனவாக இருக்கச் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும்.

3. ஆடுகளுக்குத் தேவையான மேய்ச்சல் தரையும், சுலபமாகக் கிடைக்கக் கூடிய சுத்தமான தண்ணீரும், மிக முக்கியம். மேய்ச்சல் தரையைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதியில் சுத்தமாக மேய்த்து முடிந்த பிறகுதான் அடுத்த பகுதிக்கு மேய்ச்சலுக்கு விட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பகுதியையும் மேய்ந்து மறுபடி முதல் பகுதிக்கு அந்த ஆடுகள் வருவதற்குள் அப்பகுதிகளில் புல் வளர்ந்து மேய்ச்சலுக்குத் தயாராக இருக்கும். 'ரொடேஷனல் கிரேஷிங்' எனப்படும் இம்முறையால் குறைந்த மேய்ச்சல் தரையில் நிறைய ஆடுகள் வளர்க்கவும், நோய் நொடி, குடற் பூச்சி தொந்தரவிலிருந்து ஆடுகளைக்காப்பாற்றவும் முடியும். எந்த நேரமும் ஆடுகளுக்குச் சுத்தமான குடிநீர் தயாராய் இருத்தல் வேண்டும்.

4. ஆடு வளர்ப்பில் பெரிய இழப்பு, தொத்து நோய்களின் மூலமே ஏற்படுகின்றது. அடைப்பான், வண்டிரோடாக்லிமியா, ஆட்டு அம்மை வெக்கை நோய் போன்ற தொத்து நோய்களுக்கு எதிராக அவ்வப்போது உரிய காலத்தில் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இதன்மூலம் இறப்பு விகிதத்தைப் பெருவாரியாகக் குறைக்கலாம்.

5. அடுத்தபடியாக ஆடுகளின் வளர்ச்சியையும், சதைப் பிடிப்பையும் குறைக்கக் கூடியது ஆட்டின் வயிறு, குடல்களில் உள்ள குடற் பூச்சிகளேயாகும். இந்தக் குடற் பூச்சிகளின் பாதிப்பால் எடை குறைந்த ஆடு, எலும்பும் தோலுமாகக் காட்சி அளிக்கும். இப்புழுக்களுக்கெதிராகத் தகுந்த மருந்துகளை 3 மாதத்திற்கு ஒரு முறை தவறாது கொடுத்து வந்தால் இப்புழுக்களால் ஏற்படும் பொருளாதார இழப்புக் குறையும். இதே போன்று ஆடுகளின் மேல் உள்ள உண்ணி, பேன் போன்ற ஒட்டுண்ணிகளையும் சுத்தமாக ஒழிக்க வேண்டும்.




இந்த ஒட்டுண்ணிகள் ஆட்டின் இரத்தத்தை உறிஞ்சுவதுடன் ஆடுகளை நிம்மதியாக மேயவிடாமல் கடித்துக் கொண்டிருப்பதால் ஆடுகள் இளைத்துப்போய் விடும். மேற்படி புழு, ஒட்டுண்ணி இரண்டும் ஆடுகளின் விரோதி எனக் கருதி அவைகளைப் பண்ணையிலிருந்து அறவே ஒழிப்பதுடன், மீண்டும் வந்து விடாதிருக்கக் கண்காணிபபுடன் இருந்து மருந்துகள் கொடுத்து சுற்றுப் புறங்களைத் தூய்மையாகவும் வைத்திருத்தல் மிகவும் அவசியமாகும்

6. ஒவ்வொரு இன ஆடுகளிலும் குறிப்பிட்ட வயதுக்குள் அதன் உடல் நிலை முழு வளர்ச்சி அடைந்துவிடும். அதற்குப் பிறகு அதன் உடம்பில் பாராட்டத் தக்க அளவு எடை உயராது. ஆகையால் முழுமை வளர்ச்சி அடைந்த உடன் அந்த ஆடுகளை இறைச்சிக்காக விற்று விட்டால் நல்ல இலாபம் கிடைப்பதுடன், மேற்கொண்டு தீவனத்துக்காக ஆகும் செலவு மிச்சமாவதுடன், இறைச்சியின் சுவை, தன்மை முதலியன சிறப்பாகவும் ருசியுடனும் இருக்கும். மிகவும் வயதான ஆடுகளின் இறைச்சி கடுமையாகவும், ருசியற்றதாயும் இருக்கும். ஆகையால் இனவிருத்திக்காக உள்ள ஆடுகள் தவிர மற்ற ஆடுகளை முழுமை வளர்ச்சி அடைந்தவுடன் இறைச்சிக்காகப் பயன்படுத்தி விட வேண்டும்.

7. பண்ணையில் உள்ள ஆடுகள் ஆண்டுக்கு இரு முறை தவறாது குட்டி போட்டுக் கொண்டே யிருக்க வேண்டும். அல்வா[...]
இல்லாத ஆடுகளைக் கழித்துவிட்[...]
விட வேண்டும். மெலிந்த ஆ[...]
களையும் நீண்ட நாள் நோயுற்[...]
ஆடுகளையும் பண்ணையில் வைத்[...]
இருக்கக் கூடாது.

8. இதர நோய்களால் பாதி[...]
கப்பட்ட ஆடுகளை அவ்வப்போ[...]
தனிமையாக வைத்திருந்[...]
சிகிச்சை அளித்து, குணமா[...]
வுடன் மந்தையில் சேர்த்து வி[...]
லாம்.

9. ஆட்டு அடைப்புகளி[...]
அவைகளின் இயற்கை விரோ[...]
களான நரி போன்றவை அணுக[...]
மல் பார்த்துக் கொள்ள வேண்[...]
டும்.





# சென்னை நகர்ப்புற மேம்பாட்டிற்கு 2.4 கோடி அமெரிக்க டாலர்கள்!

சென்னைப் பெருநகர்ப் பகுதி களிலுள்ள ஏழை மக்களின் நகர்ப் புறச்சேவைகள் அபிவிருத்திக்கும் மற்றும் வேலைவாய்ப்பு வசதி களுக்கும் வடிவமைக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு உதவிடும் வகையில் உலக பாங்குடன் இணைந்த சர்வ தேச அபிவிருத்திக் கழகம் (IDA) 2.4 கோடி அமெரிக்க டாலர் கடன் உதவி அளிக்கிறது.

தமிழகத்தின் தலைநகரமான சென்னை, இந்தியாவிலுள்ள நான் காவது மிகப் பெரிய நகரமாகும். இந்தப் பெருநகர்ப் பகுதியில் தற்போதைய மக்கள் தொகை 44 இலட்சமாகும். ஆண்டு ஒன்றுக்கு மேலும் 2 இலட்சம் மக்கள் தொகை கூடி வருகிறது. இந்தப் பகுதியில் தனி நபர் ஆண்டு வரு வாய் 95 அமெரிக்க டாலராகும்.

முக்கிய நகர்ப்புறச்சேவையில் இந்த பகுதியில் கடும் பற்றுக் குறைகள் உள்ளன. 5.2 கோடி அமெரிக்க டாலர்கள் திட்டத் தின் முக்கிய நோக்கம்-சென்னை நகரில் தங்குமிடம் வேலைவாய்ப்பு குடிநீர் வினியோகம், கழிவு நீர் வடிகால்கள் மற்றும் போக்கு வரத்து ஆகிய துறைகளில் குறைந்த செலவில் தீர்வு காண் பதும், நகர்ப்புற ஏழை மக்களின் தேவைகளில் முதலீடு செய்வதும் ஆகும். இத்திட்டத்தில் கீழ், மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளாவன:

(1) சுமார் 13,500 வீட்டுமனை களில் வசிக்கும் 74,000 மக்கள் பலன் அடையும் வகையில் வீட்டு மனைகள் மற்றும் சேவைகள் வழங்குதல், இதில் சாலைகள் நிர் மாணித்தல் மற்றும் செப்பனிடு தல், வடிகால்கள் அமைத்தல், தனிப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் வடிகால்களுக் கான இணைப்புகள் அமைத்தல் ஆகியவை அடங்கும்.

(2) 1,26,500 மக்கள் தொகை கொண்ட 85 குடிசைப்பகுதி களில் புதிய மற்றும் சிறந்த சாலைகள், நடைபாதைகள், கழிவு நீர் வடிகால்கள், குடிநீர் வழங்குதல் மற்றும் இதர சமு தாய வசதிகள் அளித்தல்.

(3) சிறுதொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களில் சுமார் 9,000 வேலை வாய்ப்புகளை உரு வாக்கும் வகையில், பணிமனைகள் கருவிகள், பயிற்சி மற்றும் நிதி யுதவி அளித்தல்.

(4) 6 வயதிற்குக் கீழ்ப்பட்ட சுமார் 17,000 குழந்தைகளுக்கும் மற்றும் 7,000 தாய்மார்களுக் கும் சத்துணவு அளிப்பதற்கும், சுகாதாரப் பரிசோதனைகள் மேற் கொள்வதற்குப் தேவையான பயிற்சி அளித்தல், கருவிகள், கட்டடங்கள், தொடர் செலவுகள் ஆகியவற்றை அளித் தல். சுமார் 20,000 பெண் களுக்குச் சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றிய கல்வி போதனைச் செய் தல்.

(5) தற்போதுள்ள குடிநீர் வினியோகம் மற்றும் கழிவுநீர் வடிகால் முறைகளைத் திருத்தம் செய்தல்.

(6) நடைபாதைகள் மற்றும் சைக்கிள்பாதைகளை முக்கியமாகக் கருத்தில் கொண்டு சாலை மற்றும் போக்குவரத்தில் அபிவிருத்திகள். 285 பஸ்களை அப்புறப்படுத்துதல். பஸ் நிற்குமிடங்கள் நிர்மாணித் தல் மற்றும் பயணிகள் தங்கும் நிழற்குடைகள் அமைத்தல்.

(7) சென்னைப் பெருநகர் அபி விருத்தி நிர்வாகத்துக்குத் தொழில் நுட்ப உதவி.



இந்தத் திட்டத்தின் செலவுத் தொகையில் சுமார் 50 சதவிகி தத்துக்கு நிதியுதவி சர்வதேச அபிவிருத்திக் கழகத்தின் கடன் மூலம் வழங்கப்படும். இந்தக் கடன் தொகை 30 ஆண்டுகளுக் குரியதாகும். இதில், சலுகைக் காலம் 10 ஆண்டுகளும் அடங் கும். வட்டி எதுவும் இல்லாதது. ஆனல் சர்வதேச அபிவிருத்திக் கழகத்தின் நிர்வாகச் செலவுத் தொகையைச் சமாளிக்கும் வகை யில் முக்கால் அல்லது ஒரு சத விகிதம் சேவைக் கட்டணம் உண்டு. மாநில அபிவிருத்தி திட் டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற் கான இந்திய அரசாங்கத்தின் நிரந்தர நிபந்தனைகளையொட்டி தமிழ்நாடு அரசாங்கத்திடம் இந்தக் கடன் தொகை வழங்கப் படும்.

## சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு ரூ. 40 இலட்சம்!

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்துக்கு 1976-77ஆம் ஆண்டுக்கெனத் திட்ட உதவித் தொகையாகத் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு, மத்திய அரசின் பொதுப்பணித்துறை மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சகம் ரூ. 40 இலட்சம் கடன்தொகை வழங்கியுள்ளது. இந்தத் தொகையில் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் வடிகால் ஆகியவற்றுக்கு ரூ.15 இலட்சம் செலவிடப்படுகிறது. சாலைகள் தீர்மானத்துக்கு ரூ. 15 இலட்சம் செலவிடப்படுகிறது. மீதமிருக்கும் ரூ. 10 இலட்சம் பெருநகர்ப் பகுதி அபிவிருத்திக் கெனச் செலவிடப்படும்.

இந்தக் கடன்தொகை 25 ஆண்டுக் காலத்துக்குட்பட்ட தாகும். ஆண்டு ஒன்றுக்கு 5½ சதவீதம் வட்டிவிகிதம் கொண்ட தாகும். குடிநீர் வழங்குதல், கழிவுநீர் வடிகால்கள் மற்றும் சாலைகள் நிர்மாணம் ஆகிய பிரிவுகளில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென மத்திய அரசு வழங்கியுள்ள தொகை யைப்போல, குறைந்தபட்சம் இரு மடங்கு மாநில அரசின் சார்பில் வழங்கப்படவேண்டும். பெருநகர்ப்பகுதி அபிவிருத்தி பிரிவில் மத்திய அரசு வழங்கியுள்ள தொகையைப்போல குறைந்த பட்சம் அதே அளவு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை யொட்டி இந்தக் கடன்தொகை வழங்கப்படுகிறது. இந்தக் கடன் தொகைக்கான அதே வட்டி விகிதத்திலேயே இந்தத் தொகை, திட்டத்தை அமல்படுத்தும் ஏஜென்சியிடம் அளிக்கப்





# நகராட்சிகளின் பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாடு!

கடந்த காலத்தில் கவனிப்பாரற்ற நிலைமையில் இருந்துள்ளதால் நகராட்சிகளில் பல பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாக உள்ளன என்பதை அரசு அறிந்துள்ளது. நகராட்சி மன்றங்கள் அப்பகுதிகளில் போதிய கவனம் செலுத்தாததே இதற்கு முக்கிய காரணமாகும். அப்பகுதிகளில் வாழும் மக்கள் நகராட்சிகளுக்கு வரி கொடுக்க முடியாதவர்களாக இருந்ததாலோ அல்லது அவர்களுடைய பகுதியை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தருமாறு நகராட்சி மன்றங்களைத் தூண்டிவிட முடியாத நிலையில் இருந்ததாலோ அந்நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். எனவே, நகராட்சி மன்றங்கள், நியமிக்கப்பட்ட தனி அலுவரின் நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டு வரப்பெற்ற பின், நகராட்சிகளில் உள்ள பிற்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதில் பெருங் கவனம் செலுத்துமாறு அரசு அறிவித்தது.

அரசின் அறிவிப்பிற்கு இணங்க நகராட்சிகளை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள், கவனிப்பாரற்ற நிலைமையில் இருந்து வந்த பிற்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்தனர்; அப்பகுதிகளின் நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அளித்து, ஒருங்கிணைந்த மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காக அப்பகுதிகளை எடுத்துக் கொண்டனர். 197- ஆம் ஆண்டு மார்ச்சு முடிவிற்குள் அப்பகுதிகள் அனைத்தையும் மேம்படுத்திட வேண்டும் என்ற காலவரையறை செய்து கொண்டு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பெற்றன.

முன்பெல்லாம் நகராட்சிகளின் பிற்பட்ட பகுதிகளில் எந்த ஒரு இடத்திலும் திட்டவட்டமான வசதிகளைச் செய்யாமல் எல்லாக் குடிசைப் பகுதிகளிலும் உள்ளவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், இங்கொன்றும் அங்கொன்றுமாகவே





கோவை ஸ்ரீராமபுரம் குடிசைப்பகுதியில் உள்ள 15-வது சந்து அன்றும் இன்றும்.

கோவையில் உள்ள தாமு நகர் குடிசைப் பகுதியின் வடக்குப்புற நுழைவு வாயில். அன்றும் இன்றும்.







கோவையில்உள்ள ஸ்ரீராமபுரம் குடிசைப் பகுதியின் கிழக்குப்புற நுழைவுவாயில் அன்றும் இன்றும்.



வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அவ்வாறில்லாமல் பிற்பட்ட பகுதிகள் அனைத்திலும் சாலைகள், விளக்குகள், குடிநீர் விநியோகம், பொதுக் கழிப்பிடம் போன்ற குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை, ஏறத்தாழ 80 நகராட்சிகளில் மேற்கொள்ளப் பெற்ற ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்களில், 443 பணிகள் ரூபாய் 18.26 இலட்சம் செலவில் முடிவு பெற்றுள்ளன. முடிவு பெற்ற பணிகளில் பின் கண்டவை அடங்கியுள்ளன.

1. கவனிப்பாரற்றுக் கிடங்க பகுதிகளுக்குச் [illegible] சரியான [illegible] அமைத்தல்.

2. விளக்கு அமைத்தல்.

3. சாலைகள் அமைத்தல்.

4. குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்தல்.

பொதுக்கழிப்பிடங்களும் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை பின் கண்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.**

| பணியின் பெயர் | நிறைவேறிய எண்ணிக்கை | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| சாலைகள் | 245 | 10.90 |
| விளக்குகள் | 25 | 0.70 |
| வடிகால் மற்றும் கழிப்பிடங்கள் | 77 | 2.82 |
| குடிநீர் விநியோகம் | 84 | 3.06 |
| இதர இனங்கள் | 12 | 0.78 |
| மொத்தம் | 443 | 18.26 |

மார்ச்சு, 1977 முடிவிற்குள் ரூபாய் 75 இலட்சம் செலவி 657 பணிகள் நிறைவேறும். இ

திட்டங்களை நிறைவேற்றுவதில் நகராட்சிகளுக்கு உதவிட அரசு முடிவு செய்து, நகராட்சிகளுக்கு 50 சத மானியமாக வழங்குவதற்காக ரூபாய் 10 இலட்சம் அனுமதிக்கத் திட்டமிட்டுள்ளது.

சேலம், கோயம்புத்தூர் ஆகிய 2 நகராட்சிகளும் தலா ரூ. 2.5 இலட்சம் செலவில் இத்தகைய திட்டங்களைநிறைவேற்றியுள்ளன. திருச்சி நகராட்சியில் இத்தகைய பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில், நகராட்சிகள் இதுவரை இத்தகைய திட்டங்களை ரூ. 1.13 இலட்சம் செலவில் நிறைவேற்றியுள்ளன.

பிற்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதற்காக நகராட்சிகள் மேற்கொண்டுள்ள திட்டங்களுடன் கூட, அத்தகைய திட்டங்களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நிறைவேற்றிட அரசு ரூபாய் 20 இலட்சம் அனுமதித்துள்ளது.

எனவே, நகராட்சிகளில் உள்ள பிற்பட்ட பகுதிகளும் விரைவில் மேம்பாடு பெற்று, மக்கள் அனைவரும் வசதியாக வாழ வழி, பிறக்கும் என்பது திண்ணம்.



சேலம் நகரில் உள்ள குகை இராமலிங்கசாமி கோ
தெருவில் சாக்கடை ஓடும் காட்சி அன்றும் இன்றும்.



## சேலம் எஃகு ஆலைக்கு அனுமதி!

சேலம் எஃகாலையில் முதல் கட்ட வேலைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வேலைகளுக்கான செலவு மதிப்பீடு 126 கோடியே 81 இலட்சம் ரூபாயாகும். இதில் அந்நியச் செலாவணித் தொகை 29 கோடியே 35 இலட்சம் ரூபாயும் அடங்கும். சேலம் எஃகாலையின் முதல் கட்ட வேலைகள் 54 மாதங்களில் பூர்த்தி செய்யப்படும்; இப்பிரிவு ஆண்டுதோறும் 32 ஆயிரம் டன் சிறப்பு வகை எஃகு உற்பத்தி செய்யத் தக்க திறனளவு கொண்டதாக இருக்கும். சேலம் எஃகு ஆலை முழுவதற்குமான செலவு மதிப்பீடு 500 கோடி ரூபாயாகும். இந்த ஆலையின் மொத்த உற்பத்தித் திறன் 2 இலட்சத்து 20 ஆயிரம் டன்னாகும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சேலம் எஃகு ஆலையின் முதல் கட்ட வேலைகள் இருபிரிவுகளாகச் செயல்படுத்தப்படும். முதல் பிரிவு பூர்த்தி செய்யப்பட்டவுடன், ஆண்டுதோறும் 32 ஆயிரம் டன் 'எவர்சில்வர்' தகடுகளையும், கட்டைகளையும் உற்பத்தி செய்யும். இரண்டாவது பிரிவு பூர்த்தி செய்யப்பட்டவுடன் ஆண்டுதோறும் 70 ஆயிரம் டன் 'எவர்சில்வர்' உற்பத்தி செய்யப்படும்.

சேலம் எஃகு ஆலைக்குத் தேவையான, இரும்புக்கனி பொருள் பெல்லாரி — ஹாஸ்பெட் பகுதிகளிலிருந்து விநியோகிக்கப்படும். இந்த ஆலைக்குத் தேவையான 'கோக்கரியை' பொகாரோ, பிலாய் ஆகிய எஃகு ஆலைகள் வழங்கும்.

## ஓடும் இரயிலில் 'உடனடி' உணவு!

நியாயமான குறைந்த விலையில் தரமுள்ள நல்ல உணவைப் பயணிகளுக்கு அளிப்பதற்கு இரயில்வே நிருவாகம் ஏற்பாடு செய்துள்ளது. நவீன சமையல் கலைத் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவது, நவீன சமையல் கருவிகளைப் பயன்படுத்துவது, இரயில்களிலேயே சமையல் துறைகளை அமைத்து உணவைத் தயாரித்து அளிப்பது ஆகியவற்றின் மூலம், இத்தகைய தரமுள்ள உணவைக் குறைந்த விலையில் இரயில்வே நிருவாகம் பயணிகளுக்கு அளிக்கிறது.

இது தவிர, இரயில்வே நிருவாகம் சமீபத்தில் இரயில்வே நிலையங்களில் குறைந்த விலையில் பொட்டல உணவு விற்பனையைத் துவக்கியுள்ளது. இந்த உணவின் விலை 1 ரூபாயிலிருந்து 1 ரூபாய் 25 காசுக்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உணவு தற்போது 212 இரயில் நிலையங்களில் கிடைக்கிறது.

தென் பிராந்திய இரயில்வேயில், குறைந்த விலை உணவு தயிர்சாதம், சாம்பார் சாதம் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கிறது. இவைகளின் விலை பொட்டலம் ஒன்றுக்கு 55 காசு முதல் 60 காசு ஆகிறது. இந்த வசதியை மேலும் அதிகமான இரயில் நிலையங்களில் ஏற்படுத்த இரயில்வே நிருவாகம் உத்தேசித்துள்ளது.

ஓடிக்கொண்டிருக்கும் இரயில்களிலும், இரயில்வே பிளாட்பாரங்களிலும், பிளேட் உணவு அல்லது 'உடனடி' உணவு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சைவ பிளேட் உணவின் விலை 2 ரூபாய்தான். சைவ 'உடனடி' உணவின் விலை 2 ரூபாய் 50 காசு. ஒவ்வொரு வகை உணவுக்கும் 50 காசு குறைத்து இந்த விலை கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.



# மெட்ரிக் எடை, அளவு முறைகள்

அன்றாட வாழ்க்கையில் எடை, அளவு முறைகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. தரமான பொருள்களைத் தவறு இல்லாத அளவுகளில் வாங்கும் பொழுதுதான் உயர்ந்த வாணிப முறை உருவாகிறது. எனவே எடை, அளவு முறைகளில் தவறுகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது சமுதாய நலனில் அக்கறையுடைய அனைவரது கடமையாகும்!

பண்டைய நாளில் இந்திய வாணிபம் 'பண்டமாற்றம்' முறையில்தான் நடந்து வந்தது. ஆங்காங்கே சில இடங்களில் எடை அளவுகளும் பயன்படுத்தப் பட்டன.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் சுண்டு, ஆழாக்கு, உழக்கு, படி, நாழி, குறுணி, பதக்கு, கோட்டை, வள்ளம் என்ற அளவுகளும், சாண், முழம், தப்படி, கால் (பாதம்), அடி என்ற நீட்டலளவைகளும் பிறகு தூக்கு, பொதி முதலான நிறுத்தலளவைகளும் கையாளப்பட்டு வந்தன.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின் அங்குலம், அடி, கெஜம், ராத்தல் (Pound) முதலானவை புகுத்தப்பட்டது. இவற்றுடன் புழக்கத்தில் இருந்துவந்த எடை, அளவு முறைகளையும் மக்கள் மறக்கவில்லை.

எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநிலத்திலும், மாநிலங்களுக்கிடையேயும் பல்வித எடை, அளவு முறைகளை மக்கள் கையாண்டு வந்தனர். எதையும் அளக்காமல், நிறுக்காமல் மக்கள் வாங்குவதுமில்லை; கொடுப்பதுமில்லை. ஆகவேதான் ''ஆற்றில் போட்டாலும் அளந்து போடு'' என்று சொல்லப்பட்டது.

நம் நாடு விடுதலை அடைந்த பின் இவ்வித வேறுபாடுகளைத் தவிர்த்து நாடு முழுவதும் கணக்கு வழக்கில் ஒரே முறையைக் கையாள வேண்டுமென்ற எண்ணம் உருவாயிற்று. உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தை ஒழுங்கு முறைப்படுத்தும் நோக்கத்துடனும், திட்டக் குழுவின் ஆலோசனைப்படியும், இந்திய அரசு ''மெட்ரிக் முறையை'' பத்து ஆண்டுகளுக்குள் செயல்படுத்த 1949-லேயே தீர்மானித்தது.

அதற்கிணங்க 1956-ல் நாடாளுமன்றத்தில் தசாம்ச முறையில் எடை, அளவு முறைகளைச் செயல்படுத்தச் சட்டம் இயற்றப் பட்டது. அவ்வாறே எல்லா மாநிலங்களிலும் 1958-ஆம் ஆண்டு மத்திய சட்டத்தின் நிலைகளை (Standards) அமல்படுத்த ஆவன செய்தன.

ஆகவே, இந்தியாவின் எப்பகுதியிலும் மெட்ரிக்முறை அல்லாத வேறு எந்த முறையும் கையாளுவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

**ஆதார அலகுகள் (BASIC UNITS):**

| | | |
|---|---|---|
| முகத்தலளவைக்கு | ... | 1 லிட்டர். |
| நீட்டலளவைக்கு | ... | 1 மீட்டர் |
| நிறுத்தல் அளவை | ... | 1 கிலோ கிராம் |
| பரப்பளவு | ... | 1 எக்டேர் |
| கன அளவு | ... | 1 கன மீட்டர் |

மேற்கண்ட ஆதார அலகுகளிலிருந்தே நிறுத்தலுக்கும், நீட்டலுக்கும், முகத்தலுக்கும், பரப்பிற்கும், கனத்திற்கும் கீழ்க் காண்பவை பகுதி அலகுகளாகும். (Derived Units)

| | | |
|---|---|---|
| முகத்தலுக்கு | ... | மில்லி லிட்டர் |
| நீட்டலுக்கு | ... | கிலோ மீட்டர், சென்டி மீட்டர், மற்றும் மில்லி மீட்டர். |
| நிறுத்தலுக்கு | ... | மெட்ரிக் டன், குவிண்டால், கிலோ கிராம். |
| பரப்பளவிற்கு | ... | ஏர், ஹெக்டேர், சதுர கி.மீ. |
| கன அளவிற்கு | ... | கன சென்டி மீட்டர், கன மில்லி மீட்டர். |

மேற்கண்ட முறைகளை வாணிபத்தில் சீராக அமல் நடத்த தமிழ் நாடு முழுவதும் எடை அளவு கட்டுப்பாடு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குக் கீழ் 11 தொழிலாளர்துறை ஆய்வர்களும், 28 தொழிலாளர் துறைத் துணை ஆய்வாளர்களும், 206 தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர்களும் கொண்ட அமைப்பு இயங்கு வருகிறது.

தொழிற்சாலைகளிலும், நகை அங்காடிகளிலும், அடகு பிடிக்கும் நிறுவனங்களிலும் நகைகளின் பேரில் கடன் வழங்கும் வங்கிகளிலும் மற்றும் வெள்ளி, தங்கம், வைரம் போன்றவைகளின் வாணிபத்தில் உபயோகப்படுத்தப்படும் எடையளவுகளும், பெட்ரோல் பம்புகளும் ஆண்டுக்கு ஒருமுறையும், மற்ற வியாபாரத்தில் உபயோகப்படுத்தப்படும் எடை அளவுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் சம்பந்தப்பட்ட உதவித் தொழிலாளர் துறை ஆய்வாளரிடம் சரிபார்த்து முத்திரையிட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

இதுபோன்றே எடை, அளவுகளைத் தயாரிப்பவர்களும், விற்பவரும் தங்களுடைய புதிய எடை அளவுகளை உரிய ஆய்வாளரிடம் முத்திரையிட்ட பின்னரே விற்க வேண்டும். சென்னை எடை அளவு கட்டுப்பாடு அலுவலரிடமிருந்து உரிமம் பெறுமல் யாரும் எடை, அளவைகளைத் தயாரிக்கவோ, விற்கவோ, பழுது பார்க்கவோ கூடாது. அவ்வாறு செய்தல் சட்டப்படித் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இப்படி உரிய காலத்தில் முத்திரையிடத் தவறியவர்களின் மீதும், தரமற்ற (மெட்ரிக் முறையல்லாத) எடை அளவும், குறைவான அளவுடைய அளவைகள், எடைக் கற்கள் முதலானவற்றையும், அரசு முத்திரையில்லாத எடை அளவைகளையும், வாணிபத்தில் உபயோகிப்பவர்கள் மீதும் ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுத்து தண்டனைக்குள்ளாக்குவர்.

'வாணிபம் செய்வார்க்கு வாணிபம் பேணி, பிறவும் தம்போல் கொளல்' என்ற பொய்யா மொழிக்கிணங்க வாணிபத்தில் விற்போரும், வாங்குவோரும் ''சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்'' கொடுப்பதும், குறையாது, கொள்வதும் மிகைப்படாது, வாணிபம் நடத்த வேண்டும். அவ்வாறு செய்தால், நாட்டு மக்களும் நலமுடன் வாழ்வர்: நாட்டின் வாணிபமும் தழைத்தோங்கும்.

வாணிகர்கள் தரமற்ற, தவறுன எடை அளவுகளை உபயோகித்து பண்டங்களின் எடை அல்லது அளவைக் குறைத்து விற்று, பொதுமக்கள் விலை இறக்கத்திஞல் ஏற்படக்கூடிய பயனை நுகர முடியாமல் செய்யாதிருக்க, தொழிலாளர் துறையைச் சார்ந்த எடை அளவுப் பிரிவு அலுவலர்கள் அக்கறையோடும், விழிப்புடனும் பணியாற்றி வருகின்றனர். நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளும், விதிக்கப்பட்ட அபராதத்தொகை முதலிய விவரங்களும் வருமாறு:

| ஆண்டு | | தொடரப்பட்ட வழக்குகள் | நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதம். (ரூபாய்) |
|---|---|---|---|
| 1973 | ... | 2,167 | 52,017.00 |
| 1974 | ... | 7,640 | 1,87,130.00 |
| 1975 | ... | 16,077 | 4,17,390.00 |
| 1976 (நவம்பர் முடிய) | | 15,424 | 7,41,165.00 |

வணிகர்கள் முத்திரையிடாமல் தவறுன எடை அளவுகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், பண்டங்களைக் குறைத்து விற்பதைத் தடுக்கவும், எடை அளவு கட்டுப்பாடு அலுவலரும், மற்றும் ஆய்வாளர்களும், முறையான ஆய்வுகள் மேற்கொள்வதுடன் அவ்வப்போது திடீர் ஆய்வுகளும், கூட்டு ஆய்வும் மேற்கொண்டு தவறு செய்வோர்கள் மீது நடவடிக்கை எடுக்கிருர்கள். தமிழ் நாடு முழுவதும் இவ்வாண்டில் செப்டம்பர் மாதம் முடிய 1,734 கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 48,321 தவறுன எடையளவைகள் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளன.

**விற்பனையாளர்கள் கவனிக்க:**

1. தங்களுடைய எடையளவுகளைக் குறிப்பிட்ட காலத்தில், சம்பந்தப்பட்ட எடை, அளவு மற்றும் ஆய்வாளரிடம் காட்டி முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும். பரிசீலனைச் சான்றிதழை நிறுவனத்தில் நன்ருகத் தெரியுமிடத்தில் பார்வைக்கு வைக்க வேண்டும்.

2. தராசு, கொக்கியில் தொங்க விடப்பட வேண்டும்.

3. தானே அளவு காட்டும் தராசு (Self Indicating Scale) போன்றவை, பண்டங்களின் நிறுவையை, வாங்குவோர் கவனிப்பதற்கு வசதியான நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும்.

4. பாலைக் குறைத்து அளக்காதீர்கள். நுரையைக் கூட்டிப் பாலை அளப்பது சட்டப்படி குற்றமாகும்.

5. பண்டத்தின் பாலிதின் பைகளிலோ, தகர டின்களிலோ, அட்டைப் பெட்டிகளிலோ அடைத்து விற்பனை செய்தால் அவற்றின் மீதோ, அதனுடன் இணைக்கப்பட்ட சீட்டின் மீதோ, உள்ளிருக்கும் பொருளின் நிகர எடை/அளவு, நிரப்பப்பட்ட தேதி, அதன் சில்லறை விற்பனை விலை, உற்பத்தியாளர்/நிரப்பியவர் (Packer) முகவரி ஆகியவற்றைத் தெளிவாகக் குறித்திடல் வேண்டும்.

6. பைகளில் அடைக்கப்பட்ட சிமெண்ட் போன்றவற்றை விற்பனை செய்கையில், வாங்குவோர் விரும்பிஞல் நிறுத்திக் காட்ட வேண்டும்.

7. ஆயத்த ஆடைகளின் (Ready made) அளவு 'மெட்ரிக் முறையில்' அதாவது நீளம் 100 செண்டிமீட்டர், 102 செண்டி மீட்டர், 104 செண்டி மீட்டர் என்றுதான் குறிக்கப்பட வேண்டும். அதேபோல் சேலைகளின் அளவை 5 மீட்டர், 5.5 மீட்டர், 6.5 மீட்டர், 7.25 மீட்டர் என்றும் குறிப்பிட வேண்டும்.

8. சுரமானிகளின் (Clinical thermometers) அளவுகள் செண்டிகிரேடு அல்லது Celsius முறையில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

9. மர வியாபாரிகள் மரத்தை கன மீட்டர், கன செண்டி மீட்டர் போன்ற அளவுகளில் தான் விற்பனை செய்தல் வேண்டும். கன அடி அல்லது குழிக் கணக்கில் விற்பனை செய்வது முறையல்ல. சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

10. அரிசி, பருப்பு போன்ற தானியங்களும், தவிடு, புண்ணக்கு போன்ற மாட்டுத் தீவனங்களும், எடையில்தான் விற்பனை செய்யப்பட வேண்டும்.



தானிய அளவைகள் (Dry measures) 1—1—1974 முதல் புழக்கத்தினின்று அகற்றப்பட்டு விட்டது.

11. பால் விற்பனை முகத்தலளவை முறையிலேயே செய்யப்பட வேண்டும். அதற்குரிய ஊற்று அளவைகளையே (Pouring type measure) உபயோகிக்க வேண்டும்.

12. எண்ணெய் வியாபாரத்தில் 1 கிலோ கிராமிற்குக் குறைவான அளவு விற்பனை செய்வதற்கு மட்டுமே மேற்படி ஊற்று அளவைகளை உபயோகிக்கலாம். ஒரு கிலோகிராமிற்கு மேற்பட்ட அளவுகளுக்கு நிறுத்தே வழங்கப்பட வேண்டும்.

13. நகை வியாபாரத்திற்கென 'B' வகுப்பு தராசுகளும், அரிசி, பருப்பு, காபி, டீ, புகையிலை, பருத்தி, உலர்ந்த பழங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளுக்கும், எண்ணெய் முதலியவைகளுக்கும் 'C' வகுப்பு தராசுகளும், விறகு, அடுப்புக்கரி, பழைய இரும்பு, காய்கறி இவற்றிற்கென 'D' வகுப்பு தராசுகளும் உபயோகிக்கப்பட வேண்டும் என சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்தந்த தராசுகளையே உபயோகிக்க வேண்டும்.

**தையல்காரர்கள் கவனிக்க:**

தைக்க வருவோரின் அளவை அடி, அங்குலத்தில் குறிக்கக் கூடாது. மெட்ரிக்முறையில் அதாவது மீட்டர், செண்டிமீட்டரிலேதான் குறிக்க வேண்டும். மேலும் இரு பக்கமும் குறிக்கப்பட்டிருக்கும் அங்குலம்/செண்டி மீட்டர் (Dualgraduation) அளவை எக்காரணம் கொண்டும் உபயோகிக்கக்கூடாது. அவ்வாறு உபயோகித்தால் சட்டப்படி குற்றமாகும்.

**வாங்குவோர் கவனிக்க:**

1. எடையளவுகள், சரியான படி, உரிய ஆய்வாளர்களால் முத்திரையிடப்பட்டு, சான்றிதழ் பெற்று கடையில் வைக்கப்பட்டுள்ளதா என்று பார்ப்பது நல்லது.

2. தராசு, கொக்கியில் அல்லது ஸ்டாண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றதா என்று கவனிக்கவும், அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் வியாபாரி தராசுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியாது.

3. தாரசுகளின் சாய்வுகளைப் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். பண்டங்களை நிறுக்கும் போது தராசைக் கவனியுங்கள்.

4. அரிசி, பருப்பு போன்ற தானியங்களையும், உப்பையும் எடைக்கணக்கில் வாங்குங்கள்; தற்போது தானிய அளவைகள் புழக்கத்திலில்லை.

5. பாலை லிட்டர், மில்லி லிட்டர் என்ற கணக்கிலேயே வாங்குங்கள். இவை பால் வியாபாரத்திற்கென்றே பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டவை. பால் வாங்கும்போது நுரையுடன் சேர்த்து வாங்காதீர்கள்.

6. பாலீதின் பைகளிலோ, தகர டப்பாக்களிலோ, அட்டைப் பெட்டிகளிலோ அடைத்து வைக்



பட்ட பண்டங்களை வாங்கும்
ாது, அவற்றின்மேல் உள்ளி
க்கும் பொருளின் நிகர எடை/
ாவு, நிரப்பப்பட்ட தேதி, சில்
ற விற்பனை விலை, உற்பத்தி
ளர்/நிரப்பியவர் பெயர்,
வரி இவற்றின் விவரம் குறிக்
பட்டுள்ளனவா எனக் கவ
த்துப் பின்னர் வாங்குங்கள்,
ப்பா பெரியதாக இருக்கிறதே
ாறு எண்ணி ஏமாறுதீர்கள்.

7. தேவையான மரத்தை,
மீட்டர், கனசெண்டிமீட்டர்
க்கிலேயே வாங்குங்கள். கன
, அல்லது குழிக்கணக்கில்
ட்காதீர்கள்.

8. சமையலுக்காக 'காஸ்'
as) வாங்கும்போது, சிலிண்ட
மீது 'காஸ்' அளவு குறிக்கப்
டிருக்கிறதா, முத்திரை
டயாதிருக்கிறதா என்று கவ
த்து வாங்குங்கள்.

9. பழைய பத்திரிகைகளை
க்கும்போது வாங்குபவர்
ன்று பெற்ற முத்திரையிட்ட
ாசு, எடைகளை உபயோகிக்
ரா எனக் கவனியுங்கள்.
ாலில் கட்டிய தராசினால் சுலப
க ஏமாற்றலாம். ஆதலால்
சட்டப்படி செல்லாது.

10. வீடு கட்டப் போகிறீர்
ா? எக்டேர், ஏர், சதுர
டர் என்ற கணக்கில் நிலம்
ங்குங்கள். ஏக்கர், சதுர அடி,
ர கெஜம் இவை இன்றைய
டத்திற்குப் புறம்பானவை.

ஒரு பண்டத்தின் விலை, அதன்
த்தை மட்டும் பொறுத்தல்ல;
ாவையும் பொறுத்தது.
ாடுத்த பணத்திற்கு, குறைந்த
அளவு பண்டம் கிடைத்தால், ஒரு விதத்தில் அப்பண்டத்திற்கு நீங்கள் கூடுதலான விலையே கொடுக்கிறீர்கள் என்றாகும். ஆகவே, பணத்திற்கேற்ற அளவு பண்டத்தைக் கொள்வது என்ற நிலை சிறந்ததல்லவா? எனவே, இந்த வகையில் எடை அளவுத் துறை உங்களுக்கு உதவி புரிகிறது.





### வேண்டுகோள் !

பொதுமக்கள் விழிப்போடு இருக்க வேண்டும். தங்களுக்கு வழங்கப்படும் பண்டங்களின் எடை, அளவுகளில் ஐயம் இருக்குமானாலும், தவறான எடைகள், நிறுவைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று கருதினாலும், எடை அளவுக் கட்டுப்பாட்டு "அலுவலர், சேப்பாக்கம், சென்னை-5" என்ற முகவரிக்குத் தெரிவிக்கலாம் அல்லது அருகில் உள்ள உதவித் தொழிலாளர் ஆய்வாளரிடம் தெரிவிக்கலாம்.

தரமான பொருள்களைத் தருவது மட்டும் வியாபாரத்தின் இலட்சியமாக இருக்கக் கூடாது. தவறு இல்லாத எடையும், அளவும் கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையை மக்கள் மனத்தில் வளர்ப்பதும் வியாபாரிகளின் நோக்கமாக இருக்க வேண்டும். எனவே சட்டத்தை மதியுங்கள், அரசாங்கத்தோடு ஒத்துழையுங்கள்; பொது மக்களுக்கு உதவுங்கள் என்று வியாபாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


## தமிழரசு
## சந்தா விவரம்

தமிழரசு இதழில் பல பயனுள்ள செய்திகள் வெளியிடப்படுகின்றன. தமிழரசு தமிழ் இதழ் மாதம் இரு முறையும், ஆங்கில இதழ் மாதம ஒரு முறையும் வெளி வருகின்றன.

சந்தா விவரம் பின்வருமாறு :

| தமிழ் இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 12.00 |
| 6 மாதச் சந்தா .... | 6.00 |

| ஆங்கில இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 6.00 |
| 6 மாதச் சந்தா | — |

சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது டிராப்ட் மூலமாக

Circulation Manager,
Tamil Arasu Office,
Govt. Estate,
Madras—600 002

என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

[குறிப்பு: சிலர் தவறுதலாக செக் அல்லது டிராப்டில் General Administrative Manager என்று குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.]






# கால்நடைத் தீவனப் பயிர்கள்


— பி. எஸ். தேஜோமூர்த்தி, பி.எஸ்.சி(வே).,
தீவன அபிவிருத்தி அலுவலர்.


இந்தியாவில் நூற்றுக்குச் சுமார் 90 பேருக்கு விவசாயம் தான் முக்கியத் தொழிலாக இருக்கின்றது. அப்படிப்பட்ட முக்கிய விவசாயத் தொழிலுக்கு மிக அவசியம் கால்நடைகள் ஆகும். நம் மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 24 மில்லியன் ஆகும். மாட்டின் எண்ணிக்கை மட்டும் 13.6 மில்லியன் ஆகும். மற்றவை செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் குதிரைகள் முதலியவை. நிலம் உழுதல், பயிர் விளைத்தல், தண்ணீர் இறைத்தல், களை எடுத்தல், வண்டி இழுத்தல் முதலிய எல்லா வேலைகளுக்கும் கால்நடைகள் அவசியமாக இருப்பதால் குடியானவன் தன்னுடைய தேவைக்கு வேண்டிய கால்நடைகளை வளர்த்தால் தான் அதிக இலாபம் அடையலாம்.

கால்நடைகளினால், பயிர் வளர்ச்சிக்கு அவசியமான எரு கிடைக்கிறது. அதிக எரு சேகரம் ஆவதால், விலை கொடுத்து இரசாயன உரங்களைப் பெருமளவில் வாங்க அவசியம் ஏற்படாது. கால்நடைகளினின்று பெறும் மற்றும் ஒரு பொருள் பால். பால் ஒரு சிறந்த பூரண உணவு ஆகும். இது வளரும் குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும், மற்றும் தாய்மார்களுக்கும் மிகவும் அவசியம். ஒவ்வொரு மனிதனும் தினசரி உட்கொள்ள வேண்டிய பாலின் அளவு 250 கிராம். ஆனால் தற்போது கிடைக்கும் பாலின் அளவு 63 கிராம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்பற்றாக் குறையை ஓரளவு ஈடுசெய்யவும், கால்நடைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும் நம் மாநில, கால்நடைப் பராமரிப்புத் துறை அநேக திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பால் அதிகப்படுத்தும் முயற்சியும், போதிய தீவனம் அளிப்பதும் ஒன்றுபட்டு இயங்கினாலன்றி கால்நடைகளின் மேம்பாடு போதிய ஊதியம் அளிக்காது. கால்நடைகளின் உழைப்புத் திறனை அதிகமாக்கவும் தீவனம் அத்தியாவசியமாகும்.

தீவனம் என்று சொன்னவுடன் நாம் உடனே நினைப்பது வைக்கோல், சோளத்தட்டு, கம்புத் தட்டு, ராகித்தட்டு முதலியவை

கால்நடைகளுககு ஏற்றது கம்பு—நேப்பியர் புல் !





கால்நடைகள் கொழுகொழுவென்று வளர,
கொடுத்திடுவீர் குதிரை மசாலா!

ஆகும். ஆனால் மேலே கூறியவை களின் உற்பத்தி தற்போது உள்ள கால்நடைப் பெருக்கத்தின் தேவைக்குப் பாதி அளவுக்கே போதுமானதாக உள்ளது. இதுவே, கால்நடைகள் நலிந்துள்ளதற்குக் காரணம் ஆகும். ஒவ்வொரு மாட்டுக்கும் கொடுக்க வேண்டிய தீவனத்தின் அளவு, அதன் எடையையும், செய்யும் வேலையையும் பொறுத்துள்ளது. **பொதுவாக ஒவ்வொரு மாட்டுக்கும் குறைந்தது அதன் எடையில் 2 சத அளவு தீவனமாக அளித்தல் அவசியம்.**

கால்நடைகளின் தேக வளர்ச்சிக்கும், அவை உடல் குன்றுது வலிமை பெற்று விளங்கவும், தேவையான புரதம், கொழுப்பு, தாதுப்பொருட்கள் முதலியவற்றோடு மிகவும் அத்தியாவசியமான உயிர்ச்சத்துக்களும் மற்றும் பல சத்துப்பொருட்களும் பச்சைப் புல்லினின்று கிடைக்கின்றது. பசுக்களையும் அவற்றின் கன்றுகளையும் நல்ல உடல் நிலையில் வைத்திருக்கவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும், அவற்றின் தினசரி உணவில் பச்சைப்புல் ஓர் முக்கிய பாகமாக அமையவேண்டும்.

நீர்ப்பாசன வசதியோ அல்லது கழிவு நீரை உபயோகிக்கும் வசதியோ இருப்பின் 'கினியாபுல்', 'நேபியர் புல், எருமைப்புல், 'கம்பு-நேப்பியர்' ஒட்டுப்புல், 'குதிரை மசாலா' போன்றவைகளைப் பயிர் செய்யலாம். இப்புல் திணுசுகள் நிலத்தில் பல ஆண்டுகள் நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தவை. ஆண்டில் 8-லிருந்து 10 தடவை அறுவடை செய்யலாம். இவை ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 40-லிருந்து 100 மெட்ரிக் டன் வரை பச்சைப் புல் மகசூலைத் தருகின்றன. சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகராட்சி மன்றங்கள் நகரக் கழிவு நீரை உபயோகித்து இலாபமான முறையில் இப்புற்களை ''கழிவுநீர்ப் பண்ணை'' களில் பயிர்செய்து வருகின்றன. நம் மாநிலத்தில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில் கழிவுநீர் பண்ணைகள் பல்வேறு நகரசபைகளால் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 70,000 டன் பசும்புல் நகர்ப்புறங்களிலுள்ள பசுக்களுக்கு, குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகிறது. கறவைப் பசுக்களுக்குச் சிறந்த தீவனமாக உதவும் இப்பசும் புற்களைப் பயிர் செய்வதெற்கென்று ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் நீர்ப்பாசன வசதி உள்ள 10 சென்டு நிலத்தை ஒதுக்கி வைக்கலாம். இதன் மூலம் நாள்தோறும் 10 முதல் 15 கிலோ வீதம் ஆண்டு முழுவதும் ஒரு பசுவிற்குப் போதிய அளவு பசுந்தீனி பெறலாம். வீட்டுப் புழக்கடைத் தோட்டங்களில்கூட ஒன்று அல்லது இரண்டு சென்டு நிலத்தில் கழிவு நீரைப்பாய்ச்சி புல் வளர்த்தால் நாள்தோறும் மாடுகளுக்கு ஒரு பிடி அளவு பசுந்தீனியாவது கொடுக்கலாம்.

பல ஆண்டு நிலைத்து வளரும் புற்களில், தற்போது அதிக அளவில் பயிரிடும்படிச் சொல்லுப்படுவது **'என். பி. 21'** என்ற கம்பு-நேப்பியர் ஒட்டுப்புல். இதைக் கரணைகளாகவும், கிளைக்கன்றுகளாகவும் நட்டுப் பயிராக்கலாம் சாதாரணமாக 75 செ. மீ. (2.5அடி) இடைவெளியிலும் வரிசைக்கு வரிசை 2.5 அடி இடைவெளியிலும் நட, சுமார் 10,000 கரணைகள் ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும். நடுவதற்கு முன் தொழு உரம் குறைந்தது 50 வண்டி இட்டு, நன்றாக உழுது, கத்தரி, மிளகாய் நடுவது போன்று வரப்புகளில் நடவேண்டும். 10-லிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மேலே கூறிய தொழு உரத்துடன் 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 50 கிலோ யூரியாவை ஓரிரு முறையில் இட்டால் தகுந்த அளவு புல் கிடைக்கும். சரியாகப் பராமரிக்கப்பட்டால், 40 நாட்களுக்கு ஒருமுறை அறுத்து, தீவனமாகக் கால்நடைகளுக்குக் கொடுக்கலாம். ஒரு ஏக்கரில் கிடைக்கும் மகசூல் சுமார் 70 டன்னிலிருந்து 100 டன் வரை இருக்கும். இதே போன்று கினியாபுல், நேபியர்புல் ஆகியவற்றையும் பயிரிடலாம்; ஆனால் கிடைக்கும் புல்லின் அளவு 35-லிருந்து 50 டன் வரைதான் இருக்கும்.



மேய்ச்சல் நிலங்களில் கொழுக்கட்டைப் புல் பயிரிடுவீர் !

ஒருசில இடங்களில் தண்ணீர் கசகசப்பு அதிகம் உள்ள நிலப்பரப்பு காணப்படலாம். இத்தகைய நிலங்கள் எருமைப்புல் பயிரிட ஏற்றதாகும்.

பல ஆண்டு நிலைத்து வளரும் புற்களைப் பயிரிடுவதோடு மக்காச் சோளம் போன்ற தீவனப் பயிர்களை, முக்கியமாக, கோடை மாதங்களில் நீர்ப்பாசன வசதியின் கீழ் நெருங்க விதைத்து, பயிரிட்டு, பூட்டை வாங்கும் தருணத்தில் அறுத்து மாடுகளுக்கு தீவனமாகப் போடலாம். மூன்று மாத காலத்தில் சுமார் 7-லிருந்து 10 மெட்ரிக் டன் வரை மகசூல் தரும். இவைகளுடன் புரதச் சத்து நிறைந்த 'குதிரை மசாலா,' மொச்சை, கொத்தவரை போன்றவைகளையும் பயிரிட்டு மாட்டுத் தீவனமாகக் கொடுக்கலாம். வீட்டுத் தோட்டங்களில் சுவரின் ஓரமாக அகத்தியை வரிசையாக விதைத்து, அதிலிருந்து கிடைக்கும் தழையையும், தீவனமாகக் கொடுக்கலாம். இவ்வாறு பயிரிடுவதால் அகத்தி பயிரிடுவதற்கான தனியிடம் ஒதுக்க அவசியமில்லை.

கால்நடைகள்; செழிப்பாக இருப்பதற்கு இன்றியமையாதது நல்ல மேய்ச்சல்; **குதிரைக்கு எப்படி தேய்ப்பு அவசியமோ, அதே மாதிரி மாட்டுக்கு மேய்ப்பு அவசியம்.** மேய்ச்சல் காடு ஒரு நாட்டின் சீதோஷ்ண நிலையை ஒட்டியதாய் இருக்கும். முக்கியமாக சூரிய வெப்பத்தையும், மழையின் அளவையும் பொறுத்ததாய் மேய்ச்சல் காட்டில் வளரும் புல்லின் தன்மை இருக்கும். மேய்ச்சல் நிலங்களுக்கு ஏற்ற புல் வகைகள். கொழுக்கட்டைப்புல் (Cenchrus ciliaris ), ஊசிப் புல் (Heteropogon contorturs), ஆஸ்திரேலியா புல் ( Panicum antidotale),'புளுப்பல்' ( Cenchrus glaucus, ), வெண்ணெய்ப்புல் (Sehima nervosum) எண்டிரோபோலான், குளோரிஸ் ( Chloris gayana ) முதலியவை. இவற்றோடு பயிறு இனத் தாவரங்கள் சேர்த்து வளர்ப்பின் மிகவும் சத்துள்ளதாக அமையும்.





மேற்கூறிய முறையில், மாநிலக் கால்நடைகளைப் பராமரித்து வந்தால், நல்ல முன்னேற்றமடைவதோடு உற்பத்தியையும் பெருக்கும் என்பதில் ஐயமில்லை.

# 'புற்று நோய்'—
## ஒரு புள்ளி விவரம்

புற்றுநோய், மனிதர்களைக் கொல்லும் தவிர்க்க முடியாத நோய் அல்ல. இந்த நோயைக் காட்டிலும் சிகிச்சை. செய்து. கொள்வதற்குச் செய்யும் காலதாமதம், பயம் அறியாமை ஆகியவற்றின் காரணமாகவே பல மரணங்கள் ஏற்படுகின்றன!

**குணப்படுத்தலாம்!**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 10 நோயாளிகளில் மூன்று, நான்கு நோயாளிகளை நவீன சிகிச்சை முறைகளைக் கொண்டு குணப் படுத்த முடியும் என்று உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள புற்றுநோய் மருந்தகங்களி லிருந்து பெறப்பட்டுள்ள தகவல் கூறுகிறது. கருப்பை, மார்பகம், தோல், வாய், சிறுநீரகம், மலக்குடல் ஆகிய பகுதிகளில் ஏற்படும் புற்று நோயை ஆரம்பக் கட்டத்திலேயே குணப் படுத்த முடியும். பெரும்பாலும் எல்லாப் புற்றுநோய்களுமே கட்டுப்படுத்தக்கூடிய வைகளே!

**ஐந்து இலட்சம் புதிய நோயாளிகள்**

ஆண்டு தோறும் உலகத்தில் சராசரியாக 60 இலட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப் படுகின்றனர். அதே நேரத்தில் இந்தியாவில் ஆண்டுதோறும் 5 இலட்சம் பேர் (1972-73-ஆம் ஆண்டுக் கணக்கின்படி) புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பம்பாய் நகரம் தவிர மற்ற. இடங்களில் புற்றுநோய் குறைவாக உள்ளது.

**வாய்ப் புற்று நோய்**

புற்றுநோயைக் கட்டுப்படுத்த 5-வது திட்டத்தில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



இதில், நான்கு வட்டார நிலையங்களின் வளர்ச்சிக்கென ரூ. 2 கோடி ஒதுக்கிடப்பட் டுள்ளது. 'கோபால்ட்' யூனிட்டுகளுக்கென ரூ. 1 கோடி ஒதுக்கிடப்பட்டுள்ளது. திட்ட மொத்தத் தொகையில், ரூ. 2.15 கோடி திட் டத்தின் கடைசி இரு ஆண்டுகளில் (1977-78, 78-79) செலவு செய்யப்படவிருக்கிறது.

இந்தியாவில் புற்றுநோயால் பாதிக்கப் படும் ஆண்களில் மூன்றில் ஒருவருக்கு வாயில் புற்றுநோய் வருகிறது. புற்றுநோயில்-ஐந்தில் நான்கு பங்கு நோய்-மனிதன் வாழும் சுற்றுப் புறச் சூழ்நிலையில் உள்ள நச்சுப் பொருட்கள் காரணமாக ஏற்படுகின்றன.

**புகை-குடிக்காதீர்!**

புகைத்தல், நச்சுத்தன்மையான 'ஆஸ் பெஸ்டாஸ்', சில தொழிற்சாலை இரசாயனப் பொருட்கள் ஆகியவைகளின் காரணமாக நுரையீரல் புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய் ஆகியவை ஏற்படுவதாக திட்டவட்டமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

புற்றுநோயைக் கட்டுப்படுத்த அறுவைச் சிகிச்சையே மிகவும் சிறந்த முறை என்று கருதப்படுகிறது. கதிர்வீச்சு அறுவைச் சிகிச்சை முறை வெற்றிகரமாகப் பயன்படுத் தப்பட்டு வருகிறது.

**ஏழு எச்சரிக்கை அறிகுறிகள்!**

புற்றுநோய் பற்றிய 7 எச்சரிக்கை அறி குறிகள் இதோ:

1. மார்பகத்திலோ அல்லது உடலின் எந்த ஒரு பகுதியிலோ ஒரு வீக்கம்.

2. உடம்பின் எந்த ஒரு பகுதியிலிருந் தும் எதிர்பாராமல் இரத்தம் கசிதல்.

3. உடனடியாக ஆறுமல் இருக்கும் காயம்.

4. தீராத தொண்டை கரகரப்பு.

5. இருமல்.

6. பொதுவான உணவுப் பழக்கவழக் கங்களில் மாற்றம்,

7. மச்சம், மரு, பாலுண்ணி தோற்றத் தில் மாற்றம்.

இவையெல்லாம் 'புற்றுநோய்க்கான அடையாளங்கள்' அல்ல! இருந்தாலும் இது சம்பந்தமாக டாக்டர்களை அணுகி, என்ன நோய் எனக் கண்டறிவது அவசியம்.

ஆண்டுக்கு ஒரு முறை உடல் பரிசோதனை செய்து கொள்வதும், மேலே கூறப்பட்ட 7 எச்சரிக்கை அறிகுறிகளைத் தெரிந்து வைத்தி ருப்பதும் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பாக இருக்க சிறந்த வழியாகும்.

# பயிர்களுக்கு நுண்ணூட்டங்கள்

பயிர்கள் நன்கு செழித்து ளர, நல்ல பலன் கொடுக்க பரூட்டகங்களான தழைச்சத்து ) மணிச்சத்து (P) சாம்பல் த்து (K) ஆகியவையுடன் நுண் ஊட்டகங்கள் என்று சொல்லப் டும் துத்தநாகம் ( Zinc ) தாமி ம் ( Copper ), இரும்பு ( Iron ), ாங்கனீசு ( Manganese ) வெண் ாரம் ( Boron ), மற்றும் மாலிப் னம் ( Molybdenum ) என்பவை தேவைப்படுகின்றன. பெரூட்ட ங்களை அளிக்க அம்மோனியம் ல்பேட், சூப்பர், பாஸ்பேட், பொட்டாஷ் முதலிய உரங்களைப் போடுகிறோம். இந்நுண்ணூட்ட ங்களை துத்தநாக சல்பேட், மயில்துத்தம், இரும்பு சல்பேட், அன்னபேதி) மாங்கனீசு சல் பேட், வெண்காரம் மற்றும் மாலிப்டினம் சல்பேட்டுகளாகப் போட வேண்டும்.

**நுண்ணூட்டகங்களின் தேவை**

பேரூட்டகங்களை 100 முதல் 150 கிலோ அளவில் போடும் போது, நுண்ணூட்டகங்களை 5 முதல் 25 கிலோ வரைதான் போடலாம். அதாவது நுண் ணூட்டகங்கள் பயிர்களுக்குச் சிறிதளவே தேவைப்படுகின்றன. நுண்ணூட்டகங்கள் போடும் அளவு, பயிர்களின் தேவையைப் பொறுத்து, ஒரே பயிரில் இரகங் களைப் பொறுத்து, மண்ணின் தன்மையைப் பொறுத்து, பருவ கால நிலையைப் பொறுத்து, மாறு படும். ஆகையால், பேரூட்டகங் களைப் போல் அல்லாமல் பயிர்த் தேவையைப் பொறுத்து ''சமச் சீர் அளவில்'' போடாவிட்டால் நுண்ணூட்டகங்களினால் நன்மை யைக் காட்டிலும், தீமையே ஏற் படும். அதாவது 3 கிலோ தேவைப் படும் பொழுது 2 கிலோ போட் டால் பலன் கிடைக்காது. அதே சமயத்தில் 5 கிலோ போட்டால் அதனால் பயிர்களுக்குக் கெடுதல் ஏற்படும். நாளாவட்டத்தில் மண் ணின் தன்மை மாறுபட்டுவிடும்.

ஆகையால் நுண்ணூட்டகங்கள் போடும் முன் எந்த நுண்ணூட்ட கம் பயிருக்குத் தேவை, எந்த அளவில் தேவை என்று நிச்சய மாகத் தெரிந்தாலொழிய அதைப் போடுவதால் நன்மை ஏற்படாது. சில சமயங்களில் தீமை ஏற்பட லாம்.



தழைச்சத்து, சாம்பல் சத்துப் பற்றாக்குறையின் அறிகுறி.

**நுண்ணூட்டகங்களின் அவசியம்**

இவ்வளவு நாளும் நாம் இந் நுண்ணூட்டகங்களை நமக்குத் தெரியாமலேயே போட்டு வந் தோம். அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் போட்டபோது அவற்றிலேயே இந்நுண்ணூட்டகங்கள் ''கலப் பாக' சிறிதளவு இருந்து வந்தன. அந்த அளவே போதுமானதாக இருந்தது. ஆனால் தற்போது கிடைக்கும் உர வகைகளில் இவை இருப்பதில்லை. காரணம் மாறுபட்ட உர உற்பத்தி முறை கள்.

இரண்டாவதாக நாம் இப் பொழுது உயர் விளைச்சல் நெல் மற்றும் தானிய வகைகளைப் பயிரிட ஆரம்பித்திருக்கிறோம். அவற்றிற்கு அதிக அளவு உரமிட வேண்டியிருக்கிறது. அதனால் பேரூட்டக, நுண்ணூட்டக விகிதம் மாறுபட்டு வருகிறது. அதாவது நுண்ணூட்டகத் தேவை அதிகரித்து விடுகிறது.

மூன்றாவதாக தற்போது இடை விடாது தொடர்ச்சியாகப் பயிர் விளைச்சல் முறையை மேற் கொண்டிருக்கிறோம். ஒரு போகப் பயிர் விளைச்சலுக்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று போகப் பயிர் விளைவிக்கப்படுகிறது. இதனால் மண்ணிலிருந்து எல்லா ஊட்டச் சத்துக்களும் வெகுவேக மாக அதிக அளவில் நீக்கப்படு கின்றன. அவற்றை ஈடு செய்யும் அளவிற்கு மீண்டும் அவை மண் ணில் போடப்படுவதில்லை.

இக்காரணங்களால் பயிர்கள் ''நுண்ணூட்டகப் பசியினால்'' வாடுகின்றன. இத்தேவை அதிக மாய் இருப்பதால் பயிர்கள் நல்ல பலன் கொடுப்பதில்லை. சில சமயங்களில் பயிர்கள் அழிந்தும் விடுகின்றன.

**நுண்ணூட்டகத் தேவையை அறி தல்**

மண்ணின் இந்நுண்ணூட்டகக் குறைபாட்டினை இருமுறைகளில் கண்டறியலாம். 1. நுண்ணூட் டகக் குறைபாடு அறிகுறிகள் மூலம். 2. மண் பரிசோதனைமூலம்.

சில வகைப் பயிர்கள் நுண் ணூட்டகத் தேவையினைச் சிற்சில குறைவு அறிகுறிகளால் (Deficiency symptoms ) காட்டுகின் றன. சில பயிர்கள் அவற்றைக் காட்டாமலேயே மறைவுப் பசி யினால் வாடுகின்றன. இக்குறை யினால் ஏற்படும் ''பயிர் தவிப்பி னால்'' பயிர்கள் நல்ல பலனைக் கொடுப்பதில்லை. முக்கியமாக சில உயர் விளைச்சல் பயிர் வகைகள் நல்ல பலன் தராததற்கு ஒரு காரணம் இந்நுண்ணூட்டகக் குறைவே.

இக்குறைவு அறிகுறிகளை நாப் தெரிந்திருந்தால் அவற்றிலிருந்தே

நாம் தேவையை அறிந்து தகுந்த நுண்ணூட்டகத்தைத் தேவையான அளவில் தகுந்த முறையில் தக்க தருணத்தில் போடலாம்.

## குறைவு அறிகுறிகள்

### மண் பரிசோதனை :

நுண்ணூட்டகங்களின் குறைபாடுகளைத் திட்டவட்டமாகக் கண்டறிய வேண்டுமானால் மண் பரிசோதனையே சிறந்தது ஆகும். மண் பரிசோதனைக்கு, 'மண் மாதிரி' எடுத்து அனுப்பும் முறையே இதற்கும் பொருந்தும். ஆனால் மண்வெட்டி போன்ற உலோகத்திலான கருவிகளை மாதிரிக்கு எடுத்து அனுப்பும் மண்ணில் படாதவாறு மரத்தினாலான அல்லது அலுமினியத்தினாலான கருவிகளினால் எடுத்தால் இரும்புச் சத்தைச் சரிவரக் கணக்கிட முடியும். மண்மாதிரியை எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

''பேராசிரியர் மற்றும் தலைவர்
மண்ணியல், மற்றும்
வேளாண்மை வேதியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-3.''

நுண்ணூட்டகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அது பற்றி அகில இந்திய அடிப்படையில் ஆராய்ச்சி நடந்து வருகிறது. கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் தமிழ்நாட்டில் நடத்தப் பெற்ற ஆராய்ச்சிகளின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



மாலிப்டினம் பற்றாக்குறையால் காலிப்ளவரில் ஏற்படும் மாற்றம்.



மணிச்சத்துப் பற்றாக்குறையினால் உருளைக்கிழங்குச் செடியில் ஏற்படும் மாற்றம்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மண் மாதிரி எடுத்து நுண்ணூட்டக அளவினைக் கண்டறிந்து, குறிப்பிட்ட நுண்ணூட்டகக் குறைபாடுள்ள மண் இருக்கும் இடங்களும், எவ்வளவு சதவீதம் குறைவு என்றும் அறியப்பட்டுள்ளன.

மேற்கண்ட அட்டவணையிலிருந்து மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் எவ்வகை நுண்ணூட்டகம் குறைந்திருக்கிறது என அறியலாம். அதற்குத் தகுந்தாற் போல் தேவையான (முறைபாடு உள்ள) நுண்ணூட்டகத்தை மட்டும் தகுந்த அளவில் போடலாம். உங்கள் வயலின் மண் பரிசோதனை செய்து குறைவுகளுக்குத் தகுந்தவாறு உரமிடுவது சிறந்தது. முன்பே கூறியபடி நுண்ணூட்டக உரமிடுதலில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அவையாவன:

1. குறைவு அறிகுறிகளுக்கு ஏற்ப அல்லது மண்பரிசோதனை மூலம் தெரிந்த குறைவுள்ள நுண்ணூட்டகத்தை மட்டும் தேவையான அளவு, தகுந்த முறையில் போடவேண்டும்.

2. தேவையில்லாத நுண்ணூட்டகங்களையோ, தேவையான நுண்ணூட்டகங்களை அதிக அளவிலோ போடக்கூடாது.

3. தற்போது வெளியிடங்களில் கிடைக்கும் பல நுண்ணூட்டகக் கலப்பு உரங்களைத் தவிர்ப்பது நல்லது. அதனால் சில சமயங்களில் நன்மையும், சில சமயங்களில் தீமையும் ஏற்படும்.

எந்த வகை நுண்ணூட்டகம் அல்லது நுண்ணூட்டகக் கலவை, எந்த மண்ணிற்கு, எவ்வகைப் பயிருக்கு, எப்போது தேவை என்பது போன்ற சந்தேகங்களுக்கு கோவையில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை அணுகவும். தகுந்த சிபாரிசு இல்லாமல் நுண்ணூட்டகங்களைப் போடுவதால் பயிருக்கு நன்மை ஏற்படாது. நாளாவட்டத்தில் மண் பாதிக்கப்படலாம்.

தகவல்: மண் இயல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3.

வெளியீடு: தகவல் தொடர்பு
நிலயம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3.



# பட்டதாரி இளைஞரின் வெற்றிகரமான பால்பண்ணை!

சேலம் மாவட்டத்தில் உள்ள புதூர் அக்ரஹாரம் கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் திரு பி.ஜி. சுகுமாரன் வயது 26. முதல் வகுப்பு இரசாயன பட்டதாரி. இந்த கிராமத்திலிருந்து பட்டதாரியாகியிருக்கும் முதல் வாலிபர், இவர். 1972-ம் ஆண்டில் இவர் தன்னுடைய பட்டப் படிப்பை முடித்தார். எம்.எஸ்.சி. பட்ட மேற்படிப்பு வகுப்பில் இவருக்கு இடம் கிடைக்காமல் போனது. ஆகவே வேலைக்கு வழி தேடினார். 3 ஆண்டுகள் முயற்சி செய்தும் அவருக்கு வெற்றி கிட்டவில்லை. இதனால் சுய வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ள அவர் முடிவெடுத்தார். இது விஷயமாக தன்னுடைய பெற்றோர்களைச் சமாதானப்படுத்துவது அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் முடிவில் ஒரு வழியாக அவர் தன்னுடைய பெற்றோர்களைச் சமாதானப்படுத்தினார். தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் விளம்பரம் அவருக்கு உதவியது.

### பயிற்சியும், கடனும் பெற்றார் !

மாதவரம் பால்பண்ணை குடியிருப்பில் மூன்றுமாத காலம் அவர் பயிற்சி பெற்றார். வெற்றிகரமாக பயிற்சியை முடித்த பின், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலம் அளிக்கப்பட்ட உத்தரவாதத்தைத் தொடர்ந்து, சேலம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலிருந்து ரூ. 18,500 கடன் தொகைப் பெற்றார். அந்தத் தொகையைக் கொண்டு 5 பசுக்களை வாங்கினார். 1976 ஜூலை மாதம் இந்தக் கடன் தொகையை அவர் பெற்றார். இந்தத்தொகை வாங்கிய சில மாதங்களுக்குள்ளாகவே அதே பாங்கியிலிருந்து மேலும் ரூ. 6,000 கடன் தொகைப் பெற்று, மேலும் 2 பசுக்களை வாங்கினார்.

சேலத்தில் உள்ள தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் சங்கத்திற்கு அவர் இப்பொழுது நாள்தோறும் 60 லிட்டர் பால் வழங்கி வருகிறார்.

### பெற்றோர் போற்றுகின்றனர் !

சேலம் மாவட்டத்தில் இந்த மாதிரி பால்பண்ணையை அமைத்திருக்கும் முதல் பட்டதாரி இளைஞர் இவரே. அவருடைய பெற்றோர்களோ இன்றைக்குத் தன்னுடைய மகனின் புதிய முயற்சியை—அவருடைய புத்திசாலித்தனத்தைக்—கண்டு பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்; மெச்சி வருகின்றனர். தங்களுடைய சேமிப்புத் தொகையிலிருந்து அவர்கள் தன் மகனுக்கு, நவீன கால்நடை கொட்டகை அமைத்துக் கொள்ள ரூ. 4,000 வழங்கியுள்ளனர். அது மட்டுமல்ல, செயல்மூலதனமாக ரூ. 1,000-மும் அளித்துள்ளனர். இந்த செயல்மூலதனத்திற்குப் பாங்கு வசதியை இளைஞர் சுகுமாரன் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

தமிழ்நாடு பால் வள நிறுவனத்தால் ஒரு லிட்டர் பாலுக்கு 10 பைசா வீதம் வழங்கப்படும் ஊக்கச்சலுகைத் தொகையை அவர் பெற்று வருகிறார்.

கால்நடைகளுக்குத் தேவையான புல்லைப் பற்றி அவருக்கு பிரச்னையே இல்லை. காரணம் தன்னுடைய சொந்த நிலத்திலிருந்து புல்லை அவர் பெறுகிறார்.

### இருவருக்கு வேலை அளித்துள்ளார் !

அவர் தன்னுடைய பால் பண்ணையில் இப்போது இருவரை வேலைக்கு அமர்த்தியுள்ளார். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா ரூ. 150 வீதம் சம்பளம் கொடுத்து வருகிறார். இன்னும் ஐந்தாண்டு காலத்தில் குறைந்த பட்சம் 100 கால்நடைகளைக் கொண்டு தன்னுடைய பால் பண்ணையை ஒரு பெரிய பால் பண்ணையாக மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு அவருடைய சராசரி வருவாய் ரூ. 450. தன்னுடைய மகனின் வெற்றிகரமான முயற்சியைக் கண்டு பெற்ற மனம் பெருமிதமும், பூரிப்பும் அடைந்திருக்கிறது. படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கும் ஏராளமான இளைஞர்கள் இன்றைக்கு, அவருடைய ஆலோசனையைப் பெற்று வருகின்றார்கள். அவர் பாதையைப் பின்பற்றி வருகின்றார்கள்.

# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர்
மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ்.
பற்பல டிசைன்கள். அசல் சரிகை.
அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர்
வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல்
பட்டுச் சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம் கைத்தறி
நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள்,
சின்னாளப்பட்டி சேலைகள்.






# இரயிலின் கதை

**1853** ஏப்ரல் 16-ஆம் நாள் நம் நாட்டின் வரலாற்றில் ஒரு பொன்னான நாள்! அன்று பலரும் வியந்து கை கொட்டி மகிழ, பிற்பகல் 3.30 மணிக்கு நம் நாட்டில் முதல் தடவையாக இரயில் போக்குவரத்து ஏற்பட்டது. பம்பாயைச் சேர்ந்த போர் பந்தரிலிருந்து தாணாவுக்கு 35 கிலோ மீட்டர் தூரத்துக்கு அந்த இரயில் ஓட்டிப் பார்க்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியிலிருந்து இப்போது 124 ஆண்டுகளை இந்திய இரயில்வேக்கள் தாண்டிவிட்டன.

60 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்துக்கு இரயில் பாதைகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் 11 ஆயிரம் இரயில்கள் செல்கின்றன. இவை பயணம் செய்யும் தூரம் 12 இலட்சம் கிலோ மீட்டர்; அதாவது சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தைப் போல மூன்றரை மடங்கு! ஆசியாவிலேயே பெரிய ரெயில்வே அமைப்பாகவும், உலகத்திலேயே நான்காவது பெரிய இரயில்வே அமைப்பாகவும் இந்திய இரயில்வேக்கள் விளங்குகின்றன.

இந்திய இரயில்வேக்கள் வளர்ந்த சுவை மிக்க வரலாற்றை நினைவூட்டும் வகையில் 'இரயில் போக்குவரத்துக் காட்சிக்கூடம்' திறக்கப்படுகிறது. இப்படி ஒரு காட்சிக் கூடத்தை அமைக்க வேண்டுமென்று 1962லேயே ஒரு எண்ணம் இருந்தது. 1970-ல் அந்தக் கருத்து, செயல் வடிவம் பெற்றது. புது தில்லியிலுள்ள சாணக்கியபுரியில் காட்சிக் கூடத்துக்கான அடிக்கல் 1971-ஆம் ஆண்டு நாட்டப்பட்டது.

நம் நாட்டில் நிறுவப்படுகிற இத்தகைய முதலாவது காட்சிக் கூடம் இதுவே. இதன் நிலப் பரப்பு 10 ஏக்கர். இது அழகான வடிவமைப்புடன் கூடிய எட்டுப் பட்டைக் கட்டடம்; அதாவது எண் கோண வடிவத்தில் கவர்ச்சி கரமான முறையில் கூரைத் தகடுகளுடன் கட்டி முடிக்கப்பட் டிருக்கிறது. இதில் ஆறு காட்சி மண்டபங்களும், இரயில்வே நிலை யத்தின் சூழ்நிலையை அப்படியே நம் கண்முன் நிறுத்தும் திறந்த வெளிப் பகுதியும் இருக்கும். இந்தக் காட்சிக் கூடத்தின் அமைப்பு வேலையில் முதல் கட்டம் முடிந்து விட்டது.

ஆராய்ச்சி மாணவர்களுக்கு இந்தக் காட்சிக் கூடம் ஒரு வற் ருத சுரங்கம், இரயில்வே ஆர்வம் மிக்கவர்களுக்கு இது கடந்த காலச் சம்பவங்களை நினைவூட்டும். மாணவர்கள் இதை வந்து பார்த் தால் 3, 4 தலைமுறைகளில் ஏற் பட்ட மாறுதல்களை ஓரிடத்தி லேயே கண்டு மகிழலாம்! ஒரு நூல் நிலையமும், ஆவணக் காப்பக மும், இந்த காட்சிக் கூடத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் இடம் பெறும்.

காட்சிப் பொருட்களுக்கு எல் லாம் அவற்றின் பழைய அசல் வண்ணங்கள் பூசப்பட்டிருக்கின் றன. அந்தக் காலத்தில் தனித் தனி கம்பெனிகளும் சில சுதேசி சமஸ்தானங்களும் இரயில்வேக் களை நடத்தின. அவற்றின் அடை யாளச் சின்னங்கள் அப்படியே பேணப்படுகின்றன. நில அமைப் புக்கும், சுற்றுப்புறச் சூழ்நிலைக் கும் பொருந்துமாறு திட்டமிடப் பட்டு காட்சிப் பொருட்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே உள்ள காட்சிப் பொருட்களில் முக்கியமானவை என்று பின்வருவனவற்றைச் சொல்லலாம்:

1. 122 ஆண்டுகளாகியும் வேலை செய்து கொண்டிருக்கிற ஃபேரி குயின் என்ற எஞ்ஜின்.

2. பாட்டியாலா சமஸ்தானத்து மோனோ இரயில்.

3. 234 டன் எடையுள்ள கர்ரெட் எஞ்ஜின்.

4. பெட்ரோல் எஞ்ஜின் பொருத்தப்பட்ட நாலு சக்கர இரயில் கார்.

5. டார்ஜிலிங்—இமயமலை இரயில்வேயில் ஓடிய குட்டி எஞ்ஜின்.

6. ஏழாவது எட்வர்டு அரசர் வேல்ஸ் இளவரசர் ஆக இருந்த போது 1876ல் பயணம் செய்த நாலு சக்கர சலூன்.

7. வைஸ்ராய்கள் இரயில் பயணத்தின்போது உபயோகித்த விருந்து மண்டப சலூன்.

8. தங்கமும், தந்தமும் பதித்து மிகச் சிறந்த தேக்கு மரத்தில் 1899-ல் செய்யப்பட்ட மைசூர் மகாராஜாவின் சலூன் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

# ரயில் பயணிகளுக்கு ரம்மியமான வசதிகள்!



இரயில் வண்டிகளிலும், பிளாட்பாரங்களிலும் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் சிறந்த முறையில் அளிக்க, மத்திய இரயில்வே அமைச்சகம் அண்மையில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1976 அக்டோபர் முதல், தூங்கும் வசதி கொண்ட இரயில் வண்டிக்கான பயணச் சீட்டுகள் உள்ள இரண்டாம் வகுப்புப் பயணிகள், மேல்வகுப்பு ஓய்வு அறைகளில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### அடிப்படை வசதிகள்

புதிய இரயில் நிலையங்களில், தூங்கும் வசதி கொண்ட இரயில் வண்டிக்கான பயணச்சீட்டுக்கள் உள்ள பயணிகள் தவிர இதர பயணிகளுக்கென பெஞ்சுகள், குளியலறை, கழிவு அறை வசதிகள் இவற்றைக்கொண்ட ஓய்வு இடங்கள் நேரிடையாக அமைக்கப்படும். பலவகை பயண வகுப்புகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கும் நோக்கத்துடன், மின்விசிறிகள், விளக்குகள், பாதுகாப்புச் சாதனங்கள் இவை தவிர கழுவும் தொட்டிகள், போதுமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் ஆகியவை இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டிகளில் அமைக்கப்படும். ஒவ்வொரு இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டியிலுமுள்ள கழிவு அறைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் இரயில்வே அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

அதிக எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய பயணிகள் இரயில் பெட்டிகளை அறிமுகப்படுத்துவது பற்றியும் இரயில்வே அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

### படுக்கை வசதி

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் எல்லா 'பிராட்கேஜ்' இரயில் பெட்டிகளும், பயணிகள் ஒரு இரயில் பெட்டியிலிருந்து மற்றொன்றுக்கு எளிதில் செல்லக்கூடிய விதத்தில் இடைவழிகளைக் கொண்டதாகவே தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கல்வியறிவற்ற சாதாரண மனிதனும் எளிதில் இரயில் வண்டியை அடையாளம் கண்டு கொள்ள உதவும் விதத்தில் கூடுதலாக, இரயில் வண்டிகளுக்குத் தனிப்பட்ட வர்ணம் தீட்டுவதற்கான திட்டத்தையும் இரயில்வே அறிமுகம் செய்துள்ளது.

இரயில்வேக்கள் தற்போது, இரண்டாம் வகுப்பு பயணிகளுக்குப் படுக்கைகளையும் விநியோகம் செய்கின்றன. ஜெயந்தி ஜனதா துரித இரயில் வண்டிகளில் பயணம் செய்பவர்களுக்கு, ஒரு இரவுக்கு 1 ரூபாய் 50 காசு கட்டணத்தில் படுக்கைகள் அளிக்கப்படுகின்றன.

### குளிர்நீர் வசதி

எல்லா மண்டல இரயில்வேக்களிலும், குடிநீர் விநியோகத்திற்கென சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லா முக்கிய இரயில் நிலையங்களிலும் குளிர்நீர் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இரயில் நிலையத்திலும், இரயில் பெட்டிகளிலிருந்து இறங்கிச் செல்ல முடியாத பயணிகளுக்கு, இரயில் பெட்டிக்கருகிலேயே சென்று குடிநீரை விநியோகிக்க, தள்ளு வண்டிகளை உடைய குடிநீர் விநியோகிப்பாளர்கள் இருக்கிறார்கள்.

கோடைகாலங்களில், இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டிகளில் பயணம் செய்பவர்களுக்கு குடிநீரை விநியோகிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோடைகாலச் சிறப்பு இரயில்களில், இரண்டாம் வகுப்புப் பயணிகளுக்குக் குடிநீர் பற்றாக்குறை, மின்விசிறிகள் இயங்காமல் இருத்தல், இரயில்கள் தாமதமாகச் செல்லுதல் போன்ற சௌகரியக் குறைவுகள் ஏற்படாதவண்ணம் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஓய்வு அறைகள், ஓய்வுக் கூடங்கள், இவைகள் உட்பட இரயில் நிலையங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வதிலும், அவற்றைப் பராமரிப்பதிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### ஒரே வாரத்தில்...!

பயணிகளுக்காக இவ்வளவு வசதிகள் செய்யப்பட்டிருந்தும் பலர் பொறுப்பற்ற தன்மையில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வதைப் பார்க்கிறோம். இவ்வாறு பயணம் செய்த 34,729 பேர்கள் ஒரே வாரத்தில் பிடிபட்டுள்ளனர்!

பயணிகளின் நலன் கருதி, மின் விசிறிகள் அதிக அளவில் இரயில் பெட்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன.





மணிக்கு 200 கிலோ மீட்டர் வேகத்தில் செல்வதற்கு ஏற்ற இரயில் பெட்டிகளை, 'ஐ.சி.எப்.' நிறுவனம் உருவாக்குகிறது.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் உள்ள மூன்று அடுக்கு தூங்குமிட வசதி.



## குமரிமுனை முதல் காஷ்மீர் வரை!

இந்தியாவின் தென்கோடியிலிருக்கும் குமரிமுனையிலிருந்து வடகோடியிலிருக்கும் காஷ்மீர் வரை நேரடி இரயில் விட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கன்னியாகுமரிக்கு இரயில் பாதை போடும் வேலைகள் நடந்து வருகின்றன. விரைவில் இவ்வேலைகள் பூர்த்தியடையும். இதன் பிறகு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், கர்நாடகா எக்ஸ்பிரஸ் ஆகியவை கன்னியாகுமரி வரை நீடிக்கப்படும். அதன் பிறகு இந்த இரயில் வெகு விரைவில் காஷ்மீர் வரை நீடிக்கப்பட்டு, கன்னியாகுமரி-காஷ்மீர் இரயிலாக மாற்றப்படும்.



இரயில் பயணிகள் சாப்பிடுவதற்குரிய குளிர்சாதன வசதியுடன் கூடிய-இரயில்பெட்டி.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் உள்ள, குளிர்ந்த தண்ணீர் அளிக்கும் கருவி.

இவ்வாண்டு ஜனவரி மாதம் 30-ந் தேதியோடு முடிவடைந்த வாரத்தில், எல்லா மண்டல இரயில்வேக்களைச் சேர்ந்த இரயில் வண்டிகளில், நடத்தப்பட்ட 1,399 தீவிர சோதனைகளில், பயணச் சீட்டில்லாத முறையற்ற பயணச் சீட்டுடன் பயணம் செய்த 34,729 நபர்கள் பிடிபட்டுள்ளனர்.

## சிறைத் தண்டனை !

இது தவிர, கட்டணம் செலுத்தாமல் மூட்டை முடிச்சுகளை எடுத்துச் சென்ற 5,226 நபர்களும் பிடிபட்டனர். இவர்களிடமிருந்து இரயில்வேக்குச் சேர வேண்டிய ஒரு இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. அதே வாரத்தில் 5,226 பேர் மீது வழக்குகள் தொடரப்பட்டு, இதில் 3,112 பேர் சிறைத் தண்டனை பெற்றனர்.

இரயில்வேயின் தலைமை வர்த்தகக் கண்காணிப்பாளர் உட்பட இரயில்வேயின் உயர் அதிகாரிகளின் தனிப்பட்ட கண்காணிப்பின் கீழ் இச்சோதனைகள் நடத்தப்பட்டன. பிடிபட்ட நபர்களிடமிருந்து இரயில்வேக்கு வேண்டிய 4 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது.

மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து 10—ஆம் தேதி முடிய நடைபெற்ற முனைப்பு டிக்கெட் பரிசோதனை இயக்கத்தின் காரணமாக முறையற்ற வகையில் பயணம் செய்த 9,622 பேர்கள் பிடிக்கப்பட்டனர். அதன்மூலம் 1,28,223 ரூபாய் வசூலிக்கப்பட்டது.

அலுப்பின்றி பயணம் செய்ய சொகுசான இருக்கைகள் !





# நீரற்ற நிலமும்— சேலம் மாவட்டமும்

—திரு. வே. கருப்பன், ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்.

சேலம் மாவட்டம், குறிஞ்சி நிலப் பாகுபாடு கொண்டது. மேடும் பள்ளமும், மலையும் குன்றுகளுமாகச் சரியான நிரந்தரமான பாசன வசதியோ, ஊற்றுப் பெருக்கமோ இல்லாத நிலமாகும். கிணற்றுப் பாசனத்தையே பெருமளவில் நம்பியிருக்கும் இங்குள்ள சிறுநில வேளாண் மக்கள் கிடைக்கின்ற வருமானத்தை, மேற்கொண்டு புதிய கிணறுகள் வெட்டுதல், இருக்கின்ற கிணற்றை ஆழப்படுத்துதல் ஆகிய பணிக்காகச் செலவிடுவதுடன், அதிக நிலப்பரப்பு பாசன வசதி பெறவேண்டும், அதில் நெல், கரும்பு முதலான பயிர்களை விளைவிப்பதிலே தான் தனது வேளாண்மை வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது என்ற ஆர்வத்தில், சக்திக்கு மீறிக்கடன் வாங்கியும் அல்லலுறுகின்றனர்!

"இறைக்கின்ற கிணறுதான் சுரக்கும்" என்கின்ற மெய்மொழி இவர்கள் வாழ்வில் பொய் மொழியாகின்றது. நீர்த்தாரைகள் வற்றிய இடத்தில் எவ்வளவு தான் அடியாழம் வெட்டினாலும், நீர் இறைத்தாலும் பயன் இல்லை. இந்த மறுக்க முடியாத உண்மையை அவர்கள் கண்ட தோல்விகள் மெய்ப்பித்திருக்கின்றன. தேவையில்லாத ஆர்வமும், தோல்வியைத் தழுவும் முயற்சியும் இனியாவது நம்மை விட்டு விலகட்டும்!

சேலம் மாவட்டத்து வேளாண்மை முறையில் சில அவசியமான மாற்றங்களைச் செய்யாவிட்டால் எதிர்காலத்தில் மனிதனின் தவிர்க்க முடியாத தேவையான குடி தண்ணீர்கூட கிடைப்பது அரிதாகி விடும். ஆனால் அப்படி நம் சுயக்கட்டுப்பாட்டுடன் சில தேவையான மாறுதல்கள் செய்வதன் மூலம் நமது வருவாயும் பெருகும், எதிர்காலமும் வளமுள்ளதாக இருக்கும். விவேகமும், மன உறுதியும் மட்டும் இருந்தால் நாம் எதிர்கொள்ளவிருக்கின்ற பேரபாயத்தை, திட்டவட்டமான, கடுமையான சில தடுப்பு நடவடிக்கைகளால் வெல்ல முடியும் என்பது எனது திண்ணமான எண்ணம் ஆகும்.

**காலாகாலத்தில் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறினால், நடவடிக்கை எடுத்தும் பயனற்றுப் போகும். அந்தத் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி, கீழே குறிப்பிடுகிறேன் :**

1. அதிகமான நீர் பாய்ச்சுதலை வேண்டிடும் பயிர்களான நெல், கரும்பு, மஞ்சள், வாழை முதலானவற்றைப் பயிரிடும் நிலப்பரப்பினைக் குறைத்து, இவ்வளவு ஏக்கருக்கு மேல் மேற்படி பயிர்களைப் பயிரிடக்கூடாது என வரையறுக்க வேண்டும். நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு நிலக்கடலை, பருத்தி, குச்சி போன்ற பயிர்களுக்குச் செலவிடும் தண்ணீர் போல் மூன்று மடங்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டியிருக்கிறது.

2. குறைவான பாசன வசதி வேண்டிடும் பயிர்களான நிலக்கடலை, உழவர்களின் விடிவெள்ளியெனத் திகழும் மரவள்ளி, பருத்தி ஆகியவற்றைப் பயிர் செய்யும் நிலப்பரப்பினை விரிவாக்கவேண்டும். இதன் மூலம் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது. வருவாயும் பெருகும். கணக்குப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 100 நாட்களில் கடலை மூலம் 1200 ரூபாய் நிகர வருவாய் கிடைக்கும். நெல் மூலம் 400லிருந்து 600 ரூபாய்க்கு மேல் கிடைக்காது. நாட்களும் 120-லிருந்து 150 நாட்கள் ஆகும். கரும்பும், வாழையும் ஓராண்டு கழித்து ரூபாய் 2,000லிருந்து 3,000 தரும். ஆகவே, இம்மாற்றத்தால் விவசாய மக்களின் வாழ்க்கைத்தரம் உயருமே தவிர, தாழ்ந்து போகாது.

3. வேளாண் பெரு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் கால்நடைச் செல்வங்களான பால்பசு, எருதுகள், ஆடுகள் ஆகியவற்றை வளர்க்கும் மனப்பான்மையினை வளர்த்து பொருளாதாரச் சீர்குலைவினின்றும் அவர்களைக் காக்க வேண்டும்.

4. இருக்கின்ற கிணற்றுக்கு அடியாழம் வெட்டுதலைத் தடுக்க வேண்டும். எனவே, எதிர்காலத்தில் பெய்கின்ற மழையை நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. ஊற்று வாய்ப்புகளும், நிச்சயமான நிலத்தடி நீர்ப் பெருக்கங்களும் எதிர்பார்க்க முடியாதவைகள் ஆகும்.

5. இருக்கின்ற குன்றுவான் நீரையும் இறைத்துவிட்டு கிணற்றை வறண்ட நிலைக்கு ஆளாக்காமல் இருக்க, புதிதாகப் பம்புசெட் வைக்க மின் இணைப்புகள் வழங்காமலும், ஆற்றுப் படுகைகளிலிருந்து நீரேற்றுப் பாசனத்திற்காக நீர் இறைப்பதையும் அறவே தடுத்து நிறுத்த வேண்டும்.

6. குடிநீர் விநியோகத்தில் சிக்கனத்தையும், சரியான ஒழுங்கு முறையும் கடைப்பிடித்து குடிநீர் ஒரு துளிகூட வீணாகாமல் பாதுகாத்து குடிநீர் வழங்கு முறைகளைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7. தண்ணீரை அதிகமாகச் செலவிட்டு வரும் ஜவ்வரிசி தயாரிப்பு ஆலைகள் புதிதாகத் துவக்குவதை நிறுத்த வேண்டும். தண்ணீரை அதிகமாகச் செலவிடும் வேறு எவ்வகையான புதிய தொழிற்சாலைக்கும் இம்மாவட்டத்தில் துவக்கும் அனுமதி வழங்கக்கூடாது.

8. இருக்கின்ற கிணறுகளுக்கே ஊற்று வாய்ப்பு குறைவாக இருக்கின்றபோது மேலும் புதிய

கிணறுகள் வெட்டினால் நீரூற்று வாய்ப்புகள் அறவே அற்றுப் போய்விடும். எனவே, புதிதாக கிணறு வெட்டுதலையும் தடை செய்ய வேண்டும்.

9. வன நிலங்களை ஒப்படை செய்வதை நிறுத்த வேண்டும்.

**ஒரு செயலைத் தடுத்து நிறுத்துவதால் மட்டும் ஒரு நிலைமை சீரடைந்து விடாது. அதை முறைப் படுத்தவும் வேண்டும். அந்தச் சீராக்கும் வழிமுறைகளாவன :**

1. ஒவ்வொரு ஜவ்வரிசி உற்பத்தி ஆலைக்கும் கரும்புப் பயிருக்குப் பயிர் செய்யும் நிலப்பரப்பு வரையறுப்பது போல, மரவள்ளி பயிரிடும் நிலப்பரப்பு வரையறுக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு ஆண்டில் 8 அல்லது 10 மாதங்கள்தான் மேற்படி ஆலை இயங்க வேண்டுமென்று சீராக்க வேண்டும். உற்பத்தியான ஜவ்வரிசியை விற்பனை செய்ய ஒரு மையமான விற்பனை நிலையம் அமைத்து ஜவ்வரிசி விற்பனை விலைகளில் தொய்வு ஏற்படுவதைத் தடுத்து முறைப்படுத்திட வேண்டும்.

2. நீரை மிகுதியாக உறிஞ்சிடும் பயிர்களையே தொடர்ந்து, மாற்றி மாற்றிப் பயிரிடாமல் மாற்றுப் பயிர் இட்டங்களை விவசாயிகள் ஏற்க வேண்டும்.

3. ஒவ்வொரு விவசாய அளவிலும் நீர்ப்பாசனத்திற்குரிய நிலப்பரப்பினை வரையறுக்க வேண்டும். பாசன வாய்ப்பில் சாதகமான, வளப்பமான சூழ்நிலைகள் ஏற்படும்போது சிறப்பு அனுமதி பெற்று மேற்படி வரையறுக்கப்பட்ட பாசன நிலப்பரப்பினை அதிகமாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கலாம்.

4. தண்ணீர் பற்றுக்குறையுள்ள நாட்களில் ஒவ்வொருவருக்கும் சாதாரண சூழ்நிலையில் 5-லிருந்து 10 காலன் வழங்கும் ஏற்பாட்டினை, பற்றுக்குறைக்காலங்களில் 50 சதவீதம் குறைத்தும் மிகவும் மோசமான பற்றுக்குறை நேரங்களில் அந்த அளவு நீரையும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கும் முறையினையும் பின்பற்ற வேண்டும்.

5. தற்போது நமது மாவட்டத்திலுள்ள 1800 ஆழக்குழாய்க் கிணறுகளையும் தொடர்ந்து இடைவிடாது பயன்படுத்துவதை நிறுத்தியும், தொடர்ச்சியாகக் குடிநீர் பெற்றிட அவ்வப்போது இடைவெளிவிட்டுப் பயன்படுத்தியும், குடிநீர் வீணாவதைத் தடுத்தும், தவறாகவும், தேவையின்றியும் பயன்படுத்துவதை நிறுத்தியும் இருக்கின்ற குடிநீர் வாய்ப்பினை நீண்ட காலம் பயன்படுத்திக்கொள்ள நாமே சுயக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும்.

## சிறந்த மாணவனுக்குப் பரிசு !

ஒவ்வொரு வகுப்பிலும் நல்ல நடத்தையுள்ள மாணவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கும் புதியதொரு திட்டத்தைத் தமிழக அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :

"மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் வளர, சிறந்த மாணவர்களைக் கௌரவிக்க வேண்டும். ஆகவே, எல்லாப் பள்ளிகளிலும் ஒவ்வொரு வகுப்பிலும் நல்ல நடத்தையுள்ள சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசு அளிக்க வேண்டும்.

"இந்தக் கல்வி ஆண்டிலிருந்து சிறந்த மாணவருக்குப் பரிசு அளிக்கும் முறை அமலுக்கு வருகிறது.

"நேர்மை, ஒழுங்காகப் பாடம் படித்தல், பள்ளிக்கு நேரம் தவறாமல் வருதல், பணிவு, ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு, பள்ளிக்கு நாள் தவறாமல் வருதல் ஆகியவற்றின் அடிப்படையில் சிறந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்."

6. புதிதாகக் குடிநீர்க் கிணறுகள் வெட்டுவதை நிறுத்தி வைக்கலாம்.

7. மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளுக்கு ஆழக்குழாய்க் கிணறுகளிலிருந்து நீரேற்றுவதை ஓரளவுக்குக் குறைத்துச் சீராக்க வேண்டும்.

8. முன்பே மின் இணைப்பு வழங்கப்பட்ட குழாய்க்கிணறுகள் உள்ள பகுதிகளில் புதிதாக மின் இணைப்பு வழங்குதலை நிறுத்தி வைக்கலாம்.

9. குறைந்தளவு ஒரு இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதியுள்ள பகுதியாக முடிவு செய்து அந்த நிலப்பரப்பில் மட்டுமே நெல் விளைவிக்கப்பட வேண்டும்.

10. குறுகிய காலப் பயிர்களான நிலக்கடலை, எள் முதலிய பயிர்களைத் தவிர வேறு நீண்ட காலப் பயிர்களை விளைவிக்கக் கூடாது.

11. மோகனூர் சர்க்கரை ஆலைக்கென ஒதுக்கப்பட்ட 14,000 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே கரும்பு விளைவிக்க வேண்டும். இது தவிர ஏனைய நிலப்பகுதியில் கரும்பு பயிர் செய்வதைத் தடை செய்யவேண்டும். ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பிலும் தீவிர விவசாய முறைகளையும், நவீன சாகுபடி வழிகளையும் மேற்கொண்டு கரும்பு விளைச்சலைப் பெருக்க வேண்டும்.

12. வேளாண் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவல்ல கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் புல் வளர்ப்பதை விரிவுபடுத்த வேண்டும். முர்ரா எருமைகள், பால் பசுக்கள், கோழிகள் வளர்த்தல், மேச்சேரி கிடா மற்றும் பெட்டை ஆடுகள் வளர்த்தல் ஆகியவற்றில் விவசாயிகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

13. சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு 10,000 பால் பசுக்கள் வழங்கிட வேண்டும். நெற்பயிரையே நம்பியிருந்த விவசாயிகள் அதை விடுத்து கால்நடைகளுக்கான தீவனப்புல் பயிர் செய்யும் எண்ணத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரி மாற்று முறைகளைக் கையாளுவதால் நமக்கு தேவைப்படும் 2.71 இலட்சம் டன் உணவு தானியத்தில் குறைவுபடும் 1.5 இலட்சம் டன் உணவு தானியத்தை வேற்று மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்திட வேண்டும். விநியோக முறைகளைச் சீராக்கி எப்போதும் எல்லோருக்கும் எளிதாகத் தடையின்றி அரிசி கிடைத்திட வழி வகுக்க வேண்டும்.

14. நமது மாவட்டத்தில் ஏராளமான எண்ணெய் ஆலைகள் இருப்பதால் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை, ஆமணக்கு, எள் முதலியவற்றைப் பயிரிடுவதை ஊக்குவிக்க வேண்டும். இம்மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு நிலக்கடலை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டும்.

15. பன்றி வளர்ப்பு நிறுவனம் ஒன்றினைத் துவக்கி விவசாயிகள் பன்றி வீடுகள் அமைத்து, பன்றிகள் வளர்க்கவும், இறைச்சிக்காகப் பன்றியை எடுத்து பொது அறுவையிடத்தில் அறுத்து விற்பனை செய்திடவும், பின்னர் புதிதாகப் பன்றிக் குட்டிகள் விவசாயிகளுக்கு வழங்கிடவும் வழி செய்திடல் வேண்டும்.

**நமது விவேகத்தின் மூலம் தடுப்பு நடவடிக்கை எடுக்கலாம். அதை வழிப்படுத்தலாம். ஆனால் அவற்றை முன்னேற்றமடையச் செய்வதும் மிகவும் தேவையாகும். அவையாவன :**

1. தற்போதுள்ள கிணறுகளில் போதிய தண்ணீர் இல்லாததால் நீரூற்று வாய்ப்புகள் வளர்க்க வல்ல ஏரிகள் எங்கும் கட்ட வேண்டும். காட்டாற்றின் நீரினை தடுக்கவல்ல தடுப்பு அணைகள் கட்டி நீரினைத் தேக்கி வைக்க வேண்டும்.

2. சேலம் மாவட்டத்தில் மரங்களில்லாது வெறுமையாகக் காட்சியளிக்கும் எல்லா மலைகளிலும், குன்றுகளிலும் நிறைய மரங்களைப் புதிதாக நடுகின்ற இயக்கத்தை மிகவும் தீவிரமாக்க வேண்டும்.

3. இம் மாவட்டத்திலுள்ள நூற்பு ஆலைகளுக்குத் தேவையான பருத்தியையும், ஏனைய ஆலைகளுக்குத்தேவைப்படும் மரவள்ளி, நிலக்கடலை ஆகிய பயிர்களையும் பரவலாக, தீவிரமாகப் பயிர் செய்ய வேண்டும்.

4. கைத்தறி நெசவாளர்கள் அனைவரும் கூட்டுறவு நிறுவனங்களில் இணைக்கப்பட்டு, விசைத்தறிகளைக்கட்டுப்படுத்தி, கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறியில் பயிற்சி பெற்று பணிபுரிய வாய்ப்பும் அளித்திட வேண்டும்.

நெசவுத் தொழிலில் நெசவுத் தொழிலுக்குச் சம்பந்தப்படாத எவரும் உள் நுழைந்து நெசவாளர்கள் வாய்ப்பினைக் கெடுக்கும் நிலை ஏற்படக் கூடாது. எந்த ஒரு தொழிலிலும் அனுபவமில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் மட்டும் விதிவிலக்களித்து நெசவுத் தொழிலில் முன்னேறும் வாய்ப்பினை அளிக்கலாம்.

5. தற்போதுள்ள மக்கள் தொகை பெருகிடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

## நரிக்குறவர் பெறும் நன்மை !

குடியாத்தம் அரசினர் கல்லூரிக்கு அருகில் உள்ள காந்தி நகர் குடியிருப்பு! இங்கே வாழும் நரிக்குறவர்களில் கல்வி அறிவு பெற்று வருபவர்களின் எண்ணிக்கை தற்போது உயர்ந்து வருகிறது. கல்லூரி மாணவர்கள் தேசிய சேவைத் திட்டம் மூலம் அமல் நடத்தி வரும் கல்வி அறிவூட்டும் இயக்கத்தினால இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம், வாரத்தில் ஐந்து நாட்களுக்கு இந்த மாணவர்கள் வகுப்புக்களை நடத்துகிறார்கள். வீட்டுக்கு வீடு சென்று நரிக்குறவ மாணவர்களை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்குமாறு இயக்கம் நடத்தி வரும் கல்லூரி மாணவர்கள், 4 வயது முதல 12 வயது வரையுள்ளவர்களுக்கு முறையாக வகுப்புக்களையும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வு நாட்களிலும் வகுப்புகளை நடத்தி வருகிறார்கள். இந்தக் குடியிருப்பின் மக்கள் தொகை 630 ஆகும்.

6. கிணறுகளை ஆழப்படுத்த ஆழப்படுத்த, தண்ணீர் மட்டம் மிகவும் கீழ்க்ச் சென்று நிலத்தின் மேலுள்ள மரங்களின் வேர்கள் நீரை உறிஞ்சிட இயலாது போய் அழிந்து போகின்றன. ஆத்தூர் வட்டத்தில் சுமார் 75 சதவிகிதப் பாக்குத் தோப்புக்கள் அழிந்ததற்குக் காரணம் இதுவே என்றால் அது மிகையாகாது. இதனால் வேளாண்மை பொருளாதாரம் சீரழிந்து விடுகிறது. தென்னை, பாக்கு முதலான [illegible] மரங்கள் காய்ந்து போகின்றன. எனவே, கிணறு அடியாழம் வெட்டுதலையும், கூடுதலாக பம்புசெட் வைக்க அனுமதி அளிப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

7. அயல் நாடுகளில் மனிதரால் உபயோகப்படுத்தப்பட்டு அசுத்தமான நீரையே மீண்டும் பெரிய இயந்திரங்கள் மூலம் தூய்மைப் படுத்திப் பயன்படுத்துகின்றனர். இதனால் அசுத்த நீரில் 95 சதவிகித நீர் சுத்த நீராகிறது. இதனையே சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் செய்து இருக்கின்ற நீரையே நீண்ட காலம் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், காவிரித் தண்ணீர் பெறுகின்ற ஒவ்வொரு நகராட்சியிலும் வேண்டும்.

8. சேலம் மாவட்டம் நில வளம், நீர்வளமற்றது. பெரும் ஆலைத் தொழில் மூலம்தான் பலருக்கு வேலை கொடுக்க முடியும். தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கும், பெறுதவர்களுக்கும், பெருமளவில் வேலை வாய்ப்பு அளித்திட, சேலம் இரும்பு ஆலை விரைவாக முழுச் செயல்பாட்டிற்கு வரவேண்டும்.

மேலே குறிப்பிட்டவை சிலருக்கு மனத்தில் சங்கடங்களை ஏற்படுத்தலாம், சிலர் தங்கள் சுதந்திரத்தைப் பறிக்கிறார்கள் என்று நினைக்கலாம். சிறு விவசாயிகள் முன்னடைய திட்டங்கள் தீட்டும் போது இது முட்டுக்கட்டையா என்று கூட சிலர் எண்ணலாம். ஆனால், இது இந்த மாவட்டத்தின் உண்மை நிலைமை. அதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பொறுமையோடு பரிசிலிக்க வேண்டும். நம் நலம் கருதுவது போலவே, மற்றவர்கள் நலனிலும் அக்கறை கொள்ள வேண்டும்.

பொதுவாக, தண்ணீர் என்பது என்றும் குறையாத செல்வமல்ல. அதனைப் பல்வேறு பயன்களுக்காகப் பலவகைகளில் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் ஒரு நாள் நிரந்தரமாக வற்றிவிடக்கூடிய நிலை வரலாம். எனவே, மக்களின் குடிநீர் வசதிக்கு முதலிடம் கொடுத்து, அதற்குத் தேவைப்படும் நீரைப்பெற மேற்குறித்த வழிகளைப் பின்பற்றினால் குடிநீர் பற்றுக்குறையை நாம் வெல்ல முடியும் என்பதைத் தெரிவித்து, அதற்குப் பொது மக்களும், ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## திருச்சியில
## பெண் போலீஸ் !

தற்போது சென்னையில் பெண் போலீஸ் பிரிவு ஒன்று சிறப்பாகச் செயல்பட்டு வருவது யாவரும் அறிந்த ஒன்று. இதே போன்ற பிரிவுகள் திருச்சி, மதுரை, கோவையிலும் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் திருச்சியில் பெண் போலீசுக்கான தேர்வு ஒன்று நடந்தது. இதில் 13 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மொத்தம் 307 பேர்கள் மனுச் செய்திருந்தனர். இவர்களில் பட்டதாரிகள் 12 பேர்; பி.யு.சி. படித்தவர்கள் 42 பேர்; எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் 253 பேர்.



இறுதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள 13 பேர்களுக்கும் சென்னையில 9 மாதக் காலம் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு ரூ. 150 உதவிப் பணம் வழங்கப்படும். பயிற்சி முடிந்து வரும் இந்தப் 'பெண் போலீஸ் படை' திருச்சி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டின் நேரடிப் பார்வையில் செயல்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் பெண் போலீசார் பொது இடங்களில் பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளிப்பது, மற்றும் பெண்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களில் அவர்களை ஈடுபடவிடாமல் தடுப்பது ஆகிய வேலைகளைக் கவனிப்பார்கள்.

## விண்வெளிச் சாதனத்துடன்
## தொடர்பு கொள்ளும் தரை நிலையம்

விண்வெளிச் சாதனத்துடன் தொடர்பு கொள்ளும் இந்தியாவின் முதலாவது தரை நிலையம் பூனாவுக்கு அருகே உள்ளது. இரண்டாவது தரை நிலையம் டேராடூனுக்கு அருகே உள்ளது.

இந்துமாக்கடலின் மீது நில நடுக்கோட்டுக்கு 36,000 கி.மீ. உயரத்தில் மிதந்து கொண்டிருக்கின்ற விண்வெளிச்சாதனத்தை நோக்கியவாறு அமைந்த தாம்பாளம் போன்ற பாத்திரங்கள் இரு நிலையங்களிலும் உள்ளன. விண்வெளிச் சாதனத்தின் வழியாக இந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் இடையே தொலைபேசி, டெலக்ஸ், தந்திப் போக்குவரத்துகளில் பெரும்பகுதி நடைபெறுகின்றன.

இன்னும் பல வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள விண்வெளிச் சாதனத்தை உபயோகப்படுத்திக் கொள்ள இரண்டாவது தரை நிலையம் உதவும்.

இப்போது வெளிநாட்டுத் தகவல் தொடர்புத்துறை, 181 நாடுகளுடன் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இதில் 95 சதவிகிதம் விண்வெளிச் சாதனத்தின் மூலமாக இயங்குகிறது. பம்பாய்—லண்டன், லண்டன்—பம்பாய், புது தில்லி—லண்டன் ஆகியவற்றுக்கிடையே தொலைபேசி வைத்திருப்பவரே நேரடியாக—வேண்டும் இலக்கத்தைச் சுற்றித் தொடர்பு கொள்ளவும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

1977 ஜூன் இறுதிக்குள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன், ஈராக், சவூதி அரேபியா, ஜோர்டான், அல்ஜியர்ஸ், கட்டார் போன்ற 12 நாடுகளுக்கு விண்வெளிச் சாதனத்தின் மூலம் தொடர்பு ஏற்பட்டு விடும். டிசம்பருக்குள் சூடான், சிரியா, லெபனான் நாடுகளுக்கும் தொடர்பு உண்டாகும். இந்துமாக்கடல் பகுதியில் தரமான தரை நிலையங்கள் கொண்ட கோஷ்டி சேரா நாடுகளுடன் இந்தியாவுக்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டு விடும்.



# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"



"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"

பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்

குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.



## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!





| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |











வேலை நேரம் : உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

# தமிழரசு

மலர் : 7 இதழ் : 19

1—4—1977

## இந்த இதழில்

| | பக்க எண் |
|---|---|
| நமது பிரதமர் .. | 2 |
| தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் .. | 4 |
| இந்திய அரசின் 1977-78-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம் .. | 5 |
| 1977-78 பட்ஜெட் மதிப்பீடுகளின் சிறப்பு அம்சங்கள் .. | 7 |
| நெருப்பும் பொறுப்பும் .. | 9 |
| பத்து கட்டளைகள் .. | 15 |
| பற்றி எரியும் வீட்டுக்குள்ளே பாய்ந்து செல்லும் மீட்புப் பணியாளர்களுக்கு.. | 17 |
| வந்தே மாதரம்! .. | 18 |
| கால்நடை வளர்ப்பவர்களுக்கு உதவும் செய்திகள் .. | 22 |
| மத்திய அரசின் புதிய அமைச்சர்கள் .. | 24 |
| அதிக மகசூலும் அதிக இலாபமும் அடைந்திட உதவும் ஆராய்ச்சி முடிவுகள் .. | 26 |
| விண்வெளி மூலம் தகவல் பெற இந்தியாவில் மற்றொரு தரைநிலையம்.. | 30 |
| வரலாற்றில் இடம்பெற்ற தீ விபத்துக்கள் .. | 32 |
| தீ விபத்தைத் தவிர்ப்போம்! .. | 33 |
| வேளாண்மையும் தீ விபத்துக்களும்! .. | 35 |
| தீ விபத்தைத் தவிர்க்க உதவிடுவீர்! .. | 36 |
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் .. | 41 |
| தெற்கே தழைத்த தேசிய ஒருமைப்பாடு! .. | 45 |
| தமிழ்நாட்டில் விவசாயக் கணக்கெடுப்பு .. | 47 |

**கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.**

APR 1977 225311



அட்டைப் படம்.

ஊட்டி தாவர இயல் பூங்கா.

# நமது பிரதமர்

## வாழ்க்கை வரலாறு

இந்தியாவின் நான்காவது பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள திரு. மொரார்ஜி தேசாய் தமது இளம்பிராயத்திலேயே காந்திஜீயின் சிந்தனைகளாலும், வாழ்க்கைத் தத்துவங்களாலும் கவரப்பட்டார். அசாதாரண திட நம்பிக்கையுடனும், தூய்மையான அரசியல் நடவடிக்கைகளில் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், அவர் தனது அரசியல் வாழ்வைத் துவக்கினார். காந்திஜீயிடமிருந்து பெற்ற நற்பண்புகள் அவருடைய வாழ்க்கைப் பாதையில் ஒளிகாட்டின. அவற்றை நிறைவேற்றும் பொருட்டு அவர் தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பாடுபட்டார். நிலைமைக்குத் தக்கவாறு தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் வழக்கம் அவருக்கு எப்போதும் இருந்தது இல்லை.

குஜராத்தில், பால்ஸாருக்கு அருகில் ஒரு கிராமத்தில் படேலி பிராமணக் குடும்பத்தில் திரு. தேசாய் பிறந்தார். திரு தேசாய் பம்பாய் வில்ஸன் கல்லூரியில் கல்வி கற்றார். 1918-ல் அவர் பம்பாய் மாநில சிவில் சேவையில் பணியாற்றத் துவங்கினார். அன்னிய அரசாங்கத்தின்கீழ் 12 ஆண்டுகள் அவர் பணியாற்றினார் 1930-ல் தமது வேலையை ராஜினாமா செய்துவிட்டு சிவில் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு மூன்றுமுறை சிறை சென்றார்.

1931-ல் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினரானார்.

1937-ல் அமைக்கப்பட்ட முதல் காங்கிரஸ் அரசாங்கத்தில் அவர் வருவாய்த்துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

1946-ல் பம்பாய் அரசாங்கத்தில் உள்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சராக அவர் பணியாற்றினார்.

1952-ல் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலுக்குப் பிறகு அவர் பம்பாய் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 1956-ல் மாநிலங்கள் திருத்தியமைக்கப் படும்வரை அப்பதவியை வகித்து

நிலவருவாய் நிர்வாகத்திலும், போலீஸ் நிர்வாகத்திலும் அவரது பதவி காலத்தில் ஏராளமான சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன. நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்கள், வசதியற்றவர்கள் ஆகியோர் நல்லதொரு வாழ்க்கைத்தரத்தைப் பெற முடியாத வரையில், சோஷலிசம் என்ற வார்த்தை அர்த்தமற்றது என்பது அவருடையக் கருத்து. விவசாயிகள், குத்தகைக்காரர்கள் ஆகியோரின் கஷ்டங்களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு முற்போக்குச் சட்டங்களை இயற்றியதன் மூலம் தமது தத்துவங்களுக்கு அவர் முழுவடிவம் அளித்தார். இந்த விஷயத்தில் நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் திரு தேசாயின் அரசாங்கம் மிகவும் முன்னணியில் இருந்தது.

மாநிலங்கள் திருத்தியமைக்கப் பட்டத்தைத் தொடர்ந்து 1956 நவம்பர் 14-ந் தேதி மத்திய அமைச்சரவையில் திரு தேசாய் தொழில் வர்த்தக அமைச்சராகப் பதவியேற்றார். 1958-மார்ச் 22-ந் தேதி நிதித்துறையின் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

பொருளாதாரத் திட்டம், நிதி நிர்வாகம் ஆகிய விஷயங்களில் தான் கூறியவற்றை திரு தேசாய் நடைமுறையில் செயல்படுத்திக் காட்டினார். பாதுகாப்பு அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அவர் மிகுந்த வருவாயைத் திரட்டினார். அரசாங்க நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்கும் முயற்சியில் வீண் செலவுகளை அவர் குறைத்தார். சமுதாயத்தில் வசதி நிரம்பியவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறையில் அவர் சில கட்டுப்பாடுகளை விதித்தார்.

1962-ல் சூரத்திலிருந்து அவர் மறுபடியும் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜவஹர்லால் நேருவின் காலத்தில் அவர் நிதியமைச்சராகப் பதவியேற்றார். ஆனால் 1963, ஆகஸ்டில் காமராஜர் திட்டத்தின்படி அவர் பதவி விலக முன்வந்தார். 1966-67-ல் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றிய அவர், அரசாங்கத்தின்

நிர்வாக முறையைத் திருத்தியமைக்கும் பொருட்டு பல சீர் திருத்தங்களை கூறினார். சிவில் ஊழியராகவும், முதலமைச்சராகவும், மத்திய அமைச்சராகவும் பணியாற்றிய திரு தேசாயின் நீண்ட அனுபவங்கள் இப்பணியில் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தன.

1967-ல் மறுபடியும் திரு தேசாய் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் துணைப்பிரதம மந்திரியாகச் சேர்ந்தார். வருவாய், சொத்துக்கள் ஆகியவற்றில் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு திரு தேசாய் பாடுபட்டார். ஆனால் அதே நேரத்தில் சமூகநீதியை நிலைநாட்டுவதற்கு மேலும் பல செயல்களைச் செய்ய வேண்டும் என்று அவர் உணர்ந்திருந்தார். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான வளங்களை அதிகரிப்பதன் மூலம், இந்த அபிவிருத்திக்கான விலைகளை அளிப்பவர்களை, இங்கு நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்காக தங்கள் பங்கினைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளலாம் என்று அவர் நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவரது பொதுவாழ்வில் காந்திஜீயின் காலத்தில் அவர் பிறந்ததையும் அவருடன் இணைந்து பணியாற்றும் நல்வாய்ப்பினைப் பெற்றதையும் அவர் மிகப்பெரும் பெருமையாகக் கருதினார். ஆகவே காந்திஜீயின் கனவை நனவாக்கும் சிறப்புப் பொறுப்பு தமக்கிருப்பதாகவும் அவர் கருதினார்.

1969 ஜூலை மாதத்தில் அவரிடமிருந்து நிதித்துறையை பிரதமர் எடுத்துக் கொண்டார். இது தனது சுயமரியாதையை பாதிப்பதாகுமெனக் கூறிஅவர் துணைப் பிரதம மந்திரிப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு அரசாங்கத்திலிருந்து விலகிக் கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சூரத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களவையின் உறுப்பினர் ஆனார்.

[ நன்றி: பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.]



திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 24—3—1977 அன்று இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்றார்.

# தமிழ்நாடு அரசின் 1977—78-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டம்

**—திரு. ஹி. மு. படேல்,**
**மத்திய நிதி அமைச்சர்,**

தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றேன்.

1976-77—ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும் என்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 2.98 கோடி ரூபாய் பற்றுக்குறை ஏற்படுமென்றும் எதிர்பார்க்கப் பட்டது. திருத்திய மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் பற்றுக்குறை 12.78 கோடி ரூபாயாகவும், மொத்தத்தில் பற்றுக்குறை 1.18 கோடி ரூபாயாகவும் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கில் பற்றுக்குறை உயர்ந்துள்ளதற்கு முக்கிய காரணம், வறட்சித் துயர்துடைப்பு, வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஆன செலவேயாகும். வறட்சித் துயர்துடைப்புப் பணிகளுக்காக, திட்டச் செலவாகவும், திட்டத்தின்கீழ் வராத செலவாகவும் 27.52 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காக, 4.1 கோடி ரூபாய் செலவிடப்படும். இவ்வகையில் செலவிடப்பட்ட 31.62 கோடி ரூபாயில், மத்திய அரசின் திட்ட உதவி முன் பணமான 18.75 கோடி ரூபாய் அடங்கும்.

நடப்பாண்டின் அனுமதிக்கப்பட்ட திட்ட நிதி ஒதுக்கீடு 201 கோடி ரூபாய் ஆகும். திட்டச் செலவு நடப்பாண்டில் 227 கோடி ரூபாயாக இருக்கும் என இப்போது எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது சமர்ப்பிக்கப்படும் 1977-78—ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கின்கீழ் வரவுகள் 635.91 கோடி ரூபாயாகவும், செலவுகள் 645.81 கோடி ரூபாயாகவும், பற்றுக்குறை 9.9 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1977-78ல் மூலதனச் செலவுகள் 62.69 கோடி ரூபாயாக இருக்கும்.

**1977-78-ஆம் ஆண்டிற்கு 260 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப் பட்டுள்ளது.** திட்டத்தில் முக்கிய துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறு :

| | கோடி ரூபாய் |
|---|---|
| மின் சக்திக்கு .. .. | 95 |
| பாசனத்துக்கு .. .. | 25 |
| வேளாண்மைக்கும், தொடர்புள்ள துறைகளுக்கும் .. | 30 |
| தொழில்களுக்கு .. .. | 14 |
| போக்குவரத்துக்கும், சாலை வசதிக்கும் .. .. | 24 |
| குடிநீர் வழங்கலுக்கும், கழிவுநீர் அகற்றலுக்கும் .. | 25 |
| கல்விக்கு .. .. .. | 13 |
| வீட்டு வசதிக்கும், நகர் வளர்ச்சிக்கும் .. | 16 |
| ஏனைய சமூக, பொருளாதாரப் பணிகளுக்கு .. .. | 18 |

வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு, கடன் கணக்கு ஆகிய மூன்றிலுமாக, 1977-78 இறுதியில் மொத்தத்தில் 13.92 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும். செலவைச் சிக்கனப்படுத்துவது, அரசுக்குச் சேர வேண்டிய வரிகளையும் ஏனைய நிலுவைகளையும் சீராக வசூலிப்பது, அரசுத் துறை நிறுவனங்களை ஆதாயத்துடன் இயங்கச் செய்வது உட்பட தக்க நடவடிக்கைகளின் மூலம், இந்தப் பற்றுக்குறையை முழுமையாகச் சரிக்கட்ட அரசு முற்படும். பருவ மழை இயல்பாக இருக்குமானல், நிதி ஒழுக்கத்தின் வாயிலாகவும், திறம்பட அரசு செயலாற்றுவதன் வாயிலாகவும், வரவுகள் ஓரளவு உயருமென எதிர்பார்க்கலாம். அரசின் எல்லாத் துறைகளிலும் தவிர்க்கக் கூடிய செலவினங்களைக் குறைப்பதற்கு இலக்குகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அவ்வாறே, அரசுத் துறை தொழில் நிறுவனங்களின் வரவு-செலவுகளை ஆராய்ந்து, அவற்றின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தற்போது, அவையின் முன்வைக்கப் பட்டுள்ள ஆண்டு நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் ஐந்து மாதங்களுக்கு உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி அளிக்குமாறு அவையினைக் கேட்டுக் கொள்கிறேன்.

**[1977-ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாளன்று மத்திய நிதி அமைச்சர் அவர்களால் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட விவர அறிக்கை]**

# இந்திய அரசின் 1977–78-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம்!

இந்திய அரசின் 1977-78-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தை 28-3-1977 அன்று மக்களவையில் மத்திய நிதி அமைச்சர் திரு படேல் அவர்கள் சமர்ப்பித்தார். அப்போது அவர் ஐந்தாவது திட்டத்தை முழுக்க பரிசிலனை செய்யவிருக்கும் அரசாங்கத்தின் உறுதியான முடிவையும், புதிய அரசாங்கத்தின் சிந்தனை மற்றும் முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பட்ஜெட் மதிப்பீடுகளை திருத்தி அமைக்கவிருக்கும் முடிவையும் வெளிப்படுத்தினார். 1977 மே மாதத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கும் முறையான பட்ஜெட் காலத்துக்குள், இந்தப் பயிற்சி பூர்த்தி செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

**நியாயமான விலை நிரந்தரமாக நிலவுவதற்கு வழி காணப்படும்!**

1976 மார்ச் முதல் மொத்த விலைக்குறியீட்டெண்ணில் 12.5 சதவிகிதம் உயர்வையொட்டி பற்றுக்குறை நிதியுதவி எதுவும் அக்கறையுடன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். விலை உயர்வு போக்குகளைத் திருத்தி அமைக்கவும், நியாயமான விலை நிரந்தரமாக நிலவுவதற்கு வழி காணும் வகையிலும் பணவீக்க அழுத்தங்கள் உருவாகாமல் இருக்கும் வகையிலும் பொதுச் செலவினங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் உறுதியான கருத்து என்றும் அவர் சொன்ஞர்.

**மக்கள் விருப்பம்**

தேர்தல் மூலமாக ஐயமின்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ள மக்களின் விருப்பம் "ஏழ்மையும் திண்டாட்டமும் வேலையில்லாத் துரிதமாக நீக்கப்பட வேண்டும்; வருமானம் மற்றும் செல்வம் ஆகியவற்றில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் படிப்படியாகக் குறைப்பதை அரசாங்கம் தன்னுடைய நோக்கமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கு வழி காணும் வகையில் பொருளாதாரக் கொள்கைகளையும், முன்னுரிமைகளையும் மாற்றி அமைப்பது அவசரத் தேவை என்பதை வலியுறுத்தியுள்ளது'' என்றும் தெரிவித்தார்.

**ஆடம்பரங்கள் தவிர்க்கப்படும்!**

ஐந்தாவது திட்டத்தை அரசாங்கம் பரிசீலித்து முடிக்கும் வரையில் மத்திய அமைச்சகங்கள், அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் எந்த ஒரு புதிய திட்டமும் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும், பெரிய அளவில் பணம் முதலீடு செய்யப்படக் கூடாது என்றும் தான் உத்தர விட்டிருப்பதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கம் எளிமை, சிக்கனத்தை வலியுறுத்தி, எல்லா விதத்திலும் ஆடம்பரங்களைத் தவிர்க்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு அனைத்து அமைச்சகங்களும், அரசுத்துறை ஏஜென்சிகளும் கேட்டுக்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

**பட்ஜெட் நிலைமை**

பட்ஜெட் நிலைமையைப் பரிசீலித்து நிதியமைச்சர் பேசுகையில், பட்ஜெட்டில் வழி காணப் பட்டுள்ள ரூ. 328 கோடி ஒட்டு மொத்த பற்றுக்குறைக்குப் பதிலாக, நடப்பு நிதியாண்டு ரூ. 425 கோடி பற்றுக்குறையுடன் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

1977-78-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் உத்தேசங்களின் விளைவாய் ரூ. 1,432 கோடி ஒட்டு மொத்த பற்றுக்குறை இருக்கும் என்று திரு படேல் தெரிவித்தார். மேலும் வெளிச் செலாவணி ரிசர்வ்களிலிருந்து பெறப்படும் விசேஷக் கடன் தொகை ரூ. 800 கோடிக்கு இருந்தும், நிகரப் பற்றுக்குறை ரூ. 632 கோடி என்று பட்ஜெட்டின் விவரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

1976-77-ஆம் ஆண்டுக்கான திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி ரூ. 13,759 கோடியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1977-78-ஆம் ஆண்டுக்கு மொத்த வரவு ரூ. 14,910 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டின் திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ 14,184 கோடியாக இருக்கும் வரவிருக்கும் ஆண்டின் செலவுத் தொகை ரூ. 15,542 கோடியாக இருக்கும். திட்டம் அல்லாத மற்றும் திட்டச் செலவுத்தொகை ஆகிய இரண்டிலும் காணப்பட உயர்வைத் தொடர்ந்துள்ள இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

1976-77-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடுகளில் உள்ள ரூ. 7,852 கோடியுடன் ஒப்பிடுகை யில், 1977-78-ம் ஆண்டுக்கான மொத்ததிட்டச் செலவுத்தொகை ரூ. 9,953 கோடியாக இருக்கும் என்று திரு படேல் தெரிவித்தார்.

திய, மாநிலங்கள் மற்றும் ியன் பிரதேசங்களுக்கான ாத்த செலவுத்தொகை இதில் ங்கும்.

### ாநிலங்களுக்கு திட்ட உதவி

!977-78-ஆம் ஆண்டுக்கான -டத்தில் மத்திய அரசுத்துறை ுக்கீடு ரூ. 5,053 கோடியாகும். ில் மத்திய பட்ஜெட்டில் ரூ. '96 கோடிக்கு வரைவு செய்யப் ம் என்றும், கடந்த ஆண்டு '76-77) ஒதுக்கீடு ரூ. 4,090 ாடி என்றும், பட்ஜெட் கட் ந்தில் பட்ஜெட்டிலிருந்து ரூ. '47 கோடி ஒதுக்கப்பட்டது ாறும் நிதியமைச்சர் குறிப்பிட் ார்.

மலைப்பகுதி, பழங்குடியினர் பகுதிகள், வடகிழக்கு கவுன்சில் கிராமிய மின்மயக் கார்ப்பொரேஷன், மற்றும் ஆந்திரா 6 அம்சக் கொள்கை போன்ற பல் வேறு திட்டங்கள் சம்பந்தமாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றுக்கான மத்தியஉதவி-1977-78-ஆம் ஆண்டுக்கான இந்த மதிப்பீடுகளின்படி ரூ. 1,692 கோடியாகும். அதே நேரத்தில் நடப்பு ஆண்டுக்கான தொகை ரூ. 1,402 கோடியாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

பட்ஜெட் மற்றும் மான்யங்களுக்கானகோரிக்கைகள்- முந்திய உத்தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்றும், ஆகவே, இது புதிய அரசின்—அரசாங்கத்தின் - சித்தாந்தத்தையோ கொள்கைகளையோ, திட்டங்களையோ பிரதிபலிக்காது என்றும் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

### இலட்சியங்களில் வெற்றி அடைவோம்!

முன்னே இருப்பது மகத்தான பணி என்றும், நாட்டு மக்களின் நல்லாதரவுடனும், நம்பிக்கை—நல்லாசிகளுடனும் நாம் நம்முடைய இலட்சியங்களில் வெற்றி அடைவோம் என்று தளராத நம்பிக்கை இருப்பதாக திரு பட்டேல் மக்களவையில் எடுத்துரைத்தார்.

## உங்களுக்குத் தெரியுமா?

அரசாங்கக் கணக்குகள் மூன்று வகைகளாக வைக்கப்படுகின்றன :

1. 'கன்ஸாலிடேடட் பண்ட்' எனப்படும் மொத்த நிதி, 2. 'கண்டின்ஜென்ஸி பண்ட்' எனப்படும் எதிர்பாராத செலவுகளுக்காக ஒதுக்கி வைக்கப்படும் நிதி, 3. 'பப்ளிக் அக்கவுண்ட்' எனப்படும் பொதுக் கணக்கு.

அரசாங்கத்துக்கு வந்து சேரும் எல்லா வகையான வருவாய்களும், அரசாங்கம் திரட்டும் கடன்களும், அரசாங்கம் கொடுத்த கடன்களிலிருந்து திருப்பித் தரப்படும்தொகைகளும் முதலாவது வகையான மொத்த நிதியில் சேரும். அரசாங்கச் செலவுகள் அனைத்தும் இந்த நிதியிலிருந்து செலவு செய்யப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் அனுமதியில்லாமல் இந்த நிதியிலிருந்து எந்தத் தொகையையும் எடுக்க முடியாது.

எதிர்பாராத செலவுகளுக்காக ஒதுக்கி வைக்கப்படும் நிதி என்பது குடியரசுத் தலைவரின் பொறுப்பில் வைக்கப்படும் ரொக்க பணமாகும். நாடாளுமன்றத்தின் அனுமதி எதிர்பார்த்து அவசரமான திடீர்ச் செலவுகளை இந்த நிதியிலிருந்து செலவிடலாம். இவ்வாறு செலவிடப்படும் தொகைக்கு நாடாளுமன்றத்தின் சம்மதம் பெற்ற பிறகு, அதே அளவு தொகை மொத்த நிதியிலிருந்து எடுத்து 'கண்டின்ஜென்ஸி' நிதிக்கு திருப்பிக் கொடுத்து ஈடு செய்யப்படும்.

தற்போது கண்டின்ஜென்ஸி நிதியில் ரூபாய் 50 கோடி வரை வைத்திருக்க நாடாளுமன்றம் அனுமதித்துள்ளது.

மொத்த நிதிக்குச் சம்பந்தப்பட்ட இயல்பான அரசாங்கத்தின் வருவாய்களும் செலவுகளும் ஒருபுறம் இருக்க வேறு சில செலவுகளும் அரசாங்கக் கணக்கில் இடம் பெறுகின்றன. இந்தச் செலவுகளைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஒரு பாங்கு போல நடந்து கொள்கிறது. பிராவிடண்ட் நிதிகள், சிறுசேமிப்பு வசூல், வேறு சில டெபாசிட்டுகள் ஆகிய தலைப்புகளில் அரசாங்கத்திற்கு வந்து சேரும் பணம் பொதுக் கணக்கு என்ற தலைப்பில் தனியாக வைக்கப்பட்டு அந்தக் கணக்கிலிருந்து அந்தத் தலைப்பில் ஏற்படும் செலவுகளும் செய்யப்படுகின்றன.

பொதுக் கணக்கிலுள்ள நிதிகள் அரசாங்கத்தின் பணம் அல்ல. அவை டிபாசிட்டுகளுக்குச் சொந்தமானவை. ஆகையால் அந்தக் கணக்கில் பணம் போடவோ அதிலிருந்து எடுத்துத் திருப்பிக் கொடுப்பதற்கோ நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை.

குடியரசுத் தலைவரின் செலவுகள், மாநிலங்களவையின் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் சம்பளங்களும் படிகளும், மக்கள் அவையின் சபாநாயகர், துணைச் சபாநாயகர் ஆகியோரின் சம்பளங்களும் படிகளும், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் மற்றும் 'கண்ட்ரோலர்' மற்றும் 'ஆடிடர் ஜெனரல்' ஆகியோரின் சம்பளங்கள், ஓய்வுக் காலச் சம்பளங்கள், படிகள் ஆகியவையும், அரசாங்கம் திரட்டியுள்ள கடன்களைத் திருப்பிக் கொடுப்பது, அவற்றுக்கான வட்டி செலுத்துவது, 'கோர்ட் டிகிரி'களுக்காகச் செலுத்தப்படும் பணம் ஆகியவையெல்லாம் மொத்த நிதியிலிருந்து செலவிடப்படும்.

அண்மையில் மக்கள் சபையில் கோரப்பட்ட அங்கீகாரம் 1977-78-ஆம் ஆண்டின் மொத்தச் செலவு மதிப்பீட்டில் 3ல் 1 பகுதிக்கு அதாவது 1977 ஏப்ரல் முதல் ஜுலை வரையுள்ள நான்கு மாதக் காலச் செலவுக்காக மட்டுமே கோரப்பட்டதாகும்.



## 1977-78 பட்ஜெட் மதிப்பீடுகளின் சிறப்பு அம்சங்கள்

நிதியமைச்சர் திரு. எச். எம். படேல் 1977-78-க்கான இடைக்கால பட்ஜெட்டின் மதிப்பீடுகளை மக்கள்சபையில் 28-3-77 அன்று சமர்ப்பித்தார். அதன் சிறப்பு அம்சங்கள் வருமாறு:—

அடுத்த ஆண்டுக்கு வரவு, வரிகளில் மாநிலங்களின் பங்கு மற்றும் தீர்வைகள் ரூபாய் 14 ஆயிரத்து 910 கோடியாக மதிப்பிடப்படுகிறது. செலவு ரூபாய் 15 ஆயிரத்து 542 கோடியாக இருக்கும். எனவே, ரூபாய் 632 கோடி பற்றுக்குறை இருக்கும்.

வரிகள் மூலம் மொத்தம் ரூபாய் 8 ஆயிரத்து 720 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இதில் மாநிலங்களின் பங்காக கொடுக்கப்படும் வரிகளும் தீர்வைகளும் ரூபாய் 1788 கோடி அளவில் இருக்கும். எனவே, மத்திய அரசாங்கத்துக்குக் கிடைக்கும் நிகர வருவாய் 6932 கோடியாகும். இதில் யூனியன் எக்ஸைஸ் தீர்வைகளாக ரூபாய் 3453 கோடியும், சுங்கத்தீர்வையாக ரூபாய் 1587 கோடியும், கம்பெனிகளின் மீது வரியாக ரூபாய் 1243 கோடியும், வருமான வரியாக ரூபாய் 327 கோடியும் மற்ற வரிகளும் தீர்வைகளுமாக ரூபாய் 322 கோடியும் அடங்கியிருக்கும்.

வரியல்லாத வருமானங்கள், வட்டியும் டிவிடண்ட். ஆகிய வருமானங்கள் உட்பட மொத்தம் ரூபாய் 2347 கோடியாக இருக்கும். மார்க்கெட்டில் வாங்கப்பட்டுள்ள கடன்களின் மதிப்பு ரூபாய் 890 கோடி. வெளிநாட்டுக் கடன்கள் ரூபாய் 894 கோடி. திருப்பிக் கொடுக்கப்படும் கடன்கள் ரூபாய் 1703 கோடி. சிறுசேமிப்பு பிராவிடண்டு நிதி ஆகியவற்றின் வசூல் மொத்தம் ரூபாய் 627 கோடியாக இருக்கும். மற்றவகையான மூலதன வருமானம் ரூபாய் 1517 கோடியாக மதிப்பிடப்படுகிறது.

மொத்தம் உத்தேச வருமானம் ரூபாய் 15542 கோடியில் வளர்ச்சித் துறைகளுக்கு ரூபாய் 8920 கோடி (57 சதவிகிதம்), பாதுகாப்புத் துறைக்கு ரூபாய் 2808 கோடி வட்டியாகச் செலுத்தப்படும் தொகை ரூபாய் 1600 கோடி. மாநில அரசாங்கங்களுக்கும் யூனியன் நிர்வாகப் பகுதிகளின் அரசாங்கங்களுக்கும் சட்டப்படியான ஏற்பாடுகளின்படி மாற்றப்படும் தொகை ரூபாய் 781 கோடி; மற்ற செலவுகள் ரூபாய் 1433 கோடி.

வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் ரூபாய் 8920 கோடியில் பொருளாதாரப் பணிகளுக்கு ரூபாய் 5508 கோடியும், சமூக மற்றும் சமுதாயப் பணிகளுக்கு ரூபாய் 867 கோடியும், மாநிலங்கள் மற்றும் யூனியன் நிர்வாக பிரதேசங்கள் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கு வளர்ச்சி திட்டங்களுக்காக வழங்கப்படும் உதவி ரூபாய் 2536 கோடி. மற்றும் பொதுப்பணிகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டச் செலவுகள் ரூபாய் 9 கோடி ஆகியவை அடங்கும்.

மாநில அரசாங்கங்களுக்கும் யூனியன் நிர்வாக பிரதேசங்களின் அரசாங்கங்களுக்கும் தரப்படும் தொகையில் பின்வருவன அடங்கியுள்ளன. வரிகளிலும் தீர்வைகளிலும் மாநிலங்களின் பங்கு ரூபாய் 1788 கோடி, வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூபாய் 2536 கோடி. சட்டரீதியான மானியங்கள் கடன்கள் முதலியன ரூபாய் 781 கோடி.

திட்ட முதலீடு ரூபாய் 5788 கோடி. இதில் சேர்ந்தவை வருமாறு: மத்திய திட்டத்தின் முதலீடு (ரூபாய் 4096 கோடி), மாநிலத் திட்டங்களுக்கு மத்திய உதவி (ரூபாய் 1525 கோடி), யூனியன் நிர்வாக பிரதேச திட்டங்கள் (ரூபாய் 167 கோடி) ஆகியவை. மத்திய திட்டத்தில் பின்வரும் துறைகளுக்கு கணிசமான ஒதுக்கீடு உள்ளது. விவசாயம், ரூபாய் 495 கோடி, தொழில்களும் புவியியல் வளர்ச்சியும் ரூபாய் 2058 கோடி, நீர் மற்றும் மின்சார வளர்ச்சி (இதில் மாநிலங்கள் தங்கள் துறையில் கிராம மின்சார திட்டங்களுக்காகச் செலவிடும் ரூபாய் 56 கோடி உட்பட) ரூபாய் 246 கோடி. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள் ரூபாய் 702 கோடி. சமூக சமுதாயப் பணிகள் ரூபாய் 595 கோடி.






# நெருப்பும் பொறுப்பும்

ஐ. இரத்தினசாமி,
இயக்குநர்,
தமிழ்நாடு தீயணைப்புத்துறை,
சென்னை-7.

அடக்கி ஆண்டால் ஆருயிர் நண்பன்! அலட்சியமாக இருந்து விட்டால் ஆபத்தை விளைவிக்கும் அற்பன்! ஆக்கவும் செய்வான்! அழிக்கவும் செய்வான்! அவனுடைய அக்கிரமத்திற்கு அளவே இல்லை! அனைத்து உலகமும் அவனைக் கண்டு அஞ்சுகிறது! அப்பப்பா! அவனது அட்டூழியங்களை கேட்டாலே நெஞ்சம் பதைக்கிறது!

இரண்டாவது உலகப்போர் முடியும் கட்டம்! 1944-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ஆம் நாள், பகல் 12.35 மணிக்கு பம்பாய்த் துறைமுகத்தில் 1,395 டன் எடையுள்ள வெடிமருந்துகளையும், யுத்த தளவாடங்களையும், 9,000 மூட்டை கந்தகங்களையும், 8,700 மூட்டை பருத்தியையும், எண்ணெய் பீப்பாய் பலவற்றையும் தாங்கி நின்று கொண்டிருந்த 'எஸ். எஸ்' போர்ட் ஸ்டீகின்' என்ற கப்பலில் அவன் திடீரென்று தோன்றினான்! அவனைக் கண்டு அஞ்சிய பலர் உயிர் பிழைக்க எண்ணிக் கடலில் குதித்தனர்! அகப்பட்ட 231 பேர்களின் இரத்தத்தைக் குடித்ததுடன் அவர்களுடைய உடல்களையும் தின்றான்! அவனது ஆத்திரம் தீரவில்லை! அந்தக் கப்பலையே வெடிக்கச் செய்தான்! அதனால் அருகில் நின்றிருந்த 3 கப்பல்களும் நாசமாகின! 12 கப்பல்கள் முடமாகின! பம்பாய் துறைமுகப் பகுதியில் எங்கு பார்த்தாலும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது! பலர் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிக் கொண்டிருந்தனர்!

தமது இரு நண்பர்களோடு நடந்து கொண்டிருந்த திரு. ஸ்டீபன்ஸ் என்பவர். கப்பல் வெடித்த வேகத்தால் தம் இரு நண்பர்களும் எங்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்று தெரியாமல் திகைத்து ஓடினார்!

வண்டியில் ஓடிக் கொண்டிருந்த குதிரை ஒன்று, ஒரு காலை இழந்து, மூன்று கால்களில் தாவி ஓடிக் கொண்டிருந்தது!

உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடிக் கொண்டிருந்த ஒரு தாய், தான் தூக்கிச் செல்லும் தன் குழந்தைக்குத் தலை போய் விட்டது என்பது கூடத் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தாள்!

இத்தகைய கோரக் காட்சிகளை உருவாக்கிய அந்த அயோக்கியன் ஓராண்டிற்கு முன் சென்னை மாநகரின் மிகவும் உயரமான கட்டடம் என்ற பெயரைப் பெற்ற 'எல். ஐ. சி.' கட்டடத்தில் தோன்றினான்! அந்தக் கட்டடத்தைக் கருக்கி பல இலட்சக் கணக்கான பொருள்களை நாசமாக்கினான்!

கோடை காலம் பிறந்து விட்டால் சென்னைமாநகரின் குடிசைப் பகுதிகளில்தோன்றிக் கொடுமை செய்வது அவனுக்கு வழக்கமாகி விட்டது!

யாரோ ஒருவரின் அலட்சியத்தால்-பொறுப்பற்ற தன்மையால் தோன்றி, நினைத்தாலே நெஞ்சம் பதைக்கும் கொடுமைகளைச் செய்துவரும் அந்தக் கொடியவன் யார் என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

அவன் பெயர் தீ!

அவனது கொட்டத்தை அடக்கிட தீயணைப்புத் துறை எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆயினும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இருக்குமானால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்களேயானால், அந்த அயோக்கியனின் அட்டகாசங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்திட முடியும்! எனவே, தீ விபத்தைத் தடுத்திடும் தீவிரப் பணியில் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்திட வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றேன்.

வெள்ளம் வருமுன் அணை போடுவதே விவேகம். பெருந் தீ விபத்துக்கள் நேர்ந்தபின் ஓலமிடுவதைவிட, அவ்விபத்துக்கள் வராமலே அதற்கான காரணங்களைத் தவிர்க்க வேண்டும். கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே பல தீ விபத்துக்களுக்குக் காரணங்களாயிருக்கின்றன. நாம் எல்லோரும் பொறுப்புடன் நடந்து கொண்டால், நெருப்பின் பிடியிலிருந்து தப்பலாம்.

**தீ விபத்தைப் பொதுவாகப் பின்கண்டவாறு வகைப்படுத்தலாம்.**

1. வீடுகளில் ஏற்படும் தீ விபத்து.
2. கடைகள், அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்படும் தீ விபத்து.
3. வேளாண்மை நிலங்கள், வைக்கோல் போர், புல் வெளிகள் முதலியவற்றில் ஏற்படும் தீ விபத்து.
4. கழிவுகள் மற்றும் வீட்டிற்கு வெளிப்புறத்தில் அமைந்துள்ள சேமிப்புக் கிடங்குகளில் ஏற்படும் தீ விபத்து.
5. மின்சார அமைப்புகளினால் ஏற்படும் தீ விபத்து.
6. காடுகள் மற்றும் தோட்டங்களில் ஏற்படும் தீ விபத்து.
7. [illegible]

தமிழ்நாட்டில் 1975-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்துக்களை வகைப்படுத்திப் பார்க்கும்பொழுது பின்கண்ட புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன.

**தமிழ்நாட்டில் 1975-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்துக்களின் வகைகள்**

| | | நகர்ப்புற தீ விபத்துக்கள் | கிராமப்புற தீ விபத்துக்கள் |
|---|---|---|---|
| | | (சதவிதம்) | |
| 1. | வீடுகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 46.8 | 54.4 |
| 2. | கடைகள், அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 4.6 | 1,7 |
| 3. | வேளாண்மை நிலங்கள், வைக்கோல் போர்கள், புல்வெளிகள் முதலியவற்றில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 9.0 | 25.0 |
| 4. | கழிவுகள் மற்றும் வீட்டின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள சேமிப்புக் கிடங்குகளில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 2.9 | 1.7 |
| 5. | மின்சார அமைப்புக்களினுல் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 4.3 | 0.4 |
| 6. | காடுகள் மற்றும் தோட்டங்களில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ... | 2.9 | 3.9 |
| 7. | இதர வகை தீ விபத்துக்கள் ... | 29.5 | 12.9 |

தமிழ்நாட்டில் 1975-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்துக்களைக் காரணங்களின் அடிப்படையில் ஆராயும்போது பின்கண்ட புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன.

**தமிழ்நாட்டில் 1975-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்துக்களுக்கான காரணங்கள்**

| | | நகர்ப்புற தீ விபத்துக்கள் | கிராமப்புற தீ விபத்துக்கள் |
|---|---|---|---|
| | | (சதவீதம்) | |
| 1. | அடுப்பு, 'ஸ்டவ்' அல்லது திறந்த நிலையில் உள்ள நெருப்பு ... | 13.8 | 21.0 |
| 2. | கவனக்குறைவுடன் புகைப்பிடித்தல் ... | 9.8 | 12.9 |
| 3. | மின்சார அடிப்படையானவை ... | 8.6 | 4.2 |
| 4. | வெடிமருந்துகள், பட்டாசுத் தொழிற்சாலைகள் ... | 6.4 | 3.9 |
| 5. | 'சிமினி' இல்லாத விளக்குகள் ... | 5.4 | 7.2 |
| 6. | அணையாமல் சூடாக உள்ள சாம்பல் ... | 3.5 | 5.4 |
| 7. | கண்டுபிடிக்க முடியாத காரணங்கள். ... | 15.2 | 18.00 |
| 8. | இதர காரணங்கள் ... | 37.3 | 27.4 |

புள்ளி விவரப்படி, பார்த்தால் வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களே அதிகமாகியிருக்கின்றன. அதற்கான காரணங்களை நோக்கும்போது அவைகள் இலகுவாக தவிர்க்கக்கூடியவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, வீடுகளில் கவனக்குறைவாக அடுப்புகள் கொளுத்துவதும், அடுப்புச் சாம்பலை அணைக்காமல் எறிவதும், மின்சாரக் கருவிகளை விருப்பம் போலவும் கவனக்குறைவாகவும் உபயோகப்படுத்துதல் போன்ற சாதாரண காரணங்களே வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இக்காரணங்களைத் தவிர்ப்பது முக்கியமாக தாய், தங்கையரின் பொறுப்பு. ஆதலால், தாய், தங்கையர்கள் நெருப்பை பொறுப்புடன் கையாள வேண்டும். சமைக்கும் பொழுது அளவோடு அடுப்பு எரிக்க வேண்டும்.



காற்றழுத்த மண்ணெண்ணெய் அடுப்பை (ஸ்டவ்) உபயோகப் படுத்தும் பொழுது முழு கவனத்தோடு-உபயோகப்படுத்த வேண்டும். பம்பாய் நகரில் மட்டும் ஆண்டிற்குச் சுமார் 500 பேர் இக்காற்றழுத்த அடுப்பின் விபத்தினுல் இறப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. சூடான எண்ணெய்யில் குளிர்ந்த பதார்த்தங்களை இடும் பொழுதும், மெழுகுவர்த்தி, திறந்த மண்ணெண்ணெய் விளக்கு போன்றவைகளை உபயோகப்படுத்தும் பொழுதும் மிக கவனத்தோடு உபயோகப் படுத்த வேண்டும்.

மின்சாரத்தினுல் இயங்கும் கருவிகளை அளவோடும், கவனத்தோடும் உபயோகப்படுத்த



மூன்றாவது மாடியில் மயக்கமுற்றுக் கிடந்த நபர்களை நீட்டிப்பு ஏணி வழியாகத் தீயணைப்புப் படையினர் காப்பாற்றுகின்றனர்

வீடுகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆபத்து விளைவிக்கும் பொருள்களை அனுவசியமாக வீடுகளில் சேகரித்து வைக்கக்கூடாது. அவசியம் ஏற்பட்டால் அவைகளை ஆபத்து நேரிடாத வகையில் பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும். வீட்டின் சுற்றுப்புறங்களில் குப்பை, கூளங்களை போட்டுக் கொண்டு திறந்த வெளியில் தீ உண்டு பண்ணக் கூடாது.

குழந்தைகளின் தொட்டில்களுக்கு அடியிலோ, தங்களது அருகிலோ விளக்குகளை வைத்து விட்டுத்தூங்கக்கூடாது. அடுப்புப் பற்ற வைக்கும் பொழுது மண்ணெண்ணெய் 'ஸ்பிரிட்' போன்ற உயர்சக்தி வாய்ந்த எரிபொருள்களை கவனக்குறைவாக உபயோகிப்பதையும், வேலை முடிந்ததும், அடுப்புச் சாம்பலைச் சரியாக அணைக்காமல் மற்ற எரிபொருள்களோடு போடுவதையும் தவிர்க்க வேண்டும்.

அனுவசியமாக மின்சார இணைப்பில் தலையிடக் கூடாது. அவசியம் ஏற்பட்டால், அதில் அனுபவம் வாய்ந்தவர்களை நாட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தைகளைக் கண்காணிப்போடு வைத்துக் கொள்ள வேண்டும்.

தீப்பெட்டி, 'பெட்ரோல்' மண்ணெண்ணெய், திறந்த விளக்குகள் போன்ற அபாயம் விளைவிக்கும் பொருள்களை அவர்கள் அணுகும்படி வைக்கக்கூடாது.

தாழ்ந்த கூரைகளின் அடியில் அமைக்கப்பட்ட அடுப்புகளிலோ, அல்லது வேறு எந்த அடுப்பிலோ

குழந்தைகளை அடுப்பு எரிக்கும்படி செய்வது பெருந் தவறு. அவர்கள் அறியாமை பேராபத்தை விளைவிக்கும்.

வேடிக்கைக்காக குழந்தைகள் விருப்பம்போல் பட்டாசுகளை வெடிக்கவும், வாணவேடிக்கை செய்யவும் அனுமதிக்கவும் கூடாது. சில சமயங்களில் விளையாட்டு வினையாக மாறி சுபநாள் துக்க நாளாகிவிடும். அவர்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் நமது கவனம் இருக்க வேண்டும்.

தாயின் பொறுப்பில் பெரும் பகுதி தந்தையையும் சாரும். குடும்பத் தலைவனுன தந்தை மேற்கூறியவைகள் சரிவரப்பின் பற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதுடன், தானும், தன் வாழ்க்கைத் துணைவியாருக்குத் துணையாய் நின்று வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க வேண்டும்.



மயக்கமுற்ற நபர்கள் தொட்டிலில் கிடத்தப்பட்டு உயரத்திலிருந்து கீழே கொண்டு வரப்படுகிறார்கள்

புகை பிடிக்கும் பொழுது எரியும் தீக்குச்சிக் கொள்ளியும், புகைபிடித்த பின் எறியும் அணைக்காத துண்டுகளும், பல பெருந் தீ விபத்துக்களுக்குக் காரணங்களாக இருக்கின்றன. நகர்ப்புறங்களில் 9.8 சதவிகிதமும், கிராமப்புறங்களில் 12.9 சதவிகிதமும், ஆக மொத்தம் 22.7









சதவிகித தீ விபத்துக்கள் இக் காரணங்களால் ஏற்படுகின்றன. புகை பிடிக்கும் அன்பர்கள் வேலை செய்யும் பொழுதும், படிக்கும் பொழுதும், படுக்கும் பொழுதும் புகை பிடிக்கும் பழக்கத்தைக் கையாள்கிறார்கள். வேலை செய்யும் பொழுது கவனக் குறைவாகவோ படுக்கும் பொழுது தூக்கத்திலோ தங்களது கைகளில் உள்ள எரியும் சிகரெட் துண்டுகளை அப்படியே அருகில் வீசி விடுகிறார்கள். அதேபோல் ஓடும் ரெயிலிலும், மோட்டார் வாகனங்களிலும் செல்பவர்கள் சிகரெட் துண்டுகளை அணைக்காமல் வீசி விடுகிறார்கள். இவ்வாறு எறியப்பட்ட துண்டுகளிலுள்ள அணையாத நெருப்பு பல பெருந் தீ விபத்துக்களை விளைவிக்கின்றன. வீடுகளிலும் அலுவலகங்களிலும் புகை பிடிக்கும் அன்பர்கள் சாம்பல் தட்டுகளில் நெருப்புத் துண்டுகளை நன்றாக அணைத்துப் போட வேண்டும். வெளிப் புறங்களில் புகை பிடிக்கும் அன்பர்கள் துண்டுகளை நன்றாக அணைத்து எரி பொருட்கள் இல்லாத இடத்தில் போட வேண்டும்.

தீ விபத்துக்களினால் தொழிற்சாலைகளிலும், நூற்பு ஆலைகளிலும் ஏற்படும் நட்டங்கள் உடல் சிலிர்க்க வைப்பனவாகும். இதற்கெல்லாம் காரணங்கள் நமக்குத் தெரியா விட்டாலும் சிலரின் கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே இப்பெருந் தீ விபத்திற்குக் காரணங்களாக இருக்க வேண்டும். இக் காரணங்கள் பலவாக இருக்கலாம். அவற்றைத் தடுப்பது சம்பந்தப்பட்ட எல்லோருடைய பொறுப்பும் ஆகும். பொதுவாக மற்ற துறைகளில் உள்ளவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விதிகளோடு, தொழிலதிபர் தொழிலாளர் நல்லுறவும். நல்வாழ்க்கையில் அக்கறையும் பல தீ விபத்துக்களைத் தடுப்பதற்குத் தேவை. தொழிலதிபர்கள் தொழில் நலத்தையும், சொந்த நலத்தையும், முக்கியமாக நாட்டின் பொருளாதார நலத்தையும் கருதி தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். தொழிலாளர் நலத்தில் அக்கறையும் அவர்களிடத்தில் ஆதரவும் காட்டி நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டால், வேலை நிறுத்தங்களையும் தீ விபத்துக்களை ஏற்படுத்தும் சதித் திட்டங்களையும் தவிர்க்கலாம். இதேபோல் தொழில் நலமே நமது நலம் என்று தொழிலாளர் உணர வேண்டும். தங்களது வேண்டாத செய்கைகளால் தொழில் கெட்டால், அவர்களது சொந்த நலமே கெடும். வேலையில்லாத் திண்டாட்டம் வீட்டிற்கு நட்டம்.



பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இத்துறையில் இயற்ற வேண்டிய பணி அடிப்படையானது. தொழில் கூடங்களையும், நூற்பு ஆலைகளையும் நாளை இயக்கும் பொறுப்பு இளைஞர்களுடையது. தீயைப் பற்றியும், தீ அணைப்பைப் பற்றியும் அடிப்படைக் கொள்கைகளை இளைஞர்களுக்குப் பாடப்பகுதியாக ரஷ்யா, ஜப்பான் நாடுகளைப் போல் போதிக்கப்பட்டால், நாளைய நாட்டின் நட்டம் நீங்கி, நலம் பெருகும்.

தொழில்கூடம், ஆலைகள், வீடுகள் கட்டும் பொறுப்பிலுள்ளவர்கள் ஆரம்பத்திலேயே தீப்பற்றாப் பொருள்களைக் கொண்டு கட்டுவதுடன் தவிர்க்க முடியாத காரணங்களால் தீ விபத்துக்கள் ஏற்படும் பொழுது ஆட்சேதம், பொருட் சேதங்களை குறைப்பதற்கான வழிமுறைகளை அமைத்துத் தரும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். ஓரிடத்தில் ஏற்பட்ட தீ மற்ற இடத்திற்குப் பரவாமலும், தீ விபத்து ஏற்பட்டால் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லத் தப்பிக்கும் வழிகளை அமைத்தும் கட்டடங்கள் அமைப்பது நலம்.

நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், தங்கள் ஆட்சியிலுள்ள மக்களுக்குத் தீ விபத்துக்களிலிருந்து பாதுகாப்பளிப்பது ஓர் முக்கிய கடமை எனக் கருதி, தீயணைப்புப் படைகளுக்கு உதவியாக நின்று நீர்நிலைகளைப் பாதுகாத்து உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தாய், தங்கையர்களுக்கும், தவறுதலாகப் புகைப் பிடிப்போருக்கும், நல்லுரை சொல்லி, வீடுகளிலும் வெளியிலும், தீ விபத்துக்களைத் தடுக்கும் முறைகளை உபதேசிக்குமாறு, பொது நல சேவைத் தொண்டர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.



இம்முயற்சிகளுக்கு அப்பாற்பட்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டால், கடமை உணர்ச்சியும், வீரமும் கொண்ட நமது தீயணைக்கும் படையினர் விரைந்து சென்று சேவை புரிவார்கள் என்று பொது மக்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பொது மக்களாகிய உங்களுடைய தீயணைக்கும் படையினருக்கு ஒத்துழைப்பை அளிக்குமாறு வேண்டிக்கொண்டு,

''அடக்கி ஆளாவிடில்-தீ
மடக்கி அழித்துவிடும்''

என்று கூறி முடிக்கிறேன்.





## ஸ்டவ் வெடித்தால்...?

நாள்தோறும் "ஸ்டவ் வெடித்துப் பெண் மரணம்", "நைலான் சேலை தீப்பிடித்து பெண்ணின் உயிர் மருத்துவ மனையில், ஊசலாடிக் கொண்டிருக்கிறது", "பட்டாஸ் கொளுத்தும்போது சட்டை தீப்பிடித்து சிறுவன் மரணம்" என்பன போன்ற நெஞ்சுருக்கும் செய்திகளை நாளேடுகளில் காணும்போது, நாகரிக உடுப்புகளில் மறைந்துள்ள தீ அபாயங்களை நன்கு அறியலாம். தற்செயலாக உடை தீப்பிடித்துக் கொண்டால், அந்த இடத்தைவிட்டு ஓடாமல் கீழே தரையில் படுத்துப் புரளுவது ஆபத்தைக் குறைக்கும். அருகாமையில் உள்ள சாக்குப்பை போன்ற தடித்த துணிகளை மேலே போர்த்திக் கொண்டு, கீழே படுத்துப் புரண்டால், தீயை நிச்சயமாக நாமே அணைத்துக் கொள்ளலாம். உடலிலும் தீக்காயங்களைத் தவிர்க்கலாம்.

## நீரால் அணையாத நெருப்பு!

நெருப்புக்களில் பெரும்பாலானவற்றை நீரைக் கொண்டு அணைததுவிடலாம். ஆனால் எண்ணெய் அல்லது பெட்ரோலில் தீப்பிடித்துக் கொள்ளும்போது தண்ணீர் பயன்படாது. ஏனென்றால் எண்ணெய் தண்ணீருடன் சேரும்போது எண்ணெய் மிதக்கத் தொடங்கி விடுகிறது. எரிகின்ற எண்ணெய் அல்லது பெட்ரோலின் மீது தண்ணீரைக் கொட்டினாலும் அவை தண்ணீரின் மீது மிதந்தபடி எரிந்துகொண்டே இருக்கும். தரையில் சிந்திய எண்ணெய் எரியும்போது அதன்மீது மணலைத் தூவி அணைத்துவிடலாம்; எண்ணெய் வண்டியோ, வான ஊர்தியோ தீப்பிடித்துக் கொண்டால், தீயணைப்புப் படையினர் தனிப்பட்ட ஒரு வகை நுரையைப் (FOAM) பயன்படுத்துகிறார்கள். இந்த நுரை தீச்சுடரை அழுத்தி அணைத்து விடும்.





## தீயணைப்புப் படையினரின் பணிகள்!

தீயணைப்புப் படையினர் தீயை அணைப்பதோடு நின்று விடுவதில்லை. வேறு வகைகளிலும் மக்களுக்கு உதவி செய்கின்றனர். தீயணைக்கும் படையினரின் ஏணிகளும், பம்புகளும் எங்கெல்லாம் உதவ முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் உதவிக்கு அழைக்கப்படுகின்றனர். கட்டடங்களில் இடிபாடுகளிலிருந்து மக்களை மீட்டுக் காப்பாற்றுகின்றனர். வெள்ளம் பாய்ந்து விட்ட வீட்டில் அவர்கள் தண்ணீரை இறைத்து வெளியேற்றுகின்றனர். சில சமயங்களில் மரத்தில் ஏறி அமர்ந்து கொள்ளும் அறிவு குழம்பிய மனிதர்களையும் அவர்கள் கீழே இறக்கித் தருகின்றனர். கிணற்றில் தவறி வீழ்ந்து விட்ட மனிதர்களையும், விலங்குகளையும் அவர்கள் தூக்கி வெளிக் கொண்டு வருகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் 'காப்பது எம் கடன்!' தீயணைக்கும் படையினர் தீயணைக்கும் சிறந்த பணியோடு பல்வேறு வகைகளிலும் பொதுமக்களுக்குப் பணி புரிந்து வருகின்றனர்!













# பத்துக் கட்டளைகள்!

தீ எரிக்கும்; அழிக்கும்; கொல்லும்!

அஃதோடு போராடுவதும், தடுப்பதும் மக்களைக் காக்கவே!

தீ விபத்தைத் தடுக்க கீழ்க்கண்ட 10 கட்டளைகளைக் கடைப்பிடிப்பது நமது கடமையாகும்.

1. சமையலுக்குப் பின் அடுப்பு நெருப்பை அணைத்துவிட வேண்டும். சூடான சாம்பலைத் தொட்டியில் போடுவதைத் தவிர்க்கவேண்டும்.

2. படுக்கையில் புகைப் பிடிக்கக் கூடாது. பீடி, சிகரெட் துண்டுகளை நெருப்புடன் போடக் கூடாது.

3. சாமான்களை எடுக்கையில் எரியும் அடுப்பின் மேல் சாயக்கூடாது.

4. கம்பளத்தின் கீழ் மின்சாரக் கம்பியை எடுத்துச் செல்லக்கூடாது.

5. சுலபத்தில் தீப்பிடிக்கும் பொருள்களை வீடுகளில் சேமித்து வைக்கக்கூடாது.

6. குழந்தைகளை விளக்கோடு விளையாட விடக்கூடாது.

7. குழந்தைகளைத் தனிமையாக பட்டாஸ் வெடிக்க விடக்கூடாது.

8. மின்சார சலவைப் பெட்டிகளை உபயோகித்ததற்குப் பிறகு, மின் இணைப்பை அகற்றி மின்சாரம் பாய்வதைத் தடுக்க வேண்டும்.

9. வைக்கோல் போர்களை, ரயில்வே பாதை, நடைபாதை, வீடுகள் முதலியவற்றிற்கு அப்பால் குறைந்தது 60 அடி தூரத்தில் அமைக்க வேண்டும். ஒரு வைக்கோல் போருக்கும், மற்றொரு வைக்கோல் போருக்கும், இடையில் 30 அடி இடைவெளி விடவேண்டும்.

10. ஓலைவேய்ந்த வீடுகள், குடிசைகள் ஒன்றுக்கொன்றும் இடையில் 10 அடி இடைவெளி விட்டுக் கட்டப்படவேண்டும்.















# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு 11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.


## பற்றி எரியும் வீட்டுக்குள்ளே பாய்ந்து செல்லும் மீட்புப் பணியாளர்களுக்கு...



தீப்பற்றிக் கொண்டிருக்கும் குடிசைக்குள்ளோ அல்லது கட்டடத்திற்குள்ளோ நுழைந்து விலையுயர்ந்த பொருட்களையும், உயிர்களையும் மீட்கத் துணிவுடன் செல்லும் காளையர்க்குக் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

தீயின் ஆதிக்கத்தில் சிக்கியிருக்கும் குடியிருப்புக்குள் நுழையும்போது தீவிர வெப்பம், மற்றும் புகை மண்டலம் இவையிரண்டையும் எதிர்க்கும் திறமையும், சக்தியும் பெற்றிருக்க வேண்டும். வெப்பக் காற்றில் நாம் அதிக நேரம் நடமாடினல் உடல் ஈரம் வற்றிப் போதல், துரிதமாக களைப்படைதல், சுவாச உறுப்புகளில் அடைப்புகள் ஏற்பட்டுத் தீப் புண்கள் உண்டாகுதல், இவை போன்ற ஆபத்துக்கள் ஏற்படுவதோடு இருதயத் துடிப்பும் மிக அதிகமாகிவிடுகிறது.

மனித சகிப்புத் தன்மைக்கு மீறிய அளவில் வெப்பத்தோடு போராடும் போது சில சமயம் மரணமும் ஏற்படும். கட்டடத்தில் 150 டிகிரி செண்டிகிரேடு வெப்பம் வரையில், 20 முதல் 45 விநாடிகளுக்கு உலாவலாம். அதற்கு மீறினல் மரணம் ஏற்படும். 65 டிகிரி செண்டிகிரேடுக்கு மேல் உள்ள இடத்தில் புகுந்து மீட்பு வேலையில் ஈடுபடுவது மிகவும் அபாயமானது.

புகை மண்டலத்தில் உயிர் வாழ்வதற்கு வேண்டிய பிராணவாயுவின் அளவு குறைவதால், மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. 10 முதல் 14 சதவிகிதத்துக்குக் காற்றில் உள்ள பிராணவாயுவின் அளவு குறைந்துவிட்டால், மனிதன் விழிப்பு உணர்ச்சியோடு இருந்தாலும், தன்னையறியாமல் தவருன முடிவுகளை எடுக்கிருன். கட்டடத்திற்குள் உள்ள பிராணவாயுவின் அளவு 6 சதவிகிதத்திற்குக் குறைந்துவிட்டால் மூச்சடைத்து, 6 முதல் 8 நிமிடங்களுக்குள்ளாக உயிரிழக்க நேரிடும்.

எனவே, பாதுகாப்பு உடைகள் இல்லாமலோ, மூச்சுக் கருவிகளை உபயோகிக்காமலோ எரியும் குடிசைக்குள்ளோ, கட்டடத்துக்குள்ளோ நுழையக் கூடாது. வெப்பத்தை ஈர உடைகளாலும்,புகைமண்டலத்தைக் கட்டடத்துக்குள் தரையில் படுத்து ஊர்ந்து செல்வதாலும் ஓரளவுக்குத் தவிர்க்க முடியும்.

இவ்விரண்டு அபாயங்களைத் தவிர வெப்பத்தின் தீவிரத்தினல் கட்டடத்தின் கூரை இடிந்து மீட்புப் பணியில் ஈடுபடுபவர்கள் மீது விழுந்துவிடக் கூடும். ஓலைக் கூரையின் மூங்கில் எரிந்து விழுவதும், மாடிக் கட்டடங்களின் கூரையிலிருந்து சுண்ணாம்பு, சிமெண்ட் பூச்சுக்கள் சிதறி உதிர்வதும், கூரை இடிந்து விழுவதும் உண்டு.

பல மாடிக் கட்டடங்களின் கீழ்த்தளத்தில் தீப்பிடித்துக் கொண்டால் அதிலிருந்து கிளம்பும் புகை மண்டலம் மேல் தளங்களின் அறைகளில் நிரம்பி அங்குள்ளோரின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும். சமீபத்தில் பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் பல மாடிக் கட்டடங்களில் ஏற்பட்ட தீ விபத்துக்களில், மீட்புப் பணிக்காக மேல் தள அறைகளுக்குச் சென்ற தீயணைப்புப் படையினர் மூச்சடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தனர். மாடிப் படிகளின் வழியாகவும், வெளிப்புற ஜன்னல்கள் மூலமும் புகை மண்டலம் வெகுசுலபமாகக் கட்டடத்தில் நிரம்பிவிடுகிறது. ஆக பல மாடிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு வரைப் படம் தயாரிக்கும்போது தீயணைப்பு அலுவலர்களின் ஆலோசனையைக் கேட்டு செயல்படுவது நல்லது.

எனவே, பற்றி எரியும் வீட்டிற்குள்ளே பாய்ந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபடுவோர் மேற்கூறிய வகையில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

# வந்தே மாதரம்



பாரத தேசத்தில் இரண்டு தேசிய கீதங்கள் பாடப்படுகின்றன. ஒன்று 'ஜனகணமன' என்ற பாட்டு; பாண்டு வாத்தியங்களில் வாசிக்க இசைவாக இருப்பதால் இதுவே அடிக்கடி பாடப்படுகிறது. மற்றொன்று 'வந்தே மாதரம்' என்னும் பாடல். நம் நாட்டில் குழந்தையிலிருந்து முதியோர் வரை அனைவரும் அறிந்த பாடல் 'வந்தே மாதரம்' ஆகும்.

இந்நாட்களில் ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது 'ஜெய் ஹிந்த்' என்று சொல்லி முகமன் கூறுவதுபோல, முன்பெல்லாம் 'வந்தே மாதரம்' என்று சொல்லி வந்தார்கள். இப்பொழுதும் சிலர் அவ்வழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

நமது நாட்டின் பல்லாயிரக் கணக்கான மக்கள் 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டுக் கொண்டே ஆங்கில அரசின் அடக்குமுறையை எதிர்த்து நின்றனர். தடியடிக்கும் குண்டுகளுக்கும் எதிரில் இந்த முழக்கத்தை எழுப்பினர்; மரணத்தின் எதிரிலும் பயமில்லாமல் நின்றனர். உங்களில் பலர் 'வந்தே மாதரம்' பாடலைக் கேட்டிருப்பீர்கள். தேசியக் கொடியை ஏற்றும் சமயங்களில் அதனுடைய இனிமையும், கம்பீரமும், மென்மையும் எல்லோரையும் கவர்கின்றன.

''வந்தே மாதரம்

ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ
சீதளாம்
சஸ்யச்யாமளாம் மாதரம்.''

இவ் வார்த்தைகளே இனிய சங்கீதம் போன்றவை; பாடாமலே பாட்டாகத் தெரிகின்றன. சுகமும், துக்கமும், நாட்டுப் பற்றும் சேர்ந்த இந்தப் பாட்டை இயற்றிய பங்கிம் சந்திரரின் வாழ்க்கை வரலாற்றை இப்போதுக் கவனிப்போம்.

## பிறப்பு

வங்காளத்திலுள்ள 'சௌபீஸ் பர் கனுலபாடா' என்ற கிராமத்தில், 1838-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27-ம் தேதி பங்கிம் சந்திர சட்டோபாத்யாய பிறந்தார். நல்ல குடும்பத்தில் பிறந்ததனால் அவருக்கு நல்ல படிப்பும் கிட்டியது. ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளை அவர் பயின்றார். இளம் பிராயத்திலிருந்தே அவருக்குத் தாய்மொழியினிடமும், தாய் நாட்டினிடமும் பற்றுதல் மிகுந்திருந்தது.

வாலிபராக இருந்தபோது அவருடைய நண்பன் ஒருவன் அவருக்குக் கடிதம் எழுதி இருந்தான். அக்காலத்தில் ஆங்கிலமே வழக்கத்திலிருந்ததால், பலரும் ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதி வந்தனர். பங்கிமுடைய நண்பனும் ஆங்கிலத்திலேயே எழுதியிருந்தான். நண்பனின் கடிதத்தை பிரித்துப் பார்க்காமலேயே அவர் திருப்பியனுப்பி விட்டார். கூடவே அவனுக்கு ஒரு கடிதமும் எழுதினார். 'நண்பா! ஆங்கிலம் உனது தாய்மொழியுமல்ல, என்னுடையதுமல்ல. அப்படியிருக்க, எனக்கு ஆங்கிலத்தில் ஏன் எழுதி இருக்கிறாய்?'' என்று அவர் கேட்டார்.

பங்கிம் போன்றவர்களின் உதாரணத்தினால்தான், வங்க மக்களுக்கு வங்காளி மொழியின் மீது அபிமானம் ஏற்பட்டது. பங்கிம்சந்திரர் ஆங்கிலத்தில் உயர்ந்த ஞானம் பெற்றிருக்கவில்லை என்பதல்ல இதற்குக் காரணம், அவர் ஆங்கிலத்தில் புலமை மிகுந்தவர்தான். அவர் விரும்பியிருந்தால் மற்றவர்களைப்போல் அவரும் ஆங்கில எழுத்தாளராகியிருக்கலாம். ஆனால் அவர் தமது தாய்மொழிக்குத் தொண்டு செய்வதே நலமெனக் கருதினார். அவருடைய இந்த விரதத்தினால் வங்காளிக்கு மட்டுமின்றி, பாரதத்தின் பல்வேறு மொழிகளுக்கும் நன்மை உண்டாயிற்று.

## நாட்டுப் பற்று

அவரிடம் மொழிப் பற்றுடன், நாட்டுப் பற்றும் நிறைந்திருந்தது. வாழ்நாள் முழுவதும் ஆங்கிலேயரிடத்தில் வேலை பார்த்துங்கூட, ஆங்கிலேயர்களுக்கு அவர் அடங்கி நடக்கவில்லை.

ஒரு தடவை முரட்டு வெள்ளையர்கள் சிலர் அவருடைய தம்பி பின் ...ல் நாயை ஏவிவிட்டனர். பையன் மிகவும் பயந்துவிட்டான். இதைப் பார்த்த பங்கிம், நடுவில் புகுந்து வெள்ளையர்களைப் பாடாகப் படுத்தி விட்டார். அவர்கள் நாயை அழைத்துக் கொண்டு மெல்ல நழுவி விட்டனர். அந்நாட்களில் இம்மாதிரியான தீரச் செயல் புரியக்கூடியவர்கள் அதிகமாக இல்லை. அவர் வெள்ளையர்களை மதிக்காத காரணத்தால் உத்தியோகத்தில் போதுமான அளவு முன்னேற முடியவில்லை.

பங்கிம் பெரிய அறிவாளி. படிப்பு முடிந்ததும் அரசாங்க உத்தியோகத்தில் அவர் சேர்ந்தார். அவருடைய காலத்தில் நன்றாகப் படித்தவர்கள் அரசாங்க வேலையில் சேர்வதுதான் வழக்கமாக இருந்து வந்தது.

## வங்க இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்!

பங்கிம் சந்திரர் உத்தியோகத்தில் சேர்ந்தபோதே இலக்கிய சேவையிலும் ஈடுபட்டார். முதன் முதலில் அவருடைய கவிதைகள் சில பிரசுரமாயின. அப்போது வங்காளி மொழியில் நல்ல கவிதை இயற்றக்கூடியவர்கள் பலர் இருந்தனர். ஆனால் நாவல்களோ, சிறு கதைகளோ எழுதக் கூடியவர்கள் இல்லை. அந்நாட்களில் வங்கத்தில் ஆங்கிலம் அதிகமாகப் பழக்கத்திலிருந்தது. படித்த இளைஞர்கள் ஆங்கிலத்தில் பேசுவதிலும், எழுதுவதிலும் அதிலுள்ள இலக்கியங்களை மனப்பாடம் செய்வதிலும் எவ்வளவு ஆர்வம் காட்டினரோ, அவ்வளவு வங்காளி மொழியில் காட்டவில்லை. வங்க இலக்கியம் ஆங்கிலத்துக்கு ஈடாகாது என்ற எண்ணம் மேலோங்கி நின்றது. ஒரு பக்கம் ஆங்கிலம் படித்தவர்களும், மற்றோர் பக்கம் சம்ஸ்கிருதப் பண்டிதர்களுமாக வங்காளி மொழி, அதன் இலக்கியம் இரண்டையுமே ஒதுக்கி வைத்தனர்.

நூறு ஆண்டுகளுக்கு முந்தி வங்கத்தில் வாழ்ந்தவர் பங்கிம்சந்திரர். வங்க இலக்கியத் தொண்டில் அவர் ஈடுபட்டார். உத்தியோகம் பார்த்து வந்தாலும், இலக்கியப் பணியை அவர் மறக்கவில்லை. அலுவலகத்துக்கு வெளியில் உத்தியோக விஷயங்களைப் பற்றிப் பேசமாட்டார். அந்தக் காலத்தில் அவரால் எப்படித்தான் அரசாங்க அலுவலையும் கவனித்துக்கொண்டு இவ்வளவு இலக்கியங்களையும் இயற்ற முடிந்ததோ? இலக்கியத்தின் எல்லாப் பிரிவுகளிலும் அவர் எழுதினார். என்றாலும், நாவல், கட்டுரை ஆகியவற்றை எழுதுவதில் அவர் அதிகமாகக் கவனம் செலுத்தினார். பாரத நாட்டு மக்களுக்கு அறிவூட்டுவதற்காக அவர் கட்டுரைகளை எழுதினார். இன்று நாம் கீழே விழுந்து கிடந்தாலும், ஒரு காலத்தில் அறிவிலும் விஞ்ஞானத்திலும் மேற்பட்டிருந்தோம் என்பதைத் தம் கட்டுரைகளில் அவர் வலியுறுத்தினார். அவர் எழுதிய நாவல்களோ தேச பக்தியையும், வீரத்தையும் மக்களுக்கு ஊட்டின!

## முதல் நவீனம்

அவருடைய முதல் நவீனம் ''துர்க்கேச நந்தினி'' இது ஒரு சரித்திரக் கதை. இதை எழுதியபோது அவருக்கு வயது இருபத்தேழு. வெகு அழகாக எழுதப்பட்ட இதைப் படித்தவர்களுக்கு ஒரு விழிப்பு ஏற்பட்டது. வங்காளி மொழி படிப்பதற்கு ஏற்றதல்ல என நினைத்திருந்தவர்களும்கூட, படித்தவர்கள் அந்தக் கதையைப் புகழ்ந்ததைப் பார்த்து, தாங்களும் படித்தனர்; அதிலிருந்து ஒரு புதிய உற்சாகத்தையும் பெற்றனர். பங்கிம்சந்திரருடைய கட்டுரைகளும், நாவல்களும் எப்பொழுது வெளிவரும் என்று மக்கள் எதிர்பார்க்கத் தொடங்கினர்.

## வங்கதர்சன்

பங்கிம் சந்திரர் ஓர் இலக்கியப் பத்திரிகையைத் தொடங்கினார். அதன் பெயர் ''வங்கதர்சன்'' இன்று பாரத நாட்டில் பல்லாயிரம் பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஆனால் அந்நாட்களில் நிலைமை வேறு. 'வங்கதர்சன்' தான் அப்பொழுதிருந்த ஒரே ஒரு இலக்கியப் பத்திரிகை; அதிலும் அசாதாரணமான பத்திரிகை. அதன் ஆசிரியர் பங்கிம் சந்திரரே. மிக நன்றாக எழுதுபவர்களின் கட்டுரைகளே அதில் வெளியிடப்பட்டன. பங்கிம் சந்திரரின் படைப்புகள் அதற்கு சிறப்புக் கவர்ச்சி அளித்தன.

நாவல், கட்டுரை, விமரிசனம் முதலிய பலவிதமான இலக்கியங்கள் வங்க தர்சனத்தில் வெளி வந்தன. அப்பத்திரிகை வெளியாகும் நாளை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். கிடைத்ததும் படித்தனர், விமர்சனம் செய்தனர், வியாக்கியானம் செய்தனர். அநேகர் சேர்ந்து படித்தனர். பங்கிம் சந்திரர் எழுதி இருந்தவைகளை மக்கள் மனப்பாடம் செய்தனர். இதிலிருந்து அவர் எவ்வளவு புகழ் பெற்றிருந்தாரென்பது தெரிய வருகிறது. அவருடைய நடையைப் பின்பற்றி எழுதிய மற்ற எழுத்தாளர்களை அறிவாளிகளாக மக்கள் மதித்தனர். இவ்வாறு பங்கிம் சந்திரர் இலக்கியத் துறையில் நல்ல புகழ் பெற்றிருந்தார்.

புத்துயிர் பெற்ற வங்காளி மொழிக்கு பங்கிம் சந்திரர் தந்தையாக விளங்கினார். இவருக்கு முன்னால் ராஜாராம் மோஹன்ராயும், ஈசுவர சந்திர வித்தியாஸாகரும் வங்காளி நடையை அலங்கரித்திருந்தனர். பங்கிம் அதை மேலும் செழிப்பாக்கி அழகுபடுத்தினார்; ஒவ்வொரு வீட்டிலும் வங்காளி மொழியை ஒலிக்கச் செய்தார்.

மகாகவி ரவீந்திரருடைய இலக்கியக் கல்வி, பங்கிம் சந்திரருடைய 'வங்க தர்சன'த்தின் ஆதரவில் வளர்ந்தது. ரவீந்திரர் வருங்காலத்தில் ஒரு இலக்கிய மேதையாக விளங்குவார் என்பதை பங்கிம் சந்திரர் முன்கூட்டியே அறிந்திருந்தார்.

## மாணவனைப் பாராட்டிய குரு!

ஒரு திருமணத்தில் பங்கிம் சந்திரரும், ரவீந்திரரும் கலந்து கொண்டனர். பங்கிம் சந்திருக்கு அப்போது ஐம்பது வயது இருக்கும். அவர் வங்க இலக்கிய வானில் நண்பகல் சூரியனைப் போல் பிரகாசித்துக்கொண்டிருந்தார். பங்கிம் சந்திரர் வந்ததும் அவரை மாலைகளால் மூடி விட்டார்கள் மக்கள். உடனே அவர் அந்த மாலைகளைக் கழற்றி ரவீந்திரருக்குச் சூட்டினார். இளம் ரவீந்திரரை அவர் இவ்வாறு பகிரங்கமாகக் கௌரவித்தார்.

பங்கிம் சந்திரரைத் தம்முடைய குருவாக மதித்திருந்தார் ரவீந்திரர்! வங்காளி மொழியை படிப்பவர்களுக்கும், வங்க எழுத்தாளர்களுக்கும் நண்பர் என பங்கிமை ரவீந்தர் குறிப்பிடுவதுண்டு. ''இனிய நீரும், இனிய பழங்களும், மலயமாருதமும் கொண்டு குளிர்ந்திருக்கும்'' வங்கத் தாயினால் அன்புடன் தழுவப்பட்ட செம்மல் என்றும் அவர் போற்றினார்.

பங்கிம் சந்திரர் முதலில் எழுதிய நாவல்களின் நடை நாடக பாணியில் இருந்தது. அவைகளில் கலவர நிகழ்ச்சிகள் மிகுந்திருக்கின்றன. முதலில் சமஸ்கிருத வார்த்தைகளை அவர் அதிகமாகக் கையாண்டார். நாளாவட்டத்தில் அவருடைய படைப்பு வாழ்க்கையின் அருகில் வந்து,

துதனுடன் ஒட்டி நின்றது. நடையிலும் எளிமை ஏற்பட்டது.

### இரண்டாவது நவீனம்!

'துர்க்கேச நந்தினி' சரித்திர சம்பந்தமான ஒரு நாவல் என்று சொன்னோம். அவருடைய இரண்டாவது நாவல் 'கபால குண்டலா' என்பது. இந்த நாவலில் வரும் பெண் இயற்கையின் நடுவில் வளர்ந்தவள்; சமூகத்தின் பழக்கவழக்கங்களை அறியாதவள். சுதந்திரமாக வாழும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சித்திரிக்க விரும்பினார் பங்கிம் சந்திரர். இயற்கையின் மத்தியில் வளரும் காட்டு மலராக இருந்தாள் அவள். உலகிலிருந்தும் சமூகத்திலிருந்தும் விலகி, காட்டில் வளர்ந்தால் தான், கபால குண்டலாவைப் போல் இயற்கையாக இருக்க முடியும் என்பது பங்கிம் சந்திரரின் கருத்து.

### அவர் படைத்த இதர நவீனங்கள்

'கபால குண்டலா'வுக்குப் பிறகு அவர் 'மிருணாளினி' என்னும் நவீனத்தை இயற்றினார். பிறகு ஒன்றன்பின் ஒன்றாக 'விஷ விருக்ஷம்'. 'கிருஷ்ண காந்தன் உயில்', 'ரஜனி', 'சந்திரசேகர்' போன்ற பல நவீனங்கள் வெளி வந்தன.

பங்கிம் சந்திரருடைய நவீனங்கள் பெரும்பாலும் 'வங்க தர்சனத்'தில் வெளி வந்தன. பல்வேறு பொருள்கள் பற்றிய அவருடைய கட்டுரைகளும் அப் பத்திரிகையில் வெளி வந்தன. அவைகளைப் படித்தோமானால், பங்கிம் சந்திரரின் ஆழ்ந்த கல்வியையும், சிந்தனைத் திறனையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அவற்றை அறிஞர்கள். விரும்பிப் படித்தனர், விமர்சித்தனர். கதை மட்டும் எழுதுபவராக இல்லாமல், அறிஞராகவும் பரந்த மனப்பான்மையுள்ள சகாவாகவும், படித்த மனிதர்கள் இடையே பங்கிம் சந்திரர் வாழ்ந்து வந்தார்.

### 'ஆனந்தமடம்' நாவலே வந்தே மாதரத்தின் பிறப்பிடம்!

நாட்டுப் பற்று நிறைந்த உயர்ந்த நாவல் ''ஆனந்த மடம்''; அதில்தான் முதன் முதலில் 'வந்தே மாதரம்' என்னும் நாட்டு வணக்கப் பாடல் இடம் பெற்றது. பங்கிம் சந்திரருடைய 'ஆனந்தமடம்' ஒரு புதிய ராகத்தைப் பாடிக் காண்பிக்கவே படைக்கப்பட்டது போலும்! இந்த நவீனத்தைச் சமூகக் கதை என்றும் சொல்லலாம், ஓரளவில் சரித்திரக் கதை என்றும் சொல்லலாம். உண்மையில் அது உருவான தன் நோக்கமே, கதையின் வாயிலாக நாட்டுப் பற்றைப் பரப்புவதுதான்!

### ஆனந்தமடம் நாட்டுப் பற்றை வளர்த்தது!

வெளியாரின் ஆளுகையிலிருந்து தேசத்தை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களின் மனத்தில் எழுந்ததற்கு ஆங்கிலம் படித்ததோ, ஐரோப்பாவின் சரித்திரத்தைப் படித்ததோ காரணம் அல்ல! ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்நாட்டு மக்களைப் படுத்திய பாடும், அவர்களுக்கு இழைத்த அவமானமுமே இவ்வெண்ணத்தை எழச் செய்தன! பங்கிம் சந்திரரின் பிரசித்தி பெற்ற இந்த நவீனம் நாட்டுப் பற்றின் அறைகூவலாக வந்தது. ஒரு கற்பனையை உருவாக்கி நாட்டின் முன், மகத்தான ஒரு இலட்சியத்தை வைத்தார் பங்கிம் சந்திரர்! இந்த நவீனத்தின் சாரம் வருமாறு:

ஒரு மடம்; அதில் அநேக சந்நியாசிகள் இருந்தனர், நாட்டைப் கைப்பற்றிய விரோதிகளை எதிர்த்து அவர்கள் போராடினர்: இலட்சியம் நிறைவேறுவதற்காக உயிர் துறந்தனர்; தங்களைப் பலி கொடுத்தனர், எதிரிகளுடன் போராட ஆயுதந் தாங்கினர்; 'வந்தே மாதரம்' என்பது அவர்களுடைய தாரக மந்திரம்; அவர்கள் பாரத மாதாவின் திருவடிகளில் பலியாயினர்! ஒரு சிலர் மாத்திரம் அன்றி ஒரு சமூகத்தையே ஒன்று கூட்டிக் கிளர்ச்சிக்குத் தயார் செய்ததாக அக் கதையில் காட்டப்பட்டிருக்கிறது.

### சுதந்திரப் போராட்டத்திற்கு வழிகாட்டிய நாவல்!

'ஆனந்த மடத்தில்'தான் முதன் முதலில் அரசியல் கிளர்ச்சி என்னும் கதை சொல்லப்பட்டது. நாட்டைக் காக்க, வெள்ளையரின் ஆட்சியை எதிர்க்க இளைஞர்களுக்கு ஒரு வழி காண்பிக்கப் பட்டது. ''ஆனந்தமடம்'' என்பது ஒரு கற்பனைச் சித்திரமே. எனினும் சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்ற கருத்து நாட்டு மக்களுக்கு அதன் வாயிலாகப் போதிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத்திற்கான வழியையும் அது காட்டியது. அதற்கான மந்திரமும் உபதேசிக்கப்பட்டது. அப்பொழுதிருந்த நிலைமையில் இது போதுமானதாக இருந்தது. இக்கதை எழுதியதன் விளைவாக அவருடைய வேலையே போகவிருந்தது.

### வீர உணர்ச்சியூட்டும் நாவல்கள்!

'ஆனந்த மட'த்திற்குப் பிறகு பங்கிம் சந்திரர் 'ஷீதாராம்' என்ற நாவலை எழுதினார். இவருடைய கடைசி நாவல் 'ராஜ ஸிம்ஹன்' என்பதாகும். 'ராஜ ஸிம்ஹன்' ஒரு சரித்திர நாவல். இந்த இரு நவீனங்களும் வீர உணர்ச்சியை ஊட்டுபவை.

'தேவி சௌதராணி' என்னும் நாவலும் ஏறத்தாழ இதே சமயத்தில் எழுதப்பட்டதே. இது ஒரு மாபெரும் மங்கையின் சரித்திரம். பங்கிம் சந்திரர் அநேகமாக எல்லா நாவல்களிலும் பெண்களின் சரித்திரத்தைச் சித்திரிக்கும்போது வெகு கவனத்துடனும், மரியாதையுடனும் வரைந்திருக்கிறார்.

பங்கிம் சந்திரருடைய மற்றோர் நூல் 'கமலா காந்தேர் தப்தர்' (கமலா காந்தனின் நாட் குறிப்பு) என்பதாகும். இதில் பங்கிம் சந்திரருடைய பெருந்தன்மை, நாட்டுப் பற்று, சமூகப் பற்று, அரசியல் கொள்கைகள் முதலியவை நம் எதிரில் தோன்றுகின்றன. ஒரு சமயம் நாட்டு நிலையைக் கண்டு அவர் கதறுகிறார்; மற்றொரு சமயம். பரிகசித்துச் சிரிக்கிறார், இன்னொரு இடத்தில் மகிழ்ச்சியுடன் புன்னகை புரிகிறார். கதையைப் படிக்கும் பொழுது அவருடைய பல்வேறு மன நிலைகளையும் காண்கிறோம்.

பங்கிம் சந்திரர் பண்பு மிகுந்தவர். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். உயர்ந்த எழுத்தாளருக்கு வேண்டிய குணங்களனைத்தும் அவரிடம் நிரம்பியிருந்தன. அவர் படிப்பில் மூழ்கியிருந்தார். வங்காளி தவிர ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய வற்றிலும் அவருக்கு நல்ல தேர்ச்சியிருந்தது. அவர் எப் பொழுதேனும் ஆங்கில நாளேடுகளுக்கு எழுதிய கட்டுரைகள் மிகக் கம்பீரமாகவும், தீட்சணியமாகவும் இருந்தன. 'கிருஷ்ண சரித்திரம்' என்னும் பெயரில் பங்கிம் சந்திரர் சில கட்டுரைகள் எழுதினார். கிருஷ்ண பகவானுடைய வரலாறு பற்றிய விமரிசனம் அவற்றில் அடங்கியிருந்தது. அக்கட்டுரைகளில் அவர் கிருஷ்ண பகவானுடைய செயல்களைப் புதிய முறையில் வியாக்கியானம் செய்திருந்தார். மதத்தை ஆடம்பரங்களிலிருந்து பிரிக்கும் நோக்கத்துடனேயே அவர் இவற்றை எழுதினார்.

# பத்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பனைத் தொழில்!





மக்களிடையே வேலை வாய்ப்பை ஏற்படுத்த வல்ல தொழில்களில் பனைத் தொழில் ஓர் முக்கியமான குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள சுமார் 4 கோடி பனை மரங்களில் 2 கோடி பனை மரங்கள் பயன்படக் கூடிய நிலையிலுள்ள மரங்களாகும். இவற்றில் 50 இலட்சம் பனை மரங்களைப் பயன்படுத்திச் சுமார் 2 இலட்சம் பேர் தொழில் செய்து பிழைக்கின்றனர். அனைத்துப் பனை மரங்களையும் திட்டமிட்டுப் படிப்படியாகப் பயன்படுத்தினால் சுமார் 10 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுப் பயனடைய முடியும் என்னும் உண்மையைச் செங்கை மாவட்டம் கடப்பாக்கத்தில் அண்மையில் நடைபெற்ற பனைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்தார்.

பனைத் தொழிலானது, நமது நாட்டின் விவசாயம், கைத்தறி நெசவு ஆகிய இரு முக்கிய தொழில்களுக்கு அடுத்ததான இடத்தை வகித்து வருகிறது. தமிழ் நாட்டில்,





பட்டை தும்பாக்கப்படுகிறது

நீலகிரி நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் பனைத் தொழில் இடம் பெற்றுள்ளது. மது விலக்குத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு மத்திய, மாநில அரசு இத்தொழிலின் மேம்பாட்டுக்குத் தீவிர கவனம் செலுத்தி வந்து உள்ளன. இத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உதவும் பணியில் கூட்டுறவு சங்கங்கள் பாடுபட்டு வருகின்றன. இன்று தமிழ் நாட்டில் சுமார் 1,500 பனை வெல்ல உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், இத்தொழிலில் ஏற்பட்டுள்ள மாறுதல் சூழ்நிலைக்கேற்ப தங்கள் நடவடிக்கைகளை மாற்றி யமைத்துக்கொண்டு செயல்பட்டு வருகின்றன.

பதநீர் உற்பத்தி, கருப்பட்டி பனங்கற்கண்டு தயார் செய்தல், பனஞ்சீனி தயாரிப்பு, பனை நாரிலிருந்து பலவகையான உபயோகப் பொருள்கள் தயாரித்தல், பனை ஓலையிலிருந்து விசிறி, கூடைகள் முதலியன செய்தல் போன்ற பணிகளில் கூட்டுறவு இயக்கம் ஈடுபட்டுள்ளது.






"ஐஸ் ஆப்பிள்" என அயல் நாட்டாரால் புகழப்பட்ட பனை நுங்கைப் பதப்படுத்தி பனஞ்சீனிப் பாகிட்டு டப்பாக்களில் அடைப்பதற்கான முயற்சியில் தமிழ் நாடு மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையம் நடத்திய ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளது. பனைப் பொருள்கள் ஏற்றுமதியில், பனை நுங்கின் ஏற்றுமதிக்கும் இதன் மூலம் நல்ல வாய்ப்பு ஏற்படும் என நம்பலாம்.

பனைத் தொழிலில் அரிசனங்களும் பங்கு பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. குறிப்பாக, திருநெல்வேலி, சேலம், தர்மபுரி, கோவை, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் பெரும்பாலான அரிசன குடும்பங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

கிட்டத் தட்ட ஓர் ஆண்டில் 8 முதல் 10 மாதங்கள் வரையில் வேலைவாய்ப்பு அளிக்க வல்ல முக்கிய தொழிலாகும் இது என்பது கருதி அரசாங்கம் இதன் மேம்பாட்டுக்காக அனைத்து உதவிகளையும் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வாயிலாக அளித்து வருகிறது. கருப்பட்டி, இதர பனைப் பொருள்கள் உற்பத்தி விற்பனையில் அனைத்திந்தியாவில் தமிழ் நாடு முதலிடம் வகித்து வருகிறது.



பனை ஓலையால் உருவாக்கப் பெறும் நாற்காலி.




# சிறு நிலக்கிழார்களுக்கு ஏற்ற சிக்கனப் பாசன முறைகள்

**இரா. க. சிவனப்பன்,**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641003.

பாசன நீரை மிச்சப்படுத்துதல் என்பது ஒரு பெரிய கடினமான காரியம். ஏன் என்றல் அதிக அளவில் நீரைச் சேமிக்கும் ஏரி, குளம் மற்றும் கால்வாய்களை அரசாங்கம் தன்னுடைய செலவில் அமைத்து, நீரை நிர்வகித்து வருகின்றது. ஆனல் அந்த நீரை உபயோகிப்பவர்கள் குடியானவர்கள். ஆகையால் அரசாங்கமும், குடியானவர்களும் ஒருங்கிணைந்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி ஒத்துழைத்தால்தான் நீரைச் சேமிக்க முடியும். மேலும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் நீரின் தேவையையும், முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். அப்படி அறிந்திருந்தால்தான் நீரைச் சீராகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த முடியும். உதாரணமாக, கிணற்றில் அதிக அளவு நீர் இருக்கும்போது குடியானவர் தண்ணீரைப் பற்றிக் கவலைகொள்ளாமல் தேவைக்கும் அதிகமாக நீரை இறைத்துப் பாசனம் செய்கிறர். ஆனல் தற்போது தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாகி விட்டது. ஆகையால் இதைப் பற்றி எல்லோரும் தீவிரமாக சிந்திக்க முற்பட்டுவிட்டார்கள். விஞ்ஞானிகள், கிடைக்கும் நீரைக் கொண்டு எப்படி, எவ்வாறு அதிக மக்களுக்குப் பயனை ஏற்படுத்த முடியும் எனத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

பாசனம் என்பது ஒரு கலை. இது மிகவும் பழமையானது. தற்பொழுது பாசனம் செய்யும் முறை நம்முடைய மூதாதையர்கள் கையாண்ட பழைய முறையேயாகும். உலகில் பல இடங்களில் நீரைச் சேமிக்கப் புதிய முறைகள் பின்பற்றப்படுகின்றன. என்றலும், அம்முறைகளை நமது வேளாண் பெருமக்கள் நடைமுறையில் உபயோகிப்பதில்லை. எந்தெந்தப் புதிய முறைகளைப் பயன்படுத்தினல் கிடைக்கும் நீரைக் கொண்டு அதிகப் பரப்பளவில் பாசனம் செய்ய முடியும் என்பது பற்றியும், அதனுடைய பலாபலன்கள் எவை என்பது பற்றியும் கீழே தரப்பட்டிருக்கின்றது.

1. வரிசையாக சால் முறையில் நடும் பயிர்கட்கு, ஒரு சால்விட்டு ஒரு சாலில் பாசனம் செய்வதாலும், மற்றும் பயிர் வரிசைகளில் அமைந்த இடைவெளியைக் குறைத்து ஒரு சாலின் இரு புறமும் செடிகள் நட்டு, சாலுக்கு சால் இடைவெளியை அதிகரித்து (Skip furrow) பாசனம் செய்வதாலும் நீரை மிச்சப்படுத்தலாம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பருத்திக்கு இம்மாதிரிப் பாசனம் செய்து ஆராய்ச்சி நடத்தியதில் மகசூலில் குறைவின்றி சுமார் 30 முதல் 45 சதவீதம் வரை நீரை மிச்சப்படுத்த முடிந்தது. இம்முறையைக் கரும்பு, மற்றும் சால் பாசனத்தின் மூலம் பயிரிடப்படும் பிற பயிர்கட்கும் கையாளலாம்.

2. ஆராய்ச்சி முடிவின் படி வாழை, திராட்சை, பப்பாளி

போன்ற பழ வகைச் செடிகட்குப் பாத்தியில் (Basin) அளவைக் குறைக்க வாய்ப்பு உள்ளது. அப்படிப் பாத்தியின் அளவைக் குறைப்பதன் மூலம் மகசூல் குறையாமல் தண்ணீரிலும் அதிக சிக்கனம் செய்யலாம் எனத் தெரிய வந்தது. ஆகையால் இம் முறைகளைக் குடியானவர்கள் மிகச் சுலபமாகக் கையாளலாம்.

3. சில இடங்களில் நிலம் மேடும், பள்ளமுமாகவும், மண்ணின் ஆழம் குறைந்தும் இருக்கும். அப்படிப்பட்ட நிலத்தைச் சமன் செய்ய முடியாது. அதிகச் செலவும் ஆகும். இம்மாதிரியான சூழ்நிலையிலும், மணற் பாங்கான நிலத்திலும் தெளிப்புப் பாசன முறையை உபயோகிப்பதன் மூலம் சுமார் 25 முதல் 35 சதவீத நீரை மிச்சப்படுத்த முடியும் என ஆராய்ச்சி முடிவுகளால் அறியப்படுகின்றது. ஆனால் இதைக் கையாள ஒரு ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 1,500 முதல் 2,800வரை செலவு ஆகும்.



4. சொட்டு நீர்ப் பாசனம் என்ற புதுமையான பாசனமுறை உலகெங்கிலும் ஆராயப்பட்டு, மேற்கத்திய நாடுகளில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதைப் பாசன முறையில் ஒரு புரட்சிகரமான முன்னேற்றம் எனச் சொல்லலாம். இம்மாதிரிப் பாசனத்தில் எல்லா விதக் காய்கறிப் பயிர்களும், வாழை, கரும்பு, பப்பாளி, திராட்சை மற்றும் இம்மாதிரியான அதிக இடைவெளிதேவைப்படும் எல்லாப் பயிர்களையும் பயிர் செய்யலாம். இந்தப் பாசனத்தின் மூலம் நாம் தற்பொழுது ஒரு ஏக்கருக்குப் பாய்ச்சும் தண்ணீரைக் கொண்டு சுமார் 3 முதல் 4 ஏக்கர் வரை பாசனம் தரலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால்இப்பாசனத்தைக் கையாள ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 2,500 முதல் 3,000 வரை செலவாகும். அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கணக்கிடும்பொழுது, இந்தத் தொகை அதிகமல்ல எனத் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

5. தமிழ்நாட்டில் பயன்படுத்தும் தண்ணீரில் 80 சதவீதத்திற்கும் மேல் நெல்லுக்குப் பாய்ச்சுவதால், இதில் ஒரு சிறு அளவை மிச்சப்படுத்தினாலும் அது கணிசமான அளவுக்கு இருக்கும். தண்ணீரைச் சேமிக்கும் முறையைப் பயன்படுத்தினால் நெற் பயிரில் சுமார் 25 முதல் 30 சதவீதம் வரை நீரை மிச்சப்படுத்த முடியும் என ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில், நெல்லுக்கு, பூப்பதற்குச் சற்று முன் வரை நிலத்தில் நீரைத் தேக்குவது அவசியம் இல்லை. அதற்குப் பிறகு 3 முதல் 5 செண்டி மீட்டர் ஆழத்திற்கு நீரை நிறுத்தினாலேயே போதுமானது.

6. நீர்த் தேவை, பயிருக்குப் பயிர் மாறுபடுகின்றது. ஆதலால் குறைந்த நீரைக் கொண்டு அதிக லாபம் தரும் பயிர் வகைகளைப் பயிர் செய்தல் அவசியம். உதாரணமாக காய்கறிகளையும், சிறு தானிய வகைகளையும் பயிர் செய்தால், நெல்லையும் கரும்பையும் விட அதிக இலாபம் கிடைக்கும் என அறியப்பட்டுள்ளது.

7. நீரை வாய்க்காலின் மூலமாக எடுத்துச் செல்லும்பொழுது கால்வாய்ப் பாசனப் பகுதியில் சுமார் 50 சதவீதத்திற்கு மேலும் கிணற்றுப் பாசனத்தில் சுமார் 15 முதல் 20 சதவீதம் வரையும் கசிந்து வீணாகின்றது. இதைத் தவிர்க்க சிமெண்ட் பூசப்பட்ட வாய்க்கால் (Pre-Fabricated Channels) களையோ அல்லது பூமிக்கடியில் குழாய் மூலமாகவோ நீரை எடுத்துச் செல்லலாம். அம்மாதிரி நீரை எடுத்துச் செல்லும்போது ஆங்காங்கே அடைப்பான்களையும், கதவுகளையும் பொருத்தி, வேண்டும்பொழுது, வேண்டிய இடத்தில், வேண்டிய அளவு நீரை எடுத்துக் கொள்ள முடிகின்றது. இதனால் நீர் செலவாவதைக் கட்டுப்படுத்தலாம்.

8. நிலத்தைச் சமன் செய்வதனால் மட்டும் சுமார் 25 முதல் 30 சதவீதம் வரை நீரை மிச்சப்படுத்தலாம் எனக் கணக்கிட்டுள்ளனர். ஆகையால் நிலத்தைப் பாசனத்திற்குக் கொண்டு வருமுன் சமன் செய்தல் நலம்.

மேற் சொன்ன முறைகளைக் கையாண்டால், தண்ணீரை மிச்சப்படுத்துவதோடு அல்லாமல் அந் நீரைக் கொண்டு அதிக நிலத்தைப் பாசன வசதிக்குள் கொண்டு வர முடியும் எனத் திட்டவட்டமாகச் சொல்லலாம். ஆனால் அதற்குத் தேவையான கட்டுமானப் பணிகளை முன்கூட்டியே அமைத்தால் இந்த நவீன முறைகளை உடனடியாகக் கையாளலாம் என்பது திண்ணம்.

இதைத் தவிர, கீழ்க் காணும் நிர்வாக முறைகளைச் செவ்வனே கையாண்டால் மேலும் நீரைச் சிக்கனப்படுத்த முடியும். அவை யாவன :

1. அரசு அலுவலர்களும், உழவர்களும் திட்டப் பகுதியின் (Project area) ஒருங்கிணைந்து நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்.

2. நீர் நிர்வாக விரிவாக்க அலுவலர்களை வேண்டிய இடங்களில் அமர்த்தல்.

3. உழவர்கட்கு இடையில் ஒத்துழைப்புக் கொடுத்து, கிடைக்கும் நீரைச் சரியாகப் பயன்படுத்துதல்.

4. பயிருக்குத் தேவையான அளவு நீரை மட்டும் பாய்ச்சுதல்.

5. கால்வாய் நீரையும், நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்துப் பாசனம் செய்தல்.



நாற்றங்காலில் உரமிட்டு வளர்த்த நாற்றுக்கள், உரமிடாமல் வளர்த்த நாற்றுக்களைக் காட்டிலும் நன்றாக வளர்ந்து அதிக விளைச்சல் அளித்துள்ளன.

மேற்கூறப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளைப் பார்க்குமிடத்து, சோளத்தை நாற்றுப் பாவி நடவு செய்தால் விளைச்சல் குறைகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இருப்பினும் கீழ்க் கூறப்பட்ட சந்தர்ப்பங்களில், நாற்றுப் பாவி நடவு செய்யலாம்.

1. குருத்து ஈயின் தாக்குதல் அதிகமுள்ள சமயங்கள்.
2. தொடக்கத்தில் நீர்ப் பாசன வசதி குறைவாக உள்ள இடங்கள் (நாற்றுப்பாவி நடுவதால் நீரின் தேவையைக் குறைப்பதுடன், தகுந்த காலத்தில் விதைக்க முடியும்).
3. குறைந்த வயதுள்ள, அதிக மகசூல் தரும் பயிர்கள் தேவைப்படும் பல பயிர்ச் சாகுபடிக்கும் இம்முறை ஏற்றது.
4. நன்றாக வடிகால் வசதியுள்ள நிலமாகவும் இருக்க வேண்டும். செவ்வல், மணல் வாரியான பூமிகளில் சோள நாற்றுக்களை நடவு செய்யலாம்.



நாற்று நட ஏற்ற வயதை ஆராய்ந்ததில், மூன்று வார கால நாற்றுக்கள், இரண்டு வார கால நாற்றுக்களை விட உயர் விளைச்சலை அளித்துள்ளன.

உரமிட்ட நாற்றுக்கள், உரமிடாத நாற்றுக்களை விட அதிக அளவுக் கதிர்களைக் கொடுத்து, சராசரி எக்டேருக்கு 288 கிலோ அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளன. நாற்றுப் பாவி நடவு செய்ததில், பயிரின் வயது 10 முதல் 15 நாட்கள் வரை குறைகிறது.

தகவல் :—

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

## கம்பு விதைப்புக்குச் சில ஆராய்ச்சிக் குறிப்புகள்

சோளத்தைப் போலவே, கம்பில்தொன்று தொட்டு, நேரடி விதைப்பு முறை கையாளப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவியல் துறையினர் விதை தெளித்தல், விதை ஊன்றுதல், கருவி மூலம் விதைத்தல் ஆகிய முறைகளைப் பற்றி ஆய்வு நடத்தினர். இதனால், கருவி விதைப்பும், கை விதைப்பும், விதைத் தெளித்தலை விட முறையே 36.7 சதம் 16.9 சதம் அதிக விளைச்சல் கொடுத்துள்ளது எனக் கண்டு பிடிக்கப்பட்டது. கருவி விதைப்பு மூலம் எக்டேருக்கு (2.5 ஏக்கர்) 723 கிலோ தானியமும், கை விதைப்பு மூலம் 619 கிலோ தானியமும், விதை தெளித்தல் மூலம் 529 கிலோ தானியமும் கிடைத்துள்ளன.

நேரடி விதைப்பு, நாற்றுப் பாவி நடவு செய்யும் முறைகளும் ஆராயப்பட்டன. இதில் நேரடி விதைப்பைக் காட்டிலும், நாற்றுப் பாவி நடவு செய்தது, அதிக விளைச்சல் கொடுத்துள்ளது.

# விண்வெளி மூலம் தகவல் பெற இந்தியாவில் மற்ருெரு தரை நிலையம்



**வி**ண்வெளிச் சாதனத்திற்கு சைகைகளைத் தெரிவிக்கவும் அதிலிருந்து தெரிவிக்கப்படும் சைகைகளை ஒழுங்குபடுத்தி அனுப்பவும், தரை நிலையத்தில் பாத்திர வடிவத்தில் ஒரு ஆன்டென்ஞவும் பிற கருவிகளும் உள்ளன. வெளி நாடுகளிலிருந்து வரும் தகவல்களை, அஞ்சல் செய்ய அதை டெலிபோன், டெலக்ஸ், தந்தி, ரேடியோ போட்டோ ஆகியவற்றைப் போல உபயோகிக்கலாம்.

இந்தியாவில் இரண்டு தரை நிலையங்கள் உள்ளன. முதலாவது பூனைவுக்கு அருகே ஆர்வியிலும் இரண்டாவது நிலையம் டேராடூனுக்கு அருகேயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை இரண்டும் இந்து மாக்கடலில் ஈக்குவேட்டருக்கு மேலே 36 ஆயிரம் கி.மீ. உயரத்தில் மிதக்க விடப்பட்டுள்ள 'இண்டல்காட்' என்ற விண்வெளிச் சாதனத்துடன் இணைந்து வெளிநாட்டுத் தகவல்களை அஞ்சல் செய்கின்றன.

ஒரு இடத்தில் மட்டும் தரை நிலையம் இருந்தால் வெளிநாடுகளிலிருந்து வரும் அல்லது அவற்றுக்கு அனுப்பப்படும் தகவல்களை உள்நாட்டுக்குள் நெடுந்தூரத்துக்கு அனுப்ப வேண்டியதைத் தவிர்க்க, இரண்டாவது தரை நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது நிலையம் டேராடூனிலிருந்து 23 கி.மீ. தொலைவில் ரிஷிகேஷ் சாலையில் லச்சிவாலா காட்டில் 30 ஹெக்டேர் பரப்புள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மைக்ரோ அலைகளால் இந்தத் தரை நிலையம் முசெளரி, ரூர்க்கி, முஜாபர் நகர், மீரட் வழியாக தில்லியுடன் இணைக்கப்பட்டு இருக்கிறது.

இந்த இணைப்பில் அனுப்புவதற்கு ஒரு சுற்றும் எதிர்த்திக்கில் வரும் செய்திகளை பெற மற்ருெரு சுற்றும் உள்ளன. ஒவ்வொரு சுற்றும் ஒரே சமயத்தில் 960 டெலிபோன் தகவல்களை அல்லது கலர் டெலிவிஷன் நிகழ்ச்சியை அஞ்சல் செய்யும். இவை தவிர தில்லி டெலிவிஷன் நிகழ்ச்சிகளை முசெளரியில் பார்க்கவும் கேட்கவும் வழி செய்ய மற்ருெரு சுற்று உள்ளது.

சர்வ தேச டெலிவிஷன் நிகழ்ச்சிகளை தில்லி டெலிவிஷனில் அஞ்சல் செய்ய வசதியாக, பூமிக்கு அடியில் கேபிள்கள் போடப்பட்டு சர்வதேச டெலிவிஷன் டெலக்ஸ் இணைப்புகளும் செய்யப்பட்டுள்ளன.

**டேராடூன் தரை நிலையத்தில் உள்ள 97 அடி உயரமுள்ளது ஆன்டென்ஞ. இது, இந்தியாவை உலகநாடுகளுடன் இணைத்து உடனுக்குடன் தகவல் பெற உதவுகிறது.**





விண்வெளிச் சாதனத்திலிருந்து சைகையைப்பெற, 29 மீட்டர் விட்டம் உள்ள பெரிய ஆன்டென்ஞ, தரை நிலையத்தில் உள்ளது. இதன் மூலம் 36 ஆயிரம் கி.மீ. தொலைவிலுள்ள விண்வெளிச் சாதனத்தைத் தெளிவாகப் பார்க்க இயலும்.

ஆன்டென்ஞவை வேண்டும் திசையில் திருப்பிக் கொள்ள முடியும். அதற்குக் கிடைக்கும் சைகைகளை 10 லட்சம் மடங்கு பெரிதாக ஆக்கவும் ஆன்டென்ஞவுக்கு இயலும்.

பிழைகளைத் திருத்தவும் வழி உள்ளது. தரை நிலையம் ஒரு டிகிரியில் 100-ல் ஒரு பங்கு வரை தெளிவாகக் காட்டும் ஆற்றல் பெற்றது.

இடையூருக இருக்கக் கூடிய குரல்களைத் தடுக்க, சில கருவிகள்-255 டிகிரி சென்டிகிரேட் என்ற கடுங்குளிரில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது.

அஞ்சல் செய்யும் சைகைகள் தெளிவாக இருக்க வசதியாக, இந்தியன் தொலைபேசி தொழிற்சாலையில் பல முனைக் கருவிகளைச் செய்து கொடுத்திருக்கிருர்கள்.

சைகைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பல மடங்காக்கப்பட்டு 3 கி. வா. 'ஆம்ப்ளிஃபையர்' மூலம் விண்வெளிச் சாதனத்துக்கு அஞ்சல் செய்யப்படுகின்றன.

முன் எச்சரிக்கையாக, முக்கியமான கருவிகள் யாவும்—மின்சார சப்ளை உட்பட— இரட்டிப்பாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதனுல் 99.9 சதவிகிதம் செம்மையாக தரை நிலையம் இயங்குகிறது.

உலகின் சிறந்த தரை நிலையங்களுள் ஒப்பிடத்தக்க டேராடூன் நிலையம், இந்தியப் பொறியாளர்களால் உருவாக்கப்பட்டு, வெள்ளோட்டம் விடப்பட்டு அவர்களாலேயே இயக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையம் அமைக்க 10 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இதில் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் வெளிச் செலவணியாகச் செலவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் கிடைக்காத கருவிகள் மட்டும் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த இறக்குமதிகளுக்காக கனடா அரசாங்கம் கடனுகவும் மானியமாகவும் பணம் கொடுத்திருக்கிறது.

தொழில்நுட்பத் தரம் வாய்ந்த இந்த நிலையம் மேற்கே பிரிட்டன், பிரான்ஸ், நாடுகளின் விண்வெளி சாதனங்களுடனும் கிழக்கே ஜப்பானின் விண்வெளிச் சாதனத்துடனும் நேரடித் தொடர்பு கொண்டிருக்கிறது.

டேராடூன் நிலையம் முதலில் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் நாடுகளில் விண்வெளிச் சாதனங்களுடனும் பின்னர் பிற நாடுகளுடனும் தொடர்பு கொள்ளுமாறு அதன் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.


## தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம்

டாக்டர் எஸ். ரங்கராஜ், 98, லாயிட்ஸ் சாலை,
பி.வி.எஸ்.ஸி.என்.டி.பி.எச்., சென்னை-86.
நிர்வாக இயக்குநர்.

**கோ**ழிப் பண்ணை அமைத்துச் செயல்படுத்துதல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து எண்ணற்ற கடிதங்கள் அனுதினமும் தமிழ் நாடு கோழி இன வளர்ச்சிக் கழகத்திற்கு வரப் பெறுகின்றன. கோழிப் பண்ணை அமைப்பதற் கான நிதி உதவி செய்யும் திட்டம் தற்சமயம் இக்கழகத்திடம் இல்லை. எனினும், கோழிப் பண்ணை அமைத்துச் செயல்பட அங்கீகரிக்கப் பட்ட அரசுடைமை வங்கிகள் கடன் தொகை வழங்குகின்றன. எனவே, பொதுமக்கள் தத்தம் பகுதிகளில் உள்ள அரசுடைமையாக் கப்பட்ட வங்கிகளில் கடன் உதவி பெறலாம்.

மேலும் தொழில் நுட்ப உதவிக்கு இக் கழகத்தைச் சார்ந்த—கீழ்க்காணும் கோழி இன விரிவாக்க நிலையங்களையோ அல்லது உதவித்திட்ட அலுவலகங்களையோ தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

1. **கோழி இன விரிவாக்க நிலையம் :**
   1. அடையாறு.
   2. பெருந்துறை.
   3. செங்கல்பட்டு.
   4. தி. கல்லுப்பட்டி.
   5. கொட்டப்பட்டு.
   6. சேஷஞ்சாவடி.
2. **உதவித் திட்ட அலுவலகம் :**
   1. திருச்சி.
   2. மதுரை.
   3. கோவை.
   4. சேலம்.
3. **கோழிக் குஞ்சு பொறிக்கும் நிலையம் :**
   1. அரசூர்.
   2. கப்பலூர்.
4. **சிறு உதவி மேம்பாடு திட்ட அலுவலகம்:**
   1. செங்கற்பட்டு.
   2. சேலம்.
   3. மதுரை.
   4. வட ஆர்க்காடு.

(Advt.)

# வரலாற்றில் இடம் பெற்ற தீ விபத்துக்கள்!

''ரோம் எரிந்து கொண்டிருந்தபோது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானும்!'' என்று கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

எதைப்பற்றியும் கவலைப்படாமல், பொறுப்பற்ற தன்மையுடன் நடந்து கொள்பவர்களைப் பற்றிக் குறிப்பிட நேரும்போது, நீரோ மன்னனைப் போல் கவலையற்று இருப்பதாகக் குறிப்பிடுவார்கள்.

உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள பின்கண்ட தீ விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தீ விபத்துக்களின் கொடுமை உள்ளத்தை உருக்குவதாகவே உள்ளது என்று சொல்லத் தேவையில்லை.

| வரிசை எண் | தீ விபத்து ஏற்பட்ட இடம் | தீ விபத்து ஏற்பட்ட ஆண்டு | தீ விபத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ரோம் | கி.பி. 64 | திட்டவட்டமாகச் சொல்ல முடியாத அளவுக்கு எண்ணற்றோர். |
| 2. | லண்டன் | 1666 | ஆயிரக்கணக்கானோர். |
| 3. | பெஸ்டிகோ (காட்டுத் தீ) | 1871 | 1,152 பேர் |
| 4. | சிக்காகோ | 1871 | 250 ,, |
| 5. | செயிண்ட் ஜான்ஸ் நீயூபௌண்ட் லாண்ட் | 1892 | 600 ,, |
| 6. | சிக்காகோ (தியேட்டர் தீ விபத்து) | 1903 | 600 ,, |
| 7. | நியூயார்க் துறைமுகம் (நீராவிப்படகு தீ விபத்து) | 1904 | 1,021 ,, |
| 8. | சான்பிரான்சிஸ்கோ | 1806 | 700 ,, |
| 9. | ஸ்மீர் (ஸ்மிர்ன), துருக்கி | 1922 | 1,000 ,, |
| 10. | பாஸ்டன் (தென்னந்தோப்புத் தீ விபத்து) | 1942 | 490 ,, |
| 11. | டெக்சாஸ் நகரம் | 1947 | 500 ,, |
| 12. | சங்கிங், சைன | 1949 | 1,700 ,, |
| 13. | மார்சிநெல்லி, பெல்ஜியம் (நிலக்கரிச் சுரங்க தீ விபத்து) | 1956 | 262 ,, |



# தீ விபத்தைத் தவிர்ப்போம்!



**"தீ"** என்ற கூக்குரலைச் செவிமடுத்தால் யாவரும் நடுக்கம் கொள்வர். தீ ஆக்கவும் செய்யும் அழிக்கவும் செய்யும்! என்றும் எப்போதும் அதனிடம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். தீ விபத்துக்கள் அழிவையும், துயரத்தையும் உண்டாக்குகின்றன. அறியாமை, கவனக்குறைவு, உள்நோக்கம் என்று தீ விபத்து ஏற்படப் பல காரணங்கள் உண்டு. ஆதலால் மக்களனைவரும் விழிப்போடும், பாதுகாப்போடும் இருந்து தீ விபத்துக்கள் ஏற்படாமல் தடுத்திட வேண்டும்.

### நகர்ப்புற தீ விபத்து

நகரங்களில் அடிக்கடி பல தீ விபத்துக்கள் உண்டாகின்றன. இவற்றில் ஏராளமான சொத்துக்களும், மனித உயிர்களும் கூட சேதமாகின்றன. இந்த விபத்துக்களில் பெரும்பாலானவற்றை இலகுவாகத் தவிர்க்க முடியும். இழப்புக்களையும் கணிசமாகக் குறைக்க முடியும்.

வீட்டிலிருக்கும்போதும், சாலையில் நடந்து போகும்போதும், ஊர்திகளில் செல்லும்போதும், நாம் அணையாத தீக்குச்சிகளையும், பீடி, சிகரெட் சுருட்டுத் துண்டு முதலியவைகளையும் கண்டபடி வீசி எறிகிறோம். இது மிகவும் ஆபத்தான பழக்கம்.

படுக்கையிலிருந்தபடியே புகை பிடிப்பது மற்றோர் கெட்ட பழக்கம். தூங்கும்போது புகைக்கும் பொருள் நழுவி விழுந்து படுக்கை அறை முழுவதையும் எரித்துச்சாம்பலாக்கிவிடும்.

சாதாரண சலவைப் பெட்டிகளையும், மின்சார சலவைப் பெட்டிகளையும், உபயோகத்திற்குப் பின் அணைக்க மறந்துவிடக் கூடாது.

ரேடியோ பெட்டிகள், டெலிவிஷன் செட்டுகள் இவைகளை நிறுத்தாமல் தூங்கிவிடக்கூடாது.

மின்சாரம் நொடிப்பொழுதில் வெளிச்சம் தருகின்றது. ஷார்ட் சர்க்யூட், விசைக் கசிவு, ஸ்பரிசம் முதலிய கோளாறுகளினால் அபாயம் ஏற்படும். ஆகையால் மின்சார சாதனங்களை மிக ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்.

வீடுகளில் மண்ணெண்ணை, பெட்ரோல், ஸ்பிரிட் முதலியவைகளைக் கண்ட இடங்களில்—கவனக்குறைவாக—வைக்கக் கூடாது.

'பெட்ரோல்', 'டீசல்' வண்டிகளை பழுது பார்க்கும்பொழுது, அவைகளின் சமீபத்தில் தீக்குச்சிகளையும், மூடியில்லாத விளக்குகளையும் உபயோகிக்காதீர்கள்.



அடுப்பு, ஸ்டவ் அல்லது ஹீட்டரை உபயோகிக்கும்போது நாம் உடுத்தும் ஆடை அதன்மீது படாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

'ஸ்டவ்'அல்லது விளக்கினைபற்ற வைத்த பிறகு எண்ணை அடைக்கக் கூடாது. எண்ணை அடைத்த பிறகே பற்ற வைக்க வேண்டும். மின்சார அடுப்பு, 'காஸ்' அடுப்பு மற்றும் இதர அடுப்புகளுக்கும் பாதுகாப்புத் தட்டி அவசியம்.

குழந்தைகளைச் சமையல் அறையில் தனியாக விட்டுவிட்டு வெளியில் செல்லக்கூடாது. தீப்பெட்டி சிகரெட் கொளுத்தி முதலியவை குழந்தைகள் கையில் கிடைக்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நாள் கணக்கில் வீட்டை விட்டு வெளியே இருக்க நேர்ந்தால், மின் இணைப்பு மெயின் சுவிட்சைத் துண்டித்து விட்டுச் செல்லுங்கள். மின்சார ஓட்டத்தின் பளு அதிகரித்தால் சூடு அதிகரிக்கும். எனவே, பல மின்சாதனங்களை ஒரு முனையில் இணைப்பது கூடாது.

சமையலறையில் வேலை செய்யும்போது செயற்கை இழைகளால் ஆன ஆடைகளை அணியாதீர்கள்.

### கிராமப்புற தீ விபத்து

நகரங்களில் மட்டுமின்றி கிராமப் புறங்களிலும் அடிக்கடி தீ விபத்துக்கள் உண்டாகின்றன, இவற்றில் ஏராளமான சொத்துக்களும், கால்நடைகளும், விவசாயப் பொருட்களும், பயிர்களும், மனித உயிர்களும் கூடச் சேதமாகின்றன. இந்த விபத்துக்களில்



பெரும்பாலானவற்றை எளிதாகத் தவிர்க்க முடியும். சேதங்களையும் கணிசமான அளவில் குறைக்க முடியும். நகரங்களைவிட கிராமங்களில் சில பிரத்தியேகமான அசௌகரியங்களும் உண்டு. கவனக்குறைவும், அறியாமையும் தான் கிராமப்புறங்களின் தீ விபத்திற்கு முக்கிய காரணங்கள்.

வீட்டிலிருக்கும்போதும், சாலையில் நடக்கும்போதும் ஊர்திகளில் செல்லும்போதும் நாம் அணையாத தீக்குச்சிகளையும், பீடி, சிகரெட் சுருட்டுத் துண்டு முதலியவைகளையும் கண்டபடி எறிகிறோம். இது மிகவும் ஆபத்தான பழக்கம்.

அடுப்பின் அருகே தீப்பெட்டியை வைப்பது பெரும் விபத்தில் முடியும். குழந்தைகளின் கையில் தீப்பெட்டி அகப்படாமல் கண்காணிக்க வேண்டும்.

கூரை வீடுகளில் இருப்பவர்கள் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். அடுப்பிலிருந்து தீப்பொறி கூரைக்குத் தாவாமல், அடுப்புக்கு நேராக கூரையின்கீழ் ‘ஆஸ்பஸ்டாஸ்’, தகரம், துத்தநாகம் அல்லது இரும்பினால் செய்த தகட்டினால் தடுப்பு வைக்க வேண்டும்.

கூரை வீட்டுக்குள்ளும், வீட்டுக்கு அருகாமையிலும் வைக்கோலை சேமித்து வைக்கக்கூடாது.

அடுப்பின் மேல் உள்ள சூடான பாத்திரங்களை எடுப்பதற்கும், வைப்பதற்கும் உடுத்தியிருக்கும் ஆடைகளை உபயோகிக்கக்கூடாது.

அணைக்காத நெருப்புத் தணலை குப்பைச் சேமிப்பு தொட்டிகளிலோ அல்லது குப்பைக் குழிகளிலோ மற்ற வெளி இடங்களிலோ கவனக்குறைவாகப் போடக் கூடாது.

குழந்தைகளைச் சமையல் அறையில் தனியாக விட்டு விட்டு வெளியில் செல்லக்கூடாது.

கண்ணாடி ‘சிம்னி’ இல்லாத விளக்குகளை கூரை ஓரமாக சுவரில் மாட்டி வைப்பதும், தூண்களுக்கு அருகில் வைப்பதும், குழந்தைகளுக்கு அருகாமையில் வைப்பதும் கூடாது.

விவசாயக் கருவிகளில் எண்ணெய்க் கசிவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீடுகளில் மண்ணெண்ணெய் முதலியவைகளைக் கண்ட இடங்களில் கவனக் குறைவாக வைக்கக் கூடாது. மூடியிட்ட டின்களில் அவற்றை அடைத்துப் படுக்கை அறைக்கும், சமையல் அறைக்கும் அருகில் இல்லாதபடி வைக்க வேண்டும்.

சமையல் வேலை முடிந்ததும் எரிகின்ற விறகுக் கட்டைகளை மறக்காமல் அணைத்துவிட வேண்டும்.

அடுப்பின் மேல் பகுதியில் உள்ள சாமான்களை எடுக்கும் போது உடுத்தியிருக்கும் ஆடைகள் அடுப்பிலிருந்து வரும் தீயில் படாமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

தீயணைப்புப்பற்றி, தீயணைப்புப் படையினரைக் கலந்து ஆலோசியுங்கள். அவர்கள் ஆலோசனை இலவசமாகவே கிடைக்கும். உங்களுக்கு இதனால் செலவில்லை; பயனுண்டு. தீயணைப்புப் படையினரை வேண்டியபோது எப்படி உதவிக்கு அழைப்பது என்பதை இப்பொழுதே தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை உதவிக்குக் கூவி அழைப்பதோடு, தீயணைப்புப் படையையும் உடனே அழையுங்கள். அவர்கள் வருவதற்குள் தண்ணீரையோ, மணல் போன்ற இதர பொருள்களையோ உபயோகித்து தீ பரவாமல் செய்யுங்கள். தீ விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உணர்த்தி வையுங்கள்.

**“தீ விபத்தால் ஏற்படும் இழப்பு-நாட்டுச் செல்வத்தின் இழப்பு!”**

எனவே, தீ விபத்து ஏற்பட்டால் உடனடி உதவிக்கு **தொலைபேசி மூலம்** தொடர்பு கொள்ளுங்கள்.







# வேளாண்மையும் தீ விபத்துக்களும்



ஒரு நாட்டின் வேளாண்மை முன்னேற்றம் தான், அதில் வாழும் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்க வகை செய்யும். ஆகவே, வேளாண்மைத் துறையில் மறைந்துள்ள தீ விபத்துக்களைக் கண்டறிந்து, அவைகளைத் தவிர்ப்பது அத்துறையைச் சார்ந்த அனைவரின் பெரும் பொறுப்பு ஆகும்.

விதைகள், உரம், சாகுபடி செய்யப்பட்ட உணவு தானியம், வேளாண்மைக்குத் தேவையான மற்றப் பொருட்கள் யாவும் சேமித்து வைக்கப்படும் கிடங்குகள் தீயினால் பாதிக்கப் படாத அளவுக்குப் பராமரிக்கப்பட வேண்டும். இக் கிடங்குகள் முக்கியமாக, குடிசைப் பகுதிகளுக்கு வெகு தூரத்தில் நிறுவப்பட வேண்டும். கிடங்குகளுக்கு அருகாமையில் தீ அணைக்கப் போதுமான தண்ணீர் வசதி உண்டாக்கிக் கொள்ள வேண்டும். கிடங்குகளை இரவு பகல் எந்நேரமும் கண்காணிக்க, திறமை வாய்ந்த—நம்பிக்கையுள்ள—காவலர்கள் நியமிக்கப்படுவதோடு அவர்களுக்குத் தீயை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தும் முறைகளையும் கற்றுத் தர வேண்டும்.

உணவு வகைகளைப் பதனப்படுத்தும் தொழிற்சாலைகளிலும், உரத் தொழிற்சாலைகளிலும் அவைகளை நிர்வகிக்கும் அலுவலர்கள் தக்க தீத்தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். முக்கியமாக கச்சாப் பொருள்களும், இரசாயனப் பொருட்களும் பெருமளவில் கையாளப்படும் இத்தொழிற்சாலைகளில் அவைகளின் தன்மைக்கேற்பத் தீத்தடுப்பு சாதனங்களை, அருகிலுள்ள தீயணைப்பு அலுவலர்களின் அறிவுரைக்கேற்ப நிறுவ வேண்டும். அங்குப் பணியாற்றும் திடகாத்திரமான தொழிலாளர்களில் சிலருக்குத் தீயணைப்புப் பயிற்சி தர வேண்டும்.

வேளாண்மைக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய மின்சாரப் பம்புகளை உபயோகிக்கும் போதும், ‘டீசல்’ எண்ணெய்ப் பம்புகளை உபயோகிக்கும்போதும் பல சந்தர்ப்பங்களில் தீ அபாயங்களை எதிர்க்க வேண்டியிருக்கும். அருகாமையில் உள்ள தீயணைப்பு நிலையத்தில் ஆலோசனைகளைப் பெற்றுச் செயலாற்றும்படி உழவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சாகுபடி முடிந்ததும் சேமித்து வைக்கும் வைக்கோல் போர்கள், பல பெரிய தீ விபத்துக்களை இந்நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தப் போர்கள், நிறுவும்போது குடியிருப்புக் குடிசைகளுக்கும், மற்றும் இருப்புப் பாதைக்கும் வெகு தூரத்தில் அமையுமாறு ஏற்பாடு செய்யப் படவேண்டும்.

நன்றாக உலர்த்தப்படாமல் ஈரமான நிலையில் அமைக்கப்படும் வைக்கோல் போர்களில் சில தாமாகவே தீப்பிடித்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தவை. ஆகவே இந்த வைக்கோல் போர்களின் மத்தியில் மேலிருந்து கீழ்வரை துவாரமுள்ள உலோகக் குழாயைப் புகுத்தி வைப்பது நல்லது. இப்படிச் செய்வதால் வைக்கோல் போரின் அடிப்பாகத்தில் காற்றோட்டம் ஏற்பட்டுத் தானாக உண்டாகும் வெப்பத்தைத் தவிர்த்துவிடும்.

விறகு தரும் காட்டுப் பிரதேசம், உணவு வகைகளைத் தரும் பயிர் நிறைந்த நிலங்கள், கரும்பு மற்றும் பழத் தோட்டங்கள் ஆகியவைகள் தற்செயலாகத் தீ விபத்துக்குள்ளாகிவிட்டால் தண்ணீரைக் கொண்டு தீயைக் கட்டுப்படுத்த முடியாது. தீ பரவி வரும் திசையில் சற்று இடைவெளி விட்டு 10 அடி முதல் 20 அடி வரை உள்ள அகலத்துக்கு எவ்வித பயிரோ, மரமோ, செடி கொடிகளோ இல்லாதவாறு துரிதமாக வெட்டி எடுத்து காலி செய்து விட்டால் தீக்கு இரை அகப்படாமல் தீ தானாக மாண்டுபோகும்.



# தீ விபத்தைத் தவிர்க்க உதவிடுவீர் !

தீ விபத்தால் ஏற்படும் இழப்பு நமக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் ஏற்படும் பேரிழப் பாகும். குறிப்பாகக் கோடைக் காலத்தில் தீ விபத்து அடிக்கடி ஏற்படக்கூடும். எனவே, கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டு தீ விபத்தைத் தவிர்த்திட உதவும்படி பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.



## பெற்றோர்கள் கவனத்திற்கு

1. பிள்ளைகளை நெருப்புக்கு அருகிலும், தீப் பெட்டியுடனும் விளையாட அனுமதிக் காதீர்கள்.
2. தீபாவளி போன்ற விழாக் காலங்களில், குழந்தைகளைத் தனியாகப் பட்டாசு வெடிக்க அனுமதிக்காதீர்கள்.
3. 'செல்லுலாயிட்', 'பிளாஸ்டிக்' போன்ற விளையாட்டுப் பொருள்களுடன் நெருப் பருகே விளையாடவிடுவது தவறு.
4. நெருப்பின் அருகிலோ, குழந்தை களுக்கு எட்டும் இடத்திலே தீப்பெட் டியை வைக்கக்கூடாது.
5. குழந்தைகளை ஒருபோதும் விளக்கோடு விளையாட விடாதீர்கள்.
6. தாய்மார்கள் குழந்தைகளை நம்பி, சமை யல் செய்யும்பொழுது அடுப்பை விட்டுச் செல்லக்கூடாது.
7. இரவில் தாய்மார்கள், தொட்டிலுக்கு அடியில் திறந்த விளக்குகளை வைக்கா தீர்கள்.
8. குழந்தைகளின் ஆடையில் தீப்பற்றிக் கொண்டால் குழந்தைகளை ஓடவிடா தீர்கள்.



## குடிசைவாழ் மக்கள் கவனத்திற்கு

9. தாய்மார்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும் சமயம், சமையல் அடுப்பை அணைத்துவிட்டுச் செல்ல வேண்டும்.
10. கூரை வீடுகளில் 'சிம்னி' இல்லாத விளக்குகளை உபயோகிக்கக் கூடாது.
11. கூரை வீடுகளில் அடுப்புக்கு மேல் தகடுகளை அமைத்துக் கொள்ளுவது நல்லது.
12. வீட்டில் பழைய காகிதம், துணிமணி, மரச்சாமான்களைத் தேவையில்லாமல் சேமித்து வைக்கக்கூடாது.
13. கூரை வீடுகள் கட்டும்போது, ஒவ் வொரு குடிசைகளுக்கும் இடைவெளியில் 10 அடி இடை வெளி விட்டு அமைப்பது நல்லது.
14. தாய்மார்கள் வீட்டுக்கு வீடு, எரியும் நெருப்பை எடுத்துச் செல்வது கூடாது.
15. படங்களுக்கு முன் எண்ணெய் விளக்குகள் வைப்பது கூடாது. அப்படி வைக்க நேர்ந்தால், கவனமாக இருக்க வேண்டும்.
16. தூங்குவதற்கு முன் எரியும் அகல் விளக் கையும், அடுப்பையும் அணைத்துவிட வேண்டும்.
17. நெருப்போடு கூடிய சாம்பலைக் குப்பைத் தொட்டியில் போடாதீர்கள்.
18. சாமான்களை எடுக்கையில் எரியும் அடுப்புக்கு மேல் சாய்த்து விடாதீர்கள்.
19. புகைவண்டிகள் செல்லும்பாதைகளுக்கு அருகில் கூரை வீடுகள் அமைப்பது கூடாது.
20. வெளிப்புற நெருப்புகளை அணைக்காமல் விட்டு விடாதீர்கள்.

## மின்சாரம் உபயோகிப்போர் கவனத்திற்கு

21. மின்சாரத்தை உபயோகிக்கும்பொழுது அளவுக்கு மீறிய மின் இணைப்புக் கம்பியை உபயோகிக்காதீர்கள்.
22. மின் கம்பி மற்றும் மின் இணைப்புகளைக் காலாகாலத்தில் பரிசோதிக்க வேண்டும்.
23. மின் கம்பிகளில் அளவுக்கு மேல் பளு ஏற்ற வேண்டாம்.
24. மின்சாரக் கருவிகளைக் கவனமாக உப யோகிக்கவும்; தேவையில்லாத சமயம்








25. மின்சாரச் சலவைப் பெட்டிகளை உபயோகத்திற்குப்பின் 'ஸ்விட்சை' நிறுத்த மறந்து விடாதீர்கள்.

26. மின்சார நெருப்பு ஏற்பட்டால், தண்ணீரை ஊற்ற வேண்டாம்.

27. மின்சார நெருப்பு ஏற்பட்டால் உடனடியாகத் தீயணைப்புத் துறையினருக்கோ அல்லது, மின்சாரத் துறையினருக்கோ தகவல் கொடுக்கவும்.



## 'ஸ்டவ்' அடுப்புகள் உபயோகிப்போர் கவனத்திற்கு

28. 'ஸ்டவ்' அடுப்புகள் எரியும்போது மண்ணெண்ணெய் நிரப்பாதீர்கள்.

29. 'ஸ்டவ்' அடுப்புகள் எரியும்போது காற்று அளவுக்குமேல் அடிப்பதை தவிர்க்கவும்.

30. 'ஸ்டவ்' அடுப்புகளில் தீ அதிகரித்து விட்டால் தண்ணீரைக் கொண்டு அணைக்க வேண்டாம்.

31. 'ஸ்டவ்' அடுப்புகளில் தீ அதிகரித்து எரிய ஆரம்பித்தால், தண்ணீரில் நனைத்த கோணியைக் கொண்டு மூடி விடவும்.



## கிராமப்புற மக்கள் கவனத்திற்கு

32. வீடுகளுக்கு அருகே வைக்கோல் போடுவது ஆபத்து.

33. படுக்கையில் படுத்துக்கொண்டு புகை பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

34. அறுவடையான உணவு தானியங்களையும், உலர்ந்த வைக்கோலையும் கவனித்துக் குவிக்க வேண்டும். ஏனெனில், எந்தச் சமயத்திலும் அவை தீப்பிடிக்க ஏதுவாக இருக்கும்.

35. உங்கள் வைக்கோல் போர்களை இரயில் பாதைகள், நடை பாதைகள் வீடுகள், முதலியவற்றிற்கு வெகு தூரத்தில் வைக்க வேண்டும்.

36. பீடி, சிகரெட், சுருட்டுத் துண்டுகளை புகைத்தபின் அணைக்காமல் வீச வேண்டாம்.

37. வெளிப்புற நெருப்புகளை அணைக்காமல் விட்டு விடாதீர்கள்.

38. எண்ணெய் அல்லது மின்சார சம்பந்தமான தீ விபத்து ஏற்பட்டால் தண்ணீரை உபயோகிக்காதீர்கள்.

39. கண்ட இடங்களில் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.





40. நெருப்பின் மேல் 'லாகிரி' வஸ்துக்களை எறியக் கூடாது.



## பொதுமக்களே உதவி செய்ய முன்வாருங்கள் !

41. தீ விபத்து ஏற்படும்போது உங்கள் டெலிபோனை அவசர அழைப்பு உபயோகத்திற்கு அனுமதியுங்கள்.

42. தீயணைப்போர் கேட்கும் தகவல்களைத் தெரிவியுங்கள்.

43. தீயணைக்கும் படையினருக்குத் தீயணைப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்யுங்கள்.

44. தீயணைக்கும் படையினரின் வேலையில் குறுக்கிடாதீர்கள்.

45. தீ பிடித்த இடங்களின் அருகாமையில் கூட்டம் கூடாதீர்கள்.

46. தீப்பற்றிக் கொண்டால் **தொலைபேசி மூலம்** தொடர்புகொள்ளுங்கள்.

47. தீயணைப்பு வண்டிகள் வரும் சமயம், சரிவர தீ ஏற்பட்ட இடத்தைக் காட்டுங்கள்.

48. தீ ஏற்பட்ட நேரங்களில் வண்டிகள் செல்லும் சமயம் மற்ற வாகனங்கள் வழிவிட்டுச் செல்லுதல் நல்லது.

49. தீ விபத்து ஏற்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள தண்ணீர் வசதியையும், காலதாமதம் இல்லாமல் வாகனங்கள் செல்ல நல்ல பாதையையும் பொது மக்கள் காண்பித்து உதவ வேண்டும்.

50. தீ விபத்துக்களைத் தவிர்ப்பது மக்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

51. தீ அணைக்கும் வண்டி வரும்வரை உங்களால் முடிந்தவரை தீ பரவாமல் தடுக்கவும்.

52. தீ விபத்து ஏற்பட்டது தெரிந்தவுடன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தீயை பரவாமல் தடுக்க முயற்சிக்க வேண்டும்.








# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்


—ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், சமூக நலத்துறை,
தமிழ்நாடு அரசு.


"குழலினிது யாழினிது என்பர்—தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்றூர் வள்ளுவப் பெருந்தகை. அத்தகையச் சிறப்பு மிக்க நம் மழலைச் செல்வங்களைப் போற்றிப் பேணுதல் நமது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். மேலை நாடுகளை ஒப்பிட்டு நோக்குங்கால் நமது நாட்டில், பள்ளி முன் னிலைப் பருவப் பிள்ளைகளின் இறப்பு விகிதம் மிகவும் அதிகமாக இருப்பது நாட்டு நலனில் அக்கறையுள்ள எவரையும் கவலையடையச் செய்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அறுபது வயதைக் கடந்த முதியோர்கள் ( GERIATRIC CARE ) நோய்வாய்ப்பட் டால் அவர்களைக் காப்பாற்ற "தீவிர மருத் துவச் சிகிச்சைப் பிரிவுகள்" ( Intensive medical Care ) எல்லா மருத்துவ மனைகளிலும் துவங்கப்படும் இந்த நாளில் ஆறு வயதுக்கு உட்பட்ட மழலைச் செல்வங்களை அறு வகை நோயினின்றும் காத்து ( Paediatric Care ), ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடும் ஆர்வம் மிக்க இளைஞர்களாக வளர்க்கும் "தீவிர குழந்தை வளர்ச்சிப் பிரிவுகள்" நம் நாட்டில் இது நாள் வரை இல்லையென்றே கூறலாம். குழந்தை மருத்துவர்களாகிய நமது இந்த நீண்ட நாளைய ஏக்கத்தைப் போக்கவே "ஒருங் இணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்" திட்டம் துவக்கப்பட்டது.

அறுபதைத் தாண்டிய ஒருவரைக் கால னிடமிருந்து காப்பாற்றத் தீவிர சிகிச்சை மட்டுமே அளித்தால் போதுமானது. ஆனல் பள்ளி முன்னிலைப் பருவப் பிள்ளைகளை மரணத் தின் பிடியிலிருந்து விடுவிக்கத் தீவிர சிகிச்சை மட்டுமல்லாமல், நல்ல சத்துணவு, ஆரோக்கி யமான வாழ்வு ஆகியனவும் தேவை. இவை யனைத்தையும் ஒருங்கே இணைத்து அளிக்க வல்லது தான் "ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்" திட்டமாகும்.

**செயல்முறை விளக்கம்.**

இத்திட்டம் இந்திய அரசின் ஒரு முன் னோடித் திட்டமாகும். மாநில சமூக நலத் துறை மற்றும் கிராம வளர்ச்சித் துறையினரின் ஒத்துழைப்புடன் நிறைவேறி வருகின்றது. நகர்ப்புற, கிராமப்புற மற்றும் மலைப்புறத் திட்டம் என்று 33 இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டில் சென்னை நகர்ப்புறத்திலும், நிலக் கோட்டை மற்றும் தளி ஆகிய கிராமப்புறங் களிலும் இத்திட்டம் செயலாக்கம் பெற்று வருகின்றது. இத்திட்டத்தை முறையே சென்னை மருத்துவக் கல்லூரியும், மதுரை மருத்துவக் கல்லூரியும், கோவை மருத்துவக் கல்லூரியும் ஆலோசகர்களை ( Consultants ) நியமித்து மதிப்பீடு செய்து வருகின்றன. மத்திய திட்டக் குழுவும் இத்திட்டத்தினை ஆய்ந்து வருகின்றது. இத்திட்டம் முழு வெற்றி யடைந்தால் இந்தியாவின் மற்றையப் பகுதி களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**சென்னை நகர்ப்புறத் திட்டம் :**

சென்னை நகர்ப்புறத் திட்டம் கோட்டூர் புரம், தா.பி. சத்திரம், வியாசர்பாடி, மேலும்





கடற்கரைப் பகுதி என்னும் நான்கு பகுதிகளில் உள்ள சுமார் 27 குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் வாழும் சுமார் ஒரு இலட்சம் குடிசைவாழ் மக்களுக்குப் பயன்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர் கர்ப்பிணிகளும், பாலூட்டும் தாய்மார்களும், ஆறு வயதுக்குட்பட்ட அதாவது பள்ளி முன்னிலைப் பருவதைச் சார்ந்த சுமார் 20,000 பிள்ளைகளுமாவர். மாநில சமூக நலத் துறைச் செயலாளரும், இயக்குநரும் இத்திட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்றுள்ளனர். இத்திட்டத்தில் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பினை மாநில மருத்துவக் கல்வி இயக்குநரும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையின் இயக்குநரும் ஏற்றுள்ளனர். சமூக நலத் துறையின் சார்பில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரும் ( Child Development Project Officer ), மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ஒரு மருத்துவ அலுவலரும் இத்திட்டத்தினை நிறைவேற்றுவர். தளி, நிலக்கோட்டை பகுதிகளில் நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பினை பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பியல் மருத்துவத் துறை இயக்குநர் ஏற்றுள்ளார்.

**அங்கன்வாடி :**

இத்திட்டத்தின் கீழ் சென்னையில் 100 அங்கன்வாடிகள் எனப்படும் கேந்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு அங்கன்வாடியிலும் பால சேவகியர் பயிற்சி பெற்ற ஒரு அலுவலர் பணி புரிகிறார். இத்திட்டத்தின் அடிப்படைப் பணியாளர் இந்த அங்கன்வாடி அலுவலர்தான். இந்த அங்கன்வாடியில் தான் எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் நன்மைகள் என்னென்ன என்று பார்ப்போம்.

**நோய்த் தடுப்புச் சிகிச்சை முறைகள் :**

இத்திட்டத்தின்கீழ் கக்குவான், இருமல், 'டிப்தீரியா' எனப்படும் தொண்டை அடைப்பான், 'டெட்டனஸ்' எனப்படும் வில்வாத ஜன்னி, 'போலியோ' எனப்படும் இளம்பிள்ளை வாதம், காசநோய், பெரியம்மை முதலிய நோய்களிலிருந்து குழந்தைகளைத் தடுத்துக் காக்க முத்தடுப்பு ஊசி (Triple antigen), பி.சி.ஜி., 'போலியோ' தடுப்புச் சொட்டு மருந்து, அம்மைப்பால் முதலியன போடப்படுகின்றன. இந்த திட்டத்தின் சிறப்பு மிக்க சேவை இளம்பிள்ளை வாதம் வராமல் தடுக்க போலியோ சொட்டு மருந்து அளித்தலாகும். மேலும் இத்திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, 'டெட்டனஸ்' தடுப்பூசி (Tetanus Toxoid) அளிக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரைகள் அளித்தலும், குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் "ஏ" குறைவு நோய்த் தடுப்பு மருந்து அளித்தலும், நாக்குப் பூச்சி மருந்து அளித்தலும் (Deworming) இத்திட்டத்தில் அடங்கும்.

**மருத்துவப் பரிசோதனை :**

இத்திட்டத்தின் மூலம் 3 மாதங்களுக்கு ஒரு முறை வீதம், ஆறு வயதுக்குப்பட்ட குழந்தைகளையும், கர்ப்பிணிகளையும், பாலூட்டும் தாய்மார்களையும் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த நற்பணியைச் சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் பட்டமேற்படிப்பு பயிலும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் செய்கின்றனர்.

**மருத்துவ மனையில் சிகிச்சை :**

இத்திட்டம் செயல்படும் இடங்களில் எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையைச் சார்ந்த நான்கு வெளிப்புற குழந்தைகள் நலக் கேந்திரங்களும் (Peripheral paediatric centres), எட்டு உபகேந்திரங்களும் ( Sub-centres ) உள்ளன. இங்கு இத் திட்டத்தின் மூலம் பயனடையும் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. தீவிரச் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கென்று தனியாக ஒரு 'கிளினிக்' எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடத்தப்படுகின்றது. மேலும் அங்கன்வாடி அலுவலர் கொடுக்கும் சீட்டுடன் வரும் எந்தக் குழந்தையையும், வரிசையில் நிற்க வைக்காமல், உடனே கவனித்து, தீவிரச் சிகிச்சை அளிக்க உத்திரவு போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழக மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் எல்லா மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கும் இது பற்றி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மருத்துவ மனைச் சிகிச்சை தேவைப்படாத குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் அங்கன்வாடி அலுவலரே முதல் உதவிச் சிகிச்சை அளிப்பார் என்பது இங்கு நோக்கற்குரியது.



**சத்துணவு அளித்தல் :**

போஷாக்குக் குறைந்த குழந்தைகளுக்கும், எல்லாக் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குமென சுமார் 100 பேர்களுக்கு 'பாலாகார்' எனப்படும் சத்துணவு ஒவ்வொரு அங்கன்வாடியிலும் தினசரி ஒரு வேளை சமைத்துக்கொடுக்கப்படுகின்றது. இந்த மாற்றுணவின் பயனாகக் குழந்தைகள் போஷாக்குப்பெற்று, எடை பெருகிக் காணப்படுகின்றார்களா என்பதை அறிய மாதம் ஒரு முறை எல்லாக் குழந்தைகளுக்கும் எடை எடுக்கப்படுகின்றது. இந்த மாற்றுணவு சமைப்பதற்காகும் செலவுகளுக்காகவும், காய்கறிகளுக்காகவும் மாநில அரசு ஒருவருக்கு 4.5 பைசா வீதம் தினந்தோறும் செலவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**பள்ளி முன்னிலைப் பருவக் கல்வி :**

ஒவ்வொரு அங்கன்வாடியிலும் சுமார் 40 முதல் 50 குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்படுகின்றது ( Non-formal pre-school education ). குழந்தைகளுக்குப் பாடல்களும்,





சுத்தம், சுகாதாரம் பற்றிய போதனைகளும் கற்றுத் தரப்படுகின்றன. மற்றும் விளையாட்டு முறைகளும் போதிக்கப்படுகின்றன.

**மாதர்களுக்கு வாழ்க்கைக் கல்வி :**

15 வயது முதல் 44 வயதுக்குட்பட்ட தாய்மார்களுக்குத் தினந்தோறும் வாழ்க்கைக் கல்வியும் ( Functional literacy ) போதிக்கப்படுகின்றது. இதில் முதியோர் கல்வியும், செயல் முறைக் கல்வியும், சத்துணவு மற்றும் சுகாதார போதனையும், எம்பிராய்டரி, தையல் கலை முதலியனவும் அடங்கும்.

**சத்துணவு மற்றும் சுகாதாரப் போதனை :**

இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் சத்துணவு மற்றும் நல் வாழ்வுப் போதனை ( Nutrition and Health education ) அங்கன்வாடியிலும், குடிசைமாற்று வாரியப் பகுதிகளிலும் அங்கன்வாடி அலுவலராலும், மருத்துவச் செவிலியராலும், மருத்துவர்களாலும் அளிக்கப்படுகின்றது.

**ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு :**

இத்திட்டம் முழு வெற்றியடைய பல் வேறு துறைகளும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. குறிப்பாகச் சென்னை மாநகராட்சியும், குடிசைப் பகுதி மாற்று வாரியமும் அளித்திடும் ஒத்துழைப்பு பொன்னெழுத்துக்களால் பொறித்துப் போற்றுதற்குரியதாகும். 'யூனிஃப்', 'கேர்' நிறுவனங்களும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்குகின்றன. இத்திட்டம் முழு வெற்றியடைய மக்களது ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது. பார்த்தசாரதி நகர்வாழ் மக்கள் இத் திட்டத்திற்கு அளித்திடும் ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியது.

**பொது மக்கள் பங்கு :**

ஒரு திட்டம் முழு வெற்றியடைய வேண்டுமானால், மூன்று நிலைகளில் ஒத்துழைப்பு வேண்டும். முதலாவதாக, திட்டத்தை நிறைவேற்றும் அலுவலர்கள் தம்மை அர்ப்பணிக்கும் தன்மை கொண்டவர்களாகவும், இரவு பகல் என்று பாராது கருமமே கண்ணாக இருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, திட்டமிடும் பெரிய அலுவலர்கள் தங்களாலான முழு ஒத்துழைப்பையும் அளித்து உற்சாகமளித்து, ஊக்கப்படுத்துதல் இன்றியமையாததாகும். சென்னை நகர்ப்புறத் திட்டத்தைப் பொறுத்தவரை இந்த இரண்டு நிலைகளிலும் முழு ஒத்துழைப்பு நிலவுகிறது. மூன்றாவது நிலை, பயன்பெறும் பொதுமக்களது ஒத்துழைப்பாகும். இந்தப் புதுமைப் பணி, புரட்சிப் பணி முழு வெற்றியடைய, பொது மக்கள் தங்களது பரிபூரண ஒத்துழைப்பை நல்கினால் இத்திட்டம் முழு வெற்றி யடைந்து, நாட்டின் மூலைமுடுக்குகளில் வாழும் நலிந்த குழந்தைகள் அனைவருக்கும் வளம் சேர்க்கும் திட்டமாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

''வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே''

## செங்கை மாவட்டத்தில் சிங்கங்கள் சரணாலயம் !

மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், வேடந்தாங்கல், காஞ்சீபுரம் போன்ற உல்லாசத் தலங்களுக்குப் பெயர் பெற்ற செங்கை மாவட்டத்தில் இன்னொரு கவர்ச்சிகரமான உல்லாசத் தலம் உருவாகும் வாய்ப்பு இப்பொழுது சற்றுப் பலமடைந்துள்ளது. வண்டலூருக்கருகில் ஒரு பெரிய மிருகக் காட்சி சாலையும், 100 சிங்கங்களுக்கான தனிச் சரணாலயமும் ஏற்படுத்துவதென்பது இந்தத் திட்டம். அவ்வித அமைப்புக்கு வேண்டிய தண்ணீர் இப்பகுதியில் கிடைக்காதென ஒருசமயம் ஆட்சேபம் எழுந்தது. இப்பொழுது சென்னைக்கடுத்த பல நகராட்சிகளே பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டங்களை நிறைவேற்றும் பொழுது, வண்டலூருக்கு ஏன் பாலாற்று நீரைக் கொண்டு வர முடியாதென்ற கேள்வி பிறந்திருக்கிறது. ஆகவே அரசு பொதுப்பணித் துறைப் பொறியாளர்களால் ஆராய்ச்சி நடந்து வருகிறதெனத் தெரிகிறது. வண்டலூர் மிருகக் காட்சிசாலைத் திட்டங்களுக்குச் செலவு மொத்தம் 3 கோடி ரூபாயாகுமென கூறப்படுகிறது. அதற்கு வேண்டிய நிலம் வனத்துறையினரால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கும் சென்னை மாநகராட்சி மிருகக்காட்சி சாலையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டத்திற்கும் நேரடி சம்பந்தமொன்றுமில்லை எனவும் கூறப்படுகிறது.

# தெற்கே தழைத்த தேசீய ஒருமைப்பாடு !



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

—பாரதி

இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் காங்கிரஸ் மகாசபை 1885-ஆம் ஆண்டில் பம்பாயில் தோன்றிய பெருமையால் பாரத தேசிய இயக்கத்தின் தொட்டிலாகப் போற்றப்படுவது பம்பாய் மாநகரம். சென்னை மாநகரின் பெருமையும் சிறிதல்ல, தேசீயம் செழித்து வளர்ந்தது அங்கே. விந்தியத்துக்குத் தெற்கே தேசீய ஒருமைப்பாட்டுக்கு நாற்றங்காலாய் விளங்கியதும் சென்னை மாநகரம். பல ஆண்டுக் காலம் கூட்டு மாகாணம் ஒன்றின் தலைநகராக அது விளங்கியது, சமீபத்து வரலாற்றில் இந்தப் பெருமைக்கு ஒரு முக்கிய காரணம் என்பதில் ஐயமில்லை.

எனினும், நாட்டின் இப்பகுதியில் தேசீய ஒருமைப்பாட்டு உணர்வின் வேர்கள் இன்னமும் ஆழமானவை. பிரிட்டிஷ் ஆட்சி அரசியல் ஒற்றுமையை மட்டுமே ஏற்படுத்தியது. தெற்கின் இசையிலும், கவிதையிலும், ஆடலிலும் ஒருமைப்பாட்டின் ஆழமான வேர்களைக் காணலாம். மொழி எல்லைகளையும் பிராந்திய எல்லைகளையும் ஓரளவு மீறுவதில் வெற்றி கண்டவை அவை.



ஆடிப்பாடிய அடியார்களும், பாட்டுகள் இயற்றிய பெரியார்களும்தான்தேசியஒருமைப்பாட்டை மெய்யாகவே வளர்த்தவர்கள். பண்பாட்டில் அவர்கள் பாதிப்பு ஆழப்பதிந்திருப்பது, தியாகராஜர்பால் தெலுங்கர்களும், தமிழர்களும் சம உரிமை பாராட்டுகின்றனர். மற்றோரும் போற்றுகின்றனர்.

ஆனால், தெற்கின் இசையெனப் போற்றப்படும் கர்னாடக சங்கீதத்தில் அவர் கிருதிகள் உயர் இடம் வகிப்பவை. புரந்தரதாசர் கன்னட மொழியில் பாடினார். ஆனால் அவர் சங்கீதம் கன்னட தேசத்துடன் ஒடுங்குவது அல்ல. பூவேந்தர் கிருஷ்ண தேவராயர், தாமே ஒரு கவி. இலக்கியத்தை வளர்த்த அவரது அவையைப் புலவர்கள் அலங்கரித்தனர். கன்னடியர்களும் தெலுங்கரும் அவரைக் கண்ணெனப் போற்றுவர். தமிழர்கள், தம் பல கோயில்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் என என்றென்றும் போற்றுவர். ஒருமை உணர்வைத் தழைக்க வைத்ததில் தஞ்சை மதுரை ஆகியவற்றின் நாயக்க மன்னர்களின் பங்கும் பெரிது.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஒருமைப்பாடு உணர்வு இரண்டு மூன்று தனித்தனி வழிகளில் வளர்ந்தது. முதலாவது, கல்வி, ஆங்கிலம் என்னும் பொதுமொழி மூலம் கல்வி அளிக்கப்பட்டது. இரண்டாவது, பல சுய நிர்வாக நிறுவனங்களில் ஆட்சியாளர்கள் அளித்த பயிற்சி: உள்ளூராட்சி மன்றங்கள், நகர சபைகள், மையத்திலும் மாகாணங்களிலும் ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றில் மக்கள் கலந்து கொள்வதன் மூலம் ஒருமைப்பாடு வளர்ந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக பாரதம் விளங்குவதற்கு இதுமாதிரி அது தயார்ப்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டது. மூன்றாவது வழி, ஆங்கிலேயர் எண்ணி

யிராத ஒன்ருகும். வெளி ஆட்சிக்கெதிரான மக்கள் இயக்கம் என்ற வடிவில் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் செயலாற்ற நேர்ந்தது.

தமிழில் பாரதி, தெலுங்கில் லக்ஷ்மி நரசிம்மம் போன்ற கவிஞர்கள் மக்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்கள். பாரதம் பற்றி பாரதியார் பாடியதற்கு ஈடிணையே கிடையாது:

மன்னும் இமய மலையெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிட த நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே?
பொன்னெளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவோம் இஃதை எமக்கிலை ஈடே.

பாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு

தேசிய ஒருமைப்பாட்டை இவ்வளவு அழகாக வேறு எவராவது சொல்லியிருக்க முடியுமா என்பது சந்தேகம்.

"சிந்து நதியின்மிசை நிலவினி லே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத் துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம்"

மகாத்மா காந்தி தேசிய வானில் வந்தவுடன், தேசிய ஒருமைப்பாடு விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக ஆயிற்று. தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர் ஆகியோரும் வடக்கத்தியாரும் தோளோடு தோள் நின்று போராடினர்கள். 1920-ஐ அடுத்த சில ஆண்டுகளில் விடுதலை இயக்கம் ஒரு புது வேகம் பெற்றது. 1921-ஆம் ஆண்டு சென்னையில் சத்தியாக்கிரகப் பிரதிக்கினையில் ஆந்திர கேசரி டி. பிரகாசம் முன்னிலையில் மக்கள் ஒப்பமிட்டார்கள். அதே ஆண்டில்தான் அவர் சென்னை நீதிமன்றத்தில் தம் லாபகரமான வக்கீல் தொழிலை உதறித்தள்ளினர். அவ்வாண்டு அக்டோபரில் 'ஸ்வராஜ்ய' என்னும் ஆங்கில நாளேட்டை, விடுதலை வீரர்களின் ஒலியாக அவர் துவக்கினர். அதன்





பெயரை யோசனை கூறியவர், தென்னாட்டுக்கும் எந்நாட்டுக்கும் உரிய அறிஞரான சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர். முதல் ஆசிரியரோ, மலையாள கே. எம். பணிக்கர் ("கேரளபுத்ர"); சர்கார் பணிக்கர் என்று பின்பு பார்புகழ் பெற்றவரேதான்! அதன் ஆசிரியர் குழாத்தில் இருந்தவர்கள் ஜி.வி. கிருபாநிதி, காசாசுப்பராவ் ஆகிய இளம் ஆந்திரர்கள், தேசிய பத்திரிகைத் துறையில் மங்காப்புகழ் பெற்றவர்கள். 'ஸ்வராஜ்ய' என்ற பெயரிலேயே தமிழ் நாளேடு ஒன்றும் சில காலத்துக்கு நடைபெற்றது. ஏடு நடத்திய சீலர்களிடையே தேசபக்தி ஏகப்பட்டது, வியாபார சாமர்த்தியம் வெகு கம்மி என்ற நிலையில், இரு ஏடுகளுமே சில ஆண்டுகளில் மூடு விழா நடத்தும்படியாயிற்று. 'ஸ்வராஜ்ய சிறிது காலம்தான் இருந்தது. ஆனல் சுடர் போல் ஜொலித்து அணைந்தது.

சைமன் கமிஷன் எதிர்ப்பு நாட்களிலும் உப்பு சத்தியாக்கிரக நாட்களிலும் சென்னையில் தேசபக்தத் தொண்டர்கள் மொழி, மாகாண பிராந்திய என்ற வேற்றுமை எல்லாம் சற்றும் மதியாமல் ஒன்றுபட்டுப் போராடினர். 1928-ல் சைமன் கமிஷன் எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஆந்திரச் சிங்கம் பிரகாசம் பிரிட்டிஷ் துப்பாக்கிக்கு மாரைத் திறந்து காட்டி மாவீரர் வரிசையிலே இடம் பெற்றார். 1930-31-ல் உப்பு சத்தியாக்கிரகத்தின்போது முன்னணியில் நின்றவர்கள் கே. நாகேஸ்வரராவ் பந்துலு, கத்தே ரங்கையநாயுடு, புலுக சாம்பமூர்த்தி, திருமதி ஜி. துர்க்கா பாய் போன்ற தலைவர்கள். ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் சத்தியாக்கிரக இயக்கங்கள் அனைத்திலும் தலையாய பங்கு வகித்தனர். ராகவ மேனன், மாதவ மேனன், அவர் மனைவி போன்று கேரளப் பிரதிநிதிகளும் இருந்தனர். எல்லோரும் மொழி அல்லது மாகாண அடிப்படையில் ஒரு வேற்றுமையும் பாராட்டாமல் நாட்டு விடுதலைக்காக ஒன்ருய் நின்று போராடினர்கள்.

நாட்டு விடுதலை, தனியாரின் கண்ணியம் போன்று அடிப்படையான பண்புகள் சம்பந்தப்படும்போது, எந்தத் தியாகத்தையும் பெரிதென மதியாமல் அனைவரும் ஒன்றுகூடிப் போராடுவதற்கும் பணியாற்றுவதற்கும் மக்கள் எப்போதும் தயாராயிருப்பார்கள் என்பதைச் சமீபத்துச் சம்பவங்கள் காட்டுகின்றன. பொதுத்துன்பம் அனுபவம் என்ற பட்டறையில் தேசிய ஒருமைப்பாட்டின் மிக வலிமையான பிணைப்புகள் வடிக்கப்படுகின்றன:

# தமிழ்நாட்டில் விவசாயக் கணக்கெடுப்பு

—செல்வி ர. பத்மவல்லி, எம். ஏ.,
இயக்குநர்,
விவசாயக் கணக்கெடுப்புத்துறை,
சென்னை-600 006.

விவசாயத்தை முக்கியத்தொழிலாகக் கொண்டு வளர்ந்து வரும் நாடுகளிலே, இந்தியா, உலக அரங்கில், முதலிடம் வகித்து வருகிறதென்பதை நாம் அனைவரும் அறிவோம். நமது நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 72 சதவிகிதத்தினர், விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர் என்பதையும் மற்றும் நமது தேசிய வருவாயில் (National Income) கணிசமான பங்கு (1973-74 ஆண்டு விவரப்படி, 49.6 சதவிகிதம்—(at current prices) விவசாயப் பிரிவிலிருந்தே (Agricultural Sector) கிடைத்து வருகிறதென்பதையும் நாம் நன்கு அறிவோம். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த விவசாயம் தொடர்பான சில அடிப்படை விவரங்களை முழுமையான அளவில் கணிக்கும் வகையிலேயே "**விவசாயக் கணக்கெடுப்பு**" மேற்கொள்ளப்படுகிறது.

முதன்முறையாக, இக்கணக்கெடுப்பு, 1970-71-ஆம் ஆண்டில் அனைத்து இந்திய அளவில் மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பில், தமிழ்நாடும் பங்கேற்று, இதனை நல்லமுறையில் மேற்கொண்டது. அவ்வமயம், கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய இரு மாவட்டங்களிலும் மாதிரிக் கணக்கெடுப்பும் (Sample Survey), இதர பதின்மூன்று மாவட்டங்களிலும் முழுக்கணக் கெடுப்பும் (Census) மேற்கொள்ளப்பட்டன.

## 1970-71 கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட விவரங்கள் :

இக்கணக்கெடுப்பில், முக்கியமாக, கீழ்க்கண்ட விவரங்கள், கிராமவாரியாக சேகரிக்கப்பட்டு பின்னர், மாவட்ட அளவிலேயும், மாநில அளவிலேயும் தொகுக்கப்பட்டு, புத்தக வடிவில் கொண்டு வரப்பட்டுள்ளன.

1. கைப்பற்றுகளின் (Operational holdings) எண்ணிக்கையும் பரப்பும்;

2. நிலம் பயன்படுத்தப்படும் வகைகள்;

3. நீர்ப்பாசன வசதிகளும், அவற்றிலடங்கும் பரப்பும்;

4. மகசூல் பங்கு (குத்தகை, வாரம் போன்ற) முறைகள்:

5. பயிர் சாகுபடி பற்றிய சில விவரங்கள்.

### 'கைப்பற்று'

ஒரே விவசாய மேற்பார்வையின் கீழ், முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, விவசாய உற்பத்திக்காகப் பயன்படும் நிலம் முழுவதையும், சுருக்கமாக 'கைப்பற்று' எனக்கூறலாம். விவசாய மேற்பார்வை, ஒரு தனிப் பட்டநபராலோ அல்லது கூட்டு சேர்ந்தோ நடத்தப்படலாம் என்பதையும், மற்றும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் நிலத்தின் உரிமை பயிரிடுபவரையோ அல்லது வேறு சொந்தக்காரரையோ சார்ந்திருக்கலாம் என்பதையும் நாம் இங்கு கவனித்தல் வேண்டும். எனவே, ஒரே மேற்பார்வையின் கீழ் விவசாய உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நிலத்தை 'கைப்பற்று' எனக் குறிப்பிடுவது நன்கு விளங்கும்.

1970-71 கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட கிராமவாரி விவரங்கள் அனைத்தும், 'காந்த நாடாக்களில்' (Magnetic Taps) பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 1976-77 கணக்கெடுப்பு:

விவரங்களை ஒப்புநோக்கும் வகையில், இன்னும் ஒரு கணக்கெடுப்பினை, 1975-76-ல் மேற்கொள்ள, மத்திய அரசு, கருதி அதற்கான முயற்சியும் மேற்கொண்டது. ஒரு சிலமாநிலங்கள் நிலப்பதிவேடுகளை (Land Records) குறிப்பிட்ட கால வரம்புக்குள் வகைப்படுத்தாத காரணத்தினல், இக்கணக் கெடுப்பை 1976-77-க்கு ஒத்திப்போட்டது.

தவிரவும், அரசின் சிக்கனக் கொள்கை காரணமாக, இவ்விரண்டாவது கணக்கெடுப்பை, ஒரு 'முழுக்கணக்கெடுப்புக்குப்' பதிலாக 'மாதிரிக் கணக்கெடுப்பாக' மேற்கொண்டாலே போதுமானது எனவும் முடிவெடுத்தது. இந்த வகையிலேயே, இக்கணக் கெடுப்பு ஒரு மாதிரிக் கணக் கெடுப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விவசாயக் கணக்கெடுப்புத்துறை மற்றும் கணக்கெடுப்பாளர் விவரம் :

தமிழ்நாட்டிலே, இந்த விவசாயக் கணக்கெடுப்புத்துறை, காடு, மீன்வளச் செயலாளரையே கணக்கெடுப்பு ஆணையாளராக (Commissioner for Agricultural Census) கொண்டு இயங்குகிறது. தமிழ்நாடு புள்ளியியல் துறை இயக்குநரை, மாநில அளவில், இத்துறைக்குத் தலைவராக (Director of Agricultural Census) விளங்குகிருர். மக்கட்தொகை கணக்கெடுப்பு (Human Census), கால்நடைக்கணக் கெடுப்பு (Live-stock Census) போன்று, இக்கணக் கெடுப்பிலும், மாவட்ட ஆட்சியாளர்களே, தொடர்புடைய மாவட்டங்களுக்கு, மாவட்ட விவசாயக் கணக்கெடுப்பு அலுவலர்களாக பொறுப்பு வகிக்கின்றனர். வட்ட அளவில், தொடர்புடைய வட்டாட்சியர்கள், இப் பொறுப்பினை ஏற்கின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில், தொடர்புடைய கிராம



ணங்களும், புள்ளியியல் ஆய் ளர்களும் விவரங்களை சேக பார்கள். இப்பணி செவ் னை நடைபெற, வட்டாட்சி ளர்களும், மாவட்டங்களில் ணியாற்றும் புள்ளியியல் அலு லர்களும் ஆங்காங்கு கண் ணித்து வருவர்.

### பயிற்சி

வட்டாட்சியர்கள் மற்றும் ளியியல் ஆய்வாளர்களுக்கு, கணக்கெடுப்புத் தொடர்பான ற்சியினை விவசாயக் கணக் டுப்புத் துறை (Directorate Agricultural Census) அலுவலர் , ஒவ்வொரு மாவட் துக்கும் சென்று, முதற்கண் ளித்தனர். பயிற்சி பெற்ற டாட்சியர்கள், அடுத்த நிலை , கிராம கர்ணங்களுக்கு காங்குப் பயிற்சி அளித்தனர்.

### க்கெடுப்பின் பிரிவும் சேகரிக் ப்படும் விவரமும்:

ந்த 1976-77 மாதிரி கணக் ப்பானது, 'பிரதான ஆய்வு' n Survey) மற்றும் 'உள்ளீட்டு வு' (Input Survey) என இரு களாகப் பிரிக்கப்பட்டு கொள்ளப்படுகிறது.

### பிரதான ஆய்வு

வ்வாய்வு, தேர்ந்தெடுக்கப் 3,343 கிராமங்களில் மேற் கொள்ளப்படும். இக்கிராமங் களில், 1976-77 ஆம் ஆண்டுக்கான (பசலி 1386) விவரங்களைத் தொடர்புடைய கிராமக் கர் ணங்கள், சென்ற கணக்கெடுப்புத் தலைப்புகளிலேயே சேகரிப் பார்கள்.

### உள்ளீட்டாய்வு

சென்ற கணக்கெடுப்போடு ஒப்புநோக்குங்கால், இவ்வுள் ளீட்டு ஆய்வு விவரங்கள், கூடு தல் விவரங்களாகும். இவ்வாய்வுத் தொடர்பான விவரங்கள், மேற் குறிப்பிட்ட 3,343 கிராமங்களின் பத்து சதவிகித அளவான 335 கிராமங்களில் மட்டுமே புள்ளி யியல் ஆய்வாளர்களால் சேகரிக் கப்படும். இந்த கிராமங்களில், ஒவ்வொன்றிலும் 20 கைப்பற்று களைத் (Operational holdings) தேர்ந்தெடுத்து அவற்றிற் கான விவரங்களைப் புள்ளியியல் ஆய்வாளர்கள் சேகரிப்பார்கள். இவ்வாய்வின் கீழ், கைப் பற்றுகள் உபயோகித்த உரம், பூச்சிக்கொல்லிகளின் அளவு விவ ரங்கள், மற்றும் கைப்பற்று ஒவ் வொன்றுக்கும் உடைமையாய் உள்ள கால்நடை, விவசாயக் கருவி கள் முதலிய விவரங்கள் போன் றவை சேகரிக்கப்படும். இவ் விவரங்கள், பயிர் செய்யப்படும் ஒவ்வொரு போகத்திற்கும் மாறு படுமாதலால், இவை, முதல் போகத்திற்காக (Khariff) ஒரு முறையும், இரண்டாவது போகத் திற்காக (Rabi) ஒரு முறையு மெனத் தனித்தனியே சேகரிக்கப் படும்.

### கணக்கெடுப்பு விவரங்களின் பயன்:

இந்தியா போன்ற ஒரு மாபெரும் விவசாய நாட்டின் முன்னேற்றத்தையொட்டிய திட் டங்கள் பல தீட்டவும் மற்றும் கொள்கை முடிவுகள் (Policy decisions) எடுக்கவும், இக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் பல அடிப்படை விவரங்கள் பெரி தும் உதவியாய் இருக்கும் என்பது திண்ணம். மேலும், தனித்தனி கைப்பற்றுகள் (Operational holdings) தொடர்பான உள்ளீட்டு விவரம் (Input), உற்பத்தி விவ ரம் போன்ற பல அடிப்படை விவரங்கள் இக்கணக்கெடுப்பின் மூலம் முழு அளவில் கிடைப்ப தால், விவசாயத் தொழில் அபி விருத்தி, நிலச் சீர்திருத்தங்கள், போன்ற நல்ல பல திட்டங்களைத் தீட்ட இவை பெரும் அளவில் பயன்படும். எனவே, இக்கணக் கெடுப்பின் முக்கியத்துவத்தை உணரும் பொதுமக்களும், குறிப் பாக, விவசாயப் பெருங்குடி மக்களும் இக்கணக்கெடுப்பு நல்ல முறையிலே மேற்கொள்ளப்பட உதவ வேண்டுமென்று அன்புடன் [illegible] றேன்.





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"



பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# தமிழரசு



# அரசு – மிகவுயர்ந்த தரமான

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர் : 7 இதழ் : 20

16—4—1977


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| மக்களால் மக்களுக்காகவே அரசாங்கம் இருக்க வேண்டும் | 2 |
| உலக—உடல் ஊனமுற்றோர் நாள் | 6 |
| நோய்களைத் தடுத்துச் செய்நலம் காப்பீர்! | 9 |
| கரும்பில் தோன்றும் நோய்களும் தடுப்பு முறைகளும் | 17 |
| பத்து இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பனைத்தொழில்! | 21 |
| படமும் செய்தியும் | 23 |
| சிறு நிலக்கிழார்களுக்கு ஏற்ற சிக்கனப்பாசன முறைகள் | 27 |
| பயறுவகைப் பயிர்களுக்கு நுண்ணுயிர் கலப்பதேன்? | 30 |
| வெக்கை நோயிலிருந்து கால்நடைகளைக் காத்திடுவீர்! | 33 |
| வீட்டு உபயோகத்திற்கு எரிபொருள் | 35 |
| காளானும் அதன் உபயோகங்களும் | 37 |
| இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் இணையற்ற பணிகள்! | 41 |
| ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை வெற்றிநடை போடுகிறது! | 42 |
| தேசிய கடற்பயண நாள் | 45 |
| நெற்பயிரின் நூற் புழுக்கள் | 47 |
| மாவட்டங்களின் மாறிவரும் தோற்றம்! | 48 |



கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல



16 MAY 1977




அட்டைப்படம் : ஒகேனக்கல் அருவி

# "மக்களால் மக்களுக்காகவே அரசாங்கம் இருக்க வேண்டும்!"

**—மொரார்ஜி தேசாய்**
**இந்தியப் பிரதமர்**



"பற்பல மாதங்களுக்குப் பிறகு, பீதியாகிய மேகங்களும் கலக்கமாகிய மேகங்களும் விலகின. மக்களுக்காக, மக்களால் நடத்தப்பட்ட, மக்களுடைய புரட்சி அது. நம் அரசியல் அமைப்பினிலே முதன்மை இடம் மக்களுக்கே! நானும் என் துணைவர்களும் எந்த மகத்தான கட்டளையின் கீழ் பணிபுரிய வேண்டுமோ, அதன் ஆதாரமாயிருப்பது அந்தப் பிரதான்யம், எங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை சென்ற தேர்தல்கள் மூலம் எங்களுக்குக் கிடைத்த சொத்தாகும். அந்த நம்பிக்கைக்குத் தகுதியுள்ளவர்களே நாங்கள் என்பதைக் காட்ட வேண்டும். மக்களின் நம்பிக்கையை நாங்கள் வென்றுள்ளோம். அதைத் தக்க வைத்துக் கொள்ள முயலுவோம்.

## நன்றி நவிலுகின்றேன்

"மிகச் சிரமமான நிலைமையினில் எங்கள் மீது உங்கள் நம்பிக்கையை வைத்ததற்காக முதற்கண் நான் நன்றி நவிலுதல் வேண்டும். ஆள்கட்டு, பணபலம், வண்டி வசதி என்று என்னவெல்லாம் எங்களுக்கெதிரே அணிவகுத்து நின்றன என்றறிவோம். தேர்தலுக்குத் தயார் செய்வதற்கும், இயக்கத்தை நடத்துவதற்கும் ஒரு சில வாரங்களே எங்களுக்கு இருந்தன.. உங்களை நாங்கள் அறிந்திருந்தோம். கடந்த ஆண்டுகளில் அளிக்கப்பட்டிருந்த பண்புகளிடம் உங்கள் பிணைப்பையும் அறிந்திருந்தோம். வழிவழியாக வந்த நம் பரம்பரையான பண்புகளை நீங்கள் தவறுமல் மீட்பீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கிருந்தது. தேர்ந்து தீர்மானம் செய்வதற்கு உங்களுடைய ஆற்றல் பற்றியும் எங்களுக்கு ஐயம் இருக்கவில்லை. முடிவுகள், உங்களிடம் எங்களுக்கிருந்த நம்பிக்கையை மெய்ப்பித்து விட்டன. நம் முன்னே உள்ள பணிகளைச் சமாளிப்பதில் இந்தப் பரஸ்பர நம்பிக்கைதான் நம் மதிப்பற்ற செல்வமாக இருக்கப் போகிறது. **இவ்வண்ணம் ஜனதா அரசாங்கம் உங்கள் நம்பிக்கையின் கருவி, துணிவின் கருவி, தேசிய அறப் பொறுப்பு ஒன்றின் அடக்கமான காவலன்** என்ற முறையினிலே, உங்களுடன் இன்றிரவு பேசுகிறேன்.

## ஒழுங்குக் கட்டுப்பாட்டைப் பேணுதல் வேண்டும்

"ஒழுங்குக் கட்டுப்பாட்டையும், பொருளாதார முன்னேற்றத்தையும் பெறும் பொருட்டு நெருக்கடி நிலை தேவை என்று நம்மிடம் சொன்னார்கள்; தேர்தல்கள் கருத்தைப் புறத்தே திருப்புவது என்றார்கள்; எதிர்க்கட்சியாருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்றார்கள். மெய்யான ஒழுங்குக் கட்டுப்பாடு, பயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. **காந்திஜி** நமக்குச் சுய கட்டுப்பாட்டைப் போதித்தார். நாம் ஒவ்வொருவரும், நாம் அனைவரும் கூட்டாக, ஒழுங்குக் கட்டுப்பாட்டையும், அடக்கத்தையும் பேணுதல் வேண்டும். அவை இன்றிச் சுதந்தரம், எதற்குமடங்காத தன்னிச்சைத் தனமாகத் தாழ்வுற்றுவிடும். **மேல் மட்டத்திலே நேர்மையும், எளிமையும், இருந்தாலன்றி, முன் மாதிரி உவமை காட்டுதல் இருந்தாலன்றி, விவசாயிகளையும், தொழிலாளர்களையும், வேலையற்றோரையும், உரிமை குறைந்தோரையும், வயிற்றுப் பட்டையை இறுக்குங்கள் என்றும், பொறுத்திருங்கள் என்றும், தியாகம் புரியுங்களென்றும் நாம் கோர முடியாது.**

## சுதந்தரமும், சோறும்!

"சுதந்தரமும், சோறும், வளர்நிலை நாடொன்றில்கூட ஒன்றோடொன்று போட்டியிடுபவை அல்ல. இரண்டும் கைகோத்துக் கொண்டு செல்பவை; ஒருபோதும் அவற்றைப் பிரிப்பது கூடாது. இழந்த சுதந்தரங்களை நாம் மீண்டும் வென்றுவிட்டோம். வறுமையிலிருந்தும், இல்லாமையிலிருந்தும் மேலே ஒவ்வொருவரையும் மீட்பதற்கு அதுவே கருவியாக இருக்க வேண்டும். பத்தாண்டுக்குள் இல்லாமையை விரட்டிவிடுவதாக ஜனதாக்கட்சி உறுதியளித்துள்ளது. தில்லியிலோ, மாநிலத் தலைநகரங்களிலோ, ஒரு சிலர் உட்கார்ந்து கொண்டு, அவர்கள் எவ்வளவு புத்திசாலிகளாயிருந்தாலும், அதைச் செய்துவிட முடியாது. அரசியல் வலிமையையும், பொருளாதார வலிமையையும் மையக் குவியலின்றிப் பரவலாக்குவதன் மூலமும், மக்கள் கலந்து கொள்வதன் மூலமும்தான் அதைச் செய்ய முடியும். மையம் வலுத்த அரசுமுறை ஜனநாயகத்துக்குப் பேராபத்தானது.

## நமது முன்னேற்றத்தின் ஆதாரம் கிராமமே!

"நம் பொருளாதார முன்னேற்றத்தின் ஆதாரமாகக் கிராமத்தை நாம் ஆக்குவது வேண்டும், வறுமையையும், பிற்பட்ட தன்மையையும் போக்குவதற்கான எல்லா முயற்சிகளும்-எங்கே மிக அவை வலுத்திருக்கின்றனவோ அங்கேதான்-வலுவாய் இருக்க வேண்டும் என்பது பால பாடம் போன்றது. தொன்றுதொட்டு நம்முடைய சமுதாயம் பிரதானமாக கிராம அடிப்படையுள்ளதாயிருந்து வருகிறது. மக்களில் 80 சதவிகிதம் பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள். நல்லபடியான மாறுதலின் ஓட்டத்தை உணரவேண்டியவை கிராமங்கள். கிராமத்தார் அதை உணர வேண்டும். இன்னும் என்ன முக்கியமெனில், தொழிலும் வேலையும் தேடி நாட்டுப்புறத்தார் நகரங்கள் பால் சரியும் போக்கை மாற்ற வேண்டும். மாறாக, நகரத்தார்தான், திறந்தவெளி வாழ்க்கைக்காக கிராமங்களை நாடிச் செல்ல வேண்டும். மக்களுக்குச் சேவைசெய்வதையும் அதோடு சேர்த்துக் கொண்டு, நாட்டுப்புறத்தின் பொருளாதாரம் செழித்திடவும். அதன் மூலம் நாடு பூராவும் செழித்திடவும் பணி புரிய வேண்டும்.

## வேலை வாய்ப்பைப் பெருக்குவோம்!

"சரியானபடி வேலை செய்ய வைத்து விட்டால், நம்முடைய மக்கள் மகத்தான வளமும், விவிதத் தன்மையும் உள்ள மூலச் செல்வமாவர். வேலை செய்யும் உரிமையை அரசு உறுதிப்படுத்துகிறது. வேலைவாய்ப்பைக் கூடுதல் பட்சம் ஆக்கும் வகையில் பொருளாதாரத் திட்டங்களையும், முன்னுரிமைகளையும் அரசு சீர்திருத்தம் செய்யும். வேலைத் திட்டங்களைப் பராமரிப்பதற்கு வேண்டிய உணவு இருப்புகள் நம்மிடம் உள்ளன. **காந்திஜியின் அந்த்யோதயம் வெறும் அறநெறிக் கருத்துமட்டுமல்ல. ஆனால், பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலுமான ஒரு கட்டாய நியதி.** வீட்டுத் தொழிலும் சிறுதொழிலும் அளவிலாச் செல்வத்தைத் தோற்றுவிக்க முடியும். தகுந்த தொழில் நுட்பத்தின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் உற்பத்தி ஆற்றலை ஒருங்கு திரட்டலாம். முக்கியமாக, பொதுமக்கள் உபயோகத்துக்கான நுகர்பொருள்களை இந்த வழியில் உற்பத்தி செய்யலாம். பெருநகரம், பெரும்பொறி, பெருவிஞ்ஞானம் இவற்றுக்கெல்லாம் வாய்ப்பு உண்டுதான். ஆனால் முதற்சலுகையுடன் மேலோங்கி நிற்கும் தனி உரிமையை அவை கோர முடியாது.

# பிரதமர் உரை

"சுரண்டுவது அல்லாமல் சமத்துவம் உள்ள பண்பாடு ஒன்றை நாம் உருவாக்க வேண்டும். ஏழையும் செல்வரும், நகரமும் கிராமமும் என்ற வகையிலான இரட்டைச் சமுதாயம் தன்னை நாம் இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. நாடும் நகரமும் நாட்டுப்புறமும் போட்டி போடும் தனிப்பட்ட இரு பண்பாடுகள் என்று நாம் கருதக் கூடாது. இணைப்பான பரஸ்பரச் சார்புள்ள அமைப்புகள் என்றே கருதுவோம்.

## நீதித்துறைச் சுதந்தரம் பாதுகாக்கப்படும்!

"இந்த இணைப்பான அணுகுமுறையின் அடிப்படையில்தான் நான், உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். விவசாயத்திலோ, குடிசைத் தொழிலிலோ, சிறுதொழிலிலோ, பெருந்தொழிலிலோ, வர்த்தகத்திலோ வேறு வாணிப நடவடிக்கைகளிலோ, வாழ்வின் எத்துறையில் நீங்கள் இருந்தாலும், நாடு முழுவதிலுமாக அனைத்துத் துறைகளிலும் முன்னேறுவதற்கு உங்கள் உதவும் கையைத் தாருங்கள் என்று வேண்டுகின்றேன். ஜனநாயகத்தின் பலம் அதன் அமைப்புகளையும், மரபுகளையும் பொறுத்துள்ளது. நல்லவேளையாக, மிகவும் இருண்ட நேரங்களில்கூட வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் சேர்ந்த எவ்வளவோ ஆண்களும் பெண்களும், திமிர் பிடித்த வல்லமைக்கு முன்னே மண்டியிட மறுத்தனர். அந்தப் பாரம்பரியத்தின் மேலேதான் நாம் நமது நிறுவனங்களை மீண்டும் எழுப்ப வேண்டும். அந்நிறுவனங்களை, கட்சி நலன்களுக்காகக் . . கவிழ்ப்பது என்பது இனி ஒருபோதும் இல்லாத வண்ணம் உறுதியாக எழுப்புவோம். அரசியல் சாசனத் திருத்தங்கள், தக்க சீரமைப்புகள், முறைமை மாறுதல்கள் ஆகியவை தேவைப்படும். **குறிப்பாக, நீதித் துறைச் சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்கு அரசு விரைவில் ஆவன செய்யும். எல்லா நிலைகளிலும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளையும், பதவி துஷ்பிரயோகத்தையும் விசாரிப்பதற்கெனச் சுயேட்சையான அமைப்பும் தாமதமின்றி நிறுவப்படும்.**

## இளைஞர்களுக்கு வேண்டுகோள்!

"கடந்த தேர்தலில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம் நாட்டு இளைஞர்கள் அதில் கொண்ட பங்கு. சமுதாயத்தில் உரிய இடத்தை மேற்கொள்ளுவதற்கு இளைஞர்களுக்குள்ள ஆர்வத்தையும், அவாவையும் பூர்ணமாக உணர்கிறேன். **இளைஞர்களின் கல்வியே நம் முதல் கருத்தாயிருக்க வேண்டும்.** இது தெளிவு. அதே சமயம், அவர்களது ஓய்வு நேரம் நாட்டுப் பணிக்கெனச் செலவாகும்படி பார்த்துக் கொள்வது நம் கடமை. மக்களின் சேவைக்கு இளைஞரைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் ஆக்கப்பூர்வமான முயற்சி செய்தாக வேண்டும். இதற்கென தக்க திட்டங்களை விரைவில் வகுப்பது சாத்தியமாகும் என்று நம்புகிறேன். இதனிடையே, தம் முன்னே விரிந்து கிடக்கும் பல்வேறு உத்தியோகங்களுக்குத் தமது கல்வி மூலம் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறு இளைஞர்களை வேண்டுகிறேன். நம் பணித் திட்டத்தில் சேர்க்கப்படவிருக்கும் பல்வேறு வேலை வாய்ப்புத் திட்டங்களின் கீழ் அவர்களுக்குப் பல வாய்ப்புகள் இருக்கும். **குணத்தை வளர்ப்பதாகவும், நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பளிப்பதாகவும் கல்வி முறை இருக்க வேண்டும்.** அடிப்படையில் அக்கல்வி, இளைஞரிடையே சுய திட்டத்தையும், ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் அச்சமின்மையையும் வளர்ப்பதாயிருக்க வேண்டும். நம் நாட்டில் கிராம மக்கள்தான் மிகப்பெரும் தொகையில் இருப்பதால், வெறுத்து ஒதுக்க வேண்டிய ஒன்றாக கிராமங்களை இளைஞர்கள் கருதாமல், ஆரோக்கியமான வாழ்வுக்கேற்ற இடங்களாகக் கருதுவதற்குக் கற்றுத்தர வேண்டும். கிராம முன்னேற்றத்துக்

கும் தங்கள் திறமைகளை அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

## ஆசிரியர்களின் பங்கு

''தேசிய அபிவிருத்திப் பணிகளில் ஆசிரியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. பல்வேறு காரணங்களுக்காக நான் இதில் தலையிட விரும்பவில்லை என்றாலும், நாட்டின் இளைஞர்களை உருவாக்கும் பணிகளில் 'ஆசிரியர்களின் பங்கு' போதுமான கவனம் பெறவில்லை என்றே கூறுவேன். நமது தேசிய வாழ்விலுள்ள பல்வேறு உருவாக்கச் சலுகைகளோடு குழந்தைப்பருவம் முதல், முதுமைக்காலம் வரையிலான நமது கல்வியும் அபிவிருத்தி முனைப்புக் கொண்டதாக இருக்க வேண்டும். அரசாங்கக் கொள்கைகளின் இந்த அம்சம், உலகம் முழுவதிலும் அதிகரித்த அங்கீகரிப்பைப் பெற்று வருகிறது. நாட்டிலுள்ள இளைய தலைமுறையினரின் கல்வியிலும், மேம்பாட்டிலும் இந்தியா சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

## எல்லாரும் பொறுப்புகளை உணர வேண்டும்

''மக்களின் பெரும் ஒத்துழைப்பின்றியும், மக்களுக்கிடையே கூட்டு முயற்சிகளின்றியும் இத்தகைய மாபெரும் முயற்சிகளை செயல்படுத்துவது கடினம் என்பதனை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். கொள்கைகளைச் செயல்படுத்தும் முக்கியப் பொறுப்பு, கொள்கைகளை வகுப்பவர்களைச் சார்ந்ததாகும். **வாழ்க்கையில் உரிமைகளைக் கோருவது எளிது; ஆனால் அதற்கெனப் பாடுபடுவது மிகவும் கடினமானது.** நமது நாட்டு மக்களின் எல்லாப் பிரிவினரும் தங்களது பொறுப்புக்களை அதிக அளவில் உணரவேண்டும் என்றே நான் பெரிதும் விரும்புகிறேன். நான் மேற்கூறிய மாபெரும் பணிகளில் மக்களும், அவர்களது பிரதிநிதிகளும், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றுடன் பங்கு பெறுவதே, நமது பொருளாதாரத் திட்டங்களையும், இதரத் திட்டங்களையும் வெற்றிபெறச் செய்ய அவசியமான ஒன்றாகும்.

## செலவைக் குறைத்துச் சேமிக்க வேண்டும்

''நிதிவளங்களை அதிகரித்துக் கொள்ள, மக்கள் தங்களால், இயன்ற அளவு வருமானம் ஈட்ட வேண்டும்; மிக அவசியமான செலவுகளை மட்டும் செய்யவேண்டும். தங்களால் இயன்ற அளவுக்குச் சேமிக்க வேண்டும்; தங்களது சேமிப்புக்களை உற்பத்தித் தொழில்களிலோ, பாங்கு சேமிப்புக்களிலோ, அரசாங்கக் கடன்களிலோ அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டும். இந்த ஒரு வழிதான், நாம் நமது உள்நாட்டு வளங்களைப் பெருக்கி, நமது வெளிநாட்டு ஈடுபாடுகளைக் குறைக்க ஏற்றதாகும். சில காலத்திற்கு முன்பு இருந்த நிலையைவிட நமது வெளிச் செலாவணி நிதிச் சேமிப்பில் மகிழ்ச்சிகரமான ஒரு நிலையில் நாம் இன்று இருக்கிறோம். இருப்பினும் நாம் நமது வெற்றிக் களிப்பில் ஓய்ந்து விடக்கூடாது. நடப்பு நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக — சேமநல அரசிற்கான நீண்டபாதையில் நம்மை அழைத்துச் செல்லத் தக்க— பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான—நமது நிதிவளங்களை நாம் தொடர்ந்து அபிவிருத்தி செய்ய வேண்டும்.

## நீதிபதிகளுக்கு வேண்டுகோள்!

''தேசிய சீரமைப்புக்கான இப்பெரும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், நமக்கு உதவக்கூடிய அனைவரது ஒத்துழைப்பும் நமக்கு மிகவும் தேவைப்படுகிறது. வழக்கறிஞர்களுக்கும் நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் உண்மையையும், நம்பிக்கையையும் நான் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அதே சமயத்தில், அவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, 'நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள், மலிவாகவும் துரிதமாகவும் நீதி கிடைக்கப் பெறுவதற்கான வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும்; சாதாரண மனிதனும் பாராட்டத்தக்க விதத்தில் நீதி வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தப்பட வேண்டும்' என்பதே நீதிபதிகளுக்கான எனது வேண்டுகோளாகும்.

## வியாபாரிகளுக்கும் தொழில் தொடர்புடையவர்களுக்கும் வேண்டுகோள்!

''வியாபாரம், தொழில் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் உற்பத்திப் பிரிவுகளின் உற்பத்தித் திறன்களை முழு அளவில் பயன்படுத்த வேண்டும். **மக்களின் தேவைகளைப் பயன்படுத்தி விலைகளை அதிகரித்து; அதிக, நேர்மையற்ற இலாபம் ஈட்டும் நோக்கத்தை அவர்கள் தவிர்க்க வேண்டும்.** அதற்குப் பதிலாக உற்பத்தி அபிவிருத்தி முயற்சிகளின் மூலம் நாட்டைப் பொருளாதார ரீதியில் பலமானதாகவும், சுபிட்சமானதாகவும் ஆக்குவதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

## மக்களுக்கு அளிக்கும் உறுதி

''இந்த சகாப்தத்தில் வாழும் எவரும் உழைப்பையோ, அதற்கான பலன்களையோ மறுக்க மாட்டார்கள். ஆனால் நாட்டின் உற்பத்தி முயற்சிகளின் இழப்பை, தேவைகள் நிர்ணயம் செய்ய இயலாது. நாடு தேக்க நிலையில் இல்லாமலும், பின்தங்கியிருக்காமலும் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும். அதாவது நாம் அதிகபட்சம் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவு உற்பத்தி செய்து நாட்டின் நிதிவளத்தை அதிகரிக்க வேண்டும். **மக்களுக்கு நீதியையும், நியாயமான பங்கையும் மறுக்கக்கூடிய ஒரு கட்சியாக அரசாங்கம் செயல்படாது என்று நான் உறுதி கூறுகிறேன்.**

## மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டியவை

''சுதந்தரத்துக்கான உரிமை, இந்நாட்டுக் குடிமக்கள் அனைவரின் பிறப்புரிமை என்பதை நான் அங்கீகரிக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மறைக்கப்பட்டிருந்ததால், அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளது போல் இந்த உரிமைகளை மீண்டும் முழுவதுமாகச் சீர்படுத்துவதற்கு நாம் உறுதி செய்துள்ளோம். இந்த நோக்கத்தை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். அதே நேரத்தில் சில குறிப்பிட்ட பொறுப்புக்களையும் அந்த உரிமைகள் கொண்டுள்ளன என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டுக்கும், நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் விசுவாசமாயிருப்பது, அரசியலமைப்புச் சட்டங்களின் பழக்க வழக்கங்களைப் பராமரித்தல் ஆகியவை குடிமகனின் முதல் கடமை என்பதை உணர்ந்து, உறுதியான கொள்கை கொண்டிருப்பதே அந்தப் பொறுப்புக்களின் அடிப்படை அம்சமாகும். **நாம் அனைவரும் சட்டத்தை மதிப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொள்வதுடன், சட்டத்துக்கு மரியாதை செலுத்துவதை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.**

## வன்முறை தவிர்த்து நன்முறை செய்வோம்

''சட்டத்தை அமல்படுத்துவதன் மூலமோ, நிர்வாக நடவடிக்கை மூலமோ மனம் புண்படுவதாகக் கருதுபவர்களின் உணர்ச்சிகளை நான் பாராட்ட முடியும். **தவறிழைத்தவர்களைத் திருத்தும் சாதனம் வன்முறை அல்ல; அரசியலமைப்புச் சட்டங்கள் அல்லது அமைதியான வழிகளே அவர்களைத் திருத்துவதற்கு ஏற்றவைகளாகும்.** சாதாரண விளைவான [illegible] கோளாறு காரணமாக '**சத்யாக்கிரஹம்**' என்னும் ஆயுதத்துக்கு **காந்திஜி** அடைக்கலம் தரவில்லை. அநீதி அல்லது நடத்தை ஒழுங்கீனம் போன்ற பெரிய பிரச்சினை உள்ளிட்ட பெரிய பிரச்சினை தலைதூக்கும்போதே 'சத்யாக் கிரஹத்துக்கு அடைக்கலம் தந்தார். அவருடைய வாழ்க்கைப்படி-வன்முறை முயற்சிகளுக்குத் தடைவிதித்து, கைவிட்டு, காந்தியின் சத்யாக் கிரஹச் சித்தாந்தத்தைப் பின்பற்றிச் செல்ல வேண்டும்.

## காவற்படையினருக்கு வேண்டுகோள்:

''சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதில் காவற்படையினர் பலாத்காரம், வன்முறையை நாடக்கூடாது என்றும், அவசியமானால் அப்போதும்கூட குறைந்தபட்சம் ஓரளவு வன்முறைக் கொள்கையை அனுஷ்டிக்கும்படியும் கட்டளையிடுகிறேன். மக்களின் சேவகர்கள் அவர்கள். வன்முறை குற்றங்களை நிர்வகிப்பதில் மக்களின் கருவிகளாகத் தங்களை அவர்கள் கருத வேண்டும். **மக்களுக்கு நேர்மையான, பாரபட்சமில்லாத சேவைகளுக்காக அரசு கருவூலத்திலிருந்து தங்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறதே தவிர, தங்களின் சொந்த அராஜகத்தன்மைக்கோ சுயநல நோக்கங்களுக்கோ அல்ல என்பதை சிவில் ஊழியர்கள் நன்கு மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.** அவர்களது நடத்தை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கேற்ப நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சேவை புரிவது ஒன்றே அவர்களது பொறுப்பாகும். மனச்சாட்சிக்கு ஏற்ப, சட்டங்களின் விதிகளுக்கேற்ப உண்மையாகவும், நேர்மையாகவும் அவர்கள் கடமையாற்ற வேண்டும்.

''தேர்தல்கள் மூலம் பிரதிநிதித்துவ நடத்தைகளைப் பராமரிக்க விரும்புகிறோம். நிர்வாகத்தின் தரம், அபிருத்தி ஆகியவற்றை உயர்த்துவதற்குச் சிறிய மாவட்டங்களும், வட்டாரங்களும் உதவலாம். **மக்களால் மக்களுக்காகவே அரசாங்கம் இருக்க வேண்டும். ஜனநாயகத்தின் அடி வேரிலிருந்தே மக்களின் பங்கு தேவைப்படுகிறது.**

## வெளியுறவுக் கொள்கை

''நம்முடைய வெளியுறவுகள் குறித்து ஓரிரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். உணர்ச்சிப் [illegible] அமைதியில் நம்பிக்கையுடையவர்கள் நாம். அமைதியை ஒரு முழக்கமாகக் கொண்டு, நாம் நம்பிக்கை வைக்கவில்லை. இந்தப் பூமியில் வசிக்கும் நாம் அனைவருக்கும், பூமியின் பாதுகாப்புக்கும் ஒரே நேர்த்தியான வழி அமைதியாகும். அமைதி நிலைநாட்ட-வழிகாண-கோஷ்டி சேராப் பாதையைப் பின்பற்றுவதே ஒரு வழியாகும் என நம்புகிறேன். இதுவும், உலகம் முழுதுமுள்ள பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒட்டு மொத்தக்கூட்டு முயற்சிகளுமே நம்முடைய வெளியுறவுக் கொள்கையின் வழிகாட்டும் நோக்கங்களாகும். உலகத்தின் மற்ற நாடுகளோடு தோழமை, நட்புறவு கொண்டு, எந்தவித மனக்கிலேசமுமின்றி இந்தப் பாதையை நாம் பின்பற்றி நடப்போம்.

## தென்மாநில மக்களுக்கு உறுதி

''ஜனதா கட்சி வெற்றி கண்டுள்ள இடங்களின் அளவு எதுவாக இருந்தாலும், தென்மாநிலங்களைச்சேர்ந்த மக்கள்-தங்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்படும் என்ற அச்சத்தை ஒருபோதும் கொள்ள வேண்டாம். இது ஒரு தேசிய அரசாங்கம், எந்த ஒரு பிராந்தியமும் அல்லது மக்கள் தொகையின் ஒரு பிரிவும் தங்களை ஆதரவற்றவர்களாகக் கருதக் காரணமில்லை. அப்படி ஒரு வேளை ஏதாவது அச்சமிருக்குமானால், அவை ஆதாரமற்றவை என்பதையும் தங்களது நியாயமான சட்டப்பூர்வமான அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் காலப்போக்கில் அவர்கள் உணர்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

## எதிர்க்கட்சிகளுக்கு உறுதி

''இதர கட்சிகளால் அமைக்கப்படும் மாநில அரசுகள், மத்திய அரசிடமிருந்து ஒத்துழைப்பு ஆதரவு இராதோ என்று கவலை கொள்ளத் தேவையில்லை. நிர்வாகங்களில் குற்றங்களைக் காண்பதற்கோ அல்லது நிர்வாகங்களைக் கவிழ்ப்பதற்கோ நாங்கள் இல்லை. பஞ்சாயத்துக்கள் மற்றும் நகரசபைகள் விஷயத்தில் பெரும் பொறுப்புக்களை வளர்க்க விரும்புகிறோம்.

## மக்களை நோக்குகிறோம்!

''நாட்டு மக்களால் எமக்களிக்கப்பட்ட கட்டளையின் மூலமும், பொதுவாக மக்களிடத்தில் நாங்கள் ஏற்றுள்ள கடமைப் பொறுப்புகளின் மூலமும், தோன்றுபவையாக நாங்கள் கருதும் வழி காட்டி நெறிகளை இந்தச் சிறிய உரையில் உங்களுக்குத் தெரிவித்துள்ளேன். விடுதலைக்குப்பின் இந்நாட்டின் வரலாற்றிலே முதல் தடவையாக எதிர்க்கட்சியானது ஆளுங்கட்சி என்ற முறையில் சோதனைக்கு உள்ளாகியிருப்பதை நாங்கள் முழுமையாக உணருகிறோம். நூற்றாண்டுகளின் பாரம்பரியமாக வந்துள்ள பிரச்சினைகளுக்கு ஐக்கிய முனை ஒன்றைக் காட்டுவதென நாங்கள் உறுதி பூண்டிருப்பதையும் முழுமையாக உணர்கிறோம். ஆனால் இறுதியில் எங்களுக்கு ஆதரவு அளித்திட மக்களை நோக்குகிறோம். அவர்கள்பால் நாங்கள் பெற்றுள்ள நம்பிக்கை, எங்களிடமே நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஆகிய இரண்டிலுமே மக்களின் ஆதரவு தேவை. நம் வரலாற்றில் பெரும்பாலான சமயங்களில் நம் நாடு தனக்குரியது கிட்டாமல் ஏமாற்றப்பட்டிருக்கிறது. முப்பதாண்டுக்கு முன்தான் நாம் நமது கதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றோம். இடைவிடாமல் மக்கள் நமக்கு வழியைக் காட்டி வந்துள்ளார்கள். முந்தைய ஆட்சியிடம் அடைந்த ஏமாற்றத்துக்குப் பிறகு, நம்மிடம் இப்போது நம்பிக்கையை வைத்துள்ளார்கள். நல்வாழ்வு இலட்சியத்தை அடைவதில் ஒரு முயற்சியையும் செய்யாமல் விடமாட்டோம் என அவர்கட்கு நான் உறுதி கூறுவேன். அமைதி, பாதுகாப்பு, சுபிட்சம் ஆகியவற்றை அடையும் பாதையில் நாட்டை இட்டுச் செல்ல எல்லா முயற்சியும் செய்வோம்.''

**(நமது இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் நாட்டு மக்களுக்கு 4-4-1977 அன்று வானொலி மூலம் விடுத்த வேண்டுகோள்.)**

**[நன்றி: பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.]**

# உலக–உடல் ஊனமுற்றோர் நாள்!



அமுதசுரபியைக் கையிலேந்திக் கொண்டு அன்னதானத்தைத் தொடங்கிய மணிமேகலை,

**''காணார், கேளார், கால்முடம் பட்டோர்**
**பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்**
**யாவரும் வருக......''**

என்று உடல் ஊனமுற்றவர்களைத்தான் முதலில் அழைத்ததாக 'மணிமேகலை' காவியம் கூறுகிறது. ஏறக்குறைய கி.பி. 2ஆம் நூற்றாண்டிலே தோன்றியதாகக் கருதப்படும் காப்பியமான மணிமேகலையிலேயே உடல் ஊனமுற்றவர்கள், சமுதாயத்தினால் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து விதைக்கப்பட்டிருக்கிறது.

எளியாரிடம் இரக்கம் கொள்ளும் மனித மனம், உறுப்புக் குறைவு பட்டவர்களிடம் மிகவும் இரக்கப்பட்டு வருகிறது என்பது தெளிவாகிறது. சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் பேதம் கூடாது என்ற அருங்கருத்து நிலவி வருவதைப் போலவே உடல் ஊனமுற்றவர்கள் ஒதுக்கப்படக் கூடாது என்ற கருத்தும் மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் தழைத்து வளர்ந்து வருகிறது. அந்த எண்ணம் [illegible] முழுவதும் பரவியுள்ளது. அதன் விளைவாகத்தான் உலக உடல் ஊனமுற்றோர் நாள், உலக முழுவதும் ஆண்டு தோறும் மார்ச், ஏப்ரல் மாதங்களில கொண்டாடப்படுகின்றது.

நமது இந்திய நாட்டில் முதன் முதலில் 1964ஆம் ஆண்டில் தான் உலக உடல் ஊனமுற்றோர் நாள் கொண்டாடப்பட்டது. தமிழகத்தில் 1967ஆம் ஆண்டு முதல், உலக உடல் ஊனமுற்றோர் நாளைக் கொண்டாடி வருகிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககத்தினாலும், மாவட்டத் தலைநகரங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களாலும் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நாள் கொண்டாடப்படுவதின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

(அ) உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்குரிய காரணங்களைப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருதல் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் சமுதாயத்தின் பங்கைச் சுட்டிக் காட்டுதல்.

(ஆ) உடல் ஊனமுற்றவர்களை உடல் ஊனமற்றவர்களுடன் ஒருங்கிணைத்தல்.

உலக உடல் ஊனமுற்றோர் நாள் விழாவின் ஒரு பகுதியாக உடல் ஊனமுற்றவர்கள் விளையாட்டு நாள் ஏற்கெனவே 27.2.77 அன்று எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. பல்வேறு உடல் ஊனமுற்றோர் பள்ளிகளைச் சார்ந்த ஊனமுற்ற குழந்தைகளில் ஏறக்குறைய ஆயிரம் குழந்தைகள் இவ்விளையாட்டில் கலந்து கொண்டனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரால் இந்த விழா ஏப்ரல் 9, 10 ஆகிய நாட்களில் கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ராஜாஜி மண்டபத்தில் 9.4.77 அன்று ஒரு கண்காட்சியும் நடத்தப் பெற்றது. மத்திய சமூக நல வாரியத்தின் தலைவரான திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.

சென்னையிலிருந்தும், சென்னையைச் சுற்றிலுமுள்ள உடல் ஊனமுற்றோர் நிறுவனங்கள் பலவற்றிலிருந்தும் ஏராளமான குழந்தைகள் இக்கண்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டனர். அவர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களும், வடிவமைக்கப்பட்ட பொருள்களும் இக் கண்காட்சியில் இடம் பெற்றன. இக் கண்காட்சியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரால் அரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.





உலக-உடல் ஊனமுற்றோர் நாள் விழாவை முன்னிட்டு 10—4—1977 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில், தமிழ் நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ் விழாவில் ஊனமுற்ற தொழிலாளர்களில் ஒப்பற்று விளங்கியவர்களுக்கும், ஊனமுற்றவர்களை அதிக எண்ணிக்கையில் வேலைக்கு அமர்த்திக் கொண்ட தொழிலதிபர்களுக்கும் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் பரிசு வழங்கினார்.

உலக உடல் ஊனமுற்றோர் நாளின் பொருட்டு, கலைவாணர் அரங்கத்தில் ஏப்ரல் 10ஆம் நாளன்று பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. பொதுக் கூட்டத்திற்கு ஆளுநர் ஆலோசகர் திரு வி. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை ஏற்றார். தமது தலைமை உரையில் அவர் குறிப்பிட்டதாவது :

''உடல் ஊனமுற்ற தொழிலாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், சமுதாயத்திற்குப் பயன்படுபவர்களாகவும் ஆக முடியும்.

''ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் என்பது மிகப் பெரிய தொன்று. அதனால், அரசினரின் முயற்சிகளுடன், தொண்டு நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் உதவி புரிய வேண்டும்.''

இந்த உலக நாளின் நினைவாக தன்னிரகற்று விளங்கும் உடல் ஊனமுற்ற தொழிலாளர்கள் 9 பேருக்கும், மிகச் சிறந்த திறமையுள்ள 10 உடல் ஊனமுள்ள தொழிலாளர்கள் பேருக்கும் மாநில அரசின் பரிசுகளை ஆளுநர் ஆலோசகர் வழங்கினார். மிக அதிக அளவில், உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளித்த நிறுவனங்களுக்கும் உடல் ஊனமுற்ற ஆசிரியர்களில் மிகச் சிறந்தவர்களுக்கும், அவர் பரிசுகளை வழங்கினார்.

''சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ், 'பேங்க் ஆஃப் இந்தியா', -இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்', 'இந்தியன் பாங்க்' ஆகியவை அளித்த கடனுதவித் தொகைகளையும் ஊனமுற்றோர் 25 பேருக்கு அவர் வழங்கினார்.

சொற்பொழிவை அடுத்து நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் பங்கு கொண்ட சிறுவர், சிறுமியர்களுக்கு, சட்டைகள், பேண்ட் துணிகள், 'ஓவல்டின்', 'பிளாஸ்டிக்' பொருள்கள் போன்ற பல்வேறு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. பரிசுப் பொருள்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் அவர்களுக்குச் சிற்றுண்டி, உணவு, பால் முதலியவையும் வழங்கப்பட்டன.

உலக உடல் ஊனமுற்றோர் நாளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப் பெற்ற சிறப்பு இயக்கத்தின் மூலம், பார்வையற்றோர் 11 பேர், கேளார் 8 பேர், கால், கை ஊனமுற்றோர் 106 பேர் ஆக மொத்தம் 125 பேர்களுக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வேலை வாய்ப்பளித்திருக்கிறது.

எனவே ஆண்டு தோறும் கொண்டாடப் பெற்று வரும் உலக உடல் ஊனமுற்றோர் நாள்—ஊனமுற்றோரின் மறு வாழ்வுக்குப் பாடுபடும் திருநாளாகக் காட்சி தருகிறது. உடல் ஊனமுற்றோருக்கு நல்வாழ்வு அமைத்துத் தருவதில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மாபெரும் பணியாற்றுகிறது என்றால் மிகையாகாது.

—எஸ். சண்முகசுந்தரம்.




# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.





இன்றைய குழந்தைகளே, நாளைய குடிமக்களாவர். நாளைய குடிமக்கள் அறிவோடும் ஆற்றலோடும், வலிவோடும் வனப்போடும் விளங்க வேண்டுமானால், அவர்களின் குழந்தைப் பருவத்திலேயே நோய்களைத் தடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எனவேதான், 1977-ஆம் ஆண்டின் உலக நல்வாழ்வு நாளின் கொள்கை, குழந்தைப் பருவத்திலேயே, ''நோய்களைத் தடுத்துச் சேய்களைக் காப்பீர்!'' என்று வலியுறுத்துகிறது.

உலக நல்வாழ்வு நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

உலக நல்வாழ்வு நிறுவனம் ( World Health Organisation ), 1948ஆம் ஆண்டு ஏப்ரல் 7-ஆம் நாள் துவக்கப்பட்டதை யொட்டியே ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7-ஆம் நாள் உலக நல்வாழ்வு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

### உலக நல்வாழ்வு நாளின் கொள்கை

மனித இனத்தின் நல்வாழ்வை ஊக்குவிப்பதின் முக்கியத்துவத்தைப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதே உலக நல்வாழ்வு நாள் கொண்டாடப்படுவதின் குறிக்கோளாகும். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கொள்கையுடன் ( Theme ) உலக நல்வாழ்வு நாள் கொண்டாடப்படுகிறது.

''முன்னெச்சரிக்கையால் கண்ணொளி காப்போம்''—என்ற கொள்கையுடன் 1976—ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் நாள் உலக நல்வாழ்வு நாள் கொண்டாடப் பெற்றது.

''நோய்களைத் தடுத்துச் சேய் நலம் காப்பீர்!'' ( Immunize and Protect your Child ) என்ற கொள்கையுடன், 1977—ஆம் ஆண்டு ஏப்ரல் 7—ஆம் நாள் உலக நல்வாழ்வு நாள் கொண்டாடப் பெற்றது.

தொற்று நோய் உட்படப் பல்வேறு உடல் நலக் குறைவுகளுக்கு குழந்தைகள் எளிதில் இலக்காகின்றனர். இந்நோய்கள் அண்மைக் காலம் வரை அடிக்கடி தோன்றி, வெகு தீவிரமாகப் பரவி, மனித உயிர்களை மாய்த்து வந்தன. மருத்துவ அறிவியலில் தோன்றிய முன்னேற்றத்தின் காரணமாகவும், நல்வாழ்வுப் பணிகள், நல்வாழ்வுக் கல்வி, தடுப்பு முறை இயக்கம் ஆகியவைகளைப் பின்பற்றியதன் மூலமாகவும், குழந்தைகள் நோய் வாய்ப்படுதலும் அதன் காரணமாக ஏற்படும் குழந்தைகள் இறப்பு விகிதமும் குறிப்பிடத் தக்க அளவுக்குக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன.

## தடுப்பு ஊசி போடுவதின் நோக்கம்

முன்னேறிய நாடுகளிலும், முன்னேறி வரும் நாடுகளிலும் பல்வேறு நோய்களைத் தடுத்திடும் எதிர்ப்பாற்றலை ஏற்படுத்துவதற்குத் தடுப்பு மருந்துகள் (Vaccines) பெருமளவில் பயன்படுத்தப்பட்டு, அம்முயற்சிகளில் பெரும் வெற்றியும் காணப்பட்டு உள்ளது. தடுப்பு ஊசி போடுவதன் நோக்கம், தடுப்பு ஊசி போடப்பட்டவருக்கு எவ்விதத் தீங்குமின்றி நோய் தாக்குதலை எதிர்க்கும் சக்தியை உருவாக்குவதேயாகும்.

காச நோய், பெரியம்மை, தொண்டை அடைப்பான் நோய் (டிப்தீரியா), கக்குவான், டெட்டனஸ், இளம்பிள்ளைவாதம் (Polio-myelities), டைபாய்டு, காலரா போன்ற பொதுவான தொற்று நோய்களிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவதற்குத் தடுப்பு ஊசி போடுவதே சிறந்ததாகும்.

## அனைத்து நாடுகளிலும் உள்ள குழந்தைகளின் நிலை

உயர்ந்த அளவு நுட்பவியலும், விரைவான முன்னேற்றமும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் தடுப்பு ஊசி போடுதல் போன்ற நவீன முறை நமக்குக் கிடைத்த போதிலும் அனைத்து உலகத்திலும் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் அம்முறை பயன்படுத்தப்படவில்லை என்பது கொடுமையான செய்தியாகும்.

வளர்ந்து வரும் நாடுகளில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 8 கோடிக் குழந்தைகள் பிறக்கின்றனர். அக்குழந்தைகள் அனைவர்க்கும் நோய்களிலிருந்து பாதுகாப்புத் தேவைப்படுகிறது. ஆனால் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. இத்தகைய நிலைமைக்குக் காரணங்கள் பல உள்ளன.

குழந்தைப் பருவத்தில் தோன்றும் கொடிய நோய்களைத் தடுத்திட வல்ல நல்வாழ்வுப் பணியாளர்களால் 10 சதவிகித அளவு குழந்தைகளுக்குக் கூட நோய் தடுப்புப் பணிகள் செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலை, வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளது. ஆனால் பணக்கார நாடுகளைச் சார்ந்த 90 சத அளவிற்கும் மேற்பட்ட குழந்தைகள், 'டிப்தீரியா', கக்குவான், 'டெட்டனஸ்', 'போலியோ', அம்மை போன்ற நோய்களை எதிர்க்கும் எதிர்ப்பாற்றலைப் பெறுகின்றார்கள்.

5 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே தோன்றும் மரணத்தில், 97 சத அளவு மரணம் குறைந்த அளவே முன்னேறியுள்ள நாடுகளில் ஏற்படுகிறது என்பது தெரிய வருகிறது.

எனவே நோய்களைத் தடுத்துச் செய்களைக் காக்கும் பணியில், வளர்ந்து வரும் நாடுகளும் — வசதியும் வாய்ப்பும் போதிய அளவுக்குப் பெற்றிராத நாடுகளும் குறைந்த அளவே வளர்ந்துள்ள நாடுகளும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

## இந்தியாவில் குழந்தைகளின் நிலை

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பாதி அளவினர் பதினைந்து வயதிற்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். 1 முதல் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளே, 'டிப்தீரியா', கக்குவான், 'டெட்டனஸ்', 'போலியோ' போன்ற நோய்களுக்கு மிகவும் அதிக அளவுக்கு, வயது வந்தவர்களைவிட — இலக்காகின்றனர். குழந்தை இளமையாக (வயது குறைவாக) இருந்தால் அக்குழந்தை அதிக அளவுக்கு நல்வாழ்வு அபாய மண்டலத்தில் '(Health danger zone) உள்ளது என்று பொருள். இத்தகைய நோய்களைக் குணப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் தேவையான வசதிகள் கிராமப் புறங்களில் ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களிலும், மருத்துவ மனைகளிலும், தாய்-சேய் நல விடுதிகளிலும் கிடைக்கின்றன. ஆயினும் குழந்தைகள் நோய் வாய்ப்படும் தன்மையும், அதனால் ஏற்படும் இறப்பு விகிதமும் அதிக அளவிலேயே உள்ளது. அபாய அறிவிப்பாக உள்ள குழந்தைகளின் இறப்பு விகிதம், பொது மக்கள் முழு அளவில் மருத்துவ நல்வாழ்வு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

## வறுமையும் அறியாமையும்!

ஒரு குழந்தையை அதன் வாழ்நாள் முழுவதும் நோய் நொடியிலிருந்து காப்பாற்றுவதற்குத் தேவையான 'வாக்சின்' மருந்துகளின் விலை, ஏறத்தாழ 15 ரூபாய் மட்டுமே ('2 டாலர்') ஆகிறது. ஆனால் அந்த அளவுக்குக் கூடச் செலவிட முடியாத நிலையில் பல ஏழைகள் உள்ளனர். இந்தக் குறைந்த செலவைச் செய்வதற்கு வசதியிருந்தும் பல பெற்றோர்கள் அறியாமையினால்—நோய் தடுப்பு மருந்துகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாததால் — தெரிந்திருந்தும், தடுப்பு ஊசி போடுவதனால் குழந்தைகளுக்குக் காய்ச்சல் வந்துவிடுமோ என்ற அச்சத்தினால் — தடுப்பு ஊசி போட்டு நோய்களைத் தடுத்துச் செய்களைக் காப்பாற்றாமல் இருந்து விட்டு, பிறகு நோய் வந்த பின் அதிகச் செலவு செய்தும் பயன் கிட்டாது அவதிப்படுகின்றார்கள்.

இத்தகைய நிலை இனியும் தொடரக் கூடாது, என்பதற்காகவே இந்த ஆண்டில் உலக நல்வாழ்வு நாள், "நோய்களைத் தடுத்துச் செய்களைக் காப்பீர்" என்ற கொள்கையை வலியுறுத்துகிறது.

எனவே நாளையத் தலைமுறையினரின் நலன் கருதி, பின்கண்டவாறு நோய்களுக்கு முன்னுரிமை அளித்து, எதிர்ப்பு ஆற்றலை உருவாக்கும் வாக்சின்களைக் குழந்தைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

1. பெரியம்மை
2. காச நோய்
3. டிப்தீரியா, கக்குவான், டெட்டனஸ் (இணைந்தது)
4. போலியோ
5. டைபாய்டு
6. காலரா.

மேற்கூறிய நோய்களுக்குரிய தடுப்பு முறைகளும், தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்வதற்கு உரிய தகுந்த காலமும் பொது மக்களின் நலன் கருதிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

### 1. பெரியம்மை தடுப்பு ஊசி

நம் நாட்டை விட்டே பெரியம்மையை விரட்டி விட்டோம்! ஆனால் அந்நோய் மீண்டும் எதிர்காலத்தில் தோன்றாதிருக்கத் தொடர்ந்து கண்காணிப்புகள் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

குழந்தை பிறந்த 3 மாதத்திற்குள் பெரியம்மை தடுப்புக்குரிய அம்மைப் பால் குத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தை பிறந்த சில நாட்களிலேயே அம்மைப் பால் குத்தலாம். அம்மைப் பால் குத்துவதற்கு



இயலாத நிலையில் குழந்தை இளமையாக இருக்கிறது என்று நம்புவது தவறாகும்.

குழந்தைக்கு முதன் முதலில் அம்மைப் பால் குத்தப்பட்டதால் ஏற்பட்ட தடுப்பாற்றல், நாளாக ஆகக் குறைகிறது. எனவே, முதல் தடவை அம்மைப் பால் குத்தியதற்கு ஓராண்டிற்குப் பிறகு தீவிர அளவில் ( Booster dose ) அம்மைப் பால் குத்த வேண்டும். அதன் பிறகு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை விதம் மறு முறை அம்மைப் பால் குத்த வேண்டும். ( Re-Vaccination ) திடீரென, தீவிர அளவில் அம்மை தோன்றும் போது, முன்பு எப்பொழுது குத்தப்பட்டது என்பதைக் கவனிக்காமல், அம்மைப் பால் குத்திக் கொள்ளுதல் வேண்டும்.

காச நோயைத் தடுக்கும் 'பி. சி. ஜி.' ஊசியையும் பெரியம்மை தடுப்புக்குரிய அம்மைப் பால் குத்தலையும் ஒரே நேரத்தில் குழந்தையின் இரு கைகளிலும் மேற்கொண்டு விடலாம்.

### 2. பி.சி.ஜி. ஊசி

குழந்தை பிறந்த உடனேயே பி.சி.ஜி. ஊசி போடலாம். இதனால் காச நோய் தோன்றுவதைத் தடுக்கலாம். இவ்வூசி போடுவதால் தீங்கு இல்லை; குழந்தைக்கு வலியும் ஏற்படாது. இலவசமாகவே இவ்வூசி போடப்படுகிறது. மாவட்டங்களில் உள்ள காச நோய்த் தடுப்பு நிலையங்களிலும், மகப் பேறு மருத்துவ மனைகளிலும், குழந்தைகள் மருத்துவ மனைகளிலும் பி.சி.ஜி ஊசி போடப்படுகிறது.

கைக் குழந்தையாக இருந்த போது பி.சி.ஜி. ஊசி போட்டுக் கொண்ட குழந்தைகளின் 5-வது வயதில் காச நோய் உள்ளதா என்று அறியும் சோதனை (Tuberculin) செய்ய வேண்டும். அச்சோதனையில் எதிர்மாற்றம் (Negative Reaction) ஏற்படின், மீண்டும் பி.சி.ஜி. ஊசி போட வேண்டும்.

சிறு குழந்தையாக இருக்கும் போது பி.சி.ஜி. ஊசி போடாவிட்டாலும், 20 வயது வரை பி.சி.ஜி. ஊசி போடலாம்.

### 3. மூன்று நோய்த் தடுப்பு ஊசி

குழந்தைகளுக்கு வரும் இதர நோய்களில் முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டியவை பின்கண்ட 3 நோய்களாகும் :

1. டிப்தீரியா
2. கக்குவான்
3. டெட்டனஸ்

#### தொண்டை அடைப்பான் (டிப்தீரியா)

இது குழந்தைகளுக்குவரும் இன்னொரு பயங்கர நோய். 'பாஸில்லஸ்' ஒன்றில்தான் தோன்றுவது. இரண்டு முதல் ஐந்து வயதுவரையான குழந்தைகள் பிரிவில்தான் இந்நோயில் மிக அதிகமான தாக்குதல் காணப்படும். மிக அபூர்வமாக வயதானவர்களுக்கும் வருவதுண்டு. குழந்தைகள் வளர்ந்து, வயது கூடும்போது 'டிப்தீரியா' கிருமிகளுடன் சிறு அளவில் திரும்பத் திரும்பத் தொடர்பு காரணமாக நோய் எதிர்ப்பாற்றல் உடலில் உருவாகிறது.

காய்ச்சல், தொண்டைப் புண், விழுங்குவதில் கஷ்டம் ஆகியவை ஆரம்ப அறிகுறிகள். கடும் 'டான்ஸில்' நோயோ என்று பல சமயங்களில் குழப்பம் நேருவது உண்டு. உயிருக்கே ஆபத்தான குழப்பம். தொண்டை, மேலண்ணம், 'டான்சில்' ஆகியவற்றில் வெள்ளையான அல்லது சாம்பல் வாகான சிறு திட்டுக்கள் காணப்படும். 'டிப்தீரியா' என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அறிகுறி இது. இந்தத் திட்டுக்களில் டிப்தீரியா கிருமிகள் இருக்கும். உடனே வைத்தியம் செய்யாவிட்டால் மூச்சு விடுவதற்குத் தடங்கல் ஏற்பட்டு டிப்தீரியாவால் சாவு நேரலாம். குழந்தை குணமான பிறகும் தசைகளின் முடக்கம் நீடிக்கக் கூடும்.

#### கக்குவான்

கக்குவான் இருமல் நோய 'பாக்டீரியா' ஒன்றினால் தோன்றுகிறது. சில மாதம் முதல் ஐந்து வயது வரை ஆகும் குழந்தைகளை இந்த நோய் தாக்கும். அதற்கு மேல் வயதாகும்—வயதாகிய குழந்தைகள் சாதாரணமாகக் கக்குவான் நோயினால் தாக்கப்படுவதில்லை. பச்சைக் குழந்தைகளைத்தான் மிகக் கடுமையாகத் தாக்கும். ஒரு வயதிற்குக் குறைவான குழந்தைகள் இடையேதான் மரண விகிதம் மிக அதிகம்.

சிவந்த கண், மூக்கில் ஓயாத ஒழுக்கு, தொண்டைப் புண், சங்கிலித் தொடர் போன்ற இருமல் ஆகியவை கக்குவானின் சின்னங்கள். உயிரே போவது போல் குழந்தை இருமும். இருமலுடன் நோய் நெடுங்காலத்திற்கு விடாமல் வாட்டுவதன் விளைவாகக் குழந்தையின் ஆரோக்கியமும் ஜீவ சக்தியும் சீர்கெட்டு, வேறு நோய்களும் தொற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

#### 'டெடனஸ்'

எல்லா வயதுகளிலும் வரும். வெட்டுகள் மூலமும், காயங்கள் மூலமும் 'டெடனஸ்' கிருமிகள் உடலில் நுழைவதால் தோன்றும் நோய்இது. சின்னக்காயம்தானே, டாக்டர் எதற்கு என்று நினைக்கக் கூடிய அற்ப காயங்களால் கூட 'டெடனஸ்' நேரலாம். கிருமிகள் உடலில் நுழைந்த பிறகு, நோயின் அறிகுறிகளைக் காட்டுவதற்கு

முன்னும் பல நாட்களுக்கு அமுக்கமாயிருக்கக்கூடும். பிறந்த சில நாட்களுக்குள் பச்சிளங் குழந்தைகள் திடீரென இழுப்பு வந்து உயிர் விடுவதைப் பார்த்திருப்போம். இது மாதிரிச் சாவுக்குப் பெரிதும் காரணம், டெடனஸ் தொற்றுதான். தொப்புள் கொடி வழியே கிருமிகள் குழந்தையின் உடலில் நுழைவதால் நேருகிறது. பயிற்சியில்லாத நாட்டுப்புற மருத்துவப் பெண், குழந்தை பிறக்கும்போது அசுத்தமாகச் செய்யும் காரியங்களால் நேரும் விளை இது.

விளையாடுகையில் காயம் படுவதால், வயதான குழந்தைகளுக்கு அபாயம் நேர்கிறது. 'டெடனஸ்' கிருமிகளின் நச்சு நரம்பு மண்டலத்தைப் பாதித்து, தசைகளில் கடுமையான சுருக்கத்தை ஏற்படுத்துகிறது. முழு உடம்பும் வில் போல் வளையும். முகத்தின் தசைகளிலும், தொண்டையின் தசைகளிலும் இழுப்புக் காரணமாகத் திரவங்களை விழுங்குவது கூடக் கஷ்டமாகிவிடும். விரைவில் கண்டுபிடித்து வைத்தியம் செய்யாவிட்டால் 'டெடனஸ்' தொற்று, உயிரையே போக்கிவிடும்.

### வருமுன் காப்பதே விவேகம்

இந்த நோய்களால் உயிரே போகாவிட்டால் கூட, மூளைச் சேதம், சூம்பிய வளர்ச்சி, கை கால ஊனம் போன்ற பயங்கரமான பின் விளைவுகள் நேரும். வாழ்க்கை பூராவும் குழந்தைகளுக்குக் கஷ்டம்தான். குழந்தைகளுக்குத் தடுப்பாற்றல் அளிப்பதுதான் இத் தீமைகளிலிருந்து குழந்தையைப் பாதுகாப்பதற்கு மிகச் சுலபமான—மலிவான—சிறந்த வழி.

டிப்தீரியா, கக்குவான் இருமல், டெடனஸ் ஆகிய நோய்களைத் தடுக்கும் 'ஆன்டிஜென்கள்' 'முக்கூற்று வாக்ஸின்' '(Triple Vaccine) என்பதில் கலக்கப்பட்டு உள்ளன. மூன்றையும் ஒரே ஊசிக் குத்தில் ஏற்றுவதால் கிடைக்கும் பாதுகாப்பின் அளவு தனித் தனியே ஊசி குத்துவதன் மூலம் கிடைக்கக்கூடியதை விட மிக அதிகமாகும்.

மூன்று முறை ஊசி குத்துவதால் நேரும் வலியும் குழந்தைக்கு இருக்காது.

இம்மூன்று நோயையும் தடுப்பதற்கு மூன்று நோய் தடுப்பு வாக்சின் (Triple Vaccine) போடப்படுகிறது. போதிய அளவு தடுப்பு ஆற்றலை ஏற்படுத்துவதற்கு, 8 முதல் 12 வார இடைவெளியில் 2 முறை மூன்று நோய் தடுப்பு ஊசி போட வேண்டும். மூன்று நோய்த் தடுப்பு ஊசியை முதல் முறையாக 4 முதல் 9 மாத வயதிற்குள் போட்டுவிட வேண்டும்.

குழந்தை 1.5 முதல் 2 வயதில் இருக்கும் போது தீவிர அளவு (Booster dose) மூன்று நோய் தடுப்பு ஊசி போட வேண்டும்.

5 வயதில் இரண்டாவது முறையாக தீவிர அளவு மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட வேண்டும்.

கக்குவான் இருமல் பெரும்பாலும் குழந்தைகளை 5 வயதிற்குள்தான் தாக்குகிறது.

'டிப்தீரியா' நோய் 10 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளிடம் ஒரு பிரச்சினையாகவே உள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு வாக்சினை இரண்டாவது தீவிர அளவாக 5 வயதிற்குள் பெற்றுக் கொண்ட குழந்தைகளுக்கு, டெட்டனஸ் நோய் தடுப்புக்குரிய தீவிர அளவினை மட்டும் 10 வயதில் அளிப்பது சிறந்தது.



இளம்பிள்ளை வாத நோயினால் தாக்கப்பட்ட ஆறு மாதக் குழந்தையை மருத்துவர் பரிசோதிக்கிறார்.

### 4. இளம்பிள்ளை வாதத் தடுப்பு ஊசி

இளம் பிள்ளை வாதம் என்பது 'வைரஸ்' ஒன்றின் மூலம் தோன்றும் நோயாகும். இந்நோய் ஏற்பட்டால் ஆரம்பத்தில் பெரிதும் ஜலதோஷத்தையொத்திருக்கும். —இலேசாகக் காய்ச்சல். பொதுவாக, அசௌகரியம், சக்தியில்லாமை, தலைவலி முதலியவை தோன்றும். அதிருஷ்டவசமாக, பெரும்பாலானவர் தாக்குதலிலிருந்து சிக்கலின்றித் தப்பிவிடுவார்கள். ஆனால் சிலருக்குத் தசைகளில் முடக்கு வாதம் உருவாகும். அதனால்தான் இளம்பிள்ளைவாதம் என்று பெயர். மூச்சு விடும் தசைகளையும் வேறு ஜீவ இயக்க தசைகளையும் முடக்கம் பற்றினால் மரணமே நேர்ந்து விடும். கடுமை குறைவான தாக்குதலுக்கு உள்ளாகிறவர்கள் ஒன்று அல்லது இரண்டு கைகால்களில் பாரிசத்துடன் நோயிலிருந்து மீள்வர். குழந்தைகளின் நோய் இது என்றாலும், பெரியவர்களும் தாக்கப்படுவதுண்டு.

இளம்பிள்ளை வாத நோயைத் தடுத்திட 'போலியோ வாக்சின்' என்ற தடுப்பு மருந்தைக் குழந்தைகளின் வாய் மூலம் 3 தடவை 4 முதல் 6 வார இடைவெளியில் செலுத்திட வேண்டும். போலியோ தடுப்பு மருந்தை, மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடும் சமயத்திலேயே அளிக்கலாம். அல்லது மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடுவது முடிந்த பின் (3 முறை போட்ட பின்) அளிக்கலாம்.

### 5. டைபாய்டு தடுப்பு ஊசி

குழந்தைகளைத் தாக்கும் தொற்று நோய்களில் 'டைபாய்டு நோயும் ஒன்றாகும். இந்நோயைத் தடுப்பதற்கும் தடுப்பு மருந்து உள்ளது. இந்த நோயைத் தடுப்பதற்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 'வாக்சின்' ஏறத்தாழ ஓராண்டுக் காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் 'டைபாய்டு' நோய்க்குரிய தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ளுதல் சிறந்தது. இந்நோய் திடீரென, தீவிரமாகத் தோன்றும் பொழுது இத்தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

### 6. காலரா தடுப்பு ஊசி

பொதுவாக காலரா திடீரெனத் தோன்றிப் பெரும் அளவு இறப்பினை ஏற்படுத்துகிறது. குறிப்பாக மழைக் காலங்களில், நகரங்களில் அசுத்தம் நிரம்பிய குடிசைப் பகுதிகளில் காலரா தோன்றுவதால், அப்பகுதிகளில் ஆண்டு தோறும் முன் கூட்டியே காலரா தடுப்பு ஊசி போடப்படுகிறது. காலரா ஊசி போட்டுக் கொண்டால் காய்ச்சல் வரும் என்ற தேவையற்ற பயத்தினால் பலர், குழந்தைகளுக்கு இத் தடுப்பு ஊசியைப் போடுவதற்கு அஞ்சுகிறார்கள். இது தவறு. ஆண்டுக்கு ஒரு முறை காலரா தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுதல் அனைவரின் கடமையாகும்.

நம் நாட்டின் சில பகுதிகளில் இந்நோய் ஆண்டு தோறும் தொடர்ந்து தோன்றி வருகிறது. இத்தகைய பகுதிகளில் வாழும் 12 வயதிற்கு மேற்பட்ட எல்லாரும் ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறை வீதம் காலரா தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுதல் நல்லது.



## தாயாகப்போகும் மகளிர்க்கு

## டெட்டனஸ் தடுப்பு ஊசி!

பிறக்கப்போகும் குழந்தையின் நலம், தாயாகப் போகும் பெண்ணின் நலத்தையே பொறுத்திருக்கும். தாயாகப் போகும் மகளிர்க்கு 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடுதல், அத்தாயைக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல், பிறக்கப்போகும் குழந்தையையும் காப்பாற்றுகிறது. இது எவ்வாறெனில், நாட்டுப்புறங்களில் பிள்ளைப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளால் பின்பற்றப்படும் தூய்மையற்ற முறைகளாலும், குறிப்பாகக் குழந்தைகளின் தொப்புள் கொடியை தூய்மையற்ற கருவியால் வெட்டி விடுவதாலும் குழந்தைகள் 'டெட்டனஸ்' நோய்வாய்ப்படும் இந்த ஆபத்தை தாயாகப்போகும் பெண்ணுக்கு 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடுவதால் தடுத்திட முடியும்,

கர்ப்பமுற்ற 6-வது மாதம் தொடங்கி 8 முதல் 12 வார இடைவெளியில் 2 முறை 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

எந்த நாளில் குழந்தை பிறக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அந்த நாளுக்கு, 2 முதல் 4 வாரம் முன்னதாக, 2–வது முறையாக 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடுவதற்கு கவனமாக இருக்க வேண்டும்.

முதன் முறையாக கர்ப்பமுற்ற பெண்ணுக்கு முன்பே இரு முறை 'டெட்டனஸ்' டாக்சைடு தடுப்பு ஊசி போடப்பட்டிருந்தால் அடுத்து அப்பெண் கர்ப்பமுறும் சமயத்தில் மகப்பேறு நடைபெறும் என்று எதிர்பார்க்கும் நாளுக்கு 4 வாரம் முன்னதாக—தீவிர அளவு 'டெட்டனஸ்' தடுப்பு ஊசி போடப்பட வேண்டும்.

## நோய்களைத் தடுத்துச் சேய்களைக் காத்திடப் பரிந்துரைக்கப்படும் தடுப்பு முறைகள்

| வரிசை எண் | குழந்தைகளின் வயது | குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய தடுப்பு மருந்து அல்லது தடுப்பு ஊசி |
|---|---|---|
| 1. | பிறந்த உடன் அல்லது கூடுமான வரை ஒரு மாதத்திற்குள் | பி.சி.ஜி. ஊசி போடவேண்டும். |
| 2. | 3 மாதத்திற்குள் | அம்மைப்பால் குத்த வேண்டும். |
| 3. | 4-வது மாதம் | மூன்று நோய்த் தடுப்பு ஊசி —முதல் முறை |
| 4. | 6-வது மாதம் | மூன்று நோய்த் தடுப்பு ஊசி —2-வது முறை |
| 5. | 7-வது மாதம் | இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து —முதல் முறை |
| 6. | 8-வது மாதம் | ,, —2-வது முறை |
| 7. | 9-வது மாதம் | ,, —3-வது முறை |
| 8. | 18-வது மாதம் | (1) அம்மைப்பால் குத்த வேண்டும் (Booster dose) (2) மூன்று நோய்த் தடுப்பு ஊசி தீவிர அளவு (Booster dose) —மூன்றுவது முறை |
| 9. | முதன் முதலாகப் பள்ளிக்கு அனுப்பும்போது அல்லது அதன் பிறகு உடனடியாக அல்லது 5 முதல் 6-வது வயதில் | (1) அம்மைப்பால் குத்த வேண்டும் (Re-vaccination) (2) இரண்டு நோய்த் தடுப்பு ஊசி (டிப்தீரியா, டெட்டனஸ் நோய்களுக்கு, மட்டும்) தீவிர அளவு (Booster dose) (3) டைபாய்டு—பாரா டைபாய்டு நோய்களுக்கு 7 முதல் 10 நாள் இடைவெளியில் 2 முறை தடுப்பு ஊசி போட வேண்டும். (4) 'டியூபர்குலின்' சோதனை செய்து பார்த்து, எதிர்மாற்றம் (Negative Reaction) இருப்பது தெரியவரின் பி.சி.ஜி. ஊசி போட வேண்டும். |
| 10. | 10 வயதில் | டெட்டனஸ் நோய்த் தடுப்பு ஊசி தீவிர அளவு (Booster dose) |
| 11. | 12 வயதில் | காலரா தடுப்பு ஊசி |

**குறிப்பு** : ஒரு குழந்தைக்கு ஒரே சமயத்தில் அம்மைப் பால் குத்துவதையும் பி.சி.ஜி. ஊசி போடுவதையும் மேற்கொள்ளலாம். ஆனால் ஒரு கையில் அம்மைப் பால் குத்தினால், மறு கையில் பி.சி.ஜி. ஊசி போட வேண்டும்.

பிறந்தவுடன் குழந்தைக்கு அம்மைப் பால் குத்தப்பட்டால், ஒரு வயதில் மறுமுறை அம்மைப் பால் குத்த ( Re-Vaccination ) வேண்டும். பொதுவாக மறுமுறை அம்மைப் பால் குத்துவது என்பது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படுகிறது. திடீரென, தீவிர அளவில் அம்மை தோன்றும் போது, முன்பே அம்மைப் பால் குத்தப்பட்டுள்ளதைப் பொருட்படுத்தாமல் எல்லாக் குழந்தைகளுக்கும் மறுமுறை அம்மைப் பால் குத்தி விட வேண்டும்.

ஆண்டு தோறும் தொடர்ந்து நோய் தோன்றும் பகுதிகளிலும் ( endemic areas ) திடீரென நோய் தோன்றி அச்சம் விளைவிக்கும் பகுதிகளிலும் ( Local out breaks ) இளம்பிள்ளை வாதம், டைபாய்டு போன்ற நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது பரிந்துரைக்கப்படுகிறது.

மேல் கை, தொடை, பிருஷ்டபாகம் ஆகியவற்றில் தசைக்குள் முக்கூட்டு வாக்ஸின் ஊசி குத்தப்படுகிறது. குத்திய இடத்தில் சிறிது வலி, இலேசான காய்ச்சல் ஆகியவை இருக்கும். ஆனால் வைத்தியம் ஏதும் தேவையில்லை. இரண்டொரு நாளில் சரியாகி விடும்.

வாக்ஸின் செலுத்துவதற்கு நாலு முதல் ஆறு மணி நேரம் வரை முன்னும், பின்னும் குழந்தைக்குத் தாய்ப் பால் கொடுக்காமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஆனால் இந்தச் சமயத்தில் பட்டினி போடக் கூடாது. வேறு வகையில் உணவளிக்க வேண்டும். வாக்ஸினைக் கொடுத்த பிறகு அரை மணி நேரத்துக்குச் சூடான நீர், சூடான பால், சூடான காப்பி தரக் கூடாது.

ஊசி குத்தும் சமயத்தில் குழந்தைகள் ஆரோக்கியமாயிருக்க வேண்டும். இதைத் தக்க வைத்தியர் மூலம் சோதித்துக் கொள்ள வேண்டும். முக்கூட்டு வாக்ஸின் இரண்டு முறையும், போலியோ வாக்ஸின் மூன்று முறையும் அளிப்பது கூட அவசியம். ஒரே ஒரு முறை ஊசி குத்துவதால் பயனில்லை.

குழந்தைகளுக்கு முக்கூட்டு 'வாக்ஸினும்', கருவுற்ற பெண்களுக்கு 'டெடனஸ்' தடுப்பு வாக்ஸினும்' எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. பெரிய நகரங்களின் மருத்துவ மனைகளில் போலியோ வாக்ஸின் கிடைக்கும். பெரிய நகரங்களில்தான் போலியோ அதிகமாய்க் காணப்படுகிறது.

முக்கூட்டு வாக்ஸினும், டெடனஸ் தடுப்பு வாக்ஸினும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். நம்பகமான இந்தத் தடுப்பு வழிகளை உபயோகப்படுத்தி, குழந்தைகளை, பயங்கர நோய்களிலிருந்து காப்பாற்ற வேண்டும். இதனால் பெற்றோர்களுக்கு எவ்வளவோ வேதனையும் செலவும் மிச்சமாகும். குழந்தைகளுக்கோ வலியும் துன்பமும் மிச்சமாகும்.

குழந்தைக்கு ஆண்டு நிறைவு கொண்டாடுகிறோம். முதலாண்டு நிறைவுக்குள் தக்க தடுப்பாற்றலை அளித்து விடுவதுதான் மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு.



எனவே மேற்கூறிய வகையில் குழந்தைகளைத் தாக்கும் கொடிய நோய்களைத் தடுத்து நாளைய குடிமக்கள் அறிவும், வலிவும், வனப்பும் மிகுந்து விளங்கிடச் செய்வது இன்றைய குடிமக்களின் தலையாய கடமையாகும்.

## தமிழ்நாட்டில் கிராமத் தொழில்கள் திட்டம்!







சென்னையிலுள்ள சிறுதொழில் சேவைக் கழகம் திருநெல்வேலி, செங்கற்பட்டு, ராமநாதபுரம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் தொழில்களை அபிவிருத்தி செய்யவும், கிராமப் பகுதிகளில் வருவாய் அளிக்கும் வேலைவாய்ப்புகளை அளிக்கவும் கிராம புறத் தொழில்கள் திட்டமொன்றைத் துவக்கியுள்ளது.

இது சம்பந்தமாக, சிறுதொழில் சேவைக் கழகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் குழு ஒன்று, தமிழ்நாடு அரசுத் தொழில்துறையின் உதவியோடு திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அபிவிருத்தி நிலையம், நாங்குனேரி அபிவிருத்தி நிலையம் ஆகிய நிலைய இடங்களில் ஒரு தொழில் நுட்ப—பொருளாதார ஆய்வைச் சமீபத்தில் நடத்தியுள்ளன.

இந்த ஆய்வின்போது அலுவலர்கள் குழு, நாங்குனேரி வட்டத்திலுள்ள ராதாபுரம், நாங்குனேரி, களக்காடு, வள்ளியூர், பணகுடி, திசயன்விளை ஆகிய இடங்களுக்குச் சென்றது. இப் பகுதிகளில் இக்குழு, அங்குள்ள அலுவலர்கள், அலுவலர்களல்லாத இதர நபர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இக்குழு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சில தொழிலதிபர்கள் பங்குபெற்ற ஒரு கூட்டத்தையும் நடத்தியது. இக்கூட்டத்தில் புதிய தொழில்கள், தற்போதுள்ள தொழில்களின் பிரச்சினைகள் இவை பற்றி விவாதிக்கப்பட்டன. தொழில்முனைவர்கள் ரப்பர் வளையங்கள், ரப்பர் வார்ப்புப் பொருட்கள் போன்ற பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களைத் துவக்க விருப்பம் கொண்டுள்ளதும், பனைக்கயிற்றுப் பொருட்களுக்கு (பிரஷ்கள்) உள்ள ஏற்றுமதிச் சாத்தியக்கூறுகள் இருப்பதும் கண்டறியப்பட்டது.

# அஞ்சலக வங்கியின் மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# கரும்பில் தோன்றும் நோய்களும் தடுப்பு முறைகளும்!

இந்தியாவில் சிறப்பாகப் பயிரிடப்படும் வணிகப் பயிர்களுள் கரும்பு முக்கியமானதொன்றாகும். இந்தியாவில் கரும்பு விளையும் பரப்பளவில் 40 சதவீதம் தமிழ் நாட்டில் உள்ளது. சுமார் 50 கரும்பு வகைகள் தற்பொழுது பயிரிடப்படுகின்றன. மற்ற பயிர்களைப் போலவே கரும்பும் பலவித நோய்களால் தாக்கப்பட்டு, மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. கரும்பில் தோன்றும் சுமார் 147 நோய்களுள் 84 நோய்கள் இந்தியாவில் காணப்படுகின்றன. இந்நோய்கள் பூசணங்களாலும், பாக்டீரியாக்களாலும், நச்சுரிகளாலும், நூற்புழுக்களாலும், மற்றும் பாதகமான சூழ்நிலைகளாலும் உண்டாகின்றன. நோய்கள் கரும்பின் பல்வேறு பாகங்களைத் தாக்கிக் கரும்பின் தரத்தையும் விளைவையும் பாதிக்கின்றன. எனவே கரும்பில் தோன்றும் முக்கிய நோய்களும் அவைகளைத் தடுக்கும் முறைகளும் உழவர்களின் நலன்கருதி ஈண்டுத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### கரணை அழுகல் நோய்

இது ஓர் பூசணநோயாகும். இது ''சொட்டோஸிஸ்டிஸ் பாராடாக்ஸா'' என்ற பூசணத்தால் ஏற்படுகின்றது. இது முக்கியமாக நட்ட கரணைகளைத் தாக்கி முளைப்பைப் பாதிப்பதால் கரும்பின் மகசூல் குறைகிறது. கரணைகள் முளைத்து 15 செ. மீ. முதல் 30 செ. மீ. வளர்ந்தபின் மடிந்துவிடும். நோய் தாக்கிய கரணைகளைப் பிளந்து பார்த்தால் உள்பாகம் மிகக் கருமை படர்ந்து, அழுகி, அன்னாசிப்பழ வாசனை வரும். எனவே இதை 'அன்னாசிப் பழ நோய்' எனவும் அழைப்பதுண்டு. இந்நோய்க்குக் காரணமாக, பூசணம் விதைக் கரணைகளின் வெட்டுவாய் மூலமாகப் புகுந்து கரணையின் மென்மையான நடுப்பாகத்தில் வளர்ந்து, கரும்பின் முளைப்பைத் தடுத்துவிடுகிறது. நீர் தேங்கக் கூடிய இடங்களில் இது அதிகமாகப் பரவுகிறது.

### தடுப்பு முறைகள்

கரணைகளை, 5 கிராம் அகலால் மருந்துக்கு 1 லிட்டர் தண்ணீர் அல்லது 2.5 கிராம் அரிடான் மருந்துக்கு 1 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் உள்ள கரைசலில் நனைத்து நடவேண்டும். இவ்வாறு செய்வதால் நோயைத் தடுப்பதுடன் முளைப்புத் திறனையும் அதிகரிக்கலாம். ஒரு ஏக்கர் நடுவதற்கு வேண்டிய கரணைகளை நனைத் தெடுப்பதற்கு ஏறத்தாழ 100 முதல் 150 கிராம் அரிடான் அல்லது 200 முதல் 300 கிராம் அகலால் மருந்து போதுமானது.

### கரிப்பூட்டை நோய்

கரும்பைத் தாக்கும் முக்கியமான பூசணநோய்களுள் கரிப்பூட்டை நோய் தமிழ்நாட்டில் அதிகமாகக் காணப்படுகிறது.



இந்நோய் ''அஸ்டிலாகோ ஸைடாமினே'' என்ற ஒருவகைப் பூசணத்தால் உண்டாகிறது. தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், திருச்சி, கோயமுத்தூர், செங்கல்பட்டு, மதுரை மாவட்டங்களில் இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. பொதுவாக இந்நோய் மார்ச்சு மாதம் முதல் மே மாதம் வரை மிகுதியாகக் காணப்படுகிறது. அதிகமாக விரும்பப்படும் கோ. 419 கரும்பு இந்நோயின் தாக்குதலுக்குள்ளாகிறது. மேலும் கட்டைக்கரும்பு பயிரிடும் எல்லா இடங்களிலும் இந்நோய் மிகுதியாகக் காணப்படுகிறது.

அறிகுறிகள்: நோய்கண்ட கரும்பின் நுனிப்பாகத்தில் நீண்ட சாட்டை போன்ற கறுப்பு நிறமான கரிப்பூட்டைகள் காணப்படும். கரும்பின் வளரும் குருத்து, சாட்டைக் கயிறு போன்று நீளமாகவும் வெளியில் இலேசாக பளபளக்கும் வெண்மை நிறமான மெல்லிய தோலினால் மூடப்பட்டதாகவும் இருக்கும். இதனுள் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத் துகள்கள் காணப்படும். இவை நோய்க்குக் காரணமான பூசணத்தின் வித்துக்கள் ஆகும். நாளடைவில் மேலாக இருக்கும் இம்மெல்லிய தோல் கிழிந்து, உள்ளிருக்கும் பூசண வித்துக்கள் வெளிவருகின்றன. இவ்வித்துக்கள் மற்ற கரும்புகளின் முளைகளின் (பருக்களின்) மீது படிந்து, முளைத்து உட்சென்று குருத்துக்கள் கரிப்பூட்டைகளாக மாறுகின்றன. துகள்கள் காற்றின் மூலம் அடித்துச் செல்லப்பட்டு நோய் மற்றப் பயிருக்கும் பரவுகிறது. இவ்வாறு குருத்தின் வளர்ச்சி தடைப்படுவதால், நோய் தாக்குண்ட கரும்புகள் மற்றக் கரும்புகளைவிட வளர்ச்சி குன்றி கனம் குறைந்து சிறியவையாகி விடுகின்றன.

### தடுப்பு முறைகள்

1. நோய் தாக்கிய கரும்பிலிருந்து நடுவதற்கு விதைக் கரணைகள் எடுக்கக் கூடாது. அவற்றை அறவே நீக்குதல் நல்லது.

2. வயல்களில் அவ்வப்போது தென்படும் கருஞ்சாட்டைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். கருஞ்சாட்டைகளிலிருந்து நுண்ணிய பூசணத் துகள்கள் கீழே விழுந்து தண்ணீரின் மூலமாகவோ, காற்றின் மூலமாகவோ மேலும் பரவாமல் தடுக்க அவற்றைக் கோணிப்பைகளில் புகுத்தி வெட்டியெடுத்துக் கொதி நீரில் அமிழ்த்தி அல்லது குழியில் போட்டு எரித்து அழித்துவிட வேண்டும். மேலும் கரிப்பூட்டை தோன்றிய தூர்களையும் அழித்து விடுதல் சிறந்தது.

3. கூடிய வரையில் கட்டைப் பயிர் விடுவதை நிறுத்திக் கொள்வதால் மேலும் நோய் அதிகரிக்காமல் தடுக்கலாம்.

4. நோய் அதிகமாகத் தாக்கிய வயல்களில் தகுந்த மாற்றுப் பயிர் செய்தல் சாலச் சிறந்தது.

5. நோய்க்கு எதிர்ப்புத் திறன் வாய்ந்த கரும்பு ரகங்களான 'கோ. 449', 'கோ. 527' 'கோ. 6806' ஆகியவற்றைப் பயிர் செய்தல் நல்லது.

### மஞ்சள் புள்ளி நோய்

''செர்காஸ்போரா காப்கியை' என்ற பூசணத்தால் இந்நோய் உண்டாகிறது. இந்நோய் பொதுவாக மழைக்காலத்தின் பின்பாதியில் தென்பட்டு, மழை குறையும் போது குறைய ஆரம்பிக்கிறது. முதல் ஆறு மாதங்கள் வரை பயிர் அதிகமாகத் தாக்கப்படுவதில்லை. கரும்பின் முதிர்ந்த இலைகளை அதிகமாகத் தாக்குகிறது.

அறிகுறிகள் : இந்நோய் ஆரம்பத்தில் சிறிய மஞ்சள் நிறப் புள்ளியாகத் தோன்றி பிறகு பெரிதாகிச் சிவப்பு நிறமடைந்து, விரிந்து, முழுவதும் பரவி, இலைகள் காய்ந்து விடுகின்றன. இளங் குருத்தையும் வளரவிடுவதில்லை. சர்க்கரைச் சத்தும் குறைந்து விடுகின்றன.

தடுப்பு முறைகள்: நோய் பரவ மழை ஏதுவாக இருப்பதால் நோய் வராமல் தடுக்க மழைக்கு முன்பு 1 சதவிகித 'போர்டோக் கலவை' அல்லது 'குப்ராவிட்' போன்ற தாமிரப் பூசணக் கொல்லிகளை 2.5 கிராம் 1 லிட்டர் தண்ணீர் விகிதத்தில்கரைத்து 15 நாட்களுக்கு ஒருமுறை பயிர்களின் மேல் மூன்று தடவைகள் தெளிக்க வேண்டும்.

நோயால் பாதிக்கப்படாத கோ. 449 போன்ற கரும்பு ரகத்தைப் பயிரிடுதல் நலம்.

### வேரழுகல் நோய்

இந்நோய் 'பித்தியம் கிராமினிக் கோலம்' 'ரேசாக்டோனியா சலானி' என்னும் பூசணங்களால் உண்டாகிறது. இந்நோய் களிமண் பூமியிலும் வடிகால் வசதியில்லாத நீர் தேங்கிய பூமிகளிலும் அதிகத் தழைச்சத்துள்ள இடங்களிலும் சாதாரணமாக அதிக அளவில் காணப்படும். கரும்புகள் வளர்ச்சி குன்றி விடுவதால் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும்.

அறிகுறிகள் : தோகைகள் வளர்ச்சி குன்றிப் பழுப்பு அல்லது மஞ்சள் நிறமாக மாறி, நாளடைவில் பயிர்கள் வாடிவிடும். தாக்கப்பட்ட கரும்புகளின் வேர்கள் அழுகுவதால் பயிர்கள் பலமிழந்து தொட்டவுடன் கையுடன் வந்துவிடும்.

தடுப்பு முறைகள்: சரியான வடிகால் வசதிகள் ஏற்படுத்துவதுடன் 'செரஸான்' போன்ற கரிம பாதரஸ மருந்துகளை (1 கிராம் மருந்து 1 லிட்டர் நீர்) பாதிக்கப்பட்ட தூர்களில் ஊற்றுவதன் மூலம் இந்நோயின் கடுமையை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

### நுனி அழுகல் நோய்

இந்நோய் ''கிப்பரெல்லா மொனிலிபார்மிஸ'' என்ற பூசணத்தால் உண்டாகிறது.

'பொக்கா போயிங்' எனப்படும் இந்நோய் பொதுவாக கரும்பின் நுனிகளில் மாரிக் காலங்களில் தோன்றி, தட்ப வெப்பநிலை மாறியவுடன் மறைந்து விடுகிறது. சாதாரணமாக இந்நோயால் அதிகச் சேதம் இல்லையெனினும் ஒரு சில சமயங்களில் இந்நோய் மகசூலைப் பாதிக்கிறது.

அறிகுறிகள்: இலைகளின் நுனிகள் ஒன்றுக்குள் ஒன்று செருகிக்கொண்டு இலைகள் வெளிறிவிடும். கரும்பின் மேல் பாகத்தில் ஏணி போன்ற பள்ளங்கள் தோன்றும். தாக்கப்பட்ட பயிர்கள் வளைந்து கணுக்கள் குறுகித் தோற்றமளிக்கும்.

தடுப்பு முறைகள் : இந்நோய் மார்க்காலம் முடிந்தவுடன் மறைந்து விடுமாதலால் குறிப்பாகத் தடுப்பு முறை எதுவும் தேவையில்லை. ஆனாலும் கடுமையாக நோய் தாக்கப்பட்ட கரும்புகளை அழித்துவிடல் நலம். கோ. 658, இந்நோயால் அதிகமாக பாதிக்கப்படுகிறது.

### வாடல் நோய்

வாடல் நோய் தோன்றுவதற்கு 'செஃபலோஸ்போரியம் சக்கரை' காரணமானதாகும். கரும்பின் நோய்களில் இந்நோய் மிகப் பழமையானதாகும். முதன் முதலில் இந்நோய் இந்தியாவின் வட மாநிலங்களில் காணப்பட்டது. 1955 முதல் 1967 வரை இந்நோய் தக்காணப் பீடபூமிப் பகுதிகளிலும், தமிழ்நாட்டிலும் அதிக நாசத்தை விளைவித்தது. மெக்ஸிகோ, அர்ஜெண்டைனா, பார்படான்ஸ், கொலம்பியா, உகாண்டா, தென் ஆப்பிக்கா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்நோய் காணப்படுகிறது.

அறிகுறிகள் : பயிர் 4, 5 மாதங்கள் வளர்ந்த பின்பே சாதாரணமாக இந்நோயின் முதல் அறிகுறிகள் தென்படுகின்றன. தாக்கப்பட்ட தூர்களின் தோகைகள் மஞ்சளாகி, பிறகு காய்ந்து விடுகின்றன. தாக்கப்பட்ட கரும்பைப் பிளந்து பார்த்தால், உட்பாகம் அழுகிச் சிவப்பு அல்லது பழச்சிவப்பு நிறமாகவும் நீண்ட கோடுகளையுடையதாகவும் தோற்றமளிக்கும். நோயுற்ற கரும்புகள் ஒருவித அழுகிய வாடையுடன் இருக்கும். கரும்பின் நடுப்பாகத்தில் பஞ்சு போன்று வெள்ளை நிறத்துடன் கூடிய பூசண வளர்ச்சி காணப்படும்.

நோய் தாக்கப்பட்ட கரும்புகளிலிருந்து எடுக்கும் விதைக் கரணைகளின் மூலம் இந்நோய் பரவுகின்றது. நோயுற்ற கரணைகளை நடுவதால் முளைகள் தோன்றுது; அல்லது முளைத்த முளைகள் வாடி விடும். வேர் பிடிக்காது. இந்நோயின் பூசணம் மண்ணில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வாழும் தன்மை வாய்ந்தது.

### தடுப்பு முறைகள்

1. நோய் தாக்கிய கரும்பிலிருந்து நடுவதற்கு விதைக் கரணைகள் எடுத்தல் கூடாது. நோய் தாக்காத பயிர்களிலிருந்தும் நோய் தோன்றாத பகுதிகளிலிருந்தும் விதைக் கரணைகள் எடுப்பது சிறநதது.

2. விதைக் கரணைகளை நடுவதற்கு முன் 'அகலால்', 'அரிட்டான்' போன்ற பூசணக்கொல்லி கலவையில் நனைத்து நடுதல் நலம்.

3. விதைக் கரணைகளைப் 'போரான்' அல்லது 'மாப்கனீஸ்' கலவைகளில் (25 லிட்டர் நீரில் 1 கிராம்) நனைத்து நடுவதன் வாயிலாகவும் அல்லது பயிர்களின் மீது தெளிப்பதாலும் இந்நோயின் கடுமையை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

4. 'கோ. 453', 'கோ. 617' 'கோ. 658' 'பி.பி. 17' போன்ற கரும்பு வகைகள் இந்நோய்க்கு எதிர்ப்புத் திறனுள்ளவை. இவற்றைப் பயிரிடுவதால் இந்நோயைத் தவிர்க்கலாம்.

5. களர் நிலங்களில் கரும்பு பயிரிடுவதைத் தவிர்த்தல் நலம்.

### சிவப்புப் பட்டை நோய்

இந்நோய் ''சான்தோமானஸ் ருபிரிலினியன்ஸ்'' என்ற பேக்டீரியாவினால் உண்டாகிறது. இந்தியாவில் 1933-ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகிறது.

அறிகுறிகள் : தோகைகளில் நீண்டு வெளிறிய சிவப்புக்கோடுகளையுடைய புள்ளிகள் இலை முழுவதும் தோன்றும். அல்லது இலையின் நடுப்பாகத்தில் இப்புள்ளிகள் சேர்ந்தும் காணப்படும். இப்



புள்ளிகள் ஒன்றோடொன்று இணைந்து இலை முழுவதும் பரவி இலைகளை வாடச் செய்கின்றன. இந்நோயின் காரணமாக ஏற்படும் பாக்டீரியாக் கசிவு காய்வதால் இலையின் அடிப்பாகத்தில் புள்ளிகளின் கீழ் வெளிறிய, காய்ந்த சொர சொரப்பான தோற்றம் ஏற்படும். இளங் குருத்துக்கள் தாக்கப்பட்டால் குருத்தழுகல் அல்லது நுனியழுகல் ஏற்படும். குருத்தின் வளரும் பாகங்கள் மஞ்சளாகிப் பிறகு சிவப்பேறிக் கரும் பழுப்புப் பட்டைகள் குருத்துகளின் மேல் தோன்றும். தாக்கப்பட்ட கரும்புகளைப் பிளந்தால் சிவப்பாக இருக்கும். தாக்கப்பட்ட குருத்துகள் பயிரிலிருந்து சுலபமாகப் பிரிந்து விடும்.

**தடுப்பு முறைகள் :** நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்ட பயிர்களை எடுத்து எரித்து விடுதல் நலம். ஒருசத போர்டோக் கலவை அல்லது 'ஸ்ட்ரெப்டோமைஸின் சல்பேட்' போன்ற எதிர் உயிரிகளைத் (1 கிராம் 10 லிட்டர் நீர் என்ற விகிதத்தில்) தெளிப்பதன் மூலம் இந்நோயின் கடுமையை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

## மஞ்சள் இலை அல்லது குருத்து நோய்

பயிர்களின் இலைகளில் பசுமை குன்றி வெளிறிப்போவது சாதாரணமாக 'மாங்கனீசு' அல்லது இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும். மாறி மாறிப் பச்சையும் மஞ்சளுமான கோடுகள் இலைகளின் மேல் தோன்றும். கந்தகத் தூளை மண்ணுடன் கலப்பதாலும் ஒரு சதவிகித மாங்கனீசு சல்பேட்' கரைசலை இலைகளின் மீது தெளிப்பதாலும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தமிழ்நாட்டில், முக்கியமாக இரும்புச் சத்துக்குறைபாடு அதிக அளவில் காணப்படுகிறது. சாதாரணமாக இந்நோய் சுண்ணும்புச் சத்து அதிகமுள்ள சிவப்பு பூமிகளிலும் ( Red Calcareous Soils ) மற்றும் கட்டைப் பயிர்களிலும் ( Ratoons ) தோன்றும். இலை முழுவதும் பச்சையும் மஞ்சளுமான கோடுகள் மாறி மாறித் தோன்றும். அல்லது இலை முழுவதும் வெள்ளையாகி விடும். இளம் பயிர்கள் வளர்ச்சி குன்றி மடிந்துவிடும். 0.5 சத அன்னபேதியைப் ( Ferrous Sulphate ) பயிர்களின் மீது தெளித்தால் இந்நோய் குறையும்.

இந்நோயுடன் சில சமயங்களில் வேரழுகல் நோயும் சில



**கரணை அழுகல் நோயைத் தடுத்திட 'அகலால்' அல்லது 'அரிட்டான்' மருந்தில் விதைக் கரணைகளை நனைத்து நடுவதே சிறந்தது.**

நாற்புழுக்களும் கலந்து காணப்படும். நாற்புழுக்களை ஒழிக்க நடவுக்கு முன் 'வேபம்' (Vapam) அல்லது 'இதிலேன் டைப்ரோமைடு' ( Ethilene Dibromide ) போன்ற மருந்துகளினால் புகைக்க வேண்டும். நட்ட பயிர்களானால் ஏக்கருக்கு ஒரு லிட்டர் நெமகான் ( Nemagon ) மருந்தை 1000 லிட்டர் நீரில் கலந்து பயிரின் வேர் பாகத்தில் ஊற்ற வேண்டும்.

## சில நச்சுயிரி நோய்கள்

தேமல் நோய், கட்டைப் பயிர்க்குட்டை நோய், புல் குருத்து நோய் என்று கூறப்படும் மூன்று நோய்களும் கரும்பில் தோன்றும் முக்கிய நச்சுயிரி நோய்களாகும்.

**தேமல் :** நோயினால் பாதிக்கப்பட்ட குருத்துக்களின் இலைகளில் மஞ்சள் நிறமும், பச்சை நிறமும் மாறி மாறித் தோன்றுவதால் ஒருவிதத் தேமல் தோற்றமளிக்கும். சில நேரங்களில் தாக்கப்பட்ட பயிர் குட்டையாகவும் வெளிறியும் போய்விடும். இம்மாதிரி தாக்கப்பட்ட பயிர்களை வெகு தூரத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். இந்நோயினால் 10 முதல் 20 சதம் வரை கரும்பில் சேதம் ஏற்படுகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நோயுற்ற தூர்களிலிருந்து விதைக் கரணைகளை நடுவதாலும் 'ரோபலோஸைபம் மேடீஸ்' என்ற ஒரு வகை அசுவிணியினாலும் இந்நோய் பரவுகிறது. இந் நச்சுயிரி, காற்றின் மூலமும் பரவுகிறது.

**கட்டைப் பயிர்க் குட்டை நோய் :** இது அண்மையில் பல்வேறு மாநிலங்களிலும் தோன்றியுள்ளது. பயிர்களின் வளர்ச்சியின்மையும், குட்டைத் தன்மையும் இந்நோயின் முக்கிய அறிகுறியாகும். நோயுற்ற பயிரிலிருந்து எடுத்த கரணைகள் சீராக முளைப்பதில்லை. மேலும் பொதுவாக மிகக் குறைந்த குருத்துக்களே வளரும்.

**புல்குருத்து நோய் :** எல்லா மாநிலங்களிலும் காணப்படுகிறது. அநேகமாக இந்நோய் கட்டைப் பயிர்களில் அதிக அளவில் தோன்றுகிறது. இந்நோயால் தாக்கப்பட்ட தூர்களில் குறுகிய வெளிறிய இலைகளையுடைய அதிகக் கிளைகள் (சிம்புகள்) தோன்றும். கரும்புகள் உண்டாகாது. அப்படியே கரும்பு உண்டானாலும் கரும்புகள் மிக மெலிந்து குறுகிய கணுக்களையுடையனவாக இருக்கும்.

**தடுப்பு முறைகள் :** சாதாரணமாக எல்லா நச்சுயிரி நோய்களையும் கட்டுப்படுத்த விதைக் கரணைகளை நோய் தாக்காத பயிர்களிலிருந்தே எடுத்தல் வேண்டும். நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட கரும்பு வகைகளைப் பயிரிடுதல் நலம். கட்டைப் பயிர்க் குட்டை நோயையும், புல்குருத்து நோயையும் கட்டுப்படுத்த கரணைகளைக் கொதிநீர் சிகிச்சை அல்லது வெப்பக்காற்று ( Hot air ) சிகிச்சை செய்து நடலாம். நோயால் தாக்கப்பட்ட தூர்களை அவ்வப்போது அழித்தல் நலம்.

**தகவல் :** **தாவர நோயியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

**வெளியீடு :** **தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

## புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்தார்!

பங்கிம் சந்திரர் தம் பெயரை ஒருபொழுதும் விளம்பரப்படுத்த விரும்பவில்லை. புதிய எழுத்தாளர் எவரும் எச்சமயத்தில் வந்தாலும், பங்கிம் சந்திரர் அவருக்கு எல்லா விஷயங்களிலும் உதவி புரிந்து உற்சாக மூட்டுவார். வங்க இலக்கியத்தின் பொற்காலத்தில் வாழ்ந்த எல்லா எழுத்தாளர்களும், பங்கிம் சந்திரருக்குக் கடன்பட்டவர்களாகவே தங்களைக் கருதினர்! பங்கிம் சந்திரரைப் போன்று எழுத்தாளராவது மிகப் பெரிய காரியம் என்று அவர்கள் நினைத்தனர். பங்கிம் சந்திரரோ, மற்றவர்களை எழுத்தாளர்களாக வளர்ப்பது தம்முடைய கடமை என நினைத்தார்.

பாரத நாட்டு மொழிகள் பலவற்றில் பங்கிம் சந்திரரின் நவீனங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன; ஆங்கிலத்திலும் கூட சில மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மற்ற இந்திய மொழிகளைச் சேர்ந்த அறிஞர்கள், பங்கிம் சந்திரரின் கலைத்திறனைப் போற்றி அவருடைய முறையைத் தாங்களும் பின்பற்றத் தொடங்கினர்



## வந்தே மாதரம்!

'வந்தே மாதரம்' பாடலை இப்பொழுது பார்ப்போம். 'ஆனந்த மடத்தில்' பவானந்தன் என்னும் சந்நியாசி மஹேந்திரன் என்பவனுக்கு ஒரு பாடலைப் பாடிக்காட்டுகிறான்.

"தாய் யார்?" என்று மஹேந்திரன் கேட்கிறான்.

"தாய்நாட்டையே தாய் என அறிந்திருக்கிறோம். நம்மெதிரில் அவளைவிடப் பெரியது எதுவும் இல்லை. பிறந்த நாடு பொன்னுலகை விடப் பெரியது. எந்த நாட்டில் நாம் பிறவி பெற்றோமோ, அந்தநாடே நமது தாய். எனது தாய், சகோதரன், சகோதரி, மனைவி எனச் சொல்ல யாருமில்லை; மக்களில்லை, மனையில்லை; ஒன்றே ஒன்று உண்டு-அதுதான் ஸுஜலாம், ஸுபலாம், ஸஸ்யச்யாமளாம் என்னும் தாய்த்திருநாடு" என்று பவானந்தன் சொல்கிறான்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அழுதவண்ணம் பவானந்தன் பாடுகிறான்:—

"வந்தே மாதரம்!
ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ
சீதளாம்,
ஸஸ்யச்யாமளாம் மாதரம்,
சுப்ரஜோத்ஸ்நாம் புலகிதயாமி
நீம்
புல்லகுஸுமிசத்ருமதல
சோபினீம்.
ஸுஹா ஸிநீம், ஸுமதுர
பாஷிணீம்,
ஸுகதாம் வரதாம் மாதரம்."

*இனியநீர்ப் பெருக்கினை,*
*இன்கனி வளத்தினை !*
*தனிநறு மலயத்*
*தின்காற் சிறப்பினை !*
*பைந்நிறப் பழனம்*
*பரவிய வடிவினை*
*வெண்ணிலாக் கதிர்மகிழ்*
*விரித்திடு மிரவினை*
*மலர்மணிப் பூத்திகம்*
*மரன்பல செறிந்தினை !*
*குறுநகை யின்சொலார்*
*குலவிய மாண்பினை !*
*நல்குவை யின்பம்*
*வரம்பல நல்குவை !*

*வந்தே மாதரம் !*

நாட்டுப் பற்றைப் பரப்பிய இப்பெரியார் ஐம்பத்தாறுவது வயதில், 1894 ஏப்ரல் 8-ந்தேதி இறைவனடி எய்தினர்.



# கால் நடை வளர்ப்பவர்களுக்கு உதவும் செய்திகள் !

## இளங் கன்றுகளுக்குச் சீரிய உணவு !



பசுவிடமிருந்து பிரிக்கப்பட்ட இளங் கன்றுகளுக்குப் புல் கொடுப்பதுடன் கீழ்க் கண்ட சத்துணவைக் கொடுக்கலாம் என ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்து பரிந்துரைக் கப்படுகிறது.

**இளங் கன்று உணவு :**

| | |
|---|---|
| சோளம் | 38 சதவிகிதம் |
| கடலைப் பிண்ணாக்கு | 40 ,, |
| கோதுமைத் தவிடு | 12 ,, |
| மரவள்ளிக் கிழங்குமாவு | 5 ,, |
| மீன் தூள் | 3 ,, |
| மினரல் கலவை | 2 ,, |
| விட்டமின் கலவை | 0.6 கிராம்/ கிலோவிற்கு |
| ஈஸ்டு | 20 கிராம்/ கிலோவிற்கு |

## சிக்கனமான மாட்டுணவு !

சாதாரணமாக நெல் உமி, முட்டை வரட்டி தயாரிப்பதற்கும், எரி பொருளாகப் பயன்படுத்துவதற்கும் உபயோகப்படுகிறது. இந்த நெல் உமியையும் கூட, மாடுகளின் உணவில் பயன்படுத்த முடியும் என்று ஆராய்ச் சிகளால் கண்டறியப்பட்டுள்ளது.

நெல் உமியை, 3.3 சதவித 'சோடியம் ஹைடிராக்சைடு' கரைசலில் (Sodium hydroxide) 6 மணி நேரம் ஊற வைத்து, பிறகு வெயிலில் உலர வைக்கவும். இவ்வாறு பதப் படுத்தப்பட்ட நெல் உமியை மாடுகள் சத்து ணவில் 10 சதவித அளவில் உபயோகிக்கலாம். இதனால் மாடுகளுக்கு ஏற்படும் உணவுச் செலவைக் கணிசமான அளவில் குறைக்க முடியும்.

## கோழி உணவில் ஈரல் தூள் !

பலவித மருந்துகளைத் தயாரிக்கும்போது ஈரல் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட பின், ஈரல் சக்கை தள்ளப் படுகிறது. மருந்துகள் தயாரிக்கும் தொழிற் சாலைகளில் இது போன்ற ஈரல் சக்கை நிறைய அளவில் கிடைக்கிறது.

இவ்வாறு கிடைக்கும் ஈரல் சக்கைகள் கழிவுப் பொருளாய் ஒதுக்கப்பட்டன. ஆனால் சென்னைக் கால்நடைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்





சென்னை ராஜாஜி அரங்கில் 15—5—1977 அன்று நடைபெற்ற அம்பேத்கார் மன்றங் களின் இணைப்பு மாநாட்டில் டாக்டர் அம்பேத்கார் திருஉருவப் படத்தை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், 15—5—1977 அன்று திருவல்லிக் கேணியில் உள்ள ஜும்மா மசூதியில் (பெரிய மசூதி) நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## படமும் செய்தியும்





…மையில் நடைபெறவிருக்கும் தமிழ் …ட்டப் பேரவைத் தேர்தலில் அரசியல் …ன் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகளைப் பற்றி விவாதிப்பதற்காக, …டு ஆளுநர் அவர்கள், 20.5.'77 , தலைமைச் செயலகத்தில் அனைத் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டி …த்தார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ்பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று நடைபெற்ற ஓசூர் பஞ்சாயத்து யூனியன் வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழாவில் சிறந்த பஞ்சாயத்து யூனியன் என்பதற்காக அரக்கோணம் பஞ்சாயத்து யூனியனுக்கு வானொலிப் பெட்டி வழங்கினர்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று நடைபெற்ற ஓசூர் பஞ்சாயத்து யூனியன் வேளாண்மைக் கிடங்குத் திறப்புவிழாவில் நிலமில்லாதவர்களுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கினர்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று ஓசூர் பஞ்சாயத்து யூனியனில் நடைபெற்ற வேளாண்மைக் கிடங்குத் திறப்பு விழாவில், தொழிலாளர்களுக்குத் தையல் இயந்திரம் சவரக் கருவிகள் முதலியன வழங்கினர்.





தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 29.5.'77 அன்று வேலூர் பெண்டலண்ட் மருத்துவ மனையில் தீவிர இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு கடைக்கால் நாட்டினர்.



செஞ்சி, அரசினர் மருத்துவமனையில் முன்னுள் போர் வீரர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 12 படுக்கைகள் கொண்ட வார்டை தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு . வி. கார்த்திகேயன், அவர்கள் 29.5.'77 அன்று திறந்து வைத்தார்.

**விதைப்பு** வரிசைக்கு வரிசை 30 செ.மீ. வரிசையில் பயிருக்குப் பயிர் 15 செ. மீ.

| உர அளவு (எக்டேருக்கு) | பாசனப் பயிர் | மானுவாரிப் பயிர் |
|---|---|---|
| அடியுரம் | | |
| தொழு உரம் | 12.5 டன் | 12.5 டன் |
| தழைச்சத்து | 25 கிலோ | 25 கிலோ |
| மணிச்சத்து | 25 ,, | 12.5 ,, |
| சாம்பல்சத்து | 25 ,, | |
| மேலுரம் | | |
| தழைச்சத்து | 25 கிலோ | |

**பின்செய் நேர்த்தி :**

விதைத்த 15-ஆம் நாள் பயிரைக் கலைப்பது அவசியம். வேண்டும்போது களையெடுக்கவும்; நீர் பாய்ச்சவும். விதைத்த 25, 30-ஆம் நாளில் தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு :**

'செவின்', 'டைமெக்ரான்' ஒவ்வொன்றும் 0.1 சதம் என்ற விகிதத்தில் கலந்து, 7, 14, 21 நாட்களில் தெளித்தால் குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். பயிர் பூக்கும் பருவத்தில் 'பி.எச். சி. 10' சதம் மருந்தைத் தூவி, 'மிட்ஜ்' பூச்சியினுல் விளையும் சேதத்தைக் கடுப்படுத்தலாம்.

## மஞ்சளில் ஊடுபயிர்

மஞ்சளை 18 அங்குலத்திற்கு 10 அங்குல இடைவெளியில் பாரின் ஒரு பகுதியில் நடவு செய்கின்றோம். பாரின் மற்றொரு பகுதியில் வெண்டை, வெங்காயம், உளுந்து, பாசிப் பயறு, துவரை போன்ற பயிர்களை இலாபகரமாகச் சாகுபடி செய்யலாமென ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டில் மக்காச் சோளம், இராகி, வெங்காயம், சேனை, ஆமணக்குப் போன்ற பயிர்கள் ஊடுபயிர்களாகச் சாகுபடிச் செய்யப்படுகின்றன.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியில் மஞ்சளுக்கு ஏற்ற சிறந்த துணைப் பயிர்கள் வெண்டை, வெங்காயம், உளுந்து, பாசிப் பயறு, துவரை ஆகியவை என்றும், அவை, அதிக வருவாயைக் கொடுப்பவை என்றும் அறியப்பட்டுள்ளது.

1976-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில், மஞ்சள் மகசூல் ஏக்கருக்கு 7,000 கிலோவும் அதில் பயிர் செய்த வெண்டை ஊடுபயிரில் 6,000 கிலோவும் மகசூல் கிடைத்துள்ளன. இதனுல் தனிப் பயிரை விட ஏக்கருக்கு ரூ. 2,450 அதிக வருவாயும் கிடைத்துள்ளது. இதே போன்று, வெங்காயம் ஊடுபயிர் செய்ததில் ஏக்கருக்கு ரூ. 2,340 அதிக வருவாயும், பாசிப் பயிறு, உளுந்து பயிரிட்டதில் ரூ. 570 அதிக வருவாயும் கிடைத்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனுல், மக்காச் சோளம், இராகி போன்ற பயிர்கள் மஞ்சளின் வளர்ச்சியைக் குறைத்து விளைச்சலையும் பாதிக்கின்றன என்றும் கண்டறியப்பட்டது.

மஞ்சளில் வெண்டை, வெங்காயம் போன்ற ஊடு பயிர்களைச் சாகுபடி செய்வதால் மஞ்சள் விளைச்சல் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. பயறு வகைகளான பாசிப் பயிறு, உளுந்து ஆகியவை நிலத்தின் வளத்தையும் பெருக்குகின்றன. வேர் முடிச்சுகளில் 'பேக்டீரியா' என்ற நுண்ணுயிர்கள் காற்றிலிருக்கும் தழைச் சத்து, ஊட்டச் சத்து ஆகியவற்றைச் சேகரிக்கின்றன. எனவே இவை மஞ்சளையும் பாதிக்காமல், தாங்களும் விளைச்சலைக் கொடுத்து, மண் வளத்தையும் அதிகரித்துப் பல வகைகளிலும் பயன் தருகின்றன.

## நெல்லை நேரடியாக விதைக்கலாமா?

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவியல் துறையில் 'ஐ.ஆர். 8', 'டான்' என்ற இரண்டு நெல் இரகங்களை நேரடியாக விதைத்தும், நாற்றங்காலில் நாற்றுப் பாவி பிறகு நடவு செய்தும் ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

நேரடி விதைப்பில் ஐ. ஆர். 8 அதிகத் தூர்கள் வெடித்து, நாற்றுப் பாவி நடவு செய்த முறையை விட அதிக மகசூல் அளித்துள்ளது. ஆனுல் 'டான்' நெல் ரகம் நாற்றுப் பாவி நடும் முறையில் அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது.

பொருளாதார அடிப்படையில் வருமானத்தையும், செலவு இனங்களையும் கணக்கிட்டுப் பார்க்குமிடத்து ஐ.ஆர். 8 நேரடி



விதைப்பில் அதிக நிகர இலாபம் கொடுத்து உள்ளது. 'டான்' நெல் இரகம் நாற்றுப் பாவி நடுவதில் உயர் விளைச்சல் அளித்த போதிலும், நாற்றுப் பாவி நடவு செய்ய ஆகும் செலவுத் தொகையைக் கணக்கிடுகையில், நேரடி விதைப்புக்கும், நாற்றுப் பாவி நடுவதற்கும் உள்ள நிகர இலாபத்தில் வேறுபாடு காணப் படவில்லை.

விதைப்பு முறையை எடுத்துக் கொண் டால் அது பட்டத்துக்கு ஏற்ப மாறுபடுகிறது. பட்டுக்கோட்டை நெல் ஆராய்ச்சிப் பண்ணை யில் விதைப்பு முறைகள் வெவ்வேறு பட்டங் களில் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து ஆராயப் பட்டன.

அதில் நீண்ட கால நெல் இரகங்களுக்கு —அதாவது முன் பருவ, பின் பருவ சம்பா இரகங்களுக்கு—நாற்றுப் பாவி நடும் முறை யும், குறுவைப் பட்டத்தில் பயிரிடப்படும் குறுகிய கால இரகங்களுக்கு நேரடி விதைப்பும் சாலச் சிறந்தது என அறியப்பட்டுள்ளது.

இருப்பினும், சில பகுதிகளில் விதைக்கும் சமயத்தில் வயல் முழுவதும், உழுது பண் படுத்துமளவுக்கு நீர் வசதி இருக்காது. மேலும் சில நிலங்களில் களைகள் அதிக அளவு வளர்ந்து தொல்லை தரும். இந்தப் பிரச்சினைகள் இல்லாத இடங்களில் குறுகிய கால இரகத் திற்கு நேரடி விதைப்பும், நீண்ட கால இரகத் திற்கு நாற்றுப் பாவி நடும் முறையையும் கையாண்டால் நல்ல பயனை அடையலாம்.




## இராகி நடுவது பற்றிய சில பயனுள்ள தகவல்கள்

மானாவாரி நிலங்களில் போதுமான மழை பெய்த பிறகு விதை தெளிக்கப்படு கிறது. விதையைக் கைப் பழக்கமாக நிலத் தில் தெளித்து விட்டு மேலாக உழவு ஓட்டி விட்டால் விதைப்பு முடிந்து விடுகிறது. பாச னத்தில் பயிரிடும் இராகி பற்றிய சில ஆராய்ச்சி கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவியல் துறையில் நடைபெற்றுள்ளன.

பாசனத்தில் பயிரிடும் இராகியை நடவு செய்தல் நல்லது. எனினும் காலம் குறைவாக இருந்தால் நடவுக்குப் பண்படுத்திய நிலத்தில் நேரடியாகவிதை தெளித்து, பாத்தி அமைத்து, நீர்ப் பாய்ச்சுதலும் உண்டு. கோவை சிறு தானியப் பண்ணையில் நடத்தப்பட்ட இரண்டு ஆண்டு ஆராய்ச்சியில் நாற்றுப் பாவி நடவு செய்வது சிக்கனமானது எனக் கண்டறியப் பட்டுள்ளது. உரமிட்ட நாற்றுக்கள், உர மிடாத நாற்றுக்களை விட உயர் விளைச்சலைக் கொடுத்துள்ளன.

நாற்றுக்களை உரிய காலத்தில் நடவு செய்தால் தான், நல்ல விளைச்சல் பெற இயலும். பாலூர் ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில், 100 நாள் வயது கொண்ட 'கோ. 7' இரகத்திற்கு, 21 நாள் வய்து கொண்ட நாற்றும், 110 நாட்கள் வயது கொண்ட 'பி.எல்.ஆர்.' இரகத்திற்கு 28 நாள் வயது கொண்ட நாற்றும் அதிக விளைச்சலுக்கு ஏற்றவை என அறியப்பட்டன. இதற்கு மேல் நாள் பட்ட வயது கொண்ட நாற்றுக்களைப் பிடுங்கி நடுவதில் விளைச்சல் மிகவும் பாதிக்கப்படுகிறது.

அத்துடன் உரிய வயதுள்ள நாற்றுக்களைத் தகுந்த இடைவெளியில் நடவு செய்தால்தான் உயர் விளைச்சல் பெற இயலும். நடவு செய்ய 15 × 15 செ.மீ. இடைவெளி போதுமான தாகும்.

## சோளத்தை நாற்றுப் பாவி நடலாமா?

தோட்டக்கால் பயிர்ச் சுழற்சி முறையில் சோளம் முக்கிய பயிராக இருப்பதால், நாற்றுப் பாவி நடவு செய்வதால் பல பயிர் சாகுபடி செய்ய வாய்ப்புண்டாகும். எனவே, இது குறித்துத் தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழக உழவியல் துறையினர் மூன்று ஆண்டுகள் ஆய்வு நடத்தினர்.

மூன்று ஆண்டு ஆராய்ச்சியில், ஒரு ஆண் டில்தான் நாற்றுப் பாவி நடவு செய்யும் முறை, நேரடி விதைப்பை விட உயர் விளைச் சல் கொடுத்துள்ளது. நாற்று நட ஏற்ற வயதை ஆராய்ந்ததில், இரண்டு வார வய துள்ள நாற்றுக்கள், மூன்று வார வயதுள்ள நாற்றுக்களை விடச் சிறந்து விளங்கின.

மற்றும், வரிசை விதைப்பு, பார் விதைப்பு, நாற்றுப் பாவி நடுதல் போன்ற முறைகளை ஆராய்ந்ததில், சோளத்தை நாற்றுப் பாவி நடவு செய்ததில், நேரடி விதைப்பை விட, தானிய விளைச்சலும், தட்டு, விளைச்சலும் குறைகின்றன. இருந்தாலும், 'சி.எஸ். வி. 4' இரகம், நாற்றுப் பாவி நடவு செய்ததில் நேரடி விதைப்பைக் காட்டிலும் சிறிதளவு அதிக விளைச்சல் அளிக்கவுள்ளது.



6. அரசும், அரசுடைமை வங்கி களும் புதிய பாசன முறைகளை ஏற்படுத்த, குடியானவர்கட்குக் குறைவான வட்டியில் கடன் அளித்தல்.

மேற்கூறிய வழி முறைகளைப் பயன்படுத்தி நம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் நீர்த் தட்டுப் பாட்டைக் குறைக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். மேலும் நீரைச் சேமிக்கவும், அதிக நிலத் தைப் பாசனத்தின் கீழ் கொண்டு வரவும், இன்னும் அதிக அளவில் ஆராய்ச்சி நடத்துவதும் மிகவும் அவசியம். அப்பொழுதுதான் வருங்காலத்திற்கு வேண்டிய உணவுத் தேவையைச் சிறந்த முறையில் நம்மால் உற்ப செய்ய முடியும்.

வெளியீடு :
தகவல் தொடர்பு நிலை
தமிழ்நாடு வேளாண்மை
பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-64100

## நெல்லில் புகையானைக் கட்டுப்படுத்துவது எப்படி?

பழுப்புநிறத் தத்துப்பூச்சிகள் நெற்பயிரின் தண்டு பாகத்தில் காணப்படும். இவற்றில் வளர்ந்த பூச்சிகள் பழுப்பு நிறத்திலும், குஞ்சுகள் வெள்ளையாகவும் இருக்கும். இவை தம் ஊசி போன்ற வாய்ப் பகுதியை தண்டினுள் செலுத்தி சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் பயிருக்கு மிகுந்த சேதம் உண்டாகின்றது. தாக்கப்பட்ட பயிர், பசுமை நிறத்தை இழந்து, பழுப்பு நிற மடைந்து, பின் கருநிறமடையும். தாக்கப்பட்ட பயிரை கையினால் தட்டினால் பூச்சிகள் நீரில் மிதக்கக் காணலாம். இவை நீரில் மிதந்து மற்ற வயல்களுக்கும் எளிதில் பரவும் தன்மையுடையது. தாக்கப்பட்ட பயிரின் அடிப்பாகம் அழுகிக் காணப்படும். தூரில் அப்பூச்சிகளின் கழிவுகள் அடர்த்தியாக அழுக்கு நிறத்தில் காணப்படும். தாக்கப்பட்ட பயிர் சாய்ந்து, மணிகள் பால் பிடிக் காமல், மகசூல் மிகவும் குறைந்துவிடும்.

**தடுப்பு முறைகள்:** நட்ட 20-வது மற்றும் 50-வது நாட்களில் 'ப்யூரடான்'3 சதம் குருணை ஏக்கருக்கு 7 கிலோ வீதம், வயலில் 5 செ. மீ. தண்ணீரைத் தேக்கித் தூவவும். கதிர் வாங்கிய தருணத்தில் பூச்சிகள் காணப்பட்டால் வயலில் உள்ள தண்ணீரை வடித்து, பின், பயிரின் அடிப்பாகத்தில் படும்படி ஏக்கருக்கு 10 கிலோ 'பி.எச்.சி.' 10 சதம் தூளையும், 'கார்பரில்' 5 சதம் 10 கிலோ தூளையும் கலந்து தூவவும்.

# பயறு வகைப்பயிர்களுக்கு நுண்ணுயிர் கலப்பதேன்?

பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய உணவாகிய தழைச் சத்து(நைட்ரஜன்), காற்றில் பெருமளவில் பயிர்களுக்குப் பயன் படாத வகையில் கலந்துள்ளது.

பயறு வகைகள் காற்றிலுள்ள தழைச் சத்தை வேர் முடிச்சுகளில் உள்ள 'பேக்டீரியா' எனப்படும் நுண்ணுயிர்கள் மூலம் நிலைப் படுத்தி நிலத்தை வளமடையச் செய்கிறது.

நுண்ணுயிர்கள் (பாக்டீரியா) காற்றிலுள்ள தழைச் சத்தைக் கிரகித்து, பயிர்கள் எளிதில் உட்கொள்ளக் கூடிய பொருளாக மாற்றித் தருகின்றன.



நுண்ணுயிர் ஊட்டிய பயறு வகைப் பயிர்களைப் பயிரிடுவதின் மூலம் ஒரு ஏக்கருக்குச் சுமார் 25 முதல் 40 கிலோ தழைச்சத்தைக் காற்றிலிருந்து பெற்று, 20 சதவீதம் அதிக மகசூலை அடையலாம்.

நுண்ணுயிர் ஊட்டிய பயறு வகைப் பயிர்களைப் பயிரிடும்போது பயிர்களின் வேர்ப் பாகங்களில் முடிச்சுகள் அதிகரித்து, காற்றிலுள்ள தழைச்சத்து அதிகமாக வேர் முடிச்சுகளில் சேமித்து வைக்கப்பட்டு, பயிர்களின் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. ஆகையால் பயறு வகைப் பயிர்களுக்குத் தழைச்சத்து கொடுக்கக் கூடிய இரசாயன உரங்களை இடத் தேவையில்லை. ஆகவே பயறு வகைகளை விதைப்பதற்கு முன் 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர் களை விதைகளோடு நன்கு கலந்து விதைத்தல் அவசியம்.

பயறு வகைப் பயிர்களை நுண்ணுயிர் ஊட்டிப் பயிரிடுவதால், செடிகளில் வேர் முடிச்சுகள் அதிக அளவில் தோன்றி வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், சுமார் 25 சதம் அதிக மகசூலும் கிடைக்கிறது. மேலும் நிலத்தின் வளம் அதிகரிக்கிறது. இதனால் அடுத்து வரும் பயிர்களின் மகசூலும் அதிகரிக்க வழி பிறக்கிறது.

பயறு வகைப் பயிர்களுக்கும் தழை உரப் பயிர்களுக்கும் விதைகளின் மூலம் நுண்ணுயிர்கள் ஊட்டலாம்.

## விதையில் நுண்ணுயிர் கலக்கும் முறை



1. ஒவ்வொரு நுண்ணுயிர் குடுவையுடன் ஒரு சிறு பொட்டலம் இருக்கும். இதில் மாறேகால்சியம் பாஸ்பேட் என்ற இரசாயனப் பொருள் உள்ளது.



2. மாறேகால்சியம் பாஸ்பேட்டை ஒரு டம்ளர் நல்ல தண்ணீரில் கலக்கவும்.



3. கரைசலை நுண்ணுயிர் குடுவையில் ஊற்றி நன்ருகக் குலுக்கவும்.



4. பெரிய துத்தநாகம் அல்லது தகர வாளியில் விதைகளை எடுத்துக் கொண்டு அதில் இக்கரைசலை ஊற்றி கைகளினல் நன்கு எல்லா விதைகளிலும் படும்படியாகக் கலக்கவேண்டும்.



5. பின்பு கலந்த விதைகளை நிழலில் உலர்த்த வேண்டும். மேலே சொன்ன முறைகளை விதை விதைப்பதற்கு முந்தின நாள் மாலையில் செய்யவும்.



6: நுண்ணுயிர் கலந்த விதைகளை வழக்கம் போல் விதைக்கவும்.

## முக்கிய குறிப்புகள்

1. பாக்டீரியா குடுவைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் மூலம் வரவழைத்துப் பயன்படுத்தலாம்.

2. விதையை நுண்ணுயிர் கலந்த 24 மணி நேரத்திற்குள் விதைக்கவும்.

3. கலப்பதற்குச் சாதாரண துத்தநாக வாளியையோ அல்லது 'பிளாஸ்டிக்' பாத்திரங்களையோ உபயோகிக்கலாம். சிமெண்ட் தரையிலும் கலக்கலாம். (பித்தளை, தாமிரம், மண் பாத்திரங்களைத் தவிர்க்கவும்).

4. ஒரு குடுவைக்கு 12 கிலோ விதையைக் கலக்கவும்.

5. கலந்த விதைகளை விதைக்கும் வரை வெயில் படாமல் வைக்கவும்.

6. விதைத்த பின் தண்ணீர் பாய்ச்சவும்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162




# வெக்கை நோயிலிருந்து கால்நடைகளைக் காத்திடுவீர்!


டாக்டர் எஸ். பி. அன்புமணி, எம்.வி.எஸ்ஸி.,
மண்டல துணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை,
கோவை.


கால்நடைகளுக்கு ஏற்படும் மிகக் கொடிய நோய்களில் வெக்கை நோய் (Rinderpest or Cattle plague) முக்கியமானதாகும். இந்நோய் ஏற்பட்டால், கலப்பினப் பசுக்களின் இறப்பு விகிதம் 90 முதல் 100 சதமாக உள்ளது. நாட்டுப்பசு மற்றவற்றின் இறப்பு விகிதம் 10 முதல் 30 சதமாக உள்ளது. பதினெட்டாம் நூற்றுண்டிலேயே இது ஒரு தொற்றுநோய் என்று கண்டு பிடிக்கப்பட்டது. 1896 முதல் 1902 வரை இந்நோய் மிகுந்த நட்டத்தைத் தெற்கு ஆப்பிரிக்காவில் உண்டு பண்ணியது. 1877-ல் இந்நோய் பிரிட்டனைத் தாக்கியது. 1920-ல் இந்நோய் பெல்ஜியம் எனும் நாட்டைத் தாக்கியது. ஆஸ்திரேலியாவை இந்நோய் 1923-ல் தாக்கியது. இந்நோயினுல் பாதிக்கப்படாத நாடுகள் வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்காவாகும். காலந் தவருமல் தடுப்பு ஊசி போட்டும் மற்ற தீவிர நடவடிக்கைகளாலும் அமெரிக்காவில் இந்நோய் பரவாமல் தடுத்து வருகின்றனர்.

**நோய், தோன்றி, பரவும் வகை:**

இந்நோய், ஒருவகை நுண்கிருமியினுல் உண்டாகிறது. இக்கிருமிகள் கால்நடைகள் உட்கொள்ளும் தீவனம், மற்றும் குடி நீரின் மூலம் பரவுகின்றது. மற்றும் நோயுற்ற மாட்டின் கழிவுப் பொருள்கள், அதைப் பராமரிக்கும் ஆட்கள், மற்றும் காற்றின் மூலமும் பரவுகிறது.

இந்நோயின் இடைக்காலம் (Incubation pericd) அதாவது

கிருமிகள். உட்செல்வதற்கும் நோயின் அறிகுறிகள் தெரிவதற்கும் ஆகும் இடைவேளை 3 முதல் 9 நாட்களாகும்.

**நோயின் அறிகுறிகள்.**

இந்நோய்க்கிருமிகள் உடலுக்குள் சென்ற 4 அல்லது 6-வது நாளிலிருந்து காய்ச்சல் ஏற்படும்.

இத்துடன் பசியின்மையும், கண்களில் நீர் வடிதலும் ஏற்படுவதுடன், மூக்கின் வெளிப்புறம் காய்ந்தும் (Muzzle Dry) கண்கள் சிவந்தும் காணப்படும்.

வயிற்றுவலி, முதுகை வளைத்துக் கொண்டு நிற்பது, உடம்பின் மேல் தோல் பளபளப்பற்றும் மயிர்க்கால்கள் குத்திட்டும் காணப்படும்.

முதலில் சாணம் கெட்டியாகவும், புழுக்கைகளாகவும். போடும். பிறகு கழிச்சல் ஏற்படும். கழிச்சல் ஏற்பட்டவுடன் காய்ச்சல் தானுகக் குறையும்.

நோய் கண்ட 7-வது நாளிலிருந்து வாயிலிருந்து நீர் வடியும். கழிச்சல் துர்நாற்றத்துடனும், தண்ணீர் போலவும் இருக்கும். இக்கழிச்சலினுல் கால்நடைகள் மிகவும் மெலிந்து பலமின்றி, காணப்படும். கழிச்சலில் குடல் துண்டுகளும் இரத்தமும் காணப்படும்.

நோய்கண்ட மாடுகள் நோயின் அறிகுறிகள் தென்பட்ட 6 முதல் 12 நாட்களுக்குள் இறந்துவிடும்.

நோய்கண்ட மாடுகளின் வாயின் உட்புறம், கீழ் உதடுகளின் உட்புறம், நாக்கின் அடிப்பாகம் ஆகிய இடங்களில் சிறு புண்கள் காணப்படும். இப்புண்களின் மேல்புறம் உமி போன்றும் குழிவாகவும் இருக்கும்.

கடுமையான நோய் ஏற்பட்டால் உணவுக் குழாயில் (Oesophagus) புண்கள் அதிகமான அளவில் காணப்படும்.

இறந்த மாடுகளில், நோய்க்கூறு பரிசோதனை செய்யும்போது கீழ்க்கண்ட மாறுதல்கள் தெரியும்.

1. வயிற்றில் 3-வது அறையில் (Omassum) ஆழ்ந்த குழிப்புண்கள் இருக்கும். இதைத்தவிர சிறு சிறு புண்கள் குத்தூசியினுல் குத்தப்பட்டது போன்ற (Pin Printed haemorrage) குழிப்புண்கள் மேல் சற்று மூடப் பட்டாற் போல் இருக்கும்.

2. வயிற்றின் 4-வது அறையில் (abomassum) புண்களும், இரத்தம் கசிதலும் மிகத்தெளிவாகத் தெரியும். இவ்வறையில் உள்ள உணவுப் பொருள்கள் பழுப்பான நிறத்தில் இரத்தம் கலந்து (Chocolate coloured) காணப்படும். இவ்வறையின் உட்புறத்தோல் செக்கச் செவேலென்று இருக்கும். புண்களும் காணப்படும். 'பைலோரிக்' (Pyloric) என்று கூறப்படும் குடற் சேருமிடத்தில் இந்நோயின் அறிகுறிகள் அதிகம் காணப்படும்.

இந்நோய் மூலம் ஏற்படும் அதிகக் கழிச்சலினுல் பெருங்குடல் மிகுந்த அளவில் (Highly Congested) பாதிக்கப்படுகிறது. இந்த இடங்களில் குடலின் உட்புறப்பகுதிகளிலிருந்து இரத்தம் கசிதலும், மலக்குடலின் பகுதியில் வரிக்குதிரை மேல் உள்ள வரிக்கோடுகள் போல் (Zebra markings) குடலின் உட்புறம் காணப்படும். இதே போன்று சுவாச உறுப்புகள், மூத்திரப்பை, மேலும் கர்பப்பை ஆகியவை பாதிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

அதி தீவிரமாக இந்நோய் பரவும்போது, சில நேரங்களில் கலப்பினப் பசுக்களில் மேற்கூறிய நோயின் அறிகுறிகள் காணப்படாமல் இருக்கக்கூடும். இம்மாதிரி இருக்கும்போது சுவாச உறுப்புகள் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறது.

இதில் காற்றுக்குழல் முதலில் பாதிக்கப்படுகிறது. இதனுல் காற்றுக்குழல் மேல் பகுதியில் சிறு புண்களும், இரத்தக்கசிவுகளும் காணப்படும். இக்கசிவுகள் மூக்கின் வழியாக மூக்குச்சளியுடன் வெளியேற்றப்படுகிறது. இதனுல் மூச்சுத்திணறல் ஏற்பட்டுக் கால்நடைகள் வெகுசீக்கிரம் இறந்துவிடும்.

இவற்றில் காணப்படும் நோய் அறிகுறிகள் காய்ச்சல், மூச்சுத் திணறல், தலையைக் குப்புற வைத்துப்படுத்தல், மூக்குச்சளியுடன் இரத்தம் கலந்து காணப்படுதல், கண்கள் சிவந்து காணப்படுதல் ஆகும்.

வெள்ளாடுகளிலும், செம்மறியாடுகளிலும் இந்நோய் வருகிறது. அதில் காணும் நோயின் அறிகுறிகள் காய்ச்சல், சோர்ந்து காணப்படுதல், சுவாச உறுப்புகள் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறல், கடைசியாக கழிச்சல் கண்டு இறத்தலாகும். ஆடுகளில், மாடுகளில் இருப்பதுபோல் வாயில் புண்கள் ஏற்படுவதில்லை. கண்கள் சிவந்து, கண்களில் நீர் வடிவது காணப்படுவது இல்லை. ஆடுகளையும் இந்நோயினின்றும் தடுப்பூசி மூலம் காப்பாற்றிக் கொள்ளலாம்.

இந்நோயின் கடுமையைப்பற்றி விரிவாகக் கூறியதைக் கேட்ட நீங்கள் யாவரும் உங்கள் கால்நடைகளை இந்நோயினின்றும் தடுப்பூசி போட்டுக் காத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நோய்கண்ட கால்நடைகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவும், உங்கள் உயர்ந்த கால்நடைகளை இக்கடும் நோயில் இருந்து காப்பாற்றவும், காலந்தவருமல் தடுப்பூசி போடுவது சிறந்தது. மேலும், இந்நோயின்பால் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குநரையாவது, வெக்கை நோய்த் தடுப்புத்திட்ட கால்நடை உதவி மருத்துவரையாவது அணுகும்படி கேட்டுக்கொள்கிறேன். அல்லது அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## வெக்கை நோய்த் தடுப்பு ஊசி

வெக்கை நோய்த் தடுப்பு ஊசி மருந்து இராணிப்பேட்டையில் தயாரிக்கப்படுகிறது. எல்லாக் கால்நடை மருத்துவ நிலையங்களிலும் வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. வெக்கை நோய்த் தடுப்புக் குழுக்களும் மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இக்குழுக்களும் ஆங்காங்கே வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போடுகின்றன. ஒருமுறை வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போட்டுவிட்டால், 3 ஆண்டுகளுக்கு வெக்கை நோய் வராது.



# வீட்டு உபயோகத்திற்கு எரி பொருள்

ஏ. கே. சென்

அடுப்பில் எரிப்பதற்கு விறகைம், எருவராட்டியையும் உபயாகிக்கும் வழக்கம் இன்னும் இருந்து வருகிறது. விறகை இன்னும் பயனுள்ள காரியங்களுக்கும் பசு மாட்டுச் சாணத்தை பயலுக்கு உரமாகவும் உபயோகித்தால் எவ்வளவோ நன்ருக இருக்கும்.



நாடெங்கும் நாள் தவருமல் இலட்சக்கணக்கான மரங்களை வெட்டுகிறோம். ஓராண்டில் அழிக்கப்படும் மரங்களின் எண்ணிக்கை 13 கோடி எனக் கணக்கிட்டு இருக்கிருர்கள். இதனுல் காடுகள் அழிந்து மழை குறைந்து, விவசாயம் பாதிக்கப்படுவதோடு சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும், மனித சமுதாயத்தின் அன்ருட வாழ்க்கைக்கும் கேடு உண்டாகிறது.





பழக்கப்பட்டுப் போய்விட்ட பிறகு, எருவராட்டி ஆகியவற்றை நம் மக்கள் எளிதில் கைவிடமாட்டார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகாவது இதை மாற்றி வேறு வகையான எரி பொருட்களை உபயோகிப்பது நல்லது.





அடுப்பில் நிலக்கரி உபயோகிப்பதைப் பரப்பவேண்டுமென்று

அரசாங்கம் விரும்புகிறது. நாட்டில் 8,300 கோடி டன் நிலக்கரி கையிருப்பு இருக்கிறது. எனவே சமையல் செய்ய அடுப்பில் விறகுக்குப் பதிலாக நிலக்கரியை உபயோகிப்பதே பொருத்தமானதும், நியாயமானதும் ஆகும்.

இந்தியாவில் நிலக்கரிச் சுரங்கங்கள் யாவும் தேசியமயமாக்கப்பட்டு விட்டன. சோவியத் ரஷ்யாவும், போலந்தும் இந்தத் துறையில் தங்களுடைய அனுபவத்தையும் புதிய தொழில் நுணுக்க அறிவையும் இந்தியாவுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியா, நிலக்கரிச் செல்வம் மிகுந்த நாடாக விளங்குகிறது.

இந்திய நிலக்கரி நிறுவனம், கறுப்பு வைரம் என்று பெயர் பெற்ற நிலக்கரியை வெட்டி எடுக்கும் மாபெரும் திட்டத்தின் கீழ் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் 20 கோடியே 30 இலட்சம் டன் நிலக்கரியைத் தோண்டி எடுக்கும். ஆகையால் இந்தியாவில் நிலக்கரிப் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் நிலக்கரியை உபயோகிக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. இந்த முயற்சி வெற்றி பெறுமானுல் மென்மையான நிலக்கரி இப்போது ஆண்டு தோறும் 38 இலட்சம் டன் தேவைப்படுகிறது. 1985-86-ல் ஒரு கோடியே 20 இலட்சம் டன் தேவைப்படும். ஏனென்ருல் நம் நாட்டில் அவ்வளவு அதிகமாக விறகு உபயோகப்படுத்தப்படுகிறது. உதாரணமாக சமையல் வாயு, மண்ணெண்ணெய் ஆகிய இரண்டும் எளிதில் கிடைக்கும் அஸ்ஸாமிலுள்ள கௌஹாத்தி நகரில்கூட செலவாகும் எரி பொருளில் விறகு 44 சதவிகித அளவு பயன்படுத்தப்படுகிறது.

ஆறு பேர் உள்ள ஒரு குடும்பம் சமையல் வாயுவுக்கு 35 ரூபாயும், மண்ணெண்ணெய்க்கு 25 ரூபாயும், நிலக்கரிக்கு 18 ரூபாயும் செலவிடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் நம் குடும்பங்களில் மண்ணெண்ணெய்க்கு இதைவிடக் கூடுதலான பணம் செலவழிக்கிறார்கள். இதற்குக் காரணம் மண்ணெண்ணெய் அடுப்பிலுள்ள திரி மட்ட ரகமாக இருப்பதும் அடிக்கடி புதிய திரி போட வேண்டியதுமாகும். புதிய வகையான திரிகளுடன் இயங்கக் கூடிய மண்ணெண்ணெய் அடுப்புக்களை இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் ஆராய்ச்சித் துறை புதிதாகக் கண்டுபிடித்துள்ளது. இந்த அடுப்பு அடுத்த மாதத்தில் 35 ரூபாய் விலைக்கு மார்க்கெட்டில் கிடைக்கும். இதை உபயோகித்தால் 20 லிட்டர் மண்ணெண்ணெய் செலவு செய்யும் குடும்பத்திற்கு மாதம் 10 ரூபாய் மிச்சப்படும்.



நிலக்கரியைச் சுரங்கங்களிலிருந்து, நுகர்வோர் இருக்கும் இடத்திற்குக் கொண்டு போய்க் கொடுப்பதில் சில பிரச்சினைகள் உள்ளன. போக்குவரத்துச் செலவும் அதிகம். எனவே 60 இலட்சம் இந்தியக் குடும்பங்கள் இந்தியாவில் கிடைக்கும் நிலக்கரியில் பத்தில் ஒரு பங்கைத்தான் உபயோகிக்கிறார்கள்.

மலைப் பகுதிகளிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நெடுந்தூரத்தில் உள்ள பகுதிகளிலும் நிலக்கரியின் உபயோகத்தைப் பரப்பச் சில முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அஸ்ஸாமில் தொலை தூரத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களிலும், பஞ்சாபின் தொழில் நகரங்களிலும் உத்திரப் பிரதேசத்தின் மலை நகரங்களிலும் நிலக்கரி விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் நிலக்கரியின் விலை டன்னுக்கு ரூபாய் 12.50லிருந்து 47 வரை குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நிலக்கரியைத் தொட்டால் கை அழுக்காகி விடும். புகையைப் பரப்பும் தன்மையும் நிலக்கரிக்கு உண்டு. ஆகையால் புகையில்லாத நிலக்கரியை இந்திய நிலக்கரி நிறுவனம் உற்பத்தி செய்து இருக்கிறது. இதன் பெயர் ''ஜ்வாலா''. ஜ்வாலா சுத்தமானது, எளிதில் தீப்பற்றக் கூடியது. நீண்ட நேரத்திற்கு எரியும் தன்மையும் கொண்டது. நாள்தோறும் 100 டன் 'ஜ்வாலா' உற்பத்தியாகிறது. 120 டன் உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு தொழிற்சாலையும் விரைவில் தொடங்கப்படும்.



'ஜ்வாலா' மண்ணெண்ணெய்யைவிட மலிவானது. ஹைதராபாத்துக்கு அருகே உள்ள இராம கிருஷ்ணாபுரத்தில் இந்திய நிலக்கரி நிறுவனம் குறைந்த வெப்பத்தில் கரிப் பொருளாக்கும் எந்திரத்தை இயக்குகிறது. அதிலிருந்து நாள்தோறும் ஒரு கோடியே 30 இலட்சம் கன அடி நிலக்கரி வாயு உற்பத்தியாகும். இதுபோல மற்றொரு தொழிற்சாலை கல்கத்தாவுக்கு அருகே ஏற்பட்டு 1979 முதல் நாள்தோறும் ஒரு கோடியே 30 இலட்சம் கன அடி நிலக்கரி வாயுவையும் 1,000 டன் அளவு உள்ள அரைகுறையாகச் சுட்ட கரியையும் உற்பத்திச் செய்யும்.

கச்சா நிலக்கரியை உபயோகிக்கக்கூடிய சூளை என்ற பெயர் கொண்ட நிலக்கரி அடுப்பும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை 30 ரூபாய். இன்னும் சில மாதங்களில் இது நாடெங்கும் விற்பனைக்கு வரும். இதை உபயோகித்தாலும் எரிபொருள் செலவில் சிக்கனம் செய்யலாம்.

சமையல் எரி பொருட்களில் பழையன கழிதலும் நன்று. புதியன புகுதலும் நன்று.





# ாளானும் அதன் உபயோகங்களும்

'நாய்க்குடை' என்றழைக்கப்படும்
ளான் சாதாரணமாக கிராமங்களில் புரட்
சி, ஐப்பசி மாதங்களில் தோன்றுகிறது.
ம்மாதத்தில் இடி மழைக்குப் பின் பகலில்
ரிய வெப்பம் அதிகமாக இருந்தால், காளான்
ள், மக்கிய தழைச் சத்துக்கள் அதிகமாக
ள்ள நிலத்திலிருந்து தோன்றுகின்றன.
யற்கையில், நகர்ப்புறங்களை விட, கிராமங்
ளில் காளான் சாதாரணமாகக் காணப்படு
றது.

காளான் அமெரிக்கா, இந்தியா, பிரான்சு
ு, பர்மா முதலிய இடங்களில் உணவிற்காக
ும், ஏற்றுமதி செய்வதற்காகவும் அதிக
ளவில் பயிரிடப்படுகிறது. பெனிசிலின்,
ஸ்ட், எர்கட் போன்று, காளானும் ஓர்
ஞ்சாளமே. தமிழ் நாட்டில், ''வால்வேரியா''
டப்லேசியா'' என்னும் நெல் வைக்கோல்
ாளானை, மாசி, பங்குனி முதல் ஆவணி,
ரட்டாசி வரை மித வெப்ப நிலையில், உஷ்ண
லை 24 டிகிரி சென்டிகிரேடுக்கு அதிகமாக
ள்ள சமவெளிகளில் நன்றாகப் பயிரிடலாம்.
மிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தி
லுள்ள பூசண இயல் பிரிவில், முப்பத்தைந்து
ருட காலமாக பல ஆராய்ச்சிகள் இக்காளா
ில் நடைபெறுகிறது. இப்பூசண இயல்
ிரிவில் காளான் வித்துக்கள் உற்பத்தி செய்து
ல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இக்
ாளானை வளர்க்க, காளான் வித்துக்கள்,
தலையடி' நெல் வைக்கோல், செங்கல்லாலோ
அல்லது மரப் பலகையாலோ கட்டப்பட்ட
ஓர் மேடை, துவரை அல்லது கொள்ளு ரவை,
நிறமற்ற பாலிதின் பாய் முதலியவைகள்
தேவை.

இக்காளானைத் தவிர அகாரிகஸ், லெப்பி
யோட்டோ (Lepiota), மார்ஷெல்லா (Mor-
chella), பிளிரோட்டஸ் (Pleurotus) போன்ற
பலவித காளான்கள் உலகின் பல இடங்களில்
வளர்க்கப்படுகின்றன. வெள்ளைக் காளான்
என்று அழைக்கப்படும் 'அகேரிகஸ் பைஸ்போ
ரஸ்'' சாதாரணமாகக் குளிர் பிரதேசங்களில்
வளரும். ஹிமாசல் பிரதேசத்திலும், ஸ்ரீநகரிலும், டெல்லியிலும், நீலகிரியிலும் இந்த வெள்ளைக் காளான் வளர்க்கப்படுகிறது.

நெல் வைக்கோல் காளானில் 90 முதல் 92 சதவிகிதம் வரை தண்ணீர் உள்ளது. மீதமுள்ள 8 முதல் 10 சதவிகிதம் புரதச் சத்தே. இதில் இரும்பு, தாமிரம், சாம்பல், சுண்ணாம்பு முதலிய உப்புச் சத்துக்களும் சிறிதளவு உள்ளன. விட்டமின் 'பி'யும், 'டி'யும் அதிகமாகவுள்ளன. இக்காளானில் மாவுச் சத்து இல்லாததால், நீரழிவு வியாதியுள்ளவர்களுக்கு இக் காளான் ஒரு முக்கிய உணவாகும்.

**நெல் வைக்கோல் காளானைப் பயிர் செய்யும் முறை :**

**தேவையான பொருள்கள் :—**

1. செங்கல்லோ, மரப்பலகையாலோ செய்யப்பட்ட ஓர் மேடை.
2. காளான் வித்துக்கள்—2 புட்டிகள்.
3. 'தலையடி' நெல் வைக்கோல்—25 கிலோ.
4. துவரை அல்லது கொள்ளு ரவை—200 கிராம்.
5. நிறமற்ற பாலிதின் பாய்.

**காளான் படுக்கை தயார் செய்யும் முறை:—**

1. சூரிய வெளிச்சம் அதிகமில்லாத இடமாகவும், மழையாலும், காற்றாலும் நேரிடையாகப் பாதிக்கப்படாத இடமாகவும் உள்ள, கூரையுள்ள ஒரு கொட்டகையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர், மரப்பலகையாலோ, செங்கல்லாலோ தரை மட்டத்திற்கு 0.25 மீட்டர் உயரத்தில் ஒரு மேடை அமைக்க வேண்டும்.



2. சாதாரணமாக 25 கிலோ கையில் அடிக்கப்பட்ட 'தலையடி' நெல் வைக்கோல் ஓர் படுக்கைக்குத் தேவை. இதனை 1.25 மீட்டர் நீளமுள்ளதாகவும், 0.25 மீட்டர் தடிப்புள்ளதாகவும் உள்ள 32 கற்றைகளாகக் கட்ட வேண்டும். இக்கற்றைகளை 12 முதல் 16 மணி நேரம் தண்ணீரில் அமிழ்ந்திருக்கும் நிலையில் ஊற வைக்க வேண்டும்.

3. கற்றைகளைத் தண்ணீரிலிருந்து எடுத்த பின்பு, நான்கு கற்றைகளைப் பக்கவாட்டில் வைத்து, நடு இரண்டு கற்றைகளைப் பிரித்துச் சமமாகப் பரப்பிவிட வேண்டும். நான்கு கற்றைகளின் தடித்த பாகம் ஒரே புறத்தில் அமைய வேண்டும். இரண்டாவதாக, அடுத்த நான்கு கற்றைகளை முதலில் போட்ட நான்கு கற்றைகளுக்கு எதிர்ப்புறமாகப் போடவேண்டும். இந்த எட்டுக் கற்றைகள் சேர்ந்தது ஓர் அடுக்காகும்.

4. காளான் வித்துக்களைக் கொண்ட இரண்டு புட்டிகள் ஓர் படுக்கைக்குத் தேவை. பின்பு, இப்புட்டிகளை உடைத்து, வித்துக்களைக் கண்ணாடித் துண்டுகளிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும். இவ்வித்துக்களை 1 அல்லது 1.5 அங்குல தடிப்புள்ள துண்டுகளாக்க வேண்டும். இத்துண்டுகளை, படுக்கையின் முதல் அடுக்கின் எல்லா விளிம்புகளினின்றும் 5 செண்டிமீட்டர் இடைவெளி விட்டு, 10 செண்டி மீட்டர் இடைவெளியில் வரிசையாக வைக்க வேண்டும். பின்னர் சிறு குறுணைகளாக அரைக்கப்பட்ட துவரை அல்லது கொள்ளு ரவைகளைக் காளான் வித்துக்களின் மேல் தூவ வேண்டும். ஓர் அடுக்கிற்கு 50 கிராம் துவரை அல்லது கொள்ளு ரவை தேவை.

5. முதலில் போட்ட அடுக்கிற்குக் குறுக்கே இரண்டாவது அடுக்கைப் போட வேண்டும். பின்னர், விளிம்புகளில் முன் கூறின இடைவெளிகளில், காளான் விதைத் துண்டுகளை வைத்து துவரை அல்லது கொள்ளு ரவையைத் தூவ வேண்டும்.

6. பின்னர், மூன்றாவது அடுக்கை, இரண்டாவது அடுக்கிற்குக் குறுக்காகவும், முதல் அடுக்கிற்கு இணையாகவும் வைக்க வேண்டும். மூன்றாவது அடுக்கின் விளிம்புகளின் மீது காளான் விதைத் துண்டுகளை முன் கூறின இடைவெளிகளில் வைத்து துவரை அல்லது கொள்ளு ரவையைத் தூவ வேண்டும்.

7. இறுதியாக, நான்காவது அடுக்கை மூன்றாவது அடுக்கிற்குக் குறுக்கே போட வேண்டும். நன்றாக இறுகி இருக்கும்பொருட்டு ஓர் மரப் பலகையைக் கொண்டு காளான் படுக்கையை நன்றாக அழுத்த வேண்டும். பின்பு, நிறமற்ற பாலிதீன் பாயினால் நன்றாக மூடிவிட வேண்டும்.

8. காளான் உற்பத்தி குறைவதும், அதிகமாவதும் நிலவும் உஷ்ணநிலையையும், படுக்கையின் ஈரத்தையும் பொறுத்தது. காளான் வித்துக்களை விதைத்த பின், நான்காவது, எட்டாவது, பன்னிரெண்டாவது நாட்களில் முறையே 8, 6, 4 லிட்டர் தண்ணீரை ஊற்றலாம். காளான் படுக்கை அதிக ஈரமாகவோ அல்லது காய்ந்தோ இருத்தல் கூடாது.

வித்துக்களை விதைத்த ஆறாவது நாளில் சிறிய வெண்மையான தலைகள் வெளிப்படுகின்றன. பின்பு இவைகள் 3 முதல் 4 நாட்களில் வளர்ந்து உறைகளால் மூடிய பொத்தான்கள் போன்று காணப்படுகின்றன. இக்காளான் வளர, வளர, இவ்வுறை கிழிந்து காளான் தண்டின் அடியைச் சுற்றி ஓர் கோப்பை போன்றிருக்கும். இந்த நிலையிலுள்ள காளானை உபயோகித்தால் அதிக ருசியாக இருக்கும். சாதாரணமாக இந்த நிலையில் தான் காளானைப் படுக்கையிலிருந்து எடுத்து உபயோகிப்பர். காளான் இந்த நிலையை அடைய சுமார் 13 முதல் 15 நாட்கள் ஆகும். காளான் உற்பத்தி 4 அல்லது 5 நாட்கள் நீடிக்கும். மீண்டும் ஒரு வார இடைவெளிக்குப் பின் 2 முதல் 4 நாட்கள் வரை காளான்கள் வெளிவரும். ஒரு காளான் படுக்கையிலிருந்து 3 முதல் 4 கிலோ காளான்கள் கிடைக்கும்.





**காளானைப் பதப்படுத்தும் முறை**

காளானை டப்பாக்களில் உப்பிட்டும், உலர்ந்த நிலையிலும் பதப்படுத்தலாம். டப்பாக்களிலுள்ள காளானை உப்புத் தண்ணீரை வடித்துவிட்டு உபயோகிக்கலாம். உலர்ந்த காளானை உபயோகிக்கும் முன் கொதிக்கும் நீரில் 4 முதல் 5 நிமிடங்கள் வரை போட வேண்டும்.

**காளானை டப்பாக்களில் உப்பிட்டு பதப்படுத்தும் முறை**

காளானைத் தேவையான அளவுள்ளதாக அறுக்க வேண்டும். பின்பு நீரில் நன்றாகக் கழுவி, கொதிக்கும் நீரில் 4 முதல் 5 நிமிடங்கள் போட்டு உடனே குளிர்ந்த நீரில் இவைகளைப் போட வேண்டும். நன்றாகச் சுத்தம் செய்த டப்பாக்களில் இக்காளானை நிரப்ப வேண்டும். இரண்டு சதவிகித உப்புக் கலந்த சூடான நீரை ஊற்றி இந்த டப்பாக்களிலிருந்து காற்றை அகற்றி, இறுக மூடி, பத்து பவுண்டு அழுத்தத்தில் 40 நிமிடங்கள் வைக்க வேண்டும். அடுத்தபடியாக, இந்த டப்பாக்களை உடனே குளிர்ந்த நீரில் வைக்க வேண்டும். டப்பாக்களிலுள்ள காளானை உப்புத் தண்ணீரை வடித்துவிட்டு உபயோகிக்கலாம்.

**காளானை உலர வைக்கும் முறை**

தேவையான அளவுள்ளதாக வெட்டின காளானை நீரில் நன்றாகக் கழுவி சூரிய வெப்பத்தில் உலர வைக்க வேண்டும். அல்லது 60 டிகிரி முதல் 65 டிகிரி செண்டிகிரேட் வரை உஷ்ண நிலையைக் கட்டுப்படுத்தும் பெட்டிகளில் தட்டுக்களில் வைத்து உலர வைக்க வேண்டும். நன்றாக உலர்ந்த காளானை பாலிதீன் பைகளிலோ அல்லது அலுமினியப் பைகளிலோ வைக்க வேண்டும். உலர்ந்த காளானை நன்றாகப் பொடி செய்து புட்டிகளிலும், அலுமினியப் பைகளிலும், பாலிதீன் பைகளிலும் போடலாம்.

இவ்வாறு பதப்படுத்தின காளானை சூப்புகளிலும், ஆம்லெட்டுகளிலும், காய்கறிகளிலும் சேர்க்கலாம்.





உலர்ந்த காளானை உபயோகிக்கும் முன் கொதிக்கும் நீரில் 4 முதல் 5 நிமிடங்கள் வரை போட வேண்டும்.

**காளானைச் சமைக்கும் விதம்**

காளானைக் கொண்டு சுவையுடன் கூடிய பலவித பதார்த்தங்களைச் செய்யலாம். காய் கறியாகவும் உபயோகிக்கலாம். இதனை மரக் கறி உண்பவர்களின் இறைச்சியாகக் கருதப் படுகிறது. இதனுடைய சுவையும், வாசனையும் கோழி இறைச்சிக்குச் சமானமாகும். காளானைப் பறித்த நாளே உபயோகிக்க முடியாவிடின் சூடான காடி (Vinegar) அல்லது புளிச் சாற்றை இதன் மேல் ஊற்றவேண்டும். இவ்வாறு செய்தால் காளான் கெடாமல் இருக்கும்.

**காளான் கறி (Mushroom Curry).**

காளான் தலையையும், தண்டையும் தனி யாகக் கிள்ளி நீரில் சுத்தம் செய்யவும். பின்பு இதனை நீரில்லாமல் தனியாக எடுத்து வைக் கவும். ஒரு வாணலியில் வெண்ணெய் அல்லது எண்ணெய் விட்டு சூடாக்கவும். இதில் பெருஞ் சீரகப் பொடியை இடவும். மலைவெங்காயத் தை சிறிய துண்டுகளாக நறுக்கி இதில் வறுக் கவும். சுத்தமாக்கின காளான் தலைகளையும் தண்டுகளையும் தேவைக்குத் தக்க உப்பு, குறு மிளகுத் தூளுடன் கலந்து இதில் வதக்கவும். ஒன்று அல்லது இரண்டு தக்காளியைச் சிறு துண்டுகளாக நறுக்கி, இதனுடன் வதக்கலாம். இவ்வாறு வதக்கிய காளானைச் சாதத்துடன் கறியாக உண்ணலாம்.

**வாட்டிய காளான் (Baked Mushroom).**

காளான் தலை அல்லது குடைகளைக் கிள்ளி சுத்தமாகத் துடைக்கவும். பின்பு ரொட்டிப் பொடியில் தொட்டு ஒரு பாத்திரத்திலுள்ள வெண்ணெயில் இடவும். சுவைக்குத் தக்கபடி உப்பும், குறுமிளகுத் தூளும் இதில் இடவும். இவ்விதமாகப் பல காளான் தலைகளை ஒன்றின் மேல் ஒன்றாக இப்பாத்திரத்தில் அடுக்கி வைக்கவும். பின்பு இப்பாத்திரத்தை இறுக

மூடி, 'ஒவன்' என்று கூறும் அடுப்பில் மிதமான உஷ்ணத்தில் 20 முதல் 30 நிமிடங்கள் வரை வாட்ட வேண்டும். இவ்வாறு வாட்டிய காளானை ரொட்டியுடன் சேர்த்து உண்ணவும்.

### வறுத்த காளான் (Fried Mushroom).

ஒரு முட்டையின் மஞ்சளை ஒரு தேக்கரண்டி தண்ணீருடன் கலந்து நன்ருக அடிக்கவும். தேவைக்குத் தக்க உப்பையும் குறு மிளகுத் தூளையும் சேர்க்கவும். பின்பு சுத்தம் செய்த காளான் தலையை இதில் முக்கி, ரொட்டிப் பொடியில் தொட்டு ஒரு வாணலியில் வெண்ணெயில் அல்லது எண்ணெயில் ஒவ்வொரு பக்கத்தையும் ஐந்து நிமிடங்கள் வறுக்கவும்.

காளானை இன்னெரு விதமாகவும் வறுக்கலாம். ஒரு ரொட்டித் துண்டில் வெண்ணெயைத் தடவவும். இதை ஓர் பாத்திரத்தில் வைக்கவும். பின்பு தோல் நீக்கிய தக்காளியை மெல்லிய துண்டாக அறுத்து இந்த ரொட்டித் துண்டின் மேல் வைக்கவும். தேவைக்குத் தக்க உப்பு, குறு மிளகுத் தூளைத் தூவவும். பின்பு நன்ருக சுத்தம் செய்த காளான் தலையை, தலையின் மேற்புறம் தக்காளித் துண்டின் மேல் வைத்து சிறிதளவு வெண்ணெயைக் காளானின் மையத்தில் வைக்கவும். தேவைக்குரிய உப்பையும் குறு மிளகுத் தூளையும் தூவவும். பின்பு பாத்திரத்தை இறுக மூடி, 'ஒவன்' (Oven) என்று கூறும் அடுப்பில் இப்பாத்திரத்தைப் பத்து நிமிடங்கள் வைக்கவும். பின்னர், மூடியை நீக்கி விட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை இந்த அடுப்பில் வைக்கவும்.



### காளான் சாதம் (Mushroom Rice).

ஒரு மலைவெங்காயத்தை சிறிய துண்டுகளாக நறுக்கி, ஓர் வாணலியில் இரண்டு தேக்கரண்டி எண்ணெய் விட்டு வறுக்கவும். நான்கு அவுன்ஸ் காளானை நீரில் நன்ருகக் கழுவி, தேவைக்குத் தக்க துண்டுகளாக நறுக்கி, உப்பு, குறுமிளகுத் தூளுடன் கலந்து வாணலியில் வெங்காயத்துடன் நீர் சுண்ட வதக்கவும். இவ்வாறு வதக்கிய காளானை நான்கு அவுன்ஸ் சாதத்துடன் நன்ருகக் கலந்து உண்ணவும்.

### ரொட்டித் துண்டுகளில் வைக்கும் காளான் (Sandwich)

காளானை நன்ருக நீரில் சுத்தம் செய்து தேவைக்குத் தக்க துண்டுகளாக நறுக்கவும். ஓர் மலை வெங்காயத்தை சிறிய துண்டுகளாக நறுக்கி வாணலியில் நெய்யில் வறுக்கவும். பின்பு ஓர் பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீர் விட்டு, இரண்டு தக்காளிகளைச் சிறியதாக அறுத்துப் போடவும். இதனுடன் உப்பு, குறுமிளகுத் தூள், கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை, சிறிதளவு எலுமிச்சம் பழரசம் சேர்க்கவும். வறுத்த வெங்காயத்தையும் காளானையும் இதில் போட்டு நீர் வற்றும் வரை நெய்யில் வறுக்கவும். இவ்வாறு சமைத்த காளானை இரண்டு ரொட்டித் துண்டுகளின் நடுவில் வைத்து நெய்யில் வறுக்கவும்.

### சுவையுள்ள சூப் (Delicious Soup).

நூறு கிராம் காளானை நீரில் நன்ருகக் கழுவவும். பின்பு தலைகளை நெய்யில் வதக்கவும். தண்டை நன்ருக அரைக்கவும். அரைத்த காளான் தண்டையும், நெய்யில் வதக்கிய காளான் தலைகளையும் சுமார் ஒரு லிட்டர் பாலுடன் கலந்து, வெங்காயம், உப்பு, குறு மிளகுத் தூள், கொத்தமல்லித் தழை இவைகளுடன் சேர்த்து நிதானமாகக் கொதிக்க வைக்கவும். சூப்பைக் கெட்டியாக்க வேண்டுமாளுல் கொதிக்க வைக்கும் முன் ஒரு தேக்கரண்டி கோதுமை மாவையோ அல்லது சோள மாவையோ சேர்க்கலாம். சிலர் இந்த சூப்புடன் ஒரு கோப்பை கோழி சூப்பையும் சேர்த்து அருந்துவர்.

### மிளகாயும், காளானும்

மிளகாயை காம்பு உள்ள இடத்தில் பிளந்து விதைகளை நீக்கவும். காளானை நன்ருக நீரில் கழுவி தேவைக்குத் தக்க அளவுள்ள துண்டுகளாக நறுக்கவும். இதனுடன் உப்பு, குறுமிளகுத் தூளைக் கலக்கவும். இவ்வாறு கலந்த காளானை பிளந்த மிளகாயினுள் நன்ருக நிரப்பவும். இப்படி காளானை பல மிளகாய்களில் நிரப்ப வேண்டும். காளான்களை நிரப்பிய மிளகாய்களை ஓர் பாத்திரத்தில் வெண்ணெயில் இட்டு 'ஒவன்' (Oven) என்று கூறும் அடுப்பில் 10 முதல் 15 நிமிடங்கள் வரை வதக்கவும். இவ்வாறு வதக்கிய மிளகாயுடன் சமைத்த கோழிக் கறியைச் சேர்த்து சிலர் உண்பர்.

### ஆம்லெட்

ஆறு முட்டைகளை நன்ருக அடிக்கவும். பின்பு இதனுடன் உப்பையும் குறுமிளகுத் தூளையும் சேர்த்து வெண்ணெயில் ஆம்லெட் செய்யவும். உடனே சமைத்த காளான் கறியை ஆம்லெட்டுடன் கலந்து, மடக்கி, உண்ணவும்.

### காளான் ஊறுகாய் (Mushroom Pickles)

காளான்களை நன்ருக சுத்தம் செய்து ஜாடியில் போடவும். பின்பு சூடாக்கிய காடியை (Vinegar) பொடி செய்த உப்பு, மிளகாய், வெந்தயம், கடுகு, பெருங்காயம் முதலியவைகளுடன் கலந்து இந்த ஜாடியில் ஊற்றவும். இவ்வாறு தயாரித்த காளானை இரண்டு வாரங்களுக்குப் பின் உபயோகிக்கலாம்.

தகவல் : திருமதி கௌசல்யா கங்காதரன், உதவிப் பேராசிரியர், தாவர நோய் இயல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை—3.

தொகுப்பு : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை—3.



# இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் இணையற்ற பணிகள் !



இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 57 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. அது அப்போது போரால் பாதிக்கப்பட்டவரின் நலத்தைக் கவனிக்கும் பணியை மட்டும் செய்து வந்தது. ஆளுல் இப்போது சமாதானக் காலத்திலும், மனித சமுதாயத்தின் துயர் துடைப்பதிலும், இயற்கையின் சீற்றங்களால் அல்லற்படுபவர்களுக்கு ஆறுதல் அளிப்பதிலும், இந்தச் சங்கம் ஈடுபட்டுவருகிறது. பொது சுகாதாரத் துறை இரத்த சேமிப்பு நிலையங்களை அமைப்பது சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்துவது ஆகிய வேலைகளிலும் இச்சங்கம் ஈடுபட்டிருக்கிறது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆசியாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்களின் மாநாட்டை, இந்தியாவில் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இயற்கையின் சீற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க முன்கூட்டியே எச்சரிக்கையாக தயாராக இருக்க வேண்டுமென்று இச்சங்கம் விரும்புகிறது, இதற்கென ஆசியாவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் ஒரு கருத்தரங்கை நடத்துகின்றன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 1920-ல் ஏற்பட்டது. அதை நிறுவுவதற்கு வழி செய்யும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைக் குடும்பத்தில், இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஒரு சுயேச்சையான ஸ்தாபனம் ஆகும். ''சுகாதார மேம்பாடு'', ''நோய்களைத் தடுப்பது'', ''துயரத்தைக் குறைப்பது'', இவைகளே இச்சங்கத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

பூகோள அல்லது அரசியல் அடிப்படையிலோ இச்சங்கத்தின் பணிகளுக்கு எவ்வித எல்லையும் இல்லை. ஜாதி மத மாறுபாடின்றி மனித சமுதாயம் முழுவதற்கும் இது தொண்டு செய்கிறது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தொண்டு மனப்பான்மை கொண்டவர்களையும் தாங்களாகவே முன் வந்து பொது மக்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் பணி புரிபவர்களையும் உள்ளடக்கிய ஒரு சுயசேவை நிறுவனமாகும். ஒரு கோடியே 50 இலட்சம் பேர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

1974-ல் இந்தியாவின் பல பகுதிகளில் வெள்ளமும், பஞ்சமும் மக்களை வாட்டியது. அப்போது மொத்தம் 57 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பால் பவுடர், குழந்தைகளுக்கான பிஸ் கட்டுகள், துணிகள், போர்வைகள், மருந்துகள் ஆகிய வற்றை இந்தச் சங்கம் வழங்கியது. 265 இடங்களில் பால் வழங்கும் கேந்திரங்களையும், 68 இடங்களில் மருத்துவ உதவிக் குழுக்களையும் இச்சங்கம் ஏற்பாடு செய்தது.

குஷ்டரோக நிலையங்களுக்கும் இலவச மருத்துவ மனைகளுக்கும், இச்சங்கம் மருந்துகளையும், துணிகளையும், உணவுப் பொருட்களையும் வழங்குகிறது.

சமீபத்தில் கும்பமேளாவில் கூடிய இலட்சக்கணக்கான மக்களுக்கென இந்தச் சங்கம் ஆங்காங்கே மருத்துவமனைகளையும், நடமாடும் மருத்துவ நிலையங்களையும், முதல் உதவி நிலையங்களையும், 'ஆம்புலன்ஸ்' நிலையங்களையும் அமைத்தது.

இச்சங்கத்தால் வெளிநாடுகள் சிலவற்றிற்கும் 1974-75-ல் பல உதவிகள் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு 20 இலட்சம் ரூபாய்.

போர்ப்படையினர், படையில் பணிபுரியும் போதும் அதன் பிறகும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் உதவி பெறுகின்றனர். நோய்வாய்ப்பட்ட போதும், காயமடைந்தபோதும் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதையே இந்தச் சங்கம் தன்னுடைய முக்கியமான கடமையாகக் கொ.ண்டிருக்கிறது. பெங்களூரில், இதற்காக ஒரு இல்லம் நடத்தப்படுகிறது. உடல் ஊனமுற்ற படைவீரர்களுக்கு இங்குசிகிச்சை அளிக்கப்படுகிறது.

குறிப்பாக, மாணவர்களிடமிருந்து இரத்தம் திரட்டி, செலவில்லாமல் சுத்தமான இரத்தம் கிடைக்க இச்சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இச்சங்கம் செவிலியர்களுக்கும் பயிற்சி கொடுக்கிறது. செவிலியர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவிச் சம்பளத்தையும் இச்சங்கம் வழங்கி வருகிறது. அவர்களில் சிலரை வெளிநாடுகளுக்கு மேற்படிப்புக்கு அனுப்புகிறது.

நாடெங்கும் 25 மருத்துவமனைகள் உட்பட 500 தாய்-சேய் நல விடுதிகளுடன் தொடர்பு கொண்டு இச்சங்கம் பணியாற்றுகிறது.

மனித சமுதாயத்தின் நன்மைக்காகவும், சுகாதார மேம்பாட்டுக்காகவும், பாடுபட்டு வரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி ஆண்டு தோறும் பெருகி வருகிறது.



# ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை வெற்றிநடை போடுகிறது!




அரசுத்துறை நிறுவனங்களிலேயே அதிகமான நஷ்டத்தைக் காட்டும் நிறுவனம் என்ற பெயரை இதுவரை உதக மண்டலத்திலுள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை தாங்கி நின்றது. அந்த நிலை மாறி இப்போது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக அது விளங்குகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட்ட வெளிநாட்டு நிபுணர்கள் கோடிக்கணக்கில் செலவிட்டு புதிய கருவிகள் வாங்க வேண்டும் என்றும், புதிய உத்திகளைக் கையாள வேண்டும் என்றும், அப்படிச் செய்யாத வரை இத்தொழிற்சாலை உருப்படாது என்றும் கூறினார்கள். அந்தக் கருத்தைக் கேட்டு நிர்வாகிகள் அச்சப்படவில்லை. அந்த நிபுணர்களின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளவும் இல்லை. முன்பு தங்களிடம் இருந்த சாதனங்களை வைத்துக் கொண்டே நான்கு ஆண்டுகளுக்குள் நிலைமையை அடியோடு மாற்றி விட்டார்கள்.

உலகத்தில் சில நிறுவனங்களில் மட்டும் தான் போட்டோ பிலிம்கள், சினிமா பிலிம், எக்ஸ்ரே பிலிம் ஆகிய மூன்றையும் கச்சாப் பொருள் முதல் விற்பனைப் பொருளாகும் வரை தயார் செய்கிறார்கள். 'ஆக்பா', 'கோடக்' 'ஆர்வோ', 'பூஜி', ஆகியவற்றோடு சேர்ந்து ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் உலகத்திலுள்ள 5 பெரும் தொழில் நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது.

1974 முதல் நம் நாட்டுக்குத் தேவையான வெள்ளை, கறுப்பு, பிலிம்களையும் சினிமாவில் ஒலிப் பதிவு செய்வதற்கான நெகட்டிவ்களையும், 1975 முதல் கலர் பிலிம் நெகட்டிவ்களையும், இந்தியாவிலுள்ள எல்லா மருத்துவமனைகளுக்கும் தேவைப்படும் எக்ஸ்ரே பிலிம்களையும் தயாரித்து வருகிறது.



இந்துஸ்தான் புகைப்பட பிலிம் தொழிற்சாலையில், பிலிம்களுக்கு அடிப்படைப் பூச்சு வேலை நடைபெறும் பகுதி (Base Coating Section).

எக்ஸ்ரே பிலிம்களின் தரம் வெளிநாட்டுப் பொருட்களின் தரத்தைவிடச் சிறந்ததாக இருக்கிறது. 'புரோமைடு பேப்பரை ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்தைப்போல இவ்வளவு அதிகமாகவோ சிறந்த தரமுடையதாகவோ உலகத்தில் வேறு எந்த நிறுவனமும் தயாரிக்கவில்லை.

இந்து எக்ஸ்ரே பிலிம்கள் ஐந்து கோடி நோயாளிகளுக்கு இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வெள்ளை, கறுப்பு பிலிமை உபயோகித்து 1,223 திரைப்படங்கள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. 1973 முதல் 1977 வரை இந்தத் தொழிற்சாலையைப் பற்றிய முக்கியமான புள்ளி விவரங்கள் வருமாறு:

| | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 |
|---|---|---|---|---|---|
| வியாபாரம் (கோடி ரூபாய்) | 5.29 | 7.83 | 13.93 | 22.27 | 31.00 |
| உற்பத்தி (இலட்சம் சதுர மீட்டர்) | 29.3 | 35.3 | 47.1 | 70.1 | 90.1 |
| உற்பத்தி (கோடி ரூபாய்) | 5.66 | 6.98 | 13.81 | 23.04 | 32.00 |

ஒவ்வொரு தொழிலாளியும் இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவதால் சராசரி ஒரு தொழிலாளியின் வருவாய் ஈவுக்கு ஏற்பட்ட நான்கு ஆண்டுக்கு முன் 38,000 ரூபாயாக இருந்து 1977-ல் ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் ரூபாயாக அதிகரித்து இருக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டு இத்தொழிற்சாலை அந்தத் துறையிலும் வெற்றியடைந்திருக்கிறது.

தொழில் துறைகளுக்கு வேண்டிய எக்ஸ்ரே பிலிம்களும் அடுத்த சில மாதங்களில் தயாராகிவிடும். மேலும் இரசாயனப் பொருட்கள்



உலகத்திலுள்ள 5 பெரும் புகைப்பட பிலிம் உற்பத்தி தொழில் நிறுவனங்களில் ஒன்ருன இந்துஸ்தான் புகைப்பட பிலிம் தொழிற்சாலேயில், புகைப்பட பிலிம்களுக்கு மேல் பூச்சுப் பணி நடைபெறும் பகுதி (Coating Section).

சிலவற்றை மாற்றி அமைக்கும் இயந்திரங்களே இந்தத் தொழிற்சாலே தென்கிழக்கு ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் உள்ள சில நாடுகளில் தொடங்கும்.

சென்ற ஆண்டில் மட்டும் குறிப்பிட்ட சில பிலிம் வகைகளும், பொருட்களும் ஒரு கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியாகின. போட்டோப் பொருள் உற்பத்தி செய்வதில் சிறந்து விளங்கும் கிழக்கு ஜெர்மனியிலிருந்து 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 50 டன் நைட்ரேட் உப்புத் தடவிய வெள்ளியை வாங்க ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டில் ஏற்றுமதி 10 கோடி ரூபாயைத்தாண்டி விடும்.

1980-ம் ஆண்டு அளவில் கலர் பிலிம்களும் உதகமண்டலத்திலேயே தயாரிக்கப்படும். அதன் பிறகு இந்தத் தொழிற்சாலேயின் ஏற்றுமதி 100 கோடி ரூபாயைத் தாண்டி விடுவது உறுதி.



# தேசீய கடற்பயண நாள்

வாணிகக் கப்பல்களின் முக்கியத்துவத்தையும், தேச முன்னேற்றத்தில் அக்கப்பல்களின் பங்கையும் பொது மக்களுக்கு எடுத்துக் கூறிடும் வகையில் 1977, ஏப்ரல் 5ஆம் தேதியன்று நாடு முழுவதும் 14-வது தேசீய கடற்பயண நாள் கொண்டாடப்பட்டது.

இந்த நாள் வாணிகக் கடற்படைக் கொடி நாளாகவும் கொண்டாடப்பட்டது. வாணிகக் கடற்படை கொடிகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அப்படி விநியோகிப்பதன் மூலம் பெறப்பட்ட வசூல் தொகை மாலுமிகளின் நலத்துக்கென தனியாகச் செலவிடப்படவிருக்கிறது.

1977, ஏப்ரல் 5-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை யன்று சென்னேயிலுள்ள கடற்பயணிகள் சங்கத்தில் வாணிகக் கடற்படைக் கொடி ஏற்றும் நிகழ்ச்சியுடன் காலே 8 மணிக்கு விழா துவங்கியது. ஆந்திரா, தமிழ் நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய பகுதிகளின் 'ஜெனரல் ஆபீசர் கமாண்டிங்,' மேஜர் ஜெனரல் ஷொபக் சிங் கொடி யேற்றி வைத்தார். இசை, நடனம், 'மாஜிக் ஷோ' போன்ற கலே நிகழ்ச்சிகளுடன் மாலே 6.30 மணிக்கு விழா முடிந்தது.

## மாலுமிகளின் நலன்

1958-ஆம் ஆண்டு வாணிகக் கப்பல்கள் சட்டம், தேசீய கப்பல்கள் வாரியம், கப்பல் பயணிகளுக்கான தேசீய நல வாரியம், கப்பல்கள் அபிவிருத்தி நிதி ஆகியவற்றை அமைத்துக் கொள்வதற்கு வகை செய்கிறது.

இந்தியக் கப்பல் வளர்ச்சிச் சம்பந்தமாக, இந்தியக் கப்பல்கள் மூலமாகவே நம்முடைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றின் பெரும்பகுதி கையாளப்பட வேண்டும் என்ற நம்முடைய இலக்கை அடைவதற்கான கொள்கையைத் தேசீய கப்பல்கள் வாரியம் வகுத்தது. சர்வதேச வர்த்தகத்தில் போட்டியிடும் வகையில் கப்பல்களேப் பெறுவதற்கு இந்தியக் கப்பல் உரிமையாளர்களுக்கு கப்பல்கள் அபிவிருத்தி நிதி கமிட்டியின் மூலம் தாராளமாகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தியச் சரக்குகளின் ஏற்றுமதி துரித வளர்ச்சி அடைவதற்கு இவ்வாறு தாராளமாகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1947-ஆம் ஆண்டு முதல் இந்தியக் கப்பல்கள் கணிசமான, குறிப்பிடும் அளவுக்குச் சரக்குகளேக் கையாண்டுள்ளன.

கப்பல் பயணிகளுக்கான தேசீய நல வாரியம், இலவச மருத்துவ வசதிகள் உட்பட இந்திய மாலுமிகளுக்குப்பல்வேறு வசதிகளே அளிக்கின்றன. மிகவும் குறைந்த கட்டணத்தில் இந்தியத் துறைமுகங்கள் அனேத்திலும் சங்கம் விடுதி இடவசதியும் அளிக்கப்படுகின்றன. வைப்பு நிதி மற்றும் 'கிராஜுவிடி' வடிவில் சமூகப் பாதுகாப்பும் மாலுமிகளுக்கு அளிக்கப்படுகிறது. பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னேத் துறைமுகங்களிலிருந்து எண்ணற்ற இந்திய மாலுமிகளே வெளிநாட்டு கப்பல் கம்பெனிகள் வேலேக்கு அமர்த்திக் கொள்வதும் குறிப்பிடத் தக்கது ஆகும்.



வெளிநாடு செல்லும் மற்றும் உள்நாட்டு வர்த்தகக் கப்பல்களில் பல்வேறு அந்தஸ்தில் திறமைக்கான நற்சான்றிதழ்கள் வழங்குவதற்கென பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் நீண்ட காலத்திற்கு முன்பாகவே தேர்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1976, ஜுலை மாதத்தில் சென்னையிலும் தேர்வு நிலையம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இங்கு கப்பல் தலைவர்களுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**வாணிகக் கடற்படைக்கான பயிற்சி வசதிகள்**

வாணிகக் கடற்படையில் பல்வேறு மட்டங்களில் சேர்வதற்கு இந்திய அரசாங்கத்தால் பயிற்சி வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

வாணிகக் கடற்படையில் அலுவலர் சேவைக்கென பம்பாயில் உள்ள பயிற்சிக் கப்பல் 'இராஜேந்திரா' இளம் சிறுவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. பம்பாய் கடற்கரையிலிருந்து 3 மைல் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது இப் பயிற்சிக் கப்பல். இக்கப்பல் மூலம் கப்பல் ஓட்டும் கலையில் பாட முறை மற்றும் செயல் முறை ஆகியவற்றில் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல், எலக்ட்ரானிக்ஸ், கப்பல் நிர்மாணம், பொறியியல், 'ஸிக்னலிங்,' வானிலை ஆராய்ச்சி ஆகிய பல துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இந்திய வாணிகக் கடற்படைக்கென கடற்படைப்பொறியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வரும் ஒரே நிலையம் கடற்படைப்பொறியியல் பயிற்சி இயக்குநர் அலுவலகம் ஆகும். கல்கத்தாவில் இதனுடைய தலைமையகமும், பம்பாயில் கிளை அலுவலகமும் உள்ளன.

இங்கு அளிக்கப்படும் பயிற்சி, தொழில் முனைப்பானது. நவீன கடற்படை தொழில் நுட்பத் தேவைகளைச் சமாளிக்கும் வகையில், எதிர்கால அபிவிருத்திகளை கவனத்தில் கொண்டு சீரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

'பத்ரா' (கல்கத்தா), 'மேகலா' (விசாகப்பட்டினம்), நல்லாக்ஷி' (நல்லாக்ஷி) ஆகிய 3 பயிற்சிக் கப்பல்களில் கடல் தொழிலில் விரிவான செயல் முறைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

போதுமான பாட முறை அறிவும், மீட்புப் பணி, முதல் சிகிச்சை ஆகியவையும் போதிக்கப்பட்டு வருகின்றன. திறமை, கட்டுப்பாடு, நன்னடத்தை ஆகியவற்றின் வளர்ச்சியிலும் முக்கியத்துவம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால் வாணிகக் கடற்படை நன்கு வளர்ந்து வருகிறது என்பது தெளிவாகிறது.



# நெற் பயிரின் நூற் புழுக்கள்

நெற் பயிரைத் தாக்கும் நூற் புழுக்களில் இரண்டு வகைகள் தமிழ்நாட்டில் அதிகமாக காணப் படுகின்றன. அவைகளாவன :

1. நெல் நுனி இலை நூற் புழு ('அபிலிங்காய்டிஸ் பெசியை')

2. நெல் வேரழுகல் நூற் புழு ('இர்ஷ்மானியெல்லா ஒரைசே')

இந்த நூற் புழு, விதை மூலம் பரவுகின்றது. இது நெல் உமியின் உட்புறத்தில் 'உறங்கும்' நிலையிலும் காணப்படும். நாற்றங்காலில் விதைத்தவுடன் உணர்வு பெற்று நாற்றுக்களின் மேல் ஊர்ந்து சென்று, வளரும் பாகங்களில், சாற்றை உறிஞ்சிச் சேதம் விளைவிக்கும். பின்பு இவை நெல் பூட்டைப் பருவத்தில் கதிர்களில் தோன்றி நெல் மணிகளைப் பாதிப்பதால் அவை பதராக மாறிவிடும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பதர் வெண்மை நிறமாகக் காணப்படும். இந் நூற் புழுவால் 40 முதல் 60 சதம் நெற்கதிர்கள் பாதிக்கப்படுகின்றன.



நெல் மணியில் நூற்புழு தாக்குதல்

**தடுப்பு முறை**

1. விதை நெல்லை 50—50 டிகிரி சென்டி கிரேட் வெப்ப நீரில் 10 முதல் 15 நிமிடம் வரை மூழ்க வைத்து விதைக்கலாம். இந்த அளவு வெப்பமுள்ள நீரைப் பெற ஒரு வாளி கொதிக்கும் நீரை அதே அளவுள்ள குளிர்ந்த நீரில் ஊற்றினால் நாம் பெற முடியும் (அல்லது)

2. பாரத்தியான் 0.025 சத விகிதம் (1 மில்லி மருந்தை 2 லிட்டர் நீரில்) அல்லது பெந்தியான் (லெபாசிட்) 0.1 சத (1 மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில்) நட்ட 30, 45 நாட்களில் எக்டேருக்கு 200 மில்லி அளவில் மருந்தைத் தெளிக்கவும்.

**நெல் வேர் நூற்புழு**

இந்த நூற்புழு பேரழுகல் நூற் புழுவாகும். இவை வேரினுள் நுழைந்து சாற்றை உறிஞ்சிப் பயிரைப் பாதிக்கின்றன. வேர்கள் செந்நிறமாக மாறி நாளடைவில் அழுகிக் கருமை நிறத்துடன் காணப்படும். இந் நூற்புழுவால சுமார் 40 சதவிகிதம் மகசூல் பாதிக்கப்படும்.

**தடுப்பு முறை**

1. கார்போஃபியூரான் (ஃபுரடான்)3 சதக் குருணையை எக்டேருக்கு 30 கிலோ அளவில் அல்லது,

2. 'போரேட்' (திமெட்) 10 சதக் குருணையை எக்டேருக்கு ஒரு கிலோ அளவில்,

நாற்றுக்கள் நட்ட 10 முதல் 15 நாட்களில் வயல்களில் தூவி, மூன்று நாட்கள் வரை தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டும்.

**தகவல் :**

**பூச்சி இயல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.**

# மாவட்டங்களின் மாறி வரும் தோற்றம்!

## திருச்சி மாவட்டம்

வறண்ட பகுதிகளைப் பாசனத்திற்குக் கொண்டு வரும் திட்டத்தின்கீழ், திருச்சி மாவட்டத்தில் 13 புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் 28 கோடியே, 38 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்காகத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த மார்ச் மாதம் 31-ஆம் தேதி வரை சுமார் 2,500 விவசாய பம்பு செட்டுகளும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து, இந்த ஆண்டு பிப்ரவரி முடிய இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் குறுகிய காலக் கடனாகவும், 29 இலட்சம் ரூபாய் மத்திய காலக் கடனாகவும் வழங்கியிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில், சென்ற ஆண்டு பிப்ரவரி முதல் அக்டோபர் வரை வழங்கியுள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திருச்சி ஜெயின் யுவக் சங்கத்தினர் பகவான் மகாவீரரின் 2575-ஆம் ஆண்டு விழாவைத் திருச்சி மத்திய சிறைச் சாலையில் இம்மாதம் இரண்டாம் தேதி சிறப்பாகக் கொண்டாடினர். திருச்சி மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு மதிய உணவும், வானொலிப் பெட்டியும் வழங்கினார்கள்.

திருச்சியையும், திருப்பதியையும் இணைக்கும் ஒரு புதிய விரைவு வண்டியை 1977, ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இரயில்வே நிர்வாகம் துவக்கியுள்ளது.

தென் இந்திய ரயில்வேயில் உள்ள பெரிய புகைவண்டி நிலையங்களில், நன்றாகப் பராமரிக்கப்படும் நிலையமாக 1976-77—ஆம் ஆண்டிற்குத் திருச்சிச் சந்திப்பு நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதற்கான கேடயமும், சிப்பந்திகளுக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் அளிக்கப்பட்டன.

## வடார்க்காடு மாவட்டம்

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அம்முண்டி கிராமத்தில், 6 கோடி ரூபாய் செலவில் கடந்த ஒரே ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுத் துவக்கி வைக்கப்பட்டு உள்ளது. இவ்வாலையில் கரும்பு வழங்குபவருக்கு டன் ஒன்றிற்கு 117 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அரசு நிர்ணயித்துள்ள 85 ரூபாயைவிட இது மிக அதிகமாகும்.

வேலூர் நகராட்சியின் குடி நீர் விரிவுத் திட்டத்தை ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் நெடுங்காலமாகச் சிறப்புடன் இயங்கி வரும் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தவிர, அரசுத் துறையைச் சார்ந்த 38 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 227 தாய்-சேய் நல நிலையங்களும், 16 மருத்துவமனைகளும் 52 கிராம மருத்துவ மனைகளும் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் சோளிங்கர், குடியாத்தம், திருவண்ணாமலை, போளூர், வாணியம்பாடி, வேலூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் கூடுதல் வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் நவரைப் பட்டத்தில் நெல் சாகுபடி சிறிதும் தட்டுப்பாடின்றி நிறைவேறியது. மேலும் நீர்நிலைகளில் தற்போதுள்ள தண்ணீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தினால், சொர்ணவாரிப் பட்டத்தில் சாகுபடிப் பரப்பு சுமார் 60 ஆயிரம் ஏக்கர்களை முழுவதுமாக அமோக விளைச்சலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வாழை பயிரிடும் திட்டத்தில், மாதிரி வயல்கள் அமைக்கப்பட்டதுடன், 820 ஏக்கரில் பச்சை வாழை ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு வாழை உற்பத்தி ஒரு இலட்சத்து 73 ஆயிரம் மெட்ரிக் டன் என்ற அளவை எட்டும்.

## தர்மபுரி மாவட்டம்

தர்மபுரி மாவட்டத்தில் தமிழ் நாடு பால்வள நிறுவனத்தார் 10 இலட்சம் ரூபாய் செலவில் பால் பதப்படுத்தும் நிலையம் ஒன்றைத் துவக்கியுள்ளனர். இதில்நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பால் பதப்படுத்தப்படும்.

## சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலை

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் விருத்தாசலத்தில் சுமார் ரூ. 45 இலட்சம் செலவில் சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலையை நிறுவியுள்ளது. இந்த ஆலையை அமைக்கத் தமிழ்நாடு அரசு 'தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய'த்துக்குத் தனது நல்லாதரவை அளித்து ஊக்குவித்துள்ளது. ஒரு நாளைக்கு 50 மெட்ரிக் டன் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களைப் பிழியும் திறன் கொண்ட இவ்வாலை மணிலா, எள், கொப்பரைத் தேங்காய் முதலிய எண்ணெய் வித்துக்களைப் பிழியும் அமைப்பையும் உள்ளடக்கியதாகும். தற்பொழுது சூரியகாந்தி வித்துக்களைத் தவிர மணிலா வித்துக்களையும் பிழியும் உரிமம் மத்திய அரசால் இவ்வாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"

பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விட்டவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!





தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
... தோட்டம் சென்னை-600002.



# தமிழரசு



# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"




# தமிழரசு

மலர் : 7 இதழ் : 21

1—5—1977


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்துவோம்! —பிரதமர் உரை | 2 |
| மக்களின் முதல் தொண்டனுகப் பணி புரிவேன்! —ஆளுநர் உரை | 6 |
| உணவாய் — மருந்தாய் உதவிடும் பதநீர்! | 9 |
| இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி | 13 |
| சுற்றுலாக் கொள்கையின் புதிய கண்ணேட்டம் | 17 |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் | 18 |
| வீட்டுக்கொரு இயங்கு எரிவாயு சாதனம் அவசியம் | 19 |
| படமும் செய்தியும் | 22 |
| மஞ்சளோ மஞ்சள்! | 32 |
| தமிழ்நாடு சமூகநலக் குழுவின் சீரிய பணிகள் | 33 |
| 'பாலாகார்' | 37 |
| கொள்ளை இலாப நோக்கு சமூக விரோதப் போக்கு! | 42 |
| உயர் விளைச்சல் நெல் சாகுபடியில் புதிய விஞ்ஞான முறைகள் | 44 |
| முந்திரியைத் தாக்கும் கொடிய நோயும் பூச்சிகளும் | 46 |
| குறைந்த செலவில் சிறந்த தீவனங்கள்! | 47 |



கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.




## அடுத்த இதழ்

நாவல் இலக்கியத்தின் முடிசூடா மன்னர் சரத் சந்திரரின் நூற்றாண்டு விழாவையொட்டி, சரத் சந்திரர் சிறப்பிதழாக வெளி வருகிறது. சரத் சந்திரரின் நாவல் ஒன்றும் சுருக்கமாக வெளி வருகிறது.

# திருப்திப்படுத்தும் வகையில் திட்டமிட்டுச் செயல் படுத்துவோம்!

"நண்பர்களே, இந்த நாட்டில் திட்டமிடும் முறையை ஜவஹர்லால் நேரு துவக்கி வைத்தது இந்த நாட்டின் சேவைக்கான பெரும் பணி. ஆனால் இங்குத் துவக்கப்பட்ட திட்டமிடும்முறை அது என்ன சாதித்திருக்க வேண்டுமோ, அதனைச் சாதிக்கவில்லை. **திட்டமிடுதல் சிறந்ததுதான். ஆனால் திட்டமிடுதல் தடம் புரண்டு போனால் அது நல்லதை விடக் கெட்டதையே அதிகம் விளைவிக்கிறது.** எனது சகா (திரு சரண் சிங்) அவரது விளக்கத்தின்படி வைதீகமில்லாத கருத்துக்களை உங்கள் முன் வைத்தார். ஆனால் அந்தக் கருத்துக்கள் வைதீக மற்றவைகளாக ஆகிவிட்டன. ஏனென்றால் தவறான விஷயங்கள் வைதீகமாகிவிட்டன. நல்ல விஷயங்கள் வைதீக மற்றவைகளாக ஆகிவிட்டன. அவரது கருத்தை நானும் கணிசமான அளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை உங்கள் முன்னால் வைத்ததன்மூலம் எனது பணியைக் குறைத்தமைக்காக நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இதனால் அவர் கூறிய அதே விஷயங்களை நான் மறுபடியும் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் எந்த ஒரு முன்னேற்றமும் அடையவில்லை என்று என்னால் கூற முடியாது. நாம் சுதந்தரம் பெற்றபோது ஓர் ஊசியைக் கூட இந்த நாட்டில் நாம் தயாரிக்கவில்லை. நூல் நூற்கும் சக்கரத்தின் ஆணியைக் கூட நாம் இறக்குமதி செய்ய வேண்டியதிருந்தது. அந்த நிலைமை மாறிவிட்டது. எஃகு, அலுமினியம் அல்லது ரயில்வே அல்லது சர்க்கரை ஆலைக்கான யந்திரங்கள் அல்லது மின்சார யந்திரங்கள் ஆகியவற்றுக்கான சாதனங்களை நாம் உற்பத்தி செய்வது மட்டுமின்றி எஃகு ஆலைகளையும் கூட நம்மால் தற்போது நிர்மாணிக்க முடியும். கனரக யந்திரத் தொழிலில் இந்த முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் கூட இன்றைக்கு நமக்குள்ள அதிருப்தி நாம் சுதந்தரம் பெற்றபோது இருந்த அதிருப்தியைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கிறது. சில பிரிவு மக்களிடையே செழிப்பு அதிகரித்திருந்தாலும் கூட, மேல் நிலையிலுள்ள மக்கள் அடைந்துள்ள முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் அந்தச் செழிப்புப் போதுமான அளவில் அல்லது உணரக்கூடிய அளவில் கூட அதிகரிக்கவில்லை. அந்த மக்களிடையே பெரும் ஏமாற்றம் நிலவுகிறது. ஏனென்றால் அவர்கள் எதிர்பார்த்தது எனது கருத்துப்படி அது அதிகமில்லை என்றாலும், நிறைவேறவில்லை.

**பிரதமர் உரை**

இந்த இடத்தில்தான், இந்த அதிருப்திகளைப் போக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதில் திட்டமிடுதல், வெற்றி பெறவில்லை. திருப்தி உணர்வை மட்டுமின்றி மிகுந்த நம்பிக்கையோடும் மிகுந்த திறமையோடும் நமது பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடிய வகையில், நம்பிக்கையையும், தைரியத்தையும் உருவாக்குவதில் திட்டமிடுதல் வெற்றி பெறவில்லை. குறிப்பாக ரயில்வே சாதனங்கள் அல்லது மின்சார யந்திரங்கள் அல்லது மற்ற யந்திரங்கள் அல்லது இவைகளுக்குத் தேவையான எஃகு, அலுமினியம் உலோகங்கள் போன்ற பண்டங்களைத் தயாரிப்பதற்கு கனரகத் தொழில்கள் ஓரளவுக்குத் தேவை.

ஏழை மக்களுக்கு மட்டுமின்றி சமுதாயத்தின் ஒவ்வொரு நபருக்கும் மிகவும் அத்தியாவசியமான நுகர்வோர் பண்டங்களை கனரகத் தொழில் துறையில் உற்பத்தி செய்வது சிக்கனமானது அல்ல. பெரிய தொழில்கள் மூலம் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் மிகவும் சௌகரியமாக, மிகவும் எளிதாக, மிகவும் குறைந்த முதலீட்டில் சிறு தொழில்கள் மூலமும் குடிசைத் தொழில்களின் மூலமும், நுகர்வோர்க்கான பண்டங்களை உற்பத்தி செய்யலாம். இது மிகவும் பிரச்சினையான விஷயம். இதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கனரகத் தொழிலில் ஒரு தொழிலாளியை அமர்த்திக் கொள்வதற்கு 25 ஆயிரம் ரூபாய் முதல், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை முதலீடு தேவைப்படுகிறது. குடிசைத் தொழிலில் ஒரு தொழிலாளியை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்கு 500 ரூபாய்க்கு மேல் தேவைப்படாது. அநேக விஷயங்களில் இது அதற்கும் குறைவாகவும் இருக்கும்.

நமது நாட்டில் வேலை வாய்ப்பு பிரச்சினை மிகவும் மோசமான பிரச்சினை. ஏனென்றால் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்காமல் நமது மக்களிடையே மகிழ்ச்சியை நிலவச் செய்ய நம்மால் முடியாது. ஆகவேதான் தொழில்கள் வளர்ந்திருந்தாலும் கூட வேலையின்மை வளர்ந்துள்ளதே தவிரக் குறையவில்லை. இந்த உண்மையைவிட வேறெந்த நடைமுறை அத்தாட்சியும் தேவைப்படாது என்று நான் நினைக்கிறேன். படித்தவர்களிடையும்கூட வேலையின்மை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலைமை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இவையெல்லாம், முன்னுரிமைகள் சம்பந்தமாகவும் வழிமுறைகள் சம்பந்தமாகவும், திட்டமிடுதலுக்கான போக்கில் மாற்றம் காண்பதில் முழு கவனம் தேவை என்பதையே குறிக்கின்றன. மேற்கத்திய நாடுகளையும் அந்த நாடுகளின் நாகரிக முறைகளையும் நாம் பின்பற்றத் துவங்கியதால்தான் இவை எல்லாம் நடந்தன. அவர்களுக்கு அந்த முறைகள் நல்லது. ஆனால் நமக்கு அந்த முறைகள் நல்லவைகள் அல்ல. அவைகளில் நல்லவைகளை எல்லாம் நாம் நிச்சயமாக எடுத்துக் கொள்வோம். எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். "நாம் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறோம்; நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஒன்றுமில்லை'' என்று நாம் நினைக்கக் கூடாது. ஒவ்வொருவரிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமிருக்கிறது. **மிகப் பெரிய அறிவாளிகூடச் சில நேரங்களில் ஒரு குழந்தையிடமிருந்து கூட கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும்.** இந்த உலகத்திலிருந்து நாம் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை என்று நாம் கூற முடியாது. இந்த உலகம் முழுவதிலுமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமிருக்கிறது. நாம் எதைக் கற்றுக் கொண்டாலும், அவைகள் நமது கலாச்சார அடிப்படைகள், சமுதாயம் மற்றும் நமது பாரம்பரியத்தின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும். இதனை நாம் பெரும்பாலும் மறந்து விட்டோம். இது நம் அனைவரின் மிகப் பெரும் துரதிருஷ்டம். இதனை நாம் போக்க வேண்டும். நமது சொந்த அடிப்படைக் கலாச்சாரத்திலும், நமது சொந்த வாழ்க்கை முறையிலும் இந்தப் பெருமையை நாம் திரும்பப் பெற்றாலன்றி நாம் எவ்விதப் போக்கினைக் கொண்டிருந்தாலும் அது தவறாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். சரியான போக்குடன், சரியான நோக்கில் சரியான வழியில் மேற்கொள்ளப்பட்டால்தான் எந்தப் பெரும் பணியும் வெற்றி பெற முடியும். ஒரு பெரும் பணியை குறைந்த உழைப்பில், குறைந்த பணச் செலவில் சரியான பொருட்களை உற்பத்தி செய்கிறோம் என்பது மட்டுமின்றி அந்தச்செயலைச்செய்வதன் மூலம் அதிகபட்ச மன நிறைவைப் பெறும் சக்திதான் திறமை என்று கூறப்படுகிறது. இந்தப் பின்னணியில் நீங்கள் எந்தப் பெரும் பணியை பரிசீலித்தாலும் ஒப்புக்கொள்ளாமல் இருப்பதற்கான எவ்வித வாய்ப்பும் காணப்படாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நமது திட்டமிடும் முறை பெரும் பணச் செலவுக் கணக்கில்தான் நினைக்கப்படுகிறது. ஏனென்றால் கனரகத் தொழில்களைத்தான் மிக அதிகமாக நினைக்கிறோம். பாசன வசதி விஷயத்தில்கூட சிறிய பாசன வசதித் திட்டங்களை நாம் புறக்கணித்து விடுகிறோம். முதலில் நாம் அவைகளைத்தான் கவனித்து இருக்க வேண்டும். பெரிய பாசன வசதித் திட்டங்கள் தேவைதான். உண்மையிலேயே, சொல்லப் போனால் 15 ஆயிரம் ரூபாய் செலவில் நானும் ஒரு திட்டத்தை வைத்திருந்தேன். வடக்கிலும், தெற்கிலும் குறுக்கும் நெடுக்குமாக உள்ள கால்வாய்களுடன் இந்தியாவிலுள்ள நதிகளை எல்லாம் இணைத்து ஒரு நீர்வழிப்பாதையை ஏற்படுத்தலாம். இது ரயில்வே முறையைக் காட்டிலும் மிகவும் மலிவாகவும்



இருக்கும். இதனால் நாடு முழுவதும் எந்தவித பாசன வசதிக்கும் நீர்த் தட்டுப்பாடு இருக்காது. இத்தகைய திட்டத்தை நான் கருத்தில் கொண்டிருக்கிறேன்.

உண்மையில், கிழக்கு இந்தியக் கம்பெனியும், பிரிட்டிஷ் அரசாங்கமும் முதலில் ஒரு திட்டத்தை வைத்திருந்தன. ரயில் பாசனத் திட்டம் வகுக்கப்படுவதற்கு முன்பு நீர்வழிப் பாதையை மேம்படுத்துவது அல்லது போக்குவரத்துப் பாசன வசதிக்கும் நீர்வழிப் பாதையைப் பயன்படுத்துவது என்ற திட்டம் இருந்தது. ஆனால், இந்தத் திட்டத்தை மேற்கொண்டால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்வது குறைந்துவிடும் என்பதை அவர்கள் கண்டறிந்தனர். ஆகவே அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்யக்கூடிய ரயில்வேக்களுக்கு சாதகமாக அவர்கள் தீர்மானித்தனர்.

நல்லது. அவர்கள் நல்லதையே செய்திருக்கிறார்கள். அதில் சந்தேகமில்லை. மிகவும் அடிப்படை அவசியமான அவசியத்துக்கும் அதிகமாக ஒரு அடிக்கல்லான விவசாயத்தைப் புறக்கணித்ததன் மூலம் இந்த நாட்டுக்குக் கணிசமான அளவுக்கு அவர்கள் கெடுதல் செய்திருக்கிறார்கள். நமது விவசாயத்தை நாம் வளப்படுத்தினாலொழிய, நாம் செய்யும் எதுவும் நமக்கு மகிழ்ச்சியையோ மன நிறைவு உணர்வையோ அளிக்கப் போவதில்லை, என்று நான் அஞ்சுகிறேன். கடந்த ஓரிரு ஆண்டுகளைத் தவிர நமது தேவைகளுக்கு ஏற்ப, போதுமான அளவுக்கு இன்னும் நம்மால் உற்பத்தி செய்ய முடியவில்லை. கடந்த ஓரிரு ஆண்டுகளில் உற்பத்தி செய்ததுகூட சிறந்த பருவமழைகள் இருந்ததால்தான். நாம் இந்தப் பருவமழைகளை நம்பி இருக்க வேண்டிய அவசியமில்லை. எனது கருத்துப்படி நாம் போதுமான வளங்களைப் பெற்றிருக்கிறோம். தற்போது நமது நாட்டில் சராசரியாக உற்பத்தியாவதைக் காட்டிலும் மூன்று மடங்கு அல்லது அதற்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய வளம் நமது நாட்டின் மண்ணிற்கு உண்டு. இன்றைய தினம் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இரு மடங்கு உற்பத்தி செய்வோமானால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அதிருப்தி இருக்காது என்பது மட்டுமின்றி தற்போது வளங்களைத் தேடி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கிறோம். அந்த வளங்களும் நமக்குக் குறைவிருக்காது. தற்போது நமது நாட்டின் மொத்த விவசாயிகளில் 70 சத விகிதத்தினராக உள்ள சிறு விவசாயிகள் அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்குப் போதுமான அளவில் உற்பத்தி செய்வதில்லை.

ஏனென்றால் பெரிய யந்திரங்கள், உரங்கள், நவீன விவசாய முறைகள் என்பனவற்றில் அவர்களது கவனம் திருப்பப்பட்டது. நமக்கு எவையெல்லாம் நல்லவையோ அவற்றை நவீனமுறையில் நாம் பயன்படுத்தலாம். நாம் அந்த நவீன முறைகளை எடுத்துச் கொள்ளலாம். ஆனால் நமது சொந்த வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நாம் மறந்துவிட முடியாது. நாம் வயலில் இறங்கி உற்பத்தியைப் பெருக்க முடியாது. விவசாயிகள்தான் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்வதற்கான வசதிகளை நாம் அவர்களுக்கு அளிக்கவேண்டும். தற்போது இது கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனால்தான் பெரிய விவசாயப் பண்ணைகள் விஷயத்தில் எனது சகா குறிப்பிட்டார் என்று நான் நினைக்கின்றேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் பம்பாயில் விவசாய இலாகாவின் பொறுப்பினை வகித்து வந்தபோது அரசுப் பண்ணைகளின் முறையை நான் மாற்றினேன். அந்தக் காலத்தில் அவைகள் அதிகமாக இல்லை. ஐம்பது, நூறு அல்லது இருநூறு ஏக்கர்களுக்கு மேல் அவைகள் இல்லை. ஆனால் அவைகளை நான் மாற்றி, மற்றவர்கள் அவைகளைப் பார்த்து விரைவாகப் பின்பற்றக்கூடிய வகையில் மிகவும் நல்ல விவசாயிகள் கொண்ட மாதிரிப் பண்ணை முறையை நான் வகுத்தேன். தற்போது எந்த விவசாயி பெரிய அரசுப் பண்ணையில் பின்பற்றப்படும் முறையைப் பின்பற்ற முடியும்? ஆகவே அவை எந்த விதத்திலும் விவசாய சமுதாயத்துக்கு உதவுவதில்லை. தற்போது இந்த விஷயங்களை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். **இதே முறையில் குடிசைத் தொழில்கள் நமது அனைத்துத் திட்டங்களின் முதுகெலும்பாக இருக்க வேண்டும்.** இத்துறையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவைகள் இரண்டாம் பட்ச நடவடிக்கைகளாக எனது கருத்துப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பயனாக, இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தேவையான, விரும்பிய பலன்களை அளிக்கவில்லை.

இவை அனைத்தும் உங்களைப் போன்ற திட்டமிடுவோர்கள் மற்றும் அவற்றை அமல்படுத்துபவர்களையும் பொறுத்தது. அமல்படுத்தும் பொறுப்பை ஏற்பவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல திட்டங்கள் எப்படி இன்னும் நேர்த்தியாக இருக்கலாம் என்பதற்கு யோசனை கூறுபவர்களும் நீங்கள். அப்படிப்பட்ட யோசனைகள் இதுவரை பெறப்படவில்லை என்று நான் கருதுகிறேன். அவைகளும் ஊக்குவிக்கப்படவில்லை. நான் உங்களிடம் தவறு காணவில்லை.

இந்த பூமியில் எங்குப்பார்த்தாலும் அச்சம் தலைதூக்கியிருக்கிறது யாராவது ஒருவர் ஒரு புதிய கருத்தையோ யோசனையையோ வெளியிட்டால் அதற்காக அவர் இடர்ப்படுகிறார். அதனால் அவர் லாபம் அடைவதில்லை. பாராட்டப்படுவதும் இல்லை. எல்லாப் பிரிவினரிடத்திலிருந்தும் இந்த அச்ச உணர்வை நாம் நீக்கியாக வேண்டும். அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் இந்த அச்ச உணர்வை நீக்க வேண்டுமானால் அதைச் செய்ய வேண்டியது அரசாங்கமே. அரசாங்கத்தின் கருவிகள் நீங்கள். மேலும் மக்களின் சேவகர்களும் நீங்கள். அச்ச உணர்விலிருந்து நீங்கள் விடுபடாதவரையில் சாதாரண மனிதனை அதிலிருந்து நீங்கள் எப்படி விடுவிக்கப் போகிறீர்கள். **ஆகவே நீங்கள் அச்ச உணர்விலிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் உங்களுடைய கருத்துக்களைச் சுதந்தரமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்துக் கூறமுடியும். அதே நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவும் முடியும்.**

நம்முடைய வளங்களை இயன்ற அளவுக்கு நாம் பயன்படுத்தியும், அளவுக்கு மீறி அதிகமாகச் செலவழித்தும் தவறு செய்திருக்கிறோம். இதன் விளைவாக இன்றைக்கு பற்றாக்குறை பட்ஜெட்டுக்கு வழி காணப்பட்டுள்ளது. விலைவாசிகளைப் பொறுத்தமட்டில் மோசமான காரியம், பற்றாக்குறை பட்ஜெட்டே. சப்ளையைக் காட்டிலும் அதிகமாக விலைகள் உயர்கின்றன. நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி விகிதத்திற்குச் சமமாகப் பண சப்ளை இருக்குமானால் அதனால் தீங்கு ஒன்றும் இல்லை. ஆனால் பண சப்ளை அதிகரித்துக் கொண்டே போக அதே நேரத்தில் உற்பத்தி விகிதம் குறைந்து கொண்டேபோனால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான திசையில் செயல்படுகின்றன. அதன் காரணமாகவேதான் விலைவாசி. உயர்வை நாம் காண்கிறோம். இவற்றை எல்லாம் பார்த்து நாம் நம்முடைய வழிகளைச் சிந்திக்க வேண்டும். இது நீங்கள் அனைவரும் உங்களுடைய [illegible] படுத்தி ஒத்துழைத்தால் மட்டுமே சாத்தியமாகும். உத்தரவிடுவதால் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவேதான் இதனை நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என்னிடமிருந்து கருத்து வேறுபாடு கொண்டிருப்பீர்களேயானால் அது குறித்து என்னிடம் கூறுவதற்கு உங்களுக்கு முழு உரிமையும் உண்டு. இது குறித்து நாம் பரிசீலித்து விரைவாக விவாதிக்க முடியும். ஒவ்வொரு கட்டத்திலும் திட்டமிடுவது இப்படித்தான் செய்யப்பட வேண்டும். மேலும் அது பூரணமாக அமல்படுத்தப்படுகிறதா என்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

முழுவதும் அமல்படுத்தப்படாத எந்த ஒரு திட்டமும் அதைரியப்படுத்தப் படுவதாகும். ஊக்கப்படுத்துவதல்ல. தன்னுடைய இலக்குக்கும் மேலாக ஒரு திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் கூடுதல் நம்பிக்கையையும் நல்ல வலுவையும் நமக்கு அளிக்கிறது. அதே நேரத்தில் திட்டம் அளவுக்கும் அதிகமாகத் திட்டமிடப்பட்டுக் குறைவாகவே அமல்படுத்தப் படுமேயானால், அதன்பலன் கீழே போகும் சாதாரண வழக்கமான செயல்முறையாகிறது. நீங்கள் பரிசீலிக்க விரும்பும் சிலவற்றின் அடிப்படையான விஷயங்கள் இவை.

இந்த எண்ணங்களில்தான் நீங்கள் சிந்திக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தில் இந்த எண்ணங்களில் நீங்கள் சிந்திக்கவில்லையானால் அது குறித்து நான் உங்களிடம் தவறு காணவில்லை. இப்போது மேற்படி சொன்ன எண்ணங்களில் நீங்கள் சிந்திக்கவில்லையானால் மட்டுமே நான் உங்களிடம் தவறு காண்பேன். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நம்முடைய திட்டங்களில் ஒரு மாற்றம் காண்போம். அந்த மாற்றம் இணக்கமான ஒரு மாற்றமாக இருக்க வேண்டும். கடுமையான, பலாத்காரமான ஒரு மாற்றத்தை நாம் விரும்பவில்லை. இந்த மாற்றம் துரிதமாக இருக்க வேண்டும். சில நேரங்களில் நிர்வாகம் செய்யும் பல அரசாங்கங்களில் ஏற்படுவதைப்போல முடிவில்லாக் காலத்தில் மீண்டும் ஏற்படக் கூடாது. ஆகவே அது குறித்து ஓர் இலக்கை நீங்கள் நிர்வகிக்க வேண்டும். இதற்கேற்ப அடுத்த திட்டத்தில் நம்மை நாமே சரி செய்து கொள்வோம். மேலும் இந்த மாற்றம் நிகழ்ந்திருப்பதாகத் திட்டத்தின் இறுதியில் நாம் காண்போம்.

(41-ஆம் பக்கம் பார்க்கவும்)



**திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்**
**27—4—1977 அன்று**
**தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்றார்**

# "மக்களின் முதல் தொண்டனாகப் பணி புரிவேன்!"

—பிரபுதாஸ் பட்வாரி

"நண்பர்களே,

வணக்கம். தமிழ்நாடு ஆளுநராக இன்று நான் பதவி ஏற்று இருக்கிறேன். தமிழ் நாட்டு மக்களின் நேர்மை, எளிமை, கடமை உணர்ச்சி, கடவுள் பக்தி எல்லாம் என்னை மிகவும் கவர்ந்து இருக்கின்றன. தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் நான் மிகவும் நேசிக்கிறேன். என் கடமையில் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

அன்பார்ந்த

சகோதர சகோதரிகளே!

இன்று பிற்பகல், நான் தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்றிருக்கிறேன். என் மனத்தில் உள்ள எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டு உங்களிடம் உரையாற்ற வேண்டுமென்று எண்ணினேன். நமது நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்ற இந்தச் சிறந்த பதவியை எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பாகக் கருதுகிறேன்.

இன்று காலை நான் இங்கு வந் பொழுது அளிக்கப்பட்ட அ பான வரவேற்பு என்னை மிகவு கவர்ந்தது. தமிழ்நாட்டு மக் ளின் விருந்தோம்பும் பண்பையு தோழமையையும் நான் அ வேன். தமிழ்நாட்டு மக்க அளித்த வரவேற்பும், காட்டி பரிவும் என்னை மகிழ்ச்சியி ஆழ்த்தின. உங்களுடைய அ புக்கும் பாசத்துக்கும் என்னுடை நன்றி.



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 27—4—77 அன்று நடைபெற்ற ஆளுநர் பதவி ஏற்பு விழாவில், சென்னை உயர்நீதி மன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதி திரு. ராமபிரசாத் ராவ் அவர்கள், ஆளுநராகப் பதவி ஏற்கும் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து



தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்க வருகை தந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் அண்ணாசாலையில் உள்ள, அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இராஜாஜி மண்டபம் வரை குதிரைப்படை வீரர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து வர ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

நமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்கள் ஜனநாயகத்தின் மீது இந்திய மக்கள் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை சந்தேகத்திற்குஇடமின்றி நிரூபித்திருக்கின்றன. ஓர் உண்மையான மக்கள் நலச் சமுதாயத்தை உருவாக்க நாம் உறுதி பூண்டுள்ளோம்.

அத்தகையதொரு சமுதாயத்தில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. நமது நோக்கம் பொது நலத்திற்கான சம வாய்ப்புள்ள சுதந்தரமான சூழ்நிலையில் அச்சமின்றி எல்லா மக்களும் முழு வளர்ச்சி பெற உதவுவதேயாகும்.

நாம் அடைய விரும்பும் குறிக்கோளுக்கான நமது வழி முறைகள், தார்மீக அடிப்படை கொண்டனவாக இருக்க வேண்டும். நிர்வாகம் சாதாரண மனிதனின் நலத்திற்கும் நல்வாழ்விற்கும் உதவுவதாக இருக்க வேண்டும்.

இத்துடன் நமது கடமை முடிந்து விடுவதில்லை. இந்தச்

# ஆளுநர் உரை

சிறந்த மாநிலத்தின் முதல் மக்கள் ஊழியன் என்ற முறையில் என்னுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் நமது நாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகள் விட்டுச் சென்றுள்ள சீரிய கொள்கைகளைப் பின்பற்ற முயற்சி செய்வேன். தமிழ்நாடு தற்சமயம் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலுள்ள நமது தலைவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல்கள் விரைவில் நடைபெறுமென்று முன்பே அறிவித்துள்ளார்கள். சட்டப் பேரவைக்கும் அதன் மூலம் மக்களுக்கும் பொறுப்பான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை சீக்கிரமே பெறவிருக்கிறோம்.

குடியரசுத் தலைவர் ஆட்சியில், ஆளுநர்கள் நிர்வாகத்தின் தலைவராக இயங்குகிறார்கள். நான் ஏற்றுள்ள கடமைகளும் பொறுப்புகளும் மகத்தானவை.

இந்த மாநிலத்தின் பணியில் என்னுடைய கடமைகளை ஆற்றுவதில் உங்கள் உதவியையும், ஒத்துழைப்பையும் கோருகிறேன். தமிழ்நாட்டிற்கு ஆளுநர் என்ற முறையில் நான் புதியவன். ஆகவே இந்த மாநிலத்தின் பிரச்சினைகளுக்கு விடை காணுமுன் அவைகளை நான் நன்கு ஆய்ந்து அறிய வேண்டும். மத்திய அரசாங்கத்தில் உள்ள நமது தலைவர்கள் முன்னுரிமைகளையும், அணுகுமுறைகளையும் வகுத்துள்ளார்கள். ஆகவே நமது பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் நமது மக்கள் முன்னேற்றத்திற்கு உதவுவதிலும். அவைகளை நாம் பின்பற்றலாம். நமது பிரதமர், நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையைப் பத்தாண்டுகளுக்குள் அகற்ற உறுதியளித்து உள்ளார். ஆகவே, சிறப்பாக கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் உருவாக்க, நமது பொருளாதாரத் திட்டங்களையும், முன்னுரிமைகளையும் மாற்றியமைக்க வேண்டும். நமது பிரதமர் கூறியுள்ளபடி, காந்தியடிகள் கண்ட அந்தியோதயம் அதாவது கடைநிலையில் உள்ளவரையும் கடைத்தேற்றுவது என்பது எட்ட முடியாத குறிக்கோள் அல்ல. அது பொருளாதார, சமூக ரீதியான அவசியமாகிவிட்டது. ஏழையென்றும் பணக்காரனென்றும் அல்லது நகர்ப்புறத்தைச் சார்ந்தவர், கிராமவாசியென்றும் இரு வகையான சமுதாயங்கள் இருப்பதால் எழக்கூடிய பிரச்சினைகள் விரைவாகவும் வலிவாகவும் [illegible]ர்க்கப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்டோரும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோரும் நமது சிறப்புக் கவனத்துக்கு உரியவர்கள். இலஞ்சம் அனைத்து மட்டங்களிலும் ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு பெருமைக்குரிய வரலாற்றைப்பெற்றிருக்கின்றது. கடந்த ஆண்டுகளை எண்ணிப் பார்க்கும்பொழுது சுதந்தரப் போராட்டத்தில் தமிழ்நாடு ஆற்றிய மகத்தான தொண்டு என் நினைவுக்கு வருகிறது. மதிப்பிற்குரிய ராஜாஜி, காமராஜ் போன்ற புகழ் வாய்ந்த அரசியல் தலைவர்களும், மற்ற முதலமைச்சர்களும் நிர்வாகத்தில் உயர்ந்த நெறிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த தன்னலமற்ற தொண்டர்கள், காந்தியடிகளின் ஆக்கத் திட்டங்களை நமது நாட்டின் மூலை மூடுக்கெங்கும் பரப்பியிருக்கிறார்கள்.



கதர் கிராமத் கைத்தொழில்கள், கிராமப்புற முன்னேற்றம், கூட்டுறவு இயக்கம், அரிசன முன்னேற்றம், மதுவிலக்கு, சமூக சேவை இவை எதுவாயிருந்தாலும் சரி, தமிழ்நாடு, நாட்டின் ஏனைய பகுதிகள் பின்பற்றத்தக்க சிறந்த முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது. அரசியல் நெறி, நிர்வாகம், கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், சட்டம், தொழில் துறை, வேளாண்மை [illegible] ட்டு மக்கள் தங்களுக்கென்று பேரும் புகழும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் விழிப்புற்ற மக்கள், தேச முன்னேற்றத்திற்குரிய ஆக்கப் பணிகள் அனைத்திலும் முன்னணியில் நிற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாநிலத்தின் தலைமைப் பதவியேற்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய என் மீது நம்பிக்கை வைத்து, எனக்கு வாய்ப்பளித்ததற்காக தாற்காலிக குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நமது தொன்மையான நாகரிகத்திலும், பண்பாட்டிலும் உள்ள சிறந்த அம்சங்கள் இங்கு காணப்படுகின்றன. உங்களுடைய எளிமையையும் அடக்கத்தையும் கண்டு பெருமைப்படுகின்றேன். அதே நேரத்தில் இங்குள்ள மக்கள் முற்போக்குக் கருத்துக் கொண்டவர்களாகவும், சவால்களைச் சந்திப்பதில் கொஞ்சமும் சளைக்காதவர்களாகவும் இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தொண்டாற்றுவதை நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன். காந்தியடிகளின் போதனைகளுக்கு ஏற்ப, நான் மக்களின் முதல் தொண்டனாகப் பணியாற்றுவேன். என்னுடைய தொண்டு, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நீங்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் ஒத்துழைப்புக்கும் உகந்த முறையில் செயல்படுவேன்.

என் மனைவியும், நானும் தமிழ்நாட்டு மக்களுக்கு எங்களுடைய நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநிலத்தின் எல்லா வகை முன்னேற்றத்திற்கும் நாம் உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் ஒன்றுபட்டு உழைப்போம்.

இறைவன் நமது பிரார்த்தனைகளை ஏற்றருள்வானாக!

ஜெய் ஹிந்த்!

வணக்கம்!

**(தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 27-4-'77 அன்று இரவு 9-30 மணிக்கு வானொலி மூலம் தமிழக மக்களுக்கு விடுத்த சிறப்புச் செய்தி.)**

# உணவாய்– மருந்தாய் உதவிடும் பதநீர்!



**வே**ளாண்மைக்குச் சிறிதும் பயன்படாத கழிவு நிலங்களில்—தரிசு நிலங்களில்—யாரும் உழுது பயிரிடாமல்—விதைக்காமல்—வேலி கட்டாமல்—நீர் பாய்ச்சாமல்—காவல் காக்காமல் இயற்கையாகவே முளைத்து ஓங்கி வளர்ந்து பல்வகைப் பயனும் பாங்குறத் தந்து மனித சமுதாயத்திற்கு உதவும் தாவரங்களில் முதன்மையானதும் — முக்கியமானதும் பனைமரமே யாகும்!

''பனை மரமே பனை மரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே?'' என்று கேட்டு, பனை தான் தரும் பயன்களை அடுக்கடுக்காகக் கூறும் நாடோடிப் பாடலை நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் நன்கறிவர். தன்னிடத்து நின்று கொண்டே தன்னை வெட்டிக் கொத்தித் துன்புறுத்துகின்ற மனிதனையும், அவன் விளைக்கும் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, அவனுக்கு வளமும் வாம்வம் நல்கிக் காக்கின்ற நிலத்தைப் போலவே, பனைமரமும் தன்னை மிதித்து, வெட்டி, கொத்தி, வினை புரியும் மனிதனுக்குப் பல்வகையான செல்வங்களையும் வழங்கி மகிழ்கிறது—மகிழ்விக்கிறது.

பனை இன மரங்களான பனை, தென்னை, ஈச்சை முதலிய யாவும் வழங்குகின்ற செல்வங்களுள் குறிப்பிடத் தக்கது பதநீர் ; இப்பதநீர் யாவற்றுள்ளும் பிரபலமானதும்—பருவ காலத்தில் மலிந்து கிடைப்பதும் பனை தரும் பதநீரே யாகும்!

பதநீர், பனை மரங்களில் பருவ காலத்தில் தோன்றும் பாளைகளிலிருந்து வடித்தெடுக்கப்படும் இனிய— மிருதுவான — ஊட்டச் சத்துக்கள் மிக்க இயற்கைச் சுவை நீர்! இதனை, தவழ்கின்ற குழந்தை முதல் தடியூன்றி நடமாடும் வயோதிகர் வரை அருந்தி மகிழலாம்! கருவுற்ற மகளிர் பருகலாம்; குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார் பருகலாம் ; எல்லோருமே பருகி மகிழத் தக்க எளிய தேசிய பானம் இது.

பாளையிலிருந்து பதநீர் சொட்டும்போது அது இயற்கையான தித்திப்புடன்தான் இருக்கிறது. இது 'கள்' அல்ல; சுரந்து இரண்டு மூன்று மணி நேரம் கழித்த பின்னரே அதில் புளிப்பு ஏற்பட்டுப் போதை தரும் கள்ளாக மாறுகிறது. கலயத்தில் சுண்ணும்பு தடவப்பட்ட பின் அதில் சுரக்கும் பதநீர், 2 அல்லது மூன்று மணி நேரத்திற்குப் பின் சளித்துப் போய்விடும். அது, அருந்தப் பயன்படாது. எனவே, பதநீரும் கள்ளும் ஒன்றெனக் கருதுவது சரியாகாது. பாளையிலிருந்து கலயத்தில் சுரக்கும் பதநீர், கள் (Toddy) ஆக மாருமல் இனிக்கும் பதநீராக (Sweet Toddy) இருப்பதற்காகவே பதநீர் இறக்கும் கலயத்தில் சுண்ணும்பு தடவப்படுகிறது. கலயத்தில் சுண்ணும்பு தடவா விட்டால், நமக்குப் பதநீர் கிடைக்காது—கள் தான் கிடைக்கும்.

''பதநீரை நாள்தோறும் பருகிவந்தால் எடையும், உயரமும், முகப் பொலிவும் அதிகரிக்கும்; பதநீர் பருகுவோர் களைப்பு நீங்கிப் புத்துணர்வு பெறுவர்; கணைச் சூட்டையும், உடம்பின் வெப்பத்தையும் குறைக்கிறது, பதநீர். தொடர்ந்து பதநீர் பருகினால் கண்ணோயினின்றும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்; வெப்பத்தால் இதழோரங்களில் புண்கள் ஏற்படாமல் தடுக்கலாம்'' என்பன போன்ற பல்வேறு உண்மைகளைப் பதநீர் ஆராய்ச்சி வல்லுநர்கள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர்.

''புத்தம் புதிய பதநீர் போதை தரக் கூடியதன்று; பதநீர் பருகியதால் ஏராளமானவர்கள் மலச்சிக்கல் நோயினின்றும் விடுபட்டிருக்கின்றனர்; நாள்தோறும் காலையில் தேநீர் அருந்துவதற்குப் பதிலாக, ஒரு குவளைப் பதநீர் அருந்தினால் காலை உணவாக வேறேதும் வேண்டியிருக்காது'' என்றார் காந்தியடிகள்.

பதநீரில் என்னென்ன சத்துக்கள் உள்ளன? அவற்றால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து டாக்டர் 'ஹில் ஹையா' என்பவர் பின்கண்டவாறு குறிப்பிடுகிறார் :

''1. பதநீரிலுள்ள சீனிச் சத்து உடலுக்கு வெப்பத்தைத் தருகிறது.

''2. மெலிந்து தேய்ந்து வாடிய வடிவுடைய குழந்தைகளின் உடலைப் பதநீரில் உள்ள 'குளுகோஸ்' சீராக்குகிறது.

''3. பதநீர் கணைச் சூட்டை நீக்குகிறது.

''4. கருவுற்ற மகளிரும் மகப்பேறு பெற்ற பெண்களும் பதநீர் பருகி உடல் நலம் பெறலாம்.

''5. பதநீர் இரத்த அழுத்தத்தை (Blood Pressure)த் தடுக்கிறது.

''6. சன்னிவாத சுரம் (Typhoid) நீர்க்கட்டு (Pneumonia) முதலிய நோய்களைத் தடுக்கிறது.

''7. இருதயத்தை வலுவடையச் செய்கிறது; இருதய நோயைக் குணப்படுத்துகிறது.

''8. பதநீரிலுள்ள சுண்ணாம்புச் சத்து, பற்களை உறுதிப்படுத்து, ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படாமல் தடுத்துப் பற்களில் படியும் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது.

''9. மெலிந்து, நெஞ்செலும்பு தள்ளிய (Rickets) குழந்தைகளுக்குப் பதநீர் சிறந்த பாதுகாப்பு உணவு.



''10. பதநீரில் உள்ள இரும்புச் சத்து, பித்தத்தை நீக்குகிறது. சொறி, சிரங்கி, தடுமன், காச நோய் முதலியவைகளுக்குப் பதநீர் சிறந்த இயற்கை மருந்து.

''எனவே பதநீர், நோய்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கும் சத்துணவாகும். இதனை தொடர்ந்து பருகி நலம் பெ மக்கள் முன்வர வேண்டும்.''

அடுத்து, பதநீரில் உள்ள டச்சத்துக்கள் எவ்வாறு லுக்குப் பயன் தருகின்றன பதை மெய்ப்பிக்கப் பள்ளி மா வர்களுக்குப் பதநீர் கொடுத் பதநீரின் பெருமையை வெ படுத்திய டாக்டர் பான்சே எ

## பதநீரில் உள்ள பலவகைச் சத்துகள்

பதநீரில் என்னென்ன சத்துகள் உள்ளன என்பதை டாக்டர் திருமதி கமலா சோஹோனி ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். 225 மில்லி லிட்டர் (8 அவுன்ஸ்) அளவுள்ள ஒரு பாட்டில் பதநீரில் உள்ள சத்துகளைப் பாருங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | அமில—கார நிலை (P.H. Value) | ... 7.2 | |
| 2. | மொத்தச் சர்க்கரை (Total Sugar) | ... 28.8 | கிராம் |
| 3. | சுண்ணாம்பு (Calcium) | ... 35.4 | மி. கி |
| 4. | இரும்புச் சத்து (Iron) | ... 5.5 | ,, |
| 5. | பாஸ்பரஸ் (Phosphorus) | .. 32.4 | ,, |
| 6. | தயாமைன் (Thiamine) | ... 82.3 | ,, |
| 7. | ரிப்போபிளேவின் (Riboflavin) | ... 44.4 | ,, |
| 8. | அஸ்கார்பிக் அமிலம் (Ascorbic Acid) | ... 12.2 | ,, |
| 9. | நிக்கோடின் அமிலம் (Nicotinic Acid) | ...674.1 | ,, |
| 10. | புரதம் (Protein) | ... 49.7 | ,, |
| 11. | கலோரிகள் (Calories) | ...113.8 | ,, |



பதநீர் இறக்கிட பாளை சீவப்படுகிறது.

ருக்கு மகாராஷ்டிரப் பல்கலைக் ழகம் 'டாக்டர்' பட்டம் ழங்கிச் சிறப்பித்திருக்கிறது.

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி ண் வைத்திய நிபுணரும் மதுரை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியருமான டாக்டர் ஜி. வெங்கடசாமி, 'கண் குருடாவதற்குச் சத்தில்லா உணவே முக்கிய காரணம்' என்றும் 'இதனைப் பதநீர் சரிக்கட்டுகிறது' என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் கூறுவதாவது :

''1. நமது உணவில் மாவுச் சத்து, புரதச் சத்து, எண்ணெய் ஆகியவைகள் இருக்கின்றன. இவற்றுடன் இரும்பு போன்ற உலோகப் பொருட்களும் இருக்க வேண்டும். வயிறு நிறைய உணவு உண்டாலும் உணவில் போதிய உயிர்ச் சத்துக்கள் இல்லாவிடில் உடற் கோளாறுகள் உண்டாகும்.

''2. 'ரிப்போஃப்ளோவின்' (பி. வைட்டமின்) என்னும் உயிர்ச் சத்து பால், முட்டை, கீரை, இறைச்சி, பதநீர் முதலிய உணவுகளிலிருந்து கிடைக்கிறது. இச் சத்துக்கள் உணவில் குறைந்தால், வாயின் இரு புறங்களிலும் புண் ஏற்படுகிறது. கண்ணின் ஓரங்களிலும், இமைகளிலும் புண் உண்டாகும். சூரிய ஒளியைப் பார்க்க முடியாது. கண்களில் தண்ணீர் வடியும். பார்வை குறையும். இந்தக் கஷ்டங்களுடன், அடிக்கடி பலர் மருத்துவமனைக்கு வருகிறார்கள். இதன் காரணம், உணவில் உள்ள குறைதான் என்பதை அவர்கள் உணர வேண்டும். கீரை, பதநீர், முட்டை, மாமிசம் இவற்றில் ஒன்றை நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் இந்த வியாதிகள் ஏற்படுவதில்லை.

''ஒரு பெண்மணி கண்களின் ஓரங்களில் புண் உண்டாகி சமையல் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு மருத்துவமனைக்கு வந்தார். சாதாரண உணவுடன், நாள்தோறும் 8 அவுன்ஸ் பதநீர் கொடுக்கப்பட்டது. 20 நாட்களில் அவர் முழுக் குணம் பெற்றுவிட்டார்.

மிகச் சிக்கனமான, எளிதான முறையில் உடலுக்கு வேண்டிய 'பி' உயிர்ச் சத்துக்கள் பதநீரிலும், பனை வெல்லத்திலும், பனங் கற்கண்டிலும் கிடைக்கின்றன. பதநீர் சிறந்த பானமாவதுடன் நல்ல உணவாகவும் அமைகிறது.''

இப்படி மருந்தாகவும் சத்துணவாகவும் அமைந்துள்ள பதநீர் நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாகக் கிராமப் புறங்களிலும், நகரங்களிலும் விற்கப்பட்டு வந்தாலும், இது குறைந்த செலவில் கிடைக்கும் நிறைந்த சத்துடைய இயற்கை பானம் என்பதை நம்மவர்கள் அறிந்திருந்தாலும் நாகரிக மோஸ்தரில் பழகியவர்கள், தெருவிலே— நடைபாதைகளிலே பானைகளில் விற்கப்படும் பதநீரைப் 'பனை ஓலைப்' பட்டைகளிலோ, அலுமினியக் குவளைகளிலோ வாங்கிப் பருகுவதை அசிங்கமாகவும், அநாகரிகமாகவும் கருதினர். மேலும், பதநீர் சரியாக வடிகட்டப்படாததாலும், சரியான அளவில் சுண்ணாம்பு இன்றி மிகுந்தோ, குறைந்தோ காணப்பட்டதாலும் பதநீர் பருகும் விருப்பமிருந்தும் பலர் விலகியே சென்றனர். தமிழகத்தில், இவ்வாறு விலகிச் சென்றவர்களை யெல்லாம் கவர்ந்திழுத்து பதநீர், பருக வைத்த பெருமை, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நிர்வாகத்தில் இயங்கும் சென்னை மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தைச் சேர்ந்ததே என்பதை யாரும் மறுக்க முடியாது.

மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம், இவ்வாண்டு பதநீர்ப் பருவத்தில் பதநீர் இறக்குவதற்காகச் சென்னையில் 10 ஆயிரம் பனைமரங்களை ரூ. 22 ஆயிரத்திற்குக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது. பதநீர் இறக்குவதற்கு 140 பனைத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அண்மையில் ஏற்பட்ட புயலால், நெல்லை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான பனைமரங்கள் சாய்ந்து அழிந்துவிட்டதால், அங்கு வேலை வாய்ப்பிழந்த பனைத் தொழிலாளர்கள் பெரும்பாலோர்க்கு இங்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், 1 லிட்டர் பதநீர் இறக்கிக் கொடுத்தால் 16 பைசா கூலியாகப் பெறுகிறார்கள். ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு 20 முதல் 60 லிட்டர் பதநீர் வரை இறக்கிக் கொடுக்கிறார். சராசரி ஒரு தொழிலாளி நாள் ஒன்றுக்கு 10 ரூபாய் வரை கூலியாகப் பெறுகிறார்.

பனைத் தொழிலாளர்கள் இங்கு வந்து பதநீர்ப் பருவம் முடியும் வரை தங்குவதற்கு மாநில சம்மேளனம் இலவசமாகக் குடியிருப்பு வழங்குகிறது. மற்றும் பதநீர் வரும் வரை (இதற்குச் சுமார் ஒருவாரம் ஆகலாம்) பாளை




சீவுவோருக்கு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய்வீதம் உதவித் தொகையும், பதநீர்ப் பருவத்திற்கு அவர்கள் வந்து திரும்பிப் போவதற்கான செலவு தொகையும் மாநில கூட்டுறவு இணையத்தால் கொடுக்கப்படுகிறது.

இத்தொழிலில் இப்போது, புதநீர் சுமக்கும் பெண்கள், குளிர்விக்கும் தொழில் நுணுக்கர்கள், பாட்டில்களைக் கழுவிப் பதநீர் அடைத்து வண்டிகளில் ஏற்றுவோர், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் இப்படியாகச் சுமார் 350 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது சென்னை நகரில் நாள் ஒன்றுக்கு 3,500 லிட்டர் பதநீர் இறக்கப்படுகிறது. எழும்பூரிலும், வண்ணாரப்பேட்டையிலும் உள்ள பதநீர் நிலையங்களில் பதநீர் சுத்தம் செய்யப்பட்டுக் குளிர்விக்கப்பட்டு 1 புட்டியில் 225 மில்லி லிட்டர் வீதம் அடைக்கப்பட்டு, வண்டிகளில் ஏற்றி விற்பனைக்கு அனுப்பப்பெறுகிறது.

சென்னையில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தார் நிறுவியுள்ள பால் பங்குகளில் காலை 7 மணிக்குள் பால் விற்பனை முடிந்துவிடுகிறது. எனவே, அந்த பங்குகளில் 50 பங்குகளை வாடகைக்கு எடுத்து, அவற்றில் பதநீர் விற்றுவருகின்றனர். இது தவிர, மாநில சம்மேளனம் நிறுவியுள்ள 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் 10லும், 20 மூன்று சக்கர வண்டிகளிலும் பதநீர் விற்கப்படுகிறது.

## பால்வழங்கு பங்குகளில் பதநீரும் கிடைக்கும் !

சென்னை நகர் மக்களின் வசதியை முன்னிட்டும், படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும், 5-3-77 முதல் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் பனைப்பொருள் கூட்டுறவு விற்பனை இணையம் சென்னையில் பால் வள நிறுவனத்தின் 50 பால் வழங்கு 'பங்கு'களில் (டெப்போக்களில்) குளிர் பதநீர் விற்பனைத் திட்டத்தைத் துவக்கியுள்ளது. சுகாதார முறைப்படி சேகரிக்கப்பட்டு, குளிர்வித்து, பாட்டில்களில் அடைத்து வழங்கப்படும் கூட்டுறவு நிறுவனத்தின் பதநீரை நாள் ஒன்றுக்கு 14,000க்கும் மேற்பட்ட மக்கள் விரும்பி வாங்கிப் பருகி வருகிறார்கள். ஒரு பாட்டில் பதநீர் விலை 25 காசு தான் !



14,000 பேர் பதநீர் பருகி வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

பால் பங்குகளில் நடைபெறும் பதநீர் விற்பனையில் ஏழைகளும், கணவனை இழந்த மகளிரும், ஆதரவற்றவர்களும், முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டுள்ளனர். படித்து வேலையற்றிருப்பவர்களும், வேலைவாய்ப்புப் பெற்று உள்ளனர். பங்குகளில் இருந்து பதநீர் விற்பவர்க்கு மாதம் ஒன்றுக்கு 90 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இது தவிர, 150 பாட்டில்களுக்கு மேல் விற்பவர்களுக்கு 1 பாட்டிலுக்கு 1 பைசா வீதம் ஊக்க ஊதியமும் கொடுக்கப்படுகிறது.

மூன்று சக்கர சைக்கில்களில் பதநீர் விற்போர், ஒரு நாளைக்கு 300 முதல் 400 பாட்டில்கள் வரை விற்கின்றனர். இவர்களுக்கு ஒரு பாட்டிலுக்கு 2.5 பைசா வீதம் கொடுக்கப்படுகிறது.

சென்னை நகரில் இப்போது, இந்தக் கோடைப் பருவத்தில் கடற்கரைக்குக் காற்று வாங்கச் செல்வோர், பொதுக் கூட்டங்களுக்குச் செல்வோர், இரயில்களிலும், ஊர்திகளிலும் பயணம் செய்வோர், பொது மக்கள், பள்ளிக் குழந்தைகள், அலுவலகம் செல்வோர், கடின உழைப்பாளர்கள் இப்படிப்பட்ட பலதரப்பினரும் பதநீரை மிகவும் விரும்பி அருந்துகின்றனர்.

களைப்புப் போக்கிப் புத்துணர்ச்சி தருகின்ற—உடம்பின் வெப்பத்தைக் குறைத்து ஊட்டச் சத்தளிக்கின்ற—பானமாக மட்டுமின்றி உணவாகவும் பயன்படுகின்ற— எத்தகைய வேறுபாடும் இன்றி எல்லோருமே விரும்பி அருந்தி மகிழ்கின்ற — குறைந்த விலையில்கிடைக்கின்ற—சாக்கரின் கலப்பில்லாத—ஒரே பானமான பதநீரை இந்நாட்டின் 'தேசிய பானம்' என்று பாராட்டுவது எவ்வகையிலும் மிகையாகாது!



# இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி

இந்திய இரயில்வேக்கள் இப்போது ஆசியாவிலேயே பெரிய இரயில்வே நிறுவனங்களாகவும், இரஷ்ய இரயில்வேக்களுக்கு அடுத்தபடி ஒரே நிர்வாகத்தில் உள்ள இரயில்வேக்களுள் உலகத்திலேயே இரண்டாவதாகவும் விளங்குகின்றன.

நம் நாட்டிலுள்ள இரயில் பாதைகளின் மொத்த நீளம் 60,231 கி.மீ. ஆகும். இதில் பிராட் கேஜ் பாதை 30,512 கி.மீ. நீளத்துக்கும், மீட்டர் கேஜ் பாதை 25,427 கி.மீ. நீளத்துக்கும், குறுகிய பாதைகள் 4,292 கி.மீ. நீளத்துக்கும் உள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏற்பட்டது முதல், இந்திய இரயில்வேக்கள் சீரான வளர்ச்சியடைந்துள்ளன. முதல் இரண்டு திட்ட காலங்களில், பழைய இயந்திரங்கள், பழுதடைந்து விட்ட இரயில் பெட்டிகள் ஆகியவற்றுக்குப் பதிலாகப் புதியனவற்றை வாங்குவதில்தான் கவனம் செலுத்தப்பட்டது. மூன்றும் திட்ட காலத்தில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப இரயில் போக்குவரத்து வசதிகளும் விரிவாக்கப்பட்டன. அதன் பிறகு, இரயில் பயணிகளுக்கு வசதிகளைக் கூடுதலாகச் செய்து கொடுப்பதிலும் கூடுதலான அளவில் சரக்கு இரயில்கள் விடுவதிலும், இரயில்வே நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் தன்நிறைவை ஏற்படுத்துவதிலும், இருக்கும் வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளுவதிலும், இரயில் போக்குவரத்தை நவீனமாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரயில்வேக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த மூலதனம் 5,344 கோடி ரூபாயாகும். ஆண்டுதோறும் கிடைக்கும் மொத்த வரவு 1,775 கோடி ரூபாயாகும். எனவே, நாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களிலேயே மிகப் பெரியது இரயில்வேயாகும். இவற்றிலிருந்து அரசாங்கத்து ஆண்டு தோறும் 198 கோடி ரூபாய் கிடைக்கிறது. நம் நாட்டில் கூடுதலான பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனமும் இந்திய இரயில்வேக்களேயாகும். இரயில்வே தொழிலாளர் எண்ணிக்கை 17 இலட்சம் ஆகும். இதில் 2.5 இலட்சம் பேர் மாதச் சம்பளம் பெறுமல், வார அல்லது நாட் கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் 11 ஆயிரம் இரயில்கள் ஓட்டப்படுகின்றன. இவற்றில் சுமார் 80 இலட்சம் பேர் பிரயாணம் செய்கின்றனர். இவை 6 இலட்சத்து 10 ஆயிரம் டன் சரக்குகளை ஏற்றிச் செல்லுகின்றன. நம் நாட்டில மொத்தம்



7,056 இரயில் நிலையங்கள் உள்ளன.

அதிகமான போக்குவரத்தைச் சமாளிக்க, 8,469 நீராவி எஞ்ஜின்களையும், 1,803 டீசல் எஞ்ஜின்களையும், 796 மின்சார எஞ்ஜின்களையும், 3,95,200 சரக்கு வாகன்களையும், 26,226 பிரயாணிகள் இரயில் பெட்டிகளையும், 2,214 மின்சார இரயில் பெட்டிகளையும் இந்திய இரயில்வேக்கள் பராமரித்து வருகின்றன. இரயில்வே சாதனங்கள் 1950ல் இருந்ததை விடத் தற்போது மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. 1976-77ல் மொத்தம் 23 கோடி டன் சரக்குகள் ஏற்றிச்செல்லப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் இரயில்வேக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிகவும் பெரிது. 2,296 கி.மீ. தூரத்துக்குப் புதிய பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. 758 கி.மீ. நீளமுள்ள மீட்டர் கேஜ் பாதைகள் அகலப் பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன. 3,013 கி.மீ. தொலைவுக்கு இருவழிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1957 கி.மீ. தூரத்துக்குப் புதிதாக மின்சார இரயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. 12,245 கி.மீ. தூரத்துக்குப் புதிதாகத் தண்டவாளங்கள் போடப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் உள்ள மரப் பலகைகளும் மாற்றப்பட்டிருக்கின்றன. 1,811 எஞ்ஜின்கள், 9,394 பயணிகள் இரயில் பெட்டிகள், 486 மின்சார இரயில் பெட்டிகள் முதலியனவும் 1,12,925 சரக்கு இரயில் பெட்டிகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டு உள்ளன.

இரயில்வேக்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் உள்ளன. உத்தரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியில் டீசல் எஞ்ஜின் தொழிற்சாலையிலும் மேற்கு வங்காளத்தில் சித்தரஞ்சனிலுள்ள மின்சார எஞ்ஜின் தொழிற்சாலையிலும் உபயோகப்படுத்தப்படும் பொருட்களில் 88 சதவிகிதம் இந்தியாவில் செய்யப்பட்டவையாகும்.

சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் இரயில் பெட்டிகள் செய்யப்படுகின்றன. இவ்வாறு ரயில்வேக்களுக்குத் தேவையான அனேகமாக எல்லாமே நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இரயில்வேக்கள் ஆண்டுதோறும் 770 கோடி ரூபாய மதிப்புள்ள சாதனங்களை மட்டுமே வாங்குகின்றன.

தொழில்நுட்ப ஆராய்ச்சி, வடிவமைப்பு ஆகிய பணிகளுக்காக இரயில்வேயில் தனி நிறுவனம் இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் லக்னோவில் உள்ள இந்த நிறுவனம் வெளிநாடுகள் சிலவற்றிற்கு ஏற்றுமதியாகும் கருவிகளை வடிவமைப்புடன் அவை ஏற்றுமதியாகும்போது அவற்றின் தரத்தையும் பரிசீலிக்கிறது. இந்திய இரயில்வே சாதனங்கள் பின் கண்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன :

ஹங்கேரி
போலந்து
நியூஜிலாந்து
ஈரான்
துருக்கி
பர்மா
சிலோன்
தாய்லாந்து
கொரியா
மலேசியா
சூடான்



நைஜீரியா
கிழக்கு ஆப்பிரிக்கா

இரயில்வேக்கள் தங்களுடைய ஊழியர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வீட்டு வசதியும், மருத்துவ வசதியும், குழந்தைகள் படிப்பதற்கு வசதியும் செய்து கொடுக்கின்றன. இது வரை பல தரப்பட்ட ஊழியர்களுக்கு 5,39,641 இருப்பிட வசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 10,519 படுக்கைகளைக் கொண்ட 665 மருத்துவ மனைகளும், சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் குறைகளுக்குப் பேச்சு வார்த்தை மூலம் பரிகாரம் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிக உயர் மட்டத்தில் அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனமும், மண்டல, வட்டார, தொழிற்கூட மட்டங்களில் சம்மேளத்திற்கு உட்பட்ட சங்கங்களும் உள்ளன.

ஓராண்டுக்கு 225 கோடி ரூபாய் வரை செலவு செய்து, பெரு நகரப் பகுதிகளில் பயணம் செய்பவர்களுக்குக் குறைந்த இரயில் கட்டணம் ஏற்படுத்தியும் உணவு, நிலக்கரி, மாட்டுத் தீவனம் முதலியவற்றை மிகவும் மலிவான கட்டணத்தில் ஏற்றிச் சென்றும், இலாபமில்லாத பாதைகளில் கூட இரயில்களை ஓட்டியும், ஏற்றுமதிப் பொருட்களைச் சலுகைக் கட்டணத்தில் ஏற்றிச் சென்றும் இந்திய இரயில்வேக்கள் சமூகப்பணி செய்து வருகின்றன.

கல்கத்தா, பம்பாய், சென்னை, தில்லி போன்ற பெரு நகர்ப் பகுதிகளில் இரயில் போக்குவரத்தை முற்றிலும் மாற்றியமைக்கவும், புதிய பாதைகள் போடவும் இரயில்வேக்கள் விரிவாகத் திட்டமிட்டுள்ளன. 1973 மே-ஜூனில் கல்கத்தா டம்டம்—டாலிகஞ்சு பகுதியில் சுரங்க இரயில் பாதை போடும் வேலை ஆரம்பமாயிற்று.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வேக்களுக்கு 1,400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஐந்தாவது திட்டத்தில் இது வரையில் 2,152 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இரயில்வேயில் சரக்குப் போக்குவரத்து மட்டும் 25 அல்லது 26 கோடி டன்னுக இருக்கும். பயணிகள் போக்குவரத்தும், அவர்கள் பயணம் செய்யும் தூரமும் 17 முதல் 25 சதவிகிதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக 880 எஞ்ஜின்களையும், 54 ஆயிரம் சரக்கு இரயில் பெட்டிகளையும், 4,541 பிரயாணி பெட்டிகளையும், 680 மின்சார இரயில் பெட்டிகளையும் வாங்குவதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

## கூட்டுறவில் மின் விசைச் செக்குத் தொழில்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வடலூரில் மின் விசைச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுக் குடிசைத்தொழில் சங்கம் துவக்கப்பட்டுள்ளது. செக்கு எண்ணெய் உற்பத்தித் தொழில் நம் நாட்டிற்கு முக்கியமானதும், பழமையானதுமான குடிசைக் கைத்தொழிலாக இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சியின் காரணமாக மாடுகளின் துணையுடன் இயங்கி வந்த இத்தொழில் மின் விசையின் மூலம் நவீன முறையில் இயங்கத் துவங்கியுள்ளது. வடலூர் மின் விசைச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணை கொண்டு இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் மூலம் 21 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 10 மின் விசைச் செக்குகள் சங்கத்தில் நிறுவப்பட்டுள்ளன. சங்கத்துக்கு பங்குத் தொகைக் கடனாக ரூ. 10,000மும், மின் விசைச் செக்கு வாங்கக் கடனாக ரூ. 55,000மும், கொட்டகை கட்டக் கடனும் மானியமும் ரூ. 10,000-மும் தமிழக அரசு அனுமதித்துள்ளது. சங்க அங்கத்தினர்களில் படித்த இளைஞர்கள் 10 பேர்கள் உள்ளனர். நாட்டுச் செக்கை விட விசைச் செக்கின் மூலம் இரண்டு மடங்கு வரை எண்ணெய் பிழியும் திறன் உள்ளதால் இது மிக்க இலாபகரமானது. தவிர இதனை இயக்குவதும் எளிது—நாட்டுச் செக்கைப் போன்ற எண்ணெய் ஆட்ட மாடுகள் தேவையில்லை, இரண்டு நபர்களும் அவசியமில்லை—ஒருவரே இயக்கலாம்.

சங்கத்துக்கு வேண்டிய எண்ணெய் வித்துக்கள் விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம் நல்ல தரமான சரக்காகப் பெறப்படுகின்றன. ஒரு மூட்டை எள்ளை எண்ணெய் பிழிய சுமார் 6 மணி நேரம் ஆகிறது. இதற்கு, இயக்குபவர் ரூ. 12 வீதம் கூலி பெறுகிறார். மாதம் ஒன்றுக்கு ஒரு நபர் ரூ. 300-க்குக் குறையாமல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கூலி பெற்றுப் பயன் பெறுகிறார்.





நம்முடைய சமூகத்தில் உள்ள செல்வம் குறைந்த பிரிவினரின் தேவைகளைப் பொறுத்த மட்டில், குறிப்பாக தன்னுடைய சுற்றுலாக் கொள்கையில் இந்திய அரசாங்கம் ஒரு புதிய கண்ணோட்டம் கொண்டுள்ளது. சர்வ தேச மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாவை முன்னேறச் செய்யும் வகையில் சிறப்பாக உள் நாட்டுச் சுற்றுலா வளர்ச்சியில் சாமான்ய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வழி வகைகளை மேற்கொள்ளுவது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை அளிக்கும் விதத்தில் கூடிய விரைவில் நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலகச் சுற்றுலாக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட 'சுற்றுலாப் பொருட்கள் மேம்பாடு' என்ற தலைப்பிலான பிராந்தியக் கருத்தரங்கு ஒன்றை புதுடில்லியில் ஏப்ரல் 19ஆம் தேதி துவக்கி வைத்துப் பேசுகையில் மத்திய சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் திரு ஆர். பி. நாயக் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

செல்வச் செழிப்பு மிக்க நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உயர்ந்த, தரமான சுற்றுலாவசதிகள், செல்வச் செழிப்பு அவ்வளவாக இல்லாத —நாடுகளிலிருந்து வரும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் ஆகியவற்றில் சீரான இணைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை திரு. நாயக் வலியுறுத்தினார். செல்வச் செழிப்பு மிக்க நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சொகுசு, ஆடம்பர ஹோட்டல்களை நாம் ஒரு புறம் அமைத்திருக்கிறோம் என்றாலும், மறுபுறம் செல்வச் செழிப்பு அவ்வளவாக இல்லாத நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆகியவர்களின் தேவைகளில் போதுமான கவனம் செலுத்த முடியவில்லை என்றும் திரு நாயக் குறிப்பிட்டார். சுற்றுலாப் பயணிகளின் இப்படிப்பட்ட இரு வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தனித் தனியாக வசதிகள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டியுள்ளது என்றும் இந்தப் பிரச்சினைக்கு காணப்படும் பதில் இந்தியாவுக்கு மட்டும் அல்ல இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றிருக்கும் பல்வேறு நாடுகளுக்கும் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா என்பது தேசிய வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நடவடிக்கை மட்டுமல்ல; உலகின் பல்வேறு நாடுகளுக்குமிடையில் கலாச்சாரப் பரிவர்த்தனைக்கான முக்கியதொரு சாதனமாகும். சுற்றுலாவின் பொருளாதாரப் பங்கு, நாட்டின் வெளிச் செலாவணி வருமானத்தின் கீழ் அதனுடைய பங்கு, கூடுதல் வேலை வாய்ப்புக்கு அதனுடைய ஆற்றல், திறன் ஆகிய விஷயங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளுக்கிடையில் சிறந்த நல்லுணர்வுகளை வலுப்படுத்துவதற்கும், உலக சமாதானத்தில், நெருங்கிய கலாச்சார வளர்ச்சிக்கும், வர்த்தக உறவுகள், அபிவிருத்திக்கும் சுற்றுலா முக்கியமானதோர் காரணியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் சுற்றுலாவின் முன்னேற்றம் குறித்து பரிசீலித்த திரு நாயக், 1976ல் இந்த நாட்டில் 5 இலட்சத்து 33 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்; 1975ஆம் ஆண்டோடு இதை ஒப்பிடுகையில் 15 சதவிகிதம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டார். 1976ல் 3 சதவிகிதம் உயர்வு என்று மதிப்பிடப்பட்டு உள்ள உலகச் சுற்றுலாப் பயணிகள் உயர்வோடு ஒப்பிடுகையில் மேற்படி உயர்வு குறிப்பிடத்தக்கதாகும். 1976ல் 25 கோடி டாலர்களைச் சுற்றுலாப் பயணிகள் செலவு செய்துள்ளனர். இதன் மூலம் இந்தியாவின் ஏற்றுமதிப் பட்டியலில் சுற்றுலா 6வது இடத்தை வகிக்கிறது.

வருங்கால அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி திரு நாயக் குறிப்பிடுகையில், ஈரானிலிருந்து இந்தியாவுக்கு சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் டெக்ரானில் முன்னொரு சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டிருப்பதாகவும், டோக்கியோ, சிட்னி ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டு வரும் அலுவலகங்கள் தவிர ஓசாகா, மெர்ல்பெர்ன் ஆகிய இடங்களிலும் தனி நபர் நிர்வகிக்கும் அலுவலகங்கள் ஆஸ்திரேலியா மற்றும் கிழக்கு ஆசியாவில் அமைக்கப்பட விருப்பதாகவும் தெரிவித்தார். தாய்லாந்து, மலேசியா ஆகிய இடங்களிலும் இதே மாதிரி அலுவலகங்களைத் திறக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் ஆசியா, கிழக்கு ஆசியா, பசிபிக் ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த் சுமார் 30க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர்.

# சுற்றுலாக் கொள்கையின் புதிய கண்ணோட்டம்





# சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்!

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நகரின் குடிநீர் வழங்கு வசதித் திட்டங்களைப் பெருக்கவும், வடிகால் வசதித் திட்டங்களை மேம்பாடு செய்யவும் ஓர் உயர் மட்ட ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்று சர்வ தேச வளர்ச்சி மேம்பாட்டுக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

சென்னைப் பெரு நகர வளர்ச்சிக்காக—நிரந்தரப் பலன் தரும் ஆக்கப் பணிகளுக்காக—சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலவிடப்பட்டுள்ளது. ரூ. 7 கோடி ஒதுக்கீட்டிற்கு எதிராக ஏழே கால் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் மன நிறைவு அளிப்பதாக உள்ளன.

நடப்பு நிதி ஆண்டைப் பொறுத்த வரையில், அதாவது 1977-78ல் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுடன் கூடப் புதிய திட்டங்களுக்காக ரூ. 25 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடந்த ஆண்டு செலவு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விட ரூ. 6 கோடி அதிகமாகும். ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட விருக்கும் திட்டங்களுக்கான செலவையும் சேர்த்தால் மொத்தம் ரூ. 45 கோடி, நடப்பு நிதி ஆண்டில் செலவிடப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடி நீர் வசதியைப் பெருக்குவது, நீர் ஆதாரங்களைப் பெருக்குவது, வடிகால் வசதிகளை மேம்பாடு அடையச் செய்வது ஆகியவற்றுக்காக தனி உயர்மட்ட அமைப்பு ஒன்று நிறுவ வேண்டும். குடி நீர் வழங்கு திட்டத்தைச் செம்மையாகச் சீரமைத்து நீர் வழங்குவதை முறைப்படுத்த வேண்டும் என்று சர்வ தேசக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இது கருத்தில் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி, அடிப்படைச் சுகாதார வசதிகளைச் செய்துதருவது, தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்குதல், ஓய்வு நேரத்தில் சம்பாதிப்பதற்கான தொழில் திட்டங்கள் போன்றவைகளை உலக வங்கியின் உதவி பெற்று நிறைவேற்றவும் கருதப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் சென்னை மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து வசதித் தேவைகளைச் செய்து கொடுப்பதற்காக விரைவுப் போக்குவரத்துத் திட்டங்களைப் பல கட்டங்களில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக திருவல்லிக்கேணி பாரதி சாலையிலிருந்து (பைக்கிராஃப்ட்ஸ் சாலை) கடற்கரை மின்சார இரயில் நிலையம் வரையில் இரயில் விடப்படும். இதற்கு ரூ. 24 கோடி செலவிடப்படும். பெரும்பாலும், இது, தரைமட்டத்தில் ஓடும் இரயிலாகத்தான் இருக்கும்.

இரண்டாவது கட்டமாக பாரதி சாலையிலிருந்து மயிலாப்பூர் லஸ் முனைக்கும்,

மூன்றாவது கட்டமாக லஸ் முனையிலிருந்து அடையாறு கஸ்தூரி பாய் நகருக்கும், நான்காவது கட்டமாக கடற்கரை (பீச்) மின் இரயில் நிலையத்திலிருந்து மணலிக்கும் போக்குவரத்து மேம்பாட்டு வசதித் திட்டத்தின் கீழ் இரயில்கள் விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, புறநகர்ப் பகுதிகளிலிருந்து சென்னைக்கு வருவோர் வசதிக்காகக் கூடுதல் மின்சார இரயில்கள் அதிகம் விடுவதற்கு வசதியாக இரயில் பாதைகள் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. சென்னை-திருவள்ளூர், சென்னை-கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களுக்கிடையே மின்சார இரயில் விடவும், இவற்றைத் தாம்பரம்-கடற்கரை (பீச்) மின்சார இரயில் நிலையங்களுடன் இணைக்கவும், சென்னையைச் சுற்றி வட்ட இரயில் பாதை அமைக்கவும் திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிதி வசதியைப் பொறுத்து இத்திட்டங்கள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும். மணலி—மறைமலை நகர் ஆகிய புறநகர்த் திட்ட வேலைகள் துரிதமாக முன்னேறி வருகின்றன.

**(மத்திய அரசு வீட்டு வசதித் துறைச் செயலாளர் திரு என். ஜே. காமத் அவர்கள் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்த செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டது).**




# வீட்டுக்கொரு இயங்கு எரிவாயு சாதனம் அவசியம்

இந்தியா தன்னுடைய தேவைகளில் ''தன்னிறைவைப்'' பெற வேண்டும் என்ற நமது அறைகூவலின் விளைவு, உணவு உற்பத்தியில் தன்னிறைவும், உடைகளின் தேவைகளிலே தன்னிறைவும் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சக்தி தேவைகளில் (Energy requirements) நாம் இன்னும் தன்னிறைவு பெற்றோம் அல்லோம். சக்தித் தேவை ஒரு பரந்த கடலாகக் காட்சி அளிக்கிறது. இந்தத் தேவையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் எரிபொருள் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது. எரி பொருளாகப் பயன்படுத்த, குறைந்த செலவில் கிடைக்கக் கூடிய வழிமுறைகளைப் பற்றிய ஆராய்ச்சி பெரிதளவில் நடைபெறுகிறது. மேற்சொல்லப்பட்ட ஆராய்ச்சிகளில் ஒன்றாக கிராமப் புறங்களில் திரண்டு கிடக்கும் ஆய் பொருள்களாலும், இயற்கை அளித்துள்ள உன்னதமான படைப்புகளைக் கொண்டும் உழவர் பெருமக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் சக்தியினை அளித்திட முடியுமா என்பதனைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பண்ணை இயந்திரத் துறையினரால் (Department of Farm machinery) நடத்தப் பெற்றது. அதன் பயனாக எழுச்சியுற்றதுதான் ''இயற்கை எரி பொருள் சாதனம்''.

**இயற்கை எரிவாயு—ஒரு விளக்கம்**

காற்றில்லா வெற்றிடத்தில் வாழும் உயிர்ப் பொருட்கள் குறைப்பு முறையினால் அங்ககப் பொருட்களில் வேதியியல் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அங்ககப் பொருள்கள் பிளக்கப்பட்டு 'குளுகோஸ்' மூலக் கூறுகளில் மாறுதல் உண்டாகும்போது கார்களின் சக்தி மீத்தேனாக வெளியேறுகிறது. இவ்வாறு அங்ககப் பொருள்களாகிய பண்ணை உரம், வைக்கோல் மற்றும்

கழிவுப் பொருள்கள் மாற்றங்கள் அடைவதால் கிடைக்கும் 'மீத்தேன்' எரிபொருளாக விளங்குவதால் தற்போதைய எரிபொருட் பற்றுக் குறை நிலையில் மிகவும் முன்னேற்றமாக கருதப்படுகிறது. புதிய உரத்தில் 'செல்லுலோஸ்' மற்றும் 'ஹெமி செல்லுலோஸ்' 18 சதவிகிதம் முதல் 29 சத விகிதம் வரை உள்ளது. மேற்படி வேதியியல் மாற்றங்களினால் 'நைட்ரஜன்' நீரில் முன்னிலையில் சேகரிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் 'நைட்ரஜன்' நிலை நாட்டுதல் எதிர்பார்க்கப்படுவதில்லை. மாட்டுச் சாணத்தில் தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து (N. P. K.) பின்வருமாறு :

$N_2$—1.4 சதம் முதல் 1.8 சதம் வரை.

$P_2O_5$—1.1 சதம் முதல் 2.0 சதம் வரை.

$K_2O$—0.0 சதம் முதல் 1.2 சதம் வரை

மாட்டுச் சாணத்திலிருந்து கிடைக்கும் வாயுக்களின் பருமன் அளவு சராசரியாகப் பின்வருமாறு உள்ளது :

மீத்தேன் —50 முதல் 60 சதம்

கரியமிலவாயு—30 முதல் 40 சதம்

ஹைடிரஜன் — 5 முதல் 10 சதம்

நீராவி மற்றும் 'ஹைடிரஜன் சல்பைடு' சிறிதளவு. ஒரு நாளைக்கு ஒரு மாட்டின் சராசரி சாணத்தினளவு 10 கிலோ. அதிலிருந்து 13 முதல் 33 கன அடி வாயுவை ஒரு நாளில் உற்பத்து செய்ய இயலும். ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்குத் தேவையான எரிவாயு சுமார் 12 முதல் 15 கன அடி. அதாவது 0.16 கிலோ வாட் சக்தி கொடுக்கவல்லது எனத் தெரிய வருகிறது. இவ்வாறு உண்டாக்கப்பட்ட வாயு ஒரு கன மீட்டருக்கு 4,500 முதல் 6,000 கலோரிகள் சக்தி கொண்டுள்ளது. 6,000 கலோரிகளின் மதிப்பு கீழ்க்கண்டவைகளுக்குச் சமமாக்கப்படலாம் :

1.10 லிட்டர் சாராயம்.

0.8 லிட்டர் பெட்ரோல்

0.6 லிட்டர் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்

1.5 கன அடி வீட்டு எரிவாயு

1.4 கிலோ விறகு கரி.

2.2 கிலோ வாட் மணி மின்சார சக்தி.

இயற்கை எரிவாயு இயந்திரத்தின் மூலம் 730 கிலோ உரமானது ஒரு டன் (1,000 கிலோ) சாணத்திலிருந்து கிடைக்கிறது. ஆனால் பழைய முறைப்படி 500 கிலோதான் கிடைக்கும்; அதாவது சாணத்தை நேராக எரு ஆக்கும் முறையில் கால்நடைகளின் சாணம் முக்கியமாகப் பசு, எருது இவைகளின் சாணம் எரிபொருளாகவும், உரமாகவும் பயன்படுத்தப் படுகின்றது. சாணம் எரி பொருளாகப் பயன்படுத்தப்படும்போது உரமாகப் பயனுவதில்லை. உரமாகப் பயன்படுத்தும் பொழுது எரிபொருளாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை இழந்து விடுகிறோம். ஆனால் சாண எரிவாயுச் சாதனத்தைப் பயன்படுத்தினால் 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பது போல, சாணத்தினை எரிபொருளாகவும், அதே சமயம் உரமாகவும் பயன்படுத்திக் கொள்கின்றோம்.

கால்நடை எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், வீட்டு எரிபொருள் சரியாகக் கிடைக்காததாலும் காதி கிராம தொழில் வாரியம் போன்றவற்றின் மூலமாக இயற்கை வாயு இயந்திரங்கள் நல்ல செல்வாக்கை அடைந்து வருகின்றன. ஆகவே இந்த இயற்கை வாயு இயந்திரத்தைச் செல்வாக்கடையச் செய்யும் பொருட்டு, அதனுடைய அமைப்பில் ஏற்படும் சில குறைபாடுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

## எரிவாயு சாதனத்தின் அடைப்படை அமைப்பு

இயற்கை உரங்களிலிருந்து மீத்தேன் வாயு உற்பத்தி செய்யும் சாதனம் இந்தியாவில் 1900-ஆம் ஆண்டில் முதல் முறையாக உருவாக்கப்பட்டது. நகராட்சிகள், நகரங்களிலிருந்து வரும் சாக்கடைக் கழிவு நீரை மேற்கூறிய 'மீத்தேன்' என்னும் எரி வாயுவை உற்பத்தி செய்யப்பயன்படுத்தின. இத்தகைய சாதனங்களின் அமைப்பானது சிறு செரிப்பான்களையும் (digesters), வாயுக் கொள்கலங்களையும் (Gas holders) தனித்தனியே கொண்டிருந்தன. 'மீத்தேன்' எரிவாயு வாயுக் கொள்கலன்களில் சேமிக்கப்பட்டு சமையலுக்கும், விளக்கு எரித்தலுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஒரே சீரான வாயு உற்பத்தி கிடைக்கப் பெறுதலுக்கு இரண்டு அல்லது மூன்று செரிப்பான்கள் தேவைப்படுகின்றன. 2 மீட்டர் × 2 மீ × 2 மீ. அளவுள்ள செரிப்பான்கள் உகந்ததென ஆராய்ச்சிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்செரிப்பான்கள் சதுர வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ அல்லது வட்ட வடிவிலோ அமைக்கப்படுகின்றன. செவ்வக வடிவத் தொட்டிகளை வட்ட வடிவத் தொட்டிகளைவிட எளிதில் அமைத்து விடலாம். ஆனால் வட்ட வடிவ கட்டமைப்புகள் நீர் அழுத்தத்தையும், வெளி மண் அழுத்தத்தையும் எளிதில் எதிர் கொள்கின்றன. இதனால் இவைகளின் நீடிப்புக் காலம் (Life Period) அதிகரிக்கப்படுகிறது. மேலும் வட்ட வடிவ அமைப்புகள் மெல்லிய சுவர் கொண்டதாக விளங்குகின்றன.

எரி வாயுவின் அளவிற்குத் தக்கபடி நீரினூடே மேலும் கீழும் செல்லும் வாயு கொள்கலன்கள் பொதுவாக வட்ட வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. கொள்கலன்களின் சுவருக்கும், செரிப்பான் தொட்டிகளின் சுவருக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள கழிவு நீரானது உற்பத்தி செய்யப்பட்ட வாயு கொள்கலனிலிருந்து வெளிவருதலைத் தடுக்க ஏதுவாக ஒரு மூடியாக விளங்குகிறது. கழிவு நீரில் மிதக்கும் இக்கொள்கலன்கள் மேலும் கீழும் செல்லும்பொழுது அதன் அசைவமைப்புக்கள் சரி நேராக்கப்படுதல் வேண்டும்.

லக்னோவிலுள்ள திட்ட ஆராய்ச்சிச் செயல்முறைக் கழகம் (Planning research and action Institute) காதி கிராமத் தொழில் குழு அமைத்த எரிவாயு சாதனத்தில் சில மாற்றங்களைச் செய்தது. கரைசலைக் கலக்க கலக்கிகளும், வெப்பப்படுத்தும் அமைப்புகளும், வெப்பப் பரவுதல் அமைப்புகளும் புதிதாக அமைக்கப்பட்டன. ராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தின் எரிவாயு சாதன அமைப்பு ஒரு செரிப்பானையும். இரண்டு வாயுக் கொள்கலன்களையும் கொண்டுள்ளது. இக்கொள்கலன்கள் ஒன்றின் மீது ஒன்றாக கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் 100 கன அடி எரி வாயுவை உற்பத்தி செய்யும் சாதனம் சுமார் ரூபாய் 1,600—2,300 விலை என 1970—71ஆம் ஆண்டில் குறிக்கப்பட்டது. தற்சமயம் இதே அளவு சாதனம் சுமார் ரூ. 3,000—4,000 வரை விலை குறிக்கப்படுகின்றது.



இயற்கை எரிவாயுச் சாதனங்களை அமைப்பதிலும், பயன்படுத்துவதிலும் கீழே குறிப்பட்டுள்ள பிரச்சினைகள் ஏற்படுகின்றன :

(அ) வாயுக் கொள்கலன் துருப்பிடித்தல்.

(ஆ) செரிப்பான்களில் ஏற்படும் அடைப்பும், உலர்பந்து விடுதலும்.

(இ) குளிர்காலங்களில் வாயு உற்பத்தி கணிசமாகக் குறைதல்.

(ஈ) செரிப்பான்கள், அமைக்கப்படுதலில் உள்ள கட்டமைப்புகள் 'வேலைகள்' மண் தோண்டுதல், செங்கல், சிமெண்ட் கொண்டு அமைக்கப்படும் வேலைகள் அதிக ஆட்களையும், அதிகப் பணத் தொகையினையும் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டியதாயுள்ளது.

(உ) சாதனம் தரை மட்டத்திற்குக் கிழே அமைக்கப்பட்டுள்ளதால் செரிக்கப்பட்ட கரைசல் வெளியேற்றப்படுதல் கடினமாக உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முயற்சிகள் :—

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பண்ணைப் பொறியியல் துறை இயற்கை எரிவாயுச் சாதனத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனாக மேலே குறிக்கப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அனுகூலங்கள் இவ்வமைப்பின் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

(அ) எரி வாயுக் கொள்கலன் நீரோடும், காற்றோடும் தொடர்பு கொள்ளும் பொழுது 'ஃபெரிக் ஆக்ஸைட்' சாதனத்தை அரிக்கும் திறனைப் பெற்றுள்ளது. செரிப்பானையும் கொள்கலனையும் ஒன்றாக இணைத்தல் மூலம் இதனை நீக்கலாம். தவிரவும் சாதனத்தினுள் மேலும் கீழும் அசைவை உடைய அமைப்பும் நீக்கப்படுகின்றது.

(ஆ) பழைய முறைப்படி அமைக்கப்பட்டு உள்ள எரிவாயுச் சாதனங்களில் வாயுவின் அழுத்தம் வெளிச்செல்லும் குழாய், உள் குழாய் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்க முடிவதில்லை. ஆனால் புதிய அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள நிலையான கொள்ளளவும், நிலையில்லா அழுத்தம் கொண்ட எரிவாயு கொள்கலன் மேற்சொன்ன குறையினை நீக்குகின்றது.

(இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை எரிவாயு உற்பத்தியின் அளவினை வெவ்வேறு வெப்ப நிலைகளிலும், செரிப்புக் காலங்களிலும் கிடைக்கப் பெறுதல் குறிக்கின்றது.

| வெப்பநிலை (டிகிரி செண்டிகிரேடு) | ஒரு நாளைய வாயு உற்பத்தி (கன மீட்டர்) | செரிப்புக் காலம் (மாதங்களில்) |
|---|---|---|
| 15 | 0.150 | 12 |
| 20 | 0.30 | 6 |
| 25 | 0.60 | 3 |
| 60 | 1.00 | 2 |
| 35 | 2.00 | 1 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் குளிர் காலங்களில் வாயு உற்பத்தி குறைகின்றது என்பதைத் தெளிவாகக் குறிக் கின்றன. இதனை நீக்கத் தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழகம் அமைத்துள்ள எரிவாயுச் சாதனத்தில் இரண்டு கலக்கிகள் பொருத்தப் பட்டுள்ளன. இவை வாயு உற்பத்தியினை அதிகரிக்கின்றன. ஆனால் தென்னிந்தியா வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளதால் இத் தகைய பிரச்சினை எழுவதில்லை.

(ஈ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்துள்ள எரி வாயுச் சாதனம் ஓர் இயங்கும் எரிபொருள் சாதனம் ஆகும். அதாவது இச்சாதனத்தைப் பயன் படுத்துவோர் விருப்பப்படி எவ்விடத்தில் வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். சுருக்கமாகக் கூறின் இச்சாதனம் ஒரு ''நடமாடும் சாதனம்'' ஆகும்.

(27-ஆம் பக்கம் பார்க்கவும்)



பரத நாட்டியத்தின் சிறப்பைப் பாரெங்கும் விளக்கிடும் வகையில் தமிழ்நாடு அரசும், தேசிய கலாகேந்திரமும் (National Institute of Performing Arts) இணைந்து 'பாலா' என்ற திரைப்படத்தை உருவாக்கியுள்ளன. பரத நாட்டியத்திற்கே தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டுள்ள—'பரத நாட்டியப் பேரரசி' என்று பெயர் பெற்றுள்ள— திருமதி பாலசரஸ்வதி அவர்கள் நடித்து, புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித் ரே அவர்களால் இயக்கப் பெற்றுள்ள 'பாலா' திரைப்படம் 19—4—77 அன்று சென்னை பிலிம் சேம்பர் அரங்கில் முதன்முதலாகத் திரையிடப் பெற்றது. இத்திரைப்பட வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு தற்காலிக ஆளுநர் திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள், பரத நாட்டியத்திற்குத் திருமதி பாலசரஸ்வதி அவர்கள் செய்துள்ள சேவையைக் குறிப்பிட்டுப் பாராட்டியதுடன், அவருக்குப் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தார்.

# படமும் செய்தியும்



சென்னைக்கு 22—4—1977 அன்று வருகை தந்த ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் வெளியுறவு அமைச்சர் திரு. ஹான்ஸ் டயட்ரிச் ஜென்ஸ்செர் அவர்களைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்கள் வரவேற்றார்.



சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள் 9—4—1977 அன்று தமிழ் நாட்டின் தற்காலிக ஆளுநராகப் பதவி ஏற்றார். சென்னை உயர்நீதி மன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதி திரு. பி. ராம பிரசாத் ராவ் அவர்கள், திரு. வி. கோவிந்தன் நாயர் அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்திய அரசின் எரிபொருள்
அமைச்சர் திரு பா. ராமச
அவர்கள் 12—4—1977
தமிழ்நாடு அரசின் தலைமைச் செ
தில், தமிழ்நாடு அரசின் உயர் அ
களுடன் ஆலோசனை நடத்தினார்.



# படமும் செய்தியும்!



சென்னைக்கு வருகை தந்த இந்திய அரசின் எரிபொருள் துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்களும், நல்வாழ்வு குடும்பநலத் துறை அமைச்சர் திரு ராஜ் நாராயணன் அவர்களும் காமராஜர் நினைவாலயத்தில் மலர் வளையம் வைத்து வணங்கினர்.

சென்னைக்கு 15—4—1977 அன்று வருகை தந்த இந்திய அரசின் பெட்ரோலியம், இரசாயனப் பொருள் மற்றும் இரசாயன உரத் துறை அமைச்சர் திரு எச். என். பகுஹுணா அவர்களைத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.





இந்திய அரசின் எரிபொருள் துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள், 13—4—1977 அன்று சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதையைத் திறந்து வைத்தார்.



அனைத்து இந்திய 23-வது கைத்தறிப் பொருட்காட்சியைத் தமிழ்நாடு அரசின் தொழில் துறைச் செயலாளர் திரு. டி. என். சேஷன் அவர்கள் 3—4—1977 அன்று சென்னையில் துவக்கி வைத்துப் பொருட்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்.



உலக வங்கியைச் சார்ந்த ஊட்டச் சத்துணவுக் குழு, சென்னை மாநகரில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு 'இரும்புச் சத்து நிறைந்த உயர்தர உப்பு' (Fortified Salt) வழங்குவது பற்றித் தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறைச் செயலாளர் திரு. ஜி. திருமால் அவர்களுடன் 4—4—1977 அன்று ஆலோசனை நடத்தியது.



தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்களுக்காக, சென்னை இராஜாஜி மண்டபத்தில் 8—4—1977 அன்று, நடத்தப்பெற்ற பிரிவு உபச்சார விழாவில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கினார்.

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 9—4—1977 அன்று தமிழக மக்களிடமிருந்து விடைபெற்றார்.



(21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இயற்கை எரிவாயுச் சாதனம்

(மாதிரி வரைபடம்)




விளக்கம் :

(1) தாங்கி. (2) கலக்கி. (3) சாணக் கரைசல் உள்செல்லும் குழாய். (4) அடைப்பான். (5) கன சதுர கொள்கலன். (6) வாயு வெளியேற்றுக் குழாய். (7) அடைப்பான். (8) காம்பு. (9) செரித்த கரைசல் வெளியேற்றுக் குழாய் அடைப்பான். (10) செரித்த கரைசல் வெளியேற்றுக் குழாய். (11) அடைப்பான். (12) கலக்கிகளின் தகடு. (13) தடுப்புச் சுவர் (துளை கொண்டது).

## புதிய அமைப்பு

*படத்தில் காட்டப்பட்டுள்ள இயற்கை எரிவாயுச் சாதனம் 4 கால்கள் கொண்ட இரும்புத் தாங்கிகளின் மேல் அமைக்கப்பட்டு உள்ளது. இச்சாதனத்தின் முக்கிய பாகங்கள்:*

*1. இரும்புத் தாங்கிகள்.*

*2. இரண்டு அறைகள் கொண்ட கன சதுர அமைப்பு (10 காஜ் உருக்குத் தகட்டால் செய்யப்பட்டது).*

*3. பாதி உயர, துளைகள் இடப்பட்ட தடுப்புச் சுவர்.*

*4. அடைப்பான்கள்.*

இப்பாகங்களின் அளவுகள் :—

*அடிப்பாக அளவு : 1.28 .மீ. ; 1.28 மீ.; 0.635 .மீ.*

*கொள்கலன் : 1.28 மீ. ; 1.28 மீ ; (1.09 : :0.19 : :0.18 மீ.)*

*கலக்கிகள் : 2.5 செ.மீ. விட்டம் கொண்ட இரும்புக் கழிகள் 'ட' வடிவ 1.2 செ.மீ. விட்டமுள்ள சதுரங்கள். 4 செ.மீ. அகலமும் 20.3 செ.மீ. நீளமுமுள்ள தகடுகள்.*

*வெளியேற்றக் குழாய் : 1.875 செ.மீ. துருப்பிடிக்காக் குழாய்.*

வெளியேற்றக் குழாய் அடைப்பான் : 1.875 செ.மீ. விட்டம்.

கொள் கலனின் கொள்ளளவு : 1.8 கன மீட்டர்.

தடுப்புச் சுவருக்கு மேலுள்ள இடத்தின் கொள்ளளவு : 1.35 கன மீட்டர்.

இக்கன சதுர சாதனம் 10 'காஜ்' உருக்குத் தகட்டால் செய்யப்பட்டது. (பாகம் 5). நடுவில் பாதி உயரத்திற்குத் துளைகள் இடப்பட்ட ஒரு தகட்டால் (பாகம் 13) இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு அறையில் புது சாணக் கரைசல் உள்ளே செல்லும் குழாய் (பாகம் 3) ஒரு மூடியுடன் (பாகம் 4) பொருத்தப்பட்டுள்ளது. அதன் எதிர்ப் புறத்திலுள்ள அறையில் இக்குழாய்க்கு 15 செ.மீ. தாழ்வாக மற்றொரு குழாய் (பாகம் 10) ஒரு மூடியுடன் (பாகம் 9) செரிக்கப்பட்ட கரைசலை நிரப்பும்பொழுது மேற்சொன்ன இரண்டு குழாய்களும் திறக்கப் பட்டிருத்தல் வேண்டும். இதனுல் செரிக்கப் பட்ட கரைசல் எளிதில் வெளியேறுகிறது. மேற்புறத்தில் வாயு வெளியேறும் குழாய் (பாகம் 6), ஒரு அடைப்பானுடனும் (பாகம் 7), ஒரு காம்பு போன்ற அமைப்புக் கொண்டும் (பாகம் 8) பொருத்தப்பட்டுள்ளது. அடிப் புறத்தில் தொட்டியைச் சுத்தம் செய்ய வசதி யாக அடைப்பான்கள் (பாகம் 11) இரண்டு பொருத்தப்பட்டுள்ளன. குளிர் காலங்களில் வாயு உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு இரண்டு கலக்கிகள் (பாகம் 2) பொருத்தப்பட் டுள்ளன.

கொள்கலனில் கரைசலை நிரப்பியவுடன் அடைப்பான்களை (பாகம் 9, ப7கம் 4) மூடி விட வேண்டும். அப்பொழுதுதான் வாயு உற்பத்தியும், வாயு சேகரிப்பும் எளிதில் நடைபெறும்.

## இயங்கும் விதம்

சாணமும், தண்ணீரும் 1: 1 என்ற விகி தத்தில் கலந்த கரைசலை ஒரு புனல் மூலம் புது சாணக் கரைசல் உள்ளே செல்லும் குழா யில் ஊற்ற வேண்டும். இச்சமயத்தில் வெளிக் குழாய் (பாகம் 10) திறந்திருத்தல் வேண்டும். இதனுல் உள்ளே செல்லும் குழாயின் வழியாக ஊற்றப்படும் சாணக் கரைசலின் அளவிற்கு செரிக்கப்பட்ட சாணக் கரைசல் வெளியேற்றும் குழாயின் வழியே வெளியேறும். கரைசலை ஊற்றி முடிந்தவுடன் அடைப்பான்களை மூடி விடல் வேண்டும். 23 நாட்களுக்குப் பிறகு வாயு வெளியேற்றும் குழாயின் அடைப்பானைத் திறத்தல் வேண்டும். முதலில் 'ஸ்' என்ற ஒலியுடன் வரும் வாயு சிறிதளவு கரியமில வாயுவையும் கொண்டிருக்கும். மூன்று நாட் கள் கழித்து மீத்தேன் வாயு உற்பத்தி துவங்கும். புதிய சாணக் கரைசல் நாள்தோறும் வாயு முழுதும் உபயோகித்தபின் ஊற்றப்படல் வேண்டும். நம்முடைய அன்ருடத் தேவைக்கு ஏற்பச் சாணக் கரைசலை ஊற்றிக் கொள்ள லாம்.

வெவ்வேறு உபயோகங்களுக்கான எரி வாயுவின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன :

(அ) சமையலுக்கு —2 கன மீட்டர்/ நாள்/5 பேருக்கு (5 பேருக்கு ஒரு நாளையின் தேவை).

(ஆ) தண்ணீரை வெப்பப்படுத்த 3 கன மீட்டர் / நாள் / 100 லிட்டர் (100 லிட்டர் தண்ணீர் ஒரு நாளில்).

(இ) விளக்கு எரிக்க : 0.10—0.15 கன மீட்டர் (1 மணி நேரம் ஒரு விளக்கு எரிய).

இச்சாதனத்தின் மூலம் கிடைக்கப்பெறும் எரி வாயுவை டீசல் இயந்திரத்தை இயக்குவ தற்கும் பயன்படுத்தலாம். இரண்டு குதிரைத் திறனுள்ள டீசல் இயந்திரம் இயங்க 0.5 கன மீட்டர் வாயு ஒரு மணி நேரத்தில் தேவைப்படும். வாயு நிலையாகத் தொடர்ந்து கிடைப்பதற்கு ஏதுவாக கொள்கலனை ஒவ் வொரு நாளின் இறுதியில் நிரப்புதல் வேண் டும். மேலும் இவ்வாயுவினை டீசல் இயந்திரத் தில் எரி பொருளாகப் பயன்படுத்தும் பொழுது இயந்திரத்தின் எரிபொருள் நுழைவுக் குழா யில் காற்று வடிப்பானுக்குக் கீழே ஒரு காம்பு அமைப்பினைப் (Nipple) பொருத்தல் வேண் டும். காற்றும், மீத்தேன் வாயும் உள்ளே செல் வதற்கு இஃது உதவி புரிகின்றது. எரிவாயுச் சாதனத்தின் வாயு வெளிச் செல்லும் குழா யில் பொருத்தப்பட்டுள்ள அடைப்பானை மூடி யிருக்கும் பொழுது காற்று மட்டும் இயந்திரத் தினுள் செல்லும். மீத்தேன் வாயுவை இயந்தி ரத்தினுள் மெதுவாகச் செலுத்தும்பொழுது துவக்கத்திற்கு டீசல் எரிபொருள் இயந் திரத்தை இயக்குதலில் உதவி புரிகின்றது. 'மீத்தேன்' வாயுவின் அளவிற்குத் தக்கபடி டீசலின் அளவும் கட்டுப்படுத்தப்படுகிறது. மீத்தேன் வாயுவை இயந்திரத்தின் எரி பொரு ளாக பயன்படுத்துவதின் மூலம் காற்றில் ஏற்படும் அசுத்தக் கலப்பு தடுக்கப்படுகின் றது. சாதனத்திலிருந்து கிடைக்கப் பெறும் வாயுவை நிலையான கொள்கலன்களில் 8 கிலோ ச.செ.மீ. அழுத்தத்தில் சேமித்து



சாண எரிவாயு அடுப்பு.

## புதிய அமைப்பும்—பழைய அமைப்பும்—ஓர் ஒப்புமை

| எண் | விவரங்கள் | பழைய அமைப்பு | புதிய அமைப்பு |
|---|---|---|---|
| 1. | கொள்ளளவு | 100 கன அடி | 70 கன அடி |
| 2. | கொல்லர் வேலை | தேவை | தேவையில்லை |
| 3. | சிமெண்ட்/செங்கல் | தேவை | தேவையில்லை |
| 4. | இடம்விட்டு இடம் அசையும் அமைப்புகள் | உண்டு | இல்லை |
| 5. | பாகங்களில் ஏற்படும் அரிப்பு | அதிகம் | குறைவு |
| 6. | இட அமைவு | தரை மட்டத்திற்குக் கீழ் | தரை மட்டத்திற்கு மேல் |
| 7. | சாதனத்தின் இடமாற்றம் | இல்லை | உண்டு |
| 8. | வாயு சேகரிப்பு | நிலையான அழுத்தம், நிலையில்லாக் கொள் அளவு | நிலையான கொள் அளவு, நிலையில்லா அழுத்தம் |
| 9. | விலை (1976) | ரூ. 5,000. | ரூ. 2,000. |
| 10. | தண்ணீர் அடைப்பு | உண்டு | இல்லை |
| 11. | குழாய்களில் ஏற்படும் அமைப்பு | அதிகம் | குறைவு |
| 12. | செரிக்கப்பட்ட கரைசல் வெளியேற்றம். | கடினம் | எளிது |

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணை பழைய அமைப்புச் சாதனத்திற்கும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டு பிடித்துள்ள புதிய அமைப்பிற்கும் உள்ள வேற்றுமைகளைத் தெளிவுற எடுத்துரைக்கிறது.

## உற்பத்திச் செலவுகளின் விவரம்

சமையலுக்கு இண்டென் ( INDANE ) வாயுவைப் பயன்படுத்துவதினுல் ஏற்படும் செலவும் சாண எரிவாயுவைப் (இயற்கை எரி வாயு) பயன்படுத்துவதினுல் ஏற்படும் செல வையும் கீழே கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு இண்டேன் வாயு சிலிண்டர் வேலை செய்யும் நேரம்—60 மணி.

விலை—ரூ. 30.

ஃ ஒரு மணி நேர வாயுவின் விலை—0.50

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய இயற்கை எரிவாயுச் சாதனத் தின் விலை—ரூ. 2,000(C)

அன்ருட வாயு உற்பத்தி—13—33 கன அடி/மாடு.

5 நபர் கொண்ட ஒரு குடும்பத்தின் தேவை—45 கன அடி.

சாதனத்தின் ஆயுட்காலம் (L)— 10 ஆண்டுகள்.

சராசரி வேலை செய்யும் நேரம் (H) — 1,000 மணி/ஆண்டு.

$$\text{தேய்மானம்/மணி} = \frac{C—S}{L \times H} \qquad \frac{\frac{2,000—2,000}{10}}{10 \times 100}$$

S என்பது இயந்திரத்தின் கழிவு விலை (10 சதம்) : ரூ. 0.18/மணி

வட்டி/மணி (15 சதவீதம்)

$$\frac{C+S}{2} \times \frac{i}{H}$$

i என்பது வட்டி வீதம்

$$(2{,}000 \times \frac{2{,}000'}{10} \times \frac{1}{2} \times \frac{15}{1000} \times \frac{1}{1000}$$

—ரூ. 0.17/மணி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இயற்கை எரி வாயு சாதனத்தைப் பயன்படுத்துவதினால் ஆகும் செலவு } ரூ.0.18 + 0.17 = ரூ. 0.35

(சாணமும், ஆட்களின் செலவும் இல்லையெனக் கொள்க)

எனவே ரூ. 0.15/மணி இப்புதிய சாதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மீதப் படுத்தப்படுகிறது.

டீசல் இயந்திரத்தை டீசல் மட்டும் பயன்படுத்தி உபயோகப்படுத்துவதினால் ஆகும் செலவு, இயற்கை எரி வாயு டீசல் இரண்டும் சேர்ந்து பயன்படுத்தி உபயோகப் படுத்துவதினால் ஆகும் செலவும் கீழே கணக்கிடப்பட்டுள்ளன.

**டீசல் மட்டும் :**

டீசல் தேவை—1.5 லிட்டர்/மணி

1.5 லிட்டர் விலை—1.5 1.40

1 லிட்டர் விலை ரூ. 14.0 : ரூ. 2.10

**டீசல் இயற்கை எரிவாயு கலந்து பயன்படுத்துவதனால் :**

டீசல் தேவை—1 லிட்டர்/மணி

விலை—ரூ. 1.40

எரி வாயு தேவை—2.25 கன மீ/மணி

0.47 க.மீ. இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்ய ரூ. 0.35 தேவை.

∴2.25 க.மீ. எரிவாயு விலை—ரூ. 1.68

∴டீசல் எரிவாயு செலவு—
ரூ.1.40+ரூ.1.68=3.08

இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதினால் ஆகும் செலவு அதிகமாக உள்ளது எனினும், கால்நடைகளின் கழிவுப் பொருட்களின் எரிபொருள் தன்மையைக் கொண்டு கணக்கிடும்பொழுது கீழ்க்கண்ட முடிவிற்கு வரலாம்.

டீசல் எரிவாயு —ரூ. 1.40
(எரிவாயு செலவு இல்லையெனக் கொள்க)

டீசல்—ரூ. 2.10

∴சேமிப்பு—ரூ. 0.70

இந்த சேமிப்பு அளவு அதிக மாறுதல்களுக்குட்பட்டது. இம்மாறுதல்கள் இயந்திரங்கள் வேலை செய்யும் நிலத்தின் அமைப்பு, இயந்திரத்தின் திறன் ஆகியவைகளைப் பொறுத்து மாறும். பண்ணைப் பொறியியல் துறையினர் நடத்திய சோதனையின்படி 19 முதல் 38 சதவீத எரிபொருள் சேமிப்பு கிடைக்கப் பெற்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இம்மாறுதல்களைக் காட்டுகின்றன :

| எண் | குதிரைத் திறன் (செயல்முறை) | எரிபொருள் செலவு (கிலோ மணியில்) | | சேமிப்பு கொள்ளளவு சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | டீசல் மட்டும் | டீசல்மீதேன் | (ஒரு மணியில்) | சதவீதம் (%) |
| 1 | 1 | 0.61 | 0.38 | 277 க.செ.மீ. | 37.7 |
| 2 | 2 | 0.64 | 0.41 | 277 ,, | 36.0 |
| 3 | 3 | 0.74 | 0.48 | 306 ,, | 35.1 |
| 4 | 4 | 0.89 | 0.64 | 294 ,, | 28.1 |
| 5 | 5 | 1.25 | 1.00 | 282 ,, | 19.2 |

சக்தித் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவும், பெட்ரோலிய எரி பொருட்களின் செலவினைக் குறைக்கவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய ''இயங்கு இயற்கை எரிவாயு சாதனத்தினை'' கிராமங்களில் அமைத்தல் வேண்டும். கடலெனக் காட்சியளிக்கும் நம் நாட்டின் சக்தித் தேவைகளை நிறைவேற்ற இச்சாதனம் பெரிதளவில் உதவும்.

**முடிவுரை**

எரிவாயு ஆராய்ச்சியில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு மலர்ச்சி எழுச்சி புற்றது! ஒரு ''நடமாடும்'' எரிவாயுச்சாதனம் உருவாகியது! மகிழ்ச்சியுடனே மக்கள் பயன்படுத்திட 'ஒரு கல்லில் இரண்டு மாங்கனியென' கால்நடைகள் அளித்திடும் கழிவு, பயிர் செழிக்க நல்லுரமும் நா சுவைக்க சமையலுக்கு எரிபொருளும் கிடைக்கிறது. மேலும் கழனிகளுக்கு வளம் கூட்டும் டீசல் இயந்திரத்தின் எரிபொருளுக்கு ஒரு கூட்டு கிடைக்கிறது. எனவே நாட்டின் இன்றைய நடப்பிற்குத் தேவை வீட்டுக்கொரு 'இயங்கு எரிவாயுச் சாதனம்''.

# இந்தியக்கைத்தறிப் பொருள்கள்

**கை**த்தறி நெசவுத் தொழில் நம் நாட்டின் பெரிய குடிசைத் தொழிலாகும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் துறை மட்டுமே பெரும்பாலான மக்களுக்கு வாழ்க்கை வழியாக உள்ளது. இத்தொழிலில் சுமார் ஒரு கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

நம் நாட்டின் பருத்தித் துணி வகைகளின் உற்பத்தியில் கைத்தறித் துணிகளின் உற்பத்தி கணிசமான பங்கு வகிக்கிறது. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பருத்தித் துணிகளின் மொத்த அளவில் மூன்றில் ஒரு பங்கைக் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்றனர். 1976ஆம் ஆண்டில் 233 கோடி மீட்டர் நீளமுள்ள கைத்தறிப் பருத்தித் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள்ளாக, 3,000 கோடி மீட்டர் கைத்தறிப் பருத்தித் துணியை உற்பத்தி செய்யக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

நம் நாட்டின் துணி வகைகளின் மொத்த ஏற்றுமதியில் கைத்தறித் துணிகளின் பங்கு சுமார் 60 சதவீதமாகும். 1976-77-ல் 2,150 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

புதிய கைத்தறி அபிவிருத்தித் திட்டம், கிராம அபிவிருத்தி, கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரச் சீரமைப்பு இவற்றுக்கான புதிய வழிகளைத் திறந்துள்ளது. கைத்தறித் தொழிலுக்கென ஒரு மத்திய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள்ளாக கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்கென 50 கோடி ரூபாய் செலவிடப்படும்.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்கைத் தரங்களில் குறுகிய காலத்திற்குள் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கென 20 தீவிர கைத்தறி அபிவிருத்தித்திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கணிசமான நிதியுதவி அளித்துள்ளது. இதே போல கைத்தறித் துணி வகைகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதற்கென ஏற்றுமதி அபிவிருத்தி முனைப்புக் கொண்ட 21 திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்தல், கிராமப் புற வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் இவற்றில் தனக்குள்ள ஈடுபாடுகளை அரசாங்கம் ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய கிராமப் புறச் சீரமைப்புப் பணிகளைச் செயல்படுத்துவது, விரைவுபடுத்துதல் ஆகியவற்றில் கைத்தறி நெசவுக்குக் கணிசமான பங்கு உண்டு. தற்போது புது தில்லியில் நடைபெற்று வரும் முதலாவது தேசிய கைத்தறிக் கண்காட்சி, கைத்தறித் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு வகை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மஞ்சளோ மஞ்சள்!

## 1. மஞ்சள் இரகங்களும் நடவு முறையும்.

தமிழகத்தில் சாகுபடியிலிருப்பது 'மதராஸ் மஞ்சள்' என்னும் உள்ளூர் இரகமாகும். இது நாட்டு மஞ்சள் இரகத்தைச் சேர்ந்தது. கஸ்தூரி மஞ்சள் இரகமும் பயிரிடப்படுகின்றது. தற்போது 'துகிராலா' என்னும் குண்டூர் மஞ்சள் ஈரோடு பகுதிகளில் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தவிர 'தெக்கூர் பேட்டா', 'கஸ்தூரி பசுப்பு', 'சாய பசுப்பு' போன்ற இரகங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நம் மாநிலத்திற்கேற்ற இரகங்களைத் தேர்ந்தெடுக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மஞ்சள், இரு வகையான கிழங்குகள் மூலம் பயிரிடப்படுகின்றது. (1) உருண்டை அல்லது முட்டை வடிவாக அமைந்த தாய் மஞ்சள், (2) நீண்ட குறுகிய விரல் மஞ்சள். இவை இரண்டில் தாய் மஞ்சள் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். தாய் மஞ்சள் அதிகமில்லாத போது, 'விரல் மஞ்சளைப் பயன்படுத்தலாம். இதிலும் மூன்று முளைக் கண்கள் உள்ள மஞ்சள் துண்டுகளை நட்டால் போதுமானது. இதனால் விளைச்சல் குறைவதில்லை.

பண்படுத்தி, பார் அமைத்த நிலத்தில் தேர்ந்தெடுத்த விதைக் கிழங்குகளை 0.1 சதக் கரையும் செரசான் கலந்த நீரில் நனைத்து பாரின் ஒரு பகுதியில் 10 அங்குல இடைவெளிக்கு ஒன்றாக நட வேண்டும். ஏக்கருக்கு தாய் மஞ்சளானால் 700—800 கிலோவும், விரல் மஞ்சளானால் 500—600 கிலோவும் தேவைப்படும்.

## 2. மஞ்சளுக்கு உரமிட்டு மகசூலை உயர்த்துவோம்.

மஞ்சள் பயிருக்கு ஏக்கருக்கு 48 கிலோ தழைச் சத்து, 24 கிலோ மணிச் சத்து, 24 கிலோ சாம்பல் சத்து உரம் போதுமானது. மணிச் சத்து, சாம்பல் சத்து உரங்களை, நடும்போது அடியுரமாக இட வேண்டும். தழைச் சத்து உரத்தை, நடவு செய்யும் போது, 30-வது நாள், 60-வது நாள், 90-வது நாள், 120-வது நாள் ஆகிய காலங்களில் ஐந்து சமப் பிரிவுகளாகப் பிரித்து மஞ்சளுக்கும் சிறிது கீழே இடவேண்டும்.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவியல் துறையில் நடத்திய ஆய்வில் மேற்கண்டவாறு தழைச் சத்தை ஐந்து சமபாகமாக 10 கிலோ வீதம் இட்டதில்தான் அதிக மகசூலாக ஏக்கருக்கு 10,680 கிலோ கிடைத்து உள்ளது.

## 3. மஞ்சளில் செதில் பூச்சித் தடுப்பு முறை.

கோவை, திருச்சி மாவட்டங்களில் மஞ்சள் அதிகமாகச் சாகுபடியாகிறது. இப்பயிரை இலைப் பேன், செதிள் பூச்சி, கண்ணாடி இறக்கைப் பூச்சி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளும், தண்டு துளைக்கும் ஆமணக்குக் காய்ப் புழுவும், இலைப் புழுக்களும் தாக்கிச் சேதப்படுத்துகின்றன. இவற்றில் செதிள் பூச்சி நடவுக்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் விதைக் கிழங்குகளையும், நட்டபின் வளரும் கிழங்குகளையும் தாக்கி, சாற்றை உறிஞ்சிச் சேதம் விளைவிக்கிறது. இவை மிகச் சிறியனவாகவும், செதிள் போலச் சற்றுப் பருமனாகவும், பழுப்பு நிறத்துடனும், கிழங்கின் மேல் அடை அடையாக ஒட்டிக் கொண்டுமிருக்கும். விதைக் கிழங்குகள் தாக்கப்படுவதால் முளைப்பு பாதிக்கப்பட்டு, முளையும் காய்ந்து விடும். வளர்ந்த செடிகளில் கிழங்கு தாக்கப்பட்டால், செடியின் வளர்ச்சி குன்றியும், கிழங்கு சிறுத்தும் மகசூல் குறைந்தும் போகும்.

செதிள் பூச்சி தாக்காத கிழங்குகளை நடுவது மிகவும் நல்லது. மாறாக தாக்கப்பட்ட கிழங்குகளை பூச்சி கொல்லி மருந்து கொண்டு கட்டுப்படுத்திய பின் நடுவது அவசியம். இதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், பூச்சியியல் துறை ஓர் ஆய்வு செய்தது. அதன்படி செதிள் பூச்சியைக் கட்டுப்படுத்த 0.05 சதம் 'ஜோலோன்' 35 இ.சி. (1.5 மி.லி.(லி), 'நுவான் 100 இ.சி.' (0.5 மி.லி./லி), 'நுவாக்ரான் 40 இ.சி.' (1.25 மி.லி.)லி] 'ஃபாஸ்வெல் 34 இ.சி.' (1.5 (மி.லி./லி.) போன்ற ஏதாவது ஒரு மருந்துக் கலவையைத் தயார் செய்து, செதிள் பூச்சி தாக்கிய மஞ்சள் கிழங்குகளை 15 நிமிடம் அதில் மூழ்க வைத்து, பின் எடுத்து, உலர்த்தி, ஒரு வாரம் கழித்து நடவு செய்யலாம். இதனால் கிழங்கின் முளைப்புத் திறனும் பாதிக்கப்படுவதில்லை.

**தகவல்:**

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம், கோவை-3.**



# தமிழ்நாடு சமூக நலக் குழுவின் சீரிய பணிகள்



—சாரதா பரமேஸ்வரன்

"பெண்கள் இந்த நாட்டின் கண்கள்!" என்றால் மிகையாகாது. இந்த நாட்டின் வாழ்வும் வளர்ச்சியும், ஒளிமயமான எதிர்காலமும் பெண்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. ஆகவே, சமூக நலம் செழிக்க பெண்கள் முன்னேற்றம் இன்றியமையாததாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதுதான் நம் நேருஜி அவர்கள் வகுத்த ஐந்தாண்டுத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைய நாம் முக்கியமாக மேற்கொள்ள வேண்டியவைகளாவன:

1. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது.

2. பின்தங்கிய வகுப்பினருக்கும், மிகவும் பிற்போக்கான நிலையிலிருக்கும் மக்களுக்கும் நல்வாழ்வு நல்கிட மூலைமுடுக்குகளிலுள்ள கிராமங்கள் முன்னேற்றமடைய வழிவகுப்பது.

3. விதவைகள், ஊனமுற்றோர் முதலியவர்கள் வாழ்க்கையில் ஒரு அளவுக்கு மறுமலர்ச்சி அடையச் செய்வது.

4. முதியோர்களுக்குக் கல்வி கற்பிப்பதுடன் நாட்டில் உள்ள எல்லா மக்களும் கல்வி அறிவு பெற்றவராக இருக்கச் செய்தல்.

மேற்கண்ட இம்முன்னேற்றங்களையெல்லாம், செயல்படச் செய்யும் பொறுப்பேற்றிருப்பது தான் ''மத்திய சமூக நலக் குழுவாகும்''

**தோற்றம்.**

முதன்முதலாக 1944-ஆம் ஆண்டு பெண்கள் சமூகநலப் பிரிவு ஒன்று திருமதி. பாரிஜாதம் நாயுடு அவர்களின் தளரா முயற்சியாலும், கடுமையான உழைப்பினாலும் அமைக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பயிற்சி பெற்ற ஊழியர்களின் மூலமாக மற்ற கிராமங்களிலெல்லாம் கிளைச் சங்கங்கள் உண்டாயின. குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்கள் ஏற்பட, இக்கிளைச் சங்கங்கள்தான் முன்னோடிகளாய் இருந்தன.

மத்திய சமூக நலக்குழு 1953-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அமைக்கப்பட்டது. அதை அடுத்து அதன் ஒரு அங்கமாக சென்னையில் ஒரு சமூகநலக்குழு 1954-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சமூகநலக் குழுவின் முக்கிய கொள்கைகளாவன:

**முக்கிய கொள்கைகள்**

1. சமூகநல நிறுவனங்கள் முன்னேற ஊக்கமளிப்பது.

2. சமூகநல முன்னேற்றத்திற்கு உதவும் தனியார் நிறுவனங்களுக்கு வேண்டிய பண வசதியும், உபகரண வசதிகளும் செய்வது.

3. அரசினர் உதவி பெற்று நடத்தும் சமூகநல நிறுவனங்களின் எல்லாத் திட்டங்களையும் மதிப்பிட்டு உதவுவது.

4. மத்தியக் குழுவுக்கும், மற்றுமுள்ள நிறுவனங்களுக்குமிடையே ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உதவுவது.

5. உதவி மானியத் தொகை கோரி வரும் தனியார் நிறுவனங்களின் மனுக்களைப் பரிசீலித்தல்.

6. அரசினர் உதவியுடன் நடந்து வரும் நிறுவனங்களை அடிக்கடி கண்காணித்து மத்தியக் குழுவிற்கு அறிவிப்பது.

7. தமிழ்நாட்டின் எந்தெந்தப் பகுதிகளில் சமூகநல முன்னேற்றத்திற்கு என்னென்ன தேவைப்படுகின்றன என்றறிந்து, அதற்கான புதுப்புது திட்டங்களை வகுத்து அவை நடப்பதற்கேற்ற வழிகளை மத்திய சமூகநலக் குழுவிற்கு எடுத்துரைத்தல்.

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய 1961-ஆம் ஆண்டின் அரசு ஆணை எண். 1433-ன்படி பெண்கள், குழந்தைகள் நலனையொட்டிய எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டிய பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பரிசீலித்து ஒரு முடிவெடுத்து, அதை மத்திய சமூக நலக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். குழுவினர் அனைவரும் தங்கள் எல்லைக்குட்பட்ட இடங்களிலுள்ள எல்லா நிறுவனங்களையும் அவ்வப்போது சென்று பார்வையிட்டாக வேண்டும்.

மத்திய சமூகநலக்குழுவின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பேற்று நடத்துவது மாநிலக் குழுவின் வேலையாகும். இதன் அனைத்து ஊழியர்களும் சமூக நலத்துறை இயக்குநரின் தலைமையில் பணியாற்றுவார்கள். மேற்பார்வையாளர் முதல், கடைநிலை ஊழியர் வரை மொத்தம் 16 பேர் உள்ளனர். அதில் 7 பேருக்குக் கடந்த 1975-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து மத்திய சமூகநலக்குழு சம்பள உதவி செய்கிறது.

## மத்திய சமூகநலக் குழுவின் திட்டங்கள் :

**1. ஆண்டு மானியமும்—ஒரு கால வரையறைக்குட்பட்ட மானியமும் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் தன் விருப்ப ( Voluntory ) நிறுவனங்களினுல் நடத்தப்படும் அனுதை இல்லங்களுக்கும், ஏழைக் குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளிகளுக்கும், திக்கற்றவர்களுக்கு இருக்க இடமும் வைத்திய வசதிகளும் செய்து கொடுப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வகையில் ஆண்டு மான்யம் பெற்று 269 நிறுவனங்களும், காலவரையறைக்குட்பட்ட மானியம் பெற்று (Plan period grant) 80 நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.



**2. கிராம மறுமலர்ச்சி மானியம்**

1961-62-ல் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்ட பின், கிராம வளர்ச்சிக்கான அநேகத் திட்டங்கள், மத்திய சமூகநலக் குழுவினரிடமிருந்து பஞ்சாயத்துக்களின் கீழ் மாற்றப்பட்டன. குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும், கைத்தொழில் நிறுவனங்களும், எல்லா தாய்சேய் மருத்துவ இல்லங்களும் பஞ்சாயத்துக்களால் மத்திய சமூகநலக் குழுவிடமிருந்து 75 சத மானியம் பெற்று நடத்தப்படுகிறது. மொத்தம் 34 வட்டங்களிலுள்ள 14 நிறுவனங்கள் இந்த மானியம் பெற்று வருகின்றன.

**3. விடுமுறை முகாம்கள் ஏற்படுத்தும் திட்டம்**

(Holiday Camps) 10-லிருந்து 16 வயதுக்குட்பட்ட, 30 அல்லது 40 ஏழைக்குழந்தைகளைக் கோடை விடுமுறையில், பார்க்கத் தகுந்த இடங்களில் 15 நாள் விடுமுறை முகாம்களமைத்து அழைத்துப் போக, மத்தியக்குழு ரூபாய் 3,000 தருகிறது. இதனுல் அனுதைக் குழந்தைகள், புதிய புதிய இடங்களைப் பார்க்கவும், எல்லோரோடும் சேர்ந்து பழகவும் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் அனைவரும் ஒரு குடும்பம் போல் பழகி தம்மில் மறைந்திருக்கும் எல்லாவிதக் கலைகளையும் திறமைகளையும் வெளியாக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. 1975-76-வது ஆண்டில் இதுபோல் 20 முகாம்கள் நடத்தப்பட்டன.

**4. பெண்களுக்குக் குறைந்த கால கல்வி கற்பிக்கும் திட்டம்**

படிக்க முடியாத நிலையில் இருக்கும் பெண்களுக்கு, மறுபடியும் தொடர்ந்து கல்வி பயின்று பிழைப்புக்காக ஏதாவது ஒரு வேலை செய்யும் வாய்ப்பு இத்திட்டத்தின் மூலம் ஏற்படுகிறது. 18 வயதிலிருந்து 30 வயது வரையுள்ள பெண்களுக்கு இதன் மூலம் நல்வாழ்வு கிடைக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2 ஆண்டுக் காலத்தில் ஆரம்பப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு (E.S.L.C.) அல்லது பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு (S.S.L.C.) பயிற்சி அளிக்கப்படுகிறது. சமீபத்தில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தோல்வியுற்ற மாணவிகள் மறுபடியும் ஓர் முறை தேர்வு எழுத அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 8 கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றன.

**5. கைத்தொழில் பயிற்சி அளிக்கும் திட்டம்**

1975-வது ஆண்டிலிருந்து மற்றுமொரு புதிய துறையில் பெண்கள் முன்னேற மத்திய சமூக நலக் குழு வகுத்தளித்த திட்டமாகும் இது. படித்தும் பலனில்லாமல் வேலையற்றிருக்கும் பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பலவகையான வேலை கற்றுத்தரப்படுகிறது. தையற்கலை, காரியதரிசி பதவிக்குரிய வேலைகள், வானெலி மெக்கானிசம், மருத்துவ நிலையங்களில் உதவி செய்தல், வீட்டு மேற்பார்வையாளர் வேலை, புகைப்படமெடுத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி முடிந்ததும், தக்க சான்றுகளுடன் வேலையும் தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய சமூகநலக்குழுவால் 1975-76-ஆம் ஆண்டில் 12 நிலையங்களும் 1976-77-ல் 10 நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

**6. சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்**

(Socio Economic Plan) புதிய புதிய தொழில்கள் துவக்கப்படுவதன் மூலம், பெண்களுக்கு நேரடியாக வேலை செய்து ஊதியம் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. தற்சமயம், அச்சுவேலை, தச்சுவேலை, ரொட்டி செய்யும் பேக்கரிகள், கைத்தறி நெசவு வேலை, விளையாட்டுச் சாமான்கள் செய்தல் போன்ற 20 நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் பெண்கள் வேலை செய்து வருகின்றனர். இவற்றிற்குத் தேவையான யந்திரங்கள், மற்றும் தேவையான சாதனங்கள் வாங்குவதற்கும் முதலீட்டுக்கான தொகைக்கும் தேவையான நிதியை மொத்தமாகவே மத்திய சமூகநலக்குழு கொடுக்கிறது. இந்நிதி உதவி ஆண்டுதோறும் கிடைக்காது. ஏனென்ருல், இந்நிறுவனங்கள் வியாபார ரீதியில் நடந்து இலாபமடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**7. பால்பண்ணைகள் அமைக்கும் திட்டம்**

கிராமத்திலுள்ள ஏழைப் பெண்களுக்காகவே இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது. கிராமச் சூழ்நிலைகாரணமாக, பசுக்களுக்கு ஏற்ற மேய்ச்சல் நிலம் நிறைய இருப்பதால், முக்கியமாக கிராமத்திலுள்ள ஏழைப் பெண்கள் பால் பண்ணை ஏற்படுத்துவதற்குப் பண உதவி மானியமாகவும், கடனுகவும் அளிக்கப்படுகிறது. பசு அல்லது எருமை வாங்கவும், அவைகள் வளர்ப்புக்கு வேண்டிய சாதனங்கள் வாங்கவும் கடன் கொடுக்கப்படுகிறது. இரண்டு மாதத்திற்குத் தேவையான மாட்டுத் தீவனம் வாங்க மானியமாகப் பணம் தரப்படுகிறது. தனியார் நிறுவனங்களின் மூலமாக இத்தொகை 1976-77-ல் 14 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனுல் 70 பெண்கள் பலனடைகிருர்கள்.

**8. வேலை செய்யும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்து உதவும் திட்டம்**

ஏராளமான பெண்கள் வேலை செய்ய வேண்டி, தத்தம் ஊரைவிட்டு வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு அவர்கள் எவ்விதப் பயமுமின்றி சௌகரியமாகத் தங்குவதற்கான இடவசதி மிகவும் அவசியமாகும். எனவே, வேலை செய்யும் பெண்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தர சில தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. இதன் மூலம் வேலை செய்யும் பெண்களுக்கு இருக்க இடம். உண்ண நல்ல தரமான, சத்தான உணவு, தம் வீட்டிலிருப்பதைப் போன்ற சூழ்நிலை உண்டாகும்வழி கிடைக்கிறது. இவ்விடுதிகளை நடத்துபவர்களுக்கு விடுதியாளர் (வார்டன்) சம்பளம், கட்டட வாடகை பண்ட பாத்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக மத்திய சமூக நலக்குழு பணம் தருகிறது. தற்சமயம் இத்தகைய விடுதிகள் 7 இருக்கின்றன.

**9. தத்து எடுத்தவர்களுக்கு உதவும் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள கில்டு ஆப் ஸர்வீஸ் ( Guild of Services ) நிறுவனத்தினரால் பரீட்சார்த்தமாக இம்முறை கையாளப்பட்டது. அனுதை இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்குத் தாம் அனுதைகளென்ற ஏக்கம், ஏற்படாமலிருக்க இக்குழந்தைகளை வளர்க்க விரும்புகிறவர்களிடம் அவர்கள் குடும்பத்தில் ஒருவராக வளர இக்குழந்தைகள் அனுப்பப்படுகின்றனர். அனுதைக் குழந்தைகளைத் தத்து எடுக்கும் பெற்ருேர்களுக்கு அக்குழந்தைகளின் பராமரிப்புக்காக வேண்டி ஒரு குறித்த தொகை மாதாமாதம் தரப்படுகிறது.

**10. சத்துணவு தரும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு உதவும் திட்டம்**

குழந்தைகளின் அறிவும் ஆற்றலும் வளர சத்துணவு தருவது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் சத்துணவு அளிக்கப்படுகிறது. இவ்வாறு சத்துணவு தரும் 119 குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு-சத்துணவு தருவதற்காக-சமூக நலக் குழு தனியாகப் பணம் தருகிறது.

இவைகள் தவிர, சமூக நலக் குழு இந்திய அரசின் பணிகளிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. இவ்வகையில் 31 திக்கற்ற குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்களையும், தத்து எடுத்துக் கொள்ளும் நிலையத்தையும், 13 நடமாடும் மருத்துவ மனையையும் பராமரிக்கும் பணியில் இந்திய அரசுக்குச் சமூக நலக்குழு உதவுகிறது. சில இடர்பாடுகளுக்குப் பிறகு தற்போது மாநில சமூகநலக்குழு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஏழைகளுக்கு அதிலும் பெண்களுக்கு உதவும் திட்டங்கள் ஏராளமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவைகளில் மிக வேகமாக முன்னேற்றம் காண முடியவில்லையென்ருலும், நிதானமாக ஆனுல் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

**சமுதாய பணியில் தமிழக மகளிர்**

மாநில சமுதாயப் பணியில் நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் பலர் வெகு தீவிரமாக எத்தனையோ முன்னேற்றங்களை படிப்படியாக ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்களில் திருமதி. வெங்கட சுப்பராவ், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, திருமதி. ருக்மணி லட்சுமிபதி, திருமதி. ராதாபாய் சுப்பராயன், திருமதி. அம்புஜம்மாள், திருமதி அம்மு ஸ்வாமிநாதன், திருமதி. துர்காபாய்தேஷ்முக் அவர்களைக் குறிப்பிடலாம்.

விதவைகள் மறுவாழ்வு பெற பெரிதும் பாடுபட்டவர்களில் சகோதரி எஸ். சுப்புலட்சுமி அம்மாள் அவர்களைக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டுப் பெண்களாகிய நாம் இத்தகைய வீராங்கனைகளை கொண்டிருந்ததில் மிகவும் பாக்கியசாலிகளென்றே சொல்ல வேண்டும்.

தற்சமயம் நம் தமிழ்நாட்டு சகோதரி திருமதி. சரோஜினி வரதப்பன் அவர்கள் மத்திய சமூகநலக் குழுவின் தலைவராயிருப்பது நமக்கெல்லாம் எவ்வளவோ பெருமை தரத்தக்கதாகும். சமூகநலச் சேவையை மேற்கொண்டு இவர் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். சமூகநலச் சேவையில் பல்லாண்டு அனுபவம் உள்ள இவர் தற்போது சமூக நலக் குழுத் தலைவியாக இருப்பதால் பல நல்ல திட்டங்களை வகுத்து அவைகளைச் செயலாக்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிருர்.

நம் தமிழ்நாட்டுச் சமூகநலக் குழுவின் தலைவராக உள்ள திருமதி. தாரா செரியன் அவர்கள் அதிக சமூகநலச் சேவையில் ஆர்வமும், அனுபவமும் உடையவர். தமிழ்நாட்டின் முதல் பெண் மேயராக இருந்த இவர் தலைமையில், சமூக நலக் குழுவினர் வெகு ஆர்வத்துடன் சேவை செய்ய முற்பட்டுள்ளனர். இவர்களோடு மக்களனைவரும் ஒத்துழைத்து நாட்டின் வறுமையையும், பிற்பட்ட நிலையையும் ஒழிக்க முன்வர வேண்டும். மேற்கூறப்பட்ட சில வீரப் பெண்மணிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தால் சமூக நலம் செழிக்கும் என்பதில் ஐயமே இல்லை!

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# பாலாகார்

## ஊட்டச் சத்து மிகுந்த மலிவு விலை உணவு



'பாலாகார்' (Balahar) என்பது ஊட்டச்சத்து மிகுந்த, மலிவு விலை உணவாகும். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திப் படிப்படியாகத் திட உணவு அளிக்கவும், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகளுக்கு கொடுக்கவும் இவ்வுணவு மிகவும் சிறந்ததாகும்.

மாவு வடிவில் தயாரிக்கப்படும் 'பாலாகார்' உணவு, காய்கறி புரதச் சத்து, தானியங்கள்: பயறு வகைகள் ஆகியவை கலந்த ஒரு கலவையாகும். இதில் தகுந்த அளவுக்கு உயிர்ச்சத்துக்களும் (Vitamins), தாதுப் பொருள்களும் கலக்கப்பட்டுள்ளன. 'பாலாகார்' 20 சதம் புரதச்சத்து (Protein) அளிக்கிறது. 100 கிராம் 'பாலாகார்' உணவு 360 கலோரி (Calories) சக்தியை அளிப்பதுடன், இன்றியமையாது தேவைப்படும் உயிர்ச்சத்துக்களையும் தாதுப் பொருள்களையும் அளிக்கின்றது.

இது ஒரு சிறந்த சமநிலை உணவாகும் (Well-balanced food). தாய்ப்பால் குடிப்பதை மறக்கச் செய்து, திட உணவு உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு இவ்வுணவு மிகமிக ஏற்றதாகும்.

வயது வந்தவர்களுக்குத் தேவைப்படுவதை விட, குழந்தைகளுக்கு அதிக அளவு புரதச் சத்துத் தேவைப்படுகிறது. ஏனெனில், குழந்தைகளின் வளர்ச்சிக்கும், அவைகளின் பராமரிப்புக்கும் புரதச்சத்து இன்றியமையாத ஒன்றாகும். ஒரு குழந்தையின் வழக்கமான உணவுடன் துணை உணவாக அளிக்க சக்தி வாய்ந்த இவ்வுணவில் 75 கிராம் போதுமானதாகும்.

'பாலாகார்' உணவை மிக எளிதில் கஞ்சியாகத் தயாரித்து குழந்தைகளுக்கு அளிக்க முடியும். 'பாலாகார்' மாவை 3 முதல் 4 நிமிடம் கொதிக்க வைத்து, சர்க்கரை அல்லது உப்பினைத் தேவைப்படும் சுவைக்கேற்பக் கலந்தால் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்ற கஞ்சி கிடைத்துவிடும். பல்வேறு பொதுவான உணவுத் தயாரிப்புகளுக்கு உதவும் பொருள்களுடன் 'பாலாகார்' மாவைக் கலந்து, சிறந்த சத்துமிக்க உணவைத் தயாரித்திட முடியும். குழந்தைகளுக்கும், நோயினால் எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கும் தேவைப்படும் துணை ஊட்டச் சத்துத் தேவையை ஈடு செய்யும் வகையில் 'பாலாகார்' உணவு தயாரிக்கப்படுகிறது.

நமது நாடெங்கிலும் பள்ளிக் குழந்தைகள், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகள், கருவுற்ற மகளிர்கள், குழந்தை

களுக்குப் பாலூட்டி வரும் தாய்மார்கள் ஆகியவர்களுக்கு, ஊட்டச்சத்து உணவு அளிக்கும் பல்வேறு திட்டங்களில் 'பாலாகார்' தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிவாசி மக்கள் வசிக்கும் பகுதிகளிலும், நகரங்களின் குடிசைப் பகுதிகளிலும் இந்திய அரசினுல் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின்கீழ், 'பாலாகார்' உணவு வழங்கப்படுகிறது.

**'பாலாகார்' மாவைப் பயன்படுத்தும் வழி முறைகள்**

'பாலாகார்' மாவு கட்டியாகப் போயிருந்தால் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். கஞ்சியாகச் சமைப்பதற்கு முன்பு, 'பாலாகார்' மாவை இளக்கமான பசையாகத் தயாரித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு தயாரிப்புகளுக்கு ஏற்ப, சமைக்கும் நேரம் மாறுபடக் கூடும்.

நாட்டு மக்களின் நலன் கருதி, 'பாலாகார்' மூலம் தயாரிக்கப்படக் கூடிய சில தயாரிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



**'பாலாகார்' கஞ்சி'**

தேவையான பொருளும் அளவும்:—

'பாலாகார்' 1 கிண்ணம்

தண்ணீர்—3 முதல் 4 கிண்ணம்

சர்க்கரை அல்லது உப்பு—சுவைக்கு ஏற்ப

செய்முறை:

சிறிதளவு, தண்ணீரில் 'பாலாகார்' மாவைக் கலந்து, நன்கு கலக்கி, பசையாகத் தயாரித்துக் கொள்ளவும்.

அப்பசையைத் தொடர்ந்து கலக்கிக் கொண்டே, 5 நிமிட நேரம் கொதிக்க வைக்க வேண்டும். கஞ்சி கெட்டியாக இருந்தால், மேலும் அதிகத் தண்ணீர் விடவும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்கும் தண்ணீருடன் முன்பே தயாரிக்கப்பட்டுள்ள பசையைத்— தொடர்ந்து கலக்கிக் கொண்டே-சேர்க்க வேண்டும்.

தேவையான சுவைக்கு ஏற்ப சர்க்கரை அல்லது உப்பினைக் கலக்க வேண்டும்.



**'பாலாகார்' பூரி**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'-1 கிண்ணம்

உப்பு—சுவைக்கு ஏற்ப.

தண்ணீர்—பூரி மாவாகச் செய்வதற்குப் போதிய தண்ணீர்.

எண்ணெய்—பூரி சுடுவதற்குத் தேவையான அளவு.

செய்முறை:—

'பாலாகார்' மாவுடன் தேவையான அளவு தண்ணீரையும், உப்பையும் சேர்த்து பூரி செய்வதற்கு ஏற்ற அளவில் மாவாகச் செய்து கொள்ளவும்.

மாவை நன்கு பிசைந்து, 15 முதல் 20 நிமிடம் வைத்திருக்கவும்.

பிறகு மாவை எடுத்துச் சிறு உருண்டைகளாகச் செய்யவும். அதன்பின் ஒவ்வொரு உருண்டையையும் பூரிக்கட்டையால் தேய்த்து வட்ட வடிவமாகச் செய்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு, பூரியைப் பொரித்து எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.



**'பாலாகார்' சப்பாத்தி**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'—1 கிண்ணம்

வெந்நீர்—சப்பாத்தி மாவு செய்வதற்குப் போதிய அளவு.

செய்முறை:—

'பாலாகார்' மாவில் போதிய அளவு வெந்நீர் சேர்த்து மிருதுவான மாவாகச் செய்து கொள்ளவும்.

மாவை நன்கு பிசைந்து கொண்டு, சிறு சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். பிறகு சப்பாத்திகளாகச் செய்து கொள்ளவும்.

சூடான வாணலியில் (தோசைக்கல்) ஒவ்வொரு சப்பாத்தியாக வைத்து, எண்ணெய் ஊற்றுமல் வேகச் செய்யவும்.

இருபக்கமும் நன்கு வெந்த பிறகு, சப்பாத்தியை எடுத்துச் சூடாகவே பரிமாறவும்.



**'பாலாகார்' அல்வா**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'—1 கிண்ணம்

சர்க்கரை—1 கிண்ணம்

நெய்—½ கிண்ணம்

தண்ணீர்—½ கிண்ணம்

செய்முறை:—

'பாலாகார்' மாவையும், தண்ணீரையும் சேர்த்து இளக்கமான பசையாகச் செய்து கொள்ளவும்.

சர்க்கரைப்பாகு—மூன்றில் ஒரு பங்காகக் குறையும் அளவுக்கு—தயாரித்துக் கொள்ளவும்.

சர்க்கரைப் பாகு அடுப்பில் இருக்கும் போதே, 'பாலாகார்' பசையை அதில் ஊற்றவும். பிறகு நெய்யை ஊற்றி கலக்கிவிடவும்.

'அல்வா' தயாரிக்கும் பாத்திரத்தின் பக்கங்களில் அல்வா ஒட்டிக்கொள்ளாமல் கலக்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த நிலைக்கு வந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்து ஏலக்காய்ப் பவுடரைத் தூவி விடவும். ஏலக்காய்ப் பவுடரை நன்கு கலக்கச் செய்து, நெய் தடவிய தட்டில் வார்த்துக் கெட்டியாகப் படியச் செய்யவும்.

அதன் மேல் சுவைக்கு ஏற்ப முந்திரிப் பருப்பு போன்றவைகளைத் தூவி விட்டு, விரும்பும் வடிவத்தில் அல்வாவைத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.



**'பாலகார்' தோசை**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்' 1 கிண்ணம்

தண்ணீர்—தோசை மாவாகச் செய்வதற்குப் போதிய அளவு.

உப்பு—சுவைக்கு ஏற்ப.

செய்முறை—

'பாலாகார்' மாவைத் தண்ணீர் சேர்க்காமல் ஏறத்தாழ 10 நிமிடம் வரை நீராவியில் வேகச் செய்யவும்.

நீராவியில் வெந்த மாவை, தண்ணீருடன் சேர்த்து, தோசை மாவாகக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

அந்த மாவில் ஒரு கரண்டி நிறைய எடுத்துக் கொண்டு, சூடான தோசைக் கல்லின் மேல் ஊற்றி, ஒரே சமமாக மாவைப் பரப்பிட வேண்டும்.

சிறிதளவு எண்ணெய்யில் தோசையை வேகச் செய்யவும். சூடாகப் பரிமாறவும்.

**'பாலகார்' கொழுக்கட்டை**

தேவையான பொருளும் அளவும்:—

'பாலாகார்' (வாசனைத் திரவியம் கலந்தது)— 1 கிண்ணம்

தண்ணீர்—சிறு அளவு



தேங்காய்த் துருவல்—3 மேசைக்கரண்டி

வெல்லம் (தூள்)—3 மேசைக்கரண்டி

செய்முறை:—

'பாலாகார்' மாவில் சிறு அளவு தண்ணீர் கலந்து இளக்கமான மாவாகச் செய்து கொண்டு, சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

தேங்காய்த்துருவல், வெல்லம் ஆகிய இரண்டும் கலந்த கலவையைத் தயாரிக்கவும்.

ஒவ்வொரு உருண்டையையும் உங்கள் கையில் வைத்துத் தட்டையாகத் தட்டிக் கொள்ளவும். அதில் ஒரு தேயிலைக் கரண்டி அளவு தேங்காய்த் துருவல்-வெல்லக் கலவையை வைத்து மூடி உருண்டையாகச் செய்யவும்.

உருண்டைகளை நீராவியில் வேக வைக்கவும்.

வெந்தபின் சூடாகப் பரிமாறவும்.



# வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழைப்பழ ஏற்றுமதித் திட்டம்



**த**மிழ்நாடு கூட்டுறவுப் பதிவாளரின் ஆணைப்படி, குடியாத்தம் வட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் அயல் நாட்டுக்கு வாழைப் பழம் ஏற்றுமதி செய்யும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. வாழைப்பழம் மற்றும் பழம் ஏற்றுமதி கார்ப்பொரேஷனின் துணை கொண்டு இந்நடவடிக்கையில் இந்த விற்பனைச் சங்கம் இறங்கியுள்ளது. வடார்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் சேம்பள்ளி, ஜங்காலபள்ளி, பேர்ணம்பட்டு, கிருஷ்ணபுரம், வெங்கட்டாபுரம் மற்றும் கௌராபேட்டை ஆகிய கிராமங்களில் 'ரோபஸ்தா', 'கேவண்டிஸ்' போன்ற ஏற்றுமதிக்குரிய வாழைப் பழ ரகங்களை விவசாயிகள் பயிர் செய்கின்றனர். தனியார் வியாபாரிகளிடம் முன் பணம் பெற்று அவர்கள் பிடியில் சிக்குண்டிருந்த இம்மக்களை விடுவித்து விற்பனை சங்கமே அவர்களுக்கு முன் பணம் வழங்கி வாழைப்பழ மகசூலைக் கொள் முதல் செய்ய முற்பட்டுள்ளது.

அறுவடைக்குரிய பருவத்தை எய்துவதற்கு இரண்டு திங்கட்கு முன்னர், குடியாத்தம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அலுவலரும், வாழைப்பழம் மற்றும் பழம் ஏற்றுமதி கார்ப்பொரேஷனின் உதவி கொள் முதல் அலுவலரும், வாழை பயிரிட்டுள்ள தோட்டங்களைப் பார்வையிட்ட பின், அவைகளுக்குரிய முன் பணங்களை விற்பனைச் சங்கம், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குகிறது. அறுவடையின்போது மகசூலைப் பெற்று வாழைப் பழம் மற்றும் பழம ஏற்றுமதி கார்ப்பொரேஷன் மூலம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வாழைப்பழ மகசூலுக்கு முன் பணம் வழங்கும் காரியத்துக்காக வேலூர் கூட்டுறவு மத்திய வங்கி, குடியாத்தம் வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு ரூ. 3 இலட்சம் கடன் நிதியுதவியை அனுமதித்துள்ளது. பிப்ரவரி, மார்ச் திங்களில் மட்டும் இந்த விற்பனைச் சங்கம் வாழைத் தோட்ட விவசாயிகளுக்கு ரூ. 1,60,500 வரை முன் பண உதவியை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தினல் இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழைப் பழ மகசூலுக்கு நியாயமான எடையின் மூலம் நல்ல விலை பெற்றுள்ளனர். தற்போது டன் ஒன்றுக்கு வாழைப்பழத்துக்கு ரூ. 550 விலை வழங்கப்படுகிறது. முன்பு தனியார் வியாபாரிகள் மூலம் கிடைத்த விலையை விட இது கூடுதலாக உள்ளதை உணர்ந்த விவசாயிகள் கூட்டுறவின் உதவியைப் பெரிதும் வரவேற்று உள்ளார்கள்.

( 4 -ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமியப் பகுதிகளில் உள்ள மக்களை விவசாயம் சிறந்த குடிசைத் தொழில், பால் பண்ணை பராமரிப்பு, உணவு, உடை இருப்பிடம் ஆகிய மக்களின் அன்றாட பிரச்சினைகள் போன்றவற்றிற்கு முழுவதுமாக, லாபகரமாக திருப்தியுடன் வேலை செய்ய வைக்க வேண்டும். இதை நாம் செய்யாத வரையில் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வைப் போக்க, கணிசமான முன்னேற்றம் காண்பது என்பது முடியாத ஒன்று.

நிகழக்கூடிய எந்த ஒன்றும் கெட்ட நோக்கங்கள் காரணமாக ஏற்படுவதில்லை. நோக்கங்கள் நல்லவையாக இருக்கலாம்; ஆனல் நோக்கங்கள் எப்போதும் நல்ல நடவடிக்கைகளைத் தருவதில்லை. **செயல்படுத்துவதற்கு முன்னல் நோக்கங்கள் முறையாக விரிவாக பரிசீலிக்கப்பட வேண்டும்.** ஆகவே இந்த விஷயங்களை நாம் பூரணமாகவும் விரிவாகவும் பரிசீலிக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், நாட்டு மக்களின் மகிழ்ச்சியின் பெரும்பங்கு உங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின்போது பின்பற்றப்பட்டு வந்த அதே பழைய முறையிலேயே நாம் செயல்பட்டு வந்திருக்கிருேம். தெருவிலுள்ள மனிதன் முக்கியமாக இல்லாதபோது அரசாங்கத்தை நடத்துவது என்பது முக்கியமானதாகும். அரசாங்கத்தை நிர்வகிப்பவர்களின் சொந்த வாழ்க்கையைத் திருப்திபடுத்துவதற்காக நடத்தப்படுவதல்ல அரசாங்கம். நாட்டு மக்களின் அனுகூலத்திற்காக, அவர்களின் மகிழ்ச்சிக்காக, அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்காக அச்சம் இன்றி மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்க்கை நடத்தப்படுவதற்காக நடத்தப்படுவது அரசாங்கம். இந்த நோக்கம் நம் அனைவராலும் உணரப்படாதவரையில் நாம் அதிக முன்னேற்றத்தைக் காண முடியாது என்று நான் பயப்படுகிறேன். ஒவ்வொரு கட்டத்திலும் இதையேதான் நாம் உணர வேண்டும்.

**ஒவ்வொரு மனிதனின் சுயமரியாதையும் என்னுடைய சுயமரியாதையைப் போல் அவ்வளவு முக்கியமானதாகும்.** நான் என் சுய மரியாதையை கடைசி மனிதனிடமும் பாதுகாக்காத வரையில் என்னுடைய சுயமரியாதையையும் பாதுகாக்க முடியாது. ஒவ்வொருவரைப்பொறுத்த வரையிலும் இதுவேதான் உள்ளுணர்வாக இருக்க வேண்டும். ஆனல் இதை நாம் மறந்துவிட்டோம். **மிகவும் ஏழ்மையான ஒரு மனிதன் இந்த நாட்டில் பிரதமராலோ, ராஷ்டிரபதியாலோ அவமானப்படுத்தப்பட்டால், அவர்களைப் பார்த்து ''முறையாக நடந்து கொள்ளுங்கள். ஜாக்கிரதையாக இருங்கள்'' என்று எச்சரிக்கும் தைர்யமும் அவனுக்கும் வரும் ஒரு நாளைக் காண நான் விரும்புகின்றேன்.** ஒவ்வொரு நபரும் இதை மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இது விஷயத்தில் மக்களுக்கு போதிப்பது, நம்முடைய தனிப்பட்ட நடத்தை ஆகியவற்றின் மூலம் இது நடக்கக்கூடும். இதுவும் சம அளவுக்கு முக்கியமான ஒரு பணியாகும்.

மற்ற பெரும்பாலான நாடுகளைக் காட்டிலும் இந்த நாட்டு மக்கள் உண்மையில், சொல்லப் போனல் சராசரிக்கும் மேலாக புத்திகூர்மை படைத்தவர்கள். மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிக நிபுணத்துவம் வாய்ந்தவர்களை நாம் பெறலாம். ஆனல் அச்சத்தின் காரணமாக நாம் தன்னம்பிக்கையை இழக்கிருேம். அச்சத்தை நீக்கித் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியிருக்கிருேம். அச்சம் நீக்கப்படாத வரையில் தன்னம்பிக்கை வளர்க்கப்படாதவரையில், நீங்கள் திட்டமிடுவது நீங்கள் செய்ய விரும்புவது ஆகியவை நீங்கள் எப்படி நடைபெற வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படிச் செய்ய முடியாது. நம்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மக்கள். மேலும் இது ஒரு புதுவிதமான அமைதிப் புரட்சி. இது நியாயப்படுத்தப்பட வேண்டும். அது ஓர் அமைதியான புரட்சி. அது வெறும் தேர்தல் மட்டுமல்ல. அரசாங்கத்தின் மாற்றம் மட்டும் அல்ல. மக்கள் மகத்தான ஆற்றல் திறனைக் காண்பித்திருக்கிருர்கள். **ஜனநாயக உலகின் கண்பார்வையில் இந்த நாட்டின் நற்பெயர், நன்மதிப்பு மிகவும் கீழாக மூழ்கியிருந்தது. ஆனல் அது இன்றைக்கு வான் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.** மற்ற நாடுகளில் இல்லாமல் இந்த நாட்டில் மட்டுமே நடந்திருக்கக் கூடியது. என்று பெரும்பாலான நாடுகள் இப்போது கூறுகின்றன. இப்போது இந்த நாட்டில் இன்றைக்கு இருக்கும் மரியாதை இது. இதே உணர்வில் நம்முடைய பணிகளை தொடர்ந்து நடத்தி, அதற்குத் தகுதியுள்ளவர்களாக இருந்து இந்த மரியாதைகளையும் தக்க வைக்க வேண்டும்.

நீங்கள் விரும்பியது போல நம்முடைய திட்டங்களைத் திருத்தியமைப்பதில் எந்த வித இடையூறும் இருக்காது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. மக்கள் திருப்தியடையும்வரை சரியான பாதையில் நாம் செயல்படவேண்டும். அதுதான் அதிக முக்கியம் வாய்ந்ததாகும். நாம் இதைச் செய்யாத வரையில் மக்களின் நம்பிக்கை ஒருபோதும் பாதுகாக்கப்படமாட்டாது. மக்களின் நிலைமைகளில் மாற்றமும், அவர்களுடைய உண்மையான தேவைகள் பூர்த்தியும் செய்யப்படாதவரையில் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். அவர்களது தேவைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அவர்கள் அதிருப்தி அடைவார்கள் என்பது இயற்கையே. அவர்கள் அதிருப்தி அடைவார்களேயானல் நிறைவேற்றப்படும் பணிகள் குறைவதோடு அன்றி, முன்னேற்றமும் குறையும். ஆகவே முழு நம்பிக்கையுடன் நீங்கள் செயல்படவே நான் விரும்புகிறேன். எந்த ஒரு சேவையிலும் நம்முடைய சேவைகள் ஒருபோதும் தாழ்ந்ததில்லை என்று நான் கருதுகிறேன். ஆனல் நமது போக்கு மாறவில்லை. ஒருவேளை மாறியிருக்கலாம், ஆனல் முழுவதுமாக மாறிவிட்டது என்று என்னல் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வதும் தவருக இருக்கலாம். லாபம், சம்பளம், அல்லது எதிர்கால சுபிட்சத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். உண்மையில் அது இயற்கையானதே. ஆனல் நமக்கு சம்பளம் வழங்கும் நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதையே நீங்கள் அதிகம் சிந்திக்கவேண்டும். நாம் இப்போதிருக்கும் பணியில், மேற்கொண்டிருக்கும் பணிகளில் நாம் அனைவரும் சுயமாகவே வலுவில் வந்திருக்கிருேம். நம் அனைவரையும் யாரும் வலுக்கட்டாயப்படுத்தி இந்தப் பொறுப்பை ஏற்கவைக்கவில்லை. நாமேஅதைத் தெரிந்தெடுத்துள்ளோம். அப்படி நாமே தெரிந்தெடுத்துள்ளதால், நாமே மக்களைத் திருப்திபடுத்த வேண்டும். எந்த ஒன்றில் இருப்பதைக் காட்டிலும் அதிகப்படியான திருப்தியை, மனநிறைவை நாம் மக்களுக்குச் சேவை புரிவதன்மூலமே பெறமுடியும். அர்ப்பணிக்கப்பட்ட சேவைகளில் அதிக திருப்தியிருக்கிறது. நாட்டில் இந்த உணர்வு வளரும் என நான் கருதுகிறேன். இத்தகைய உணர்வு இந்த இடத்திலிருந்து எல்லா இடத்திற்கும் பரவும் என்ற நம்பிக்கையிலேதான் உங்கள் மத்தியில் சிறப்புரை ஆற்றியுள்ளேன். உங்கள் அனைவருக்கும் என் நன்றி.''

# "கொள்ளை இலாப நோக்கு சமூக விரோதப் போக்கு!"

பிரதமர் உரை

"நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்தையும், தனிநபரையும் பாதிக்கின்ற விலைவாசிப் பிரச்சினை பற்றி நான் உங்களுடன் பேசுகிறேன். இந்த ஆண்டு பிப்ரவரி 25-ந் தேதி முதல் மொத்த விலைக் குறியீட்டெண் இறங்குமுகமாக உள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள், பருத்தி, தேயிலை, பருப்பு வகைகள் போன்ற சில பண்டங்களின் விலைகள் ஏறுமுகமாக இருந்தன. எல்லா மட்டங்களிலுமுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்கள் இவை என்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். தற்போதுள்ள விலைகளைக் குறைப்பதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்வதோடு, பதுக்கல்காரர்களிடமுள்ள சரக்குகளை வெளிக்கொணர்ந்து, தேவைப்படும் இடங்களில் இறக்குமதியை ஊக்குவித்துப் பற்றுக்குறையையும் சரி செய்ய ஆவன செய்வோம் என்று நுகர்வோருக்கு நான் உறுதியளிக்க முடியும்.

"எனவே, உணவு தானியங்கள், இதர அத்தியாவசியப் பண்டங்கள் இவற்றின் விநியோகத்தில் எந்தவிதமான பற்றுக்குறையும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. எது எப்படியிருந்தாலும் சாமானிய மனிதனின் தேவையின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்யும் உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் இவற்றின் கையிருப்பில் திருப்திகரமான சூழ்நிலை நிலவி வருகிறது. காரீப்-ராகிப் பயிர்களின் விளைச்சல் திருப்திகரமாக உள்ளது என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். அப்படியிருக்கும்போது உணவு தானியங்களின் விலைகள் ஏன் உயர வேண்டும் ?

"இதர பண்டங்களைப் பொறுத்த வரையில் சில பண்டங்களின் விஷயத்தில் பற்றுக்குறை ஏற்படலாம். இருப்பினும் விலைகளை உயர்த்துவதற்கான ஒரு சாதகமாக, பற்றுக்குறைகள் பயன்படுத்திக் கொள்ளப்படக்கூடாது. உண்மையில் பற்றுக்குறை ஏற்பட்டால் வியாபாரிகளும், கையிருப்பு வைத்திருப்பவர்களும் சமுதாயத்திடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர, இதனைச் சுயநோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. நாட்டில் தற்போது நிலவி வரும் அமைதியான, சுதந்திரமான ஒரு சூழ்நிலையைத் தமக்கு சாதகமாக-தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய எந்தவொரு எண்ணத்தையும் வியாபாரிகள் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் சட்டம், மக்கள், சமுதாயம், அரசாங்கம் இவற்றின் கண்டனத்திற்குள்ளாவார்கள். எந்த ஒரு சமூக விரோதச் செயலையும் கவனிக்க நாட்டில் தற்போதுள்ள சாதாரணச் சட்டமே போதுமானது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நெருக்கடி நிலை நீக்கப்பட்டதன் பயனாக எந்த ஒரு சமூக விரோதச் செயலுக்கும் அனுமதியோ, அல்லது கடுந்தண்டனையிலிருந்து எவருக்கும் பாதுகாப்போ வழங்கப்படவில்லை என்பதனை நான் உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

"எனவே, அரசாங்கத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைப் பற்றிய பொறுப்பு வியாபாரிகளையும், கையிருப்பு வைத்திருப்பவர்களையும் சேர்ந்ததாகும் என்று நாங்கள் நம்புகின்றோம். எனவே, உள்நாட்டில், பற்றுக்குறை ஏற்படாத விதத்தில் பண்டங்களின் விற்பனை, விநியோகம் இவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதும், விலைகள் உயருவதற்குப் பதிலாக குறையும்படி செய்ய வேண்டியதும் அவர்களது கடமையும், பொறுப்பும் ஆகும். விலைவாசிகளைக் குறைப்பதற்குப் பதிலாக வியாபாரிகள் விலைகள் உயருவதற்கான சூழ்நிலைகளை செயற்கையாகச் சிருஷ்டிக்கின்றனர். இதற்கு உதவியாக, சமுதாயத்தை வருத்தி, கொள்ளை லாபம் ஈட்டும் நோக்கத்துடன் கையிருப்பு வைத்திருப்பவர்களும் பண்டங்களைப் பதுக்கி வைக்கின்றனர்.

"இதுபோன்ற சமூக விரோதச் செயல்கள் புரியப்படுவதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்துவிட அரசாங்கத்தால் முடியாது. எந்த ஒரு வியாபாரியும் பண்டங்களைப் பதுக்கி வைத்தல், செயற்கையாக விலையுயர்வைத் தோற்றுவித்தல் போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் இந்த எச்சரிக்கையைத் தாமதமின்றி ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் சம்பந்தமாக உள்ள கஷ்டங்களையும் குறைபாடுகளையும் நீக்குவதற்குப் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றியாக வேண்டும் என்பதனை வியாபாரிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"அரசாங்கம் பல்வேறு வழிகளில் பொதுமக்களின் சேவைக்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்தின் ஆக்கப்பணிகளில் பங்கு பெறவேண்டும். பொருளாதாரத்தின் நிலையான தன்மை, மக்களின் நல்வாழ்வு இவற்றை மனத்தில் கொண்டு பார்க்கையில் நாம் உற்பத்திக்கான நமது முயற்சிகளிலிருந்து ஒருநாள் கூடத் தவறக்கூடாது. சமூக நீதிப்படி தேசத்தின் நலனுக்கென நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் சுமைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நலனுக்கென உதவிக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் உணவு, உடை, இருப்பிட வசதி தேவைப்படும் பல இலட்சக்கணக்கான மக்கள் உள்ளனர். நம் நாட்டில், ஜனத்தொகையும் அதிகரித்து வருகிறது. வரும் ஆண்டுகளில் இப்போதுள்ளதைவிடக் கூடுதலாக உணவு, உடை, இருப்பிட வசதிகள் தேவைப்படலாம். எனவே, நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால் தேசத்தின் ஆக்கப்பணிகளில் நாம் வெற்றி பெற இயலாது. நான் கூறும் அந்த ஒத்துழைப்பு உதட்டளவிலான ஒன்றாக இருத்தல் கூடாது. அது ஒரு பரஸ்பர உதவியாகும்; வறுமையை ஒழிக்கும் பணிகளில் நமக்கு வெற்றியைத் தேடித் தரக்கூடிய ஓர் அர்ப்பணிப்பு ஆகும்.

"எனவே, உற்பத்தி, விலைவாசிகள் பராமரிப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். வெற்றிகளை நாம் பெற முடியாமல் நாம் அடையும் தோல்விகள் நம் நாட்டைப் பின் தங்கச் செய்துவிடும் என்பதனை அவர்கள் பூரணமாக உணர வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிலை எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு குடிமகனும் தனது கடமையைச் சரிவர ஆற்ற வேண்டும் என்றே நாடு எதிர்பார்க்கிறது.''

ஜெய் ஹிந்த்!

(பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 19-4-77 அன்று வானொலியில் ஆற்றிய உரை.)



## கலப்புப் பயிரும் ஊடுபயிரும்

நிலக்கடலையுடன் துவரையைக் கலப்புப் பயிராக 6:1 என்ற விகிதத்தில் சாகுபடி செய்தால் அதிக இலாபம் அடையலாம். கலப்புப் பயிருக்கு கோ. 2 துவரை மிகவும் நல்லது. தென் மாவட்டங்களுக்குக் கம்புப் பயிருடன் துவரை, கொண்டைக் கடலை அல்லது அவரை கலப்புப் பயிராகப் பயிரிட ஏற்றது.

தற்காலத்தே வெளியிட்டுள்ள குறுகிய காலப் பயிர்களாகிய கோ. 2 உளுந்து, கோ. 2, கோ. 3, பச்சைப் பயறு, கோ. 2 துவரை இரகங்கள் கலப்புப் பயிருக்கு மிகவும் உகந்தவை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1974—ஆம் ஆண்டு தேசீய ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ்நடத்திய ஆராய்ச்சிகளின் பயனாக, மண்ணில் போதுமான ஈரமுள்ள மானாவாரி நிலங்களில் சோளத்தில், கோ. 2 உளுந்து, கோ. 2 பாசிப் பயறு, சி. 152 காராமணி, கோ. 8 அவரை இவற்றில் ஏதாவது ஒன்றை ஊடுபயிர் செய்தால், அதிக இலாபம் அடையலாம் என அறியப்பட்டது. மணற்பாங்கான அல்லது செம்மண் பகுதிகளில் உளுந்து அல்லது பாசிப் பயறும், கரிசல் மண் பகுதிகளில் காராமணி அல்லது அவரை பயிரிடலாம். தென் மாவட்டங்களில் ஐப்பசிப் பட்டத்தில் காராமணி நல்ல பலன் அளிக்கும்.

இவை தவிர பாசிப் பயறு, உளுந்து ஆகிய பயறு வகைகளைக் கரும்பு, மரவள்ளி, பருத்தி, வாழை, சோளம் ஆகிய பயிர்களில் ஊடுபயிர் செய்தால் நல்ல இலாபம் அடையலாம்.



# உயர்விளைச்சல் நெல் சாகுபடியில் புதிய விஞ்ஞான முறைகள்

**1. நாற்றுப் பராமரிப்பு முறைகள் :**

நாற்றங்காலில் தரமான நாற்றுக்களை வளர்க்க வேண்டும். ஏனெனில், தரமான நாற்றுக்களிலிருந்துதான் பெரிதான தூர்களும், கதிர்களும் தோன்றும். தரமான நாற்றுக்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள குணங்கள் இருக்க வேண்டும் :

1. பருமனுகவும், குட்டையாகவும் இருத்தல்.

2. பூச்சி நோய்களினுல் தாக்கப்படாமல் இருத்தல்.

3. எல்லா நாற்றுக்களும் ஒரே சீரான வளர்ச்சி உடையனவாக இருத்தல்.

நாற்றங்காலில் சரியான இடைவெளி கொடுப்பதின் மூலமாகவும், குறைவான நீர் பாய்ச்சுவதன் மூலமாகவும், தழைச் சத்தைக்காட்டிலும், மணிச் சத்தையும், சாம்பல் சத்தையும் கூட்டுவதன் மூலமாகவும் நல்ல தரமான, குட்டையான, சரியான வளர்ச்சி பெற்ற நாற்றுக்களைப் பெறலாம். அதிக மணிச் சத்தையும், சாம்பல் சத்தையும் பெற்ற நாற்றுக்கள் பூச்சி, நோய் ஆகியவற்றை எதிர்க்கும் சக்தி உடையனவாக இருப்பதோடு, சாதகமில்லாத நிலைகளிலும் கூட வளர்ச்சி குறைவின்றி இருக்கின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நாற்றங்காலில் பாத்திகள் அமைக்கும் முன்பே மண்ணில் சமமாக உரங்கள் கலக்கும்படி கடைசி உழவின்போது உரமிட வேண்டும் நாற்றங்கால் பாத்திகளைச் சீராகச் சமன் செய்ய வேண்டும். சரியாகச் சமன்படுத்தப்படாதபாத்திகளிலிருந்து ஒரே சீரான நாற்றுக்களைப் பெறுவது கடினம். நாற்றங்காலில் அதிக ஆழத்தில் விதைத்தலைத் தவிர்க்க வேண்டும்.

**நாற்றுக்களின் வயதைக் காட்டிலும் அவற்றில் உள்ள இலைகளின் எண்ணிக்கையே மிகவும் முக்கியமானது. நான்கு அல்லது ஐந்து இலைகளுள்ள நாற்றுக்களைப் பெறுவதே மிகவும் சிறந்தது.**



**நாற்றுக்களின் நடவு ஆழம் :** அதிக ஆழமாக நடப்படும் நாற்றுக்களைக் காட்டிலும் குறைவான ஆழத்தில் நடப்படும் நாற்றுகள் நல்ல வேர் வளர்ச்சி அடைகின்றன. இதனுல் தூர்களின் எண்ணிக்கையும், நெல் விளைச்சலும் அதிகமாக இருக்கிறது. எனவே, நாற்றுகளை அதிக ஆழமில்லாமலேயே நட வேண்டும். அதிக ஆழமாக நட்டால் தூர்களின் எண்ணிக்கை குறைய ஏதுவாகும். தூர் அழுகல் நோய் ஏற்பட வாய்ப்பும் உண்டு.

**நடவு காலம் :** நாற்றுக்களைப் பிடுங்கி நடவு வயலில் நட்ட பின் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் சூரிய வெப்பம் அதிகமாக இருக்கக் கூடாது. இருப்பின் நாற்றுகளின் வேர் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே, மாலை வேளைகளில் நடவு வேலையைச் செய்வதின் மூலம் இப்பாதிப்பைத் தவிர்க்கலாம்.

## 2. பயிர்ப் பராமரிப்பு முறைகள்

**தழைச் சத்து உரத்தைத் தேர்ந்தெடுத்தல் :** பலவிதத் தழைச் சத்து உரங்களில், யூரியாவைப் பயன்படுத்துவது நலம். இது அதிகத் தழைச்சத்து உள்ளஉரம். அதிகத் தழைச்சத்து உள்ளஉரம். யூரியாவை ஈரமுள்ள மண்ணில் கலந்து, நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குப் பின்பு, நிலத்திற்கு இடலாம். இவ்விதமாகச் செய்வதன் மூலம் தழைச் சத்தை மண் எளிதில் பெற்றுக் கொள்ளும். அதிகமாகச் சேதமுமாகாது.

**தழைச் சத்து இடும் காலம் :** நெற் பயிரின் வளர்ச்சிப் பருவத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை :

1. முன் வளர்ச்சிப் பருவம்,

2. மத்திய வளர்ச்சிப் பருவம்,

3. பின் வளர்ச்சிப் பருவம்.

தழைச்சத்தை முன், பின் வளர்ச்சிப் பருவங்களில் தான் இடவேண்டும். மத்திய வளர்ச்சிப் பருவத்தில் இடப்படும் தழைச் சத்து கதிரற்ற தூர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதால் அந்தப் பருவத்தில் தழைச் சத்து இடுதலைத் தவிர்க்க வேண்டும்.

**தழைச் சத்து உரத்தை வைத்தல் :** அம்மோனியா வடிவில் உள்ள தழைச் சத்தை நிலத்தின் ஆழத்தில் வைப்பதன் மூலம் விளைச்சலை 10 முதல் 20 சதவீதம் பெருக்கலாம். 60 முதல் 80 கிராம் எடையுள்ள மண்ணையும், சம எடை



யுள்ள யூரியாவையும் கலந்து உருண்டை செய்து, இவ்வுருண்டையை நான்கு குத்துகளுக்கு ஒன்று வீதம், 6 அல்லது 7 செ.மீ. ஆழத்தில் வைக்கும் முறை சிறந்தது. இதை நாற்று நட்ட 10 அல்லது 12 நாட்களில் செய்யலாம்.

**நீர் நிர்வாகம் :** நெல் வயலில் தொடர்ச்சியாக நீர் தேங்கி இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. நீர் பாய்ச்சுவதும் பின்பு காயவிடுவதுமாக மாறி மாறிச் செய்யலாம். தூர் விடும் காலம் வரை இரண்டு முதல் ஐந்து செ.மீ. உயரத்தில் நீரைத் தேக்கி வைத்தல், பின்பு வெடிப்பு தோன்றும் வரை காய விடுதல், ஐந்து செ.மீ. ஆழத்திற்கு நெல் மணி பால் பிடிக்கும் பருவம் வரை நீரை விடுதல் என்ற இந்த முறைகளையும் செய்யலாம். **தொடர்ந்து நீரைத் தேக்கி வைப்பதைக் காட்டிலும், நீர் விட்டுக் காய விடுதலை மாறி மாறிச் செய்வதன் மூலம் 37 சதவீதம் அதிகமான மகசூலைப் பெறலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**பூச்சி நோய்க் கட்டுப்பாடு :**

சரியான நேரங்களில் பூச்சி, நோய்களைத் தடுப்பதன் மூலம் பயிருக்கு ஏற்படும் சேதத்தைத் தவிர்த்து, விளைச்சலைப் பெருக்கலாம்.

**அறுவடை :** பூப்பிடித்த நாளிலிருந்து முதல் முப்பது நாட்களில் நெல் அறுவடைக்கு வந்து விடும். நெல் மணியின் ஈரம் சுமார் 20 சதவீதத்திற்கும் குறையும் பொழுது அறுவடை செய்ய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட சீரிய சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் நெல் விளைச்சலை அதிகமாகப்பெருக்கிப் பயனடையலாம் என்பது உறுதி.

**தகவல் :**

திரு. பா. ராஜேந்திரன்,
திரு. ஞா. ஜேம்ஸ் மார்ட்டின்,
பண்ணை இயந்திரத் துறை,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

**வெளியீடு :**

தகவல் தொடர்பு நிலையம்
தமிழ் நாடு வேளாண்மை
பல்கலைக் கழகம்,
கோவை-3.



# முந்திரியைத் தாக்கும் கொடிய நோயும் பூச்சிகளும்

முந்திரி மரத்தைத் தாக்கும் நோய்களுள் பின்கருகல் நோயும் பூச்சிகளுள் தண்டு துளைக்கும் புழு, தேயிலைக் கொசு ஆகியவையும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

**பின்கருகல் நோய் :**

இது ஒரு பூசண நோய். மழைக் காலத்தில் இந்நோயின் அறிகுறி அதிகமாகும். இந்நோயினால் தாக்கப்பட்ட கிளைகளில் குச்சிகள் முதலில் வெள்ளை நிறமாகவும், பின்பு சிவப்பு நிறமாகவும் மாறும். மரப் பட்டை பிளவு பட்டுக் காய்ந்து உதிர்ந்து விடும்.

**தடுப்பு முறை :**

தாக்கப்பட்டகுச்சிகளை வெட்டி விட்டு 1 சத போர்டோக்கலவை மருந்தை மே-அக்டோபர் மாதங்களில் தெளிக்கலாம்.

**தண்டு துளைப்பான் :**

இது கரும் சிவப்பான வண்டு. மரப் பட்டைகளின் இடுக்கில் இது முட்டையிடும். இதன் புழுக்கள் கிளைகள், தண்டு முதலானவற்றைத் துளைத்துச் சேதம் உண்டாக்கும். இதனால் சிறு கிளைகள் வாடிக் காய்வதும் மரத்தின் இலைகள் மஞ்சளாகி உதிர்வதும் காணப்படும். மேலும் புழு துளைத்த துவாரங்களும் காணப் படும். ஜுலை-டிசம்பர் மாதங்களில் இப்பூச்சி அதிகம் காணப் படும்.

**தடுப்பு முறை :**

காய்ந்த பகுதிகளை வெட்டி விட்டு 'பி. எச். சி.' 50 சத மருந்தை (2 கிராம்/லிட்டர்) மரத்தில் பூச வேண்டும்.

**தேயிலைக் கொசு :**

சிவப்பு நிறமான கொசு போன்றது இப் பூச்சி. இது தேயிலை, கொய்யா, முந்திரி போன்றவற்றைத் தாக்குகிறது. இக் கொசு இளந்தளிர், பூங்கொத்து முற்றாத கொட்டை ஆகியவற்றின் சாற்றை உறிஞ்சி வாழும். சாறு உறிஞ்சும்போது உண்டாகும் நச்சுப் பொருளால் தாக்குண்ட பகுதியான இளம் தளிர், பூங்கொத்து, கொட்டை முதலானவை காய்ந்து விடும். பருவ மழைக்குப் பின்பு மரங்கள் துளிர்க்கும்போது இப் பூச்சியின் தாக்குதல் அதிகம் காணப்படும்.

**தடுப்பு முறை :**

தயோடான் (3 மி.லி./லிட்டர் மருந்தை தளிர் விடும்போதும், (செப்டம்பர்-அக்டோபர்.), பூப் பிடிக்கும் போதும் (நவம்பர்-டிசம்பர்), காய் பிடிக்கும்போதும் (ஜனவரி-பிப்ரவரி) தெளிக்க வேண்டும்.

**தகவல் :**

முந்திரி ஆராய்ச்சி நிலையம்,
விருத்தாச்சலம்.

**வெளியீடு :**

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.





# குறைந்த செலவில் சிறந்த தீவனங்கள் !

## கோழித் தீவனமும் மரவள்ளிக் கிழங்கும்

சோளம், கேழ்வரகு, கம்பு போன்ற தானிய வகைகள் கோழி கள் உணவில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. கோழி களின் கலப்புத் தீவனத்தில் இத் தானிய வகைகளின் உபயோகத் தைத் தவிர்த்தால் அது மனித னுக்கு நேரிடையாக உணவாகப் பயன்பட வாய்ப்பு ஏற்படும்.

சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின் உணவி யல் துறையில் நடத்தப் பெற்ற ஆராய்ச்சியின் முடிவாக சோளம், கம்பு, கேழ்வரகு முதலியவற்றுக் குப் பதிலாக மரவள்ளிக் கிழங்கு மாவை கோழித் தீவனமாக உப யோகிக்கலாம் எனக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. கோழிகள் உண வில் உபயோகப்படும் தானியங் களின் அளவில் 30 சத விகிதம் குறைத்து, அதற்கு மாற்றாக மர வள்ளிக் கிழங்கு மாவைப் பயன் படுத்தலாம். இதனால் தானியங் களை மனிதனின் உபயோகத்திற்கு சேமிக்கவும், கோழியின் உணவு விலையைக் குறைக்கவும் முடியும்.

மரவள்ளிக் கிழங்கு மாவைப் போலவே அதன் சக்கையையும் கோழிகளின் தீவனத்தில் இலாப கரமாக உபயோகிக்கலாம் என வும் ஆராய்ச்சி முடிவுகள் புலப் படுத்துகின்றன. கோழிகள் உண வில் சேர்க்கப்படும் சோளத்தின் அளவில் பாதியைக் குறைத்து அதற்குப் பதிலாக மரவள்ளிக் கிழங்குச் சக்கையைச் சேர்த்து கோழி உணவு தயாரிக்கலாம்.

**கோழி உணவில் புரதச் சத்து:**

சாதாரணமாக கோழி உணவில் 20 சத விகிதம் புரதம் போது மானது என்று பரிந்துரைக்கப்படு கிறது. மாமிசக் கோழிகள் குறு கிய காலத்தில் அதிக வளர்ச்சி அடையும் தன்மை உள்ளதால் அவற்றின் உணவில் எவ்வளவு புரதச் சத்து இருக்க வேண்டும என்பதைத் தெளிவுற அறிய ஒரு குறுகியகால ஆராய்ச்சி நடந்தது. இந்த ஆராய்ச்சியில் 25.23, 21.60 மற்றும் 16.59 சத விகிதப் புரதச் சத்துள்ள மூன்று வித மான கோழி உணவுகள் முறையே மூன்று பிரிவுக் கோழிகளுக்குக் கொடுக்கப்பட்டன. 25.23 சத விகிதம் புரதம் உள்ள கோழி உணவு அந்தப் பிரிவுக் கோழி களுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுத்தது. வசதியும் வாய்ப் பும் உள்ள இடத்தில் கோழி உணவில் உள்ள புரதச் சத்தியின் அளவை அதிகப் படுத்தி நல்ல பலனைக் காண முடியும்.

**குறைந்த செலவில் ஆடுகள் உணவு**

பஞ்ச காலங்களிலும், மேய்ச்ச லுக்குத் தேவையான நில வசதி







இல்லாதபொழுதும் ஆடுகளுக்குக் கரு வேலங்காய்களை உணவாகப் பயன்படுத்தலாம். ஆடுகள் கரு வேலங்காய்களைச் சுவைத்து உண் கின்றன.

கருவேலங்காய்களைப் போலவே மாங்கொட்டையில் உள்ள பருப் பையும் ஆட்டிற்கு உணவாகப் பயன்படுத்தலாம். மாங்கொட் டைப் பருப்பு துவர்க்கும் தன்மை உள்ளதானாலும் ஆடுகள் அவற்றை நன்கு சுவைத்து உண்ணுகின் றன. ஓர் ஆடு சராசரியாக 250 முதல் 300 கிராம் வரை இத் தகைய உணவினை புல் உணவுடன் சாப்பிடும்.

**மாட்டுத் தீவனத்தில் கரும்புச் சக்கையின் பயன்:**

சர்க்கரை ஆலைகளில், சாறு பிழியப்பட்ட கரும்புச் சக்கை கள் நிறைய அளவில் கிடைக்கும். இச்சக்கைகளில் 2 சதவீதம் வெல்லப்பாகும், 0.8 சதவீதம் உப்பும் கலந்த கலவையைத் தெளித்து பதப்படுத்தப்பட்ட ஈர உணவாக மாட்டுத் தீவனத்தில் கலந்து பயன்படுத்தலாம். மாடு கள் இவ்வுணவை மிகவும் விரும்பி உண்ணும். இம்முறையினால் வீணாகக் கழிக்கப்படும் கரும்புச் சக்கைகளைச் சிறப்பான முறையில் பயன்படுத்த முடிகின்றது. மேலும் மாட்டுத் தீவனத்திற்கு ஆகும் செலவையும் கணிசமாகக் குறைக்க முடிகின்றது.

தகவல்:

கால்நடைக் கல்லூரி, சென்னை.

வெளியீடு:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை.

## விடுதி வசதிகள் கொண்ட பள்ளிகளில் பயில்பவர்களுக்கு 500 உபகாரச் சம்பளம்

விடுதி வசதிகள் கொண்ட அங்கீகரிக்கப் பட்ட செகண்டரி பள்ளிகளில் கல்வி பயில்ப வர்களுக்கு 1977-78ஆம் ஆண்டில் 500 உப காரச் சம்பளங்களை மத்திய கல்வி, சமூக நல அமைச்சகம் வழங்கும். பெற்றோரது நிகர மாத வருமானம் 500 ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால் குழந்தைகளின் கல்வித் தகுதி— வாழ்க்கைத் தரம் இவற்றின் அடிப்படையில் இந்த உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியன்று 11 முதல் 12 வயது வரையிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கென அகில இந்திய ரீதி யில் நடத்தப்படும் ஒரு தேர்வின் மூலம் இந்த உபகாரச் சம்பளம் பெறத் தகுதி வாய்ந்த மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இத்தேர்வில் பங்கு பெறுவதற்கான மாணவர் களை ஆரம்பத் தேர்வில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் தெரிவு செய்யும். இந்தத் தேர்வு, ஆங்கிலம், இந்தி— மாணவர்களால் தெரிந்தெடுக்கப்படும் அங்கீ கரிக்கப்பட்ட இதர பிராந்திய மொழிகளில் நடத்தப்படும்.

இந்த உபகாரச் சம்பளங்களில் 50 சத வீதம், மாநில அரசுகள், மற்றும் யூனியன் பிரதேசங்களின் மக்கட் தொகை அடிப்படை யில் வழங்கப்படும். மீதமுள்ளவை பற்றி, அகில இந்திய அடிப்படையில் தீர்மானிக்கப் படும். உபகாரச் சம்பளத்தில் 15 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 5 சதவீதம் பழங் குடிப் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப் படும்.

இந்த உபகாரச் சம்பளம் பெறும் மாண வருக்கு திருப்பியளிக்கப்படாத இதர கட் டாயக் கட்டணங்கள் உட்பட முழு பள்ளிக் கட்டணமும் வழங்கப்படும். இது தவிர, கைச்செலவு, பள்ளிச் சீருடை உட்பட உடை கள் இவற்றுக்கும் அரசாங்கத்தால் நிர்ணயிக் கப்படும் அளவுகளில் நிதியுதவி அளிக்கப்படும். இம்மாணவர்களுக்குப் பயணப் படியும் வழங் கப்படும்.

இந்த உபகாரச் சம்பளம் பெற விரும்பு கின்ற மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங் கள், அல்லது யூனியன் பிரதேசங்களிலுள்ள கல்வி இயக்குநருக்கு, ஜூன் மாதம் 15ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். எந்த ஒரு விண்ணப்பத்தையும் மத்திய கல்வி சமூகநல அமைச்சகத்திற்கு நேரிடையாக அனுப்பக் கூடாது.



பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்றாக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்றாக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.






# தமிழரசு

சரத்சந்திரர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்

மலர் : 7 இதழ் : 22

16—5—1977



எப்போதும் பொய்யின் மூலம் மெய்யை மெய்ப்பிக்க முடியாது என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். உண்மையை உண்மையாகத்தான் சொல்ல வேண்டும். சகல மனிதர்களும் தங்கள் தங்கள் புத்திக்குத் தகுந்தபடி புரிந்து கொள்வார்கள். இன்று புரிந்து கொள்ளாவிட்டால், நாளை புரிந்து கொள்வார்கள். புரிந்து கொள்ளா விட்டாலும் அதற்காகப் பொய்யின் மூலம் புரிய வைக்க முயல்வதுதான் பெரிய அநியாயம். பொய் எப்போதும் பாபம். அதை உண்மையுடன் கலந்து கூறுவது மகாப்பெரிய பாபமாகும்.

## இந்த இதழில்

| | |
|---|---|
| தரம் மிக்க கதைகள் யாத்தார் .. | 2 |
| ஞாயிறும் திங்களும் .. | 3 |
| சரத் சந்திரரின் பாத்திரப் படைப்புகள் சாகா வரம் பெற்ற அழியாச் சுடர்கள் .. | 6 |
| படமும் செய்தியும் .. .. .. | 12 |
| நாவல் மன்னர் சரத் சந்திரர் .. | 15 |
| சரத் சந்திரர் வாழ்க்கையும் சாதனையும் .. | 17 |
| வைகுந்தன் உயில் (சரத் சந்திரர் நாவல்) | 24 |
| சரத் சந்திரரின் கடிதங்கள் .. .. | 44 |
| சரத் சந்திரரின் ஆக்கங்கள் .. .. | 46 |

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.






# ஞாயிறும் திங்களும்

த. நா. குமாரஸ்வாமி

இரு சுடர்கள்—ஒன்று ஞாயிறுக்கு ஒப்பானது; மற்றது திங்களுக்கு நிகரானது—வங்க இலக்கிய வானில், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந் நூற்றாண்டு முற்பகுதி வரை ஒளி பரப்பின. மகா கவி ரவீந்திர நாத தாகூர் காவியம், நாடகம், சிறுகதை, புதினம், கட்டுரை, இசைப் பாட்டு, ஓவியம் என்று பல்வேறு கலைத் துறைகளில் ஆற்றல் மிகுந்த படைப்புக்களைத் தந்தவர். ஆனால் அவருடைய காவியங்களும், பாட்டுக்களும் சிறு கதைகளுமே அவருக்குப் புகழைத் தருவன.

நல்குரவே காணாத ஒரு குடும்பத்தில் திருமடந்தையும் நாமகளும் அள்ளித் தரும் செல்வச் சூழலில் உருவாகிய அவர், எந்த விதமான கட்டு திட்டமுமின்றித் தம் அறிவினை வளர்த்துக் கொண்டவர் ; கதிரவனைப் போல் உலகு பரந்த கீர்த்தி—மகுடம் அணிந்த இலக்கிய மன்னனாக ஆட்சி செலுத்தியவர்.

சரத் சந்திரரோ, ஆற்றங்கரை நிலவென நாவல் துறையில் மட்டுமே தண்ணொளி வீசித் தம் நாட்டு மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர். ஓர் எளிய குடும்பத்தில் தோன்றி, இளமை தொட்டு நடு வயது வரை வறுமையிலும், வாழ்க்கைப் போராட்டத்திலும் மல்லுக் கொடுத்துப் புகழின் உச்சிக்கு வந்தவர். சரத் பிற்

> 'கலை என்பது மனிதனுடைய சிருஷ்டி; அது இயற்கையன்று. வாழ்வில் நடப்பதெல்லாம் புனிதமென்று சொல்லிவிட முடியாது. அழுகலே முக்கால்வாசி. அவை இலக்கியத்துக்கு உதவாத விஷயங்கள். இயற்கையை உள்ளபடி வர்ணிப்பது வெறும் போட்டோ. அது வர்ணமும், ரேகையும் கொண்ட சித்திரமாகாது. தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் மயிர்க் கூச்செறியும் சம்பவங்கள் இலக்கியமாகுமா? குணச் சித்திரம் வரைவதென்றால் லேசான காரியமல்ல. கலை நோக்கு அனுபவம் அவசியம் வேண்டும்; கற்பனை ஒன்று மட்டுமிருந்தால் போதாது. இருதயத்தின் அனுதாபத்தையெல்லாம் சொரிந்து நான் கதா பாத்திரங்களை ஜோடனை செய்த கஷ்டம் எனக்கல்லவா தெரியும்! நல்லதுமிருக்கும்; கெட்டதுமிருக்கும். இவை விவாதத்துக்குரிய விஷயங்களல்ல. கலையில் கலகத்துக்கு இடமில்லை. 'கதை சுபமாக முடிய வேண்டும்; தர்மம் வெற்றி பெற வேண்டும்; அதர்மம் அழிய வேண்டும்'! —இதெல்லாம் நீதியைப் போதிப்பவர்களுக்குத்தான்; இலக்கிய சிருஷ்டி செய்பவனுக்கல்ல!'
>
> —சரத்சந்திரர்.

காலத்தில் இப்படி ஆவார் என்பதற்கான அறிகுறி எதுவுமே இல்லை. ஆனால் இவரிடம் கரந்திருந்த அந்த மேதா விலாசத்தின் பிழம்பு எப்படி மறைந்து இருக்கும்? உரிய காலத்தில் அது வெளிப்பட்டது. ரவீந்திரரின் அமைதி நிரம்பிய வாழ்க்கை இவருக்கு ஏற்படவில்லை. ஊர் தங்காமல் நாடோடி போல் திரிந்தவர்; சமூகம் அருவருக்கும் மக்களுடன் இணைந்து பல விசித்திர அநுபவங்களைப் பெற்றவர்; வாழ்க்கையின் கசப்பான உண்மைகளை நேரில் கண்டு மனத் திடம் கொண்டவர். விதி இவரைப் பலதரப்பட்ட மக்களுடன் மோதவிட்டது. இவருக்கு நன்மையாகவே முடிந்தது. இந்த அநுபவங்களே இவருடைய புதினங்களுக்குப் பொருள்களாயின. இவர் தீட்டியுள்ள கதாபாத்திரங்கள், குணச்சித்திரங்கள் யாவும் யதார்த்தமானவை, கற்பனையல்ல. இதனால் வங்க நாவலாசிரியர்களிடையே 'ரியலிஸ்ட்' ஆகத் திகழ்கிறார். பிற்காலத்தவருக்கு இவர் இத்துறையில் வழிகாட்டியாக விளங்குகிறார். ரவீந்திரரோ முற்றும் முற்றும் 'ஐடியலிஸ்ட்' கற்பனைச் செறிவுடைய லட்சியவாதி — மக்களில் கீழ் மட்டத்தவரை மலையுச்சியிலிருந்து நோக்குவதுபோல் நோக்குபவர். அநுதாபம் உண்டு, ஆனால் ஆழ்ந்த பற்றுதல் இல்லை. அவரே ஓரிடத்தில் கூறுகிறார்.

'வாணி எனக்குத் தரும் பொருள்; நான் நுகரும் இம்மாநிலத்துப் பாடலின் சுவைதான். எல்லாவற்றையும் விட உட்புக முடியாதது மனித உள்ளத்தின் ஓர் மறைவு. கவிஞன் தன்னுள் திளைத்திருப்பவன்; அதன் பின்பே அவனது உள்ளக் கிடக்கை வெளியாகும். எனது வாழ்க்கை வேலிக்குள் கட்டுண்டு கிடப்பவன் நான். உழவன் வயலிடை ஏரினை ஓட்டுகின்றான்; தறியில் நூலைப் பாவுகிறான் நெசவாளி; கடலில் வலையை வீசுகிறான் வலைஞன். இவர்களது உழைப்பின் சிறப்பு வெகு தொலைவு விரிவது. இவர்களைக் கொண்டே நிலவுகிறது இவ்வையத்தோர் வாழ்வு. சமூகத்தின் உயர் பீடத்தில் வீற்று, சாளர வாயிலில் அமர்ந்து ஒதுங்கியே நான் இவர்களது இன்ப துன்பங்களில் சிறிதே பங்கு ஏற்று எப்போதாவது அவர்களது எல்லைக்குள் கால் வைத்தவன். உட்புகுந்து இவர்களுடன் உறவு கொள்ளும் திறமை எனக்குத் துளியேனும் இல்லை. வாழ்வுடன் ஒட்டியிராது போனால் இப்பாட்டின் செல்வம் அனைத்தும் பயனற்றே ஒழியும். எனக்குள்ள இவ்விழுக்கினை நான் உணர்வேன். என் இசையில் ஏதோ ஒரு சுருதி குறைவுதான். விசித்திரத் துறைகளில் எனது பாட்டுத் திறன் சென்றிடினும், எவ்விடத்திலும் உள் நுழைந்து பார்த்த பெருமை அதற்கில்லை. செயலிலும் சொல்லிலும் உண்மை நட்பினைப்பெற்று மண்ணோடு இழைந்து நிற்பவனே மக்கள் வாழ்வின் உயர்வை உணர்ந்தவனாவான். உண்மையோடு ஒட்டியிருக்க வேண்டும்; வெறும் பாணி செய்வது கண்ணை மயக்கும் வித்தை. உண்மைக்கான விலையைக் கொடுக்காமல் பெற்றிடும் இலக்கியப் புகழ் புகழேயன்று. எளிய மக்களின் இதயத்தைப் புரிந்து கொள்ளும் புதுமைக் கவிஞனே வா! துன்பத்தில் உழன்று வாயடைத்துத் தலைதாழ்ந்து திடுக்கிட்டிருக்கும் இவர்களுக்கு இப்பாரில் இடம் வேண்டும். அருகில் இருந்தும் சேய்மையரான இவர்களது குரலையும் நாம் கேட்க வேண்டும்; இவர்களது உறவினன் நீயே!

இதிலிருந்து கவியரசர் தமக்குள்ள ஒரு பெரும் குறையை வெளிப்படுத்துகிறார் என்பது தேற்றம். அவர் பாட்டிற்கோர் புலவன் அன்றோ! அவரது உலகம் கனிப்பட்டது. அவரது கவிதை யுள்ளம் வளம் பெறுவதற்கா ஒரு சூழலில் அவர் தோன்றியவர். அது வேறாக இருப்பின் அந்த காவிய விலாசம் முழு மலர்ச் யின்றிக் கருகிப் போயிருக்குமே. மனிதர்களை அவர்களுடைய சுற் மும் சூழ்நிலையுமே உருவாக்குகின் றன என்பது முற்றிலும் உண் மையே.

சமகாலத்தவராயினும் சரத் சந்திரர், ரவீந்திரரை விடப் பல ஆண்டுகள் இளையவர்—பதினைந்து வயது சிறியவர். சரத் சந்திரருக்கு இலக்கியத்தில் ஆர்வ வருவதற்குக் காரணம், அவ ருடைய தந்தை விட்டுச் சென்ற அரை குறையான பல இலக்கிய முயற்சிகளாகும். அவற்றைப் படித்த பிறகே எழுதுவதற்கான துடிப்பு அவருக்கு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் பங்கிம் சந்திரரின் பிரபாவம் மக்களிடையே மழுங்கவில்லை. பங்கிமைப் போல் எவருமே புதினங்களைப் புனைய வில்லை என்ற கருத்து நிலவி வந்தது. சரத் சந்திரர் தம் இளமையில் பங்கிமின் இலக்கியத்தில் தோய்ந்து அவர் வனைந்து உள்ள பெண் குணச் சித்திரங்களை —விதவை குந்தநந்தினி (விஷ

> சத்தியத்தை எப்போதும், எந்நிலையிலும் கைக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இதனால் வேத சாஸ்திரங்கள் பொய்யாகப் போவதானாலும் சரி. இவை சத்தியத்தைவிட உயர்ந்தவை அல்ல. சத்தியத்தின் முன் இவை அற்பமானவை. பிடிவாதத்தாலோ, மமதையினாலோ வெகு நாளையப் பழக்கத்தினாலோ கண்ணை மூடிக்கொண்டு அசத்தியத்தைக் கடைப்பிடிப்பதில் புண்ணியமில்லை.
>
> சரத்சந்திரர்.

ருக்ஷம்), ரோகிணி (ஸ்ரீகிருஷ்ண காந்தன்உயில்), சைவலினி (சந்திர சேகரன்) ஆராய்ந்து, பங்கிம் இப்பாத்திரங்களை முழுமையாக ஏனோ சமைக்கவில்லை என்பதை உணர்ந்து வருந்தினார். இவர் பள்ளியில் மாணவனாக இருக்கையில் விடுமுறை நிமித்தம் தம் வீட்டிற்கு வந்த உறவினன் ஒருவன் ரவீந்திரரின் 'பிரகிருதிர் பிரதிசோத' (இயற்கையின் வஞ்சம்) என்ற நாடகத்தைப் படித்துக் காட்டினான். அது முதல், சரத் சந்திரருக்கு ரவீந்திரரிடம் பெரு மதிப்பு ஏற்பட்டது. பங்கிமின் வழியைவிட்டு முற்றிலும் மாறிய வகையில் ரவீந்திரரின் 'சோக்கேர் பாலி' (விநோதினி) என்ற புதினம் வெளியாகியது. அதன் நடையும் புதுமைக் கதைப் போக்கும் சரத் சந்திரரை மேலும் வசீகரித்து விட்டன. ரவீந்திரரைத் தம் குருவாகவே போற்றினார். ஒரு சமயம் சரத் சந்திரரின் நண்பர் ஒருவர் கேட்டாராம்—'இந்த ரவீந்திரரின் இலக்கியங்கள் எனக்குப் பிடிக்கவில்லை' என்று. அதற்கு சரத், 'ரவீந்திரர் என் போன்ற எழுத்தாளர்களுக்காக எழுதுகிறார்; உன்னைப் போன்ற வாசகர்களுக்கு நான் எழுதுகிறேன்' என்றாராம். சரத் சந்திரர் யதார்த்தவாதி. வாழ்க்கையில் நடக்கும் உண்மைகளை ஆராய்ந்து பார்ப்பவர். ரவீந்திரரோ கற்பனையில் திளைக்கும் லட்சியவாதி. இத்துணை பக்தி இருப்பினும் சரத், ரவீந்திரரை குருட்டுத் தனமாக அடியொற்றிச் செல்பவரல்லர். சமயம் வாய்க்கும்போது உள்ளத்தில் பட்டதைப் பளிச்செனச் சொல்லக் கூடியவர். தம் எதிர்ப்பைக் காட்டக் கூடியவர். ரவீந்திரர் மகாத்மா காந்தியின் 'சர்க்கா' இயக்கத்தைக் கண்டித்தபோது சரத் சந்திரர், அந்த இயக்கத்தினால் மக்களுக்கு நலனே உண்டாகுமென்று வாதாடியவர். ஆனால் அஹிம்சாவாதியானகாந்தியடிகளைப் பின்பற்றும் இவர் தம் நிழலில் சில பயங்கரவாதிகளை மறைத்து வைத்து அவர் தப்பியோடவும் வழி செய்தவர். ஒத்துழையாமைக் கிளர்ச்சி நடக்கும் நாளில் ரவீந்திரர் கல்வித் துறையில் கூட்டுறவு பற்றி 'சிஷார் மிலன்' என்ற சொற்பொழிவு ஆற்றுகையில், நம் நாடு வெளி நாட்டுப் பண்பாடுகளை உட்கொள்வது அவசியமென்பதை வற்புறுத்திச் சொன்னார். இதற்கு எதிரிடையாகச் சரத் சந்திரர் 'சிக்ஷார் விரோத்' (கல்வியிலே முரண்பாடு) என்ற கட்டுரையை வரைந்து வெளிநாட்டுக் கல்வி முறை நம் நாட்டுப் பண்பாட்டிற்கு ஒத்ததன்றெனக் கூறினார். மற்றொரு சமயம், ரவீந்திரர் இலக்கியம் இடம் பொருள் ஏவலைத் தாண்டிய கலையாக இருக்க வேண்டுமென்றும் வெறும் மனிதப் பூசல், சமூகப் பிரச்னை இவற்றை வருணிக்கும் குறுகிய நோக்குடன் இருத்தல் கூடாது என்றும் தற்காலப் புது எழுத்தாளரின் சில போக்கைச் சற்று வலுவாகவே கண்டித்தபொழுது, சரத் தம் குருவை வியங்கியச் சுவை மண்டிய சொற்களால் இறக்கிவிட்டார். இந்த மனவேற்றுமை இவர்களிடையே இலக்கியத்துடன் நின்றது. ரவீந்திரரின் 70ஆம் பிறந்த நாள் கொண்டாட்டம் கல்கத்தா நகரில் விமரிசையாக நடந்தபோது சரத் சந்திரரே அதன் வரவேற்புக்குழுவின் தலைவராக இருந்து கவியரசரை வெகுவாய்ப் பாராட்டியிருக்கிறார். அந்தப் பாராட்டுரை உயர்ந்த இலக்கியத் தரத்துடன் சரத்தின் பணிவன்பின் அடையாளமாகத் திகழ்கிறது. அதேபோல் ரவீந்திரர், சரத் சந்திரருக்கு நடந்த 61வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு ஆசியுரையை வழங்கினார்.

'சரத் சந்திரருக்கு நடக்கும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு நான் மிகப் பெருமை அடைகின்றேன். அவர் நான் கண்டெடுத்த ஓர் அபூர்வ நிதியம். ஆனால் அவர் யாருடைய மெச்சுதல் மொழிக்கும் காத்திருக்கவில்லை. இன்று வங்கத்தில் ஒவ்வோர் இல்லமும் அவருக்காகக் குதூகலம் கொள்ளும். வெறும் கதை புனைவதில் மட்டுமா அவர் சிறந்தவர்? நாடக மேடையிலும் சினிமாத் துறையிலும் அவருடை அபூர்வமான நவீனங்களும் இடம் அளிக்கப்பட வேண்டுமென்பதே ஒவ்வொரு வங்க மகனின் அவாவாகும். அவர் வங்காளிகளின்—முக்கியமாக பெண்களின் உள்ளத்தின் வேதனையைத் தொட்டுப் பார்த்துத் தம் எழுத்து வாயிலாக அதனை உலகத்தவர் முன்பு நிறுத்தியவர். இலக்கியத்தில் உபதேசம் செய்பவனைவிட அதனைப் படைப்பவனே உயரிடம் பெற்றவனாவான். கவிஞன் என்ற பீடத்திலிருந்து நான் சரத் சந்திரருக்கு இந்தப் புகழாரத்தை அளிக்கின்றேன்.''

*1938* ஜனவரி, *16*ஆம் நாள் சரத் சந்திரர் அஸ்தமித்தபோது முதுபெரும் ரவீந்திரர் இவரது மறைவைக் குறித்து உள்ளம் நெகிழ ஒரு சிறு செய்யுள் வாயிலாகத் தம் துயரை வெளியிட்டார்.

**''அன்பிலே வீற்று எவர் சாவா**
**நிலையை எய்தினாரோ**
**மறலியின் ஆட்சியினால் அவரை**
**நாம் இழந்தது இழப்பேயன்று;**
**நாட்டின் மண்ணிலே அவர்**
**மறைந்தாலும்**
**நம் உள்ளத்தில் அவர் என்**
**றுமே உள்ளார்.''**

மேலும் ரவீந்திரர் இந்த நாவலரசை மறக்காமல் தம் 'புனஸ்ச' என்ற கவிதைத் தொகுதியில் வரும் 'ஒரு சாதாரணப் பெண்' (ஸாதாரணமேயே) என்ற கவிதையில், சரத் சந்திரர் பெண்களைப் பற்றி அற்புதக் கவிதைகளைப் புனைந்தவராதலால், காதலில் ஏமாற்றமடைந்த ஓர் அப்பாவிப் பெண், காதலன் மீது தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளத் தன் மனத்தைத் திறந்து அதற்கான வழியெல்லாம் சொல்லி சரத் சந்திரரை உதவிக்கு அழைக்கிறாள்—

''என் கதையை ஏன் நீங்கள் எழுதவில்லை. . . எழுதுங்கள் சரத் பாபு''! என்கிறாள். இதனைக் கொண்டு சரத் சந்திரருக்கு இருந்த எழுத்து வன்மையை எவ்வளவு தெளிவாக ரவீந்திரர் புரிந்து கொண்டிருந்தாரென்பது நன்கு விளங்கும்.

# சரத்சந்திரரின் சாகா வரம் பெற்ற பாத்திரப் படைப்புகள் அழியாச் சுடர்கள்

— அ. கி. ஐயராமன்

"எல்லையற்ற வான மண்டலத்தை ஆராய்ந்து விசித்திரமான புதிய கோள்களையும், புதிய ஒளிகளையும் கண்டு பிடிப்பது போல் சரத் பாபு வங்க மக்களின் இதய வானத்தை ஆராய்ந்து, அதில் மறைந்து கிடக்கும் உண்மைகளையும் கண்டு, அவைகளையே தமது கதாபாத்திரங்களாக உருவாக்கியுள்ளார். மக்களின் சுகம், துக்கம், உறவு, பிரிவு ஆகியவற்றின் சக்திகளை அவர் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ள முறையானது, ஒவ்வொரு வங்காளியும் இது தன்னைப் பற்றியே எழுதப்பட்டுள்ளது என்று நினைக்கும்படிச் செய்துவிட்டார் சரத் பாபு. இத்தகைய திறமை சரத் பாபு ஒருவருக்கே உண்டு. எத்தனையோ எழுத்தாளர்கள் பெருமை அடைந்திருக்கிறார்கள். ஆனால் சரத் சந்திரர் அடையும் பெருமை அவைகளினின்றும்முற்றிலும் மாறுபட்டது. வங்க மக்களின் உள்ளத்தில்—ஏன் இந்திய மக்களின் உள்ளத்தில் என்றுகூடக் கூறலாம் —



அசைக்க முடியாத இடத்தைப் பெற்றவர் சரத் சந்திரர்.

"அவர் வெகு வேகமாக அதே சமயம் மிகச் சுலபமாகப் புகழ் ஏணியில் ஏறிவிட்டார். அவரைக் கண்டு எனக்குப் பொறுமையாகக் கூட இருக்கிறது என்று கூறலாம். ஆனால் அவர் புகழின் சிகரத்தை எட்ட ஒருவருடைய உதவியையும் நாட வில்லை. அவருடைய அற்புதப் படைப்புகள் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டன. இன்று அவருடைய அறுபதாவது பிறந்த நாள் விழா இந்த நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு வங்காளியின் வீட்டிலும் அவருடைய பெயர் ஒலிக்கிறது. வங்க இலக்கிய அன்னைக்கு அவர் பூட்டிய ஆபரணங்கள் விலைமதிப்பற்றவை. இலக்கியத்தில் உபதேசம் செய்பவனை விட சிருஷ்டிப்பவனே உயர்ந்தவன். சிந்தனைத் திறனும், கற்பனை சக்தியின் ஆழ்ந்தபார்வையும்எழுத்தாளனை இலக்கிய பீடத்தில் கொண்டு அமரச் செய்துவிடுகிறது. ஒரு கவியின் ஆசனத்தமர்ந்து, அந்தக் கதை சிற்பி சரத் சந்திரருக்கு இந்தப் புகழ் மாலையைச் சூட்டுகிறேன். அவர் நீண்ட நாள் வாழ்ந்து வங்க இலக்கியத்திற்குச் சேவை செய்வாராக!"

இவ்வாறு கவி ரவீந்திர நாத் தாகூர், சரத் சபாபுவின் அறுபதாவதாண்டு பூர்த்தி விழாவின் போது கூறினார்.

இந்திய இலக்கிய வானிலே தன்னிகரில்லா நாவலாசிரியர் சரத் சந்திரர். பங்கிம் சந்திரர், ரவீந்திரர் இருவருக்கும் பிறகு தோன்றியவர் சரத் பாபு. ஆனால் அவர்கள் வகுத்த பாதையினின்றும் முற்றிலும் வேறுபட்டு, தனக்கென்று ஒரு புதிய பாதையை வகுத்துக் கொண்டவர்.

பங்கிம் சந்திரர் தெய்விகத்தைப் போற்றினார். ரவீந்திரர் சௌந்தரியத்தைப் போற்றினார். ஆனால் சரத் பாபு ஏழை மனித உள்ளத்தைப் போற்றினார். அதனால்தான் காந்தியடிகள் "சரத்சந்திரரின் நாவல்கள் இந்தியா முழுவதற்கும் பாடபுத்தகமாக வைக்கக்கூடியவை. ஏழை மக்கள், துன்பப்படுவோர் ஆகியவர்களின் வாழ்க்கையைச் சித்திரித்த முதல் இந்திய நாவலாசிரியர் அவர் தான். அவருடைய சொந்த வாழ்க்கை அனுபவம் நிறைந்தது, உருக்கமானது. என்னைப்போலவே அவரும் தரித்திர நாராயணனைக் கொண்டாடி அவன் உள்ளத்தை சமூகத்தின் மேல் தட்டிலுள்ளவர்களுக்குக் காட்டினார்" என்று பாராட்டினார்.

வங்க இலக்கியத்திலே மட்டும் அல்ல—இந்திய நாவல் இலக்கியத்தில் என்றே கூறலாம்—முதன் முதலில் ஏழைகளையும் துன்பமுற்றவர்களையும், வாழ்க்கைப் புயலில் சிக்கி மீளமுடியாமல் வழி தவறித் திசை மாறியவர்களையும் எழுதிய பெருமை சரத் பாபு ஒருவருக்கே உண்டு.

சரத் பாபு கூறுகிறார் "அநீதியைப் பிரச்சாரம் செய்ய நான் பேனா பிடிக்கவில்லை. திசை காட்டும் கருவி போல் பேனா நீதியின் பக்கம்தான் திரும்பி நிற்கும். ஆனால் அந்த நீதியை மற்றவர்கள் தேடும் இடமும் நான் தேடும் இடமும் முற்றிலும் மாறுபட்டதாகும். மனிதரின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் மனிதத் தன்மையையும், அதன் பெருமையையும்—மற்றவர்களால் அலட்சியம் செய்யப்பட்ட உண்மைகளையும் நோக்கி அதற்கு உருவம் கொடுத்து நடமாட விட்டிருக்கிறேன்."

அவர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை என்பது போல் திகழ்கின்ற அவரது கதாபாத்திரங்கள். "அநீதியைப் பிரச்சாரம் செய்ய நான் பேனா பிடிக்கவில்லை" என்று சரத் பாபு கூறியதை அவருடைய ஒவ்வொரு கதாபாத்திரமும் நமக்கு நிரூபித்துக் காட்டுவதுபோல் அமைந்துள்ளன. அவரது இலக்கியப் படைப்பு — அவருடைய பாத்திரங்கள் — ஒவ்வொன்றும் ஒரு கணமாவது, ஒரு சொல்லிலாவது—அநீதியை எதிர்த்து விட்டுத்தான் போகின்றன. அத்தகைய உயிருள்ள பாத்திரங்கள்! தன்னலத்தை மறந்து உண்மை வழி நின்று, சத்திய சோதனை செய்து, தன் இலட்சியத்திற்காகப் போராடி வெற்றியோ, தோல்வியோ அடையும் எண்ணற்ற கதாபாத்திரங்களைச் சரத் பாபு தன் நாவல்களில் படைத்துள்ளார்.

அதனால்தான் கவியரசர், சரத் பாபுவைப் பற்றி எழுதிய கவிதையில் "அடே கதைச் சிற்பி! வாழ்க்கையைக் கடைந்து அதில் எழுந்த விஷத்தை உண்டு, அமுதத்தை மக்களுக்குத் தந்த மகானடா நீ" என்று பாடினார்.

சரத் சந்திரர் பல நாவல்கள் எழுதியுள்ளார். அவைகளில் பல தரப்பட்ட-எண்ணற்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார். விசேஷமாகப் பெண் பாத்திரங்களை அவர் கையாண்டுள்ள முறை இந்திய இலக்கிய வரலாற்றிலேயே ஒரு புதுமையாகும். பெண் இனத்தின் மீது அவருக்குள்ள மதிப்பையும் ஆழ்ந்த அனுதாபத்தையும், வியக்கத்தக்க பெருமிதத்தையும் அவருடைய கதைகளிலே நாம் காண முடிகிறது. ... மைக்கும் போராடிய சில பெண் பாத்திரங்களை மட்டும் உங்கள் முன் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

**நாராயணி**

ராமேர் சுமதி' (தமிழில் மதனி) என்ற சிறு நாவலில் நாராயணி என்று ஒரு பாத்திரம். அந்த நாவலை முப்பத்தைந்து வருடங்களுக்கு முன், மொழி பெயர்த்தேன். ஆனால் அந்த நாராயணியை இன்றளவும் என்னால் மறக்க முடியவில்லை.

ராமன், சியாம் லால் என்பவனின் தம்பி. மாற்றாந் தாய் மகன். தாயை இழந்த அச்சிறுவன் தன் மதனி நாராயணியையே தன் தாயாகப் பாவித்திருக்கிறான். துடுக்கும், துணிவும் நிறைந்த அச்சிறுவனால் அவள் அடைந்த தொல்லைகள் கணக்கில் அடங்கா. தாயன்புக்கு ஏங்கும் அச் சிறுவன் ஊரில் ஒருவருக்கும் பயப்படமாட்டான், தன் மதனி நாராயணி ஒருத்தியிடம் தான் பயந்து அவள் சொற்படிக் கேட்பான். தினம் ஏதாவது சண்டை வளர்த்துக் கொண்டே வருவான். ஆயினும் அவனால் அடைந்த தொல்லைகளை எல்லாம் அவள் தாயுள்ளம் சகித்துக் கொண்டு வந்தது. அப்போது நாராயணியின் தாய் வருகிறாள். ராமனுக்கும் அவளுக்கும் பிணக்கு ஏற்படுகிறது. சியாம் லால், ராமனை வீட்டை விட்டு வெளியே அனுப்ப முடிவு செய்கிறான். இதைக் கண்ட நாராயணியின் தாய் உள்ளம் கொதித்தெழுகிறது. தன் மைத்துனை அந்தத்தாயற்ற சிறுவனுக்காகத் தன் தாயையே தியாகம் செய்து அவளை வீட்டை விட்டு வெளியேற்றுகிறாள். சிறந்த தாயுள்ளத்தின் சித்திரம் இது.

**ஹேமாங்கினி**

ஆனால் இதே நாராயணி "மேஜ் தீதி" (ஹேமாங்கினி) என்ற கதையில் ஹேமாங்கினியாக வருகிறாள். அங்கே ராமன் கணவனுடன் பிறந்தவன். இந்தக் கதையில் வரும் கிசன் ஓர் அனாதைச் சிறுவன். ஹேமாங்கினியின் ஓரகத்திக்கு எட்டிய உறவினன். அந்தச் சிறுவனைத் தன் ஓரகத்தி கொடுமைப்படுத்துவதைக் கண்டு ஹேமாங்கினியின் தாயுள்ளம் துடிக்கிறது. அவனை மையமாக வைத்து ஓரகத்திகளுக்குள் எழுந்த தகராறு அவர்கள் கணவன்மார்கள் செவிகளுக்கும் எட்டுகிறது. ஹேமாங்கினியின் கணவன் அந்தச் சிறுவன் விஷயத்தில் தலையிட வேண்டாமென்று மனைவியைக் கண்டிக்கிறான். ஆனால் அந்தச் சிறுவன் படும் துயரத்தைக் கண்டு அவளுடைய தாயுள்ளம் சகிக்க முடியாத வேதனையை அடைகிறது. முடிவில் அந்தச் சிறுவனுக்காகத் தன் வீடு, வாசல், கணவன் யாவற்றையுமே துறக்கத் தயாராகும் போது தாய்க் குலத்துக்கே அழியாத புகழைத் தேடித் தருகிறாள். குழந்தையின் பசி, பெற்ற தாய்க்குத் தெரியும். அதனால் தான் அம்பிகையை ஜகன்மாதா என்கிறோம். இங்கே சிறுவன் கிசனுக்காக கணவன், மைத்துனன் யாவரையும் எதிர்த்துப் புறப்படும் ஹேமாங்கனியிடம் தீமையை ஒழிக்க சிம்மத்தின் மீதேறிய தேவியின் சக்தியையே காண்கிறோம். அற்புதமான பாத்திரப் படைப்பு இது.

"கனவு முடிய்வில்லை"' என்ற நாவலில் ஏறக்குறைய நூறு கதாபாத்திரங்கள் வருகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு உண்மை பேசி விட்டுப் போகிறார்கள். அவர்களில் நாம் மறக்க முடியாத பெண் பாத்திரங்கள் அன்னதா, அபயா, ராஜலட்சுமி, சுனந்தா ஆகியோர்.

**சுனந்தா**

"அநீதியைப் பிரச்சாரம் செய்ய நான் பேனாப்பிடிக்க வில்லை, என்று சரத் பாபு கூறினார் அல்லவா! அதை நூற்றுக்கு நூறு நிரூபிக்கும் பாத்திரம் சுனந்தா என்ற பெண். 'கனவு முடியவில்லை' என்றகதையில் கதாநாயகன் ஸ்ரீகாந்தனும், ராஜலட்சுமியும் கங்காமாட் என்ற கிராமத்திற்குச் செல்கிறார்கள். அங்கே அவர்களுடைய ஜமீன் தாரியை நிர்வாகம் செய்யும் காசிநாத குசாரி என்பவர் வீட்டுக்குப் போகிறார்கள். குசாரியின் மனைவி,





தன் ஓரகத்தி சுனந்தாவைப் பற்றிக் கூறுகிருள்.

சுனந்தா சாஸ்திரம் படித்த தன் தந்தைக்கு ஒரே மகள். தன் தந்தையிடம் சாஸ்திரம் படித்த குசாரியின் சகோதரனையே மணந்து புக்ககம் வருகிருள். ஒரு குழந்தைக்கும் தாயாகிருள். தன் மைத்துனரையும், அவர் மனைவியையும் தன் சொந்தத்தாய் தந்தையாகவே பாவித்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து குடும்பம் நடத்தி வருகிருள். குடும்பம் மகிழ்ச்சியோடு இருக்கிறது.

திடீரென்று ஒரு நாள் ஒரு நெசவாளியின் மனைவி தன் குழந்தைகளுடன் வந்து அங்கு முறையிடுகிருள். அப்போதுதான் சுனந்தாவுக்கு விஷயம் புரிகிறது. தன் மைத்துனன் அனுபவிக்கும் சொத்துக்கள் யாவும் அந்த ஏழை நெசவாளியின் மனைவியினுடையது, கடனுக்கு உட்பட்டதென்று; குசாரி அதை எடுத்து ஏப்பமிட்டு விட்டார் என்பதை அறிகிருள்,அவ்வளவுதான்! ''இனி இந்தப் பாவத்தினுல் வந்த அன்னத்தைத் தின்னமாட்டேன். என் குழந்தைக்குக் கூட இந்த வீட்டில் பால் கொடுக்க மாட்டேன்'' என்று கூறிப் புறப்பட்டு விடுகிருள். ஓரகத்தி எவ்வளவோ கெஞ்சியும் அவள் சற்றும் கேட்கவில்லை. போய்விடுகிருள். எங்கள் வம்சத்தின் குழந்தைக்குப் பால் இல்லாமல் போய்விடுமே என்று குசாரி ஓட்டி அனுப்பிய பசுவையும் சுனந்தா திருப்பி அனுப்பி விடுகிருள். முடிவில் நெசவாளிப் பெண்ணுக்கு அவள் சொத்துக் கிடைக்கிறது. சுனந்தா குழந்தையுடன் வீட்டுக்குத் திரும்பி வருகிருள். தர்மம் தான் பெரிது. அது அழிவதைப் பார்க்கச் சகிக்காத சுனந்தா தன் ஏழ்மை நிலையைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் அநீதியை எதிர்த்துத் தர்மம் நிலைக்க வேண்டும் என்று தன் சொந்த நலனைத் தியாகம் செய்யும்போது பாரத நாட்டின் பெண் குலத்துக்கே பெருமை தேடித் தந்து விடுகிருள். 'கனவு முடியவில்லை' என்ற நாவலின் சில பக்கங்களில் தான் வருகிருள். இந்த சுனந்தா. ஆயினும் நம் வாழ்நாளில் அவளை மறக்க முடியாமல் செய்து விடுகிருர் சரத் பாபு. அநீதியைப் பிரச்சாரம் செய்யவில்லை அவரது பேனு! தர்மத்தின் பீஜாக்ஷரத்தையே எழுதுகிறது என்றுதான் நமக்குக் கூறத் தோன்றுகிறது.



அன்னதா

இதே ''கனவு முடியவில்லை'' என்ற நாவலில் வரும் மற்ெருரு சிறந்த கதாபாத்திரம்' அன்னதா.' அவள் பெரிய இடத்துப்பெண். செல்வத்தில் வளர்ந்தவள். அவளுடைய கணவன் ஒரு கயவன். அவன் பணத்திற்காக அன்னதாவின் விதவைச் சகோதரியைக் கெடுத்ததல்லாமல் கொலையையும் செய்து விட்டு ஓடிப்போய் விடுகிருன். பிறகு முஸ்லிம் வேஷம் போட்டுப் பாம்பாட்டியாக மாறிவிடுகிருன். அன்னதா ஒரு நாள் அவனைச் சந்தித்ததும் அவனுடன் ஓடிப்போய்விடுகிருள். ஊரில் அன்னதா ஓடிப் போய் விட்டாள் என்ற கெட்ட பெயர் ஏற்படுகிறது. ஆனுல் சௌகரியமாக வாழ்ந்த அவள், கணவனுடன் சொல்லொணுத் துன்பத்தை அனுபவிக்கிருள். அவன் இறந்ததும் கங்கையில் மூழ்கி அதன் மண்ணை எடுத்துத் தன் குங்குமத்தை அழித்து விட்டுத் தன் தாலியையும், கையிலிருந்த சங்கு வளையல்களையும் உருவி கங்கையில் போடும் போது, புராண காலத்து நளாயினியையும்மண்டோதரியையும் மிஞ்சிவிடுகிருள். கதாநாயகன் ஸ்ரீகாந்தன் சிறுவனுக இந்தக் காட்சியைப் பார்த்து நிற்கிருன். அப்போது தான் தன்னுடைய கணவன் ஓர் இந்து என்றும், அது வரைதான் தன் கணவனுடன் தான் வாழ்க்கை நடத்தினேன் என்றும் அன்னதா கூறி அவனை ஆசிர்வதித்து விடை பெறுகிருள். பிறகு அவளை அவன் காண முடியவில்லை. ஒப்பற்ற ஒரு பாத்திரப் படைப்பு இது!



நேற்று இருந்தவன் இன்று இல்லை. நேற்றுக்காலை, இம்மாதிரி நாளை ஏற்படும் என்று அவன் துளியாவது நினைத்திருப்பானு? மனிதனுக்கு மரணம் எப்போது சம்பவிக்கும் என்பது யாருக்குத்தெரியும்?

—சரத்சந்திரர்.

அசலா

சரத் சந்திரரின் மற்ெருரு சிறந்த நாவல் கிருஹதாகம். கிருஹதாகம் என்ருல் வீட்டைக் கொடுத்துதவுவது என்று பொருள். ஒரு நண்பன், தன்னுடைய மற்ெருரு நண்பனின் இல்லற வாழ்க்கையைப் பாழாக்கிய கதையாதலால் ஆசிரியர் இதற்கு இந்தப் பெயரைச் சூட்டியுள்ளார். இதன் கதாநாயகி 'அசலா' படிப்பும், நற்குணமும் நிறைந்த பெண். சுரேசன், மஹிம் இருவரையும் சீர்தூக்கிப் பார்த்து மஹிமை மணக்கிருள். ஆனுல் அவளது உள்ளத்தில் ஒரு மூலையில் சுரேசனின் நினைவு அலை ஒன்று அடித்துக் கொண்டே இருக்கிறது. இதை வெகு நயமாகக் கோடிட்டுக் காட்டுகிருர் ஆசிரியர். கணவன் மஹிமிடம் மாருத பக்தியும் காதலும் கொண்டுள்ள அசலாவினுல் சுரேசனை வெறுத்து ஒதுக்க முடியவில்லை. சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவன் வந்து புகும் போது அவனை ஒதுக்கியே வருகிருள். நகர வாழ்க்கையிலிருந்து பழகிய அவள், கணவனுக்காக கிராமத்திற்குச் செல்கிருள். அங்கும் சுரேசன் வருகிருன். ஆடை குலைந்து தூக்கத்தில் இருக்கும் அசலாவுக்கு, சால்வை எடுத்துப்போர்த்துவிட்டுப் போகிருன். ஆனுல் அசலா தூங்கவில்லை. அவன் செய்கையைத் தடுக்கவும் இல்லை. வால்மீகியின் அகலிகையிடம், இந்திரன் மாறு வேடத்தில் வந்தபோது, ''தேவராஜனே தன்னைத் தேடி வந்து விட்டானே என்ற மகிழ்ச்சியில் இணங்கிவிட்டாயா?'' என்கிருர் வால்மீகி. அசலாவின் மனத்தை இன்னும் மென்மையாகப் படம் பிடித்துக் காட்டுகிருர் சரத்சந்திரர். கணவனுக்கேற்ற மனைவியாகவே வாழ்க்கை நடத்துகிருள் அசலா. சுரேசன் பல வகையில் அவர்களுக்கு உதவி செய்கிருன். ஒரு நாள் அசலாவை ஏமாற்றி அழைத்துக்கொண்டு போய்விடுகிருன். கற்பை இழந்த அசலா கணவனிடம் திரும்பி வருகிருள். அப்போது அந்த மஹிம் எவ்வளவு பெருந் தன்மையுடன் நடந்து கொள்கிருன்! பெரியதொரு பூகம்பத்தின் முன் நின்று அதை எள்ளி நகையாடுபவன் போல், தன் துக்கத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு அசலாவுக்கு நல்வாழ்வு வாழ வழி காட்டுகிருன். கோதமன் போல் சாபம் தரவில்லை! தவம் செய்து புனிதமாக்கி அவளை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. சரத் பாபுவின் ஒப்பற்ற சிருஷ்டிகளில் இந்த மஹிம் ஒருவன். சந்தர்ப்பத்துக்கு இரையான அசலாவிடம் நமக்கு வெறுப்பு ஏற்படவில்லை. அடாடா நல்ல பெண் இப்படியாகிவிட்டாளே என்று அனுதாபப்படும்படி இந்தப் பாத்திரத்தை சரத் பாபு படைத்துள்ளார்.



பார்வதி

தேவதாஸ் என்ற நாவலில் வரும் பார்வதியையும் சந்திரமுகியையும் நாம் மறக்கவே முடியாது. சரத் பாபு தன் நாவலில் படைத்துள்ள பாத்திரங்களில் பெரும்பாலோர் அவருடைய நிஜ வாழ்க்கையில் பங்கு கொண்டவர்கள். சிறு வயதில் தன்னுடன் பள்ளியில் படித்த நீரதா என்ற சிறுமியைத் தான் தேவதாஸின் பார்வதியாகப் படைத்துள்ளார்.

தேவதாஸும் பார்வதியும் பள்ளியில் ஒன்ருகப் படித்தவர்கள். அவர்கள் அன்பு; காதலாக மலரும் போது, சமூக அந்தஸ்து வந்து குறுக்கிடுகிறது. ஆயினும் சமூக நியதிகளை எல்லாம் பொருட்படுத்தாமல் பார்வதி நள்ளிரவில் தேவதாஸைச் சந்தித்து அவன் பாதங்களில் சிறிது இடம் வேண்டுகிருள். தேவதாஸுக்குத் தைரியமில்லை. பார்வதி வேறு ஒருவனுக்கு மனைவியாகிருள். ஆயினும் தான் காதலித்த தேவதாஸ் கெட்டழிவதை அவளால் பொறுக்க முடியவில்லை.





சந்திரமுகி

இந்த நிலையில் சந்திரமுகி என்ற பொதுமகள் அவன் வாழ்க்கையில் வந்து சேருகிருள். தேவதாஸின் சந்திப்பு அவள் வாழ்க்கையையே மாற்றி அவளையே புனர்ஜன்மம் எடுக்கச் செய்கிறது. தன் வாழ்க்கையையே காதல் என்னும் வேள்வியில் புடம் போட்டுப் புனிதமாகிருள். சரத சநதுரான சிறந்த பாத்திரங்களில் இது ஒன்று. அதனுல் தான் தேவதாஸ் நாவலைப் பற்றி சரத் பாபு கூறும்போது 'தேவதாஸை என் இதயத்தினின்று எழுதினேன். ஸ்ரீகாந்தனை என் மூளையினின்றும் எழுதினேன்'' என்று ஒரு நண்பருக்குப் பதில் கூறினுர்.

தேவதாஸில் வரும் பார்வதி, சந்திரமுகி, 'நெஞ்சிலே பட்ட வடு' என்ற நாவலில் வரும் மாதவி, கிராம சமாஜத்தில் வரும் ரமா, 'வாழ்க்கை வழி' என்ற கதையில் வரும் ஹேமா, 'கோயில்' என்ற கதையில் வரும் 'அபர்ணு' ஆகியோர் காதலித்து அதனுல் துக்கத்தை அடைந்தவர்கள். இவர்கள் கதையைப் படித்தால் பிறகு வாழ்நாளில் நாம் இவர்களை மறக்கவே முடியாது.

ரமா

கிராம சமாஜத்தில் வரும் ரமா, ரமேசனை சிறு வயது முதல் காதலித்து, பிறகு வேறு ஒருவனை மணந்து விதவையாகிருள். இந்து விதவைகளுக்கு காதலோ மறுமணமோ அனுமதிக்கப்படவில்லை. அவள் உள்ளத்தில் எழுந்த காதல் சீற்றம் ரமேசனுக்கே தீங்கிழைக்கிறது. முடிவு என்ன? தன் உள்ளத்தைக் கோயிலாக்கி அதில் ரமேசன் நினைவை பிரதிஷ்டை செய்து கொண்டு, தன் சகோதரன், மற்றும் தன்னிடம் உள்ள சொத்துக்கள் யாவற்றையும் அவனிடம் ஒப்படைத்து விட்டுவிடைபெறுகிருள்.

மாதவி

'நெஞ்சிலே பட்ட வடு' என்ற கதையில் வரும் மாதவியும் ஒரு விதவை. சுரேந்திரன் உலக அனுபவமற்றவன். ஒன்றும் அறியாதவன். அவனிடம் அவள் காட்டிய அனுதாபம், அவளையறியாமலே காதலாகப் பரிணமித்து அவள் உள்ளத்தில் உறைந்து விடுகிறது. தர்மத்தின் அணையைத் தாண்ட முடியாமல் துடிதுடிக்கிருள். அவள் கதையைப் படிக்கும்போது ''கடவுளே பெண்களுக்கு என்ன தண்டனை வேண்டுமானுலும் கொடு. ஆனுல் இந்து சமூகத்தில் பிறந்து விதவையாகும் தண்டனையை மட்டும் கொடுக்காதே'' என்று கூறும்படி வாசகர்கள் உள்ளத்தில் ஆழ்ந்த அனுதாபத்தை எழுப்பும் திறமையை நாம் சரத் சந்திரர் ஒருவரிடம் மட்டுமே காண்கிருேம்.



இந்தியா முழுவதற்கும் மாணவர்களின் பாடமாக வைக்கக் கூடியவை சரத்சந்திரரின் நாவல்கள். அவருடைய நாவல்கள் ஏழை மக்கள், துன்புறுவோர் இவர்களின் வாழ்வைச் சித்திரிப்பவை. அவருடைய சொந்த வாழ்க்கை, அனுபவம் செறிந்தது, உருக்கமானது.

—மகாத்மா காந்தி.



**அளகா**

''தேனுபாவ்னு' (பைரவி) என்ற நாவலில் வரும் 'அளகா' பெண்ணைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன் திருமணத்தன்றே போய்விடுகிறான். தாயை இழந்த அளகா காளி கோயிலில் பைரவியாகி, துறவு வாழ்க்கை வாழ்ந்து வருகிறாள். திடீரென்று ஒரு நாள் அவள் தன் கணவனைச் சந்திக்கிறாள். அப்போது அவன் ஒரு ஜமீந்தார். ஒழுக்கமற்ற வாழ்க்கையினால் உடல் தேய்ந்து போனவன். அவனைப் போலீசாரிடமிருந்து காப்பாற்றத் தன் மானத்தையே பணயமாக வைக்கிறாள். அவளுடைய பெண் உள்ளத்தில் மீண்டும் ஆசைகள் முளைவிடுகின்றன. பெண்மைக்கும் துறவறத்துக்குமிடையே ஏற்பட்ட மனப் போராட்டத்தில் பெண் தர்மம் வெற்றி பெறுகிறது. கணவனுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை என்ற இந்தியப் பெண்களின் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக இப்பாத்திரம் அமைந்துள்ளது.

**விஸ்வேஸ்வரி**

மற்றொரு அன்னையின் உருவத்தை கிராம சமாஜத்தில்காண்கிறோம். தன் மகன் வேணி கோவிலில் செய்யும் அக்ரமத்தைக் கொஞ்சமும் சகிக்க முடியாத விஸ்வேஸ்வரி தான் பெற்ற மகனையே வெறுத்து ஒதுக்கி அவனுடைய முகாலோவனமே வேண்டாமென்று காசிக்குப் போய்விடுகிறாள். போகும்போது தன் மகனுடைய அக்கிரமச் செயலுக்குத் தண்டனை அளிக்க நினைக்கிறாள். அவள் தாய். அவளால் என்ன தண்டனை அளிக்க முடியும்? அவள் சொல்கிறாள். ''நான் போகிறேன். என்றாவது ஒரு நாள் நான் இறந்துவிடுவேன். ஆனால் என் உடலுக்கு நீ, தீ மூட்டக்கூடாது. உன் கையால் கொள்ளி வைத்தால் என் மனம் வேகாது. நீ என் சிதையைத் தீண்டக் கூடாது'' என்று ஆணையிட்டுச் சொல்கிறாள். அநீதியைக் கண்டு கொதித்தெழுந்த தாய்ச் உள்ளம் இது. தாய்ப் பாசத்தை சத்தியமும் தர்மமும் வென்றுவிடுகிறது.

**ராஜலக்ஷ்மி**

பார்வதி, மாதவி, சந்திரமுகி ஆகிய மூவரும் இணைந்த ஒரு பாத்திரம் ஸ்ரீகாந்தனில் வரும் ராஜலக்ஷ்மி. பார்வதியைப் போல் அவள் ஸ்ரீகாந்தனின் பள்ளித் தோழி. மாதவியைப் போல அவளும் பால்ய விதவை. சந்திரமுகியைப் போல பொது மகளாக வாழ்க்கை நடத்தாவிட்டாலும் ஒரு பாடகியாக வாழ்ந்து பணக்காரர்களின் மனமகிழ் மங்கையாக இருக்கிறாள். ஆனால் ஸ்ரீகாந்தனிடம் அவளுக்குள்ள காதல் அசைக்க முடியாதது. அவனுக்குச் சேவை செய்கிறாள். அவனைத் தன்னுடன் சிறிதுகாலம் வைத்துக் கொள்கிறாள். ஆயினும் தர்மத்தின் எல்லையைத் தாண்ட அவளால் முடியவில்லை. ஸ்ரீகாந்தனுக்காக அவள் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார். ஆயினும் சாஸ்திரம் விதித்துள்ளபடி அவளை அவன் மணந்து தர்மபத்தினியாக ஏற்றுக் கொள்ள முடியாதே! தர்மத்தோடு இணைந்த பதிபத்தினியாக தானும் ஸ்ரீகாந்தனும் வாழ வேண்டும் என்பது அவளுடைய ஆசை. வாழ்க்கை அவளைத் திசைமாறச் செய்துவிட்டது. ஸ்ரீகாந்தன் தான் அவளுக்குச் சகலமும். ஆனால் அவன் அவளுடைய கணவன் அல்ல. அவன் அவளுடைய ஸ்ரீகாந்தன் அவ்வளவுதான்! ஸ்ரீகாந்தன் ராஜலக்ஷ்மி இரு பாத்திரங்களையும் சரத் பாபு கையாண்டுள்ள பாணி, நாவல் இலக்கியத்திலேயே ஒரு சாதனையாகும்!

தர்மம், சமூகம், நேர்மை என்பதன் முன்னால் ஆசைகள் சிதறுண்டு போய்விடுகின்றன. விலை மதிப்பற்ற இரண்டு மனித உள்ளங்களின் ஆர்வம் கட்டுக்கடங்கா கடல் அலைபோல் எழும்பி எழும்பி மடிகின்றன. ஆனால் தர்மம் என்ற கரையைத் தாண்ட முடியவில்லை. சிறந்த பாத்திரப் படைப்பு இது.

இன்னும் 'பதேர்தாபி' என்ற நாவலில் வரும் பாரதி, 'சேஷ பிரச்ஞ'வில் வரும் கமலா ஆகியோருடன் மற்றும் உள்ள பெண் பாத்திரங்களை யெல்லாம் எழுதுவதென்றால் தனியாக ஒரு புத்தகமே எழுத வேண்டும்.

மற்றும் இரண்டு மறக்க முடியாத சித்திரங்கள் 'சரித்ரஹீன்' என்ற நாவலில் வரும் சாவித்திரியும், கிரண்மயியும் ஆவர். சாவித்திரியைப் போன்ற ஒரு பாத்திரம் இந்திய நாவல் இலக்கியத்தில் இன்னும் படைக்கப்படவில்லை என்று கூறலாம்.

**நன்றி மறவாத நாய்**

கடைசியாக ஒரு பாத்திரத்தை மட்டும் கூறி முடிக்கிறேன். ஆசிரியர் ஆரோக்கிய அபிவிருத்திக்காக வெளியூர் சென்று வருகிறார். சென்ற இடத்தில் எத்தனையோ விசித்திரமான சம்பவங்கள் விசித்திரமான மனிதர்கள். அவர்களிடையே ஒரு சொறி நாய். ஆசிரியர் அவ்வூரை விட்டுக் கிளம்பும்போது, ஊர் நின்று விடுகிறது. மனிதர்கள் நின்று விடுகிறார்கள்! சில தினங்கள் ஆகாரம் போட்ட அந்த நாய் மட்டும் அவரைத் தொடர்ந்து அவர் வண்டியின் பின்னால் வந்து கொண்டிருக்கிறது. காளிதாசன் ரகுவம்சத்தில் நந்தினி என்ற பசுவை திலீபனும் அவன் மனைவியும் தொடர்ந்து போகும்போது, வேதத்தைத் தொடர்ந்து ஸ்ம்ருதிகள் போவது போல் சென்றார்கள் என்று எழுதினான். இங்கே சத்தியத்தைத் தொடர்ந்து ஞானம் செல்கிறது என்பது போல் சித்திரத்தைத் தீட்டுகிறார் ஆசிரியர்.

சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பதும், சமூகச் சட்டங்களுக்குத் தீங்கு விளைவிப்பதும் ஒன்றாகாது. சகல பொருட்களுக்கும் ஓர் உண்மையான அதிகாரமிருக்கிறது. சமூகம் சத்தியத்தை மீறினால் துன்பமடைந்துதானாக வேண்டும். அந்தத் துன்பத்தினால் சமூகம் இறந்து விடுவதில்லை.

—சரத்சந்திரர்.



இந்தக் கதையைப் படிக்கும் போது சரத் பாபுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை இங்கே நினைவு கூரலாம். எங்கிருந்தோ வந்த சொறி நாய் ஒன்றை எடுத்து, அதற்கு 'பேலி' என்று பெயரிட்டு வளர்த்தாராம். அது இறந்து போனபோது சரத் பாபு மிகவும் துக்கப்பட்டு அதை மிகுந்த மரியாதையுடன் அடக்கம் செய்தாராம்.

மகாபாரதத்தில் சொர்க்காரோஹன பர்வாவில் பாண்டவர்கள் சொர்க்கம் போகும் போது, வழியில் ஒவ்வொருவராக வீழ்ந்து விடுகிறார்கள். தர்மபுத்திரர் மட்டும் நிலைகுலையாமல் செல்கிறார். திரும்பிப் பார்க்கும்போது ஒரு நாய் மட்டும் அவரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததாகப் பாரதக் கதை கூறுகிறது. மனிதனின் நீண்ட யாத்திரையில் சத்தியம் ஒன்றே துணையாக வரும். இந்தக் கருத்தை எளிமையாகத் தன் கதையில் அமைத்த வன்மை சரத் சந்திரர் ஒருவருக்கே உண்டு. சரத் பாபுவின் பாத்திரங்கள் சாகா வரம் பெற்ற அழியாச் சுடர்கள்! சத்தியத்தையும், நேர்மையையும் ஒளி வீசிக் காட்டும் கலங்கரை விளக்குகள்.

தலைமுறை தலைமுறையாகப் போற்றி வைத்துப் படிக்க வேண்டிய நூல்கள் சரத் பாபுவின் நூல்கள். அத்தகைய ஒரு ம[...] பெரும் மேதையின் நூற்றாண்[...] விழா மலரில் என்னைப் பங்[...] கொள்ள அழைத்த 'தமிழரசு[...] பத்திரிகையின் ஆசிரியர் குழு[...]முக்கு என்னுடைய மனமார்ந்[...] நன்றியையும் வணக்கத்தையு[...] தெரிவித்துக் கொள்கிறேன்.





## திரைப்படமாக வந்துள்ள சரத் சந்திரர் கதைகள்

சரத் சந்திரரின் சிறுகதைகள் உட்பட எல்லா நவீனங்களும் வங்கமொழியில் திரைப்படம் ஆக்கப் பட்டுள்ளன. இந்தி மொழியில் அவருடைய பெரும் பான்மையான கதைகள் திரைப்படமாக ஆக்கப் பட்டுள்ளன.

சரத்சந்திரரின் பின்கண்ட கதைகள் தமிழில் திரைப்படமாக வந்துள்ளன.

| கதையின் பெயர் | | திரைப்படத்தின் பெயர் |
|---|---|---|
| 'தேவதாஸ்' | — | தேவதாஸ் |
| 'பரிணிதா' | — | லலிதா |
| 'ராமேர் சுமதி' | — | அண்ணி |
| 'படதிதி' | — | கானல் நீர் |
| 'நிஷ்கிருதி' | — | எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி |
| 'சந்திர நாதன்' | — | மாலையிட்ட மங்கை |



# படமும் செய்தியும்



சென்னை மாநகருக்கு 6—5—1977 அன்று வருகை தந்த மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு எல். கே. அத்வானி அவர்களை, தமிழ்நாடு அரசின் உள்துறைச் செயலாளர் திரு கே. சுப்ரமணியம் அவர்கள், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றார்.

'அனைத்துலக செஞ்சிலுவை நாள்', இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சென்னைக் கிளையினரால் 8—5—1977 அன்று காஞ்சிபுரத்தில் கொண்டாடப் பெற்றது. அவ்விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பார்வையிட்டார்.









மத்திய அரசின் மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள், ஒசூர் நகரின் குடிநீர் வழங்கு திட்டத்திற்கு 8—5—1977 அன்று கால்கோளிட்டார்.



மத்திய அரசின் மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள், சென்னையில் 9—5—1977 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களைச் சந்தித்து அளவளாவினர்.

தருமபுரியில் கட்டப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனையை, மத்திய அரசின் மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் 8—5—1977-ல் திறந்து வைத்தார்.







மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த ஊரான தொரப்பள்ளி (தருமபுரி மாவட்டம்) என்ற கிராமத்திற்கு மத்திய அரசின் மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் 8-5-1977-ல் வருகை தந்து, ராஜாஜி பிறந்த வீட்டைப் பார்வையிட்டார்.

மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் தொரப்பள்ளி [illegible] 5—1977 அன்று நடைபெற்ற விழாவில் முதியோர்களுககு [illegible] வழங்கினுர்.



மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், சென்னே ரங்கராஜபுரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கற்பகம் மினி சிறப்பங்காடியை 11—5—1977 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்.






# நாவல் மன்னர் சரத் சந்திரர்

—லேனு

பாரத நாட்டுப் பழைய மொழிகளில்-முக்கியமாக வடமொழியிலும் தமிழிலும்-கதை இலக்கியத்துக்குக் குறைவில்லே. ஆனல் நாவல் என்பது உண்மையிலேயே நமக்குப் புதிதுதான். நம்மவரில் சிலர் 'தசகுமார சரிதம்' 'காதம்பரி', 'உதயண சரிதம்' போன்றவற்றை நாவல்களுக்கு ஈடானவை என்று சொல்லிப் பெருமை கொள்ளலாம். ஆனுலும் முதல் முதலாக இந்தியாவில் மேனுட்டு அளவுகோலின்படி அற்புதமான நாவல்களே எழுதியவர்கள் வங்காளிகளே! நூறு ஆண்டுகளுக்கு முன் பங்கிம்சந்திரர் 'ஆனந்த மடம்' என்ற நவீனத்தை எழுதி 'வந்தே மாதர' கீதத்தை நமக்கு அளித்துப் பின்னுல் பாரத நாட்டையே தேசபக்தியின் உறைவிடமாக்கினுர். அதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்பே 'துர்க்கேச நந்தினி', 'விஷ விருஷம்' போன்ற நாவல்களே எழுதிப் பெயரெடுத்தவர் அவர்.

அவருக்கு அடுத்தபடியாக ரமேச சந்திரரையும், ரவீந்திரரையும் குறிப்பிடலாம். என்ருலும், தற்காலச் சமூக நிலேயைப் படம்பிடித்துக் காட்டும் ஆற்றலில் இவர்களேவிடச் சரத் சந்திரரே முன்னணியில் நிற்கிருர். காரணம், வங்க மக்கள் பேசும் மொழியில் எழுதி இவர் சமுதாயத்தில் புதிய விழிப்பு ஏற்படுத்தியதுதான். ரவீந்திரரே, "சரத்! உன்னேப் போன்ற சிலருக்குத்தான் என்னுடைய நாவல்கள் பயன்படும். ஆனல் நீயோ எல்லா மக்களும் சிரித்துப் பயன்பெறக்கூடிய இலக்கியம் படைத்திருக்கிருய்! இதைவிட வாழ்வில் வேறு என்ன வேண்டும்?'' என்று உள்ளூறப் பாராட்டியிருக்கிருர்.

1876 செப்டம்பர் 15-ஆம் தேதி மதிலால் சட்டோபாத்தியாயர் என்ற ஓர் ஏழை அந்தணரின் மூத்த மகனுகப் பிறந்தவர் சரத்பாபு. சிறு வயதில் கல்கத்தா அருகில் ஹுக்ளி மாவட்டத்திலுள்ள தேவானந்தபுரம் என்ற ஊரில், நண்பர்களுடன் ஆற்றங்கரையோரத்திலும் அக்கம் பக்கம் இருந்த குறுங்காடுகளிலும் திரிந்து பழகியவர் இவர். 1887 முதல் பாகல்புரிலே தம் தாய்மாமனின் ஆதரவில் வளர்ந்து வந்தார். பள்ளிப் படிப்பு முடிந்து 'எப். ஏ.' வகுப்பில் சேர இருக்கும் சமயம் இவருடைய தாய் புவனமோகினி காலமாகிவிட்டாள்.

'ஜாத்ரா' என்ற பழைய வங்காளிக் கூத்து வகையைச் சேர்ந்த நாடகங்களேப் பார்ப்பதென்ருல் இவருக்குக் கொள்ளே ஆசை. குடும்பத்தின் வறுமை காரணமாகச் சில காலம் 'வனேலி எஸ்டேட்'டில் குமாஸ்தாவாக வேலே பார்த்தார். பிறகு திடீரென்று 1900-வாக்கில் போன இடம் தெரியாமல் 'அஞ்ஞாதவாசம்' புரியலானுர். முஜபர்புரில் இவர் தங்கியிருந்தபோது அன்று பிரபல வங்க நாவலாசிரியையாக விளங்கிய அநுரூபா தேவியாருடனும், அவருடைய கணவருடனும் பழகலானுர். அந்தப் பெரியவர்:, அவ்வூர் ஜமீன்தாரின் நெருங்கிய நண்பர். அதனுல் சரத்சந்திரரை ஜமீன்தாரின் ஆதரவில் நடக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கு அவர் அழைத்துச் செல்வது வழக்கம்.

சிறு வயதில் தம்முடன் விளேயாடிய துணிச்சல் மிக்க ராஜேன், இந்த ஜமீன்தார், அவ்வப்போது கிடைத்த நண்பர்கள் இவர்களின் இன்ப துன்பங்களே நேரில் கண்டறிந்த சரத், தாம் பின்னுல் எழுதிய நாவல்களில் அந்த அநுபவத்தைப் பின்னணியாகக் கொண்டு அவர்களது குணச்சித்திரத்தை உயிர் ஓவியமாக எழுதினுர்.

1903-இல் தந்தை இறந்தபின் இவருடைய குடும்ப வாழ்வு சிதைந்து விட்டது. இளவயதிலேயே முதல் மனேவி காலமாகி விட்டாள். பிறகு கல்கத்தாவில் இருக்கப் பிடிக்காமல் ரங்கூன் போனுர். அங்கே அக்கவுன்டன்ட்-ஜெனரல் அலுவலகத்தில் இவருக்கு வேலே கிடைத்தது. அப்போது மேனுட்டு இலக்கியங்கள்ல் இவருக்கு அதிக ஈடுபாடு. இவர் எழுதிய முதல் கதை 'மந்திர்' (கோயில்). குந்தலின் என்ற கூந்தல் தைலம் தயாரிப்பவர்களின் பரிசு பெற்ற அந்தக் கதை வங்காளிப் பத்திரிகை ஒன்றில் வெளியானபோது வாசகர்களின் உள்ளத்தைப் பெரிதும் உருக்கி விட்டது. அப்போதுதான் இவர் தம் ஆற்றலே உணர்ந்தார். ஒரு சமயம் ரவீந்திரநாதரின் 'இயற்கையின் வஞ்சம்' என்ற வங்க நாடகத்தை நண்பர்

...ருவா படிக்கக் கேட்டுக் கண்ணீர் பெருக்கினாம் சரத்.

இவர் எழுதிய முதல் நாவல் 'அபிமானம்'. அதன் கையெழுத்துப் பிரதியை நண்பர் ஒருவர் எடுத்துப்போய்த் தொலைத்து விட்டார்! இதனால் எழுதுவதில் இவருக்கு இருந்த ஆர்வம் குன்றிவிட்டது. ஆனாலும் பின்னால் மனம் தேறி 'யமுனா', 'பாரதவர்ஷ' என்ற இரண்டு வங்காளி மாதப் பத்திரிகைகளுக்கும் பல கதைகளும், நவீனங்களும் எழுதினார். அவற்றுள் முக்கியமானவை 'ராமனுக்குப் புத்தி வந்தது.' 'பிந்துவின் மகன்', 'விராஜா சுந்தரி', 'கிராமசமூகம்' என்பவை. அப்போது கல்கத்தாவுக்கே வந்துவிடும்படி 'பாரதவர்ஷ' வின் நிர்வாகி இவரை அழைக்கவே நாடு திரும்பினார். மாதந்தோறும் நூறு ரூபாய்க்கு ஒரு கதை எழுதி வரலானார். ஆனால் 'சரித்ரஹீனன்' (தீய ஒழுக்கமுடையவன்) என்ற நாவலை அவர் தொடர் கதையாக எழுத முனைந்தபோது அதைப் படித்துவிட்டு அப்பத்திரிகையின் நிர்வாகி, அதனால் சமூகத்தில் விபரீத விளைவு ஏற்படும் என்று அஞ்சி அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் 'யமுனா' பத்திரிகையில் அதற்கு இடம் அளித்தார்கள். விளைவு இருவிதமாக இருந்தது. சிலர் அதைக் கண்டித்தும், சிலர் அதைப் பாராட்டியும் கடிதம் எழுதினார்கள். இதனால்தான் இவருடைய பெயர் வங்க நாவல் இலக்கியத்தில் நிலைபெற்று ஒளிர்ந்தது!

இவர் எழுதிய நாவல்களில் அப்போதைய சமூக ஊழல்களையும், அவற்றில் சிலவற்றுக்குத் தீர்வுகாணும் முறையையும் இவர் வெளியிட்டுப் பொது மக்களிடையே விழிப்பை உண்டு பண்ணினார். இவற்றில் 'பெரிய அக்கா', 'கொடுக்கல் வாங்கல்' 'பைரவி', 'தேவதாஸ்' என்பவை முக்கியமானவை.

'ஸ்ரீகாந்தன்' என்ற நாவல் ...யசரிதையைப் போன்று அமைந்தது. அதில் வரும் ராஜலட்சுமி என்ற பெண்ணின் குணச்சித்திரம் அவளை எந்த வகையைச் சேர்ந்தவள் என்று நாம் முடிவுகட்ட ...யலாதபடி அமைந்திருப்பது ...றிப்பிடத்தக்கது. மனித மனம் ...ரே நிலையில் இராது என்னும் ...ண்மையையே இப்படிச் சரத் ...ாபு விளக்கியிருக்கிறார். அதில் ...ரும் இந்திரநாதன் என்ற தீர ...ருஷன் சிறு வயதில் அவருடன் ...ழகிய நண்பன் ஒருவனது பிரதி ...ிம்பமே.

'வழி வேண்டுவோர்' (பாரதி) என்ற நாவலில் ஒரு புரட்சிக் கூட்டத்தின் வரலாற்றைக் காண்கிறோம். அதில் வரும் 'மாஸ்டர்' உண்மையில் அப்போது பர்மாவிலே தங்கியிருந்த நம் பிரபல புரட்சி வீரர் அமரர் வ. வே. சு. ஐயர் தாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சரத்தின் குடும்ப வாழ்வு சீராக அமையவில்லை. முதல் மனைவி இறந்த பின் பர்மாவில் இருந்தபோது ஒருநாள் இவர் சாப்பிட வரும் ஒட்டலுக்கு வங்காளிப் பெண் ஒருத்தி ஓடிவந்து, 'அண்ணா! என்னைத் தெரிகிறதா? என்னைக் காப்பாற்றுங்களேன்!'' என்று வேண்டிக் கொண்டாள். ஏழெட்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது அவளை இவர் கல்கத்தாவில் பார்த்ததுண்டு. அவளுடைய தகப்பன் நிவாரண சக்கரவர்த்தி ஒரு மெக்கானிக்; சீட்டாட்டம், சூது இவற்றில் ஈடுபட்டவன்; அவளை யாரோ பர்மாக்காரனுக்கு விற்றுவிட்டான். ஆனால் சரத்சந்திரர் தம் மேலதிகாரியின் உதவியுடன் போலீசை அணுகி அவளைத் தம் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு அந்தத் தொகையைத் திரும்பவும் பர்மாக்காரனிடம் தந்து அவளை மீட்டார். வாழ வகையற்ற தகப்பனும் இவரிடமே அவளை விட்டுச் சென்றான். சரத்பாபு நோயுற்றுப் படுத்த படுக்கையாகக் கிடந்தபோது அவள் இவருக்கு அன்புடன் பணிவிடை செய்தாள். நன்றியறிதலுடன் இவர் அவளை மணம் புரிந்துகொள்ள முடிவு செய்தார். சைவ ரீதியில் அது நிறைவேறியது. பலர் இதைப் பற்றி ஏளனமாகப் பேசியது உண்டு. காரணம், 'அது முறையான திருமணம் அன்று' என்பது சனாதன வங்காளிகளின் கருத்து. சில நாட்களில் அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. ஆனால் ஒரு நாள் 'பிளேக்' நோய் கண்டு அவளும் குழந்தையும் இறந்தார்கள்.

மகாத்மா காந்தியிடம் இவருக்கு மிகுந்த பக்தி சிரத்தை உண்டு. என்றாலும், ''எல்லாரும் கைராட்டினம் சுற்றி நூல் நூற்க வேண்டும். அப்போதுதான் சுயராஜ்யம் கிட்டும்'' என்ற அவரது ... மறுத்து அவர் வாதாடினார். மகாத்மாவும் இவருடைய நேர்மையைப் பாராட்டி, 'எதிரில் என்னைப் புகழ்ந்து, பின்னால் என் கருத்துக்கு மாறாக நடப்பவர்களின் கபடத் தன்மையை நானும் வெறுக்கத்தான் செய்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்.

உயிர் வாழ்ந்த காலத்திலேயே புகழேணியின் உச்சியை அடைந்து விட்டார் இவர். 1936-ல் டாக்கா பல்கலைக் கழகத்தார் இவருக்கு இலக்கிய டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்தார்கள். இத்தனைக்கும் இவர் எப். ஏ. கூடத் தேறாதவர். ஏறக்குறைய அதே சமயத்தில் இவருடைய கதைகளும், நாவல்களும் ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, தமிழ் முதலிய மொழிகளில் ஆக்கப் பெற்றன. 'கலைமகள்', 'ஆனந்த விகடன்' பத்திரிகைகளில் இவை வெளிவந்தபோது இவற்றை மொழி பெயர்க்கும் பேறு என் தமையனார் த. நா. குமாரசுவாமிக்கும், எனக்கும் கிட்டியது.

1938 ஜனவரி 16-ஆம் தேதி, இவர் நீடித்த நோயின் விளைவால் காலமானபோது 'ஜய் ஹிந்த்' மந்திரத்தை நமக்கு அளித்தவரும், அப்போது காங்கிரஸ் அக்கிராசனராக இருந்தவருமான நேதாஜி சுபாஷ் போஸ் இறுதிவரை இவரோடு கூடவே இருந்து பணிவிடை புரிந்தார். இருவரும் நெருங்கிய நண்பர்கள். எளிய மக்கள், நடுத்தர வர்க்கத்தார் ஆகியோர்களின் வாழ்க்கையை அப்படியே சித்திரித்துக் காட்டுவதில் இவரைவிடச் சிறந்த எழுத்தாளர் வங்காளத்தில் இன்னும் தோன்றவில்லை. இவரைப் பற்றிக் கடுமையாக விமரிசனம் செய்தவர்கள் கூட இதை மறுக்கத் துணியமாட்டார்கள்.

(நன்றி: கலைமகள்)





# சரத் சந்திரர் வாழ்க்கையும்–சாதனையும்

—த. நா. குமாரஸ்வாமி

மனிதர்களின் உள்ளத்தோடு நெருங்கிய உறவு கொண்டாடி வாழ்க்கையில் கண்ட அனுபவங்களை உன்னதச் சித்திரமாகத் தம் கதைகளில் புனைந்தவர் சரத் சந்திரர். வங்க இலக்கியத்தில் அவர் நிரந்தரமான இடம் பெற்று விட்டார். அவர் இவ்வளவு பிரபலமானவர் என்பதற்கு எந்த மாதிரி விசேஷமான முன் அறிவிப்பும் இல்லை. ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்த தேவானந்தபுரம் ஒரு சிறு கிராமம். அங்கே மதிலால் சட்டோபாத்தியாயா என்று ஓர் ஏழை பிராமணர் இருந்தார். அவருக்கு மூத்த மகனாக 1876 ஆம் வருஷம் செப்டம்பர் 15-ஆம் தேதி சரத் சந்திரர் பிறந்தார். மதிலாலுக்கு வீடுவாசல் இல்லை. அம்மான் வீட்டில் அடைக்கலம் புகுந்தார். யார் ஜோலிக்கும் போகாதவர் மதிலால்; நிலை இல்லாத புத்தி, இலக்கியத்தில் விசேஷப் பற்று; கவிதை, கதை எழுதுவதில் மிகவும் ஆர்வம். குடும்பத்தில் கஷ்டம் இராத நாளே இல்லை. மனைவி புவனமோகினியின் சிக்கனத்தால் குடும்பத்தை ஒருவாறு சமாளித்து வந்தார். கடன் மென்னியைப் பிடிக்கும் சமயங்களில்

அவர் மனைவி குழந்தை குட்டிகளுடன் பாகல்பூரிலுள்ள தன் பிறந்தகம் போய் இரண்டொரு மாதம் தங்கிவிட்டு வருவாள். மதிலால் சிரமப்பட்டு தேவானந்தபுரத்தில் வாங்கியிருந்த வீடு தக்காமல் போய்விட்டது. அதே வருஷம் அவரது துர்பாக்கியம், மனைவியையும் இழந்தார்.

1887-ல் பாகல்பூரில் இருக்கும் அம்மான் ஆதரவிலேயே சரத் சந்திரர் வளர்ந்து வந்தார். விசித்திரம் நிரம்பியது இவருடைய இளம்பிராயம். விஷமக்காரச்சிறுவர். வித்யாரம்பம் அந்த ஊர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில்தான். துஷ்டத்தனத்திற்கெல்லாம் உடந்தை உபாத்தியாயரின் மகன். 'காசிநாதன்' என்ற நவீனத்தில் வரும் கதாநாயகன் இவனே. உபகாரச் சம்பளம் பெறும் பரீட்சையில் சரத் முதலாவதாகச் தேறினார். அதே வருஷம் பீஹாரில் எங்கோ வேலை பார்த்து வந்த மதிலாலுக்கு உத்தியோகம் போய்விட்டது. ஊர் திரும்பியதும் மகனை ஹூக்ளியில் உயர் ஆங்கிலக் கல்லூரியில் சேர்த்தார். ஹூக்ளிக்கும் தேவானந்தபுரத்திற்கும் மூன்றே மைல். சரத்சந்திரர் தலைமையில் ஐந்தாறு மாணவர்கள் கொண்ட ஒரு கோஷ்டி ஹூக்ளியில் உள்ள பள்ளிக்கூடத்துக்கு நடந்து செல்லும், அந்த ரஸ்தாவிலே வெயில் நாளில் ஒரே புழுதி; மழைக் காலத்தில் வெறும் சேறு. வழி மாள்வதற்கு சரத் பல அற்புதக் கதைகளைச் சொல்லிக் கொண்டே போவார். நடுவழியில் தோட்டங்களில் புகுந்து பழங்களைத் திருடித் தின்பார்கள். இவர்கள் தங்கி இளைப்பாறுவதற்கும் பல மறைவிடங்கள் உண்டு. அவற்றில் ஒன்று, ஒரு தனி ஆலமரம். அதை 'மொட்டை ஆலமரத்து அடி' என்று சரத்சந்திரர், தம் 'தத்தா' என்ற நவீனத்தில் குறிப்பிடுகிறார். பகல் நேரத்திலே வகுப்பில் தலைகாட்டாமல் ஸரஸ்வதி ஆற்றங்கரையிலாவது, அந்த ஊர் ஜமீந்தாருக்குச் சொந்தமான குளத்தங்கரையிலாவது இருப்பார். புதர் மறைவிலிருந்து தூண்டில் போட்டு மீன் பிடிப்பதில் இவருக்கு ஓர் இன்பம். துறையில் மீன்பிடிப்பவர் படகு இருக்கும். அவர்கள் இராத சமயம் பார்த்து அதில் ஏறிக் கொண்டு மூன்று மைலுக்கு அப்பால் உள்ள கிருஷ்ணபுரம் வரைக்கும் போய்த் திரும்புவார். அங்கு வைஷ்ணவ சாமியாரின் மடம் ஒன்று இருந்தது. 'ஸ்ரீகாந்தன்' என்ற இவருடைய நவீனத்தில் வரும் 'முராரிபுரத்து மடம்' இதுவே. ஆற்றின்மேல் இவருக்கு அபார மோகம். பிற்காலத்தில் இவர் தம் அழகிய பங்கஜயோர ரூபநாராயண் நதீக் கொண்டதிலிருந்து இது தெரியவரும்.

1892-ல் சரத்தின் தந்தை தம் குடும்பத்தை மீண்டும் பாகல்பூரில் மைத்துனர் வசம் ஒப்படைத்து, வேலை தேட வெளியூருக்குப் போனார். சாக் சங்கிரா் தேஜோ நாராயண் ஜூபிலி ஸ்கூலில் பிரவேச வகுப்பில் சேர்ந்தார். தேவானந்தபுரத்தில் பதினறு வயது வரை இருந்தார். தன் பிறந்த ஊரை விட்டு வர முதலில் இவருக்கு மனம் இல்லை. கூட விளையாடினவர்கள், அழகான ஆற்றங்கரை, யதேச்சையான வாழ்க்கை எல்லாம் சேர்ந்து இவரை அழைத்தன. வாலிபத்தில் எவ்வளவு துடுக்கோ, அவ்வளவு இளகிய நெஞ்சம் உள்ளவர். தேவானந்தபுரத்திலுள்ள குடும்பத்தவர்களுக்கெல்லாம் சரத் சந்திரரிடம் விசேஷமான பிரீதி. இவருக்கு ஒரு காயஸ்த குடும்பத்தோடு நெருங்கிய நட்பு உண்டு. அந்தக் குடும்பத்துப் பெண், சரத் சந்திரருடன் சேர்ந்து படித்தவள். இவர் செய்யும் சேஷ்டைகளில் அவளும் உதவியாக இருப்பாள். அவளைப் பல உருவில் சரத்சந்திரரின் நவீனங்களில் பார்க்கலாம். இதைவிட ஒரு மனிதன் தன் நன்றியையும் நேசத்தையும் எப்படித் தெரிவித்துக் கொள்ள முடியும்?

பிரவேசப் பரீட்சையில் இரண்டாவது ஸ்தானம் கிடைத்தது. எப். ஏ., வகுப்பு சேரும்போது தாய் புவனமோகினி காலமாகிவிட்டாள். படிப்பு நின்றது. மூன்று பிள்ளைகள், ஒரு பெண்- இவர்களை வைத்துக் கொண்டு மதிலால் நிராதரவாய்த் தவித்தார். சரத்துக்கோ வேலை கிடைக்கவில்லை. வீட்டில் தங்காமல் திரிந்தார். அசாமான்யமான மேதை ஓங்கி வளர்வதற்கு வித்து இவருடைய சிறுவயதிலேயே ஊன்றியாகிவிட்டதென்றே சொல்ல வேண்டும். சரத் சந்திரர் ஒரு சங்கீதப் பித்தர். ஒரு சமயம் தம் ஊரில் சங்கீதம் கற்க வசதி இல்லாமல் 'யாத்ரா' என்ற கூத்துக் கோஷ்டியில் சேர்ந்து விட்டார். இது பெரியவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் போய் பையனை நல்லதனமாக அழைத்து வந்துவிட்டார்கள்.

பாகல்பூரில் வசிக்கும் போது இவர் இலக்கிய சங்கங்களில் நடுநாயகமாக இருந்தார். அந்தக் காலத்துக் கதை, காவியம், நாடகங்களை ஆராய்ந்துபடிப்பார். கதீஜலி வக்கீல் ராஜா சிவசந்திர பந்தியோ பாத்தியாயரின் மகன் சசின், சரத்தின் உயிர் நண்பன். சங்கீதப் பிரியன், 'பில்லியர்ட்', 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டுகளில் கெட்டிக்காரன். அவனும் சரத்சந்திரரும் சேர்ந்து நிறுவிய 'ஆதம்பூர் கிளப்' அந்தக் காலத்தில் பெயர் பெற்ற சங்கம். அடிக்கடி, அங்கே நாடகங்கள் நடைபெறும். 'மிருணாளினி', 'பில்வமங்கள்', 'ஜனா' இவை பிரபல நாடகங்கள். கதாநாயகி வேஷங்களில் சரத்சந்திரர் தோன்றுவார். இவருடைய அபாரமான நடிப்பும், இனிய சாரீரமும், தோற்றமும் பார்ப்பவர் உள்ளத்தைக் கவர்ந்துவிடும். 'ஸ்ரீகாந்த'னில் வரும் இந்திரநாதனின் மூல உருவம் அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ரஜேன் மஜூம்தாரே, பைத்தியக்காரி வேஷத்தில் அவனை மிஞ்சக் கூடியவர்களே இல்லையாம். திடீரென்று ஓர் இரவு நாடகம் முடிந்தது. ராஜேன் போன இடமே தெரியாமல் போய்விட்டான். திரும்பவே இல்லை. சரத்சந்திரருக்குக் கிடைத்த கதாபாத்திரம் ஆச்சரியமான பேர்வழிதான்!

எத்தனை நாள் வீண் பொழுது போக்குவது? தந்தை படும் கஷ்டத்தைப் பார்த்து 'வனேலி' எஸ்டேட்டில் சில மாதங்கள் வேலை பார்த்தார். ஆனால் நாடோடியான இவருக்கு ஓர் இடத்தில் மனம் நிலைகுமா? திடீரென்று காணமல் போய்விட்டார். இது நடந்தது 1900-ல். ஆண்டியாகப் பல இடங்களில் திரிந்தார். இவர் பார்க்காத ஊர் இல்லை; பழகாத மனிதர் இல்லை. ஒரு நாள் மஜபர்பூரில் தோன்றினார். அங்கே பிரபல நாவலாசிரியராக ஆனார். அனுரூபா தேவியின் புருஷர் சிகரநாத் பானர்ஜியோடு பழகி வந்தார். சரத்சந்திரருக்கு, இசை ஞானமும், சுக சாரீரமும், இசைக் கருவிகளை வாசிப்பதில் நல்ல தேர்ச்சியும் உண்டு. இதை அறிந்த அந்த ஊர் ஜமீந்தார் மகாதேவஸாஹு- 'ஸ்ரீகாந்தனில் வரும் 'குமார சாகேப்' தம் ரசிகர் கூட்டத்தில் இவரையும் சேர்த்துக் கொண்டார். நல்ல மரியாதை உபசாரத்தோடு சில மாதங்கள் வரை இவர் அங்கேயே இருந்து வந்தார்.

1903-ல் தந்தை இறந்த செய்தியைக் கேட்டு பாகல்பூருக்கு ஓடினார். பணம் இல்லாமல் கஷ்டப்பட்டபோதிலும் எப்படியோ தந்தையின் ஈமக் கிரியைகளைச் செய்து முடித்தார். வேலைக்காக எத்தனையோ இடங்களில் அலைந்தார். கடைசியில் அம்மான் முறையாகும் லால் மோகன் காங்குலியைப் பிடித்தால் நடக்கும் என்று கல்கத்தாவுக்கு வந்தார். அங்கும் சுகம் இல்லை. இந்தச் சமயத்தில்தான் அவர் எழுதிய முதல் கதை 'மந்திர்' (கோவில்) வெளியாயிற்று. குந்தலின் என்ற கூந்தல் தைலம் [illegible] அதற்குப் பரிசு அளித்தார்கள். அன்றுதான் சரத்சந்திரர் தமக்குள்ள சக்தியை உணர்ந்தார்.



**ம**னிதன் கடைசிவரையிலும் தன்னை முழுவதும் உணர்ந்து கொள்வதில்லை. தனக்குச் சொந்தமற்றதைத் தனதாகப் பாவித்துக் கொண்டு ஆடம்பரம் செய்கிறான். அதற்காக அனுபவிக்கும் தண்டனையிலிருந்தும் தப்புவதில்லை.

—சரத்சந்திரர்.

இவர் தம் நினைவுக் குறிப்பு ஒன்றில், பின்வருமாறு எழுதியுள்ளார் :

'வறுமையிலேயே என் இளமையும் யௌவன தசையும் கழிந்துவிட்டன. நான் அதிகமாகப் படிக்கவில்லை. தந்தையிடமிருந்து நிலையில்லாத புத்தியையும், இலக்கியத்தில் ஆழ்ந்த பற்றையும் தவிர நான் வேறு எதையும் பெறவில்லை. சிறு வயதிலேயே வீட்டைத் துறந்து இந்தியா முழுவதும் சுற்றிவிட்டு வந்தேன். என் தந்தையின் ஆற்றலோ அபாரமானது. சிறுகதை, நவீனம், நாடகம், கவிதை இப்படி இலக்கியத்தின் எந்தத்துறையிலும் கைப்பழக்கம் உண்டு. ஆனால் அவர் எழுதியது ஒன்றாவது நிறைவு பெறவில்லை. என் இளமையில் அவரே எனக்கு உற்சாகத்தையும் கொடுத்து, என்னை எழுதத் தூண்டியவர். அவர் அரைகுறையாக விட்டுச் சென்ற விஷயங்களை எப்படி முடிக்கலாம் என்ற கற்பனையிலேயே தூக்கமின்றி இரவு நேரங்களைக் கழிப்பேன். நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தபோது எனக்குப் பாடப் புத்தகங்கள்: சீதையின் வனவாசம், சாருபாடம் என்ற வாசகம்; 'ஸத்பாவ சதகம்' (நன்னெறி நூறு) நேரடான ஓர் இலக்கணம். இவற்றைக் கட்டிக் கொண்டுதான் ஒவ்வொருநாளும் வாத்தியாருடன் மாரடிக்க வேண்டும். இலக்கியத்தோடு பழக்கம் முதலில் எனக்குக் கண்ணீர் மூலமாகவே ஏற்பட்டது. நான் வளர்ந்த குடும்பத்திலோ நாவல், காவியம் என்றால் ஆகாது; அங்கே சங்கீதம் போன்ற கலைகள் நுழையவும் இடமில்லை. பிள்ளைகள் பரீட்சையில் தேறி வக்கீல் தொழில் நடத்த வேண்டும் என்று அவர்களுக்கு எண்ணம். என் நல்ல காலமோ என்னவோ, விஷயம் நேர்மாறாக முடிந்தது.

''வெளியூரிலிருந்து என் உறவினன் ஒருவன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் கல்லூரி மாணவன். சங்கீதப் பிரியன். வீட்டுப் பெண்களை ஒன்றுகூட்டி, அவர்களுக்கும் ரவீந்திரர் எழுதிய 'இயற்கையின் வஞ்சம்' (ப்ரக்ருதிர் பிரதி சோத) என்ற நாடகத்தைப் படித்துக் காட்டினான். அதைக் கேட்டு எனக்குக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. அன்று முதல் வக்கீல் ஆகவேண்டுமென்ற ஆசையெல்லாம் பறந்தோடிவிட்டது. எனக்கு ஞானோதயமாயிற்று. அப்பாவின் பொத்தல் பீரோவிலிருந்து கிடைத்த புத்தகங்களைத் துருவிப் படிக்கத் தொடங்கினேன். யாராவது பார்த்துவிடப் போகிறார்களேயென்று மாட்டுத் தொழுவத்திற்குப் போய்விடுவேன். அப்புறம் பங்கிம் சந்திரரின் நவீனங்களை ஒவ்வொன்றாகப் படித்து முடித்தேன். பாகல்பூரில் இருக்கையில் வாரம் ஒருமுறை எங்கள் இலக்கிய வட்டம் கூடும். வீட்டுப் பெரியவர்களுக்கு இந்த விஷயம் தெரியக் கூடாதே! மைதானத்தில் எங்கேயாவது மரநிழலில் அமருவோம். எங்களைச் சேர்ந்த கிரீன் என்பவன் தவறின்றி எந்த நூலையும் படிப்பான். காவியத் திறனாய்வு செய்வோம். 'சாயா' என்ற கையெழுத்துப் பத்திரிகையொன்று நடத்தினோம். அந்த வயதில் நான் எழுதிய சில கதைகள் தொலைந்து போய்விட்டன. பெரிய நாவலொன்றும் எழுதியிருந்தேன். அதன் பெயர் மட்டும் கவனத்துக்கு வருகிறது- 'அபிமானம்', 400 பக்கங்களுக்கு மேல் இருக்கும். எத்தனையோ கை மாறி ஏடு ஏடாகப் பிய்ந்து கடைசியில் என் சகபாடி கேதார சிம்மனின் கைக்குப் போயிற்று. அப்புறம் திரும்பவே இல்லை.''

1903-ஆம் ஆண்டு சரத்சந்திரர் வெறுப்புற்று, உற்றார் உறவினரிடம் சொல்லிக் கொள்ளாமல் பர்மாவுக்குப் பயணமானார். பன்னிரண்டு அல்லது பதின் மூன்று ஆண்டுகள் பர்மாவில் இருந்தார். இதை அஞ்ஞாத வாசம் என்றே சொல்ல வேண்டும். வங்காளம் அவரை மறந்தே போய்விட்டது. நடுவில் 1912-லும் 1914-லும் சின்னாட்களே கல்கத்தாவுக்கு வந்திருந்தார். ரங்கூனில் அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆபிசில் சாதாரண எழுத்தர் வேலைதான். அந்தக் காலத்தில் பர்மாவில் இவர் வாழ்ந்த விதத்தை ஒரு கடிதத்தில் தம் நண்பர் ஒருவனுக்குப் பின்வருமாறு எழுதியிருந்தார்.

'நான் எப்படிக் காலங்கழிக்கின்றேன் என்றுதானே கேட்கிறாய்? சுருக்கமாகச் சொல்லுகிறேன்- ரங்கூனுக்கு வெளியே நதியோரமாக ஒரு மைதானத்தில் சிறிய வீடொன்றில் வசிக்கின்றேன்-90 ரூபாய் சம்பளத்துக்கு ஆபீஸ் துரைக்குக் 'குலாம்' போடுகிறேன். வரும்படி போதவில்லை. சிறிய கடை ஒன்று வைத்திருக்கிறேன். ஏதோ கொஞ்சம் வருகிறது. அதைவைத்துக் கொண்டு, போதும் போதாதுமாய்க் காலட்சேபம் செய்கிறேன். அடிக்கடி இருதயத்தில் நோய்; எந்தச் சமயத்திலும் வாயைப் பிளந்துவிடலாம். நிறையப் புத்தகங்கள் படிக்கிறேன். முக்கியமாக உடலியல், உயிரியல், மன இயல் இவை பற்றித்தான்; இதற்கு வேண்டிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஒன்றுமே எழுதுவதில்லை. என் உடைமை தீக்கு இரையாகிவிட்டது. என் அருமையான புத்தகங்கள், நான் எழுதி வைத்திருந்த 'சரித்ரஹீன்' என்ற நாவல் கையெழுத்துப் பிரதி உள்பட, 'பெண் மக்கள்' என்ற நூலின் 400 பக்கம் சாம்பலாகிவிட்டது. மூன்று வருடங்களாக இந்த இருதயநோய். அது வரும் போதெல்லாம் புத்தகம் படிப்பதை நிறுத்தி விட்டு ஓவியம் வரையத் தொடங்குவேன். என்ன என்ன அழகான வண்ணச் சித்திரங்களைச் சேகரித்து வைத்திருந்தேன், தெரியுமா? எல்லாம் அக்கினி பகவானுக்கே ஆகுதியாகிவிட்டன. எழுதும் கருவிகள் மட்டும் தப்பின.''

இவர் பர்மாவில் இருக்கும் போது மேல்நாட்டு இலக்கியங்களை ஆழ்ந்து படித்தார். நண்பர்கள் வற்புறுத்தவே

மீண்டும் இலக்கியத் துறையில் இறங்கினார். "எதிர்பாராதவிதமாக இலக்கியச் சேவைக்கு என்னை அழைக்கிறீர்கள். இன்று இளமையைத் தாண்டி முதுமையின் ஆரம்ப தசையில் நிற்கிறேன். உடல் குன்றி விட்டது. ஆர்வம் அடங்கி விட்டது. இருப்பதோ வேற்று நாடு, பிறந்த நாட்டோடு தொடர்பு விட்ட மாதிரிதான். உங்களில் பலருக்கு நான் புதியவன். ஆனால் என் நாட்டினர் என்னை அழைக்கும்போது எப்படிச் சும்மா இருப்பேன்? எனக்கு ஆற்றல் உண்டா என்பதைக் குறித்து நான் ஐயப்படவில்லை. உங்களுடைய அழைப்பே எனக்கு ஆர்வத்தைக் கொடுக்கும்' என்று அவர்களுக்கு எழுதியிருந்தார்.

1919-20-ல் 'யமுனா' என்ற பத்திரிகையில் 'ராமனுக்குபுத்தி வந்தது' (ராமேர் ஸுமதி), 'வழிகாட்டல்' (பதநேர்தேச), பிந்துவின் மகன் (பிந்துர் சேலே)என்ற கதைகள், ஒவ்வொன்றாக வெளியாயின. அவற்றிற்கு அமோகமான வரவேற்பு. 1920-22-இடையில் 'பாரதவர்ஷ' என்ற மாதப்பத்திரிகையில் 'விரஜா சுந்தரி (விராஜ்பேஸ), பண்டித மஹாசயர் (பண்டிதமஹாய்), கிராம சமூகம் (பல்லீ ஸமாஜ்) என்ற நாவல்கள் வரிசையாக வந்தன. சரத்சந்திரருடைய புகழ் உச்சநிலைக்கு வரத்தொடங்கியது. பர்மாவின் காற்றும் நீரும் அவர் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. வரவர பலவீனம் அதிகமாகிக் கொண்டே வந்தது. அந்தத் தேசத்தை விட்டொழித்தால்தான் உயிர் நிலைக்குமென்று இவருக்கு உள்ளூறப்பட்டு விட்டது. 'பாரதவர்ஷ'த்தின் உரிமையாளரான ஹரிதாஸ் சட்டர்ஜி இவருடைய ஆப்த நண்பர். தம் நிலையைக் குறித்து அவருக்குக் கடிதம் எழுதினார். தம் பத்திரிகையில் எழுதுவதற்கு மாதம் 100 ரூபாய் கொடுப்பதாக அவர் உறுதி தந்தார். சரத்சந்திரரை ரங்கூனை விட்டு வந்துவிடுமாறு எழுதினார். பிழைப்போம் என்ற நம்பிக்கை வந்தது இவருக்கு. ஓராண்டு ஓய்வு எடுத்துக்கொண்டு கல்கத்தாவுக்குப் பயணமானார். 1916 ஏப்ரல் 11-ஆம் தேதி ரங்கூனில் கப்பலேறினார்.

சரத்சந்திரர், பாஜே சிவபூரில் வசிக்கலானார். 1920-ல் இவர் மீண்டும் வரைந்த 'சரித்ரஹீன்' என்ற நவீனத்தை 'பாரதவர்ஷ'வில் போட மறுத்து விட்டார்கள். காரணம், கதையின் போக்கு விபரீதமானது; சமூகத்திற்கே அதிர்ச்சி தரக்கூடியது. பொது மக்களுக்கு அஞ்சி அதை அவர்கள் ஏற்கவில்லை. ஆனால் 'யமுனா' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தது. கதையைப் படித்த பிறகு ரசிகர்கள் இதை இணையற்ற நவீனம் என்றார்கள். பத்திரிகைகளில் இதைப் பற்றிக் கண்டனங்களும், புகழுரைகளும் கிளம்பின. பிறகு இவருக்குப் புத்தக விற்பனையிலிருந்து நல்ல வருவாய் கிடைத்தது.

ஒரு சமயம் இவரைத் தூக்கி வைக்க யாரோ ஒருவர், 'ரவீந்திரர் எழுதுவதே எனக்குப் புரிவதில்லை. ஆனால் நீங்கள் எழுதியதெல்லாம் அவ்வளவும் பிடிக்கிறது; எதையும் தெளிவாகச் சொல்லுகிறீர்கள்' என்றாராம். உடனே சரத்சந்திரர் 'தமக்கே உரிய நகைச்சுவையுடன், அதற்குக் காரணம் தெரியவில்லையே உமக்கு? ரவீந்திரர் எங்களைப் போன்றவர்களுக்கு மட்டுமே எழுதுகிறார். நாங்களோ உங்களுக்காக எழுதுகிறோம்' என்று கூறி அவரை இறக்கிவிட்டார்.

சத்தியேந்திரநாத் தத்தர் என்பவர் பிரபல கவி. அவர் அகால மரணமடைந்தார். அதைக் குறித்து இரங்கற்கூட்டம் ஒன்று கல்கத்தாவில் நடந்தது. அதற்கு சரத்பாபு தலைமை தாங்கினார். அவர் அதிகமாக ஒன்றுமே பேசவில்லை. 'சத்யேந்திரநாதர் என்னவோ இறந்துவிட்டார்; நாம் பேசுவதற்கு என்ன இருக்கிறது. இரண்டு துளிக் கண்ணீர் விடப்போகிறோம்; அவ்வளவுதானே? எல்லாரும் அவரவர்கள் வீட்டுக்குப் போகலாம்' என்று சுருக்கமாக முடித்து விட்டார். வந்தவர்கள் திடுக்கிட்டனர். "உயிருடன் இருக்கும்போது அவரை எந்தவிதமாகவும் நீங்கள் கௌரவிக்கவில்லை. பெரிய இலக்கிய அரங்குகளில் தலைமை வகிக்கவும் அவரை அழைக்கவில்லை. பட்டதாரிகள், ராஜாக்கள் இவர்களையே உயர்வாக எண்ணினீர்கள். இப்போது இந்தக் கண்ணீர் எதற்கு?" என்று சொல்லிக் கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

சாருபானர்ஜியும் சரத்சந்திரரும் இளமையிலிருந்து ஒன்றாக இழைந்த நண்பர்கள். டாக்காவுக்குப் போகும் சமயங்களில் இவர் சாருவின் வீட்டிலே தங்குவது வழக்கம். ஒரே அறையில் தான் இருவரும் படுத்திருப்பார்கள். சரத்பாபு, 'படுக்கை இவ்வளவு தாராளமாக இருக்கிறதே, உனக்கும் இடம் இருக்கிறது-நாம் இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாமே' என்று வேடிக்கையாகப் பேசி, தம் நண்பருடன் இரவு முழுவதும் பல ரசமான விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டே இருப்பாராம்.

சரத் சந்திரருக்கு முன்னால் தோன்றிய வங்க நாவலாசிரியர்கள் எவருமே தாழ்த்தப்பட்டோரின் வா... யுச் சித்திரிக்கவில்லை. சமூகம் ஒதுக்கிய, வழுவிய பெண்களை வைத்து அபூர்வமான குணச்சித்திரங்களை இவரே முதன் முதலில் வரைந்தார். இத்தகையோரிடம் சரத்பாபுவுக்கு உள்ளூற அநுதாபம். அவரவர் குற்றங்குறைகளை விட்டுக் குணங்களையே கவனிப்பார். 'வழிகாட்டல்' (பதநிர்தேச) என்ற கதையில் வரும் ஏகாதசி வைராகி மகா கல்நெஞ்சன். ஆனால் அவனிடத்திலும் ஒரு விசேஷமான தன்மை இருப்பதைச் சரத்சந்திரர் எடுத்துக் காட்டினார்.

இவரது நடை ஆடம்பரமற்றது. தெளிவாக எதையும் சொல்பவர். இவரே ஓரிடத்தில் **'நான் புரிந்து கொள்ளாத எந்த விஷயமும் என் இலக்கியத்திலே இடம் பெறாது. என் நவீனம் எதுவும் வெறும் கற்பனையை நம்பி உருவெடுக்கவில்லை. வாழ்வில் உள்ள சுகதுக்கங்களை நேரில் பார்த்தவன் நான்'** என்று எழுதியிருக்கிறார். இது எவ்வளவு உண்மை என்பது இவருடைய கதைகளைப் படித்தவர்களுக்குத் தெரியும்.

சரத்சந்திரரைப்போல் தாமும் எளிய மக்களின் வாழ்வை வைத்து கதைகள் புனையவேண்டுமென்று சாரு பானர்ஜிக்கு ஆவல். இதை அவர் ஒரு சமயம் சொன்னபோது சரத்சந்திரர். 'என்னைப் போல் எழுதுவதற்கு உனக்கு அனுபவம் போதாது. நான் நாடோடியாகத் திரிந்த காலத்தில் எத்தனை பேரோடு பழகியிருக்கிறேன் தெரியுமா? உணவுமில்லாமல் பல நாட்கள் பட்டினி கிடந்ததுண்டு. வழியில் போகும் நாய்கள்கூட எனக்குச் சிநேகிதமாகும். டோம் பாக்தி மாதிரி ஆதிவாசி மக்களின் புலால் கமழும் குடிசையில் தங்கி அவர்களுடன் சேர்ந்து புசித்துள்ளேன். தீயோரின் சகவாசம் உண்டு. கெட்ட பழக்கத்தில் மிதந்திருக்கின்றேன். சமூகம் ஒதுக்கிய எத்தனையோ விபசார மகளிரின் வீடுகளில் தங்கி, அவர்கள் வாயிலாகவே அவர்களது வரலாற்றை அறிந்தவன். நாவல் எழுதும் இந்த ஆற்றல் திடுமென எனக்கு

உலகத்தில் விருப்பு - வெறுப்புகள் தான் சகல தீமைகளுக்கும் காரணம். அதற்கு ஒரே ஒரு வழி வைராக்கியம்தான். பட்சி ஜாதிகளின் இன்னொலியே இனிய ... கார்யு, ... கியமே அழகின் இருப்பிடம்.

—சரத்சந்திரர்.



ழளைத்து விடவில்லை. பார்த்த காட்சிகளையே சுவைதரும்படியாக எழுதியிருக்கிறேன்' என்றார். கணக்கற்றவர் இவரை விரும்பிப் படிப்பதற்குக் காரணம் இதுதான்!

பிராணிகளிடத்தில் மிக அன்பு இவருக்கு. நாயென்றால் இவருக்கு உயிர். வெறும் குச்சுநாய் தான், வழியில் யாரோ கல்லால் அடித்துவிட்டனர். துடிதுடித்து அழுதுகொண்டிருந்தது. அதைக் கருணையோடு எடுத்து வளர்த்து வந்தார். பேலு என்ற அந்த நாய் இறந்தபோது, நெருங்கிய நண்பருக்குக்கூட அவ்வளவு வருந்தி இருக்கமாட்டார். 'என் பேலு போய்விட்டானே! என் தோழன் 24 மணி நேரமும் என்னைவிட்டுப் பிரியமாட்டானே! பிரிவு இவ்வளவு கொடியதா? வெறும் நாயை நினைத்துக் கொண்டு நான் இவ்வளவு வருந்திக் கண்ணீர் விடுவானேன்? ஜடபரதனுடைய உபாக்கியானம் பொய்யே அன்று' என்று கதறினாராம். இவர் எழுதிய நாவல் ஒன்றில் ...ரும் 'கைலாச சிற்றப்பா'வின் இளகிய நெஞ்சம் கற்பனையல்ல என்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பாணித்ராஸ் என்ற இடத்தில் சிலகாலம் சரத்சந்திரர் வசித்து வந்தார். வீட்டுக்கு எதிரே பரவலான கங்கையாறு. தொலைவில் மங்கலாகத் தெரியும் எதிர்க்கரை. அன்னங்கள் அசைந்து செல்வது போல் பாய்விரித்த படகுகள் வரும் கவின்தரு காட்சி. அகலமான தம் வீட்டு மாடி வராந்தாவின் ஒரு மூலையில் இவர் இலக்கிய ரசனையில் ஈடுபட்டிருப்பார். கீழே பூந்தோட்டத்தில் கணக்கற்ற ரோஜாச் செடிகளில் மலர்கள் பூத்திருக்கும். காற்றில் அத்தரின் இன் மணம் வீசும். இவர் அருகில் ஒரு ஹுக்கா. உணர்வைத் தட்டியெழுப்ப அடிக்கடி அதன் நீண்ட குழாயை எடுத்து ஒரு தரம் புகையை இழுப்பார். பேனா ஜோராக ஓடும். ஒருநாள் மாலை, நியமநிஷ்டையுள்ள இரு முஸ்லீம்கள் 'நமாஸ்' பண்ணச் சௌகரியம் இராமல் சரத்சந்திரர் வீட்டுக்கு வந்தனர். விரோத பாவம் இல்லாமல் அவர்களை உபசரித்தார் இவர். முகத்தைக் கழுவிக் கொள்ள ஒரு கூஜா நீர் தான் அவர்கள் கேட்டது. ஆனால் நம் கதாசிரியர் மாடிக்கே அவர்களை அழைத்துப் போய் ரத்தினக் கம்பளம் ஒன்றை விரித்து மேற்குத் திசையைப் பார்த்தாற்போல் அவர்கள் 'நமாஸ்' படிக்க வசதி செய்து கொடுத்தார். இவரது உபசரணையை மெச்சி, 'எங்களுக்கு இந்த இடத்தை விட்டுப் போகவே மனமில்லை; உங்களிடத்தில் இன்று புதிய உண்மையைக் கண்டோம்' என்று அவர்கள் சரத்பாபுவைப் பாராட்டினர்.

ஏழைகளிடத்தில் தனி வாஞ்சை இவருக்கு. ஒரு சமயம் தாம் வறுமையில் உழன்றதை இவர் மறக்கவில்லை. கிராமாந்தரங்களில் மக்கள் நோய்நொடியில் வருந்துவார்கள்; மருந்தும் தகுந்த சிகிச்சையும் இல்லாமல் அவர்கள் மடிவதைப் பார்த்திருக்கிறார். 'ஹோமியோபதி' வைத்திய முறையைக் கற்று அதற்கென்று அதிகப் பணம் செலவு செய்து, மருந்துகளைத் தருவித்தார். கிராமத்தவர் இவரை 'தாதா டாகுர்' (பெரிய ஐயா) என்று அழைத்து வந்தார்கள்.

ராஸ்விஹாரி வஸு பெரிய புரட்சி வீரர். உலகில் எந்த அரசாங்கமும் அவரை ஓர் இடத்தில் நிலைக்கவிடாமல் துரத்தி அடித்தது. பாரதநாடு விடுதலை பெற வேண்டுமென்று வெளிநாடுகளில் ஒரு புரட்சிப் படையை நிறுவியவர் அவர். சரத்சந்திரரின் 'வழிவேண்டுவோர்' (பத்தேர்தாபீ) என்ற நவீனத்தில் வரும் ஒப்பற்ற 'மாஸ்டர்' அவரே. உணர்வற்ற எத்தனை இளைஞர் அவர் வசப்பட்டுத் தீக்கொழுந்தாக மாறினார்கள்! ரங்கூனில் பல முறை ராஸ்பிஹாரியைச் சரத்பாபு ரகசியமாகச் சந்தித்திருக்கிறார். அவர் தங்குமிடம் ஓர் பட்டிக்காடு-எவரும் உட்புக முடியாத பகுதி. எப்போதாவது அங்கேயும் போலீஸ் மோப்பம் பிடிக்கவரும். அச்சமயங்களில் 'சசிலாட்ஜ்' என்ற இடத்தில் தான் அடைக்கலம் புகுவார் ராஸ்விஹாரி. அந்த பயங்கரமான ஆளைத் தம் கூரையின்கீழ் வைத்துக் கொள்ள சரத்பாபுவுக்குத் தான் என்ன துணிச்சல் இருந்திருக்கவேண்டும்! நாட்டுப்பற்றே இவருக்கு இந்த மனத்திட்பத்தைக் கொடுத்தது.

சரத்சந்திரர் கல்கத்தாவுக்கு வந்த பிறகு போலீசாரிடம் சிக்கிக் கொள்ளாமல் எல்லையைக் கடந்து, சீனம் செல்ல ராஸ்விஹாரி வஸுவுக்கு ஏழாயிரம் ரூபாய் தேவையென்று தகவல் வந்தது. தம் வசம் அவ்வளவு தொகையில்லையாயினும் நண்பனைக் காப்பாற்ற மார்வாடியிடம் அதிகவட்டிக்கு அந்தத் தொகையை வாங்கித் தந்தார் சரத்சந்திரர்.

இவரோடு கூடவே ஒரு தாடிக்காரன் வருவான். யாரோ இவருக்குத் தெரிந்தவனென்று உலகம் நினைத்தது. தாடிக்காரன் பெரிய ஆசாமி. ஹாவ்டா கொள்ளை வழக்கில் சிறைப்பட்டு அங்கிருந்து ஓடிவந்துவிட்ட சிறந்த தேசபக்தனான லால்விஹாரிதான் அவன். இத்தகையோருக்கு எப்போதுமே இவர் உறுதுணையாக நிற்பது வழக்கம்.

சமூகத்தில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுடன் இழைந்து பழகியதால் சில கெட்ட பழக்கங்கள் சரத்பாபுவிடம் மலிந்திருந்தன. இவர் சுவைக்காத மது வகையே கிடையாதாம். பிற்காலத்தில் இந்த வேட்கை மட்டுப்பட்டது. ஒன்றோடொன்று இணைந்து, ஐந்து குடாக்குச் செம்புகளில் சீமைச்சாராயம் இருக்கும். புகை ஒவ்வொரு செம்பிலும் பாய்ந்து குழாய் மூலமாக வரும். ஒரு தரம் குடித்தாலே போதை தலைக்கேறிவிடுமாம். ஆனால் சரத்சந்திரர் சகஜமாக அந்தக் குழாயிலிருந்து புகைபிடித்துக் கொண்டே இருப்பார், புத்தி சுவாதீனத்தை இழந்ததே இல்லை. இதை 'க்ரேட் ஷாப்' என்று நண்பர்களிடம் வேடிக்கையாகச் சொல்வாராம்.

நச்சுப் பாம்புகளைப் பிடித்து ஆட்டுவது இவருக்கு அலாதியான பொழுதுபோக்கு. 'ஸ்ரீகாந்த'னில் வரும் பா... பாட்டியே இந்த வித்தையை... கற்றுத்தந்தவன். விஷம் ஏறும...

இருப்பதற்குப் பல தினுசான மூலிகைகள் இவருக்குத் தெரியும். ஒரு சமயம் பானித்ராஸில் இவருடைய தோட்டத்தில் விஷநாகம் ஒன்று நடமாடிக்கொண்டிருந்ததாம். அதைப் பிடிக்க வேண்டுமென்றுசொல்லிக்கொண்டிருந்தார். இவருக்குத் தெரிந்த ஒரு பிடாரன் புற்றுக்குள்ளேயே கையைவிட்டு அதைப் பிடித்து வருவதாக வீரம் பேசினான். சரத்சந்திரர் வேண்டாமென அவனைத் தடுத்தார். அதிக ரோஷத்தோடு இருந்ததால் பாம்பு, பிடாரனின் கையைப் பிடுங்கிவிட்டது. சிகிச்சை செய்வதற்கு முன்பே கொடிய விஷம் தலைக்கேறி பிடாரன் மாண்டான். அத்துடன் இந்த பாம்புச் சகவாசத்தை சரத் விட்டொழித்தார்.

இவர் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல. சுதந்தர இயக்கத்திலும் பங்கு கொண்டு போர் புரிந்தவர். 'பெண்களுக்குரிய மதிப்பு' (நாரீர்மூல்ய) 'தேசமும் இலக்கியமும்' என்ற நூல்களையும், அவ்வப்போது பலதரப்பட்ட பத்திரிகைகளில் சிந்தனை செறிந்த கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அரசியல் சம்பந்தமாக இவர் எழுதிய கட்டுரைகள் இன்றளவும் ஒருங்கே திரட்டப்பட்டுப் புத்தக வடிவில் வெளிவரவில்லை, இவர் ஹாவ்டா ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். இவரது கொள்கை என்ன என்பதை ஆராய வேண்டுமானால் 'இளைஞரின் எழுச்சி' என்ற கட்டுரையை எல்லாரும் படிக்க வேண்டும். 'வங்கவாணி' பத்திரிகையில் இவர் வரைந்திருக்கும் 'முஸ்லீம் சமுதாயம்' என்ற கட்டுரை அன்று வங்காளத்தைக் குழப்பிய பிரச்சினையை விளக்கும். ஒரு சமயம் இவர் சுபாஷ்பாபுவின் (நேதாஜி) வற்புறுத்தலுக்கு இணங்கிக் குமில்லாவுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே நடக்கும் ஒருமாநாட்டிற்கு இவரைத் தலைவராகத் தேர்ந்தனர். போகும் வழியெல்லாம் வேறொரு கட்சியினர் 'ஷேம் ஷேம் (அவமானம்) என்று கூறி வண்டியின் ஜன்னல் மூலமாகக் கரித்துகளை இவர் மேல் வீசியெறிந்தனர். வழியில் இதுபோன்ற வரவேற்பு; உடனேயே பன்னிரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு ரதத்தில் இவரை அமர்த்தி மேளதாளங்களுடன் பல மைல் நீளம் உள்ள ஊர்வலம் ஒன்றைச் சுபாஷ் கட்சியினர் நடத்தினர். 'எப்போது நதிக்கரையிலுள்ள நம் ஏகாந்த வாசத்துக்குப் போகப்போகிறோம்' என்று ஆகிவிட்டது, இவருக்கு. இதைக் குறித்து இவர், 'திரு அரவிந்தரைப் போல் நானும் சொல்லுகிறேன்-விடுதலை பெற்றவன் தன் சொந்த விஷயத்தில் நம்பிக்கை வைப்பது வீண்..... கரிப்பொடிக்கும் ஒரு கும்பிடு, பன்னிரண்டு குதிரை பூட்டிய ரதத்திற்கும் ஒரு கும்பிடு' என்று எழுதியிருக்கிறார். வங்காளத்தைச் சீர்குலைத்த கட்சி பேதங்களை இவர் உள்ளூற வெறுத்தார்.

இவரை வங்க நாட்டினர் பல முறை கௌரவிக்க முன்[illegible] முக்கிய ஸ்தா[illegible]ங்கள் இவருக்கு வரவேற்பளித்துப் பாராட்டின. 1923-ல் கல்கத்தாப் பல்கலைக் கழகம் இவரது இலக்கியப் பணியைப் போற்றி 'ஜகத்தாரிணீ' பொற்பதக்கத்தை இவருக்கு வழங்கியது. இதற்கு முன் 1921-இல் இந்தப் பதக்கத்தை முதன் முதலாகப் பெற்றவர் ரவீந்திரரே. 1924-ல் வங்கிய ஸாஹித்ய பரிஷத், சரத்பாபுவை கௌரவ அங்கத்தினராக ஏற்றது. இது எளிதில் கிடைக்கக்கூடிய பதவியன்று. 1936-ல் டாக்கா பல்கலைக் கழகம் பட்டமளிப்பு விழாவின் போது இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது.

இலக்கியத்துறையில் தம் குருநாதரான ரவீந்திரரை இவர் போற்றி வந்தார். கவியரசரின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவை சரத்சந்திரரே முன்னின்று நடத்தினார். ரவீந்திரரும் இவரது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது நேரில் கலந்து கொண்டு இவருக்குப் புகழ்மாலை சூட்டினார்.

''எல்லையற்ற வான மண்டலத்தை ஆராய்வதில் மூழ்கி, விசித்திரமான கோளங்களையும், அதிசய கிரணங்களைப் பொழிந்து பல்வேறு ஈர்ப்புச் சக்தியால் வேகமாகச் சுழலும் தாராகணங்களைக் கண்டுபிடிப்பதில் வல்லவன், வானசாஸ்திரி. சரத்பாபுவும் அதேபோல் வங்க மக்களின் இருதய வானில் புகுந்த அவர்களது விசித்திர மனப்பண்புகளைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். எத்தனையோ எழுத்தாளர்கள் புகழ் ஈட்டியிருக்கலாம். ஆனால் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதில் சரத்பாபுவுக்கு இணையானவர் எவருமே இல்லை. வங்காளியின் உள்ளம் வேதனைப்படும்போது அதைக் கண்டறிந்த பெருமை அவரைத்தான் சாரும். இலக்கியத்தில் உபதேசம் செய்வதை விட அதைப் படைத்துத் தருபவனே சாலச் சிறந்தவன். கவிக்குரிய பீடத்திலிருந்து மதிப்பை உணர்ந்து நான் இந்தப் புகழ் மாலையை சரத்பாபுவுக்குச் சூட்டுகிறேன்.' என்று அப்போது சொன்னார் புலவரேறு. இதைவிடச் சரத்சந்திரருக்கு ஒரு சன்மானம் தேவையா?

கல்கத்தா இரைச்சல் மலிந்த பெரிய நகரம். எழுத்தாளர் அமைதியாக இலக்கிய வழிபாடு செய்வதற்கு ஏற்ற இடமேயல்ல அதனால் 1919-ல் ஹாவ்டா ஜில்லாவில் பானித்ராஸ் என்ற கிராமத்தில் இவர் விசாலமான ஓர் இடம் வாங்கினார். கங்கையின் கிளையான [illegible] ஆற்றை [illegible] ஒரு தனி[illegible]லில் அந்த இடம் இருந்தது. அங்கு ஓர் இல்லம் எழுப்பிக் கொண்டு சில ஆண்டுகள் சரத்பாபு அமைதியுடன் வாழ்ந்தார். முஸ்லீம் மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கதைகள், கட்டுரைகள் எழுதவேண்டுமென இவருக்கு ஆவல் இருந்தது. டாக்காவிலிருந்த காஜி அப்துல் ஓதூர் என்பவர் இவரைக் காணவந்தார். அப்போது அவரே இதைப்பற்றி எடுத்தார். சரத்பாபு அதற்கு, 'உங்கள் சமூகத்தினரின் குற்றங் குறைகள் பற்றியும் எழுதுவேன். சம்மதமா?' என்று கேட்டாராம், ஓதூர் சொன்னார்-' அதுதான் வேண்டும் இப்போது'. கிழக்கு வங்கத்திற்கு இவரை அழைத்துச் சென்றார். முஸ்லீம் குடும்பத்தவருடன் சரத் பழகி வந்தார்.

ஆனால் சரத்பாபுவின் எண்ணம் கைகூடவில்லை. கடைசிக் காலத்தில் வாழ்க்கைத் துணைவி ஹிரண்மயீ தேவியின் விருப்பத்தை நிறைவேற்றக் கல்கத்தாவுக்கே திரும்பி, அமைதி குலவும் அசுவினிதத்தா சாலையில் ஒரு மாளிகையைக் கட்டிக் கொண்டு காலம் கடத்தினார். அடிக்கடி நோய்க்கு ஆளானார். இளமையில் ஏற்பட்ட கெட்ட பழக்கங்கள் இவரது உடலை உருக்குலைத்துவிட்டது. 1938 ஜனவரி 16-ஆம் தேதி 'பார்க் நர்ஸிங் ஹோமி'ல் காலமானார் சரத்சந்திரர்.

இவர் எழுதிய இலக்கியங்களுள் பெரும்பான்மை நவீனங்களே. ஆங்கில நாவலாசிரியரான 'டிக்கன்ஸ்' இவருக்கு இத்துறையில் வழிகாட்டி. இவர் எழுதிய கதைகள் எல்லாம் சமூகப் பிரச்னைகளைப் பற்றியன. சிறப்பாக இவருடைய 'கிராம சமூகம்' (பல்லீ ஸமாஜ்), 'சரித்ரஹீன' (நடத்தைக் கெட்டவன்)-இரண்டும் பெருங்கிளர்ச்சியை மூட்டிவிட்டன. நாவல் இலக்கியத்தைப் பற்றி ஓரிடத்தில் இவர், பின் வருமாறு எழுதியுள்ளார்.

''இன்று எழுத்தாளர்களை 'லட்சியவாதி' (IDEALIST) 'பிரத்தியட்சவாதி (REALIST) என்று இருவிதமாகப் பிரிக்கின்றனர். நான் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவன். இதனால் எனக்குக் கெட்ட பெயர். கலை




கிராமப்புற மக்களின் உணவு மற்றும் ஊட்டச் சத்துத் தேவையை ஈடுசெய்வதற்கான யுக்திகள், இவ்வகையில் உணவு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் ஆற்ற வேண்டிய பணி ஆகியவை பற்றிய கருத்தரங்கை 23—4—1977 அன்று தமிழ்நாடு தற்காலிக ஆளுநர் திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள் துவக்கி வைத்ததுடன், சிறப்பு மலரை வெளியிட்டு, அதன் முதல் பிரதியை மைசூர், மத்திய உணவுத் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் பி. வி. அம்லா அவர்களிடம் கொடுத்தார்.



மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. ரவீந்திர வர்மா அவர்கள் 23—4—1977 அன்று மாநில விருந்தினர் மாளிகையில் பத்திரிகைச் செய்தியாளர்களிடையே உரையாற்றினார்.



தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, சென்னைக்கு வருகைதந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களை 27—4—1977 அன்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செல்வி ரத்தினம் என்ற அரிசன வகுப்பைச் சார்ந்த சிறுமி மலர் மாலை அணிவித்து குங்குமம் இட்டு வரவேற்றார்.

இந்தியாவின் தற்காலிகக் குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, 27—4—1977 அன்று சென்னைக்கு வந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களை ஆளுநர் ஆலோசகர்கள் திரு. ஆர். வி. சுப்பிரமணியன், திரு. வி. கார்த்திகேயன் ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றனர்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—77 அன்று காந்தி மண்டபம் சென்று காந்தி அடிகள் திருஉருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—1977 அன்று இராஜாஜி நினைவகத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 28—4—77 அன்று காமராஜர் நினைவகத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—1977 அன்று பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 28—4—1977 அன்று 'ஆசிய கார்பன் லிமிடெட்' நிறுவனத்திற்குக் கடைக்கால் நாட்டுவித்தார்.




களைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, சிரித்து விட்டுச் சொன்னார் :— ''இதைக் கேளடி பவானி, கோகுலன் இந்தச் சிறு வயதில் எத்தகைய பெரிய ஆசையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விட்டான், தெரியுமா? அது எவ்வளவு பெரியது என்பது உனக்குப் புரியாது. இவ்வளவு தூரம் தெரிந்தவனுக்கு வியாபாரத்தில் தந்திரங்கள் அநேகமாகத் தெரிந்து விட்டதென்றே வைத்துக் கொள்ளலாம். இன்னும் ஏதோ கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டியதை நான் அவனுக்குக் கற்பித்துவிடுகிறேன்.''

''அது சரி, ஆனால் ஊரில் என்ன சொல்வார்கள்?'

''ஊரிலுள்ளவர்கள் விஷயம் எனக்குத் தெரியாது. என் விஷயம்தான் எனக்குத் தெரியும். அவன் கையில் உங்களை ஒப்படைத்துவிட்டு நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன். இதில் சந்தேகமில்லை!''

சிறிது காலமாகவே கணவனின் உடல் நிலை சீராக இல்லை என்பது அவளுக்குத் தெரியும். கணவன் கூறிய வார்த்தையைக் கேட்டதும் தனக்கு விரைவில் நேரவிருக்கும் பயங்கர விபத்தை எண்ணி அழுதுவிட்டாள். அழுது கொண்டே ''சரி அப்படியானல் அழைத்துக் கொண்டுச் செல்லுங்கள்!'' என்ருள். இதைக் கூறிவிட்டு அடுத்த அறைக்குச் சென்று கோகுலனை அழைத்துக் கொண்டு வந்து கணவன் கையில் ஒப்புவித்தாள். அவன் புறப்படும் போது அவனை உச்சி முகர்ந்து முத்தமிட்டு ''போடா கண்ணு, கோகுல்! அப்பாவுடன் கடைக்குப் போ! நீ மனிதனுனல்தான் நாங்கள் வாழ முடியும்'' என்ருள்.

தாய், தந்தை இருவர் முகத்தையும் பார்த்து கோகுல் வியப்படைந்தான். பாவம் அவன் முதல் நாள் இரவு பூராவும் படுக்கையில் படுத்தபடி எப்படியும், என்ன ஆனலும் சரி அடுத்த வருஷம் பாஸ் செய்தே தீருவேன் என்று சபதம் செய்து கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் போவதைவிட்டுக் கடைக்குப் போவதை எந்தப் பையனும் கவுரமாக நினைக்க மாட்டான். கோகுலனும் அப்படித்தான் நினைத்தான். ஆனல் அவன் தாயின் வார்த்தையை மீறி எந்தக் காரியத்தையும் செய்ததில்லை. தன் பள்ளித் தோழர்களின் கேலியும் கிண்டலும் அவன் மனக் கண்முன் தோன்றின. ஆயினும் சற்றும் தயங்காமல், பேசாமல் தந்தையுடன் கடைக்குச் சென்றுவிட்டான்.

## 2

பத்து வருடங்கள் ஓடி மறைந்தன. வைகுந்தன் மிகுந்த வயோதிக துசையை அடைந்தார். மரணத்தின் கரைக்கு வந்து விட்டார். ஆனல் அவருடைய குடும்ப விஷயங்கள்,. . . அவர் வீட்டின் பக்கம் திரும்பிப் பார்த்தால் கோகுலன் விஷயத்தில் அவர் எவ்விதத் தவறும் செய்யவில்லை என்பது புலப்படும். இப்போது சின்னக்கடை வீதியிலிருந்த அவருடைய சிறு மளிகை இல்லை. அதற்குப் பதில் மொத்தமாக வியாபாரம் செய்யும் பெரிய மண்டி நடந்து கொண்டிருந்தது. அதற்காகப் பெரிய கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அங்கே லட்சக்கணக்கான ரூபாய்க்கு கொள்முதல், விற்பனை நடந்து கொண்டிருந்தது. விநோதன் கல்கத்தாவில் எம். ஏ. படித்துக் கொண்டிருந்தான். வைகுந்தனுக்குப் பேரன் பேத்திகள் இருந்தனர். யாவும் சௌகரியமாகவே இருந்தது. அவர் நிம்மதியாக இறக்கலாம். ஆனல் சில நாட்களாக அவருடைய இளைய மகன் விநோதனைப் பற்றி ஏதோ கெட்ட வதந்திகள் உலவின. அதனல் அவருடைய வாழ்க்கையின் இறுதி நாட்கள் சிறிது கஷ்டமாக இருந்தன.



ஒரு நாள் காலையில் வைகுந்த முகர்ஜிக்கு வைகுந்தத்திலிருந்து அவசர அழைப்பு வந்து விட்டது! அவர் உடம்பில் சகிக்க ஒண்ணுத வலி ஏற்பட்டது. அதனல் தன்னுடைய கடைசி நேரம் நெருங்கி விட்டதென்பதை உணர்ந்தார். தன் மனைவியை அருகே அழைத்துக் கட்டிலில் உட்கார வைத்துக் கொண்டு, அவள் முகத்தைப் பார்த்து வாடிய சிரிப்புடன்— ''பவானி! இங்கே பார், என்னுடைய கடைசி நேரம் நெருங்கிவிட்டது. நான் சற்று முன்னதாகவே செல்கிறேன். நீ என்னிடம் வந்து சேரும் வரையில் என் இரு பிள்ளைகளையும் கவனமாகப் பார்த்துக் கொள். நான் உன் கையில்தான் அவர்களை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன்''.

கணவனின் மெலிந்த கரங்களைத் தன் கைகளினுல் பற்றிக் கொண்டு பவானி அழலானுள்.

வைகுந்தன் சொன்னுர் : 'கோகுலனைக் குழந்தையாக விட்டு விட்டு அவன் தாய் இறந்து போனுள். அப்போது மறுபடியும் மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லை. திருமணம் செய்து கொண்டிருக்கவும் மாட்டேன். ஆனல் என்னல் தனியாக கோகுலனைக் காப்பாற்ற முடியாது என்று தோன்றியதனல், மிகுந்த துயரத்துடன் பயந்து கொண்டே மறுமணம் செய்துகொள்ள ஒப்புக் கொண்டேன். என்னுடைய மனத்திலுள்ளதை அறிந்துதான் பகவான் எனக்கு உன்னை மனைவியாகத் தந்து அருளினுர். அதனல் இன்றளவும் நான் எவ்விதத் துக்கமோ கஷ்டமோ இன்றி வாழ்க்கை நடத்த முடிந்தது. என்னுடைய இந்த அந்திம காலத்தில் விநோதன் மட்டும் இவ்வாறு துக்கத்தைத் தந்திராவிட்டால் நிம்மதியோடு இறந்திருப்பேன்!'' இதைக் கூறும்போது வைகுந்தனின் உலர்ந்த விழிகளில் கண்ணீர் பெருகிவிட்டது.

அவர் சொன்னுர், ''என்ன செய்வேனடி பவானி! என்னல் இறக்கவும் முடியவில்லை. நான் மிகுந்த பிரயாசைப்பட்டு முன்னுக்குக் கொண்டு வந்துள்ள என் வியாபாரம் எனக்குப் பிறகு விநோதன் கைக்கு வந்ததும் நாசமாகி விடப் போகிறது. இதை என்னல் மறு உலகத்திலின்றும் பார்த்துச் சகிக்க முடியாது, அங்கும் இந்தத் துக்கம் என் உள்ளத்தில் அம்பு போல் உறுத்திக் கொண்டே இருக்கும்.'' இதைக் கூறிவிட்டு, சிறிது மூச்சு வாங்கிக் கொண்டு மீண்டும் பேசலானுர். ''அது மட்டுமல்ல, நீ நிற்பதற்குக் கூட நிழல் இல்லாமல் போய்விடும். ஒருகால், கோகுலன் கூடத் தன் குழந்தை குட்டிகளுடன் தெருவில் திண்டாட நேருமோ என்னவோ!'' இதைக் கூறும்போது வைகுந்தனின் உடம்பு நடுநடுங்கியது. இவ்வித பயங்கர எண்ணங்களே அவருடைய முடிவுக்குக் காரணமாக ஆகிவிடும் போல் மூச்சுத் திணறியது. பவானி சட்டென்று தன்னுடைய முகத்தைக் கணவன் முகத்தருகே கொண்டு

போய அழுதுகொண்டே சொன்னாள்: "இதைக்
கேளுங்கள், நீங்கள் விநோதனுக்கு ஒன்றுமே
தர வேண்டாம். உங்கள் ரத்தத்தை வியர்வை
யாகச் சிந்தி நீங்கள் ஈட்டிய செல்வத்தைப்
பிறரிடம் பறிகொடுக்க நான் விடமாட்டேன்.
கடை வியாபாரம், வீடு வாசல், தோட்டம்,
நிலபுலன் யாவற்றையும், கோகுலன் பெய
ருக்கு எழுதி வைத்து விட்டு நீங்கள் நிம்மதி
யாக இருங்கள். நானே அந்த உயிலில் சாட்சிக்
கையெழுத்து போடுகிறேன்''.



வைகுந்தன் சிறிது நேரம் தன் மனைவியின்
முகத்தையே பார்த்தார். பிறகு நிம்மதியாக
மூச்சு விட்டுக்கொண்டு, ''நான் இராப் பகலாக
இதையே யோசித்துக் கொண்டிருக்கிறேன்.
மன நிம்மதியுடன் பகவான் நாமத்தை
நினைக்கக் கூட என்னால் முடியவில்லை. ஆனால்
இந்த விஷயத்தை நீ ஒப்புக் கொள்வாயா?''
என்று கேட்டுவிட்டு, வைகுந்தன் ஓய்ந்துபோய்
ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டார். பவானி
யின் உள்ளம் விண்டது. மரணத் தறுவாயில்
இருக்கும் தன் கணவனின் மார்பின் மீது
குனிந்து கண்ணீருடன் தழுதழுத்த குரலில்
''அப்படியே செய்யுங்கள். நான் சாட்சிக்
கையெழுத்து இடுகிறேன். உங்களைத் தொட்டுக்
கூறுகிறேன். நான் இதைச் செய்தே தீரு
வேன், எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்.
நீங்கள் நிம்மதியாக சொஸ்தமடைந்தால்
அதுவே போதும். இந்தச் சமயத்தில் உங்கள்
மனத்தில் எவ்விதக் கவலையோ, பயமோ
இருக்கக்கூடாது!'' என்றாள் பவானி.



சிறிது நேரம் பேசாமல் பவானியின் முகத்
தையே பார்த்துக் கொண்டிருந்தார் வைகுந்
தன். பிறகு மெல்லக் கேட்டார் : ''அப்படி
யானால் விநோதன் என்ன ஆவது?''

அடுத்த கணமே இதற்குப் பதில் கூறினாள்
பவானி. ''அவனைப் பற்றி நீங்கள் கவலைப்
படாதீர்கள், அவன் படித்தவன், அவன்
வழியை அவன் பார்த்துக் கொள்வான். அத்
துடன் அவன் எவ்வளவுதான் கெட்டுச் சீரழிந்
தவனாக இருந்தாலும் கோகுலன் அவனைக்
கைவிட மாட்டான். தன் தம்பியை அவன்
பார்த்துக் கொள்வான்!''

வைகுந்தன் மேற்கொண்டு ஒன்றும் பேச
வில்லை. திருப்தியுடன் ஒரு பெருமூச் செறிந்
தார். அதிலிருந்து அவர் மனத்திலிருந்த
சுமை இறங்கிவிட்டது என்பது விளங்கியது.
அவர் புரண்டு படுத்தார். பவானி கற்சிலை
போல் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.
ஆழ்ந்த ரோஷத்தாலும், துக்கத்தாலும் அவள்
இரு கண்களிலும் கண்ணீர் பொங்கி வழிந்தது.
தன் வயிற்றில் பிறந்த பிள்ளை பற்றித் தன்
கணவனால் நம்பமுடியவில்லை. அவனைப்
பொறுப்பற்ற உதவாக்கரை என்று எண்ணி
மரணத் தறுவாயில் மகனுக்குள்ள உரிமையி
னின்றும் அவனை வஞ்சித்துவிட்டார். இந்தத்
துக்கம் அவள் உள்ளத்தை எவ்வாறு துன்
புறுத்தும் என்பதைப் பற்றிக்கூட அவர்
நினைத்துப் பார்க்கவில்லை. விநோதன் நல்லவ
னாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அவள்
அவனுடைய தாயல்லவா? தன்னுடைய அந்த
துரதிருஷ்டம் வாய்ந்த மகனின் எதிர்காலம்
எவ்வளவு இருள் சூழ்ந்ததாக இருக்கிறது,
என்பதை அவள் உணர்ந்தபோது அவளுடைய
தாயுள்ளம் துடிதுடித்துக் கதறியது. பின்னால்
திரும்பி அடைக்கலம் என்று புகலும் வழி
இல்லை. மரணத் தறுவாயில் உள்ள கணவனின்
திருப்திக்காக தான் பெற்ற பிள்ளைக்குத்
தானே நாசத்தின் பாதையைச் சுட்டிக் காட்டி
விட்ட பிறகு வேறு யார் வந்து அவன் நிலை
மையை அறிந்து அவனைக் காப்பாற்றப் போகி
றார்கள்?

அன்றைய தினமே பிற்பகல் வக்கீலை
அழைத்து வந்து உத்தேசித்தபடி உயில் எழுதி
முடித்தார்கள். வைகுந்தன் தன்னுடைய
சகல சொத்துக்களையும் தன் மூத்த மகன்
கோகுலன் பெயருக்கு எழுதி வைத்துவிட்டார்.
சாட்சிக் கையெழுத்திடும் போது பவானியின்
கை நடுங்கியது. தாய்ப் பாசம் எங்கோ
ஒளிந்து—இன்று அவள் கையைப் பல தடவை
தடுத்தது ; ஆனால் அவளை முடிவாகத் தடுக்க
முடியவில்லை. தன் கணவனின் பாத கமலங்
களை மனத்தகத்தே இருத்தி எப்படியோ
கோணிக் குளறி அவள் கையெழுத்தை உயிலில்
போட்டு விட்டாள்.

விநோதனுக்கு இதைப் பற்றிய தகவல்
ஒன்றும் தெரியாது. அந்த நேரத்தில் அவன்
கல்கத்தாவில் படுமோசமான சூழ்நிலை உள்ள
ஒரு தெருவில், வெறுக்கத் தக்க காலிக் கயவர்
களின் கோஷ்டியில், குடி போதையில், மயங்கிக்
கிடந்தான். அவனை அழைத்துச் செல்வதற்
காக, வீட்டிலிருந்து வந்திருந்தனர் இரண்டு
ஊழியர்கள் கல்கத்தாவிற்கு. அவர்கள் இரண்டு
தினங்கள் விநோதன் இருப்பிடத்தில் தங்கி
அவன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்
தனர். அவன் வருவதாக இல்லை. என்ன செய்வ
தென்று புரியாமல் திரும்பிவிட்டனர். வைகுந்
தனிடம் இந்தச் செய்தியைச் சொல்ல
யாருக்கும் தைரியம் வரவில்லை. அவரும்
இதைப் பற்றி யாரிடமும் எதுவும் கேட்க
வில்லை. ஆயினும் மகன் விஷயம் அவர்
காதுக்கு எட்டாமல் இல்லை.

இதன் பிறகு இரண்டு தினங்கள் எப்ப
டியோ கழிந்தன. அன்று காலையிலிருந்தே
வைகுந்தனுக்கு சுவாசம் இழுக்க ஆரம்பித்து
விட்டது. பகல் பூராவும் மூர்ச்சையாகக்
கிடந்தார். பிறகு பிரக்ஞை வந்தது. பவானி
தலைமாட்டிலும், கோகுலன் கால்மாட்டிலும்
அமர்ந்திருந்தனர். நினைவிருக்கும்போது
அவர் கோகுலனை ஜாடை காட்டி அருகே
அழைத்து, தீனக்குரலில் ''விநோதனுக்குச்
செய்தி எட்டவில்லை கோகுல், தெரிந்திருந்
தால் வந்திருப்பான்'' என்றார். இதைக்
கூறும்போது அவர் கண்ணீர் பெருகிவிட்டது.
சில தினங்களாக அவர் விநோதனின் பெய
ரையே எடுக்கவில்லை. கடைசி நேரத்தில்
திடீரென்று கணவன் வாயினின்றும் மகனின்
பெயரைக் கேட்டதும், வேதனையினாலும்
வெறுப்பினாலும் பவானியின் உள்ளம்
கொதித்தது. ஆனால் அவள் ஒன்றும் பேச
வில்லை. மௌனமாகவே அமர்ந்திருந்தாள்.

கோகுலன் தந்தையின் கண்ணீரைத்
துடைத்தான். அப்போது அவர் சொன்னார் :
''கோகுல் அவனை நான் சாகுமுன் கண்களால்
பார்க்க முடியவில்லை. ஆனாலும் அவனை நான்
ஆசிர்வதித்து விட்டுப் போனேன் என்று
அவனிடம் சொல்லு. நிச்சயம் ஒருநாள்
அவன் திருந்தி விடுவான். இந்தத் தாயின்
வயிற்றில் பிறந்த அவன் என்றைக்குமே
இவ்வாறு இருக்க மாட்டான். இதைக் கேள்,
கோகுல், அவன் திருந்தி வரும் போது உன்
தம்பியை விட்டு விடாதே! இதோ இருக்
கிறாளே உன் தாய்! இம்மாதிரித் தாய் கிடைக்க
தவம் செய்ய வேண்டும்! தெரிந்ததா?''
என்றார்.

கோகுலன் சிறு குழந்தை போல் தேம்பித்
தேம்பி அழலானான். ''அப்பா! என் தாய்
என் தாயாகவே இருப்பாள். நீங்கள் உங்கள்
சொத்தில் பாதியை விநோதனுக்குக் கொடுத்து
விட்டுச் செல்லுங்கள்'' என்றான்.

வைகுந்தன் சொன்னார் : "இல்லை கோகுல்!
நான் மிகுந்த பிரயாசைப்பட்டு இந்தச் சொத்
துக்களைச் சம்பாதித்திருக்கிறேன். இது நாச
மாவதை நான் பரலோகத்தில் இருந்தாலும்
என்னால் பார்த்துச் சகிக்க முடியாது'' என்று
கூறிவிட்டு நெடு நேரம் தன் மகனின் முகத்
தையே பார்த்துக் கொண்டிருந்தார். மனத்
திற்குள் தன் மகனுக்கு, தன் கடைசி ஆசிகளை
வழங்கினாரோ என்னவோ, பிறகு மெல்லக்
கண்களை மூடிக் கொண்டார். கோகுலன் அவர்
பாதங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு
கதறி அழுதான். வைகுந்தன் மெல்லக் கண்
களைத் திறந்து மனைவியின் பக்கம் பார்த்து
''பவானி! இதோ பார், இந்தக் குழந்தையை
உன்னிடம் ஒப்படைக்கிறேன் ; இனி விடை
பெற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

பிறகு அவர் எதுவும் பேசவில்லை. மறு
நாள் சூரியோதய காலத்தில் அவர் ஆவி
பிரிந்து விட்டது. அப்போது ஊரிலுள்ளவர்
கள் ஏதேதோ பேசிக் கொண்டனர். வைகுந்
தன் சிறந்த வியாபாரி; ஆனால் கள்ளங்கபட
மற்றவர். அவர் தாழ்மையான நிலையிலிருந்து
முன்னுக்கு வந்தவர். ஆகையால் அவரது
நண்பர்கள் அவருடைய நற்குணங்களை வான
ளாவப் புகழ்ந்தனர். அவ்வாறே அவரது
விரோதிகள் அவரை நிந்திப்பதில் சற்றும் பின்
வாங்கவில்லை. அவர்கள் அவரைக் கஞ்சன்
என்றும் ''வாய் வாழைப்பழம், கை கருணைக்
கிழங்கு'' என்றும் தூற்றி திருப்தியடைந்த
னர். அவர்கள் கூட அவருடைய நேர்மையைப்
பற்றிச் சற்றும் குறைகூறவில்லை. எப்படி
வேண்டுமானாலும் இருக்கட்டும், அவர் பிறர்
பொருளுக்கு ஆசைப்பட்டவரல்ல. யாரையும்
அவர் ஏமாற்றியதில்லை. தனக்கென்று உள்
ளதை அவர் வாங்கிக் கொள்வாரே தவிர
அதிகம் யாரிடமும் வாங்கியவரல்ல என்றனர்.
உண்மையில் வியாபாரத்தில் அவர் கையாண்ட
நியாய முறைகளையே தன் மகனுக்கும் கற்
பித்துச் சென்றார்.



## 3

விநோதனுக்குத் தந்தையின் சொத்தில்
பாகம் கிடைக்கவில்லை என்ற செய்தி வெளியே
பரவியதுதான் தாமதம், அந்தத் தெருவி
லிருந்த நாலைந்து பேர் தங்கள் கைக்காசைச்
செலவழித்துக் கொண்டு கல்கத்தா வந்தார்
கள். விநோதனைக் கேடிப் பிடித்தார்கள்.
அப்போது விவரம் புரிந்து விட்டது. அவர்கள்
ஊருக்குத் திரும்பி வந்து விநோதனைப் பற்றி
அதாவது அவன் என்ன செய்கிறான்? எங்கே
இருக்கிறான் என்ற செய்திகளை எல்லாம் அம்ப
லப்படுத்தினார்கள். இதில் ஆச்சரியம் என்ன
வென்றால் கோகுலன் இந்தப் பெரிய மனிதர்
கள் செய்த உதவியைச் சட்டை செய்யவே
இல்லை. இதைக் கேட்டுக் கோபம் கொண்டு
அவர்களை ஏசி, ''இந்த அயோக்கியர்கள்
பொறாமையினால் இந்த மாதிரி கெட்ட வதந்தி
களைக் கிளப்பிவிடுகிறார்கள்'' என்றான்.

கிழவர் பானர்ஜி (பள்ளி உபாத்தியாயர்)
தடியை ஊன்றிக் கொண்டே மெள்ள மெள்ள
வந்து சேர்ந்தார். வந்ததுமே கோவென்று
அழ ஆரம்பித்து விட்டார். மிகுந்த சிரமத்
தின் பேரில் அவருடைய அழுகையை நிறுத்திய
போது அவர் சொன்னார் : ''கோகுல் இன்று
மூன்று நாட்கள் ஆகின்றன. எங்கள் ஹாரா
னுக்கு சோறு தண்ணீர் இல்லை. தூக்கமில்லை.
கல்கத்தாவிலுள்ள ஒவ்வொரு சந்து பொந்து
களிலும் புகுந்து தேடிவிட்டான். இருபது,
முப்பது ரூபாய் செலவாயிற்று. முடிவில்
அந்தப் பையன் (விநோதன்) எங்கே இருக்
கிறான் என்பதைக் கண்டுபிடித்து விட்டான்.
அவன் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதென்
பது அவ்வளவு சுலபமான காரியமா என்ன?
யாராலும் முடியாது!''

கோகுலன் சற்று ஆத்திரத்துடன் ''வாத்தி
யார் ஐயா! பணச் செலவு செய்யும்படி
நான் யாரிடமும் சொல்லவில்லையே!''
என்றான்.

பானர்ஜிக்கு வியப்பாக இருந்தது.
''அதென்ன அப்படிப் பேசுகிறாய்? நாங்கள்
உங்கள் மனிதரல்லவா! மற்றவர்கள் பேசா
மல் இருக்கலாம். நாங்கள் அப்படி இருக்க
முடியுமா?'' என்றார்.

''சரி போய் வாருங்கள். சென்று உங்கள்
வேலையைப் பாருங்கள்!'' இப்படிக் கூறிவிட்டு
கோகுலன் அவருக்குக்கொஞ்சமும் மரியாதை
கொடுக்காமல் மறுபக்கம் சென்று விட்டான்.

ஒவ்வொரு நாளாக, பல தினங்கள் சென்
றன. ஆனால் விநோதன் வரவில்லை. அதனால்
சாந்தமான குணம் உள்ள கோகுலன் கடு
கடுப்பும் ஆத்திரமும் அடைந்தான்.

பவானியை இப்போது பார்த்தால் அடை
யாளமே கண்டு கொள்ள முடியவில்லை. இந்தச்
சில தினங்களுக்குள் அப்படி மாறிவிட்டாள்.
ஒருவருடனும் பேசாமல் தலை குனிந்தபடி
உத்திரகிரியைகளுக்கு வேண்டிய காரியங்களைக்
கவனித்துக் கொண்டிருந்தாள், மகனின் பெய
ரைக்கூட அவள் எடுப்பதில்லை.

அந்த வருஷம் பூராவும் ஏதாவது சாக்குப்
போக்குச் சொல்லி விநோதன் அண்ணனிடம்
இருந்து பணம் வாங்கிக் கொண்டிருந்தான்.
கோகுலனின் மனைவி மனோரமா ஆரம்பத்தி
லேயே இதன் காரணத்தைத் தெரிந்து
கொண்டுவிட்டாள். அதனால் அடிக்கடி கணவ
னிடம் இது பற்றி வாதிப்பாள். ஆனால்
கோகுலன் இவைகளைதையும் பொருட்படுத்து
வதே இல்லை. அன்று காலையில் மனோ இதைப்
பற்றிய பேச்சை எடுத்த போது கோகுலன்
மிகுந்த சீற்றத்துடன் ''விநோதன் இவள்
அப்பன் வீட்டுப் பணத்தைப் பாழாக்கவில்லை.

அப்படிச் ''செய்யும்போது இவள் வந்து என்னிடம் சொல்லிக் கொள்ளட்டும்'' என்று கூறிவிட்டு மடமடவென்று தன் தாயின் அறையின் முன் வந்து நின்றான். பிறகு, உரக்கச் சத்தமிட்டு ''பெண்ணின் பேச்சைக் கேட்டு மகா பலசாலியான இராவணனே அழிந்துவிட்டான் என்றால், நாமெல்லாம் எம்மாத்திரம்? நீ அப்பாவின் காதில் குசுகுசுவென்று தலையணை மந்திரம் ஓதி உயில் எழுத வைத்து விட்டாய். இதனால் எனக்கு நீ பெருந் தீங்கை விளைவித்து விட்டாய் அம்மா'' என்றான்.

பவானி திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாளோ இல்லையோ, கோகுலன் கையையும் முகத்தையும்ஆட்டி தன்கோபத்தைக் காட்டிக்கூறினான்: ''அம்மா நீ மிகவும் நல்லவள் என்று நினைத்திருந்தேன். இப்போதுதான் தெரிகிறது நீ சாமான்யப்பட்டவள் அல்ல என்பது. பெண்கள் இனமே இப்படித்தான்'' என்று கூறி இன்னும் பல உவமைகளைக் கூறிவிட்டு, வந்தது போலவே வேகமாகச் சென்றுவிட்டான். ஒன்று அவன் மளிகைக் கடைக்காரன். இரண்டாவது முட்டாளுங் கூட; கோகுல் இப்படித்தான் முட்டாள் தனமாக ஏதாவது பேசிக்கொண்டிருப்பான் என்பதும், அதுவும் அவனுக்குக் கோபம் வந்து விட்டால் அவன் என்ன பேசுவது என்பதே புரியாமல் நாக்கில் நரம்பில்லாமல் பேசி விடுவான் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்று அவனுடைய வார்த்தைகள் எல்லை கடந்து விட்டன என்பதை எல்லோருமே உணர்ந்தனர்.

அன்று பிற்பகல் உபாத்தியாயர் பானர்ஜி தூங்கி எழுந்து முகம் கழுவிக் கொண்டிருந்தபோது திடீரென்று கோகுலன் அங்கே வந்துவிட்டான். அன்று அவன் தன்னை அவமானப்படுத்தி இருந்தாலும் அவன் பெரிய மனிதன் ஆயிற்றே என்று, கிழவரான பானர்ஜி சட்டென்று எழுந்து வந்தார். கோகுலன் மூன்று பத்து ரூபாய் நோட்டுக்களை உபாத்தியாயரின் காலடியில் வைத்து வாடிய முகத்துடன் வணக்கமாக ''மாஸ்டர் அவர்களே! அன்று ஹாரான் செலவழித்த பணத்தைக் கொடுப்பதற்காக வந்தேன்'' என்றான்.

பானர்ஜி நோட்டுக்களை எடுத்துக்கொண்டே ''இருக்கட்டும்! இருக்கட்டும் கோகுல்! இதற்கென்ன இப்போது அவசரம் வந்தது? ஏதோ இன்று வரை சாப்பிடுவது உங்கள் சோற்றைத்தான். கட்டி இருக்கும் துணி கூட உங்களுடையது'' என்றார்.

கோகுலன் கண்களில் கண்ணீர் துளிர்த்துவிட்டது. அவன் துப்பட்டாவினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, ''மாஸ்டர்ஜி என்ன சொல்வேன்! விநோதன் இன்னும் வரவில்லையே! ஹாராளை அழைத்துக் கொண்டு இன்று நான் கல்கத்தா போகப் போகிறேன்'' என்றான்.

பானர்ஜி தீவிரமாகத் தலையையும், உடம்பையும் ஆட்டிக் கொண்டு ''ராம! ராமா! அந்த வார்த்தையை வாயால் சொல்லாதே. அப்பா! என் ஹாரான் இருக்கும்போது நீ அப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் போவதா? வேண்டாம் வேண்டாம்! அது சரியல்ல —நாளைக்கே அவனை நான் அனுப்புகிறேன்!'' என்றார்.



கோகுலன் தலையை ஆட்டி விட்டு, ''இல்லை மாஸ்டர்! நான் போகாமல் காரியம் நடக்காது. அவன் ரோஷக்காரன். உயில் விஷயத்தைக் கேள்விப்பட்டு, அதனால் ஏற்பட்ட மனச்சங்கடத்தால்தான் அவன் வரவில்லை. என் வாயினால் சகல விஷயங்களையும் கேட்டால் அன்றி வேறு யார் சொல்வதையும் அவன் நம்பமாட்டான். அப்பாவும், அம்மாவும் சேர்ந்து என்னை இப்படி நாசம் செய்துவிட்டால் நான் என்ன செய்வேன்?'' என்றான்.




ஐயலால் பானர்ஜிக்கு ரகசியமாக கோகுலன் பணம் கொடுத்துவிட்டு வந்தான் என்ற வதந்தி தெருவெங்கும் பரவியபோது, அவனுடைய முட்டாள்தனத்தை பலர் பலவாறு பேசலாயினர். விநோதனைப் பற்றி அவன் மிகுந்த கவலைகொண்டுள்ளான் என்றும், ஆனால் விநோதன் இவன் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவில்லை என்பது போன்ற அப்பிராயமும் வீட்டில் உள்ளவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதை உணர்ந்த கோகுலன் மிகுந்த லஜ்ஜையுடன் கவலையும் அடைந்தான்.

இந்தத் தடவையோடு சேர்த்து இதுவரை வீட்டு வண்டி பத்து முறை சஞ்சடா ஸ்டேஷனுக்குச் சென்று திரும்பி வந்தது. கோகுலன் கோச்வானிடம் சலிப்புடன், ''ஏண்டாப்பா கல்கத்தாவிலிருந்து இனிமேல் ரயிலே வராது என்று நினைத்துக்கொண்டு நீ, வீட்டுக்குத் திரும்பிவிட்டாயாக்கும்? சரி போ, போய்த் தூங்கு'' என்றான்.

கோச் வண்டி ஓட்டுபவன் மிகுந்த தாழ்மையுடன் ''இன்னும் இரண்டு வண்டிகள் வர வேண்டும். நேற்றிலிருந்து குதிரை தீனி இல்லாமல் கிடக்கிறதே பாபு! அதனால் திரும்பி வந்தேன்!'' என்றான்.

கோகுலன் சட்டென்று கோபத்துடன் அவனை அதட்டி ''சின்ன பாபு, பூரியும் மிட்டாயும் சாப்பிட்டு விட்டு வருகிறார், உன்னுடைய ராஜா வீட்டுக் குதிரை பட்டினியால் செத்துவிடுமாக்கும்! போடா! போ! உடனே வண்டியை ஓட்டிக் கொண்டு போ!'' என்று இரைந்தான்.

கோச்வானுக்கு எஜமானனின் மனோபாவம் புரியவில்லை! அவன் பயந்து கொண்டே சலாம் செய்துவிட்டுச் செல்லலானான்.

ரஸிக சக்கரவர்த்தி நெடுநாளைய ஊழியர். வீட்டில் உள்ளவர்கள் எல்லோருமே அவரிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். அவர் சொன்னார் : ''சின்னபாபு வருவதானால் வாடகை வண்டியில் கூட வந்துவிடுவார். அதிருக்கட்டும், பெரிய பாபு! நீங்கள் எதற்காக அவரைப் பற்றி இவ்வளவு கவலைப் படுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

இவர் அருகே நின்று கொண்டிருந்ததைக் கோகுலன் கவனிக்கவில்லை. ஆகையால் அவன் சற்றுக்கடுகடுப்புடன் ''அந்த உருப்படாப் பயலுக்காகவா நான் கவலைப்படுகிறேன்? சக்ரவர்த்தி மகாசயரே என்ன சொல்கிறீர் நீர்? வீட்டிலிருக்கும் பெண் பிள்ளைகள் இராப்பகல் இம்மாதிரி அழுது அங்கலாய்த்துக் கொண்டிருக்காவிட்டால், அந்தப் பயலை இங்கே நுழையவிடுவேனா? எனக்குக் கோபம் வந்து விட்டால்—அப்புறம் தெரியுமல்லவா— ஆமாம்!'' என்றான்.

ரஸிகருக்கு எல்லாம் தெரியும். விநோதனைப் பார்க்காததால் எந்தப் பெண்பிள்ளையும் கண்ணீர் வடிக்கவில்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் அதைப் பற்றி அவர் மேற்கொண்டு விவாதிக்கவில்லை.

தந்தையின் காரியங்களை விதரணையாகச் செய்ய வேண்டும். கோகுலன் அதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். ஆயினும் அவன் செவிகள் வண்டிச் சக்கரங்களின் ஓசையை கவனித்துக் கொண்டுதான் இருந்தன. இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு ஏதோ வண்டி வரும் சத்தம் கேட்டு, ஒரு வேலைக்காரனை அழைத்து ரஸிக சக்ரவர்த்தியின் காதில் விழும்படி சொன்னான் : ''அடேய்! அந்தப் பக்கம் போய் பார்த்து விட்டு வா. அது நம்முடைய வண்டி போல் இருக்கிறதே? அவன் அந்தக் குதிரைகளின் உயிரை வாங்கிவிடுவான் போலிருந்தது. கோபத்தில் ஏதோ சொல்லிவிட்டேன். அதை நிஜமென்று எண்ணி அவன் மறுபடியும் ஸ்டேஷனுக்கு வண்டி கொண்டுபோனானா? அருமைத் தம்பிக்காக வண்டி அனுப்ப வேண்டியிருக்கிறது. அம்மா கோபித்துக் கொள்ளப் போகிறாள் என்று குதிரைகளைப் பழி வாங்க வேண்டியிருக்கிறது.''



ரஸிகர் யாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். ஆனால் நல்லது கெட்டது எதுவும் கூறவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி காலியாகத் திரும்பி வந்தது. பிறகு கொட்டடிக்குச் சென்றது. சின்ன பாபு வரவில்லை என்ற செய்தியை வந்து தெரிவித்தான் வேலைக்காரன். அப்போது ரஸிகரும் அங்கு இருந்தார். கோகுலன் அவரைப் பார்த்து ஒரு வறட்டுச் சிரிப்புடன ''அப்படியானால் நான் துக்கம் தாங்காமல் உயிரை விட வேண்டியதுதான். சரி, போ! போய் அம்மாவிடம் பி.ஏ. பாஸ் செய்த அவன் பிள்ளையின் லட்சணத்தைக் கூறிவிட்டு வா! போ! இனி நாளை மறுநாள் அவன் வரட்டும், பார்க்கிறேன். உள்ளே கால் எடுத்து வைக்க விட்டேனானால் என் பெயர் கோகுலன் மஜூம்தார் அல்ல. ஒரு தரம் அவன் மீது எனக்குக் கோபம் வந்துவிட்டால், பிறகு பிரம்மா, விஷ்ணு, மகேச்வரன் வந்து அவனுக்காகச் சிபாரிசு செய்தாலும் அவன் பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டேன். இப்போதே சொல்லி வைக்கிறேன். ரஸிக பாபு! நீங்கள் அம்மாவிடம் சொல்லிவிடுங்கள். உலகம் மாறினாலும் மாறும், இந்த கோகுல் மஜூம்தார் பேச்சு மாறமாட்டான் என்று சொல்லுங்கள். சமயத்திற்கு வந்திருந்தால் அவனுக்கு ஏதாவது கிடைத்திருக்கும். இனி சல்லிக் காசு கிடைக்காது. அவனை இந்த வீட்டிலேயே நுழைய விட மாட்டேன்!'' இதைக் கூறிவிட்டு அவன் வேகமாக உள்ளே சென்று விட்டான்.

அன்று கோகுலன் இருட்டு முன்னே வந்து கட்டிலில் படுத்துவிட்டான், யார் மீது கோபித்துக் கொண்டு இப்படிச் செய்தான் என்பது வீட்டிலுள்ள பெண்களுக்குப் புரியவில்லை. வேலைக்காரி பாலை எடுத்துக் கொண்டு வந்தபோது அவள் மீது சீறி விழுந்தான். கடை குமாஸ்தாவிடம் சிரார்த்த தினத்தன்று வரும் புரோகிதர்களுக்கு என்ன கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது பற்றி பட்டியல் தயாரிக்கச் சொல்லி இருந்தான். குமாஸ்தா வீட்டுக்குள் வந்து அதைப் பற்றிப் பேச்சை எடுத்ததுமே கோகுலன் எழுந்திருந்து அவர் கையிலிருந்த காகிதத்தை வாங்கி அதைச் சுக்குச் சுக்காய் கிழித்துப் போட்டான். ''ராஜாங்கமாக தட்சிணை கொடுத்தனுப்ப அப்பா ஒன்றும் பெரிய ஜமீனை வைத்து விட்டுப்போக வில்லை. போ! போ! இந்த மாதிரி பெரிய தனமெல்லாம் இங்கே நடக்காது'' என்றான்.

பவானி இதைக் கேள்விப்பட்டதும் அவள் கோகுலன் அறைக்கு வெளியே வந்து அமர்ந்து அவனை அன்பு தவழும் இனிய குரலில் அழைத்து, ''ஏண்டா கோகுல்! என்ன சமாச்சாரம், உனக்கு உடம்பு சரியாக இல்லையோ?'' என்று கேட்டாள்.

கோகுலன் படுத்தபடியே ''நன்றாகத் தானே இருக்கிறேன்?'' என்றான்.

''பின்னே நீ ஏன் ஒன்றும் சாப்பிடவில்லை? சீக்கிரமாகவே வந்து படுத்துவிட்டாயே?''

''என்னவோ படுத்தேன்''

பவானி சிறிது நிதானித்து விட்டு மறுபடியும் கேட்டாள் : ''புரோகிதர்களுக்கும், வைதீகர்களுக்கும் தட்சிணை கொடுக்கத் தயாரித்த பட்டியலை ஏன் கிழித்தெறிந்துவிட்டாய்? அழைப்பு அனுப்ப வேண்டியவர்களுக்கு நாளைக்கு அனுப்பினால்தானே போய்ச் சேரும்? எப்போது அனுப்புவது?''

கோகுலன் முன் போலவே பதில் சொன்னான் : அனுப்பினாலும் சரி, அனுப்பாவிட்டாலும் சரி!

பவானி சற்று திடுக்கிட்டவளாய் கோபத்துடன் சொன்னாள் : ''இங்கே பார் கோகுல்! இந்த மாதிரி சமயத்தில் அதைரியப்பட்டால் காரியம் நடக்காது. என்ன நடந்ததோ, அதை என்னிடம் விவரமாகச் சொல். நான் எல்லாவற்றையும் சரி செய்து விடுகிறேன்''.

தாய் இதைக் கூறியதும், கோகுலன் தன் கம்பிளிப்படுக்கையினின்றும் கண்களைக்கசக்கிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான். எப்போது யாரிடம் எப்படிப் போக வேண்டும் என்பது பற்றி அவனுக்கு அவ்வளவு அனுபவம் இல்லை. அவன் கடுகடுத்த குரலில் சொன்னான். ''அம்மா! உன் யோசனையைக் கேட்டு அதன்படி நடப்பவர் போய்விட்டார். அப்பா உன் அபிப்பிராயப்படி நடந்தார். அதற்காக நானும் நீ சொல்கிறபடிதான் நடக்க வேண்டுமா? ஏதோ பத்துப் பிராமணர்களுக்குச் சோறு போட்டுவிட்டு என் தீட்டைக் கழித்துக் கொள்கிறேன். அதிக ஆடம்பரம் செய்ய எனக்கு விருப்பமில்லை!'' இதைக் கூறிவிட்டு முகத்தைச் சுவர்ப் பக்கமாகத் திருப்பிக் கொண்டு படுத்துவிட்டார்.

பவானி சாந்தமாகச் சொன்னாள் :''ராம! ராமா! கோகுல்! அவர் இப்போது சொர்க்கத்தில் இருக்கிறார்! அவரைப் பற்றி நீ இப்படிப் பேசலாமா?''

# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.




கோகுலன் பதில் பேசவில்லை. பவானி சற்று நேரம் சும்மா இருந்து விட்டு மறுபடியும் சொன்னாள்: ''கோகுல்! நீ அந்த மாதிரிச் செய்தால் ஊரில் மக்கள் என்ன சொல்வார்கள் என்பதை யோசித்துப் பார்த்தாயா? யார் யார் எந்த எந்த நிலையில் இருக்கிறார்களோ அந்தந்த நிலைக்குத் தக்கபடிதான் செய்ய வேண்டும்! இல்லை என்றால் அபவாதம்தான் ஏற்படும்!''

கோகுலன் படுத்தபடியே பதில் சொன்னான் : ''எவன் எது வேண்டுமானாலும் பேசட்டும்! எவனுக்கும் நான் கடமைப்பட்டவனல்ல. நான் யாரிடமும் அஞ்ச வேண்டியது அவசியமில்லை.

''அதிருக்கட்டும், அவருக்குத் திருப்தி ஏற்பட வேண்டாமா? அவர் ஆத்மா திருப்தியடையும்படி செய்ய வேண்டாமா?'' பவானி வேண்டுமென்றேதான் இவ்வாறு கூறினாள். எந்த வார்த்தையைச் சொன்னால் அது சட்டென்று கோகுலன் உள்ளத்தைத் தாக்கும் என்று தெரிந்தே அவ்வாறு சொன்னான். கோகுலனுக்குத் தந்தையிடம் எவ்வளவு மதிப்பும் பக்தியும் உண்டு என்பது அவளுக்குத் தெரியும்.

கோகுலன் எழுந்து உட்கார்ந்தான். அழுகை பொங்கும் குரலில் சொன்னான் : ''அம்மா! செலவைப் பற்றி நான் சற்றும் கவலைப்படவில்லை அம்மா! உனக்கு எவ்வளவு இஷ்டமோ செலவு பண்ணு. ஆனால் நாட்கள் நெருங்க நெருங்க பயத்தால் எனக்குக் கைகால் ஓடவில்லை. அம்மா! விநோதன் கோபித்துக் கொண்டு பாராமுகமாக இருக்கிறான். நீயே சொல்லேன், நான் ஒருவன் என்ன அம்மா செய்ய முடியும்?'' இதைக் கூறும் போதே கோகுலன் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான். பவானியினால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவளும் அழுது விட்டாள். நெடு நேரம் சும்மா இருந்துவிட்டு முடிவில் தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அழுகை நெஞ்சை அமுக்க, ''விநோதனுக்குத் தகவல் தெரியும் அல்லவா?'' என்று கேட்டாள்.

கோகுலன் உடனே சொன்னான் :''ஏன் அம்மா தெரியாது?''

அவனுக்கு யார் தகவல் கொடுத்தார்கள்? இந்தத் துக்கச் செய்தியை இந்த வீட்டிலிருந்து விநோதனுக்கு யார் போய்த் தெரிவித்தார்கள் என்பது அவனுக்கே தெரியும். பானர்ஜியின் மகன் ஹாரானைப் பற்றி அவனுக்கே சந்தேகம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் விநோதனுக்கு இந்த விஷயம் யாவும் தெரிந்துவிட்டது. வெட்கத்திற்கும் அவமானத்திற்கும் பயந்தே அவன் இங்கு வரவில்லை என்ற எண்ணம் அவன் மனத்தில் எப்படியோ ஏற்பட்டிருந்தது. அவன் தன் தாயின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான்: ''அம்மா! அப்பா இவ்வுலகில் இல்லை என்ற தகவல் என்னவோ அவனுக்குக் கிடைத்து விட்டது. அவனுக்குத் தெரியாமலா இருக்கும். என் உள்ளத்தில் ஜுவாலை எரிவதுபோல் அவன் உள்ளத்தில் எரியாதா? அவனுக்கு எல்லாம் தெரியும் அம்மா, எல்லாம் தெரியும்!''



சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு பவானி
ஏதோ பேச ஆரம்பித்தபோது அவள் குரலில்
அழுகையோ தயக்கமோ இல்லாதது கண்டு
கோகுலனுக்கு வியப்பாக இருந்தது. அவள்
குரலில் துக்கமே இருப்பதாகத் தெரியவில்லை.
அவள் சகஜமான குரலில் பேசினாள் :
''கோகுல்! இது உண்மையாக இருந்தால்,
அந்தத் தம்பிக்காக இனி நீ கவலைப்பட
வேண்டாம். நமது வம்சத்தில் வேறு பிள்ளை
இல்லை என்று எண்ணிக் கொள். கோபத்தின்
[illegible] இறந்து போன கந்தையின்
காரியத்துக்கு வராமலிருக்கும் ஒருவனிடம
நமக்கு எவ்வித சம்பந்தமும் வேண்டாம்.''

தாயின் இந்த வார்த்தைகளுக்கு என்ன
பதில் சொல்வதென்று கோகுலனுக்குப் புரிய
வில்லை. ஆகவே அவன் பேசாமல் இருந்தான்.
ஆனால் அவனுடைய மனைவி இப்போது பேசி
னாள் : கதவின் மறைவில் அமர்ந்து அவள்
எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.
அங்கிருந்தபடியே கணீரென்ற குரலில் சொன்
னாள் : ''அப்பா யோசிக்காமல் இவ்வளவு
பெரிய காரியத்தைச் செய்து விட்டுப் போக
வில்லை. அவர் அந்தர்யாமி போல் யாவர்
மனத்தையும் அறிவார். மூன்று நான்கு
நாட்கள் கல்கத்தாவில் தேடியும் அவரைக்
கண்டு பிடிக்க முடியாதபோது, அவர், மைத்து
னருடைய குணத்தை நன்றாகப்புரிந்துகொண்டு
விட்டார். அவரே தன் விருப்பப்படி சொத்
துக்கள் முழுவதையும் நமக்குத் தந்திருக்கிறார்.
இதில் நம்மீது பழி கூற என்ன இருக்கிறது?
நம்மை யாரும் குறைகூற முடியாது. நீங்க
ளாக இருப்பதால் ஏதோ தம்பி, என் தம்பி
என்று ஆதுரப்படுகிறீர்கள். வேறு ஒருவராக
இருந்தால் . . .'' அவள் வார்த்தை முடி
வடையாமல் நின்றது. வேறு ஒருவராக
இருந்தால் என்ன செய்திருப்பார்கள் என்
பதை வெளிப்படையாகக் கூற வேண்டியது
அனாவசியம் என்று நினைத்தாள் அந்த மரு
மகள்.



ஆனால் பவானிக்கு....தன் மாமனார்
இருந்தபோது மருமகள் இம்மாதிரி ஒரு
நாளும் பேசியதில்லை. அது மட்டுமல்ல, மாமி
யார் முன்னிலையில், கணவனிடம் பேசியது
கூடக் கிடையாது. இந்தச் சில நாட்களுக்குள்
மருமகள் இவ்வளவு தூரம் முன்னேறி இருப்
பது கண்டு பவானிக்கு ஒன்றுமே தோன்ற
வில்லை.

கோகுலனும் முதலில் சற்றுத் திகைத்
தான். அடுத்த கணம் திறந்திருந்த கதவின்
பக்கம் இடது கையினால் சுட்டிக் காட்டி,
பவானியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே,
வெறி பிடித்தவன் போல் கத்தினான் :
''அம்மா! கேட்டாயா? அந்த அற்ப புத்திக்
காரன் வீட்டுப் பெண் சொன்னதைக் கேட்
டாயா?'' என்றான்.

இதற்குப் பதில் மருமகள் இரைந்து கத்த
வில்லை. ஆனால் கணவனைப் பார்த்துச் சற்றுத்
திடமான குரலில்.''இந்தாருங்கள்! ஏதாவது
சொல்ல வேண்டுமானால் என்னைச் சொல்லுங்
கள். அப்பா, தாத்தாவை எல்லாம் இழுக்கா
தீர்கள். எங்க அப்பா, உங்க அப்பாவுக்கு
எவ்விதத்திலும் குறைந்தவரல்ல!''

பதில் கூறுவதற்காக கோகுலன் உதடுகள்
துடித்தன. ஆனால வாயினின்றும் வார்த்தை
வெளிவரவில்லை. கண்கள் இரண்டும் தீப்
பொறிகளைக் கக்கின. பவானி அதுவரையில்
பேசாமல் இருந்தாள். அப்போது இனிமையும்
வெறுப்பும் நிறைந்த குரலில், ''இந்தாடி
பெண்ணே! நீ இந்த விஷயங்களிலெல்லாம்
தலையிட வேண்டிய அவசியமில்லை. நீ போ,
நீ போய் உன் காரியத்தைக் கவனி'' என்றாள்.

உடனே மருமகள் பதிலளித்தாள் :''நான்
இன்று வரை எதுவும் பேசியதில்லை. ஏதோ
வேலைக்காரிபோல் இந்த வீட்டில் இராப்பகல்
உழைத்துச் சாகிறேன். இவர் மூச்சு விடாமல்
என் தம்பி, என் தம்பி அவன் எம்.ஏ. பாஸ்
செய்திருக்கிறான் பி.ஏ. பாஸ் செய்திருக்கிறான்
என்று பிதற்றிக் கொண்டு தானிருந்தார். ஆனால்
அந்தத் தம்பி ஒரு நாளாவது வீட்டுக்கு வந்து
இவரிடம் முகம் கொடுத்துப் பேசியதுண்டா?
இவருக்கு மானம்-வெட்கம் ஏதாவது இருந்
தால், பிறர் தலையிட்டுப் பேச வேண்டிய
அவசியமே ஏற்பட்டிருக்காது'' என்று கூறி
விட்டு, ஒரு கணம் கூட அங்கு நிற்காமல்
திம் திம் என்று அடி வைத்து, வேகமாக
நடந்து தனது கோபத்தை வெளியிட்டபடி
அங்கிருந்து அகன்றாள். இவ்வளவு நாட்க
ளுக்குப் பிறகு அன்று அவளுடைய பேச்சைக்
கேட்டு பவானி பிரமித்துத் திக்குமுக்காடிப்
போனாள். தன் மருமகளை இவ்வளவு நாட்கள்
வரை அவள் புரிந்து கொள்ளவில்லை. இன்று
அவளைப் புரிந்து கொண்டபோது அவளுக்கு
ஏற்பட்ட துக்கமும் அவமானமும் சொல்லி
முடியாது.

மருமகள் அத்துடன் அதை விட்டுச்சென்று
விடவில்லை. வராந்தாவுக்கு வந்து நின்று
கொண்டாள். எல்லோர் காதிலும் நன்றாகக்
கேட்கும்படிக் கூறலானாள். 'பணத்தைச் சம்பா
தித்துக் குவிக்க அண்ணாதான் போக வேண்டி
இருந்தது. நானும் பார்த்திருக்கிறேன்.
எங்கள் மாமா பிள்ளைகளும் பி.ஏ., எம்.ஏ.,
பாஸ் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியா?
கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்
என்றால், பிறத்தியாருக்கு ஆத்திரம் பொத்துக்
கொண்டு வருகிறது. கசப்பாக வேண்டுமானா
லும் இருக்கட்டும். என் பிள்ளை குட்டிகள்
நாளைக்கு என்ன ஆகும்? என் பணம் பாழாகும்
போது நான் அதைப் பார்த்துக் கொண்டு
சும்மா இருக்க முடியுமா? பித்துக்குளி அண்ணா
அகப்பட்டுக் கொண்டார் என்றால் முடிந்த
வரை அவர் தலையில் மிளகாய் அரைத்து
விடுவதா? நன்றாக ஏமாற்றிப் பணம் தண்டட்
டும். எனக்கென்ன? இவர் பிள்ளை குட்டிகள்
தான் தெருவில் நிற்கப் போகின்றன!'' இவ்
வாறு கூறி முடித்துவிட்டு மருமகள் அவ்விடம்
விட்டகன்றாள்.

கோகுலன் அவ்விடம் துடிதுடித்து எழுந்
தான். மனைவி அங்கு இல்லை என்பது அவ
னுக்குத் தெரியாது. அவன் ஆத்திரத்துடன்
கூச்சலிட்டான். 'ஏண்டி நானா பித்துக்குளி.
எந்தக் கழுதை மகன் சொன்னவன்? இந்தச்
சொத்துக்களைச் சம்பாதித்தது யார்? நானா,
விநோதனா? ஏண்டி, என் கண்ணில் மண்ணைத்
தூவி விட்டு என்னிடம் பணம் வாங்குவதற்கு
அவன் தாத்தா-பாட்டன் வந்தாலும் முடி
யாது. நான் பெரியவன். அவன் சின்னவன்.
ஏதோ நாலு பரிட்சை பாஸ் செய்துவிட்டால்
ஆகிவிட்டதா? என்னாலும் அந்தப் பரிட்சை
பாஸ் பண்ண முடியும். தெரியுமா உனக்கு!
நானா பித்துக்குளி? வீட்டில் வந்து நுழையட்
டும். நர்வானை விட்டுக் கழுத்தைப் பிடித்து
வெளியே தள்ளச் சொல்கிறேன் பார்! பார்க்
கிறேன். யார் அவனை உள்ளே நுழைய விடு
கிறார்கள் என்பதை!'' இன்னும் ஏதேதோ
வாயில் வந்தபடி பேசினான். பவானி ஒன்றும்
பேசவில்லை. முன்போலவே மௌனமாக
இருந்தாள். வெகு நேரம் ஒன்றும் தோன்றா
மல் கற்சிலை போல் அமர்ந்திருந்தாள். பிறகு
அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டாள்.

# 5

கோகுலனும் அவன் மனைவியும் அன்று
சண்டை போட்டுக் கொண்டனர். மறுநாள்
நடந்த விவகாரத்தைப பார்த்தபோது அந்தச்
சண்டை அன்றிரவோடு தீர்ந்துவிட்டது
என்பது புலப்பட்டது. மறுநாள் கோகுலன்
அதிகாலையிலிருந்தே வீட்டு வேலைகளில் மிகுந்த
பரபரப்புடன் காணப்பட்டான். வீட்டிலுள்ள
ஒவ்வொருவரிடமும் சிராத்ததினம் நெருங்கி
விட்டதுஎன்பதை நினைவுபடுத்தினான். இன்னும்
மூன்று நாட்கள்தான் இருந்தன. வெளியே
உள்ளவர்கள் யாராவது விநோதனைப் பற்றிப்
பேச்சை எடுத்தால் கோகுலன் உடனே தன்
செவிகளில் விரலை வைத்துக் கொண்டு, 'அப்பா
இறக்கும்போது இனி அவன் என் மகன் அல்ல.
அவனைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள் என்
றார். எங்களுக்கும் அவனுக்கும் இனி யாதொரு
சம்பந்தமும் இல்லை. எனக்கு ஒரு தம்பி
இருந்தான். அவன் இறந்துவிட்டான்' என்
பான்.



இவன் இவ்வாறு கூறியதைக் கேட்டுச் சிலர்
பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்துக் கண்ணைச்
சிமிட்டினர். மற்றும் சிலர் இவன் பேச்சைக்
கேட்டுத் தங்கள் கருத்தை வெளியிட்டனர்.
அதாவது, அவனுடைய நேர்மையான பேச்சி
லிருந்து இனி விநோதனுக்குச் சல்லிக் காசு
கூடக் கிடைக்காது. எப்படியோ சகல சொத்
துக்களையும் மடக்கிக் கொண்டு விட்டான்
என்று எண்ணிக் கொண்டனர். சிலர் ரகசிய
மாக விநோதனிடம் அனுதாபம் காட்டினர்.
ஒருக்கால் விநோதன் வந்து, தன்னுடைய
அண்ணனின் மோசடியைப் புரிந்துகொண்டு
வழக்குத் தொடர்ந்தால், அவனுக்கு உதவி
செய்யத் தயாராக இருப்பதாகச் சிலர்
கூறினர்.

அறிவாளியான ஜெயலால் பானர்ஜி
வெளிப்படையாகப் பேசினார். ''மனிதர்களைப்
புரிந்து கொள்ளவே முடியவில்லை அப்பா,
இந்தக் காலத்தில்! அதற்கு இன்று உண்மை
யான உதாரணமாக இருக்கிறான் இந்த
கோகுல் மஜூம்தார். ஆனால் நான் ஒருவன்
இருக்கிறேனே, என் கண்களில் அவன் மண்ணைத்
தூவ முடியாது. ஏனென்றால் இந்தத் தெருவி
லுள்ள ஆபாலவிருத்தர் பெண்டுகள் 'கோகு
லன் மகாசத்தியவந்தன், தர்மபுத்திரன்,
சகோதர வாஞ்சை உள்ளவன்' என்று புகழ்
பாடினார்கள். அப்போது நான் மௌனமாகச்
சிரித்துக் கொண்டே என் மனத்திற்குள்
சொல்லிக் கொண்டேன். 'அடே பைத்தியக்
காரர்களா, அவன் மாற்றாந்தாயின் மகன்,
உடன் பிறந்த சகோதரன் அல்ல! அவனாவது
தம்பியிடம் அனுதாபம் காட்டுவதாவது?
வேத காலத்துப் புராண காலத்திலே கூட
நடக்காத அந்தக் காரியம், இந்தக் கோர
கலியுகத்திலா நடந்துவிடப் போகிறது?
என்றேன். அதற்காகத்தான் இத்தனை
நாட்கள் ஒருவரிடமும் ஒன்றும் பேசாமல்
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.
அதற்கு அவசியம்தான் என்ன இருக்கிறது?
ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இவன்
வண்டவாளம் வெளிவரத்தான் போகிறது,
என்றேன். இன்று நீங்களே நன்றாகக் கண்ணைக்
கசக்கிக் கொண்டு பாருங்கள். கபடமற்ற
இந்தப் பெரிய மனிதனைப் பற்றி நான்
கொண்டிருந்த கருத்து உண்மையாகிவிட்டதா
இல்லையா? உங்களுக்கெல்லாம் உலக அனு
பவம் கிடையாது அப்பா'' என்றார்.

அவர் மனத்திலிருந்து அபிப்பிராயத்தை
இதுவரை ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை
யாதலால் இப்போது அவருடைய மேதையை
எல்லோரும் ஆமோதித்தனர். மெள்ள
மெள்ள இந்தப் புகை ஊரெங்கும் பரவியது.
தனக்கு எதிராக இப்படி ஓர் இயக்கம் வேக
மாக வளர்ந்து வருகிறது என்பதை கோகுலன்
அறியவில்லை.

பவானி எப்போதுமே அதிகம் பேசுபவள்
அல்ல. அத்துடன் முதல் நாள் இரவு நடந்த
விவகாரங்களில் அவள் மனம் வருத்தத்தில்
ஆழ்ந்து கிடந்தது. சந்தர்ப்பம் கிடைத்த
போது கோகுலன் மனைவி மனோரமா
கணவனைத் தனிமையில் அழைத்து, 'பார்த்தீர்
களா, உங்க அம்மாவின் போக்கை,' என்று
பவானியைச் சுட்டிக் காட்டினாள்.

கோகுலன் கவலையுடன் ''அப்படி ஒன்றும்
இல்லையே? என் அம்மாவுக்கு என்ன ஆயிற்று?''
என்றான்.

மனோரமா சண்டைக்கு வருபவள் போல்
''ஆவதற்கு என்ன இருக்கிறது? நேற்று நான்
மைத்துனர் வீண் செலவு செய்கிறார் என்று
சொன்னேன், அல்லவா? அதனால் நேற்றி
லிருந்து என்னுடன் பேசுவதை விட்டுவிட்
டாள். உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறாள்
அல்லவா?'' என்றாள்.

கோகுலன் அசட்டையுடன் ''இல்லை, என்
னிடமும் பேசுவதில்லை'' என்று பதிலளித்தான்.

மனோரமா விசித்திரமாகத் தலையை
ஆட்டிக் கொண்டு குரலைத் தாழ்த்தி, ரகசிய
மாக, ''பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்
அல்லவா? மைத்துனர் இப்படிப் பாழாக்கா
விட்டால், இன்று அந்தப் பணம் நம்மிடம்
தானே இருக்கும்? அப்பா சகல சொத்துக்களை
யும் நமது பெயருக்குத்தானே எழுதி வைத்து
இருக்கிறார்? உங்கள் தம்பியோ அதை நாசம்
செய்து நம்மையும் பாழாக்கப் பார்க்கிறார்!
அதைப் பற்றி நீங்கள் சற்று முணுமுணுத்தால்
போதும். அம்மாவுக்குக் கோபம் வந்துவிடு
கிறது. நம்மிடம் பேசுவதை நிறுத்திவிடு
கிறாள். இதென்ன விவகாரம்? நீங்கள்
என்னவோ அம்மா அம்மா என்று உயிரை
விடுகிறீர்கள்? இப்போது சொல்லுங்கள்.
நான் சொல்வது பொய்யா நிஜமா என்று''
என்றாள்.

கோகுலனின் முகம் சட்டென்று கறுத்தது.

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே அவன் புத்திக்கு விளங்கவில்லை. மனோரமா அதைப் புரிந்து கொண்டு சொன்னாள். ''அவள் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். எப்படியானாலும் அவள் மகன்தானே! நீங்களோ சக்களத்தியின் மகன். சொத்துக்கள் பூராவும் உங்களுக்குக் கிடைத்து விட்டது. எந்தப் பெண்பிள்ளையாவது இதைச் சகித்துக் கொள்ள முடியுமா? இல்லை, இல்லை, நான் சொல்வதை எல்லாம் நீங்கள் இந்த மாதிரித் தட்டிக் கழித்தால் ஒன்றும் நடவாது. இப்போது நீங்கள் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் இப்போதே சொல்லி வைக்கிறேன். நீங்கள் இந்த மாதிரி அம்மா, அம்மா, என்று இரவு பகல் பேத்திக் கொண்டிருந்தால் பிறகு எல்லாம் பாழாகிப்போகும். பணம் காசு சொத்து என்பது விளையாட்டு வியாபாரமல்ல.''

கோகுலன் உள்ளம் சொல்லொணு பயத்திஞல் நடுங்கியது. அவன் முகத்தின் சாயல் மாறியது. அவன் பேசாமல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மனைவி சொன்ஞள் : ''நாங்கள் பெண் பிள்ளைகள்; பெண்கள் மனத்தை பெண்கள்தாம் புரிந்து கொள்ள முடியும்! நான் சொல்வதைச் சற்றுக் கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்''. இதைக் கூறிவிட்டு மனோரமா சற்று நிதானித்தாள். பிறகு கணவன் முகத்தின் மீது தன் பார்வையை ஊன்றி, தான் இதுவரை கூறிய வார்த்தைகள் அவன் மனத்தில் எத்தகைய உணர்ச்சிகளை உண்டு பண்ணி இருக்கின்றன என்பதை ஆராய்வது போல் பார்த்தாள். பிறகு சற்று அழுத்தமாகவே கூறலானஞள்—''இது இருக்கட்டும்! மைத்துனர் என்றைக்குமே இம்மாதிரி நாடோடியாகச் சுற்றிக்கொண்டிருக்க முடியாது. அவரை நீங்கள் நன்ருகப் படிக்க வைத்திருக்கிறீர்கள். அவர் ஏதாவது உத்தியோகம் தேடிக்கொண்டு தன் தாயாரையும் கூட அழைத்துக்கொண்டு எங்காவது குடும்பம் நடத்த ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். தன் தாயை அதிக நாள் நம்மிடம் விட்டு வைத்திருக்க முடியாது. தவிர, அவர் தனக்கென்று எங்கேயாவது சிறியதாகவோ பெரியதாகவோ ஒரு குடிசையாவது போட்டுக் கொள்ளத்தானே வேண்டும், அப்போது அவருக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்து விட்டுப் போகிருேம். அப்போது மஜூம்தார் வீட்டுப் பிள்ளை தன் மாற்ருன் தாயின் மகனைத் தெருவில் விட்டுவிட்டான் என்ற பேச்சுக்கே இடம் இருக்காதல்லவா? மாற்ருந் தாயின் மகன் அவனுக்கு ஒன்றுமில்லை என்று சொல்லுகிறவர்கள் சொல்லிக் கொள்ளட்டும். நாம் ஏன் அவ்வாறு கூற வேண்டும். அப்படிப்பட்ட வம்சத்தில் வந்தவர்களல்லவே நாம்!''



இவ்வளவையும் கூறிவிட்டுத் தன் கணவனுக்கு யோசித்துப் பார்க்க அவகாசம் அளித்துவிட்டு, அவள் மறுபக்கம் சென்ருள். கோகுலன் அங்கேயே உட்கார்ந்துவிட்டான். கனவில் இருப்பவன்போல் வெறித்த பார்வையுடன் எங்கோ பார்த்துக் கொண்டு ஏதோ விபரீதக் கனவுகளைக் கண்டு கொண்டிருந்தான். மனோரமா கூறிய மற்ற வார்த்தைகள் அமுங்கிவிட்டன. அவள் சொன்ன ''பணம், காசு சொத்து விஷயம் என்பது விளையாட்டு வியாபாரமல்ல'' என்ற வார்த்தைகள் மட்டும் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

இதற்காக அம்மா என்னிடம் கோபித்துக் கொண்டு என்றென்றைக்கும் விநோதனிடம் சென்று விடுவாளா, என்று நினைத்தான். அத்துடன் தன் மனைவி கூறிய பதிலும் பொய்யல்ல என்று எண்ணிஞன். இன்று காலையிலிருந்து நான் அம்மாவிடம் ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லையே! இரண்டு மூன்று தடவை ஏதோ காரியமாக அவள் முன்ஞல் சென்றேனே! அப்போது கூட அவள் என் பக்கம் திரும்பிப் பார்க்க வில்லையே, என்று நினைத்தான். பவானி அதிகமாகப் பேசுபவள் அல்ல. ஆகையால் கோகுலன் முதலில் இதைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை. இப்போது அவனுக்குச் சகல விவரங்களும் தண்ணீர் போல் தெள்ளெனு விளங்கின. தாயின் இந்த மௌனமான எதிர்ப்பைச் சகித்துக் கொள்ளவும் அவஞல் முடியவில்லை. ஆகையால் அவன் அங்கிருந்து எழுந்தான். அந்தக் கணமே தாயிடம் இதைப் பற்றிப் பேசித் தீர்த்துவிட வேண்டும் என்று தடதட வென்று வேகமாக நடந்து தாயின் அறைக்கு முன்ஞல் வந்து நின்றான். அறைக்குள் காலெடுத்து வைத்ததுமே, ''அம்மா! காரியம் நடக்க வேண்டிய வீடு இது. நீ இந்த மாதிரிப் பேசாமல் உட்கார்ந்திருந்தால் முடியுமா?'' என்று கேட்டான்.

பவானி திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தாள். கோகுலன் முகத்தைப் பார்த்தாளோ இல்லையோ அவன் சொன்ஞன் : ''விநோதன் ஏராளமான பணத்தை நாசம் செய்துவிட்டான் என்று உன் மருமகள் கூறுகிருள் என்ருல் அதில் பொய் ஒன்றுமில்லையே! அப்பா அவனுடைய பங்கையும் எனக்குக் கொடுத்து விட்டுச் சென்ருர் என்ருல் இதில் என் தவறு என்ன அம்மா இருக்கிறது? உனக்கு ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டுமாஞல் அவர்களிடம் சொல்லிக் கொள். என்னிடம் நீ இம்மாதிரி கோபித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.''

பவானியின் உள்ளத்தில் ஈட்டி பாய்ந்தது. அவள் குமுறிஞள். ஆஞல் நிதானமாகப் பதில் அளித்தாள்—''கோகுல்! நான் யாரிடமும் கோபித்துக் கொள்ளவில்லை. யாரிடமும் எதுவும் சொல்லவோ கேட்கவோ விரும்பவும் இல்லை.''

''விரும்பவில்லை. சரி. அதற்காக இம்மாதிரி சும்மா உட்கார்ந்திருந்தால் முடியுமா? காரியம் எப்படி நடக்கும்? விநோதனிடம் சொல்லி அவனை ஏதாவது உத்தியோகம் தேடிக்கொள்ளச் சொல். என் வீட்டில் அவனுக்கு இடமில்லை.''

''அதுதானே கோகுல் நடக்கப் போகிறது?''. இதைக் கூறிவிட்டு பவானி தலைகுனிந்து கொண்டாள்.

கோகுல் திட்டமிட்டு வந்தபடி சண்டை போட முடியவில்லை. ஆகவே அவன் சலித்துப் போய் கோபத்துடன், ஏதோ வாய்க்கு வந்ததைப் பேசிவிட்டு அவ்விடம் விட்டகன்ருன். தன் மனைவியை அழைத்து ''இன்றைக்கு நான் வெளிப்படையாகக் கண்டித்துக் கூறிவிட்டேன். விநோதன் இந்த வீட்டில் இருக்க முடியாது. அவன் ஏதாவது வேலை வெட்டி தேடிக் கொண்டாலும் சரி, சும்மா இருந்தாலும் சரி, அது அவன் விருப்பம். எனக்கு ஒன்றும் தெரியாது என்று அம்மாவிடம் கூறிவிட்டேன்.''



மனோரமா எல்லையற்ற மகிழ்ச்சியுடன் இன்னும் சற்று அருகே வந்து மெள்ளக் கேட்டாள்—''உங்க அம்மா என்ன சொன்ஞள்?''

கோகுலன் இதற்கு அலட்சியமாகப் பதில் அளித்தான்—''அவள் என்ன சொல்ல இருக்கிறது? சொன்ஞல்தான் என்ன? அதை நான் பொருட்படுத்தப் போகிறேஞ?''

மனோரமா கண்களைச் சிமிட்டிக் கொண்டே ''இருந்தாலும் ஏதாவது சொல்லியிருப்பாளே?'' என்ருள்.

கோகுலன் பழைய பதிலையேதான் சொன்ஞன் : ''வேறென்ன இருக்கிறது சொல்வதற்கு? விநோதன் இந்த வீட்டில் இருக்க முடியாது என்பதை அவள் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.''

மனோரமா தன் குரலை இன்னும் தணித்துக் கொண்டு, ''இதெல்லாம் கோபத்தில் சொல்லும் வார்த்தைகள். உங்களுக்குப் புரியவில்லையா? தாய்க்குத் தன் மகனை விட்டுக் கொடுக்க முடியாது. இப்போது நீங்கள் அவள் கண்களுக்கு முள்ளாக இருக்கிறீர்கள்'' என்ருள்.

கோகுலன் தலையை ஆட்டி விட்டு,''எனக்கு இதெல்லாம் தெரியாது என்று நினைத்துக் கொண்டாயா? என்னிடம் இந்தப் பித்தலாட்டங்கள் ஒன்றும் நடைபெருது; தெரிந்து கொள்'' என்ருன்.

வெளியே வந்தான். எதிரே கண்ட ரஸிக சக்கரவர்த்தியிடம் சொன்ஞன் ''ஏன் ஐயா? ஒரு புதிய விஷயம் கேள்விப்பட்டீரா? இவ்வளவு நாட்களாக அம்மாவுக்கு நான் எவ்வளவோ செய்திருந்தும் இன்று நான் அம்மாவின் கண்களுக்கு முள்ளாகிவிட்டேன். என்னைக் கண்டால் விஷமாக இருக்கிறது அவளுக்கு; என்னுடன் பேச்சு வார்த்தைகளைக் கூட நிறுத்தி விட்டாள். நான் எதிரே சென்ருல் என்னைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொள்கிருள்''

சக்ரவர்த்திக்கு உண்மையிலேயே இது ஆச்சரியமாக இருந்தது. அவர் சொன்ஞர் : ''இல்லை! இல்லை! பெரிய பாபு, இதென்ன நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள்.?''

''என்ன பேசுகிறேன்? இதோ கேளுங்கள்! ஏ மனு அம்மா! ஏ, மனு, சற்று இங்கே வாயேன்! இங்கே வா'' வென்று வேலைக்காரியை அழைத்தான்.

கிழவியான மனு நெடுநாளைய வேலைக்காரி. ஏதோ காரியமாக வெளியே சென்று கொண்டிருந்தாள். அவள் அங்கே வந்ததும் கோகுலன், சக்கரவர்த்தியிடம் சொன்ஞர்: ''இதோ கேட்டுக் கொள்ளும் அய்யா! ஏ மனு! அம்மா என்னிடம் பேசுவதை நீ பார்த்ததுண்டா? என்னைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொள்கிருளா இல்லையா?'

மனுவுக்கு இந்த விஷயம் எதுவுமே தெரியாது. முதலில் சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் விழித்தாள். பிறகு ஏதோ ஒப்புக்குத் தலையை ஆட்டி விட்டு, தன் காரியத்தைப் பார்க்கச் சென்ருள். கேட்டுக் கொண்டீர் அல்லவா? இது நிஜமா, பொய்யா என்பதை?''

என்று கேட்டு விட்டு சக்கரவர்த்தியிடம் ஏதோ ஜாடை காட்டிவிட்டு வேகமாகச் சென்று விட்டான்.

அன்று முழுவதும் அவனைச் சந்திக்க வந்தவர்களிடமெல்லாம் தன் தாயைப் பற்றி இந்தப் புகாரைக் கூறிவிட்டு, ''என்ன இருந்தாலும் நான் அவளுடைய சக்களத்தியின் மகன்தானே! அதஞல்தான் அப்பா இறந்ததும் நான் அவளுக்கு விஷமாகிவிட்டேன்'', என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

சாயுங்காலம் வீட்டுக்குள்ளே வந்து பவானியின் எதிரே சொன்ஞன் : ''எனக்கென்ன, அக்கறை வந்தது? நான் ஏன் பர்த்வானுக்குத் தகவல் அனுப்பி அத்தை முதலியவர்களை வரவழைக்க வேண்டும்? வேண்டுமாஞல் அவர்களே வந்து விட்டுப் போகட்டும். நான் ஒருவரையும் அழைக்கப் போவதில்லை'' என்ருன்.

பவானி நிமிர்ந்து தணிவான இனிய குரலில் ''ஏண்டாப்பா! அப்படிச் செய்தால் நன்ருக இருக்குமா? அவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டாள்.

கோகுலன் ஆத்திரத்துடன் ''நன்ருக இருக்குமா? கெடுதலாக இருக்குமா? என்பது எனக்குத் தெரியாது. இரண்டு கைளால் வாரி இறைக்க என்னிடம் பணம் இல்லை. நான் சொல்லிவிட்டேன். இனிமேல் இந்த விஷயத்தில் என்னை வற்புறுத்தாதே'' என்ருன்.



பர்த்வானிலிருந்து தன் நாத்தனாரை அழைத்து வரவேண்டுமென்று பவானிதான் நேற்று கோகுலனிடம் சொன்னாள். இப்போது அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. மௌனமாகத் தன் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள். கோகுலன் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டே, ''அழைத்துக் கொண்டு வா! என்று வாயால் சொல்லிவிட்டால் காரியம் நடந்து விடாது அம்மா! கடன் வாங்கி மூழ்கிப் போக நான் விரும்பவில்லை'' என்றான்.

பவானி சற்று அசட்டையுடன் ''நல்லது, உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்'' என்றாள்.

அப்போது கோகுலன் ''இப்போது நானேதான் எல்லாவற்றையும் யோசித்து ஆராய்ந்து செய்ய வேண்டும். எனக்கு என் தாய் இருக்கிறாளா? இப்போது நான் செத்தால் கூட என்னைப் பற்றிக் கவலைப்படுவார் யாரும் இல்லை! எனக்கு ஒருவரும் இல்லை. இனி நானே என் பொறுப்பைச் சமாளிக்க வேண்டும். பணம் காசை யோசித்துச் செலவு செய்ய வேண்டும். ஏனென்றால் எனக்குத் தான் சொந்தத் தாய் இல்லையே'' என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

திடீரென்று கோகுலனுக்குப் பணம், காசு, சொத்துக்களில் இவ்வளவு அக்கறை ஏற்பட்டிருப்பதைக் கண்டு பவானிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் பேசாமல் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள். கோகுலன் சிறிது தூரம் சென்றவன் மீண்டும் திரும்ப வந்தான். ''அம்மா எனக்குத்தெரியாது என்று நினைத்துக் கொண்டாயா? நீ கோபத்தினால் தானே அப்படிச் சொன்னாய்? நேற்று நீயே என்னிடம் சொல்லவில்லையா 'கோகுல்! ஆளை அனுப்பி அத்தையை அழைத்துக் கொண்டு வரச் சொல்' என்று. இன்றைக்கு உனக்குச் சரி என்று தோன்றுவதைச் செய் என்று சொல்கிறாய். அப்பா இல்லை, தம்பி இல்லை, அதனால் நீ இப்படி என்னைத் தவிக்க விட்டு வேடிக்கை பார்க்கிறாய். கோகுலன் தன் தாய் சொல்வதைக் கேட்பதில்லை என்று ஊரில் எல்லோரும் சொல்லப் போகிறார்கள்'' என்றான்.

கோகுலனின் இந்தப் பழிச் சொற்களைக் கேட்டு பவானிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவள் பேசாமல் அவன் முகத்தையே பார்த்தாள். பிறகு சொன்னாள் : ''கோகுல்! நான் உங்களுடைய விவகாரம் எதிலும் தலையிட மாட்டேன், நான் ஒன்றுமே சொல்லவில்லையே, அப்பா''

கோகுலன் கண்களில் சட்டென்று கண்ணீர் வந்துவிட்டது. அவன் சொன்னான் : ''அம்மா! நான் உன்னுடைய வார்த்தை எதையாவது தட்டி இருக்கிறேனா? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்? ஆனால் நான் ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன். அதன் பலன் நன்மையாக இராது. விநோதன் வெறுப்பினாலும் வெட்கத்தினாலும் வீட்டை விட்டே போய்விட்டான். இனி நானும் என் வழியைப் பார்த்துக் கொண்டு போய்விடுகிறேன். உன் பணம் காசு சொத்துக்களை வைத்துக் கொண்டு நீ சௌக்கியமாக இரு'' என்று கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வேகமாகச் சென்றுவிட்டான்.



# 6

கோகுலனின் மூத்த மகள் ஹேமாங்கினி தன் பாட்டியுடன்தான் படுத்துத் தூங்குவாள். அவள் அன்று அதிகாலையிலேயே விழித்துக் கொண்டு, ''சித்தப்பா வந்திருக்கிறார் அம்மா! சித்தப்பா வந்திருக்கிறார்!'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தாள்.

கோகுலன் அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் சட்டென்று எழுந்து தன் கம்பளிப் படுக்கையில் உட்கார்ந்தான். மனைவி மனோரமா மகிழ்ச்சியுடன், ''ஏண்டி? உன் சித்தப்பா எப்போது வந்தார்?'' என்று மகளிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''ராத்திரி இருட்டாக இருக்கும் போது வந்தார்''.

''இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?''

''இன்னும் எழுந்திருக்கவில்லை. அவருடைய அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறார்.''

மனோரமா மேற்கொண்டு ஒன்றும் கேட்கவில்லை. தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றாள்.

கோகுலன் வாசற்படிக்கு வெளியே தலையை நீட்டிக் கையை ஆட்டி மகளைத் தன்னருகே அழைத்தான். ''ஹேமு! உன் பாட்டி சித்தப்பாவிடம் பேசினாளா?'' என்று கேட்டான்.

ஹேமு தலையை ஆட்டிவிட்டு ''எனக்குத் தெரியாது அப்பா' என்றாள்.

''அவனை ரொம்பக் கோபித்துக் கொண்டாளோ'' என்று கேட்டான்.

ஹேமு நிச்சயமாக ஒன்றும் கூறமுடியாமல் தலையை இரண்டொரு தரம் ஆட்டிவிட்டு, முடிவில் என்ன நினைத்தாளோ, 'ஆமாம்' என்றாள்.

கோகுலன் மேலும் ஆவல் கொண்டவனாய் குழந்தை ஹேமாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, அவளை அறைக்குள் இழுத்துக் கொண்டான். ''ஹேமு கண்ணு! எங்கே சொல்லு பார்ப்போம்! பாட்டி, சித்தப்பாவிடம் என்னென்ன கேட்டாள்?'' என்றான்.

சங்கடத்தில் மாட்டிக் கொண்ட சிறுமி ஹேமாவுக்கு ஒன்றும் புரியவில்லை. சித்தப்பா வந்தபோது அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்றுமே தெரியாது. ஆகவே 'தெரியாது அப்பா' என்றாள். ஹேமா ஒன்றும் புரியாமல் விழித்தாள். கோகுலன் அவள் தலையை வருடிக் கொண்டே அவளை உற்சாகப்படுத்தி 'உம். இப்போது சொல்லம்மா! என்னென்ன கேட்டாள்? பாட்டி அவனை வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னாளா? இதோ பார்! இந்தா இந்த ரூபாயை வைத்துக் கொள். நீ பொம்மை வாங்கிக் கொள்ளலாம்'' என்று கூறி கோகுலன் தலையணைக்கடியிலிருந்து இரண்டு ரூபாய் பணத்தை எடுத்து ஹேமாவின் கையில் ...ன். ஹேமா நாக்குழற ''ஆமாம்! சொன்னாள்!'' என்றாள். கோகுலனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் சிடுசிடுப்புடன் சற்று முன் தெரியும் என்றாயே! அம்மா சொல்ல வேண்டாம் என்று சொன்னாளா? என்னிடம் சொல்லு. நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்'' என்றான்.

தந்தையின் கோபக் குரலைக் கேட்டு ஹேமா அழுதே விட்டாள். 'அப்பா எனக்கு ஒன்றும் தெரியாது அப்பா!'' என்றாள்.

கோகுலன் அவளை அதட்டிக் கொண்டே, தெரியாதென்றா சொல்கிறாய். திருட்டுக் கழுதை!'' என்று கூறி பளிச்சென்று கன்னத்தில் ஓர் அறை கொடுத்தான். பிறகு, ''போ! போ! இதைவிட்டு'' என்றான்.

குழந்தை அழு...கொண்டே சென்றாள்.

கோகுலன் வேகமாகக் கீழே இ...ங்கி வந்தான். பவானியின் அறைக்குள் நுழைந்து சொன்னான் : ''பேஷ்! நல்ல காரியம் செய்தாய்! அவன் வீட்டுக்குள் நுழையக் கூட இல்லை. நீ அவனிடம் தாறுமாறாகப் பேச ஆரம்பித்து விட்டாயா? அவன் என்மீது கோபித்துக் கொண்டு போகட்டும் என்ற எண்ணம் தானே உனக்கு? நான் சகல விவரங்களையும் கேள்விப்பட்டேன். நீ உன் மகனிடம் எச்சரித்து விடு. அவன் என் முன்னால் வர வேண்டாம்!'' என்றான்.

வீட்டிலுள்ளவர்கள் தத்தம் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தனர். கோகுலன் முதலில் சற்றுத் தயங்கினான். பிறகு மனுவை அழைத்து ''மனு அம்மா! தம்பி வந்திருக்கிறானே கேள்விப்பட்டாயா?'' என்று கேட்டான். வேலைக்காரி தலையை ஆட்டி விட்டு, ''ஆமாம் பாபு! இரவு நெடுநேரத்திற்குப் பிறகு சின்ன ஐயா வந்தாரு. நான் கதவைத் திறந்து விட்டேன்.'' என்றாள்.

''அதுதான் எனக்குத் தெரியுமே! அதற்குப் பிறகு தாய்க்கும் மகனுக்கும் என்ன பேச்சு வார்த்தை நடந்தது? அதைப் பற்றி ஏதாவது தெரியுமா? அம்மா என்னைப் பற்றி ஏதாவது அவனிடம் சொன்னாளா? வீட்டை விட்டு அவனை. . .'' வேலைக்காரி இடைமறித்து ''இல்லைய்யா! அம்மா எழுந்திருக்கவே இல்லை. ஜக்குதான் போய் சின்னய்யாவின் பெட்டியை உள்ளே எடுத்து வந்தான். அப்போது அறைக்குள் சென்றவர் இது வரை வெளியே வரவில்லை'' என்றாள்.

ஆனால் கோகுலன் அதை நம்பாமல் ''மனு! நீ ஏன் என்னிடம் ஒளிக்கிறாய்! நான் எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன்'' என்றான்.

கோகுலன் வார்த்தையைக் கேட்டு மனு கிழவி ஆச்சரியமடைந்து போனாள். சிறிது நேரம் அவன் முகத்தையே பார்த்தாள். பிறகு சத்தியம் பண்ணி விட்டுச் சொன்னாள்:''பெரிய ஐயா, நீங்க அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நான் அங்கேயேதான் இருந்தேன். சின்ன பாபுவுக்கு வேண்டியதை எல்லாம் நானேதான் செய்தேன். அம்மாவைக் கூப்பிட வேண்டாம் என்று அவரே சொல்லி விட்டார். அத்துடன் தனக்கு வேறு எதுவும் தேவையில்லை என்றும் சொன்னார். விளக்கை மட்டும் ஏற்றிவிட்டு நீ போய்ப் படுத்துக் கொள் என்றார். அடாடா அவர் கண்கள் குழி விழுந்துவிட்டன. முகம் கறுத்து விட்டது. அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது'' என்றாள்.



கோகுலனின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அவன் சொன்னான் : ''என்ன சொல்கிறாய் நீ! மனு அம்மா! முகம் கறுத்துப் போகாமல் இருக்குமா? அப்பா இறந்துவிட்டார். அவனோ கடைசி வரை அவரைப் பார்க்கவில்லை. அப்பன் சொத்தில் தம்பிடி கூடக் கிடைக்கவில்லை. அவன் மனத்திலுள்ள துக்கத்தை அவன்தான் அறிவான். அப்பாவிடம் அவனுக்கு மிகுந்த பிரியம் உண்டு. இது உங்கள் எல்லோருக்கும் தெரியும். என்ன மனு, நான் சொல்வது சரிதானே?'' என்று கூறும்போது கண்ணீர் பொங்கி வழிந்தது. மனு அம்மா நெடு நாளைய வேலைக்காரி. கோகுலனின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் அவள் கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது. அவள் தழுதழுத்த குரலில், ''ஆமாம் ஐயா! நீ சொல்வது வாஸ்தவம்தான். சின்ன ஐயா அப்பான்னு உசிரையே விட்டுடுவாரு. ஆனால் என்ன பண்ணுவது, அவர் நிறையப் படித்துப் படித்து மண்டை கொதிச்சுப் போச்சு அதனாலே'' என்றாள். கோகுலனும் அதே கருத்தை ஆமோதித்து, ''ஆமாம், அதுதான் உண்மை. பாவம் அவன் மண்டை கொதிப்படையாமல் இருக்குமா? அவன் என்ன மட்டான படிப்பா படித்திருக்கிறான்? அவன் கிராஜுவேட் ஆயிற்றே. இங்கே ஹைகோர்ட் சிஞ்சுடா, பாபு கஞ்ச் இந்த வட்டாரத்தில் எவன் என் தம்பியைப் போல் படித்திருக்கிறான்? லாட் துரை நேரில் வந்து அவனுடன் கைகுலுக்கி அவனை உட்கார வைக்கிறார். அவன் என்ன சாமான்யப்பட்ட பேர் வழியா? நீ வேலைக்காரிதான். நீ கல்கத்தா சென்று எந்தப் பெரிய மனிதனிடம் வேண்டுமானாலும், நான் விநோத் பாபுவின் வீட்டு வேலைக்காரி என்று சொல்லு, போதும். பிறகு பார் உன்னை அழைத்து மரியாதையுடன் உட்கார வைத்து உன்னிடம் ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள்! இங்கே எப்படி? வீட்டில் கிடந்தால் குப்பைமேனி, காட்டில் கிடந்தால் மூலிகை. அவனுடைய பெருமையைத் தெரிந்து கொள்ள இங்கே எவன் இருக்கிறான்? அதிருக்கட்டும், நீ நன்றாகப் பார்த்தாயா? அவன் முகம் மிகவும் வாட்டமடைந்திருக்கிறதா?''

வேலைக்காரி தலையை ஆட்டி விட்டு,''அவர் முகத்தைப் பார்த்தாலே அழுகை வந்து விடுகிறது பெரிய பாபு.''



தாரையாகப் பெருகியது. அவன் தன் துவாலை யினுல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே ''மனுவா! நீதான் அவனை எடுத்து வளர்த் தாய். உனக்குத்தான் அவனைத் தெரியும். அவனுடைய நேரமெல்லாம் விளையாடுவதிலும் படிப்பதிலுமேதான் கழிந்து விட்டன. இந்த மாதிரி உபத்திரவங்களில் அவன் அடிபட்டதே இல்லை. உயில் எழுதி விட்டால் என்ன? அவனுக்குச் சொத்துக்கள் கிடைக்காமல் போய் விடுமா? ஏன் அவன் அப்பன் சொத்துத் தானே? பார்க்கிறேன். எந்தப் பயல் அதைத் தடுக்க முடியும்? அவன் என்ன செய்து விட்டான்? திருடினுனு? எந்த மடையன் பார்த்தான்? ஏன் அவனுக்குச் சொத்துக் கிடைக்காது? இந்த உலகத்தில் நீதி வழங்கும் கோர்ட் எல்லாம் அழிந்து விட்டதா? அவன் வழக்குத் தொடர்ந்தால் நான் கணக்குப்படி சரி பாதி அவனுக்குக் கொடுத்தே தீர வேண் டும். தெரியுமா உனக்கு?'' என்ருன். மனு அதை ஆமோதித்தவளாய், ''ஆமாம் பாபு! கொடுத்துத்தான் ஆக வேண்டும்'' என்ருள்.

கோகுலனின் முகம் உற்சாகத்தினுல் ஒளி வீசியது. அவன் சொன்னுன் : ''ஆகவே இதுதானே நியாயம்! இங்கே, என் அம்மா வைப்பார்! 'ஏன் அம்மா! நீயோ பெண்பிள்ளை, பெண் பிள்ளைகளைப் போல் இருக்க வேண்டி யதுதானே! நீ எதற்காக உயில் எழுதி வைக்க வேண்டும் என்று யோசனை கூறுகிருய்? அது முறையாகவாவது நடந்ததா? தர்மம் என்று ஒன்று இல்லையா? அப்பா இதை எல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிருர். விநோ தனுக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டால் அதற்கு அவர் முன் நீ பதில் சொல்ல வேண்டாமா? சொத்து விஷயத்தைப் பற்றிக் கேட்கிருயா?



மோசத்துத்தான் பெரிதாகி விட்டதா? இன்று இல்லாவிட்டால் நாளை அவன் ஹைகோர்ட்டு ஜட்ஜாகி விடுவான். அவன் ஜட்ஜாக ஆவதை ஒருவரும் தடுக்க முடியாது. அப்போது அவ னுடைய சொத்துக்களை எப்படி மறைக்க முடியும்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்து ஒரு காரியத்தைச் செய்ய வேண் டாமா? அவன் சொத்துக்களை இப்போதே மரியாதையாகக் கொடுத்துவிட வேண்டும்.''

மனு அம்மாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. விநோதனிடம் அவளுக்கு மிகுந்த வாஞ்சை யுண்டு. அவள்தான் அவனை எடுத்து வளர்த் தாள் என்றே கூறலாம். இந்த உயில் விவ காரம் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் சொன்னுள் : ''ஏன் பெரிய ஐயா, அப்படி யானுல் நீங்கள் ஏன் சின்ன ஐயாவை அழைத்து, தம்பி, இந்தாப்பா உன் சொத்துக்களை நீ எடுத்துக்கொள் என்று சொல்லக் கூடாது? நீங்களே கொடுக்கும்போது வேண்டாம் என்று மறுக்க யாரால் முடியும்?''

இதைப் பற்றித்தான் கோகுலன் மனத்தில் சந்தேகம். அவன் சிறிது நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சொன் னுன்: ''அவனுக்குச் சொத்துக்களைக் கொடுக்க எனக்கு அதிகாரம் இல்லை என்று எல்லோரும் சொல்கிருர்கள், மனு! அப்பா எழுதி வைத் திருக்கும் உயிலை நான் ரத்து செய்ய முடியாது. உன் மருமகள் மனேரமாவின் சித்தி பிள்ளை பெரிய வக்கீல். அவன் தன் சகோதரிக்குக் கடிதம் எழுதி இருக்கிருன். உயிலை ரத்து செய்தால் நான் ஜெயிலுக்குப் போக நேரிடு மாம். ஆனுல் ஒன்று, அம்மா, மனேரமா இருவரும் சம்மதித்தால் இது நடக்கும்.''

மனுவுக்கு இதற்கென்ன பதில் சொல்வ தென்று தெரியவில்லை. ஆகவே சரிதான் என்று அவள் வேலையைக் கவனிக்கச் சென்ருள். கோகுலன் மறுபக்கம் திரும்பினுன். இதற்குள் ஹேமா விளையாடப் போய்க் கொண்டிருந் தாள். அவன் குழந்தையை அன்புடன் அழைத்து ''ஹேமு கண்ணு! உன் சித்தப்பா தூங்கி எழுந்துவிட்டானு?'' ஹேமா தலையைக் கோணிக் கொண்டே ''ஆமாம்! எழுந்ததும் முன் அறையில் போய் உட்கார்ந்திருக்கிருர். ஒருவரிடமும் பேசவில்லை'' என்ருள்.

வீட்டின் முன்புறம் தெருவை அடுத்து இருந்தது விநோதன் அறை. அதை மேல் நாட்டு முறையில் அலங்கரித்திருந்தான். அங்கு தான் அவனுடைய நண்பர்கள் அவனைச் சந்திப் பார்கள். கோகுலன் சந்தடி செய்யாமல் அங்கே சென்று ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தான். விநோதனை நாற்காலியில் காண வில்லை. முகத்தைச் சுவர்ப் பக்கம் திருப்பிக் கொண்டு பேசாமல் தரையில் அமர்ந்திருந் தான். அவன் உட்கார்ந்திருந்த நிலையைக் கண்டதுமே கோகுலன் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. தன் தம்பியின் முகத்தைக் காண வேண்டுமென்று ஐந்தாறு நிமிடங்கள் சந்தடி இன்றி நின்றுகொண்டிருந்தான். பிறகு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அங்கிருந்து திரும்பினுன்.

ரஸிக சக்கரவர்த்தி எதிரே வந்தார். ''பெரிய பாபு, சாஸ்திரிகள், பண்டிதர்கள் ஆகியோருக்குச் சன்மானம் வழங்க வேண் டுமே?'' என்ருர்.

கோகுலனின் மன இருளில் சட்டென்று ஓர் ஒளி தென்பட்டது. அவன் உடனே சொன்னுன் : ''ஏன் ஐயா! இந்த விஷயத்திற் கெல்லாம் என்னை ஏன் இழுக்கிறீர்? சரஸ்வதி தேவியே நேரில் வந்திருக்கிருள். யார் யாருக்கு என்னென்ன யோக்யதை உண்டு, யாருக்கு என்ன சன்மானம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் விநோதனுக்குத் தெரியும். அவனிடம் கேட்டுக் கொண்டு இதை எல்லாம் செய்வதுதானே? இந்த விவகாரங்களில் இனி நான் தலையிட மாட்டேன்!'' என்ருன்.

''சரி! சின்ன பாபு இன்னும் தூங்கி எழுந் திருக்கவில்லையே?'' என்ருர் சக்கரவர்த்தி. கோகுலன் சிறு நகையுடன் ''தூங்கி எழுந் திருக்கவில்லையா? அடாடா! அவனுக்கு பசி, தூக்கம் கூட உண்டா என்ன! மனு அம்மா வைச் சற்றுக் கூப்பிட்டுக் கேளும். அவள் தன் கண்களால் பார்த்தாள். அவள் சொன் னுள் சின்ன பாபுவின் முகத்தைப் பார்த்தால் அழுகை வந்து விடுகிறது. அப்படி மாறி இருக்கிறது அவனுடைய முகம். கவலையினுல் தங்கம் போல் இருந்த அவன் மேனி கறுத்து விட்டது'' என்று கூறி, விநோதன் அறையைச் சுட்டிக் காட்டி, அங்கே சென்று பாரும், சில் லென்றிருக்கும் தரையில் பேசாமல் உட்கார்ந் திருக்கிருன் அவன் நீர்தான் சொல்லுமே! அவனைப் பார்த்தால் யார் தான் கண்ணீர் விடமாட்டார்கள்?''

ரஸிக சக்கரவர்த்தி துக்கத்தை வெளியிடும் வகையில் ஏதோ கூறிவிட்டு, பட்டியலை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். கோகுலன் அவரை மறுபடியும் அழைத்து, ''சக்கர வர்த்தி! உமக்குத்தான் சகல விவரமும் தெரியும், அதனுல் உம்மிடம் கேட்கிறேன், நான் இருக்கும் போது விநோதனுக்கு எதற் காகச் சிரமம் கொடுக்க வேண்டும்? இந்தப் பட்டினி, உபவாசம் எல்லாம் நோயுற்ற அவன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது. அவன் மறு படியும் படுத்து விட்டால் என்ன செய்வது? அவன் வழக்கம்போல் வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டு நிம்மதியாக இருக்கட் டும்: நான் தான் இருக்கிறேனே பார்த்துக் கொள்கிறேன்'' என்ருன்.



சக்கரவர்த்தி மிகுந்த வருத்தத்துடன் தன் எஜமானன் கூறிய வார்த்தைகளை ஆமோ தித்து,''ஆமாம், நீங்கள் சொல்லுவது வாஸ்த வம்தான். ஆனுல் ஜனங்கள் என்ன சொல்லு வார்கள்?'' என்ருர்.

அவர் பேச்சை முடிக்கு முன்னரே கோகுலன் சொன்னுன் : ''ஜனங்கள் ஆயிரம் சொல்வார்கள், அவர்களுக்காக என் தம்பியை நான் கொன்று விட முடியாது. நீங்கள் எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டு பேசு கிறீர்கள் என்பதே புரியவில்லை. வேண்டாம் வேண்டாம்— இந்த விரதம், பட்டினி எல்லாம் இருக்கச் சொல்லி அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம். முதலில் அவன் நிம்மதி யாகச் சாப்பிட்டுக் கொண்டு உடம்பைப் பார்த்துக் கொள்ளட்டும்'' இவ்வாறு அந்த அப்பாவி, சக்கரவர்த்தியின் மீது அர்த்தமில் லாமல் கோபித்துக் கொண்டு கோகுலன் அங் கிருந்து சென்ருன்.

# 7

பிராமணப் பிள்ளை கையிலிருந்து தேநீர் கோப்பையை வாங்கி வீசி எறிந்தான் விநோ தன். ஆனுல் அந்தத் தேநீர் எவ்வளவு ரகசிய மாகத் தயாரிக்கப்பட்டு இங்கு வந்தது, கீழே விழுந்து உடைந்த கோப்பை யாருடைய மனத்தைப் புண்படுத்தும் என்ற விவரம் விநோதனுக்கு எப்படித் தெரியப் போகிறது?

பகல் பூராவும் விநோதன் எல்லோரிட மும் ஏதாவது பேசிக் கொண்டிருந்தான். ஆனுல் தன் அண்ணன் நிழலைக் கண்டால் போதும் அங்கிருந்து நழுவிவிடுவான். அந்த நிழலும் ஒரு கணம் கூட விடாமல் அவனைத் தொடரும். விநோதன் முகம் திருப்பி மறு பக்கம் செல்வான். அடுத்த விணுடி கோகுல னும் ஏதாவது வேலையின் நிமித்தம் அந்தப் பக்கமே வந்து நிற்பான். நாள் முழுதும் இதே கதைதான்.

அன்று பிற்பகல் விநோதன் தன் அறையில் தனிமையில் அமர்ந்திருந்தான். அப்போது கையில் ஒரு காகிதத்துடன் கோகுலன் அங்கு வந்து சேர்ந்தான். காரணமில்லாமல் ஒரு வறட்டுச் சிரிப்பு சிரித்து விட்டுச் சொன்னுன். ''நீ கல்கத்தா வீட்டை விட்டுத்திடீரென்று ஹஜாரிபாக் சென்று விட்டாய். அப்பா இறந்த போது இதை எல்லாம் நீ கேள்விப்பட்டிருப் பாயே. இதெல்லாம் ஒரு அதிசயம்தான். உன் நிலைமையோ விசித்திரமாக இருக்கிறது. எங்களுக்கு நீ தகவலே கொடுக்கவில்லை. அது போகட்டும். அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். இப்போது இந்தக் காரியம் நடைபெற்று முடியட்டும். ஒரு உயில் எழுதி வைத்து விட்டதனுலேயே உனக்கு சொத்து இல்லை என்று அர்த்தமல்ல! தெரிந்ததா விநோதா! பணம் கொஞ்சம் வீண் செலவு ஆகும். போகட்டும். தெரிந்ததா? இங்கே உள்ளவர்களை உனக்குத் தெரியுமே! அயோக் கியப் பயல்கள். உனக்கும் தெரியுமே! அதைப் பற்றி எல்லாம் ஒன்றும் இல்லை. அப்பா சொல்லிவிட்டுப் போயிருக்கிருர். சொத்துக் கள் இரு சகோதரருக்கும் சொந்தம். இதை எதற்காகச் சொல்ல வந்தேன் என்ருல்,..... இருக்கட்டும். இதற்காக எதுவும் நின்றுவிடப் போவதில்லை. ஏண்டா விநோதா! உனக்குத் தான் தெரியுமே என் மனம் எப்படி என்று? இந்தா இதைப் பிடி! இரும்புப் பெட்டியின் சாவி. இதை உன்னிடம் வைத்துக் கொள். பண்டிதர்கள் எல்லோரையும் அழைத்திருக்கி ருேம். யாருக்கு எவ்வளவு சன்மானம் வழங்க வேண்டும், யார் யாருக்கு என்னென்ன மரியாதை செய்யவேண்டும், என்பதை நீதான் பார்த்துச் செய்ய வேண்டும். வேறு யாரும் செய்ய முடியாது. உன்னிடம் இரண்டொரு நிமிஷம் நின்று பேசக் கூட எனக்கு அவகாசம் கிடையாது''.

இதைக் கூறிவிட்டுச் சாவியையும் காகிதத் தையும் விநோதன் முன் வைத்துவிட்டுப் புறப் படலானுன். தூங்கி எழுந்தது முதல் இதைப் பற்றியே யோசித்து மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். விநோதன் கையினுல் அவை களை நகர்த்திவிட்டு, ''இந்த வேலைகளை எல்லாம் என்னிடம் கொடுக்காதே அண்ணு! இதை நான் தொடக் கூட மாட்டேன்'' என்ருன்.

கோகுலன் முகத்தில் தவழ்ந்த சிரிப்பு கணத்திற்குள் மறைந்து அவன் கல்லாய்ச் சமைந்து போனான். நாள் பூராவும் அவன் செய்த கற்பனையும் திட்டமும் கணப்பொழுதில் வீணாகிச் சிதறியது.

''தொட மாட்டாயா ஏன்?'' என்று கேட்டான்.

''அதைத் தொட வேண்டிய ஆவசியம் என்ன? நான் ஓர் அன்னியன். இரண்டு நாட்களுக்கு வந்திருக்கிறேன். காரியம் முடிந்ததும் போய் விடுவேன்!''

''போய் விடுவாயா. . . ?''

''சென்றுதானே ஆக வேண்டும்? அத்துடன் இது காசு விவகாரம். நானோ ஏழை. இல்லாதவன். பிறகு சரியானபடி கணக்குக் கொடுக்க முடியாமல் போனால், நீ என்னைத் திருடனாக்கி போலீசில் ஒப்படைத்து ஜெயிலுக்கு அனுப்பினாலும் அனுப்புவாய்!''

விநோதனின் இந்த வார்த்தைகளுக்குப் பதில் கூற கோகுலன் உதடுகள் துடித்தன. ஆனால் அவனால் பேச முடியவில்லை. அவன் சாவியையும் காகிதத்தையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான். தந்தையின் காரியங்களைத் தடபுடலாகச் செய்து கிராமத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று அவன் விரும்பினான். இப்போது அந்த ஆசை அவன் மனத்தினின்றும் கானல் நீரைப் போல மறைந்தொழிந்தது.

அன்று காலையிலிருந்தே அவனுடைய உற்சாகம், கூச்சல், ஆர்ப்பாட்டம் எதுவும் தலைதூக்கவில்லை. மாலையானதும் திடீரென்று அவன் தன் அறைக்குச் சென்று தன் கம்பளிப் படுக்கையை விரித்ததும் படுத்து விட்டான். இதைக் கண்ட அவன் மனைவி மனோரமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஏன், உடம்புக்கு முடியவில்லையா?''

கோகுலன் வருத்தத்துடன், ''இல்லை! நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்றான்.

''பின்னே ஏன் இப்படி வந்து படுத்துவிட்டீர்கள்?''

கோகுலன் பதில் பேசவில்லை. மனோரமா மீண்டும் கேட்டாள். 'மைத்துனருடன் ஏதாவது பேச்சுவார்த்தை நடந்ததா?'

'இல்லை.'

மனோரமா அவன் அருகே தரையில் செவ்வனே அமர்ந்து மெள்ளப் பேசினாள் : ''மைத்துனர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டீர்களா?''

கோகுலன் மௌனமாக இருந்தான். மனோரமா இன்னும் சற்று அருகே நகர்ந்து வந்து, ''தந்தைக்கு உடல் நலமில்லை என்ற தகவலே அவருக்குத் தெரியாதாம். ஹஜாரிபாக் என்று என்னவோ சொன்னீர்களே! அதெல்லாம் பொய்யாம், மோசமாம், உங்கள் தம்பி எவ்வளவு பொய்யும் பித்தலாட்டமும் கற்றிருக்கிறார்?'' என்றாள்.



கோகுலனுக்கு இந்த வார்த்தை பிடிக்கவில்லை. தன்னுடைய வம்சத்தில் தோன்றிய முதல் கிராஜுவேட் (பி.ஏ. பட்டதாரி) சகோதரனைப் பற்றி யார் எது சொன்னாலும் அவனுக்குக் கோபம்தான் வரும். அவர்கள் மீது சீறி விழுவான். ஆனால் இன்று ஏற்பட்ட மன வேதனையினால் அவன் உள்ளமும் உடலும் தளர்ந்து போயிருந்தது. ஆகையால் அவன் பேசாமல் இருந்தான். அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆனால் போதுமான வெளிச்சமில்லை. அதனால் கணவனின் முகபாவத்தைப் பார்த்து அவன் மனத்தைச் சரியாக உணர முடியவில்லை. அவள் சொன்னாள்; ''இங்கே பாருங்கள்! நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்போது பற்பல சூதுவாதுகள் நடக்கும். நீங்கள் எதையும் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள். என் அப்பாவிடம் கேட்காமல் இனி எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்யக் கூடாது. நாளைக் காலை வண்டியில் அவர் இங்கே வந்துவிடுவார். அவருக்கு நான் விவரமாகக் கடிதம் எழுதி இருக்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் சரி, அப்பா இங்கே வரும் வரையில் என் மனத்திலுள்ள பயம் நீங்காது.''

கோகுலன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான், ''அன் உப்பா வருகிறாரா?'' என்று கேட்டான்.

''வரமாட்டாரா? அவர் வராவிட்டால் இந்தத் தகராறுகளை எல்லாம் யாரால் சமாளிக்க முடியும்? ஆபத்துக் காலத்தில் அவரது மகளையும் மருமகனையும் விட்டுக் கொடுப்பாரா?''

கோகுலன் பேசாமல் கேட்டுக் கொண்டு இருந்தான். மனோரமா மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தவளாய்க் கூறலானாள்: ''கடை வியாபாரம் சம்பந்தமாக உள்ள சகல பொறுப்புக்களையும் நீங்கள் அவரிடம் ஒப்படைத்து விடுங்கள், போதும்; வேறு யாரிடமும் பார்க்கவோ கேட்கவோ அவசியம் இல்லை. யாராவது ஏதாவது கேட்டால் எனக்கு ஒன்றும் தெரியாது அவரிடம் கேளுங்கள் என்று சொல்லிவிடுங்கள். அவ்வளவுதான்! பிறகு மைத்துனராகட்டும், வேறு யாராகட்டும், 'அவரிடம் சென்று வாலாட்ட மாட்டார்கள்; தெரிந்ததா?'' இதைக் கூறிவிட்டு மனோரமா அர்த்தம் நிறைந்த பார்வையினால் தன் கணவன் முகத்தைப் பார்க்கலானாள். ஆனால் அந்த மங்கிய விளக்கொளியில் தன் மனைவியின் கூர்மையான அந்தப் பார்வையை கோகுலன் கவனித்தானோ இல்லையோ, ஆனால் அவன் வாய் திறந்து, ''ஆம், அல்ல'' என்று ஒன்றுமே சொல்லவே இல்லை. இதன் பிறகு மனோரமா ஏதேதோ அபூர்வமான யோசனைகளை எல்லாம் சொன்னாள். ஆனால் கணவன் எதற்கும் பதில் சொல்லாததைக் கண்டு, காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை அறிய முடியாமல் அப்போதைக்குப் பேசாமல் இருந்து விட்டாள். மறுநாள் காலையில் கோகுலன் மிகுந்த சலிப்பு அடைந்தவனாய் தன் தாயின் அறையின் முன் வந்து நின்று சொன்னான் : ''அம்மா! விநோதன் இரும்புப் பெட்டிச் சாவியை உன்னிடம் கொடுத்தானா?''

பவானி சுருக்கமாக, ''இல்லையே'' என்றாள்.

சாவி கோகுலனிடம்தான் இருந்தது.



அவன் வேறு ஒரு கருத்தை மனத்தில் கொண்டு தாயிடம் சும்மாவாவது இப்படி ஒரு சரடு விட்டான். 'இரும்புப் பெட்டியின் சாவியை விநோதனிடம் கொடுத்து விட்டேன் என்பதை அம்மா கேட்டால் அவள் பயந்து விடுவாள்' என்று நினைத்தான். ஆனால் தாயின் சுருக்கமான பதில் அவன் திட்டத்தைக் குலைத்து விட்டது.

''என்ன சொல்லலாம்? என்ன செய்தால் தாயை மீண்டும் குடும்பப் பிரச்சினைகளில் இழுக்க முடியும் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் திகைத்தான். சிறிது நேரம் பேசாமல் நின்று விட்டு பிறகு. ''சம்பு, தர்பாரி இருவரும் அத்தை வீட்டாரை அழைத்து வரச் சென்றார்கள். அவர்கள் இன்னும் வந்து சேரவில்லை'' என்றான்.

பவானி இனிய குரலில் சொன்னாள் : ''ஏனென்று தெரியவில்லையே? ஏன் இன்னும் வந்து சேரவில்லை?'' என்றாள்.

''அம்மா நீ அவர்களை அழைக்க ஆட்களை அனுப்பச் சொன்னது நல்லதாயிற்று. அவர்கள் வரவில்லை என்றால் அது அவர்கள் விருப்பம். இனி நம்மீது குற்றம் இல்லை. அம்மா இதை நினைத்தாலே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீ ஒவ்வொன்றையும் எவ்வளவு முன் யோசனையுடன் சொல்கிறாய்?' நீ இல்லை என்றால் எங்களால். . . . .''

பவானி மௌனமாக இருந்தாள். கோகுலனின் இந்தப் புகழ் வார்த்தைகளைக் கேட்ட பிறகும் துயரம் தோய்ந்த அவள் முகத்தில் சற்றும் தெளிவு ஏற்படவில்லை. கோகுலன் வெகு நேரம் வரை அங்கேயே நின்று கொண்டிருந்தான். பிறகு மெள்ள மெள்ள அங்கிருந்து சென்றான்.

வெளியே வந்ததும் கோகுலன் திகில் அடைந்து போனான். ஏனென்றால் அழைப்பை ஏற்றுக் கொண்டு டெபுடி கமிஷனர், வக்கீல், முன்சீப் மற்றும் சில பிரமுகர்கள் வந்துவிட்டனர். விநோதன் அவர்களுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான். வந்திருந்த பெரிய மனிதர்களைத் தன் தம்பிக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும் என்று துடிதுடித்தான் கோகுலன். விநோதன் எதிரே அமர்ந்திருந்தபடியால், தன் தம்பி எத்தனை பெரிய பெரிய பரீட்சைகள் பாஸ் பண்ணி இருக்கிறான் என்பதை அவர்கள் முன் கூற அவனுக்குத் தைரியம் வரவில்லை. ஏனென்றால் அவன் அதைக் கேட்டுக் கோபித்துக் கொள்வான்.



கோகுலன் சற்று நேரம் தயங்கிவிட்டு, மெள்ள அந்த உத்தியோகஸ்தர்கள் முன் வந்து நின்று, அவர் முன் குனிந்து, வணக்கம் செலுத்திவிட்டு, அடக்கத்துடன் 'இவன்தான் என் தம்பி விநோதன். ஹானர் கிராஜுவேட்' என்றான்.

விநோதன் கண்களில் கோபம் கொப்பளிக்க அண்ணன் முகத்தைப் பார்த்தான். ஆனால் கோகுலன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் அவர்கள் முன் கைகுவித்து 'நீங்கள் எல்லோரும் வந்தது நான் செய்த பெரும் பாக்கியம். விநோதா. நீ ஏன் அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசவில்லை? நீங்கள் பெரும் பதவி வகிக்கும் அதிகாரிகள்—உங்களுடன் நாட்டுமொழியில் பேசினால் அது நன்றாக இருக்குமா? யாராவது கேட்டால்தான் என்ன சொல்வார்கள்?'' என்றான்.

வந்திருந்த பிரமுகர்கள் தலைநிமிர்ந்து பார்த்தார்கள். டெபுடி கமிஷனருக்குச் சற்று வெட்கமாய்ப் போய்விட்டது. சகிக்க முடியாத அவமானத்தால் விநோதனின் முகமும் கண்களும் சிவந்துவிட்டன. தன் அண்ணனின் சுபாவம் அவனுக்கு நன்றாகத் தெரியும். இவனைத் தடுக்காவிட்டால் இவன் இன்னும் ஏதாவது உளறிக் கொட்டுவான் என்று நினைத்து, கோகுலனைப் பார்த்து ''அண்ணா, சற்று வாயேன், உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்' என்று கூறி அவனை, கைகளைப் பற்றிப் பலவந்தமாக ஒரு பக்கம் இழுத்துச் சென்றான். பிறகு ''அண்ணா, நான் இப்பொழுதே இந்த வீட்டை விட்டுப் போக வேண்டுமென்று விரும்புகிறாயா? நீ இந்த மாதிரியே பேசிக் கொண்டிருந்தால் பிறகு நான் ஒரு நிமிஷம் கூட இந்த வீட்டில் இருக்க மாட்டேன்'' என்றான்.

கோகுலன் பயந்து போய் ''ஏன்? என்ன நடந்துவிட்டது?'' என்று கேட்டான்.

''நான் உன்னிடம் எப்போதும் சொல்லிக் கொண்டு வருகிறேன். இந்த மாதிரிக் கொடுமையை என்னால் சகிக்க முடியாது என்பதை! அப்படி இருந்தும் நீ என்னை விட்டபாடில்லை. உனக்குத் தெரியுமா? என்னைப் போல் பரீட்சை பாஸ் செய்தவர்கள் இந்த நாட்டில் பலர் தெருத் தெருவாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள், தெரியுமா?'' இதைக் கூறிவிட்டு வருத்தத்தாலும் கோபத்தாலும் முகம் கடுகடுக்கத் தன் இடத்திற்குச் சென்று அமர்ந்தான்.

கோகுலனும் வெட்கத்தால் மனம் நோக அவ்விடம் விட்டகன்றான். போகும்போது ''இனிமேல் இந்த மாதிரிக் காரியம் செய்ய மாட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

டெபுடி கமிஷனர் புன்முறுவலுடன் விநோதன் முகத்தைப் பார்த்து விட்டுப் பிறகு மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

நீமதல்லோவாலா வர்த்தக நிறுவனத்தை விட்டு கோகுலனின் மாமனார் இங்கு வந்து சேர்ந்தார். அவர் தலை நரைத்து வெளுப்பாக இருந்தாலும் மீசை கறுப்பாகவே இருந்தது. கறுத்த மேனியும் வக்ர பார்வையும் தொப்பையும் பார்க்கச் சற்று அருவருப்பாகவே இருந்தார். அவர் வேலை பார்த்த நிறுவனத்தில் ஊழியம் செய்யும் பையன்கள் அவரை 'கப்பல் காக்கை' என்று பெயரிட்டு அழைப்பது வழக்கம். வந்து சேர்ந்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே காரியம் நடக்கும் வீட்டின் நிர்வாகத்தை ஏற்று அதிகாரியாகிவிட்டார். இரண்டு மணி நேரத்திற்குள் தெருவிலுள்ளவர்களிடம் அளவளாவித் தன்னை அறிமுகம் செய்து கொண்டு விட்டார். இத்தகைய திறமையும் சிக்கனமும் வாய்ந்த மாமனாரைக் கண்டு, கோகுலன் பூரித்துப் போனான். மகளும் மருமகனும் மிகவும் வற்புறுத்தியதன் பேரில் இந்த விவகாரங்களை நிர்வாகம் செய்யத் தான் வந்ததாக உறவினர்களிடமும் மற்றவர்களிடமும் மாமனார் நிமாயி ராய் கூறிக்கொண்டார்.

( அடுத்த இதழில் முடியும் )



# சரத்சந்திரரின் கடிதங்கள்

அ. கி. ஜயராமன்

ரங்கூன்,
14—9—1913.

திரு பணீந்திரநாத பால் அவர்களுக்கு,

அன்பு மிக்க பணீந்திர பாபு அவர்களுக்கு நமஸ்காரம்! தங்கள் தாய் என்னைப் பற்றி விசாரித்ததாக எழுதி இருந்தீர்கள். இதை என்னுடைய பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அவர்களிடம் சொல்லவும், நான் தணமடைந்துவிட்டேன். என்னைப் பற்றிக் கவலைப்பட்டு விசாரிப்பவர்கள் உலகில் ஒருவரும் இல்லை என்றே கூறலாம். ஆகையால் என்னைப் பற்றி யாராவது விசாரிக்கிறார்கள் என்றால் என் உள்ளம் நன்றி உணர்ச்சியால் நிரம்பி விடுகிறது. என்னைப் போன்ற துர்பாக்கியமுள்ளவர்கள் உலகில் மிகக் குறைவாகவே இருப்பார்கள். புகழ் வேண்டும் என்ற பசி எனக்கிருந்தால், முன்னமே முயற்சி செய்திருப்பேன். இவ்வளவு நாட்கள் சும்மா இருந்திருக்க மாட்டேன்.

ஒரு பத்திரிகையில் வழக்கமாக எழுதி வருகிறேன். அதுவே போதுமானது. என்னுடைய எழுத்துக்களை விரும்புகிறவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கட்டும். இதுவே என் விருப்பம். என்னுடைய சிறு கதைகள் எப்படியோ நீண்டு விடுகின்றன. அதுதான் சிரமமாக இருக்கிறது. இன்னொரு விஷயம். நான் ஏதோ ஒரு கருத்தை வைத்துக் கதையை ஆரம்பிக்கிறேன். அக்கருத்து அதில் பூரணமாக வெளியாகாவிடில் அதை நான் முடிக்க மாட்டேன். ''பிந்ததேர்சேலே' (பிந்துவின் செல்வன்) உங்களுக்குப் பிடித்திராது என்று நினைக்கிறேன். அதை வெளியிடத் தயங்குவீர்கள். என் மனம் வருந்தக் கூடாதென்று எண்ணி அதைப் பிரசுரித்து. நீங்கள் சிரமப் படக் கூடாதென்றே உங்களை முன்கூட்டி எச்சரித்திருந்தேன். அதாவது முதலில் நம்பிக்கை இருக்க வேண்டும். உண்மையிலேயே நன்றாக இருக்கிறதென்று நினைத்து அதை வெளியிட்டு விட்டீர்கள். நல்ல காரியம்தான். வாசகர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். அது அவர்கள் தீர்ப்பு. 'பெண்மையின் மதிப்பு' என்ற கட்டுரையின் மறுபகுதியை எழுதி முடித்து விட்டு வேறு ஒன்றை ஆரம்பிக்கிறேன். இதைத் தொடர்ந்து பதினான்கு தலைப்புகளில், பதினான்கு கட்டுரைகள் எழுத இருக்கிறேன். ''பெண்மையின் மதிப்பு'க்கு நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து 'கடவுளின் மதிப்பு', 'தர்மத்தின் மதிப்பு', 'வேதாந்தத்தின் மதிப்பு', 'சத்தியத்தின் மதிப்பு' என்று இப்படித் தொடர்ந்து எழுதிக் கொண்டு வரலாம் என்று எண்ணியிருக்கிறேன்.

''சரித்ரஹீன்'' (ஒழுக்கம் கெட்டவள்) நாவலில் பதினான்கு அத்தியாயங்கள் எழுதி விட்டேன். மற்ற பகுதிகள் இன்னும் 'ரஃப்' காப்பியாக இருக்கின்றன. அவைகளைத் திருத்திவேறு நகல் எடுத்து அனுப்ப வேண்டும். இதன் கடைசி அத்தியாயங்களைப் பிரமாதமாக எழுதத் திட்டமிட்டுள்ளேன். வாசகர்கள் முதலில் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். ஆனால் முடிவைப் படித்த பிறகு அவர்கள் கருத்து மாறிவிடும். நான் பொய்ப் பாராட்டுக்களை விரும்பவில்லை. என் அளவை அறிந்தே பேசுவேன். ஆகையால் 'சரித்ரஹீன்' நாவலின் கடைசிப் பகுதி மிக நன்றாகவே இருக்கும். அதை ஒழுக்கமுள்ளது என்று நினைத்தாலும் சரி, ஒழுங்கமற்றது என்று நினைத்தாலும் சரி, ஆனால் இதில் ஓர் உண்மைப் பொருள் இருக்கிறது என்பதைக் கூறுவார்கள். இதில் உங்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் என்று பயப்பட என்ன இருக்கிறது? தவிர, நான் பகவத் கீதைக்கு வியாக்யானம் எழுதவில்லையே! என்னுடைய புஸ்தகத்தின் பெயரே 'சரித்ரஹீன்' தானே! வாசகர்களுக்கு முதலிலேயே நான் இதை சூசகமாகத் தெரிவித்திருக்கிறேனே! இதை நான் தர்மப் பிரச்சார சபையினருக்காகவோ அல்லது பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்திற்காகவோ எழுதவில்லை. இதைக் குறை கூறுபவர்கள் மஹான் டால்ஸ்டாயின் 'ரிஸரக்ஷன்' (புத்துயிர்) நாவலை ஒரு முறை படித்தார்களானால் 'சரித்ரஹீனை'ப் பற்றிக் குறை கூற ஒன்றும் இருக்காது. தவிர, கலைநோக்கில் மனோ தத்துவ ரீதியில் சிறந்த நூல் என்று கருதப்படும் நூலில் ஒழுக்கக் கேட்டைப் பற்றிய சம்பவம் ஒன்று இருந்தே தீரும். ''கிருஷ்ணகாந்தன் உயில்' என்ற நூலில் இது இல்லையா? (பங்கிம் சந்திரரின் நாவல்). பணம்தான் எல்லாம் என்று இருக்கக் கூடாது. நாட்டுப் பணி செய்ய வேண்டும். நாலைந்து பேர்தான் முதலில் அநீதியை எதிர்த்துக் குரல் எழுப்புகிறார்கள் என்றால் அது போதுமே. இதைவிட மகிழ்ச்சிக்குரிய விஷயம் வேறென்ன இருக்க முடியும்? இன்று மக்கள் இந்தச் சாதாரண மனிதன் பேச்சுக்குச் செவி மடுக்கத் தயங்குவார்கள். ஆனால் ஒரு நாள் செவி கொடுத்துக் கேட்டே தீர வேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கைக் கொண்டுதான், நான் ஒரு சமயம் இலக்கிய மன்றம் ஒன்றை ஆரம்பித்தேன். இன்று என்னுடைய அந்த மன்றமும் இல்லை, அந்தச் சக்தியும் இல்லை.

உங்கள்,

சரத்சந்திரரின் கடிதங்கள் அவருடைய மனோ நிலையையும், இலட்சியத்தையும், துணிவையும் எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. அவருடைய கடிதங்களில் இரண்டினை ஈண்டு வெளியிட்டுள்ளோம். இக்கடிதங்கள், ''யமுனா'' என்ற பத்திரிகையின் ஆசிரியர் திரு பணீந்திரநாத் பால் என்பவருக்கு எழுதப்பட்டவைகளாகும். ''யமுனா'' பத்திரிகையில் சரத் பாபுவின் கதைகள் வெளிவந்துள்ளன. வாசகர்கள், மற்றும் விமர்சகர்களின் கருத்தை அறிந்து கொள்வதில் சரத்சந்திரருக்கு மிகுந்த ஆர்வம் இருந்துள்ளது என்பதை இக்கடிதங்கள் எடுத்துக் காட்டுகின்றன.



ரங்கூன்,
10—10—1913

அன்புள்ள பணீந்திர பாபுவுக்கு!

'பாராதீதி' (நெஞ்சிலே பட்ட வடு) கிடைத்தது. பரவாயில்லை. என்னுடைய ஆரம்ப காலப் படைப்பு அது · · ·

இப்போதெல்லாம் மாதப் பத்திரிகைகளில் வரும் சிறு கதைகளில் பெரும்பான்மையானவற்றைப் பற்றி கருத்துக் கூறவே முடியாது. அவை கதைகளுமல்ல. இலக்கியப் படைப்பும் அல்ல. ஏதோ பேனாவில் மையைத் தோய்த்து வெள்ளைக் காகிதத்தை எழுத்துக்களால் நிரப்பி இருக்கிறார்கள். இந்த வாசகர்களுக்குக் கொடுமை இழைப்பதென்றே கூறிவிடலாம். எத்தனையோ கதைகள் வெளிவருகின்றன. ஒன்றுகூட நன்றாக இல்லை. பெரும்பாலானவை படிக்கவே தகுதியற்றவை. வெறும் வார்த்தைகளை வைத்துச் சிலம்பம் விளையாடுகிறார்கள். அதில் கருத்தோ, பாவமோ, ஒன்றுமில்லை. ஏதோ சம்பவங்களைக் குவித்து, அதன் தலையில் வலுக் கட்டாயமாக சோக உணர்ச்சியை ஏற்றி வைக்கிறார்கள். வயதான விலைமகள் ஒருத்திக்குக் குமரி வேஷம் போட்டு அவளை மக்கள் முன் நடனமாட விடுகிறார்கள். இவைகளைப் படிக்கும் போது வெறுப்பும், வருத்தமும்தான் ஏற்படுகிறது. அவமானமாகக் கூட இருக்கிறது. இந்த எழுத்தாளர்களிடம் எனக்கு அனுதாபம் இல்லை என்று சொல்லவில்லை. இப்படிப் பொறுப்பின்றிக் குப்பையைக் குவித்து வைத்திருக்கிறார்களே என்று துக்கமாக இருக்கிறது. சிறு கதைக்கு இத்தகைய அவலநிலை ஏற்பட வேண்டுமா?

''சரித்ரஹீன்'' சம்பந்தமாக இரண்டொரு வார்த்தை மீண்டும் கூறுகிறேன். இது சம்பந்தமாக யார் யார் என்ன கூறுகிறார்கள் என்பதை எனக்கு அவ்வப்போது எழுதவும். இதைப் பற்றி வாசகர்களுக்குப் பலவிதமான கருத்துக்கள் இருக்கும். கதை இன்னதென்றே நிர்ணயிக்க முடியாது. அதை ஒழுக்கம் கெட்டதென்று தான் (Immoral) கூறுகிறார்கள். ஆனால் ஆங்கில இலக்கியம் படித்தவர்களுக்கு இது புதுமையாகவோ, இழிவானதாகவோ தோன்றாது. அவர்கள் மனோதத்துவ ரீதியில் எத்தனையோ ஒழுக்கக் கேடான சம்பவங்களை இலக்கியத்தில் பதித்து, அதன் விளைவினால் மனித உள்ளத்தின் உண்மை மதிப்பை உலகுக்குக் காட்டுகிறார்கள். அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நமது இலக்கிய விமர்சகர்களின் கருத்தை எனக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் கிடைத்ததும் மீண்டும் எழுதுகிறேன்.

உங்கள்,
**சரத் பாபு**

[குறிப்பு: சரத் பாபுவின் 'சரித்திரஹீன்' (தமிழில் சாவித்திரி) என்ற நாவல் வெளி வந்தபோது வங்க வாசகர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் புத்தகம் வெளி வந்த ஒரு மாதத்திற்குள் ஆயிரம் பிரதிகள் விற்பனையாகிவிட்டன. அதை விமர்சகர்கள் குறைகூறக் கூறப் படிப்பவர்களின் தொகை அதிகரித்து வந்தது. அதைப் பற்றிய கருத்தை அறியவே சரத் பாபு மேற்கண்ட

# சரத் சந்திரரின் ஆக்கங்கள்

தொகுப்பு
த. நா. குமாரஸ்வாமி

சரத்சந்திரரின் இலக்கியங்கள் வாழ்க்கையின் பல பிரச்சினைகளை ஆராய்பவை. அவற்றில் காணும் எளிய நடையும், உண்மைகளை மறைக்காமல், வெளியிடும் தனிச்சிறப்பும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்தன. வங்காளிகள் மட்டுமல்ல, இந்தியாவில் எப்பகுதியினரும் அவற்றை வரவேற்றனர். இந்திய மொழிகள் அனைத்திலும் அவருடைய இலக்கியங்கள் நன்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவருடைய நாவல்கள் பல, நாடகங்களாகவும், திரைப்படங்களாகவும் அழியாப் புகழ் நாட்டியுள்ளன. அவர் இயற்றிய நூல்கள் பின்வருமாறு:—

(1) படதிதி (நாவுல்-1913) 1907-ல் 'பாரதி' என்ற பத்திரிகையில் வெளியாகியது. ஆசிரியரின் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை.

பழிக்குப்பழி'—ஆர். ஷண்முகசுந்தரம் தமிழாக்கம். (1959).

(2) விராஜ்பௌ (நாவல-1914). இது 'பாரத வர்ஷ' என்ற மாதப் பத்திரிகையில் தொடர்கதையாக வந்தது-இது நாடக உருவிலும் அமைக்கப்பட்டது.

(3) பிந்துர்சேலே-மற்றும் கதைகள் (குறுநாவல்-சிறுகதைகள்-1914). 'ராமேர் ஸுமதி'—'பதநிர்தேச' இதில் அடங்குவன. 'யமுனா' என்ற பத்திரிகையில் தொடர்ந்து வந்தவை. இவை நாடகங்களாகவும் வந்துள்ளன. தமிழில் மொழிபெயர்ப்பு-அமுல்யன்'-(த. நா. குமாரஸ்வாமி மொழி பெயர்த்தது).

(4) பரிணிதா (குறுநாவல்-1914)-'யமுனா' பத்திரிகையில் முதலில் வெளிவந்தது. சினிமாவாக வந்துள்ளது. 'மாலையிட்டவள்' என்று தமிழ்வடிவில் நாடகமாக த. நா. குமாரஸ்வாமி செய்தது. 'லலிதா' தமிழில் அ. கி. ஜயராமன். (1944).

(5) பண்டித மஷாய் (நாவல் 1914)-'பாரத வர்ஷ' மாசிகையில் தொடர்ந்து வந்தது. 'புயல் ஓய்ந்தது'-தமிழாக்கம்' ஆர். ஷண்முக சுந்தரம்.

(6) மேஜ்திதி-மற்றும் கதைகள்-1915). 'தர்பசூர்ண'-'ஆந்தாரே ஆலோ' சிறுகதைகள்' 'பாரதவர்ஷ'வில் தொடர்ந்து வந்தவை. 'ஹேமாங்கினி' எஸ். குருஸ்வாமி (1943) அதுவே ஆர். ஷண்முக சுந்தரத்தின் ஆக்கம். அதுவே அ.கி. ஜயராமனின் ஆக்கம்.

(7) பல்லீ ஸமாஜ் (நாவல்-1916). 'பாரத வர்ஷ'வில் வெளிவந்தது. 14 பதிப்புக்கள்; இதன் நாடக வடிவம்-'ரமா'-சரத் சந்திரரே எழுதியது-'கிராம சமாஜம்'-தமிழில் அ.கி. ஜயராமன்.' 'ரமா'-ஆர் ஷண்முக சுந்தரம். மற்றொன்று-ஆர். சௌரிராஜனுடையது.

(8) சந்திரநாத் (குறுநாவல்-1916)-யமுனா பத்திரிகையில் தொடர்ந்து வந்தது. தமிழில் அதே பெயரில் ஆர். ஷண்முக சுந்தரம். 'மாலையிட்ட மங்கை' என்ற பெயரில் கண்ணதாசன் புரடக்ஷனின் திரைப்படம்.

(9) வைகுந்தன் உயில் (கதை-1916). 'பாரத வர்ஷ'வில் வெளியாகியது. இதன் தமிழ் வடிவம் அதே பெயரில். ஆர். ஷண்முக சுந்தரம் 1952.

(10) அரக்ஷணீயா (கதை-1916). 'பாரதவர்ஷ'வில் தொடராக வந்தது.



(11) ஸ்ரீகாந்த்-முதல் பாகம் (வாழ்க்கைச் சித்திரம்-1917). ஸ்ரீகாந்தனின் யாத்திரை வரலாறு. (ஸ்ரீகாந்தேர் ப்ரமண காஹினி) என்ற பெயரில் 'பாரதவர்ஷ'வில் வெளிவந்தது. இதன் ஆங்கிலத்தை கே. ஸி. ஸேன்—தியோடோஷியா —இருவருமாக மொழி பெயர்த்தனர். 1922-ல் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகப் பதிப்பாக வந்தது- ஆர். ஷண்முகசுந்தரத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு இதே பெயரில் (1959).

(12) தேவதாஸ் (நாவல் -1917)-முதலில் 'பாரதவர்ஷ'வில் தொடராக வெளிவந்தது. அ.கி. ஜயராமனின் தமிழாக்கம் இதே பெயரில் (1950), இதுவே, தினகரனின் மொழி பெயர்ப்பு. (1945) இது தமிழில் திரைப்படமாகவும் வந்துள்ளது.

(13) நிஷ்க்ருதி (கதை-1917)-முதலில் 'பாரத வர்ஷ'வில் வந்தது. 1944-ல் ஸ்ரீதிலிப் குமார் ராய்-'டெலிவரன்ஸ்' (Deliverance) என்ற பெயரில் ஆங்கிலத்தில் செய்தார். அதனை அரவிந்தர் செவ்வையாக அமைத்தார். ரவீந்திரநாத் தாகூர் அதற்கு முன்னுரை வழங்கினார்.

(14) காசிநாத் (கதை) இப்பதிப்பில் சேர்ந்த மற்ற கதைகளாவன. (1917). 'ஆலோ ஓ சாயா'-'மந்திர்' (குந்தலீன் பரிசு பெற்ற சரத்தின் முதல் கதை அவர் தம் மாமன் ஸுரேந்திர நாத் காங்குலியின் பெயர் வைத்து எழுதியது). 'போஜ்ஜா' (யமுனா பத்திரிகையில் வந்தது), 'அநுபமார் ப்ரேம' (சாஹித்ய பத்திரிகையில் வந்தது.). 'பால்யஸ்ம்ருதி' (ஹா ஹித்ய பத்திரிகையில் வந்தது). 'ஹரிசரண்' (சா ஹித்ய பத்திரிகையில் வந்தது) தமிழில் 'காசிநாதன்'-அ.கி. ஜயராமன். மற்றொன்று-ஆர் ஷண்முக சுந்தரம்



...து. 'அநுபமா' தமிழில் அ.கி. ஜயராமன்.



(15) சரித்ரஹீன் (நாவல்-1917). 'யமுனா' சஞ்சிகையில் சில பகுதிகள் வெளியாயின. ஆர். ஷண்முகசுந்தரத்தின் தமிழாக்கம் ''சாவித்திரி''-(1949).

(16) ஸ்வாமி (கதை-1918). இதில் அடங்கிய மற்ற கதை-'ஏகாதசி, பைராகி' முதல் கதை 'நாராயண்' என்ற மாத இதழில் வெளி வந்தது. மற்றது, 'பாரத வர்ஷ'வில். இதன் தமிழாக்கம் 'ஸௌதாமினி (த. நா. குமாரஸ்வாமி).

(17) தத்தா (நாவல்-1918) 'பாரதவர்ஷ'வில் முதன்முதல் தொடராக வந்தது. இதன் நாடக வடிவம் 'விஜயா'/பள்ளி நட்பு'-தமிழாக்கம்-ஆர். ஷண்முகசுந்தரம் (1961).

(18) ஸ்ரீகாந்த் (2-ம் பாகம்-1918)-முதன் முதல் 'பாரதவர்ஷ'வில் வெளியாகியது.

(19) சபி (கதை-1920). இதில் அடங்கிய மற்றும் கதைகளாவன. 'விலாஸி'-மாம்லார்ஃபல்-இவை முறையே 'ஆகமனீ' என்ற பூஜா இதழிலும், 'பாரதீ'-வருடாந்தர மலரான 'பார்வணீ' பத்திரிகையிலும் பிரசுரமானவை.

(20) கிருஹதாக (நாவல்-1920)-'பாரதவர்ஷ'வில் தொடர் கதையாக வந்தது. 'அசலா'-ஆர். ஷண்முகசுந்தரத்தின் தமிழாக்கம் (1941). 'கிருகதாகம்'-அ.கி. ஜயராமன் (1940)

(21) பாமுநேர் மேயே (நாவல்). சிசிர் வெளியீட்டாரின் 'நாவல் வரிசை' என்ற பதிப்பில் முதன்முதல் வெளியாகியது. (1921). 'சந்த்யா' அ.கி. ஜயராமனின் தமிழாக்கம். 1958-3ஆம் பதிப்பு.

(22) பாரோயாரி உபன்யாஸ் (1921). பன்னிருவர் எழுதிய ஒரு பொருள் பற்றிய நாவலின் 21-22-ஆம் அத்தியாயங்களை மட்டுமே சரத் எழுதினார்.

(23) தேநா பாவநா (நாவல்-1923)-'பாரத வர்ஷ'வில் தொடர்ந்து வெளியாகியது. இதன் நாடக வடிவம் 'ஷோடசீ'-சரத் சந்திரரே ஆக்கியது. 'பைரவி' என்ற பெயரில் த. நா. குமாரஸ்வாமி-தமிழில் மொழி பெயர்ப்பு.

(24) நாரீர் மூல்ய (கட்டுரை) சரத் தம் அக்காள் 'அநிலாதேவி' யின் பெயரை வைத்து எழுதியது. 'யமுனா' பத்திரிகையில் முதலில் வெளியிடப்பட்டது.

(25) நவ விதான் (நாவல்-1924)'பாரதவர்ஷ'வில் தொடர்கதையாக வந்தது.

(26) ஹரிலக்ஷ்மீ (கதைகள்)-'மஹேஷ்'- 'அபாகீர் ஸ்வர்க' என்ற இரண்டு கதைகள் இதில் அடங்குவன. ஹரிலக்ஷ்மீ 'சாரதியா வஸுமதி' இதழிலும்-மற்றவை 'வங்கவாணி'யிலும் வந்தவை.-தமிழில் கு. ப. ராஜகோபாலனின் மொழி பெயர்ப்பு.

(27) பதேர் தாபீ (அரசியல் சம்பந்தமான நாவல்-1926)-முதலில் வங்கவாணியில் வெளியாகியது. இது புத்தக வடிவில் வந்தபொழுது பிரிட்டிஷ் அரசாங்கம் இதனை அடக்கி விட்டது-தமிழில் 'பாரதி' திரு. அ. கி. ஜயராமன் மொழிபெயர்ப்பு (1951). 'குமுதினி'யின் தமிழாக்கம் 'வாழவேண்டுவோர்'

(28) ஸ்ரீகாந்த் (3-ஆம் பாகம் 1927). 'பாரத வர்ஷ'வில் இதன் சில பகுதிகளே முதலில் வெளியாயின.

(29) 'தருணேர் வித்ரோஹ' (கட்டுரைகள்-1929) பூர்வ வங்க இளைஞர் சங்கத்தில் தலைமை தாங்கி-ஆற்றிய உரை. 'ஸத்ய ஓமித்ய' என்ற மற்றொரு கட்டுரையும் இதில் அடங்கும்.

(30) சேஷப்ரச்ன(நாவல்-1931)'பாரதவர்ஷ'வில் தொடர்கதையாக வந்தது. ஆனால் புத்தக வடிவில் வந்தபோது முற்றிலும் புதுவடிவில் திருத்தி எழுதப்பட்டது. இதன் தமிழ் வடிவம் 'கமலா'-த. நா. ஸேனாபதியின் மொழிபெயர்ப்பு.

(31) ஸ்வதேச ஓ ஸாஹித்ய (கட்டுரை) ஆரியா பப்ளிஷிங் கம்பெனி இதனை வெளியிட்டது. பல சமயங்களில், பல பத்திரிகைகளில் சரத் எழுதிய கட்டுரைகள் ஒருங்கே திரட்டப்பட்டு இதில் இடம் பெற்றுள்ளன. சுதேசி இயக்கம், இளைஞர் எழுச்சி, இலக்கியப் போக்கு இவற்றைப் பொருளாகக் கொண்டவை. தமிழில் இன்னும் மொழி பெயர்க்கப்படவில்லை.

(32) ஸ்ரீகாந்த் (4-ஆம் பாகம்-வாழ்க்கைச் சித்திரம்)-'விசித்ரா' என்ற பத்திரிகையில் தொடர்ந்து வெளியாயிற்று.

(33) அநுராதா-ஸதீ-ஓ பரேஷ் (கதைகள்) அநுராதா 'பாரதவர்ஷ'விலும் ஸதீ 'வங்கவாணி'யிலும் 'பரேஷ்' 'சரதேர்ஃபுல்' என்ற பூஜா மலரிலும் வெளியாயின.

(34) விப்ரதாஸ் (நாவல்-1935). 'விசித்ரா'வில் தொடர்ந்து வெளியிடப்பட்டது. தமிழில் அ. கி. ஜயராமன், அதே பெயரில் (1955).

(35) ரஸசக்ர (பன்னிருவர் யாத்த நாவல்)-இந்நாவலின் முதற் பகுதியை சரத் எழுதினார். இது 'உதார்' என்ற பத்திரிகையில் வெளியாகியது.

(36) சரத்சந்த்ர ஓ சாத்ர ஸமாஜ்-(கட்டுரை) பல சமயங்களில் மாணவர் பிரச்சினைகளைக் குறித்து சரத் எழுதிய கட்டுரைத் தொகுப்பு.

(37) சேலே வேலார் கல்ப (கதைகள்). இதில் வரும் கதைகளாவன. லாலு (மௌசாக்கில் வெளிவந்தது.) 'சேலே தாக' பூஜா மலரான 'சோட்தே ஆனுரிகா'வில் வந்தது. கோல் காதார் நுதன்தா-கல்பேர் மணிமாலா' என்ற மலரில் வந்தது) லாலு-(பூஜா மலரான ஸோநார் காட்டி'

யில் வந்தது) 'ஏக்டா திநேர் காஹிநீ) 'பாடசாலா' என்ற சஞ்சிகையில் வெளி வந்தது. தேவ்கரேர் ஸ்ம்ருதி 'பாரத வர்ஷா'வில் வந்தது. இவை யாவும் சிறுவர்களுக்கு ஆன இலக்கியங்கள்.

(38) சுபதா (நாவல்-1938)-'மாலதி' ஆ. கி. ஜயராமன் தமிழாக்கம் (1958).

(39) சேஷேர் பரிசப் (நாவல்-1938). அரை குறையாக நின்றுவிட்டது. இதனை முடித்தவர் ஸ்ரீமதி ராதாராணிதேவி ஆவார்.

இவ்வம்மையார் சரத் பாபுவிடம் நெருங்கிய நட்புக் கொண்டு பழகிய எழுத்தாளர். அவருடைய வாழ்க்கை வரலாறு ஒன்றை வரைந்தவர்.

(40) ஜாகரண் (நாவல்) இதுவும் சரத் விட்டுச் சென்ற முற்றுப்பெறாத நவீனம்.

இப்படி இன்னும் பல கட்டுரைகள்-இலக்கியச் சித்திரங்கள்-வெளிவராமல் இருக்கின்றன. சரத்சந்திரரின் நாவல்களும், சிறு கதைகளும் மொத்தமாக இன்று வெளியாகியுள்ளன.

## சரத் சந்திரர் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழில் வெளியிடப்பட்டுள்ள சரத் சந்திரர் நூல்கள்!

1) ஹேமாங்கினி
2) அநுராதா
3) காசிநாதன்
4) கர்வபங்கம்
5) மதனி
6) வாழ்க்கைவழி
7) அனுபமாவின் காதல்

(1–7:) 'ஏழு நாவல்கள்' என்ற பெயரில் இந்நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

8) தேவதாஸ்
9) சந்திரநாதன்
10) கண்ணன் தம்பி
11) ஞானதா
12) நெஞ்சிலே பட்ட வடு
13) பிந்துவின் செல்வன்
14) உபாத்தியாயர் மனைவி
15) சைலஜா
16) கிராமசமாஜம்
17) மணமானவள்
18) கணவன்
19) கிருஹதாகம்
20) சாவித்திரி

1 முதல் 21 வரை உள்ள நூல்களை வெளியிட்டோர்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—600 001

21) ஏழையின் சொர்க்கம்
22) கனவு முடியவில்லை

(21–22:) சரத்சந்திரரின் கதைகள் முழுதும் அடங்கிய தொகுப்பு.

23) நல்ல பெண்மணி
24) வந்தனா
25) விஜயா

இம் மூன்று நூல்களையும் வெளியிட்டோர்: நல்வாழ்வுப் பதிப்பகம், 22, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை-1

26) சயதா
27) கமலாவின் கணவன்
23) உடைந்த உள்ளம்
29) என் மகள் ரேணுகா
30) பைரவி

இந்த ஐந்து நூல்களை வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், 66, பெரிய தெரு, சென்னை—600 005

31) அன்னையின் குரல்
32) பெண
33) தியாகக் கொடி

இம் மூன்று நூல்களை வெளியிட்டோர்: வள்ளுவர் பண்ணை, 19, 2-வது மெயின் ரோடு, சென்னை-35

34) 'அமுதம் தந்த மகான்' — அல்லயன்ஸ், மயிலாப்பூர், சென்னை-4 / பாரி நிலையம்,

மேற்கூறிய நூல்கள் அனைத்தும் திரு. அ. கி. ஜயராமன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டவை.


## தமிழரசு
## சந்தா விவரம்

தமிழரசு இதழில் பல பயனுள்ள செய்திகள் வெளியிடப்படுகின்றன. தமிழரசு தமிழ் இதழ் மாதம் இரு முறையும், ஆங்கில இதழ் மாதம் ஒரு முறையும் வெளி வருகின்றன.

சந்தா விவரம் பின்வருமாறு:

| தமிழ் இதழ் | ரூபாய் |
|---|---|
| ஆண்டுச் சந்தா .... | 12.00 |
| 6 மாதச் சந்தா .... | 6.00 |
| **ஆங்கில இதழ்** | **ரூபாய்** |
| ஆண்டுச் சந்தா .... | 6.00 |
| 6 மாதச் சந்தா | — |

சந்தாத் தொகையை மணி யார்டர் அல்லது டிராப்ட் மூலமாக

Circulation Manager,
Tamil Arasu Office,
Govt. Estate,
Madras—600 002

என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

[குறிப்பு: சிலர் தவறுதலாக செக் அல்லது டிராப்டில் General Administrative Manager என்று குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.]




# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"



# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்

குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.



## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு

# தமிழரசு

1-6-77 50 காசு.

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
20 ஜூன் 1977
EGMORE, MADRAS-8.

P
RR 181/77





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"





அன்னை கஸ்தூரி பாய் காந்தி அவர்களின் திரு உருவப் படத்தை நமது பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 17—5—1977 அன்று, கிண்டி ராஜ்பவனில் திறந்து வைத்தார். தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் அருகே உள்ளார்.

COMMISSIONER OF ...
ARCHIVES AND HISTORICAL ...
... ஜூன் 1977
EGMORE, MADRAS-8

# தமிழரசு

மலர் : 7 ❀ 1—6—1977 ❀ இதழ் : 23

## இந்த இதழில்

| | பக்க எண் |
|---|---|
| உலக சுற்றுப்புறச்சூழ்நிலை நாள் | 3 |
| உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல் | 4 |
| வார்டு நெம்பர்-8 | 5 |
| யூரியாவைப் பதனப்படுத்திப் பயன் அடையுங்கள்! | 8 |
| வைகுந்தன் உயில் (சரத்சந்திரர் நாவல்-தொடர்ச்சி) | 10 |
| படமும் செய்தியும் | 23 |
| தஞ்சைக்கேற்ற சிறுதொழில்கள் | 33 |
| மாவட்டங்களின் மாறிவரும் தோற்றம்! | 39 |
| மாட்டுவண்டிகள் நவீனப்படுத்தப்படும்! | 42 |
| யுனெஸ்கோவும் இந்தியாவும்! | 43 |
| முந்திரிக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்! | 45 |
| எள் பயிரில் பூச்சிகளும் தடுப்பு முறைகளும் | 46 |
| நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் புழுவைத் தடுக்கும் முறைகள் | 47 |
| 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி | 48 |

அட்டைப்படம்: கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவுச் சின்னம்.

நன்றி : பொது (சுற்றுலா) துறை, சென்னை.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

தமிழ்நாடு சட்டப் பேரவைக்காக நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் முடிவுகளுடன் அடுத்த இதழ் வெளிவரவிருக்கிறது!






# "உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்"

'உலக சுற்றுப்புறச் சூழ்நிலை நாள் வரும் ஜூன் மாதம் 5-ந் தேதி கொண்டாடப்படு கிறது. இந்த ஆண்டு 'உலக சுற்றுச் சூழ் நிலை நாளி'ன் முக்கிய நோக்கம், "பூமி வளங் களைப் பயன்படுத்துதல், பாதுகாத்தல் ஆகிய வற்றில் உலகநாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல்" என்பதேயாகும்.

'உலக சுற்றுப்புறச் சூழ்நிலைநாள் 1972-ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் மனித சமுதாயத் தின் சுற்றச் சூழ்நிலைகள் பற்றிய ஐ நா. மாநாடு துவக்கப்பட்டதைக் குறிக்கும் வகை யில் கொண்டாடப்படுகிறது. ஐ.நா. பொதுச் சபையில் 27-வது கூட்டத்தில் ஜூன் மாதம் 5-ந்தேதியை 'உலக சுற்றுச்சூழ்நிலை நாளாக'க் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட் டது. ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற சரித் திரச் சிறப்புமிக்க பிரதம மந்திரிகளைப் பிரதி நிதியாகப்பங்கு பெறச்செய்த இரண்டு நாடுகள் இந்தியாவும், சுவிட்சர்லாந்தும் மட்டுமே ஆகும்.

'உலக சுற்றுச்சூழ்நிலை நாளைக்' குறிக்கும் வகையில் இந்த ஆண்டில் மத்திய அரசு ஒரு நினைவுத்தபால் தலையை வெளியிட முடிவு செய்துள்ளது. மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் 'உலக சுற்றுச்சூழ்நிலை நாளின்' முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் இந்த நாளைப் பயனுள்ள விதத்தில் கொண் டாட வேண்டும் என்று விஞ்ஞான, தொழில் நுட்பத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. இளைஞர்-குடும்பநலத் திட்ட கவுன்சில் ஜூன் மாதம் 4, 5 தேதிகளில் புதுதில்லியில் "சுய தேவை நிறுவனங்களும், சுற்றுச் சூழ்நிலைப் பிரச்சினைகளும்" என்னும் கருத்தரங்கொன்றை நடத்த உள்ளது. இந்திய இளைஞர் சமுதாயக் கூட்டமைப்பு 'சுற்றுச்சூழ்நிலையும், அது அசுத்தமாதலும்' என்னும் மண்டலக் கருத் தரங்கை, சென்னையிலுள்ள மண்டலக் கழகத் தில் நடத்துகின்றது.

'சுற்றுச்சூழ்நிலைகளைப் பாதுகாப்பது' என் பது தனிப்பட்ட பொறியாளர்கள், விஞ்ஞானி கள், நிர்வாகிகள் ஆகியோர் மட்டுமே சம்பந் தப்பட்ட ஒரு விஷயம் அல்ல; மாறாக ஒவ் வொருவரும் அவர் சிறியவராயினும், பெரிய வராயினும் பகிர்ந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயமாகும்' என்ற உண்மையை 'உலக சுற் றுச் சூழ்நிலை நாள்' நினைவூட்டுகிறது.

# உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல்

— பி. கே. பாலிகா

மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்படுவன மூன்று, உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை என்ற மூன்றில் முதலாவதும் முக்கியமானதும் உணவு ஆகும். எந்த வகையான உணவும் அழியும் தன்மையுடையது. ஆகையால் உலகம் தோன்றிய காலம் தொட்டு உணவுப் பொருட்களைப் பாதுகாக்க மனிதன் முயன்று வந்திருக்கிறான்.

உணவுப் பொருட்கள் அவற்றின் தன்மையாலும், அவற்றில் அடங்கியிருக்கும் கூறுகளாலும், அவை பேணப்படுகிற முறையாலும் பாதிக்கப்படுகின்றன. தட்ப வெப்பம், ஈரம், பிராணவாயு, சத்துக்கள் ஆகியவை உணவுப் பொருட்களைப் பாதிக்கின்றன.

உணவுத் தானியங்கள் அறுவடைக் காலத்தில் பெய்யும் திடீர் மழை முதலியவற்றால் அழுகிவிடுவதும் உண்டு. கிடங்கில் அடுக்கி வைத்திருக்கும் போது கெட்டுப் போவதும் உண்டு. ஆகையால் எல்லாக் கட்டங்களிலும் விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து அவற்றைப் பாதுகாப்பதும் அவை வீணாகப் போவதைத் தடுப்பதும் நமது கடமையாகிறது.

உணவுப் பொருட்கள் உற்பத்தி உபரியாக இருக்கும்போது அவற்றில் ஒரு பகுதி நீண்ட தூரத்திலுள்ள இடங்களில் தேவைப்படுகிறது. ஆனால் அங்கும் அது உடனடியாக உபயோகப்படுவதில்லை. சில மாதங்கள் கழித்துத்தான் அது உபயோகப் படும். அதுவரையில் அதைத் தக்கவாறு பேணி வைத்திருந்து பிறகு விற்கப்படும் இடத்துக்கு அனுப்பி நுகர்வோர்க்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டியதிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் அதனுடைய நிறமோ, மணமோ, சுவையோ குன்றிவிடாதபடியும், தூசி, நச்சுப்பொருட்கள் தேவையற்ற கலப்படங்கள் ஆகியவை சேர்ந்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிருமிகள் நாம் வாழும் சூழ்நிலையில் ஏராளமாகவும் எத்தனையோ வகைகளிலும் உள்ளன. உணவுப் பொருட்களில் ஏதாவது ஒரு கிருமி சேர்ந்து விட்டால் அது பல மடங்காகிப் பெருகி விடும். ஆகையால் கிருமிகள் பரவுவதைக் கட்டுப்படுத்த வேண்டியதும் அவசியம்.

உணவுப் பொருள் அழுகத் தொடங்கிய பிறகு புழு அல்லது சிலவகைக் காளான்கள் அதில் சேர்ந்து அதை வேகமாக அழிக்க முயல்கின்றன.

இந்தப் பூஞ்சக் காளான்கள் மிக வேகமாகப் பெருகும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. இவற்றில் சில வகைகள், சம்பந்தப்பட்ட உணவுப் பொருளுடன் சேர்ந்துவிட்டால் அவற்றை உண்பவர்களின் உயிரைக் கொல்லும் சக்தியை கூடப் பெற்று விடும்.

நாம் வாழும் சூழ்நிலையில் புளித்த மாவின் நுரை வகைகளால் உண்டாகும் கேடுகள் எவ்வளவோ உண்டு. உயிர் அணுக்களும் உணவுப் பொருளில் தங்கி, பிறகு கிருமிகள்போல பெருகி விடுகின்றன. இவற்றால் உணவுப் பொருட்களின் தன்மையே அடியோடு மாறிவிடுகிறது. உணவுப் பொருட்களைப் பாதுகாக்க எல்லா நாடுகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் 1954-ல் கலப்படத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் விதிமுறைகளை மீறி உணவுப் பொருள்களைத் தரக்குறைவாக உற்பத்தி செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

சாதாரண உப்பு, சர்க்கரை, 'டெக்ஸ்ட் ரோஸ்' 'குளுக்கோஸ்' வாசனைப் பொருட்கள், புளித்த சாராயம் முதலியவற்றை எந்த உணவுப் பொருளிலும் சேர்ப்பதற்கு இந்தியாவில் எவ்விதமான தடையும் இல்லை. வேறு சில பொருட்கள் இன்ன அளவுவரையில்தான் இந்தியாவில் உணவுப் பொருட்களுடன் சேர்க்கப்படலாம் என்று மேற்கண்ட சட்டம் 55-வது விதியில் வரையறுக்கப் பட்டிருக்கிறது.

கிருமிகளை அழிக்கக்கூடிய ஆற்றல் படைத்த பொருட்களை உணவுப் பொருட்களில் சேர்க்கச் சில நாடுகள் அனுமதிக்கின்றன. இந்தியா இத்தகைய அனுமதியை வழங்கவில்லை.

உணவுப் பொருட்களில் சாதாரணமாகக் கலக்கப்படுகிற பல பொருட்கள், முக்கிய உணவு வகையின் தன்மையையும் சுவையையும் முற்றிலும் மாற்றிவிடக் கூடியவையாக இருப்பதால் அவற்றை மிகவும் குறைந்த அளவில் உபயோகிப்பது நல்லது. இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

எண்ணெய் வகைகள், கொழுப்புக்கள், முதலியவற்றிலும் கவனம் அதிகமாகச் செலுத்தப்பட வேண்டும். சுத்தி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்க் காற்றுப்பட வைத்திருந்தால் வயிற்றைக் குமட்டும் ஒருவகையான வாடை உண்டாகும். சாப்பாட்டில் எப்போதும் இருக்கும் செம்பு, மங்களீசு, இரும்புச்சத்து ஆகிய உலோகங்களின் சிறு கூறுகளால் இந்த வாடை உண்டாகிறது. ஊறவைக்கப்பட்ட எண்ணெய் வகைகளைவிட, ஊற வைக்கப்படாத எண்ணெய்கள், வெளிக் காற்றால் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எண்ணெயில் பொரிக்கப்பட்ட அல்லது தாளிக்கப்பட்ட உணவு வகைகளால் தான், மற்ற வகை உணவு வகைகளைவிட, அதிகமான கெடுதல் ஏற்படுகின்றன. ஆப்பிள் முதலிய சில பழங்கள் அவற்றை வெட்ட ஆரம்பித்தவுடன் சில சமயம் பாதிக்கப்படுகின்றன. 'சிட்ரிக்' அமிலம் அல்லது எலுமிச்சம் பழச் சாற்றை உடனே அந்தப் பழத்தில் கலந்தால் பழத்தின் நிறம் மாறுவதைத் தடுக்கலாம்.

எல்லா வகையான உணவுகளையும் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை தேவைப்படுகிறது. உலகம் முழுவதும் புதிய முறைகளைக் கையாண்டு உணவைப் பாதுகாக்க முயற்சிகளும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை நாமும் அறிந்து பயன் பெற வேண்டும்.

நன்றி : அகில இந்திய வானொலி நிலையம்.



# வார்டு நெம்பர் 8



சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள வார்டு நெம்பர்: 8.

பத்தாம் நம்பர் படுக்கையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியை டாக்டர்களும், நர்சுகளும் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மருத்துவர் நோயாளிக்குத் துரித சிகிச்சை அளிப்பதில் தீவிரம் காட்டுகிறார்.

நர்சுகள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

நம் கண்ணுக்கெதிரிலேயே ஒரு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற பரிதாப நிலையைப் பார்க்கிறோம்.

''அந்த நோயாளி பிழைத்துக் கொள்ள வேண்டும்'' என்றும் நம்மையறியாமலேயே நாம் பிரார்த்தனை செய்து கொள்கிறோம்.

அவரைச் சிகிச்சை செய்யும் டாக்டரின் முகத்தில், அவரை உயிர் பிழைக்க வைக்க வேண்டும் என்ற தீவிரம் காணப்படுகிறது. அதற்கு உதவியாக நர்சுகள் பம்பரமாய்ச் சுழல்கின்றனர்.

உயிருக்குப் போராடும் அந்த நோயாளிக்குப் ''பென்சிலின் அலர்ஜியாம்''. நவீன கருவிகளுடன் அவருக்கு உயிர் தர டாக்டர்கள் போராடிக் கொண்டிருந்தனர்.

ஒரு வாரம் கழித்து அதே வார்டுக்குச் செல்கிறோம். அதே 10-ஆம் நெம்பர் படுக்கையில் இன்னொருவர்; இருதய நோயாளி. நினைவிழந்த நிலையில் காணப்படும் அவருக்குத் தலைமை மருத்துவர் உட்பட ஏழெட்டு டாக்டர்களும், நர்சுகளும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கின்றனர்!



'பென்சிலின் அலர்ஜி' நோயாளி என்ன ஆனார்?

அதை அறிந்து கொள்ள மனம் துடிக்கிறது. அவருக்குச் சிகிச்சை அளித்த டாக்டர் முகம்மது ஜுகீர் உதீன் அவர்களைக் கேட்ட போது, ''அவரா? உயிர் பிழைத்துக் கொண்டாரே.....மறுநாள் 'ஜம்' மென்று எழுந்து வீட்டுக்கு புறப்பட்டு விட்டாரே!'' என்கிறார் பெருமிதத்துடன்.

இப்படி கவலைக்கிடமானவர்களை-உயிருக்குப் போராடுபவர்களைப் பிழைக்கவைப்பதில் பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறது, சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள (Government General Hospital ) தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவு ( Intensive Medical Care Unit ). இந்தப் பிரிவு வார்டு நெம்பர் 8-ல் உள்ளது. இது இம்மருத்துவமனையிலுள்ள மிக முக்கியமான பிரிவாக இரவும் பகலும் இயங்கி வருகிறது.

''பென்சிலின் ஊசி சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. பொது வாக 'டெஸ்ட்' ஊசி போட்ட பிறகே பென்சிலின் போட்



'பெனிசிலின் அலர்ஜி'க்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

படுவதுண்டு. இருந்தாலும் ஒரு சிலருக்கு அதனல் 'அலர்ஜி' ஏற்பட்டு விடுகிறது. சில சமயங்களில் அதுவே, உயிருக்கு ஆபத்து விளைவிப்பதாக ஆகிவிடுவதுண்டு'' என்கிருர் இந்தப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் எம். தாயுமானவன் அவர்கள்.

ஆமாம், 'அலர்ஜி' என்ருல் என்ன?

''நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் நோய் இன்னதென்று கண்டு பிடிக்க முடியாவிட்டால், அவருக்கு ஏதோ ஒன்று ஒத்துக் கொள்ளவில்லை., அதனல்தான் நோய் ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர்கள் சொல்லி விடுவார்கள்'' என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேம்.

ஒரு குறிப்பிட்ட நிலைமையுடன் கொஞ்சங்கூடப் பொருந்தாமல் முற்றிலும் மாறுபட்ட செயல் அல்லது விளைவு ஏற்படுவதையே 'ஆகாது' என்று சொல்லுகிறேம். இதைத்தான் 'அலர்ஜி' என்கிறேம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 'அலர்ஜி'யை அடித்து விரட்ட வழி வகை இல்லாமல் இருந்தது. ஆனல் இன்று? 'அலர்ஜி' அலறிக் கொண்டு ஓடுகிறது! அந்த அளவுக்கு அறிவியல் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு வருகிறது.

தீவிர மருத்துவ கவனிப்புப் பிரிவில் 12 படுக்கைகள் உள்ளன.

இந்தப் படுக்கைகள் என்றும் நிறைந்தே காணப்படும். 'நோய்க்கு இடங்கொடேல்' என்கிறேம். ஆனல் நோய்க்கு இடங் கொடுத்தவர்கள் இங்கே வந்து கொண்டுதான் இருக்கிருர்கள்!

இருதயம், நுரையீரல், கல்லீரல் நோய்கள், மூளைக்காய்ச்சல், சிறுநீரகக் கோளாறு இப்படிப் பலவிதமான நோயாளிகள் அபாய கட்டத்தை அடையும்போது இந்தப் பிரிவுக்கு உடனே அனுப்பப்படுகின்றனர்.

இந்தப் பிரிவில்-வார்டு நெம்பர்: 8ல், 24 மணி நேரமும் சிகிச்சை நடக்கிறது. இதற்காகத் தலைமை மருத்துவர் உட்பட 23 பேர் இப்பிரிவுக்கென நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். தலைமை மருத்துவருக்கு உதவியாக இருவரும், முதுநிலை அவுஸ் சர்ஜன்கள் 7 பேரும், அவுஸ் சர்ஜன்கள் 7 பேரும், நர்சுகள் 6 பேரும் ஆக மொத்தம் 23 பேர் தேனீக்கள் போலச் சுறுசுறுப்பாய் இயங்கிக் கடமையாற்றுகின்றனர்.

இந்தப் பிரிவில் செயற்கைச் சுவாசக் கருவிகள், இருதயத்தைத் துடிக்க வைக்கும் கருவிகள் முதலானவை உள்ளன. மேலும் இப்பிரிவுக்கென சுமார் ரூ. 33,000 மதிப்புக்கு நவீன கருவிகள் வாங்குவதற்கான திட்டம் ஒன்றும் உள்ளது.

அண்மையில் சென்னையில் விஷ வார்னிஷ் சாப்பிட்டுக் கவலைக்கிடமானவர்கள் இந்தப் பிரிவில் தான் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

இந்தப் பிரிவுக்கு வந்து சிகிச்சை பெற்று, பிறகு அபாய கட்டத்தைத் தாண்டிய நோயாளிகள், இதற்கு அடுத்த 'இடைநிலை கவனிப்புப் பிரிவு'க்கு (Inter mediary Care Unit) மாற்றப்படுகின்றனர்.

இங்குச் சிகிச்சை பெற்றுமுழுக் குணம் அடைந்து வீடு திரும்பியவர்கள் தமக்குத் தீவிர சிகிச்சையளித்த மருத்துவர்களையும் நர்சுகளையும் வாழ்த்தவும், பாராட்டவும் தவறுவதில்லை. அந்தப் பாராட்டுக் கடிதங்களையெல்லாம் பார்க்கும்போது, இங்குள்ள மருத்துவர்களின் அயராத பணி நமக்கு நன்கு விளங்குகிறது.

இந்தத் 'தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவில்' சிகிச்சை பெறும் ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு ஆகும் செலவு ரூ. 100 இவையனைத்தும் இலவசமே!

இதே தீவிர சிகிச்சை, தனியார் மருத்துவமனையில் நடப்பதாயிருந்தால் ஒரு நாளைக்கு ரூ. 200-லிருந்து ரூ. 300 வரை செலவு ஆகுமாம்!

அரசினர் பொது மருத்துவமனையில் 7 மருத்துவக்குழுக்கள் ( Medical Units ) உள்ளன. இதேபோல 7 சர்ஜன்கள் குழுக்களும் உள்ளன. இந்த மருத்துவ குழுக்கள் கவனிக்கும் நோயாளிகள் அபாய கட்டத்தை அடையும்போதுதான். வார்டு நெம்பர்-8க்குச் சிறிதும் தாமதமில்லாமல் கொண்டு வரப்படுகிருர்கள்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் பல துறைகள், பல பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன. அதேபோல் 'தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவும்' பெருமைப் படத்தக்க வகையில் சிறந்து விளங்கி வருகின்றது.

பெங்களூரிலுள்ள மருத்துவர்கள் குழு ஒன்று இந்தப் பிரிவில் பயிற்சி பெற வரப்போகிறதாம். சென்னையிலுள்ள துறைமுகப் பொறுப்புக் கழக மருத்துவமனை மருத்துவர்களும் இங்குப் பயிற்சி பெறவிருக்கின்றனர் என்ற செய்தி, இப்பிரிவின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்துகிறது.

உயிருக்குப் போராடும் நோயாளியை-சுய நினைவிழந்து மரண வாயிலில் நிற்கும் மனித உயிரைக் காப்பாற்றி மறு பிறவியாக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் இம்மருத்துவர்களை எவ்வளவு போற்றினலும் தகும்!

பி.வி. கிரி.

## உலோகவியல் துறையில் புதிய சாதனைகள்.....

தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பொரேஷன், வர்த்தகத் துறையின் உபயோகத்துக்காக உலோகவியல் துறையில் மூன்று முக்கிய முறைகளை கண்டு பிடித்துள்ளது. 'மிஷ்ச்' உலோகம், கரிமம் அல்லாத இரும்பு கலப்பு உலோகங்கள், 'பி. எம்.²' கலப்பு உலோகம் ஆகியவற்றைத் தயாரிக்க இந்த முறைகள் உதவுகின்றன.

செரியம் மற்றும் சில கிடைத்தற்கரிய மண்கள் அடங்கிய உலோகக்கலப்பு தான் 'மிஷ்ச்' உலோகம் என்பது. சிறப்பு வகையான வார்ப்பிரும்பை தயாரிப்பதற்குக் கலப்பு உலோகத் தொழிலில் பயன்படுவது மட்டுமின்றி, சிகரெட் பற்ற வைக்கப் பயன்படும் கருவி, கைக் குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் இந்த உலோகம் பயன்படுகிறது. மானேசைட் மணலிலிருந்து தோரியத்தைப் பிரித்தெடுப்பதன் மூலம் கிடைக்கும் துணைப் பொருளைக் கொண்டு இந்த உலோகம் தயாரிக்கப்படுகிறது. காரைக்குடியிலுள்ள மத்திய மின்—இரசாயன ஆராய்ச்சிக் கழகம் இந்த உலோகத் தயாரிப்பு முறையைக் கண்டுபிடித்துள்ளது.

சிறப்பு எஃகுகள், பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் மற்ற சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க கரிமம் அல்லாத இரும்பு கலப்பு உலோகங்கள் மிகவும் அவசியம். ஜாம்ஷெட்பூரிலுள்ள தேசிய உலோகங்கள் ஆய்வுக்கூடம் இந்த முறையைக் கண்டுபிடித்துள்ளது. இந்த முறை மிகவும் எளிமையானதும், சிக்கனமானதுமாகும்.

'பி. எம்.²' கலப்பு உலோகம் ஒரு புதுவகையான கலப்பு உலோகமாகும். தற்போது மின்சாரத்தை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டுவரும் செம்பு அல்லது அலுமினியத்துக்குப் பதிலாக, இந்தப் புதிய உலோகத்தைப் பயன்படுத்தலாம். உயர்மின் கடப்பாற்றல், அலுமினியத்தைவிட அதிகமான அரிப்புத்தடுப்புத் தன்மை ஆகியவை இந்த உலோகத்தின் சிறப்புத் தன்மைகளாகும். இந்தக் கலப்பு உலோகத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் கம்பியை மோட்டார் மற்றும் டிரான்ஸ்பார்மர் சுருள்கள், மோட்டார் வாகன கேபிள்கள், ஆகியவற்றிற்கும் பயன்படுத்தலாம், ஜாம்—ஷெட்பூரிலுள்ள தேசிய உலோகவியல் ஆய்வுக்கூடம் இதன் தொழில்முறையை கண்டுபிடித்துள்ளது.

## அரிசித் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய்!

தொழிற்சாலை உபயோகத்துக்கென நாட்டில் இதுவரை பெருமளவு பயன்படுத்தப்பட்டு வந்த அரிசித் தவிட்டிலிருந்து தயாரிக்கப்படும் தவிட்டு எண்ணெயிலிருந்து தரமான உணவு (சமையல்) எண்ணெய் உற்பத்தி மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றை இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் பரிசீலித்து வருகிறது.

துர்நாற்றம் வீசி, கெட்டுப்போகாமல் இருப்பதிலிருந்து அரிசித் தவிட்டைப் பாதுகாக்கும் செயல்முறை ஒன்றை மைசூரில் உள்ள மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது. பல அரிசி மில் உரிமையாளர்களுக்கு இந்த செயல்முறை, நேரில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் செம்பனூர் கோயிலில் உள்ள இந்திய உணவுக் கார்ப்பொரேஷனின் அரிசி ஆலையில் அமைக்கபபட்டிருக்கும் தவிடு தகுதிப்படுத்தும் ஆலை தற்போது திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது.

பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில தவிடு தகுதிப்படுத்தும் சில ஆலைகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மில் உரிமையாளர்களுக்குப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அனுகூலங்களை விளக்கிக் காட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தவிடு தகுதிப்படுத்தும் ஆலையுடன், தவிட்டைத் தகுதிப் படுத்துவதற்கு முன்னும் பின்னும் அரிசித தவிட்டின் தரத்தை மதிப்பீடு செய்யும் வகையில் ஆய்வுக் கூடங்களும் அமைக்கப் படுகின்றன. இந்தத் திட்டம் மத்திய உணவுத தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம், இந்திய உணவுக் கார்ப்பொரேஷன், நெல் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் (திருவாரூர்) ஆகியவற்றின் கூட்டு முயற்சியிலானதாகும்.

அரிசித் தவிடு தகுதிப்படுத்தும் ஆலையின் அமைப்புச் செலவுத் தொகை சுமார் ரூபாய 15 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான வடிவமைப்பு மற்றும் இதர விவரங்கள் மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைக்கப்பெறும். அரிசி ஆலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் 20 இலட்சம் டன் தவிட்டில், 50 சதவிகிதம் தகுதிப்படுத்தப் படுமானல், மக்களின் உபயோகத்திற்கென சுமார் 1½ இலட்சம் டன் சமையல் எண்ணெய் வடித்தெடுக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## யூரியாவைப் பதனப்படுத்திப் பயன் அடையுங்கள்!

* யூரியா ஓர் தழைச்சத்து நிறைந்த, சிறந்த இரசாயன உரமாகும்.

* இதில் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது.

* இதனை நேரிடையாகப் போட்டால், தண்ணீரில் கரைந்து, நிலத்தில் உள்ள பயிர்களின் வேருக்குக் கீழே போய்விடும். அதனால் எந்தவிதப் பயனும் இல்லை.

* எனவே, யூரியாவை மண்ணுடன் கலந்து, பதனப் படுத்திய பின்பே பயிர்களுக்கு இட வேண்டும். இதனால் தழைச்சத்தின் சேதாரத்தையும் தவிர்க்கலாம்.

* 25 கிலோ யூரியாவை, 125 கிலோ இருமண்பண்பாடு உள்ள மண்ணுடன் நன்றாக இரண்டறக் கலக்கவேண்டும்.

* இந்தக் கலவையுடன் சுமார் 4-5 லிட்டர் தண்ணீரைத் தெளித்துப் பொல பொல வென்று கிளறி அவல் பதத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும். அதிகமாகத் தண்ணீரை ஊற்றிவிடக் கூடாது.

* பிறகு யூரியாவும் - மண்ணும் சேர்ந்த கலவையை நிழலில் சுமார் 48 மணி நேரம் வைத்து இருக்கவும்.

* இதனால் யூரியாவில் 'அமைடு' உருவத்தில் உள்ள தழைச்சத்து', அம்மோனியா தழைச்சத்தாக மாறிவிடும். மேலும் மண்ணில் உள்ள களிமண், அம்மோனியா உருவத்தில் உள்ள தழைச்சத்து முழுவதையும் ஈர்த்துப் பயிர்களின் வேர்கள் சுலபமாக எடுத்துக்கொள்ள வழிசெய்கிறது. மேலும், யூரியா தண்ணீரில் கரைந்து சேதாரமாகப் போவதையும் தடுத்து நிறுத்துகிறது.

* எனவே, உழவர் பெருமக்கள் யூரியாவை மண்ணுடன் கலந்து பதனப்படுத்திய பின்பு, குறிப்பாக நெற்பயிருக்கு இடவேண்டும். அதனால் நல்ல பயனை அடையலாம்.

தகவல்: மண்ணியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

## உழவர்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை!

தமிழக உழவர் பெருமக்களுக்குப் பின்கண்டவாறு மின்சாரக் கட்டணச் சலுகை வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

### மின்சாரக் கட்டணச் சலுகை

முன் காப்புப் பணம் (செக்யூரிட்டி டெபாசிட்) முந்திய ஆண்டின் மிக அதிகமான 3 மாதக் கட்டணமாக இருந்தது. இதில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இனி முந்திய ஆண்டின் 12 மாதக் கட்டணத்தில் சராசரி பார்த்து, 3 மாதக் கட்டணக் காப்புப் பணமாக வசூலிக்கப்படும்.

### நிலையான கட்டணச் சலுகை

நிலையான கட்டணம் (பிக்சட் சார்ஜ்) முன்பு 1 குதிரைச் சக்திக்கு 2½ ரூபாய் வீதம், அதிக பட்சம் 1 சர்வீசுக்கு மாதம் 10 ரூபாய் வசூலித்தார்கள்.

மின்சார வாரியத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட 1.4.76 முதல் அவ்வாறு வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 7 இலட்சத்து 70 ஆயிரம் மின்சார 'பம்பு' செட்டுகள் இயங்குகின்றன.

ஆனால், பருவ காலங்கள் காரணமாக மொத்தத்தில் 10 சதவீத 'லோடு' மின்சாரம்தான் பயன்படுகிறது. 1 யூனிட் மின்சாரத்துக்கு 40 காசு செலவானாலும், வருமானம் 19 காசுதான். இதனால் நட்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் உழவர்களுக்கும் குறிப்பாக மழையை நம்பி உள்ள பகுதியில் இருப்பவர்களுக்கும் - அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படும் பகுதியில் உள்ளவர்களுக்கும் இந்த நிலையான கட்டணம் 50 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

அதாவது 1 குதிரைச் சக்திக்கு 1¼ ரூபாய் வீதம், அதிக பட்சம் 1 சர்வீசுக்கு மாதம் 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்படும்.

### குறைந்த பட்சக் கட்டணம் ரத்து!

நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளில் ஆண்டுக்குக் குறைந்த பட்ச கட்டணமாக, 1 குதிரைச் சக்திக்கு 20 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பகுதிகளில் இந்தக் குறைந்த பட்ச கட்டணம் கைவிடப்படும்.

புதிய சலுகைகள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது.





குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517



# வைகுந்தன் உயில்

சரத்சந்திரர் நாவல்

தமிழாக்கம்: அ. கி. ஜயராமன்.

8

சென்ற இதழ் தொடர்ச்சி

இரவுச் சாப்பாடு முடிந்து அவரவர் தத்தம் இடத்திற்குச் சென்றனர். அப்போது வேலைக்காரன் கோகுலனிடம் வந்து 'எஜமான் கூப்பிடுகிறார்' என்றான். கோகுலன் சட்டென்று எழுந்து அடக்கத்துடன் அவர் முன் வந்து நின்றான். நிமாயி ராய் தன் அருமைப் பேத்தியையும் உடன் உட்கார வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அருகே மனோரமா தலையில் முக்காடு நழுவ நின்றுகொண்டு தன்னுடைய இளைய மாமியாரைப் பற்றிய உண்மையான விவரங்களைக் கூறிக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில்தான் கோகுலன் அங்கே வந்து நின்றான்.

நிமாயி ராய் பாதாம் கீர் நிறைந்த லோட்டாவை ஒரே மூச்சில் காலி செய்துவிட்டு, அந்த லோட்டாவின் விளிம்பினாலேயே மீசையைத் துடைத்துக் கொண்டு, கோகுலனை ஏறெடுத்துப் பார்த்தார். பிறகு, "அப்பா, கோகுல்! நான் உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். வில்லில் இருந்து விடுபட்ட அம்பும், வாயினின்றும் வெளிவந்த வார்த்தையும் மீண்டும் திரும்புவதுண்டா?" என்றார்.

கோகுலன் ஒன்றும் புரியாமல் 'இல்லை' என்றான்.

நிமாயி முதலில் தன் மகளின் பக்கம் பார்த்தார். பிறகு ஓர் இளஞ் சிரிப்புடன் தன் மருமகனைப் பார்த்து, 'சரி, அப்புறம்' என்றார்

வாலளாவத் தேடிப் பார்த்தும் 'சரி, அப்புறம்' என்ற இந்த வார்த்தைக்கு கோகுலனால் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் அவன் பேசாமலிருந்தான். நிமாயி பாபு மெள்ள பீடிகை போட்டுக் கொண்டு தொடங்கினார்.

'கோகுல், இவள் என் மகள். நீ என் மருமகன். நீங்கள் இருவரும் அழுது அங்கலாய்த்து என்னை வற்புறுத்திப் புயலில் சிக்கியுள்ள இந்தப் படகின் துடுப்பை என் கையில் கொடுக்க வேண்டுமென்று என்னை அழைத்திருக்கிறீர்கள். சரி. நானும் அதை ஏற்றுக் கொள்ள முடியும்! ஏற்றுக் கொள்ளவும் போகிறேன். ஆனால் கோகுல்! நீ உறுதியாக நிற்காவிட்டால் காரியம் நடக்காது. உனக்கு நான் போடும் நிபந்தனை ஒன்றுதான். அதாவது நான் 'உட்காரு' என்று சொன்னால் அந்த இடத்தில் நீ உட்கார்ந்துவிட வேண்டும். 'நில்' என்று சொன்னால் நீ நிற்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பயங்கரக் கடலை நான் கடக்க முடியும். விநோதன் ஹஜாரிபாக்கில் இருந்தான் என்பது போன்ற அபத்தங்களைக் கூறிக் கொண்டிருந்தாய். இப்போது என்ன நடக்கிறது? நாமே நம் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறோம் என்பதை நீ அறிந்து கொள்ளவில்லையே?"

தந்தையின் விளக்கவுரையைக் கேட்டு மனோரமா நெகிழ்ந்து போய்ப் படபடப்புடன், "அப்பா, அதுதானே நடந்து கொண்டிருக்கிறது. அதற்காகத்தானே உன்னை வாழ வைத்தேன். எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, செய்கிறீர்களோ, அதுதான் இனிமேல் நடக்கும். நீங்கள் என்ன செய்தீர்கள், என்ன செய்யவில்லை என்பதைக் கூட இனி நாங்கள் கேட்க மாட்டோம்.

நிமாயி பாபு மகிழ்ச்சி அடைந்தவராய் "சரிதான் அம்மா. இதைத்தான் நான் விரும்புகிறேன். வம்பு வழக்குகள் எத்தனையோ இருக்கிறது. நீ கேள்விப்பட்டதில்லையா? உன் வீட்டில் வம்பு வழக்கு வரட்டும் என்று தன் விரோதியைப் பார்த்துச் சிலர் சாபமிடுவார்களே. அந்த மாதிரி வம்பும் வழக்கும் இப்போது உங்கள் வீட்டுக்குள் வந்து புகுந்து விட்டது. என் புத்தி திடமாக இருக்கிறது. ஆகையால் உங்களைக் கரை சேர்த்து விட்டுத்தான் கிளம்ப வேண்டும் என்று துணிந்து விட்டேன். இதனால் எனக்கு என்ன வந்தாலும் சரி! பாதகமில்லை. நான் ஒவ்வொருவராக இவர்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாவிட்டால் என் பெயர் நிமாயி அல்ல!" என்றார். இதைக் கூறிவிட்டு அவர் முகத்தை வைத்துக் கொண்ட பாவனையில் மிளிர்ந்த கர்வம், வாட்டர்லூ போரில் வெற்றி கண்டு வந்த வெல்லிங்டன் முகத்தில் கூட ஏற்பட்டிருக்காது.

தந்தையும் மகளும் பேசிக் கொண்ட வார்த்தைகளில் ஓர் எழுத்துக் கூட அவனுக்குப் புரியவில்லை. யார் வீட்டில் வழக்குப் புகுந்திருக்கிறது? யாருடைய கழுத்தைப் பிடித்து யார் வெளியே தள்ள வேண்டும்? யாருக்கு நாசகாலம் வந்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றுமே விளங்காமல் அவன் கல்லாய்ச் சமைந்து நின்றான். அப்போது, நிமாயி சொன்னார் "கோகுல்! நீ ஏன் நின்று கொண்டிருக்கிறாய். சற்று நிம்மதியாக உட்காரு. இரண்டொரு வார்த்தைகள் பேச வேண்டும்."

கோகுலன் நின்ற இடத்திலேயே உட்கார்ந்து விட்டான். மாமனார் பேசலானார். "கோகுல் இது உங்களுக்குத் தக்க தருணம். செய்ய வேண்டியதை இப்போதே செய்துவிடு. படுநாச வழக்கு ஒன்று வந்தே தீரும் என்பது கண்முன் நிதர்சனமாகத் தெரிகிறது. வரட்டும்! அதற்கு நான் பயப்படவில்லை. ஹாட்கோலாவிலுள்ள வக்கீல் ஜத்துபாபுவும் தாரிணி முன்சீப்பும் நன்றாக அறிவார்கள். நிமாயி ராயின் பெயரைக் கேட்டாலே பெரிய பெரிய வக்கீல், பாரிஸ்டர்களெல்லாம் நடுங்குவார்கள். இவன் என்ன நேற்றுப் பையன்! ஏதோ நாலு ஆங்கில எழுத்தைப் படித்து விட்டதால் என்ன செய்துவிட முடியும்?"

கோகுலனால் பொறுக்க முடியவில்லை. அவன் பயந்து கொண்டே, சற்றுத் தாழ்மையுடன் "நீங்கள் யாரைப் பற்றிச் சொல்கிறீர்கள்? இது யாருடைய வழக்கு" என்று கேட்டான்.

நிமாயி ராய் பேயறைந்தவர் போல் ஆனார். கோகுலன் வார்த்தைகளைக் கேட்டு அவர் பெரும் வியப்பில் ஆழ்ந்தவராய் அவன் முகத்தையே பார்க்கலானார். மனோரமா ஆத்திரமும் பதட்டமும் அடைந்தவளாய் "பார்த்தீர்களா அப்பா! நான் சொன்னேன்! சரியாக இருக்கிறது பாருங்கள். யாருடைய வழக்கு என்று கேட்கிறாரே இவர்? அப்பா! நான் உனக்குச் சத்தியம் செய்து சொல்வேன். இவரைப் போல அப்பாவி மனிதன் இந்த பூலோகம் முழுதும் தேடினாலும் கிடைக்க மாட்டான். இவரை ஏமாற்றி, மைத்துனர் சொத்துக்களைப் பிடுங்கிக் கொண்டார் என்றால் இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. நீங்கள் வந்திருக்கிறீர்கள். கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இல்லை என்றால் ஒரு வருஷத்திற்குள் உன் பேரன் பேத்திகள் தெருவில் பிச்சை எடுக்க நேரிட்டிருக்கும்" என்றாள்.

நிமாயி பெருமூச்செறிந்து கொண்டு "அப்படித்தான் தோன்றுகிறது. அது இருக்கட்டும். இனி அந்தப் பயம் வேண்டாம். நான் வந்து விட்டேன். முதலில் உன் கடையில் வேலை பார்க்கும் இந்த சக்கரவர்த்தியை வேலையினின்றும் நீக்கப் போகிறேன். இவர்களெல்லாம் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்! தெரிந்ததா? இவர்களெல்லாம் உள்ளுக்குள் விநோதனுக்கு உடந்தையாக இருப்பவர்கள். அப்படி இல்லை என்றால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன். மனிதரின் நிழலைப் பார்த்தே அவர்கள் மனத்தைப் புரிந்து கொண்டு விடுபவன் நான். என்னிடமா பலிக்கும்?" என்றார். இதைக் கூறிவிட்டு மகளையும் மருமகனையும் ஒரு முறை பார்த்தார்.

மனோரமா உடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் "ஆமாம்! ஆமாம்! உடனே அவரை நீக்கிவிடுங்கள். அப்பா எனக்குத் தெரியும். நான் என்ன செய்வேன்? தெரிந்தும் தெளியாதவள் போல் இருக்கிறேன். உங்களுக்கு விருப்பமானவர்களை வைத்துக் கொள்ளுங்கள். பிடிக்காதவர்களை விரட்டுங்கள்! நாங்கள் அதைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டோம்!" என்றாள்.

இவ்வளவு நேரத்திற்குப் பிறகு கோகுலனுக்கு விஷயம் என்னவென்று விளங்கியது. தன் தம்பி விநோதன் தன் மீது வழக்குத் தொடரச் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறான். இவர்கள் அவன் கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டார்கள். தானோ ஒன்றும் அறியாதவனாய் அந்தத் தம்பியை மகிழ்விக்க அவன் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறான் என்பதை ஒருவாறு புரிந்து கொண்டான்.



கோபத்தினால் அவன் உள்ளம் கொதித்தெழுந்தது. ஆனால் ஒரு கண நேரந்தான். அடுத்த கணம் அவன் உள்ளக்கனல் அவிந்து சாம்பலாயிற்று. அவனைச் சுற்றி நாற்புறமும் இருள் சூழ்ந்து விட்டது. அவன் பார்வை, புத்தி, உணர்ச்சி யாவற்றையும் அது விழுங்கிவிட்டதைப் போல் இருந்தது. அவன் செவிகளில் பல குரல்கள் ஒன்று சேர்ந்து உரக்கச் சத்தமிட்டு, ''வினோதன் கோட்டில் உன் மீது வழக்குத் தொடர்ந்து விட்டான். வழக்குத் தொடர்ந்து விட்டான்'' கூச்சல் போடுவது போல் இருந்தது.

இதற்குள் நிமாயி சொன்னார் : ''கோகுல்! இப்போது பணத்தைப் பார்த்தால் காரியம் நடக்காது. சாட்சிகளை நம் கைவசப்படுத்திக் கொள்ள வேண்டும். வழக்கின் வெற்றி தோல்வி சாட்சிகளின் கையில்தான் இருக்கிறது, தெரியுமா?'

மாமனார் வார்த்தையை முடிக்கும் முன்னரே கோகுலன் பேசாமல் எழுந்து வெளியே சென்று விட்டான். நிமாயி ராய் தன் மகளைப் பார்த்துச் சொன்னார் : ''இவன் ஒன்றும் பேசவே இல்லையே. கோர்ட்டு, வழக்கு என்றால் பணம் இல்லாமல் நடக்குமா? எதிர்க்கட்சியைச் சேர்ந்த சாட்சிகளைக் கலைப்பதென்றால் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டாமா? செலவைக் கண்டு பயந்தால் முடியுமா? வெறும் கை முழம் போடாது அம்மா.''

நிமாயி பாபு சாமானியப்பட்டவரா? மனிதரின் நிழலைப் பார்த்தே அவர்கள் மனத்தை அறியக் கூடியவராயிற்றே! அவருக்கு கோகுலன் பேசாமல் சென்றதன் கருத்தைப் புரிந்து கொள்ள அதிக நேரமாக வில்லை.



அவன் பணம் செலவாகும் என்ற பயத்தினாலேயே ஒன்றும் பேசாமல் சென்றான். ஆனால் இதற்காக அவர் கோபித்துக் கொண்டு இந்த ஆபத்து வேளையில் அவர் மகளைத் தனியே விட்டுச் செல்ல முடியுமா? தன் இஷ்டப்படி எவ்வளவு செலவு செய்தாலும் அதைப்பற்றி கணக்குக் கேட்காத மனிதர்கள் இவர்களைத் தவிர வேறு யார் தன்னை அழைக்கிறார்கள்? ஆகையால் இதனால் தனக்குச் சொந்த நஷ்டம் என்று ஏற்பட்ட போதிலும் சரி, இனி இந்த இடத்தை விட்டுப் பின் வாங்க அவரால் முடியாது. முன் வைத்த காலைப் பின் வைக்கும்

கோழையல்ல அவர். கோகுலன் சென்ற பிறகு இவ்வாறு பற்பல விஷயங்களை எடுத்துக் கூறி ஆபத்தில் சிக்கித் தவிக்கும் தன் மகளுக்கு ஆறுதல் கூறலானார்.

சிறு காரணங்களுக்காகக் கூட கோகுலன் இப்போது ஆத்திரப்படலானான். இரவு பூராவும் கண் விழித்து விட்டுக் காலையில் தன் சிறிய தாயாரின் அறையில் வந்து நின்றான். அவனுடைய அந்தக் கோரமான தோற்றத்தைக் கண்டு பவானி பயந்து விட்டாள். அவன் அறைக்குள் காலை வைத்தவுடனே சொன்னான் : ''அடாடா! மாற்றாந்தாய் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன்!''

கோகுலன் இப்போதெல்லாம் அடிக்கடி இம்மாதிரிப் பேசி வந்தான். அத்துடன் வீட்டில் பலவிதமான தகராறுகளும் பூசல்களும் எழுந்து தொல்லை கொடுத்ததாலும் பவானியின் இனிய சுபாவம் கூடச் சற்று மாறி, மன அமைதியை இழந்துவிட்டிருந்தாள். இருந்த போதிலும், வீட்டில் உறவினர்களும் விருந்தினர்களும் நிறைய உடன் இருந்ததால் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுருக்கமாகக் கேட்டாள் :''ஏன் அப்பா! என்ன ஆயிற்று?''

கோகுலன் சீறி விழுந்தான் : ''என்ன ஆக வேண்டும்? நீங்கள் என்ன செய்துவிட முடியும்? வினோதன் என் மீது வழக்குப் போட்டு என் குடியைக் கெடுத்துவிட முடியாது. அதை இப்போதே சொல்லி வைக்கிறேன். நிமாயிராய்! பத்திபாடா நிமாயிராய் — அவரைச் சாமான்யமாக நினைத்து விடாதீர்கள். அவர் லேசில் விட்டு விடுகிறவரல்ல! இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்!'' என்றான்.

பவானி பொங்கி எழுந்த கோபத்தை மறந்து ஆச்சரியத்துடன் "வினோதன் வழக்குத் தொடரப்போகிறான் என்று உன்னிடம் யார் சொன்னார்கள்?'' என்று கேட்டாள்.

எல்லோரும் சொல்கிறார்கள். வினோதன் என்மீது வழக்குப் போடப் போகிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

''அப்படியா? எனக்குத்தெரியவில்லையே!''

''அப்படியா? தெரியுமா, தெரியாதா என்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.''

இதைக் கூறிவிட்டுக் கோபத்துடன் கோகுலன் அங்கிருந்து புறப்பட்டவன் மீண்டும் திரும்பி நின்றான். திடீரென்று அவன் வாயினின்றும் நிமாயி பாபு சொன்ன வார்த்தைகள் வெளிவந்து விட்டன. ''உன் போன்ற விரோதிகளை இந்த வீட்டில் வைத்துக் கொண்டிருக்கவே கூடாது'' என்றான்.

ஆனால் இதைக் கூறியதுமே கோபம் நிறைந்த அவனுடைய ருத்ர உருவம் பயத்தினால் நிலைகுலைந்து சாய்ந்தது. வேடன் கை வில்லின் நாண் இறுக்கப்பட்டவுடன் மிருகம் பயந்து நடுங்கி திசை தெரியாது ஓடுமே அந்த மாதிரி கோகுலன் தன் தாயின் முன்னின்று பயந்து நடுங்கி ஓடினான். சொல்லத்



தகாத கடுஞ்சொல்லைக் கூறிவிட்டோம் என்பதை அவன் மனம் உணர்ந்துவிட்டது. அதனால் அன்று பகல், அன்று இரவு அவன் எங்கே இருக்கிறான் என்பதே தெரியவில்லை. அவன் குரல் கூட எங்கும் கேட்கவில்லை. வந்திருந்த உறவினர்கள் சாப்பிடும் நேரத்தில் கூட அவனை அங்குக் காணவில்லை. பவானி இதைப் பற்றிக் கேட்ட போது, ''பெரிய பாபு ஏதோ பெரிய விவகாரம் ஒன்றை முடிக்கப் போயிருக்கிறார். எப்போது திரும்புவேன் என்று யாரிடமும் எதுவும் கூறிவிட்டுப் போகவில்லை'' என்று கூறினார்கள். உடனே நிமாயி பாபு எஜமானன் பதவியை ஏற்றுக் கொண்டு வந்திருந்தவர்களை உபசரிக்கலானார். அதில் சற்றும் குறைவின்றிக் கவனித்துக் கொண்டார். வந்திருந்த விருந்தினர்களுடன் வினோதனும் அமர்ந்து பேசாமல் சாப்பிட்டு விட்டு எழுந்தான்.

புயல் அடிக்கும் முன் இயற்கை கலகலப்பின்றி அசையாது நெட்டுயர்த்தி நிற்பது போல், விருந்தினர் கூட்டம் நிறைந்திருந்தும் அந்த வீட்டில் விருப்பமற்ற ஓர் அமைதி நிலவியது. அசுப காரியம் நடக்கும் வீட்டில் இந்த அமைதி மேலும் ஒருவித பயங்கரமான சூழ்நிலையைப் படர விட்டிருந்தது. ஒருவருக்கும் இதன் காரணம் விளங்கவில்லை. இனம் புரியாத ஒரு தயக்கத்துடன் பணி செய்பவர்கள் இங்குமங்கும் சுற்றிக் கொண்டிருந்தனர். சிரார்த்த காரியத்துக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக விடை பெற்றனர். கோகுலனின் அத்தை தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பர்த்வான் திரும்பிச் சென்றாள்.

வினோதன் வாசல் பக்கம் இருந்த தன் அறையிலேயே காலையிலிருந்து மாலை வரை அமர்ந்திருந்தான். ஒருவரிடமும் ஒன்றும் பேசவில்லை. பவானி ஒன்றும் புரியாமல் பிரமையிலிருந்து தன் அறையிலேயே அமர்ந்திருந்தாள். கோகுலன் எங்கே ஓடி ஒளிந்தான், அவன் எங்கே இருக்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நாலைந்து தினங்கள் இவ்வாறு கழிந்தன. பார்ப்பவர்களுக்கு இந்த வீட்டில் மனோரமாவையும் அவள் குழந்தைகளையும் தவிர வேறு ஒருவருமே இல்லை என்பது தோன்றியது.

## 9

நிமாயி ராய் கல்கத்தாவிலுள்ள தமது தொடர்புகளை முடிவு கட்டிக் கொண்டு வரச் சென்றிருந்தார். நியமதல்லேவாலா நிறுவனத்தை அதோ கதியாக விட்டு விட்டு மகளையும் மருமகனையும் காப்பாற்றிக் கரை சேர்க்க அன்று அதிகாலையிலேயே இளைய மகனுடன் திரும்பி வந்திருந்தார். அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பது ஒருவருக்கும் புரியவில்லை. ஆயினும் தன் சகோதரியையும் மைத்துனனையும் பார்ப்பதற்காக மட்டும் அவன் வரவில்லை என்பது விளங்கியது.

திறமைசாலியான தன் மாமனார் இல்லாததால் ஆதரவும் உற்சாகமும் இன்றி கோகுலன் அயர்ந்து கிடந்தான். மனோரமா மட்டும் ஆர்ப்பாட்டத்துடன் வீட்டைச் சுற்றிச் சுற்றி

வந்து கொண்டிருந்தாள். சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் மனோரமாவின் அறைக்குள் வந்து அமர்ந்தனர். சிறிது நேரம் விவாதித்த பிறகு ஒருவாறு தீர்மானித்துக் கொண்டனர். ரஸிக சக்ரவர்த்தி முதல் பலியானார். அவரை வேலையினின்று நீக்கு முன் அவருடைய கணக்கு வழக்குகளைப் பார்க்க முற்பட்டனர். சக்ரவர்த்தி பாவம் ஏழை மனிதன். அப்போது அவருடைய மனமும் குழம்பி இருந்தது. ஆகையால் அவரால் இவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் அளிக்க முடியவில்லை. கணக்குகளையும், சரிவர ஒப்புவிக்க முடியவில்லை. தந்தையும் மகனும் திரும்பத் திரும்ப அதட்டி கேள்விக்கு மேல் கேள்வி போட்டு அவரை வதைத்தனர். அவர்களுடைய சொற்களால் புண்பட்ட அந்த ஏழை மனிதன் அவர்கள் கூறியதை ஒப்புக் கொண்டு தன்னைத் தானே திருடன் என்று நிரூபித்துக் கொண்டார்.

முடிவாக நிமாயி பாபு சொன்னார்: ''நான் இல்லை. நீ எவ்வளவு ரூபாயைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டாயோ? இனி நீ தின்ன முடியாது. போய்ச் சேர். உம்மை வேலையினின்றும் நீக்கி விட்டேன்'' என்றார்.

சக்ரவர்த்தியின் இரு கண்களில் கண்ணீர் வழியலாயிற்று. அவர் சொன்னார் : ''பாபுஜி! நான் இன்று நேற்று ஊழியன் அல்ல. எஜமானுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும்!''

கோகுலன் மௌனமாகத் தலை குனிந்து கொண்டான். நிமாயி ராயின் மகன் உரக்கச் சத்தமிட்டுப் பேசினான்: ''ஏன் ஐயா! நீர் என்ன அப்பாவைக் கூட உங்கள் எஜமானைப் போல் கோயில் மாடு என்று நினைத்துக் கொண்டீரா? போதும். சும்மா வேஷம் போடாதீர்! போய்ச் சேரும்.''



அந்த வாலிபனின் மரியாதையற்ற கடுஞ்சொற்களைக் கேட்டு மனம் நொந்த சக்ரவர்த்தி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். சற்று நேரம் மௌனமாக நின்றார். பிறகு கோகுலனிடம் ''பெரிய பாபு, என்னுடைய நாலு மாதச் சம்பளம்?'' என்றார்.

கோகுலன் சட்டென்று பதில்சொன்னான்: ''ஆமாம்! ஆமாம்! சக்ரவர்த்தி. அது பாக்கி இருக்கிறது. அதைத் தவிர இன்னும் ஏதாவது...''

கோகுலன் வார்த்தையை முடிக்கு முன் நிமாயி தன் இடது கையை நீட்டி அவனைத் தடுத்துவிட்டு, கண்டிப்பான குரலில் நீ சற்றுப் பேசாமல் உட்காரு கோகுல்!'' என்று கூறி விட்டு சக்ரவர்த்தியிடம் ''அவர் அல்ல எஜமான். இப்போது நான் எஜமான். நான் சொல்வதுதான் நடக்கும். உனக்கு சம்பளம் எதுவும் கிடையாது. உன்னை நான் ஜெயிலுக்னுப்பாமல் விடமாட்டேன். அதுவே உன் அப்பன் செய்த புண்ணியம்'' என்றார்.

சக்ரவர்த்தி மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. சென்று விட்டார். அது வரை ஒன்றும் பேச முடியாமல் மனோரமாவுக்கு வயிறு வெடித்துவிடும் போல் இருந்தது. சக்ரவர்த்தி சென்றதும் அவள் முகத்தைத் தூக்கிக் கொண்டு கணவனைப் பார்த்துச் சொன்னாள்: ''இனிமேல் நீங்கள் அப்பா 'விஷயத்தில் தலையிட்டால், ஒன்று நான் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு சாவேன். இல்லை, எல்லோரையும் அழைத்துக் கொண்டு எங்க அப்பா வீட்டுக்குப் போய் விடுவேன்.''

கோகுலன் பதில் பேசவில்லை.

''சரி, அப்பா! அவன் போய்த் தொலைந்தான். நீ நமது நந்தலாலை ஏன் கடையில் பொறுப்பில் போடக் கூடாது?'' என்றாள்.

நிமாயி சொன்னார்: ''இரு அம்மா! அதற்காகத்தானே அவனை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். நான் இங்கே அதிக நாள் தங்க முடியாது. அதனால்தான் அம்மா நந்தலாலுக்குச் சகல விவரங்களையும் சொல்லி அவனைத் தயார்ப்படுத்தி இங்கே வைத்து விட்டு போகலாம் என்று யோசிக்கிறேன். எப்படி இருந்தாலும் அவன் என் பிள்ளை அல்லவா?''

''அப்படியே செய்யுங்கள் அப்பா! அதனால்தான் நான்....''

திடீரென்று மனோரமா தன் தலை முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டு மௌனமானாள். ரஸிக சக்ரவர்த்தி அறைக்கு முன்னால் வந்து நின்று கொண்டிருந்தார். ''பாபுஜி! அம்மா வந்திருக்கிறார்கள்.''

திடீரென்று தாய் வந்திருக்கிறாள் என்பதைக் கேட்டு கோகுலன் வெலவெலத்துப் போனான். ஏழெட்டு தினங்களாக அவன் அவளைச் சந்திக்கவே இல்லை. பவானி கதவின் மறைவில் நின்று கொண்டு, சுபாவமான குரலில் ''கோகுல்!'' என்று அழைத்தாள்.

'' என்ன அம்மா?'' என்றான் கோகுல்.

பவானி மறைவில் நின்றபடியே முன் போல் சுபாவமான குரலில் விளக்கமாகச் சொன்னாள் : ''இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமெல்லாம் உன்னைச் செய்யச் சொல்பவர்கள் யார்? சக்ரவர்த்தி நெடுநாளைய ஊழியர். அவருடைய வாழ்நாள் வரை அவரை இங்கு வேலைக்கு நியமித்திருக்கிறார் உன் தந்தை. சாவியையும் கணக்குப் புத்தகங்களையும் கொடுத்து அவரை கடைக்கு அனுப்பு!''

அந்த அறையில் இடி விழுந்திருந்தால் கூட இவ்வளவு பயங்கரமான ஆச்சரியம் ஏற்பட்டிருக்காது! பவானி சிறிது நேரம் சும்மா இருந்தாள். பிறகு ''மற்றொரு விஷயம்! சம்பந்தி அவர்கள் தயை கூர்ந்து இங்கே வந்திருக்கிறார் என்றால், மற்ற உறவினர்களைப் போல் ஆதரவுடன் இரண்டொரு தினங்கள் இருந்து எல்லாவற்றையும் பார்க்கட்டும், கேட்கட்டும். ஆனால் நமது கடையில் திருட்டுப் போகிறதா இல்லியா என்பதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்பட வேண்டியதில்லை. சக்ரவர்த்தி! நீங்கள் தாமதம் செய்யாதீர்கள். கடைக்குச் செல்லுங்கள். வெளி மனிதர் யாரும் வந்து என் கடையில் உட்கார்ந்து கணக்கைப் புரட்டிப் பார்ப்பதை நான் விரும்பவில்லை. கோகுல்! சாவியை அவரிடம் கொடு! அவர் போகட்டும்'' என்று கூறிவிட்டு அவள் யாருடைய பதிலையும் எதிர்பார்க்காமல் வந்ததைப் போலவே வேகமாகச் சென்று விட்டாள். அவள் செல்லும் காலடியோசை அறைக்குள் கேட்டது. திகைப்பு மாறியதும் நிமாயி ஒரு வரட்டுச் சிரிப்புடன், ''சரிதான்.

அண்டை வீட்டுக்காரன் நெய்யே என் பெண்டாட்டி கையே'' என்றுனும். இந்த அம்மாள் உத்தரவு போடுவதைப் பார்த்தாயாடா அப்பா கோகுல்?'' என்றார்.

ஆனால், கோகுலன் பதில் பேசவில்லை. நிமாயியின் மகன் பதில் சொன்னான் : ''அப்பா இதெல்லாம் தெரிந்த விஷயம்தானே! நீயே இங்கே இருந்தால் ஒருவரும் திருட முடியாது. பேஷ் நல்ல உத்தரவு ஐயா இது!''

நிமாயி தன் மகன் கூறியதை ஆமோதித்து ''ஆமாம்! அது உண்மைதான்'' என்றார்.

இதற்குள் நிமாயி பாபுவின் பார்வை சக்ரவர்த்தியின் பக்கம் திரும்பியது. அவரைக் கண்டதும் ஆத்திரம் பொங்க முகத்தைக் கோணிக் கொண்டு, ''ஏன் அப்பா! ஏன் நின்று கொண்டிருக்கிறாய். போய்த் தொலையேன். நம்பிக்கைத் துரோகி! உன்னை ஜெயிலுக்கு அனுப்பாமல் விட்டேனே அது தவறு. நிற்காதே என் எதிரில். போகட்டும் பிராமணன் ஒழிந்து போகட்டும் என்று இருந்தேன். ஏதோ செய்வதைச் செய்துவிட்டாய். இன்னும் ஐந்தோ பத்தோ வாங்கிக் கொண்டு போய்ச் சேர். இன்னுமா நின்று கொண்டிருக்கிறாய்? சரி! சரி! உன்னைப் பெரிய வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டியதுதான்'' என்றார்.

கணவனின் முகபாவத்தைப் பார்த்து மனோரமாவுக்குப் பேச்சுத் துணிவு வரவில்லை. கோகுலன் தலை குனிந்து நின்றவன் அப்போதும் அப்படியே கற்சிலைபோல் நின்றிருந்தான். சக்ரவர்த்தி அவர்கள் பேசியதற்கு எதற்கும் பதில் கூறாமல் தன் எஜமானனைப் பார்த்து வணக்கத்துடன் ''பெரிய பாபு! நான் கணக்குப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு போகிறேன். பெட்டிச் சாவியைக் கொடுங்கள்'' என்றார்.



கோகுலன் ஒன்றும் பேசவில்லை. இடுப்பில் செருகி இருந்த சாவிக் கொத்தை எடுத்து சக்ரவர்த்தியின் முன் எறிந்தான். அவர் சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு கணக்குப் புஸ்தகங்களைக் கையில் இடுக்கிக் கொண்டு, வந்த சிரிப்பை வெளிக்காட்டாமல் அங்கிருந்து புறப்பட்டார். அவர் இம்மாதிரி சென்றதன் கருத்து வெளிப்படையானதுதான். அதாவது நிமாயி பாபுவின் முகத்தில் யாரோ கரியைத் தடவினார்கள் என்பதே.

இதன் பிறகு அந்த மந்திராலோசனைக் கூடத்தில் நிலவிய காட்சி உண்மையிலேயே வர்ணிக்க இயலாதென்றே கூற வேண்டும். எதிர்பாராத விதமாக தன் தந்தைக்கும் சகோதரனுக்கும் ஏற்பட்டு விட்ட அவமானத்தைக் கண்டு மனோரமா இடிந்து பேச்சு மூச்சற்றுப் போனாள். தன் கணவனை மனம் போனபடிப் பேசி அவமானம் செய்தாள். தன்னால் முடிந்த அளவு ஆத்திரத்தைக் கொட்டி நீலித் தனம் செய்தாள். பிறகு அவனிடம் கெஞ்சினாள். காலைப் பிடித்துக் கொண்டாள். முடிவில் வாய் விட்டு ஒப்பாரி வைத்து அழவும் செய்தாள். இவ்வளவு செய்தும் தன் தந்தைக்கு சாதகமாக ஒரு வார்த்தை கூட அவன் வாயினின்றும் வரவழைக்க முடியாமல் போகவே, பேசாமல் சேலைத்தலைப்பினால் முகத்தை மூடிக் கொண்டு சவம்போல் படுத்துவிட்டாள். வெட்கத்தினாலும், துக்கத்தினாலும் கோகுலன் உள்ளம் குமுறியது. அவன் அழுகை பொங்கும் குரலில் ''அம்மா என்னிடம் விரோதித்துக் கொண்டு இப்படி உத்தரவிடுவாள் என்று எனக்கெப்படித் தெரியும்?'' என்றான்.

நிமாயி பெருமூச்சு விட்டுக் கொண்டு, ''சரி! போ நல்லதாயிற்று. உயிர் தப்பியது; பெரும் தொல்லையிலிருந்து தப்பினோம். ஆனால் இங்கே பார் மனோரமா! உன்னிடம் ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன். என்றைக்காவது ஒரு நாள் நீ உன் குழந்தைக் குட்டிகளுடன் தெருவில் பிச்சை எடுக்க நேரிடும். அது நிச்சயம். அப்போது, அப்பா நம்மைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையே என்று என் மீது குறை கூறாதே. ஒன்றை மட்டும் தெரிந்து வைத்துக் கொள். மகளானாலும் சரி, மருமகனானாலும் சரி, இந்த நிமாயி ஒரு தரம் சொல்லி விட்டால் பிறகு திரும்பி வரும் பேர்வழியல்ல!''

இதைக் கூறிவிட்டு நிமாயி தன் மருமகன் பக்கம் கூர்மையான பார்வையை வீசினார். ஆனால் அவருடைய இந்தக்கோபப்பார்வையை அவரது மகனைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை. அப்போது நிமாயி தன் குரலை இன்னும் கடுமையாக்கிக் கொண்டு சொன்னார் : ''இது வரை நான் கோபித்துக் கொள்ளவில்லை. ஒரு தரம் கோபம் வந்துவிட்டால் பிறகு இந் நிமாயி ஒருவருக்கும் கட்டுப்பட மாட்டான். பிறகு மும்மூர்த்திகள் வந்தாலும் சரி என்னைத் தடுக்க முடியாது. இப்போது நீங்கள் இருவரும் தனிமையில் நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள். அடே நந்தலால்! மணி இரண்டரை ஆகிறது அல்லவா! நான் மூணரை மணி வண்டிக்குப் புறப்படப் போகிறேன். நமது சாமான்களை எடுத்துக் கட்டி வை. உனக்குத் தான் தெரியுமே, இந்த உலகமே புரண்டாலும் உன் தந்தையின் பேச்சு மாறாது என்பது!''

இவ்வாறு கூறிவிட்டு நிமாயி ராய் கர்வத்துடன் தன் மகனின் கைகளைப் பற்றிக் கொண்டு—தன் மகளுக்கும், மருமகளுக்கும் ஆலோசனை செய்ய ஒரு மணி நேரம் அவகாசம் அளித்து விட்டு—அங்கிருந்து சென்றார்.

## 10

நிமாயி ராயின் ஆசையில் மண் விழுந்தது. அவருடைய திட்டங்கள்யாவும் தவிடு பொடியாகிவிட்டன. அதனால் அவர் கடும் கோபம் கொண்டார். வெளிப்படையாக மிரட்டலானார். ''என் வேலையை விடச் சொல்லி நீங்கள் இங்கே அழைத்து வந்தீர்கள். அதனால் ஏற்பட்ட நஷ்டத்தை நீங்கள் ஈடு செய்ய வேண்டும்'' என்றார். இதன் மத்தியில் உபாத்தியாயர் பானர்ஜியை தன் பக்கம் சாதகமாக இழுத்துக் கொண்டார். அவர் கோகுலனிடம் வந்து சொன்னார் : ''கோகுல்! நீ ஒரு முட்டாள். குருட்டுப் பயல். உன்னுடைய நன்மை தீமையைப் பற்றி உனக்குத் தெரியவில்லை. நிமாயி பாபுவை நீ சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. நீ இந்த மாதிரி அவரை அவமானம் செய்தால், அவர் சென்று விநோதனுடன் சேர்ந்து கொள்வார். உன்னை படாதபாடு படுத்திவிடுவார்!''

இதைக் கேட்ட கோகுலன் வருத்தத்துடன் சொன்னான் : ''மாஸ்டர் ஸாஹப்! நீங்களே சொல்லுங்கள். நான் என்ன செய்ய முடியும். இவர்கள் இந்த வீட்டில் இருக்க அம்மா சற்றும் சம்மதிக்கவில்லையே. அத்துடன் நிமாயி ராய் கடைக்குள் நுழையக் கூடாது என்று சக்ரவர்த்திக்கு உத்தரவிட்டிருக்கிறாள்.''

மாஸ்டர் கேட்டார்: ''அதிருக்கட்டும் கோகுல். நீ இதைச் சொல். இந்த வியாபாரம், இந்தச் சொத்துக்கள் யாவும் உன்னுடையவையா? இல்லை உன் தாயாருடையவையா? இன்னொரு விஷயம் தெரியுமா? இப்போது உன் தாய் உன் விரோதியுடன் போய்ச் சேர்ந்துவிட்டாள்.''

மாஸ்டர் பேசிய வார்த்தைகளைக் கேட்டு கோகுலன் தலையை அசைத்ததும், அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. அவர் ஆரம்பித்து விட்டார்: ''அப்படியானால், நீ இந்த மாதிரி பைத்தியக்காரத்தனம் செய்யாதே. நீ உன் பணம் காசு, வியாபாரம், யாவற்றையும் உன் மாமனார் ராயிடம் ஒப்படைத்து விட்டுப் பேசாமல் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிரு. நான் சொல்வதை விட்டுத் தள்ளு. இந்த மாதிரி ஒரு திறமை வாய்ந்த மனிதனை இந்த வட்டாரத்தில் நீ தேடினாலும் காண முடியாது.''



''அது வாஸ்தவம் மாஸ்டர்! எனக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் அப்பா இறக்கும் போது உன் தாயைக் கேட்காமல், நீ எந்தக் காரியமும் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறாரே!'' என்றான் கோகுலன்.

பானர்ஜி முகத்தைச் சிடுத்துக் கொண்டு, ''அம்மாவைக் கேட்காமல் ஒரு காரியமும் செய்யக் கூடாது என்று அப்பா சொல்லிவிட்டு போனார். ஆனால் உன் தாயாரே உனக்குச் சத்ருவாக மாறுவாள் என்பது உன் தந்தைக்குத் தெரியுமா? உன் அம்மாவின் பேச்சைக் கேட்டு, நடந்து உன் சொத்துக்கள் பூராவும் இழக்க விரும்புகிறாயா? சொல்லு!'' என்றார்.

இந்த மாதிரிப் பிரச்சனைகளுக்கெல்லாம் கோகுலன் பதில் சொல்ல முடியுமா? அவன் தலைகுனிந்து பேசாமல் உட்கார்ந்திருந்தான். நிமாயி ராய் மறைவில் நின்று இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். இப்போது அவர் முன்னால் வந்து நின்றார். இந்த இரண்டு மகா நதிகளின் முன் கோகுலன் படுதோல்வி கண்டு, புறமுதுகிட்டு ஓடிக் கடலில் வீழ்ந்தான். அவன் தலைகுனிந்து பதில் பேசாமல் இருப்பதைக் கண்ட இந்த வாதாபி வில்வலர்கள் தங்களுக்குள் மகிழ்வெய்தியவர்களாய் அவனுக்கு ஏற்பட்ட நன்மதியை பாராட்டலானார்கள்.

பானர்ஜி வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானதும், தன் விருப்பம் நிறைவேறிய நிமாயி ராய் அவர் காலடியில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம், செய்து அவர் பாதத் தூளியை எடுத்துத் தலைமீது போட்டுக் கொண்டார். பானர்ஜியும் அன்புடன் கோகுலனை முதுகில் தட்டிக் கொடுத்து, ''கோகுல்! நான் உன்னை மனப் பூர்வமாக ஆசிர்வதிக்கிறேன். இன்று எப்படி நீ உன் சகல பொறுப்புக்களையும் எங்களிடம் ஒப்படைத்தாயோ, அவ்வாறே நாங்களும் உன் மீது துளிக் காற்று கூட வீசாமல் பார்த்துக் கொள்வோம். என்ன ராய் அவர்களே, நான் சொல்வது சரிதானே!'' என்றார்.

ராய் பாபுவும் மகிழ்ச்சியால் புளகித்துப் போய் அடக்கத்துடன் நாக் குழற உங்கள் ஆசிர்வாதத்தால், நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை இங்குள்ளவர்கள் பார்ப்பார்கள். விரோதிகளை இனி இந்த வீட்டில் ஒரு கணமும் இருக்க விட மாட்டேன். இதை இப்போதே உங்களிடம் சொல்லி விடுகிறேன். அது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். என் மருமகனின் தாயானாலும் சரி, சகோதரனாக இருந்தாலும் சரி, இனி தயங்கமாட்டேன். அந்த சக்ரவர்த்திப் பயலை வீட்டை விட்டு விரட்டி விட்டுத்தான், தண்ணீர் குடிப்பேன். அடே, யாரடா அங்கே? போய் அந்தச்சக்ரவர்த்தியைக் கடையிலிருந்து சீக்கிரம் அழைத்துக் கொண்டு வா!'' என உத்தரவிட்டு, இப்போதே தனக்கு மாபெரும் வெற்றி கிட்டி விட்டது போல் கர்ஜித்தார்.

ஆனால் கோகுலன் சங்கையும் வெட்கமும் அடைந்தவனாய், ''வேண்டாம்! வேண்டாம்! அவரை இப்போது அழைக்க வேண்டிய அவசியமில்லை'' என்றான்.

பானர்ஜி தன் இரு கரங்களையும் இரு பக்கம் நீட்டிக் கொண்டு, ''இல்லை கோகுல்! இல்லை! இப்போது நீ முகதாட்சண்யம் பார்த்தால் நடக்காது. அவரை நாங்கள் வைத்துக் கொள்ள முடியாது. அது எவ்விதத்திலும் முடியாத காரியம். அவனுக்கு மண்டைக் கர்வம் ஏறிவிட்டது. எங்களுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்று நான் சொல்லிவிடுகிறேன்'' என்றார்.

இதற்குப் பதில் கோகுலன் முன்போலவே வணக்கமான குரலில், ''அம்மா, அவர் இருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். அவளால் நியமிக்கப்பட்டவரை வெளியே அனுப்ப ஒருவராலும் முடியாது. அப்பா எனக்கு அவ்வளவு அதிகாரம் கொடுத்துவிட்டுப் போகவில்லை'' என்றான்.

இதைக் கூறிவிட்டு கோகுலன் அவர்களைப் பார்க்காமல் தலை குனிந்துகொண்டான். அவனுடைய இந்த ஏமாற்றமான பதிலையும், திடமான குரலையும் கேட்டு இருவரும் ஆச்சரியத்தில் திகைத்துப் போனார்கள். சற்று நேரம் பொறுத்துப் பானர்ஜி கேட்டார்: ''அப்படியானால் அவன் இருக்கத்தான் போகிறானா?''

''ஆமாம்! அவர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வித அதிகாரமும் இல்லை'' என்றான் கோகுலன். பானர்ஜி பயந்து கொண்டே ''அப்படியானால் உன் மாமனார் ராய் அவர்களின் கதி என்ன ஆவது?'' என்று கேட்டார்.

''அவர் ஊருக்குப் போய்ச் சேரட்டும். அவர்கள் இங்கே இருப்பதை அம்மா சற்றும் விரும்பவில்லை. வேலை போய்விட்டதனால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை, அம்மாவிடம் கேட்டுக் கொண்டு அவருக்கு அனுப்பி வைத்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமல் கோகுலன் அங்கிருந்து அகன்றான்.

இவ்வளவு தூரம் அவமானப்பட்ட பிறகு நிமாயி ராய் இனி ஒரு கணமும் இங்கே இருக்க மாட்டார் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் அப்படியொன்றும் நடப்பதாகத்தெரியவில்லை.

நிமாயி ராயின் கெட்ட எண்ணத்தினால் கோகுலன் ஒவ்வொரு நாளும் துன்பமும், தொல்லையும் அடைந்தான். அவ்வாறே பவானியும் ஒவ்வொரு நிமிஷமும் பயமும் திகிலும் அடைந்துத் தவித்தாள். மருமகளும், அவளுடைய தந்தையும் ஏவி விடும் சொல் அம்புகள் உட்காரும்போதும்,நிற்கும்போதும், சாப்பிடும்போதும் அவள் செவிகளைத் துளைத்து, உள்ளத்தைப் புண்படுத்தின.

பவானியினால் பொறுக்க முடியவில்லை. அவள் தன் மருமகளை அழைத்து ''ஏன் அம்மா! நான் இந்த வீட்டில் இருப்பதைக் கோகுலன் விரும்பவில்லையா?'' என்று கேட்டு விட்டாள்.

மருமகள் வேண்டுமென்றே பதில் சொல்லாமல் இருந்தாள். அவள் தலை குனிந்து கால் நகத்தால் தரையைக் கீறிக் கொண்டிருந்தாள். சற்று சும்மா இருந்து விட்டு பவானி மீண்டும் சொன்னாள் : ''கோகுலன் அபபடி நினைத்தானானால் என்னிடம் வந்து நேர்மையாக இதைச் சொல்லி விடலாமே? உன் தந்தையையும், சகோதரனையும் கொண்டு என்னை இராப் பகல் இப்படி அவமானப்படுத்த வேண்டாமே!''

இவைகளைப் பற்றிக் கோகுலனுக்கு ஒன்றுமே தெரியாது என்பதை அவள் நினைக்கவில்லை. தவிர இந்தச் சதிக் கூட்டம் இவைகளை எல்லாம் அவன் காதுக்கு எட்டாமல் செய்து, சந்தடி இன்றி தன் விஷ நாக்கை நீட்டிக் கடித்துக் கொண்டிருந்தது. மருமகள் பழைய மருமகள் இல்லை. ஆகையால் அவள் இப்போது பதில் சொன்னாள் : ''யார் யாரை அவமானம் செய்தார்கள் என்பது இந்த உலகம் பூராவும் தெரியும். நான் என் பொருளைத் திருடன் கையினின்றும் காப்பாற்றி என் தந்தை, சகோதரனிடம் ஒப்படைத்தால் அதைக் கண்டு உங்கள் வயிறு ஏன் எரிய வேண்டும்? ஒருவருக்காக மற்றொருவரை பாழாக்கிவிடுவது சரியா?''

பவானி தன்னை அடக்கிக் கொண்டு மிக அமைதியாக ''ஏண்டி அம்மா! அப்படி நான் யாரைப் பாழாக்கிவிட்டேன்?'' என்று கேட்டாள்.

மனோரமா சொன்னாள் : ''யாரைப் பாழாக்கினீர்களோ அவர்கள் வசைபாடுகிறார்கள். இதற்கு அவர் என்ன செய்ய முடியும்? இல்லை நான் தான் என்ன செய்ய முடியும்? தன் வினைத் தன்னையே சுடுகிறது. அதற்காகக் கோபித்துக் கொண்டால் ஒன்றும் நடக்காது?''



பவானி ஒன்றும் தோன்றாமல், சிறிது நேரம் அங்கேயே நின்றாள். பிறகு மெள்ளத் தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டாள். கணவன் இருந்தபோது இருந்த கோகுலனையும் மருமகள் மனோரமாவையும் நினைத்துப்பார்த்த போது, பல நாட்களுக்குப் பிறகு அவள் கண்கள் கண்ணீரை உதிர்த்தன. அன்று அவளால் இதை நினைக்காமல் இருக்க முடியவில்லை. ''நான் .ஒரு முட்டாள். நானே என் தலையில் மட்டுமல்ல—என் மகன் தலையிலும் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன். நான்தானே என் கணவனிடம் வற்புறுத்தி மன்றாடி சொத்துக்கள் யாவற்றையும் கோகுலன் பெயருக்கு எழுதி வைக்கச் சொன்னேன். அப்படிச் செய்யாமலிருந்திருந்தால், இன்று என் நிலைமை இப்படி ஆகியிருக்காது. விநோதன் எவ்வளவு தான் உதவாக்கரையாக இருந்தாலும், அவன் என்னை இந்த மாதிரி அவமானப்படுத்தி வருத்தி இருக்க முடியாது.''

* * * *

விநோதன் தன் பிழைப்புக்கு ஏதோ வழி தேடிக் கொண்டிருந்தான். இது ஒருவருக்கும் தெரியாது. அவனுக்குக் கோர்ட்டில் ஒரு உத்யோகம் கிடைத்தது. ஊரில் தெரு முனையில் தனக்கு வசிக்க ஒரு இடத்தை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொண்டான். அன்று மாலை அவன் வீட்டுக்கு வந்து நாளைக் காலையில் நான் என் புதிய வீட்டுக்குப் போகிறேன் என்பதை அறிவித்தான்.

பவானி ஆவலுடன் எழுந்து உட்கார்ந்து சொன்னாள் : ''விநோதன்! என்னையும் உன்னுடன் அழைத்துச் சென்று விடு. இனி என்னால் இவர்கள் பண்ணும் அவமானத்தைச் சகிக்க முடியாது. நீ என்னை எப்படி வைத்துக் கொண்டாலும் சரி, நான் மகிழ்ச்சியாக இருப்பேன். எப்படியாவது என்னை இந்த வீட்டிலிருந்து விடுதலை செய்து விடு''. இதைக் கூறிவிட்டு அவள் கோ வென்று கதறி அழுது விட்டாள்.

பிறகு ஒவ்வொன்றாக சகல விவரங்களையும் கேட்டறிந்தான் விநோதன். வெளியே புறப்பட்டு வரும்போது, வழியில் கோகுலனைச் சந்தித்தான். அவன் கடை வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால், விநோதன் தூரத்தில் அவனைக் கண்டதுமே விலகி, மறுபக்கம் சென்றிருப்பான். இன்று அங்கேயே நின்று விட்டான். கோகுலன் அருகே வந்ததும், ''நாளைக் காலையில் நான் அம்மாவை அழைத்துக் கொண்டு என்னுடைய புதிய வீட்டுக்குச் செல்கிறேன்'' என்றான்.

கோகுலனுக்கு தூக்கி வாரிப் போட்டது. ''புதிய வீடா? என்னிடம் கேட்காமல், கொள்ளாமல் வீடு பார்த்து விட்டாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்! . . .''

''அப்படியானால் படிப்பை விட்டுவிட்டாய் என்று சொல்லு!''

''ஆமாம!''

இந்தச் செய்தி, கோகுலன் உள்ளத்தில் எத்தகைய வேதனையை மூட்டியது என்பதை மாலை இருளில் விநோதனால் கண்டுகொள்ள முடியவில்லை. கோகுலன் சிறு வயதிலிருந்தே தன் தம்பி 'எம்.ஏ.' பாஸ் செய்ய வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தான். தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டுப் பிள்ளை யாராவது பரீட்சையில் பாஸ் செய்தால், கோகுலன் மகிழ்வுடன் அவர்களைப் பாராட்டிவிட்டு, தன் சகோதரனும் பாஸ் செய்ய வேண்டுமே என்ற கவலையைத் தெரிவிப்பான். இவனைப் பற்றி அறிந்தவர்கள் மனதிற்குள் சிரித்துக் கொள்வார்கள். மற்றும் சிலரிடம் தன் தம்பி விநோதன் வாங்கிய மெடலைக் காட்டிப் பெருமைப்படுவான்.

அத்தகைய 'எம்.ஏ.' படிப்பை நிறுத்தி விட்டான் என்பதைக் கேட்டதும் கோகுலன் உள்ளத்தில் பழுக்கக் காய்ந்த மழு பாய்ந்ததைப் போல் இருந்தது. துடிதுடித்தான். ஆயினும், அன்று ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சரி, இருக்கட்டும். புது வீட்டுக்கு அம்மாவை அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொண்டு சோறு போட்டு காப்பாற்றுவாயா?'' என்று கேட்டான்.

''ஏதோ, முடிந்த வரை செய்வேன்,'' என்று கூறிவிட்டு விநோதன் சென்றுவிட்டான். அவனும் தன் தாயைப் போல் மிதமாகப் பேசுவான். அவன் தன் அண்ணனிடம், தான் வீட்டுக்குச் சென்று இந்தத் தகவலை தாயிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன் என்பதைக் கூறவில்லை.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததுமே, மனு அம்மா அவனிடம் வந்து ''பெரிய ஐயா ! அம்மா உங்களை அழைக்கிறாள் என்று சொன்னாள். அந்த மாலை நேரத்தில் தன் தாய் சோர்ந்து உயிரற்றவள் போல் படுக்கையில் படுத்திருந்தாள். கோகுலனைக் கண்டதும் பவானி எழுந்து உட்கார்ந்து, ''கோகுல்! நாளை காலையில் நான் இந்த வீட்டை விட்டுப் போகிறேன்'' என்றாள்.

விநோதனிடம் சற்று முன் இதைக் கேட்டுக் கோகுலன் மனதிற்குள் குமுறிக் கொண்டிருந்தான். ஆகவே, உடனே அவன் ''நாங்கள் உன் கால்களைக் கட்டிப் போட்டு வைத்திருக்கவில்லையே. உனக்கு எங்கு விருப்பமோ! போ! எப்படியாவது போனால் சரி! உயிர் தப்பும்!'' என்றான். இதைக் கூறிவிட்டு முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டான்.

மறுநாள் காலையில் பவானி புறப்படுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். மனு அம்மா அருகில் அமர்ந்து அவளுக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள். கோகுலன் வெளியே நின்றபடி உரக்கச் சத்தமிட்டு, ''மனு அம்மா! போய் அம்மாவிடம் சொல்லு. அவள் இன்று போகமுடியாது'' என்றான்.

மனு சற்று ஆச்சரியத்துடன் ''ஏன் பெரிய பாபு? இன்றைக்கு என்ன?'' என்று கேட்டாள்.

கோகுலன் சொன்னான் : ''இன்று தசமி அல்லவா? குழந்தை குட்டிகள் இருக்கும் வீடு. இன்று போவது நன்மையல்ல. இன்று நான் அவளைப் போகவிட மாட்டேன் என்று அமமாவிடம சொல்லிவிடு. விருப்பமிருந்தால நாளைக்குப் போகட்டும். நான் வண்டியைத் திருப்பி அனுப்பிவிட்டேன்.''



இதைச் சொல்லிவிட்டு கோகுலன் அவசரமாக அங்கிருந்து புறப்பட்ட போது மனோரமா அவனை கை ஜாடை காட்டி அழைத்து சற்றுக் கடுகடுப்புடன், ''போகிறேன் என்று கிளம்பியவளை தடுக்க வேண்டிய அவசியம் என்ன?'' என்று கேட்டாள்.

சில தினங்களாக மனைவியுடன் அவனுக்கு சௌஜன்யம் ஏற்பட்டிருந்தது. இப்போது அவள் மீது சீறி விழுந்தான். ''நான் தடுக்கிறேன். அது என் விருப்பம். அவள் வீட்டின் எஜமானி. இன்று அவள் வீட்டை விட்டுப் போனால், நாளை குழந்தைக் குட்டிகள் செத்துக் கிடந்தால் என்ன செய்வது?'' என்று கத்தினான். பிறகு வேகமாக வெளியே சென்று விட்டான். மனோரமாவுக்கு வியப்பும், கோபமும் பொங்கி எழுந்தது. அவள் வாயினின்றும் ''ஆமாம்! இவர் லட்சணம் இதுதானே!'' என்ற வார்த்தைகள் மட்டுமே வெளிப்பட்டன.

# 11

தசமிக்குப் பிறகு ஏகாதசி, துவாதசியும் கழிந்தது. அப்போதும் தாயை வீட்டினின்றும் அனுப்ப கோகுலனுக்கு நாள் கிடைக்கவில்லை. நான்காவது நாள் அன்று, வீட்டுப் புரோகிதர் நேரில் வந்து நல்ல நாள் ஒன்று பார்த்துச் சொன்னார். அப்போது கோகுலன் அவர் மீது கோபித்துக் கொண்டு, ''புரோகிதரே! நீங்கள் சாப்பிட்ட வீட்டுக்கு நாசம் தேடுகிறீர். நீங்கள் போய் வாருங்கள். வேறு வேலை ஏதாவது இருந்தால் பாருங்கள். நான் என் தாயை எங்கும் போக விடமாட்டேன்'' என்றான்.

அன்று வாங்கிய மட்டையடிக்குப் பிறகு மனோரமா மறுபடி எதுவும் பேசவில்லை. இன்று அவள் தந்தையை அனுப்பி வைத்தாள். நிமாயி ராய் வந்து ''கோகுல்! விஷயம் கொஞ்சம் கூட சரியல்லவே!'' என்றார்.

கோகுலன் பத்திரிகை படிக்க மாட்டான். ஆனால் அன்று அவன் பத்திரிகை படிக்க உட்கார்ந்து விட்டான். ''எந்த விஷயம்?'' என்று அவன் கேட்டான்.

''சம்பந்தி அம்மாள் தன் விருப்பத்தின் பேரில் மகன் வீட்டுக்குப் போகிறேன் என்றால் அதை நாம் தடுப்பது சரியல்ல'' என்றார் நிமாயிராய்.

கோகுலன் பத்திரிகை படித்துக்கொண்டே ''தெருவில் உள்ளவர்கள் இதைக் கேட்டால் என்ன சொல்வார்கள்? கெட்டபெயர்தான் வரும்'' என்றான்.

நிமாயி சற்று வியப்படைந்தவராய் ''இதில் கெட்ட பெயர் வர என்ன இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை'' என்றார்.

இவ்வளவு நாட்கள் வரை கோகுலன் தன் மாமனாரிடம் மரியாதையாகத்தான் பேசுவான். இன்று திடீரென்று அவர்மீது சீறி விழுந்தான். ''உங்களுக்குப் புரிய வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. உங்களிடம் வெளிப்படையாகக் கூறுகிறேன். என் தாயை நான் யாரிடமும் அனுப்ப மாட்டேன். யார் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை'' என்றான்.

கோகுலனின் இந்த வார்த்தை விநோதனின் செவிகளுக்கு எட்ட அதிக நேரமாகவில்லை.




தினந்தோறும் வண்டியைத் திருப்பி அனுப்பியதால் அவன் மன வருந்தமடைந்திருந்தான். இன்று அவன் கோகுலனிடம் ''அண்ணா! இன்று நான் அம்மாவை என்னுடன் அழைத்துக்கொண்டு போகிறேன். நீ வீணாக இதைத் தடை செய்யாதே'' என்றான்.

கோகுலன் செய்தித்தாளை இன்னும் கவனமாகப் படித்துக் கொண்டே ''இன்றைய தினம் போக முடியாது'' என்றான்.

''ஏன் முடியாது? நிச்சயம் முடியும்! நான் இப்போதே அழைத்துக்கொண்டு போகிறேன்''

விநோதனின் கோபக் குரலைக் கேட்டு கோகுலன் கையிலிருந்த செய்தித்தாளை ஒரு பக்கம் வீசி எறிந்து விட்டு, ''அழைத்துக் கொண்டு போகிறேன் என்று சொல்லிவிட்டால் நடந்துவிடுமா? அப்பா இறக்கும்போது அம்மாவை என்னுடன் இருக்க வேண்டும் என்று தான் கூறிச் சென்றிருக்கிறார். உன்னிடம் ஒப்படைக்கவில்லை. நான் அவளை அனுப்ப மாட்டேன்'' என்றான்.

''அண்ணா'. உண்மையில் அம்மாவின் பொறுப்பை நீ ஏற்றுக்கொண்டிருந்தால் அம்மா இரவு, பகல் இம்மாதிரி அவமானத்தையும் வெறுப்பையும் அனுபவிக்க நேரிட்டிராது. அம்மா! வெளியே வண்டி நின்றுகொண்டிருக்கிறது. நீ போய் ஏறிக் கொள்'' என்று கூறி விநோதன் திரும்பிப் பார்க்கும்போது பவானி அறையிலிருந்து புறப்பட்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். தாய் நெடுநேரமாக மறைவில் நின்று கொண்டிருக்கிறாள் என்பது கோகுலனுக்குத் தெரியாது. தாய் நேரே சென்று வண்டியில் ஏறி அமர்வதைக் கண்டதும் சிறிது நேரம் ஒன்றும் தோன்றாமல் நின்றான். பிறகு வேகமாக வண்டியருகே சென்று ''அம்மா! நான் இப்போதே சொல்லி வைக்கிறேன். நீ இந்தமாதிரி இங்கிருந்து சென்றால், பிறகு நமக்குள் எவ்வித சம்பந்தமும் இருக்காது'' என்றான்.

பவானி பதில் பேசவில்லை. விநோதன் வண்டியை ஓட்டச் சொன்னான். வண்டி புறப்பட்டதும் கோகுலன் அழுகை பொங்க தழுதழுத்த குரலில் ''அம்மா! அம்மா! நான் உன் பிள்ளை இல்லையா! என்னை நீ இம்மாதிரி விட்டு விட்டுப் போகாதே அம்மா! அம்மா! நீ என்னை எடுத்து வளர்க்கவில்லையா? நீ போகாதே அம்மா! போகாதே!'' என்று கதறி அழுதான். வண்டியின் கடகட சத்தத்தில் பவானியின் காதில் இது விழுந்ததோ என்னவோ, விநோதன் செவிமடுத்துக் கேட்டான்.

அவன் வண்டியிலிருந்து எட்டிப் பார்த்தான். கோகுலன் தனது மேல் வேட்டியின் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு வேகமாகச் செல்வதைக் கண்டான்.

கோகுலன் உள்ளே வந்து விநோதன் அறைக்குள் சென்று கதவை உட்பக்கம் தாழிட்டுக் கொண்டு பேசாமல் படுத்துவிட்டான். மறைவில் நின்றுகொண்டு இவை



யாவற்றையும் நிமாயி ராய் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்குச் சற்று பயம் ஏற்பட்டது. ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் கோகுலன் அறையினின்றும் வெளியே வந்து குளித்து விட்டு சாப்பிட்டுக் கடைக்குச் சென்று விட்டான். அப்போது கோகுலன் முகபாவத்தைக் கண்டு பயப்படக்கூடிய குறிகள் ஒன்றும் இல்லாததால் நிமாயி பாபுவுக்கு பயம் நீங்கி தைரியம் பிறந்தது. நிம்மதியாக அவர் தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றார். பாம்பு எப்படித் தன் இரையைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குகிறதோ அம்மாதிரி நிமாயி ராய் பெருமகிழ்ச்சியுடன் தன் மருமகனை ஜீரணிக்க மெள்ள மெள்ள முயன்று வந்தார்.

நிலைமையும் அவருக்கு அனுகூலமாக இருந்தது. தந்தையின் மரணத்திற்குப் பிறகு கோகுலன் பொறுமை இழந்து சிடுசிடுப்புடன் காணப்பட்டான். சாதாரண விஷயங்களுக்குக் கூட அவனுக்குச் சட்டென்று கோபம் வந்து விடும். ஆனால் பவானி வீட்டை விட்டுப்போன தினத்திலிருந்து அவன் முற்றிலும் மாறிவிட்டான். இப்போது அவன் யாரிடமும் எதற்கும் கோபிப்பதும் இல்லை. பிறருடன் எதைப்பற்றியும் அதிகமாக விவாதிப்பதும் இல்லை. இதைக்

கண்டு நிமாயி ராய் சந்தோஷமடைந்த போதிலும் அவருடைய மகள் மனோரமா சற்றும் மகிழ்ச்சியுறவில்லை. கோகுலனை அவள் நன்றாக அறிந்து கொண்டிருந்தாள். கணவன் சாப்பாட்டு விஷயத்தில் இப்போது எவ்விதத் தகராறும் செய்வதில்லை. போட்டதைச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் போய்விடுகிறான். இதைக் கண்டு மனோரமா மனத்திற்குள் மிகவும் பயந்தாள். சிறுவயதிலிருந்தே சாப்பாட்டு விஷயத்தில் கோகுலன் சிறந்த ரசிகன். வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டுப் பழகியவன். தான் சாப்பிடுவதிலும் பிறரை அழைத்துச் சாப்பாடு செய்விப்பதிலும் அவனுக்கு மிகுந்த விருப்பம் உண்டு. ஞாயிற்றுக் கிழமைகளில் நண்பர்கள் உறவினர்களை அழைத்து விருந்து வைப்பான். அந்த ஞாயிற்றுக் கிழமையன்று அவன் யாரையும் அழைக்காததைக் கண்டு மனோரமா அவனிடம் காரணம் கேட்டாள்.

கோகுலன் மிகுந்த வருத்தத்துடன் ''அம்மாவோடு எல்லாம் போயிற்று. சமையல் செய்து போட யார் இருக்கிறார்கள்? என்றான்.

மனோரமா பெருமையுடன் ''சமையல் செய்வதற்கு உங்கள் அம்மாவுக்கு மட்டும் தான் தெரியுமா? எங்களுக்கெல்லாம் தெரியாதா?'' என்று கேட்டாள்.

''தெரியுமானால், உன் அப்பாவுக்கும் தம்பிக்கும் செய்து போடு. எனக்கு அது தேவை இல்லை.''

மனோரமாவின் தாய் காளிகட்டம் சென்றுவிட்டு வரும் வழியில் இங்கே ஒருநாள் வந்திருந்தாள். இங்கே கோகுலனின் மாற்றாந்தாய் கோபித்துக் கொண்டு போய்விட்டாள் என்பது தெரிந்ததும், மகளின் குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதி நாலைந்து நாள் தங்கினாள். மளமளவென்று வீட்டு நிர்வாகம் சீர் அடைந்தது. வீட்டு வேலைகள் நியமப்படி சரிவர நடைபெற்றன. குடும்பத்தின் லகானை அவளே பிடித்து ஓட்டினாள். இவ்வாறு நாட்கள் கழிந்தன.

தெருவிலுள்ளவர்கள் ஆரம்பத்தில் சிறிது நாட்களுக்கு இதைப்பற்றிக் குறைபேசினார்கள். பிறகு இந்தக் கலியுகத்தில் இப்படித் தான் நடக்கும் என்று பழியை யுகத்தின் மீது போட்டுவிட்டு நாலு நாட்களில் அடங்கி விட்டனர்.



மனு அம்மா வீட்டுக்குப் போகும் வழியில்தான் இருந்தது, விநோதனின் புதிய வீடு. அவள் அடிக்கடி வந்து பவானியைப் பார்த்துப் பேசிவிட்டுப் போவாள். அவள் மூலமாகப் புதிய குடும்பத்தின் நிலவரத்தை கோகுலன் அறிந்துவந்தான். ஆனால் அது பற்றி அவன் ஒன்றும் பேசவில்லை.

அன்று பவானி புறப்பட்டு வரும்போது கோகுலன் அழுகை பொங்கும் குரலில் 'இனி நமக்குள் எவ்வித சம்பந்தமும் இருக்காது' என்று சொன்னான். அப்போது பவானி அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஒரு மாதமாகியும் கோகுலன் தன் தாயைப் பற்றி என்ன ஆனாள் என்றுகூட விசாரிக்காமல் இருப்பதைக் கண்டு பவானி மனத்திற்குள் சற்று திகிலடைந்தாள். இவ்வளவு சண்டை, பூசல் நடந்துவிட்ட போதிலும் கோகுலன் தன்னைக் கைவிட்டுவிடுவான், தன் தம்பியையும் முற்றிலும் மறந்துவிடுவான் என்று பவானியால் நம்ப முடியவில்லை. அன்று மனுஅம்மா வாயிலாக கோகுலன் வீட்டில் அவன் மாமனார் மாமியார் இருவரும் நிரந்தரமாகத் தங்கி இருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டபோது அவள் மனம் துணுக்குற்றது.

* * * *

புதிய வீட்டுக்கு வந்து நாலைந்து தினங்கள் வரையில் விநோதன் ஒழுங்காக இருந்தான். அதன் பிறகு அவன் தன் பழைய உருவத்தை எடுத்துக் கொண்டான். அவன் தன் தாயைக் கவனிப்பதில்லை. இரவில் வீட்டிலே தங்க மாட்டான். காலையில் அவன் வீட்டுக்கு வரும்போது பவானி துக்கத்தினாலும் லச்சையினாலும் அவன் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்.

விநோதன் ஏதோ வேலை பார்ப்பதாகச் சொன்னான். ஆனால் எங்கே வேலை, என்ன சம்பளம் என்ற விவரம் எதையும் கூறவில்லை. ஆகவே பவானி ஒருவகையில் திருப்தி அடைந்தாள். என் மகனுக்குச் சொத்து கிடைக்காமல் வஞ்சித்துவிட்டதில் தவறு ஒன்றுமில்லை. அது நியாயமானதுதான் என்று எண்ணினாள். தன்னுடைய மாமன் மாமியின் பேச்சைக் கேட்டு கோகுலன் தங்களுக்கு எவ்வளவு தீங்கிழைத்த போதிலும் தன் கணவன் கஷ்டப்பட்டு நிலை நிறுத்திய கடை வியாபாரத்தை அவன் சரிவர நிர்வகித்து வருவான், அதைச் சீர்குலைய விடமாட்டான். என்ற நம்பிக்கை அவளுக்கு நிம்மதியை அளித்தது. காலஞ்சென்ற கணவனை நினைத்து இந்தக் கவலையிலும் மன அமைதி கண்டாள். இவ்வாறு நாட்கள் கழிந்தன. அன்று வைகாசி மாதப்பிறப்பு. பிரதி வருஷமும் அந்த நாளில் அவள் நோன்பு இருந்து தடபுடலாக (பிராமண) சமாராதனை செய்வது வழக்கம். இந்தத் தடவை அவள் கையில் காசில்லை. இரண்டொரு தடவை பேச்சோடு பேச்சாக விநோதனிடம் இதைக் கூறினாள். ஆனால் அவன் இதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ஆகவே இந்த வருடம் அந்த நோன்பைக் கைவிடுவது என்று தீர்மானித்தாள்.

அன்று அதிகாலையில் வாசலில் இருந்து யாரோ உரக்கச் சத்தமிட்டு தன்னை அழைப்பதைக் கேட்டாள். மனுஅம்மா சென்று வாசற்கதவைத் திறந்தாள். பார்த்தால் கோகுலன் மிகுந்த பரபரப்புடன் உள்ளே வந்து கொண்டிருந்தான். அவனுடன் பணியாட்கள் பலர் வந்தனர். மாவு, மிட்டாய் வகைகள், பழவகைகள் இன்னும் விரதத்திற்குத் தேவையான பொருட்கள் யாவும் கூடைகளில் வந்து இறங்கின. உள்ளே வந்ததுமே அவன் சொன்னான்: ''தெருவிலுள்ள பிராமணர்களை எல்லாம் அழைத்திருக்கிறேன். அந்தக் குரங்கை நம்பி இந்தக் காரியத்தை விட முடியுமா? அம்மா எங்கே? இன்னும் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லையா? சரி நான் போகிறேன். இவ்விடத்தில் வேலைகளைக் கவனிக்க ஆட்களை அனுப்புகிறேன். சமையல்காரர்கள் வந்து கொண்டிருப்பார்கள்.

''அம்மாவைப் போலத்தானே பிள்ளையும் இருப்பான். யாருக்கு என்ன கவலை? எல்லாவற்றையும் பற்றிக் கவலைப்படத்தான் நான்

(27-ம் பக்கம் பார்க்கவும் )



யென்பது மனிதனுடைய படைப்பு; அது இயற்கையன்று. வாழ்வில் நடப்பதெல்லாம் புனிதம் என்று சொல்லிவிட இயலாது. அழுகலே முக்கால்வாசி. அவை இலக்கியத்துக்கு உதவாத விஷயங்கள். இயற்கையை உள்ளபடி வருணிப்பது வெறும் போட்டோ; அது வர்ணமும் ரேகையும் கொண்ட ஓவியமாகாது. தினசரி பத்திரிகைகளில் வெளிவரும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள் இலக்கியமாகுமா? குணச்சித்திரம் வரைவதென்றால் லேசான காரியமல்ல. கலை நோக்கிற்கு அநுபவம் தேவை. கற்பனை மட்டுமே இருந்தால் போதாது. உள்ளத்திலிருந்து அநுதாபத்தையெல்லாம் வடித்து நான் கதாபாத்திரங்களை ஜோடனை செய்யும் கஷ்டம் எனக்கல்லவோ தெரியும்? நல்லதும் இருக்கும்; கெட்டதும் இருக்கும். இவை விவாதத்திற்குரிய விஷயங்கள் அல்ல. கலையில் கலகத்துக்கு இடமில்லை. 'கதை சுபமாக முடியவேண்டும்-தருமம் வெற்றி பெறவேண்டும்-அதர்மம் அழிய வேண்டும்' என்று இவையெல்லாம் நீதியைப் போதிப்பவர்களுக்குத்தான்; இலக்கியம் படைப்பவனுக்கு அல்ல.''

''சிறு வயதில் பங்கிம் சந்திரரின் 'கிருஷ்ணகாந்தன் உயிலைப் படித்தபோது இளம் விதவை ரோகிணியின் வாழ்க்கை என்னை உலுக்கி எடுத்துவிட்டது. அவள் கெட்ட வழியில் இறங்குகிறாள். கடைசியில் துப்பாக்கி ரவைக்கு இலக்காகிறாள். பாபத்திற்கு ஏற்ற பரிசு என்று சொல்வார்கள். இதனால் சமூகம் பெருமைப்படுவதற்கான விஷயம் எதுவுமே இல்லை. ஒரு பாபி ஒழிந்தாள் என்று நல்லவர்கள் மூச்சுவிடலாம். ஆனால் இன்னொரு பக்கத்தை நாம் மறந்து விடுகிறோம். சமூகத்தை விடப் பழமையும் நிரந்தரமானதும் காதல். ஆண், பெண் இதய ஆழத்தில் உலவும் அந்த உணர்ச்சிக்கு மதிப்பில்லையா? ரோகிணியின் சித்திரத்தை வரையும்போது பங்கிமின் உள்ளம் துக்கத்தினால் துடித்திருக்கவேண்டும். அவரது பேனாவிலிருந்து எவ்வளவு பெரிய இலக்கியம் உருவாக இருந்தது! ஆனால் அவருடைய படைப்பாற்றல் சமூகத்துக்கும் நாட்டு தர்மத்துக்கும் பயந்து தற்கொலை புரிந்து கொண்டதே! என்னுடைய 'கிராம சமூக'த்தில் வரும் விதவை ரமாவைப் பலபேர் பத்திரிகைகளில் ஏளனம் செய்யத் தொடங்கினர். 'உன் புத்தியினாலேயே நீ உன் தகப்பனாரின் ஜமீனைச் சீர்கெடாமல் பாதுகாத்தாய். நீயே உன் இளவயது நண்பனும், அந்நிய புருஷனுமான





ரமேசனைக் காதலிக்கின்றாய். சீ.. என்ன புத்தி!'-இந்த மாதிரி வசவெல்லாம் கலையைப் பாதிக்காது. இது நம்முடைய சீர்கேடான சமூகத்திற்கே ஏற்றது. இவ்வளவு தூரத்துக்கு யார் கொண்டு விட்டது? நன்மையும் தீமையும் உலகில் சேர்ந்துதான் இருக்கும். நல்லதை நல்லதென்றும் கெட்டதைக் கெட்டதென்றும் சொல்வதை ஒருநாளும் கலை தடுக்கவில்லையே! அதை ஒளிப்பதுதான் கலைக்குச் செய்யும் துரோகமாகும்.

வங்காளிகளின் குடும்ப வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய நவீனங்களில் சிறப்பானவை 'பெரிய அக்கா' (படதிதி), 'பிந்துவின் மகள்' (பிந்துர் சேயே) 'சந்த்ரநாதன்', 'விமோசனம்' இவை எக்காலத்திற்கும் படிக்கப்படிக்க இன்பத்தை ஊட்டும்.

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துவதில்தான் சரத்பாபு தம் முழுத் திறமையைக் காட்டியுள்ளார். 'விரஜாசுந்தரி' (விராஜ் பௌ) கொடுக்கல் வாங்கல் (தேநாபாவநா), 'சௌதாமினி' (ஸ்வாமி); 'தத்தர்'; 'கிருகதாகம்'; 'தேவதாஸ்', 'கிராம சமூகம் (பல்லீஸமாஜ) இவை மனிதர் உள்ளத்தில் பெரும் புயலை எழுப்பிய நவீனங்கள். சரத்பாபு பச்சையாகச் சமூகத்தை வருணிப்பதைப் பல பிரமுகர்கள் கண்டித்தனர். ஆனால் சரத் சந்திரருக்கு அழியாப் புகழைத் தருபவை இந்த நவீனங்களே!

'ஸ்ரீகாந்த'னை நான்கு பாகமாக எழுதினார். இது விசித்திரப் படைப்பு. பிரெஞ்சுக்காரர், இத்தாலியர் போன்ற மேலை நாட்டு இலக்கியப் பிரியர்களை மிகவும் கவர்ந்த புத்தகம். இவரது பெயர் இதனாலேயே கடல்தாண்டிச் சென்றது. சரத் இந்த நவீனத்தில் தம் சுய அநுபவங்களையே வேறு பெயரைக் கொண்டு சொல்கிறார். சரத், நாடோடியாகத் திரிந்தபோது அவர் கண்ட, கேட்ட பல வேடிக்கையான நிகழ்ச்சிகளையும், பழகிய மனிதர்களையும் ரசமாக வருணிக்கும் இலக்கியமாகும் ஸ்ரீகாந்தன். ஆங்கில நாவலாசிரியர் லிட்டன்' மைநாவல்' என்ற நூலில் கையாளும் தோரணையை இவரும் பின்பற்றுகிறார். இவருடைய நாவல்களில் சில நாடக வடிவிலும் வந்துள்ளன. குறிப்பாக 'ரமா', 'ஷோடசீ' இரண்டையும் கூறலாம்.

'வழிவேண்டுவோர்' (பத்தேர் தாபீ) என்ற நவீனம் தனிப்பட்ட பெருமை வாய்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார், முதல் பதிப்பாக இது வந்தபோது அடக்கி விட்டனர். இது ஒரு பயங்கரப் புரட்சிக் கூட்டத்தின் வரலாறு. இதில் வரும் 'மாஸ்டர்', 'சுமித்ரா' 'பாரதி' இவர்களை நம்மால் மறக்கவே முடியாது.

இவர் யாத்த சிறுகதைகளுள் 'இளம் பிராயத்துக் கதைகள்' சுவை பயப்பன. சிறுவர்களுக்கு ஆவலை மூட்டும் வண்ணம் 'வைகுந்தன் உயில்', 'காசிநாதன் போன்ற குறுநாவல்களையும் புனைந்தார். 'சேஷ பிரச்ன' (கமலா) என்பது கடைசியாக வெளிவந்த ஒப்பற்ற நவீனமாகும். 'ஜாகரண' (எழுச்சி) என்ற நாவலை இறுதியாக எழுதி அதை முடிக்காமலே சரத் மறைந்தார். இவருடைய இலக்கியங்கள் இந்திய மொழிகள் மட்டுமல்ல, மேலைநாட்டுமொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. இன்று தமிழரான நாம் அவருக்கு வணக்கம் செலுத்தக் கடப்பாடுடையோம்!



# வைகுந்தன் உயில்

சரத்சந்திரர் நாவல்

தமிழாக்கம்: அ. கி. ஜயராமன்



ஐந்தாறு வருடங்களுக்கு முன், பாபுகஞ்சி ஹுள்ள வைகுண்ட மஜும்தாரின் மளிகை வியாபாரம் பற்பல தொல்லைகளுக்கு உள்ளா கியது. பிறகு எப்படியோ அவைகளைச் சமா ளித்து அது நிலைத்து நின்றபோது பலர் ஆச்ச ரியப்பட்டனர்—ஏனென்றால் வைகுந்தன் அந்த நெருக்கடியை எவ்வாறு சமாளித்தார் என்பது ஒருவருக்கும் தெரியாது. அப்போது முதல், அவரது மளிகை வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னுக்கு வந்து கொண்டிருந் தது.

பிறகு நிலைமை சீர்பட்டது. எத்தனையோ கஷ்டங்களையும் துக்கங்களையும் சகித்துக் கொண்டார். இப்போது எவ்விதக் கஷ்டமு மின்றி வியாபாரம் நல்ல நிலைமையில் நடந்து வந்தது. இப்போது வைகுந்தன் தனது மூத்த மகன் கோகுலனைப் பள்ளிக்கூடம் போகவேண் டாமென்று நிறுத்தி அவனைக் கடையில் கொண்டு வந்து உட்கார வைத்தபோது தெரு விலுள்ளவர்கள் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவே இல்லை. அவர்கள் வைகுந்தனின் இந்தக் காரியத்தைப் பற்றிப் பலவாறு பேச லானார்கள்.

''பார்த்தாயா! இந்தக் கிழவன் செய்த காரியத்தை; பையன் சற்று மந்தமாக இருந் தால் என்ன? இந்த வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம் தேறிவிடுகிறான்! அதற்காகப் பள்ளிக்கூடமே போக வேண்டாம் என்று நிறுத்திவிட வேண்டுமா? அவனுடைய தாய் உயிரோடு இருந்தால் இப்படி நடந்திருக்குமா? எங்கே தன்னுடைய இளைய மகன் விநோதனைப் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று நிறுத்திப் பார்க்கட்டுமே! சின்ன எஜமானி துடைப்பக் கட்டையை எடுத்துக் கொண்டு இவன் விஷத்தை இறக்கி விடுவாள்'' என்றனர்.



வாஸ்தவத்தில் கோகுலன் படிப்பில் சற்று மந்தம்தான். வகுப்பில் ஒரு நாளும் அவன் தன் பாடத்தைச் சரியாக ஒப்பித்தது கிடை யாது.

கோகுலனுக்குத் தாய் இல்லை; அவனுக்குத் தாய் ஒருத்தி இருந்ததாகக் கூட நினைவில்லை. அவன் தன்னுடைய மாற்றாந்தாயின் கையில் வளர்ந்தே பெரியவனானான். பரீட்சை முடிவு தெரிந்ததும் அவன் வருத்தத்துடன் சிற்றன்னை யிடம் சென்று அழுதான்.

சிற்றன்னை அவனை இழுத்துத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு அன்புடன் அவன் தலையை வருடிக் கொண்டே வாஞ்சையுடன், ''கோகுல்! கவலைப் படாதேடா! மனிதன் வாழ்க்கையில் இம்மாதிரி எத்தனை துக்கங்களைச் சகிக்க வேண்டி இருக்கிறது? தன்னுடைய மனக் கஷ்டங்களை முகமலர்ச்சியுடன் சகித்துக் கொண்டு மீண்டும் மீண்டும் முயன்று படிக்கும் சிறுவன்தான் பிறகு முன்னுக்கு வருகிறான். அழாதே அப்பா! மனம் வைத்துப் படி. அடுத்த வருஷம் பாஸ் செய்து விடுவாய்!'' என்றாள்.

இதற்குள் இளையவனான விநோதன் துள்ளிக் குதித்தபடி வீட்டுக்குள் ஓடி வந்தான். கோகு லனைவிட ஆறு வயது சிறியவன் அவன். பள்ளி யில் இரண்டு வகுப்புகள் கீழேதான் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் வகுப்பில் அவனே முதல்வன். அந்த வருடம் அவன் இரண்டு வகுப்பு மேலே போய்விட்டான். இந்த நல்ல செய்தியைக் கேட்ட தாய் அவனை யும் அழைத்து மடிமீது அமர்த்திக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக அவனை ஆசிர்வதித் தாள்.

சாயுங்காலம் கடை வேலையை முடித்துக் கொண்டு வைகுந்தன் கணக்குப் புத்தகங்களைக் கைகளில் இடுக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார். தமது மக்கள் இருவரைப் பற்றிய விவரங்களையும் கேட்டார். பிள்ளைகளின் பொறுப்பைப் பூராவும் அவர்களுடைய தாயா ரிடம் விட்டு விட்டு அவர் நிம்மதியாக இருந் தார். ஆகவே இதைப் பற்றி ஒன்றும் பேச வில்லை. கை, கால் கழுவிக் கொண்டு, சிற் றுண்டி அருந்தி, வெற்றிலை மென்றுகொண்டே தினசரி வழக்கப்படி தன் கணக்கு வழக்குகளைப் பார்க்கலானார்.

அப்போது அவ்வூர் பள்ளிக்கூடத்தின் ஆறாவது வகுப்பு உபாத்தியாயரான ஜயலால் பானர்ஜி வைகுந்தனின் வீட்டிற்கு வந்தார். ''அம்மா! பவானி! இருக்கிறாயா அம்மா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந் தார். வைகுந்தன் கடையில் அரிசி, பருப்பு, நெய் முதலிய சாமான்கள் வாங்கியதில் அவருக்குக் கொஞ்சம் பாக்கி இருந்தது. அவரைக் கண்டு கோகுல் பயந்தான்.

உபாத்தியாயரின் அடிக்குப் பயந்த அவனை அணைத்துக் கொண்டு அவன் தலையையும், முதுகையும் அன்புடன் வருடிக் கொண்டே கனிந்த மொழியில் கூறலானாள். ''ஏண்டா கோகுல்! எல்லாப் பையன்களும் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு காப்பியடித்தார்களாமே! நீ ஏன் தலைநிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை?'' என்றாள்.



கோகுலனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்ற வில்லை. தன்னுடைய அசட்டுத் தனத்துக்கு இதுவும் ஒரு உதாரணம் போலிருக்கிறது என்று எண்ணி வெட்கித் தலைகுனிந்தான். ஆனால் இந்த விஷயம் உள்ளே இருந்த வைகுந்தன் காதுக்கு எட்டியபோது அவர் கணக்கு புஸ்தகத்திலிருந்து தலை நிமிர்ந்து இந்தப் பக்கம் சற்றுச் செவி சாய்த்தார்.

பவானி இலேசான புன்முறுவலுடன் கூற லானாள்! ''இந்த வருஷம் இவன் மனம் வைத்துப் படித்தானானால், அடுத்த வருஷம் இவனும் முதல் வகுப்பில் பாஸ் செய்துவிடு வான்!''

மாற்றாந்தாயின் வாயினின்றும் வெளிவந்த இந்தச் சொற்களைப் பள்ளி வாத்தியாரால் புரிந்து கொள்ள முடியவில்லை. .சக்களத்தியின் குழந்தைகள் மீது பெண்களுக்கு இயற்கையாக வெறுப்புத்தான் இருக்கும் என்று எண்ணினார். இதில் விதிவிலக்கும் உண்டு. அன்பைப் பொழி யும் மாற்றாந்தாயும் ஒருத்தி இருப்பாள் என்ற எண்ணம் அவர் மனத்தில் எழவில்லை. பவானி கூறியதை வெறும் உபசார வார்த்தை என்று அவர் எண்ணிவிட்டார். கோகுலனை இன்னும் இழிவுபடுத்திக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன், சப்புக் கொட்டிக் காட்டி ''ஆஹாஹா! கோகுலனா பஸ்டில் பாஸ் பண்ணப் போகிறான்? கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்க வேண்டும். பஸ்டில் பாஸ் பண்ணப் போகிற வன் அதோ உன் இடது பக்கம் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறானே அந்தப் பையன் தான்!'' என்று கூறி விரலால் விநோதனைச் சுட்டிக்காட்டி, முகத்தில் பொய்ச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''அப்போது கூட இந்தப் பையனுக்கு வெட்கம் வரப் போகி றதா? அது மட்டுமா? இவன் மற்றப் பையன் களிடம் 'நான் பாஸ் பண்ணாவிட்டால் என்ன? என் தம்பி பஸ்டில் பாஸ் பண்ணி இருக்கிறானே.

அது போதாதா? சொல்லுங்களேன்! உங்கள் தம்பிமார்களில் யாராவது முதலாவதாக பாஸ் பண்ணி டபுள் ப்ரமோஷன் வாங்கியிருக் கின்றானா?' என்று கேட்கிறான். கேட்டாயா அம்மா இவன் பேச்சை? தம்பி முதலாவதாக பாஸ் பண்ணிவிட்டான், நம்மால் பண்ணமுடிய வில்லையே என்று இவன் வெட்கி மடிய வேண் டாமா? அதை விட்டுப், பெருமை பேசிக் கொண்டு திரிகிறான். இவன் புத்தியைப் பாரேன்!''

பவானியால் பொறுக்க முடியவில்லை. அவள் கோகுலனை இன்னும் இறுக்கித் தன் னுடன் அணைத்துக் கொண்டு அவன் தலையை வருடலானாள். தம்பியிடம் அவனுக்கு எவ்வ ளவு அன்பும், ஆசையும் உண்டு என்பது அவ ளுக்குத் தெரியும். கோகுலன் வெட்கத்தினால் தன் முகத்தைத் தாயின் மார்பில் புதைத்துக் கொண்டான்.

உபாத்தியாயர் இன்னும் ஏதேதோ கூறி விட்டு ''இப்பொழுதிலிருந்தே ஒரு சிறந்த உபாத்தியாயரை வைத்து விநோதனுக்கு நன்றாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும்'' என்று பவானியிடம் வற்புறுத்தினார். இதற்குள் அறைக் கதவு திறக்கப்பட்டதால்தாய், மகன் இருவர் மீதும் வெளிச்சம் விழுந்தது. உபாத் தியாயருக்கு திடுக்கென்றது. ஏனென்றால்

அவர் நினைத்தபடி அல்லாமல் பவானி தன் சக்களத்தியின் அறிவற்ற பாலகனை அணைத்து அவன் தலையை அன்புடன் கோதிக்கொண்டு இருந்தாள். ஆகவே தன்னுடைய ஒப்புநோக்கு விமர்சனத்தைத் தொடரலாமா, வேண்டாமா என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. அவர் வேறு பேச்சை ஆரம்பித்தார்.

பவானி அது வரையில் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. அப்போதும் வாய் திறக்கவில்லை. முடிவில் உபாத்தியாயர் சரி, இரவு நேரமாகிவிட்டது என்று கூறி, அவளுக்குப் பல்வேறு ஆசிமொழிகளை வழங்கிவிட்டு, ''எதிர்காலத்தில் விநோதன் நிச்சயம் நீதிபதியாவான்'' என்ற தன் நம்பிக்கையைப் பல முறை ஊர்ஜிதம் செய்து விட்டு, தடியை ஊன்றிக் கொண்டு எழுந்து நின்றான். அங்கே அறைக்குள் அமர்ந்திருந்த வைகுந்தனும் இந்தச் சமயத்தைத் தான் எதிர்பார்த்திருந்தார். அவர் எதிரே வந்து நின்றார். கடுமையான குரலில் ''ஏண்டா கோகுல்! எல்லாப் பையன்களும் புஸ்தகத்தைப் பார்த்துக் காப்பியடித்தார்களே, நீ ஏண்டா அப்படிச் செய்யவில்லை?'' என்று கேட்டார்.

கோகுலன் பயத்தினால் முன் போலவே முகத்தைப் புதைத்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். வெகு நேரம் மிரட்டி உருட்டிய பிறகு அவன் கூறிய பதிலின் சாரம் இதுதான். முதல் நாள் அன்றே ஹெட்மாஸ்டர் வந்து யாரும் காப்பியடிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டுப் போனாராம்.

வைகுந்தன் முதலில் சிறிது நேரம் பேசாமல் நின்று யோசித்துக் கொண்டிருந்தார். பிறகு, ''சரி! நாளையிலிருந்து நீ பள்ளிக்குப் போக வேண்டாம்! என்னுடன் கடைக்கு வா'' என்று சொன்னார். இதைக் கூறிவிட்டு அவர் மீண்டும் தன் அறைக்குச் சென்று கணக்குப் பார்க்கும் வேலையைத் தொடர்ந்தார்.

கோகுலனை மிரட்டுவதற்காகக் கூறிய வார்த்தைகள் இவை என்று நினைத்தாள் பவானி. ஆகையால் அவள் அப்போது ஒன்றும் பேசவில்லை. ஆனால் மறுநாள் காலை வைகுந்தன் நிஜமாகவே கோகுலனைத் தன்னுடன் கடைக்கு வர வேண்டுமென்று அழைத்தபோது பவானிக்கு உண்மையிலேயே கோபம் வந்துவிட்டது. அவள் கணவனிடம் இதைப்பற்றிப் பலமாக எதிர்த்து, வாதித்து, இதைத் தடுத்தாள். ''இதென்ன! நீங்கள் செய்யும் காரியம் நன்றாக இருக்கிறதா? பாவம், அவன் பச்சைக் குழந்தை. அவன் வந்து உங்களுடன் கடை வியாபாரம் செய்வதாவது? இது நடக்கக் கூடிய காரியமா? என் உயிருள்ள வரையில் அவனைப் படிப்பிலிருந்து நிறுத்தமாட்டேன். இது நடக்காது. இந்த மாதிரி உங்களுக்குக் கோபம் வந்ததை நான் பார்த்ததே இல்லை!'' என்று கூறிவிட்டு பவானி கோபத்துடன் ஆவேசம் வந்தவள் போல் மகனை இழுத்துக் கொண்டு சென்றாள். அப்போது வைகுந்தன் சற்றே புன்னகை செய்துவிட்டு, ''இப்போது யாருக்குக் கோபம் வந்திருக்கிறது என்பது தெரிந்துவிட்டதல்லவா?'' என்றான்.

''ஏன், உங்களுக்குத்தான், வேறு யாருக்கு?''

''எப்போதாவது எனக்குக் கோபம் வந்து நீ பார்த்திருக்கிறாயா?''

''பின்னே எதற்காக நீங்கள் அப்படிச் சொன்னீர்கள்? சிறு வயதில் எல்லோரும் தான் பாஸ் ஆகிறார்கள், பெயிலாகிறார்கள். அதற்காகப் படிப்பதை நிறுத்திவிடுவதா?''

அப்போது வைகுந்தன் கோகுலனை மறு பக்கம் அனுப்பிவிட்டு, சிரித்துக் கொண்டே கூறலானார்:— ''இதைக் கேள்! நான் கோபித்துக் கொள்ளவில்லை. மாறாக நான் உன் மூத்த மகனை மிகுந்த மனமகிழ்ச்சியுடனேயே என்னுடன் கடைக்கு அழைத்துச் செல்கிறேன். ஆனால் உபாத்தியாயர் பானர்ஜி கூறியதைப் போல் உன் சிறிய மகன் ஜட்ஜாக ஆவான், கவர்னராக ஆவான் என்று உன்னிடம் பொய் நம்பிக்கையை உண்டாக்க நான் விரும்பவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லி வைக்கிறேன். எனக்குப் பிறகு நீ கோகுலனின் பாதுகாப்பில் தான் கவலையற்று, கஷ்டமின்றி வாழமுடியும்!''

கணவனுக்குப் பிறகு, ''கணவன் இல்லை'' என்ற எண்ணம் வந்ததுமே பவானியின் கண்கள் கலங்கிவிட்டன. அவள் குரல் தழுதழுத்தது. அவள் சொன்னாள் ''அது எனக்குத் தெரியும். ஆனால் என் கோகுல் கள்ளம் கபடம் அற்றவன். உங்களுடைய வியாபார சூதுவாதுகளை எல்லாம் அவனால் புரிந்து கொள்ள முடியுமா? இவனை எல்லோரும் ஏமாற்றி விடுவார்கள். அதை மட்டும் நான் கூற முடியும்!''

வைகுந்தன் சிரித்துக் கொண்டே ''எல்லாருமே அவனை ஏமாற்றிவிட மாட்டார்கள். இரண்டொருவர் ஏமாற்றக்கூடும். ஆனால் இவன் ஒருவரையும் ஏமாற்ற மாட்டான். அதுவே போதுமானது. அப்போது லக்ஷ்மிதேவி தானாக அவன் கையில் வந்தமர்ந்து அருள் புரிவாள்!'' இதைக் கூறும்போது வைகுந்தன் கண்களும் கலங்கிவிட்டன. சுபாவமாகவே அவர் மிக இளகிய உள்ளம் படைத்தவர். பண வசதி இல்லாமல் நெடுநாள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தவர். இப்போது அவர் ஏதோ நல்ல முறையில் சம்பாத்தியம் செய்துவிட்டார். ஆனால் தனக்கு வயதாகிவிட்டது, இன்னும் அதிக காலம் இருக்க மாட்டோம் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. முன் போல் இப்போது உடம்பு திடமாக இல்லை. வலுக்குன்றிவிட்டது. அவர் சட்டென்று தன் கண்



(22-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறேனே? சரி, மனு அம்மா! நீ அம்மாவிடம் சொல்லிவிடு, நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் திரும்பி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, பரபரப்புடன் வந்ததுபோல் சென்றுவிட்டான்.

பவானி அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். மறைவில் நின்றபடி அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தாள், கோகுலன் சென்றதும் அவள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமை, இரவை ஆனந்தமாகக் கழித்துவிட்டு, விடிந்து நெடுநேரத்திற்குப் பிறகு விநோதன் வீட்டுக்கு வந்தான். இங்கே நிலவிய காட்சியைக் கண்டு பிரமித்துப் போய்விட்டான். மனு அம்மாவின் வாயிலாக சகல விவரங்களையும் கேட்டுக் கொண்டு தாயின் செவிகளில்படும்படி ''அண்ணாவுக்கு தகவல் அனுப்பாமல் அம்மா என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். இதனால் எனக்குத்தானே அவமானம்'' என்றான்.



பவானி யாவற்றையும் அறிவாள். ஆயினும் இதற்கு அவள் பதில் பேசவில்லை. கோகுலன் திரும்பி வந்தான். விநோதனைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்துவிட்டான். நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்பதில் முனைந்திருந்தான். பிராபணர்களுக்கு விமரிசையாக போஜனம் செய்வித்தான். தாயின் விரதம் செவ்வனே முடிவடைந்ததும், அவன் ஒருவரிடமும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்து நழுவ ஆயத்தமானான். அப்போது பானர்ஜி அவனை எல்லோருக்கும் நடுவே அழைத்து, ''கோகுல் இங்கே இப்படி வா! சற்று உட்காரு'' என்றார்.

கோகுலன் அன்று அவரையும் அழைத்திருந்தான். ஆகையால் அவனுடைய சோற்றைத் தின்றுவிட்டு, அன்றொருநாள் தான் அடைந்த அவமானத்திற்குப் பழி வாங்கத் திட்டம் வகுத்துவிட்டார். மஜூம்தார் வீட்டுச் சோற்றை அவர் நெடுநாட்களாகத் தின்பவர். ஆகவே அன்று நிமாயி ராயைவிட, தானே அதிக அவமானம் அடைந்ததாக எண்ணினார். அவர் எல்லோர் முன்னிலையிலும் விநோதனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டிக் கொண்டே ''ஏண்டாப்பா! உன் அண்ணன் இன்று செய்த தந்திரத்தின் கருத்து உனக்குப் புரிந்ததா?'' என்று கேட்டார்.

பேச்சுக்கள் எழும் முறையைக் கண்டு விநோதன் சங்கையடைந்தான்.

விநோதன் சுருக்கமாக ''புரியவில்லையே, என்ன?'' என்றான்.

பானர்ஜி லேசான கபடச் சிரிப்புடன், ''வழக்கில் நீ ஜெயித்துவிடுவாய் என்று எனக்குத் தெரியும். நீ பி.ஏ., எம்.ஏ., பாஸ் செய்திருக்கிறாய். ஆனால் அம்மாவை எவ்வகையிலாவது தன் வசம் வைத்திருக்கவேண்டும் என்பதே இன்றைய நாடகத்தின் கருத்து என்பதை நீ தெரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் வழக்கின் வெற்றி தோல்வி அவளைப் பொறுத்திருக்கிறது!'' என்றார்.

கோகுலனுக்கு முகம் சுண்டிவிட்டது. ''இல்லை மாஸ்டர்! ஒருநாளும் நான் அப்படி நினைக்கவில்லை'' என்று கூறிவிட்டு அவன் வேகமாக அவ்விடம் விட்டகன்றான்.

பானர்ஜி உரக்கச் சத்தமிட்டு ''விநோதா! இங்கே பார்! கோகுலனை இனி இங்கே நுழைய விடாதே. அதன் உன்னை நாசமாக்கி விடுவான்'' என்றார்.

விநோதன் சங்கையடைந்து தலைகுனிந்து அமர்ந்திருந்தான். தன் அண்ணன் குணம் அவனுக்குத் தெரியாததல்ல. மனத்தில் வேறு உத்தேசத்தை வைத்துக் கொண்டு அண்ணன் ஒரு போதும் இம்மாதிரிக் காரியம் செய்ய மாட்டான் என்பது அவனுக்குத் தெரிதும். பானர்ஜியின் வார்த்தைகளை அவன் பூராவும் நம்பவில்லை. ஆனால் பலர் முன்னிலையில் தன் சகோதரனை அவர் அவமானப்படுத்தியது அவன் மனத்தைப் புண்படுத்தியது.

வந்திருந்தவர்கள் எல்லோரும் சென்ற பிறகு விநோதன் உள்ளே சென்று பார்த்தான். தாய் தன் அறையில் கதவை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். பானர்ஜி பேசியதை அம்மாவும் கேட்டிருக்கிறாள் என்பது யாரையும் கேட்காமலே அவனுக்கு விளங்கியது.

கடை வேலைகளை முடித்துக்கொண்டு கோகுலன் சாயுங்காலம் வீட்டுக்கு வந்து பார்த்தபோது அங்கேயும் ஒரு நாடகம் நடந்துகொண்டிருந்தது. நிமாயி ராய் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்தார். கீழே தரையில் அமர்ந்திருந்த அவரது மகள் மனோரமா ஹேமாவையும் தன்னுடன் அணைத்துக் கொண்டு தந்தையின் வாடிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அறையில் காலடி வைத்ததுமே நிமாயி சொன்னார், ''ஒன்றும் தெரியாதவன்போல் உன் தாயின் மூலம் எங்களை அவமானம் செய்துவிட்டாய். இதற்குப் பரிகாரம் என்ன?''

ஏற்கனவே கோகுலனின் மனம் புண்பட்டிருந்தது. பகல் பூராவும் உழைத்ததால் மிகவும் களைத்துப் போயிருந்தான். ஆகையால் குற்றச்சாட்டைக் கேட்டதுமே அவன் உடல் பற்றி எரிந்தது. மனோரமாவும் மூக்கை உறிஞ்சிக் கொண்டு அழுதபடி ''இனி ஒருமுறை நீங்கள் அங்கே சென்றால் நான் கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொண்டு உயிரை விட்டுவிடுவேன்!'' என்றாள்.

மகளின் வார்த்தையினால் உற்சாகமடைந்த மாமனார் ராய், மிகுந்த தைரியத்துடன் ''அந்த பெண்பிள்ளை என்ன சாமான்யப்பட்டவளா?'' வெடி குண்டு வெடிப்பதுபோல் வெடித்தெழுந்தான் கோகுலன். ''போதும் வாயை மூடுங்கள்''! இனி என் தாயைப்பற்றி இந்த மாதிரி ஏதாவது பேசினால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவேன். ஜாக்கிரதை'' என்றான்.

இதற்குமேல் அவன் அங்கே நிற்கவேயில்லை. புயல்போல் வெளியேறிவிட்டான். நிமாயி ராய் மனோரமா இருவர் தலையிலும் இடிவிழுந்ததைப்போல் இருந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலானார்கள். என்ன காரியம் செய்துவிட்டான் கோகுலன்? பூஜிக்

சுத்தக்க தன் மாமனாரை இவ்வளவு மோசமாக அவமானப்படுத்தி விட்டானே!

# 12

விநோதனுக்கு நண்பர்கள் சிலர் சேர்ந்தனர். அந்தக் கூட்டம் அவனை அண்ணன் மீது வழக்குத் தொடரும்படி உற்சாகப்படுத்தி வந்தது. காரணம் அவன் தோற்றுவிட்டால் அவர்களுக்கு அதில் நஷ்டம் ஒன்றும் இல்லை. ஜெயித்து விட்டால் பிறகு அவர்கள் பாடு கொண்டாட்டம் தான். நெடுநாளைக்கு அவர்கள் சௌகரியமாக வரவு-செலவு செய்யலாம். முடிவில் வழக்குத் தொடர்வது என்று நண்பர் குழாம் தீர்மானித்தது. ஏனென்றால் விநோதன் சார்பாக சமரசம் பேசச் சென்ற நடுவர்களிடம் கோகுலன் சொல்லி அனுப்பி விட்டான். "நான் அந்த உதவாக்கரைச் சோம்பேறிப் பயலுக்கு ஒரு தம்பிடிகூடத் தரமாட்டேன். அவனால் ஆனதைப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று சொன்னான்.

வழக்குப் போடுவதென்று நண்பர்கள் முடிவு செய்தார்கள். இவ்வளவு பெரிய சொத்தின் மீது வழக்குத் தொடரப் பெரிய தொகை வேண்டுமே! அதனால் நடவடிக்கை தாமதப்பட்டது.

தன் அண்ணன் கோகுலன் மீது விநோதனுக்கு எவ்வளவு கோபம் இருந்தபோதிலும் அந்த வைகாசி மாதப்பிறப்பு அன்று முதல் அவன் உள்ளம் தழுதழுத்துக் கொண்டிருந்தது. அன்று பலர் முன்னிலையில் அவமானப்பட்டுத் தன் அண்ணன் சென்றபோது அவன் முகத் தோற்றத்தை விநோதன் நன்றாகக் கவனித்தான். அவமானத்தால் வாடித் தொங்கிய அந்த முகம் விநோதன் இதயத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. அதை அவனால் மறக்கவே முடியவில்லை. அது அநியாயம்! தவறு, பெரிய அநீதி இழைக்கப்பட்டுவிட்டது. பொய்யான ஓர் அபவாதத்தை உன் அண்ணன் மீது சுமத்தி அவனை நீ விரட்டிவிட்டாய் என்று யாரோ அவன் செவிகளில் திரும்பத் திரும்பக் கூறுவதுபோல் இருந்தது. இனி தவறிப் போய் கூட இந்த வீட்டுக்குள் அண்ணா அடி எடுத்து வைக்க மாட்டான், என்பதை விநோதன் நன்கு உணர்ந்தான்.



இங்குள்ள படித்த இளைஞர்கள் பலர் விநோதனுக்கு நண்பர்களாக இருந்தனர். விநோதனிடம் அவர்களுக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பானர்ஜியை அழைத்துக் கொண்டு வந்து விநோதன் விவகாரத்தை சாங்கோபாங்கமாக விவாதித்தார்கள். முடிவில் கோகுலனை வார்த்தையில் கட்டுப்படுத்தாமல் ஒன்றும் நடவாது என்று தீர்மானித்தனர். கோகுலன் ஒன்றும் அறியாதவன், ஒரு முட்டாள். அவனிடம் பேச்சுக் கொடுத்து அவனிடமிருந்து நாலு பேர் முன்னிலையில் அவனை வார்த்தையில் சிக்க வைக்க வேண்டும் அதை வைத்துக் கொண்டு அதன் மீது சாட்சிகளைத் தயார் செய்து வழக்கைத் தொடர வேண்டும் என்று முடிவுகட்டினர்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று நாலைந்து பெரிய மனிதர்களை அழைத்துக் கொண்டு கோகுலன் வீட்டுக்குச் செல்வது,



அங்கேயே இந்த விவகாரத்தைப் பேசி அவனைச் சிக்க வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்திருந்தவர்கள் கோகுலனைப்பற்றிப் பற்பல விதமாகக் கேலி செய்தனர். ஒருவன் கோகுலனைப்போல் பேசி நடித்துக் காட்டினான். மற்றொருவன் அடுத்த ஞாயிற்றுக் கிழமை அன்று அங்கு யார் யார் எப்படி எப்படிப் பேசுவார்கள் என்பதை ஒத்திகை செய்து காட்டினான். இவ்வளவுக்கும் விநோதன் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தான். நண்பர்கள் தங்கள் பேச்சு சுவாரஸ்யத்தில் விநோதன் உற்சாகமிழந்து அமர்ந்திருப்பதைக் கவனிக்கவே இல்லை.

* * * * *

அன்று விநோதன் வெளியே போகவில்லை சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறையில் அமர்ந்திருந்தான். பகல் ஒருமணி இருக்கும்; அப்போது திடீரென்று கோகுலன் அங்கே வந்துவிட்டான்.

"மனு அம்மா! என்ன? சாப்பாடு ஆயிற்றா?' என்று கேட்டான்.

"இல்லை, பெரிய பாபு! இனிமேல்தான்" என்றாள் மனு.

"இன்னுமா சாப்பிடவில்லை?" என்று கேட்டுவிட்டு கோகுலன் தனக்குப் போட்ட தடுக்கை கையில் எடுத்துக் கொண்டு போய் சமையலறை வாசற்படியின் மீது போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பிறகு "மனு அம்மா, குடிப்பதற்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா. வசூலுக்குக் கிளம்பினேன். இந்தக் கடும் வெய்யிலில் நடந்து நடந்து உயிரே போய்விட்டது. சரி, அம்மா எங்கே?" என்று கேட்டான்.

பவானி சமையலறையில்தான் இருந்தாள். ஆனால் அன்றைய சம்பவத்தை எண்ணி அவன் முன் வர வெட்கினாள். விநோதன் வீட்டில் இருக்கமாட்டான், வேலைக்குச் சென்றிருப்பான் என்று நினைத்திருந்தான் கோகுலன். ஆகையால் அவன் பேச ஆரம்பித்தான்!

"மனு அம்மா! எல்லாம் பொய்! சுத்தப் பொய். இந்தக் கலியுகத்தில் தர்மம், சத்தியம் என்று ஏதாவது இருக்கிறதா? அப்பா இறக்கும்போது அம்மாவை என் கையில் ஒப்படைத்து 'இந்தாடா கோகுல்! இவளை உன் கையில் ஒப்படைத்து விட்டுப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். நான் வெள்ளை மனம் படைத்தவன். சாது இல்லை என்றால் அம்மாவை விநோதன் பலவந்தமாக இங்கு அழைத்து வர விட்டிருப்பேனா? அவன் என் தம்பிதானே! ஆனால் நான் இவள் மகன் அல்லவா? நான் நினைத்தால் அம்மாவை இங்கிருந்து பலவந்தமாக அழைத்துப் போக முடியாதா? மனு அம்மா! உனக்குத் தெரியும்! அப்பாவின் உயில் இதுதான். ஏதோ பேனாவினால் நாலுவரி எழுதி விட்டால் அது உயிலாகிவிடுமா?" என்றான்.

மனு அம்மா கண் ஜாடையினால் விநோதன் வீட்டில் இருக்கிறான் என்பதைத் தெரிவித்தாள். உடனே கோகுலன் தண்ணீரைப் பூராவும் குடிக்காமல் ...

விட்டுக் காலில் செருப்பை மாட்டிக் கொண்டு மளமளவென்று சென்றுவிட்டான்.

இரவு ஒன்பது, பத்துமணி இருக்கும். ரஸிக சக்கரவர்த்தி திடீரென்று வந்து கேட்டார். "அம்மா! பெரிய பாபு இன்னும் வீட்டுக்கு வந்து சேரவில்லை. இங்கே வந்து அவர் சாப்பிட்டு விட்டுப் போனாரா? எப்போது போனார்?"

பவானி திடுக்கிட்டுப் போய்' "அவன் இங்கே சாப்பிடவேயில்லை. வசூலுக்கு வந்தானாம். ஒருதம்ளர் தண்ணீர் மட்டும் குடித்து விட்டுச் சென்றான்" என்றாள்.

சக்ரவர்த்தி சொன்னார் : "இதைக் கேளுங்கள். இன்று பெரிய பாபுவுக்குப் பிறந்த நாள். அவர் வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டார். வரும்போது இன்று உங்கள் சோறு வேண்டாம். அம்மாவிடம் போய் பிரஸாதம் வாங்கிச் சாப்பிடப் போகிறேன் என்று சொல்லிவிட்டுவந்தாராம். நீங்கள் சொல்வதைக் கேட்டால், இன்று பூராவும் அவர் ஒன்றுமே சாப்பிடவில்லை என்று தெரிகிறது."

இதைக் கேட்டதும் பவானிக்கு உள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது. விநோதன் அடுத்த அறையில் தான் இருந்தான்; சக்கரவர்த்தியின் குரலைக் கேட்டதும் அருகே வந்து உட்கார்ந்தான். பிறகு வேடிக்கையாக, "சொல்லுங்கள்! சக்ரவர்த்தியாரே நிமாயி ராயின் ராஜ்யத்தில் உங்கள் உத்தியோகம் எப்படி நடைபெறுகிறது?" என்றான்.

சக்ரவர்த்தி வியப்படைந்து. "நிமாயி ராயா? ராமராமா! என்று சொல்லுங்கள். அவர் கடைக்குள் நுழைய முடியுமா?" என்றார்.

"அவர் தான் அண்ணாவை அடக்கி ஆட்சி செலுத்தி வருகிறார் என்றல்லவா நான் கேள்விப்பட்டேன்."

சக்ரவர்த்தி பவானியின் பக்கம் ஜாடைக் காட்டி சிரித்துக் கொண்டே, "சின்னபாபு! இவர்கள் இருக்கும் வரை அப்படியெல்லாம் ஒன்றும் நடக்க முடியாது. என்னை நீக்கிவிட்டு தாங்களே கடை நிர்வாகத்தை பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தான் வந்தார்கள். ஆனால் அம்மாவின் ஒரே ஒரு உத்தரவு, அவர்களுடைய திட்டத்தைத் தவிடு பொடியாக்கி விட்டது. இப்போது ஏதோ அங்குமிங்கும் பிராய்ந்து நாலு காசு எடுத்துக் கொண்டால், அதுவே பெரிய காரியம், இங்கே கடையில் கை வைக்க முடியாது."

இதன் பிறகு சக்ரவர்த்தி அன்றைய தினம் நடந்த சம்பவத்தை விவரமாக விளக்கிக் கூறலானார்: "பெரியபாபு கள்ளம் கபடமற்ற மனிதர்; சூது வாது தெரியாதவர். அதனால் என்ன? தாய் தந்தையரிடம் அவருக்குள்ள பக்தி அசைக்க முடியாதது. அன்றைய தினம் அவர் அம்மாவின் உத்தரவை ரத்து செய்ய எனக்கு அதிகாரமில்லை என்று சொன்னபோது எவ்வளவு அழுகை, அங்கலாய்ப்பு, சண்டை, பூசல், மண்டை உடைந்தது? அவர் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.



யின் உத்தரவு. இது என் தாயின் உத்தரவு என்று சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர சற்றும் விட்டுக் கொடுக்கவில்லையே. சின்ன பாபு! முன்பு கடை நிர்வாகம் எவ்வாறு என் கையில் இருந்ததோ, அப்படியேதான் இப்போதும் இருக்கிறது!

விநோதனின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. சக்ரவர்த்தி மேலே கூறலானார். "சின்னபாபு! இந்த மாதிரி அண்ணன் யாருக்கும் கிடைக்கமாட்டான். அவர் பேச்சில் எப்போதும் விநோதன்தான். அவர் பேச்சுக்குப் பேச்சு இதைத்தான் சொல்லிக் கொண்டிருப்பார். எங்கள் விநோதனைப்போல் படித்துப் பாஸ் செய்தவர்கள் யார் இருக்கிறார்கள்? என் விநோதன் படித்த அளவு இந்த வட்டாரத்தில் எவன் படித்திருக்கிறான்? விநோதனைப் போல் ஒரு சகோதரன் யாருக்குக் கிடைக்கும்? பலர் வந்து உங்களைப் பற்றி அவரிடம் ஏதேதோ அவதூறு கூறுவார்கள. ஆனால் அவர் என்னிடம் வந்து, சிரித்துக் கொண்டே சக்ரவர்த்தி! இந்தப் பயல்களுக்கெல்லாம் என் தம்பியைக் கண்டால் பொறாமை. இந்த அயோக்கிய பசங்களுக்கு இரவு பகல் இது தான் வேலை. இந்த பிச்சைக்காரப் பயல்கள் சொல்வதை நான் நம்புவதற்கு என்னை முட்டாள் என்று நினைத்து விட்டான்கள் போலிருக்கிறது?" என்பார்.

சற்று நிறுத்தி விட்டு சக்ரவர்த்தி மேலும் தொடர்ந்தார்: "அன்றொரு நாள் காசியிலிருந்து ஒரு பண்டிதன் வந்தான். அவன் பூசைப்போட்டு தன் மந்திர சக்தியால் சின்ன பாபுவின் மனத்தை மாற்றி விடுகிறேன் என்று கூறி, நூற்று எட்டு தங்க துளசி பத்ரம் வேண்டுமென்று அதற்காக ஐநூறு ரூபாயை பெரிய பாபுவிடமிருந்து வாங்கிக்கொண்டு போய்விட்டான். நான் எவ்வளவோ சொன்னேன், தடுத்தேன். அவர் சற்றும் கேட்கவில்லை. நமது விநோதன் எப்படியாவது சரியாகட்டும். அவனுக்கு நல்ல புத்தி வரட்டும். அவன் 'எம்.ஏ.' பாஸ் பண்ணட்டும். இதற்காக என் பணம் ஐநூறு போனால் போகட்டும். பரவாயில்லை" என்று சொல்லி விட்டார்.

விநோதன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அழுகை பொங்கும் குரலில் " "ஆமாம்! சக்ரவர்த்தி. நான்கூட கேள்விப்பட்டேன். என் பெயரைச் சொல்லி பலர் அண்ணாவை ஏமாற்றி இருக்கிறார்கள்" என்றான்.

சக்ரவர்த்தி குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு "இதே ஜயலால் பானர்ஜி, கொஞ்சமான பணமா வாங்கி இருப்பார்? இந்த உபத்திரவங்களுக்கெல்லாம் மூலவேர் அந்த அயோக்கியன்தான்" என்று கூறிவிட்டு பெரிய எஜமான் இறந்தபோது விநோதனைத் தேடி அழைத்து வருவதாகக்கூறி பானர்ஜி பணம் வாங்கிக் கொண்டதையும் கூறினார்.

இவை எல்லாவற்றையும் கேட்டு விட்டு, பவானி வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. அவர் கண்கள் தாரைதாரையாகக் கண்ணீரைச் சொரிந்தன.

சக்ரவர்த்தி விடை பெற்றுச் சென்றதும் விநோதன் படுத்துத் தூங்கலானான். ஆனால் இரவு முழுதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. சக்ரவர்த்தியின் வாயிலாக அவன்

கேட்டறிந்த செய்திகளைப் பற்றி இரவு பூரா வும் சிந்திக்கலானான். வழக்கத்திற்கு மாறான இந்தக் காரியம் எவ்வாறு நடைபெற்றது? தந்தை ஏன் எனக்குச் சொத்துக் கொடுக்கா மல் வஞ்சித்தார். அண்ணா ஏன் எனக்கு எது வும் தர மறுக்கிறான்? இதன் காரணம் என்ன? இதைப் பற்றியே அவன் மனம் சிந்திக்க லாயிற்று.

* * *

## 13

விநோதனின் நண்பர்கள் பெருமுயற்சி செய்து தங்களுடன் பற்பல பெரிய மனிதர் களையும் அழைத்துக் கொண்டு ஞாயிற்றுக் கிழமையன்று காலையிலேயே கோகுலன் அறை யில் வந்து கூடினர். கோகுலன் கடைக்குச் செல்ல புறப்பட்டுக் கொண்டிருந்தான். திடீ ரென்று பல பெரிய மனிதர்கள் வருவதைக் கண்டு சற்று திகைத்தான். விசேஷமாக டெபுடி சூப்ரண்டையும், முன்சீப் கிரீஷ்பாபு வையும் கண்டு, அவர்களை எங்கே உட்கார வைப்பது, எவ்வாறு உபசரிப்பது என்று புரி யாமல் தவித்தான். விநோதனின் முகம் வாட்டமடைந்தது. அவன் பேசாமல் ஓர் மூலையில் உட்கார்ந்து விட்டான். அவன் முகத்தைப் பார்க்கும்போது இவர்கள் எல் லோருமாகச் சேர்ந்து அவனைப் பலி கொடுக்க இங்கே பிடித்துக் கொண்டு வந்திருப்பதைப் போல் தோன்றியது.



பானர்ஜி தயாராக வந்திருந்தார். ஆகவே, அவர்தான் விவகாரத்தை ஆரம்பித்து வைத்தார். பார்த்துக் கொண்டிருக்கும் போதே கோகுலனின் முகமும், கண்களும் சிவந்து விட்டது. அவன் சொன்னான் ''சரி தான்! இதற்காகத்தான் நீங்கள் எல்லோரும் கும்பலாக வந்திருக்கிறீர்களோ? நான் அந்த அயோக்கியப் பயலுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்க மாட்டேன். அவன் குடிக்கிறான்''.

இதைக் கேட்டு ஒருவரும் பதில் பேச வில்லை! பானர்ஜி மட்டும் நிமிர்ந்து, சிரித்து விட்டு, ''சரி! ஒப்புக் கொள்வோம். அவன் குடிக்கிறான் ஆனால் அதைத் தடுப்பதற்கு நீ யார்? அதிருக்கட்டும். உன் தந்தை இறந்த போது, பித்தலாட்டம் பண்ணி, பொய் உயில் எழுதி வாங்கினாய். இல்லை என்று உன்னால் நிரூபிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

கோகுலன் கோபத்தினால் பொங்கி எழுந் தான்'' நானா பித்தலாட்டம் செய்தேன்? நான் மோசக்காரனா? எந்தக் கழுதை மகன் சொல் கிறான்?'' என்றான்.

கிரீஷ்பாபு வயதானவர். அவர் அமைதி யான குரலில், '' கோகுல்பாபு! நீங்கள் இந்த மாதிரி ஆத்திரப்படாதீர்கள். சற்று சாந்த மாகப் பதில் சொல்லுங்கள்'' என்றார்.

பானர்ஜி இந்தக் குடும்பத்துடன் நீண்ட கால தொடர்புள்ளவர். அவருக்குச் சகல விஷயங்களும் தெரியும். அவர் கண்களைச் சிமிட்டிக் கொண்டே, ''நீ இப்படி எல்லாம் பேசினால், உன் தாயாரைக் கோர்ட்டுக்கு இழுத்துப் பெட்டிமேல் ஏற்றும்படி நேரிடும்'' என்றார்.
அவர் திட்டமிட்டபடியே தான் நடந்தது.

கோகுலன் கட்டுக்கடங்காத கோபத்தி னால் வெறி கொண்டவன் போல் ஆனான். ''என்ன சொன்னாய்? என் தாயைக் கோர்ட் டுக்கு இழுப்பாயா? என் தாயையா பெட்டி மீது ஏற்றுவாய்? அடே பாதகா! இந்தா எடுத்துக் கொள்! என் சொத்தை எல்லாம் எடுத்துக் கொள்! எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் கோர்ட்டுக்குப் போகவில்லை. என் தாயை அழைத்துக் கொண்டு காசிக்குப் போய் விடுகிறேன்'' என்றான்.

நிமாயிராயும் அங்கு இருந்தார். அவர் கண்களை உருட்டிக் கொண்டே, ''கோகுல், கொஞ்சம் பொறு! கொஞ்சம் பொறு! நீ என்ன பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்றார்.

ஆனால் கோகுலன் தன் மாமனாரின் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ள வில்லை. அவன் எல்லார் முன்னிலையிலும் தனது வலது காலை நீட்டி, முன் போலவே ஆத்திரத்துடன் உரக்கச் சத்தமிட்டு, விநோ தனைக் குறிவைத்து, "வாடா! உருப்படாப் பயலேவா! இங்கே என் பாதங்களை நீட்டி இருக்கிறேன். இதைத்தொட்டுச் சத்தியம் செய்யடா! உன் அண்ணன் பொய்யன்! மோசக்காரன் என்று சத்தியம் செய்துவிடு. பிறகு இந்தச் சொத்துக்கள் பூராவையும் எடுத்துக் கொள். அப்படி நான் கொடுக்கத் தவறினால், நான் வைகுந்த மஜூம்தாருக்கு பிறந்த மகனல்ல! வாடா! புல்லுருவிப் பயலே! வா! சத்தியம் செய்!" என்று சபதம் கூறி கர்ஜித்தான்.

நிமாயி திகிலடித்துப் போய் ''அடடா! கோகுல்! இதென்ன காரியம்? அவன் கோர்ட் டுக்குப் போகட்டுமே! கோர்ட்டில் என்ன முடிவு ஆகிறதோ பார்த்துக் கொள்ளலாம். இம்மாதிரி இங்கே, சத்தியம் செய்து நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. வா! வா! உள்ளே வா!'' என்று கூறி கோகுலனின் ஒரு கையைப் பற்றி அவனை உள்ளே இழுத்துச் செல்லலானார்.

ஆனால் விநோதன் தலை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. அவன் ஏதோ ஆழ்ந்த சிந் தனையில் மூழ்கி பிரமைத்தட்டியவன் போல் அமர்ந்திருந்தான்.

கோகுலன் பலவந்தமாகத் தன்கையை விடுவித்துக் கொண்டு, ''முடியாது! இந்த இடத்தை விட்டு ஓர் அடிகூட எடுத்து வைக்க மாட்டேன். நீங்கள் சும்மா இருங்கள்!''என் றான்.

சற்றுப்பொறுத்து, கோகுலன் வானத்தை நோக்கியபடி கூறலானான்: ''அப்பா கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் இறக்கும்போது சொல்லிவிட்டுச் சென்றார்! கோகுல்! இரு சகோதரருடைய சொத்து இது. விநோதன் நல்ல வழிக்கு வந்து விட்டானானால், அவன் பங்கை அவனுக்குக் கொடுத்துவிடு என்று சொன்னார். அப்பா சொர்க்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். நான் அவருடைய சொத்துக்களைப் பூதம் போல் காவல் காத்து வருகிறேன். நான் இரவு பகல் ஈஸ்வரனை பிரார்த்தனை செய்து கொண்டிருக் கிறேன். என் தம்பிக்கு நல்ல புத்தி வரட்டும்! அவன் வீடு திரும்பட்டும். அவனிடம் கொடுத்துவிடலாம். அவன் சொத்தை அவனிடம் கொடுத்துவிடலாம்.

தினம் விரைவில் வராதா? கடவுளே! என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். இவன் சொல்லுகிறான், நான் அயோக்கியனாம்! மோசக்காரனாம்! வாடா! உருப்படாப்பயலே! வா, இங்கே வந்து என் காலைத் தொட்டு, இவர்களுக்கு முன்னால் சத்தியம் பண்ணடா, நான் அயோக்கியன்! மோசக்காரன் என்று சத்தியம் செய்.''

விநோதனுடைய ஆதரவாளர்கள் நாற் புறமும் அவனைச் சூழ்ந்து கொண்டு, அவனைக் கிளப்பினர். ஆனால் அவன் எழுந்திருக்கவே இல்லை. பானர்ஜி எழுந்து நின்றார். விநோதன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே ''விநோதன்! சொல்லிவிடு! காலைத் தொட்டுக் கூறிவிடு. இதில் நீ பயப்பட என்ன இருக் கிறது. சொல்லு! இந்த மாதிரி சந்தர்ப்பம் உனக்கு இனி ஒருநாளும் கிடைக்காது! எழுந் திரு! எழுந்து வந்து சொல்லிவிடு!'' என்றார்.

விநோதன் எழுந்து நின்றான். பிறகு சொன்னான் ''ஆமாம்! இம்மாதிரிச் சந்தர்ப்பம்



ஐனா என ஆயுளில் ஒரு நாளும் கிடைக்காது'' என்றான். பிறகு இன்னும் இரண்டடி முன்னால் வந்து, ''அண்ணா! உன் பாதங்களைத் தொட்டுக் கூறுகிறேன். நான் உன்னை அறிந்து கொண்டேன்! அண்ணா! உன் பாதங்களைத் தொட்டு, நீ அயோக்யன், மோசக்காரன் என்று சொன்னால், எனது வலதுகை அக்கணமே இற்று விழுந்து விடும். அந்த வார்த்தையைச் சொன்ன எனது நா அறுந்து விடும். அவ்வாறு நான் ஒரு நாளும் சொல்லமாட்டேன். அண்ணா! ஒரு நாளும் சொல்லமாட்டேன். ஆனால் இன்று சபதம் செய்து கூறுகிறேன். இனி நான் மது அருந்த மாட்டேன். அதைத் தொடவும் மாட்டேன். அண்ணா! உன்னை இவ்வளவு நாள் அறிந்து கொள்ளவில்லையே அண்ணா! என் தெய்வமே! என் உடன் பிறப்பே! என்னை ஆசிர்வதி அண்ணா! இன்று முதல் நான் திருந்தி, என்னை உன் தம்பி என்று சொல்லிக் கொள்ள தகுதி பெறும்படி எனக்கு ஆசி வழங்குவாய் அண்ணா! உன்னுடைய கௌரவத்தை வானுயரச் செய்து, உன் பாதங்களின் நிழலில், உன் தம்பி என்று சொல்லிக் கொண்டு, என் வாழ் நாளைக் கழிப்பேன். இதை விடப் பெரிய பாக்யம் எனக்கு உலகில் வேறு எதுவுமே இல்லை.'' இதைக் கூறிவிட்டு விநோதன் அண்ணனின் இருபாதங்களிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

கோகுலனின் உடம்பு கிடுகிடு வென்று நடுங்கியது. கண்களில் ஆறுய்ப் பெருகியது. கோகுலன் நாக்குழற, ''விநோதா! என் தம்பியடா நீ! என் கண்ணே! விநோதா! விநோதா!'' என்று கூறி அவனை வாரி மார்புடன் அணைத்துக் கொண்டான்.

**(முற்றும்.)**






# தஞ்சைக்கேற்ற சிறு தொழில்கள்

**த**ஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஆண்டு முழுவதும் போதிய அளவு வேலை வாய்ப்பு இருப்பதில்லை. முக்கிய பயிரான நெல், ஜூன் முதல் பிப்ரவரி வரை பயிரிடப்படுகிறது. குழாய்க் கிணறுகளும் இதர நீர் இறைக்கும் வசதிகளும் இன்னும் போதிய அளவு இல்லையாதலால் பயிர் செய்யும் காலஅளவை அதிகப்படுத்த முடியவில்லை. இது தவிர மற்ற புன்செய்ப் பயிர்களான தென்னை, வாழை, பயறு வகைகள் அதிக வேலை வாய்ப்பினைத் தருவதாக இல்லை. ஆகவேதான் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் வருடத்தில் ஒரு பெரும் பகுதியை வேலையும், வருவாயுமின்றிக் கழிக்க வேண்டியிருக்கிறது.

விவசாயிகளும், குடும்ப மகளிரும் வேலை வாய்ப்பும் அதன் மூலம் உபரி வருமானமும் பெற உழவுத் தொழிலைச் சார்ந்த பல்வேறு சிறு தொழில்கள் செய்ய முன் வர வேண்டும். தமிழக அரசும் இச்சிறு தொழில்களை அதிக அளவில் பெருக்கும் எண்ணத்துடன், ''சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம்'' ஒன்றைத் தோற்றுவித்து உதவி புரிகிறது. இச் சிறு தொழில்களை ஆதரிக்கும் பெருநோக்குடன் தொழில் துறையினரும், கூட்டுறவுத் துறையினரும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் கடனுதவி வழங்க முன் வந்துள்ளன.

சிறு தொழில்கள் அதிகமாகப் பெருகினால் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. விவசாய விளைபொருட்களை நல்ல முறையில் பயன்படுத்துவதாலும் விளையும் பொருட்கள் நல்ல பல உபயோகமுள்ள பொருட்களாக மாற்றப்படுவதாலும் விவசாயிகள், பெரிதும் இலாபமடைவார்கள். இதனால் தீவிரமாக விவசாயத்தில் ஈடுபடவும் முன் வருவார்கள். புதிய பயிரினங்களான மரவள்ளி, சூரிய காந்தி, மக்காச்சோளம், மல்லிகை, முல்லை போன்றவை அதிக அளவில் பயிரிடவும் வாய்ப்புகள் உருவாகும். விவசாய விளைபொருட்களிலிருந்து 'ஸ்டார்ச்', ஜவ்வரிசி, சேமியா, ரவா, பாப்கார்ன், மல்லிகைப் பூ, அத்தர், ராகி மால்ட், பழ ரசங்கள், 'ஜாம்', 'ஜெல்லி', 'மார்மலேட்', அட்டை, காகிதம், 'குஷன்பேட்', தேங்காய் துறுவல், நிலக்கடலைப் பால், வெண்ணெய் முதலிய விலை உயர்ந்த பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் பெருகும். விவசாயம் தீவிரமாவதன் மூலம் மகசூலும் பெருகும். அது தொழில்களுக்குப் போதிய மூலப் பொருட்களைக் கொடுப்பதாக அமையும். குடும்ப மகளிரின் காலம் பயனுள்ள முறையில் கழிக்கப்படும். குடும்பத்தின் வருவாய் பெருகும். வாழ்க்கைத் திறன் மிகையாகும். இது, தாய்த் தொழிலான விவசாயத்தையும், உப தொழில்களையும் மேம்பாடடையச் செய்யும். இவற்றிற்கான வாய்ப்புகள் தஞ்சையில் உள்ளன எனத் துணிந்து கூறலாம். ஆகவே தஞ்சைக்கேற்ற சிறு தொழில்களைப் பற்றி ஆராய்வோம்.

**மரவள்ளிக் கிழங்கு :**

மரவள்ளிக் கிழங்கிலிருந்து, மாவுப் பொருள், ஸ்டார்ச், ஜவ்வரிசி, சேமியா, ரவை, வறுவல், கிழங்கு மாவு போன்ற பல பொருட்களைத் தயாரிக்க முடியும்.

**மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஸ்டார்ச் :**

மரவள்ளிக் கிழங்கில் 20 முதல் 25 சதவீதம் மாவுப் பொருள் உள்ளது. கிழங்கிலிருந்து மாவைத் தனியாகப் பிரித்தெடுக்கலாம். நமது நாட்டின் இம்மாவுத் தேவை சுமார் 3.75 இலட்சம் டன்களாகும். ஸ்டார்ச், ஜவுளி ஆலைகள் மற்றும் குளுகோஸ் மேலும் ஆடம்பரப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களுக்குத் தேவைப்படுகிறது. தொழிற்கூடங்கள் நிறுவி நடத்த மிகவும் தேவையான நீர்வசதி நம் மாவட்டத்தில் போதிய அளவு இருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது.

மாவுப் பொருள் தயாரிக்கும் முறையைப் பார்ப்போம்.

அறுவடை செய்த கிழங்குகளை நன்கு சுத்தமாகக் கழுவி தோல்நீக்க வேண்டும். பிறகு மறுபடியும் நீரில் கழுவி கிழங்குகளை அறைக்கும் இயந்திரத்தில் தண்ணீர் விட்டு அறைக்க வேண்டும். கிழங்கு மாவு நன்கு அறைபட்டவுடன் தேவையான சல்லடையில் நார்ப் பொருள்களை வடிகட்டி விடவேண்டும். வடிகட்டிய பின் கிழங்குப் பாலை தொட்டிகளில் விட வேண்டும். தொட்டியின் அடியில் தங்கிய மாவுப் பொருளைத் தனியாக எடுத்து மூன்று நான்குமுறை நீரில் கழுவிக் காயவைக்க வேண்டும். நன்றாகக் காய்ந்த பின், கட்டிகளை உடைத்து பாலிதீன் பைகளில் அடைத்துவிடலாம். கடைசியாக மாவில் 5 சதத்திற்கு மேல் ஈரம் இருக்கக் கூடாது. இதுவே விற்பனைக்கான மாவுப் பொருளாகும்.

**தேவையான இயந்திரங்கள் :**

1. கிழங்கு அறைக்கும் இயந்திரங்கள்: 2 (அறைக்கும் திறன் மணிக்கு 2 டன்).

2. கவுண்டர் ஷாப்ட் : 1 செனட்.

3. சல்லடைகள் : 6

4. பம்ப் செட் : 6.

5. 40 எச். பி. மோட்டார் : 1

6. 5 எச். பி. மோட்டார் : 1.

7. பைப் பிட்டிங்ஸ் : 1

8. தராசு : 1 (300 கிலோ நிறுக்கும் திறன் உடையது).

9. கட்டிகளை உடைக்கும் இயந்திரம் :1

**தேவையான கட்டட வசதிகள் :**

1. இயந்திரக்கூடம், தயாரிக்கும் கூடம் —100 சதுர மீட்டர்.

2. அலுவலகம், மூலப்பொருட்கள் வைக்கும் அறைகள்—150 ச.மீ.

3. தோல் உரிக்கும் கூடம், சுகாதார இடம் முதலியன—200 ச.மீ.

4. கழுவும் தொட்டிகள்—3 எண்ணிக்கை 4 மீ X 3 மீ. X 2 மீ.

5. கிழங்குப்பால் வந்து சேரும் தொட்டிகள்—5 எண்ணிக்கை—(4X1X1)

6. கிழங்குப்பால் தங்கும் தொட்டி — 2 எண்ணிக்கை—(30X3X1)

7. மாவு படியும் தொட்டிகள் 6 எண்ணிக்கை—(6X6X1).

**தேவையான மூலப் பொருள்கள் :**

மாதம் 25 நாட்கள் இத்தொழிலை நடத்துவதாகவும், இவ்வாறு ஓர் ஆண்டில் 9 மாதம் தொழில் நடத்துவதாகவும் கொண்டால் தேவையான மூலப் பொருட்களும் உற்பத்தியும், சராசரி வருமானமும் பின் வருமாறு :

ஒரு நாளுக்குத் தேவையான கிழங்கு — 16 டன்.

ஆண்டுத் தேவை (25X9X16=3,600) டன்.

ஒரு ஏக்கரில் கிடைக்கும் சராசரி மகசூல் 15 டன்.

ஒரு தொழிற்கூடம் இயங்கத் தேவையான நிலப்பரப்பு : $\frac{3,600}{15} = 240$ ஏக்கர்

தஞ்சையில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் முறையைப் பரவலாகச் செய்வதன் மூலம் 9-10 மாத காலம் இத்தொழிலை நடத்த இயலும்.

நாள் ஒன்றுக்கு 16 டன் கிழங்கை மாவுப் பொருளாகத் தயார் செய்யும் ஒரு தொழிற்கூடம் சுமார் 240—300 ஏக்கரில் விளையும் கிழங்கைத் தன் மூலப் பொருளாக ஏற்க முடியும். ஒரு நாளில் உற்பத்தியாகும் மாவுப் பொருளின் அளவு சுமார் 4 டன் எனலாம். இதற்கு நல்ல விலையும் விற்பனை வசதியும் உள்ளன.



**தொழிற்கூடத்தின் உத்தேச மதிப்பீடு :**

1. நிலம், கட்டடம் போன்ற நிரந்தரச் செலவு — ரூ. 231 இலட்சம்.

2. மூலப்பொருள், தொழிலாளர் சம்பளம், மற்ற செலவுகள்—ரூ. 1,35,450.

மொத்தம்—ரூ. 3,61,450.

**வரவு செலவு விவரம் :**

1. மாவுப் பொருள்—900 டன்.

2. காய்ந்த கிழங்குக் கழிவுகள்—500 டன்.

3. கிழங்குத் தோல் மற்றும் பல கழிவுகள்—எருவாக.

4. ஓராண்டில் கிடைக்கக் கூடிய உத்தேச இலாபம் — 1 இலட்சம் ரூபாய்.

**ஜவ்வரிசி :**

தரமான ஜவ்வரிசி மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்க முடியும்.

**தயாரிக்கும் முறை :**

மரவள்ளிக் கிழங்கை நன்கு கழுவி, தோல் உரித்து மாவாக இயந்திரத்தில் அறைத்து நார் பொருட்களை வடிகட்டி, கிழங்குப் பாலை வடிய வைத்து, அடியில் தங்கும் மாவுப் பொருளைக் காய வைக்க வேண்டும். அப்படிக் காய வைத்த மாவுப் பொருள் 30 சதவிகித ஈரப் பதத்தில் இருக்கும்பொழுது எடுத்து, இயந்திரச் சல்லடைகளில் சலித்து, உருண்டைகளாக மாற்ற வேண்டும். அவ்வாறு செய்ய, குலுக்கும் இயந்திரம் பயன்படுகிறது. இவை மரத்தாலானவை. அடிப்புறம் உலோகத்தாலானவை. உலோகத் தகட்டின் மீது ஒரு துணி விரிப்புப்போடப்பட்டிருக்கும். மரத் தொட்டி அசைந்தாடும் பொழுது ஈரப்பதத்திலிருந்து மாவுப் பொருள் உருண்டைகளாக மாறுகின்றன. அவ்வப்போது கட்டிகளை உடைக்க ஓர் ஆள் இருந்தால் போதுமானது. இவ்வாறு உருண்டைகளாக மாற்றிய பின், ரகவாரியாகப் பிரித்துச் சற்று வறுத்துக் காய வைக்க வேண்டும்.

வறுத்துக் காய வைத்த ஜவ்வரிசிகள் கட்டிகளாக மாற இடமுண்டு. அவ்வாறு மாறாமலிருக்க பாலிஷ் செய்து தேவையான அளவு பைகளில் அடைத்து விடலாம். எடுத்துக் கொண்ட மரவள்ளிக் கிழங்கின் மொத்த எடையில் சுமார் 25 முதல் 30 சதவீத எடையளவிற்கு ஜவ்வரிசி தயாரிக்கலாம். ஒரு சாதாரணத் தொழிற்கூடத்தில் நாள் ஒன்றிற்கு 2 டன் கிழங்கிலிருந்து ஜவ்வரிசி செய்ய முடியும். ஆறு மாத காலத்தில் மாதத்தில் 25 நாட்கள் வீதம் ஒரு தொழிற் கூடம் செயல்படவும் அதன் மூலம் சுமார் 75 டன் ஜவ்வரிசி உற்பத்தி செய்யவும் வாய்ப்புகள் உள்ளன.

**தேவையான வசதிகள் :**

தொழிற்சாலைக்கான நிலப்பரப்பு—0.5 ஏக்கர்.

நிரந்தரச் செலவுகள்—ரூ. 15,500

மூலப்பொருள்கள் போன்ற இதர செலவுகள்—ரூ. 54,702.

சராசரி மாத இலாபம்—ரூ. 400.

இது போலவே மரவள்ளிக்கிழங்கிலிருந்து வறுவல், சேமியா, டெக்ஸ்டிரீன், குளுக்கோஸ் திரவம், ரவை போன்ற பொருள்களையும் தயாரிக்க முடியும். இவற்றிற்கான வாய்ப்புகளும் தஞ்சையில் இல்லாமலில்லை.

## சிறு தானியங்களைச் சார்ந்த சிறு தொழில்கள்

மக்காச் சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களைக் கொண்டு ஸ்டார்ச், டெக்ஸ்டிரீன், குளுக்கோஸ் திரவம், பாப் கார்ன், ராகி மால்ட் முதலியன தயாரிக்கலாம்.

'பாப் கார்ன்' என்பது தற்பொழுது எல்லாராலும் விரும்பி உட்கொள்ளப்படும் சிற்றுண்டியாகும். இது மக்காச் சோளத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. பாப் கார்ன் இயந்திரத்தின் விலை சுமார் ரூ. 10,000. டெக்ஸ்டிரீன் தயாரிக்க ரூ. 30,000 முதலீடு தேவைப்படும். தற்போது 'குளுக்கோஸ்' பல மாத்திரை வடிவில் தயாரிக்கப்பட்டு, மக்களால் விரும்பிச் சாப்பிடப்படுகிறது. இவற்றிற்கான மார்க்கெட் மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

ராகி (கேழ்வரகு)யிலிருந்து மால்ட் எனப்படும் சத்தான மாவுப்பொருளைத் தயாரிக்கலாம். இது சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லாருக்கும் ஏற்ற உணவாகும். தற்போது சத்துணவு வகைகள் பல விற்பனையாகின்றன. அவை பெரும்பாலும் கேழ்வரகு, நிலக்கடலை மாவு, பயறு வகைகளின் மாவு, சர்க்கரை, தாது உப்புகள், உயிர்ச் சத்துக்கள் கலந்த கலவையாகும். கேழ்வரகிற்குப் பதிலாகக் கம்பு, மக்காச் சோளம் மேலும் சோளம் முதலியவைகளையும் பயன்படுத்தலாம்.

**சத்துணவு தயாரிக்கும் முறை :**

கேழ்வரகு நன்றாக சுத்தப்படுத்தப்பட்டு பின்பு முளைக்க வைக்கப்பட வேண்டும். அதை வெயிலில் காய வைத்து, முளைகளைத் தேய்த்து எடுத்து விட வேண்டும். பிறகு விதைகளை நன்கு பொடியாக்கிச் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நிலக்கடலைப் பருப்புகளிலிருந்து முளைகளையும், சிவப்புத் தோலையும், நீக்கி, சுத்தப்படுத்த வேண்டும். பின்னர் கடலையை ஆட்டி அதிலுள்ள உபரி எண்ணெய்யை எடுத்து விட வேண்டும். தேவைப்படும் பொருள் அதன் பிண்ணாக்குதான். அதை நன்கு பொடியாக்கி, சலித்து எடுத்து வைக்க வேண்டும்.

பாசிப் பயறு, கொண்டைக் கடலை, துவரம் பருப்பு போன்ற பயறு தானியங்களை வறுத்துச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். முளை, மேல் தோல் முதலியவற்றை நீக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். தானியத்தை நன்கு பொடியாக்கிச் சல்லடையில் சலித்து எடுத்து வைக்க வேண்டும். வெண்ணெய் எடுத்த பாலும் தேவைப்படுகிறது. சர்க்கரை, கோகோ, தாது உப்புகள், உயிர்ச்சத்துக்கள் முதலியவற்றைத் தகுந்த அளவில் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். தாது உப்புக்களைக் கெடாமல் பிடித்து வைத்துக் கொள்ளும் சக்தியுடைய எண்ணெய்ப் பொருள் ஒன்றை ஆதாரமாகச் சேர்க்க வேண்டும்.

மேற்கூறிய பொருள்களைக் கீழ்க்கண்ட அளவில் சேர்த்தால் சத்துணவு ஆகிவிடும் :

| | |
|---|---|
| ராகி மாவு | 25 பங்கு |
| எண்ணெய் நீக்கப்பட்ட கடலை மாவு | 30 பங்கு |
| கொழுப்பு நீக்கிய பால் | 10 பங்கு |
| சர்க்கரை | 20 பங்கு |
| பருப்பு மாவு | 12 பங்கு |

கோக்கோ அல்லது எண்ணெய்ப் பொருள் — 2 பங்கு

தாது உப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் — 1 பங்கு

மொத்தம் — 100 பங்கு

தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை அளவில் இதை ஆரம்பிக்கலாம். தக்க வாய்ப்புகள் உள்ளன என்பது திண்ணம்.

ஒரு நாள் உற்பத்தி 500 கிலோ என்று கொண்டால் தேவைப்படும் வேலை நாட்கள் 300—ஆண்டு உற்பத்தி 150 டன்களாகும்.

**தேவையான வசதிகள் :**

நிலப்பரப்பு—0.5 ஏக்கர்.

கட்டடம், இயந்திரங்களுக்கானமுதலீடு: ரூ. 45,000.

அலுவலர்களுக்கான செலவு : ரூ.30,000

மூலப்பொருட்கள், ரசாயன பொருட்கள் ரூ. 2,04.000.

சராசரி ஆண்டு இலாபம் : ரூ. 50,000.

தொழில் வாய்ப்பு: 30—40குடும்பங்கள்.



## வாழை சம்பந்தப்பட்ட தொழில்கள்

1. வாழை மாவு

2. வாழை ரசம்

3. வாழைப்பழ அத்தி முதலியவை சுலபமாகத் தயாரிக்கலாம். வாழை மாவு ஐஸ் கிரீம் மேலும் பிஸ்கெட் முதலியன தயாரிக்க உதவுகிறது. தமிழகத்தின் தேவைக்கு தற்போது பம்பாயிலிருந்து இது வரவழைக்கப் படுகிறது. வாழைப் பழ ரசம் மைசூரில் தயாரிக்கப்பட்டு மிகவும் பிரபலமாகியுள்ளது.

**வாழைப்பழ அத்தி (பனனு பிக்):**

வாழைப் பழத்தில் 20 சதம் சர்க்கரைப் பொருளும், உயிர்ச் சத்துக்கள் ஏ, பி, சி போன்றவையும் மற்றும் பல தாது உப்புகளும் உள்ளன. வாழைப்பழ அத்தி என்பது காய வைத்த வாழைப்பழத்தின் வெட்டப்பட்ட பாகத்தின் பெயராகும். இது சுவைப்பதற்கு மிகவும் இனிமையாகவும், சத்து நிறைந்ததாகவும் உள்ளதால் பலர் விரும்பி ஏற்பர்.

**தயாரிக்கும் முறை :**

நன்கு முதிர்ந்த தரமான பழங்களின் தோலை உரித்து நீளவாக்கில் இரண்டாக எவர் சில்வர் கத்தியால் வெட்டிக் கொள்ளவேண்டும். பின்பு அறுத்த பழங்களை ஒரு சதம் 'சோடியம் கார்பனேட்' கரைசலில் 15 நிமிடம் வைத்திருக்க வேண்டும். பிறகு 0.05 சதவீத சிட்ரிக் அமிலத்தில் கழுவி பிறகு மீண்டும் நீரில் கழுவி கட்டுகளில் பரப்பி கந்தக ஆவி படும்படி உலரச் செய்ய வேண்டும். கந்தக ஆவியின் அளவு ஆயிரம் கன அடி கொள்ளளவு உள்ள பெட்டியின் உள் தட்டுகளில் 8 பவுண்டு கந்தகத்தை எரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வாழைப்பழ அத்தியின் நிறமும் கெடுவதில்லை. மேலும் ருசியும் அதிகரிக்கிறது. இதனால் பூஞ்சாளம் பிடிக்காமல் பொருள் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் உயிர்ச் சத்துக்களும் இழக்காமல் நிறுத்தப்படுகின்றன.

கந்தக ஆவியில் ஒரு மணி நேரம் வைத்திருந்த பின்பு சுமார் 20 மணி நேரம் வெயிலில் உலர்த்த வேண்டும். பின்பு வாழைப்பழ அத்தி கையில் ஒட்டாத நிலைக்கு வந்தவுடன் தேவையான பாத்திரங்களில் சேகரித்துக் கொள்ளலாம். ஈரப் பசை தக்க அளவு வந்தவுடன் சேமிக்கலாம்.

**தேவையான கருவிகள் :**

1. ஈரம் நீக்கும் கருவி
2. கந்தகப் பெட்டி—1
3. கழுவும் தொட்டிகள்
4. தட்டுகள்—10
5. சீல் வைக்கும் கருவி
6. எடைக் கருவி
7. அடைக்கும் பொருட்கள்.

உற்பத்தித் திறன் — ஒரு நாளில் 500 கிலோ.

## தென்னையைச் சார்ந்த தொழில்கள்

தஞ்சை மாவட்டத்தில் தென்னைச் சாகுபடி அதிகம். தென்னையிலிருந்து நாம் பெறுகின்ற காய்களை விற்று வருமானம் அடைகிறோம். ஓலைகளை கீற்றுகளாகப் பின்னி விற்பனை செய்கிறோம். உரியா மட்டை பெரும்பாலும் வீணாக்கப்படுகின்றன. தேங்காய்த் துறுவல் வெளிநாட்டினரால் பெரிதும் விரும்பப்படுகின்றது. கேக்குகள், பாக்குப் பொடி முதலியவைகளுடன் இது கலக்கப்பட்டு உள்நாட்டிலும் விற்பனையாகிறது. அதற்கான தொழிற்கூடத் தேவையைப் பார்ப்போம்.

துறுவும் இயந்திரம் மற்றும் உலர வைக்கும் இயந்திரம்—ரூ. 50,000 மதிப்புள்ளது.

நாள் ஒன்றுக்கு 2,000 தேங்காய்களைத் துறுவலாம். ஒரு கிலோ துறுவலின் மதிப்பு ரூ. 40 ஆகும். பம்பாயிலிருந்து அதிக அளவில் இது தற்போது வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகிறது. எனவே நமது மாவட்டத்திலும் இதே போன்று ஒரு தொழிற்கூடத்தை சுலபத்தில் அமைக்கலாம்.

தேங்காய் மட்டையிலிருந்து நார், கயிறு முதலியன தயாரிக்கலாம். தேங்காய் ஓட்டிலிருந்து (கொட்டாங்குச்சி) கெட்டியான பித்தான், போர்டு முதலியன தயாரிக்கலாம். தேங்காய் உரிக்கும்போது விழும் பொடித் தூளிலிருந்து இலேசான, கனம் குறைந்த பல பல மேட்ரஸ்கள் செய்யலாம். இவற்றிற்கான மார்கெட் மிகவும் நன்றாக இருக்கின்றது.

## நிலக்கடலையைச் சார்ந்த தொழில்கள்

நிலக்கடலையிலிருந்து மிட்டாய் தயாரிக்கலாம். கடலையை வறுத்து பிளாஸ்டிக் பையிலிட்டு விற்றால் பெரிய ஹோட்டல்களிலும் விற்பனையாகிறது. கடலையிலிருந்து வெண்ணெய், பால் முதலியன தயாரிக்கலாம். நிலக்கடலையை மாவாக்கி, சத்துணவுகளாகிய புரோட்டினியூல் பேரக்ஸ் போன்ற குழந்தைகளுக்கான சத்துணவும், பொருட்களும் தயாரிக்கலாம். இவற்றிற்குத் தற்போது வெளிநாட்டு விற்பனையும் அதிகமாக உள்ளது.

## அரிசியைச் சார்ந்த தொழில்கள்

அரிசியில் தவிட்டிலிருந்து எண்ணெய் திருவாரூரில் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் வனஸ்பதி, சோப்பு முதலியவை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

நெல் உமியை எரித்து 'ஊக்குவிக்கப் பட்ட கரி'யாகத் தயாரிக்கலாம். இதன் மதிப்பு கிலோவுக்கு ரூ. 4 ஆகும்.

## பழங்கள், காய்கறிகள் முதலியவற்றைச் சார்ந்த தொழில்கள் :

பழங்கள் காய்கறிகளைப் பயன்படுத்தி ஊறுகாய், சட்னி, அப்பளம், வற்றல், ஜாம், ஜெல்லி, பழரசம், முந்திரி, வறுவல் முதலியன தயாரிக்கலாம். மா, எலுமிச்சை, பலா, முந்திரி இம் மாவட்டத்தில் அதிகம் பயிரிடப் படுவதால் மேற்கண்ட பொருட்களைத் தயாரிப்பதன் மூலம் விளைபொருட்களின் மதிப்பை உயர்த்தலாம்.

பழ வகைகளிலிருந்து தயாரிக்கும் பொருட்களுக்குண்டான தொழிற்சாலைகளுக்கு வசதிகள் பற்றி ஆராய்வோம்.



1 தேவைப்படும்நிலப்பரப்பளவு—0.5 ஏக்கர்.

2 கட்டிடங்கள்—2,000 செ.மீ.

3 இயந்திரங்கள், உபகரணங்கள் :

1. அடுப்பு
2. எவர்சில்வர் கெட்டில்
3. ரிப்போர்ட் 2 நெம்பர்
4. செயின் டைப் புகைபோக்கி
5. சீல் வைக்கும் இயந்திரம்
6. எடைக் கருவி
7. கூழாக்கும் கருவி
8. சாறு பிழியும் கருவி
9. பாட்டில் நிரப்பும் கருவி
10. பாத்திரங்கள், மரத்தட்டுகள், தொட்டில்கள் முதலியன

தேவையான மூலப்பொருட்கள் :

பழங்கள், காய்கறிகள், சர்க்கரை, வாசனைப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள், டின் பாத்திரங்கள், லேபிள், அடைக்கும் பொருட்கள் முதலியன. சாதாரண இயந்திரம் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 250 கிலோ உற்பத்தி செய்யலாம். இதற்கான உள்நாட்டு வெளிநாட்டு மார்க்கெட் காத்திருக்கிறது.



## மலர்களிலிருந்து கிடைக்கும் தொழில்

மல்லிகை அத்தர் : மல்லி, முல்லை, ஜாதி மல்லி ரகங்களிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிப்பது மிகவும் லாபம் தரும் தொழில். வாசனை எண்ணெய்யை மலர்களிலிருந்து பிரித்து எடுக்கப் புதிய இயந்திரம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் தற்போதைய விலை ரூ. 6,000 ஆகும். மின்சாரத்தால் இயங்கவல்லது. ஒரு ஆப்பரேட்டர் உதவி கொண்டு இயக்கிவிடலாம். காலை 9 மணிக்குள் பறிக்கப்பட்ட மலர்ந்த புஷ்பங்கள் இயந்திரத்தில் போடப்பட்டு ஹெக்ஸேன் (Hexane) என்ற திரவத்தின் மூலம் கரைக்கப்படுகின்றன. இயந்திரத்தின் வேறு பல பாகங்கள் மூலம் வாசனை திரவியம் சென்று கடைசியாக (Jasmine Concrete) 'ஜேஸ்மின் கான்கிரீட்' என்ற மெழுகு போன்ற வாசனைப் பொருளாகவெளியாகிறது.

ஆயிரம் கிலோ மலர்களிலிருந்து சுமார் 3 கிலோ வரை வாசனைப் பொருள் தயாரிக்கலாம். வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் இதற்கு நல்ல மார்க்கெட் உள்ளது. ஒரு கிலோ ஜேஸ்மின் கான்கிரீட் தயாரிக்க ரூபாய் 4,500 செலவாகும். இதைச் சுமார் ரூபாய் 11,000க்கு விற்கலாம். இந்த இயந்திரத்தினை தினத்திற்கு ஆறு மணி நேரம் வீதம் இயக்கத் தேவைப்படும் மலர்களை சுமார் 3—4 ஏக்கரிலிருந்து பெறலாம். மல்லி, முல்லை மலர்கள் வருடத்தில் பத்து மாதங்களுக்குக் கிடைக்குமாதலால் அவற்றிற்கான இயந்திரத்தை பயன்படுத்திப் பிற மாதங்களில் ரோஜாவிலிருந்தும், லில்லி மலர்களிலிருந்தும் வாசனை எண்ணெய்யைப் பிரிப்பதற்கு உபயோகப்படுத்தலாம். இதுவும் தஞ்சைக்கு ஏற்றதே.

## முடிவுரை :

தஞ்சை மாவட்டத்தில் உள்ளஒவ்வொரு கிராமத்திலும் நிலவி வரும் சீதோஷ்ண நிலைமை, மண், விவசாயம் இவற்றிற்கேற்ப பயிரிடத் தகுந்த புதுப் பயிரினங்களை ஆய்வு செய்து அவற்றைப் புகுத்தி அதன் மூலம் ஓரிரு சிறு தொழிலையும் ஆரம்பிக்கலாம். அவ்வாறு சிறு தொழில்களை ஆரம்பிப்பதால் வருடம் முழுவதும் வேலைவாய்ப்பு ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படுகிறது. இதனுல் விவசாயத் தொழிலாளர்களின் கூலிப் பிரச்சினை பெருமளவில் குறையும். மகளிர், மேலும் வளர்ந்த குழந்தைகள் முதலானோரும் சிறு தொழில்களில் ஈடுபடுவதால் வீட்டுவருமானம் கணிசமான அளவில் உயரும். வாழ்க்கைத் தரம் உயருவது திண்ணம்.

இச் சிறுதொழில்கள் அமைக்க இடவசதி, மற்றும் மின்சார வசதி, முதலியனவற்றைப் பொறுத்துத் தொழில்கள் ஆரம்பிப்பது பற்றி சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உடனிருந்து ஆலோசனை வழங்கத் தயாராக உள்ளது. எனவே இத்தொழில்களை ஆரம்பிக்க ஒரு சிலர் மட்டும் தனி ஸ்தாபனமாகவோ அல்லது கூட்டுறவுக் கழகம் என்ற அளவிலோ ஆரம்பிக்கத்தொழில் துறையினரும் கூட்டுறவுத் துறையினரும் உதவிகள் புரிய முன்வந்துள்ளனர்.

இத்தொழில்கள் பற்றி மேலும் விரிவான விவரங்கள் பெற விரும்புவோர் ஆடுதுறை உழவர் பயிற்சி நிலையத்திற்கோ அல்லது துணை இயக்குநர், தொழில் துறை, தஞ்சை என்ற முகவரிக்கோ எழுதி விவரம் பெறலாம் என்று கூறிக்கொள்கிறேன். வாய்ப்புகளும் வசதிகளும் நிரம்பவுள்ள தஞ்சை மாவட்டம் தொழில் துறையிலும், முன்னேறி பிற மாவட்டங்களுக்கு முன் மாதிரியாக மாற வேண்டுமென எண்ணுகிறேன். அறிவும் ஆற்றலும் நிரம்பியுள்ள தஞ்சை மக்கள் இதைப் புரிந்து கொண்டு உடன் செயல்படுவார்கள் என்பது திண்ணம்.

நன்றி : உழவர் பயிற்சி நிலையம், ஆடுதுறை.



# மாவட்டங்களின் மாறிவரும் தோற்றம்!

## தஞ்சை மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தின் பாசன வசதியை மேம்படுத்தும் நோக்குடன் டெல்டாப் பகுதியைச் சீரமைப்பதற்காக எடுத்துக் கொண்டுள்ள சீரமைப்புத் திட்டத்திற்கு, இவ்வாண்டும், சென்ற ஆண்டினைப் போல் 7 கோடி ரூபாய் செலவிடப்படும். இச் சீரமைப்புத் திட்டத்தில் பழைய காவிரி டெல்டா பகுதியில் உள்ள 'ஏ' பிரிவு கால்வாய்கள் சீரமைக்கப்படும். சரியான வடிகால்வசதி கடைமடைப் பகுதிகளில் அமைத்துத் தரப்படும்.

தேவையான இடங்களில் புதிய ரெகுலேட்டர்கள்' கட்டப்படும். காவிரியில் பாசன வசதிக்கு விடப்படும் தண்ணீரை மிகச் சிக்கனமாகவும், அதே சமயம் தண்ணீர் அதிக அளவு பயன்படும் முறையிலும் அமைக்க இந்தச் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 70 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டம் இது. மார்ச் 31-ஆம் தேதி முடிய 11 கோடியே 37 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினர், பாசன வசதிகளில் விவசாயிகள் கொண்டுள்ள குறைகளைத் தெரிந்துகொள்ள புதிய ஏற்பாடு ஒன்றினைத் தற்போது செய்து முடித்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட, மாவட்ட முக்கிய அலுவலர்களுடன் பொதுப்பணித்துறை அலுவலர்கள் பல்வேறு இடங்களில் விவசாயிகளை வரவழைத்து பேச்சு நடத்தினர். இச்சந்திப்பின் விளைவாக பாசன வசதிகள் சம்பந்தப்பட்ட சில உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க, இத்துறை முன்வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள 1,408 'ஏ' பிரிவு கால்வாய்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு முடிவிற்குள் முழுவதும் மராமத்து செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்டு விடும். இதுவரை 868 கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. 343 கால்வாய்கள் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள கால்வாய்களின் சீரமைப்பு வேலைகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

பருவ மழைக் காலத்தில், ஒவ்வொரு ஆண்டும் இம்மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தண்ணீர் தேங்குவதால் சேதமடைவது வழக்கம். வசதியான வடிகால் வசதிகள் இல்லாமல் இருப்பதே இதற்குக் காரணம். ' எனவே, இவ்வாண்டு 20 வடிகால் திட்டங்கள் 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24 இலட்சம் ரூபாய் செலவில், 8 புதிய 'ரெகுலேட்டர்கள்' பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. பாசனத்திற்கு விடப்படும் தண்ணீரைச் சீராகவும், குறிப்பிட்ட அளவு கிடைக்கச் செய்யவும் இவை பயன்படும். தவிர பல்வேறு இடங்களில் இருந்து வரும் பழைய ரெகுலேட்டர்களும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் பாசனத்திற்குக் கிடைக்கும் தண்ணீரைச் சிக்கனமாக உபயோகிக்கும் வழிகளை நன்கு தெரிந்து கொள்ள, தீவிர சாகுபடித்திட்ட இயக்குநர் சில ஏற்பாடுகளைத் தற்போது மேற்கொண்டுள்ளார். வேளாண்மைத் துறையினரால் கபிஸ்தலம், கல்லூர் ஆகிய இடங்களில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதை விளக்கிக் காட்டுவதற்காக மாதிரிப் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாதிரிப் பண்ணைகளை இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, தற்போது நாள்தோறும் பகுதி பகுதியாக விவசாயிகள் இக்கிராமங்களுக்கு அழைத்து வரப்படுகிறுர்கள். இவர்கள், மாதிரிப் பண்ணை விவசாயிகளுடன் பேசி, நடைமுறையில் இத்திட்டம் எவ்வாறு உள்ளதென்பதை அறிகின்றனர். இவ்வாண்டு 133 கிராமங்களில் இம்மாதிரித் திட்டத்தை விரிவுபடுத்த தீவிர சாகுபடித் திட்ட இயக்குநர் திட்டமிட்டுள்ளார்.

இம்மாவட்டத்தின் மேற்கு டெல்டா பகுதியில் குடி தண்ணீர் வசதி சரியாக இருக்கின்றபோதிலும், பிற பகுதிகளில் கோடையின் காரணமாகத் தட்டுப்பாடு தோன்றியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் தொடர்பு கொண்டு, குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினை நீக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் 1976-77-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கிராம வளர்ச்சிப் பணிகளில் சிறப்பான பணிகள் பல முடிவடைந்துள்ளன. கிராமச் சாலைகளைப் பிரதான சாலைகளுடன் இணைக்கும் திட்டத்தில் 105 கிலோ மீட்டர் முடிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது.



90 கிராமங்களில் குடிநீர் வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 29 ஆரம்பக் கல்வி நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித் தரத் திட்டமிட்டத்தில் இதுவரை 11 நிலையங்களுக்கு கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 நிலையங்களுக்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## தென்னூர்க்காடு மாவட்டம்

தென்னூர்க்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இவ்வாண்டு தொடங்கப்படும். இவ்வாலை உளுந்தூர்ப்பேட்டை வட்டம் திருவெண்ணெய் நல்லூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் டிசம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்

படும். தற்போது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள நான்கு சர்க்கரை ஆலைகளில் மூன்று, தனியார் துறையிலும், ஒன்று கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாடு சர்க்கரை கார்ப்பொரேஷன் நிர்வாக இயக்குநர் திரு லட்சுமிரதன் அவர்கள், தொடங்கவிருக்கும் சர்க்கரை ஆலையின் பங்குத் தொகை வசூலைத் தொடக்கி வைத்தார். 25 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையுடன் ஆலை தொடங்கும். தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக குறைந்தது ஒரு கோடி ரூபாய் தேவைப்படும் என்று அவர் கூறினார். பெரிய சிவலையில் ஏற்படவிருக்கும் சர்க்கரை ஆலைக்கு, குறைந்தது 6 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் விவசாயிகளிடமிருந்து ஒரு கோடி ரூபாய் வர வேண்டுமென்றும், மாநில அரசு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் கொடுக்கும் என்றும் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சி தலைவர் அக்கூட்டத்தில் தெரிவித்தார். மிகுதித் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடனாகப் பெறப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் வீராணம் ஏரிக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய ஏரி பெருமாள் ஏரி. இதனால் 7,000 ஏக்கர் நிலப் பரப்பு, பாசன வசதி பெறுகிறது. தற்சமயம் ஏரியில் நீர்மட்டம் குறைந்து வறண்டுவிட்டது. எனவே விவசாயிகள் காவிரி தண்ணீர் வீராணம் ஏரிக்குக் கிடைப்பதுபோல் நிரந்தரமாகப் பெருமாள் ஏரிக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று விடுத்த கோரிக்கைக்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையின் பேரில், நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரை, செங்கால் ஓடை வழியாகப் பெருமாள் ஏரிக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

விருத்தாச்சலம் அரசினர் மருத்துவ மனையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 28 படுக்கைகள் உள்ள புதிய கூடுதல் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

## செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் இவ்வாண்டு நவரைப் பருவத்தில் சுமார் 2.5 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நல்ல மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. 61 ஆயிரம் ஏக்கரில் புன்செய்ப் பயிரான கேழ்வரகு பயிரிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் குறுகிய காலக் கடனாக 8 கோடியே, 47 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாயும், நீண்டகாலக்கடனாக 3 கோடியே, 39 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாயும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர நகைகளின் பேரில் ஒரு கோடியே 3 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பில் இம்மாவட்டத்தின் இலக்கு ஒரு கோடியே, 25 இலட்சம் ரூபாய்தான். ஆனால் இதுவரை சுமார் ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாய் வசூலாகி உள்ளது என்றால், இம்மாவட்ட மக்கள் சிறுசேமிப்பில் எவ்வளவு அக்கறை வைத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.



சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக இதுவரை 19 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மொத்தமுள்ள 27 பஞ்சாயத்து யூனியன்களில் 12 யூனியன்களை இக்கழகம் தேர்ந்தெடுத்து தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு சுமார் 80 இலட்சம் ரூபாய் கடனுதவி செய்துள்ளது. அதில் 21 இலட்சம் ரூபாய் மான்யமாகும்.

கடந்த ஆண்டில் 7 இலவச கண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. 1,600 பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை 1,635 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்து, அவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இணைப்புச் சாலைகளுக்காக கடந்த ஆண்டு 4 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல குடிதண்ணீர் வசதிக்காக 12 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில். ஒரு குடியிருப்புப் பகுதிக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம். 87 குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வசதி ஏற்பாடு செய்துதர பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36 பள்ளிக்கூடங்கள் கட்டித் தர ஒப்புதல் வழங்கப்பட்டு, அதற்காக 4 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புகழ் பெற்ற உல்லாசப் பயணிகள் இடமான மாமல்லபுரத்தில், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், தங்கள் வார விடுமுறையைக் கழிக்க ஓர் ஓய்வு இல்லம் கட்ட திட்டமிடப்பட்டு அதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

## வட ஆர்க்காடு மாவட்டம்

பல துறையில் தொழில் பயிற்சி பெற்றவர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்க, தொழில் வர்த்தகத் துறை 10 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் வழங்கும்.

(ரெடிமேட்) சட்டைகள் இந்நாட்டிலிருந்து 200 கோடி ரூபாய் முதல் 300 கோடி ரூபாய் மதிப்புக்கு அமெரிக்கா, மற்றும் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. துணிகளை வெட்டித் தைப்பதற்கான பயிற்சி அளிக்க அமெரிக்காவிலுள்ள நிறுவனம் ஒன்று முன் வந்துள்ளது. இம்மாவட்டத்தில் 400 தையல் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க அந்த நிறுவனம் உதவி செய்யும் என்று வடஆர்க்காடு மாவட்டச் சிறுதொழில்சங்கத்தின் தலைவர் திரு சொக்கலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வேலையின்மையைப் போக்க, நலிந்த தொழிற்சாலைகளையும், மூடிவிடும் நிலையிலுள்ள தொழிற்சாலைகளையும் புதுப்பித்து உற்பத்தியைப் பெருக்க ஸ்டேட் பாங்க் கடன் வழங்கும்.



கணியம்பாடியில் உள்ள அரிசனக் காலனியைச் சேர்ந்த 66 குடும்பங்களுக்கு 360 கோழிக் குஞ்சுகளை கால்நடைத் துறை இலவசமாக வழங்கியது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேலை வாய்ப்பு, கல்வி மருத்துவ வசதி அளிக்கவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நடுத்தரக்குடும்பங்களின் வருவாயைப் பெருக்க உதவும் கோழிப்பண்ணைகளை ஆரம்பிக்க ஸ்டேட் பாங்க் கடன் வழங்கும். இதனால் ஒரு குடும்பத்திற்கு 80 ரூபாய் மாத வருவாய் கிடைக்கும். வேலூர் நகரத்தின் குடிநீர் அபிவிருத்திக்காக மேல் மொனவூர் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மதிப்பீட்டுச் செலவு ஒரு கோடியே 29 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய். இதில் மூன்றில் ஒரு பகுதியை 'எல்.ஐ.சி' நிறுவனம் கடனாக வழங்கும்.

2,400 அரிசனக் குடும்பங்களுக்கு 4,000 ஏக்கர் நிலமும் 3,500 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகளும் அரிசனமல்லாத 15 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுமனைகளும் வழங்கப்பட்டுள்ளன.



நெல், கரும்பு, வாழை, தென்னை போன்ற பயிர்களுக்கு 12 கோடியே 36 இலட்ச ரூபாய் மத்தியக் கூட்டுறவு வங்கி விவசாயிகளுக்கு கடன் வழங்கியது. இதே போன்று சிறு விவசாயிகளுக்கு 6 கோடியே 44 இலட்ச ரூபாய் கடனாக வழங்கியது. பசு மாடுகள், ஆடுகள், பட்டுப் பூச்சிகள் வளர்க்க 54 இலட்ச ரூபாயை இந்த வங்கி, இம்மாவட்டத்தில் உள்ள 34 கிளை வங்கிகள் மூலம் கடனாக வழங்கியது.

இந்தியா—பாகிஸ்தான் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட 42 போர்வீரர்களின் குடும்பங்களுக்கு 42 ஆயிரம் ரூபாயை இலவசமாக முப்படை வாரியம் வழங்கியது என முப்படை வாரிய உதவி இயக்குநர் திரு இராஜவேலு அவர்கள் தெரிவித்தார்.

முன்னாள் போர் வீரர்களின் பெண்கள் திருமணத்திற்கு 16 ஆயிரம் ரூபாய் இலவசமாக வழங்கப்பட்டது. போரில் கணவனை இழந்த பதினைந்து விதவைகளுக்குத் தையல் மிஷின்களும், பசு, ஆடு, பண்ணைகள் நடத்த ஒவ்வொரு விதவைப் பெண்ணுக்கும் கடனாக ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.



## தருமபுரி மாவட்டம்

சமீபத்தில் ஒசூருக்கு வருகை புரிந்த மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்கள் ஒசூரில் 30 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கும் குடிநீர்த்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டம் 1978-ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒசூருக்கு எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பேராண்டபள்ளி என்னுமிடத்தில் பொன்னி ஆற்றிலிருந்து ஒசூருக்குக் குடிநீர் கொண்டு வர இதன் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கண் 3,000 வீடுகளுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும். இந்த அடிக்கல் நாட்டு விழாவில் 247 பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார். மேலும் 101 முதியோர்களுக்கு ஓய்வு ஊதியத்தொகை வழங்குவதற்கான உத்தரவையும் அவர் வழங்கினார். ஒசூர் அருகே மூதறிஞர் ராஜாஜி பிறந்த ஊரான தொரப்பள்ளி கிராமத்திற்கு அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் சென்று, மூதறிஞர் ராஜாஜி பிறந்த வீட்டைப் பார்வையிட்டார். அக்கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட தெலுங்குப் பள்ளிக்கூடக் கட்டிடத்தையும், குடிநீர்த் தொட்டியையும் அவர் திறந்து வைத்தார்.

தர்மபுரியில் 150 படுக்கைகளுடன் 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அரசினர் மருத்துவமனைக் கட்டிடத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை இம்மாதம் 3-ந் தேதியுடன் கரும்பு அறைவையை முடித்துக் கொண்டது. நவம்பர் முதல் தேதி முதல் அறைவை தொடங்கி கடந்த 6 மாதங்களில் இவ்வாலையில் இரண்டு இலட்சத்து 18 ஆயிரம் டன் கரும்பு அறைவை செய்யப்பட்டு, 2 இலட்சத்து 3 ஆயிரத்து 400 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இந்த சர்க்கரை ஆலையில் உற்பத்தி தொடங்கிய கடந்த 6 ஆண்டுகளில், இந்த ஆண்டே மிக அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த ஆண்டு இவ்வாலையில் விசேஷ யந்திரம் பொருத்தப்பட்டு, 'சுகர்பீட்' கிழங்கும் அறைவைசெய்யப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

இவ்வாண்டு இந்த ஆலையில் நாட்கூலியாக இருந்த 100 தொழிலாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.



## மாட்டு வண்டிகள் நவீனப்படுத்தப்படும்!

நம் நாட்டிலுள்ள கிராமங்களில் பெரும்பாலானவற்றில் தகவல் தொடர்பில் பிரதான அங்கம் வகிப்பது மாட்டு வண்டிகளேயாகும். மோட்டார் மூலமான போக்குவரத்தில் கணிசமான முன்னேற்றங்கள் காணப்பட்டிருந்தாலும் வரும் ஆண்டுகளிலும் மாட்டு வண்டிகள் முக்கியமான இடத்தை வகிக்கும். தற்போது இந்தியாவில் சுமார் 1 கோடியே, 30 இலட்சம் மாட்டு வண்டிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, கிராமீய மக்களின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாட்டு வண்டிகள் சீரிய பங்குகொண்டுள்ளன என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. எனவே, நாட்டிலுள்ள மாட்டு வண்டிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறித்து ஆராயவும், மாட்டு வண்டிகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் நவீனப்படுத்துவதற்கான விரிவான திட்ட நடவடிக்கை ஒன்றை வகுப்பதற்கும் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் செயற்குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் வெளியிடப்படும் வளர்ச்சிகள் குறித்து அவ்வப்போது பரிசீலிப்பது, எதிர்கால ஆராய்ச்சிக்கான நிதித் தேவைகள் குறித்து கவனிப்பது, நிதிகளுக்கு ஏற்பாடு செய்வது (எவ்வெப்போது தேவையோ அவ்வப்போது) புதிய வண்டிகளுக்கான வடிவமைப்புகள் கண்டுபிடித்தல், கடன்வசதிகள், சமூகப் பொருளாதார ஆய்வுகள், மாட்டு வண்டிப் போக்குவரத்தின் விளைவுகள், புதிய வடிவமைப்புகளை பிரசித்தமாக்குதல் ஆகிய பல்வேறு அம்சங்கள் குறித்து பரிசீலிப்பது, மேற்கொண்டு அபிவிருத்திக்கான கருத்துக்களையும், யோசனைகளையும் வரவேற்பது ஆகியவை இந்த செயற்குழுவின் பொறுப்புக்களாகும்.

இந்த செயற்குழுவிற்குச் சாலைகள் அபிவிருத்தித் தலைமை இயக்குநர் தலைவர் ஆவார். விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த விஞ்ஞான தொழில்துறை ஆராய்ச்சிக் கவுன்சில், மத்திய விவசாய நீர்ப்பாசன அமைச்சகம், கிராமிய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில், கால்நடை பராமரிப்புத் துறை, திட்டக் கமிஷன்,பெங்களூரில் உள்ள இந்திய நிர்வாகக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 6 பேர் இந்தச் செயற்குழுவின் உறுப்பினர்களாகும்.

# யுனெஸ்கோவும் இந்தியாவும்

யுனெஸ்கோவுடன் ஒத்துழைப்பதற்கான இந்திய தேசியக் கமிஷனின் ஆதரவில் விஞ்ஞான பவனில் யுனெஸ்கோவின் தலைமை இயக்குநர் திரு. அமடோவ் மக்டார் எம். போ. நிகழ்த்திய உரையின் வாசகம் வருமாறு:

அழகான இந்த நாட்டுக்கு வருமாறு இந்திய அரசாங்கம் அன்புடன் என்னை அழைத்தமைக்காக நான் பெருமைப்படுகிறேன். இந்தியாவின் சிறந்த விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், பண்பாட்டுத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய இந்தப் பெருமன்றத்தில் பேசுவது நான் பெற்றபேறு என்று கருதுகிறேன்.

இந்த விஞ்ஞான பவனம் கவர்ச்சி நிறைந்த ஒரு பெருமண்டபம். இதில் நின்றுகொண்டு உரையாற்றும்போது இந்த நாட்டின் அறிஞர்களுக்கும் யுனெஸ்கோவுக்கும் இடையே எப்போதும் இருந்து வந்திருக்கின்ற நெருங்கிய நல்லுறவு என் மனத்தில் உதிக்கிறது. 1956-ல் ஆசியாவிலேயே முதல் தடவையாக யுனெஸ்கோவின் ஒன்பதாவது தொடர் கூட்டம் இங்கு நடைபெற்றபோது அதைச் சிறப்பாக நடத்துவதற்காகவே இந்திய அரசாங்கம் எழில் நிறைந்த மண்டபத்தை அமைத்தது. ஆகையால் இந்தியாவுக்கும் யுனெஸ்கோவுக்கும் இடையேயுள்ள நெருங்கிய பந்தத்துக்கும் பாசத்துக்கும் அடையாளமாக இந்தக் கட்டடம் விளங்குகிறது.

யுனெஸ்கோவுக்கு இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் எப்போதும் காட்டி வந்திருக்கிற ஆதரவை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பாராட்ட விரும்புகிறேன்.

சீமான்களே! சீமாட்டிகளே!

உலகத்துக்குப் பெரும் சேதம் விளைத்த உலக யுத்தத்திற்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பில் சிறப்பு மிக்க ஸ்தாபனங்களில் ஒன்றாக 1946 நவம்பரில் யுனெஸ்கோ உருவாயிற்று. போர்கள் ஒழிந்து அமைதி ஏற்படவேண்டுமானால் மக்களுடைய மனத்தில் சமாதானம் என்ற கருத்து நிலைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த யுனெஸ்கோ ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

''போர்கள் என்பன மனிதனுடைய மனத்தில் ஆரம்பித்து உருவாவதால், மனிதர்களுடைய மனத்தையே சமாதானக் கண்ணோட்டத்தில் திருப்பிவிட வேண்டும்'' என்ற பொருள் பொதிந்த சொற்கள் யுனெஸ்கோ சாசனத்தின் முன்னுரையாக அமைந்திருக்கின்றன.

இந்த உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்ற யுனெஸ்கோ பலவாறு பாடுபட்டு வருகிறது. மக்களும் நாடுகளும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள உதவுகிறது. மனித உரிமைகளை அனைவரும் மதிக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது, கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டுத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் முன்னேற்றம் ஏற்படவும் அறிவு வளரவும் பாடுபடுகிறது. மனித உரிமைகள், சமாதானம் ஆகியவை குறித்து அறிஞர்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கும் உலக அமைப்பாக இந்த ஸ்தாபனம் இயங்கி வருகிறது.

யுனெஸ்கோ ஏற்பட்ட சமயத்தில்தான், நீண்ட நெடுங்காலம் அடிமை நாடாக இருந்து பிறகு இந்தியா சுதந்திரம் பெற்றது. யுனெஸ்கோவை நிறுவிய உறுப்பினர்களுள் ஒன்று என்ற முறையில் இந்தியா இந்த ஸ்தாபனத்தில் மிகவும் பங்குகொண்டு எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்டிருக்கிறது. யுனெஸ்கோவின் தலைமைச் செயலகத்துக்கும் பல நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இந்தியா எத்தனையோ நிபுணர்களை வழங்கி இருக்கிறது.

யுனெஸ்கோவின் 30-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, ''யுனெஸ்கோவும் இந்தியாவும் 30 ஆண்டு ஒத்துழைப்பு'' என்ற பயனுள்ள வெளியீட்டை இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகம் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறது. யுனெஸ்கோவின் நோக்கங்களையும் வேலைத் திட்டங்களையும் அறிந்து கொள்வதிலும் பரப்புவதிலும் இந்தியா மிகவும் அக்கறை காட்டி வந்திருக்கிறது.

இந்த வகையில் மூன்று திட்டங்கள் எனக்குச் சிறப்பாகத் தோன்றுகின்றன. முதலாவது தில்லியிலுள்ள பொது நூலகம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்காமல் யாரும் எளிதில் பயனடையக் கூடிய முறையில் இந்தியாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல 1956-ல் கல்கத்தாவில் யுனெஸ்கோ சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கூடம் ஒன்றை நிறுவியிருக்கிறது. அது இப்போது வளர்ச்சியடைந்து ஆசிய நாடுகளுக்கான ஆராய்ச்சிக்கூடமாக அமைந்து சமூக, பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறது.

மூன்றாவதாக நான் குறிப்பிடத் தக்கது, கல்வித்துறையில் திட்டமிடுவதற்கும் நிர்வாகம் நடத்துவதற்கும் உரிய ஆசிய நிறுவனம். 1962-ல் புது தில்லியில் இந்திய அரசாங்கமும் யுனெஸ்கோவும் இதை அமைத்தன. ஆசியா வெங்குமுள்ள கல்வியாளர்கள் இதில் பயிற்சி பெறுகிறார்கள். உலகின் பல பகுதிகளிலிருந்தும் பயிற்சியாளர்கள் வருகிறார்கள்.

. *1960* வாக்கில் முதலாவது வளர்ச்சி பத்து ஆண்டு என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பத்தாண்டின் முடிவில் இரண்டாவது பத்தாண்டு *1970*-தொடங்கியபோது இன்னும் ஏராளமான நாடுகளில் அறியாமையும், பசியும் பிணியும் இருப்பது தெரிய வந்தது.

இவற்றின் விளைவாகப் புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பு ஏற்படவேண்டுமென்று *1974*-ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை முடிவு செய்தது. மனிதன் முன்னேற வேண்டும், சமாதானத்தை அடையவேண்டும் என்ற அடிப்படை நோக்கங்கள் நிறைவேற பொருளாதார வளர்ச்சி மட்டும் போதாது. சமுதாயப் பண்பாட்டுத் துறைகளிலும் அக்கறை காட்ட வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது. இவை குறித்து உலக அடிப்படையில் நடவடிக்கை எடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அறிவைப் பரப்பவும் உயர்ந்த இலட்சியங்களும் மதிப்பீடுகளும் மனித உள்ளங்களிலே குடிகொண்டிருக்க உதவுவதும் நம்முடைய ஸ்தாபனத்தின் இலட்சியங்கள்.

எந்தத் துறையிலும் உலகம் முழுவதும் சேர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். மனித சமுதாயத்தில் ஒரு பகுதி முன்னேறி, மற்ற பகுதிகள் பின்தங்கி இருக்க இயலாது. மக்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயும், நிலவும் ஏற்றத் தாழ்வுகள் நீங்கவேண்டும். சகோதரத்துவம், நியாயம், பரஸ்பர மரியாதை என்ற அடிப்படைகளைக் கொண்டு புதிய சமுதாயம் உருவாக வேண்டும்.

இந்த முயற்சி வெற்றி பெற யுனெஸ்கோ அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரசாங்கங்களையும் அறிஞர் பெருமக்களையும் நம்பியிருக்கிறது. உங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பை வழங்கிய இந்திய அரசாங்கத்துக்கு மீண்டும் நன்றி தெரிவித்து மகாத்மா காந்தியடிகளின் மேற்கோள் ஒன்று கூறி என் உரையை முடிக்க விரும்புகிறேன்:

''உலகத்துடன் நட்புறவு கொண்டு உலக சமுதாயத்தை ஒரே குடும்பமாகக் கருதுவதே சிறந்த கொள்கை. உலகத்தாருடன் நட்புக் கொள்வதிலும் அவர்களிடம் அன்பு பாராட்டுவதும் என் கொள்கை. தீங்கு இழைக்கப்படும்போது அதை எதிர்ப்போம். அவ்வாறு எதிர்ப்பதால் நாம் உலக மக்களிடையே காட்டும் பரிவுக்கும் அன்புக்கும் இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம்.''

## சிறந்த கிராம சேவகர், கிராம சேவகி, கிராமம்!

**ம**த்திய வேளாண்மை, பாசனவசதி அமைச்சகத்தின் கிராம அபிவிருத்தித் துறையினால் 1974-75 ஆம் ஆண்டின் சிறந்த கிராம சேவகர்களைத் தெரிந்தெடுப்பதற்கெனக் கடந்த ஆண்டு டிசம்பரில் நடத்தப்பட்ட தேசியமட்டத்திலான பரிசுப்போட்டியில் பஞ்சாபிலுள்ள பாடியாலா மாவட்டத்தைச் சேர்ந்த திரு சுகதேவ் முதல் பரிசு பெற்றுள்ளார். திரு சுகதேவ் சிங்கிற்கு 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்படும். இப்போட்டியின் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளை (முறையே 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபாய் மதிப்புடையவை) கர்நாடக மாநிலத்திலுள்ள கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த திருவேங்கட சேஷய்யாவும், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மிட்னாபூர் மாவட்டத்திலுள்ள திரு தீரேந்திர நாத் ராயும் பெற்றுள்ளனர்.

இதேபோலச் சிறந்த கிராம சேவகிகளைத் தெரிந்தெடுப்பதற்கென நடத்தப்பட்ட போட்டியில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குமாரி எம். மாணிக்கம் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள முதல் பரிசைப் பெற்றுள்ளார். இரண்டாவது, மூன்றாவது பரிசுகளை பஞ்சாபிலுள்ள பாடியாலா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ரக்ஷா குமாரியும், ஹிமாசல பிரதேஷின் யுனா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி சுக்தீப் காவுரும் பெற்றுள்ளனர்.

சிறந்த கிராமத்திற்கான முதல் பரிசு (7 ஆயிரம் ரூபாய்) தமிழ்நாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த *தொட்டிப்பாளையம்* கிராமத்திற்குக் கிடைத்துள்ளது. இரண்டாவது (5 ஆயிரம் ரூபாய்) பீஹாரின் சாஹ்ரசா மாவட்டத்தைச் சேர்ந்த ராம்பட்டி கிராமத்திற்குக் கிடைத்துள்ளது.

யூனியன் பிரதேசங்களின் மட்டத்தில் சிறந்த கிராம சேவகருக்கான முதல் பரிசு (1500 ரூபாய்) தில்லி மாவட்டத்தைச் சேர்ந்த திரு ராம் கிஷன் தெஹயாவுக்குக் கிடைத்துள்ளது. இரண்டாவது பரிசு (ஆயிரம் ரூபாய்) தாத்ரா, நாஹர் ஹவேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு கே. ஏ. சௌத்ரிக்குக் கிடைத்துள்ளது. கோவா மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லேம் கிராமம், சிறந்த கிராமத்திற்கான பரிசை (3 ஆயிரம் ரூபாய்) வென்றுள்ளது.



## முந்திரிக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்!

நம் நாட்டில் மகாராட்டிரம், மைசூர், கேரளம், ஒரிசா, கோவா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் சுமார் *43,121* எக்டேர் நிலத்தில் முந்திரி சாகுபடியாகிறது.

பொதுவாக முந்திரி சாகுபடியாளர்கள் முந்திரி மரங்களுக்கு உரம் இடுவதில்லை. முந்திரி மரங்களுக்குத் தக்க தருணத்தில் உரமிட்டால் மகசூலைப் பெருக்கலாம். மரத்திற்குத் தேவையான உரத்தை இரு பகுதிகளாகப் பிரித்து மே-ஜூன் மாதத்தில் ஒரு முறையும், செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் மற்றொரு முறையும் கீழே கொடுத்துள்ளபடி இட வேண்டும். மரத்திலிருந்து 3 அடி முதல் 4.5 அடி தூரம் தள்ளி அரை அடியிலிருந்து முக்கால் அடி ஆழத்தில் உரமிட வேண்டும்

**ஒரு மரத்திற்குத் தேவையான உர அளவு (கிராம்)**

| | மே-ஜூன் (ஆடி) | | | செப்-அக். (புரட்டாசி) | | |
|---|---|---|---|---|---|---|
| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
| முதல் ஆண்டு | 100 | 80 | ... | 50 | 40 | ... |
| இரண்டாம் ஆண்டு | 50 | 40 | 30 | 50 | 40 | 30 |
| மூன்றும் ஆண்டு | 100 | 60 | 60 | 100 | 60 | 60 |
| நான்காம் ஆண்டிலிருந்து | 125 | 60 | 60 | 125 | 60 | 60 |









# எள் பயிரில் பூச்சிகளும் தடுப்பு முறையும்

எள் ஒரு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர். இது தமிழ்நாட்டில் சுமார் 4 இலட்சம் எக்டேரில் சாகுபடியாகிறது. குறிப்பாக திருச்சி, தென் ஆர்க்காடு, கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களில் எள் அதிகப் பரப்பில் பயிர் செய்யப்படுகின்றது. எள் பயிரைப் பல பூச்சிகள் தாக்குகின்றன. அதனல் 40 சதத்துக்கும் மேலாக மகசூல் பாதிக்கப் டுகிறது. இவற்றுள் இலைப் ணைக்கும் புழுவும், காய்த்துளைப் ானும், காய் ஈயும், அசுவிணி ம் மிக முக்கியமானவை.

இலைப் பிணைக்கும் புழு இலை ளையும் தண்டையும் சேர்த்துப் பிணைத்து உள்ளிருந்துகொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். பின்பு பூ மொட்டுக்களில் நுழைந்து சேதமுண்டாக்கி, கடைசியாகக் காயினுள் செல்கிறது.

காய் ஈயின் 'மேகட்' புழுக்கள் பூவின் கருப்பையைச் சேதம் செய்கிறது. இதனல் காய்கள் உருமாறி விடுகின்றன.

அசுவிணி சில சமயங்களில் தோன்றி மிகவும் கருமையாகத் தாக்கக் கூடியது. இது பயிரிலிருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருண்டும், இளந் துளிர்கள் வாடியும் ...

விடும். அசுவுணி தாக்கிய செடியில் கருமைநிறமான பூஞ்சாளம் படர்கின்றது.

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பூச்சியியல் துறை, ஆய்வுகள் மேற்கொண்டது. 'தயோடான்' (1.43 லி[எக்டேர்) அல்லது 'லெபாசிட்' (500 மி.லி. எக்டேர்) மருந்தை மூன்றுமுறை தெளித்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தியதால் மகசூல் அதிகரித்தது கண்டறியப்பட்டது. பயிரின் முதல் மாதத்தில் ஒருமுறையும், அதன்பின் இரண்டு வார இடைவெளியில் இருமுறையும் இம் ...



# நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் புழுவைத் தடுக்கும் முறைகள்!

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் நிலக்கடலை பயிர் ஆகின்றது. அவற்றில் மானுவாரி நிலக்கடலைப் பயிரைச் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் மிகுதியாகத் தாக்குகின்றன. திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டில் மற்ற எல்லா மாவட்டங்களிலும் இவைகளால் ஏற்படும் சேதம் காணப்படுகிறது. இப்புழுக்கள் பழுப்பு நிறமாய், சிவப்பு முடியுடன் இருக்கும். இவை கூட்டம் கூட்டமாக நகர்ந்து செடிகளைத் தின்றுவிடும். இவற்றின் தடுப்பு முறைகளை அறிவது மிகவும் அவசியம்.

பல ஆயிரக்கணக்கான எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடியாகும் நிலக்கடலைப் பயிரை இப்புழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் அழிக்கின்றன. ஆண்டுதோறும் இருபருவங்களில் இவை பெருகுகின்றன. முதற்பருவம் ஜூன்-ஜூலை; இரண்டாம் பருவம் ஆகஸ்டு மாதம்; சோளம், பருத்தி, கம்பு, மக்காச்சோளம், கேழ்வரகு, ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களையும் இவை தாக்குகின்றன.

இளம் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் குறுகிய காலத்தில் பலவிதப் பயிர்களையும் தின்று நாசம் செய்கின்றன. இலட்சக்கணக்கான கம்பளிப்புழுக்கள் ஒரு வயலிலுள்ள பயிரைத் தின்று அழித்தவுடன் அடுத்த வயலுக்குச் செல்லும். இடையே சாலை அல்லது இருப்புப்பாதை வந்தாலும் இவை கூட்டமாக அலையெனக் கடந்து செல்லும். பயிரின் இலைக்காம்பை மட்டும் தவிர்த்துவிட்டு, மற்றப் பகுதிகள் அனைத்தையும் இப்புழுக்கள் தின்றுவிடும்.

சிவப்புக் கம்பளிப் புழுவின் தாய்ப்பூச்சி, இலை, காய்ந்த குச்சிகள், களைகள் அல்லது மண் கட்டிகள் மீதும் 600 முதல் 800 முட்டைகள் வரை இடும். முட்டைகளில் இருந்து 4 நாட்களில் வெளிவரும் புழுக்கள், 10 நாட்களில் பழுப்புநிற உடலையும், சிவப்பு உரோமத்தையும் பெறுகின்றன. வெப்பமான பகல் நேரத்தில் இவை செடிகளின் நிழலில் தங்கும். மற்ற நேரங்களில் பயிரைத் தின்று நாசம் செய்யும். புழு, ஒரு மாதத்திற்குள் 2 அங்குல நீளம் வரை வளரும். வரப்பு, வேலியோரங்களில், மண்ணில் 6-8 அங்குலம் வரை சென்று கூட்டுப்புழுவாகும். அடுத்த பருவ காலம் வரை அவை அப்படியே இருந்து, மறுபடியும் மழைக்குப் பின், அந்துப்பூச்சிகளாக மாறும்.

இனப்பெருக்கக் காலத்தில் சிறு தூறலுக்குப் பின் இரவு நேரத்தில் இதன் அந்துப்பூச்சிகள் விளக்குகளை நோக்கிப் பறந்தோடி வரும். அந்துப்பூச்சிகள் தோன்றியதும் விளக்குப் பொறிகள் வைத்து, அவற்றைக் கவர்ந்து அழிக்கலாம். தாய்ப்பூச்சிகள் முட்டைகளைக் கூட்டமாக இடுவதால், முட்டைகளைச் சேகரித்துச் சுலபமாக அழிக்கலாம். இவ்வாறே புழுக்களையும் அதிகமாகக் காணும்போது அவற்றைச் சேகரித்துக் கொல்லலாம். சிறிய புழுக்களைக் கட்டுப்படுத்த 'பி.எச்.சி.' 10 சதத் தூள் எக்டேருக்கு 25 கிலோ வீதம் தூவலாம். வளர்ந்த புழுக்களைக் கட்டுப்படுத்த எக்டேருக்கு பாரத்தியான் 875 மில்லி லிட்டர் அல்லது எண்ட்ரின் 1.750 லிட்டர் அல்லது 'டைக்குளோர்வாஸ்' (நுவான்) 875 மில்லி லிட்டர், அல்லது டாக்சுபீன்' டி டி டி (ஹிலியோடாக்ஸ்) 4 லிட்டர் அல்லது 'ஹிலியோடாக்ஸ் டைமிதோவேட்' (ரோகார்) 4 லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

மேலும் 'அம்ஸக்டா' நச்சு என்ற நோயால் தாக்கப்பட்ட புழுக்களைத் தண்ணீரில் கரைத்துச் செடிகளின் மீது தெளித்தால், அவற்றைத் தின்னும் புழுக்களும் அழியும். ஒரு ஏக்கருக்கு 50 தாக்கப்பட்ட புழுக்கள் தேவைப்படும்.

சென்ற ஆண்டு பொள்ளாச்சிப் பகுதியில் வளர்ச்சியடைந்த புழுக்களைக் கட்டுப்படுத்த களச் சோதனை ஒன்று நடத்தப்பட்டது. சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றும்போது எக்டேருக்கு மானோகுரோடஃபாஸ் (நுவக்ரான்) 950 மில்லி லிட்டர் அல்லது குளோர்பைரிஃபாஸ் (டர்ஸ்பான்) 1.875 லிட்டர் அல்லது 'லெப்டோஃபாஸ்' (ஃபாஸ்வெல்) 1.275 லிட்டர் அல்லது 'பென்தோவட்' (ஃபென்டால்) 750 மில்லி லிட்டர் அல்லது 'ஃபாஸலோன்' (ஜோலோன்) 1.125 லிட்டர் அல்லது 'பாக்ஸபீன்' (அனடாக்ஸ்) 2.5 லிட்டர் மருந்தைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்று இதனல் அறியப்பட்டது.

கைத்தெளிப்பானை உபயோகித்தால் எக்டேருக்கு 750 லிட்டர் நீரிலும் அல்லது விசைத் தெளிப்பானை உபயோகித்தால் 200 லிட்டர் நீரிலும் மருந்தைக் கலந்து தெளிக்க வேண்டும். புழுக்கள் தோன்றும் ஒவ்வொரு முறையும் இந்தப் பூச்சிக் கொல்லிகளைத் தெளித்தால் நிலக்கடலைப் பயிரைச் சிவப்புக் கம்பளிப்புழுவின் சேதத்திலிருந்து காப்பாற்றலாம்; உற்பத்தியையும் பெருக்கலாம்.

**தகவல் : எஸ். சதக்கத்துல்லா,**
**டாக்டர் ஏ. அப்துல் கரீம்**
**டாக்டர் எம். பாலசுப்ரமணியன்.**
**பூச்சியியல் துறை, கோவை-3.**

**வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

# 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி....

**த**மிழ் மூலம் பள்ளியிலும் கல்லூரியிலும் பாடங்களைப் பயிலும்போது பள்ளியிறுதி வகுப்பு நிலையில் மாணவர்கள் அடையும் மொழித் திறனுக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்புத் தொடக்கத்தில் அவர்கள் பெற்றிருக்கவேண்டிய மொழித் திறனுக்கும் இடைப்பட்ட நிலையில் ஏதாவது இடைவெளி இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் ஓர் ஆய்வை நிகழ்த்தியது. ஆய்வின் முடிவில் இடைவெளி இருக்கிறது என்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த இடைவெளியைப் போக்குவதற்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் முதன் முதலில் கன்னட மொழியில் 100 மணி நேர இணைப்புப் பயிற்சி (Bridge Course) ஒன்றை கல்லூரிப் புகுமுகத் தகுதிக்கு ஏற்ப உருவாக்கியது. இந்தப் பயிற்சி 1970 71-ல் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் உருவாக்கிய இந்த இணைப்புப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்த 'இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம்' எல்லா இந்திய மொழிகளிலும், இப்பயிற்சியை உருவாக்கலாம் என்ற பரிந்துரையை வழங்கியது. பின்னர் மலையாள மொழிக்கும் இது போன்ற ஓர் இணைப்புப் பயிற்சி உருவாக்கப்பட்டது. மலையாள இணைப்புப் பயிற்சியின் முடிவுகளும், கன்னட இணைப்புப் பயிற்சியின் முடிவுகளும் இது போன்ற ஓர் இணைப்புப் பயிற்சியின் தேவையை உணர்த்தின.

இப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் இவற்றின் உறுதுணையோடு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் தமிழில் 100 மணி நேரத் தமிழ் இணைப்புப் பயிற்சி ஒன்றைத் தமிழ் மூலம் பாடங்களைப் பயில இருக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்காக உருவாக்கியுள்ளது. இந்தப்பயிற்சியில் வரலாறு, வணிகவியல், வேதியியல், புவியியல், மொழியியல் முதலான பல்வேறு துறை (disciplines) களிலிருந்து எடுக்கப்பட்ட 100 பாடங்கள் உள்ளன. இப்பயிற்சியில் உள்ள 100 பாடங்களும் இப்பயிற்சியைக் கற்கும் மாணவர்களின் பல்வேறு மொழித் திறன்களையும் அதாவது (விரிவுரையாளரின் விரிவுரையைக்) கேட்டு உணரும் திறனையும், (Llistening Comprehension) (விரிவுரையாளரின் விரிவுரையைக்)கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்ளும் திறனையும் (Listening and note taking Competence) (தமிழ் மொழியிலுள்ள நூல்களைப்) படித்துணரும் திறனையும் (Reading Comprehension) குறிப்புகள் கொண்டு கட்டுரை எழுதும் திறனையும் (Guided Comprehension ) ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள பகுதியைத் தமிழில் மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கும் திறனையும் (Epitomizing and English passage into Tamil) வளர்க்கும். மொழித்திறனை வளர்க்க உதவும் நிலையிலுள்ள பயிற்சிகள் ஒருபுறம் இருக்க மாணவர்கள் பாடங்களில் உள்ள செய்திகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் திறனையும் வளர்க்கிறது.

தமிழ் இணைப்புப் பயிற்சிப் பாடங்களின் தொகுப்பு ஆய்வுப் பரிசோதனைக்காக எஸ். எஸ். எல் சி. தேர்வு எழுதிய பின், தமிழ் மொழி மூலமாகக் கல்லூரியில் பாடங்களைப் பயிலப்போகும் மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோயில் முதலிய தமிழகத்தில் ஐந்து முக்கிய மாவட்டத் தலைநகர்களில் உள்ள 500 மாணவர்களுக்கு இந்த இணைப்புப் பயிற்சி நடத்தப்படும். ஒவ்வொரு நகரத்திலும் 100 மாணவர்கள் (50 மாணவர்கள் 50 மாணவியர்) இந்தப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடைவார்கள். இந்த இணைப்புப் பயிற்சி மே மாதம் 16-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 10 ஆம் தேதி வரை நடக்கும். ஐந்து நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட இருக்கும் ஆயிரம் மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு (Pretest) ஒன்று 16—5—77, 17-5-77 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது. இந்த முன்னிலைத் தேர்வு (1) தமிழ் இணைப்புப் பயிற்சியில் சேராத மாணவர்களுக்கும் (Controlled Group) 5 நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படப்போகும் 500 மாணவர்களுக்கு அதாவது ஒவ்வொரு நகரத்திலிருந்தும் (மாணவர்கள் 50 மாணவியர் 50 என்ற விகிதத்தில்) (2) தமிழ் இணைப்புப் பயிற்சியில் சேர்ந்து கற்கப் போகும் மாணவர்களுக்கும் (Experiment Groups) (ஐந்து நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 500 மாணவர்களுக்கு அதாவது ஒவ்வொரு நகரத்திலிருந்தும் மாணவர்கள் 50 மாணவியர் 50 என்ற விகிதத்தில்) நடத்தப்படும்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஆலோசனைக்கு ஏற்ப இணைப்புப் பயிற்சியை நடத்துவதற்காகக் கல்லூரிக் கல்வி இயக்ககம், மேற்கூறிய ஐந்து நகரில் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு கல்லூரியையும், ஏழு விரிவுரையாளர்களையும் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த ஏழு விரிவுரையாளர்களில் ஒருவர் இணைப்பாளராகப் (Co-ordinator) பணியாற்றுவார். இணைப்பாளர்கள் உட்பட எல்லா விரிவுரையாளர்களும் ஒவ்வொரு நகரத்திலும் 100 மாணவர்களுக்கு இந்த இணைப்புப் பயிற்சியைக் கற்பிப்பார்கள். தமிழ் இணைப்புப் பயிற்சி வகுப்புகள் தொடங்குவதற்கு முன்னர், விரிவுரையாளர்களும், இணைப்பாளர்களும் இரண்டு நாட்களுக்குத் 'தமிழ் இணைப்புப் பயிற்சியை எப்படி நடத்துவது என்பதற்காக ஒரு பயிற்சி வகுப்பில் (Orientation Programme) கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்கள். இந்தப் பயிற்சி வகுப்பு 13-5-77, 14-5-77 ஆகிய இரு தினங்கள் மதுரையில் உள்ள ஸ்ரீமீனாட்சி அரசினர் கல்லூரியில் நடைபெற்றது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் இவ்வாசிரியப் பயிற்சி வகுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நடத்தியது. இந்தப் பயிற்சி மாணவர்களுக்கு இலவசமாகத் தரப்படுகிறது. பயிற்சியை முடிக்கும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும். தமிழ் இணைப்புப் பயிற்சியின் 6 புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.






| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |

வேலை நேரம் : உழவு—5 மணி நேரம். பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்

குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்றாக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்றாக அணைத்து விடவேண்டும்.



## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தமிழரசு



# அரசு—மிகவுயர்ந்த தரமான

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட தரத்தில தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்ருெரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட லெண்ட சிமெண்ட குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைபபுகள், அணைகள், பாலஙகள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல குளங்கள, அலங்கார அமைப்புககள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைககு அரசு அருமையானதொரு சிமெண்ட.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை



யால், கடுமையான தரககட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**

ஆலங்குளம், இராமநாதபுரம மாவட்டம்

**அரசு** —வலிவும் வனப்பும் வாய்ந்தது




# சென்னை மாநகரம்

## 1. ராயபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,41,692 |
| பதிவான வாக்குகள் | : | 72,868 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,194 |
| செல்லாத வாக்குகள் | : | 674 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. பொன்னுரங்கம் | தி. மு. க. | 24,217 |
| திருமதி வி. ரமணிபாய் | ஜனதா | 17,466 |
| கே. சாலப்பன் | சுயேச்சை | 582 |
| எஸ். சிட்டிபாபு | சுயேச்சை | 151 |
| பி. தங்கராஜன் | காங்கிரஸ் | 6,742 |
| ஆர். ராமநாதன் | சுயேச்சை | 172 |
| ஜி. ராஜரத்தின நாயக்கர் | சுயேச்சை | 248 |
| எம். ராஜி | அ.இ.அ.தி.மு.க. | 22,626 |

## 2. துறைமுகம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,50,577 |
| பதிவான வாக்குகள் | : | 65,557 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 64,959 |
| செல்லாத வாக்குகள் | : | 598 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| அ. செல்வராஜ் | தி. மு. க. | 23,845 |
| கே. ஆறுமுகம் | காங்கிரஸ் | 9,500 |
| வி. எஸ். கண்ணன் | சுயேச்சை | 138 |
| கே. பி. செய்குத் தம்பி | ஜனதா | 13,002 |
| தஞ்சை செல்வம் | சுயேச்சை | 285 |
| டி. ஆர். வி. துளசிதாஸ் | சுயேச்சை | 183 |
| என். எம். பீர்முகமது | சுயேச்சை | 17,862 |
| பி. மனக் சந்த் நாகர் | சுயேச்சை | 55 |
| ஓ. ஏ. வரத தேசிகன் | சுயேச்சை | 89 |

## 3. இராதாகிருஷ்ணன் நகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,78,751 |
| பதிவான வாக்குகள் | : | 80,735 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,870 |
| செல்லாத வாக்குகள் | : | 865 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஐசரி வேலன் | அ.இ.அ.தி.மு.க. | 28,415 |
| திருமதி டி. என். அனந்தநாயகி | காங்கிரஸ் | 9,875 |
| கே. ஆறுமுக சுவாமி | ஜனதா | 14,444 |
| ஆர். டி. சீத்தாபதி | தி.மு.க. | 26,924 |
| முனுசாமி நாயக்கர் | சுயேச்சை | 89 |
| எம். பி. ராஜேந்திரன் | சுயேச்சை | 123 |

## 4. பூங்கா நகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,45,575 |
| பதிவான வாக்குகள் | : | 69,199 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,426 |
| செல்லாத வாக்குகள் | : | 773 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| தி. சு. நல்லதம்பி | தி. மு. க. | 22,433 |
| எம். அற்புதராஜ் | சுயேச்சை | 153 |
| ஏ. குப்புசாமி | காங்கிரஸ் | 7,429 |
| ஜி. ஜெகஜோதி என்ற கோவிந்தராஜுலு | சுயேச்சை | 393 |
| திருமதி என். ஜி. புவனேஸ்வரி | ஜனதா | 19,273 |
| ராமபத்திரன் | அ.இ.அ.தி.மு.க. | 18,598 |
| லக்ஷ்மிசந்த் சக்லேசா | சுயேச்சை | 213 |

## 5. பெரம்பூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,84,688 |
| பதிவான வாக்குகள் | : | 80,705 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,860 |
| செல்லாத வாக்குகள் | : | 845 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். பாலன் | தி. மு. க. | 34,134 |
| டி. பி. ஏழுமலை | ஜனதா | 16,675 |
| வி. எம். பெருமாள் | காங்கிரஸ் | 8,385 |
| டி. ராஜா | அ.இ.அ.தி.மு.க. | 20,666 |

## 6. புரசைவாக்கம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 2,03,098 |
| பதிவான வாக்குகள் | : | 91,943 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 91,085 |
| செல்லாத வாக்குகள் | : | 858 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| க. அன்பழகன் .... | தி. மு. க. .... | 41,073 |
| வி. ராஜசேகரன் | சுயேச்சை | 248 |
| டி. எஸ். கோவிந்தசாமி | ஜனதா | 22,004 |
| ஆர். சண்முகம் | சுயேச்சை | 191 |
| கே. என். சம்பத் நாயுடு, | சுயேச்சை | 86 |
| ஆர். தட்சிணாமூர்த்தி | இந்திய கம்யூனிஸ்ட் | 7,206 |
| கே. சி. ஜி. வர்கீஸ் | சுயேச்சை | 62 |
| பி. ஏ. வெங்கடேசுவரலு | அ.இ.அ.தி.மு.க. | 19,745 |
| ஜெயராம் அய்யா பாபு | சுயேச்சை | 205 |
| எச். ஸ்டான்லி | சுயேச்சை | 265 |

## 7. எழும்பூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,41,812 |
| பதிவான வாக்குகள் | : | 69,887 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,294 |
| செல்லாத வாக்குகள் | : | 593 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். மணிமுடி .... | தி. மு. க. | 26,746 |
| செல்வி டி. சுலோச்சனா | ஜனதா | 16,739 |
| கே. தெய்வசிகாமணி | அ.இ.அ.தி.மு.க. | 19,414 |
| திருமதி டி. யசோதா | காங்கிரஸ் | 6,395 |

## 8. அண்ணாநகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,78,266 |
| பதிவான வாக்குகள் | : | 86,787 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 85,974 |
| செல்லாத வாக்குகள் | : | 813 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மு. கருணாநிதி .... | தி. மு. க. .... | 43,076 |
| அப்துல் அஜீஸ் | சுயேச்சை | 86 |
| டி. ஆண்டியப்பன் | ஜனதா | 10,419 |
| ஜி. கிருஷ்ணமூர்த்தி | அ.இ.அ.தி.மு.க. | 26,638 |
| டாக்டர் யூ. என். பாஜ்பாய் | சுயேச்சை | 162 |
| கே. ஜார்ஜ் மாத்யூ | சுயேச்சை | 262 |
| ஆர். ஜெயச்சந்திரன் | காங்கிரஸ் | 5,258 |
| கே. ஜெயராமன் | சுயேச்சை | 73 |

## 9. தியாகராய நகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,80,871 |
| பதிவான வாக்குகள் | : | 76,185 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,522 |
| செல்லாத வாக்குகள் | : | 663 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| சந்திரன் ஜெயபால் .... | தி. மு. க. | 23,346 |
| கே. கல்யாணசுந்தரம் | சுயேச்சை | 560 |
| கே. கிருட்டிணமூர்த்தி | ஜனதா | 18,020 |
| கே. கிருஷ்ணமூர்த்தி | அ.இ.அ.தி.மு.க. | 22,316 |
| எம். எம். கிருஷ்ணன் | சுயேச்சை | 104 |
| கே. எம். சுப்பிரமணியம் | சுயேச்சை | 170 |
| கே. செளந்திரராஜன் | சுயேச்சை | 2,387 |
| ஏ. ஜே. தாஸ் | காங்கிரஸ் | 7,833 |
| கே. ராகவன் | சுயேச்சை | 242 |
| இ. வேலாயுதம் | சுயேச்சை | 63 |
| டி. ஜெயகாந்தன் | சுயேச்சை | 481 |

## 10. ஆயிரம் விளக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,67,463 |
| பதிவான வாக்குகள் | : | 72,284 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,635 |
| செல்லாத வாக்குகள் | : | 649 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஜே. சாதிக் பாஷா --- | தி. மு. க. | 26,599 |
| இ. அன்புமணி | ஜனதா | 15,230 |
| டாக்டர் சைத் கலிபத்துல்லா | சுயேச்சை | 21,741 |
| ஜி. ஏ. தெய்வசிகாமணி | காங்கிரஸ் | 7,902 |
| டி. ராமகிருஷ்ணன் | சுயேச்சை | 163 |

## 11. சேப்பாக்கம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,253 |
| பதிவான வாக்குகள் | : | 64,140 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 63,602 |
| செல்லாத வாக்குகள் | : | 538 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| அ. ரகுமான் கான் .... | தி. மு. க. | 24,425 |
| எஸ். வி. கந்தசாமி | ஜனதா | 13,849 |
| என். எம். மணிவர்மா | காங்கிரஸ் | 7,532 |
| வி. ராஜ்குமார் | அ.இ.அ.தி.மு.க. | 17,796 |

## 12. திருவல்லிக்கேணி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,32,743 |
| பதிவான வாக்குகள் | : | 66,440 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,936 |
| செல்லாத வாக்குகள் | : | 504 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| மு. அரங்கநாதன் .... | தி. மு. க. | 23,154 |
| டி. ராகவன் | சுயேச்சை | 247 |
| கே. எம். நாராயணன் | ஜனதா | 12,401 |
| திருமதி நூர்ஜஹான் ரசாக் | அ.இ.அ.தி.மு.க. | 21,027 |
| எஸ். வீரராகவன் | காங்கிரஸ் | 9,027 |

## 13. மயிலாப்பூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,52,323 |
| பதிவான வாக்குகள் | : | 77,911 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,167 |
| செல்லாத வாக்குகள் | : | 744 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. கே. கபாலி .... | தி. மு. க. | 26,044 |
| சின்ன அண்ணாமலை | காங்கிரஸ் | 10,449 |
| டாக்டர் திருநா ரத்தினம் | சுயேச்சை | 261 |
| நரசிம்ம ராகவன் (மயிலை நரசிம்மன்) | அ.இ.அ.தி.மு.க. | 19,139 |
| பி. எட். ராஜ்வலன் | சுயேச்சை | 136 |
| திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி | ஜனதா | 21,138 |

## 14. சைதாப்பேட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,48,319 |
| பதிவான வாக்குகள் | : | 74,578 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,014 |
| செல்லாத வாக்குகள் | : | 564 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. புருஷோத்தமன் .... | தி. மு. க. | 27,160 |
| என். கண்ணன் | அ.இ.அ.தி.மு.க. | 21,882 |
| தியாகி பி. எம். கண்ணையா | சுயேச்சை | 357 |
| நேதாஜி | ஜனதா | 16,339 |
| என். வீரன் | சுயேச்சை | 100 |
| கே. ஜெகவீரபாண்டியன் | காங்கிரஸ். | 8,176 |



கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.



# தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல்கள்

## போட்டியிட்ட வேட்பாளர்கள் ஓர் ஒப்பு ஆய்வு

| பொதுத் தேர்தல் | இடங்களின் எண்ணிக்கை | வேட்பாளர்களின் எண்ணிக்கை | சராசரி போட்டி |
|---|---|---|---|
| 1952 | 375 | 1677 | 4.5 |
| 1957 | 205 | 790 | 3.9 |
| 1962 | 206 | 798 | 3.9 |
| 1967 | 234 | 778 | 3.3 |
| 1971 | 234 | 748 | 3.2 |
| 1977 | 234 | 1390 | 5.9 |



# செங்கல்பட்டு மாவட்டம்:

## 15. கும்மிடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,875 |
| பதிவான வாக்குகள் | : | 77,810 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,456 |
| செல்லாத வாக்குகள் | : | 1,354 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். முனிரத்தினம் .... | அ·இ·அ·தி·மு·க. | 32,309 |
| எஸ். ஏழுமலை | சுயேச்சை | 1,148 |
| திருமதி கமலாம்புஜம்மாள் | ஜனதா | 21,042 |
| டி. முகமது அலிகான் | சுயேச்சை | 604 |
| இ. விநாயகம் | சுயேச்சை | 1,436 |
| வெங்கடசுப்பராஜு | காங்கிரஸ் | 7,782 |
| கே. வேணு | தி.மு.க. | 12,135 |

## 16. பொன்னேரி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,34,125 |
| பதிவான வாக்குகள் | : | 75,794 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,561 |
| செல்லாத வாக்குகள் | : | 1,233 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். எம். துரைராஜ் .... | அ·இ·அ·தி·மு·க. | 31,796 |
| கே. என். ஆறுமுகம் | காங்கிரஸ் | 6,422 |
| ஏ. பி. ஏழுமலை | சுயேச்சை | 564 |
| ஜி. சின்னராஜ் | சுயேச்சை | 1,085 |
| வி. நற்குணம் | ஜனதா | 14,170 |
| ஜி. வெற்றிவீரன் | தி.மு.க. | 20,524 |

## 17. திருவொற்றியூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,48,299 |
| பதிவான வாக்குகள் | : | 85,676 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 84,567 |
| செல்லாத வாக்குகள் | : | 1,109 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. சிகாமணி .... | அ·இ·அ·தி·மு·க. | 26,458 |
| பி. சின்னசாமி | சுயேச்சை | 224 |
| எம். வி. நாராயணசாமி | தி.மு.க. | 23,995 |
| சி. கே. மாதவன் | சுயேச்சை | 16,888 |
| பி. முனுசாமி நாயுடு | ஜனதா | 16,800 |
| பி. ஜான் | சுயேச்சை | 202 |

## 18. வில்லிவாக்கம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,65,872 |
| பதிவான வாக்குகள் | : | 92,190 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 90,891 |
| செல்லாத வாக்குகள் | : | 1,299 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. சுப்பு .... | தி. மு. க. ... | 37,327 |
| ஓ. ஆர். அரங்கன் | சுயேச்சை | 136 |
| ஆர். சர்வவேஸ்வர ராவ் | அ·இ·அ·தி·மு·க. | 29,429 |
| எம். செந்தில் வேலாயுதம் | சுயேச்சை | 445 |
| வி. ஆர். பகவான் | காங்கிரஸ் | 6,477 |
| எம். ஜி. பாண்டுரங்கன் | ஜனதா | 16,518 |
| என். பாலசுப்பிரமணியம் | சுயேச்சை | 155 |
| வி. முத்துவேல் | சுயேச்சை | 110 |
| எம். ஜனார்த்தனம் | சுயேச்சை | 294 |

## 19. ஆலந்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,54,152 |
| பதிவான வாக்குகள் | : | 83,605 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 82,665 |
| செல்லாத வாக்குகள் | : | 940 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| அப்துல் ரசாக் .... | அ·இ·அ·தி·மு·க. | 30,961 |
| எம். ஆபிரகாம் | தி.மு.க. | 27,112 |
| வி. சி. ஏழுமலை | சுயேச்சை | 209 |
| கே. நாராயண ராவ் | ஜனதா | 17,042 |
| ஏ. பாலசுப்பிரமணியம் | சுயேச்சை | 223 |
| மெர்வின் | சுயேச்சை | 185 |
| ஏ. ரங்கநாதன் | காங்கிரஸ் | 6,608 |
| ஆர். வீரபாண்டியன் | சுயேச்சை | 145 |
| பி.வி. வைத்தியலிங்கம் | சுயேச்சை | 180 |

## 20. தாம்பரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,57,010 |
| பதிவான வாக்குகள் | : | 93,097 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 91,986 |
| செல்லாத வாக்குகள் | : | 1,111 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| முனு ஆதி .... | அ·இ·அ·தி·மு·க. | 32,394 |
| எஸ். கண்ணன் | ஜனதா | 17,845 |
| ஆர். சந்திரசேகரன் | சுயேச்சை | 678 |
| பம்மல் என். நல்லதம்பி | தி.மு.க. | 31,968 |
| என். முருகேசன் | காங்கிரஸ் | 9,101 |

## 21. திருப்போரூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 97,060 |
| பதிவான வாக்குகள் | : | 56,642 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 55,682 |
| செல்லாத வாக்குகள் | : | 960 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஜி. சொக்கலிங்கம் .... | தி. மு. க. .... | 24,932 |
| டி. ராதா | அ·இ·அ·தி·மு·க. | 22,831 |
| எஸ். ஜி. கன்னியப்பன் | சுயேச்சை | 159 |
| பி. சகாதேவன் | சுயேச்சை | 466 |
| ஆர். தட்சிணாமூர்த்தி | ஜனதா | 5,910 |
| ஜி. நாகமணி | சுயேச்சை | 712 |
| என். ஜெயசந்திரன் | சுயேச்சை. | 672 |

## 22. செங்கல்பட்டு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,575 |
| பதிவான வாக்குகள் | : | 68,431 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,377 |
| செல்லாத வாக்குகள் | : | 1,054 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஜி. ஜெகதீசன் .... | அ·இ·அ·தி·மு·க. | 29,306 |
| எஸ். ஏ. காளி நாயக்கர் | சுயேச்சை | 303 |
| பி. தனபால் நாயக்கர் | காங்கிரஸ் | 4,275 |
| என். இ. மக்பூப் பாஷா | சுயேச்சை. | 611 |
| பி. எஸ். ரகுபதி | ஜனதா | 6,942 |
| வி. ருத்ரகோடி | தி.மு.க. | 25,436 |
| எம். வேதாசலம் | சுயேச்சை. | 504 |

## 23. மதுராந்தகம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,04,339 |
| பதிவான வாக்குகள் | : | 75,967 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,779 |
| செல்லாத வாக்குகள் | : | 1,188 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| சி. ஆறுமுகம் .... | தி. மு. க. .... | 26,977 |
| எஸ். டி. யுகம் சந்த் | காங்கிரஸ் | 19,645 |
| டி. கனகசபாபதி | சுயேச்சை | 968 |

| | | |
|---|---|---|
| ஓ. என். துரைபாபு | ஜனதா | 8,019 |
| வி. டி. ஆர். வீரப்பன் | சுயேச்சை | 736 |
| வி. வெங்கா | அ.இ.அ.தி.மு.க. | 18,434 |

## 24. அச்சரப்பாக்கம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 98,677 |
| பதிவான வாக்குகள் | : | 63,099 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 61,952 |
| செல்லாத வாக்குகள் | : | 1,147 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எத்திராஜ் .... | அ.இ.அ.தி.மு.க. | 26,756 |
| டி. அய்யாவு | ஜனதா | 4,871 |
| ஆர். குப்புசாமி | காங்கிரஸ் | 6,366 |
| என். முத்துவேல் | தி.மு.க. | 23,959 |

## 25. உத்திரமேரூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,733 |
| பதிவான வாக்குகள் | : | 78,553 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,457 |
| செல்லாத வாக்குகள் | : | 1,096 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பாக்கூர் சுப்பிரமணியன் .... | அ.இ.அ.தி.மு.க. | 34,877 |
| கே. எம். ராஜகோபால் | தி.மு.க. | 22,294 |
| கே. என். குப்புசாமி கவுண்டர் | சுயேச்சை | 1,998 |
| எம். பி. ராதாகிருஷ்ணன் | ஜனதா | 8,641 |
| சி. ராமசாமி | காங்கிரஸ் | 9,647 |

## 26. காஞ்சிபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,336 |
| பதிவான வாக்குகள் | : | 89,309 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 88,312 |
| செல்லாத வாக்குகள் | : | 997 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பாலாஜி .... | அ.இ.அ.தி.மு.க. | 31,327 |
| சி. ஆர். உமாபதி | காங்கிரஸ் | 8,346 |
| என். கிருஷ்ணன் | சுயேச்சை | 2,153 |
| எம். சண்முகம் | சுயேச்சை | 250 |
| வி. சம்பந்தம் | தி.மு.க. | 29,380 |
| இ. நரேந்திரன் | ஜனதா | 16,623 |
| வி.டி.ஆர். வீரப்பன் | சுயேச்சை | 233 |

## 27. ஸ்ரீபெரும்புதூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,08,219 |
| பதிவான வாக்குகள் | : | 68,838 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,538 |
| செல்லாத வாக்குகள் | : | 1,300 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கிருஷ்ணன் .... | அ.இ.அ.தி.மு.க. | 29,038 |
| அப்பாவு | காங்கிரஸ் | 8,705 |
| லட்சுமணன் | தி.மு.க. | 20,901 |
| எம்பெருமான் | ஜனதா | 7,953 |
| கோவிந்தன் | சுயேச்சை | 941 |

## 28. பூந்தமல்லி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,43,250 |
| பதிவான வாக்குகள் | : | 74,148 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,774 |
| செல்லாத வாக்குகள் | : | 1,374 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. ராஜரத்தினம் .... | தி. மு. க. .... | 26,552 |
| இரா. குலசேகரன் | அ.இ.அ.தி.மு.க. | 21,659 |
| அ. பால் பாண்டியன் | காங்கிரஸ் | 7,357 |
| ஜெ. மதன் ராஜ் | ஜனதா | 16,660 |
| சி. ராமமூர்த்தி | சுயேச்சை | 351 |
| சி. வெங்கட்ராமன் | சுயேச்சை | 195 |

## 29. திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,003 |
| பதிவான வாக்குகள் | : | 68,704 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,589 |
| செல்லாத வாக்குகள் | : | 1,115 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். பட்டாபிராமன் .... | அ.இ.அ.தி.மு.க. | 30,670 |
| டி. எத்திராஜன் | சுயேச்சை | 2,792 |
| பி. கோபால் | சுயேச்சை | 651 |
| டி. கோபாலன் | காங்கிரஸ் | 3,165 |
| டி. கே. பொன்னுவேலு | தி.மு.க. | 7,943 |
| முனிரத்தினம் நாயுடு | ஜனதா | 22,368 |

## 30. திருத்தணி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,02,979 |
| பதிவான வாக்குகள் | : | 67,645 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,547 |
| செல்லாத வாக்குகள் | : | 1,098 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். சண்முகம் .... | அ.இ.அ.தி.மு.க. | 29,070 |
| ஏ. பி. ராமச்சந்திரன் | தி.மு.க. | 18,754 |
| ஜி. சுப்பராயலு | ஜனதா | 13,540 |
| சி. தர்மலிங்க முதலியார் | சுயேச்சை | 351 |
| நாராயணுடு என்கிற ஆர். நாராயணதாஸ் | சுயேச்சை | 1,788 |
| சி. ராதாகிருஷ்ண ரெட்டி | சுயேச்சை | 808 |
| டி. எஸ். வரதராஜா | காங்கிரஸ் | 2,236 |

## 31. பள்ளிபட்டு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,571 |
| பதிவான வாக்குகள் | : | 70,972 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,830 |
| செல்லாத வாக்குகள் | : | 1,142 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏகாம்பர ரெட்டி .... | இ. தே. காங்கிரஸ் | 23,480 |
| டாக்டர் அஸ்வதா | ஜனதா | 7,195 |
| கணேசன் | தி.மு.க. | 17,252 |
| பலராமன் | அ.இ.அ.தி.மு.க. | 19,194 |
| முனுசாமி | சுயேச்சை | 2,449 |
| ராஜகோபால் | சுயேச்சை | 260 |



# வட ஆர்க்காடு மாவட்டம்

## 32. அரக்கோணம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,206 |
| பதிவான வாக்குகள் | : | 74,384 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,525 |
| செல்லாத வாக்குகள் | : | 854 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. கே. ராஜு | அ.இ.அ.தி.மு.க. | 24,630 |
| அ. கன்னையிரம் | தி.மு.க. | 17,041 |
| கே. சுப்பிரமணியன் | சுயேச்சை | 1,116 |
| வி. பால்ராஜ் | சுயேச்சை | 1,342 |
| அ. ஜெயராமன் | ஜனதா | 15,503 |
| ஜி. ஜெயராஜ் | காங்கிரஸ் | 13,893 |

## 33. சோளிங்கர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,141 |
| பதிவான வாக்குகள் | : | 68,973 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,995 |
| செல்லாத வாக்குகள் | : | 978 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். ஜே. ராமசாமி | அ.இ.அ.தி.மு.க. | 25,997 |
| சி. ராஜேந்திரன் | காங்கிரஸ் | 9,393 |
| அ. கந்தப்பன் | சுயேச்சை | 919 |
| எஸ். எஸ். சுந்தரராமன் | ஜனதா | 9,266 |
| எஸ். தியாகராஜன் | சுயேச்சை | 1,420 |
| ஜி. முனிசாமி | சுயேச்சை | 652 |
| கே. மூர்த்தி | தி.மு.க. | 20,348 |

## 34. ராணிப்பேட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,555 |
| பதிவான வாக்குகள் | : | 74,645 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,377 |
| செல்லாத வாக்குகள் | : | 1,268 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| துரைமுருகன் | தி. மு. க. | 31,940 |
| அப்துல் கபூர் சாகிப் | ஜனதா | 7,584 |
| டி. ஆறுமுகம் | சுயேச்சை | 862 |
| அ. சம்பத் நரசிம்மன் | காங்கிரஸ் | 14,838 |
| எம். ஏ. கே. சித்திக் | சுயேச்சை | 1,253 |
| எஸ். எஸ். சுந்தரராமன் | சுயேச்சை | 257 |
| கே. ஏ. வகாப் | சுயேச்சை | 16,643 |

## 35. ஆர்க்காடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,08,773 |
| பதிவான வாக்குகள் | : | 70,141 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,203 |
| செல்லாத வாக்குகள் | : | 938 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஜே. உய்யக்கொண்டான் | அ.இ.அ.தி.மு.க. | 27,193 |
| என். ஆர். எத்திராஜுலு | ஜனதா | 16,614 |
| எம். பரசுராமன் | சுயேச்சை | 2,702 |
| கே. ஆர். முனிரத்தினம் | காங்கிரஸ் | 6,401 |
| பி. ஜெயவேலு | தி.மு.க. | 16,293 |

## 36. காட்பாடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,689 |
| பதிவான வாக்குகள் | : | 71,307 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,389 |
| செல்லாத வாக்குகள் | : | 918 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஏ. ஜெயவேலு | அ.இ.அ.தி.மு.க | 26,873 |
| கே. கோவிந்தராஜி | சுயேச்சை | 546 |
| டி. சாம்பசிவம் | தி.மு.க. | 22,183 |
| பி. நடராஜன் | சுயேச்சை | 1,112 |
| கே. பி. நவகோட்டி | ஜனதா | 15,683 |
| வி. என். ரத்தினம் | காங்கிரஸ் | 3,114 |
| சோமுன் என்ற ராமசாமி | சுயேச்சை | 878 |

## 37. குடியாத்தம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,905 |
| பதிவான வாக்குகள் | : | 70,693 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,692 |
| செல்லாத வாக்குகள் | : | 1,001 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. கே. கோதண்டராமன் | மார்க். கம்யூனிஸ்ட் | 20,590 |
| பி. எஸ். கணேசன் | சுயேச்சை | 636 |
| ஆர். கோவிந்தசாமி | காங்கிரஸ் | 15,753 |
| சுந்தரராஜுலு நாயுடு | ஜனதா | 18,046 |
| கே. முனுசாமி சௌத்ரி | சுயேச்சை | 1,564 |
| கே. ஜி. முனியப்பன் | தி.மு.க. | 12,224 |
| டி. ரங்கநாதன் | சுயேச்சை | 879 |

## 38. பேரணம்பட்டு (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,03,535 |
| பதிவான வாக்குகள் | : | 67,013 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,939 |
| செல்லாத வாக்குகள் | : | 1,074 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஐ. தமிழரசன் | அ.இ.அ.தி.மு.க. | 24,536 |
| பி. ராஜகோபால் | ஜனதா | 20,873 |
| ஆர். பி. உலகநம்பி | காங்கிரஸ் | 3,628 |
| வி. கோவிந்தன் | தி.மு.க. | 15,862 |
| கே. சேமன் | சுயேச்சை | 1,040 |

## 39. வாணியம்பாடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,540 |
| பதிவான வாக்குகள் | : | 62,983 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 62,108 |
| செல்லாத வாக்குகள் | : | 875 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். அப்துல் லத்தீப் | சுயேச்சை | 26,620 |
| அப்துல் வஹிது | ஜனதா | 10,323 |
| என். கே. ஆறுமுகம் | சுயேச்சை | 1,136 |
| ஆர். சம்பங்கி | தி.மு.க. | 17,886 |
| பி. சயத் அகமத் | சுயேச்சை | 357 |
| கே. முகமது முஸ்தபா, | சுயேச்சை | 88 |
| அ. வெங்கடேசன் | காங்கிரஸ் | 5,698 |

## 40. நாட்ராம்பள்ளி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,713 |
| பதிவான வாக்குகள் | : | 70,778 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,800 |
| செல்லாத வாக்குகள் | : | 978 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. அன்பழகன் | அ.இ.அ.தி.மு.க. | 31,015 |
| டி. எம். கந்தசாமி கவுண்டர் | காங்கிரஸ் | 6,161 |
| கே. எல். கரிபீர கவுண்டர் | சுயேச்சை | 1,432 |
| என். கிருஷ்ணன் | சுயேச்சை | 788 |
| எஸ். எஸ். சிங்காரவேலு | சுயேச்சை | 456 |
| எம். மாரப்பன் | தி.மு.க. | 14,960 |
| எம். ராமசாமி | சுயேச்சை | 694 |
| ஆர். வி. லட்சுமிபதி கவுண்டர் | ஜனதா | 14,294 |

## 41. திருப்பத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,361 |
| பதிவான வாக்குகள் | : | 73,877 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,761 |
| செல்லாத வாக்குகள் | : | 1,116 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. சுந்தரம் | தி. மு. க. | 19,855 |
| டி. சி. தங்கராஜ் | குடியரசு | 1,641 |
| டி. ஆர். தாதா செட்டியார் | காங்கிரஸ் | 16,225 |
| என். தாமோதரன் | ஜனதா | 13,786 |
| சி. ராஜி | சுயேச்சை | 2,194 |
| ஆர். ஜானகிராமன் | சுயேச்சை | 203 |
| கே. ஜெயராமன் | அ.இ.அ.தி.மு.க. | 18,857 |

## 42. செங்கம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 96,111 |
| பதிவான வாக்குகள் | : | 49,928 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 49,158 |
| செல்லாத வாக்குகள் | : | 770 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. சாமிகண்ணு | அ.இ.அ.தி.மு.க. | 22,789 |
| கே. வி. அல்லிமுத்து | சுயேச்சை | 111 |
| பி. அன்பழகன் | ஜனதா | 8,094 |
| பி. தனபால் | சுயேச்சை | 1,478 |
| என். பூசஞர் | தி.மு.க. | 11,877 |
| டி. ராஜா | இந்திய கம்யூனிஸ்ட் | 4,492 |
| திருமதி ஜெயாஆறுமுகம் | சுயேச்சை | 317 |

## 43. தண்டராம்பட்டு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,350 |
| பதிவான வாக்குகள் | : | 76,787 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,263 |
| செல்லாத வாக்குகள் | : | 1,524 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. வேணுகோபால் | தி. மு. க. | 28,605 |
| அ. ராமலிங்கம் | அ.இ.அ.தி.மு.க. | 21,661 |
| எம். ஏ. பொன்னுசாமி ரெட்டி | காங்கிரஸ் | 18,933 |
| கே. முனுசாமி கண்டா | ஜனதா | 6,064 |

## 44. திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,397 |
| பதிவான வாக்குகள் | : | 85,629 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 84,248 |
| செல்லாத வாக்குகள் | : | 1,381 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ப. உ. சண்முகம் | தி. மு. க. | 27,148 |
| ஏ. ஆர். சுகுணபாண்டியன் | சுயேச்சை | 2,100 |
| பி. தாண்டவராயன் | ஜனதா | 8,689 |
| டி. பட்டுசாமி | காங்கிரஸ் | 25,786 |
| கே. ஆர். வெங்கடேசன் | அ.இ.அ.தி.மு.க. | 20,525 |

## 45. கலசப்பாக்கம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | : | 1,14,750 |
| பதிவான வாக்குகள் | : | 77,184 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,851 |
| செல்லாத வாக்குகள் | : | 1,333 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. எஸ். திருவேங்கடம் | தி. மு. க. | 26,841 |
| சுந்தரேச உடையார் | அ.இ.அ.தி.மு.க. | 25,298 |
| ஏ. மண்ணுங்கட்டி கண்டர் | காங்கிரஸ் | 16,893 |
| என். சி. மாரிமுத்து | சுயேச்சை | 1,228 |
| ஜி. ராஜகுமார் | ஜனதா | 5,591 |

## 46. போளூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,103 |
| பதிவான வாக்குகள் | : | 66,649 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,135 |
| செல்லாத வாக்குகள் | : | 1,514 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஜே. சுப்ரமணியன் | அ.இ.அ.தி.மு.க. | 24,631 |
| எஸ். எம். அண்ணாமலை | காங்கிரஸ் | 6,373 |
| டி. என். சுப்பிரமணியன் | ஜனதா | 11,279 |
| எஸ். முருகையன் | தி.மு.க. | 21,902 |
| ஏ. பி. ராமச்சந்திரன் | சுயேச்சை | 950 |

## 47. அணைக்கட்டு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,756 |
| பதிவான வாக்குகள் | : | 68,272 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,104 |
| செல்லாத வாக்குகள் | : | 1,168 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். மார்க்க பந்து | அ.இ.அ.தி.மு.க. | 32,731 |
| ஏ. எம். ராமலிங்கம் | தி.மு.க. | 13,985 |
| எஸ். தங்கவேலு | சுயேச்சை | 324 |
| எம். மூர்த்தி | சுயேச்சை | 1,091 |
| பி. எம். வாசுதேவ ரெட்டியார் | ஜனதா | 14,146 |
| டி. கே. வெங்கடேசன் | காங்கிரஸ் | 4,427 |
| சி. ஜெயபாலன் | சுயேச்சை | 400 |

## 48. வேலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,30,154 |
| பதிவான வாக்குகள் | : | 88,017 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 87,258 |
| செல்லாத வாக்குகள் | : | 759 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. கே. ரெங்கநாதன் | அ.இ.அ.தி.மு.க. | 26,590 |
| கேப்டன்.ஒய். டேனியல் | சுயேச்சை | 268 |
| வி. தட்சிணாமூர்த்தி | காங்கிரஸ் | 12,043 |
| எம். எஸ். தாஜ் முகமது | சுயேச்சை | 306 |
| வி. எம். தேவராஜ் | தி.மு.க. | 21,229 |
| ஜி. மூர்த்தி | சுயேச்சை | 1,064 |
| ஏ. கே. லாலாலஜபதி | ஜனதா | 25,758 |

## 49. ஆரணி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,994 |
| பதிவான வாக்குகள் | : | 83,198 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 81,799 |
| செல்லாத வாக்குகள் | : | 1,399 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. அர்ஜுனன் | அ.இ.அ.தி.மு.க. | 33,925 |
| எம். ஏ. காதர் | சுயேச்சை | 892 |
| ஆர். சண்முகம் | காங்கிரஸ் | 2,831 |
| இ. செல்வராசு | தி.மு.க. | 24,703 |
| எம். தென்னூர் தருமராசன் | ஜனதா | 19,448 |

## 50. செய்யாறு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,131 |
| பதிவான வாக்குகள் | : | 78,148 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,930 |
| செல்லாத வாக்குகள் | : | 1,218 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| புலவர் கோவிந்தன் | தி. மு. க. | 33,338 |
| எம். கிருஷ்ணசாமி | காங்கிரஸ் | 5,992 |
| கே. சண்முகசுந்தரம் | அ.இ.அ.தி.மு.க. | 21,419 |
| பி. கே. சந்திரன் | சுயேச்சை | 234 |
| நாராயணன் | சுயேச்சை | 502 |
| எம். பூபாலன் | ஜனதா | 14,271 |
| சி. எம். பெருமாள்சாமி | சுயேச்சை | 1,174 |

## 51. வந்தவாசி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,981 |
| பதிவான வாக்குகள் | : | 69,852 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,862 |
| செல்லாத வாக்குகள் | : | 990 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. முனுசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 28,306 |
| எ. ஆறுமுகம் | குடியரசுக் கட்சி | 820 |
| சி. கன்னியப்பன் | தி.மு.க. | 26,476 |
| எ. குமாரசாமி | ஜனதா | 10,034 |
| எம். சாமிநாதன் | சுயேச்சை | 2,071 |
| வி. ராஜகோபால் | சுயேச்சை | 183 |
| ஏ. மனோகரன் | சுயேச்சை | 290 |
| எஸ். முத்துலிங்கம் | சுயேச்சை | 682 |

## 52. பேரணமல்லூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,644 |
| பதிவான வாக்குகள் | : | 69,817 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,840 |
| செல்லாத வாக்குகள் | : | 977 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. சந்திரன் .... | அ.இ.அ.தி.மு.க. | 27,860 |
| பி. எட்டியப்பன் | தி.மு.க. | 19,822 |
| டி. கிருஷ்ணசாமி நாயுடு | காங்கிரஸ் | 7,495 |
| டி. சுப்பிரமணியன் | ஜனதா | 11,685 |
| சி. எஸ். பத்மநாபன் | சுயேச்சை | 165 |
| ஏ. ஜான் சேவியர் | சுயேச்சை | 1,813 |

# தென்னார்க்காடு மாவட்டம்

## 53. மேல்மலையனூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,185 |
| பதிவான வாக்குகள் | : | 72,340 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,092 |
| செல்லாத வாக்குகள் | : | 1,248 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. தங்கவேலு கவுண்டர் .... | அ.இ.அ.தி.மு.க. | 27,673 |
| என். வி. அய்யாக்கண்ணு கவுண்டர் | ஜனதா | 6,543 |
| எம். ஏ. கூத்தன் | சுயேச்சை | 5,327 |
| எச். கோதண்டன் | சுயேச்சை | 988 |
| கே. கோபால கவுண்டர் | சுயேச்சை | 12,064 |
| ஏ. சடகோபன் | சுயேச்சை | 1,755 |
| ஆர். முருகேசன் | இந்திய கம்யூனிஸ்ட் | 1,828 |
| என். விநாயகம் | சுயேச்சை | 804 |
| எஸ். விஜயராகவன் | தி.மு.க. | 14,110 |

## 54. செஞ்சி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,821 |
| பதிவான வாக்குகள் | : | 75,918 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,644 |
| செல்லாத வாக்குகள் | : | 1,274 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். ராமச்சந்திரன் .... | தி. மு. க. .... | 26,971 |
| ஜி. கிருஷ்ணசாமி | அ.இ.அ.தி.மு.க. | 23,381 |
| எஸ். பி. கேசவன் | சுயேச்சை | 1,869 |
| சி. சுப்பிரமணிய கவுண்டர் | ஜனதா | 6,922 |
| எஸ். பஷீர் | சுயேச்சை | 574 |
| வி. முனுசாமி | காங்கிரஸ் | 14,186 |
| கே. லோகநாதன் | சுயேச்சை | 741 |

## 55. திண்டிவனம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,01,610 |
| பதிவான வாக்குகள் | : | 65,134 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 64,261 |
| செல்லாத வாக்குகள் | : | 873 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. ஆர். ராஜாராம் .... | இ. தே. காங்கிரஸ் | 18,990 |
| பி. எம். ரங்கநாதன் | சுயேச்சை | 1,046 |
| ஜி. ராஜாராம் | அ.இ.அ.தி.மு.க. | 15,117 |
| ஆர். ராதாகிருஷ்ணன் | ஜனதா | 17,150 |
| ஜி. வெங்கட்ராமன் | தி.மு.க. | 11,958 |

## 56. வானூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,777 |
| பதிவான வாக்குகள் | : | 63,965 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 62,817 |
| செல்லாத வாக்குகள் | : | 1,148 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். பரமசிவம் .... | தி. மு. க. .... | 21,557 |
| அருள் வரதராஜன் | சுயேச்சை | 332 |
| ஏ. இருசன் | சுயேச்சை | 861 |
| எஸ். காந்தி தாஸ் | காங்கிரஸ் | 12,621 |
| ஏ. பூபாலன் | அ.இ.அ.தி.மு.க. | 19,584 |
| ஏ. பெருமாள் | ஜனதா | 7,862 |

## 57. கண்டமங்கலம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,15,036 |
| பதிவான வாக்குகள் | : | 66,846 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,619 |
| செல்லாத வாக்குகள் | : | 1,227 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். கண்ணன்** | அ.இ.அ.தி.மு.க. | 25,403 |
| எஸ். அழகுவேலு | தி.மு.க. | 23,349 |
| எம். ராமன் | சுயேச்சை | 1,381 |
| வி. தசரதன் | ஜனதா | 10,006 |
| கே. முனியன் | சுயேச்சை | 1,769 |
| பி. ரங்கசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 3,711 |

## 58. விழுப்புரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,651 |
| பதிவான வாக்குகள் | : | 75,029 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,980 |
| செல்லாத வாக்குகள் | : | 1,049 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. கிருஷ்ணன்** | அ.இ.அ.தி.மு.க. | 27,882 |
| எல். ஆதிகேசவலு நாயுடு | ஜனதா | 12,167 |
| டி. திருமால் | காங்கிரஸ் | 8,754 |
| கே. பி. பழனியப்பன் | தி.மு.க. | 25,183 |

## 59. முகையூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,08,393 |
| பதிவான வாக்குகள் | : | 70,314 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,933 |
| செல்லாத வாக்குகள் | : | 1,381 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஜி. ரகோத்தமன்** | அ.இ.அ.தி.மு.க. | 31,531 |
| ஐ. ஏழுமலை | சுயேச்சை | 834 |
| பி.ஜி. கிருஷ்ணசாமி | ஜனதா | 12,012 |
| எம். சண்முகம் | தி.மு.க. | 18,248 |
| எஸ். பாண்டுரெங்கன் | சுயேச்சை | 740 |
| டி. எஸ். முகமது உஸ்மான் | சுயேச்சை | 598 |
| ஜி. ஜானகிராமன் | காங்கிரஸ் | 4,970 |

## 60. திருநாவலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,01,702 |
| பதிவான வாக்குகள் | : | 70,151 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,897 |
| செல்லாத வாக்குகள் | : | 1,554 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எல். ஆறுமுகம்** | அ.இ.அ.தி.மு.க. | 24,087 |
| கே. ராமமூர்த்தி | காங்கிரஸ் | 12,257 |
| லட்சுமிநாராயணன் | ஜனதா | 7,479 |
| ஏ. யேசுபாதன் | சுயேச்சை | 3,862 |
| சி. கிருஷ்ணசாமி | சுயேச்சை | 761 |
| எஸ். ஏ. கோபாலகிருஷ்ணன் | சுயேச்சை | 714 |
| வி. சுப்பிரமணியன் | தி.மு.க. | 19,132 |
| நரசிம்மன் நாயுடு | சுயேச்சை | 248 |
| ஏ. வீராசாமி | சுயேச்சை | 357 |

## 61. உளுந்தூர்ப்பேட்டை (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,137 |
| பதிவான வாக்குகள் | : | 72,768 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,058 |
| செல்லாத வாக்குகள் | : | 1,710 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **வி. துலுக்காணம்** | தி.மு.க. | 26,788 |
| எம். எஸ். அன்பையா | சுயேச்சை | 407 |
| எல். இளைய பெருமாள் | காங்கிரஸ் | 17,341 |
| எம். கந்தசாமி | சுயேச்சை | 1,668 |
| திருமதி சத்தியவாணிமுத்து | அ.இ.அ.தி.மு.க. | 19,211 |
| எஸ். தங்கவேலு | சுயேச்சை | 336 |
| பி. ராஜி | சுயேச்சை | 1,805 |
| எம். ஜெயராமன் | ஜனதா | 3,502 |

## 62. நெல்லிக்குப்பம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,06,084 |
| பதிவான வாக்குகள் | : | 71,711 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,464 |
| செல்லாத வாக்குகள் | : | 1,247 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சி. கோவிந்தராஜன்** | மார்க். கம்யூனிஸ்ட் | 23,077 |
| கே. ஜி. கந்தன் | காங்கிரஸ் | 9,444 |
| எஸ். எல். கிருஷ்ணமூர்த்தி | ஜனதா | 14,217 |
| வி. கிருஷ்ணமூர்த்தி | தி.மு.க. | 18,260 |
| என். வி. ஜெய சீலன் | குடியரசுக் கட்சி | 5,466 |

## 63. கடலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,391 |
| பதிவான வாக்குகள் | : | 77,455 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,269 |
| செல்லாத வாக்குகள் | : | 1,186 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. அப்துல் லத்தீப்** | அ.இ.அ.தி.மு.க. | 24,107 |
| ஆர். பாபு கோவிந்தராஜன் | தி.மு.க. | 22,280 |
| என். நடராஜன் | சுயேச்சை | 526 |
| டி. ஆர். நரசிம்மன் | சுயேச்சை | 863 |
| பி. ஆர். எஸ். வெங்கடேசன் | ஜனதா | 20,106 |
| எம். வெங்கடேசன் | காங்கிரஸ் | 8,387 |

## 64. பண்ருட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,00,977 |
| பதிவான வாக்குகள் | : | 74,255 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,142 |
| செல்லாத வாக்குகள் | : | 1,113 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். ராமச்சந்திரன்** | அ.இ.அ.தி.மு.க. | 43,330 |
| எஸ். தியாகராஜன் | காங்கிரஸ் | 2,139 |
| கே. நந்தகோபாலகிருஷ்ணன் | ஜனதா | 27,673 |

## 65. குறிஞ்சிப்பாடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,846 |
| பதிவான வாக்குகள் | : | 69,278 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,898 |
| செல்லாத வாக்குகள் | : | 1,380 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். செல்வராஜ்** | தி.மு.க. | 19,523 |
| பி. ராதாகிருஷ்ணன் | காங்கிரஸ் | 14,663 |
| எஸ். ராமசாமி | சுயேச்சை | 1,818 |
| கே. தனகோபால் | சுயேச்சை | 1,690 |
| கே. நடராஜன் | மார்க்சிஸ்ட் கம்யூ. | 16,997 |
| பி. எம். பாலசுப்பிரமணியன் | ஜனதா | 13,080 |
| முத்துப் பட்டுச்சாமி | சுயேச்சை | 127 |

## 66. புவனகிரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,210 |
| பதிவான வாக்குகள் | : | 77,698 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,369 |
| செல்லாத வாக்குகள் | : | 1,329 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. ரகுராமன் .... | தி. மு. க. .... | 21,638 |
| எம். ஏ. அபுசாலி | சுயேச்சை | 14,870 |
| பி. ஆறுமுகம் | சுயேச்சை | 1,390 |
| வி. ராதாகிருஷ்ணன் | சுயேச்சை | 3,613 |
| பி. பால்ராஜ் | காங்கிரஸ் | 17,282 |
| டி. எம். டி. பழனிலிங்கம் | ஜனதா | 17,350 |
| ஜி. ராமலிங்கம் | சுயேச்சை | 226 |

## 67. காட்டுமன்னார்கோவில் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,04,851 |
| பதிவான வாக்குகள் | : | 70,200 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,362 |
| செல்லாத வாக்குகள் | : | 838 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| இ. இராமலிங்கம் .... | தி. மு. க. .... | 26,038 |
| பி. அய்யன் குட்டி | ஜனதா | 3,736 |
| எஸ். சாமித்துரை | சுயேச்சை | 489 |
| எஸ். சிவசுப்பிரமணியன் | காங்கிரஸ் | 18,158 |
| டி. தியாகராஜன் | சுயேச்சை | 595 |
| ஜி. பிச்சமுத்து | சுயேச்சை | 355 |
| ஆர். ராஜன் | அ. இ. அ. தி. மு. க. | 19,991 |

## 68. சிதம்பரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,561 |
| பதிவான வாக்குகள் | : | 74,156 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,226 |
| செல்லாத வாக்குகள் | : | 930 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கலியமூர்த்தி துரை .... | தி. மு. க. .... | 22,917 |
| பி. உமாபதி | காங்கிரஸ் | 15,644 |
| ஆர். கண்ணுசாமி | சுயேச்சை | 406 |
| எம். சஞ்சீவி | சுயேச்சை | 1,422 |
| ஏ. சம்பந்தம் | ஜனதா | 10,960 |
| கே. தருமன் | சுயேச்சை | 474 |
| முத்து கோவிந்தராஜன் | அ. இ. அ. தி. மு. க. | 19,586 |
| என். ரத்தினசாமி | சுயேச்சை | 1,817 |

## 69. விருத்தாசலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,24,327 |
| பதிவான வாக்குகள் | : | 77,427 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,225 |
| செல்லாத வாக்குகள் | : | 1,202 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ராமநாதன் ... | அ. இ. அ. தி. மு. க. | 30,178 |
| ராமலிங்கம் | தி. மு. க. | 18,071 |
| காந்தராஜன் | சுயேச்சை | 1,208 |
| சிவப்பிரகாசம் | காங்கிரஸ் | 10,028 |
| தம்புசாமி | சுயேச்சை | 1,272 |
| ராஜவன்னியன் | சுயேச்சை | 1,289 |
| வைகுந்தம் | ஜனதா | 10,650 |
| வைத்தியநாதன் | சுயேச்சை | 3,529 |

## 70. மங்களூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,283 |
| பதிவான வாக்குகள் | : | 77,212 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,941 |
| செல்லாத வாக்குகள் | : | 1,271 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். பெரியசாமி .... | அ. இ. அ. தி. மு. க. | 30,616 |
| ஆர். இளங்கோவன் | ஜனதா | 6,610 |
| ஏ. கிருஷ்ணன் | சுயேச்சை | 1,194 |
| என். சற்குரு நடராஜன் | சுயேச்சை | 3,043 |
| வி. பொன்னுசாமி | தி. மு. க. | 17,361 |
| பி. வேதமாணிக்கம் | காங்கிரஸ் | 17,117 |

## 71. ரிஷிவந்தியம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,01,394 |
| பதிவான வாக்குகள் | : | 68,308 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,448 |
| செல்லாத வாக்குகள் | : | 1,860 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். சுந்தரம் .... | இ. தே. காங்கிரஸ் | 25,530 |
| டி. அப்துல் வகாப் | சுயேச்சை | 685 |
| ஜே. வி. கீர்த்தி | தி. மு. க. | 5,323 |
| டி. கோவிந்தராஜன் | சுயேச்சை | 814 |
| எம். தெய்விகன் | அ. இ. அ. தி. மு. க. | 21,478 |
| பி. ராமசாமி | சுயேச்சை | 159 |
| இ. ஜகநாதன் | சுயேச்சை | 282 |
| கே. ஜெயச்சந்திரன் | ஜனதா. | 12,177 |

## 72. சின்ன சேலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,367 |
| பதிவான வாக்குகள் | : | 69,581 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,321 |
| செல்லாத வாக்குகள் | : | 1,260 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். சுப்ரமணியன் .... | அ. இ. அ. தி. மு. க. | 24,304 |
| பி. ஆர். அண்ணாமலை | சுயேச்சை | 529 |
| பி. ஆறுமுகம் | சுயேச்சை | 178 |
| எம். சுப்பராயன் | சுயேச்சை | 194 |
| எஸ். பி. பச்சையப்பன் | தி. மு. க. | 21,081 |
| எல். பி. பொன்னுவேல் | காங்கிரஸ் | 9,397 |
| திருமதி வி. ஜெயலட்சுமி | ஜனதா | 12,638 |

## 73. சங்கராபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,06,711 |
| பதிவான வாக்குகள் | : | 70,017 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,664 |
| செல்லாத வாக்குகள் | : | 1,353 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| துரை முத்துசாமி .... | இ. தே. காங்கிரஸ் | 21,593 |
| ஏ. இராமசாமி | ஜனதா | 8,106 |
| எம். முகமது ஹனீஃப் | அ. இ. அ. தி. மு. க. | 18,885 |
| எம். முத்தையன் | தி. மு. க. | 16,650 |
| ஆர். லட்சுமணன் | சுயேச்சை | 3,430 |

# தர்மபுரி மாவட்டம்

## 74. ஹோசூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 92,284 |
| பதிவான வாக்குகள் | 54,411 |
| செல்லுபடியான வாக்குகள் | 53,025 |
| செல்லாத வாக்குகள் | 1,386 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். ராமச்சந்திர ரெட்டி .... | இ. தே. காங்கிரஸ் | 30,818 |
| கே. எஸ். கோதண்டராமையா | ஜனதா | 13,653 |
| முகமது சாலசா | தி.மு.க. | 3,573 |
| எம். ராமசாமி | அ.இ.அ.தி.மு.க. | 4,981 |

## 75. தளி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 99,012 |
| பதிவான வாக்குகள் | 62,100 |
| செல்லுபடியான வாக்குகள் | 60,789 |
| செல்லாத வாக்குகள் | 1,311 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. எஸ். ராஜாராம்நாயுடு .... | இ. தே. காங்கிரஸ் | 18,559 |
| தேன் ராமசாமி | தி.மு.க. | 8,576 |
| டி. எஸ். ரிஸ்வான் | அ.இ.அ.தி.மு.க. | 9,010 |
| டி. சி. விஜயேந்திரியா | சுயேச்சை | 11,256 |
| பி. வெங்கடசாமி | ஜனதா | 13,388 |

## 76. காவேரிப்பட்டினம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,00,732 |
| பதிவான வாக்குகள் | 65,622 |
| செல்லுபடியான வாக்குகள் | 64,481 |
| செல்லாத வாக்குகள் | 1,141 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டாக்டர் கே. சமரசம் ... | அ.இ.அ.தி.மு.க. | 25,770 |
| இ. பட்டாபி நாயுடு | ஜனதா | 19,312 |
| பி. கே. பட்டாபிராம் | இந்திய கம்யூனிஸ்ட் | 8,374 |
| பி. வி. எஸ். வெங்கடேசன் | தி.மு.க. | 11,025 |

## 77. கிருஷ்ணகிரி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 93,875 |
| பதிவான வாக்குகள் | 54,146 |
| செல்லுபடியான வாக்குகள் | 52,600 |
| செல்லாத வாக்குகள் | 1,546 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஆர் சின்னராசு ... | அ.இ.அ.தி.மு.க. | 17,178 |
| எம். என். கரமத்துல்லா | தி.மு.க. | 9,429 |
| டி. எம். திருப்பதி | ஜனதா | 12,466 |
| சி. முனுசாமி | சுயேச்சை | 1,860 |
| பி. எம். முனுசாமி கவுண்டர் | காங்கிரஸ் | 11,667 |

## 78. பருகூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : 98,061 |
| பதிவான வாக்குகள் | : 59,862 |
| செல்லுபடியான வாக்குகள் | : 58,867 |
| செல்லாத வாக்குகள் | : 995 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எச். ஜி. ஆறுமுகம் ... | அ.இ அ.தி.மு.க. | 28,812 |
| டாக்டர் டி. சின்னராஜு | காங்கிரஸ் | 8,599 |
| ஜி. சுகதேவ் | ஜனதா | 6,036 |
| வி. சி. திம்மராயன் | தி.மு.க. | 15,420 |

## 79. அரூர் (தனி)

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : 1,12,102 |
| பதிவான வாக்குகள் | : 58,432 |
| செல்லுபடியான வாக்குகள் | : 57,770 |
| செல்லாத வாக்குகள் | : 662 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். அண்ணாமலை ... | மார்க். கம்யூனிஸ்ட் | 20,042 |
| கே. எஸ். ராமன் | காங்கிரஸ் | 12,032 |
| ஆர். சிவராஜ் | தி.மு.க. | 11,096 |
| கே. சுருட்டையன் | ஜனதா | 12,470 |
| கே. தீத்தன் | சுயேச்சை | 508 |
| பி. மெய்யழகன் | குடியரசுக் கட்சி | 1,622 |

## 80. மொரப்பூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : 95,833 |
| பதிவான வாக்குகள் | : 67,155 |
| செல்லுபடியான வாக்குகள் | : 66,429 |
| செல்லாத வாக்குகள் | : 726 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். குப்புசாமி ... | அ.இ.அ.தி.மு.க. | 22,886 |
| டி. வி. அங்கண்ணச் செட்டியார் | சுயேச்சை | 108 |
| கே. அருணசலம் | ஜனதா | 13,770 |
| பி. பி. ராசு | இந்திய கம்யூனிஸ்ட் | 4,616 |

| | | |
|---|---|---|
| எம். ஜி. சேகர் | சுயேச்சை | 139 |
| கே. நடராஜன் | குடியரசுக் கட்சி | 3,640 |
| ஆர். பி. முருகன் | தி.மு.க. | 21,270 |

## 81. பாலக்கோடு

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,02,568 |
| பதிவான வாக்குகள் | 67,865 |
| செல்லுபடியான வாக்குகள் | 66,797 |
| செல்லாத வாக்குகள் | 1,068 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. எம். கிருஷ்ணன் ... | அ.இ.அ.தி.மு.க. | 21,959 |
| கே. டி. கோவிந்தன் | ஜனதா | 17,701 |
| கே. எம். சுவாமிநாதன் | சுயேச்சை | 1,364 |
| எம். டி. நாராயணசாமி | காங்கிரஸ் | 8,266 |
| எம்.வி. முனுசாமி கவுண்டர் | தி.மு.க. | 17,507 |

## 82. தர்மபுரி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,02,768 |
| பதிவான வாக்குகள் | 64,098 |
| செல்லுபடியான வாக்குகள் | 63,216 |
| செல்லாத வாக்குகள் | 882 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. கே. சி. முத்துசுவாமி ... | ஜனதா ... | 26742 |
| டி.வி. அங்கண்ண செட்டியார் | சுயேச்சை | 177 |
| எஸ். அப்துல் வகித் | சுயேச்சை | 667 |
| டி. எஸ். சண்முகம் | அ.இ.அ.தி.மு.க. | 21,556 |
| கே. கே. சுப்பிரமணி | சுயேச்சை | 1,206 |
| கே. பெரியசாமி | தி.மு.க. | 7,7 21 |
| டி. கே. முனுசாமி | காங்கிரஸ் | 5,147 |

## 83. பெண்ணாகரம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,00,327 |
| பதிவான வாக்குகள் | 55,524 |
| செல்லுபடியான வாக்குகள் | 54,756 |
| செல்லாத வாக்குகள் | 768 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| அப்புனு கவுண்டர் ... | ஜனதா .... | 17,591 |
| கிருஷ்ணன் | அ.இ.அ.தி.மு.க. | 16,932 |
| பி. கே. நரசிம்மன் | காங்கிரஸ் | 11,086 |
| கே. மாரிமுத்து | தி.மு.க. | 8,487 |
| கே. எம். முனியப்பன் | சுயேச்சை | 660 |

# சேலம் மாவட்டம்

## 84. மேட்டூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,548 |
| பதிவான வாக்குகள் | : | 71,403 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,436 |
| செல்லாத வாக்குகள் | : | 967 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. பி. நாச்சிமுத்து கவுண்டர் | அ.இ.அ.தி.மு.க. | 30,762 |
| என். பி. அப்துல் அஜீஸ் | சுயேச்சை | 332 |
| எல். கே. ராமு | தி.மு.க. | 10,478 |
| டி. ஒபுலி | சுயேச்சை | 910 |
| பி. நடேசன் | காங்கிரஸ் | 13,976 |
| எம். மடலைமுத்து | சுயேச்சை | 530 |
| ஜி. ஏ. வடிவேலு | ஜனதா | 13,448 |

## 85. தாரமங்கலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,229 |
| பதிவான வாக்குகள் | : | 70,477 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,041 |
| செல்லாத வாக்குகள் | : | 1,436 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். நாராயணன் | இ. தே. காங்கிரஸ் | 23,882 |
| கே. ராஜகோபால் | சுயேச்சை | 935 |
| கே. ஆர். கோவிந்தன் | தி.மு.க. | 9,020 |
| எஸ். செம்மலை | அ.இ.அ.தி.மு.க. | 23,863 |
| என். பெருமாள் கவுண்டர் | சுயேச்சை | 917 |
| டி. எம். ராமசாமி கவுண்டர் | ஜனதா | 10,073 |
| பி. எம். வடிவேலு கவுண்டர் | சுயேச்சை | 351 |

## 86. ஓமலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,02,047 |
| பதிவான வாக்குகள் | : | 62,697 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 61,699 |
| செல்லாத வாக்குகள் | : | 998 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். சிவபெருமாள் | அ.இ.அ.தி.மு.க. | 26,342 |
| எஸ். ஆண்டியப்பன் | சுயேச்சை | 335 |
| ஓ. கே. கருணாநிதி | சுயேச்சை | 1,796 |
| எஸ். குப்புசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 8,263 |
| எம். கோவிந்தன் | ஜனதா | 13,824 |
| சி. மாரிமுத்து | தி.மு.க. | 11,139 |

## 87. ஏர்க்காடு (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 91,099 |
| பதிவான வாக்குகள் | : | 48,615 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 47,810 |
| செல்லாத வாக்குகள் | : | 805 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். காளியப்பன் | அ.இ.அ.தி.மு.க. | 20,219 |
| பி.கே. சின்னசாமி | காங்கிரஸ் | 8,302 |
| வி. சின்னசாமி | தி.மு.க. | 13,444 |
| எம். ஏ. மணி | ஜனதா | 5,845 |

## 88. சேலம்-I

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள | : | 1,46,078 |
| பதிவான வாக்குகள் | : | 91,423 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 90,844 |
| செல்லாத வாக்குகள் | : | 579 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். வி. வரதராஜன் | அ.இ.அ.தி.மு.க. | 34,708 |
| திருமதி தைலம்மாள் | சுயேச்சை | 71 |
| கே. மாதவன் | காங்கிரஸ் | 8,135 |
| எஸ். எஸ். மகாதேவ முதலியார் | ஜனதா | 26,046 |
| பி. எஸ். மாணிக்கம் | தி.மு.க. | 21,093 |
| எஸ். கே. முத்தையா | சுயேச்சை | 249 |
| பி. எஸ். வேணுகோபால் | சுயேச்சை | 261 |
| எஸ். ஜோதீஸ்வரன் | சுயேச்சை | 281 |

## 89. சேலம்-II

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,37,557 |
| பதிவான வாக்குகள் | : | 72,774 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,063 |
| செல்லாத வாக்குகள் | : | 711 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஆறுமுகம் | ஜனதா | 22,636 |
| கே. எஸ். அர்த்தநாரி | மார்க்சிஸ்ட் கம்யூ. | 19,173 |
| கே. வி. ராமசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 9,731 |
| கே. ஏ. தங்கவேலு | தி.மு.க. | 20,523 |

## 90. வீரபாண்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,964 |
| பதிவான வாக்குகள் | : | 72,163 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,140 |
| செல்லாத வாக்குகள் | : | 1,023 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. வெங்கா கவுண்டர் | அ.இ.அ.தி.மு.க. | 31,920 |
| பி. சி. குழந்தைவேலு | ஜனதா | 9,898 |
| டி. வி. திருமலை | காங்கிரஸ் | 10,777 |
| எம். முத்துசாமி | தி.மு.க. | 18,144 |
| ஆர். விருப்பண்ணன் | சுயேச்சை | 401 |

## 91. பனமரத்துப்பட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,129 |
| பதிவான வாக்குகள் | : | 62,325 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 61,444 |
| செல்லாத வாக்குகள் | : | 881 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். சுப்பராயன் | அ.இ.அ.தி.மு.க. | 27,676 |
| என். எம். அர்ஜுனன் | காங்கிரஸ் | 9,140 |
| எஸ். சி. கஞ்சமலை | தி.மு.க. | 14,478 |
| ஆர். கோவிந்தன் | ஜனதா | 10,150 |

## 92. ஆத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,029 |
| பதிவான வாக்குகள் | : | 64,930 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 63,899 |
| செல்லாத வாக்குகள் | : | 1,031 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| சி. பழனிமுத்து | இ. தே. காங்கிரஸ் | 19040 |
| பி. கந்தசாமி | அ.இ.அ.தி.மு.க. | 18,693 |
| ஏ. எஸ். சின்னசாமி | ஜனதா | 16,860 |
| டி. பெருமாள் | தி.மு.க. | 9,306 |

## 93. தலைவாசல் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,33,495 |
| பதிவான வாக்குகள் | : | 69,261 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,933 |
| செல்லாத வாக்குகள் | : | 1,328 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். எம். ராஜு | அ.இ.அ.தி.மு.க. | 24,681 |
| கே. கலியபெருமாள் | காங்கிரஸ் | 19,004 |
| கே. ஆர். தங்கவேல் | தி.மு.க. | 13,603 |
| சி. வீரமணி | ஜனதா | 10,645 |

## 94. ராசிபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,007 |
| பதிவான வாக்குகள் | : | 78,261 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,425 |
| செல்லாத வாக்குகள் | : | 836 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. துரைசாமி** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **33,762** |
| கே. ஆர். அத்தியப்ப கவுண்டர் | சுயேச்சை | 471 |
| எம். ஆறுமுகம் | சுயேச்சை | 1,186 |
| பி. ராமசாமி | ஜனதா | 11,830 |
| ஆர். காளியப்பன் | காங்கிரஸ் | 10,498 |
| கே. பி. சித்தையா செட்டி | சுயேச்சை | 304 |
| கே. சி.. பெரியசாமி | தி.மு.க. | 19,374 |

## 95. சேந்தமங்கலம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,719 |
| பதிவான வாக்குகள் | : | 64,802 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 63,712 |
| செல்லாத வாக்குகள் | : | 1,090 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **வி. சின்னசாமி** ... | **அ.இ.அ.தி.மு.க.** | **28,731** |
| எம். ஆர். காளி கவுண்டர் | சுயேச்சை | 1,462 |
| சக்கரவர்த்தி துரைசாமி | ஜனதா | 9,752 |
| சின்ன வெள்ளையன் | தி.மு.க. | 9,886 |
| எஸ். வடமா கவுண்டர் | காங்கிரஸ் | 13,881 |

## 96. நாமக்கல் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,29,817 |
| பதிவான வாக்குகள் | : | 79,774 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 78,720 |
| செல்லாத வாக்குகள் | : | 1,050 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். அருணசலம்** ... | **அ.இ.அ.தி.மு.க.** | **31,952** |
| வி. கே. ராமசாமி | காங்கிரஸ் | 14,564 |
| ஆர். கந்தசாமி | ஜனதா | 12 729 |
| சண்முக மூப்பன் | சுயேச்சை | 1,699 |
| சின்னு பகடை | சுயேச்சை | 338 |
| பி. வீரப்பன் | சுயேச்சை | 223 |
| கே. வேலுசாமி | தி.மு.க. | 17,215 |

## 97. கபிலர்மலை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,322 |
| பதிவான வாக்குகள் | : | 83,621 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 82,622 |
| செல்லாத வாக்குகள் | : | 999 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. செங்கோடன்** ... | **அ.இ.அ.தி.மு.க.** | **30,194** |
| அருணகிரி | சுயேச்சை | 11,785 |
| பி. ஆர். குமாரமங்கலம் | காங்கிரஸ் | 11,621 |
| எஸ். பரமசிவம் | ஜனதா | 18,798 |
| ஏ. மணி | சுயேச்சை | 587 |
| வி. மணிவாசகம் | தி.மு.க. | 9,637 |

## 98. திருச்செங்கோடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,64,330 |
| பதிவான வாக்குகள் | : | 98,030 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 96,513 |
| செல்லாத வாக்குகள் | : | 1,517 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சி. பொன்னையன்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **44,501** |
| எஸ். ராமசாமி நாயக்கர் | சுயேச்சை | 605 |
| டி. எம். காளியண்ணன் | காங்கிரஸ் | 16,177 |
| வி. குமாரசாமி | ஜனதா | 17,764 |
| டி. சங்கரன் பிள்ளை | சுயேச்சை | 665 |
| டி. கே. சண்முகம் | தி.மு.க. | 14,433 |
| ஆர். சாமி | சுயேச்சை | 1,223 |
| என். சுப்பிரமணியம் | சுயேச்சை | 1,145 |

## 99. சங்ககிரி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,42,856 |
| பதிவான வாக்குகள் | : | 62,686 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 61,530 |
| செல்லாத வாக்குகள் | : | 1,156 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **தனபால்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **32,780** |
| பரமானந்தம் | தி.மு.க. | 11,751 |
| பழனிசாமி | சுயேச்சை | 1,224 |
| மாணிக்கம் | சுயேச்சை | 1,161 |
| முத்துசாமி | சுயேச்சை | 358 |
| முத்துசாமி | ஜனதா | 9,131 |
| வேல்ராஜ் | காங்கிரஸ் | 5,125 |

## 100. இடைப்பாடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,34,924 |
| பதிவான வாக்குகள் | : | 81,729 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,558 |
| செல்லாத வாக்குகள் | : | 1,171 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஐ. கணேசன்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **31,063** |
| ஏ. ஆறுமுகம் | தி.மு.க. | 11,695 |
| டி. நடராஜன் | காங்கிரஸ் | 24,256 |
| பி. ஜெயதேவன் | ஜனதா | 13,544 |



# கோவை மாவட்டம்

## 101. மேட்டுப்பாளையம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,35,224 |
| பதிவான வாக்குகள் | : | 81,757 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,410 |
| செல்லாத வாக்குகள் | : | 1,347 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். பழனிச்சாமி ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **26,029** |
| ஓ. ஆறுமுகசாமி | தி.மு.க. | 11.757 |
| எம். கே. கெம்பே கவுடர் | காங்கிரஸ் | 19,604 |
| ஜி. என். சண்முகம் | சுயேச்சை | 817 |
| வி. சுப்பிரமணி | சுயேச்சை | 1,121 |
| டி. பி. எஸ். திப்பையா | ஜனதா | 20717 |
| எம். நாகப்பன் | சுயேச்சை | 284 |
| ஆர். மல்லிகார்ஜுனன் | சுயேச்சை | 81 |

## 102. அவினாசி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,22,608 |
| பதிவான வாக்குகள் | : | 71,384 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,907 |
| செல்லாத வாக்குகள் | : | 1,477 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். என். பழனிச்சுவாமி ....** | **இ. தே. காங்கிரஸ்** | **22,550** |
| அண்ணநம்பி | அ.இ.அ.தி.மு.க. | 20,803 |
| ஜி. இளங்கோ | சுயேச்சை | 1.087 |
| டி. எஸ். சின்னசாமி | சுயேச்சை | 917 |
| பி. சின்னன் | தி.மு.க. | 9,431 |
| பி. பெருமாள் | ஜனதா | 15,119 |

## 103. தொண்டாமுத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,64,344 |
| பதிவான வாக்குகள் | : | 96,645 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 95,207 |
| செல்லாத வாக்குகள் | : | 1,438 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. மருதாசலம் ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **31,690** |
| கே. காளியண்ண கவுண்டர் | சுயேச்சை | 559 |
| டி. எம். பழனிசாமி | காங்கிரஸ் | 15,865 |
| ஆர். மாணிக்கவாசகம் | தி.மு.க. | 24,195 |
| ஜி. ராமசாமி | சுயேச்சை | 319 |
| வி. கே. லட்சுமணன் | ஜனதா | 22,579 |

## 104. சிங்காநல்லூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,34,190 |
| பதிவான வாக்குகள் | : | 93,552 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 92,337 |
| செல்லாத வாக்குகள் | : | 1,215 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **வெங்கிடு என்கிற ஆர். வெங்கடசாமி ....** | **மார்க். கம்யூனிஸ்ட்** | **25,820** |
| ஏ. சுப்பிரமணியம் | காங்கிரஸ் | 20,978 |
| ஆர். சேங்காளியப்பன் | ஜனதா | 24,024 |
| எஸ். எஸ். ராமசாமி | சுயேச்சை | 853 |
| எஸ். வீராசாமி | தி.மு.க. | 20,662 |

## 105. கோயம்புத்தூர் மேற்கு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,24,577 |
| பதிவான வாக்குகள் | : | 76,119 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,389 |
| செல்லாத வாக்குகள் | : | 730 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சி. அரங்கநாயகம் ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **27,742** |
| ஏ. அழகிரிசாமி | ஜனதா | 17,942 |
| கிருஷ்ணவேணி | சுயேச்சை | 96 |
| துரைராஜ் | சுயேச்சை | 962 |
| ஆர். பழனிசாமி | சுயேச்சை | 169 |
| பி. எஸ். முகமது அலி | தி.மு.க. | 20,393 |
| ஆர். எஸ். வேலன் | காங்கிரஸ் | 8,085 |

## 106. கோயம்புத்தூர் கிழக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,664 |
| பதிவான வாக்குகள் | : | 68,770 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,114 |
| செல்லாத வாக்குகள் | : | 656 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. ரமணி ....** | **மார்க். கம்யூனிஸ்ட்** | **20,803** |
| கே. அரங்கநாதன் | தி.மு.க. | 18,784 |
| கே. பழனிசாமி | சுயேச்சை | 407 |
| எஸ். ராமசாமி | காங்கிரஸ் | 13,877 |
| கே. கே. வடிவேலு | சுயேச்சை | 194 |
| கே. ஆர். வெங்கடாசலம் | ஜனதா | 14,049 |

## 107. பேரூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,37,887 |
| பதிவான வாக்குகள் | : | 87,630 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 86,429 |
| செல்லாத வாக்குகள் | : | 1,201 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஏ. நடராஜன் ....** | **தி. மு. க. ....** | **29,158** |
| எஸ். டி. சிங்காரவேலு | சுயேச்சை | 108 |
| சின்னதுரை | ஜனதா | 14,539 |
| எம். நஞ்சப்பன் | மார்க்சிஸ்ட் கம்யூ. | 26,328 |
| ஏ. பழனிசாமி | சுயேச்சை | 343 |
| ஏ. பழனிசாமி | சுயேச்சை | 203 |
| மயில்சாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 15,415 |
| ஏ. பி. ராஜு | சுயேச்சை | 335 |

## 108. கிணத்துக்கடவு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,290 |
| பதிவான வாக்குகள் | : | 72,972 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,344 |
| செல்லாத வாக்குகள் | : | 1,628 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. வி. கந்தசாமி ...** | **அ.இ.அ.தி.மு.க.** | **25,909** |
| எம். கண்ணப்பன் | தி.மு.க. | 20,589 |
| சுப்பு கவுண்டர் | ஜனதா | 6,761 |
| எஸ். டி. துரைசாமி | காங்கிரஸ் | 18,085 |

## 109. பொள்ளாச்சி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,27,400 |
| பதிவான வாக்குகள் | : | 78,721 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,364 |
| செல்லாத வாக்குகள் | : | 1,357 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஓ. பி. சோமசுந்தரம்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **34,896** |
| சி. சண்முகசுந்தரம் | சுயேச்சை | 474 |
| என். சுந்தரம் | சுயேச்சை | 133 |
| ஆர். சுபோதானந்தம் | சுயேச்சை | 287 |
| கே. சேது | சுயேச்சை | 408 |
| ஆர். நடராஜன் | ஜனதா | 10,677 |
| எம். கே. பழனிசாமி | காங்கிரஸ் | 12,537 |
| எஸ். ராஜு | தி.மு.க. | 17,952 |

## 110. வால்பாறை (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,590 |
| பதிவான வாக்குகள் | : | 62,160 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 61,215 |
| செல்லாத வாக்குகள் | : | 945 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். எஸ். தங்கவேல்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **20,926** |
| ஏ. டி. கருப்பையா | இந்திய கம்யூனிஸ்ட் | 16,241 |
| எம். குப்புசாமி | ஜனதா | 7,098 |
| டி. எம். சண்முகம் | தி.மு.க. | 16,008 |
| எஸ். செல்லையா | சுயேச்சை | 401 |
| குமாரசாமி என்கிற ஜேம்ஸ் | சுயேச்சை | 188 |
| எம். ஆர். நடராஜன் | சுயேச்சை | 162 |
| எம். வேலுசாமி | சுயேச்சை | 191 |

## 111. உடுமலைப்பேட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,22,735 |
| பதிவான வாக்குகள் | : | 85,157 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 83,774 |
| செல்லாத வாக்குகள் | : | 1,383 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. குழந்தைவேலு** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **28,737** |
| யு. கே. பி. நடராஜன் | ஜனதா | 24,619 |
| ஆர். டி. மாரியப்பன் | தி.மு.க. | 21,015 |
| எம். லிங்கசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 9,403 |

## 112. தாராபுரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,006 |
| பதிவான வாக்குகள் | : | 60,840 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 59,627 |
| செல்லாத வாக்குகள் | : | 1,213 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். அய்யாச்சாமி** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **18,884** |
| டி. ஜி. ராஜேந்திரன் | தி.மு.க. | 14,187 |
| ஏ. கே. சிவலிங்கம் | காங்கிரஸ் | 16,202 |
| கே. நாகராஜன் | சுயேச்சை | 1,123 |
| ஏ. கே. பாலகிருஷ்ணன் | சுயேச்சை | 3,255 |
| ஏ. முனியப்பன் | ஜனதா | 5,976 |

## 113. வெள்ளக்கோயில்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,181 |
| பதிவான வாக்குகள் | : | 83,308 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 82,248 |
| செல்லாத வாக்குகள் | : | 1,060 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **டி. ராமசாமி** .... | **இ. தே. காங்கிரஸ்** | **30,996** |
| வி. கே. கலைமணி | அ.இ.அ.தி.மு.க. | 19,816 |
| கே. ஏ. நல்லமுத்து | சுயேச்சை | 1,365 |
| எம். பழனிசாமி | தி.மு.க. | 20,676 |
| எஸ். ராமசாமி நம்பியார் | ஜனதா | 8,306 |
| கே. என். லிங்கசாமி கவுண்டர் | சுயேச்சை | 1,089 |

## 114. பொங்கலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,180 |
| பதிவான வாக்குகள் | : | 63,930 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 62,416 |
| செல்லாத வாக்குகள் | : | 1,514 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. நாச்சிமுத்து** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **20,324** |
| ஆறுமுகக் கவுண்டர் | சுயேச்சை | 276 |
| சின்ன நாச்சிமுத்து கவுண்டர் | சுயேச்சை | 1,720 |
| எல். தெய்வசிகாமணி | ஜனதா | 6,667 |
| என். பழனிசாமி | தி.மு.க. | 12,944 |
| எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் | காங்கிரஸ் | 18,769 |
| எஸ். முத்துசாமி | சுயேச்சை | 886 |
| வி. முருகன் | சுயேச்சை | 830 |

## 115. பல்லடம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,740 |
| பதிவான வாக்குகள் | : | 83,411 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 82,068 |
| செல்லாத வாக்குகள் | : | 1,343 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. ஜி. கிட்டு** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **27,127** |
| ஆர். சி. கந்தசாமி | தி.மு.க. | 14,658 |
| ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் | ஜனதா | 19,379 |
| கே. என். குமாரசாமி கவுண்டர் | காங்கிரஸ் | 20,175 |
| சி. சின்னையா கவுண்டர் | சுயேச்சை | 684 |

## 116. திருப்பூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,40,401 |
| பதிவான வாக்குகள் | : | 95,743 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 94,781 |
| செல்லாத வாக்குகள் | : | 962 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். மணிமாறன்** .... | **அ.இ.அ.தி.மு.க.** | **38,984** |
| ஏ. கணபதி | இந்திய கம்யூனிஸ்ட் | 24,569 |
| எஸ். துரைசாமி | தி.மு.க. | 16,414 |
| என். நடராஜன் | சுயேச்சை | 507 |
| என். சின்னகுட்டி என்கிற பழனிசாமி | சுயேச்சை | 532 |
| கே. வேலுசாமி | ஜனதா | 13,775 |

## 117 காங்கேயம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,068 |
| பதிவான வாக்குகள் | : | 76,343 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,223 |
| செல்லாத வாக்குகள் | : | 1,120 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். கே. எஸ். தண்டபாணி .... | அ.இ.அ.தி.மு.க. | 31,665 |
| எம். அர்ஜுனன் | ஜனதா | 6,883 |
| சிவசபாபதி | தி.மு.க. | 18,498 |
| கே. ஜி. சுப்பையா கவுண்டர் | காங்கிரஸ் | 15,935 |
| சுப்பிரமணியம் | சுயேச்சை | 1,412 |
| எம். நாச்சிமுத்து | சுயேச்சை | 830 |

## 118. மொடக்குறிச்சி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,34,149 |
| பதிவான வாக்குகள் | : | 86,359 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 85,083 |
| செல்லாத வாக்குகள் | : | 1,276 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| திருமதி சுப்புலட்சுமி .... | அ.இ.அ.தி.மு.க. | 38,072 |
| எம். ஆறுமுகம் | ஜனதா | 12,955 |
| ஏ. கணேசமூர்த்தி | தி.மு.க. | 15,200 |
| எஸ். சண்முகசுந்தரம் | சுயேச்சை | 3,538 |
| ஆர். சாய்நாதன் | காங்கிரஸ் | 11,462 |
| எம். பாரதி | சுயேச்சை | 424 |
| வி. பொன்னன் | சுயேச்சை | 159 |
| எம். முருகேசன் | சுயேச்சை | 473 |
| எஸ். ரங்கசாமி | சுயேச்சை | 516 |
| எம். ராமன் | சுயேச்சை | 2,284 |

## 119. பெருந்துறை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | : | 1,27,223 |
| பதிவான வாக்குகள் | : | 77,660 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,607 |
| செல்லாத வாக்குகள் | : | 1,053 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டாக்டர் ஏ. பொன்னுசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 30,574 |
| கே. ராமலிங்கம் | ஜனதா | 12,803 |
| ஆர். கந்தசாமி | தி.மு.க. | 5,946 |
| எம். சென்னி | சுயேச்சை | 2,752 |
| எம். கே. பழனிசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 24,532 |

## 120. ஈரோடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,52,823 |
| பதிவான வாக்குகள் | : | 89,078 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 88,118 |
| செல்லாத வாக்குகள் | : | 960 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| முத்துசாமி .. | அ.இ.அ.தி.மு.க. | 37,968 |
| குருநாத முதலியார் | சுயேச்சை | 277 |
| சேட் கேசவலால் காளிதாஸ் | சுயேச்சை | 935 |
| சுப்பிரமணியன் | தி.மு.க. | 20,381 |
| திருமலைராஜன் | இந்திய கம்யூனிஸ்ட் | 12,995 |
| நல்லசிவம் | ஜனதா | 15,401 |
| மாணிக்கம் | சுயேச்சை | 153 |

## 121. பவானி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,262 |
| பதிவான வாக்குகள் | : | 74,210 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,191 |
| செல்லாத வாக்குகள் | : | 1,019 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஆர். சௌந்தரராஜன்.... | அ.இ.அ.தி.மு.க. | 22,989 |
| ஜி. குருமூர்த்தி | ஜனதா | 19,013 |
| எஸ். என். பாலசுப்பிரமணியம் | காங்கிரஸ் | 16,931 |
| என். கே. கே. பெரியசாமி | தி.மு.க. | 14,258 |

## 122 அந்தியூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,01,515 |
| பதிவான வாக்குகள் | : | 57,454 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 56,406 |
| செல்லாத வாக்குகள் | : | 1,048 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. குருசாமி ... | அ.இ.அ.தி.மு.க. | 23,950 |
| அரன் | சுயேச்சை | 388 |
| டி. சிவலிங்கம் | சுயேச்சை | 1,283 |
| ஏ. பழனி | ஜனதா | 11,423 |
| திருமதி வி. பி. பழனியம்மாள் | தி.மு.க. | 10,099 |
| கே. சி. ராசு | காங்கிரஸ் | 9,080 |
| ஜி.ஜே.ராஜு | சுயேச்சை | 183 |

## 123 கோபி செட்டிப்பாளையம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,15,661 |
| பதிவான வாக்குகள் | : | 74,317 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,329 |
| செல்லாத வாக்குகள் | : | 988 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. என். கே. ராமசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 25,660 |
| ஜி. எஸ். லட்சுமணன் | ஜனதா | 16,466 |
| கே. என். குழந்தைவேல் | சுயேச்சை | 956 |
| எம். கே. சண்முகம் | சுயேச்சை | 768 |
| என். ஆர். திருவேங்கடம் | காங்கிரஸ் | 19,248 |
| ஜி. ஏ. விரையா | சுயேச்சை | 338 |
| ஜி. பி. வெங்கிடு | தி.மு.க. | 9,893 |

## 124. பவானிசாகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,862 |
| பதிவான வாக்குகள் | : | 72,369 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,052 |
| செல்லாத வாக்குகள் | : | 1,217 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. கே. சின்னசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 23,078 |
| கருப்பண்ணன் | ஜனதா | 13,027 |
| எஸ். வி. கிருஷ்ணசாமி | சுயேச்சை | 475 |
| திருமதி சம்பூர்ணம் சாமிநாதன் | தி.மு.க. | 21,631 |
| எஸ். சி. பழனிசாமி | சுயேச்சை | 149 |
| பாரதி | சுயேச்சை | 207 |
| மாகாளி | சுயேச்சை | 623 |
| மாறன் | சுயேச்சை | 176 |
| பி. கே. மாரிசாமி | காங்கிரஸ் | 11,428 |
| பி. எஸ். ரங்கசாமி | சுயேச்சை | 258 |

## 125. சத்தியமங்கலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,350 |
| பதிவான வாக்குகள் | : | 60,149 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 59,046 |
| செல்லாத வாக்குகள் | : | 1,109 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ஏ. செங்கோட்டையன் .... | அ.இ.அ.தி.மு.க. | 21,145 |
| டி. எம். ஒண்ணமாரண்ணன் | தி.மு.க. | 10,250 |
| என். என். நாகராஜ் | ஜனதா | 7,054 |
| பி. முத்திருளாண்டி | சுயேச்சை | 952 |
| சி. ஆர். ராஜப்பா | காங்கிரஸ் | 19,639 |

# நீலகிரி மாவட்டம்

## 126. கூனூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,169 |
| பதிவான வாக்குகள் | : | 54,344 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 53,505 |
| செல்லாத வாக்குகள் | : | 839 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ரெங்கசாமி ... | தி. மு. க. .... | 22,649 |
| சி. பி. கிருஷ்ணையா | ஜனதா | 7,888 |
| எல். கோமளா | சுயேச்சை | 341 |
| ஏ. சண்முகம் | சுயேச்சை | 144 |
| கே. சந்திரன் | காங்கிரஸ் | 8 829 |
| ஏ. செல்லையா | சுயேச்சை | 2 57 |
| சி. பெரியசாமி .. | அ.இ.அ.தி.மு.க. | 13,150 |
| ஆர். முத்துஸ்வாமி | சுயேச்சை | 37 |
| எம். ஆர். ராமசாமி | சுயேச்சை | 210 |

## 127. உதகமண்டலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,04,067 |
| பதிவான வாக்குகள் | : | 63,431 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 62,652 |
| செல்லாத வாக்குகள் | : | 779 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. கோபாலன் .... | அ.இ.அ.தி.மு.க. | 18,134 |
| கே. கருப்பசாமி | தி.மு.க. | 18,005 |
| டாக்டர் ஏ. மணியன் | ஜனதா | 16,946 |
| டாக்டர் எம். பி. ராமன் | காங்கிரஸ் | 9,567 |

## 128. கூடலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 93,409 |
| பதிவான வாக்குகள் | : | 59,346 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 58,276 |
| செல்லாத வாக்குகள் | : | 1,070 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. உச்சி .... | தி. மு. க. .... | 15,323 |
| சி. ஐ. அல்லா பிச்சை | சுயேச்சை | 14,963 |
| கே. எம். ஹிரியா கௌடர் | ஜனதா | 6,915 |
| கே. கல்லன் | காங்கிரஸ் | 10,196 |
| வி. என். கிருஷ்ணன் குட்டி நாயர் | சுயேச்சை | 291 |
| ஆர். குப்புசாமி | சுயேச்சை | 1,014 |
| வி. குமரன் | சுயேச்சை | 133 |
| கே. கோபாலகிருஷ்ணன் நாயர் | சுயேச்சை | 2,406 |
| கே. ஆர். சண்முகசுந்தரம் | சுயேச்சை | 128 |
| வி. சிவராமன் | சுயேச்சை | 188 |
| என். ஜே. செரியன் வங்கில் | சுயேச்சை | 1,107 |
| கே. பேபி | சுயேச்சை | 5,364 |
| கே. ராமன் குட்டி | சுயேச்சை | 248 |

# மதுரை மாவட்டம்:

## 129. பழனி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,061 |
| பதிவான வாக்குகள் | : | 69,939 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,954 |
| செல்லாத வாக்குகள் | : | 985 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். பழனிவேல் .... | மார்க். கம்யூனிஸ்ட் | 23,810 |
| கே. கிருஷ்ணமூர்த்தி | தி.மு.க. | 17,012 |
| ஐ. பத்ரகாளி | ஜனதா | 7,662 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | சுயேச்சை | 504 |
| எஸ். ஆர். பி. மணி | காங்கிரஸ் | 19,966 |

## 130. ஒட்டன்சத்திரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,168 |
| பதிவான வாக்குகள் | : | 73,850 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,804 |
| செல்லாத வாக்குகள் | : | 1,046 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பழனியப்பக் கவுண்டர் .... | இ. தே. காங்கிரஸ் | 27,000 |
| கல்யாணசாமி | சுயேச்சை | 692 |
| காத்தமுத்து | சுயேச்சை | 1,696 |
| காளியப்பன் | ஜனதா | 5,925 |
| குப்புசாமி | அ.இ.அ.தி.மு.க. | 22,419 |
| முத்துசாமி | தி.மு.க. | 15,072 |

## 131. பெரியகுளம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,238 |
| பதிவான வாக்குகள் | : | 69,649 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,720 |
| செல்லாத வாக்குகள் | : | 929 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பண்ணை சேதுராமன் .... | அ.இ.அ.தி.மு.க. | 31,271 |
| ராமய்யா | காங்கிரஸ் | 16,948 |
| மேத்தா | தி.மு.க. | 13,069 |
| ராமசாமி | ஜனதா | 7,432 |

## 132. தேனி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,801 |
| பதிவான வாக்குகள் | : | 77,761 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,906 |
| செல்லாத வாக்குகள் | : | 855 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. ஆர். ஜெயராமன் .. | அ.இ.அ.தி.மு.க. | 35,152 |
| ராமசதாசிவம் | சுயேச்சை | 685 |
| கே. டி. எல். ராமசாமி | ஜனதா | 10,521 |
| என். வெங்கடராமானுஜன் | காங்கிரஸ் | 11,969 |
| எஸ். வேலுசாமி | தி.மு.க. | 18,579 |

## 133. போடிநாயக்கனூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,22,348 |
| பதிவான வாக்குகள் | : | 71,325 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,584 |
| செல்லாத வாக்குகள் | : | 741 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. ராமதாஸ் .... | அ.இ.அ.தி.மு.க. | 29,022 |
| கே. எஸ். எம். ராமச்சந்திரன் | காங்கிரஸ் | 20,030 |
| டி. கோவிந்தராஜ் | ஜனதா | 14,625 |
| எம். முத்துசாமி | தி.மு.க. | 6,907 |

## 135. ஆண்டிப்பட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,15,363 |
| பதிவான வாக்குகள் | : | 71,743 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,649 |
| செல்லாத வாக்குகள் | : | 1,094 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. கந்தசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 24,311 |
| என். வி. குருசாமி | ஜனதா | 16,269 |
| டி. பாண்டியன் | இந்திய கம்யூனிஸ்ட் | 14,255 |
| ஏ. வெற்றிவேந்தன் | தி.மு.க. | 15,814 |

## 134. கம்பம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,579 |
| பதிவான வாக்குகள் | : | 85,080 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 84,109 |
| செல்லாத வாக்குகள் | : | 971 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. கே. ஆர். சந்திரசேகரன்.... | அ.இ.அ.தி.மு.க. | 34,902 |
| எஸ். அப்துல் காதர் மரைக் காயர் | காங்கிரஸ் | 11,329 |
| கே. சுருளிவேலு | சுயேச்சை | 465 |
| என். நடராஜன் | தி.மு.க. | 34,080 |
| எஸ். என். பொன்னுச்சாமி | சுயேச்சை | 477 |
| சி. கே. ஜெயப்பிரகாஷ் | ஜனதா | 2,856 |

## 136. சேடப்பட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,328 |
| பதிவான வாக்குகள் | : | 65,408 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 64,429 |
| செல்லாத வாக்குகள் | : | 979 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். முத்தையா .... | அ.இ.அ.தி.மு.க. | 28,040 |
| ஏ. ஆர். பி. அழகர்சாமி | காங்கிரஸ் | 17,018 |
| சங்கரநாராயணன் | ஜனதா | 4,909 |
| ஆர். எஸ். தங்கராசன் | தி.மு.க. | 11,687 |
| ஆர். அப்பன் என்ற பெரிய கருப்பன் | சுயேச்சை | 2,775 |

## 137. திருமங்கலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,967 |
| பதிவான வாக்குகள் | : | 67,253 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,582 |
| செல்லாத வாக்குகள் | : | 671 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| செல்வி பி. டி. சரஸ்வதி .... | அ.இ.அ.தி.மு.க. | 29,493 |
| பு. எம். கண்ணுச்சாமி | தி.மு.க. | 3,948 |
| என். எஸ். வி. சித்தன் | காங்கிரஸ் | 27,720 |
| எம். பால்சாமித் தேவர் | ஜனதா | 3,901 |
| ஆர். ஜகந்நாதன் | சுயேச்சை | 1,520 |

## 139. நிலக்கோட்டை (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,541 |
| பதிவான வாக்குகள் | : | 56,044 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 55,275 |
| செல்லாத வாக்குகள் | : | 769 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. பாலுசாமி ... | அ.இ.அ.தி.மு.க. | 28,296 |
| எஸ். கே. பி. பாலுசாமி | ஜனதா | 8,378 |
| எம். முத்துப் பெரியசாமி | காங்கிரஸ் | 9,799 |
| ஏ. முனியாண்டி | தி.மு.க. | 8,802 |

## 138. உசிலம்பட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,961 |
| பதிவான வாக்குகள் | : | 57,625 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 57,084 |
| செல்லாத வாக்குகள் | : | 541 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. கே. மூக்கையா தேவர்.... | பார்வார்டு பிளாக் | 35,361 |
| டி. கே. பி. ரத்தினம் | தி.மு.க. | 4,356 |
| கே. என். ஏ. நடராஜன் | ஜனதா | 5,034 |
| என். எஸ். பொன்னையா | காங்கிரஸ் | 11,422 |
| திருமதி ஆர். வீரம்மாள் | சுயேச்சை | 911 |

## 140. சோழவந்தான்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,271 |
| பதிவான வாக்குகள் | : | 75,732 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,879 |
| செல்லாத வாக்குகள் | : | 853 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. பாலகுருவரெட்டியார் .... | அ.இ.அ.தி.மு.க. | 29,968 |
| எஸ். ஏடகநாதன் | ஜனதா | 2,772 |
| ஏ. சந்திரசேகரன் | காங்கிரஸ் | 23,455 |
| எஸ். சுந்தரமகாலிங்கம் | சுயேச்சை | 903 |
| சி. துரைப்பாண்டி | தி.மு.க. | 17,781 |

## 141. திருப்பரங்குன்றம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,39,136 |
| பதிவான வாக்குகள் | : | 82,553 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 81,778 |
| செல்லாத வாக்குகள் | : | 775 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. காளிமுத்து .... | அ.இ.அ.தி.மு.க. | 33,850 |
| எம். ரத்தினம் | சுயேச்சை | 3,981 |
| சி. காவேரிமணியம் | தி.மு.க. | 14,834 |
| இ. சுப்புத் தேவர் | சுயேச்சை | 494 |
| எஸ். துரைராஜ் | சுயேச்சை | 251 |
| வி. பழனியாண்டி அம்பலம் | காங்கிரஸ் | 15,760 |
| சி. மகாராஜன் | ஜனதா | 12,188 |
| எஸ். ஆர்.ரத்தினம் | சுயேச்சை | 420 |

## 142. மதுரை (மேற்கு)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,40,580 |
| பதிவான வாக்குகள் | : | 75,808 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,103 |
| செல்லாத வாக்குகள் | : | 705 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. பி. எம். பெரியசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 32,342 |
| கே. சி. காமராஜ் | ஜனதா | 13,168 |
| கே. டி. கே. தங்கமணி | இந்திய கம்யூ. | 12,190 |
| பொன். முத்துராமலிங்கம் | தி.மு.க. | 16,211 |
| மாயாண்டி | பார்வர்டு ப்ளாக் | 1,192 |

## 143. மதுரை (மத்தி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,37,125 |
| பதிவான வாக்குகள் | : | 74,334 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,687 |
| செல்லாத வாக்குகள் | : | 647 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். லட்சுமிநாராயணன் .... | அ.இ.அ.தி.மு.க. | 29,399 |
| ஏ. ரத்தினம் | காங்கிரஸ் | 16,420 |
| ஜே. எஸ். கோபாலாச்சாரி | சுயேச்சை. | 249 |
| எஸ். சுகுமாரன் | ஜனதா | 12,780 |
| எஸ். பாண்டி | தி.மு.க. | 14,676 |
| ஜி. லட்சுமணசுப்பராஜுலு | சுயேச்சை | 163 |

## 144. மதுரை (கிழக்கு)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,951 |
| பதிவான வாக்குகள் | : | 73,183 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,539 |
| செல்லாத வாக்குகள் | : | 644 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். சங்கரய்யா .... | மார்க். கம்யூனிஸ்ட் | 24,263 |
| ஜே. எஸ். கிருஷ்ணன் (ஜானகி) | சுயேச்சை | 217 |
| எம். ஆர். சங்கரன் | தி.மு.க. | 9,644 |
| ஆர். வி. சித்தா | சுயேச்சை | 508 |
| ஏ. ஜி. சுப்புராமன் | காங்கிரஸ் | 22,278 |
| ஆர். வி. சேஷாச்சாரி | ஜனதா | 15,649 |

## 145. சமயநல்லூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,30,768 |
| பதிவான வாக்குகள் | : | 77,501 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,448 |
| செல்லாத வாக்குகள் | : | 1,053 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். செல்வராஜ் .... | அ.இ.அ.தி.மு.க. | 34,019 |
| சி. கருத்தண்ணன் | காங்கிரஸ் | 19,658 |
| எஸ். கார்மேகம் | சுயேச்சை | 343 |
| பி. சுபாஷ் சந்திரபோஸ் | தி.மு.க. | 11,484 |
| பி. செல்வராஜ் | சுயேச்சை | 685 |
| எம். கக்கன் | சுயேச்சை | 526 |
| பி. வடிவேலு | ஜனதா | 9,733 |

## 146. மேலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,30,502 |
| பதிவான வாக்குகள் | : | 92,853 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 91,794 |
| செல்லாத வாக்குகள் | : | 1,059 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. எம். பரமசிவம் .... | அ.இ.அ.தி.மு.க. | 33,111 |
| சி. சேதுராமன் | ஜனதா | 3,396 |
| மலைச்சாமி | தி.மு.க. | 22,337 |
| வீரனம்பலம் | காங்கிரஸ் | 32,955 |

## 147. நத்தம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,284 |
| பதிவான வாக்குகள் | : | 65,500 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 64,610 |
| செல்லாத வாக்குகள் | : | 890 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஆண்டி அம்பலம் .... | இ. தே. காங்கிரஸ் | 29,055 |
| சோமசுந்தரம் | சுயேச்சை | 786 |
| கே. பெருமாள்சாமி | ஜனதா | 3,161 |
| ஆர். முருகன் | அ.இ.அ.தி.மு.க. | 21,093 |
| பி. எஸ். வெள்ளையப்பா | தி.மு.க. | 10,515 |

## 148. திண்டுக்கல்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,41,172 |
| பதிவான வாக்குகள் | : | 75,085 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,387 |
| செல்லாத வாக்குகள் | : | 698 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். வரதராஜன் .... | மார்க். கம்யூனிஸ்ட் | 33,614 |
| கே. ஞானராஜ் | சுயேச்சை | 2,357 |
| வி. மதனகோபால் | இந்திய கம்யூ. | 11,125 |
| எம். எம். ரங்கநாதன் | சுயேச்சை | 1,380 |
| வி. எஸ். லட்சுமணன் | தி.மு.க. | 13,732 |
| வி. ஜான்ஸன் | ஜனதா | 12,179 |

## 149. ஆத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,43,340 |
| பதிவான வாக்குகள் | : | 70,418 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,586 |
| செல்லாத வாக்குகள் | : | 832 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. வெள்ளைச்சாமி ... | அ.இ.அ.தி.மு.க. | 31,590 |
| எஸ். என். ராஜகோபால் | ஜனதா | 9,476 |
| ஏ. எம். டி. நாச்சியப்பன் | தி.மு.க. | 13,938 |
| மணி பாரதி | காங்கிரஸ் | 12,200 |
| கே. எஸ். ராயப்பன் | சுயேச்சை | 2,382 |

## 150. வேடசந்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,46,304 |
| பதிவான வாக்குகள் | : | 73,371 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,546 |
| செல்லாத வாக்குகள் | : | 825 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். எம். வாசன் ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **26,995** |
| எஸ். எம். ஜே. அலி மகமது | சுயேச்சை | 2,040 |
| ஆர். வி. சுப்பராயலு | ஜனதா | 9,808 |
| பி. ஷேக் அப்துல் காதர் சேட் | தி.மு.க. | 6,467 |
| எம். துரை | சுயேச்சை | 1,192 |
| எஸ். நஞ்சுண்ட ராவ் | காங்கிரஸ் | 25,141 |
| பி. எம். மூசா | சுயேச்சை | 903 |



# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## 151. அரவக்குறிச்சி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,33,806 |
| பதிவான வாக்குகள் | : | 83,571 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 82,467 |
| செல்லாத வாக்குகள் | : | 1,104 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். சதாசிவம் ....** | **இ. தே. காங்கிரஸ்** | **32,581** |
| அப்துல் ஜபார் | சுயேச்சை | 16,152 |
| முத்துசாமி என்ற முத்தன் | சுயேச்சை | 5,269 |
| பி. ராமசாமி | தி.மு.க. | 21,547 |
| வி. கே. ராமசாமி | ஜனதா | 5,666 |
| ராமன் | சுயேச்சை | 1,252 |

## 152. கரூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,45,681 |
| பதிவான வாக்குகள் | : | 97,345 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 96,428 |
| செல்லாத வாக்குகள் | : | 917 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. வடிவேல் ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **33,856** |
| எம். எஸ். சந்தானம் | சுயேச்சை | 233 |
| எஸ். நல்லுசாமி | தி.மு.க. | 22,264 |
| ஜி. பாலன் | ஜனதா | 18,499 |
| ஆர். பொன்னுசாமி | சுயேச்சை | 938 |
| கே. எஸ். ராமசாமி | இந்திய கம்யூ. | 20,252 |
| வி. வெம்பராயன் | சுயேச்சை | 386 |

## 153. கிருஷ்ணராயபுரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,20,967 |
| பதிவான வாக்குகள் | : | 70,188 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,235 |
| செல்லாத வாக்குகள் | : | 953 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. சௌந்தர பாண்டியன் ....** | **அ.இ.அ.தி.மு.க.** | **22,561** |
| எம். அருணு | தி.மு.க. | 14,577 |
| செல்வி எஸ். கலாவதி | ஜனதா | 10,130 |
| பி. எம். தங்கவேல் ராஜ் | காங்கிரஸ் | 21,967 |

## 154. மருங்காபுரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,13,252 |
| பதிவான வாக்குகள் | : | 71,151 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,220 |
| செல்லாத வாக்குகள் | : | 931 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கருணேகிரி கே. முத்தையா ....** | **இ. தே. காங்கிரஸ்** | **27,093** |
| ஏ. பி. ராஜு | தி.மு.க. | 16,894 |
| இ. வி. கந்தசுவாமி | ஜனதா | 9,987 |
| ஏ. மூக்கையாக் கோனர் | சுயேச்சை | 1,292 |
| எம். ஏ. ராஜகுமார் | அ.இ.அ.தி.மு.க. | 14,954 |

## 155. குளித்தலை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,673 |
| பதிவான வாக்குகள் | : | 81,491 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,505 |
| செல்லாத வாக்குகள் | : | 986 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி.எம். சீனிவாச ரெட்டியார்.... | இ. தே. காங்கிரஸ் | 27,043 |
| எஸ். ராசு | அ.இ.அ.தி.மு.க. | 19,396 |
| எம். எஸ். ராயப்பன் | சுயேச்சை | 843 |
| கே. வி. முத்துசாமி | தி.மு.க. | 18,581 |
| சி. ஜான் பிரிட்டோ | ஜனதா | 14,642 |

## 156. தொட்டியம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,119 |
| பதிவான வாக்குகள் | : | 81,711 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,508 |
| செல்லாத வாக்குகள் | : | 1,203 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. பி. காத்தமுத்து .... | அ.இ.அ.தி.மு.க. | 25,638 |
| எம். ஆறுமுகம் : | சுயேச்சை | 2,046 |
| எஸ். பி. ராஜேந்திரன் | ஜனதா | 11,049 |
| வி. ஏழுவந்தான் | சுயேச்சை | 479 |
| எஸ். கே. வடிவேலு | தி.மு.க. | 16,648 |
| கே. எம். சண்முக சுந்தரம் | காங்கிரஸ் | 24,648 |

## 157. உப்பிலியாபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,36,600 |
| பதிவான வாக்குகள் | : | 86,464 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 85,324 |
| செல்லாத வாக்குகள் | : | 1,140 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். பெரியசாமி .... | இ. தே. காங்கிரஸ் | 31,642 |
| எம். அட்சய கோபால் | அ.இ.அ.தி.மு.க. | 25,936 |
| சி. சின்னசாமி | ஜனதா | 4,222 |
| ஆர். நடராசன் | தி.மு.க. | 23,524 |

## 158. முசிறி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,32,057 |
| பதிவான வாக்குகள் | : | 89,373 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 88,026 |
| செல்லாத வாக்குகள் | : | 1,347 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. முசிறி புத்தன் என்கிற கோதண்டராமன் .... | அ.இ.அ.தி.மு.க. | 34,569 |
| பி. அய்யாக்கண்ணு | ஜனதா | 13,965 |
| எஸ். சுப்பையா | காங்கிரஸ் | 18,925 |
| வி. எஸ். பெரியசாமி | தி.மு.க. | 20,567 |

## 159. லால்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,29,589 |
| பதிவான வாக்குகள் | : | 93,712 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 92,415 |
| செல்லாத வாக்குகள் | : | 1,297 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. என். சண்முகம் .... | அ.இ.அ.தி.மு.க. | 33,322 |
| என். எஸ். அபேதானந்தம் | காங்கிரஸ் | 14,286 |
| ஆர். கங்காதரன் | தி.மு.க. | 31,789 |
| எஸ். கந்தசுவாமி | சுயேச்சை | 808 |
| கே. என். தங்கவேலு | ஜனதா | 12,230 |

## 160. பெரம்பலூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,195 |
| பதிவான வாக்குகள் | : | 67,477 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,165 |
| செல்லாத வாக்குகள் | : | 1,312 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். வி. ராமசாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 37,400 |
| டி. கலியபெருமாள் | சுயேச்சை | 1,173 |
| ஆர். சந்திரபோஸ் செல்லையா | ஜனதா | 8,826 |
| எம். சாமி | குடியரசுக் கட்சி | 1,613 |
| பி. ராமலிங்கம் | சுயேச்சை | 694 |
| கே. எஸ். வேலுசாமி | தி.மு.க. | 16,459 |

## 161. வரகூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,363 |
| பதிவான வாக்குகள் | : | 69,649 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,757 |
| செல்லாத வாக்குகள் | : | 892 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| என். பெருமாள் .... | அ.இ.அ.தி.மு.க. | 36,023 |
| பி. கே. ராமசாமி | காங்கிரஸ் | 3,348 |
| எம். கணபதி | ஜனதா | 4,791 |
| கே. கனகசபை | தி.மு.க. | 23,919 |
| ஏ. கிருஷ்ணன் | சுயேச்சை | 676 |

## 162. அரியலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,638 |
| பதிவான வாக்குகள் | : | 80,457 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 78,989 |
| செல்லாத வாக்குகள் | : | 1,468 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆறுமுகத்துடையார் .... | தி. மு. க. .... | 31,380 |
| அசோகன் என்ற கருப்பையா | அ.இ.அ.தி.மு.க. | 30,125 |
| கிருஷ்ணசாமி | சுயேச்சை | 1,131 |
| ஜி. ஸ்ரீனிவாசன் | காங்கிரஸ் | 12,359 |
| டி. நடராஜன் | ஜனதா | 3,781 |
| முனியசாமி | சுயேச்சை | 213 |

## 163. ஆண்டிமடம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 94,718 |
| பதிவான வாக்குகள் | : | 66,366 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,337 |
| செல்லாத வாக்குகள் | : | 1,029 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. சுப்ரமணியன் .... | அ.இ.அ.தி.மு.க. | 36,885 |
| பி. கோபாலகிருஷ்ணன் | ஜனதா | 2,446 |
| எஸ். சிவசுப்ரமணியன் | தி.மு.க. | 22,056 |
| கே. பழமலை | இந்திய கம்யூ. | 3,428 |
| இ. கே. மாணிக்கம் | சுயேச்சை | 522 |

## 165. ஸ்ரீரங்கம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,24,560 |
| பதிவான வாக்குகள் | : | 84,697 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 83,675 |
| செல்லாத வாக்குகள் | : | 1,022 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். சௌந்தரராஜன் .... | அ.இ.அ.தி.மு.க. | 26,200 |
| சி. ராமசாமி | ஜனதா | 19,782 |
| வி. கே. ரெங்கநாதன் | காங்கிரஸ் | 15,562 |
| எம். தர்மலிங்கம் | தி.மு.க. | 21,135 |
| கே. பி. கிருஷ்ணன் | சுயேச்சை | 532 |
| எஸ். தங்கையன் | சுயேச்சை | 464 |

## 164. ஜெயங்கொண்டம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,695 |
| பதிவான வாக்குகள் | : | 80,459 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,412 |
| செல்லாத வாக்குகள் | : | 1,047 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. கருணமூர்த்தி .... | அ.இ.அ.தி.மு.க. | 35,540 |
| கே. எம். எஸ். அழகேசம்பிள்ளை | சுயேச்சை | 252 |
| எஸ். ராமசாமி | சுயேச்சை | 7,701 |
| கே. சி. கணேசன் | தி.மு.க. | 23,828 |
| ஆர். மதிவாணன் | காங்கிரஸ் | 7.898 |
| யு. எஸ். ராமமூர்த்தி | ஜனதா | 4,193 |

## 166. திருச்சிராப்பள்ளி-I

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,787 |
| பதிவான வாக்குகள் | : | 66,314 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 65,805 |
| செல்லாத வாக்குகள் | : | 508 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| சி. மாணிக்கம் .... | அ.இ.அ.தி.மு.க. | 21,908 |
| ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி | தி.மு.க. | 19,597 |
| ஆர். சுப்பையன் | ஜனதா | 14,350 |
| எம். பழநி ஆண்டி | காங்கிரஸ் | 9,759 |
| என். ஏ. வஹித் என்ற ராஜா | சுயேச்சை | 191 |

## 167. திருச்சிராப்பள்ளி-II

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,24,230 |
| பதிவான வாக்குகள் | : | 70,413 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,850 |
| செல்லாத வாக்குகள் | : | 563 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. சௌந்தரராஜன் ... | அ.இ.அ.தி.மு.க. | 25,405 |
| எஸ். ரத்தினம் | சுயேச்சை | 400 |
| என். கிருஷ்ணன் | ஜனதா | 16,841 |
| எம். ஞானம் | இந்திய கம்யூ. | 9,681 |
| எம். எஸ். வெங்கடாசலம் | தி.மு.க. | 17,523 |

## 168. திருவெறும்பூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,291 |
| பதிவான வாக்குகள் | : | 77,390 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,713 |
| செல்லாத வாக்குகள் | : | 677 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| முருகேசன் .... | தி. மு. க. ... | 24,594 |
| கே. அனந்த நம்பியார் | மார்க்ஸ். கம்யூ. | 18,193 |
| எம். எம். இஸ்மாயில் | சுயேச்சை | 947 |
| ஏ. எம். சப்தரிஷி நாட்டார் | ஜனதா | 9,237 |
| வி. சுவாமிநாதன் | காங்கிரஸ் | 23,742 |



# தஞ்சாவூர் மாவட்டம்

## 169. சீர்காழி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,299 |
| பதிவான வாக்குகள் | : | 80,121 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,034 |
| செல்லாத வாக்குகள் | : | 1,087 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. சுப்ரவேலு** | **தி. மு. க.** | **34,281** |
| எம். குருசாமி | சுயேச்சை | 440 |
| டி. கைலாசம் | ஜனதா | 6,405 |
| கே. பாலசுப்பிரமணியன் | அ.இ.அ.தி.மு.க. | 29,405 |
| கே. வைத்திலிங்கம் | காங்கிரஸ் | 8,503 |

## 170. பூம்புகார்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,361 |
| பதிவான வாக்குகள் | : | 77,094 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,880 |
| செல்லாத வாக்குகள் | : | 1,214 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். கணேசன்** | **தி. மு. க.** | **34,105** |
| பி. எத்திராஜ் | காங்கிரஸ் | 9,662 |
| கே.கே. தீன் | ஜனதா | 7,605 |
| ஜி. பாரதிமோகன் | மார்க்ஸ். கம்யூ. | 24,508 |

## 171. மாயூரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,06,786 |
| பதிவான வாக்குகள் | : | 76,848 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 75,825 |
| செல்லாத வாக்குகள் | : | 1,024 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **என். கிட்டப்பா** | **தி. மு. க.** | **29,8[illegible]** |
| எம். எம். எஸ். அபுல் ஹாசன் | காங்கிரஸ் | 21,23[illegible] |
| எஸ். சோமசுந்தரம் | ஜனதா | 7,07[illegible] |
| பாலவேலாயுதம் | அ.இ.அ.தி.மு.க. | 17,68[illegible] |

## 172. குத்தாலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,107 |
| பதிவான வாக்குகள் | : | 78,460 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,206 |
| செல்லாத வாக்குகள் | : | 1,254 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ராஜமாணிக்கம்** | **தி. மு. க.** | **30,819** |
| பொன். கோவிந்தராஜன் | ஜனதா | 3.924 |
| தட்சிணாமூர்த்தி காளிங்கராயர் | காங்கிரஸ் | 19.666 |
| ஜி. வீரய்யன் | மார்க்ஸ். கம்யூ. | 22,556 |
| ஜகந்நாத சர்மா | சுயேச்சை | 241 |

## 173. நன்னிலம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,720 |
| பதிவான வாக்குகள் | : | 81,536 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,566 |
| செல்லாத வாக்குகள் | : | 970 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். மணிமாறன்** | **தி. மு. க.** | **33,636** |
| பி. கண்ணய்யன் | ஜனதா | 4,304 |
| ஏ. கலியராசன் | அ.இ.அ.தி.மு.க. | 18,099 |
| பி. ஜெயராஜ் | காங்கிரஸ் | 24,527 |

## 174. திருவாரூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,219 |
| பதிவான வாக்குகள் | : | 87,897 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 87,031 |
| செல்லாத வாக்குகள் | : | 866 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **தாழை மு. கருணாநிதி** | **தி. மு. க.** | **38,528** |
| கே. எம். செல்லய்யா | ஜனதா | 4,008 |
| எஸ். தங்கையன் | இந்திய கம்யூ. | 20,221 |
| பி. எஸ். தனுஷ்கோடி | மார்க்ஸ். கம்யூ. | 24,274 |

## 175. நாகப்பட்டினம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,891 |
| பதிவான வாக்குகள் | : | 80,275 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,488 |
| செல்லாத வாக்குகள் | : | 787 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். உமாநாத்** | **மார்க். கம்யூனிஸ்ட்** | **31,51[illegible]** |
| ஏ. அம்பலவாணன் | தி.மு.க. | 30,809 |
| டி. சக்கரபாணி | ஜனதா | 5,590 |
| எம். பஷீர் அஹமத் | காங்கிரஸ் | 11,570 |

## 176. வேதாரண்யம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,01,833 |
| பதிவான வாக்குகள் | : | 84,427 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 83,613 |
| செல்லாத வாக்குகள் | : | 814 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். மீனாட்சி சுந்தரம்** | **தி. மு. க.** | **29,60[illegible]** |
| கே. கோகிலசந்திரன் | ஜனதா | 3,965 |
| எஸ். தேவராஜன் | காங்கிரஸ் | 28,009 |
| எம். எஸ். மாணிக்கம் | அ.இ.அ.தி.மு.க. | 21,530 |
| ஜி. வெங்கடாசலம் | சுயேச்சை | 508 |

## 177. திருத்துறைப்பூண்டி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,892 |
| பதிவான வாக்குகள் | : | 94,971 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 94,079 |
| செல்லாத வாக்குகள் | : | 892 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. உத்திராபதி | இந்திய கம்யூனிஸ்ட் | 43,208 |
| டி. ராஜமாணிக்கம் | ஜனதா | 6,216 |
| எம். பி. கண்ணுசாமி | சுயேச்சை | 19,721 |
| குப்புசாமி | தி.மு.க. | 24,934 |

## 178. மன்னார்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,19,893 |
| பதிவான வாக்குகள் | : | 91,459 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 90,515 |
| செல்லாத வாக்குகள் | : | 944 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். அம்பிகாபதி | இந்திய கம்யூனிஸ்ட் | 34,298 |
| ஏ. திருநாவுக்கரசு | அ.இ.அ.தி.மு.க. | 22,160 |
| கே. பாலகிருஷ்ணன் | தி.மு.க. | 26,881 |
| பி. வீரய்யா | ஜனதா | 6,830 |
| எஸ். வெங்கடேசன் | சுயேச்சை | |
| | | 346 |

## 179. பட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,450 |
| பதிவான வாக்குகள் | : | 87,232 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 86,263 |
| செல்லாத வாக்குகள் | : | 969 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. ஆர். மாரிமுத்து | இ. தே. காங்கிரஸ் | 25,993 |
| ஆர். ராமசாமி | ஜனதா | 9,227 |
| என். குழந்தையன் | சுயேச்சை | 719 |
| வி. சந்தரசேகரன் | சுயேச்சை | 1,100 |
| ஆர். சீனிவாசன் | தி.மு.க. | 24,142 |
| வி. ஆர். கே. பழநியப்பன் | அ.இ.அ.தி.மு.க. | 25,082 |

## 180. பேராவூரணி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,10,000 |
| பதிவான வாக்குகள் | : | 84,884 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 84,095 |
| செல்லாத வாக்குகள் | : | 789 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஆர். கோவிந்தன் | அ.இ.அ.தி.மு.க. | 32,625 |
| திருமதி டி. ஆர். நாகரத்தினம் | ஜனதா | 4,894 |
| எம். மாசிலாமணி | இந்திய கம்யூ. | 24,675 |
| ஆர். வேதாசலம் | தி.மு.க. | 21,902 |

## 181. ஒரத்தநாடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,133 |
| பதிவான வாக்குகள் | : | 90,858 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 89,768 |
| செல்லாத வாக்குகள் | : | 1,090 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. எம். தைலப்பன் | தி. மு. க. | 31,866 |
| என். சிவஞானம் | காங்கிரஸ் | 26,156 |
| எம். திருவேங்கிடம் | சுயேச்சை | 1,368 |
| ஏ. முருகேசன் | ஜனதா | 5,079 |
| டி. வீராசுவாமி | அ.இ.அ.தி.மு.க. | 25,299 |

## 182. திருவோணம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,08,939 |
| பதிவான வாக்குகள் | : | 83,055 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 81,826 |
| செல்லாத வாக்குகள் | : | 1,229 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| துரை கோவிந்தராஜன் | அ.இ அ.தி.மு.க. | 23,779 |
| என். கலியமூர்த்தி | ஜனதா | 9,490 |
| பி. தங்கராஜ் | சுயேச்சை | 9,987 |
| புலவர் டி. தோழப்பன் | தி.மு.க. | 21,566 |
| என். வையாபுரி வன்னியர் | காங்கிரஸ் | 17,004 |

## 183. தஞ்சாவூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,647 |
| பதிவான வாக்குகள் | : | 81,043 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,092 |
| செல்லாத வாக்குகள் | : | 951 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். நடராஜன் | தி. மு. க. | 33,418 |
| டி. ராஜமாணிக்கம் | சுயேச்சை | 391 |
| ஆர். சுவாமிநாதன் | அ.இ.அ.தி.மு.க. | 23,662 |
| டி. பி. முருகேசன் | காங்கிரஸ் | 16,584 |
| வி. வைத்தியலிங்கம் | ஜனதா | 6,037 |

## 184. திருவையாறு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,08,342 |
| பதிவான வாக்குகள் | : | 78,193 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 77,107 |
| செல்லாத வாக்குகள் | : | 1,086 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஜி. இளங்கோவன் | தி. மு. க. | 28,500 |
| ஏ. ராமமூர்த்தி | காங்கிரஸ் | 16,062 |
| ஆர். தங்கையன் | சுயேச்சை | 2,633 |
| டி. வி. ஏ. நடராஜன் | ஜனதா | 6,038 |
| பி. சி. பழனி ஆண்டி | அ.இ.அ.தி.மு.க. | 23,197 |
| டி. எஸ். ராதாகிருஷ்ணன் | சுயேச்சை | 677 |

## 185. பாபநாசம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,384 |
| பதிவான வாக்குகள் | : | 75,771 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,553 |
| செல்லாத வாக்குகள் | : | 1,218 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். வி. சௌந்தரராஜன் | இ. தே. காங்கிரஸ் | 24,904 |
| பி. கே. இ. அப்துல்லா | சுயேச்சை | 20,714 |
| எஸ். சச்சிதானந்தம் | தி.மு.க. | 23,268 |
| டி. ஏ. ஜெயராமன் | ஜனதா | 4,769 |
| எஸ். சேவு பணிக்கர் | சுயேச்சை | 898 |

## 186. வலங்கைமான் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 96,692 |
| பதிவான வாக்குகள் | : | 68,417 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,404 |
| செல்லாத வாக்குகள் | : | 1,013 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஏ. செல்லப்பா | தி. மு. க. | 24,270 |
| ஏ. சீனிவாசன் | காங்கிரஸ் | 19,172 |
| பி. சீனிவாசன் | அ.இ.அ.தி.மு.க. | 20,897 |
| பிச்சையன் | ஜனதா | 3,065 |

## 187. கும்பகோணம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,847 |
| பதிவான வாக்குகள் | : | 82,127 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 81,272 |
| செல்லாத வாக்குகள் | : | 855 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். ஆர். ராதா ... | அ.இ.அ.தி.மு.க. | 26,432 |
| சி. ஆர். சந்தானம் | ஜனதா | 12,814 |
| ஆர். துரை | தி.மு.க. | 17,460 |
| கே. ரமணி | சுயேச்சை | 1,116 |
| ஓ. வடிவேல் மழவராயர் | காங்கிரஸ் | 23,450 |

## 188. திருவிடைமருதூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,391 |
| பதிவான வாக்குகள் | : | 81,984 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 80,712 |
| செல்லாத வாக்குகள் | : | 1,272 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். ராமலிங்கம் .... | தி. மு. க. .... | 26,304 |
| கே. கோவிந்தராஜுலு | காங்கிரஸ் | 24,489 |
| கே. நெடுஞ்செழியன் | சுயேச்சை | 2,053 |
| எம். சி. மகாலிங்கம் | அ.இ.அ.தி.மு.க | 24,067 |
| எம். ஜி. மணி | சுயேச்சை | 781 |
| என். ஜி. ரெங்கராஜன் | ஜனதா | 3,018 |

## 1977 ஜூன் 12, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல்களில் வெற்றி வாகை சூடிய கட்சிகளின் நிலவரம்

| | |
|---|---|
| அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | ... 13 |
| திராவிட முன்னேற்றக் கழகம் | ... 4 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | ... 27 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி | ... 12 |
| ஜனதா | ... 10 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | ... 5 |
| பார்வார்டு பிளாக் | ... 1 |
| சுயேச்சை | ... 1 |
| மொத்தம் | ... 234 |

# புதுக்கோட்டை மாவட்டம்

## 189. திருமயம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,462 |
| பதிவான வாக்குகள் | : | 81,030 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 79,825 |
| செல்லாத வாக்குகள் | : | 1,205 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ன். சுந்தரராஜ் .... | இ. தே. காங்கிரஸ் | 20,694 |
| ம். கோவிந்தன் என்ற இயலரசன் | சுயேச்சை | 425 |
| வி. சுப்பையா | சுயேச்சை | 18,505 |
| வி. சோமசுந்தர உடையார் | சுயேச்சை | 578 |
| கே. துரைக்கண்ணு | தி.மு.க. | 14,427 |
| பி. பொன்னம்பலம் | அ.இ.அ.தி.மு.க. | 20,637 |
| ஆர். ராஜா | ஜனதா | 4,559 |

## 190. குளத்தூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,00,684 |
| பதிவான வாக்குகள் | : | 74,965 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,062 |
| செல்லாத வாக்குகள் | : | 903 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. சின்னய்யா | இ. தே. காங்கிரஸ் | 27,071 |
| இரை தமிழ்ச்செல்வன் | தி.மு.க. | 16,459 |
| சி. சுந்தரவேலு | ஜனதா | 4,722 |
| சி. மதிமாறன் | சுயேச்சை | 2,957 |
| டி. மாரிமுத்து | அ.இ.அ.தி.மு.க. | 22,853 |

## 191 புதுக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,055 |
| பதிவான வாக்குகள் | : | 86,061 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 85,190 |
| செல்லாத வாக்குகள் | : | 871 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டைமான் .... | இ. தே. காங்கிரஸ் | 36,406 |
| சி. அன்பரசன் | அ.இ.அ.தி.மு.க. | 19,352 |
| எம். உத்திராபதி | சுயேச்சை | 937 |
| ஏ. கருப்பைய உடையார் | ஜனதா | 8,175 |
| கே. சிதம்பரம் | தி.மு.க. | 19,217 |
| ஜெ. முத்துக்கிருஷ்ணன் | சுயேச்சை | 1,103 |

## 192. ஆலங்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,846 |
| பதிவான வாக்குகள் | : | 97,613 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 96,652 |
| செல்லாத வாக்குகள் | : | 961 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. புஷ்பராஜு ... | இ. தே. காங்கிரஸ் | 37,634 |
| ஏ. சத்தியநாதன் | சுயேச்சை | 927 |
| பி. திருமாறன் | அ.இ.அ.தி.மு.க. | 27,059 |
| ஏ. பெரியண்ணன் | தி.மு.க. | 20,244 |
| எம். ராமச்சந்திரன் | ஜனதா | 10,788 |

## 193. அறந்தாங்கி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,25,574 |
| பதிவான வாக்குகள் | : | 95,833 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 94,706 |
| செல்லாத வாக்குகள் | : | 1,127 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| திருநாவுக்கரசு ... | அ.இ.அ.தி.மு.க. | 35,468 |
| பி. அப்புக்குட்டி | இந்திய கம்யூனிஸ்ட் | 24,528 |
| அயூப் | சுயேச்சை | 4,397 |
| எஸ். ராமநாதன் | தி.மு.க. | 22,052 |
| ஆர். கருப்பையா | ஜனதா | 7,335 |
| வியாசர் | சுயேச்சை | 415 |
| ஜேம்ஸ் | சுயேச்சை | 511 |

# இராமநாதபுரம் மாவட்டம்:

## 194. திருப்பத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,036 |
| பதிவான வாக்குகள் | : | 79,737 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 78,598 |
| செல்லாத வாக்குகள் | : | 1,139 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கூத்தக்குடி சண்முகம் | .. இந்திய கம்யூனிஸ்ட் | 21,579 |
| சி ஆர். ராஜசிதம்பரம் | அ.இ.அ.தி.மு.க. | 21,238 |
| டி. ஜி. சேஷாசலம் யாதவ் | சுயேச்சை | 387 |
| என். ஏ. ஆர். நாகராஜன் | சுயேச்சை | 16,496 |
| ராதாகிருஷ்ணன் | தி.மு.க. | 18,898 |

## 195. காரைக்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,30,184 |
| பதிவான வாக்குகள் | : | 86,657 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 85,557 |
| செல்லாத வாக்குகள் | : | 1,100 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. காளியப்பன் ... | அ.இ.அ.தி.மு.க. | 27,403 |
| பி. எல். கருப்பையா | ஜனதா | 12,763 |
| சி. டி. சிதம்பரம் | தி.மு.க. | 18,228 |
| பி. சிதம்பரம் | காங்கிரஸ் | 27,163 |

## 196. திருவாடானை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,31,813 |
| பதிவான வாக்குகள் | : | 89,100 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 88,126 |
| செல்லாத வாக்குகள் | : | 974 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே ஆர். ஆர் எம். கரிய மாணிக்கம் அம்பலம் .... | இ. தே. காங்கிரஸ் | 32,386 |
| எஸ். அங்குசாமி | அ.இ.அ.தி.மு.க. | 28,650 |
| திருமதி கமலம் செல்லத்துரை | தி.மு.க. | 10,964 |
| எஸ். எம். சவரி முத்து உடையார் | ஜனதா | 16,126 |

## 197. இளையான்குடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,262 |
| பதிவான வாக்குகள் | : | 73,987 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 72,983 |
| செல்லாத வாக்குகள் | : | 1,004 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். சிவசாமி | .. இந்திய கம்யூனிஸ்ட் | 17,677 |
| ஆர். சங்கர் | ஜனதா | 5,303 |
| என். என். கே. சினி புலவர் | சுயேச்சை | 877 |
| ஆர். தங்கய்யா | சுயேச்சை | 1,707 |
| எஸ். என். கே. ஜே. நைனு முகம்மது | சுயேச்சை | 115 |
| வி. மலைக்கண்ணன் | தி.மு.க. | 16,887 |
| எஸ். மாதவன் | சுயேச்சை | 15,055 |
| முகம்மது ஷெரீஃப் | சுயேச்சை | 15,362 |

## 198. சிவகங்கை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,18,391 |
| பதிவான வாக்குகள் | : | 78,004 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,805 |
| செல்லாத வாக்குகள் | : | 1,199 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஓ. சுப்பிரமணியன் ... | இ. தே. காங்கிரஸ் | 23,495 |
| பி. ஆதினமிளகி | சுயேச்சை | 8,135 |
| வி. எஸ். குருசாமி | சுயேச்சை | 1,369 |
| ஏ. சண்முகம் | தி.மு.க. | 12,299 |
| கே. ஆர். முருகானந்தம் | அ.இ.அ.தி.மு.க. | 21,066 |
| எஸ்கே. ஏஆர். எஸ் எம். இராமநாதன் செட்டியார் | ஜனதா | 6,988 |
| வி. வேலாயுதம் செட்டியார் | சுயேச்சை | 3,453 |

## 199. மானாமதுரை (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,220 |
| பதிவான வாக்குகள் | : | 72,587 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 71,719 |
| செல்லாத வாக்குகள் | : | 868 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| வி. எம். சுப்பிரமணியன் ... | அ.இ.அ.தி.மு.க. | 28,849 |
| எஸ். சுப்பிரமணியன் | ஜனதா | 3,615 |
| கே. பழனி குடும்பன் | சுயேச்சை | 371 |
| கே. பரமலை | காங்கிரஸ் | 26,794 |
| என். வீரண்ணன் | தி.மு.க. | 12,090 |

## 200. பரமக்குடி (தனி)

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,20,596 |
| பதிவான வாக்குகள் | 76,096 |
| செல்லுபடியான வாக்குகள் | 75,194 |
| செல்லாத வாக்குகள் | 902 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. உக்ர பாண்டியன் .... | அ.இ.அ.தி.மு.க. | 27,303 |
| ஆர். சத்திரக்குடி அன்பரசன் | சுயேச்சை | 307 |
| கே. கிருஷ்ணன் | காங்கிரஸ் | 23,357 |
| வி. கோவிந்தன் | சுயேச்சை | 817 |
| டி. கே. சிறைமீட்டான் | தி.மு.க. | 15,254 |
| ஏ. வி. சுவாமிநாதன் | ஜனதா | 8,156 |

## 201. இராமநாதபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,09,710 |
| பதிவான வாக்குகள் | : | 71,673 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,524 |
| செல்லாத வாக்குகள் | : | 1,149 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. ராமசுவாமி .... | அ.இ.அ.தி.மு.க. | 33,048 |
| எம். இராமசாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 9,984 |
| எஸ். கே. கணேசன் | ஜனதா | 15,520 |
| ஏ. மணி | சுயேச்சை | 524 |
| எஸ். மாரிமுத்து | தி.மு.க. | 11,448 |

## 202. கடலாடி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்குகள் | : | 1,25,625 |
| பதிவான வாக்குகள் | : | 71,233 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,264 |
| செல்லாத வாக்குகள் | : | 969 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். சி. ரண சிங்க சுப்பிரமணிய தலைவர் .... | அ.இ.அ.தி.மு.க. | 25,690 |
| பி. ஏ. எஸ். அப்துல் ஹன்னன் சாகிபு | ஜனதா | 8,746 |
| கே. கோவிந்தன் | சுயேச்சை | 9,174 |
| ஏ. பிரணவநாதன் | தி.மு.க. | 12,299 |
| எஸ். முகம்மது சுல்தான் | சுயேச்சை | 204 |
| எஸ். பி. முருகேசன் | சுயேச்சை | 5,796 |
| எஸ். முனியாண்டித் தேவர் | காங்கிரஸ் | 6,947 |
| எம். வலம்புரி | சுயேச்சை | 408 |

## 203 முதுகுளத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,2:4,054 |
| பதிவான வாக்குகள் | : | 74,381 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,392 |
| செல்லாத வாக்குகள் | : | 989 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். பாலகிருஷ்ணன் .... | இ. தே. காங்கிரஸ் | 17,709 |
| எஸ். அழகர்சாமி | சுயேச்சை | 386 |
| எஸ். எம். கருமலையன் | அ.இ.அ.தி.மு.க. | 14,652 |
| எம். காளிமுத்து | சுயேச்சை | 405 |
| கே. தனுக்கோடி தேவர் | பார்வர்டு ப்ளாக் | 12,035 |
| வி. முனியசாமி | சுயேச்சை | 14,844 |
| கே. வழிவிட்டான் | சுயேச்சை | 121 |
| டி. வேலுச்சாமி | தி.மு.க. | 7,716 |
| ஏ. ஹபீப் முகம்மது | ஜனதா | 5,524 |

## 204. அருப்புக்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,763 |
| பதிவான வாக்குகள் | : | 77,701 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 76,582 |
| செல்லாத வாக்குகள் | : | 1,119 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஜி. ராமச்சந்திரன் .... | அ.இ.அ.தி.மு.க. | 43,065 |
| எம் சிதம்பரம் | சுயேச்சை | 355 |
| ஏ. சிவசாமி | காங்கிரஸ் | 12,075 |
| என். சீனிவாசன் | சுயேச்சை | 645 |
| கே. பழனி குடும்பன் | சுயேச்சை | 164 |
| ஜி. பிச்சை | சுயேச்சை | 550 |
| அப்பன் என்கிற ஆர். பெரிய கருப்பன் | சுயேச்சை | 72 |
| எஸ். எம். போஸ் | தி.மு.க. | 5,415 |
| முத்துராமலிங்கம் | சுயேச்சை | 202 |
| எம். முத்துவேல் சேர்வை | ஜனதா | 13,687 |
| வி. டி. ஆர். வீரப்ப கவுண்டர் | சுயேச்சை | 276 |
| கே. ஜவஹர் | சுயேச்சை | 76 |

## 205. சாத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,28,786 |
| பதிவான வாக்குகள் | : | 90653 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 89,659 |
| செல்லாத வாக்குகள் | : | 994 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் .... | அ.இ.அ.தி.மு.க. | 38,772 |
| வி. கார்மேகசாமி | தி.மு.க. | 8,637 |
| கே. குருசாமி நாயக்கர் | சுயேச்சை | 606 |
| எஸ். துரைராஜ், | சுயேச்சை | 2,105 |
| டி. பெரிய சாமி | சுயேச்சை | 544 |
| எஸ். மணிசங்கரன் | சுயேச்சை | 417 |
| மூக்கையா நாடார் | ஜனதா | 16,748 |
| வீராசாமி | காங்கிரஸ் | 21,830 |

## 206. விருதுநகர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,24,439 |
| பதிவான வாக்குகள் | : | 75,201 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,298 |
| செல்லாத வாக்குகள் | : | 903 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். சுந்தரராஜன் .... | அ.இ.அ.தி.மு.க. | 33,077 |
| ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் | ஜனதா | 22,820 |
| கே. எஸ். கந்தசாமி | தி.மு.க. | 8,331 |
| வி. சின்னையா | சுயேச்சை | 1,747 |
| எஸ். நவநீதகிருஷ்ணன் | காங்கிரஸ் | 7,520 |
| ஏ. வேலு | சுயேச்சை | 803 |

## 207. சிவகாசி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,23,965 |
| பதிவான வாக்குகள் | : | 79,712 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 78,800 |
| செல்லாத வாக்குகள் | : | 912 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. ராமசாமி .... | ஜனதா | 24,518 |
| எஸ். அமுதன் | தி.மு.க. | 7,753 |
| ஆர். கங்காதர திலகம் | சுயேச்சை | 389 |
| கே. காளியப்ப நாடார் | சுயேச்சை | 1,079 |
| தர்மர் | காங்கிரஸ் | 22,746 |
| கே. பொன்னுபாண்டியன் | அ.இ.அ.தி.மு.க. | 22,315 |

## 208. ஸ்ரீவில்லிபுத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,22,386 |
| பதிவான வாக்குகள் | : | 82,454 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 81,447 |
| செல்லாத வாக்குகள் | : | 1,007 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| தாமரைக்கனி .... | அ.இ.அ.தி.மு.க. | 25,990 |
| எஸ். அழகர்சாமி | இந்திய கம்யூனிஸ்ட் | 18,876 |
| ஏ. ஏ. ஆனந்தன் | ஜனதா | 14,901 |
| அறிவரசன் என்னும் ஜி. கருப்பையா | சுயேச்சை | 446 |
| எஸ். சந்திரன் | சுயேச்சை | 1,590 |
| எம். சுந்தர மகாலிங்கம் | சுயேச்சை | 267 |
| சி. பொன்னையா | சுயேச்சை | 403 |
| வி. வைகுந்தம் | தி.மு.க. | 18,974 |

## 209. இராஜபாளையம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,26,020 |
| பதிவான வாக்குகள் | : | 75,384 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 74,649 |
| செல்லாத வாக்குகள் | : | 735 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. தனுஷ்கோடி .... | அ.இ.அ.தி.மு.க. | 28,028 |
| ஆண்டி என்ற கே. குருசாமி | தி.மு.க. | 10,220 |
| எம். சுந்தரம் | சுயேச்சை | 382 |
| ஜே. எஸ். பாலையா | ஜனதா | 11,702 |
| பொட்டு போத்தன் | காங்கிரஸ் | 24,181 |
| ஏ. இராமசாமி | சுயேச்சை | 136 |

# தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல்கள்—1977

## வாக்குப் பதிவின் சதவீதம்

### ஒப்பு ஆய்வு

| பொதுத் தேர்தல்கள் | வாக்காளர்கள் மொத்தம் | வாக்காளர்கள் போட்டி நிகழ்ந்த தொகுதிகளின் வாக்காளர்கள் | பதிவான வாக்குகள் | பதிவான வாக்குகளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1952 .... | 2,69,80,956 .... | 2,69,13,148 .... | 1,58,06,460 .... | 58·73 |
| 1957 ... | 1,75,14,993 .... | 1,73,03,784 .... | 85,36,703 .... | 49·33 |
| 1962 .... | 1,86,75,436 .... | 1,86,75,436 .... | 1,31,94,649 .... | 70·65 |
| 1967 .... | 2,07,97,325 .... | 2,07,97,325 .... | 1,59,28,693 .... | 76·59 |
| 1971 .... | 2,30,64,985 .... | 2,30,64,985 .... | 1,65,69,760 .... | 71·83 |
| 1977 .... | 2,81,73,342 .... | 2,81,73,342 .... | 1,73,42,783 .... | 61·57 |

# திருநெல்வேலி மாவட்டம்

## 210. விளாத்திகுளம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,745 |
| பதிவான வாக்குகள் | : | 67,060 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,125 |
| செல்லாத வாக்குகள் | : | 935 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். கே. பெருமாள் .... | அ.இ.அ.தி.மு.க. | 25,384 |
| ஆர். ஏ. அருளானந்தம் | ஜனதா | 8,452 |
| பி. இராமசாமி ரெட்டியார் | சுயேச்சை | 706 |
| கே. பி. கணபதி | பார்வர்டு ப்ளாக் | 579 |
| எ. கே. கொண்டு ரெட்டியார் | தி.மு.க. | 8,720 |
| கே. சுப்பா ரெட்டியார் | காங்கிரஸ் | 22,001 |
| டி. தாமஸ் | சுயேச்சை | 283 |

## 211. ஒட்டப்பிடாரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,05,342 |
| பதிவான வாக்குகள் | : | 55,323 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 54,517 |
| செல்லாத வாக்குகள் | : | 806 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஓ. எஸ். வேலுச்சாமி .... | இ. தே. காங்கிரஸ் | 22,629 |
| எஸ். அசோக்குமார் | ஜனதா | 7,483 |
| என். ஆறுமுகம் | சுயேச்சை | 186 |
| என். கிருஷ்ணன் | சுயேச்சை | 108 |
| தங்கராஜ் | அ.இ.அ.தி.மு.க. | 16,801 |
| டி. முத்தையா | சுயேச்சை | 715 |
| எம். முத்தையா | பார்வர்டு ப்ளாக் | 1,681 |
| யு. மூக்கையா | தி.மு.க. | 4,661 |
| ஆர். வெள்ளைச்சாமி | சுயேச்சை | 253 |

## 212. கோவில்பட்டி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,07,794 |
| பதிவான வாக்குகள் | : | 67,973 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 67,140 |
| செல்லாத வாக்குகள் | : | 833 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். அழகர்சாமி .... | இ. கம்யூனிஸ்ட் | 21,985 |
| ஆர். கோவில்பிள்ளை | சுயேச்சை | 2,602 |
| பி. சீனிராஜ் | அ.இ.அ.தி.மு.க. | 21,588 |
| எல். சுந்தரராஜ நாய்க்கர் | ஜனதா | 7,187 |
| ஏ. கே. சி. தங்கபாண்டியன் | தி.மு.க. | 13,778 |

## 213. சங்கரநயினார்கோயில் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,097 |
| பதிவான வாக்குகள் | : | 63,902 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 62,965 |
| செல்லாத வாக்குகள் | : | 937 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எஸ். சுப்பையா .... | தி. மு. க. .... | 21,569 |
| சி. ஐயாதுரை | அ.இ.அ.தி.மு.க. | 21,232 |
| எஸ். சண்முகவேல் | காங்கிரஸ் | 14,491 |
| ஏ. எம். செல்லச்சாமி | ஜனதா | 4,967 |
| எஸ். பச்சையப்பன் | சுயேச்சை | 706 |

## 214. வாசுதேவநல்லூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,21,099 |
| பதிவான வாக்குகள் | : | 61,509 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 60,418 |
| செல்லாத வாக்குகள் | : | 1,091 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். கிருஷ்ணன் ...** | மார்க். கம்யூனிஸ்ட் | 20,092 |
| எஸ். ஆனந்தராஜ் என்ற அய்யாதுரை | ஜனதா | 10,826 |
| யு. இ. முத்துராஜ் | இந்திய கம்யூனிஸ்ட் | 16,008 |
| எம். துரைசாமி | தி.மு.க. | 10,330 |
| கே. மருதன் | சுயேச்சை | 650 |
| எஸ். காத்தப்பன் | சுயேச்சை | 2,472 |

## 215. கடையநல்லூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | | 1,08,473 |
| பதிவான வாக்குகள் | | 76,660 |
| செல்லுபடியான வாக்குகள் | | 75,675 |
| செல்லாத வாக்குகள் | | 985 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். எம். எ. ரசாக் ....** | அ இ-அ-தி.மு.க. | 29,347 |
| கே. கட்டாரி பாண்டியன் | தி.மு.க. | 16,329 |
| நெல்லை காந்தி அப்துல் காதர் | சுயேச்சை | 690 |
| எஸ். கே. டி. இராமச்சந்திரன் | காங்கிரஸ் | 23,686 |
| எம். லட்சுமண நாடார் | ஜனதா | 5,623 |

## 216. தென்காசி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,12,800 |
| பதிவான வாக்குகள் | : | 74,171 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,194 |
| செல்லாத வாக்குகள் | : | 977 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். முத்துசாமி கரையாளர்** | இ. தே. காங்கிரஸ் | 30,273 |
| ஜெ. அப்துல் ஜப்பார் சாகிப் | சுயேச்சை | 18,489 |
| எல். ஆறுமுகசாமி நாடார் | ஜனதா | 10,529 |
| டி. கே. வி. நடராஜன் | சுயேச்சை | 1 158 |
| வி. பாண்டிவளவன் | தி.மு.க. | 12,746 |

## 217. ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,14,602 |
| பதிவான வாக்குகள் | : | 72,074 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 70,987 |
| செல்லாத வாக்குகள் | : | 1,087 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **வி. கருப்புசாமி பாண்டியன்....** | அ.இ.அ.தி.மு.க. | 20,183 |
| எஸ் அருளப்பன் நாடார் | சுயேச்சை | 1.024 |
| எம். ராயப்பன் நாடார் | சுயேச்சை | 326 |
| எஸ். உக்கிரமப்புராண்டியன் | காங்கிரஸ் | 17,997 |
| பி. தம்பித்துரை | தி.மு.க. | 11,592 |
| ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் | ஜனதா | 18,342 |
| எஸ். சுப்பையாத் தேவர் | சுயேச்சை | 663 |
| டி. திருமாறன் | பார்வர்டு ப்ளாக் | 861 |

## 218. திருநெல்வேலி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,16,395 |
| பதிவான வாக்குகள் | : | 69,248 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 68,622 |
| செல்லாத வாக்குகள் | : | 626 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஜி. ஆர். எட்மண்ட் ...** | அ.இ.அ.தி.மு.க. | 26,419 |
| எம். அப்துல் மஜீத் | சுயேச்சை | 6,090 |
| இ. அரிராம கிருஷ்ணன் | சுயேச்சை | 545 |
| நெல்லை கண்ணன் என்கிற கிருஷ்ணன் | காங்கிரஸ் | 19,125 |
| ஆர். சேர்வைக்காரன் சுப்பையா | ஜனதா | 8,244 |
| இ. நம்பி | தி.மு.க. | 8,199 |

## 219. பாளையங்கோட்டை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | | 1,10,603 |
| பதிவான வாக்குகள் | | 66,763 |
| செல்லுபடியான வாக்குகள் | | 66,087 |
| செல்லாத வாக்குகள் | | 676 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. மனோகரன் ....** | அ.இ.அ.தி.மு.க. | 29,146 |
| எம். ஆறுமுகக்கோனார் | காங்கிரஸ் | 14,202 |
| என். சண்முகம் | சுயேச்சை | 15,192 |
| எஸ். ஏ. சையத் இப்ராகிம் அலிம் | சுயேச்சை | 574 |
| எஸ். ஜஸ்டின் | ஜனதா | 6,973 |

## 220. சேரன்மகாதேவி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | | 1,02,377 |
| பதிவான வாக்குகள் | | 69,360 |
| செல்லுபடியான வாக்குகள் | | 68,635 |
| செல்லாத வாக்குகள் | | 725 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பாண்டியன் ...** | அ.இ.அ.தி.மு.க. | 24,256 |
| செல்வராஜ் | ஜனதா | 10,946 |
| இரத்தினசபாபதி | காங்கிரஸ் | 21,964 |
| சுப்பிரமணியன் | தி.மு.க. | 11,469 |

## 221. அம்பாசமுத்திரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | | 99,927 |
| பதிவான வாக்குகள் | | 66,953 |
| செல்லுபடியான வாக்குகள் | | 66,110 |
| செல்லாத வாக்குகள் | | 843 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஈஷ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ....** | மார்க். கம்யூனிஸ்ட் | 23,356 |
| கே. எம். அருணாசலம் | சுயேச்சை | 863 |
| பி. ஆறுமுகம் | தி.மு.க. | 8,144 |
| ஆர். நல்லக்கண்ணு | இந்திய கம்யூனிஸ்ட் | 21,569 |
| எஸ். எஸ். ராஜலிங்க ராஜா | ஜனதா | 12,208 |

## 222. நாங்குநேரி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,20,256 |
| பதிவான வாக்குகள் | 67,988 |
| செல்லுபடியான வாக்குகள் | 67,359 |
| செல்லாத வாக்குகள் | 629 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். ஜான் வின்செண்ட் ... | ஜனதா ... | 18,668 |
| எஸ். கடலையாண்டி | தி.மு.க. | 9,381 |
| வி. பெரியசாமி | சுயேச்சை | 7,485 |
| எம். ராஜகோபாலன் | காங்கிரஸ் | 12,877 |
| எம். வள்ளி நாயகம் | சுயேச்சை | 484 |
| டி. வெள்ளையா | அ.இ.அ.தி.மு.க. | 18,464 |

## 223. ராதாபுரம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,19,865 |
| பதிவான வாக்குகள் | 69,147 |
| செல்லுபடியான வாக்குகள் | 68,265 |
| செல்லாத வாக்குகள் | 882 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஒய். எஸ். எம். யூசுப் ... | அ.இ.அ.தி.மு.க. | 26,404 |
| எஸ். சுப்பையா நாடார் | சுயேச்சை | 336 |
| பி. பால்பாண்டியன் | ஜனதா | 22,810 |
| டி. மார்ட்டின் | காங்கிரஸ் | 6,524 |
| இ. ராயர் | தி.மு.க. | 12,028 |
| எஸ். கே. ஜான் தேவயிரக்கம் | சுயேச்சை | 163 |

## 224. சாத்தான்குளம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,31,771 |
| பதிவான வாக்குகள் | 68,009 |
| செல்லுபடியான வாக்குகள் | 67,101 |
| செல்லாத வாக்குகள் | 908 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். ஜெபமணி .... | ஜனதா .... | 18,362 |
| சி. பா ஆதித்தனார் | சுயேச்சை | 17,507 |
| சி. கந்தையா | சுயேச்சை | 988 |
| சையத் சாகுல் அமீது | சுயேச்சை | 2,274 |
| எம். எஸ். செல்வராஜன் | காங்கிரஸ் | 17,091 |
| டி. நெல்லை நெடுமாறன் | தி.மு.க. | 10,879 |

## 225. திருச்செந்தூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,39,451 |
| பதிவான வாக்குகள் | 72,302 |
| செல்லுபடியான வாக்குகள் | 71,642 |
| செல்லாத வாக்குகள் | 660 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். அமிர்தராஜ் ... | அ.இ.அ.தி.மு.க. | 20,871 |
| சுப்பிரமணிய ஆதித்தன் | ஜனதா | 19,736 |
| சையத் அகமது | தி.மு.க. | 17,441 |
| ராஜ் விக்டோரியா | காங்கிரஸ் | 12,477 |
| வித்தியாசாகர ஆதித்தன் | சுயேச்சை | 1,117 |

## 226. ஸ்ரீவைகுண்டம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,12,893 |
| பதிவான வாக்குகள் | 66,189 |
| செல்லுபடியான வாக்குகள் | 65,390 |
| செல்லாத வாக்குகள் | 799 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| கே. சாது செல்வராஜ் ... | அ.இ.அ.தி.மு.க. | 20,459 |
| எம். சங்கரபாண்டியன் | ஜனதா | 12,672 |
| எஸ். முத்து | தி.மு.க. | 16,919 |
| எஸ். டைனூர் குலசேகரன் | காங்கிரஸ் | 15,340 |

## 227. தூத்துக்குடி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 1,24,642 |
| பதிவான வாக்குகள் | 81,195 |
| செல்லுபடியான வாக்குகள் | 80,565 |
| செல்லாத வாக்குகள் | 630 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| தனசேகரன் ... | அ.இ.அ.தி.மு.க. | 23,598 |
| எம். சொக்கலிங்கம் | ஜனதா | 16,656 |
| திருமதி ஆர். நெளரோஜி | காங்கிரஸ் | 22,379 |
| ஏ. கிருஷ்ணன் | தி.மு.க. | 17,606 |
| எம். ஆரோக்கியசாமி | சுயேச்சை | 326 |

## தமிழ்நாடு சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல்கள் 1977
### புள்ளி விவரத் தகவல்

| | |
|---|---|
| சட்டப்பேரவைத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை ... | 234 |
| மொத்த வாக்காளர்கள் ... | 2,81,73,342 |
| பதிவான வாக்குகள் ... | 1,73,42,783 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 1,71,08,070 |
| பதிவான வாக்குகளின் சதவீதம் ... | 61·57 |
| செல்லாத வாக்குகள் ... | 2,34,713 |
| செல்லாத வாக்குகளின் சதவீதம் ... | 1·37 |

# கன்னியாகுமரி மாவட்டம்:

## 228. கன்னியாகுமரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,04,698 |
| பதிவான வாக்குகள் | : | 70,082 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,703 |
| செல்லாத வாக்குகள் | : | 379 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| சி. கிருஷ்ணன் ... | அ.இ.அ.தி.மு.க. | 23,222 |
| எஸ். சண்முகம் | சுயேச்சை | 6,712 |
| டி. சின்னக்கண் நாடார் | சுயேச்சை | 930 |
| ஆர். சுப்பிரமணிய பிள்ளை | சுயேச்சை | 468 |
| டி. சி. சுப்பிரமணிய பிள்ளை | ஜனதா | 16,010 |
| எம். சுப்பிரமணியம் | தி.மு.க. | 14,854 |
| கே. முத்துக்கருப்ப பிள்ளை | காங்கிரஸ் | 7,507 |

## 230. குளச்சல்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,11,755 |
| பதிவான வாக்குகள் | : | 69,948 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 69,509 |
| செல்லாத வாக்குகள் | : | 439 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஆர். ஆதிசுவாமி ... | ஜனதா ... | 21,131 |
| ஏ. பாலையா | காங்கிரஸ் | 11,164 |
| எஃப். எம். இராசரத்தினம் | அ.இ.அ.தி.மு.க. | 17,165 |
| எஸ். ரத்தினராஜ் | தி.மு.க | 19,949 |

## 229. நாகர்கோயில்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,32,870 |
| பதிவான வாக்குகள் | : | 74,404 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 73,994 |
| செல்லாத வாக்குகள் | : | 410 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எம். வின்செண்ட் ... | அ.இ அ.தி.மு.க. | 26,973 |
| வி. இமானுவேல் | சுயேச்சை | 165 |
| எஸ். எம். ஜெபாஸ்டியன் | சுயேச்சை | 122 |
| பூமேடை எஸ். லட்சுமணன் பிள்ளை | சுயேச்சை | 409 |
| பி. முகம்மது இஸ்மாயில் | ஜனதா | 26,780 |
| ஜி. சி. மைக்கேல் ராஜ் | தி.மு.க. | 12,824 |
| எம். ஏ. ஜேம்ஸ் | காங்கிரஸ் | 6,721 |

## 231. பத்மநாபபுரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 97,615 |
| பதிவான வாக்குகள் | : | 48,222 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 47,914 |
| செல்லாத வாக்குகள் | : | 308 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| எ. சுவாமிதாஸ் .... | ஜனதா .... | 22,910 |
| திருமதி ஆர். அம்ரோஸ் மேரி | சுயேச்சை | 662 |
| ஏ. இராஜப்பா | தி.மு.க. | 5,551 |
| என். சி. இராமசுவாமி | சுயேச்சை | 321 |
| என். வி. கன்னியப்பன் | அ.இ.அ.தி.மு.க. | 14,757 |
| எம். ரத்தினசாமி | காங்கிரஸ் | 3,713 |

## 232. திருவெட்டாறு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 96,167 |
| பதிவான வாக்குகள் | : | 57,300 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 56,964 |
| செல்லாத வாக்குகள் | : | 336 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| ஜே. ஜேம்ஸ் .... | ஜனதா .... | 27,812 |
| எஸ். கிளாஸ்டன் | தி.மு.க. | 212 |
| என். சுகுமாரன் | சுயேச்சை | 984 |
| ஏ. ஜெ. ராஜ் | காங்கிரஸ் | 1,764 |
| ஜெ. ஹேமச்சந்திரன் | மார்க்சிஸ்ட் கம்யூ. | 26,192 |

## 233. விளவங்கோடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 1,17,831 |
| பதிவான வாக்குகள் | : | 67,279 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 66,787 |
| செல்லாத வாக்குகள் | : | 492 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| டி. ஞானசிகாமணி .... | மார்க். கம்யூனிஸ்ட் | 32,628 |
| ஏ. அசாரி | காங்கிரஸ் | 3,165 |
| எஸ். கேசரி செல்வராஜ் | சுயேச்சை | 299 |
| எஸ். சத்தியதாஸ் | ஜனதா | 30,695 |

## 234. கிள்ளியூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | : | 95,659 |
| பதிவான வாக்குகள் | : | 43,455 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 43,229 |
| செல்லாத வாக்குகள் | : | 226 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| பி. விஜயராகவன் .... | ஜனதா .... | 34,237 |
| கே. தங்கராஜ் | காங்கிரஸ் | 8,309 |
| டி. ஜான் ஐசக் | சுயேச்சை | 683 |



# மாசேடி®

## உங்கள் நெல் வயலில் உள்ள களைகளை விரைவாகவும், சிக்கனமாகவும் அழிக்கிறது.

மாசேடி உங்கள் நெல் வயலில் உள்ள களைகளை விரைவாகவும் குறைவான உழைப்புடனும் அழிக்கிறது. களைகள் முளைக்கும் முன்பே அவற்றை அழித்துவிடுகிறது. உங்களுக்கு நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துகிறது.

மற்றும் மாசேடி உரங்கள், சத்துணவுகள்-இவற்றின் உபயோகிப்புத்தன்மையைப் பெற்று மகசூலை அதிகரிக்கிறது. மாசேடி மிக்க பயனளிக்கக் கூடியது. மற்றும் எளிதில் உபயோகிக்கக் கூடியது. ஒரு முறை உபயோகித்து திருப்தி பெறுவீர்

## ...அவை முளைப்பதற்கும் முன்னால்




களைகளை அழித்திடுங்கள்—அவை வளர்வதற்கு முன்னால்...உபயோகியுங்கள்

**மாசேடி**

களை நீக்கி தயாரிப்பாளர் **Monsanto** மான்ஸான்டோ

ஈஸி மற்றும் குறுணைகளாகக் கிடைக்கிறது.

**மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லி.,**

தலைமை அலுவலகம் : வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு, பாலர்டு எஸ்டேட், பம்பாய் 400 038.
கிளைகள் : 3/8, அஸஃப் அலி ரோடு, புது டெல்லி 110 001
19, ராஜேந்திரநாத் முகர்ஜி ரோடு, கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

**மான்ஸான்டோ—இந்திய விவசாயிக்குச் சேவைபுரிவோர்**

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட்மார்க் அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிமிடெட் உபயோகிப்பது.

Grant.28 TM


22 5 311



''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''
''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"

# தீ தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



**தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு**